V;11,31 N71
31N71.2;2
61505

வெளியீடு—5—11—1971]
Issued—5—11—1971]

தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு
OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை 1971 மார்ச் 30
Tuesday, 30th March 1971

தொகுதி II—எண் 1
Volume II—No. 1

தமிழ் நாடு அரசு
1971
GOVERNMENT OF TAMIL NADU
1971

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9
Legislative Assembly Department
Fort St. George, Madras-9.

விலை 50 காசுகள்]
Price 50 Paise]

31 N71 · 2;2

61505

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES.

FIRST SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

30TH AND 31ST MARCH AND 1ST, 2ND AND 3RD APRIL 1971.

VOLUME II Nos. 1 to 5).

TABLE OF CONTENTS.

Tuesday, 30*th March* 1971.

	PAGES.
1. Announcement—	
Question hour	1
2. Adjournment Motion—	
Murder of D.M.K. volunteers at Thazhan-kuppam	1-3
3. Bills—	
(a) The Tamil Nadu Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1971	3
(b) The Tamil Nadu Appropriation (Vote on Account) Bill, 1971 (L.A. Bill No. 4 of 1971)	4
(c) The Tamil Nadu Appropriation Bill, 1971 (L.A. Bill No. 5 of 1971)	4
4. Discussion on the Motion of Thanks on the Governor's Address	4, 75
5. Papers laid on the Table	75, 76

PAGES

Wednesday, 31st March 1971.

1. Announcement—
   Question hour ... ... 9[illegible]
2. Calling Attention—
   Attack on D.M.K. volunteers at Balappanaickenpatti ... ... 97, 9[illegible]
3. Bill—
   The Tamil Nadu General Sales Tax (Amendment) Bill, 1971 ... ... 9[illegible]
4. Discussion on the Motion of Thanks to the Governor's Address—*cont.* 99, 168-D
5. Point of Order—
   Naming of Assembly Congress Party 122, 124
6. Papers laid on the Table 168-D

Thursday, 1st April 1971.

1. Point of Order—
   Need to expedite answers to questions 169–170
2. Questions and Answers 170–172
3. Privilege Matter—
   Alleged misleading information given by Thiru R. Ponnappa Nadar 172–174
4. Discussion on the Motion of Thanks to the Governor's Address—*cont.* 174–244
5. Papers laid on the Table 244–246

Friday, 2nd April 1971.

1. Questions and Answers 247–256
2. Privilege Matter—
   Alleged misleading information given by Thiru R. Ponnappa Nadar 256–259
3. Adjournment Motion—
   Pandiyar and Punnampuzha water to Coimbatore district ... ... 259–26[illegible]

PAGES.

Friday, 2nd April 1971—cont.

4. Announcements—
   (*a*) Tamil Nadu Appropriation (Vote on Account) Bill, 1971 (L.A. Bill No. 4 of 1971) and Tamil Nadu Appropriation Bill, 1971 (L.A. Bill No. 5 of 1971) ... 263
   (*b*) Panel of Chairmen 337
   (*c*) Election to State Library Committee . 337
   (*d*) Election to Committee of Privileges ... 337–338
   (*e*) Election to House Committee 338–339
5. Bill—
   The Motor Vehicles (Tamil Nadu Amendment) Bill, 1971 263–264
6. Discussion on the Motion of Thanks to the Governor's Address—*cont.* 264–339
7. Papers laid on the Table 339–340

Saturday, 3rd April 1971.

1. Questions and Answers 341–352
2. Government Motions—
   (*a*) Suspension of Rule 41 (3) 353
   (*b*) Association of Council Members with the Committee on Estimates 368
   (*c*) Change in the order of Business of the House 369
3. Calling Attention—
   (*a*) Hunger strike by Travancore-Cochin transferred graduate-teachers 353–355
   (*b*) Closure of Sree Shanmugar Mills at Rajapalayam and consequent hardships to employees 355–356
   (*c*) Closure of Murugan Mills at Coimbatore and consequent hardships to employees. 356–357

PAGES

Saturday, 3rd April 1971—cont.

3. Calling Attention—*cont.*
   (d) Shifting of the Head Office of the Fisheries (Development) Research Institute at Mandapam to another State 357–361
   (e) Arrest of spiralling prices of essential commodities 361–363

4. Announcements—
   (a) Nomination to Rules Committee 363
   (b) Nomination to Committee on Subordinate Legislation 363–364
   (c) Nomination to Committee on Assurances ... 364
   (d) Election to Committee on Estimates ... 364–365
   (e) Election to Public Accounts Committee ... 365–366
   (f) The Tamil Nadu Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1971 (L.A. Bill No. 6 of 1971) 375
   (g) The Tamil Nadu Town and Country Planning Bill, 1971 (L.A. Bill No. 1 of 1971) 380
   (h) The Tamil Nadu Agricultural University Bill, 1971 (L.A. Bill No. 2 of 1971) ... 395
   (i) The Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Bill, 1971 (L.A. Bill No. 3 of 1971) 429

5. Government Resolutions—
   (a) Expression of goodwill for the victory of Bangla Desh Freedom Movement ... 366–368
   (b) Raising the maximum guarantee amount for debentures issued by Co-operative State Land Development Bank 369
   (c) Amendments to Schedules of the Motor Vehicles Tax Act, 1931 370

6. Bills—
   (a) The Motor Vehicles (Tamil Nadu Amendment Bill, 1971 (L.A. Bill No. 8 of 1971) — 370–374

PAGES.

Saturday, 3rd April 1971—cont.

6. Bills—*cont.*
   (b) The Tamil Nadu General Sales Tax (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 7 of 1971) 374–375
   (c) The Tamil Nadu Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1971 (L.A. Bill No. 6 of 1971) 375–380
   (d) The Tamil Nadu Town and Country Planning Bill, 1971 (L.A. Bill No. 1 of 1971) 380–395
   (e) The Tamil Nadu Agricultural University Bill, 1971 (L.A. Bill No. 2 of 1971) ... 396–429
   (f) The Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Bill, 1971 (L.A. Bill No. 3 of 1971) 429–491

7. Papers laid on the Table 491

தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

தமிழ் நாடு ஆளுநர்

சர்தார் உஜ்ஜல் சிங்

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. **மாண்புமிகு** திரு. மு. கருணாநிதி (**முதலமைச்சர்**): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்) இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, செய்தி, விளம்பரம், திரைப்படச் சட்டம், பயண அனுமதிச் சீட்டுகள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, சாக்குகளின் விலைகள்-வழங்கல் குறித்த சட்டம், தமிழ் நாடு கழிவுநீர்-குடிநீர் வாரியம், குடிசை மாற்று வாரியம்.

2. **மாண்புமிகு** திரு. இரா. நெடுஞ்செழியன் (**கல்வி-வருவாய்த் துறை அமைச்சர்**): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், சட்ட மன்றம்.

3. **மாண்புமிகு** திரு. க. அன்பழகன் (**பொதுநலத் துறை அமைச்சர்**): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுச் சுகாதாரம், மருத்துவம், கால்நடை வளர்ப்பு.

4. **மாண்புமிகு** திரு. என். வி. நடராசன் (**தொழிலாளர் நலத் துறை அமைச்சர்**): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—தொழிலாளர், எழுது-பொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், சீரணி, எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், பத்திரப் பதிவு.

5. **மாண்புமிகு** டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து (**அரிசன நலத் துறை அமைச்சர்**): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

6. **மாண்புமிகு** திரு. ப. உ. சண்முகம் (**உணவு-உள்ளாட்சித் துறை அமைச்சர்**): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—உணவு, வணிக வரிகள், நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப்பொருள்கள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப் பணித் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுப்பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— கூட்டுறவு, துறைமுகங்கள், வேளாண்மை மறுநிதி உதவி, மண் வளப் பாதுகாப்புத் திட்டங்கள் நீங்கலாக வேளாண்மை இயக்கத்தின் வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம்.

10. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (வேளாண்மைத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—வேளாண்மை, உணவு உற்பத்தி.

11. மாண்புமிகு திரு. க. இராசாராம் (பின் தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பின் தங்கிய வகுப்பினர் நலன், சுற்றுலா, வீட்டு வசதி, இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு திரு. ஒ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா.

13. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

14. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— அறக்கட்டளைகள், பால் வழங்கு துறை, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான-கிராமதான இயக்கங்கள்.

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

GOVERNOR OF TAMIL NADU

SARDAR UJJAL SINGH

1. THE HON. THIRU M. KARUNANIDHI (Chief Minister): Minister in-charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to I.C.S. and I.A.S. Officers, District Revenue Officers and Deputy Collectors, Police, Elections, Prohibition, Information and Publicity, Cinematograph Act, Passports, Newsprints Control, Prices and Supplies of Goods Act, Tamil Nadu Drainage and Water Board and Slum Clearance Board.

2. THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN (Minister for Education and Revenue): Minister in-charge of Education including Technical Education, Official Language, Revenue, Board of Revenue, District Revenue Establishment and Legislature.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN (Minister for Public Health): Minister in-charge of Public Health, Medicine and Animal Husbandry.

4. THE HON. THIRU N. V. NATARAJAN (Minister for Labour): Minister in-charge of Labour, Stationery and Printing, Government Press, Prosperity Brigade, Legislation on Weights and Measures, Statistics and Registration.

5. THE HON. DR. (THIRUMATHI) SATYAVANIMUTHU (Minister for Harijan Welfare): Minister in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indians Overseas, Refugees and Evacuees.

6. THE HON. THIRU P. U. SHANMUGHAM (Minister for Food and Local Administration): Minister in-charge of Food, Commercial Taxes, Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions.

7. THE HON. THIRU S. MADHAVAN (Minister for Industries): Minister in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA (Minister for Public Works): Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Waqfs.

9. The Hon. Thiru Si. Pa. ADITANAR (Minister for Co-operation): Minister in-charge of Co-operation, Ports, Agricultural Refinance, Agricultural Engineering Wing of the Directorate of Agriculture except Soil Conservation Schemes, Khadi and Village Industries and Rural Industries Project.

10. The Hon. Thiru A. P. DHARMALINGAM (Minister for Agriculture): Minister in-charge of Agriculture and Food Production.

11. The Hon. Thiru K. RAJARAM (Minister for Backward Classes): Minister in-charge of Backward Classes, Tourism, Housing and Accommodation Control.

12. The Hon. Thiru O. P. RAMAN (Minister for Electricity): Minister in-charge of Electricity, Legislation on Money Lending Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

13. The Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Transport): Minister in-charge of Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

14. The Hon. Thiru M. KANNAPPAN (Minister for Religious Endowments): Minister in-charge of Religious Endowments, Milk, Ex-Servicemen, Bhoodan and Gramdan.

தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர்:

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்

பேரவைத் துணைத் தலைவர்:

மாண்புமிகு திரு. பெ. சீனிவாசன்

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. மா. வெ. கரிவேங்கடம்
திருமதி ஜோதி வெங்கடாசலம்
திரு. நா. வீராசாமி
திரு. அன்புச்செழியன்
திரு. என். கே. பழனிசாமி
திரு. எம் ஏ. லத்தீப்

சட்டப்பேரவைச் செயலாளர்

திரு. கா. ஜு. நடராசன் எம்.ஏ.பி.எல்.

துணைச் செயலாளர்

திரு. கு. புஜங்க ராவ், பி.ஏ., எல்.எல்.பி.,

உதவிச் செயலாளர்கள்

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி)
திரு. ஜி. இராகவன்
திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.
திரு. ஆர். மாணிக்கம், பி. எஸ்ஸி., பி.எல்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1)	தொகுதி. (2)
1 அண்ணாமலை, திரு. சி. வி. எம்.	காஞ்சிபுரம்.
2 அபுசாலி, திரு. எம். ஏ.	புவனகிரி.
3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை.	அரவக்குறிச்சி.
4 அரங்கண்ணல், திரு. இராம.	எழும்பூர்.
5 அழகமுத்து, திரு. து. ப. (அரசாங்க தலைமைக் கொறடா).	உப்பிலியபுரம்.
6 அழகர்சாமி, திரு. சோ.	கோவில்பட்டி.
7 அழகுத்தேவர், திரு. எம்.	சாத்தூர்.
8 அனந்தநாயகி, திருமதி த. ந.	மயிலாப்பூர்.
9 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்).	புரசைவாக்கம்.
10 அன்புச்செழியன், திரு.	பெரியகுளம்.
11 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு.	ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.)
12 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்).	ஸ்ரீவைகுண்டம்.
13 ஆலடி அருணா, திரு. வி.	ஆலங்குளம்.
14 ஆல்டா, திருமதி, எம். ஃபௌலர்	நியமன உறுப்பினர்.
15 ஆறுமுகம், திரு. அ.	எடப்பாடி.
16 ஆறுமுகம், திரு. எஸ்.	வீரபாண்டி.
17 ஆறுமுகம், திரு. சி.	மதுராந்தகம்.
18 இரத்தினசபாபதி, திரு. மு.	விளாத்திகுளம்.
19 இராசகோபால், திரு. க. மு.	உத்திரமேரூர்.
20 இராசகோபால், திரு. வீ.	வந்தவாசி (செ.வ.)
21 இராசமாணிக்கம், திரு. அ.	நாகப்பட்டினம்.
22 இராசமாணிக்கம், திரு. கு.	ஆடுதுறை.
23 இராசரத்தினம், திரு. டி.	ஸ்ரீபெரும்புதூர்.
24 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்).	சேலம்-11.
25 இராசு, திரு. ஜே. எஸ்.	பெரம்பலூர் (செ.வ.)
26 இராதாகிருட்டிணன், திரு. எம். எஸ்.	தண்டராம்பட்டு.
27 இராமச்சந்திரன், திரு. எம். ஜி.	பரங்கிமலை.
28 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்).	பண்ருட்டி.
29 இராமநாதன், திரு. சி.	அறந்தாங்கி.
30 இராமலிங்கம், திரு. இரா.	தூத்துக்குடி.
31 இராமலிங்கம், திரு. செ.	கடலாடி, செ.வ.
32 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்).	மேலூர் தெற்கு (செ.வ.)
33 இராமன், திரு. மூ.	கண்டமங்கலம் (செ.வ.)
34 இராஜாங்கம், திரு. என்.	குறிஞ்சிப்பாடி (செ.வ.)
35 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே.	கன்னியாகுமரி.
36 இளங்கோவன், திரு. கோ.	திருவையாறு.
37 இளஞ்செழியன், திரு. வீ. சா.	விராலிமலை.

தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1)	தொகுதி. (2)
38 எட்டியப்பன், திரு. பூ.	பெரணமல்லூர்.
39 எட்மண்ட், திரு. க. உரொ.	திருச்செந்தூர்.
40 கணபதி, திரு. நா.	பாபநாசம்.
41 கணபதி, திரு. டி.	நாங்குனேரி.
42 கணேசன், திரு. எஸ்.	ஒரத்தநாடு.
43 கணேசன், திரு. பி.	குற்றாலம்.
44 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்).	கிணத்துக்கடவு.
45 கண்ணன், திரு. எம். ஆர்.	பேலின்பிரிட்ஜ்.
46 கதிரவன், திரு. நா. மு.	தென்காசி.
47 கந்தசாமி, திரு. கே. பி.	சாத்தான்குளம்.
48 கந்தசாமி, திரு. எம்.	குளித்தலை.
49 கந்தப்பன், திரு. செ.	திருச்செங்கோடு.
50 கரிவெங்கடம், திரு. பா. வெ.	பாலக்கோடு.
51 கருணாநிதி, மாண்புமிகு திரு. மு. (முதல் அமைச்சர்).	சைதாப்பேட்டை.
52 கருணாநிதி, திரு. தாழை மு.	திருவாரூர் (செ.வ.)
53 கருணாநாதன், திரு. ரோ.	கூனூர்.
54 கருப்பையா, திரு. ஆ.	கங்கைகொண்டான் (செ.வ.).
55 காசிராமன், திரு. நா.	கும்பகோணம்
56 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி திரு.	முதுகளத்தூர்.
57 காமாட்சி, திரு. கு.	திருவரம்பூர்.
58 கார்த்திகேயன், திரு. வீ.	இராதாபுரம்.
59 காவேரிமணியம், திரு. சொ.	திருப்பரங்குன்றம்.
60 காளிமுத்து, திரு. கா.	சிவகாசி.
61 கிட்டப்பா, திரு. என்.	மாயூரம்.
62 கிருட்டிணன், திரு. நா.	பேரணாம்பட்டு, (செ. வ.)
63 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி.	நெல்லிக்குப்பம்.
64 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ.	திருச்செங்கோடு-1.
65 கிருஷ்ணன், திரு. கே. ஆர்.	ஊத்தங்கரை.
66 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ்.	மதுரை (கிழக்கு).
67 குமாரசாமி, திரு. அ. சே.	திருக்கோயிலூர்.
68 குமாரசாமி, திரு. கே. என்.	பல்லடம்.
69 குருசாமி, திரு. நா. வெ.	ஆண்டிப்பட்டி.
70 கேசவலு, திரு. தே.	கள்ளக்குறிச்சி.
71 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ்.	உதனப்பள்ளி.
72 கோபால், திரு. எம்.	குன்னத்தூர், (செ. வ.)
73 கோபால், திரு. கே. பி.	கம்பம்.
74 கோபால், திரு. பி.	கோயம்புத்தூர் மேற்கு.
75 கோவிந்தசாமி, திரு. வி. செ.	காவேரிப்பட்டினம்.
76 கோவிந்தராசன், திரு. ஆர்.	கடலூர்.
77 கோவிந்தராசன் துரை, திரு.	கந்தர்வகோட்டை.

தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1)	தொகுதி. (2)
78 கோவிந்தன், புலவர் கா.	செய்யாறு.
79 கோவை செழியன், திரு.	காங்கேயம்.
80 சகாதேவன், திரு. எஸ்.	செஞ்சி.
81 சங்குமுத்து தேவர், திரு. ச.	அம்பாசமுத்திரம்.
82 சதாசிவம், திரு. சே.	ஆண்டிமடம்.
83 சண்முகசுந்தரம், திரு. அ. ப.	பொள்ளாச்சி.
84 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்).	திருவண்ணாமலை.
85 சண்முகம், திரு. பெரி.	திருவாடானை.
86 சண்முகம், திரு. மு.	விழுப்புரம்.
87 சத்தியமூர்த்தி, திரு. மு.	புதுக்கோட்டை.
88 சத்தியவாணிமுத்து, மாண்புமிகு டாக்டர் (திருமதி) (அமைச்சர்).	பெரம்பூர் (செ.வ.)
89 சத்தியேந்திரன், திரு. எம். எஸ். கே.	இராமநாதபுரம்.
90 சம்பத், திரு. டி. வி.	செம்பனார்கோயில்.
91 சாதிக்பாட்சா, மாண்புமிகு திரு. எஸ். ஜே. (அமைச்சர்).	உடுமலைப்பேட்டை.
92 சாரதி, திரு. மா. பா.	வேலூர்.
93 சிதம்பரம், திரு. சித.	காரைக்குடி.
94 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ.	சேரன்மகாதேவி.
95 சிவபெருமாள், திரு. கோ.	அரியலூர்.
96 சிறைமீட்டான், திரு. தொ. க.	பரமக்குடி, (செ. வ.)
97 சீனிவாசன், திரு. பெ. (பேரவைத் துணைத் தலைவர்).	விருதுநகர்.
98 சீனிவாசன், திரு. தொ. ப.	போளூர்.
99 சின்னசாமி, திரு. அ.	செயங்கொண்டன் (செ.வ.)
100 சின்னசாமி, திரு. ஆர்.	தர்மபுரி.
101 சின்னசாமி, திரு. மு.	மொடக்குறிச்சி.
102 சின்னசாமி, டாக்டர் வ.	ஏற்காடு (ஆ.வா.).
103 சின்னராசு, ச. அ.	ஹரூர், செ.வ.
104 சின்ன வெள்ளையன், திரு. சி.	சேந்தமங்கலம் (ஆ.வா.)
105 சுந்தரம், திரு. ஒ. என்.	திண்டுக்கல்.
106 சுப்ரமணியம், திரு. எஸ். கே.	சத்யமங்கலம்.
107 சுப்பிரமணியம், திரு. கே. எம்.	தியாகராயநகர்.
108 சுப்பிரமணியன், திரு. மா.	ஈரோடு.
109 சுப்பு, திரு. க.	ராஜபாளையம்.
110 சுப்பையா, திரு. ஆ. கு.	கோட்டூர் (செ.வ.).
111 சுப்பையா, திரு. கே. வி.	ஆலங்குடி.
112 சுப்பையா, திரு. ச.	சங்கரன்கோயில் (செ.வ.).
113 சுப்பையா, திரு. எ. ஆர்.	கடயநல்லூர்.
114 சுப்பிரமணியம், திரு. எ.	சிங்கநல்லூர்.
115 சுப்பிரமணியம், திரு. வீ.	உளுந்தூர்பேட்டை.
116 சுருளிவேல், திரு. மு.	போடிநாயக்கனூர்.
117 சுரேந்திரன், திரு. எம்.	மேட்டூர்.
118 **சுவாமிதாஸ், திரு. எ.**	பத்மநாபபுரம்.

தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1)	தொகுதி (2)
119 செபமாலை, திரு. கோ.	மங்களூர் (செ.வ.).
120 செயராமன், திரு. இ.	சேலம்-1.
121 செல்லதுரை, திரு. வி.	ஓமலூர் (செ.வ.).
122 செல்லையா, திரு. குழ.	பேராவூரணி.
123 செல்வராஜ், திரு. எம்.	விருத்தாசலம்,
124 சேதுராமன், திரு. சி.	சிவகங்கை.
125 சோணையா, திரு. த.	மானாமதுரை.
126 சோமசுந்தரம், திரு. ந.	வலங்கைமான் (செ.வ.).
127 சௌடி சுந்தரபாரதி, திரு.	அருப்புக்கோட்டை.
128 சௌந்திரபாண்டியன், திரு. பெ.	கிருஷ்ணராயபுரம் (செ.வ.).
129 டென்னிஸ், திரு. என்.	கிள்ளியூர்.
130 தங்கமணி, திரு. கே. டி. கே.	மதுரை மேற்கு.
131 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்).	திருச்சிராப்பள்ளி-2.
132 தருமலிங்கம், திரு. ந.	ரிஷிவந்தியம் (செ.வ.).
133 தவமணித் தேவர், திரு. வி.	சேடப்பட்டி.
134 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி.	நாட்ரம்பள்ளி.
135 தியாகராசன், திரு. அ.	திருமயம்.
136 தியாகராசன், திரு. இ. எஸ்.	திருத்தணி.
137 திருப்பதி, திரு. கு.	மதுரை சென்ட்ரல்.
138 துரைசாமி, திரு. எ. க.	குடியாத்தம்.
139 துரைசாமி, திரு. சு.	திருப்பூர்.
140 துரைமுருகன், திரு.	காட்பாடி.
141 துரைராஜ், திரு. சு. ம.	திருவள்ளூர் (செ.வ.).
142 தூயமணி, திரு. மே. சி.	மேட்டுப்பாளையம்.
143 தேவராசன், திரு. எம்.	உதகமண்டலம்.
144 தேவேந்திரன், திரு. அ.	நன்னிலம் (செ.வ.).
145 தோப்பூர் திருவேங்கடம், திரு.	கணியம்பாடி.
146 நடராசன், திரு. ஈ. எம்.	அந்தியூர்.
147 நடராசன், திரு. எஸ்.	தஞ்சாவூர்.
148 நரசிம்மன், திரு. எ. சி.	ஆரணி.
149 நல்லசாமி, திரு. எஸ்.	கரூர்.
150 நாகராஜன், திரு. க.	வடமதுரை.
151 நாகலிங்கம், திரு. பா.	பொன்னேரி (செ.வ.).
152 நாச்சிமுத்து, திரு. நா.	ஒட்டஞ்சத்திரம்.
153 நாச்சியப்பன், திரு. எ. எம். டி.	ஆத்தூர்.
154 நாச்சியப்பன், திரு. ந.	சங்கராபுரம்.
155 நாராயணசாமி, திரு. மா. வே.	திருவொற்றியூர்.
156 நெடுஞ்செழியன், மாண்புமிகு திரு. இரா. (அமைச்சர் —அவைமுன்னவர்).	திருவல்லிக்கேணி.
157 நைனாமலை, திரு. இரா.	ராசிபுரம்.
158 பத்மநாபன், திரு. பொ.	திருநெல்வேலி.
159 பத்மாவதி, திருமதி எ. கோ.	மூகையூர்.

தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1)	தொகுதி. (2)
160 பரந்தாமன், திரு. ஆ.	கடம்பத்தூர்.
161 பரமசிவம், திரு. எம்.	தாரமங்கலம்
162 பலராமன், திரு. என். எஸ்.	அரக்கோணம்.
163 பழனிசாமி, திரு. நா.	பொங்கலூர்.
164 பழனிசாமி, திரு. என். கே.	பெருந்துறை.
165 பழனிசாமி, திரு. மு.	வெள்ளக்கோயில்.
166 பழனிச்சாமி, புலவர். சி.	பழனி (செ.வ.).
167 பழனியப்பன், டாக்டர்,ச. மு.	கோபிசெட்டிபாளையம்.
168 பழனியம்மாள், திருமதி வி. ப.	தாராபுரம்.
169 பழனிவேலன், திரு. க.	வரகூர்.
170 பழனிவேலன், திரு. மு.	நாமக்கல்.
171 பழனிவேலு, திரு. வி.	ஆத்தூர்.
172 பழனிவேல் ராஜன், திரு.	தேனி.
173 பன்னீர்செல்வம், திரு. எம்.	ஆம்பூர் (செ.வ.).
174 பாண்டுரங்கம், திரு. சி.	செங்கம் (செ.வ.).
175 பாலகிருட்டிணன், திரு. கு.	மன்னார்குடி.
176 பாலசுந்தரம், திரு. வை.	அச்சரபாக்கம் (செ.வ.).
177 பாலையா, திரு. எ.	கொளச்சல்.
178 பெரியசாமி, திரு. கு.	கொடவாசல்.
179 பெரியசாமி, திரு. தி. ஒ.	அவிநாசி.
180 பெருமாள், திரு. செ.	காட்டுமன்னார்கோயில்.
181 பெருமாள், திரு. எ. ஆர்.	காரியப்பட்டி.
182 பொம்மன், திரு. கு. அ.	கூடலூர் (செ.வ.).
183 பொன்சொக்கலிங்கம், திரு. பி.	சிதம்பரம்.
184 பொன்னப்ப நாடார், திரு. ஆர்.	விளவங்கோடு.
185 பொன்னுமலை, திரு. தி.	பனைமரத்துப்பட்டி.
186 பொன்னுரங்கம், திரு. எ. எம்.	சோளிங்கபுரம்.
187 மணலி கந்தசாமி, திரு. சி.	திருத்துறைப்பூண்டி.
188 மணியன், திரு. பி. எஸ்.	சோழவந்தான்.
189 மதியழகன், மாண்புமிகு திரு. கே. எ. (பேரவைத் தலைவர்).	ஆயிரம் விளக்கு.
190 மருதாசலம், திரு. என.	பேரூர் (செ.வ.).
191 மலைக்கண்ணன், திரு. வீ.	இளையாங்குடி.
192 மலைச்சாமி, திரு. பெ.	மேலூர் வடக்கு.
193 மன்னியப்பன், திரு. சி.	கிருஷ்ணகிரி.
194 மாணிக்கம், திரு. என்.	பென்னகரம்.
195 மாணிக்கவாசகம், திரு. இரா.	தொண்டாமுத்தூர்.
196 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்).	திருப்பத்தூர்.
197 மாரிமுத்து, திரு. எ. ஆர்.	பட்டுக்கோட்டை.
198 மாரிமுத்து, திரு. மூ.	தலைவாசல் (செ.வ.).
199 மீனாட்சிசுந்தரம், திரு. மா.	வேதாரண்யம்.

தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1)	தொகுதி. (2)
200 முகமது காதர் முகைதீன், திரு. எஸ்.	மேலப்பாளையம்.
201 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந.	லால்குடி.
202 முத்து, திரு. வ.	சங்கரி (செ.வ.).
203 முத்துசாமி, திரு. ப.	வேடசந்தூர்.
204 முத்துச்செல்வன், திரு. பு. செ.	முசிறி.
205 முத்துவேல், திரு. ந.	வானூர் (செ.வ.).
206 முத்தையா, திரு. கே. கே.	கடலூர்.
207 முத்தையா, திரு. எம்.	ஒட்டப்பிடாரம் (செ.வ.).
208 முருகையன், திரு. எஸ்.	கலசப்பாக்கம்.
209 முனியாண்டி திரு. ஆ.	நிலக்கோட்டை (செ.வ).
210 முனு ஆதி திரு. மு.	திருப்போரூர்.
211 முனுசாமி, திரு. ரா. ரா.	மேல்மலையனூர்.
212 மொய்தீன், திரு. திருப்பூர் எ. எம்.	துறைமுகம் (சென்னை நகரம்).
213 மோசஸ், திரு. ம.	நாகர்கோவில்.
214 ரங்கநாதன், திரு. கே.	கோயம்புத்தூர் (கிழக்கு).
215 ராமசாமி, திரு. இ.	வால்பாறை.
216 ராமசாமி, திரு. ஜி.	திருப்பத்தூர்.
217 ராமராசன், திரு. வ. க.	பவானிசாகர் (செ.வ.).
218 ராஜா, திரு. எ. எம்.	பவானி.
219 ராஜாராம், திரு. ஜி.	திண்டிவனம்.
220 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ.	திருமங்கலம்.
221 லத்தீப், திரு. எம். எ.	வாணியம்பாடி.
222 வகாப், திரு. கே. எ.	ராணிப்பேட்டை.
223 வடிவேலு, திரு. சீ. க.	தோட்டியம்.
224 வடிவேல், திரு. எஸ்.	சீர்காழி (செ.வ.).
225 விசுவநாதன், திரு. செ. கோ.	செங்கல்பட்டு.
226 வீராசாமி, திரு. நா.	ஆற்காடு.
227 வெங்கடசாமி, திரு. பி.	ஹோசூர்.
226 வெள்ளத்துரை, திரு. அ.	வாசுதேவநல்லூர்.
229 வேதாசலம், திரு. மு.	வண்ணாரப்பேட்டை. (சென்னை நகரம்).
230 வேலப்பன், திரு. சி. வே.	கபிலமலை.
231 வேழவேந்தன், திரு. கா.	கும்மிடிபூண்டி.
232 ஜேம்ஸ், திரு. ஜே.	திருவட்டார்.
33 ஜோதி வெங்கடாசலம், திருமதி	ஸ்ரீரங்கம் (செ.வ.).
234 ஹாண்டே, டாக்டர் எச். வி.	பார்க் டவுன் (சென்னை நகரம்).
235 வெற்றிடம்	உசிலம்பட்டி.

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

தொடர் எண்ணும், பெயரும்.	
1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன்	அமைச்சர்.
2 திரு. கோவிந்த் சுவாமிநாதன்	தலைமை வழக்கறிஞர்.

தமிழ் நாடு சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1971 மார்ச் 30.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. அறிவிப்பு

வினா-விடை நேரம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றும் மாண்புமிகு அமைச்சர்கள் விடையிறுப்பதற்கான வினாக்கள் இல்லை.

[**குறிப்பு :** ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்

தாழங்குப்பத்தில் மூன்று தி.மு.க. தொண்டர்கள் கொலையுண்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கீழ்க்கண்ட பொருள் குறித்து ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள் :

The gruesome murder of three D.M.K. volunteers in Thazhankuppam near Madras.

இது ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குரிய விதி முறைகளின்கீழ் எப்படி வரும் என்ற விவரத்தைமட்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மிஸ்டர் ஸ்பீக்கர், ஸார். இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை நான் கொண்டுவந்து உங்களுடைய அனுமதி வேண்டுமென்று கேட்பதற்கு முக்கியமான காரணங்கள் உண்டு. இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கக்கூடிய இந்தச் சம்பவம் ஒரு முக்கியமான சம்பவம் என்றும், கவலைக்குரிய ஒரு சம்பவம் என்றும், சமீபத்திலே நடந்ததொரு சம்பவம் என்றும், இதைச் சாதாரண ஒரு சட்டப் பிரச்சினையாகப் பார்க்கக் கூடாது என்றும் நான் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்தச் சபை ஆரம்பித்த காலம் முதற்கொண்டே, தேர்தலுக்குப் பின்னால் பல சம்பவங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைப்பற்றிச் சபைமுன் கொண்டு வரப்பட்டது. அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில வாக்குறுதிகளைக் கொடுத்தார்கள். ஆனால், இந்தப் பத்திரிகைச் செய்தியை உங்களுக்கு நான் அனுப்பியிருக்கிறேன். தினத்தந்தி 28-ந் தேதி சென்னைப் பதிப்பிலே 5-ம் பக்கத்தில் இந்தச் செய்தி குறிப்பிடப்பட்டிருக்கிறது. சென்னைக்கு அருகாமையில் இருக்கக்கூடிய ஒரு குப்பத்தில் நடந்த இந்தச் சம்பவம்பற்றி நானும் விசாரித்தேன். இறந்துபோனவர் ஒருதொழிலாளி. அவர் காலையில் வேலைக்குச் செல்வதற்கு முன்னால் அவரைத் தாக்கியிருக்கின்றார்கள். பின்பு தாக்கிய அதே கூட்டம், வேறு சிலரையும் தேடிச் சென்றதைப் பார்த்தால் இதில் அரசியல் நோக்கம் இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

அப்படிக் கொலைச் சம்பவங்கள் ஏற்பட்டதற்குப் பின்னுலேயோ முதல் அமைச்சர் அவர்கள், சகல கட்சித் தலைவர்களையும் கூப்பிட்டு ஒரு கூட்டாக அறிக்கை விட்டிருந்தால் உதவிகரமாக இருக்கும் என்ற காரணத்தினுல்தான் அரசுக்கு இதிலே பொறுப்பு இருக்கிறது என்ற முறையிலே இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறேன்.

இன்னொரு விஷயத்தையும் உங்கள்மூலமாக இன்றைக்கு சபைக்குத் தெரிவிக்கலாம் என்று நினைக்கிறேன். ஏனென்றால், இது ஒரு அரசியல் காரணமாக, சாதாரணமாக நையாண்டி செய்தாலோ வேறு சில காரியங்கள் செய்தாலோகூட அதைக் கவனிக்காமல் இருந்துவிடலாம். அது கொலை என்ற முறையில் போகுமானுல், அண்டை மாநிலமாகிய வங்காளத்தில் சமீபத்தில் ஏற்பட்டதுபோன்ற இந்த அரசியல் கொலைகள் எங்கு ஆரம்பித்துவிடுமோ என்ற அச்சம் எனக்கு இருக்கிறது. அப்படி வருமானுல் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுடைய உயிர்களுக்குக்கூட ஆபத்து ஏற்படலாம். நான் இப்படிச் சொல்வது சில ஆதாரங்களை வைத்துத்தான். ஆகவேதான் இந்த முக்கியமான பிரச்சினையின்பேரில் சபையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்து இதைப்பற்றிப் பிரத்தியேகமாக விவாதிக்கவேண்டும் என்பதற்காக, உங்கள்மூலமாக, இந்தச் சபையின் அனுமதியைப் பெறுவதற்காக இந்தப் பிரச்சினையைக் கொண்டுவந்திருக்கிறேன்.

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நம்முடைய இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியினுடைய தலைவர் மாண்புமிகு கே. டி. கே. தங்கமணி அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது நான் சில விவரங்களை மாத்திரம் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள் இப்பொழுது தேர்தலுக்குமுன் என்றும், தேர்தலுக்குப்பின் என்றும்—கி.பி., கி.மு. என்றும் பிரித்துக் கொள்வதைப்போல—நாட்டில் பிரித்துக்கொண்டு கணக்கெடுக்கின்ற ஒரு நிலைமை உருவாகி இருக்கின்றது. நடைபெறுகின்ற சம்பவங்கள் அனைத்தும், நடந்து முடிந்த தேர்தலோடு தொடர்புபடுத்தப்படுகிற காட்சியையும் காண்கிறோம். அவைகளில் சில தேர்தலோடு தொடர்புள்ளவையாகும். சில தொடர்பு கொள்ளாதவைகளாகும்.

சென்னைக்கு அருகாமையில் தாழங்குப்பத்தில் நடைபெற்ற சம்பவங்களில், இரண்டு குழுவினர் மோதிக் கொண்டார்கள். அந்த மோதுதல் ஏற்கெனவே 15—3—1971 அன்று நடைபெற்று, அதிலே போலீசார் தலையிட்டு, இரு சாராரிடத்திலேயும் ஒரு சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்தி, அவர்களிடத்திலே, அமைதி நிலவுவதற்கு, பேச்சு வார்த்தைகளெல்லாம்கூட நடைபெற்றுக் கொண்டிருந்தன எனத் தகவல்கள் வந்தன. அதற்குப்பிறகு, திடீரென்று 28—3—1971 அன்று காலை 5 மணி அளவில், 25 நபர்கள் கூட்டமாகக் கூடிச் சென்று, தாழங்குப்பத்திலுள்ள மூன்று பேர்களைக் கொலைசெய்து முடித்திருக்கின்றார்கள். வந்துள்ள தகவல்களின்படி, அதிலே கொலை செய்யப்பட்டவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் என்றும், கொலை வெறியை நடத்தியவர்கள் நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது. இவையெல்லாம் வழக்கு மன்றத்தில் விவரமாக எடுத்துச்

சொல்லப்பட வேண்டிய விஷயங்கள் என்கிற காரணத்தால் நான் அதிலே ஊடுருவிச்செல்ல விரும்பவில்லை, அது நல்லதும் அல்ல என்ற காரணத்தினுல்.

மூன்று பேர்களில், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த கருத்த கண்ணன் என்ற—40 வயது உள்ளவர் ஒருவரும், ராமசாமி என்கின்ற 20 வயது வாலிபர் ஒருவரும், சீனிவாசன் என்பவரும் இந்தச் சம்பவத்தின் காரணமாக மரணமடைந்திருக்கிறார்கள். இதிலே சாமுவேல், நாராயணன், துரைக்கண்ணு, கோபால், பிச்சை ஆகிய ஐவர் இதுவரையிலும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். மற்ற குற்றஞ்சாட்டப்பட்டிருப்பவர்கள் ஆந்திரக் கடற்கரைப் பகுதிக்குச் சென்று தங்கியிருக்கிறார்கள் என்றும், அவர்களைத் தேடுவதிலே போலீசார் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்கள் என்றும் எனக்குத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

இதுபோன்ற வன்முறைச் சம்பவங்கள் நம் அனைவராலும் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று என்பதை நான் இந்த மாமன்றத்திலே எடுத்துக் கூறியிருக்கிறேன். நேற்று மேலவையிலே இதுபற்றிக் குறிப்பிடுகிற நேரத்தில், வன்முறை உள்ளம் கொண்டவர்கள் எந்தக் கட்சியிலே இருந்தாலும், யாராக இருந்தாலும், காவல் துறையினர் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயங்கமாட்டார்கள், இந்த அரசும் கடும் நடவடிக்கை எடுக்கும் என்ற எச்சரிக்கையினை விடுத்திருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் கண்ணுற்றிருக்கலாம்.

இந்தக் குறிப்பிட்ட சம்பவத்தைப்பற்றிக் காவல் துறையினரும், விரைந்து நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறார்கள். இந்தத் தகவலைத் தந்து, இது போன்ற காரியங்கள் நடைபெறாமல் இருக்க, அனைத்துக் கட்சிக் கூட்டங்களைக் கூட்ட வேண்டும் என்று சொன்னார்கள். நானே அனைத்துக் கட்சி சார்பிலே தான், முதலிலேயே, முற்போக்குக் கூட்டணிச் சார்பில் அறிக்கை விட்டிருக்கிறேன். முற்போக்குக் கூட்டணியில் இருக்கும் எல்லாக் கட்சிக்காரர்களும் ஒப்புக் கொள்ளக்கூடிய அறிக்கைதான் அது என்று நினைக்கிறேன். அதைப்போல் அறிக்கைகளை மற்றக் கட்சிக்காரர்களும் விட்டாலும், அரசியல் சம்பவமோ அல்லது வேறு சம்பவமோ, எந்தச் சம்பவமாக இருந்தாலும், தமிழ் நாட்டில் வன்முறைகள் விளைந்திடாமல், கிளர்ந்தெழாமல் இருக்கத் தக்க முறையில் விளக்கங்களைத் தர மாண்புமிகு திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களின் தீர்மானம் பயன்பட்டது என்ற அளவோடு திருப்தியடைந்துகொண்டு, இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்ற எனது கருத்தைத் தங்களுக்குத் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல் அமைச்சர் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு இதன்மீது விவாதம் தேவையில்லை என்கிற காரணத்தால் இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

3. அரசினர் மசோதாக்கள்

(அ) தமிழ் நாடு 1971-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்த மசோதா

THE HON. THIRU S. MADHAVAN: Sir, I move—

"That leave be granted for the introduction of the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1971".

The motion was put and carried and leave was granted.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

(ஆ) தமிழ் நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 4/1971)

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 'தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 4/1971) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் படவேண்டும்' என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, அட்டவணை, குறுந்தலைப்பு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 'தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 4/1971) நிறைவேற்றப்படவேண்டும்' என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(இ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 5/1971).

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 'தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 5/1971) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்' என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அட்டவணை, குறுந்தலைப்பு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 'தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 5/1971) நிறைவேற்றப்பட வேண்டும்' என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(4) ஆளுநர் பேருரைக்கு நன்றிகூறும் தீர்மானத்தின்மீது விவாதம்

திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுக்குக் கீழ்க்கண்ட நன்றியுரை அளிக்கப்பட வேண்டும் :—

'1971-ம் ஆண்டு, மார்ச்சு திங்கள், 24-ம் நாளன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு* தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றி யுடையவர்களாவர்' என்று முன்மொழிகிறேன்.

திரு. எஸ். முருகையன் : தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கக்கூடிய தீர்மானத்தை, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேழவேந்தன் முன்மொழிந்ததை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த நன்றி அறிவிக்கும் தீர்மானத்திற்குத் திருத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஏழு திருத்தங்கள் ஏழு உறுப்பினர்களால் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளையும் இப்பொழுதே முன்மொழிந்துவிடலாம்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, I move the following amendment :—

Add at the end, the following :—

'but regret to note that no mention is made about :—

1. the plight of the Handloom Industry;
2. the steps to arrest the soaring prices;
3. the steps taken to solve unemployment; and
4. the future policy of Government on prohibition.'

THIRUMATHI JOTHI VENCATACHELLUM : Sir, I second it.

THIRU K. T. K. THANGAMANI : Sir, I move the following amendment :

Add at the end, the following :—

'but regret that there is no reference in the Address about the Labour Policy such as guaranteeing need based minimum wage, non-interference by police in industrial disputes, automatic withdrawal of cases on settlement of disputes, introduction of suitable gratuity measures through legislation, periodic revision of minimum wages'.

The amendment was duly seconded.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I move the following amendment :—

Add at the end, the following :—

'but regret to note that there is no mention in the address about

(i) the ceiling on urban properties;

* 77-85-ம் பாகங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது. 85, 96-ம் பக்கங்களில் ஆளுநர் உரையின் தமிழாக்கம் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

(ii) the provision of vitaminised food to slum children; and

(iii) the provision of substantial metropolitan grant to the Corporation of Madras.'

The amendment was duly seconded.

திரு. ச. சங்குமுத்து தேவர் : தலைவர் அவர்களே, இறுதியில் பின்கண்ட திருத்தத்தைச் சேர்த்துக் கொள்ளவும்:—

'ஆயினும், ஆளுநர் உரையில் வேலையற்றோர் பிரச்சினையைத் தீர்க்க, அரசு தவறியதைச் சுட்டிக்காட்டாதது வருந்தத்தக்கது.'

தீர்மானம் முறைப்படி வழிமொழியப்பட்டது.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, இறுதியில் பின்கண்ட திருத்தத்தைச் சேர்த்துக் கொள்ளவும்:—

'இருப்பினும், ஆளுநர் உரையில் நெசவுத் தொழிலைப்பற்றிக் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.'

தீர்மானம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்களும், திருமதி அனந்தநாயகி அவர்களும் திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் இடங்களில் இல்லை. அவர்கள் பின்னால் எப்பொழுதும் முன்மொழியலாம்.

திரு. கா. வேழவேந்தன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 23-ம் நாளன்று இந்த அவையும், மேலவையும் சேர்ந்து கூடிய கூட்டத்தில் தமிழக ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு, சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பில் நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிவதில் நான் பெருந்த பூரிப்படைகின்றேன். நம்முடைய ஆளுநர் அவர்கள் தம்முடைய உரையிலே நம்பிக்கையொளி ஊட்டக்கூடிய பல நல்ல கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். முதல் இரண்டு பக்கங்களில் நடந்து முடிந்த தேர்தலைப்பற்றி அருமையாக விரிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆளுநர் அவர்கள் தம்முடைய உரையிலே வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் தேர்தல் முடிவுகளைப் பற்றிச் சொல்கிறபோது, 'தமிழக மக்கள் நல்ல விழிப்போடு நல்ல தீர்ப்பை அளித்திருக்கிறார்கள்' என்ற கருத்தை வலியுறுத்தி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தேர்தல் களத்திலே வாகை சூடிய மாணவர்கள் இங்கே அமர்ந்திருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் மாணவர்களா என்ற எண்ணத்தை ஊட்டக்கூடிய வகையில் எதிர்ப் பிரச்சாரங்கள் நடந்தன. பல்வேறு தீய காட்சிகள் எல்லாம் சிதறிவிடப்பட்டன. என்றாலும் அவற்றிற்கப்பாலும் ஆளும் கட்சியைச் சேர்ந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினர் 183 பேர்கள் வெற்றிபெறக் கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இதை ஆளுநர் அவர்கள் தம்முடைய உரையிலே மிகச் சிறப்பாக இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

'ஜனநாயகம் செத்துவிட்டது' என்று சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருப்பவர்கள் வேண்டுமானால் சொல்லிக்கொண்டிருக்கலாம். இன்றைக்குத் தமிழ் நாட்டில் ஜனநாயகம் அருமையாகப் பூத்துக் குலுங்கி இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தேர்தல்

நாளன்று, 1-ம் தேதியன்றும் அதற்குப் பிறகும் நடந்த தேர்தல் நாட்களிலும் வாக்குச்சாவடிக்கு மக்கள் திரள் திரளாகச் சென்று வாக்களித்த காட்சிகளை நல்லவர்கள், இந்த நாட்டு மக்கள் பார்த்துக்கொண்டுதான் இருந்தார்கள். அப்படி இந்த நாட்டு மக்கள் வழங்கிய நல்ல தீர்ப்பைக் கண்டபிறகும் 'ஜனநாயகம் செத்துவிட்டது' என்று யாரும் சொல்ல முடியாது.

என்னுடைய தொகுதியாகிய குடியாத்தம் ஆந்திர மாநிலத்தின் எல்லையில் இருக்கிறது. என்னுடைய தொகுதியில்கூட நூற்றுக்கு எழுபத்தைந்து பேர்கள் வாக்களித்து இந்த நல்ல முறையை ஏற்படுத்திய பின்னரும், இங்கே ஜனநாயகம் இல்லையென்று யாராவது சொன்னால் அதை எப்படி நாம் ஏற்றுக் கொள்ள முடியும்?

தேர்தல் நடந்து, வாக்குச் சீட்டுகள் எண்ணி முடிக்கப்படுவதற்கு இடையில் ஒரு வாரம் அல்லது பத்து நாட்களுக்குள் இந்த நாட்டில் எத்தனையோ விதமான வேடிக்கையான பிரச்சாரங்கள் நடைபெற்றன. இங்கே இருந்து கொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசு அமையாது என்று ஆருடங்கள் கணிக்கப்பட்டன என்றால் அதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. காங்கிரஸ் கட்சியின் சார்பிலே உறுப்பினர்கள் எல்லாம் இதைப்பற்றி எடுத்துச் சொல்கிறபோது, 'நீங்கள் ஏன் இதை மிகைப்படுத்துகிறீர்கள்? நீங்கள் இப்படிச் சொல்லலாமா? இப்படி மதிக்கலாமா?' என்று சொன்னார்கள். ஜனநாயகத்தில் தீர்ப்பு வழங்கப்படுகிற நேரத்தில், அந்தத் தீர்ப்பு மக்கள் தீர்ப்பாக இருக்க வேண்டும். இந்த நாட்டிலுள்ள பொதுமக்கள் தான் எஜமானர்கள். அவர்கள் அளிக்கின்ற முடிவுதான் நல்ல தீர்ப்பு ஆகும். தேர்தல் முடிவு வருவதற்குள் இங்கே இருக்கிற சில பத்திரிகைகள் எப்படி எப்படியெல்லாம் எழுதின என்பது எல்லாம் உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

சின்னஞ்சிறு ஓர் உதாரணத்தைமட்டும் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன். சென்னையிலே 12 தொகுதிகளிலும் திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றுவிட்டதாகவும், 12 தொகுதிகளிலும் காங்கிரஸ் வெற்றிபெற்று விட்டதாகவும் கற்பனைசெய்து கட்டுரைகள் எழுதப்பட்டன. பயங்கரமான முறையிலெல்லாம் செய்திகளை எழுதினார்கள். இங்கே நம்முடைய சுகாதார அமைச்சராக இருக்கிற பேராசிரியர் அன்பழகனைப்பற்றி நீங்கள் எல்லாம் அறிந்திருக்கிறீர்கள். அவரைப்பற்றி, "அரசனை நம்பி புருஷனைக் கைவிட்டவர் பேராசிரியர் அன்பழகன். அவருக்கு மந்திரியாக வேண்டுமென்று ஆசை. ஆனால் அவர் ஜெயிக்க முடியாது" என்றெல்லாம் கற்பனைசெய்துகொண்டு எழுதின. மற்றும் "நடமாடும் பல்கலைக் கழகத்தை இனி நடமாட வைக்க முடியாது, வீட்டிற்கு அனுப்பிவிட்டோம், you understand' என்று எதிர்த்தரப்பில் ஆங்கிலமும் தமிழும் கலந்த மணிப்பிரவாள முறையில் பத்திரிகையில் எழுதப்பட்டன. துறைமுகத் தொகுதியைப்பற்றிக் குறிப்பிடுகையில், அந்தக் கட்டுமரத் துறைமுகத்திலே சூரியன் அஸ்தமித்துவிட்டது என்று கூறுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் போட்டியிடுகிற சைதாப்பேட்டைத் தொகுதியைப்பற்றிக் குறிப்பிடுகையில், 'சைதாப்பேட்டை கலைஞருக்கு சைத்தான் பேட்டையாகிவிட்டது, அவர் வீட்டுக்குப் போய்விட்டார்' என்று கற்பனைசெய்து எழுதியிருக்கிறது. இவ்வாறெல்லாம் பத்திரிகைகள் எழுதியிருக்கின்றன. நான் ஜனநாயகத்தை மதிக்கிறவர்களைப் பார்த்துக் கேட்கிறேன். பெருவாரியான மக்கள் ஓட் அளித்திருக்கிறார்

ஆளுநர் அவர்களின் பேருரைக்கு நன்றி கூறும தீர்மானத்தின் மீது விவாதம்

[திரு. கா. வேழவேந்தன்] [1971 மார்ச் 30

கள். தேர்தல் முடிந்து ஓட்டு எண்ணப்பட்டு முடிவு அறிவிக்கப்படுவதற்குள்ளாக இப்படியெல்லாம் எழுதிக்காட்ட வேண்டுமா? 'நடமாடும் பல்கலைக் கழகத்தை வீட்டிற்கு அனுப்பிவிட்டோம், கலைஞரை [illegible] அனுப்பிவிட்டோம்' என்று துணிந்து எழுதினர்களே, இது ஜனநாயகத்திற்கு நல்லதா? ஓட்டு எண்ணிக்கை முடிந்தபிறகு எங்கோ ஒரு ஓட்டுச் சீட்டு காற்றிலே பறந்து வெளியில் விழுந்ததை எடுத்து வைத்துக்கொண்டு, 'பார்த்தீர்களா? ஓட்டுச் சீட்டு வெளியில் கிடந்தது, அதனால்தான் நாங்கள் தோற்றுவிட்டோம், இல்லாவிடில் வெற்றி பெற்றிருப்போம்' என்று சொல்லிக் கொண்டு வருகிருர்கள். ஜனநாயகத்தில் மக்கள் தருகின்ற தீர்ப்பை எல்லோரும் மதிக்கத்தான் வேண்டும். தீர்ப்புத் தெரிகின்ற வரைக்கும் காத்திருக்கத்தான் வேண்டும்.

இன்றைக்கு ஆளுநர் அவர்கள் நம்மைப்பற்றி மிகவும் சுருக்கமாக ஒரே வரியில் சொல்லியிருக்கிருர். "இந்த அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் மிகப் பெரிய வெற்றி பெற்றிருப்பதற்குக் காரணம் என்னவென்ருல், அதனுடைய ரகசியம் என்னவென்ருல், இந்த அரசு ஏழை எளியவர்களுடைய, அடித்தளத்தில் இருக்கிற மக்களின் இதய உணர்ச்சிகளை நன்ருகப் புரிந்து கொண்டிருக்கிற அரசாக இருக்கிறது என்பதுதான் காரணம். ஏழை எளிய மக்களின் துயரங்களைத் தீர்க்க இந்த அரசு முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறது" என்று ஆளுநர் அவர்கள் சொல்லியிருக்கிருர்கள்.

கோடானுகோடி மக்கள் நல்ல தீர்ப்பை வழங்கிய நேரத்தில் எனக்கு அல்னஷர் என்ற பீங்கான் வியாபாரியின் கதைதான் நினைவுக்கு வருகிறது. அல்னஷர் என்ற பீங்கான் வியாபாரி பீங்கான் சாமான்களை ஒரு கூடையில் அடுக்கிக்கொண்டு, ஒரு மரத்தின் அடியில் உட்கார்ந்துகொண்டு கற்பனை செய்து கொண்டானும். 'நான் இந்த பீங்கான் சாமான்களை நிறைய விலைக்கு விற்பேன். அந்தப் பணத்தைக் கொண்டு ஒரு கடைக்குச் சொந்தக்காரன் ஆவேன், பின்னர் ராஜமாளிகை ஒன்று வாங்குவேன், அதற்குப் பிறகு ராஜமாளிகையிலே இருக்கிற ராஜகுமாரியைத் திருமணம் செய்துகொள்வேன். ராஜகுமாரி என்னிடம் கெஞ்சுவாள். நான் அவளை காலால் உதைப்பேன்' என்று எண்ணிக்கொண்டே தான் வைத்திருந்த பீங்கான் கூடையை எட்டி உதைத்தானும். அவன் உதைத்த வேகத்தில் கூடையிலிருந்த பீங்கான் சாமான்கள் உடைந்து அவன் பெருத்த நஷ்டமடைந்தானும். அந்த பீங்கான் வியாபாரி கதையைப்போலத்தான் அரசியல்வாதிகளும் தேர்தல் நேரத்தில் கற்பனை செய்துகொண்டார்கள். ஏன் இதைச் சொல்லுகிறேன் என்ருல் அரசியல்வாதிகள் கற்பனை அதிகம் செய்யக்கூடாது என்பதற்காகத்தான்.

பொதுவாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆட்சி பொறுப்பு ஏற்றுக்கொண்ட பின்னர் எப்படி நடந்து கொண்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். 1967-ல் நாங்கள் எல்லாம் வெற்றி பெற்று கோட்டைக்குள் வருவதற்கு முன்னல் இந்த நாட்டிலே உற்பத்தியினுடைய அளவு ஏறக்குறைய 54½ லட்சம் டன்கள்தான் இருந்தது. இன்றைக்கு அந்த உற்பத்தியின் அளவு 67 லட்சம் டன் என்ற அளவில் உயர்ந்திருக்கிறது. ஏறக்குறைய 13 லட்சம் டன் உயர்ந்திருக்கிறது. அதற்கு என்ன காரணம்? உற்பத்தி உயர்ந்ததற்கு என்ன காரணம் என்பதைப் பார்க்க வேண்டும். சுருக்கச் சொன்னல், ஒரு போகத்தை இருபோகமாக்கியும், இருபோகத்தை

ஆளுநர் அவர்களின் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்

1971 மார்ச் 30] [திரு. கா. வேழவேந்தன்]

மூன்று போகமாக்கியும் உற்பத்தியைப் பெருக்க எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொண்டோம். விவசாயிகளுக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்தோம். இப்போதைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அப்போது பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தார்கள். எங்கேயாவது தண்ணீர் வரவில்லையென்ருல், அங்கே நேரிடையாகச் சென்று, நீர்ப்பாசன மாநாடுகளையும் விவசாயிகளின் மாநாடுகளையும் கூட்டி, விவசாயிகளுக்கு நல்ல ஊக்கத்தை ஏற்படுத்தி வந்தார்கள். நல்ல நல்ல யோசனைகளையெல்லாம் எப்படி அமல் நடத்துவது என்று ஆராய்ந்து நல்ல முடிவுகளை உடனுக்குடன் நிறைவேற்றித் தந்தார்கள். இன்றையதினம் குருவாயூரப்பனுக்குக்கூட அரிசி அனுப்புகிற அளவில் உற்பத்தியைப் பெருக்கிட முடிந்தது. இதையெல்லாம் எதிர்த்தரப்பில் இருப்பவர்கள் நிச்சயமாக உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஏழை விவசாயிகள் லேவாதேவிக்காரர்களிடத்தில் கடன் வாங்கி, நிறைய வட்டியைச் செலுத்திக்கொண்டு அல்லல்பட்டுக்கொண்டு வந்தவர்களுக்கு தற்போது நிறைய வசதிகளை இந்த அரசாங்கம் செய்துகொடுத்திருக்கிறது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் விவசாயிகளுக்கு நீண்டகாலக் கடனாக மூன்று கோடி ரூபாய் கொடுக்கப்பட்டது. இன்றைக்கு விவசாயிகளுக்கு நீண்ட காலக் கடனாக 19 கோடி ரூபாய் என்ற அளவில் உயர்த்தியிருக்கிற பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்தையே சாரும். இதை எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் சிந்திப்பார்கள் என்று கருதுகிறேன்.

அதுமட்டுமல்ல. இன்றைக்கு கவர்னர் அவர்களுடைய உரைக்குப் பின்னல் ஒரு அருமையான மசோதா வர இருக்கிறது என்பதையும் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். தமிழ்நாட்டிலே நீண்டகாலமாக தவம் கிடக்கும் வேளாண்மைப் பல்கலைக்கழகம் உருவாக இருக்கிறது. விஞ்ஞான முறையில் விவசாயத்தைப் பெருக்க—உற்பத்தியைப் பலமடங்கு அதிகரிக்க—இந்தியாவிலேயே தமிழகம் தான் உற்பத்தித்துறையில் முதன்மையாக இருக்கிறது என்கிற பெருமையைப் பெற்றேயாகவேண்டுமென்ற நோக்கத்தோடு அது துவங்கப்பட இருக்கிறது.

அதுமட்டுமல்ல. இன்றைக்கு தமிழகத்தில் மின்சாரம் விஸ்தரிக்கப்படாத கிராமமே இருக்கக்கூடாது என்ற முறையில் திட்டமிட்டு தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறோம். நாம் மைசூர் மாநிலத்திடமிருந்து மின்சாரம் வாங்குகிறோம். மின்சாரத்தை விற்பனை செய்கிற மைசூர் மாநிலத்தில் கூட எல்லா கிராமங்களுக்கும் இன்னும் மின்சாரம் கொடுக்கப்படவில்லை. ஆனால் நாம் துணிச்சலாக அந்தக் காரியத்தில் மிகத் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறோம். முந்தைய இருபதாண்டு காலத்தில் மின் வசதியளிக்கப்பட்ட கிராமங்கள் 25,000 என்ருல் கடந்த நான்காண்டுகளில் திராவிட முன்னேற்றக் கழகம் 40,560 கிராமங்களுக்கு மின்வசதி அளித்திருக்கிறது என்பதை பூரிப்போடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் பிறந்து வளர்ந்து வந்த செங்கல்பட்டு மாவட்டத்தில் மின்சாரம் அளிக்கப்படவேண்டிய கிராமமே இல்லை என்கிற நிலையை உண்டாக்கிவிட்டோம். இதை எல்லாம் மற்றவர்கள் பாராட்டாவிட்டாலும் குறை சொல்லாமல் இருக்கவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

அதுமட்டுமல்ல. விவசாய பம்பு செட்டுகளுக்கு கடந்த இருபதாண்டு கால ஆட்சியில் மின்விசை 2.57 லட்சத்திற்கு அளிக்கப்பட்டது என்ருல் கடந்த நான்காண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மிகச் சாமான்யமான

நாங்கள் இரண்டு மடங்குக்கும் மேல் 5.09 லட்சம் பம்பு செட்டுகளுக்கு மின்விசை அளித்திருக்கிறோம். எந்த அளவு அசுர வேகத்தில் இது நடந்திருக்கிறது என்பதை எல்லோரும் உணர்ந்துகொள்ள வேண்டும். இந்தியாவிலேயே மொத்தம் மூன்று பம்பு செட்டு இருக்கிறது என்றால் அதில் ஒன்று தமிழகத்தில் செயபட்டு வருகிறது என்பதாக அகில இந்திய புள்ளி விவரத்தோடு ஒப்பிட்டுச் சொல்லலாம். இந்தியாவிலேயே மொத்தம் 33 சதவிகிதம் பம்பு செட்டுகள் தான் இருக்கின்றன என்றால் தமிழகத்தில் மட்டும் 33 சதவிகிதம் என்ற அளவுக்கு நாம் வெற்றிகண்டிருக்கிற காரணத்தினால்தான் உற்பத்தி பெருகியிருக்கிறதேயொழிய—ஏதோ மாயாபஜார் வேலையில் திடீரென்று நடந்துவிட்டதாக நினைக்கக்கூடாது. இது உழைப்புக்குக் கிடைத்த வெற்றி—சீரிய திட்டத்திற்குக் கிடைத்த வெற்றி என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அதற்கடுத்ததாக தொழில்வளத்தைப்பற்றியும் கவர்னர் அவர்கள் பாராட்டிக் குறிப்பிட்டுள்ளார்கள். இந்த நாட்டில் இருக்கிற மற்ற கட்சிப் பெரும் தலைவர்கள் எல்லாம் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் காட்டி திராவிட முன்னேற்றக் கழகத்தை வீழ்த்திவிடலாம் என்று நினைத்தார்கள். தமிழ்த்தாய் கரும்பினை ஒத்த வளமாக தன்னுடைய இதயத்தில் பாளம் பாளமாக கனி வளங்களைத் தேக்கி வைத்துக்கொண்டு காலம் காலமாகக் காத்துக்கொண்டிருக்கிறாள். அந்தக் கனிவளங்களை வெளிக்கொணர முயற்சி எடுத்தால் பல நூற்றாண்டுகளுக்கு அவற்றைப் பயன்படுத்த முடியும். அதை உணர்ந்து உணர்த்தியே சேலம் இரும்பாலைத் திட்டத்தை நூறுகோடி ரூபாய் அளவில் கலைஞர் அவர்கள் ஆட்சியில் ஏற்படுத்தி கொண்டுவந்திருக்கிறோம். அது வருமா என்று நகைத்தவர்கள் எல்லாம் நாணமுற இந்தியப் பிரதமர் அவர்களே சேலத்திற்கு வந்து அந்த இரும்பாலையைத் துவக்கி வைத்ததோடு மாண்புமிகு பின்தங்கிய நல அமைச்சர் அவர்கள் கொடுத்த மாங்கனிக் கட்டியையும பரிசாகப் பெற்றுப்போயிருக்கிறார்கள். இது பல என்ஜினியரிங் தொழில்கள் நம் மாநிலத்தில் ஏற்படுவதற்கு மிகவும் உதவிகரமானதாக இருக்கும்.

அதற்கடுத்து இந்தியாவில் மட்டும் அல்ல. உலகத்திலேயே மிகப்பெரிய உரத்தொழிற்சாலையாக தமிழ்நாட்டில்—தூத்துக்குடி உரத்தொழிற்சாலை அமைந்திருக்கிறது. பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலைகிடைப்பது மட்டுமல்ல, விவசாயிகள் இன்றைக்கு பெருவாரியாகப் பயன்படுத்தும் யூரியா போன்ற ரசாயன உரங்கள் ஏராளமாகப் பெருகி குறைந்தவிலையில் கிடைப்பதற்கு வழியேற்படுவதோடு மேலும் பல லட்சம் டன்கள் உணவு தானியங்களைப் பெருக்குவதற்கும் இது வழியேற்படுத்துகிறது. அறுபது கோடி ரூபாய் அளவில் இந்த உரத்தொழிற்சாலை அமைகிறது. தொழில்துறையில் கடந்த நான்காண்டு காலத்தில் நூறு கோடி ரூபாய் அளவில் சேலம் இரும்பாலைத் திட்டம், 60 கோடி ரூபாய் அளவில் தூத்துக்குடி உரத்தொழிற்சாலை—பல்லாயிரக் கணக்கான என்ஜினிரியங் தொழில்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு பல்லாயிரக்கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் அமைந்திருக்கிறது என்றால் இதைப் பாராட்ட முன்வரவேண்டாமா? எதிர்க்கட்சிக்காரர்கள் என்பதாக நல்லவர்களைப் பார்த்து கேள்வி கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மிகப் பெரிய தொழிற்சாலைகள் இருந்தால் போதுமா? சிறிய தொழிற்சாலைகள் ஏற்படவேண்டாமா என்று கேட்பவர்களுக்கு இடமிருக்க கூடாது என்றேதான் சிறுதொழில் மேம்பாட்டுக் கழகம் என்று நிறுவி—சிறு தொழில்கள் ஏற்படுத்துவதற்கு கடன் தொகை கோரினால் கொடுப்பது, அனுபவம் பெற்றவர்களின் உதவியைக் கேட்டால் கொடுப்பது, மூலப்பொருள்களை வாங்கி அளிப்பது ஆகிய காரியங்களைச் செய்ய முன்வந்திருக்கிறோம்.

அதுமட்டுமல்ல—வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றி பேசுகிறார்கள். கவர்னர் அவர்களும் தம் உரையில் குறிப்பிட்டிருக்கிறார். இது தமிழ்நாட்டில் மட்டும் தானா இருக்கிறது? இந்தியாவையே எதிர்நோக்கியுள்ள ஒரு மிகப் பெரிய பிரச்சினையாகும் இது. தமிழ்நாட்டு அரசாங்கம் இதனை நன்கு உணர்ந்து எல்லா வகையிலும் இதன் கொடுமையைக் குறைக்க பாடுபட்டு வருகிறது. படித்த பட்டதாரிகள், ஆசிரியர்கள், என்ஜினியர்கள் போன்றவர்கள் வேலையில்லாமல் இருக்கக் கூடாது என்பதற்காக ஏறக்குறைய 6,500 ஆசிரியர்களுக்கு வேலையளிக்கக்கூடிய ஆசிரியர் வேலைப் பயிற்சித் திட்டத்தைக் கொண்டு வந்தது. இரண்டாயிரத்து நானூறு பொறியாளர்களுக்கு வேலையளிக்கக்கூடிய பொறியாளர் வேலைப் பயிற்சித் திட்டத்தையும் கொண்டு வந்தது. இவை எல்லாம் உருப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகிற திட்டங்களாகும்.

அதற்கடுத்தபடியாக ஆயிரக்கணக்கானவர்களுக்கு—குடிசை அகற்றி வீடு கட்டித் தரும் திட்டம் இந்த அரசாங்கத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது பழைய திட்டம்தானே என்று எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் சொல்லலாம். அண்ணா அவர்கள் மன்னைப் பகுதியில் பேசும்போது சொன்னார்கள். நாட்டில் தியாகராயநகர் பகுதியில் வசிப்பவர்களை தியாகராயநகர் வாசிகள் என்று சொல்கிறோம்—சைதாப்பேட்டையில் வசிப்பவர்களை சைதாப்பேட்டை வாசி என்று சொல்கிறோம்—திருநெல்வேலிக்காரர்களை திருநெல்வேலிவாசி என்று சொல்கிறோம். ஆனால் இவற்றோடு கூட இன்னொருவாசிகளையும் சொல்கிறோம். அந்தச் சொல் தமிழ் அகராதியில்தான் இருக்கிறது. அது இருக்கலாமா என்று கேட்டார்கள். நாங்கள் எல்லாம் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தபோது—நடைபாதை வாசி என்று தமிழகத்தில்தான் இருக்கிறார்கள், இவர்கள் அப்படி நடைப்பாதையே இருப்பிடமாகக்கொண்டு வாழ நாம் பார்த்திருக்கலாமா? என்னுடைய ஆட்சி வந்தால் முதற்படியாக இந்த நடைபாதைவாசிகளுக்கு எல்லாம் வசிக்க வீடுகட்டித்தருவோம் என்றார்கள். அந்தக் கருத்தை இன்றைக்கு கலைஞர் அவர்கள் செயல்படுத்துவதற்காகத் தான் குடிசைமாற்று வாரியத்தை மூன்று கோடி ரூபாய் அளவில் திரு. இராம. அரங்கண்ணல் அவர்களது தலைமையின் கீழ் ஏற்படுத்தியிருக்கிறார்கள். கெட்டும் பட்டணம் சேர் என்பதற்கிணங்க வேலை தேடி சென்னை வந்து அவதியுறுகிறவர்கள் சாக்கடைகளுக்கு அருகில் வசிக்கக்கூடாது. கொசுக்களுக்கு இரையாகக் கூடாது என்பதற்காக இந்த குடிசை மாற்று வாரியத்தையே ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, கிராமப்புறங்களில் இருக்கிற ஏழை எளியவர்களுக்கு குடியிருக்க அடி மனை, விவசாயத்திற்கு அடி மனை கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையில் லட்சக்கணக்கான ஏக்கரா நிலங்கள் பட்டா செய்து இந்த அரசாங்கத்தினால் கொடுக்கப்பட்டிருக்கிறது.

[திரு. கா. வேழவேந்தன்] [1971 மார்ச் 30]

ஒரு முறை அண்ணா அவர்கள் சொன்னார்கள். கவிஞன் பாம்பு புறப்பட்டது என்றால் புற்றில் இருந்து புறப்பட்டது என்கிறான். குருவி பறந்தது என்றால் கூட்டில் இருந்து பறந்தது என்கிறான். நண்டு வெளியில் வந்தது என்றால் வளையில் இருந்து வெளியே வந்தது என்கிறான். ஆந்தை புறப்பட்டது என்றால் பொந்திலிருந்து புறப்பட்டது என்கிறான். கொடிய பாம்புக்கு புற்று இருக்கிறது, குருவிக்கு கூடு இருக்கிறது, நண்டுக்கு வளை இருக்கிறது, ஆந்தைக்குப் பொந்து இருக்கிறது---பாழும் மனிதனுக்கு மட்டும் குடியிருக்க நிலம் இல்லை---நான் ஆட்சிக்கு வந்தால் குடியிருக்க இடமில்லாதவர்களுக்கு எல்லாம் குடியிருக்க இடமளிப்பேன் என்றார்கள். அந்தக் கருத்தை நினைவில் கொண்டு கலைஞர் தலைமையில் அமைந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகம் குடியிருக்க, சாகுபடி செய்ய நிலம் இல்லாதவர்களுக்கு இலவசப் பட்டா வழங்கும் திட்டத்தை செயல்படுத்திய காரணத்தினால் தான் மக்கள் பெருவாரியாக உதயசூரியனுக்கு வாக்களித்து எங்களைத் திரும்பத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். அது மட்டுமல்ல, பின்தங்கியவர்கள் நலத்துக்காக ஒரு தனிக் குழுவையே ஏற்படுத்திய பெருமை---அதற்கென்றே ஒரு தனி அமைச்சரைப் போட்டிருக்கும் தன்மை எங்களது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் பார்க்க முடியும். நல்ல விவசாயி செழிப்பாக இருக்கும் பயிரைப் பார்த்துக் கொண்டே இருக்கமாட்டான். வெளுப்பாய் இருக்கும் பகுதி, சரியாக வளர்ச்சி அடையாத பகுதி ஆகிய இடங்களில் எந்த எந்த உரத்தை வைத்து அதை வளமுள்ளதாக ஆக்கலாம் என்றே கவனிப்பான். அதுபோல இந்த அரசு சமுதாயத்தில் பின்தங்கிய நிலையில் உள்ளவர்களைப் பரிவோடு பார்த்து அவர்களது முன்னேற்றத்திற்கான பல சிறப்பான காரியங்களை எல்லாம் செய்து வருகிறது.

அதுமட்டுமல்ல---வரலாறு காணாத நிலையில் இந்த அரசுதான் 22 கோடி ரூபாயை அரசாங்க ஊழியர்களுக்காக கொடுத்திருக்கிறது என்பதை நாடு மறந்துவிடாது. நல்லவர்கள் மறக்கமாட்டார்கள். இதனால் ஆறு லட்சம் பேர்களுக்கு மேல் பயன் அடைகிறார்கள் என்கிறபோது அவர்களது குடும்பங்கள் எல்லாம் இந்த அரசை வாழ்த்திக் கொண்டிருக்கின்றன.

அதுமட்டுமல்ல. கவர்னர் அவர்கள் தம் உரையில் இங்கே அமைக்கப்படும் மாநில திட்டக் கமிஷனைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாநில திட்டக் கமிஷன் சிறப்பான பொருளாதார வல்லுநர்கள், அரசியல் தலைவர்கள், தொழில் விற்பன்னர்களைப் போட்டு 1971-81-க்கான பத்தாண்டு காலத்திற்கு நீண்டகாலத் திட்டம் ஒன்றைத் தயாரிக்கும் பணியை ஏற்க அரசு முன்வந்திருக்கிறது. எதிர்காலத்தில் இயற்கைச் செல்வங்களை எல்லாம் எந்த எந்த முறையில் பயன்படுத்திக் கொள்வது—சமூக பொருளாதார மேம்பாட்டுக்கு வழிசொல்வது என்பதைப்பற்றி இது ஆராய்ந்து பத்தாண்டுத் திட்டத்தைச் செம்மையாக செயல்படுத்த அமைக்கப்படுகிறது. இவையெல்லாம் நாட்டிலே நாம் செய்கிற புதுமையான பணிகள் ஆகும்.

பொதுவாகப் பார்க்கிறபோது. இந்த அரசாங்கம் பொதுமக்களுக்கு எல்லாம் செய்யவேண்டுமென்று விரும்புகிறேன். அண்மையில் செய்தாளர்களிடம் கன்னியாகுமரியிலே பொதுவாகப் பேசுகின்ற நேரத்தில் நான் கேட்டுக் கொண்டிருக்கின்ற கும்முடிப்பூண்டி பற்றியும் சில கருத்துக்களைச் சொல்ல

[1971 மார்ச் 30] [திரு. கா. வேழவேந்தன்]

வேண்டுமென்று நினைக்கிறேன். கும்முடிப்பூண்டி ஆந்திர எல்லையிலே இருக்கிறது என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். அது ஆந்திர எல்லையிலே இருக்கிறது. எனவே ஆந்திராவுடன் சேர்ந்துவிடும் என்று தமிழ்நாடு சேர்ந்து தமிழ்நாட்டு எல்லையில் அது இருக்கிறது. ஆகவே தமிழ்நாட்டோடு சேர்ந்துவிடும் என்று ஆந்திரர்களும் விட்டுவிட்ட காரணத்தினால் பல ஊர்களுக்கு இன்றைக்கு இணைப்புப் பாதைகள் இல்லாமல் இருப்பதால் நான் மிகப் பணிவன்போடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களையும், ஊராட்சித் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். நாட்டிலே நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் என்ற முறையை கொண்டுவந்து எப்படி எல்லாக் கிராமங்களிலும் உள்ள மக்களின் அன்பையும் பற்றுதலையும் பெற்று இருக்கிறோமோ. அதேபோல் எல்லா கிராமங்களுக்கும் இணைப்புச் சாலைகள் என்று போட்டு வரவேண்டும். முடிந்த அளவுக்கு எல்லா கிராமங்களுக்கும் மிகப் பெரிய அளவுக்கு வேண்டாம், வண்டிகள் போகின்ற அளவுக்கு சைக்கிள்கள் பாதையில்லாமல் செல்வதற்கு ஏற்றவகையில் அந்தத் திட்டத்தை உருவாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இறுதியாக நான் சொல்ல விரும்புவது இந்த ஆட்சி ஏழை எளிய மக்களின் இதய நாடியைத் தொட்டுப் பார்த்துப் பணிகளைச் செய்கின்ற காரணத்தினால்தான் மிகப் பெரிய வெற்றியைப் பெற்றிருக்கிறது.

எனக்கு இன்னொன்றும் நினைவுக்கு வருகிறது அன்றைய தினம் இந்த அவையிலே இருந்த ஒரு மாண்புமிகு உறுப்பினர் 1966-லே திருச்சி தேவர் மன்றத்திலே நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியிலே தலைமை தாங்குவதற்காகச் சென்றார்கள். அவர்கள் அப்பொழுது அங்கே முன்னணியில் இருந்த நாற்காலியில் உட்கார நினைத்தார்கள். அங்கேயிருந்த அதிகாரிகள் சொன்னார்கள், அந்த நாற்காலியில் உட்காரக் கூடாது, அது திருச்சி நகர சபைத் தலைவருக்காக இருக்கிறது என்று சொல்லிவிட்டார்கள், பக்கத்திலே இருக்கிற நாற்காலியில் உட்கார நினைத்தார்கள். அது துணைத்தலைவருக்காகப் போடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதற்குப் பக்கத்திலே உள்ள நாற்காலியில் உட்கார நினைத்தார்கள். அந்த நாற்காலியும் ஆணையருக்காகப் போடப்பட்டிருக்கிறது என்று கூறி, நீங்கள் சட்ட மன்ற உறுப்பினராக இருக்கலாம், ஆனால் இங்கே உட்காரக் கூடாது என்று சொன்னார்கள். அவர்கள் எல்லாம் உட்கார்ந்திருந்தால், பாவாயில்லை, காலியாகத்தானே இருக்கிறது, இது வேறு கட்சியின் நிகழ்ச்சி, அவர்கள் வரவும் மாட்டார்கள் என்று சொல்லியும் நீங்கள் உட்காரக் கூடாது என்று சொல்லி, அதனால்தான் கம்பி போட்டு பூட்டி வைத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். நான் சொல்கின்ற அந்த உறுப்பினர் முதல்வர் அவர்கள். அது நடந்தது 1966-வது ஆண்டிலே. குறைந்த பட்சம் அரசாங்கத்திற்குச் சொந்தமான பொதுமக்கள் வரிப் பணத்தில் கட்டப்பட்ட ஒரு மன்றத்திலே ஒரு நாற்காலியில் உட்காரக்கூடாது என்று சொல்லப்பட்ட அதே கலைஞர் அவர்கள்தான் இன்றைக்கு மிகப் பெரிய பொறுப்பிலே உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள். காலம் எவ்வளவு பெரிய மாறுதலைக் கொண்டிருக்கிறது. இந்தப் படிப்பினையை அவர்கள் எல்லாம் உணரவேண்டும். இந்நாட்டிலே சமதர்மப் பங்கா மிளிர்வதற்கு தொழில் துறைகள் எல்லாம் முன்னேறுவதற்கு தமிழ்நாட்டிலே தமிழன் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைக் கொண்டவனாக, மற்ற மாநிலங்களைவிட இருக்கிறான் என்று சொல்லத் தக்க

அளவுக்குத் தமிழகம் வளர்வதற்கு நீங்கள் எல்லாம் ஒத்துழைக்கவேண்டுமென்று, எதிர்க்கட்சிக்காரர்கள் நீங்கள் என்ற உரிமையோடு கேட்கிறேன்.

அவர்கள் 1967-லே பேசினார்கள் இந்திராவைப்பற்றி. நாங்கள் அப்பொழுது உரிமை கொடுக்கவேண்டும், அப்படிச் செய்தால்தான் வசதிகளைப் பெருக்க முடியும் என்று சொன்ன நேரத்தில், அப்பொழுது இப்பொழுது இருக்கிற நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சி ஒரே காங்கிரஸ் கட்சியாக இருந்தது, அப்பொழுது அவர்கள் சொன்னார்கள், எதற்கெடுத்தாலும் பழியை ஏன் அங்கே போடுகிறீர்கள் என்று சொன்னார்கள். இன்றைக்கு அவர்கள்தான் அவர்களுக்கு முதல் எதிரி. இந்திரா கோசலையைப்போன்று அந்த ராமருக்கு இருந்தார்கள். அதே ராமர்களுக்கு இப்பொழுது அவர்கள் கைகேயியாக மாறிவிட்டார்கள். அவர்களும் கூட இருந்து நாங்கள் கேட்கிற தாலுக்கு ஒத்துழைப்புக் கொடுத்து எதிர்க்கட்சி என்ற முறையிலே ஆதரவு தரவேண்டுமென்று ஆளுங்கட்சி உறுப்பினர் என்ற முறையிலே கேட்டுக்கொள்கிறேன். இந்த கவர்னர் அவர்களின் உரை ஒளிமயமான விளக்கு ஏற்றிவைப்பது போல் இருக்கிறது. உரையிலே கூறப்பட்டு இருக்கின்ற பணிகளை விரைவுபடுத்துவதற்கும் நாம் பணியாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைதிக்குப் பெயர்போன சிறந்த அறிவாளியான மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நான் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. ஏ. பாலையா:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டவையிலே ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல நான் விழைகிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரையைப் பார்க்கிற நேரத்திலே அது திருப்தியளிக்கின்ற முறையிலே இல்லாமல் அமைந்து இருக்கிறது. ஆளும் கட்சியினுடைய பணிகளையும் ஆளுங்கட்சியினுடைய கொள்கைகளையும் அது எடுத்துச் சொல்வதாக அமைந்திருந்த போதிலும், பல்வேறு திட்டங்கள் பற்றிய குறிப்புகள் அந்த உரையிலே தரப்படவில்லை. உதாரணமாக சேது சமுத்திரத் திட்டத்தைப்பற்றி அந்த உரையிலே குறிப்பிடப்படவில்லை. தமிழக மக்கள் எல்லாம் நீண்ட நாட்களாக அந்தத் திட்டம் நிறைவேறுவதை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றிக் குறிப்பிடப்படவில்லை.

நம்முடைய தமிழக சர்க்கார் போக்குவரத்து இலாகாப்பற்றி உரையிலே எந்தவிதமான குறிப்பும் தரப்படவில்லை. அந்த இலாகா நல்ல முறையிலே திறம்பட செயலாற்றவில்லை என்பது நன்றாகத் தெரிகிறது. மக்களுக்கு அந்த இலாகாவினால் எந்தவிதமான நன்மையும் இதுவரை கிடைக்கவில்லை. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தைப் பார்க்கிற நேரத்திலே பஸ் போக்குவரத்து இலாகா சீரழிந்த நிலையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. மொத்த பஸ்களிலே 40-க்கு மேற்பட்ட பஸ்கள் இன்றைய தினம் டெப்போக்களில் ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளன. காரணம் கேட்டால், பஸ்களுக்குத் தேவையான உதிரி உறுப்புகள் சர்க்காரிலிருந்து வாங்கிக்கொடுக்காமல் இருப்பதால்தான் அப்படி இருக்கிறது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஓடுகின்ற பஸ்கள் அனைத்தும் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ள அரசாங்க பஸ்கள் மக்களுடைய உயிரைப் பறிக்கக்

கூடிய நிலைமையிலே ஓடிக்கொண்டிருக்கின்றன. அந்த பஸ் இலாகாவினை சீர்படுத்தி செப்பனுறச் செய்து மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய நிலைமையிலே அதை மாற்றியமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீண்ட நெடுங்காலமாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற குளச்சல் துறைமுகத் திட்டத்தைப்பற்றி எந்தவிதமான குறிப்பும் ஆளுநர் உரையில் இல்லை. குளச்சல் துறைமுகம் பாரம்பரியம் மிக்க துறைமுகம். வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த துறைமுகமாக இருந்தது. இன்றைக்கு சீர்கெட்ட முறையிலே செப்பனிடாத முறையிலே சீர்திருத்தப்படாத முறையிலே இருக்கிறது. மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாகயிருந்த அந்தத் துறைமுகத்தைச் சீர்செய்து ஆழ்கடல் மீன் பிடிப்புத் துறைமுகமாக மாற்றித்தர வேண்டும். ஆனால், அரசு இதுவரையிலும் அந்தக் கோரிக்கையை ஏற்று ஆழ்கடல் மீன் பிடிப்புத் துறைமுகமாகச் செப்பனிட்டுக் கொடுக்கவில்லை. அதற்கு உடனடியாக இந்த அரசு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குமரி மாவட்ட மக்களெல்லாம் நீண்ட நெடுங்காலமாக எதிர்பார்த்திருந்த இரயில்வே திட்டம் இதுவரையிலும் அமல்படுத்தப்படவில்லை. குமரி மாவட்டத்தில் இரயில் பாதைகள் போடுவதற்கு உரிய சர்வேகளெல்லாம் முடிந்து பல வருஷங்கள் ஆகியும் இதுவரையிலும் அந்தத் திட்டம் அமல்படுத்தப்படவில்லை. ஆகவே, இந்தச் சர்க்கார் தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தியும், தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தியும், மத்திய அரசுக்கு சிபாரிசு செய்து உடனடியாக மத்திய அரசு அந்த இரயில்வே பாதையை கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தர முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கவர்னர் அவர்கள் உரையிலே புதிய தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்துக் கொடுப்பதற்கு திட்டங்கள் பல சொல்லப்பட்டிருக்கின்றன. கிராமப் பகுதிகளில் அமைக்கத் திட்டங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதிலே, புதிய தொழில் வாய்ப்புகளை குறிப்பாக, குமரி மாவட்டத்தை எடுத்துப் பார்க்கும் நேரத்தில் அங்கே வாழும் மக்கள் விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டு வாழ்கிறார்கள். விவசாய காலம் போக அங்கேயிருக்கும் மக்கள் எந்தவிதமான வேலைத் திட்டமும் இன்றி சும்மாயிருக்கும் நிலை ஏற்படுகிறது. அதோடு வேலைவாய்ப்பின்றி மிகவும் கஷ்டப்படும் நிலையும் ஏற்படுகிறது. ஆகவே, குமரி மாவட்டத்தில் உள்ள இயற்கை வளங்களை உபயோகித்து சில தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வாய்ப்புகள், வசதிகள் இருக்கின்றன. உதாரணமாக பேப்பர் தொழிற்சாலை ஆரம்பிக்க வாய்ப்புகள் குமரி மாவட்டத்திலே இருக்கிறது. அதைப்போல், இரப்பர் தொழிற்சாலை ஆரம்பிக்க வாய்ப்புகள் அங்கே இருக்கின்றன. பனந்தும்பு தொழிற்சாலை ஆரம்பிக்க வாய்ப்பு இருக்கிறது. இதையெல்லாம் அரசு கவனத்திற்கொண்டு குமரி மாவட்டத்திலேயுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க நல்ல திட்டத்தைத் தயார் செய்து இந்தத் தொழிற்சாலைகளை அமைக்க முயல வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீர் திட்டத்திற்கு இந்த அரசு பலகோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறது. குமரி மாவட்டத்தில் நல்ல குடிநீர் கிடைப்பது மிகவும் அரிதாக

இருக்கிறது. சமீபத்தில், மாம்பழத்து ஆற்றிலிருந்து குமரி மாவட்டத்தில் முக்கிய நகரங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்தது. அது சம்பந்தமான எல்லாக் குறிப்புகளையும் அரசு அதிகாரிகள் எடுத்து அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்தத் திட்டம் இதுவரையிலும் நிறைவேற்றப்படவில்லை. ஆகவே, அந்தத் திட்டத்திற்கு சரியான நிதி ஒதுக்கீடு அளித்து நல்ல குடி தண்ணீர் வசதி செய்ய மாம்பழத்து ஆற்றுத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயத்திற்குப் பெருமளவில் இந்த அரசு பணம் ஒதுக்கியிருக்கிறது. வீணாகச் செல்லும் தண்ணீரையும், நிலங்களையும் நன்றாகப் பயன்படுத்த வேண்டுமென்ற திட்டம் இந்த அரசுக்கு இருக்கிறது. அந்த அடிப்படையிலே குமரி மாவட்டத்திலே வள்ளியாற்றிலிருந்து கூடுதல் வெள்ளம் கடலிலே சென்று கலக்கிறது. அந்த நீரை லிப்டின் மூலம் எடுத்துப் பயன்படுத்த அரசு ஏற்பாடுகள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தத் திட்டத்தை அமல்படுத்துவதன் மூலம் ஆயிரக்கணக்கான நிலங்களில் பயிர் செய்ய வாய்ப்பு ஏற்படும். மேற்படி திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்தால் அது குமரி மாவட்டத்திலுள்ள விவசாய மக்களுக்குப் பெரு மகிழ்ச்சியாக அமையும். அந்தத் திட்டம் சிறப்பாக வெற்றி பெறும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

குமரி மாவட்டத்திலே, குறிப்பாக கடலோரப் பகுதிகளிலே மீனவ மக்கள் குடிசைப் பகுதிகளிலே வாழ்கிறார்கள். அந்தக் குடிசைப் பகுதிகள் எந்த விதமான பாதுகாப்பின்றி இருந்து கொண்டிருக்கின்றன. தமிழக அரசு குடிசை மேம்பாடுத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை வைத்திருக்கிறது. அந்தத் திட்டத்தை குமரி மாவட்டத்திலேயும் அமல்படுத்தி, கடலோரத்திலே வாழும் மீனவ மக்களுக்கு நல்ல பல வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, காவல்துறை அமைப்பைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. காவல்துறையை மாற்றியமைக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே எப்படி மாற்றியமைக்க வேண்டும், காவல்துறைக்கு என்று அமைத்த ஆய்வுக் குழு எவ்வாறு மாற்றியமைக்க வேண்டுமென்று அறிக்கை சமர்பித்திருக்கிறார்கள் என்பதைப்பற்றியெல்லாம் அதில் சொல்லப் படவில்லை. குறிப்பாக, குமரி மாவட்டத்திலே பணிபுரியும் காவல்துறை அதிகாரிகளுக்குச் சரியான பிரயாணப்படி இதுவரையிலும் கொடுக்கப்படவில்லை. ஏனைய மாவட்டங்களிலே அளிக்கப்படும் பிரயாணப்படியை குமரி மாவட்டத்திலே வேலை பார்க்கும் காவல்துறை அதிகாரிகளுக்கும் கொடுக்க வேண்டும். குறிப்பாக, குமரி மாவட்டத்திலுள்ள காவல்துறை அதிகாரிகள் ஒரு குறிப்பிட்ட தொகையைப் பிரயாணப்படியாகப் பெற வேண்டிய நிலை இன்றிருக்கிறது. ஆகவே, அந்த நிலைமையை மாற்றி ஏனைய மாவட்டங்களிலே உள்ள காவல் துறை அதிகாரிகள் பெறும் பிரயாணப் படியைப் பெறும் வாய்ப்பு, வசதியை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வேலையில்லாத பிரச்னையைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றது. வேலையில்லாத பிரச்னையைப்பற்றிச் சொல்லப்பட்ட நோத்திலே 6,500 ஆசிரியர்களுக்கும், 2,400 பொறியியல் அதிகாரிகளுக்கும் வேலைவாய்ப்பு

ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எதன் அடிப்படையில் என்றால் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கும் அடிப்படையில் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அதைப்போல படித்துப் பட்டம் பெற்று வேலையில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் பட்டதாரிகளுக்கும் அந்தத் திட்டத்தின் அடிப்படையில் வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இத் திட்டத்தை இந்த அரசு உடனடியாகத் தயார் செய்து இந்த நாட்டிலேயிருக்கின்ற பட்டதாரிகளிடையேயும், படித்தவர்களிடையேயும் இருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை, மதுரை பல்கலைக் கழகம் தற்பொழுது ஒரு உத்தரவிட்டிருக்கின்றது. அதாவது ஐந்தாண்டுகளுக்கு மேல் தனியார் கல்லூரிகளிலே வேலை செய்கின்ற பி.ஏ., பி.எஸ்ஸி., படித்த பட்டதாரிகள் டெமான்ஸ்ட்ரேட்டர்களாகவும், டியூட்டர்களாகவும், பணி புரியக் கூடாது என்ற ஒரு உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்கள். இதற்கு முன்னால் மதுரைப் பல்கலைக் கழகத்திலே இந்தப் பட்டதாரிகள் டியூட்டர்களாகவும், டெமான்ஸ்ட்ரேட்டர்களாகவும் ஐந்தாண்டுக்கு மேல் பணிபுரியலாம், அவர்கள் வேலை நிரந்தரமாக்கிக் கொடுக்கப்படும் என்று உறுதிப்பாடு கொடுக்கப்பட்டிருந்தது. அதற்கு மாறாக மதுரை பல்கலைக்கழகம் இப்படியொரு உத்தரவை வெளியிட்டிருக்கிறது. அதனால் ஏராளமான பட்டதாரி ஆசிரியர்கள் வேலையிழக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதை அரசு உடனடியாகக் கவனித்து வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கும் காலத்திலே, கல்லூரிகளிலே பணியாற்றும் இத்தகைய பட்டதாரி ஆசிரியர்களைப் பிரித்து விடுவது மிகவும் வருந்தத்தக்க ஒரு செயலாகக் கருதப்பட வேண்டும். ஆகவே, அரசு இதில் தலையிட்டு உத்தரவாதம் அளித்து அவர்களை நிரந்தரமாக வேலையிலே அமர்த்த அரசோ அல்லது பல்கலைக்கழகமோ உத்தரவு வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் கவர்னர் உரையின் மீது என் உரையை முடிக்கிறேன்.

திரு. என். இட்டப்பா : பேரவைத் தலைவரவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் சிறப்பான உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற வாய்ப்பு எனக்கு ஏற்பட்டமைக்கு நன்றி தெரிவித்து சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேதகு ஆளுநர் அவர்கள், தமிழகத்திலே அண்மையிலே நடந்து முடிந்த தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழக ஆளுங் கட்சிக்கு தெளிவான, திட்டவட்டமான முறையில் மக்கள் அளித்த நல்ல தீர்ப்பை வரவேற்று, சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கும் பெருவாரியான மக்கள், தங்களுடைய இடைவிடாத் துயரங்களுக்கு விடிவு காண்பதற்கும், வறுமை, இன்னல் இவற்றிலிருந்து மீண்டு கரையேறுவதற்கும் இவ்வரசை ஆவலோடு எதிர் நோக்கி நிற்கின்றனர் என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

எனவே, ஜனநாயகம் பற்றி மாற்றுத் தரப்பில் உள்ளவர்கள் பேசும்போது அவர்களைத் தவறை நினைவூட்ட விரும்புகிறேன். அண்மையில் நடந்து முடிந்த தேர்தலில் மாற்றுத் தரப்பில் உள்ளவர்கள் எப்படி நடந்துகொண்டார்கள், அவர்கள் பிரச்சாரம் எந்த அளவிற்கு கூடேறியதாக இருந்தது. அதில் எந்த அளவிற்கு வெறி உணர்ச்சி கலந்து இருந்தது என்பதை அவர்கள்,

குறிப்பாக கண்ணியம் மிகுந்த மதிப்பிற்குரிய பொன்னப்ப நாடார் போன்றவர்களாவது எண்ணிப் பார்க்க வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக் கொள்ளுகிறேன். மாயூரம் தொகுதியில் சில நாட்களுக்கு முன்பு தாழ்த்தப் பட்ட சமுதாயத்தைச் சார்ந்த இராகவன் என்பவர் எந்தக் காரணத்தாலோ இறந்துவிட்டார். இறந்துவிட்ட அன்று நான் உண்மையிலேயே ஊரிலே இல்லை. அப்படியிருந்தும், ஊரிலே இல்லாத நானே போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று அங்குள்ள போலீஸ் அதிகாரியிடம் சொல்லி அவரை நேரிடையாக அடித்துக் கொல்லச் சொல்லி விட்டேன் என்ற செய்தியோடு அவர்களுடைய மஞ்சள் பத்திரிகைகளில் இறந்தவருடைய புகைப்படத்தைப்போட்டு பக்கத்திலே என்னுடைய புகைப் படத்தையும் போட்டு. 'இத்தகைய நிகழ்ச்சிகளுக்குக் காரணமான திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்' என்று போட்டுக் காட்டினார்கள். இவ்வளவு அவதூறான பிரசாரங்களையும் தாண்டி அந்தத் தொகுதி மக்கள் திராவிட முன்னேற்ற கழகத்தைத்தான் ஆதரித்தார்கள் என்பதையும் இப்படிப்பட்டதவறான பிரசாரங்கள் எப்படிப் பயன் படாது போய் விடுகின்றன என்பதையும் மாற்றுத்தரப்பில் உள்ளவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மிகப் பெரிய ஊழல்கள் நடந்துவிட்டன, அமைச்சர்களும் சட்ட மன்ற உறுப்பினர்களும் அதை வாங்கிக் கொண்டுவிட்டார்கள். இதை வாங்கிக் கொண்டுவிட்டார்கள் என்ற இப்படிப்பட்ட அவதூறான பிரசாரங்களுக்கு இடையிலே, ஏழை எளியவர்கள், சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ளவர்கள் விவசாயப் பெருங்குடி மக்கள், தொழிலாளர்கள், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள், இந்த கழக அரசு, கலைஞர் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடத்திடும் இந்த அரசே மீண்டும் அமைய வேண்டும் என்ற ஆர்வத்தினால் சென்ற தடவை இருந்ததை விட மிகப் பெரும்பாலான இடங்களைக் கழகத்திற்கு அளித்து இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட ஏழை எளியவர்களுடைய எண்ணங்கள் மதிப்பிற்குரிய கலைஞர் அவர்கள் தலைமையில் இயங்கும் அரசினால் நிறைவேற்றப்படும் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, மேதகு ஆளுநர் அவர்கள் தம் உரையில் தமிழகத்தில் மின் இணைப்புகள் எந்த அளவிற்குப் பெருகி இருக்கின்றன, இன்னமும் எந்த அளவிற்குப் பெருக இருக்கின்றன என்பதைப் பற்றிக் குறிப்பிட்டு இருக்கின்றார்கள். கலைஞர் அவர்கள் சில நாட்களுக்கு முன்பு இந்த மன்றத்தில் அறிவித்தார்கள், 1971-72-ஆம் ஆண்டுக்குள் தமிழகத்தில் மின் இணைப்பு இல்லாத கிராமமே இருக்காது என்று அறிவித்தார்கள். அவர்கள் அறிவித்தது எதுவும் பொய்த்தது கிடையாது. 1966-67-ம் ஆண்டில் 25,000 மாக இருந்த மின் இணைப்புகள் 1970-ம் ஆண்டிலே டிசம்பர் இறுதியிலே 40,600 ஆக உயர்ந்து இருக்கின்றது. நாம் தமிழகத்தில் பார்க்கும் இடங்களிலெல்லாம் ஒளிமயமாகக் காட்சியளிப்பதைப் பார்க்கிறோம்.

விசை ஏற்றங்களைப் பொறுத்தவரையில், அதில் காணும் முன்னேற்றத்தில் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த நான் மிக மிக நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டு இருக்கிறேன். தமிழகத்தில் 1966-67-ல் 2.57 லட்சமாக இருந்தது 1970-ல் 5.09 லட்சத்திற்கு உயர்வதற்கான நல்ல திட்டங்களை நமது அரசு மேற்கொண்டது. இந்தியத் துணைக் கண்டம் முழுவதையும் ஒப்பிட்டுப்

பார்க்கும்போது மேதகு ஆளுநர் அவர்கள் தம் உரையில் குறிப்பிட்டு இருப்பதைப்போல 33 சதவிகிதம் நமது தமிழகத்திலேயே அமைந்து இருக்கிறது என்பதைப் பார்க்கும்போது இத்துறையில் நமது அரசு எப்படிப் பட்ட சாதனையைச் சாதித்து இருக்கிறது என்பதை எண்ணிப் பூரிப்படையாமல் இருக்க முடியாது.

விவசாயத்திற்கான கிணறுகளைத் தோண்டுவதற்கும் குழாய்க் கிணறுகளை அமைத்துக்கொடுப்பதற்குமாக ரூ. 72 கோடியை நமது கழக அரசு ஒதுக்கி அதற்கான திட்டங்களைத் தீட்ட இருக்கிறது என்று மேதகு ஆளுநர் அவர்கள் சிறப்பாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட திட்டத்தினால் பயன் அடையக்கூடிய விவசாயப் பகுதியைச் சார்ந்த மாயூரத்தில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்களுடைய பிரதிநிதி என்ற முறையில் நான் இதற்காக நமது அரசிற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

நிலச் சீர்திருத்தம் பற்றி மேதகு ஆளுநர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதுபோல நல்ல நிலச் சீர்திருத்தங்கள் உருவாக்கப்பட்டு இருந்தும் அது நல்ல முறையில் செயல்படுகிறது. அப்படிச் செயல்படவேண்டும் என்ற அடிப்படையில் முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் கழக அரசு பெரும் நம்பிக்கையோடு இருப்பதைச் சுட்டிக்காட்டினார்கள். விவசாயிகளைப் பொறுத்த மட்டில் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து, அன்று நிறைவேற்றப் பட்டு இருந்த 30 ஸ்டாண்டார்டு ஏக்கர் என்பது 15 ஸ்டாண்டார்டு ஏக்கராகக் குறைக்கப்பட்டு இருப்பது வரையில் நல்ல பல சீர்திருத்தங்கள் செய்யப் பட்டு இருப்பதை நாம் ஏற்றுக்கொண்டு பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறோம். ஆனால் இப்படிப்பட்ட நல்ல சீர்திருத்தங்களுக்கான சட்டங்கள் நல்லெண்ணத்தோடு உருவாக்கப்பட்டாலும், சாதாரண விவசாயிகள், சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ளவர்கள் அவற்றை நல்லபடி அனுபவிக்க முடியாத வகையில் சக்தி வாய்ந்த மிராசுதாரர்கள், நிலக்கிழார்கள் அப்படிப் பட்ட சட்டங்களிலுள்ள ஓட்டைகள், இடுக்குகள் இவற்றினால் தங்களுடைய ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொண்டு வருகிறதை தொடர்ந்து பார்த்துக்கொண்டு வருகிறோம். எனவேதான் மேதகு ஆளுநர் அவர்கள் இதைப் பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இப்படிப்பட்ட ஓட்டைகளிலிருந்து ஏழை மக்களுக்கு நமது அரசு வேண்டிய பாதுகாப்புகளை அளிக்கும் என்று நம்பிக்கை கொண்டு இருக்கிறேன்.

நாட்டில் எந்தப் பகுதியிலும் இல்லாத அளவிற்கு நமது தமிழகத்தில் பல் வேறு சீர்திருத்தங்கள், பல நல்ல காரியங்கள் நடைபெற்று வருகிறதைப் பார்க்கிறோம். 30 ஸ்டாண்டார்டு ஏக்கர் என்பதை 15 ஏக்கர் என்று ஆக்கினோம். இதேபோல பல நல்ல சட்டங்களையும் சீர்திருத்தங்களையும் நமது அரசு கொண்டுவரவிருக்கிறது என்று எண்ணுகிறேன். இதற்கு முன்பு ஜமீன் தாரிகள் முறை ஒழிக்கப்பட்டு இருக்கிறது. நாட்டிலே பெரும் சீர்திருத்தமாக ராஜமான்ய ஒழிப்பை மத்திய அரசு மேற்கொண்டது. ஜமீன்தாரி ஒழிப்பு, ராஜமான்ய ஒழிப்பு என்ற எண்ணம் வரும்போது, மிகத் தாழ்மையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இதே அடிப்படையில் பல காரியங்கள் நடைபெற வேண்டியிருக்கின்றன. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் பல பெரிய மடங்கள், ஆதீனங்கள் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தின் சொந்தக்காரர்கள் என்ற அடிப்படையில் இருந்து வருகின்றன. இந்த மடங்களையெல்லாம்

ஒழித்துவிட வேண்டும் என்று சொல்ல நான் முன்வரவில்லை. ஆனால் ஒவ்வொரு மடமும் 10 ஆயிரம் ஏக்கர், 18 ஆயிரம் ஏக்கர், 20 ஆயிரம் ஏக்கர் நிலம் என்று அவர்கள் வைத்துக்கொண்டு இருக்க வேண்டுமா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும் என்றுதான் நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த நிலங்களிலே பல்லாயிரக்கணக்கான ஏழை உழவர்கள், நிலம் அற்ற விவசாயிகள் உழைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் எப்படிப்பட்ட இன்னல்களுக்கெல்லாம் ஆளாகிக்கொண்டு இருக்கிறார்கள் என்பதைச் சற்று எண்ணிப்பார்க்க வேண்டும். அத்தகைய மடங்களில் குத்தகைதாரர்களாக இருப்பவர்கள் பல இடங்களில் அந்த நிலங்களின் பெரும் பகுதிகளை பினாமி யாகப் போட்டுக் கொண்டு அனுபவித்துக் கொண்டு இருப்பதைப் பார்க்கிறோம். எனவே ராஜமான்ய ஒழிப்பு போன்ற விஷயங்களைப் பேசும் இந்தக் காலத்தில் இத்தகைய நிலைமைகளும் மாற்றப்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த நேரத்தில் இன்னும் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிவிட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டம் ஒரு பெரும் விவசாய மாவட்டம் என்று நான் சொல்லித் தெரிந்துகொள்ள வேண்டிய நிலையில் இங்கே யாரும் இருக்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். மதிப்பிற்குரிய காங்கிரஸ்காரர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகள் செலுத்த வேண்டிய குத்தகை பாக்கியை வருஷத்திற்கு ஒரு தடவை ஒத்தி வைத்துக் கொண்டே இருந்தார்கள். நமது கழக அரசும்கூட அதை முதல் தடவையாக ஒத்திவைப்பு செய்து கொடுத்தது. இதற்குப் பிறகு நமது முதல்வர் அவர்களும், சட்ட அமைச்சர் மாண்புமிகு மாதவன் அவர்களும் தஞ்சை மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்களைத் தனித்தனியாகச் சந்தித்துப் பேசி இப்படி தள்ளிவைத்துக்கொண்டேபோவதால் விவசாயிகளுக்கு நன்மை இராது என்று கருதி நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இருந்த குத்தகை பாக்கியை நான்கு தவணைகளாகக் கொடுத்துவிட வேண்டும் என்ற ஒரு முறையை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். இந்த ஆண்டோடு அந்த நான்காவது தவணை முடிவடைய இருக்கிறது. ஆனால் விளைச்சல் இல்லாத காரணத்தினால் இந்த நான்காவது ஆண்டுத்தவணையை பலர் உண்மையிலேயே கட்ட முடியாத நிலையில் இருக்கிறார்கள். இந்த நிலையில் அவர்கள் வெளியேற்றப்படாதிருக்கும் வகையில் இன்னும் அவர்களுக்கு ஓரிரு தவணைகளைக் கொடுக்க வேண்டும் என்று முதல்வர் அவர்களையும், அமைச்சர் அவர்களையும் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

நமது மதிப்பிற்குரிய முதல்வர் கலைஞர் அவர்கள் தொட்டதெல்லாம் துலங்கும் என்ற அடிப்படையில் சபாநாயகர் அவர்கள் மூலம் மதிப்பிற்குரிய முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எப்படி ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் தமிழகத்தில் மின் இணைப்பு இல்லாத கிராமம் இருக்கக்கூடாது என்று ஏற்றுக்கொண்டு செயல்படுத்தினீர்களோ இதேபோல இன்னும் ஒரு ஐந்தாண்டு காலத்திற்குள் குடியிருப்பதற்கான மனை இல்லாத ஏழைகளே இல்லை என்று ஒரு திட்டத்தை ஏற்று செயல்படுத்த வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்ளுகிறேன். கலைஞர் அவர்கள் நினைத்தால் நடக்காததொன்றும் இல்லை, நீங்கள் தொட்டதெல்லாம் துலங்கக் கூடியதாக இருக்கின்றது. எனவே நீங்கள் தொட்டால் நிச்சயமாக அது

துலங்கக் கூடியதாகயிருக்கும். இதையும் அத்தகைய முறையில் அனுகி நல்லதையெல்லாம் செய்து வருகிற நீங்கள் இப்படி சொந்தக் குடியிருப்பு மனைகள் இல்லாதவர்களுக்கு குடியிருப்பு மனைகள் வழங்குவதற்கு நல்லதொரு திட்டத்தை உருவாக்கித் தரவேண்டுமென்று பணிவோடும், தாழ்மையோடும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்குள்ள மடங்கள், ஆதீனங்கள், கோவில்கள் இவற்றின் நிலங்களில் அன்றாடம் கூலி வேலை செய்யக் கூடிய விவசாயத் தொழிலாளர்கள் வசித்து வருகிறார்கள். அவர்களை அந்த இடங்களில் இருந்து வெளியேற்றுவதைத் தடுப்பதற்கும், கூடுமானால் அந்த இடங்களிலேயே அவர்கள் தொடர்ந்து நிரந்தரமாக வசித்து வருவதற்கு நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கி அவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கவேண்டுமென்று விரும்பி வேண்டிக் கொண்டு இறுதியாக சாலை வசதிகள் பற்றி மட்டும் ஒன்றைக் கூறிக்கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

நம் முதல் அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டவுடன் சென்ற முறை தஞ்சை மாவட்டத்திற்கு வந்திருந்தார்கள். தஞ்சை மாவட்டத்தில் விளைகிற விளைபொருள்களை வெளியே கொண்டு செல்வதற்கு சாலை வசதிகளைப் பொறுத்தவரையில் தஞ்சை மாவட்டம் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதால் சாலைகளை செப்பனிட்டுத் தரவேண்டுமென்று கருதி பொறியாளர்களை அழைத்து அவர்களை முதல்வர் அவர்கள் கேட்டபோது அவர்கள் ஒரு திட்டத்தைத் தீட்டி அதுகுறித்து மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் திருவாரூரில் ஒரு நிகழ்ச்சியில் குறிப்பிட்டார்கள். தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும் ரூ. 12 கோடி வேண்டுமென்று அவர்கள் சொல்லுவதாகச் சொன்னார்கள். நம் மாநிலத்திற்கே அதற்காக 12 கோடி ரூபாய்தான் ஒதுக்க முடிகிறது என்று முதல்வர் அவர்கள் குறிப்பிட்டு விட்டு அவர்கள் தஞ்சை மாவட்டத் திற்கு மட்டும் இதற்காக 12 கோடி ரூபாய் வேண்டுமென்று சொல்கிறார்களே என்று கேட்டார்கள். ஏனைய மாவட்டங்களில் எப்படி சாலைவசதிகள் இருக்கின்றனவோ அதே முறையில் தஞ்சை மாவட்டத்திற்கும் ஒரு சிறப்பான திட்டத்தைத் தீட்டி தஞ்சை மாவட்டத்திற்கு நல்ல சாலை வசதிகள் கிடைக்கத் தக்க அளவிற்கு ஒரு திட்டத்தைத் தீட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். அப்படி சாலைவசதிகள் இல்லை என்ற குறையைப் போக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு ஆளுநர் அவர்களது உரைக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. மணலி சி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1952-57-ல் இந்தச் சட்டசபையில் அங்கம் வகித்த நான் இந்த 1971-ம் ஆண்டில் உங்கள் தலைமையில் இன்றையதினம் பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்ததற்கு தான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். அன்றையதினம் இருந்த சட்டசபை யில் எனக்கு நன்றாக ஞாபகத்தில் இருக்கிறது. இப்போது முதல் அமைச்ச ராக கலைஞர் அவர்கள் அமர்ந்து இருக்கும் படிய இடத்தில் அன்றைய தினம் அறிவுத்திருவுருவாய் ஆச்சாரியார் அவர்கள் அமர்ந்திருந்தார்கள். அன்று அவர்கள் முதல்அமைச்சராக இருந்தார்கள், காங்கிரஸ் மந்திரிசபை இருந்தது. இந்தப் பகுதியில் எல்லாம் காங்கிரஸ்காரர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அன்று நாங்கள் ஒரு சிறுபான்மைக் கட்சியாக எதிர் கட்சியில் உட்கார்ந்திருந்தோம்.

ஒழித்துவிட வேண்டும் என்று சொல்ல நான் முன்வரவில்லை. ஆனால் ஒவ்வொரு மடமும் 10 ஆயிரம் ஏக்கர், 18 ஆயிரம் ஏக்கர், 20 ஆயிரம் ஏக்கர் நிலம் என்று அவர்கள் வைத்துக்கொண்டு இருக்க வேண்டுமா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும் என்றுதான் நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த நிலங்களிலே பல்லாயிரக்கணக்கான ஏழை உழவர்கள், நிலம் அற்ற விவசாயிகள் உழைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் எப்படிப்பட்ட இன்னல்களுக்கெல்லாம் ஆளாகிக்கொண்டு இருக்கிறார்கள் என்பதைச் சற்று எண்ணிப்பார்க்க வேண்டும். அத்தகைய மடங்களில் குத்தகைதாரர்களாக இருப்பவர்கள் பல இடங்களில் அந்த நிலங்களின் பெரும் பகுதிகளை பினாமியாகப் போட்டுக் கொண்டு அனுபவித்துக் கொண்டு இருப்பதைப் பார்க்கிறோம். எனவே ஜாஜமான்ய ஒழிப்பு போன்ற விஷயங்களைப் பேசும் இந்தக் காலத்தில் இத்தகைய நிலைமைகளும் மாற்றப்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த நேரத்தில் இன்னும் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிவிட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டம் ஒரு பெரும் விவசாய மாவட்டம் என்று நான் சொல்லித் தெரிந்துகொள்ள வேண்டிய நிலையில் இங்கே யாரும் இருக்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். மதிப்பிற்குரிய காங்கிரஸ்காரர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகள் செலுத்த வேண்டிய குத்தகை பாக்கியை வருஷத்திற்கு ஒரு தடவை ஒத்தி வைத்துக் கொண்டே இருந்தார்கள். நமது கழக அரசும்கூட அதை முதல் தடவையாக ஒத்திவைப்பு செய்து கொடுத்தது. இதற்குப் பிறகு நமது முதல்வர் அவர்களும், சட்ட அமைச்சர் மாண்புமிகு மாதவன் அவர்களும் தஞ்சை மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்களைத் தனித்தனியாகச் சந்தித்துப் பேசி இப்படி தள்ளிவைத்துக்கொண்டேபோவதால் விவசாயிகளுக்கு நன்மை இராது என்று கருதி நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இருந்த குத்தகை பாக்கியை நான்கு தவணைகளாகக் கொடுத்துவிட வேண்டும் என்ற ஒரு முறையை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். இந்த ஆண்டோடு அந்த நான்காவது தவணை முடிவடைய இருக்கிறது. ஆனால் விளைச்சல் இல்லாத காரணத்தினால் இந்த நான்காவது ஆண்டுத்தவணையை பலர் உண்மையிலேயே கட்ட முடியாத நிலையில் இருக்கிறார்கள். இந்த நிலையில் அவர்கள் வெளியேற்றப்படாதிருக்கும் வகையில் இன்னும் அவர்களுக்கு ஓரிரு தவணைகளைக் கொடுக்க வேண்டும் என்று முதல்வர் அவர்களையும், அமைச்சர் அவர்களையும் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

நமது மதிப்பிற்குரிய முதல்வர் கலைஞர் அவர்கள் தொட்டதெல்லாம் துலங்கும் என்ற அடிப்படையில் சபாநாயகர் அவர்கள் மூலம் மதிப்பிற்குரிய முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எப்படி ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் தமிழகத்தில் மின் இணைப்பு இல்லாத கிராமம் இருக்கக்கூடாது என்று ஏற்றுக்கொண்டு செயல்படுத்தினீர்களோ அதேபோல இன்னும் ஒரு ஐந்தாண்டு காலத்திற்குள் குடியிருப்பதற்கான மனை இல்லாத ஏழைகளே இல்லை என்று ஒரு திட்டத்தை ஏற்று செயல்படுத்த வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்ளுகிறேன். கலைஞர் அவர்கள் நினைத்தால் நடக்காததொன்றும் இல்லை, நீங்கள் தொட்டதெல்லாம் துலங்கக் கூடியதாக இருக்கின்றது. எனவே நீங்கள் தொட்டால் நிச்சயமாக அது

துலங்கக் கூடியதாகயிருக்கும். இதையும் அத்தகைய முறையில் அனுமதி நல்லதையெல்லாம் செய்து வருகிற நீங்கள் இப்படி சொந்தக் குடியிருப்பு மனைகள் இல்லாதவர்களுக்கு குடியிருப்பு மனைகள் வழங்குவதற்கு நல்லதொரு திட்டத்தை உருவாக்கித் தரவேண்டுமென்று பணிவோடும், தாழ்மையோடும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்குள்ள மடங்கள், ஆதீனங்கள், கோவில்கள் இவற்றின் நிலங்களில் அன்றாடம் கூலி வேலை செய்யக் கூடிய விவசாயத் தொழிலாளர்கள் வசித்து வருகிறார்கள். அவர்களை அந்த இடங்களில் இருந்து வெளியேற்றுவதற்கும், கூடுமானால் அந்த இடங்களிலேயே அவர்கள் தொடர்ந்து நிரந்தரமாக வசித்து வருவதற்கு நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கி அவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கவேண்டுமென்று விரும்பி வேண்டிக் கொண்டு இறுதியாக சாலை வசதிகள் பற்றி மட்டும் ஒன்றைக் கூறிக்கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

நம் முதல் அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டவுடன் சென்ற முறை தஞ்சை மாவட்டத்திற்கு வந்திருந்தார்கள். தஞ்சை மாவட்டத்தில் விளைகிற விளைபொருள்களை வெளியே கொண்டு செல்வதற்கு சாலை வசதிகளைப் பொறுத்தவரையில் தஞ்சை மாவட்டம் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதால் சாலைகளை செப்பனிட்டுத் தரவேண்டுமென்று கருதி பொறியாளர்களை அழைத்து அவர்களை முதல்வர் அவர்கள் கேட்டபோது அவர்கள் ஒரு திட்டத்தைத் தீட்டி அதுகுறித்து மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் திருவாரூரில் ஒரு நிகழ்ச்சியில் குறிப்பிட்டார்கள். தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும் ரூ. 12 கோடி வேண்டுமென்று அவர்கள் சொல்வதாகச் சொன்னார்கள். நம் மாநிலத்திற்கே அதற்காக 12 கோடி ரூபாய்தான் ஒதுக்க முடிகிறது என்று முதல்வர் அவர்கள் குறிப்பிட்டு விட்டு அவர்கள் தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும் இதற்காக 12 கோடி ரூபாய் வேண்டுமென்று சொல்கிறார்களே என்று கேட்டார்கள். ஏனைய மாவட்டங்களில் எப்படி சாலைவசதிகள் இருக்கின்றனவோ அதே முறையில் தஞ்சை மாவட்டத்திற்கும் ஒரு சிறப்பான திட்டத்தைத் தீட்டி தஞ்சை மாவட்டத்திற்கு நல்ல சாலை வசதிகள் கிடைக்கத் தக்க அளவிற்கு ஒரு திட்டத்தைத் தீட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி சாலைவசதிகள் இல்லை என்ற குறையைப் போக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு ஆளுநர் அவர்களது உரைக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. மணலி சி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1952-57-ல் இந்தச் சட்டசபையில் அங்கம் வகித்த நான் இந்த 1971-ம் ஆண்டில் உங்கள் தலைமையில் இன்றையதினம் பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்ததற்கு தான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். அன்றையதினம் இருந்த சட்டசபையில் எனக்கு நன்றாக ஞாபகத்தில் இருக்கிறது. இப்போது முதல் அமைச்சராக கலைஞர் அவர்கள் அமர்ந்து இருக்கக் கூடிய இடத்தில் அன்றைய தினம் அறிவுத்திருவுருவாய் ராஜாஜியார் அவர்கள் அமர்ந்திருந்தார்கள். அன்று அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள், காங்கிரஸ் மந்திரிசபை இருந்தது. இந்தப் பகுதியில் எல்லாம் காங்கிரஸ்காரர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அன்று நாங்கள் ஒரு சிறுபான்மைக் கட்சியாக எதிர் கட்சியில் உட்கார்ந்திருந்தோம்.

ஆனால் இன்றையதினம் நான் ஒரு பெரும் மாற்றத்தைக் காண்கிறேன். நாட்டில் இந்த இருபது ஆண்டுக்காலத்தில் மகத்தான மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டு வருகின்றன என்பதைப் பார்க்கிறேன். மக்கள் மனதில் பல மாற்றங்கள் அனுபவவாயிலாக ஏற்பட்டுக் கொண்டு வருகின்றன. அதை உட்படுத்தித்தான் நாம் மற்ற விஷயங்களைப் பார்க்க வேண்டும்.

நடந்து முடிந்த தேர்தலில் ஒரு விழிப்பு ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம். அந்த விழிப்புக்குத் தக்கபடி நாம் நிற்கவில்லை, ஆகவேதான் தோற்றோம் என்ற மன நிறைவுக்கு வரவில்லை. சின்னஞ்சிறு விஷயங்களை மிகைப்படுத்தி அவைகளைப் பற்றி விமர்சனம் செய்வது சரியல்ல என்பது என் கருத்து. எந்த அடிப்படையில் நடந்ததோ, தேர்தல்கள் நடந்து முடிந்து விட்டன, சட்டமன்றமும் கூடியாகிவிட்டது, அரசும் அமைந்து விட்டது, நம் வேலையையும் நாம் துவங்கி விட்டோம். ஆகவே இனி நமது கடமை என்னவென்றால் மக்கள் பிரச்னைகளைக் கவனித்து வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டும். கோடிக்கணக்கில் வாடிக் கிடக்கும் மக்களின்பால் நம் தொண்டு செல்லவேண்டும். சின்னஞ்சிறு விஷயங்களைப் பற்றி அதிகப்படியாகப் பேசுவதை விட்டுவிடவேண்டும். அதை அடியோடு விட்டு விடவேண்டுமென்று நான் சொல்லவில்லை. நான் சொல்வது முக்கியமான காரியங்களில் நம் கவனத்தைச் செலுத்த வேண்டும் என்றுதான் சொல்கிறேன். அதைத்தான் முக்கியமாகக் கவனிக்க வேண்டுமென்று நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களை நான் பணிவோடு வேண்டிக் கொள்கிறேன்.

நாங்கள் சிறு பகுதியினராக இருந்தாலும் கூட தெளிவாகப் பார்க்கிறேன். அங்கிருப்பது அரசு, இங்கிருப்பது அமைச்சு என்று பார்க்கிறேன். இப்போது அவர்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். அவர்களுக்குப் புத்தி சொல்லி அவர்களது தவறுகளைத் திருத்தவேண்டியது நம் கடமை. நாம் இங்கு அமைச்சாக இருக்கிறோம். இது எண்ணிக்கையைப் பொறுத்த விஷயமல்ல, குணம்சத்தைப் பொறுத்த விஷயம்.

தேர்தலைப் பொறுத்தவரையில் எந்தத் தேர்தலிலும் சில ஒழுங்கீனங்கள் இருக்கத்தான் செய்யும். அதற்கு யாரும் விதிவிலக்கு அல்ல. நான்கு கோடி மக்கள் உணர்ச்சி பூர்வமாகப் பங்கெடுத்துக் கொள்ளக் கூடிய நேரத்தில், உணர்ச்சி வசப்படும் தேர்தலில் சில தவறுகள் நேர்ந்திருக்கலாம். அதை வைத்துக்கொண்டு அதைப் பெரிதுபடுத்தக்கூடாது. நாம் மக்களின் தீர்ப்பை மதிக்கவேண்டும். மக்களின் தீர்ப்பை நாம் மறக்கக்கூடாது. இந்தத் தேர்தலிலிருந்து நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய படிப்பினை என்னவென்றால், இந்திரா காந்தி அம்மையாரிடமும், இங்கு கலைஞர் அவர்களின் ஆட்சி மீதும் மக்கள் பெருநம்பிக்கை வைத்திருப்பதற்குக் காரணம் என்ன என்று பார்க்க வேண்டும். நாங்கள் ஏழைகளின் கஷ்டங்களை உணருகிறோம். அவர்களின் வேதனையை உணருகிறோம், அவர்களின் துயரங்களைப் போக்குவதற்கு வழி வகுத்து அவற்றை நிவர்த்திப்போம் என்று கூறியதை மக்கள் ஏற்று வாக்களித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் உங்களுடைய கூட்டணி சரியானதொரு அரசியல் நிலையை எடுக்கவில்லை என்பதை இனியாவது நீங்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

இங்கு பேசிய பேச்சுக்களிலிருந்து சில மாற்றங்களை நான் பார்க்கிறேன். இந்தத் தேர்தலின் விளைவாக மக்கள் மத்தியில் மாற்றங்கள் ஏற்பட்டு வருவதைக் காண்கிறேன். எனது மதிப்பிற்குரிய நண்பர் டாக்டர் ஹாண்டே அவர்கள் சுதந்திராக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் கூட அவர்கள் அவர்களது பேச்சில் வர்க்கபேதமற்ற, ஜாதிபேதமற்ற ஒரு சமுதாயத்தை அமைக்கத்தான் நாங்கள் இருக்கிறோம் என்று சொன்னதைக் கேட்டபோது எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. சுதந்திராக் கட்சியைச் சார்ந்தவர் இவ்வளவு அழுத்தந்திருத்தமாக வர்க்கபேதமற்ற, ஜாதிபேதமற்றதொரு சமுதாயத்தை உருவாக்க இருக்கிறோம் என்று சொல்வதற்கு ஒரு துணிவு இருக்கவேண்டும். நான் அதைக் கேட்டு விட்டு அவரைத் தனியாக அணுகி இது உங்கள் கட்சியின் திட்டமா என்று கேட்டேன். இதுகுறித்து உங்கள் கட்சிக்குள்ளே போராடி அத்தகைய ஒரு திட்டத்தைக் கொண்டு வாருங்கள் என்று சொன்னேன்.

தேர்தலில் வெற்றி பெறுவது, தோல்வியடைவது என்பது ஒரு பெரிய காரியம் அல்ல. நான் தேர்தலில் நின்று பல தடவை தோற்றிருக்கிறேன். இரண்டு தடவை ஜெயித்தும் இருக்கிறேன். ஆகவே அதைப் பற்றி ஒன்றுமில்லை. அளவில் ஒன்றுமில்லை குணம்சத்தில்தான் இருக்கிறது. ஜனங்களின் மத்தியில் சென்று நாம் வோட் கேட்கிறோம், அவர்கள் வோட் போட்டால் நாம் இங்கு வருகிறோம், இல்லை என்றால் இல்லை. அவ்வளவுதான். என்னைப் பார்த்தே கேட்டிருக்கிறார்கள் நான் தோற்றபோது. உன்னைப் பார்த்தால் தோற்றதுபோல் இல்லையே என்று. தோற்றுப்போனால் உட்கார்ந்து கொண்டு அழவேண்டுமா? அல்லது ஒப்பாரி வைக்கவேண்டுமா? மக்கள் வோட் போட்டார்கள், வந்து விட்டார்கள். அப்படியிருக்க, மறையக் கூடிய இங்க்கை உபயோகிந்தார்கள், திரும்பி வரக்கூடிய விதத்தில் உள்ள இங்க்கை உபயோகித்தார்கள் என்றெல்லாம் சொல்வது சரியல்ல. (குறுக்கீடு.) உங்கள் பத்திரிகைகளில் வந்ததைப் பார்த்தேனே. நீங்கள் பேசியதாக நான் சொல்லவில்லையே. அப்படியெல்லாம் பேசுவது சரியல்ல. ஏதோ திரும்பி வந்து விட்டதாம், மறைந்து விட்டதாம். இப்படியெல்லாம் சொல்வது சரியல்ல. தேர்தல் முடிந்த பிறகு இப்படியெல்லாம் போஸ்ட் மார்டம் செய்வது, பிரேதப் பரிசோதனை செய்வது நல்லதல்ல. தப்பிருந்தால் சொல்லலாம், கலைஞர் அவர்கள் தப்பு செய்தால் அதை எதிர்த்துப் பேசக்கூடாதா? அதற்கு உரிமை இல்லையா? அதேபோல் அவர்கள் செய்யும் நல்ல காரியங்களைப் பாராட்ட வேண்டும், ஒப்புக்கொள்ளவேண்டும்.

தேர்தல் பற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். தேர்தலில் ஜாதி, மதம், கடவுள் இவற்றை இழுப்பது மிகவும் ஆபத்தானது. மதுரையில் கடவுளை நம்புகிறவர்கள், கடவுளை நம்பாதவர்கள் என்ற அடிப்படையில் தேர்தல் நடந்திருக்கிறது என்றால் நாடு உருப்படுமா? கடவுளை நம்புகிறவர்களுக்கு ஓட்டு போடு என்று சொல்கிற அளவிற்கு அரசியல் போவது வருந்தத்தக்கதாகும். கடவுளை நம்புகிறவர்கள், நம்பாதவர்கள் என்பது அவரவர்கள் நம்பிக்கையைப் பொறுத்த விஷயம். ஆகவே கடவுளை நம்புகிறவர்களுக்கு ஓட்டு போடு என்று சொல்வது, அப்படிச் சொல்வது சரியானதல்ல.

[திரு. மணலி சி. கந்தசாமி] [1971 மார்ச் 30

அடுத்தபடியாக, ஆளுநர் அவர்களின் உரைக்கு வருகிறேன். மாண்புமிகு ஆளுநர் அவர்கள் உரையிலே விவசாய அபிவிருத்தியைப்பற்றி பல விஷயங்கள் சொல்லப்பட்டு இருக்கிறது. உற்பத்தி 62 லட்சம் டன்னுகப் பெருகி இருக்கிறது என்ற உண்மையைப் பார்க்கிறோம். இது பெருமைப் படக்கூடிய தொன்றாகும். தமிழ் நாட்டில் உணவு நெருக்கடி தீர்ந்து விட்டது, தன்னிறைவு பெற்று விட்டோம். 1966-67-ம் ஆண்டில் 5 லட்சம் டன்னுக இருந்த உணவு உற்பத்தி, இன்று 62 லட்சம் டன்னுக, எட்டு லட்சம் டன் அதிகமாக இந்த நான்கு ஆண்டுகளில் உற்பத்தி அதிகமாகி இருக்கிறது என்பது பெருமைப் படத்தக்க விஷயமாகும். இதை இன்னும் 70 டன்னுக கொண்டு போக வேண்டும். இந்த அதிக உற்பத்தியை நான் வரவேற்கிறேன். இது தமிழ் நாட்டின் செல்வச்செழிப்பை, தமிழ் நாட்டின் முன்னேற்றத்தைக் காட்டு கிறது. இது மிகவும் வரவேற்கத் தக்கதாகும். எல்லாக் கட்சிக்காரர்களும் இதற்கு ஆதரவு தரவேண்டுமென்பதில் ஐயம் இடையாது. அதே நேரத்தில் இந்த எட்டு லட்சம் அதிகப்படுத்தப்பட்ட உற்பத்தி, தமிழ் நாட்டில் ஏற்பட் டிருக்கும் செல்வச் செழிப்பு எங்கே போய் இருக்கிறது.

இதிலே எங்களுக்கும், ஆளும் கட்சிக்கும், திராவிட முன்னேற்றக் கழகத் திற்கும் இருக்கும் வித்தியாசம் என்று சொல்ல மாட்டேன், உள்ளபடியே இப்போது ஏற்பட்டு இருக்கும் அடிப்படை வித்யாசம் இது தான். சமுதாயம் வளர்ச்சி பெறும் போது மாற்றம் செய்ய வேண்டுமா, வளர்ந்து முதிர்ந்த பிறகு மாற்றம் செய்யவேண்டுமா? Growing Economy, Developing Economy என்று பேசக்கூடிய நேரத்தில், விடுதலை அடைந்த நாட்டின் வளர்ச்சிப் பாதையில், வளர்ச்சி அடைந்த பிறகு சமுதாய மாற்றம் தேவையா, அல்லது வளர்ச்சி அடைந்து முதிர்ந்த பிறகு சமுதாயத்தில் மாற்றம் தேவையா, இதிலே எது தேவை, அது எப்போது ஏற்படும் என்று பார்க்க வேண்டும். உழைப்பவர்களுக்கு வாய்ப்பு அளிக்கிற வகையில், ஏழைகளுக்கு ஏற்றம் தருகின்ற வகையில் சமுதாயத்தில் மாற்றம் கொண்டு வரவேண்டும் என்ற கேள்வியில்தான் இங்கே பலகீனம் தென்படுகிறது.

நிலச் சீர்திருத்தம் 15 ஏக்கராகக் கொண்டு வந்து இருப்பதை வரவேற் கிறேன். இதிலே 30 ஏக்கர் என்று இருந்தது 15 ஏக்கர் என்று கொண்டு வந்திருந்தாலும் காங்கிரஸ் ஆட்சியில் கொண்டு வந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்திற்கும், இதற்கும் வித்தியாசம் இல்லை என்று சொல்லிக் கொள்கிறேன். நேற்றைய தினம் பேசுகிற நேரத்தில் ரிஜிஸ்டிரேஷனில் வருமானம் அதிகமாகி இருக்கிறது என்பதை வேறு கண்ணோடு பார்க்கிறீர்கள் என்று சொன்னார்கள். ரிஜிஸ்டிரேஷனில் எப்படி அதிகமாக வருகிறது? நிலம் விலை ஏற்றத்தின் காரணம் என்ன? விலை ஏற்றம் என்பது மாத்திரமல்லாமல் இன்றைக்கு சொந்த நிலம் வைத்தவர்கள், பெரிய அளவுக்குப் பெயர் மாற்றங்கள் செய்து இருக்கிறார்கள். இந்த 15 ஏக்கர் நிலம் உச்சவரம்பு என்று கொண்டு வருவ தற்கு முன்னால், ரிஜிஸ்டிரேஷன் டிபார்ட்மெண்ட் கொடுத்த அறிக்கையைப் படித்துப் பார்த்தால், எவ்வளவு சொத்து மாற்றங்கள் நடந்து இருக்கிறது என்பது தெரியும். நிலச் சீர்திருத்தம் என்பது சிலருடைய நிலத்தைப் பிடுங்கிக் கொள்வது என்பது அல்ல. லட்சோப லட்சம் மக்கள் நிலமில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பிரித்துக் கொடுப்பதற்குத்தான். கிராமத் தில் வாழும் பெருவாரியான தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள்,

1971 மார்ச் 30] [திரு. மணலி சி. கந்தசாமி]

வியாபாரிகள், பிற்பட்ட வகுப்பினர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் இவர்களுடைய முன்னேற்றத்திற்கு என் வாழ்நாள் முழுவதும் பாடுபடுவேன். அது தான் என் வாழ்க்கைக் கனவு. விவசாயத் தொழிலாளர்கள் 62 லட்சம் டன், 70 லட்சம் டன் என்று உற்பத்தியைப் பெருக்குகிறார்கள். அந்த அபிவிருத்தி அவர்களுக்குப் போய் சேரும் அளவுக்குக் கிராமச் சமுதாயம் முன்னேற வேண்டும். அதற்கு நிவிர்யாக நிலச் சீர்திருத்தங்கள் நல்லதொரு முறையில் எல்லா நிலச்சீர்திருத்தச் சட்டங்களையும் ஒருங்கிணைந்த ஒரு சட்டமாகக் கொண்டு வரவேண்டும்.

வியாபாரிகள் ஏற்றம் பெறவும், ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை காண்ப தற்கும், ஏழை எளியவர்கள் ஏற்றம் பெறுவதற்கும் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு 'சுலோகன் மாங்கர்' என்று, வெறி பிடித்தவன் என்று நினைத்துச் சொல்லாதீர்கள். என்னுடைய கனவு பூராவும் ஒரு புதிய கிராமத்தைப் பார்க்க வேண்டும். அதிலே பிற்பட்ட குடிமகன், ஒதுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட குடிமகன்கள், சாதாரண மக்கள், அங்கே கஷ்டப்பட்டு வாழ்ந்து கொண்டு இருக்கும் மக்கள் மத்தியில், ஒரு புது வாழ்க்கை, தன்னம்பிக்கை யோடு கூடிய வாழ்க்கை, ஒரு ஒளி மிகுந்த வாழ்க்கை வரவேண்டுமென்பது என் ஆசை. ஐந்து சென்ட் நிலம் கூட ஒருவனுக்கு இல்லையென்றால் அவன் தமிழ் நாட்டில் எப்படி வாழ்வான், அவன் ஓட்டு உரிமையைப் பயன்படுத்தி எப்படி தைரியமாக ஓட்டுப் போடுவான்? பெரும்பாலும் இப்போது ஜனநாயகக் கூட்டணிக்கு ஓட்டுப்போட்டவர்கள் சொத்து உரிமையைப் பாதுகாக்கிறவர்கள் தான். எனக்கு எதிராக ஓட்டுப்போட்டவர்கள் எல்லாம் அந்த ஊரில் இருக்கும் பட்டாதார்கள் தான். அவர்கள் இவன் சிறு விவசாயி களை ஒன்று சேர்த்தவன், அவர்களுக்குச் சங்கம் வைத்தவன், ஆகவே இவனை எப்படியும் தோற்கடித்து விடவேண்டும் என்று சொத்து உரிமைக்காரர்கள் பூராவும் இணைந்து வரிந்து கட்டிக்கொண்டு ஓட்டுப் போட்டு இருக்கிறார்கள் எனக்கு எதிராக. என்னைத் தோற்கடிக்க வேண்டுமென்று இயக்கம் ஆரம்பித் தவர்கள் இருக்கிறார்கள். இவன் வரக்கூடாது என்று மனப்பூர்வமாகச் சொன்னவர்கள் இருக்கிறார்கள். என்னுடைய வாழ்க்கைக் கனவு எல்லாம் ஏழை மக்கள் முன்னேற்றம் அடையவேண்டும் என்பது தான். கிராமப்புறத் தில் இருப்பவர்கள் ஒரு புதிய பொருளாதார அமைப்பைக் காணவேண்டும் அதிலே ஜாதி மத பேதம் இருக்கக்கூடாது என்பது தான். இப்போது இருக்கும் அமைப்பை மாற்றுவதற்கு நல்ல சீர்திருத்தங்கள் வரவேண்டும் பொருளாதார சீர்திருத்தங்கள் மேற்கொள்ளாமல் ஒரு சமுதாயம் மறு மலர்ச்சியைக் காண முடியாது. அப்படிப்பட்ட ஒரு சமுதாய மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய பணி பூராவும் தொழிலாளர்களுக்காகவும், விவசாயத் தொழிலாளர்களுக்காகவும் கொடுப்பேன் என்று சொன்னதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். நான் இதய பூர்வமாக உறுதி எடுத்துக் கொண்டு நடக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக எவ்வளவு தாராளமாக 22 கோடி ரூபாயை 35 கோடி ரூபாய் ஆண்டு விழுகிறபோது ஆறு லட்சம் சர்க்கார் சிப்பந்திகளுக்கு சம்பள உயர்வு கொடுக்கும் வகையில் கொடுத்து இருக்கிறீர்கள். இப்படி அரசு ஊழியர்கள் நல்ல விதத்தில் சம்பளம் வாங்கவேண்டுமென்று நினைக்கிற நீங்கள், தொழில் துறையில் இருப்பவர்களை என் இப்படிச் சம்பளம் கொடு

என்று கேட்கக்கூடாது என்று கேட்கிறேன். அவர்கள், சட்டத்தை ஏமாற்றி பல விதத்தில் பணத்தைச் சம்பாதிக்கிறார்கள். இப்படிச் செய்யும் போது சோஷலிஷம் எப்படி வரும்? பணத்தை எல்லாம் மறைத்து விடுகிறார்கள். கள்ளப்பணம், வெள்ளைப்பணம் என்று பணம் வைத்து இருக்கிறார்கள். அதற்குத் தக்கவாறு கணக்குக் காட்டுகிறார்கள். மிகக் கேவலமான முறையில் சர்க்காரை ஏமாற்றி பணம் சம்பாதிக்கிறார்கள். இன்றைக்கு இருக்கும் முதலாளித்துவம் எந்த அளவுக்கு தொழிலாளி வர்க்கத்திற்கு நீதி வழங்கவேண்டுமென்று திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சில ஆலோசனைகளை சொல்லி இருக்கிறார்கள். அவற்றையெல்லாம் கவனித்து தொழிலாளி வர்க்கத்திற்கு நீதி வழங்கவேண்டுமென்று—சர்க்கார் ஊழியர்களுக்கு நீதி வழங்கியதுபோல்—கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த கலப்புப்பொருளாதாரத்தைப் பற்றி சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றைக்கு சர்க்கார் துறை தொழில்கள், தனியார் துறைத் தொழில்கள் என்று இருக்கின்றன. சர்க்கார் துறை தொழில்களும், தனியார் துறைத் தொழில்களும் ஒன்றாக இணையலாமா என்பது, பாலில் தண்ணீர் கலக்கலாமா என்பதைத்தான் குறிக்கும். நான் சர்க்கார் துறைத் தொழில்களை பால் போல் பார்க்கிறேன். தனியார் தொழில்களைத் தண்ணீர் போல் பார்க்கிறேன். சர்க்கார் துறைத் தொழில்கள் மேம்பட்டு இருக்க வேண்டும். அந்தத் தொழில்கள் நாட்டின் வளர்ச்சிக்கு பயன்படக்கூடிய விதத்தில் இருக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் திட்டவட்டமாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

விலைவாசி ஏற்றத்தைத் தடுக்க மாநில சர்க்கார் ஒன்றும் செய்வதற்கு இல்லை. அதிலே மத்திய சர்க்காரும் தொடர்ந்து இணைந்து பணியாற்றினால் தான் முடியும் என்பதை 100-க்கு 100 சதவிகிதம் இந்தத் தேர்தலுக்குப் பிறகாவது உணர்ந்து, திருமதி இந்திரா காந்தி அவர்களும், மத்திய சர்க்காரும் கொஞ்சம் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்திய ஒற்றுமைக்கு ஆபத்து ஏற்பட்டால் அதற்கு மத்திய அரசைத் தவிர வேறு யாரும் பொறுப்பு அல்ல. வீட்டிலே கூடப் பார்க்கிறோம். வயது வந்த பையனுக்கு பணம் கொடுக்காமல், பணத்தை எல்லாம் பூட்டி வைத்தால் அந்தப் பையன் என்ன செய்வான்? பணம் கொடுக்கவில்லை என்பதற்காக சண்டை போட ஆரம்பிப்பான். அந்த நிலைமை தானே ஏற்படும். இதை அனுபவத்தில் பார்க்கிறோமே? ஆகவே, திருமதி இந்திராகாந்தி அவர்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன் அந்த ஆபத்தை வரவிடாதீர்கள். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்குங்கள். திட்டங்களுக்கு அதிகப் பணம் ஒதுக்குங்கள். இன்றைக்குத் திட்டக் கமிஷன் என்பது பாரபட்சமற்ற அடிப்படையில் மாநிலங்களுக்கு அதிக தொகையை ஒதுக்கி திட்டம் தீட்ட வேண்டும்.

மாநிலங்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டு, அயல் நாட்டு இலாகா, போக்குவரத்து, ராணுவம், இப்படிப்பட்ட சில விஷயங்கள் மட்டும் மத்திய அரசு வைத்துக்கொண்டால் போதாதா, என்ன குடியா முழுகிப்போய்விடும்? மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வரவேண்டுமென்பதில் எங்களுடைய கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் உங்களுடன் சேர்ந்து நிற்கத் தயாராக இருக்கிறோம் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நேற்றைக்கு

குறிப்பிட்டார்கள், கிழக்குப் பாகிஸ்தானில் ராணுவ சர்வாதிகார ஆட்சியை எதிர்த்து மக்கள் போராடுகிறார்கள். அந்தப் புரட்சியை ஒன்றும் செய்ய முடியாது. ஒழுங்கான முறையில், நியாயமான முறையில் அதிக அதிகாரங்களைத் தரவேண்டும். இந்த விஷயத்தில் 100-க்கு 100 சதவிகிதம் கலைஞர் அவர்களுடைய கருத்துக்களை நான் ஒப்புக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நிர்வாகச் சீர்திருத்தம் கொண்டு வரவேண்டிய அவசியத்தை நான் வற்புறுத்துகிறேன். அதை வரவேற்கிறேன் ஜனங்களுக்கும், நிர்வாகத்திற்கும் இருக்கக்கூடிய தொடர்பு ஏகாதிபத்திய காலத்தில் எப்படி இருந்ததோ, அப்படித் தான் இப்பொழுதும் பெரும்பாலும் இருப்பதைப் பார்க்கிறோம். சில விதிகள், சில மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், அடிப்படையில் மாற்றங்கள் ஏற்படவில்லை. மக்கள் நிர்வாகத்தோடு தங்கு தடையில்லாமல் தொடர்பு கொள்வதற்கு வேண்டிய வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். மக்கள் அதிகாரிகளைச் சுலபமான முறையில் அணுகக்கூடிய வகையில் மாற்றம் ஏற்படவேண்டும். அவர்களால் கொண்டு போகக் கூடிய பிரச்னைகளுக்கு விரைவிலே முடிவு காணவேண்டும். அப்படிப்பட்ட ஒரு மாற்றம் ஏற்பட்டால் அல்லாது, சட்ட மன்றத்தில் என்ன நல்ல காரியங்கள் செய்தாலும் சரி, அந்தக் காரியங்கள் நிர்வாகத்தில் இருக்கிறவர்கள் கையில் வருகிற காலத்தில், ஆங்கிலத்தில் ரெட் டேபிசம் என்று சொல்லக்கூடிய சிவப்பு நாடா முறையினால் முன்னேற்றம் தடைபடுகிறது.

ஒரு காரியாலயத்தில் உள்ளே நுழைந்து வெளியே வருவதற்குள் ஒரு குடியானவனுக்கு வியர்த்து விறுவிறுத்து விடுகிறது. தாசில்தாரைப் பார்க்க வேண்டுமென்றால், கடவுளைப் பார்ப்பது போல் இருக்கிறது. இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். கணக்குப் பிள்ளையிலிருந்து மேல்மட்டம் வரையில் நிர்வாகத்தில் என்னென்ன மாற்றங்கள் கொண்டு வரவேண்டுமோ அவைகளை விரைவில் கொண்டுவர வேண்டும். அப்பொழுதுதான் மக்களுடைய பிரச்னைகளையும், மக்கள் அனுப்பி வைக்கிற மனுக்களையும் உடனுக்குடன் தாமதம் இல்லாமல் டிஸ்போஸ் செய்ய முடியும். ஆகவே, நிர்வாக சீர்திருத்தக் கமிஷன் போடுவதை நான் வரவேற்கிறேன். அந்தக் கமிஷன் எல்லா மாவட்டங்களிலும் விசாரணை நடத்தவேண்டும். சாட்சியங்களை பதிவு செய்யவேண்டும், எதிர்க் கட்சியினரின் ஒத்துழைப்பைப் பெற வேண்டும். நிர்வாகக் காரியங்களில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்க்க வேண்டும். மக்களுக்கும் தமிழக அரசு நிர்வாகத்திற்கும் பெரிய அளவுக்கு தொடர்பு ஏற்பட்டது என்று சொல்லக் கூடிய அளவில் நிர்வாக சீர்திருத்தம் செய்யப்படவேண்டும். அதைக் கலைஞர் தலைமையில் இயங்கும் அரசு முற்படும் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக விலைவாசி ஏறிக்கொண்டே போவதை நாம் பார்க்கிறோம். அதனால் சர்க்கார் கட்டுப்பாட்டை உடனே அமலுக்குக் கொண்டு வர வேண்டுமென்பதில்லை. ஆனால் விலைவாசி சம்பந்தமாக ஓரளவுக்குச் சர்க்கார் கண்காணிப்பாக இருக்கவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். குறிப்பாக, தஞ்சை ஜில்லாவை எடுத்துக்கொண்டால் மார்கழி மாதத்தில் நெல் விலை ஒரு கலம் ரூ. 18-க்கு விற்கிறது. அறுப்பு அறுக்கும்பொழுது ரூ. 14-க்கு வருகிறது. மூன்று மாதத்திற்குப் பிறகு ரூ. 17, 18 என்று ஏறிவிடுகிறது. சிறு குடியானவர்கள் நெல்லை விற்கிற காலத்தில் விலை குறைந்து விடுகிறது. நெல்லை உற்பத்தி செய்யக் கூடியவர்களுக்கு கட்டுபடியான விலை கிடைப்

பதில்லை. பெரிய நிலச்சுவான்தார்களுக்கும், நெல் வியாபாரிகளுக்கும் தான் விலை அதிகமாக கிடைக்கிறது. இப்படி அவர்கள் விற்கும் சமயத்தில் விலை ஏறிப் போய்விடுகிறது.

இதைப்பற்றி நான் விரிவாகப் பேச விரும்பவில்லை. ஆனால், நெல்லை உற்பத்தி செய்பவர்களுக்கு, விவசாயிகளுக்குக் கட்டும்படியான விலை கிடைக்கவேண்டும். இதிலே சர்க்கார் பிடிப்பு கொஞ்சம் வேண்டும். இப்பொழுது என்னை எடுத்துக் கொண்டால் கூட 10 நாட்களுக்கு முன்பு அறுப்பு அறுத்திருந்தால் 50 மூட்டை நெல் விற்றிருந்தால் உபரியாக ரூ. 200 கிடைத்திருக்கும். வருஷா வருஷம் இம்மாதிரி நிலைமை ஏற்படுகிறது. நாங்கள் விற்கின்றபொழுது விலை குறைகிறது. பணக்காரர்கள் விற்கின்றபொழுது விலை கூடுகிறது. நெல் வியாபாரிகள் விற்கும் பொழுது விலை கூடுகிறது. நெல் உற்பத்தி செய்யக் கூடியவர்களுக்கு எப்படி கட்டுபடியான விலை கிடைக்கும்படிச் செய்யலாம் என்பதைப் பற்றி அரசு ஆலோசனை செய்யவேண்டும். அது சம்பந்தமாக நான் என்னுடைய ஆலோசனைகளைச் சொல்லத் தயாராக இருக்கிறேன். ஆனால் இப்பொழுதே சுடச்சுட ஆலோசனை சொல்லக்கூடிய நிலைமை இல்லை. அது அவ்வளவு எளிதான பிரச்னை அல்ல. விலைவாசிப் பிரச்னை மத்திய சர்க்காரின் பொறுப்பில் இருக்கிறது என்றாலும்கூட, மாநில சர்க்கார் ஓரளவுக்கு சில விஷயங்களில் நடவடிக்கை எடுக்கலாம். என்ன செய்தால் உற்பத்தி செய்யக்கூடியவர்களுக்கு நியாயமான விலை கிடைக்கும் என்று பார்த்து, ஓரளவுக்கு அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க முடியும். அந்த அடிப்படையிலே கவர்னர் பெருமானுடைய உரையானது அமைந்திருப்பது குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ் நாட்டிலே வறுமை குறைந்து ஏழை எளிய மக்கள் வசதிகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தமிழக அரசு முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கது. அந்த அடிப்படையில் எதிர்க்கட்சியினருடைய ஒத்துழைப்பு அரசுக்குக் கிடைக்கும்.

நான் ஒரு விஷயத்தைப்பற்றிக் கூற மறந்துவிட்டேன். இன்றைக்குத் தமிழ் நாட்டில் பல நிலவள வங்கிகள், கூட்டுறவு முறையில் இன்னும் பல்வேறு விதமான அமைப்புகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. மக்கள் மத்தியிலே ஒரு தவறான அபிப்பிராயம் நிலவி வருகிறது. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களே எல்லாவற்றிலும் அங்கம் வகிக்கிறார்கள் என்ற பேச்சு பரவலாக பேசப்படுகிறது. எனக்கு ஒன்றும் பதவி தேவையில்லை. அதற்காக நான் சொல்லவில்லை. தயவுசெய்து கேட்டுக் கொள்கிறேன். கூடுமானவரையில் மக்களுடைய பிரதிநிதித்துவம் இருக்கக்கூடிய வகையில் இந்த அமைப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும். கோடிக்கணக்கான பணத்தைக் கொண்டு போய் இந்த நிறுவனங்களில் போட்டு இருக்கிறோம். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு பிரதிநிதித்துவம் இருக்கவேண்டியது தான். ஆனால், அதே சமயத்தில் அந்த அமைப்புகளில் மற்றவர்களுக்கும், ஒன்றிரண்டு இடங்களாவது ஒதுக்கித் தர வேண்டும். இடித்துரைப்பதற்கு மற்றவர்கள் ஓரிரண்டு பேர்களாவது இருப்பது ஆளும் கட்சியினருக்கே நல்லது. இந்த நிறுவனங்கள் நல்ல முறையில் செயல்படுவதற்கு உதவிகரமாக இருக்கும். எங்கு பார்த்தாலும் ஆளும் கட்சியினரைச் சேர்ந்தவர்களையே வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற பேச்சுக்கு இடம் இருக்காது.

கடைசியாக ஒரே ஒரு விஷயத்தைப்பற்றிக் கூறி முடிக்கிறேன். இங்கே பேசும்பொழுது, சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டுமல்லவா? சங்கு குளிக்கும் தொழிலாளர்கள் 2,000 பேர்கள் இருக்கிறார்கள். ராமநாதபுரம் கடற்கரையில் மூச்சை அடக்கி சங்கை எடுத்துக்கொண்டு வந்து விற்கிறார்கள். ஒரு சங்கிற்கு 82 பைசா அல்லது ரூ. 1.10 கிடைக்கிறது. இதிலே இடைத்தரகாகவ, கண்டிராக்டர்கள் புகுந்து லட்சக்கணக்கான ரூபாய் சம்பாதிக்கிறார்கள். இந்த நிலைமை மாற்றப்படவேண்டும். 1952-57-ல் நான் சட்டமன்றத்தில் உறுப்பினராக இருந்தபொழுது பல சந்தர்ப்பங்களில் இதைப் பற்றி சொல்லியிருக்கிறேன். ஆனால், 1971-லும் அதே நிலைமை தான் இருக்கிறது. 2,000 பேர்கள் சங்கு குளிக்கும் தொழிலாளர்கள் இன்னும் முழுப பலனையும் அடையாத நிலையில் தான் இருக்கிறார்கள். பாரதிதாசன் குறிப்பிட்டிருக்கிறார்

"கடல் முத்தை மணிக்குலத்தைப் போய் எடுக்க அடக்கிய மூச்சு எவரின் மூச்சு?".

கடலில் மூழ்கி, மூச்சை அடக்கி சங்கை வெளியே எடுத்துக் கொண்டு வரும் இந்தத் தொழிலாளர்களிடமிருந்து வாங்குவதற்கு கண்டிராக்ட் முறை எதற்கு என்று தெரியவில்லை. இதை அவர்களிடமிருந்து இலாகாவே வாங்கலாம். அல்லது கோவாபரேடிவ் சொஸைடி மூலம் வாங்கலாம். இது சிசனல் வொர்க் தான். ஏதோ மூன்று நான்கு சங்குகளை எடுத்துக் கொண்டு வந்து ரூ. 3 சம்பாதிக்கிறார்கள். கண்டிராக்டர்கள் இந்த வியாபாரத்தில் நடுத்தரகர்களாக இருந்து சம்பாதித்துக் கொண்டு போகிறார்கள். இந்த முறையை மாற்றி 2,000 தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கும்படியான ஒரு வழியை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்தச் சங்குகுளி சம்பந்தமாகத் தொழிலாளர்களுடைய பிரச்னைகளை அரசு மிகுந்த அக்கறையோடு கவனித்து வருகிறது. அதிலே இருக்கிற சிக்கல்களைத் தீர்த்து, நண்பர் திரு. மணலி கந்தசாமி இங்கே எடுத்துக் காட்டியது போலவே விரைவில் நல்ல முடிவினை மேற்கொள்வோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மணலி சி. கந்தசாமி: நன்றி. இவ்வளவு நேரம் நான் பேச அனுமதித்ததற்காக தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, நான் சொல்லியவைகளையெல்லாம் நல்ல எண்ணத்தோடு தான் குறிப்பிட்டேன், அந்த வகையிலே தான் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும், எதிர்க்கட்சியினரும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, நான் என்னுடைய இருக்கையில் அமர்கிறேன். வணக்கம்.

திரு. பெ. மலைச்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மேன்மைமிகு ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது அவர்களுக்கு நன்றி தெரிவித்துப் பாராட்டுகின்ற முகத்தான் நானும் ஒரு சில வார்த்தைகள் கூற விழைகின்றேன்.

நம்முடைய மேன்மைமிகு ஆளுநர் அவர்கள் தமிழகத்தில் நடந்து முடிந்த தேர்தல் மக்கள் ஆட்சித் தத்துவத்தினின்றும் சிறிதும் கூடப் பிறழாமல் நடைபெற்றிருக்கிறது என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னார்கள். மக்கள் ஆட்சித் தத்துவம் பேணி காப்பாற்றப்பட்டதற்கு யார் காரணம் என்பதை

மாண்புமிகு காங்கிரஸ்காரர்கள் அனைவரும் நன்றாக உணர வேண்டும். ஆளுகின்ற கட்சியினராக தி.மு.க.வும், எதிர்க் கட்சியினராக பல்வேறுபட்ட சிறிய கட்சியினராக இருந்தும், நடந்து முடிந்த தேர்தலில் எங்கு பார்த்தாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தாக்கப்பட்டிருக்கிறார்கள். தி.மு.க. தொண்டர்கள் பலியாகியிருக்கிறார்கள், தி.மு.க. வினரைச் சேர்ந்தவர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டிருக்கின்றன என்று ஆளும் கட்சியிலிருந்து நாங்கள் பரிதாபமாகச் சொல்கின்ற நிலைமைக்குக் காரணம், எங்களுடைய பண்பாடு என்பதை மறந்துவிடக் கூடாது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தோல்வியை அணைத்துக் கொண்ட காங்கிரஸ்காரர்கள் இரண்டு முறை தோல்வியைக் கண்ட காரணத்தினால், இன்று அவர்கள் மக்களாலே ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிற சூழ்நிலையில் இருக்கிறார்கள். பெற்றெடுத்த குழந்தையின் தாயும் தந்தையும் கைகளில் அதை வைத்துக் கொண்டு, குழந்தைக்கு என்ன பெயரிடலாம் என்று நினைக்கிறபோது, அவர்களிடையே வாக்குவாதம் வரும். தந்தை சொல்வார் 'எனக்கு பிடித்த பெயரைத் தான் வைக்க வேண்டும்' என்று. தாய் சொல்வார் 'அப்படி இருக்கக் கூடாது, இப்படித்தான் இருக்க வேண்டும்' என்று. இறுதியிலே தந்தையின் பெயரும், தாயின் பெயரும் வருகிற அளவுக்கு அந்தக் குழந்தைக்குப் பெயரிட்டு மகிழ்வார்கள். ஆனால், பாவம், காங்கிரஸ் காரர்களுக்கு எந்தப் பெயரை வைக்கலாம் என்பதில் 20-ம் நூற்றாண்டில் பெரிய சிக்கல் உருவாகியிருக்கிறது. அந்த சிக்கலுக்குக் காரணம் யார்? எத்தனையோ ஆண்டு கால வரலாற்றைப் பெற்றிருக்கிற காங்கிரஸ், எத்தனையோ அரசியல் தலைவர்களை யெல்லாம் உருவாக்கிய காங்கிரசின் பெயருக்கே இன்று ஆபத்து வந்திருக்கிறதே என்பதை தயவு செய்து இங்கே இருக்கிற காங்கிரஸ் நண்பர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். காங்கிரஸ் பெயரைப் பொறுத்து மட்டுமா சிக்கல் இருக்கிறது? இத்தனை ஆண்டு காலமாக அவர்களைத் தாங்கி வந்த காளைச் சின்னமே அவர்களைக் கைவிட்டுவிட்டதே, அதைத் தயவு செய்து மறந்துவிடாதீர்கள். 'இத்தனை ஆண்டு காலமாக அரசியல் வரலாற்றிலே பங்கு கொண்ட காங்கிரஸ் கட்சிக்கு தான் தாங்கியிருந்த சின்னத்தையும் இழந்து தவிக்கின்ற நிலைமைதான் இங்கே இருக்கிறது, பாவம்.

இதற்கெல்லாம் காரணம் என்ன? முன்னேற்றக் கழகத்தை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று இவர்களெல்லாம் எண்ணுகிறார்கள். டெல்லியிலே இந்திரா காங்கிரஸோடு சேர்ந்திருக்கும், முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டில் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் சூழ்நிலை இருக்கிறது. வேறு வழி இல்லாதவர்கள், இந்திரா அம்மையார் தூரத்தினாலும், எங்கெங்கே விரட்டினாலும், எப்படியாவது தமிழ் நாட்டில் முன்னேற்றக் கழகத்தை ஒழித்தாக வேண்டும் என்ற நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள். உண்மையிலேயே அவர்களைப் பார்த்து நான் பரிதாபப்படுகிறேன். தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தையே மக்கள் நம்பியிருக்கிறார்கள்.

நம்முடைய திரு. கே. எம். சுப்பிரமணியம் சொன்னார்கள், மருத்துவ மனைக்குச் சென்றிருக்கும் நோயாளி போல், நிச்சயம் திரும்பி வருவார்கள் என்று. நான் சொல்லுவேன், இந்த நோயாளி, காங்கிரஸ் நோயாளி, மக்கள் மன்றத்திலிருந்து, நிச்சயமாகத் திரும்பவும் கோட்டை வீட்டிற்குத் திரும்பி

வரமாட்டான் என்று சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் என்றால், நோயாளிக்கு இதயம் கெட்டு விட்டது. ரத்த ஓட்டம் இல்லை, இதயத் துடிப்பு கிடையாது உணர்ச்சியில்லை. எனவே, மீண்டும் இந்தக் கோட்டை வீட்டிற்கு காங்கிரஸ் நோயாளி திரும்பி வர மாட்டான் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

வன்முறையைப் பற்றிச் சொன்னார்கள். ஒரு கதையைச் சொல்ல விரும்புகிறேன். பாம்பு ஒன்று, ஒரு சாமியாரிடத்தில் ஆசி கேட்கப் போனதாம். சாமியார் பாம்பைப் பார்த்து, 'யாரையும் கடிக்காதே; உலகத்தில் மக்களுக்கு நல்லதை நீ செய்' என்று புத்தி சொல்லி அனுப்பினாராம். பாம்பு வெளியே சென்று வீதியிலே சென்று விளையாடியது. வீடு வீடாகச் சென்றது. முதலிலே மக்கள் பயந்தார்கள். ஆனால் குழந்தைகளும், மற்றவர்களும், ஒரு வாரம், பத்து நாட்களில், இந்தப் பாம்பு கடிக்காது என்கிற எண்ணங்கொண்டு, அதோடு விளையாட ஆரம்பித்தார்கள். சிறுவர்கள் அதன் வாலைப் பிடித்துச் சுழற்றினார்கள். பாம்பு அப்பவும் கடிக்கவில்லை. சிறுவர்கள் பக்கத்திலிருந்து கற்களை எடுத்து பாம்பின் தலையில் போட்டார்கள். பாம்புக்கு வலி தாங்க முடியவில்லை. சாமியாரிடத்தில் திரும்ப ஓடிற்று. சாமியாரிடம் சொன்னது, "நீங்கள் கடிக்கக் கூடாது என்று சொன்னீர்கள், நான் கடிக்கவில்லை. பெரியவர்களும் சின்னக் குழந்தைகளும் கல்லை விட்டெறிகிறார்கள், என் உடம்பும் உயிரும் என்ன ஆகும்?" என்று கேட்டது. சாமியார் "என்ன சொன்னேன்? கடிக்கக் கூடாது என்றுதானே சொன்னேன், நீ சீறக்கூடாது என்று சொல்லவில்லையே" என்றாராம். பாம்பைப்போல நாங்கள் கலைஞரிடம் கேட்கிறோம். காங்கிரஸ்காரர்கள் கொடுமைப்படுத்துகிறார்கள், என்ன செய்ய வேண்டும் என்று கேட்டபோது, சாமியாரைப் போல் நீங்கள் யாரையும் தாக்கக் கூடாது என்று சொன்னார்கள். அப்படி நாங்கள் கடிக்காத காரணத்தினால், தொல்லை அதிகமாகிவிட்டிருக்கிறது. எங்கள் கலைஞரைக் கேட்கிறோம், தமிழக ஆட்சியைக் கேட்கிறோம், சாமியார் சீறுவதற்கு உரிமை தந்தார் அல்லவா அதுபோல், எங்களுக்கும் சீறுவதற்கு உரிமை தரவேண்டும் என்று கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறோம், காரணம் பேரறிஞர் வளர்த்த பண்பாடு, பேரறிஞர் குறிப்பிட்ட கண்ணியம், கட்டுப்பாடு, கடமை என்கிற கோட்பாடுகளால் கட்டுப்பட்டிருக்கிற எங்களை காங்கிரஸ்காரர்கள், முன்னேற்றக் கழகத்தை பலிக்கடாவாக ஆக்கலாம் என்று நினைக்கிறார்கள் போலும்.

மதுவிலக்கைப் பொறுத்தவரையில், கலைஞர் புலியாக இருக்கிறார் என்று சொன்னார்கள். இருந்தாலும், புலியிடமிருந்து புள்ளிமானைக் காப்பாற்ற வேண்டும். கதைகளில் புலிக்கு பக்கத்தில் மான் இருக்கலாம். நடைமுறையில் அப்படி இருப்பது கஷ்டம். புள்ளிமானைப் பாதுகாக்க வேண்டிய கடமை இருக்கிறது. அல்லது புலியிருக்கும் இடத்தில் இன்னொரு புலியை வைக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சொத்துக்களுக்கு வரம்பு கட்டுவது பற்றிச் சிந்திக்க வேண்டும். உழவருக்கு நில உச்ச வரம்பு கட்டியிருக்கிறோம். இதை மனிதாபிமானத்தின் அடிப்படையில் சிந்திக்க வேண்டும். பஸ் முதலாளிகள் 50, 100 என்று வைத்திருக்கிறார்கள். ஆலை முதலாளிகளும் அப்படியே. பங்களாக்கள் 5,000, 2,000 என்று இருக்கிறது. உழுகின்ற விவசாயிகளுக்கு மட்டுந்தான் 15 ஏக்கரா

மாண்புமிகு காங்கிரஸ்காரர்கள் அனைவரும் நன்கு உணர வேண்டும். ஆளுகின்ற கட்சியாக தி.மு.கவும், எதிர்க் கட்சியாக பங்கேற்பட்ட சிறிய கட்சியினராக இருந்தாலும், நடந்து முடிந்த தேர்தலில் எங்கு பார்த்தாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தாக்கப்பட்டிருக்கிறார்கள். தி.மு.க. தொண்டர்கள் பலியாகியிருக்கிறார்கள், தி.மு.க. வினைச் சேர்ந்தவர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டிருக்கின்றன என்று ஆளும் கட்சியிலிருந்து நாங்கள் பரிதாபகரமாகச் சொல்கின்ற நிலைமைக்குக் காரணம், எங்களுடைய பண்பாடு என்பதை மறந்துவிடக் கூடாது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலையீடு)

தோல்வியை அணைத்துக் கொண்ட காங்கிரஸ்காரர்கள் இரண்டு முறை தோல்வியைக் கண்ட காரணத்தினால், இன்று அவர்கள் மக்களாலே ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்ற சூழ்நிலையில் இருக்கிறார்கள். பெற்றெடுத்த குழந்தையின் தாயும் தந்தையும் கைகளில் அதை வைத்துக் கொண்டு, குழந்தைக்கு என்ன பெயர் வைப்பது என்று நினைக்கும்போது, அவர்களிடையே வாக்குவாதம் வரும். தந்தை சொல்வார் 'எனக்கு பிடித்த பெயரைத் தான் வைக்க வேண்டும்' என்று. தாய் சொல்வார் 'அப்படி இருக்கக் கூடாது, இப்படித்தான் இருக்க வேண்டும்' என்று. இறுதியிலே தந்தையின் பெயரும், தாயின் பெயரும் வருகிற முறைக்கு அந்தக் குழந்தைக்குப் பெயரிட்டு மகிழ்வார்கள். ஆனால், பாவம், காங்கிரஸ் காரர்களுக்கு அந்தப் பெயரை வைக்கின்ற பொழுதில் 20-ம் நூற்றாண்டில் பெரிய சிக்கல் உருவாகியிருக்கிறது. அந்த சிக்கலுக்குக் காரணம் யார்? எத்தனையோ ஆண்டு கால வரலாற்றைப் பெற்றிருக்கிற காங்கிரஸ், எத்தனையோ அரசியல் தலைவர்களை எல்லாம் உருவாக்கிய காங்கிரசின் பெயருக்கே இன்று ஆபத்து வந்திருக்கிறது என்பதை தயவு செய்து இங்கே இருக்கின்ற காங்கிரஸ் நண்பர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். காங்கிரஸ் பெயரைப் பொறுத்து மட்டுமா சிக்கல் இருக்கிறது? இத்தனை ஆண்டு காலமாக அவர்களைத் தாங்கி வந்த காளைச் சின்னமே அவர்களைக் கைவிட்டுவிட்டதே, அதைத் தயவு செய்து மறந்துவிடாதீர்கள். இத்தனை ஆண்டு காலமாக அரசியல் வரலாற்றிலே பங்கு கொண்ட காங்கிரஸ் கட்சிக்கு தான் தாங்கியிருந்த சின்னத்தையும் இழந்து தவிக்கின்ற நிலைமைதான் இங்கே இருக்கிறது, பாவம்.

இதற்கெல்லாம் காரணம் என்ன? முன்னேற்றக் கழகத்தை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று இவர்களெல்லாம் எண்ணுகிறார்கள் டெல்லியிலே இந்திரா காங்கிரஸோடு சேர்ந்திருக்கும், முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டில் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் சூழ்நிலை இருக்கிறது. வேறு வழி இல்லாதவர்கள், இந்திரா அம்மையார் ஆதரித்தாலும், எங்கெங்கே விரட்டினாலும், எப்படியாவது தமிழ் நாட்டில் முன்னேற்றக் கழகத்தை ஒழித்தாக வேண்டும் என்ற நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள். உண்மையிலேயே அவர்களைப் பார்த்து நான் பரிதாபப்படுகிறேன். தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தையே மக்கள் நம்பியிருக்கிறார்கள்.

நம்முடைய திரு. கே. எம். சுப்பிரமணியம் சொன்னார்கள், மருத்துவ மனைக்குச் சென்றிருக்கும் நோயாளி போல், நிச்சயம் திரும்பி வருவார்கள் என்று. நான் சொல்லுவேன், இந்த நோயாளி, காங்கிரஸ் நோயாளி, மக்கள் மன்றத்திலிருந்து, நிச்சயமாகத் திரும்பவும் கோட்டை வீட்டிற்குத் திரும்பி

வரமாட்டான் என்று சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் என்றால், நோயாளிக்கு இதயம் கெட்டு விட்டது. ரத்த ஓட்டம் இல்லை, இதயத் துடிப்பு கிடையாது. உணர்ச்சியில்லை. எனவே மீண்டும் இந்தக் கோட்டை வீட்டிற்கு காங்கிரஸ் நோயாளி திரும்பி வர மாட்டான் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

வன்முறையைப் பற்றிச் சொன்னார்கள். ஒரு கதையைச் சொல்ல விரும்புகிறேன். பாம்பு ஒன்று, ஒரு சாமியாரிடத்தில் ஆசி கேட்கப் போனதாம். சாமியார் பாம்பைப் பார்த்து, 'யாரையும் நீ கடிக்காதே; உலகத்தில் மக்களுக்கு நல்லதை நடத்து செல்' என்று அறிவுரை கூறி அனுப்பினார். பாம்பு சாமியிடம் சென்று விடைபெற்றது. விடைபெற்றுச் சென்றது. வழியிலே மக்கள் பார்த்தார்கள். ஆனால் குழந்தைகளும், மற்றவர்களும், ஒரு வாரம், பத்து நாட்களில், இந்தப் பாம்பு கடிக்காது என்கிற எண்ணம் கொண்டு, அடிக்கத் தொடங்கினார்கள். சிறுவர்கள் அதன் வாலைப் பிடித்து இழுத்தார்கள். பாம்பு ஒன்றையும் கடிக்கவில்லை. சிறுவர்கள் பக்கத்திலிருந்து கற்களை எடுத்து பாம்பின் தலையில் போட்டார்கள். பாம்புக்கு வலி தாங்க முடியவில்லை. சாமியாரிடத்தில் திரும்பப் போய்ச் சாமியாரிடம் சொன்னது, "நீங்கள் கடிக்கக் கூடாது என்று சொன்னீர்கள். நான் கடிக்கவில்லை. பெரியவர்களும், சின்னக் குழந்தைகளும் கல்லை விட்டெறிகிறார்கள், என் உடம்பும் உயிரும் என்ன ஆகும்?" என்று கேட்டது. சாமியார் "என்ன சொன்னேன்? கடிக்கக் கூடாது என்றுதானே சொன்னேன், நீ சீறக் கூடாது என்று சொல்லவில்லையே" என்றாராம். பாம்பைப்போல நாங்கள் மக்களிடம் கேட்கிறோம். காங்கிரஸ்காரர்கள் கொடுமைப்படுத்துகிறார்கள், என்ன செய்ய வேண்டும் என்று கேட்டபோது, சாமியாரைப் போல் நீங்கள் யாரையும் தாக்கக் கூடாது என்று சொன்னீர்கள். அப்படி நாங்கள் கடிக்காத காரணத்தினால், தொல்லை அதிகமாகிவிட்டிருக்கிறது. எங்கள் கலைஞரைக் கேட்கிறோம், தமிழக ஆட்சியைக் கேட்கிறோம், சாமியார் சொன்னதைப் போல, சீறுவதற்காவது அனுமதி தரவேண்டும் என்று கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறோம், காரணம் பேரறிஞர் வகுத்த பண்பாடு, பேரறிஞர் குறிப்பிட்ட கண்ணியம், கட்டுப்பாடு, கடமை என்கிற கோட்பாடுகளைக் கட்டுப்பட்டிருக்கிற எங்களை காங்கிரஸ்காரர்கள், முன்னேற்றக் கழகத்தை பலிக்கடாவாக ஆக்கலாம் என்று நினைக்கிறார்கள் போலும்.

மதுவிலக்கைப் பொறுத்த வரையில், ஜீவன் பலவீனமாக இருக்கிறது என்று சொன்னார்கள். இருந்தாலும், புலியிடமிருந்து புள்ளிமானைக் காப்பாற்ற வேண்டும். பக்கத்தில் புலிக்கு நடுவில் மான் இருக்கலாம். நடைமுறையில் அப்படி இருப்பது கஷ்டம். புள்ளிமானைப் பாதுகாக்க வேண்டிய கடமை இருக்கிறது. அல்லது புலியிருக்கும் இடத்தில் இன்னொரு புலியை வைக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சொத்துக்களுக்கு வரம்பு கட்டுவது பற்றிச் சிந்திக்க வேண்டும். உழவுக்கு நிலத்தின் வரம்பு கட்டியிருக்கிறோம். இதை மனிதாபிமானத்தின் அடிப்படையில் சிந்திக்க வேண்டும். பல முதலாளிகள் 50, 100 என்று வைத்திருக்கிறார்கள். ஆலை முதலாளிகளும் அப்படியே. பங்களாக்கள் 5,000, 2,000 என்று இருக்கிறது. உழுகின்ற விவசாயிகளுக்கு மட்டும்தான் 15 ஏக்கரா

என்றிருக்கிறது. இது சமுதாயத்திற்கு ஏற்றதல்ல என்பதைத் தமிழக அரசு சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதை இந்தியா பூராவிலும் ஒரு சமுதாயப் பிரச்சினையாகக் கருத வேண்டும்.

உழவைப் பொறுத்த வரையில், உணவுப் பொருள்களின் விலைகள் குறைய வேண்டும் என்கிறார்கள். அரிசி விலை, பருப்பு விலை, எண்ணெய் விலை, இப்படி உணவுப் பொருள்களின் விலைகள் குறைய வேண்டும் என்பதில் அக்கறை செலுத்துகிறோம். அதே நேரத்தில், தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொருள்களின் விலைகளும் குறைய வேண்டும் என்கிற ஆர்வம் உருவாக வேண்டும். ஒரு மூட்டை நெல் ரூ. 20 என்றால் அதை ரூ. 20-க்கு விற்று அதைக் கொண்டு கடைக்குச் சென்று சர்க்கரைக் கட்டி, மண்ணெண்ணெய், சேலை, இப்படி வாங்க வேண்டியிருக்கிறது. அப்படி வாங்கும்போது, விவசாயப் பொருள்களின் விலைக்கும், தொழிற்சாலைப் பொருள்களின் விலைக்கும் எந்த வகை தொடர்பு இருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கொழுவின் விலை, உரத்தின் விலை, சேலையின் விலை, சோப்பின் விலை, பீப்பின் விலை, இவையெல்லாம் குறைந்தாக வேண்டும். ஆலைகளில் உற்பத்தியாகும் பொருள்களின் விலைகள் விவசாயப் பொருள்களின் விலைக்குச் சரிசமமாக ஆகவேண்டும். இதை நாம் சமுதாய ரீதியில் பார்க்க வேண்டும். உண்மையான நிலைமையைப் புரிந்து கொள்ள வேண்டும்.

விலைவாசிப் பிரச்சினை தமிழகத்திற்கு மட்டுமல்ல, அது இந்தியாவிற்கும், உலகத்திற்கும் பொதுவான பிரச்சினை. காற்றில் அறுந்துபோன பட்டம் போல் சுற்றிச் சுற்றிச் சுழல்கிறது. அதற்கு முன்னேற்றக் கழகம் காரணமா? காங்கிரஸ் கட்சி காரணமா? என்பது முக்கியமல்ல. அது ஒரு சமுதாயப் பிரச்சினை. மக்களுடைய அன்றாட வாழ்க்கைப் பிரச்சினை. ரிசர்வ் பாங்கையும், ஆணைக் குழுவையும், திட்டக் குழுவையும், இந்திய அமைச்சரவையும், மாநில அமைச்சர்களும் சேர்ந்து கலந்து பேசி அதற்கான முடிவுகளை எடுக்க வேண்டும். ஒவ்வொரு மாநிலத்தின் சட்டமன்றங்களிலும் பட்ஜெட் தயாரிக்கப்பட்டு, தொகைகள் ஒதுக்கப்பட்டு, வாக்கெடுப்பு எடுக்கப்படுகிறது. ஆனால் நிரந்தரமான முடிவை மனிதாபிமானத்தின் அடிப்படையில், மக்கள் ஆட்சித் தத்துவத்தின் அடிப்படையில், அதுவும் நல்ல முறையில், கட்சிக் கொள்கைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, விலைவாசிப் பிரச்சினையை, மக்களுடைய அன்றாட வாழ்க்கைப் பிரச்சினையாகக் கருதி, அதில் நல்ல தீர்வு காண வேண்டும். அதைப் பொதுப் பிரச்சினையாகக் கருத வேண்டும். அப்படி அணுகுவதன் மூலம், உலகத்திலேயே ஒரு புதுமையான சமுதாயத்தை உருவாக்க முடியும் என்பதை இந்த ஆளுநர் உரைமீது பேசும்போது சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து வேலை வாய்ப்புக்கள் பற்றிக் குறிப்பிட்டார்கள். முன்னேற்றக் கழகம் சொல்லுகிறது. காங்கிரஸ் கட்சியும் வேலை வாய்ப்பு இல்லை என்கிறது. முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில், கடந்த நான்கு ஆண்டுக் காலத்தில், ஆயிரக்கணக்கான ஆசிரியர்களுக்கு, முழுமையாக உதவிகள் செய்யாவிட்டாலும், நான்கு மாதங்களுக்கு முன்பாக, ஆசிரியர்களுக்கு உதவியளிக்க வேண்டும் என்ற முறையில், பி.டி. ஆசிரியப் பெருமக்களுக்கும், உதவிகளைக் கொடுத்திருக்கிறது. பொறியியல் துறையிலும், முழுமையான சம்பளங்கள் கொடுக்க முடியவில்லை என்றாலும், இயன்ற அளவில், மனிதாபிமானத்தோடு,

திராவிட முன்னேற்றக் கழகம் அரசியல் லாபம் கருதாமல், இந்த நாட்டில் படித்தவர்களுக்கு வேலையில்லாப் பிரச்சினையில் தீர்வு காண வேண்டும் என்ற முறையில், கல்லூரி அளவில் நிர்வாக முறைப்படி, ஒவ்வொருவருக்கும் உதவிகள் அளித்து பட்டம் பெற்றவர்களுக்கும் வேலைத் தொழில் தரும் திட்டங்கள் உருவாகத் தக்க வகையில் செயல்பட்டிருக்கிறது.

தொழில் வளங்களைப் பொறுத்த வரையில், நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் அதிகமான அளவுக்கு முனைப்புக் கொண்டிருக்கிறார்கள். அவர் வெளி மாநிலங்களோடு தொடர்பு கொண்டு, அந்தந்த மாநிலங்களில் எல்லாம் எப்படி இயங்குகிறது என்பதை எல்லாம் நேரில் கண்டறிந்து, நம்முடைய தென் மாவட்டங்களில் அத்தகைய நிலைமையை உருவாக்குவதற்கு முயல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக சம்பளப் பிரச்சினை. சம்பளம் என்பது மனிதனுடைய உழைப்புக்கேற்ற ஊதியம் என்ற அடிப்படையில் பார்த்தால், மாநில அரசிலே பணியாற்றுபவர்களுக்கு ஒரு விதம், மத்திய அரசிலே பணியாற்றுபவர்களுக்கு வேறு ஒரு விதம் என்ற பாகுபாடு இருப்பது மனித சமுதாயத்திற்கே கேடாகும். ஒரு கணவனும் மனைவியும் இருக்கிறார்கள் என்றால், கணவன் மாநில அரசிலே பணியாற்றி, மனைவி மத்திய அரசிலே பணியாற்றி, கணவனைவிட மனைவி அதிகமான சம்பளத்தைப் பெறுகிறாள் என்றால், தன்னைவிட தன்னுடைய கணவன் குறைவான சம்பளத்தைத்தானே வாங்குகிறான் என்றுதானே எண்ணுவாள். அந்த நேரத்திலே இருபாலாருக்கிடையே வேற்றுமை உண்டாகி, குடும்பத்திலே பற்றும் பாசமும் குறைந்து இல்லாமல் போய்விடும். இதை மத்திய அரசாங்கம் தீவிரமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒருவன் மாநில அரசிலே பணியாற்றினாலும் சரி, அல்லது மத்திய அரசிலே ரயில்வேயிலோ, ஆகாய விமானப் பணியகத்திலோ, அல்லது தபால் தந்தி அலுவலகத்திலோ பணியாற்றினாலும், கடல் துறையிலோ மற்ற எந்தத் துறையில் பணியாற்றினாலும் இந்தியாவில் இருக்கிற அத்தனை அதிகாரிகளுக்கும் ஒரே விதமான, ஒரே சம்பளத்தை அளிக்கும்படியான நிலைமையை உண்டாக்கும் வகையில் இந்திய அரசாங்கம் ஒரு சீரான கொள்கையை எடுத்துக் கொள்ள வேண்டும். சாதாரணமாக ஒருவனுக்குத் திருமணத்திற்காக பெண் கேட்கும் போது "பையன் என்ன வேலை செய்கிறான்? சர்வீஸிலா, என்ன சம்பளம், சென்ட்ரல் கவர்ன்மெண்டா, அல்லது ஸ்டேட் கவர்ன்மெண்டா?" என்றுதான் கேட்கிறார்கள். இது அன்றாடப் பிரச்சினையாகும். ஆகவே, ஒரே மாதிரியான சம்பளத்தை வழங்க ஒரு நல்ல முழுமையான தீர்வு காண வேண்டும். மத்திய அரசாங்க ஊழியர்கள் பெறுகின்ற சம்பளத்திற்கு ஈடாக மாநில அரசு ஊழியர்களுக்குச் சம்பளத்தை உயர்த்தியோ, மற்ற விதமாகவோ இதைச் சீராக்க வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

இன்றையதினம் மத்தியில் இருக்கும் திருமதி இந்திரா காந்தியாருக்கும் தம்முடைய அரசுக்கும் இருக்கும் குறைபாடுகளைக் கண்டு, அதற்கு நாங்கள் ... வேண்டுமென்று காங்கிரஸ்காரர்கள் நினைப்பது கற்பித்துப் பிரித்தாலும் முற்றிலும் நடவாத காரியம். அப்படி ஒரு வேளை இந்திரா காந்தியம்மையார் இந்த அரசுக்கு எதிராக மாறிவிட்டாலும் கூட—இது அரசியல் காலத்தில் ஆச்சரியமானது இல்லை—1976-ல் இந்திரா காங்கிரஸ் எங்களை எதிர்த்தாலும் கூட அதற்கும் திராவிட முன்னேற்றக் கழகம் தயாராக இருக்கிறது என்பதை

[illegible] [1971 மார்ச் 30

இந்த மன்றத்திலே [illegible] அமர்கிறேன், வணக்கம்.

திரு. வ. ஆர். பெருமாள்: [illegible] கருத்துக்களைச் சொன்னார்கள். 1967-ம் ஆண்டு [illegible]

1967 தேர்தலில் நான் 1,200 ஓட்டு வித்தியாசத்தில் [illegible] ஆனால் 1971-ம் ஆண்டு நடந்த தேர்தலில் 9,324 ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றேன். [illegible] என்று வைத்துக் கொண்டால், அவர்கள் வெற்றி பெற்ற [illegible] 15 இடங்களிலும் [illegible] 6 [illegible]களிலும் அந்த

1971 மார்ச் 30] [திரு. வ. ஆர். பெருமாள்]

[illegible]

[illegible]

1967 [illegible] 1967-ம் ஆண்டு [illegible] இருந்தும் இவர்கள் எல்லாம் அங்கே [illegible] எவ்வளவு கொடுமை அந்த மாவட்டத்தில் [illegible] கழகத்தின் ஆட்சி [illegible] பேசினார்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் [illegible] இங்கே [illegible] யாக இருக்கிறது என்றும் அங்கே [illegible]

பிரயோகம்—அதிகாரப் பிரயோகம் செய்யாமல் கட்சிகள் என்பதாக எல்லாம் சொன்னார்கள். பட்டப் பகலிலே கடவுள், கல்லையும் பட்டி போட்டு காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கட்சிகளை அதை இன்னும் மக்கள் மறக்கவில்லை.

நடந்த தேர்தலில் நான் இருந்ததான் சொன்னேன். கலைஞர் ஆட்சி வேண்டுமா, காமராசர் ஆட்சி வேண்டுமா? கலைஞர் ஆட்சி வேண்டுமென்றால் எனக்கு வோட்டுப் போடுங்கள். காமராசர் கேட்டார்; திருவாளர் முத்துராமலிங்கத் தேவர் நாங்கள் அந்தக் காமராஜ் ஆட்சியை விரும்புகிறோம் என்பதை சிந்தித்துப் பார்க்க வாக்காளர்கள் என்று கேட்டேன். இதற்கு முன் தேர்தலில் நான் 1,200 வோட்டு வித்தியாசத்தில் ஜெயித்தேன் என்றால் இந்தத் தேர்தலில் 9,324 வோட்டு வித்தியாசத்தில் ஜெயித்திருக்கிறேன். நான் மட்டுமல்ல. பெரும்பாலான இடங்களில் 5,000-க்கும் அதிகமாக, 9,000-க்கு அதிகமாக, 10,000-க்கும் அதிகமாக வோட்டுக்கள் பெற்று பலர் ஜெயித்திருக்கிறார்கள். இதை நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சியினரும், அவர்களோடு தோழமை கொண்டுள்ள சுதந்திரக் கட்சியினரும் மன நிறைவோடு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நான்காண்டு ஆட்சிக்காலத்தில் ஜனங்கள் விழிப்படைந்துவிட்டார்கள். ஜனநாயக ஆட்சியைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள். இனிமேல் செய்ய வேண்டிய காரியங்கள் நமக்கு ஏராளமாக இருக்கின்றன. மக்கள் நிறையத் தேவைகளை எதிர்பார்க்கிறார்கள். மக்களுடைய தேவைகளை எல்லாம் நாம் பூர்த்தி செய்தாக வேண்டும்.

நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர். நான் வருகின்ற இராமநாதபுரம் மாவட்டம்-தென்பாண்டி மண்டலத்தில் மிக அதிகமாக பிற்பட்ட சமூகத்தவர்கள் வாழ்கிறார்கள். பிற்பட்டவர்களின் நலனுக்காக அதற்கென்றே தனி இலாக்கா ஏற்படுத்தியிருப்பது பாராட்டத் தக்கதாகும். ஏராளமான பணம் ஒதுக்கி பல காரியங்கள் செய்யப்பட்டு வருவதை வரவேற்கிறேன். மேலும் பல காரியங்களைச் செய்யவேண்டும்.

1971 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதிக்குள் தமிழகத்தில் உள்ள அத்தனை கிராமங்களுக்கும் மின் இணைப்பு கொடுக்கப்படும் என்று இந்த அரசு அறிவித்தது. அறிவித்தபடி மின்சாரம் வேலைகளும் நடைபெறுவதை மக்கள் பார்க்கிறார்கள். இந்த அளவில் கடந்த நான்காண்டுகளுக்குள்ளாக—இருபதாண்டு காங்கிரஸ் ஆட்சியில் காங்கிரஸ்காரர்களால் செய்ய முடியாத—செய்யத் தவறிய பல காரியங்களை இவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்தே மக்கள் பெரும்பான்மையாக வாக்களித்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்து இந்தத் தேர்தல் முடிவை ஜனநாயக முறைப்படி எல்லாக் கட்சியினரும் மன நிறைவோடு ஏற்றுக்கொள்ளவேண்டும்.

அதற்கடுத்தபடியாக நமது முதல்வர் அவர்கள் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தபோதும் நான் பலமுறை எடுத்துக் கூறியிருக்கிறேன். அந்தப் பகுதியில் குண்டாறு நதி என்ற நதி ஓடுகிறது. இருபது ஆண்டுகால காங்கிரஸ் ஆட்சியில் அதைச் செப்பனிடுவதற்கு யாரும் முயற்சி எடுக்கப்படவில்லை. மாறாக, மதுரை ஓரமாக ஓடும் அந்த நதியைத் தூர்த்து பங்களாக்களையே எழுப்பியிருக்கிறார்கள். இப்போது அந்த நதியைச் சீர்மைப்படுத்தி, தூர்

எடுத்து ஒழுங்குபடுத்தினால் 50 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசனவசதி பெறும். செய்வதற்கு நீர்ப்பாசன வசதி ஏற்படும். எவ்வளவோ சிரமங்கள் இருந்தாலும் முதுகுளத்தூர், பரமக்குடி போன்ற தாலுக்காக்களை இணைக்கிற இந்த நதித் திட்டத்தை செயல்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று மிக்க பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் மேட்டுக்குடியில் பிறந்து வந்தவர்கள் அல்ல. மிகச் சாதாரணமான, ஏழை எளிய குடும்பத்தில் வந்துள்ளவர்கள். நானும் கூட சாதாரண குடும்பத்தில் இருந்துதான் வந்துள்ளேன். என்போல நிறையப் பேர்கள் இருக்கிறார்கள். எங்களுக்கு எல்லாம் இன்றையதினம் கொடுக்கப்படுகிற ரூ. 250 சம்பளம் போதாது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதை எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் கொடுத்து வைக்கவேண்டும். எவ்வளவு என்று நான் சொல்ல முடியாவிட்டாலும் குறைந்த அளவு ரூ. 400-க்குக் குறையாமல் இருப்பது நல்லது—சிலர் ரூ. 300 தர கொடுத்தால் போதும் என்கிறார்கள்—என்னைப் பொறுத்த அளவில் ரூ. 400-க்குக் குறையாமலாவது கருணைகூர்ந்து முதல் அமைச்சர் அவர்கள் இதைக் கவனித்துப் பார்க்க வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாநிலங்களுக்குள்ளே ஓடுகிற ரயில்களில் பயணம் செய்ய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பாஸ் வழங்க மத்திய சர்க்காரின் அனுமதி பெற்றே, கோருவதையோ ஏற்பாடு செய்ய அரசு முன்வரவேண்டும்.

பெரும்பாலான உறுப்பினர்கள் ஏழைகளாகவே இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் பணியைச் செவ்வனே செய்ய அவர்களுடைய சம்பளத்தை ரூ. 400 என்று அதிகரிப்பதோடு உயர்த்தி—ரயிலிலே பாஸ் வழங்கவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்லி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. வை. பாலசுந்தரம்: பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இந்த அவையிலே நான் என்னுடைய கன்னிப் பேச்சைத் துவங்குவதற்கு முன்னதாக எங்கள் கட்சியை நெஞ்சத்தில் நிற்கத் தாங்கிக் கொண்டிருக்கும் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு எனது அஞ்சலியைச் செலுத்திவிட்டு நாட்டுமக்களை உடைமைக்கும், உயிருக்கும் பாதுகாவலராக தமிழ் சமுதாயத்தின் தலைமையைத் தாங்கி வழி நடத்திச் செல்கிற கலைஞர் பெருந்தகைக்கு என் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைக் கூறி என்னுடைய உரையைத் துவங்கலாம் என்று கருதுகிறேன்.

இன்றையதினம் நம்முடைய ஆளுநர் அவர்கள் தம்முடைய உரையில் திறமை வாய்ந்த இந்த அரசாங்கம் எதிர்காலத்தில் நல்ல வளமான திட்டங்களை எல்லாம் வகுத்து உருவாக்க இருக்கிறது என்பதை படம் பிடித்துக் காட்டுகிற கண்ணாடியைப்போல தெள்ளத் தெளியக் காட்டியிருக்கிறார்கள்.

இன்றையதினம் அவர் தம்முடைய உரையில் தேர்தலைப் பற்றி பெருமையாகச் சொல்கிற நேரத்தில் அவருக்கே உரிய ஆக்கத்தோடு ஜனநாயக முறைப்படி ஜனநாயகப் பண்பாட்டோடு அமைதியாக தேர்தல் நடந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அவர் மட்டுமல்ல. இந்திய துணைக் கண்டத்தில் வாழ்கிற அறிஞர் பெருமக்கள், தத்துவ வல்லுநர்கள், தொழில் வித்தகர்கள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றியை

மாபெரும் வெற்றியைப் பாராட்டுகிறார்கள். பத்திரிகைகள் எல்லாம் பலபடியாகப் புகழ்ந்து எழுதியிருக்கின்றன. ஆனால் நிஜலிங்கப்பா காங்கிரஸ் காரர்கள் தான் இது நாட்டு மக்களுக்குத் தெரியாத வெற்றி—அவர்கள் ஏற்றுக்கொள்ளாத வெற்றி என்கிறார்கள். இது வேடிக்கையாகவும்—விசித்திரமாகவும் இருக்கிறது. பல மக்கள் பூரணமான நம்பிக்கையை திராவிட முன்னேற்றக் கழகத்தினிடம் வைத்து பெருவாரியான வாக்குகளை அளித்து தேர்ந்தெடுத்திருப்பதை புரிந்துகொள்ளாத அவர்களுக்கு எப்போதுதான தெளிவு ஏற்படும் என்பது நமக்குப் புதிராக இருக்கிறது.

நம்முடைய வளர்ச்சியிலே அவர்கள் நாட்டம் கொள்ளாதவர்களாக இருக்கலாம். ஆனால் நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் நம்முடைய வெற்றியை எதிர்பாராதது என்று கூறியிருக்கிறார்கள் என்றால் சரித்திரத்திலேயே எதுவும் இல்லாதது. ஆரம்ப காலத்தில் 15 பேர்கள் சட்டமன்றத்தில் புகுந்த நேரத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் செல்வாக்கை ஏற்கவில்லை. அதற்குப் பிறகு நம்முடைய செல்வாக்குப் பெருகி வருகின்ற நேரத்திலேயும் அவர்கள் அதை ஏற்க மறுத்தார்கள். எல்லா வற்றையும் மீறி திராவிட முன்னேற்றக் கழகம் இந்த நாட்டை ஆளவேண்டும், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நல்ல நம்பிக்கையைத் தருகின்றனர் என்ற அளவுக்கு 67-லே மக்கள் நல்ல தீர்ப்பை வழங்கியபோதும் அந்தக் கட்சிக்காரர்கள் உண்மை நிலையை ஏற்க மறுத்தார்கள். இன்றைக்கு நாட்டு மக்கள் 71-லே நல்ல தீர்ப்பை தந்திருக்கிறார்கள். அதையும் ஏற்க மறுக்கிறார்கள்.

ஒருவேளை நான் நினைக்கிறேன். இதுவெல்லாம் வெற்றியல்ல. அவர்கள் 150 பேர்களாக இருந்து 50 ஆக மாறினார்கள். ஐம்பது பேர்களாக இருந்தவர்கள் 15 பேர்களாக வந்திருக்கிறார்களே இன்றைக்கு. அந்த நிலையும் மாறி, பக்கத்து மாநிலமான கேரளத்திலே நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சி 'ஓ' பெற்றதே அந்த 'ஓ'வை 76-லே பெறுவதற்குத்தான் அவர்கள் அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்திக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். ஏனென்றால் அவர்கள் இன்னும் தெளிவு பெறாமல் இருக்கிறார்கள். மக்கள் தீர்ப்பை இன்னும் ஏற்காமல் இருக்கிறார்கள். ஏன் என்று தெரியவில்லை. மக்கள் தருகின்ற தீர்ப்பினைத் திருத்திக் கூறுவதால் அவர்கள் இழந்துபோன செல்வாக்கைப் புதுப்பித்துக் கொள்ளலாம் என்று கருதுகிறார்களோ என்னவோ தெரியவில்லை. மதிப்பிற்குரிய பெரும் தலைவர்கள் அவர்கள் மதிப்பைப் புதுப்பித்துக் கொள்ளட்டும். வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் நாட்டு மக்களை திசைதிருப்பித்தான் தாங்கள் இழந்த செல்வாக்கை புதுப்பித்துக்கொள்வது என்ற முறையிலே நாட்டு மக்களை அந்தத் தலைவர்கள் திசைதிருப்பி அழைத்துச் செல்லக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நாட்டிலே வாழ்கின்ற மக்கள் எந்தளவு தெளிவு கொண்டவர்கள், இந்த நாட்டிலே வாழ்கின்ற மக்கள் எந்தளவு தீர்ப்பினைத் தந்திருக்கிறார்கள் என்பதை உலகமே பாராட்டியது. இந்திய துணைக் கண்டமே அதற்கு நற்சான்றினைக் கூறியது. ஆனால் நிஜலிங்கப்பா கட்சிக்காரர்கள் மேலும் மேலும் அப்படிப்பட்ட வாதங்களைச் சொல்வார்களானால் அதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் பதில் சொல்ல வேண்டியதில்லை. காலம் பதில் சொல்லும்.

இங்கே முன்னாலே பேசப்பட்ட பேச்சுகளிலே திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுங்கட்சியாக இருப்பதாலே திராவிட முன்னேற்றக் கழகம் பெருவாரியான உறுப்பினர்களைக் கொண்டிருப்பதாலே நாட்டிலே அசம்பாவிதங்கள் ஏற்படுகின்றன என்று சொன்னார்கள். நான் மெத்த வேதனைப்படுகிறேன். நேற்று முன்னாலே நடந்த ஒரு வேதனை தரும் சம்பவத்தைச் சொல்கிறேன். சென்னையிலே அந்தச் சம்பவம் யாராலே ஏற்பட்டது? திராவிட முன்னேற்றக் கழகத்தவர்களாலா? அல்ல அல்ல என்பதை நான் மிக அடக்கத்துடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தாக்குதலானவர்கள் யார்? கொலை செய்யப்பட்டவர்கள் யார்? படுகொலைக்கு ஆளாக்கப்பட்டவர்கள் யார்? திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் மூன்று தொண்டர்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். படுகொலை செய்தவர்கள் நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் என்று பகிரங்கமாகத் தெரிகிறது. திருமதி அனந்தநாயகி அம்மையார் பேசினார்கள். அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தால்தான் அசம்பாவிதங்கள் ஏற்படுகின்றன என்று சொன்னார்கள். ஆனால் என்ன அந்த அம்மையார் குழந்தையையும் கிள்ளுகிறார்கள், தொட்டிலையும் ஆட்டுகிறார்கள். செய்கின்ற தவறுகள் எல்லாம் நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சிக்காரர்கள்தான் செய்கிறார்கள். செய்கின்ற பாவங்களையெல்லாம் அவர்கள் செய்கிறார்கள் . . .

THIRU R. PONNAPPA NADAR : On a point of Order, Sir. When the matter is before a Court and persons are apprehended will it not be advisable for the hon. Member not to refer to the merits and demerits of the case? As the share of responsibility in these matters are under enquiry before a Court of Law, it will not be advisable to refer to the merits of the case.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : காலையிலே ஒத்திவைப்புத் தீர்மானம் இதுபற்றி வந்த நேரத்திலே நான் இதற்கான தகவல் கொடுத்திருக்கிறேன். அந்த அளவிலே போதுமானது. அந்த அளவோடு நிறுத்தி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு விஷயங்களைப் பேசுவது நல்லது.

திரு. வை பாலசுந்தரம் : எனவேதான் திராவிட முன்னேற்றக் கழகம் நேர்மையான கொள்கையை உள்ளத்திலே தாங்கிச் செயலாற்றி வருகிறது. இங்கே இருக்கின்ற உறுப்பினர்கள் கண்ணியத்தை உள்ளத்தில் ஏற்ற தீரர்களாக வீரர்களாகச் செயலாற்றுகிறார்கள் என்பது ஊரறிந்த, உலகறிந்த உண்மையாகும். எந்த அசம்பாவிதங்களும் ஏற்படாத அளவில் நல்ல தலைமையை, நல்ல தலைவரை, கலைஞரை நாங்கள் பெற்றிருக்கிறோம். அந்தத் தலைமையைப் பின்பற்றி நேர்மையான வழியை நாங்கள் அமைத்துக்கொள்வோம்.

ஏழை எளிய மக்களின் பரிபூரண நம்பிக்கையைப் பெற்ற ஆட்சி. இந்த நாட்டிலே உள்ள ஆதித்திராவிட மக்களின் பெரும்பான்மையான மக்களின் பரிபூரண நம்பிக்கையைப் பெற்ற ஆட்சி இந்த ஆட்சி. இந்த ஆட்சி நிலைத்தால் தான் நிலைநின்றால்தான் வாழ்வு வரும் என்று அழைத்திருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் அத்தனைபேர்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தை பாசறை என்று கருதுகிறார்கள். அவர்களுடைய வீடு என்று கருதுகிறார்கள்.

[திரு. வை. பாலசுந்தரம்] [1971 மார்ச் 30

அவர்கள் எண்ணிப் பார்க்கிறார்கள், அவர்களுக்காக இந்த அரசு செயல்படுகின்றபோது ஏதாவது தங்கு தடை ஏற்படுமானுல் அதனுல் அவர்கள் பெறுகின்ற ஆதாயம் தடைபடுகின்ற காரணத்தினுல் தொல்லைப்படுகிறார்கள்.

ஆதி திராவிட மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பக்கம் இருக்கிறார்கள், பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் அனைவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரிக்கிறார்கள் என்பதால் அவர்களை நசுக்குவதற்கு அழிப்பதற்கு நடைபெற்ற தேர்தலிலே பணம் உள்ள சீமான்கள் கையாண்ட அராஜகப் போக்கு—நான் வேட்பாளனாக இருந்தவன் என்பதால் எண்ணிப் பார்க்கிறேன்—பயங்கரமான நிகழ்ச்சிகள் நடந்தன என்பதை நான் இந்த நேரத்திலே இங்கே சொல்லாமல் இருக்க முடியாது. ஆதித் திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் வயலிலே வேலைசெய்கின்றவர்கள், அவர்கள்தான் வாய்க்காலிலே பாடுபடுகின்றவர்கள், அவர்கள்தான் வயல்களைப் பாதுகாக்கின்றவர்கள். உழைத்துப் பாடுபடுகின்ற கூலிகள். ஆதித் திராவிட மக்கள்தான் வயலைப் பாதுகாக்கின்ற பாதுகாவலர்களாக இருக்கிறார்கள். ஆதித் திராவிட மக்கள்தான் கூலிவேலைசெய்கின்ற கூலிகளாக இருக்கிறார்கள். ஐந்து ஏக்கருக்குச் சொந்தக்காரர்கள் அந்தச் சமுதாயத்தில் இருக்கிறார்கள் என்று விரல்விட்டு எண்ண முடியுமா? பத்து ஏக்கருக்குச் சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள் என்று கூறமுடியுமா? திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு நிலங்களை ஏழைகளுக்குத் தந்ததன் மூலம் ஏழை மக்கள் ஆதாயம் பெற்றிருக்கிறார்கள். ஏழை எளிய மக்கள் லாபம் பெற்றிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே அவர்கள் தங்களுடைய பரிபூரண நம்பிக்கையை முதல்வர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக்குக் கொடுத்திருக்கிறார்கள். எனவே கருணையையும், கடல் உள்ளவரை கோட்டையைப் பற்றிக் கனவு கண்டுகொண்டிருக்கின்ற கோமான்கள் அதைவிட்டுவிட்டு [illegible] நல்லது என்று நினைக்கிறேன்.

ஏழை எளிய மக்களின் நலனுக்காகவும், நலிந்த மக்களின் நலனுக்காகவும், அடித்தளத்திலே வீழ்ந்துகிடக்கின்றவர்களின் நலனுக்காகவும்தான் இந்த ஆட்சி இருக்கிறது. தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்களும், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்களும் பரிபூரணமாக இந்த ஆட்சியை நம்பியிருக்கிறார்கள். கலைஞர் இருந்தால்தான் நிச்சயம் வாழ முடியும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தால்தான் உரிமைகளை போராடிப் பெறமுடியும் என்று உணர்ந்ததால்தான் அவர்கள் சொல்லுகிற நேரத்தில் சிறு சிறு தவறுகள் இருந்தால் சுட்டிக் காட்டினால், சரிசெய்து கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் பரிபூரண நம்பிக்கை வைத்து இருக்கிறார்கள். அப்படி மக்கள் நம்பிக்கையைப் பெற்ற இந்த ஆட்சி நேர்மையான பாதையில் சென்று கொண்டிருக்கிறது. இந்த ஆட்சி நேர்மையான ஆட்சி. ஏழை எளிய மக்களின் ஆட்சி, இந்த ஆட்சியை பாட்டாளி மக்கள் வாழ்த்துகிறார்கள் என்று சொல்லி நம்முடைய அரசு வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அதற்குத் திட்டங்கள் அத்தனையும் நிறைவேற்ற திட்டங்கள் வகுத்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிற நேரத்திலே வேளாண்மையை எடுத்துக் கொண்டால் புரட்சிகரமான மாற்றத்தை, பசுமைப் புரட்சியின் மூலம் உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

1971 மார்ச் 30] [திரு. வை. பாலசுந்தரம்]

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின்தான் நல்லதொரு மாறுதலை இந்த நாடு கண்டது என்பதைத் தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொல்லும் நிலைமையிலே நான் இருக்கிறேன். விவசாயத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற பிறகுதான் விவசாயிகளினுடைய கண்ணீர் துடைக்கப்பட்டது. அவர்களுடைய தேவைகளெல்லாம் பூர்த்தி செய்யப்பட்டு நல்ல அம்சம் உருவாக்கப்பட்டது. நீண்ட காலக் கடன வசதி 1966-67-ஆம் ஆண்டில் மூன்று கோடி ரூபாய்தான். அந்த நிலைமை போக்கப்பட்டு 1970-71-லே 19 கோடி ரூபாயாக தமிழக அரசு உருவாக்கிக கூட்டித் தந்திருப்பதால் ஏழை எளிய விவசாயப் பெருமக்கள் ஆதரிக்க வேண்டும், ஏழை எளிய விவசாயப் பெருங்குடி மக்கள் கண்ணீர் துடைக்கப்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் அவர்களுக்கு உதவி செய்யும் அரசாக தமிழக அரசு இருப்பதை நாம் மனமாரப் பாராட்டவும் வரவேற்கவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதேநேரத்தில் ஒளிமயமான எதிர் காலத்தைத் தமிழகத்திற்கு அளிக்க வேண்டுமென்று பேரறிஞர் அண்ணு அவர்கள் கனவு கண்டார்கள். இந்த நாட்டிலே கிராமப் பகுதியிலே உள்ள அதிகாரமுள்ள பணக்காரர்கள் தான் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியும், பணக்காரர்கள் உள்ள பகுதிகளிலே தான் மின்சார விளக்குகள் எரியும் என்ற சாத்தியக் கூறுகள் 1967-க்கு முன்பிருந்தது. ஆனுல் 1967-க்குப் பிறகு அந்த நிலைமை மாற்றப்பட்டு, ஏழை எளிய மக்கள் வாழும் பகுதிகளிலேயும் இன்றைக்கு ஒளி விளக்குகள் மின்னுகின்ற இனிய காட்சியை, ஒளிமயமான அந்தப் பாங்கான காட்சியைப் பார்க்க முடியும் என்ற நிலை இருக்கிறது. 1966-67 இறுதியில் 25,000 கிராமங்கள் மின் வசதி பெற்றிருந்த நிலைமையில், 1970 டிசம்பர் இறுதியில் 40,560 கிராமங்கள் ஒளிபெற்று, ஒளிமயமான வாழ்வு பெற்றிருக்கிறது என்றுல் அந்த மகத்தான சாதனையைச் செய்து, ஏழை மக்களுக்கு இந்த அரசு நல்வாழ்வினை ஈட்டித் தந்திருக்கிறது என்பதனை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, வேலையில்லாத் திண்டாட்டம் இந்த நாட்டை உலுக்கிக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். காஷ்மீரம் முதல் கன்னியாகுமரி வரை பரந்து விரிந்து கிடக்கும் இந்த உப கண்டத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் எப்படி இருந்து கொண்டிருக்கிறது என்று சொல்லும் நேரத்தில், வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு ஒரு மாநில சர்க்கார்தான் முழுப் பொறுப்பு என்ற மனப்பான்மையை விட்டுவிட வேண்டும். இந்தியத் துணைக் கண்டத்திற்குத் தலைமைதாங்கும் மத்திய அரசு இதற்குக் காரணம் சொல்ல வேண்டும். அது காரணம் சொல்லுகிறதோ இல்லையோ, ஆனுல் மாநில சர்க்காரும், மத்திய சர்க்காரும் சேர்ந்து இந்த வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு விடிவு காண வேண்டும். இதற்கென்று ஒரு சூழ்நிலையை நம்முடைய ஆளுநர் அவர்கள் உரையிலே அழகாக, தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டும் நிலைமையிலே கூறப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட விளக்கங்கள் அநேகம் ஆளுநர் அவர்களின் உரையின்மீது சொல்லிக்கொண்டே போகலாம். ஆனுல் அதற்கெல்லாம் நேரம் இல்லை. இவற்றையெல்லாம் மட்டும் சொல்லிவிட்டு என் தொகுதியைப்பற்றி கூருவிடில் என்னைத் தேர்ந்தெடுத்த அச்சரபாக்கம் தொகுதி மக்களுக்கு நான் துரோகம் செய்தவன் ஆவேன்.

அந்த அடிப்படையில் அச்சரபாக்கம் தொகுதி ஒரு அருமையான தொகுதியாகவும், அதிர்ஷ்டவசமான தொகுதியாகவும் இருக்கிறது. ஏனென்றால் இந்த அவையிலே அமைச்சராகயிருந்த திருவாளர் பரமேஸ்வரன் அவர்கள் அந்தத் தொகுதியிலேயிருந்துதான் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இந்த மன்றத்திலே வீற்றிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு ஜோதி வெங்கடாசலம் அவர்களும் அச்சரபாக்கம் தொகுதியிலிருந்துதான் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைச்சராக ஆகியிருப்பார்கள் என்று கருதுகிறேன், உண்மையோ இல்லையோ? எனவேதான் அப்படிப்பட்ட அருமையான அதிர்ஷ்டம் வாய்ந்த தொகுதி எப்படி அலைக்கழிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். அச்சரபாக்கம் தொகுதியைப் பார்த்தால், அந்தப் பாதைகளில் சென்றால் அச்சு ஒரு பக்கம் பார்க்கும், வண்டி ஒரு பக்கம் பார்க்கும், அதுதான் அச்சரபாக்கம். அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட அமைச்சர்களைப் பெற்றிருந்த நேரத்திலேகூட அந்தத் தொகுதியை ஏனோ தெரியவில்லை இப்படி விட்டு விட்டிருக்கிறார்கள். அந்த நிலைமையை மாற்றி அங்கு ஒரு பெரும் முன்னேற்றத்தைச் செய்ய நமது மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும், அமைச்சர் பெருமக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நாட்டு அமைச்சரவையை நான் பரிபூரணமாக வரவேற்கிறேன், இந்த அமைச்சரவையை உள்ளன்போடு வரவேற்கிறேன். இந்த நாட்டில் நீங்கள் எதை வேண்டுமானாலும் செய்யுங்கள், நீங்கள் எதைச் செய்தாலும் நல்லதைத்தான் செய்வீர்கள் என்பதற்காகத்தான் பரிபூரணமாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக 184 பேரை அனுப்பியிருக்கிறார்கள். எனவே, நீங்கள் செய்யும் காரியங்களைத் துணிந்து செய்யுங்கள், நீங்கள் ஆற்றும் பணி இந்த நாட்டு மக்களுக்கு நன்மையாகத்தான் இருக்கும் என்று கூறிக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த தங்களுக்கு நன்றிகூறி விடைபெற்றுச் செல்கிறேன். வணக்கம்.

MR. DEPUTY SPEAKER: Dr. Hande will now move his amendment to the motion of thanks to the Governor.

DR. H. V. HANDE: Sir, I move the following amendment:—

Add at the end the following:—

but regret to note that the Address does not contain

(i) any indication as to the concrete steps the Government are going to take to restore law and order and to prevent victimisation of individuals after the elections;

(ii) a clear-cut programme to solve the serious unemployment and under employment problem;

(iii) the steps taken by this Government to reduce the alarming rise in prices of essential commodities; and

(iv) the concrete steps to bring substantial aid to pensioners.'

The amendment was duly seconded.

திரு. கு. ஆ. பொம்மன்: மாண்புமிகு சட்டப் பேரவை உதவித் தலைவர் அவர்களே, நமது தமிழக ஆளுநர் அவர்கள் இந்தக் கூட்டு சபையில் ஆற்றிய உரையைக் கொண்டு சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். அவர்கள் தன்னுடைய உரையில் தேர்தலானது தமிழ் மரபுக்கு ஏற்றமுறையில் நல்ல முறையில் நடந்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் தேர்தல் நடந்த விஷயங்களைப்பற்றி தேர்தல் நடந்தபோதும், தேர்தலுக்குப் பிறகும் நடந்த அசம்பாவிதங்களைப்பற்றி மாண்புமிகு சில உறுப்பினர்கள் இந்த அவையிலே விளக்கமாகக் கூறியிருக்கிறார்கள். அதைப்பற்றி நான் விரிவுபடுத்திப் பேசுவதற்கு விரும்பவில்லை.

அடுத்தபடியாக, இந்த உரையில் குடிசை மாற்று வாரியம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அரிஜனங்களுக்குப் பொருளாதாரத் துறையில் எந்தவிதமான அம்சத்தையும் காண முடியவில்லை.

அடுத்தபடியாக, இந்த உரையில் உரங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், உரத்தினுடைய விலை இப்போது அதிகமாக ஏறிக்கொண்டு வருவதால் விவசாயிகளுக்கு அதிகப் பாதிப்பு ஏற்படுகிறது என்று நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த உரையிலே வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றி அந்த விதமான குறைபாட்டைப்பற்றி மாண்புமிகு திரு. மணலி கந்தசாமி அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லிவிட்டார்கள். அவர்களின் அறிவுரைகளை இந்த அரசு ஏற்றுக்கொள்ளும் என்று நினைக்கிறேன்.

எனது நீலகிரி ஜில்லாவைப் பொறுத்தவரையிலும் நான் சில வார்த்தைகளைச் சொல்லாது விட்டுவிட்டால் அந்தத் தொகுதி மக்களுக்கு நான் தவறு செய்தவனாகக் கருதுவேன். ஆகவே, நீலகிரி ஜில்லாவைப் பொறுத்தவரையில் சொல்ல வேண்டுமென்றால் இந்த மாநிலத்திலே நீலகிரி ஜில்லா வெகு சிறிய ஜில்லா, அதாவது 3 தாலுக்காக்களைக்கொண்ட மலைப் பிரதேசங்களைக் கொண்ட ஜில்லா. அங்கு வாழும் மக்கள் தேயிலைத் தோட்டம், காப்பித் தோட்டத்தில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள். அவர்கள் நீங்கலாக விவசாயத்தில் பங்கு கொண்ட விவசாயிகள் நிறைய இருக்கிறார்கள். அவர்கள் விவசாயத்திலே ஜீவனம் செய்துகொண்டிருக்கக் கூடிய நிலைமையிருக்கிறது. அங்குள்ள நிலங்கள் வானம் பார்த்த பூமியாகத்தான் இருக்கிறதேயொழிய அங்களுக்கு நீர்ப்பாசன வசதி கிடையாது. வருஷத்திற்கு ஒரு முறைதான் விவசாயம் செய்ய முடியும். அதுவும் உருளைக் கிழங்கும், இங்கிலீஷ் தக்காளியும்தான் பயிர் செய்ய முடியும். ஆனால் விவசாயம் 4 மாதங்கள்தான் செய்ய முடியும். மற்ற 8 மாதங்களுக்கும் அந்த விவசாயிகளுக்கு வேலை கிடையாது. வேறு வேலைவாய்ப்புகளுக்கான தொழிற்சாலைகளும் கிடையாது. நமது மாநில அரசு 1967-ல் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு நிலமற்ற அரிஜனங்களுக்கு நிலம் கொடுப்பது என்றதொரு திட்டத்தை எல்லா மாவட்டங்களிலும் செயல்படுத்தி வருகின்றார்கள். ஆனால் ஏனோ தெரியவில்லை நீலகிரி மாவட்டத்தில்மட்டும் இந்த விஷயத்தில் ஒன்றும் செய்யப்படாமல் இருந்து வருகிறது. இப்படி அங்கே நிலம் ஒதுக்குவதில் ஏதோ தடையொன்று இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அந்தத் தடையை நீக்கி அங்குள்ள நிலமற்ற அரிஜனங்களுக்கு நிலம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆளுநர் அவர்களின் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்

[திரு. கு. ஆ. பொம்மன்] [1971 மார்ச் 30

அந்த மாவட்டத்தில் உருளைக் கிழங்கைத்தவிர வேறு ஒன்றும் பெரும் அளவிற்கு விவசாயம் கிடையாது. 1960-ஆம் ஆண்டில் 'லேட் ப்ளைட்' (late blight') என்று சொல்லக்கூடிய ஒரு வகைப் பயிர் வியாதியினால் உருளைக் கிழங்குப் பயிர் பெரிதும் பாதிக்கப்பட்டுவிட்டது. அந்த நோயைத் தடுப்பதற்காக அப்போது விவசாய இலாகாமூலம் மருந்து சப்ளை செய்தார்கள். இப்போதும் கொடுக்கிறார்கள். இதை உபயோகித்து விவசாயத்தை நடத்தி வருகிறோம். ஆனால் மோடங்கள் போடும்போது, நோய் வந்துவிடுகிறது. அந்த மருந்தை வாங்குவதற்கு ஏழை விவசாயிகளுக்கு வசதி போதவில்லை. முந்தைய அரசு அந்த மருந்தைப் பாதி விலைக்குக் கொடுத்து வந்தார்கள். ஆனால் இப்போது அந்த மருந்திற்காக இந்த அரசு முழு விலையையும் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தி வசூலிக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். இதையும் பரிசிலனைசெய்து முன்போல அரசு அவர்களுக்குப் பாதி விலையிலேயே மருந்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதுமட்டும் இல்லாமல் அங்குள்ள நீர்த்தேக்கங்களிலே நிலங்களிலுள்ள மண் அரித்து, பல தேக்கங்கள் தூர்ந்துவிடும் என்ற காரணத்தைக்கொண்டு அவைகளைச் சரிசெய்வதற்காக ஸாயில் கன்ஸர்வேஷன் என்ற முறையில் பல காரியங்களை அதாவது டெர்ரஸ் (terrace) சர்க்கார் செலவில் செய்து, அதற்கான செலவை விவசாயிகள் தலையில்போட்டு அதை விவசாயக் கடனாகப் பாவித்து வருஷா வருஷம் கொடுக்க வேண்டும் என்று ஆணையிட்டு இருக்கிறார்கள். பருவ மழையில்லாத காரணத்தினாலும் நோயினாலும் பயிர்கள் பாதிக்கப்பட்டு வெள்ளாமை தவறிவிட்டதால் இந்தக் கடனை அவர்களால் கொடுக்க முடியவில்லை. இதுபற்றி நமது சர்க்காருக்குப் பல முறை மனுக்களின்மூலமாகத் தெரிவித்திருக்கிறேன். மாவட்ட அளவிலும் இதுபற்றி விசாரிக்கப்பட்டு இருக்கிறது. எனவே அவர்களுக்கு இந்தக் கடனை வஜா செய்துகொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த ஸாயில் கன்ஸர்வேஷன் என்ற முறையில் மேலே உள்ள ஒரு அடிதான் வர்ஜின் ஸாயில். அதற்கு அடியிலுள்ளது சப்-ஸாயில். இந்த சப்-ஸாயில் நல்ல பலனை அளிப்பதற்குக் கிட்டத்தட்ட 60 ஆண்டுகள் ஆகின்றன. அதுவும் நல்ல நாட்டு உரங்கள் போட்டால்தான். எனவே இடையிலே நல்ல முறையில் எதுவும் பயிராவதில்லை. ஆகவே அவர்களால் அந்தக் கடனைத் திருப்பிக் கட்ட முடியவில்லை. எனவேதான் அவர்களுக்கு அதை வஜா செய்து கொடுக்க வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பாலையா அவர்கள் குறிப்பிட்டதுபோல நானும் அரசு பஸ் சர்வீசைப்பற்றி ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். உதாரணமாக கோவையிலிருந்து புறப்பட்டு உதகை வழியாக மைசூர் போகும் பஸ்ஸானது உதகையில் 1-30-க்குப் புறப்பட வேண்டும். கால அட்டவணையில் அப்படித் தான் இருக்கிறது. ஆனால் ஒரு நாளும் அந்த பஸ் நாலு மணிக்கு முன் வருவதில்லை. மாலை நாலு மணிக்கு உதகை வந்து பிறகு அது இரவு 10 மணிக்கு மைசூருக்குப் போனால், பிரயாணிகளுக்கு ஏற்படும் தொல்லைகள் எவ்வளவு என்று சொல்ல முடியாது. ஏழை பிரயாணிகள் இரவு 10 மணிக்கு மேலே மைசூருக்குப் போனால் எங்கே தங்குவார்கள், அல்லது அங்கேயிருந்து அந்த மாவட்டத்தின் பிற பகுதிகளுக்குச் செல்ல வேண்டிய பிரயாணிகள் எப்படிப் போவார்கள் என்று சற்று எண்ணிப்பார்க்க வேண்டும். எனவே இதையும் அரசு பரிசீலிக்க வேண்டும்.

மி

ஆளுநர் அவர்களின் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்

1971 மார்ச் 30] [திரு. கு. ஆ. பொம்மன்]

இப்போது நான் தேர்ந்தெடுக்கப்பட்ட கூடலூர் தொகுதி அந்த மாவட்டத் தில் உள்ள இரண்டு தாலுக்காவிலும் ஒதுக்கப்பட்டுவிட்ட தொகுதி என்று கருதுகிறேன். இதற்கு முன்பு இருந்த அந்த சர்க்காரிலும்சரி, இப்போது உள்ள இந்த சர்க்காரிலும்சரி, எந்த அமைச்சரும் அந்தப் பகுதிக்கு விஜயம் செய்வதே கிடையாது. எனவே உதகைக்கு வரும் அமைச்சர்கள் இனியாவது கூடலூர் பகுதிக்கும் வந்து அத்தொகுதியில் சுற்றுப்பயணம் செய்து, தொகுதியின் நிலைமையைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அங்கே வாழும் மக்கள் அநேகமாக தோட்டத் தொழிலாளர்கள், மலை வாசிகள் அல்லது சாதாரண விவசாயிகள். வருஷத்தில் பெரும் பகுதி அவர் களுக்கு வேலையே இருப்பதில்லை. பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். ஆனாலும் அங்கே குடிசைத் தொழில்களை ஆரம்பிப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. டாப்பியோகா என்று சொல்லப்படும் மர வள்ளிக் கிழங்கு அங்கே ஏராளமாகப் பயிரிடப்படுகிறது. அண்டை மாநிலமான கேரளாவில் பல்வேறு இடங்களில் இது விளைகிறது. அங்கேயெல்லாம் இதை உபயோகித்து ஜவ்வரிசி செய் கிறார்கள். அதேபோல இங்கேயும் இதை உபயோகித்து ஜவ்வரிசி செய்வதற் கான ஒரு தொழிற்சாலையை இங்கே ஆரம்பிக்கலாம் என்று கேட்டுக்கொள்ளு கிறேன். இதுமட்டும் இல்லாமல் அங்கே மிக விலை உயர்ந்த காட்டு மரங்கள் பயிராகின்றன. அங்கே ஸா மில் ஒன்றை ஆரம்பித்தால் பல பேருக்கு வேலை கிடைக்கும். அந்த மரங்களை உபயோகித்து மேஜை, நாற்காலி போன்ற வற்றைச் செய்யும் தொழிற்சாலை ஒன்றை அங்கே ஆரம்பித்தால் அதனால் அரசாங்கத்திற்கும் லாபம், அங்கே உள்ள மக்களுக்கும் வேலை வாய்ப்புகள் பெருகும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கூடலூர் தாலுக்காவில் புன்னம்புழா-பாண்டியாறு திட்டத்தை ஆரம்பித்து அதற்கான ப்ரிலிமினெரி வேலைகளைக்கூட செய்து விட்டு இப்போது அந்தத் திட்டத்தை நிறுத்தி வைத்துவிட்டார்கள். ஏன் என்று தெரியவில்லை. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதை மேற்கொண்டால் பல்லாயிரக்கணக்கானவர் களுக்கு வேலைவாய்ப்புகள் பெருகும். எனவே இதை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, கூடலூரிலிருந்து பல கிராமங்களுக்கு இன்றைக்கு சாலையே இல்லா மல் இருக்கின்றன. அங்கே உள்ள மக்கள் கூடலூருக்கு வரவேண்டும், மருத்துவ விடுதிக்கு வரவேண்டும் என்றால் மலையிலும் பள்ளத்திலும் ஒரு மைல் இரண்டு மைல்கள்கள் நடந்துதான் வரவேண்டியிருக்கிறது. எனவே அவைகளுக்கெல்லாம் தொடர்பு சாலைகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று இந்தச் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உதகையிலிருந்து சீ போர்த்துக்கு அரசு பஸகள் போய்க் கொண்டு இருந்தன. கடந்த நாலு மாத காலமாக ஏனோ தெரியவில்லை இப்போது அதை நிறுத்திவிட்டார்கள். இதனால் மக்கள் ரொம்பவும் கஷ்டப் படுகிறார்கள். எனவே மீண்டும் அந்த பஸ்ஸை விடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[திரு. கு. ஆ. பொம்மன்] [1971 மார்ச் 30

நீலகிரி மாவட்டத்திலுள்ள உதக மண்டலமானது 'க்வீன் ஆப் தி ஹில் ஸ்டேஷன்ஸ்' என்று மலைகளின் ராணி என்று அழைக்கப்படுகிறது. ஆனாலும் பயணிகளைக் கவருவதற்கான பல வசதிகளைச் செய்துகொடுக்கப்படாமலேயே இருக்கிறது. உல்லாசப்பயணிகள் வருவதற்கான பயண விடுதிகள் அங்கே இல்லை. தற்போது ஒரு விடுதி கட்டப்பட்டு வருகிறது. அது பணம் படைத்தவர்களுக்குத்தான் பயன்படுமேதவிர சாதாரண நடுத்தர மக்கள் வந்து தங்குவதற்குப் பயன்படாது. எனவே, நடுத்தர மக்கள் வந்து தங்குவதற்கு ஏற்றவாறு ஒரு விடுதி கட்டப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அங்கே ஸீஸனை மார்ச்சு மாதம் மத்தியிலிருந்து மே மாதம் இறுதிவரையிலதான். இந்தக் குறுகிய காலத்திற்கு வந்து போகிறவர்களுக்கும் வேண்டிய வசதி இல்லையென்றால் பலரும் வரத் தயங்குகிறார்கள். இதனால் அன்னியச் செலாவணி வரத்து நின்று விடுகிறது. எனவே ஒரு மூன்று பேர் கொண்ட குழு ஒன்றினை அரசு நியமித்துப் பயணிகளைக் கவருவதற்கு வேண்டிய வழிமுறைகளைப்பற்றி ஆராய்ச்சிசெய்து தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். உடனடியாக அப்படிப்பட்ட ஒரு குழுவினை அரசு நியமிக்க வேண்டும் என்று அரசை கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு உதகையில் கடும் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு நகரமே கஷ்டப்பட்டது. அப்போது எப்படி எப்படியோ தண்ணீர் சப்ளை செய்யப்பட்டது. அந்த நேரத்தில் 'பொல்லூடெட் வாட்டர்' சப்ளை செய்யப்பட்டதால் மஞ்சள் காமாலை நோய் பெரும் அளவிற்குப் பரவிவிட்டது. இந்த நோயினால் பல மக்கள் மாண்டனர். தற்போதுள்ள அரசானது அப்படிப்பட்ட தண்ணீர்த் தட்டுப்பாடு வரக்கூடாது என்பதற்காக 'பார்ஸன் வேலி' திட்டத்தைத் தீட்டிச் செயல்படுத்தி தண்ணீர் பஞ்சத்தைப் போக்கியிருக்கிறார்கள். இது வரவேற்க வேண்டிய ஒன்று. இதை வரவேற்கிறேன்.

ஆனாலும் சிறிய அளவு ஜனத்தொகை இருந்த காலத்தில் எங்கள் நகரில் போடப்பட்டிருந்த குழாய்கள் இப்பொழுது ஜனத்தொகை அதிகமாகியும் இன்னும் மாற்றப்படவில்லை. சில வேளைகளில் அந்தக் குழாய்கள் துருப்பிடித்த காரணத்தால் வெடித்து விடுகின்றன அல்லது லீக்கேஜாகிறது. அதன் காரணமாகத் தண்ணீர் வீணாகிறது. ஆகவே, உதகை நகரசபைக்கு மானியமாகவோ அல்லது கடனாகவோ பணம்கொடுத்து இந்தக் குழாய்களைப் புதுப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸ் என்று சொல்லும்போது எங்கள் பகுதிகளில் மூங்கில் அதிகமாகக் கிடைப்பதால் அங்கு ஒரு பேப்பர் மில் ஏற்படுத்த வாய்ப்பிருக்கிறது. நான் முன்பு இந்தச் சட்டசபையில் இந்தப் பிரச்னையைக் கிளப்பியிருக்கிறேன். எப்படியோ அந்த பேப்பர் மில்லை கோவை ஜில்லாவில் ஆரம்பித்து விட்டார்கள். எங்கள் பகுதிகளில் பேப்பர் மில் நடத்த நிறைய 'பல்ப்'பும் கிடைக்கிறது. ஆகவே எங்கள் பகுதியில் ஒரு பேப்பர் மில் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் சர்க்கார் ஒன்றை ஆரம்பிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

எங்கள் பகுதியில் அதாவது மசினிகுடி என்ற பகுதியில் நிறைய முசுக் கொட்டைச் செடிகள் பயிரிடப்படுகின்றன. இப்போது முசுக்கொட்டை

1971 மார்ச் 30] [திரு. கு. ஆ. பொம்மன்]

பயிரிடப்படும் விஸ்தீரணம் போதாது. இன்னும் அதிகப்படியான ஏரியாவில் முசுக்கொட்டை பயிரிடப்படுதல் வேண்டும். அதனால் நமது வருவாயையும் நாம் பெருக்கிக் கொள்ளலாம். அதன்மூலம் வேலைவாய்ப்பும் கிடைக்க வழி ஏற்படும். ஆகவே அதையும் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. கே. என். குமாரசாமி: உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கிற அடிப்படையில் நான் சில கருத்துக்களைச் சொல்லி என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

நடந்து முடிந்த தேர்தலில் முற்போக்குக் கூட்டணி வெற்றி பெறுவதற்காகச் சாதாரண ஏழை எளிய மக்கள் வோட்டளித்து வெற்றி பெறச் செய்திருக்கிறார்கள். அரசாங்கம் முற்போக்குக் கொள்கைகளைக் கடைப்பிடித்து அதிதீவிரமாக நடவடிக்கைகள் எடுத்துத் தங்கள் கஷ்டங்களைப் போக்குவார்கள் என்ற நம்பிக்கையில் அந்த ஏழை எளிய மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். இந்தத் தேர்தலில் ஒரு விசேஷ அம்சம் என்னவென்றால் கிராமங்களில் சமூகப் பிடிப்பின் காரணமாக, தங்கள் அதிகாரத்தைக்கொண்டு மக்களின் எண்ணங்களையெல்லாம் திருப்பிவிடவேண்டும் என்ற நோக்கத்தோடு சாதாரண மக்களை அவர்கள் வோட்டுப் போடுவதைத் தடுத்து நிறுத்துகிற ஒரு கொடுமையான செய்கை இந்த ஜனநாயக நாட்டில் இன்னும் நீடித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கிறபோது மக்களுக்கு வாக்குரிமை இருந்தும்கூட அவர்கள் சுதந்திரமாக வாக்களிப்பதற்கான வாய்ப்பை இன்னும் நம் நாட்டில் உருவாக்க முடியவில்லையே என்ற வேதனை மிகவும் பரிதாபத்திற்குரியதாகும். காரணம், வோட்டு அளிக்கப் போகிற அரிசன மக்களை வோட்டு போடப் போனால் உங்களுக்குக் குடிதண்ணீர் வசதி கிடையாது, குடிதண்ணீருக்குக்கூட வரக் கூடாது, வேலைக்கு வரக்கூடாது என்பதுபோன்ற நிர்ப்பந்தங்களை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இருபது ஆண்டுக்காலம் அதிகாரத்தில் இருந்த காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் அதே கொள்கையை மீண்டும் தேர்தல் காலத்தில் கடைப்பிடித்து மீண்டும் அதிகாரத்திற்கு வருவதற்கு வாய்ப்பை உருவாக்க முயற்சித்தார்கள். அந்த முயற்சியை எதிர்த்து மக்கள் போராடி வெற்றி பெற்றும் விட்டார்கள். அப்படி வெற்றி பெற்றுத் தந்திருக்கும் மக்களுக்கு அவர்களுடைய கஷ்டங்களைப் போக்குவதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட இருக்கின்றன என்பதுதான் இன்றைய பிரச்னை. இன்று ஏழை எளிய அரிசன மக்கள் குடி நீருக்குக்கூட வசதி இன்றிக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். தேர்தல் காலத்தில் என்னிடம் சொன்னார்கள் எங்களுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுங்கள், இல்லாவிட்டால் நாங்கள் குடி நீருக்குக்கூட வசதியில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்போம் என்று சொன்னார்கள். சுதந்திரம் பெற்று 23 ஆண்டுகள் கழிந்த பிறகும் மக்களுக்குக் குடிநீர் வசதிகூட செய்து கொடுக்க முடியாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம் என்பதுதான் அதன் பொருள். 1972-ம் ஆண்டுக்குள்ளாக சகல கிராமங்களிலும் குடிநீர்ப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ளும் என்ற வாக்குறுதி சென்ற காலத்தில் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த வாய்ப்பை 1972-க்கு உள்ளாக உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த மக்கள் அதைத்தான் எதிர்பார்க்கிறார்கள்.

இன்னொரு பிரச்னை. விவசாய அபிவிருத்திமூலம் நாம் உணவுப் பிரச்னைக்குத் தீர்வு கண்டிருக்கிறோம். முற்போக்கான நடவடிக்கைகள் எடுத்து விவசாய உற்பத்தியைப் பெருக்கி உணவுப் பிரச்னையில் வெற்றி பெற்று விட்டோம். அப்படி உணவுப் பிரச்னையில் வெற்றி பெற்றுவிட்டால்மட்டும் போதாது. விவசாயத் துறையில் உள்ள பல்வேறு பகுதிகள் மழைக் குறைவின் காரணமாக வறட்சிப் பகுதிகளாக மாறிக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். அவற்றைப் பாசனப் பகுதிகளாக மாற்ற நாம் ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டும்.

நதி நீரைத் தமிழகத்தில் முழுவதும் பயன்படுத்தி விட்டோம், இனி பூமிக்கடியில் உள்ள தண்ணீரை எடுக்க முயற்சி எடுத்துக்கொள்வோம் என்று கவர்னர் அவர்களது உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. அது போதாது. கோவை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் எவ்வளவு ஆழமாகக் கிணறுகளை வெட்டினாலும் பூமியின் அடிமட்டத்தில் தண்ணீர் கிடைக்கக் கூடிய நிலை இல்லை. ஆகவே, வேறு ஒரு பெருந் திட்டத்தை உருவாக்கினால் தவிர அந்த மூன்று மாவட்டங்களிலுமுள்ள வறட்சி நிலையைப் போக்க முடியாது. ஆகவே, மத்திய சர்க்காரை அணுகி—மைசூர் மாநிலத்திலிருந்து காவேரித் தண்ணீர் கிடைப்பது ஒரு பெரும் பிரச்னையாக இருக்கிறது. அது பற்றிப் பேசி முடிவாகவில்லை. அதேமாதிரி கேரளா—கேரள அரசோடும் பேச்சுவார்த்தை நடத்தி நம் பகுதிகளுக்குத் தண்ணீர் கொண்டுவருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இப்பிரச்னையை அவர்கள் தங்கள் தங்கள் மாநிலத்தின் சுய கௌரவம் காரணமாக வீணாகக் கடலில் போய்ச் சேரும் தண்ணீரை மற்ற மாநிலங்கள் பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்பை அளிக்காது அதற்கு மனம் இல்லாமல் தடைகள் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த நதிகளின் நீரைப் பயன்படுத்திக்கொள்வதில் இவற்றை மத்திய சர்க்காரின் அதிகாரத்திற்கு உட்படுத்தி எங்கெங்கு தண்ணீர் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று கண்டு நியாயமான விதத்தில் எல்லா மாநிலங்களும் நதி நீரை உபயோகிக்கும் வாய்ப்பை உருவாக்குவதற்கு இந்த அரசு மத்திய அரசிடம் எடுத்துச் சொல்லியாக வேண்டும்.

மற்ற நாடுகள் எல்லாம் விவசாயத் துறையில் முன்னேறுவதற்கான பல பெரிய திட்டங்களையெல்லாம் போட்டு, ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து தண்ணீர் கொண்டுவரக்கூடிய திட்டங்களையெல்லாம் அமைத்து முன்னேற்றம் கண்டுவருகிறார்கள். நம் நாட்டில் கங்கை, கோதாவரி, கிருஷ்ணா போன்ற நதிகளில் ஏராளமான தண்ணீர் இருந்தபோதிலும்கூட அது கடலில் விழுந்து போகிறதேதவிர பிற பகுதிகளுக்கு பயன் கிடைக்கும் விதத்தில் இல்லை. ஆகவே, அந்த நதிகளின் நீரை ஒன்றாக இணைத்து நாடு முழுவதற்கும் கன்னியாகுமரிவரை எல்லாப் பகுதிகளுக்கும் தண்ணீர் கிடைக்கக்கூடிய அளவிற்கு ஒரு பெரிய திட்டத்தை உருவாக்கி நிறைவேற்ற நம் அரசு மத்திய அரசை நிர்ப்பந்திக்கவேண்டும். அப்படிச் செய்தால் விவசாயப் பிரச்னையில் பெரிய, நல்லதொரு சூழ்நிலை ஏற்படும். அதன் மூலம் 75 சதவீதம் வேலையில்லாத் திண்டாட்டமும் குறையும்.

நம் நாட்டில் 80 சதவீதம் விவசாயத்தை நம்பியிருக்கும் மக்களாவர். விவசாயத் துறையில் அபிவிருத்தி காணவில்லை என்றால் நாம் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு ஒரு பரிகாரம் காண முடியாது. நாம் சில பிரச்னைகளைத் தான் தீர்க்க முடியும். முழுவதையும் தீர்க்க முடியாது. கிராமங்களை எடுத்துக்

கொண்டால் ஆறு மாதத்திற்கு வேலை, ஆறு மாதங்களுக்கு வேலை இல்லாது திண்டாடிக்கொண்டிருக்கும் நிலை என்ற நிலைமைதான் இருக்கிறது.

குடிசைத் தொழில்களை ஆரம்பித்து அவர்களின் வருவாயைப் பெருக்கிக் கொடுக்க முடியும் என்ற நம்பிக்கையிருந்தாலும் அதைச் செய்து முடிக்கப் பல சிரமங்கள் இருக்கத்தான் செய்கின்றன. சிறு தொழில்கள் ஏற்படுத்துவதன்மூலம் வேலை வாய்ப்புகளைப் பெருக்க முடியும் என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட சிறு தொழில்களை ஏற்படுத்துவதில் லைசென்ஸ் முறையில் தகராறு இருப்பதன் காரணமாகப் பல பேர்கள் பணத்தை வைத்துக்கொண்டு தயக்கம் காட்டுகிறார்கள். லைசென்ஸ் முறையிலுள்ள தகராறுதான் அதற்குக் காரணம். பஞ்சாபில் லைசென்ஸ் வாங்காமலேயே தொழில்களை ஏற்படுத்திக் கொண்டு பிறகு அரசாங்கத்திற்கு அதை அறிவிக்கிறார்கள். தொழில்களை ஆரம்பித்துவிட்டு, மனுக்கொடுக்கிறோம் என்று கொடுக்கிறார்கள். இங்கு லைசென்ஸ் பெறுவதில் பல சிரமங்கள் இருப்பதால் பணம் வைத்திருந்தும் பலர் தொழில்கள் தொடங்க முன்வருவதில்லை. ஆகவே, இந்த லைசென்ஸ் கொடுக்கும் முறையை ரத்து செய்துவிட்டு அவரவர்கள் அவரவர்கள் இஷ்டம் போல் தொழில் ஆரம்பித்துவிட்டு பிறகு அரசாங்கத்திற்குத் தகவல் கொடுக்கிற அளவிற்கு இப்படிப்பட்டதொரு முறையைப் புகுத்தினால் பணம் வைத்திருப்பவர்கள் பணத்தை முடக்கித் தொழில் துறையில் முன்னுக்கு வர வாய்ப்பு ஏற்படும், வேலை வாய்ப்பும் ஏற்பட முடியும்.

அதற்கு அடுத்தபடியாக, தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதில் வளர்ச்சி இடையாது. தொழில் துறையில் எப்படி தொழில்களை லாபகாமாகச் செய்ய முடியும், என்ன பொருள் உற்பத்தி செய்தால் நல்லது என்பதைப்பற்றிய விளக்கம் சொல்லி, அந்தத் தொழில்களை லாபகரமாக ஆக்குவதற்கு வழி வகை செய்யவேண்டும். குடிசைத் தொழில்கள் அபிவிருத்திக்காக அரசாங்கம் நிறைய உதவிகள் செய்யவேண்டும். இல்லையென்றால் அவர்களால் அதை நடத்த முடியாமல் போய்விடும்.

கைத்தறித் தொழிலில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு விசைத்தறி வழங்குவதற்கு ஏற்பாடு செய்து இருக்கிறது. ஆனால் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு அரசாங்கம் வேலை வாய்ப்புக்காக வேறு எதுவும் செய்யவில்லை. விவசாயிகளுக்கு லோன் கொடுப்பதுபோல், கைத்தறித் தொழிலில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கும் லோன் கொடுக்க வேண்டும். எந்த விதமான முன்னேற்றமும் இல்லாமல், ஊதிய உயர்வும் இல்லாமல் அவர்கள் கஷ்டப் படுகிறார்கள். இப்போது இருக்கும் விலைவாசி ஏற்றத்தால் அவர்கள் வருமானம் போதாமல் கஷ்டப்படுகிறார்கள். நூல் விலை ஏறினால் அவர்களுக்கு ஊதியத்தில் கூலி குறைகிறது. நூல் விலை குறைந்தால் அவர்கள் ஊதியத்தில் அதிகம் கிடைக்கிறது. ஆகவே, கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் உற்பத்தி செய்வதற்கு என்று குறிப்பிட்ட சில ரகங்களை ஒதுக்கிவிட்டு, அந்த அடிப்படையில் அவர்களுடைய நலனைப் பாதுகாப்பது என்பதை நன்கு பரிசீலனை செய்து, அந்த வழியில் முடிவு காணுவோமேயானால் அந்தத் துறையில் இருக்கும் மக்களுக்கு நாம் நல்லதொரு பரிகாரம் செய்ய முடியும். நெசவுத் தொழிலில் இருக்கிறவர்களுக்கு ஒரு நாளைக்கு ரூ. 1 அல்லது ரூ. 1-50 கூலியாகக் கிடைக்கிறது. இதை நம்பி அவர்கள் குடும்பமே வாழும் நிலை இருக்கிறது. ஆகவே, அவர்கள் கஷ்டத்தை நீக்குவதற்காக அரசாங்கம்

முன்னைக்கொடுத்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தொழில் துறையில் விவசாயத் துறையில் உழைக்கும் மக்களின் வருவாயை உயர்த்துவதற்கு, நாட்டின் உற்பத்தித் துறையில் எவ்வளவு முதலீடு செய்யப் போகிறோமோ, அந்த உற்பத்தியின் மூலமாக வரும் வருமானத்தை செலவை வைத்துத்தான் நாட்டின் வருமானத்தை உயர்த்திக் கொள்ள முடியும். அப்படிப்பட்ட சூழ்நிலை நம்முடைய அறிக்கையில் எந்த அளவுக்கு வாய்ப்பு இருக்கும் என்பதைத் திட்டவட்டமாக சொல்லவில்லை, இருந்தாலும், ஆங்காங்கு இருக்கும் பிரச்னைகளில் அரசாங்கம் முற்போக்கு நடவடிக்கைகளை மக்களுக்குப் பயனுள்ள நடவடிக்கையாகக் கருதி, உறுதியாக எடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் விவசாயிகளுக்குக் கொடுத்த கடனை இந்தத் தேர்தல் முடிந்த[redacted]ன வசூல் செய்ய ஆரம்பித்து இருக்கிறார்கள். சில இடங்களில் ஜப்[redacted]டீசுகள் கொடுத்து இருக்கிறார்கள். தேர்தல் முடிந்த உடனே இப்ப[redacted]கிறார்கள் என்பதால் மக்களிடையே ஒரு பீதி ஏற்பட்டு இரு[redacted]. அந்தப் பகுதி வறட்சி நிரம்பிய பகுதி. அதனால் அங்கே இருப்பவர்களுக்கு வருமானம் குறைந்ததால் வாங்கிய கடனைத் திருப்பிக் கட்ட முடியாமல் திண்டாடிக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அங்கே ஜப்தி நோட்டீசு கொடுப்பதை, ஜப்தி ஜாரி செய்வதைக் கொஞ்சம் அரசாங்கம் கவனத்தில் எடுத்துக்கொண்டு, 'அப்படிப்பட்டவர்களுக்குக் கொஞ்சம் வாய்தாக் கொடுத்து அதை நிறுத்தி வைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து ரோடுகள், யூனியன்கள் ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் துணை ரோடுகள் போடப்பட்டன, அதை இன்னும் சரிவர செய்யவில்லை. பஞ்சாயத்து யூனியனில் கேட்டால் கவர்ன்மெண்ட் சாங்ஷன் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். அப்படிச் சாங்ஷன் கொடுத்தாலும் நிறைவேற்றுவதற்குக் கால தாமதம் ஆகிறது. அதோடு, அரசாங்கமும் சாங்ஷன் கொடுப்பதில் கால தாமதம் செய்கிறது. பணம் சரிவரக் கொடுப்பது இல்லை என்று புகார் சொல்கிறார்கள். பஞ்சாயத்தைக் கேட்டாலும் பஞ்சாயத்துக்கு வருமானம் கிடையாது என்று சொல்கிறார்கள். இந்த அடிப்படையில் அந்த ரோடு பிரச்னை ஆரம்பக் காலத்தில் எப்படி இருந்ததோ, அதே நிலையில் இருக்கிறது. ரோடுகள் சரிவரப் போடுவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது குடியிருப்பு மனைகள் சம்பந்தமாக நகரத்தில் இருப்பவர்களுக்குத்தான் அரசாங்கம் உதவி செய்து வருகிறது. கிராமத்தில் இருப்பவர்களுக்கு வீட்டு வசதி செய்யும் வாய்ப்பு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். கிராமத்தில் சேரியில் ஒரு வீட்டில் 3 பேர்கள் வசிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு வீட்டு வசதி செய்து தரவேண்டும். இவ்வளவு ஜனத்தொகை இருந்தால் அந்தக் கிராமத்திற்கு வீட்டு வசதி செய்து தரப்படும் என்ற முறையை வகுத்துக்கொண்டு, அதற்குத் தக்கவாறு ஒட்டுமொத்தமாக வரும் திட்டத்தில் அரசாங்கம் இதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுவிலக்கு ஒரு கேள்விக் குறியாகவே இருக்கிறது. தேர்தல் காலத்தில் கூட பல பேர்கள் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். மது விலக்கு ஏன் கேள்விக் குறியாக வைக்கப்பட்டு இருக்கிறது என்ற விவரம் எனக்குப் புரிய வில்லை. மதுவிலக்குத் தோற்றுவிட்டது என்று எல்லோரும் சொல்கிறார்கள். ஆனால் சபையில் சொல்வதற்குப் பயப்படுகிறார்கள். கிராமத்தில் இருக்கும் மக்களில் 50 சதவிகிதம் மது விலக்குத் திட்டத்தை மீறி மது உபயோகப் படுத்துகிறார்கள். வசதி உள்ளவர்கள் எப்படியும் மது அருந்துவதற்கு பர்மிட் வாங்கி விடுகிறார்கள். ஆனால் வசதி இல்லாதவர்கள் பயந்து பயந்து மறைந்து மறைந்து குடிக்கிறார்கள். இப்போது கிராமத்தில் எங்கே பார்த்தாலும் கள் மொந்தை தொங்குகிறது. இது போலீஸ்காரர்களுக்குத் தெரியும். அவர்களும் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். இந்தப் பிரச்னையை ஏன் மறு பரிசீலனை செய்யக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். கள் சாப்பிடுவது ரொம்ப நல்லது என்று டாக்டர்கள் சொல்கிறார்கள். கள் சாப்பிடுவதால் தவறு இல்லை என்று சொல்கிறார்கள். பெரும்பாலும் டி.பி. வியாதிக்காரர்கள் கள் சாப்பிட்டால், டி.பி. நோய் போய்விடுகிறது என்று சொல்கிறார்கள். அதனால் அந்த வியாதியைக் கட்டுப்படுத்த முடிகிறது என்று சொல்கிறார்கள். டி. பி. சானடோரியத்தில் இடம் இல்லை என்று சொல்கிறார்கள். வைத்தியம் செய்ய மருந்து இல்லை என்று சொல்கிறார்கள். இடம் இல்லை, மருந்து இல்லை என்று சொல்கிறபோது, கள் குடிப்பதால் இந்த வியாதி குணமாகிறது என்று சொல் வதால் ஏன் இந்த விஷயத்தில் மறுபரிசீலனை செய்யக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். சாராயத்தை வேண்டுமானால் தடைசெய்துவிட்டு போதை குறைவாக உள்ள மதுவை உபயோகிக்கலாம், தவறு இல்லை என்று கருதி, அது சமூக விரோதச் செயல் என்று கருதாமல், அந்த அளவுக்கேனும், மாறுதல் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கம் விலைவாசிகள் குறையத் தீவிரமாக நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும். இதை ஏழை எளிய மக்கள் மிகவும் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல, வேலை வாய்ப்புக்காகவும், விலைவாசி ஏற்றத்தைக் குறைப்பதற்காகவும் அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்

தேர்தல் காலத்தில் நடந்த கலவரத்தைப்பற்றிச் சொன்னார்கள். இன்னும் பல இடங்களில் தேர்தல் கலவரங்கள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. அவற்றையெல்லாம் தடுத்து நிறுத்தி, நாட்டு மக்கள் முன்னேறுவதற்கும், நல்ல சூழ்நிலையில் வாழ்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி எனக்குப் பேச வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

* திரு. தோப்பூர் திருவேங்கடம்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்திலே கவர்னர் பேருரைக்கு நன்றி தெரி வித்துப் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

நேற்றைய தினமும் இன்றைய தினமும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பல்வேறு கருத்துக்களை இந்த மாமன்றத்தில் தெரிவித்திருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் இங்கே பேசுகிற நேரத்தில்

தேர்தல் காலத்தில் ஏற்பட்ட சில பல அசம்பாவிதங்களைப்பற்றிக் குறிப்பிட்
டார்கள். எங்களுடைய தொகுதியிலேகூட காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த
பலர் கழகத் தோழர்களைத் தாக்கினார்கள். வேலூருக்கு அருகிலே என்னுடைய
தொகுதியிலிருக்கும் அரியூர் என்ற கிராமத்தில் கழகத் தலைவர் திருநாவுக்
கரசு செட்டியார் அந்த ஊரின் ஊராட்சி மன்றத்தலைவர், அவரைத் தாக்கி
மண்டையைப் பிளந்துவிட்டார்கள். அவரை அரசாங்க மருத்துவ மனையில்
அனுமதித்துவிட்டு இப்போதுதான் வெளியே வந்த நிலைமையைப் பார்க்
கிறோம். பரவலாகக் கழகத்தைச் சார்ந்தவர்கள் தாக்கப்பட்டு இருக்கிறார்கள்
என்பதை அத்தனை பேரும் எடுத்துச் சொன்னார்கள். ஆனாலும் இங்கே
காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள்தான் தாக்கப்பட்டார்கள் என்று
எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது உண்மையல்ல. அதை கழகத்தைச்
சார்ந்தவர்கள் பொறுமையோடும், அண்ணா காட்டிய அன்பு உள்ளத்தோடும்
எந்த அளவுக்குப் பொறுத்துக்கொண்டிருந்தோம் என்பதை நடைபெற்று
முடிந்த அமைதியான தேர்தல் வெளிப்படுத்தும் என்பதைக் குறிப்பிட ஆசைப்
படுகிறேன்.

காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசுகிற
நேரத்தில் குறிப்பிட்டார்கள். Proportional Representation வேண்டுமென்று
குறிப்பிட்டார்கள். இதைத்தான் நம்முடைய பெரும் தலைவர் பேரறிஞர்
அண்ணா அவர்கள்கூட அன்றைக்கு இந்த மாமன்றத்திலேயும் சரி வெளியிலேயும் சரி
Proportional Representation விகிதாசார முறையில் வாய்ப்புகள் எதிர்க்
கட்சிகளுக்கு அளிக்கப்பட வேண்டுமென்று எதிர்க்கட்சியாக இருந்த நேரத்
தில் சொன்னார்கள். அப்போது எல்லாம் கொஞ்சமும் கவனிக்காமல், அண்ணா
அவர்களுக்கு ஆறுதல் வார்த்தைகூட சொல்லாமல் இருந்து விட்டார்கள்.
ஆனால் இன்றைக்கு அதைப்பற்றிப் பேசுகிறார்கள். கிராமப்புறங்களில் ஒரு
பழமொழி சொல்வார்கள், "கண் போன பிறகு சூரிய நமஸ்காரம்" என்று.
கண் இருக்கும்போது சூரிய நமஸ்காரம் செய்வதில் பலன் கிடைக்கும், கண்
இழந்த பிறகு சூரிய நமஸ்காரம் செய்தால் எந்தப் பலனும் கிடைக்காது,
காங்கிரஸ்காரர்கள் இப்போது Proportional Representation கேட்பதினால்
எந்த பலனும் கிடைக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு
இருக்கிறேன்.

தேர்தல் நடந்து முடிந்துவிட்டது, மக்கள் தீர்ப்பு அளித்திருக்கிறார்கள்.
அண்ணா அவர்கள் குறிப்பிடுவார்கள், மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்று.
அந்தத் தீர்ப்பை ஏற்றுக்கொண்டுதான் நாம் அனைவரும் இங்கே வந்திருக்
கிறோம். கவர்னர் பெருமான் உரையிலே மிக முக்கியமாக அவர் முதலிலேயே
எடுத்த எடுப்பிலேயே குறிப்பிட்டிருக்கிறார்.

This Government will fully report the sentiments of the
opposition

என்று குறிப்பிட்டிருப்பதைக் கனம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வரவேற்
பார்கள் என்று நம்புகிறேன். ஆனால் அவர்கள் அதிலே குறிப்பிடாததைப்
பற்றி வருத்தப்பட்டார்கள், குறிப்பிட்டிருப்பதை வரவேற்றுப் பேசுவதற்கு
அவர்களுக்குத் துணிவு இல்லை. ஆனாலும் கவர்னர் அவர்களின் உரையில்
பரவலாகப் பல்வேறு நல்ல அம்சங்கள் மிளிர்வதை இந்த மன்றத்தில் கூறாமல்
இருக்க முடியாது.

நம்முடைய மாநில அரசு செய்கின்ற எல்லா நல்ல காரியங்களுக்கும் மத்திய
அரசின் ஒத்துழைப்பு வேண்டும் என்பதை கவர்னர் உரையில் குறிப்பிட்
டிருக்கிறார்கள். மாநில அரசு இங்கே இருக்கிற ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு
கொடுத்தது. அந்த ஊதிய உயர்வைச் சரிக்கட்டுவதற்கு மத்திய அரசு உதவி
புரியவேண்டும். மத்திய அரசு அவ்வப்பொழுது அவர்களுடைய ஊழியர்
களின் ஊதியத்தை உயர்த்தவேண்டும் என்று சொல்கிறது. அதே நேரத்தில்
மாநில அரசில் இருக்கும் ஊழியர்களின் ஊதியத்தைப்பற்றிக் கவலைப்படுவ
தில்லை என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது குறித்து மத்திய அரசை
நம்முடைய அரசு எப்பொழுதும் தட்டிக் கேட்பதற்குத் தயாராக இருக்கிறது.
தட்டிக்கேட்டு நிச்சயம் பெற முடியும் என்பதிலே நாமெல்லாம் நம்பிக்கை
வைத்திருக்கிறோம்.

கவர்னர் அவர்களின் உரையிலே விவசாயத்தைப்பற்றி மிகவும் விரிவாகக்
குறிப்பிட்டிருக்கிறார்கள். நம் நாட்டிலிருக்கிற பழமையான விவசாய முறை
களைக் கையாண்டுகொண்டிருப்பதால் நிச்சயமாக விவசாயத்தில் முன்னேற்றம்
காணமுடியாது, விஞ்ஞான முறையைக் கையாண்டால்தான் விவசாயம் நல்ல
முறையில் விருத்தி அடையும் என்று அழுத்தம் திருத்தமாக கவர்னர்
அவர்கள் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார். விவசாயிகள் இன்றைக்கு எந்த
அளவுக்குப் பழமையான முறைகளைக் கைவிட்டு, புதுமையான விஞ்ஞான
முறைகளைக் கடைப்பிடிக்கும் பாதையிலே அமைந்துச் செல்லப்படவேண்டும்
என்பதை இந்த அரசு நன்றாக உணர்ந்திருக்கிறது. அந்த முறையிலே
பார்த்தால், சென்ற 20 ஆண்டுக் காலத்திலே டிராக்டர்கள் வாங்குவதற்கு
ஒதுக்கப்பட்ட தொகையைவிட, எங்களுடைய கட்சி அரசும் பொறுப்பை
ஏற்றுக்கொண்டவுடன் அதிகமான தொகையை ஒதுக்கி, விஞ்ஞான முறைப்படி
விவசாயம் செய்வதற்கு வழிமுறைகள் வகுத்துக்கொடுத்திருக்கிறது என்பதை
உண்மையிலேயே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த
முறையிலேதான் உற்சாகம் ஏற்பட்டு, உற்பத்தி அதிகமாகப் பெருகியிருக்கிறது
என்பதையும் இங்கே உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள்.

குறிப்பாக எங்கள் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதிகள்
அதிகம் கிடையாது, கிணற்றுப்பாசனம்தான் அதிகம். பம்புசெட்கள்மூலம்
தான் கிணற்று நீரை இறைக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எங்களுடைய
மாவட்டத்தில் பல அணைத்திட்டங்கள் வேண்டும் என்று நீண்டநெடுங்கால
மாகக் கூறிவருகிறோம். ஆனால், இதுவரையில் தண்டரை அணை என்ற ஒரு
அணைதான் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. வேலூருக்கு 30 மைல் தொலைவில்
மேலரசம்பட்டி என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அங்கே ஒரு ஆறு
செல்கிறது. அதன் குறுக்கே ஒரு அணை கட்டினால் சுமார் 5,000 ஏக்கர்
நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும் என்று மாண்புமிகு பொதுப்பணித்
துறை அமைச்சர் அவர்களை அங்கே அழைத்துச்சென்று காண்பித்திருக்
கிறேன். அவர்கள் இதைக் கனிவோடு பரிசீலித்து அவன செய்வார்கள்
என்று நம்புகிறேன். நீண்ட நெடுங்காலமாக வெள்ளைக்காரர்கள் இந்த
நாட்டை ஆண்ட காலத்திலிருந்து அந்தப் பகுதி மக்கள் இந்த அணையைக்
கட்டவேண்டும் என்று கோரிக்கை விடுத்துக்கொண்டே வருகிறார்கள். அந்தக்
கோரிக்கையை நிச்சயம் நம்முடைய அரசு நிறைவேற்றும் என்ற நம்பிக்கையை
அந்தப்பகுதி மக்களுடைய சார்பிலே இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, பம்புசெட்களுக்கு கனெக்ஷன் கொடுக்கின்ற நேரத்தில் மின்வாரியம் சிலரிடத்தில் கடன் தொகையைப் பெறுகிறார்கள். கடன் தொகையைப் பெறவேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், கடன் தொகையைக் கொடுத்தால்தான் மின் இணைப்புத் தரப்படும் என்ற நிலைமை இல்லாமல், கடன் தொகையைக் கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும், உரிய நேரத்தில் மின் இணைப்பு வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, பம்புசெட்களுக்கு மின் இணைப்பு தருவதற்கு முன்பாக, இன்னொரு சிக்கலும் இருக்கிறது. பாலாறு பேசின் ரூல்ஸ், பாலாறு படுகை விதிகள் என்று எங்கள் மாவட்டத்தில் இருக்கின்றன. அந்த விதியை அடியோடு ரத்து செய்யவேண்டும் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். காரணம் அந்த விதியின்படி பாலாற்றுப் படுகைக்குத்தான் மின் இணைப்புக் கொடுக்கிறார்கள். சான்றிதழ் [illegible] கிடையாது. ஆகவே, இந்த விதியை ரத்து செய்தால் விவசாயிகளுக்கு மிகவும் அனுகூலமாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

தென் ஆர்க்காடு, மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் சிறு விவசாயிகள் மேம்பாட்டு நிறுவனங்களை ஏற்படுத்தியிருப்பதை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். அதிலே எங்களுடைய மாவட்டத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றி இங்கே பேசினார்கள், பரவலாகக் குறிப்பிட்டார்கள். இது தேசியப் பிரச்சினை என்று கவர்னர் அவர்கள் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து செயல்பட்டால்தான் இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும் என்பதையும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். படித்துவிட்ட வாலிபர்கள் பலர் கிராமப்புறங்களிலிருந்து மிகப் பரவலாக வேலையைத் தேடிக்கொண்டு வருகிற நிலைமை இருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் விவசாய பல்கலைக்கழகம் ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது. அதேபோல் விவசாயக் கல்லூரி ஒன்று மதுரையில் நிறுவப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி மெத்த மகிழ்ச்சியடைகிறேன், பாராட்டுகிறேன். அதைப்போலவே ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் விவசாய கல்லூரி நிறுவப்படவேண்டும். விவசாய கல்லூரிகள் வெறும் பட்டம் அளிக்கும் கல்லூரிகளாக மட்டும் இல்லாமல், விஞ்ஞான பட்டதாரிகளையும், விவசாயிகளுக்குத் தேவையான நவீன விஞ்ஞான முறைகளையும் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். விவசாயக் கல்லூரிகளில் படித்து பட்டம்பெற்ற வாலிபர்கள் கிராமப்புறங்களுக்குச் சென்று தான் பெற்ற விஞ்ஞான அறிவை வைத்துக்கொண்டு, அங்கே விவசாயத்தை முன்னேற்றுவதற்கு வழிகளை வகுக்க வேண்டும். அந்த முறையில் அத்தகைய விவசாயக் கல்லூரிகள் நடத்தப்பட வேண்டும் என்ற இந்தப் புதிய யோசனையை நான் இந்த மாமன்றத்தின்முன் வைக்க விரும்புகிறேன்.

அதைப்போலவே குறுகிய காலத் திட்டங்களினால் நம்முடைய மாநிலம் பயன் அடையாது என்று கருதி, நீண்ட காலத் திட்டத்தின் அடிப்படையில் 10 ஆண்டு காலத் திட்டத்தை நம்முடைய மாநில அரசு தீட்டி இருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். நம்முடைய மாநிலத்திற்கு 1970-71-ம் ஆண்டுக்கான திட்டத்தை மத்திய அரசு ஏற்க வேண்டும். 1971-72-ம்

ஆண்டுக்கும் சேர்த்து இரண்டு ஆண்டுக்கான திட்டத்தை மத்திய அரசு ஏற்க வேண்டும் என்ற கோரிக்கையை நாம் வற்புறுத்திக் கேட்கவேண்டும். 1970-71-க்கு ரூ. 90 கோடிக்கான மதிப்பிலும் 1971-72-க்கு ரூ. 100 கோடிக்கான மதிப்பீடும் உள்ள திட்டத்தைக் கொடுத்திருக்கிறோம். மத்திய அரசு அதை ஏற்றுக்கொண்டு, நம்முடைய மாநிலத்திற்கு நிச்சயம் அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்பதையும் இங்கே வற்புறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய கணியம்பாடித் தொகுதியிலே பரவலாக வேலையில்லாத் திண்டாட்டம் இருந்துவருகிறது. கூட்டுறவு முறையில் சிறு தொழில்களை ஆரம்பிப்பதற்கு அங்கே பலர் முன்வருகிறார்கள் என்றாலும் அதிகாரிகள் அதற்கு போதிய உற்சாகத்தை அளித்து, அந்தத் தொழில்களை ஆரம்பித்து வைக்கக் கூடிய சூழ்நிலை இல்லை. அங்கே சிறு தொழில்கள் ஆரம்பிப்பதற்கு, செங்கல் தொழில்போல பல தொழில்கள் ஆரம்பிப்பதற்கு வேண்டிய வசதிகளும், வாய்ப்பும் இருக்கின்றன. ஆகவே, அங்கே அவைகளைப் பயன்படுத்திக்கொண்டு கூட்டுறவுத் துறையிலே சிறு தொழில்களை ஆரம்பிப்பதற்கு நம்முடைய அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் மோத்தக்கல் என்ற கிராமம் இருக்கிறது. 10 நாட்களுக்கு முன்பு அங்கே 14 வீடுகள் எரிந்து சாம்பலாகிவிட்டன. அந்த வீடுகளை இழந்தவர்கள் எந்த விதமான உணவுப் பொருள்களும் இல்லாமல் பரிதவித்துக்கொண்டு வெளியே இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அவர்களுக்கு நமது முதல் அமைச்சர் அவர்களின் நிவாரண நிதியிலிருந்து ஏதாவது கணிசமான தொகை ஒதுக்கி தரவேண்டும் என்று இந்த மாமன்றத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எதிர்காலத்தில் நம்முடைய நாட்டிலே விவசாயிகளுக்கு, மற்ற நடுத்தர மக்களுக்கு, பின்தங்கிய மக்களுக்கு அனுகூலமாகப் பல்வேறு திட்டங்களை உருவாக்குவதற்கான வழிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன நமது கவர்னர் அவர்களின் உரையிலே. ஆகவே, கவர்னர் அவர்களுடைய உரையை வரவேற்று, நன்றி கூறி, விடை பெறுகிறேன். வணக்கம்.

*திருமதி ஜோதி வெங்கடாசலம்: மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்கள் ஆற்றிய உரையின்மீது சில அபிப்பிராயங்களைத் தெரியப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். அங்கத்தினர்கள் பலரும் தேர்தலின் போதும், தேர்தல் முடிந்ததும் ஏற்பட்ட பல சூழ்நிலைகளைப்பற்றியும், அசம்பாவிதமான சம்பவங்களைப்பற்றியும் பேசினார்கள். இரு தரப்பினரும் பேசினார்கள். ஆளும் கட்சியைச் சார்ந்த அங்கத்தினர்கள் நிஜலிங்கப்பா காங்கிரசைப் பற்றிப் பேசும்பொழுது, திரு. மலைச்சாமி அவர்கள் பாம்பின் கதையைக் கூறி, பாம்பைப்போல் சீறி விழுகின்ற ஒரு வாய்ப்பை கட்சித் தலைவர் அவர்கள் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் எனக்கு ஒரு கதை ஞாபகம் வருகிறது. முகம்மது நபி அவர்கள் தினந்தோறும் பல சிஷ்யர்களை வைத்துக்கொண்டு உபதேசம் செய்துகொண்டிருக்கும்பொழுது ஒரு நாள் தேள் ஒன்று சிஷ்யர் ஒருவரைக் கொட்டிவிட்டதாம். அந்தச் சிஷ்யருக்கு கோபம் வந்து, அதைக் கொன்றுவிடவேண்டும் என்று சொன்ன பொழுது, முகம்மது நபி அவர்கள் அதைக் கொல்லக்கூடாது, விட்டுவிட

வேண்டும் என்று சொன்னார்கள். இரண்டாவது நாளும் அதேமாதிரி மற்றொரு சிஷ்யரைத் தேள் கொட்டிவிட்டது. அந்தச் சிஷ்யருக்கும் கோபம் வந்து தேளைக் கொன்றுவிட வேண்டும் என்று சீறி விழுந்தபோது, முகம்மது நபி அவர்கள் கொல்ல வேண்டாம், விட்டுவிடுங்கள் என்று கூறினாராம். அதே போன்று மூன்றும் நாளும் மறுபடியும் தேள் மூன்றாவதாக ஒரு சிஷ்யரைக் கொட்டிவிட்டது. அப்படி எல்லாச் சிஷ்யர்களுக்கும் கோபம் வந்து, அன்றைக்கே அந்தத் தேளைக் கொன்றிருக்கலாம் என்று கூறியபோது, முகம்மது நபி அவர்கள் அதன் குணம் அப்படி என்றாலும், உங்களுடைய நல்ல குணத்தைக் கெடுத்து நீங்கள் அதைக் கொல்ல வேண்டாம் என்றாராம். அப்படி நீங்கள் சீறி விழுந்தாலும், நாங்கள் உங்களிடம் எங்கள் பொறுமையை இழந்து விடாமல் இருப்போம். ஆகவே, அப்படிப்பட்ட எண்ணத்தை மாற்றிக் கொண்டு, நல்ல முறையில், நிலைமைகள் இருப்பதாக கவர்னர் உரையில் முதலிலே கூறியிருக்கிறார்கள், அந்த வகையில் நல்ல முறையில் எதிர்க்கட்சிகளை ஆளுங்கட்சியினர் நடத்துவார்கள் என்று, அந்த முறையில் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் நடந்து கொண்டு, இரு தரப்பிலும் நடந்த சம்பவங்களைப் பேசிப் பேசி மற்றவர்கள் மனம் புண்படும் அளவில் இல்லாமல் இருக்க வேண்டும். வள்ளுவர் குறிப்பிட்டது போல், 'தீயினாற் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே நாவினாற் சுட்ட வடு' என்ற அளவில், எல்லாம் தெரிந்த இவர்கள் அப்படியெல்லாம் கூறக்கூடாது என்று தாழ்மையோடு முதல் அமைச்சரிடம் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. பெ. மலேச்சாமி: தலைவர் அவர்களே, நான் சொன்ன உதாரணம், பாம்பைப் போல் சீற உரிமை வேண்டும் என்றேனேயல்லாது, தேளைப் போலக் கொட்ட வேண்டும் என்று சொல்லவில்லை. சீறுவதில் ஆபத்தில்லை. தேள் கொட்டுவது போன்றது அல்ல. சீறுவதற்குத்தான் உரிமை கொடுக்க வேண்டும் என்று எங்கள் தலைவரிடம் கேட்டேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எப்படியோ, பாம்பும் தேளும் சட்ட சபையில் வராமல் இருந்தால் நல்லது! (சிரிப்பு)

திருமதி ஜோதி வெங்கடாசலம்: வராமல் இருக்கவேண்டுமென்றுதான் இதைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேசவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

உணவு உற்பத்தி ஆகியிருக்கிறது. 1966-67-ல் இருந்த 54 லட்சம் டன்னிலிருந்து இன்றைக்கு 67 லட்சம் டன்னாகப் பெருகியிருப்பது பெருமைக்குரியது தான். பெருமைப்படவேண்டும் என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். மூன்று போகம் சாகுபடி செய்ய தஞ்சாவூர் ஜில்லாவில் வசதி செய்தது எங்கள் அரசாங்கம். அதை வளர்ப்பதில் இந்த அரசாங்கம் நல்ல முறையில் செயல் பட்டிருக்கிறது. உறுதுணையாக இயற்கையும் உதவியளித்திருக்கிறது.

அரசாங்க அலுவலர்களுக்குச் சம்பள உயர்வு கொடுக்க, பேய்த் பைணன்ஸ் கமிஷன் இந்த அரசாங்கத்தின் சிபாரிசுகளை ஏற்றுக்கொள்ளவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மற்ற மாநிலங்களுடைய சிபாரிசுகளை ஏற்றுக் கொண்டிருக்கும்போது, இந்த மாநிலத்தின் சிபாரிசை மட்டும் ஏன் ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்குக்காரணம் என்ன? ஒருகால், மற்ற மாநிலங்கள் ஏற்கனவே அமுல் நடத்திவிட்டு அதன் பிறகு சிபாரிசுகளை அனுப்பினார்களா, ஆகவே வேறு வழியில்லாமல், அவற்றை ஒப்புக் கொண்டார்களா, நாம்

அப்படிச் செய்யாததால் ஏற்றுக்கொள்ளவில்லையா என்பதை மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து தெளிவாகக் குறிப்பிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மின்சார உற்பத்தி அதிகமாக ஆகியிருக்கிறது. பல கிராமங்களுக்கு வசதி கள் கொடுத்திருக்கிறது. எனக்கு ஒன்று ஞாபகம் வருகிறது. அப்பொழுது எலெக்ட்ரிசிடி அமைச்சராக இருந்த திரு. வெங்கட்டராமன் அவர்கள் ஒரு சமயம் இந்தச் சபையில் கூறியிருக்கிறார்கள். அவர்கள் ஒரு நாள் விமானம் மூலம் வந்து கொண்டிருந்தபோது, அதில் பல அயல் நாட்டுக்காரர்களும் இருந் திருக்கிறார்கள், நம்முடைய சென்னையை நெருங்கும்போது, விமானத்திலிருந்து பார்க்கும்போது, பளபளவென்று சென்னை நகரம் அழகாக இருக்கிறது என்று அவர்களெல்லாம் ஆச்சரியப்படும் அளவில் வெளிச்சம் தெரிந்திருக்கிறது. அந்த அளவிற்கு மின்சார வசதிகளை ஏற்படுத்திய அவரையும் பாராட்டி, இந்த அரசாங்கத்தையும் பாராட்டினார்களாம். அது எனக்கு ஞாபகம் இருக்கிறது. பல லட்சக் கிராமங்களுக்கு மின்வசதி கொடுத்திருந்தாலும், அதிகப்படியாக இன்னமும் கொடுக்கப் போவதாக கவர்னர் உரையில் இருப்பதைப் பார்க்கிறோம். ஸ்ரீரங்கம் தொகுதி எனக்குப் புதிதாக இருந்தாலும், தேர்தல் சமயத்தில் சென்று பார்க்கும்போது—ஜாதி, ஸ்ரீரங்கம் தொகுதியைப் பொறுத்தமட்டில், வகுப்பு வாதத்தைக் கிளப்ப வேண்டாம் என்றாலும்—பள்ளர், பறையர் போன்ற வர்கள் வசிக்கும் இடங்களில் மின்சார வசதியோ இல்லை. மின்சார வசதியும், குடிநீர் வசதியும் இல்லாமல் அவர்கள் கஷ்டப்படும் நிலை இருக்கிறது. கிராமங்கள் ஏற்பட்டிருக்கிறது. எந்தக் காரணமாக இருந்தாலும், தயவு செய்து அதைக் கவனித்து, ஆவன செய்ய வேண்டும். தமிழ் நாட்டில் பல ஆயிரக்கணக்கான கிராமங்கள் இருக்கின்றன. அவசரமாக, குறிப்பாக எங்கெல்லாம் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமோ அந்த முறையில் அரசாங்கம் கவனத்தில் கொண்டு, அவர்களுக்கு மின்சார வசதியையும், குடிநீர் வசதியையும் நல்ல முறையில் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதில், கருவிகளுக்கும் கிணறு வெட்டவும் என்று கொடுக்கப்படுகின்றன. அதற்கான ஸ்கீம்களுக்குப் பணங்கள் ஒதுக்கப் பட்டிருக்கின்றன. அதைவிட முக்கியமானது, இந்தக் கடன்களெல்லாம், நேரிடையாக விவசாயிகளுக்குச் சேருகின்றதா என்று பார்ப்பதும், தண்ணீர் வசதியுடைய இடத்தில் கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்றனவா என்று பார்க்கவும், அவர்களுக்கு இந்தத் தொகைகளெல்லாம் நல்ல முறையில் பயன் படும் அளவில் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்கு இந்த வாய்ப்பினைத் தந்த தலைவருக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. மு. சுருளிவேல்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதற்கண் எங்களைப் போதத் தொண்டிற்கு ஆளாக்கி, இன்றைய தினம் எங்களை அனாதையாக்கிச் சென்றுவிட்ட அண்ணாவுக்கு அஞ்சலி செலுத் துகிறேன்.

இருபது ஆண்டுக்காலமாக, காங்கிரசின் கோரப் பிடிப்பில் இருந்த போடி நாயக்கனூர் சட்டமன்றத் தொகுதியில், பொருளாதார ஆதிக்கம் பெற்ற, தனிப் பட்ட ஒரு குடும்பத்தின் இரும்புப் பிடியில் இருந்த போடி சட்டமன்ற தொகுதி

யில், முதன்முறையாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைக்குக் கிடைத்த வெற்றியை, நான்கு ஆண்டுக்கால கழக அரசின் சாதனைகளுக்குக் கிடைத்த வெற்றியை, எதிர்காலத்தில் சோஷலிச சமுதாயம் அமைய கழக அரசு என்ன செய்ய இருக்கிறது என்ற திட்டங்களுக்குக் கிடைத்த வெற்றியை, தமிழ் இனத்தின் பகை முடித்து, நகை முழக்கும், படை முகத்துப் பெருவீரர், தமிழ் நாட்டின் முதல்வர், எங்கள் கலைஞர் காலடியில் சமர்ப்பித்து என்னுடைய கன்னிப் பேச்சைத் துவங்குகிறேன்.

நான் என்னுடைய உரையைத் துவங்குவதற்கு முன்னால், என்னைச் சட்ட மன்றத்திற்கு அனுப்பிய என்னுடைய தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், இந்தப் பெரிய வெற்றியை ஈட்டித் தந்த கழகச் செயல்மறவர்களுக்கும், முற் போக்குக் கூட்டணியின் தொண்டர்களுக்கும் இந்த மன்றத்தின் மூலமாக என நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

இத்திங்கள் 24-ம் நாளன்று நம்முடைய ஆளுநர் அவர்கள் மிகவும் சிறப்பான தொரு உரையைச் சட்டமன்றத்தில் நிகழ்த்தியிருக்கிறார்கள். எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் அந்த உரையிலுள்ள சிறப்பான அம்சங்களை விளக்கி யிருக்கின்ற காரணத்தால், இந்த உரைக்கே முத்தாய்ப்பாக விளங்குகின்ற ஓர் அம்சத்தை மட்டும் விளக்குவது என்னுடைய கடமை என்று நான் கருது கிறேன்.

இதுவரை எந்த மாநில அரசும் மேற்கொள்ளாத ஒரு செயலை, நம்முடைய தமிழக அரசு மேற்கொள்ள முன்வந்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரி வித்துக்கொள்கிறேன். அவ்வப்போது ஏற்படுகின்ற சூழ்நிலைகளையும், கொள்கை களையும் கொண்டு திட்டங்களை அமைக்காமல், தமிழ்நாட்டில் ஒரு சமதர்ம சமுதாயம் அமைய என்னென்ன ஆக்கபூர்வமான காரியங்கள் செய்ய வேண்டு மென்பதை ஒரு நீண்டகாலக் கண்ணோட்டத்தில் தயாரிக்க 1971-லிருந்து 1981 வரை அதாவது பத்தாண்டுக் காலத்திற்கு ஒரு நல்ல திட்டத்தைத் தயாரிப்ப தற்கு தமிழக அரசு மாநில திட்டக் குழுவை அமைக்க முன்வந்திருப்பதற்கு என் நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

ஆனால், அதே சமயத்தில் இந்தத் திட்டக் குழு அமையும் நேரத்தில் நாம் விழிப்போடு இருக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இந்தத் திட்டக் குழுவிலே அங்கம்பெறக் கூடிய பொருளாதார நிபுணர்களைப்பற்றி நாம் சிறிது புரிந்துகொள்ள வேண்டும். இன்றையதினம் இந்த நாட்டிலே பிரபலமாகி யிருக்கும் பொருளாதார நிபுணர்கள் எல்லாம் நாளுக்குநாள் கொழுத்துக் கொண் டிருக்கிற முதலாளித்துவத்துக்கு, முதலாளித்துவ கொள்கைக்கு தங்கள் மூளையை அடகு வைத்திருக்கிறவர்களாக இருக்கிறார்கள். அவர்கள்தான் இந்த நாட்டிலே பளிச்சென்று தெரிகிறார்கள். சமதர்ம சிந்தனையுள்ள சோஷலிச திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று எண்ணமுடைய பொருளாதார நிபுணர் கள் இந்த நாட்டிலே மூலைமுடுக்குகளிலே முடங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைக் கண்டுபிடிப்பதிலே அரசுக்குச் சிறிது காலதாமதம் ஏற்படலாம். அந்தக் காலதாமதத்தைப் பொருட்படுத்தாமல், அந்தச் சிந்தனையாளர்களை, அந்தப் பொருளாதார நிபுணர்களை இந்தக் குழுவிலே இடம் பெறச் செய்ய தமிழக அரசு ஆவன செய்ய வேண்டுமென்று பெரிதும் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் மக்கள் மன்றத்திலேயிருந்து விரட்டப்பட்ட முதலாளித்துவ கொள்கையினர் அரசியலை விட்டுவிட்டு ஓய்வு எடுத்துக்கொள்ளப் போவார்கள் என்று எண்ணினால் நமக்கு நாமே ஏமாற்றமடைவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சமதர்ம சமுதாய சிந்தனையாளர்களும், சோஷலிச சிருஷ்டி கர்த்தாக்களும் இதை நமக்குத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக் கிறார்கள். இந்த நாட்டிலே மக்கள் மன்றத்திலே சோஷலிசக் கருத்துக்கள் செல்வாக்குப் பெற இயலாதபடி, மக்கள் நம்பிக்கை பெற இயலாதபடி முதலா ளித்துவ சக்திகள் எப்படியாவது அராஜகத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்தி, ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு முயலும் என்பது சோஷலிச சிந்தனையாளர் களுடைய அரசியல் கணக்காகும். அத்தகையோர் இப்படிப்பட்ட குழுக்களிலே தங்களுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்திக்கொண்டு, அரசைப் பலவீனப்படுத்த முயலுவார்கள். ஆகவே, நல்ல சோஷலிச உள்ளம் படைத்தவர்கள் இத் தகைய குழுக்களிலே இடம் பெறச் செய்ய வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இருபதாண்டுக் காலமாக போடிநாயக்கனூர் தொகுதி யிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர் பதவியை மக்களுக்குத் தொண்டு செய்வதற்குரிய கருவி என்று கருதாமல் சமுதாயத்தில் ஓர் அந்தஸ்து பெறும் சாதனமாகக் கருதிய காரணத் தினால் போடிநாயக்கனூர் தொகுதி மிகவும் மோசமான முறையில் புறக்கணிக் கப்பட்டிருக்கிறது. ஆகவே, என்னுடைய தொகுதியைப் பொறுத்த சில அவசியமான, அவசரமான பிரச்சினைகளை மட்டும் இந்த மன்றத்தின்முன் வைக்க விரும்புகிறேன். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும், மற்றைய அமைச்சர் பெருமக்களும் அவசரத் தேவையென்று கருதி ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முதலில் எடுத்துக்கொண்டால், போடி பண்ணைபுரத்திலிருந்து கேரளத் திற்குச் செல்வதற்கு 7 மைல் தூரம் தொழிலாளர்கள் நடந்து செல்கிறார்கள். நடக்க முடியாதவர்கள் பண்ணைபுரத்திலிருந்து, பாரத்தோடு, உடும்பஞ்சோலா செல்ல போடி மெட்டு, கம்பம்மெட்டு வழியாக 75 மைல் தூரம் பிரயாணம் செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை இருக்கிறது. ஆகவே, பண்ணைபுரத் திலிருந்து சாக்குலுத்து ரோடு வழி ஏற்படுத்தி, சாலைகள் அமைக்க மிக்க விரைவில், அவசரமான காரியமாக எடுத்து முடித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போடிநாயக்கனூர் மேற்குப் பகுதியில் கொம்புத்தூக்கி அணை கட்டப்பட வேண்டுமென்ற ஆலோசனை அரசினுடைய பரிசீலனையில் இருந்து வருகிறது. அந்த அணையைக் கட்டுவதால், தங்களுடைய நிலம் பாதிக்கப்படுமோ என்று முன்பிருந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அந்த அணையைக் கட்டாமல் காலதாமதப்படுத்தி வந்தார்கள். கொம்புத்தூக்கி அணையைக் கட்டுவதால் 3 ஆயிரம் முதல் 4 ஆயிரம் ஏக்கர் வரை பாசனம் பெறுகின்ற நிலைமை இருக்கிறது. இந்த அணை அரசின் பரிசீலனையில் இருப்பதாக அறிகிறேன். ஆகவே, அதை விரைவாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவதாக, 1952-லிருந்து எங்கள் பகுதியிலே தேர்தல் காலத்திலே ஒரு கோஷத்தைக் கிளப்புவார்கள். அதாவது நான் தேர்தலிலே வெற்றிபெற்றால் கல்லாறு திட்டத்தை நிறைவேற்றுவேன் என்று சொல்வார்கள். கேரளத்தில் உற்பத்தியாகும் கல்லாற்றுத் தண்ணீர் அரபிக் கடலில் போய் விழுகிறது. அதை தமிழ்நாட்டுக்குத் திருப்பிவிட்டால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் பாசன வசதி பெறும். கேரளத்தை ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்த, செல்வாக்கு மிகுந்த அகில இந்திய நிதியிலே இருப்பவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இங்கே அமர்ந்திருக்கிறார்கள். அவர்களும் உதவிபுரிந்து இத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான்காவதாக, போடிநாயக்கனூர் தொகுதியின் பகுதிகள் கேரள மாநிலத்தை ஒட்டியிருக்கிற காரணத்தால் உணவுத் துறையினர் அதை 'பெல்ட் ஏரியா' என்று பிரித்திருக்கிறார்கள். அந்தக் காரணத்தினால் அந்தப் பகுதிகளுக்கு அரிசியை தாராளமாகக் கொண்டுபோகக்கூடிய நிலைமை இல்லை. தேனியிலிருந்தோ, போடியிலிருந்தோ அரிசி கொண்டுபோனால் அதைக் கைப்பற்றக் கூடிய நிலைமை இருக்கிறது. கேரள மாநிலத்தை ஒட்டிய பகுதிகளில் எல்லையில் செக்போஸ்ட்களை வைத்து அரிசியைத் தடைப்படுத்துவதில் ஆட்சேபனை இல்லை. ஆனால் தமிழ்நாட்டிற்குள்ளேயே இருக்கும் மக்களுக்கு அரிசி கிடைக்காத நிலைமையினால் மக்கள் அல்லலுற வேண்டியிருக்கிறது என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன். உணவுத் துறை அமைச்சர் அவர்கள் இதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடிநீர்ப் பிரச்சினையைப்பற்றிப் பல உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். என்னுடைய தொகுதியில் சின்னமனூர் என்ற ஊராட்சி ஒன்றியத்தில் சங்கராபுரம் என்ற பஞ்சாயத்து இருக்கிறது. அந்த ஊரில் கடந்த பத்து வருடங்களாகக் குடிப்பதற்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. மக்கள் எல்லாம் விவசாயம் செய்வதற்காக இருக்கும் கிணறுகளில் சுத்திற்கு ஐந்து பைசா, பத்து பைசா என்ற அளவில் காசு கொடுத்துத்தான் தண்ணீரைப் பெறுகின்ற நிலைமை இருக்கிறது என்று ஊராட்சி மன்றத் தலைவர் தகவல் தந்திருக்கிறார். இந்த நிலைமை சங்கராபுரம் பகுதியில் மட்டுமல்ல, இன்னும் பல இடங்களிலும் இருக்கிறது. அரசு இதைக் கவனித்து உடனடியாக ஆவன செய்ய வேண்டும்.

தேனியிலிருந்து போடி, தேவாரம், பண்ணைபுரம் வழியாகத் தென்காசிக்குச் செல்லும் பாதை மோசமாக இருக்கிறது. அதையும் தார்ரோடாக செப்பனிட்டுத் தர வேண்டும். எனக்குப் பேச வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. கே. எ. வகாப்: சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே, இங்கே பேசிய மாண்புமிகு அங்கத்தினர்கள் எல்லாம் முற்போக்குக் கூட்டணி அடைந்த வெற்றியின் ரகசியத்தைப்பற்றிக் கேள்விகள் கேட்டார்கள். பல பதில்கள் அளித்தார்கள். பெருமதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்கள் பேசும்போது, தேர்தலில் 'மாயாஜாலம், இந்திரஜாலம் நடந்துவிட்டது' என்று சொன்னார்கள். இது மாயாஜாலம் அல்ல என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். வேண்டுமானால் 'இந்திரா ஜாலம்' என்று வைத்துக் கொள்ளலாம். இந்த வெற்றியின் காரணம் என்ன என்பதை அவர்கள்

உணர்ந்துகொள்ள வேண்டும். அதற்கு ஆளுநர் அவர்கள் தம்முடைய உரையிலே கூறியிருக்கும் காரணத்தை மகிழ்ச்சியோடு எடுத்துக்கூற விரும்புகிறேன்.

"சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கும் பெருவாரியான மக்கள், தங்களுடைய இடைவிடாத் துயரங்களுக்கு விடிவு காண்பதற்கும், வறுமை, இன்னல் இவற்றிலிருந்து மீண்டு கரையேறுவதற்கும் இவ்வரசை ஆவலோடு எதிர்நோக்கி நிற்கின்றனர்" என்பதுதான் உண்மையான காரணமாகும். எந்த மக்கள் சமுதாயத்தின் அடித்தளத்தில் அகப்பட்டுத் தங்களுடைய இடைவிடாத் துயரத்திற்கு விடிவுகாண இந்த அரசை ஆவலோடு எதிர்நோக்கி இருக்கின்றனரோ, எந்த மக்கள் வறுமை, இன்னல் இவற்றிலிருந்து மீண்டு கரையேறுவதற்கு இந்த அரசை ஆவலோடு எதிர்நோக்கி இருக்கின்றனரோ அந்த மக்களுக்காக இந்த அரசு பல அரும்பணிகளை எல்லாம் நிறைவேற்றியாக வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் ஒன்றினால்தான் தங்கள் வறுமை ஒழியும், தங்கள் இன்னல் தீரும் என்று மக்கள் நம்பிய காரணத்தினால் பெருவாரியாக நம்மைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள். அந்த ஏழை எளிய மக்களைக் கருத்தில் கொண்டு நாற்றுக்கு 90 பேர்களாக இருக்கிற அவர்களது துயர் களைவதற்கு அவர்களது வாழ்வை உயர்த்துவதற்கே இந்த அரசு அமைந்திருக்கிறது.

அடுத்து, கவர்னர் அவர்கள் மிக அழகாக "தமிழ்நாட்டு மக்கள், தங்களுடைய தமிழ் மரபுக்கு ஏற்ப சாதிய சமய வெறுப்புணர்ச்சிகளுக்குச் செவிமடுக்காமல் சமூகப் பிரிவினை உணர்ச்சிகளுக்கு இடங்கொடுக்காமல் அவற்றில் இருந்து ஒதுங்கி நின்று மிகவும் போற்றத் தக்க முறையில் நடந்துகொண்டார்கள்" என்று பாராட்டியிருக்கிறார். புரட்சிக் கவிஞர் கூறியதுபோல முடைத்தனம் மறை நாற்றம் வீசுகிற இடத்தில் கர்ப்பூர மணம் தேவை என்கிற உணர்ச்சி வீறுபெற்றிருக்கிறது. அதற்கு உதாரணமாக என்னையே கூறிக் கொள்ள விரும்புகிறேன். நான் பிறந்து வளர்ந்த இடம் வந்தவாசியாக இருந்தாலும் என்னுடைய கட்சி ஒதுக்கிய இடமாகிய ராணிப்பேட்டை தொகுதியில் தான் தேர்தலுக்கு நின்றேன். அந்தப் பகுதியில் என்னுடைய சமூகத்தைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. என்னை எதிர்த்துப் போட்டியிட்ட திருலிங்கப்பா காங்கிரஸ் வேட்பாளருடைய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் 50% க்கும் அதிகம். காங்கிரஸ்காரர்கள் மதவெறியைத் தூண்டிவிட்டும்கூடப் பிரசாரம் செய்தார்கள். தாராக்குதமான முறையில் இருந்தும் அந்தப் பகுதி மக்கள் என்னைத் தேர்ந்தெடுத்து இந்த மன்றத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள் என்றால் சாதி மத இன பேதங்களை மக்கள் மறந்துவிட்டார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. காங்கிரஸ்காரர்கள் மிக மோசமாக "வகாப் என்னை கவாப் செய்துவிடுவோம்" என்று எழுதிக்கூடப் போட்டார்கள். பெரும் பாலானவர்களுக்கு கவாப் என்ற சொல்லுக்குப் பொருள் தெரிந்திருக்க நியாயம் இல்லை. மாமிசத்தை வெட்டி நெய்யிலே பொறித்து எடுப்பது கவாப். நான் கூட காங்கிரஸ்காரர்களுக்கு என்ன இப்படி நரமாமிசத்தின் மீது அதிக ஆவல் எடுத்துவிட்டது என்று கேட்கவேண்டிய நிலை உண்டாயிற்று. ஆனால் கட்சியின் அடிப்படையில் அல்ல—முற்போக்கு கூட்டணித் தொண்டர்கள் என்னுடைய வெற்றிக்காக இரவும் பகலும் உழைத்த உழைப்பை நான் மறக்கமாட்டேன்.

ஆளுநர் அவர்களின் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்

[திரு. கே. ஏ. வகாப்] [1971 மார்ச் 30

அவர்களுக்கு எல்லாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். சம நோக்குமுள்ள தொண்டர்களினுல்தான் இன்றையதினம் நாட்டிலே மதசார்பற்ற நிலையை ஏற்படுத்த ஒரு பாரம்பர்யத்தையே ஏற்படுத்திச் சென்ற பேரறிஞர் அண்ணா அவர்களையும், என்னுடைய அருமைத் தலைவர் காயிதே மில்லத் அவர்களையும் நினைவில்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு விவசாயத் துறையில் பல முன்னேற்றமான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அதிக உற்பத்தியைத் தரும் விதைகளை எடுத்துக்கொண்டால்கூட ஐ. ஆர். 8, விஜயா, பத்மா, கருணா என்பதாகப் பலப்பல விதைகளைக் கண்டுபிடித்து அளித்திருக்கிறார்கள். அவை நல்ல முறையில் கண்டு முதல் ஆகிறது. அதேநேரத்தில் நாகுபாடுக்கு எல்லா நிலங்களையும் கொண்டுவரும் முயற்சி தீவிரமாக்கப்பட வேண்டும். ஜப்பான் என்ற சிறிய நாட்டை எடுத்துக்கொள்வோம். முதல் அமைச்சர் அவர்களும் மற்றவர்களும் அங்கே சென்று வந்திருக்கிறார்கள். 1968-ஆம் ஆண்டு நானும் அந்த நாட்டிற்குச் செல்கிற வாய்ப்பைப்பெற்றேன். ஜப்பான் நாட்டில் சிறிய பகுதி நிலத்தைக்கூட வீணாக்காமல் நவீன முறைகளில் எல்லாம் விவசாயத்தில் ஈடுபட்டு வருவதை முன்னோடியாகக் கொண்டு நாமும் அத்துறையில் விரிவான பல முன்னேற்றங்களைக் கண்டாகவேண்டும். இதற்கெல்லாம் அடிப்படையாக நமது மாநிலத்தில் ஒரு விவசாயப் பல்கலைக் கழகம் ஏற்பட இருப்பதையும் நான் வரவேற்கிறேன். இந்த நாட்டில் இருக்கிற "முதல் எல்லோருக்கும் பின் செல்வான் என்கிற நிலைமையை மாற்றி—எல்லோருக்கும் முன்செல்கின்றவர்கள் உழவர்கள் என்கிற நிலையை ஏற்படுத்தியாக வேண்டும்.

என்னுடைய மாவட்ட உறுப்பினர் என்னுடைய மாவட்டத்தில் ஒரு விவசாயக் கல்லூரியை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். நானும் அதையே வற்புறுத்துகிறேன். மாவட்டங்கள்தோறும் ஒரு விவசாயக் கல்லூரி ஏற்பட்டாக வேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலேயே அப்படிப்பட்ட ஒரு திட்டம் இருந்ததாக அறிகிறேன். அந்தத் திட்டம் எந்த அளவில் இருக்கிறது என்று எனக்குத் தெரியாது. விவசாயப் பல்கலைக் கழகம் எங்கள் மாவட்டத்தில் அமையாவிட்டாலும் எங்கள் மாவட்டத்தில் ஒரு விவசாயக் கல்லூரியை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பூச்சிகளிடமிருந்து பயிரைக் காப்பதற்குப் பல திட்டங்களை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. ஹெலிகாப்டர்களில் இருந்து மருந்து தெளிக்கிற முறையைக் கூடக் கையாண்டார்கள். அதனால் நல்ல பலன் ஏற்பட்டது என்பதை ஒப்புக்கொள்கிறோம். ஆனால் அதற்காக வசூலிக்கப்படுகிற கட்டணம் அதிகமாக இருக்கிறது என்பதாக விவசாயிகள் குறைப்படுகிறார்கள். சாதாரணமாக பூச்சி மருந்து தெளிக்க ஒரு ஏக்கருக்கு ஆறு ரூபாய், ஏழு ரூபாய் விவசாயிக்கு ஆகும் என்றால் ஹெலிகாப்டர்கள் மூலம் தெளிப்பதற்கு ஒரு ஏக்கருக்கு 15 ரூபாய் அளவில் வசூலிக்கிறார்கள். இந்தக் கட்டணத்தைக் கொஞ்சம் குறைக்க முடியுமா என்பதை அரசு பரிசீலிக்க வேண்டும். பரிசீலித்து விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மின்சாரத்துறையை எடுத்துக்கொண்டால் இந்தியத் துணைக் கண்டத்திலேயே மற்ற எல்லா மாநிலங்களையும்விட நம் மாநிலம் பெருமையும், பூரிப்பும் அடைகிற வகையில் முன்னேற்றம் கண்டிருக்கிறது. மதிப்பிற்குரிய

ஆளுநர் அவர்களின் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்

1971 மார்ச் 30] [திரு. கே. ஏ. வகாப்]

கூறியபோது—அதுவும் குறிப்பாக ஜோதி வெங்கடாசலம் அவர்கள் ஜப்பான் நகரோ, விமானத்தில் இருந்து சென்னை நகரைப் பார்த்தால் சென்னை டோக்கியோ நகரோ என்று நினைக்கும்படியாக இருக்கிறது. நகரத்திலுள்ள மின்சார அமைப்பு மிக உன்னதமாக அமைந்திருக்கிறது. கிராமங்களிலும், நகரங்களிலும் இப்படித்தான். ஆயினும் இத்துறையில் சில பல குறைகள் இருக்கத்தான் செய்கின்றன.

மன்றத் தலைவருக குறிப்பாக என்னுடைய ஊர் வந்தவாசி பேரூராட்சி ஆயினும் நான் இருக்கிறேன். அங்கே 350 மின் விளக்குகள் இருக்கின்றன. அதற்கான நாலு விளக்குகள் நிரந்தரமாக எரியாமல் இருக்கின்றன. இரண்டு மூன்று நாளுக் காரணத்தை மின்சாரத் துறையினரிடம் கேட்டால் இவை குறைந்த கொஞ்சம் ரிப்பேர் செய்து கொண்டுதான் இருக்கிறோம். தாங்கமுடியாது போய் சக்தியுள்ள சோக்குகள் போடப்படுவதால் அதிக சக்தி என்றால் விடுகிறது என்கிறார்கள். அதிக சக்தியுள்ளதைப் போட்டால் என்ன ஆகிறது அதற்காக ஒதுக்கப்படுவது 12 ரூபாய்தான். அவை 18 ரூபாய் அங்கங்கே என்கிறார்கள். இதுபற்றி அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து நடவடிக்கை விளக்குகள் இருந்தும் எரியாது போகிற நிலையை நீக்க தக்க அடிக்கடி எடுத்தாக வேண்டும். பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களுக்கு அப்படிப் வருகிற புகாரே "விளக்குகள் இருந்தும் எரியவில்லை" என்பதுதான். பட்ட குறையை நீக்கினுலேயே இத்துறை நிறைவுபெற்றதாகிவிடும்.

பல்வேறு சிறு அடுத்தபடியாக, தொழில் துறையை எடுத்துக்கொண்டால் பெருகியிருக்கின்றன தொழில்கள் அங்கங்கே நடைபெறுவதற்கு வாய்ப்புகள் வருகிறது என்றாலும் 100 கோடி ரூபாய் அளவில் சேலம் இரும்பாலைத் திட்டம் தொழிற்சாலை என்கிறபோது, 60 கோடி ரூபாய் அளவில் தூத்துக்குடி உரத் மகிழ்ச்சி பொங்கு ஏற்படுகிறது என்கிறபோது மனம் இறும்பூதெய்துகிறது. சிறு கிறது. இந்தப் பெரும் தொழில்களோடு இன்னும் பல என்ஜினியரிங் ஆக்கபூர்வமான தொழில்கள் இந்த நாட்டில் அங்கங்கே ஏற்பட இந்த அரசு கேட்டுக் பணிவன்போடு பணியில் செயல்பட வேண்டும் என்பதாகப் கொள்கிறேன்.

கோரைப் பாய் தொழில் கூட்டுறவு முறை என்று கூறுகிற நேரத்திலே கைவினைப் நெய்தல் போன்ற தொழில்களும் பிரம்புக் கூடை முடைவது போன்ற இப்படிப்பட்ட பொருள்கள் செய்கின்ற தொழில்களும் அதிலே அடங்கும். தொழில்களை தொழில்களிலே லாபத்தை மட்டும் அடிப்படையாகக் கருதித் நஷ்டம் நடத்த முடியாது. சில சந்தர்ப்பங்களிலே அந்தத் தொழில்களிலே மூடிவிடாமல் வரத்தான் செய்யும். நஷ்டம் வருகிறது என்பதால் உடனடியாக உதவியைச் அந்தத் தொழிலை விரிவாக்குவதற்கு வேண்டிய பொருளாதார மனிதாபி செய்யவேண்டும். இது சாதாரணப் பணப் பிரச்னை மட்டும் அல்ல, 300 பேர்கள் மானப் பிரச்னை. ஒரு கூட்டுறவுத் தொழிற்சாலையிலே ஏறத்தாழ பணம் இருக்கிறார்கள் என்றால் அரசாங்கம் 20 ஆயிரம் 30 ஆயிரம் என்று குடும்பங் கொடுத்து உதவுவது பெரிதல்ல. ஆனால் அந்த 300 பேர்களுடைய அடிப்படையாக களும் அதனால் பிழைக்கின்றன என்ற கருத்தினை வைத்துத்தான் உதவிகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ராணிப்பேட்டைத் தொகுதியிலே தொழில்வளம் குன்றியிருக்கிறது. 10 ஆண்டுகாலத்திற்கு முன்னாலே அங்கே 1,000 ஏக்கர் நிலம் தொழிற்சாலைக்காக என்று வாங்கப்பட்டு அந்த நிலம் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. அதற்கான உண்மையான காரணம் என்ன என்று தெரியவில்லை. 1,000 ஏக்கர் நிலம் அங்கே தரிசாகக் கிடக்கிறது. அந்த நிலங்களிலே ஆர்ஜிதம் செய்யப்பட்ட சில நிலங்களிலே உணவுப் பொருள்கள் விளைந்த இடங்களாக இருக்கின்றன. சில இடங்கள் தரிசாகக் கிடக்கின்றன. உடனடியாக ஏதாவது பெரிய தொழிற்சாலையை அந்த இடத்திலே அமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முன்னாள் இருந்த மதிப்பிற்குரிய இப்போதும் இருக்கின்ற தொழில் அமைச்சர் அவர்கள்கூட அந்த இடத்தை வந்து பார்த்ததாகவும், உடனடியாகத் தொழிற்சாலைக்கு ஏற்பாடு செய்வதாகவும் உறுதி செய்ததாகவும் அந்தத் தொகுதியைச் சேர்ந்த வாக்காளப் பெருமக்கள் கூறுகிறார்கள். நான் முதலமைச்சர் அவர்களையும் தொழில் அமைச்சர் அவர்களையும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அங்கே ஆயிரம் ஏக்கர் நிலம் இருக்கிறது என்றால் என்ன திட்டமிட்டு வாங்கினார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. அங்கே சொல்கிறார்கள், திருச்சியிலே ஏற்படுகிற கனரகத் தொழிற்சாலை முதன்முதலாக அங்கே அமைக்கப்பட இருந்ததாகவும் என்ன காரணத்தினாலோ திருச்சிக்குப் போய்விட்டது என்றும் சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட தொழிற்சாலை எங்கள் பகுதிக்குத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியிலே இருக்கிறது வாலாஜா நகரம். அந்த வாலாஜா நகரம் வட ஆற்காடு மாவட்டத்தின் நோயாளி நகரமாக இருக்கிறது. முன்பு சொல்வார்கள், ஐரோப்பாவின் நோயாளியாகத் துருக்கி நாடு இருக்கிறது என்று சொல்வார்கள். அதைப் போன்று வட ஆற்காடு மாவட்டத்தின் நோயாளி நகரமாக இன்றைக்கு வாலாஜா இருந்து கொண்டிருக்கிறது. இருபது, முப்பது ஆண்டுகளுக்கு முன்னாலே 60 ஆயிரம் மக்கள் தொகை இருந்தது அங்கே. இன்றைக்கு 15 ஆயிரம் மக்கள் தொகையாக அது இருக்கிறது. ஆனால் அந்த நகராட்சிதான் நூற்றாண்டு விழாக் கொண்டாடிய நகராட்சியாக இருக்கிறது. பெரும் நகராட்சி என்று பெயர் பெற்ற அந்தச் சிறிய நகரில் சில பல தொழிற்சாலைகள் அமைத்து அதை முன்னேற்றுவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் இருக்கும் மேல்விஷாரம் என்ற பகுதி முஸ்லிம்கள் அதிகமாக வாழக்கூடிய பகுதியாக இருக்கிறது. அங்கே வாழ்கின்றவர்களுக்குப் போதுமான வைத்திய வசதிகள் இல்லாமல் இருக்கிறது. குறிப்பாகப் பெண்களுக்கு அதுவும் கோஷா பெண்களுக்கு வைத்திய வசதி தேவையென்றால் அண்மையிலே இருக்கிற வேலூருக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. குறிப்பாகவும் சிறப்பாகவும் கோஷா ஹாஸ்பிடல் ஒன்று அங்கே ஏற்படுத்தி முஸ்லீம் சமுதாய மக்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பின்தங்கிய வகுப்பினர் முன்னேற்றத்திற்காக மாபெரும் திட்டங்களைத் தீட்டி வந்திருக்கிறது இந்த அரசு. பலவிதமான உதவிகளைச் செய்து வந்திருக்கிறது என்ற விவரம் எனக்கு நன்றாகத் தெரியும். அவர்களுக்கு உள்ள குறைகளின் காரணமாக, அவர்களுடைய வாழ்க்கையிலே எழுச்சியும் விழிப்பும் ஏற்படவேண்டுமென்ற காரணத்திற்காகத் தனியாக ஒரு அமைச்சரையும், தனியாக ஒரு குழுவையும் அமைத்து ஆராய்ச்சிகள் நடத்தியிருக்கிறார்கள்.

ஆனால் முடிவுகள் என்ன என்று எனக்குத் தெரியவில்லை. பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று உணர்கிறேன். முஸ்லீம் என்று சொல்லப்படுபவர்களில் லப்பை என்று சொல்லப்படுகிறவர்களுக்குத்தான் பின்தங்கியவர்களுக்கு அளிக்கப்படுகிற சலுகைகள் அளிக்கப்படுகின்றன. முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்த அத்தனை பேர்களும் கல்வி அம்சத்தைப் பொறுத்த வரையில் பின்தங்கியவர்கள் பட்டியலிலே சேர்க்கப்படவேண்டியவர்கள்தான். எனவே, அவர்களையும் சேர்த்து 'லப்பை' என்ற வார்த்தைக்கு அளிக்கப்படுகின்ற அத்தனை சலுகைகளையும் 'முஸ்லீம்' என்ற வார்த்தைக்கு அளிக்கப்படுகின்ற வகையில் மைனாரிட்டி சமுதாயம் இந்த அரசாங்கத்தினிடத்திலே வைத்திருக்கின்ற நம்பிக்கைக்கு ஏற்றவகையில் கணிசமான உதவியை, அவர்கள் எதிர்பார்க்கின்ற உதவியைச் செய்யவேண்டும். ஏறத்தாழ 30 லட்சம் மக்கள் இருக்கிறார்கள். பின்தங்கிய மக்களுக்கு அளிக்கப்படுகின்ற எல்லாவிதமான சலுகைகளும் முஸ்லீம்களுக்கும் அளிக்கப்படவேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநிலத் திட்டக்குழுபற்றி ஆளுநர் உரையில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. புதுமையான திட்டம். திட்டக்குழு அமைக்கப்பட்டால் பல்வேறு துறையிலும் உள்ள மதிநுட்பம் படைத்த அறிஞர்கள் அந்தக் குழுவிலே இடம் பெற்று அவர்களுடைய ஆலோசனைகளைப் பெறுவதன்மூலம்—இப்பொழுது இருக்கிற திட்டக்குழுவிலே நாம் அதிகமாகப் பங்கெடுத்துக்கொள்ள முடியாத தன்மை குறைந்துபோகின்ற தன்மையில்—நம்முடைய குறைகளை நாம்தான் தெரிந்திருக்க முடியும், நம்முடைய பிரதிநிதிகளைக் கொண்ட ஜில்லாவாரிகளைக் கொண்ட குழுவாக இருந்தால் இங்கேயுள்ள அடிப்படைத் தன்மைகளை அறிந்து யோசனைகளைச் சொல்லி எதிர்கால வாழ்க்கையை இந்த நாட்டு மக்களுக்கு நல்ல முறையிலே அமைத்துக்கொடுக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

கடைசியாக நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால் வட ஆற்காடு மாவட்டத்தினைப் பொறுத்தவரையில் அது வறட்சியான மாவட்டம். நல்ல தொழிற்சாலைகள் அங்கே அமைக்கப்படவில்லை. அதிகமான வசதிகள் செய்யப் படவில்லை. குறிப்பாக வந்தவாசியை எடுத்துக்கொண்டால் வந்தவாசி என்பது எப்படி அலப்பெட்டிக் ஆர்டரில், அதாவது அகர வரிசைப்படி பார்த்தால் 'டபிள்யூ' என்பது கடைசியாக வருவதுபோல் அதனுடைய நிலைமையும் இருக்கிறது. என்னுடைய பெயரும் கடைசிப் பெயராக 234-வது பெயராகக் கடைசியாக வருகிறது, என்னுடைய ஊர்பெயர் கடைசியாக வருவதால் விட்டுப்போகிறது என்று நினைக்கிறேன். (மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: 'அந்தவாசி' என்று வைத்துக்கொள்ளுங்கள்) மாண்புமிகு கலைஞர் அவர்கள் 'வந்தவாசி'யை 'அந்தவாசி' என்று வைத்துக்கொள்ளச் சொல்கிறார்கள். எங்களுக்குப் பெயர் மட்டும் முக்கியமல்ல. கூடவே தொழிற்சாலைகளும் தேவை என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். தொழில்துறையிலே வட ஆற்காடு மாவட்டத்திலே, வந்தவாசியிலும், ராணிப்பேட்டையிலும் தொழிற்சாலைகளை ஏற்படுத்தத் திட்டங்களைத் தீட்டுவதற்குத் திட்டக் குழுவில் எங்களைப் போன்ற அங்கத்தினர்களும் செல்கின்ற முறையில் சென்று யோசனைகளைச் சொல்கின்ற முறையில் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடிக்கிறேன்.

[1971 மார்ச் 30

* திரு. கு. காமாட்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய இதய தெய்வம் பேரறிஞர் அண்ணா அவர்கள் வீற்றிருந்த பேரவையிலே வீற்றிருக்கிறோம் என்ற உணர்வும், முதன்முறையாகப் பேசுகிறோம் என்ற உணர்வும் என்னைப் பெருமையடையச் செய்கின்றன. அந்த உணர்வுக்கு வழி வகுத்துத் தந்த எனது அருமைத் தலைவர்களுக்கும், எனது தொகுதியின் வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேதகு ஆளுநர் அவர்கள் உரையிலே இந்த நாட்டிலே நான்காண்டுக் காலமாகத் தமிழக அரசு சாதித்த இந்திய சாதனைகளையும், தன்னிறைவுகளையும் இனிவிருக்கிற எதிர்காலம் எப்படியிருக்கும் என்பதைப்பற்றியும் மிகத் தெள்ளத் தெளிவாக இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய உரையையும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே அளித்த நிதிநிலை அறிக்கையையும் மனத்திலே வைத்துக்கொண்டு பார்த்தால் எதிர் காலத்திலே தமிழகத்திலேயிருக்கின்ற கிராமங்கள் அத்தனையும் சிறு நகரங்களாகக் காட்சியளிக்கக்கூடிய தன்மை என்னுடைய கண் முன்னால் தெரிகிறது.

குறிப்பாக என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலே இருக்கின்ற குக்கிராமங்களெல்லாம் நல்ல பயனடையும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. சாலை வசதியேயில்லாத அளுந்தூர், செங்கரப்பாடி, திருமலை சமுத்திரம், கும்பகுடி போன்ற பஞ்சாயத்துக்களுக்கு நல்ல சாலை வசதிகள் ஏற்படும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. என்னுடைய பகுதியில் மிகப் பழங்காலமாக தூர் எடுக்காமல் இருக்கும் குண்டூர் ஏரி, கொளத்தூர் ஏரி, செங்குறிச்சி ஏரி, மணிகண்டம் ஏரி, வாழவந்தான் கோட்டை, கந்தர்வபாளையம் ஏரி போன்ற ஏரிகள் தூர் எடுக்கப்பட்டு, கோடை காலத்தில் நீர் நிரம்பியிருக்கும் காட்சி என்னுடைய கண் முன்னாலே இந்த அறிக்கையிலேயிருந்து தெரிகிறது.

அது மட்டுமல்ல, மின்சாரம் ஒவ்வொரு கிராமத்திலேயும் ஒளி வீசும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. குடிநீர்த் திட்டங்களிலே, ஆளுநர் அவர்கள் உரையிலே எடுத்துச் சொல்லியிருப்பதைப்போல் ஒவ்வொரு கிராமத்திலேயும் நல்ல பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்கள் நிச்சயமாக நிறைவேறும் என்ற நம்பிக்கையும் எனக்குத் தெரிகிறது. இந்த அளவிற்கு, தமிழகத்திலுள்ள கிராமங்கள் அத்தனையும் நல்லமுறையிலே பயனடையத் தக்கவிதத்திலே ஆளுநர் அவர்களின் உரை இங்கே அமைந்திருக்கிறது.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். இந்த பட்ஜெட் பற்றாக்குறை பட்ஜெட்டாக இருக்கிறது, அதிலே பற்றாக்குறை தெரிகிறது வரி வருவதற்கு என்றெல்லாம் இங்கே கூறப்பட்டது. ஆனால் எங்களைப் பொறுத்தவரையிலே அந்த நம்பிக்கை இல்லை. வரி வந்தாலும், தாங்கக் கூடியவர்களுக்குத் தான் வரி வருமே தவிர தாங்க முடியாத ஏழை எளியவர்களுக்கு நிச்சயமாக வராது என்ற நம்பிக்கை எங்களுக்கு நிறைய உண்டு. வசதி படைத்த ஆரணங்குகள் உபயோகப்படுத்தும் யார்ட்லி பவுடருக்குத்தான் வரி வருமே தவிர எங்கள் தாய்மார்கள், ஏழை எளிய மக்கள் உபயோகப்படுத்தும் குளிக்கின்ற மஞ்சளுக்கு நிச்சயமாக வரி வராது என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

1971 மார்ச் 30] [திரு. கு. காமாட்சி]

இங்கேகூட தேர்தல் காலங்களிலே மதுவிலக்கைப்பற்றிப் பேசினார்கள். அது சரியாக நிறைவேற்றப்படவில்லை, மது அருந்தியவர்கள் அதிகமாக இருந்தார்கள் என்றெல்லாம் இங்கே சொன்னார்கள். அது ஒருவகையிலே உண்மையாகத்தான் இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். காரணம், என்னுடைய பகுதியிலே வாக்குப் பதிவு நடக்கின்ற நேரத்திலே ஒரு வோட்டுச் சாவடிக்குச் சென்றேன். பத்தாளப்பேட்டை கிராமம் என்று நினைக்கிறேன். அங்கு வாக்காளப் பெருமக்கள் வரிசையிலே நின்று முனகிக்கொண்டே வந்தார்கள். ஏன் அவர்கள் முனகிக்கொண்டு வருகிறார்கள் என்று பார்க்க அவர்கள் அருகிலே சென்றேன். அப்படிச் சென்றவுடன் நல்ல மது நாற்றம் எடுத்தது. அதற்குப்பிறகு உள்ளே சென்று அதிகாரிகளிடம் சொல்லி, இவர்கள் ஏதோ முனகிக்கொண்டு வருகிறார்கள் என்று நான் சொன்னேன். அதிகாரிகள் ஓட்டுச் சீட்டை அவர்களிடத்திலே கொடுக்கும்போதுகூட முனகினார்கள். என்ன முனகினார்கள் என்றால், கீழே ராட்டை, மேலே ராட்டை, கீழே ராட்டை, மேலே ராட்டை என்ற அந்தச் சொல் என் காதிலே விழுந்தது. மதிப்பிற்குரிய காங்கிரஸ்காரர்கள் அந்தப் பகுதியிலேயுள்ள வாக்காளப் பெருமக்களுக்கு இம்மாதிரியாக நிலை தடுமாறச் செய்து அவர்களை ஓட்டுச் சாவடிக்குச் செல்ல வைத்திருக்கிறார்கள். முன்பு, பழையகாலத்தில் கிட்டப்பா ஐயர் அவர்கள் நாடகத்திலே நடிக்கும்பொழுது அவர்கள் எப்பொழுதுமே நிலை தடுமாறித்தான் இருப்பார்களாம். அவர்கள் நிலை தடுமாறிய நிலையிலே வேஷம் இடுகின்றவர்கள் வேஷம் இட்டு, உடை தரித்து, அவருக்கு என்ன வேஷம் என்பதே நினைவில்லாத நிலையில், மேடையிலே கொண்டுபோய் நிறுத்தி வள்ளியை அழைக்கும் பாடச் சொல்லி, வேடன் வேஷம் என்று சொன்னவுடனே, அவர்களும் தேடி வந்தேனே வள்ளி மானே என்று பாட ஆரம்பிப்பார்களாம். அம்மாதிரி அருமை காங்கிரஸ் காரர்கள் வாக்காளப் பெருமக்களை நிலை தடுமாறச் செய்து, எதற்கு வாக்களிக்கிறார்கள் என்ற நிலையைக்கூட மறக்கச் செய்து அவர்கள் நிலைதடுமாறி இருந்த காலத்திலே, ராட்டை, ராட்டை, ராட்டை என்று சொல்லி அவர்களை ஓட்டுச் சாவடிக்குத் தள்ளியிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோல், அராஜகம் நடந்தது என்றெல்லாம் இங்கே சொன்னார்கள். சர்வசாதாரணமாக எல்லாப் பகுதிகளிலேயும் நடந்து இருக்கிறது. என்னுடைய பகுதியிலேகூட அராஜகம் முன்பு அல்ல, பிறகு நடந்து கொண்டு வருகிறது. சோழமாதேவியில் எனக்கு வேலை செய்த அந்த ஊர்த் தலைவருடைய வைக்கோல் போரும் சேரும் கொளுத்தப்பட்டிருக்கிறது. அதைப்போலவே அர்ச்சுனன் நகர், மேலக்கல்கொண்டார் கோட்டையில் வேலை செய்தவர்களின் வைக்கோல் போர் கொளுத்தப்பட்டிருக்கிறது. கீழக்கல்கொண்டார் கோட்டையில் ஒரு பார்ப்பன நண்பர் எனக்கு வேலை செய்தார். அது உங்களுக்குக்கூட ஆச்சரியமாக இருக்கும். உண்மையிலேயே அவ்வாறு வேலை செய்தார். அவர், அந்த அக்கிரஹாரத்திலேயிருந்து கட்டுப்பாடு செய்து விலக்கி வைக்கப்பட்டிருக்கிறார். அதுமட்டுமல்ல, அவர்களின் வீட்டிற்குச் சென்று பலவிதமான இன்னல்களை இன்றைக்கும் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அவர்களுடைய வாழைத்தோட்டத்திலே புகுந்து பச்சைக் காய்களை, பிஞ்சு குலைகளைப் பிய்த்து எறிவதுபோல், இன்றைக்குப் பிய்த்துக்

கொண்டு வருகிறார்கள். இம்மாதிரியான அராஜகங்கள் எல்லாம் இன்றைக்கும், இப்பொழுதும் நடந்து கொண்டு வருகின்றன என்பதை நான் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, அருமைக் காங்கிரஸ் நண்பர்கள் தேர்தல் காலத்திலே பேசிய பேச்சுக்களையெல்லாம் எடுத்துப் பார்க்கும்பொழுது வேதனை தாக்கக்கூடியவையாக இருக்கிறது. அநாகரிகமான முறையிலே அவர்களுடைய பேச்சு இருந்தது. எங்களைப்பற்றியெல்லாம் பேசியிருந்தாலும்கூட நான் கவலைப்படமாட்டேன். ஒரு பெரிய இயக்கத்தின், பெரிய கட்சியின் தலைவர், அருமை காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜர் அவர்களைப்பற்றிக்கூட அவர்களே மிகவும் கேவலமான முறையிலே பேசினார்கள். அதை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. எப்படிப் பேசினார்கள் என்றால், அண்ணா அவர்களுக்கு இங்கே சமாதியா, கடற்கரைப் பக்கத்திலே அண்ணாவுக்கு சமாதியா, ஆகட்டும், நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடனே காமராஜர் அவர்களுக்கும் பக்கத்திலே சமாதி வைக்கிறோம் என்று அவர்கள் பேசினார்கள். நான் இதை வருத்தத்துடன் சொல்கிறேன். காங்கிரஸ்காரர்கள் மனம் புண்பட வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. பேசுவதற்குகூடத் தெரியாத நிலையிலே, பலகாரியங்களை அவர்கள் பேசி வருகிறார்கள். அம்மாதிரியான பேச்சுக்களின் காரணமாகத்தான், அடக்கமில்லாத பேச்சின் காரணமாகத்தான் இந்த அவையிலேகூட அடக்கமாக ஒரு சில இடத்திலே அவர்கள் அமர்ந்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். இங்கே எங்கே பார்த்தாலும் என் தோழர்களின் முகம்தான் தெரிகிறதே தவிர அவர்களை சுற்றிச் சுற்றிப் பார்த்தால் ஒரு சிலர்தான் என் கண்ணுக்குத் தெரிகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலை நீடிக்கக்கூடாது என்று நான் கருதுகிறேன். எதற்காக என்றால், ஒரு சரியான எதிர்க்கட்சி இருந்தால்தான் எங்களுக்கும் கொஞ்சம் சூடு பிறக்கும். சரியான எதிர்க்கட்சியில்லாத காரணத்தால் எங்களுக்கும், ஏதோ சட்ட சபைக்கு வந்தோம், உட்கார்ந்தோம் என்ற நிலை இன்றைக்கு இருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட நிலையை அடுத்த தேர்தலுக்காவது நீங்கள் ஆக்கிக் கொள்ளக் கூடாது. அதற்காக உங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வேண்டுகோள் விடுக்கிறேன்.

நல்ல முறையில் நாகரீகமாகப் பேசுவதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஒரு 30 அல்லது 50 பேருக்கு மேற்படாத உறுப்பினர்களாவது அவர்கள் வீற்றிருக்க வேண்டும் என்று நான் மனதார ஆசைப்படுகிறேன். அப்படியிருந்தால்தான் இங்கே நல்லதோர் சூழ்நிலை ஏற்படும். அவர்கள் எடுத்துச்சொல்லுவதற்கும் நாங்கள் எடுத்துச்சொல்லுவதற்கும் நல்லபல கருத்துக்களைப் பறிமாறிக்கொள்ளுவதற்கும் உதவியாக இருக்கும்.

என் தொகுதியிலே அவர்கள் காலத்தில் ஒரு தொழிற்சாலை ஒன்றை ஆரம்பித்தார்கள். எந்த இடத்தில் எந்தத் தொழிற்சாலையை அமைப்பது என்ற திட்டம் இல்லாமல் அவர்கள் தங்கள் செல்வாக்கை வைத்துக்கொண்டு பொன்மலைப்பட்டி பஞ்சாயத்தில் ஒரு எரிச்சாராயத் தொழிற்சாலையை பெரிய காங்கிரஸ்காரர்கள் தங்கள் மூலதனத்துடன் ஆரம்பித்து இருக்கிறார்கள். திருச்சிக்கு வருகை தருகிற அவ்வளவு பேருக்கும் தெரியும். இரயிலில் வருகிறவர்களுக்கும் தெரியும், பத்து மைல் சுற்றுவட்டாரத்திற்கு அந்த வாடை வீச

கிறதை யாரும் கவனிக்காமல் இருக்க முடியாது. அது மட்டும் இல்லாமல் அந்த எரிச்சாராயத் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் விஷம் பொருந்திய கழிவு நீர் உய்யக்கொண்டான் பாசன வாய்க்காலில் கலந்து ஏறத்தாழ முப்பது கிராமங்களைப் பெரிதும் பாதித்து இருக்கிறது. அந்தக் கிராமங்களிலே எல்லாம் குடிநீர் கெட்டுப்போய் விட்டதைப் பார்க்கிறோம். கால்நடைகள் மீன்வளம் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கிறது இந்தத் தண்ணீரால். எனவே அந்தத் தண்ணீர் வராத அளவிற்கு, அந்த தொழிற்சாலையிலிருந்து அந்தத் தண்ணீர் வேறு விதமாகத் திருப்பி விடப்படுவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்று நான் நமது அரசைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, மதுரை இப்போது ஒரு மாநகராட்சியாகத் திகழ இருக்கிறது. வரலாற்றுச் சிறப்பு மிக்க மாமதுரை நகர் மாநகராட்சியாக இருப்பதை வரவேற்கிறேன். இதேபோல இந்த அரசின் கவனம் திருச்சியிலும் படவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். காரணம், திருச்சி மாநகர் பாடல்பெற்ற ஸ்தலம். ஆஸ்திகர்களுக்கு மிக மிக வேண்டிய திருத்தலம். பக்கத்திலே திருவரங்கமும் திருவானைக்காவலும் இருக்கின்றன. தொழிலாளர்களுக்குக் கூட இந்த மாநகரம் மிகவும் பிடிப்புள்ள நகராகும். திருச்சிக்கு அண்மையில் உள்ள திருவெறும்பூர் பெரும் தொழில் நகராக மாறிக்கொண்டு வருகிறது. மிக மிகப் பெரிய தொழிற்சாலைகள் அங்கே தோன்றிக்கொண்டு வருகின்றன. பக்கத்தில் பொன்மலை தொழிற்சாலை, துப்பாக்கித் தொழிற்சாலை, பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல் தொழிற்சாலைபோன்ற பல பெரும் தொழிற்சாலைகள் அங்கே தோன்றிக் கொண்டு வருகின்றன. எனவே இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு திருச்சியை ஒரு மாநகராகக்காணும் வாய்ப்பினை அரசு ஏற்படுத்தித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடைசியாக இந்த அளவிற்கு மேதகு ஆளுநர் அவர்கள் நல்ல முறையில் இந்த நாட்டின் ஏழை மக்களுக்கு 100-க்கு 86 சதவிகிதம் வாழும் ஏழை எளியவர், தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பெரிதும் உதவத்தக்கதொரு வரவு செலவுத் திட்டத்தின் அடிப்படையில் அமைந்துள்ள உரையினை அளித்தமைக்காக அவர்களுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு அத்தகையதொரு ஆட்சியின் கீழ் தமிழகம் நல்ல முறையில் சீரும் சிறப்பும் பெற்று விளங்கும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொண்டு ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன், வணக்கம்.

* திரு. ச. சங்குமுத்து தேவர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களது உரையினை ஒட்டிச் சில கருத்துக்களைக்கூற வாய்ப்பினை அளித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

குறிப்பாக, எங்கள் பகுதி அம்பாசமுத்திரம் தொகுதி பற்றி சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். எங்கள் பகுதி பெரும்பாலும் விவசாயத்திற்கு உட்பட்ட பகுதி. ஆனால் எங்கள் பகுதியிலுள்ள கிராமங்கள் பெரும்பாலும் இணைப் கிராமங்களாக இருப்பதால் பஞ்சாயத்து அபிவிருத்தி வேலைகளைச் செய்யமுடியாத நிலையில் இருக்கின்றன. அப்படிப்பட்ட இணைப் கிராமங்களிலே எந்தவிதமான வேலையையும் செய்ய முடியாமலும், ஏதாவது ரோடு போன்றவைகள் அமைத்தால் கோர்ட்டுக்குப் போகவேண்டிய நிலையில் இருக்கின்றன.

மிக அத்தியாவசியமான குடி தண்ணீர்த் திட்டங்கள் போன்ற வேலைகளைக்கூட செய்ய முடியாத நிலையில் இருக்கின்றன. இதே காரணத்தினால் விவசாயம்கூட பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கின்றது. பல ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கும் இனாம்தாரர்களுக்கும் கேஸ்கள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. இதனால் விவசாயமும் பாதிக்கப்பட்டு இருக்கிறது, விவசாயிகளும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். விவசாய நிலங்களுக்குச் சர்க்கார் மூலமாகப் பல சலுகைகளையெல்லாம் கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கும்போது, இப்படிப்பட்ட இனாம் கிராமங்களிலுள்ள விவசாய நிலங்களுக்கு அப்படிப்பட்ட சலுகைகளைச் செய்து கொடுக்க முடியவில்லை. அங்கேயெல்லாம் ஹெலிகாப்டர்கள் மூலம் மருந்து தெளிக்கிறார்கள். அதற்கான கட்டணத்தை நிலச்சொந்தக்காரர்களிடமிருந்து பெற வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் சட்டத்தில் எங்கே தவறு இருக்கிறதோ தெரியவில்லை, அந்தக் கட்டணத்தை இவர்கள் கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பளிக்கப் படுகிறார்கள். இதன் காரணமாக விவசாயம் செய்து கொண்டு இருப்பவர்களுக்கும் மற்றைய விவசாயிகளுக்கும் தகராறு ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது.

குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில் விக்கிரமசிங்கபுரத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்தத்திட்டத்தில் சிவந்திபுரம் கிராமமும் இணைக்கப்பட்டு இருந்தது. ஆனால் ஏனோ தெரியவில்லை, திடீரென்று, அந்தத் திட்டத்திலிருந்து சிவந்திபுரம் கிராமத்தை நீக்கியிருக்கிறார்கள். இதனால் அந்தக் கிராம மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். எனவே, இந்தக் கிராமத்தையும் அந்தத் திட்டத்தோடு இணைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, எங்கள் பகுதி பெரும் அளவிற்கு நெசவாளர்கள் இருக்கும் பகுதி. இப்போது நூல்விலை அதிகமாகிவிட்ட காரணத்தினால் அவர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதற்கு ஒரு வழி காண வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பாசன வசதியைப் பொறுத்த வரையில் அம்பாசமுத்திரம் பகுதி பாபநாசம், மணிமுத்தாறு நீர் தேக்கங்களின் மூலம் பயன் பெறுகிறது. இதில் ஆறாம் பத்திலுள்ள மூன்று கால்வாய்கள் மூலம் அந்தத் தண்ணீரால் சரியான பாதுகாப்புக் கொடுக்கப்படவில்லை. கீழ் பாசனங்களுக்கு அட்வான்ஸ் 'கார்'க்கு என்று ஏப்ரல்-மே மாதத்தில் தண்ணீர் கொடுக்கப்படுகிறது. கோடையில் கொடுக்கப்படும் இந்தத் தண்ணீர் பாபநாசம் நீர்த் தேக்கத்திலிருந்து கொடுக்கப் படுகிறது. மின்சாரத்திற்குப் பயன்படும் தண்ணீரின் அளவைக் கணக்கிட்டு அதற்குரிய ஏக்கரைக் கணக்கிட்டு பயிர் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் மேற்கத்திய பாசன நிலங்கள் பாதிக்கப்படாமல் இருக்கும். கொடுக்கப் படும் நீர் ஜூன் மாதம் 1-ம் தேதி முறைப்படி கொடுக்கப்படுகிறதில்லை. ஆயிரக் கணக்கில் செலவு செய்து பயிர் வைக்கும்போது அட்வான்ஸ் 'கார்' க்கு தண்ணீர் கொடுப்பதினால் இப்படிப்பட்ட தண்ணீர் பற்றாக்குறையால் நாற்றுக்குக்கூட தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். இது ரொம்ப நாளாக இருந்து வருகிறது.

இந்தக் குறையை நிவர்த்தி செய்ய முதல் அமைச்சர் அவர்கள் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாம்பரபரணி பாசனத்தில் பதினைந்து இருபது ஆண்டு காலமாக நிறைய வேஸ்ட் நிலங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம நன்செய் நிலங்களாக மாற்றி நன்செய்க்குள்ள பட்டா வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதனால் மற்ற விவசாயிகளுக்கு எந்தவிதமான தொந்தரவும் ஏற்பட்டு விடாது.

என் தொகுதியில் வடக்குகோடைமேல் அழகியன் கால்வாய் என்ற கால்வாய் ஒன்று இருக்கிறது. அதற்கான பாட்லிக் ஸ்கீம் எல்லாம் பூர்த்தியாகி விட்டது. இருந்தாலும் அங்கு முறை வைத்து தண்ணீர் விட வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. அங்கு இன்னும நல்லபடியாக மராமத்து வேலை செய்ய வேண்டியிருக்கிறது. அங்கு எவ்வளவு தண்ணீர் விட்டாலும கடைசி இடம் வரை தகுந்த அளவிற்கு தண்ணீர் போய் சேர முடியாத ஒரு நிலை இருக்கிறது. அக்குறையை போக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வடக்கு கோடைமேல் அழகியன் கால்வாய், தெற்கு கோடைமேல் அழகியன் கால்வாய், நதியுண்ணிக் கால்வாய் என்ற மூன்று கால்வாய்கள் இருக்கின்றன. இந்த மூன்று கால்வாய்களுக்கும் மணிமுத்தாறு அணைக்கட்டுத் தீர்வை போடப் படுகிறது. இவற்றிற்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 50 வீதம் தீர்வை போடப்படுகிறது. இதை ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் மணிமுத்தாறு தண்ணீரினால் இவற்றிற்கு எவ்விதப் பாதுகாப்பும் கிடையாது.

மின்சாரத்தை எடுத்துக்கொண்டால் எங்கள் பகுதியில் அநேகக் கிராமங்களில் பல்புகள் இல்லாமல் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே தெரு விளக்குகளுக்கு பல்ப் போடும்படி சம்பந்தப்பட்டவர்களுக்கு வேண்டிய உத்தரவுகள் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தல் நேரத்தில் எங்கள் பகுதிகளில் பல கஷ்டங்கள் எல்லாம் ஏற்பட்டன. எனக்கு முன் பேசியவர்கள் இரண்டு மூன்று நாட்களாக சென்ற தேர்தலில் ஏற்பட்ட பல சம்பவங்கள் குறித்து இங்கு தெரிவித்திருக்கிறார்கள். நானும் எங்கள் பகுதியில் ஏற்பட்ட சம்பவங்களைப்பற்றி இங்கு சொல்லாமல் இருக்க முடியாது. அங்கு உண்மையான நிரபராதிகள்கூட ரொம்பவும் அவமானப் படுத்தப்பட்டிருக்கிறார்கள். எந்தத் தரப்பினராக இருந்தாலும்சரி சட்டத்தையும், ஒழுங்கையும் சரியானபடி நிலைநாட்டவில்லை என்பதை வருத்தத்துடன் சொல்லிக்கொள்கிறேன். இதில் முதல் அமைச்சர் அவர்கள் அதிகப்படியான அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சேர்வலாறு ஸ்கீம் என்ற ஒரு ஸ்கீம் இருக்கிறது. அதை நிறைவேற்றும்போது மேற்கத்திய கால்வாய் பாசன விவசாயிகள் பாதிக்கப் படாமல் இருக்கக்கூடிய அளவிற்கு அதில் கவனம் செலுத்தவேண்டும். அதை மின்சாரத்திற்குப் பயன்படுத்துவதாக இருந்தபோதிலும் விவசாயிகளுக்குத் தேவையான தண்ணீர் விடுவதில் எந்தவிதமான கஷ்டமும் இல்லாமல் இருக்க வேண்டும் என்பதையும் ஞாபகப்படுத்திக்கொள்கிறேன். அதனால் வேலையில்லாதவர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பு ஏற்படும் என்று தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

[1971 மார்ச் 30

* திரு. மு. இரத்தினசபாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின்மீது அவரது உரையை வரவேற்றுப் பேச வாய்ப்பளித்தமைக்கு என் நன்றியைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மேதகு ஆளுநர் அவர்கள் நடந்து முடிந்த இடைத் தேர்தலுக்குப் பிறகு உரையாற்றிய முதல் உரையில் கடந்த நான்கு ஆண்டுக் காலத்திலும் இனி வரப்போகிற ஆண்டுகளிலும் அரசு செய்திருக்கிற, செய்ய இருக்கிற திட்டங்கள், கொள்கைகள் இவை பற்றியும் இவைகள் நாட்டு மக்களுக்கு ஏற்படுத்தியிருக்கிற நன்மைகள் பற்றியும் முழு அளவிற்கில்லாவிட்டாலும் ஓரளவிற்கு மொத்தமாக கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். இந்த அரசு மக்களுக்கு செய்திருக்கிற நல்லபல செயல்களின் காரணமாக இந்நாட்டு மக்கள் இந்த அரசின்மீது வைத்திருக்கிற முழுநம்பிக்கை காரணமாக அவர்கள் இதற்குமுன் இருந்ததை விட மிக அதிகமான அளவிற்கு சட்டமன்ற உறுப்பினர்களை இந்த அவைக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

கிராமங்களில் இருக்கின்ற எந்தப் பகுதி மக்களாக இருந்தாலும்சரி அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட அரசுக்கு, அதற்குப் பிறகு கலைஞர் அவர்களின் தலைமையில் நடைபெறுகிற கழக அரசுக்கு அவர்களின் முழு ஆதரவும் எப்போதும் உண்டு என்பதைத் தெள்ளத் தெளிவாகக் காட்டுகிற வகையில் இந்தத் தேர்தலில் தங்கள் வாக்குகளை அளித்திருக்கிறார்கள். இதை நான் இங்கே ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய விளாத்திக்குளம் தொகுதி இந்த ஆண்டு மட்டுமல்ல, கடந்த பல ஆண்டுகளாக மழையின்மையால் வறட்சியாலும் பாதிக்கப்பட்டு, கடந்த ஆண்டு அங்கு பருவமழை அறவே தவறியதன் காரணமாக அங்கு புன்செய் பயிர்கூட விளைவிக்க முடியாத நிலையில் விவசாய மக்கள் பெரிதும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். அப்படியிருந்தும், அவர்களுக்கு அங்கு வேலை வாய்ப்பு இல்லாமலிருந்தும், கலைஞர் அவர்களின் தலைமையில் இயங்கும் அரசு நாட்டுக்கு நன்மை செய்யும் என்ற நம்பிக்கை காரணமாக பிற மாவட்டங்களுக்கு தாங்களாகவே வேலை தேடிக்கொண்டு செல்லக்கூடிய தருணத்தில்கூட எங்கள் வாக்குகளை உதயசூரியனுக்கு அளித்துவிட்டுத்தான் செல்வோம் என்ற வைராக்கியத்தோடு அங்கேயே தங்கியிருந்து தங்கள் உழைப்பைக் காட்டியிருக்கிறார்கள். அப்படி கீழ்நிலையில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் கைத்தறி நெசவாளர்கள், மற்ற பிற தொழிலாளர்கள் இவர்கள் எல்லாம் இந்த அரசின்பால் முழு நம்பிக்கை வைத்திருக்கிறார்களே தவிர காங்கிரஸ் கட்சியினர் சொல்வதுபோல் வேறு எதற்கும் அடிமையாகி அவர்கள் இந்த ஆதரவைக் காட்டவில்லை.

இந்த நிலையில் ஆளுநர் அவர்கள், செய்திருக்கிற பல திட்டங்கள் பற்றியும், செய்ய இருக்கிற பல திட்டங்கள் பற்றியும் தமது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். கிராமங்களில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்காக இந்த அரசு செய்திருக்கக்கூடிய பல திட்டங்களைப் பற்றியும், செய்ய இருக்கிற பல திட்டங்கள் பற்றியும், விரிவாகவும், விளக்கியும் கூறியிருக்கிறார்கள். சிறு விவசாயிகள் மேம்பாடு அடையத்தக்க வகையில் இந்த மாநிலத்தில் மூன்று மாவட்டங்களுக்கு ஒரு திட்டத்தை அமல் நடத்த இருக்கிறார்கள். இத் திட்டத்தின் மூலம் ஏறக்குறைய ரூ. 4 கோடி, 80 லட்சம் செலவாக இருக்கிறது. நெல்லை மாவட்டம், தென் ஆர்க்காடு மாவட்டம், மதுரை மாவட்டம் ஆகிய

1971 மார்ச் 30] [திரு. மு. இரத்தின சபாபதி]

மூன்று மாவட்டங்களில் நெல்லை மாவட்டத்தில் ஆறு ஊராட்சி ஒன்றியங்கள் அவைகளில் எடுபடுத்தப்பட்டிருக்கின்றன. அந்த ஆறு ஊராட்சி ஒன்றியங் களில் விளாத்திகுளம் தாலுகாவைச் சேர்ந்த இரண்டு ஊராட்சி ஒன்றியங் களும் சேர்க்கப்பட்டிருப்பதைக் கண்டு இந்த நேரத்தில் அத்தொகுதி மக்கள் சார்பாக இந்த அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன். இத்திட்டத்தின் மூலமாக மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள விவசாய மக்கள் நல்ல பயனடையக்கூடிய வகையில் இருப்பதை தெள்ளத் தெளிவாக உணர்ந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். இத்திட்டம் வரு கிற ஏப்ரல் திங்களில் அமல்நடத்த இருப்பதை நினைக்கும்போது உண்மையிலே இந்த அரசுக்கு நாம் மிகவும் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

மேலும் வறண்ட பிரதேசங்களில் புன்செய்ப்பயிர் மேம்பாட்டுத் திட்டங்கள் என்ற முறையில் இந்த அரசு ஒரு திட்டத்தை ஏற்படுத்தி செயல்பட்டு வருவதை நாம் காண்கிறோம். இந்த அரசு கிராமங்களிலுள்ள விவசாய மக்களுக்கு நல்ல முறையில் சேவை செய்ய வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு, நல்ல எண்ணத்தின் காரணமாக என்று தமிழ் நாட்டுக்கு மின் இணைப்பு வந்ததோ அந்த நாளிலிருந்து 1966-67 ஆண்டு வரை மொத்தம் 2,50,000 மின் விசை ஏற்றங்களுக்குத்தான் மின் இணைப்பு கொடுக்கப்பட்டு இருந்ததை, இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதிலிருந்து கடந்த 4 ஆண்டுகளுக்குள்ளாக எவ்வளவு மின் விசைகள் இதற்கு முன்பு கொடுக்கப்பட்டதோ அந்த அளவுக்குக் குறையாமல் கொடுத்திருக்கிறது. இந்த 1970-ம் ஆண்டில் ஏறக் குறைய 5,09,000 இணைப்புடன் மின் விசை ஏற்றங்களுக்கு கொடுக்கப்பட்டிருக் கின்றன. அந்த அளவுக்கு மிக வேகமாக விரிவான ஒரு திட்டத்தை செயல் படுத்துவதற்கு இந்த அரசு முயலும் என்று மக்கள் இந்த அரசின் மீது முழு நம்பிக்கை வைத்து இருக்கிறார்கள்.

தொழில் துறையைப் பொறுத்தவரையில் இன்று இந்த அரசு ஒரு புதிய முயற்சியைச் செயல்படுத்தக் காத்துக்கொண்டு இருக்கிறது என்பதை ஆளுநர் அவர்கள் உரையின் மூலம் மிகத் தெளிவாக உணர்ந்து இருக்கிறோம். தொழில் துறையில் தனியார் துறையில் இருக்கும் திறமையையும் அரசாங்கத் துறையில் இருக்கும் நிர்வாகத் திறமையும் ஒருங்கிணைத்து கூட்டாகச் சேர்ந்து, கூட்டுத்தொழில் நோக்கத்தோடு தூத்துக்குடியில் 60 கோடி ரூபாய் அளவில் ஒரு தொழிலை ஆரம்பிக்க இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம்.

அதற்கு அடுத்தபடியாக இன்று இந்த அரசு கடந்த ஆண்டில் வேலையில்லாத ஆசிரியர்களுக்கு, கிட்டத்தட்ட 6,000 பேர்களுக்கு, 'அப்ரென்டிஸ் ஆசிரியர் கள்' என்ற முறையில் அவர்களுக்கு வேலை கொடுத்து இருக்கிறது. அதைப் போலவே 2,500 பொறியாளர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுத்து இருக்கிறது. இந்தக் காரியங்களின் காரணமாக இன்று தமிழகத்தில் இந்த அரசு இந்த நாட்டிலுள்ள மக்களுக்கு அவர்களுடைய நன்மைக்காக செயல் படக்கூடிய அரசு என்பதை நல்ல முறையில் எல்லாப் பகுதியிலிருக்கும் மக்களும் உணர்ந்துகொள்ளும் நிலைமையில் இருக்கிறார்கள்.

மேலும் இந்த அரசில் வேலை பார்க்கும் அரசு ஊழியர்களுக்கு இருந்த சம்பள விகிதத்தை, அவர்கள் என்றும் எதிர்பாராத அளவுக்கு, அவர்கள் கேட்ட அளவுக்கு அவர்களுக்கு சம்பளத்தை உயர்த்திக்கொடுத்து இருக்கிறார்கள்

[திரு. மு. இரத்தின சபாபதி] [1971 மார்ச் 30

இதன் மூலமாக ஆண்டு ஒன்றுக்கு ஏறக்குறைய 22 கோடி ரூபாய் இந்த அரசுக்கு அதிகமாகச் செலவு ஏற்படுகிறது. அவர்கள் நல்ல முறையில் பணியாற்றவேண்டும், நம்முடைய அரசுக்கு எந்தவிதத்திலும் குறை வராது பாடுபடவேண்டும் என்ற முறையில் அவர்களுக்கு சம்பளத்தை உயர்த்திக்கொடுத்து இருக்கிறார்கள்.

இன்று அரசு ஊழியர்கள் மிகவும் நேர்மையாகவும், நியாயமாகவும், திறமையாகவும் செயல்பட்டுக்கொண்டு இருப்பதை நாம் எல்லோரும் அறிவோம். ஆனால் மிகப்பெரும்பான்மையானவர்கள் இப்படிச் செயல்படுகிற நேரத்தில், ஒரு சிலர் மிகவும் மோசமான நிலையில், கையூட்டு பெற்று இந்த நிர்வாகத்தில் செயல்பட்டு வருகிறார்கள் என்பதை நாம் அறிவோம். ஆகவே, அந்தக் கையூட்டுப் பெறுபவர்களை எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும், அவர்கள் மீது லஞ்ச ஒழிப்பு இலாகா மூலம் நடவடிக்கை எடுப்பதற்கு மிகவும் தீவிரமாகச் செயல்பட வேண்டுமென்று இந்த மன்றத்தின் மூலம் அமைச்சரவைக்கு வேண்டுகோள் விடுக்க ஆசைப்படுகிறேன்.

இன்று ஆளுநர் உரைமீது உரையாற்றுகின்ற இந்த நேரத்தில், என்னுடைய தொகுதியைப்பற்றியும் ஒரு சில வார்த்தை கூற கடமைப்பட்டு இருக்கிறேன். என்னுடைய விளாத்திகுளம் தொகுதி, இராமநாதபுரத்தை ஒட்டிய பகுதி முதுகுளத்தூர், அருப்புக்கோட்டை, சாத்தூர் ஆகிய பகுதிகளை ஒட்டிய பகுதியாகும். அங்கே பல ஆண்டுகளாக நல்ல மழை இல்லாத காரணத்தால் மிகவும் வறட்சி ஏற்பட்டு, கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் எந்த அளவுக்கு வறட்சி ஏற்பட்டு இருக்கிறதோ அந்த அளவுக்கு இருக்கிறது. இங்கே எந்த விதமான தொழில்களும் கிடையாது. அந்தப் பகுதியில் இருக்கும் மக்கள் விவசாயத்தை நம்பித்தான் இருக்கிறார்கள். வறட்சி காரணமாக அங்கே புஞ்செய் விளைச்சல் நடக்கிற காரணத்தால் 3 மாதம் தான் அவர்களுக்கு வேலை கிடைக்கிறது, இந்த 3 மாதத்தில் பெற்ற ஊதியத்தை வைத்துத்தான் ஆண்டு முழுவதும் அவர்கள் வாழ்க்கை நடத்திச் செல்லும் நிலைமையில் இருக்கிறார்கள். இவ்வளவு கஷ்டமான நிலையில் இருக்கும் அவர்களுக்கு நல்ல குடிதண்ணீர்கூட கிடைப்பது இல்லை. அந்தப் பகுதிகளில் கிணறு வெட்டினால் நல்ல தண்ணீர் கிடைப்பதில்லை. அப்படிக் கிடைத்தாலும் அவை குடிப்பதற்கு லாயக்குள்ளதாக இல்லை. ஆகவே, ஆடு, மாடுகளுக்கு குடிக்க இருப்பதுபோல், ஊரணி வெட்டி, அந்தத் தண்ணீரைப் பருகக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையை மாற்றியமைப்பதற்காக கடந்த ஆண்டு, எவ்வளவு ஆழத்தில் தண்ணீர் இருந்தாலும், 700-800 அடிக்குக் கீழே தண்ணீர் இருந்தாலும், அதை எடுக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித்தலைவரின் ஆணைக்கிணங்க ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் ஒரு பகுதியைத் தேர்ந்தெடுத்து அங்கே மெஷின் டிரில் மூலமாக தோண்டிப்பார்த்தார்கள். 500 அடிக்கும் கீழே தோண்டிப்பார்த்தும் தண்ணீர் வரவில்லை. ஆகவே அந்தப் பகுதி மக்களுக்கு குடிதண்ணீர் வசதி நல்ல முறையில் கிடைப்பதற்கு எதாவது ஒரு திட்டத்தை தீட்ட வேண்டிய நிலைமையில் நாம் இருக்கிறோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொண்டு அவர்களின் குடிதண்ணீர் கஷ்டத்தை நீக்குவதற்கு நல்லதொரு ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொண்டு ஆளுநர் அவர்களின் பேருரைக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

1971 மார்ச் 30]

*திரு. மு. இராமன்: மதிப்பிற்குரிய சட்டப் பேரவைத் தலைவரவர்களே, தமிழக ஆளுநர் அவர்கள் இந்த ஆண்டு சமர்ப்பித்த அறிக்கை மீது எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1971 மார்ச் திங்கள் நடைபெற்ற தேர்தலில் நம்முடைய மறைந்த தமிழகத்தின் முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களால் இந்த நாட்டில் ஆக்கி வைத்த நம்முடைய ஆட்சியை, நம்முடைய தமிழகத்தின் முதல்வர் கலைஞர் அண்ணன் அவர்கள் மிகச் சீரோடும், சிறப்போடும் அண்ணா வழியிலே இந்த நாட்டை நடத்திக்கொண்டு செல்கிறார்கள். நம்முடைய கலைஞர் ஆட்சியை தமிழகத்தில் இருக்கிற சிண்டிகேட் தலைவர்கள் இறக்குவதற்கு எல்லாவிதமான வன்முறைகளையும் கையாண்டார்கள். அப்படியிருந்தும் தமிழகப் பெருமக்கள் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் 183 பேரை இந்தச் சட்டமன்றத்திற்கு அனுப்பி தங்களுடைய ஆதரவைத் தெரிவித்துக்கொண்டார்கள். என்னுடைய தொகுதியில் 1967 தேர்தலில் நான் 7,437 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றேன். இன்றைக்கு நம்முடைய தமிழக மக்கள், தாய்மார்கள், என்னை 11,665 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச்செய்து இந்தச் சட்டப்பேரவைக்கு அனுப்பி வைத்து இருக்கிறார்கள்.

நம்முடைய தமிழக முதல்வர் மிகச் சீரான முறையில் திறமையோடும், அன்போடும், புன்சிரிப்போடும் நாட்டு மக்களுக்கு நல்ல வசதி செய்து தருவதற்கு எங்களை எல்லாம் வழி நடத்திச் செல்கிறார்கள். இந்த ஆட்சியை இன்னும் 20 ஆண்டு காலத்திற்கு யாரும் அசைக்க முடியாது. நம்முடைய தாய்மார்கள் 100-க்கு 100 பேர் தி.மு. கழகத்திற்கு வாக்களித்திருக்கிறார்கள். 1967-க்கு முன்பு இருந்ததுபோல் அரிசிபஞ்சம் இப்போது இல்லை. தாய்மார்கள் வெயிலில் வரிசையில் நிற்கவேண்டிய அவசியம் இல்லை.

நம்முடைய தமிழ்நாடு அரசு நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கி இருக்கும் 4-ல் ஒரு பகுதி, விவசாயப் பெருங்குடி மக்களுக்காகச் செலவிடப்படுகிறது. பிற்பட்டோர் நலனுக்கு என்று நிறையத் தொகை ஒதுக்கி இருக்கிறார்கள். கடந்த 1971 ஜனவரி 2-ம் நாள் அளிக்கப்பட்ட பிற்பட்டோர் நலக் குழுவின் அறிக்கை மீது அரசு ஆணை பிறப்பிக்க இருக்கிறது. என்னுடைய மாவட்டத்தில் என்னுடைய தொகுதியில் பல குடும்பங்கள் குடிசை இன்றி தவிக்கிறார்கள். அங்கே புறம்போக்கு நிலங்களைக்கூட எடுத்துப் பயன்படுத்த முடியவில்லை. அவற்றை எடுப்பதற்காக சட்டரீதியாக ஒரு சட்டத்தைத் தீட்டி, ஓடைப் புறம்போக்கு, மந்தைவெளிப் புறம்போக்கு, மயானப் புறம்போக்கு போன்ற எல்லாவற்றையும் எடுக்கும் விதத்தில் ஒரு சட்டத்தைப் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இத்துடன் இன்றைய அலுவல்கள் முடிவுற்றன. திரு. மு. இராமன் அவர்கள் தொடர்ந்து நாளை இந்த விவாதத்தில் பேசுவார். பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

(5) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

77. Notification issued with G.O. Rt. No. 139, Revenue, dated the 25th January 1971 in regard to exemption from liability to entertainments tax to the cinematograph film show organised by the Lions Club of South Madras on 6th February 1971 at Shanthi Theatre, Madras. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

78. Notification issued with G.O. (P) No. 2180, Revenue, dated the 13th July 1970 in regard to certain amendments to the Tamil Nadu General Sales Tax Rules, 1959, published at pages 232–280 of the Rules Supplement to Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 1st April 1959 as subsequently amended. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

79. Notification issued with G.O. Rt. No. 256, Revenue, dated the 10th February 1971, in regard to exemption from liability to entertainments tax to the cinematograph film show organised by the students of the Vivekananda College Hostel, in aid of the Silver Jubilee Celebrations Fund to be held on 21st February 1971 at Sun Theatre, Madras. [Laid on the Table of the House under section 16(4) of the Tamil Nadu Entertainment Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939.]

80. Notification issued with G.O. Ms. No. 190, Home, dated the 31st January 1970, in regard to amendment to the Tamil Nadu Children Rules, 1940, published at pages 1199 to 1242 of Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 17th September 1940 as subsequently amended . [Laid on the Table of the House under section 44 (1) of the Tamil Nadu Children Act, 1920 (Tamil Nadu Act IV of 1920).]

B. Reports, Notifications and other Papers.

25. Notification issued with G.O. Ms. No. 1288, Labour, dated the 18th September 1970, in regard to an amendment to the Tamil Nadu Factories (Welfare Officers) Rules, 1953.

@ 26. The Tamil Nadu Appropriation (Vote on Account) Bill, 1971 (L.A. Bill No. 4 of 1971).

@ 27. The Tamil Nadu Appropriation Bill, 1971 (L.A. Bill No. 5 of 1971).

APPENDIX I.

[*Vide foot-note on page*.

Address by the Governor of Tamil Nadu.

Honourable Members of the Legislature,

It is my pleasant privilege to welcome you all to this joint session of the Legislature. I congratulate all of you on your success in the elections and extend my sincere good wishes for a fruitful tenure of legislative office dedicated to the cause of the people.

2. I must congratulate the people of the State and the country on the peaceful manner in which the recent epoch-making elections have been held. The democratic traditions of our country have been fully sustained by the substantial and peaceful turn-out of the voters. It is the essence of the democratic process that differing points of view should be posed before the people, who should finally decide between them and the decision of the people should be accepted by all sections. I am confident that you, the newly elected members of the Legislature will respond fully to the confidence that has been reposed in you by the electorate and at the same time, in respect the genuine sentiments of constructive criticism given expression to during and after the electoral dialogue. While the relative proportion of members on the side of Government and those in Opposition has changed in the present Legislature, this Government will fully respect the sentiments of the Opposition. It is by such mutual respect that a society builds up the traditions of democracy. I am sure that these traditions, which have been the hallmark of this Legislature, will be sustained in the months and years to come.

3. The recent elections have given a clear and definite mandate to this Government. Government believe that the masses of our people who are in the lower rungs of society look forward to this Government to remedy their persistent grievances and lift them from their depths of poverty and suffering. There is a gleam of hope in their eyes today and it will be the endeavour of this Government to meet the aspirations of the common people.

4. Elections all over the world tend to give rise to the quickening of social tensions and arouse passions that lie deep in people's minds. I must, therefore, congratulate the people of Tamil Nadu on the exemplary manner in which, true to tradition, they have remained aloof from and above these stresses and strains of caste and religious politics and socially divisive pulls. They have been unswayed, by and large, by appeals to primitive communal and social passions.

5. I will be failing in my duty if I do not place on record the Government's appreciation of the role of the civil servants, particularly the Police and the District Administration, in ensuring the peaceful and fair conduct of elections. The survival of a democracy depends on the detachment and impartiality of the permanent civil service. It is my hope and desire that the high standards which have been in evidence during the recent elections, will continue to be adhered to in future also.

Agriculture.

6. During the year that has gone by, the State had a very good season on the agricultural front. The rainfall during the year was, by and large, normal, excepting in parts of Ramanathapuram, Tirunelveli and to some extent in Coimbatore and Kanyakumari districts. It is our estimate that production of foodgrains will reach a target of 67 lakh tonnes, representing an increase of 7 per cent over the last year's level of 62.6 lakh tonnes. This compares well with the level of 54.58 lakh tonnes in 1966–67. Increase of production of foodgrains has been primarily the result of continued and concerted attention given to the provision of fertilisers, pesticidies, better variety of seeds, credit and better water management.

The consumption of fertilisers in the State has been stepped up from 0.85 lakh tonnes of nitrogen in 1966–67 to 2 lakh tonnes estimated in 1970–71. Similarly, the availability of short-term credit has been increased from Rs. 31.41 crores to Rs. 55.09 crores, that of long-term credit from Rs. 3 crores in 1966–67 to Rs. 19 crores in 1970–71. The establishment of lift irrigation societies and the opening of 117 new primary land development banks are further evidence of the State's determination to extend adequate credit to the farmers. The year gone by also witnessed the successful launching of a programme for increasing production of pulses, besides the continued expansion of high yielding varieties of paddy. In 1971–72, high yielding varieties of paddy will be extended to 38.5 lakh acres, and a programme for longe-staple cotton will be introduced to cover 2.6 lakh acres.

The State continues to lay emphasis on extension services. The intensive agricultural areas programme was extended to Tiruchirappalli and the extension services in the State generally strengthened. The decision to set up an agricultural university at Coimbatore is yet another evidence of the State's determination to bring the fruits of modern science to the farmers.

Government had also prepared a comprehensive project report costing Rs. 72 crores for credit to farmers for digging wells, installing tube-wells and mechanising cultivation. This programme is to be financed by the primary land development banks and the commercial banks with the assistance of the Agricultural Refinance Corporation, Bombay. I am happy to announce that the team from the International Bank for Reconstruction and Development,

which had appraised the project in September-October 1970, has been satisfied with the project and we expect that negotiations with the World Bank to finance the project will take place in April-May 1971. This is the first step in a concerted and integrated approach to the problem of increasing the availability of water to the farmers of the State. With this in view, the State has set up a Directorate of Ground-water, which will appraise the deailed availability of ground-water resources of the State and draw up plans and programmes for further utilising this ground-water in a scientic and economic manner. The project that we have now posed to the World Bank and to the Agricultural Refinance Corporation is but a first phase of our long-term strategy of exploiting in full the resources of the State.

Side by side with this goes the intensive programme of rural electrification by the State Electricity Board. Inspite of problems arising from limitations of financial resources and of raw materials, the total number of villages and hamlets electrified has gone up from 25,000 by the end of 1966–67 to 40,560 by the end of December 1970. The present tempo of rural electrification will continue. The number of pumpsets electrified in the State will also go up from 2.57 lakhs in 1966–67 to 5.09 lakhs by the end of 1970 which will be about 33 per cent of the pumpsets energised in the whole country.

Government are aware of the importance of securing a fair distribution of the benefits of the Green Revolution among the farmers of the State. The small farmers are at a handicap in obtaining resources to implement the new agricultural programme. In view of this, Government have set up Small Farmers' Development Agencies in South Arcot, Tirunelveli and Madurai, primarily to help small farmers to get credit and other inputs to improve their incomes. These agencies will spend Rs. 1.6 crores each during the Plan period.

We have also recognised the importance of developing the dry areas of the State which continue to suffer from lack of water and necessary inputs. Specialised dry farming projects have been set up at Koilpatti and Kudumiamalai. Based on the results of these projects, it is my hope that similar programmes will be taken up in other dry areas of the State.

We have taken the lead in regard to land reforms in the country. A State Level Committee under the Chairmanship of the Chief Minister has been set up in order to ensure that the legislation in regard to land reforms is implemented properly.

Industries.

7. Government are aware that so long as the bulk of the population continues to depend on agriculture and that too of the traditional kind, levels of living cannot improve. The long-term prospects of the countryside depend on increasing industrialisation and modernisation of agriculture which are inter-dependent.

The inauguration by the Prime Minister of the work on a long cherished dream of Tamil Nadu—the Salem Steel Plant—has been one of the most important events of 1970. I am happy to note that the Government of India have recently nominated the consultants to update the detailed project report of the plant. I hope that in keeping with the new image of a purposeful and a decisive Government at New Delhi, decisions on further phases of the construction of the project will also be taken with expedition.

This Government's pragmatic policies in the field of industry have been commended widely in the entrepreneurial community, both here and abroad. While Government's policy is that of securing the commanding heights of industry for the public sector, we continue to lay emphasis on the blending of private initiative and social control through establishment of industries in the joint sector. Government of India have issued a letter of intent for a sixty-crore fertiliser project in the joint sector to be set up at Tuticorin. The preliminaries of site selection and evaluation of processes and tenders have been completed and once the decision of Government of India on feedstock for the plant is communicated, the project will be well on its way. The Tamil Nadu Industrial Development Corporation has also secured letters of intent for a Rs. 1.5 crore plant to produce sodium hydrosulphite, a Rs. 5.5 crore plant to produce tyres, and Rs. 6 crores plant for manufacture of soda ash. These projects will be set up in the joint sector. I take this opportunity to extend a hearty invitation to all entrepreneurs in the State and in the country to avail themselves of this proffered hand of co-operation by the Tamil Nadu Industrial Development Corporation to set up units in the joint sector.

Production in the engineering industries in the State has been recovering from the recession of the previous years. The Southern Structurals Limited, which had been closed for nearly a year and employs nearly 1,600 men, has been revived under Government management and with Government finances. Government have also successfully revived Textools Limited. I am also happy to note that the State sponsored Textile Corporation, which has taken on the running of four sick textile mills, has been able to break even and bring most of them to a high degree of efficiency and utilisation.

Government have, in pursuance of their policy of encouraging small industries, set up a Small Industries Development Corporation which will provide raw materials, credit and technical consultancy. The establishment of a separate corporation—State Industrial Promotional Corporation of Tamil Nadu (SIPCOT)—has also been decided on. I am hopeful that in view of these institutional and other incentives offered by Government, new industrial investments will gather momentum in the State.

8. *Employment opportunities.*

We have been concerned with the increasing unemployment in the State. It must be recognised that unemployment is a national problem and can be solved only by co-operative efforts of the Centre anl the State and the State by itself cannot be expected to solve the problem, However, Within the available resources of the State, Government have undertaken a few measures. The frustration that results from unemployment of skilled and trained personnel is particularly explosive. Recognising this, Government implemented a number of schemes to absorb educated unemployed, the chief among these being an apprentice-teacher programme to give jobs to 6,500 teachers and an apprentice-engineer programme for 2,400 engineers. These are already being implemented at an annual cost of Rs. 1.38 crores.

The problem of rural unemployment it is more difficult to tackle. It is seasonal in nature in many parts of the State. In some areas due to continued drought, there is perennial unemployment. The Government have initiated two special projects at a cost of Rs. 2 croses each, provide work in chronically drought affected areas of Ramanathapuram and Dharmapuri districts. It is Government's belief that a much more intensive works programme is necessary, both to create an agricultural infrastructure and to produce employment in various parts of the State. Proposals for these are under consideration and will be included in the revised budget.

Slum Improvement.

The lack of employment opportunities in the villages has been creating problem in the towns and cities of the State. The problem of slums is a human one. Government have recognised that the squalor and filth of the slums are by themselves a concrete condemnation of the social power structure. Government have set up a Slum Clearance Board to approach this problem in a rational and scientific manner. Government have also set apart sufficient funds, Rs. 1.5 crores in 1970-71 and Rs. 3 crores in 1971-72 for the Slum Clearance Board to create new and better housing for the slum dwellers. One of the main causes of slums is the failure of employers in industry to provide for accommodation for their employees. Government also feel that industrial units should set up colonies for accommodating as large a proportion of the labour employed by them as possible. Government recognise that it is not sufficient to merely emphasise the creation of new housing accommodation; it is also necessary to prevent the growth of fresh slums by creating employment opportunities in and around the villages in the State. Growth-centres should be developed in the State outside the urban areas, so that the rush of the people to the cities can be stemmed. Government propose to devote special attention to this problem.

10. *Backward Classes.*

As Hinourable Members are aware, Government constituted a Backward Classes Commission in November 1969 to review the measures so far undertaken for the welfare of the backward

classes and to assess the effectiveness of these measures in improving their condition, particularly in matters relating to education and representation in public services. The Commission was also requested to make recommendations as to the further steps to be taken to improve the lot of the backward classes in the fields of education, public services, trade, commerce and industry, rural credit, marketing and co-operation, housing, etc. The Commission has presented its report to Government on 2nd January 1971. The report is under active consideration of the Government and we hope to take early decisions on the report.

Price situation.

11. During the year gone by, the overall price situation caused us some anxiety, though on the food front there was no serious difficulty, thanks to higher food production. The price situation depends on many factors chief among these being the level of production, the economic policy of the Government of India and the international price trends. It is the Central monetary and economic institutions and not the State Governments which alone make the policies which in turn shape the prices. Government believe that in these, as in other important matters, there should be continued and detailed consultation between the Centre and the State, so that decisions can be taken on a co-ordinated basis to control the rise in prices. For instance, timely decisions to import industrial raw materials such as cotton and staple fibre, steel and drugs can help in controlling the price situation. Government have repeatedly urged on the Government of India to take advance action in this regard. Be this as it may, the rise in prices has led to a continued demand for higher wages on the part of labour, both in the public and private sector. The frequent adjustments of dearness allowance by the Central Government on the one hand and the private sector on the other have increased the pressure on the State Government to increase the emoluments for its own employees. It is an unfortunate fact that the Centre in taking its decisions on emoluments for its employees ignores, their impact on those of State Government servants who, after all, work in the same milieu. It is our view that a co-ordinated price-wage-profit policy should be evolved in consultation with the States so that an overall wage price structure can be produced which will strengthen the economy.

Pay scales of employees.

12. In the context of the price situation and wages of other employees including those of the Central Government the State Government have been eamining the wage structure of their employees.

Government recognise that it is neither fair nor equitable to continue to pay the Government servants on the basis of the salary structure determined more than a decade ago in 1960. We had, therefore, represented to the Fifth Finance Commission that the revision of pay and allowances of State Government's employees was long overdue and that the cost of the increase

should be taken into account in determining the revenue gap of the State. Unfortunately, the Fifth Finance Commission excluded from its recommendations the impact of the proposed pay revisions. The State Government protested to the Government of India about the unreasonableness of this attitude, especially considering the fact that our neighbouring States had revised their pay scales and the impact of these revisions had been allowed for by the Finance Commission. I regret to say that the Government of India have not so far considered favourably our request to be reimbursed the extra cost of the increase of salaries and allowances of our employees. As the House is aware, the State Government gave a special compensatory allowance of Rs. 10 per month to all employees drawing less than Rs. 500 along with the Budget for 1970-71. The Second Pay Commission has subsequently given its report. Government have accepted in full the recommendations of the Pay Commission and besides, introduced a few liberalisations. The cost of implementation of these recommendations is expected to be roughly Rs. 22 crores per annum. This is expected to benefit nearly 6 lakh employees. The House will admit that this is indeed a very liberal gesture on the part of the Government in the difficult financial situation in which the State finds itself. But Government have taken this decision in view of their recognition of the justice of the demand for reasonable remuneration. Government are aware that there are some anomalies in the recommendations. Government are sensitive and responsive to the needs of their employees, particularly of lower paid staff. We are, therefore, keen to assure all the employees that all anomalies will be carefully looked into by the specially formed division in the Finance Department under the former Member-Secretary of the Pay Commission and orders issued early.

Administrative Reforms.

13. Government are aware that prudent administration requires that while employees should be paid adequately, expenditure on staff and other routine administration will have to be kept within reasonable limit. We recognise that this can come about only from an improvement in quality of administration. Government are, therefore, engaged in a close scrutiny of the administrative system with a view to effecting a thorough revision of existing office procedures and administrative practices, so as to enable the Government machinery to move faster at a lesser cost. Modernisation of administration is a continuing task. Recently, the Police Commission which went into the problems of modernising the police-force of the State submitted its report. Government are actively examining the recommendations of the Commission and hope to issue orders early. An Organisation and Methods Cell is functioning in the State Government with a view to rationalising procedures, studying workloads and restricting expenditure by adoption of modern management methods. Inventory studies have been completed of various Corporations under the control of

Government as well as of the Transport Department. Management consultants have also studied the procedures prevalent in the treasuries of the State and made recommendations to improve them with a view to give better service to the people. It is Government's intention to pursue this line of administrative reform with greater vigour in the coming years. With this in view, Government have decided to set up a State Administrative Reforms Commission which will go into the structure of the State administration, and suggest ways and means of modernising it.

Plan.

14. The current plan is under way in the State. In view of differences between the Planning Commission and the State Government, we have not been able to finally determine the size of the State's Fourth Five-year Plan which we have been pressing should be at least Rs. 575 crores. The difficulty has been one of finance.

Government is engaged in a continued dialogue with the Centre on this issue and it is hoped that the pending differences will be settled, soon and that the total transfer of resources to the State will be enhanced suitably to make possible the implementation of a Plan of Rs. 575 crores. Turning to the Annual Plan, the State Government have emphasised on the Centre the need to approve a Plan of at least Rs. 90 crores for 1970-71 and Rs. 100 crores for 1971-72. It is my hope that these issues will be quickly resolved by the Planning Commission and the Government of India.

Setting up of State Planning Commission.

15. Government believe that the problems of development of the State cannot be tackled on the basis or short-term plans. Planning has to be long term in order to be effective. Modern economic progress depends very much on projects of long gestation, such as fertilisers, steel and heavy machinery, which take seven to eight years to come into being. The growth of population, the increase of pressure on out available resources, the looming threat of unemployment—all these combine to make it in evitable that we draw up a purposive plan of development with an accent on the fullest utilisation of the Statement power and natural resources. Keeping this in view, Government have decided to undertake the preparation of a long-term perspective plan for the State for the decade 1971—1981. Government propose to invite experts to undertake this study, under Government auspices. With a view to enabling a detailed study of these problems, Government have decided to set up a State Planning Commission consisting of economic administrators, economic experts and technologists. The Commission will not concern itself with detailed problems of planning administration. It will devote itself to identifying industrial and agricultural opportunities, analysing our resources and formulating a long-term perspective plan which would be the basis for action for the five-year Plans.

16. The main business of the Legislature at this sitting will be consideration of the Interim Budget, 1971-72 and passing of Vote on Account for covering the anticipated expenditure during the first four months of the ensuing financial year. The regular Budget, which will be presented to this House some time in June 1971, will reflect in full the Annual Plan of the State.

17. The session being brief, the legislative business of the House is not very heavy. A Bill to replace the Tamil Nadu Agricultural University Ordinance, 1971, and a Bill to replace the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Ordinance, 1971, will come up before the House. Besides these, a new Town and Country Planning Bill would also be introduced to replace the Tamil Nadu Town Planning Act of 1920 so as to provide a comprehensive legislation for all town and country planning activities in the State.

18. I hope and trust that you will continue to sustain the high democratic traditions of the Legislature and help to make this Legislature a purposeful instrument for the welfare of Tamil Nadu.

இணைப்பு II

[5-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக்காண்க]

[ஆளுநர் பேருரையின் தமிழாக்கம்]

மதிப்பிற்குரிய சட்ட மன்ற உறுப்பினர்களே,

சட்ட மன்ற இக் கூட்டவைக்கு உங்கள் அனைவரையும் வரவேற்பதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். தேர்தல் களத்தில் அடைந்த வெற்றிக்காக உங்கள் அனைவரையும் பாராட்டுவதோடு, இம் மன்றத்தில் அங்கம் வகிக்கும் காலத்தில் மக்கள் நலனைப் பேணிக் காக்கும் பொறுப்பில் அர்ப்பணித்துக்கொண்டு பயனளிக்கும் வகையில் நீங்கள் செயல்படுவதற்கு என்னுடைய நல்வாழ்த்துக்களைக் கூறிக்கொள்கிறேன்.

2. அண்மையில் நடந்தேறிய வரலாற்றுப் புகழ்வாய்ந்த தேர்தல்கள் அமைதியான முறையில் முடிந்தமைக்கு இந் நாட்டு மக்களுக்கும் குறிப்பாக இம் மாநில மக்களுக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். வாக்காளப் பெருமக்கள் பெருமளவிலும் அமைதியான முறையிலும் திரண்டு வந்து வாக்களித்ததனால், நமது நாட்டில் ஜனநாயகப் பண்பாடுகள் முற்றிலும் பேணிக் காக்கப்பட்டுள்ளன. பலதிறப்பட்ட கருத்துகள் மக்கள் முன் வைக்கப் பட்டு, அவற்றில் எது சிறந்தது என்பதை இறுதியில் அவர்களே முடிவு செய்வது தான் ஜனநாயக முறையின் சாரமாகும். அவ்வாறு மக்கள் அளிக்கும் தீர்ப்பை எல்லாப் பிரிவினரும் ஏற்றுக்கொள்ளவும் வேண்டும். சட்டமன்ற உறுப்பினர் களாக புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நீங்கள், உங்கள்மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கைக்கு இணக்கமாக முழுமனதுடன் பணியாற்றுவீர்கள் என்று நான் திடமாக நம்புகிறேன். தேர்தல் நடந்தபோதும் அதற்குப் பின்னரும் பல்வேறு சார்பினரும் எடுத்துக்கூறிய ஆக்கபூர்வமான கருத்துக் களுக்கு மதிப்பளிப்பீர்கள் என்றும் நம்புகிறேன். முன்னர் இருந்த நிலையோடு இன்றைய நிலையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சட்ட மன்ற உறுப்பினர் கூட்டுத்

தொகையில் ஆளுங்கட்சியினர், எதிர்க்கட்சியினர் ஆகிய இரு சாராருக்கும் [1971 மார்ச் 30

முறையே கிடைத்துள்ள எண்ணிக்கை விகிதாச்சாரங்களில் மாற்றம் ஏற்பட்டிருந்தாலும்கூட, இந்த அரசு எதிர்க்கட்சியினர் கூறும் கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுக்கும். ஒருவருக்கொருவர் மதிப்புக்கொடுத்து நடந்துகொள்வதன் மூலமாகத்தான், சமுதாயம் ஜனநாயகப் பண்புகளைப் போற்றி வளர்க்க இயலும். இத்தகைய பண்பாடுகள் இந்தச் சட்டமன்றத்தில் தனிச் சிறப்பாக இருந்து வந்திருக்கின்றன. இனி வரும் காலத்திலும் அவை கட்டிக்காத்து வளர்க்கப்படும் என்று உறுதியாக நம்புகிறேன்.

3. அண்மையில் நடைபெற்ற தேர்தல்கள் ஆளுங் கட்சிக்குச் சாதகமாக தெளிவான, திட்டவட்டமான முறையில் தீர்ப்பளித்துள்ளன. சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கும் பெருவாரியான மக்கள், தங்களுடைய இடைவிடாத் துயரங்களுக்கு விடிவு காண்பதற்கும், வறுமை, இன்னல் இவற்றிலிருந்து மீண்டு கரையேறுவதற்கும் இவ்வரசை ஆவலோடு எதிர்நோக்கி நிற்கின்றனர் என்று இந்த அரசு நம்புகிறது. அம் மக்களுடைய கண்களிலே இன்று நம்பிக்கை ஒளி வீசுகிறது. பாமர மக்களின் எண்ண வேட்கைகளை நிறைவேற்றி வைப்பதற்காக அரசு தீவிர முயற்சியை மேற்கொள்ளும்.

4. தேர்தல்கள் நடைபெறும்போது சமூகத்தில் பரபரப்பும் உணர்ச்சிக் கொந்தளிப்பும் மேலோங்குவது இயற்கை. மக்கள் மனத்தில் ஆழப் புதைந்து கிடக்கும் விருப்பு, வெறுப்புகள் தூண்டிவிடப்படுகின்றன. இவை உலகெங்கும் காணப்படும் உண்மை. ஆனால், தமிழ் நாட்டு மக்கள் தங்களுடைய தமிழ் மரபுக்கு ஏற்ப சாதி, சமய வெறுப்புணர்ச்சிகளுக்குச் செவிமடுக்காமலும் சமூகப் பிரிவினை உணர்ச்சிகளுக்கு இடங்கொடுக்காமலும், அவற்றிலிருந்து ஒதுங்கி நின்று, மிகவும் போற்றத் தக்க முறையில் நடந்துகொண்டார்கள். அவர்களை நாம் பாராட்ட வேண்டும். பழங்கால வகுப்புவாத, சமுதாய வெறிகளின் தூண்டுதல்களுக்கு தமிழ்நாட்டு மக்கள் ஆளாகவில்லை.

5. தேர்தல்கள் அமைதியாகவும் நேர்மையாகவும் நடைபெறுவதற்காக அரசு அலுவலர்கள், குறிப்பாக காவல்துறை அலுவலர்களும், மாவட்ட நிருவாகப் பிரிவினரும் ஆற்றிய பணிக்காக, அவர்களுக்கு இவ்வரசின் பாராட்டுதலைக் குறிப்பிட்டுக் கூற நான் கடமைப்பட்டுள்ளேன். ஒரு ஜனநாயக அமைப்பு குலையாமல் இருக்க வேண்டுமென்றால், நிலையான அரசு அலுவலர்கள் விருப்பு வெறுப்பின்றி, கடமையுணர்ச்சியோடு செயல்பட வேண்டும். அண்மையில் நடந்தத் தேர்தல்களில் கையாளப்பட்ட உயர் நெறிமுறைகள் இனி வருங்காலத்திலும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும் என்று நம்புகிறேன்.

வேளாண்மை.

6. முடிவடையவிருக்கும் நடப்பாண்டில் இம் மாநிலத்தின் வேளாண்மைத் துறையில் நல்ல செழிப்பு இருந்தது. இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் சில பகுதிகள் நீங்கலாகவும், ஓரளவுக்கு கோயம்புத்தூர், கன்னியாகுமரி மாவட்டங்கள் தவிரவும் மற்ற இடங்களில் இயல்பான அளவுக்கு மழை பெய்தது. இந்த ஆண்டின் உணவு தானிய உற்பத்தி 67 லட்சம் டன் அளவை எட்டிவிடும் என்று மதிப்பிட்டிருக்கிறோம். இந்த வளர்ச்சி, கடந்த ஆண்டில் இருந்த 62.6 லட்சம் டன்களைவிட 7 சத வித உயர்வாகும். 1966-67-ஆம் ஆண்டில் இருந்த 54.55 லட்ச டன்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இதை

1971 மார்ச் 30]

ஒரு நல்ல வளர்ச்சி என்று கூறலாம். இரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லிகள், உயர்ந்த ரக விதைகள், கடன் வசதிகள், பாசன வசதிகளைச் செம்மையாகப் பயன்படுத்துதல் போன்ற இவ் வழிகளில் தொடர்ச்சியாகவும், முனைப்பாகவும் கவனம் செலுத்தப்பட்டதன் விளைவாகத்தான் உணவு உற்பத்தி இவ்வாறு பெருகியுள்ளது.

நமது மாநிலத்தில், 1966-67-ஆம் ஆண்டில் 0.85 லட்சம் டன் அளவிற்குப் பயன்படுத்தப்பட்டு வந்த நைட்ரஜன் உரவகைகள், 1970-71-ஆம் ஆண்டில் 2 லட்சம் டன் அளவுக்கு உயருமென மதிப்பிடப்படுகின்றது. இதைப் போலவே, விவசாயிகளுக்குக் கிடைத்த குறுகிய கால கடன் வசதியும் ரூ. 31.41 கோடியிலிருந்து ரூ. 55.00 கோடிக்கு உயர்ந்திருக்கிறது. 1966-67-இல் ரூ. 3 கோடியாக இருந்த நீண்டகாலக் கடன் வசதி, 1970-71-இல் ரூ. 19 கோடியாக உயர்ந்துள்ளது. இறவைப் பாசன கூட்டுறவுச் சங்கங்களை அமைத்திருப்பதும், உழவர் பெரு 117 புதிய தொடக்க நிலவள வங்கிகளைத் தொடங்கியிருப்பதும், அரசுக்குள்ள மக்களுக்குப் போதிய அளவில் கடன் வசதிகளை அளிப்பதில் ஆர்வத்தைக் காட்டும். அதிக விளைச்சல் தரும் நெல் விதை வகைகளை பாவலாக்கும் திட்டம் கடந்த ஆண்டில் மேலும் விஸ்தரிக்கப்பட்டது. அந்த ... ன்கூட்டப் பருப்பு வகை உற்பத்தியைப் பெருக்கும் திட்டம் ஒன்றும் வெற்றிகரமாகத் தொடங்கி வைக்கப்பட்டது. 1971-72-ல் அதிக விளைச்சல் தரும் நெல் விதைகள் 38.5 லட்சம் ஏக்கராக்களுக்கு விஸ்தரிக்கப்படும். மேலும், 2.6 லட்சம் ஏக்கராக்களில் நெட்டிழைப் பருத்தி சாகுபடி செய்யப்படும்.

வேளாண்மை வளர்ச்சிப் பணிகளை பரவலாக்குவதற்கு அரசு தொடர்ந்து முக்கியத்துவம் அளித்துவருகிறது. முனைப்புச் சாகுபடிப் பகுதித் திட்டம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கும் நீட்டிக்கப்பட்டது. மாநிலத்தில் உள்ள வேளாண்மை வளர்ச்சிப் பணிகளை பரவலாக்கும் திட்டம் பொதுவாக வெலுவூட் ... அறிவியல் வளர்ச்சியின் வாயிலாகக் கிடைக்கக்கூடிய பயன்களை குடியானவர்கள் அறிந்து வளர்ச்சியின் வாயிலாகக் கிடைக்கக் கூடிய பயன்களை குடியானவர்கள் அறிந்து பலன் பெறவேண்டும் என்பதில் அரசு தீவிர நம்பிக்கை வைத்திருக்கிறது. கோயம்புத்தூரில் வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவ அரசு எடுத்திருக்கும் முடிவு இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

கிணறுகள் தோண்டுதல், குழாய்க் கிணறுகள் இறக்குதல், இயந்திரங்களைக் கொண்டு பயிரிடுதல் போன்ற காரியங்களுக்கு குடியானவர்களுக்குக் கடன் வழங்குவதற்காக ரூ. 72 கோடி செலவில் திட்ட அறிக்கை ஒன்றையும் அரசு தயாரித்துள்ளது. இத்திட்டத்திற்குப் பம்பாயிலுள்ள வேளாண்மை மறு நிதி உதவிக் கழகம் வழங்கும் கடன் உதவியைப் பெற்று, தொடக்க நிலவள வங்கிகளாலும் வணிக வங்கிகளாலும் கடன் உதவி அளிக்கப்படவிருக்கிறது. 1970 செப்டம்பர்--அக்டோபர் மாதங்களில் இத்திட்டத்தைப் பரிசீலனை செய்து மதிப்பிட்ட உலக வங்கிக் குழு இத் திட்டம் சிறந்த முறையில் அமைந்துள்ளது என்னும் முடிவுக்கு வந்தது. இத் திட்டத்திற்காக நிதி உதவி பெற உலக வங்கியுடன் 1971 ஏப்ரல், மே மாதங்களில் பேச்சு வார்த்தைகள் நடைபெறுமென்று எதிர்பார்க்கிறோம். இம் மாநிலத்திலுள்ள குடியானவர்களுக்குக் தேவையான அளவுக்கு நீர்வசதி கிடைக்கச் செய்வதற்கு மேற்கொள்ளப்படவிருக்கும் ஒருங்கிணைந்த, முனைப்பான ஒரு திட்டத்திற்கு இது முதற் படி

யாகும். இந் நோக்கத்தைக் கருத்தில் கொண்டுதான் நில-நீர் வள இயக்குநர் அலுவலகம் ஒன்றினை இவ்வரசு ஏற்படுத்தியுள்ளது. இவ்வலுவலகம், இம் மாநிலத்தில் நில அடிமட்டத்திலிருந்து எந்த அளவுக்கு நீர் கிடைக்கக்கூடும் என்பதைத் தீவிரமாக ஆராய்ந்து மதிப்பிட்டு, நில-நீர் வளங்களை அறிவியல் ரீதியிலும் சிக்கன முறையிலும் பயன்படுத்திக் கொள்வதற்கான திட்டங்களையும் செயல் முறைகளையும் வரைந்து கொடுக்கும். மாநிலத்தில் உள்ள நில-நீர் வளங்களை முழு அளவுக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்கிற நமது நீண்ட காலக் குறிக்கோளை அடைவதற்கான முதல் கட்டம்தான், உலக வங்கி. வேளாண்மை மறு நிதி உதவிக் கழகம் இவற்றின் முன் நாம் இன்று வைத்துள்ள திட்டமாகும்.

மேற்கூறிய திட்டத்துடன் கூடவே, தமிழ் நாடு மின்சார வாரியம் கிராம மின் வசதித் திட்டத்தை முனைப்பாகச் செயல்படுத்தி வருகிறது. நிதிப் பற்றுக்குறை காரணமாகவும் மூலப்பொருள்கள் தேவையான அளவுக்குக் கிடைக்காத காரணத்தாலும் சிக்கல்கள் சில தலை தூக்கினாலும்கூட, மின் வசதியளிக்கப்பட்ட கிராமங்கள், சிற்றூர்கள் இவற்றின் மொத்த எண்ணிக்கை, 1966-67 இறுதியில் 25,000-ஆக இருந்ததற்கு மாறாக, 1970 டிசம்பர் இறுதியில் 37,560 ஆக உயர்ந்துள்ளது. கிராமங்களுக்கு மின் வசதியைப் பரவச் செய்வதில் உள்ள வேகம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். மாநிலத்தில் மின் இணைப்புப் பெறும் வேளாண்மை விசையேற்றங்களின் எண்ணிக்கையும் 1966-67-ல் இருந்த 2.57 லட்சத்திலிருந்து 1970-ஆம் ஆண்டில் 5.09 லட்சத்திற்கு உயர்ந்தது. இந்தியா முழுவதிலும் உள்ள மின் இணைப்புப் பெற்ற வேளாண்மை விசை ஏற்றங்களில் இது 33 சத வீதமாகும்.

பசுமைப் புரட்சியின் மூலமாகக் கிடைக்கக்கூடிய பலன்கள் நமது மாநிலத்தில் உள்ள குடியானவர்களுக்குப் பரவலாகக் கிடைக்கச் செய்ய வேண்டியதன் அவசியத்தை அரசு தெளிவாக அறிந்திருக்கிறது. வேளாண்மையில் புதிய முறைகளைக் கையாளுவதற்குத் தேவைப்படும் வசதிகளைப் பெறுவதில் சிறு குடியானவர்களுக்குச் சில இடையூறுகள் உள்ளன. இதனால், கடன் வசதிகளையும், இதர விவசாயச் சாதனங்களையும் பெற்று சிறு உழவர்கள் தங்களுடைய வருவாய் வாய்ப்புகளைப் பெருக்கிக் கொள்வதற்கு உதவியாக இருக்கும் என்கிற நோக்கத்தில் அரசு தென் ஆர்க்காடு, திருநெல்வேலி, மதுரை மாவட்டங்களில் சிறு உழவர்கள் மேம்பாட்டு நிறுவனங்களை அமைத்துள்ளது. திட்ட காலத்தில் இந்நிறுவனங்கள் ஒவ்வொன்றும் ரூ. 1.6 கோடி செலவு செய்யும்.

பாசன வசதியும் தேவையான விவசாயச் சாதனங்களும் இல்லாத காரணத்தால் பின்தங்கிய நிலையிலுள்ள வறண்ட பகுதிகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை அரசு உணர்ந்திருக்கிறது. தனித் தன்மை வாய்ந்த புன்செய்ப் பண்ணை திட்டங்கள் கோவில்பட்டியிலும், குடுமியாமலையிலும் அமைக்கப்பட்டுள்ளன. இத் திட்டங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை அறிந்து, அதன் அடிப்படையில் இது போன்ற திட்டங்கள் இம் மாநிலத்தில் உள்ள பிற வறண்ட பகுதிகளிலும் மேற்கொள்ளப்படுமென நான் நம்புகிறேன்.

நிலச் சீர்திருத்தங்களைப் பொறுத்தளவில், நாட்டில் நாம் முன்னணியில் நிற்கிறோம். நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக நிறைவேறும் சட்டங்கள் முறையாகச் செயல்படுத்தப்படுகின்றனவா என்பதனைக் கண்காணிக்க மாநில அளவில் முதலமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

தொழில்கள்.

7. மக்கள் தொகையில் பெரும் பகுதியினர் வாழ்க்கைக்கு விவசாயத்தையே, அதுவும் பழைய தொழில் முறையில் அமைந்த விவசாயத்தையே நம்பி இருக்கும் வரையில் வாழ்க்கைத் தரம் உயர முடியாது என்னும் உண்மையை அரசு அறிந்திருக்கிறது. கிராமப் புறங்களில் உள்ளவர்களுடைய வாழ்க்கை நிலை உயர்வது எந்த அளவுக்குத் தொழில்கள் வளர்ச்சியடைகின்றன, எந்த அளவுக்கு வேளாண்மை முறை புதுமையாக்கப் படுகிறது என்பதைப் பொறுத்திருக்கிறது. இவையிரண்டும் ஒன்றையொன்று சார்ந்தவையாகும்.

நம் மாநிலத்தின் தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில், 1970-ஆம் ஆண்டின் மிக முக்கியமான நிகழ்ச்சிகளுள் ஒன்று, பன்னெடுங்காலமாகத் தமிழ் நாட்டின் கனவாக இருந்து வந்த சேலம் உருக்காலையை இந்தியப் பிரதமர் தொடங்கி வைத்ததேயாகும். இந்த ஆலையின் விவரங்கள் அடங்கிய திட்ட அறிக்கையை இன்றைய நிலைக்கேற்ப திருத்தி அமைப்பதற்காக அண்மையில் இந்திய அரசு ஆலோசகர்களை நியமித்திருக்கிறது என்பதைக் குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். புதுடில்லியில் இப்பொழுது பதவி வகித்து வரும் அரசு தெளிவான கொள்கையும் விரைவும் வாய்ந்ததென்று எங்கும் பரவலாகக் கருதப்படுகிறது. இதற்கேற்ப சேலம் உருக்காலைத் திட்டத்தை நிர்மாணிப்பது சம்பந்தமான அடுத்துச் செய்ய வேண்டிய வேலைகளும் விரைவாக மேற்கொள்ளப்படும் என்று நான் நம்புகிறேன்.

இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள தொழில் முனைவர்கள் நடைமுறைக்கு ஏற்புடையதான தொழில் கொள்கைகளை இந்த அரசு கையாண்டு வருவதைப் பாராட்டியிருக்கிறார்கள். பொருளாதாரத்தை கையகப்படுத்தும் திறனுள்ள பெருந் தொழில்களை அரசுத் துறையின்கீழ்க் கொண்டு வரவேண்டும் என்பதுதான் இந்த அரசின் கொள்கையாகும். இருந்தபோதிலும், வேறு தொழில்களைப் பொறுத்த வரையில் தனியார் ஊக்கத்தையும் அரசாங்கக் கண்காணிப்பையும் இணைக்கக்கூடிய கூட்டுத்துறைக் கொள்கையைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். கூட்டுத் துறையின் அடிப்படையில் தூத்துக்குடியில் அமைக்கப்படவிருக்கும் ரூ. 60 கோடி மதிப்புள்ள உரத்தொழிற்சாலையை நிறுவ இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத் தொழிற்சாலையை அமைப்பதற்கான இடத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான தொடக்கப் பணிகளும், நடைமுறைச் செயல் முறைகளை வகுப்பது சம்பந்தமான பிற பணிகளும், நிறைவேற்றப்பட்டுள்ளன. இத் தொழிற்சாலைக்கு வேண்டிய மூலப்பொருள் குறித்த இந்திய அரசின் முடிவு அறிவிக்கப்பட்டவுடன் தொழிற்சாலைப் பணிகள் விரைவில் நிறைவேற்றப்படும். சோடியம் ஹைடிரோ சல்பைட் தயாரிப்பதற்கு ரூ. 1.5 கோடி செலவிலும், டயர்கள் தயாரிப்பதற்கு ரூ. 5.5 கோடி செலவிலும் உரக் காரம் தயாரிப்பதற்கு ரூ. 6 கோடி செலவிலும் தொழிற் சாலைகள் நிறுவுவதற்கு தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் அனுமதி பெற்றுள்ளது. இத் தொழிற் சாலைகளும் கூட்டுத் துறையில் அமைக்கப்படும். கூட்டுத் துறையில் தொழிற் சாலைகளை அமைப்பதற்குத் தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக்கழகம் அளிக்க முன் வந்திருக்கும் அரிய ஒத்துழைப்பைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு நமது மாநிலத்திலும், நாட்டிலும் உள்ள தொழில் முனைவர்கள் அனைவருக்கும் என் இதயம் கனிந்த அழைப்பு விடுப்பதற்கு இந்த வாய்ப்பை நான் பயன்படுத்திக் கொள்கிறேன்.

இம் மாநிலத்தில் உள்ள பொறியியல் தொழிற்சாலைகளில் முந்திய ஆண்டுகளில் நிலவி வந்த மந்த நிலை நீங்கி இப்பொழுது உற்பத்தி பெருகிவருகிறது. ஏறத்தாழ ஓராண்டுக் காலம் மூடிக்கிடந்த, சுமார் 1,600 பேருக்கு வேலை அளிக்கும் சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் லிமிடெட் நிறுவனம், அரசு நிர்வாகத்தின் கீழ் அரசு நிதி உதவியுடனும் மீண்டும் செயல்படத் தொடங்கியிருக்கிறது. [illegible] நிறுவனத்தையும் இந்த அரசு வெற்றிகரமாக மீண்டும் திறந்து வைத்துப் பணியாற்றச் செய்துள்ளது. நொடிந்துபோன நான்கு பஞ்சாலைகளை ஏற்று நடத்தி வரும், அரசு ஆதரவு பெற்ற பஞ்சாலைக் கழகம், அவை அடைந்து வந்த நட்டத்தைப் போக்கி, மிகத் திறமையுடனும் பயனளிக்கக்கூடிய வகையிலும் செயல்படும் நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறேன்.

சிறு தொழில்களுக்கு ஊக்கம் கொடுக்கவேண்டுமென்கிற இந்த அரசின் கொள்கைக்கு இணங்க, சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் ஒன்றினை அரசு அமைத்திருக்கிறது. இக் கழகம் சிறு தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருள்கள், கடன் வசதி, தொழில் நுட்ப ஆலோசனை முதலியவற்றை வழங்கும். தமிழ்நாடு அரசுத் தொழில் மேம்பாட்டுக் கழகம் (SIPCOT) ஒன்றினைத் தனியாக நிறுவ அரசு முடிவு எடுத்துள்ளது. நிறுவனங்கள் மூலமாகவும் பிற வகைகளிலும் இவ்வரசு அளித்துவரும் இத்தகைய ஊக்கங்களின் காரணமாக, புதிய தொழில் முதலீடுகள் எழுச்சி பெற்று மேலும் வளரும் என்பதில் நம்பிக்கையுடையவனாக இருக்கிறேன்.

வேலை வாய்ப்பு வசதிகள்.

8. நமது மாநிலத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருவது குறித்து அரசு கவலையுற்றிருக்கிறது. வேலையின்மை என்பது தேசிய அளவில் நிலவும் ஒரு பிரச்சினை என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதனை மத்திய, மாநில அரசுகளின் கூட்டு முயற்சியால் தீர்க்கவேண்டும்; மாநில அரசு மட்டும் எடுக்கும் முயற்சிகளால் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்ற நிலை இருந்தபோதிலும், மாநில அரசின் வசதிக்கு ஏற்றமுறையில் இந்த அரசு சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. தொழில் திறமை படைத்தவர்களும், பயிற்சி பெற்றவர்களும் வேலையற்று இருப்பதால் அவர்களிடையே ஏற்படக் கூடிய வெறுப்புணர்ச்சி ஆபத்தானது. இவ்வுண்மையை அறிந்து இந்த அரசு படித்தவர்களிடையே வேலையின்மையைப் போக்க பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி இருக்கிறது. அவற்றுள் முக்கியமானவை 6,500 ஆசிரியர்களுக்கு வேலையளிக்கக்கூடிய ஆசிரியர் வேலைப் பயிற்சித் திட்டமும், 2,400 பொறியாளர்களுக்கு வேலையளிக்கக் கூடிய பொறியாளர் வேலைப் பயிற்சித் திட்டமுமாகும். ஆண்டொன்றுக்கு ரூ. 1.38 கோடி செலவில் இத் திட்டங்கள் ஏற்கனவே செயல்பட்டு வருகின்றன.

கிராமப் புறங்களில் நிலவும் வேலையில்லாப் பிரச்சினையைச் சமாளிப்பது மேலும் கடினமான ஒன்றாகும். இத்தகைய வேலையின்மை மாநிலத்தின் பல பகுதிகளில் சில பருவங்களில் ஏற்படக்கூடியதாகும். சில பகுதிகளில் நீடித்த வறட்சி நிலை காரணமாக வேலையின்மை நிலையாகவே நீடித்து வருகிறது. இராமநாதபுரம், தர்மபுரி மாவட்டங்களில் என்றும் வறட்சியினால் பாதிக்கப்படும் பகுதிகளில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் வகையில் ஒவ்வொரு

திட்டத்திற்கும் ரூ. 2 கோடி செலவில் இரண்டு சிறப்புத் திட்டங்களை அரசு தொடங்கியிருக்கிறது. வேளாண்மை வளர்ச்சிக்குத் தேவையான அடித்தளத்தை ஏற்படுத்தக் கூடியதும், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கக்கூடியதுமான மேலும் முனைப்பான வேலைத் திட்டம் ஒன்று அவசியம் என்று அரசு நம்புகிறது. இவற்றிற்கான செயற்குறிப்புகள் ஆய்வில் இருந்து வருகின்றன. அவை இறுதி மதிப்பீட்டில் சேர்க்கப்படும்.

குடிசைப்பகுதி மேம்பாடு.

9. கிராமங்களில் வேலைவாய்ப்பு குறைவாக இருப்பது நகரங்களிலும், மாநகரங்களிலும் பல பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது. குடிசைப் பகுதிப் பிரச்சினையை மனிதாபிமான முறையில் அணுகவேண்டும். குடிசைப் பகுதிகளின் அருவருக்கத்தக்க நிலை சமூக அமைப்பு முறையைக் கண்டிப்பதற்குரிய ஓர் எடுத்துக்காட்டாகும் என்பதை அரசு தெளிவாக அறிந்திருக்கிறது. இப் பிரச்சினையை ஒழுங்குபடுத்தி அறிவியல் முறையில் அணுகுவதற்காக அரசு குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஒன்றினை அமைத்திருக்கிறது. குடிசை வாழ் மக்களுக்குப் புதிய நல்ல வீடுகளைக் கட்டித் தருவதற்காக குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு 1970-71-ல் ரூ. 1.5 கோடியும், 1971-72-ல் ரூ. 3 கோடியுமாக அரசு போதிய நிதி வசதிகளை ஒதுக்கியுள்ளது. குடிசைப் பகுதிகள் தோன்றுவதற்கான முக்கியக் காரணங்களில் ஒன்று தொழிலதிபர்கள் தங்கள் தொழிலாளிகட்கு வீட்டு வசதியளிப்பதற்குத் தவறியமையேயாகும். தொழில் நிறுவனங்கள் தாங்கள் வேலைக்கமர்த்தியுள்ள தொழிலாளர்களில் இயன்ற வரையில் பெரும் பகுதியினர்க்கு வீட்டு வசதியளிக்கப்படும் வகையில் புதுக் குடியேற்றங்களை அமைக்க வேண்டுமென்றும் அரசு கருதுகிறது. புதிதாக வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதை வலியுறுத்துவது மட்டும் போதுமானதல்ல என்பது அரசு அறிந்ததே. புதிய குடிசைப் பகுதிகள் தோன்றாமல் தடுப்பதற்கு, மாநிலத்தில் உள்ள கிராமங்களிலும் கிராமச் சுற்றுப் பகுதிகளிலும் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியதும் அவசியமாகிறது. வளர்ச்சிப் பகுதிகளை நகர்ப்புறப் பகுதிகளுக்கு அப்பால் தோற்றுவிக்கவேண்டும்; அப்படிச் செய்தால்தான் நகரங்களுக்கு மக்கள் திரண்டு குடி பெயர்ந்து வருவதைத் தடுக்க முடியும். இப் பிரச்சினையைப் பற்றி தனிக் கவனம் செலுத்த அரசு தீர்மானித்திருக்கிறது.

பின்தங்கிய வகுப்பினர்.

10. பின்தங்கிய வகுப்பினரின் நலனைப் பேணுவதற்காக இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பரிசீலனை செய்வதற்காகவும், அந்நடவடிக்கைகளால் அவர்களுடைய நிலை, குறிப்பாகக் கல்வி, அரசுப் பணிகளில் பிரதிநிதித்துவம் போன்ற வகைகளில், எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பதைக் கண்டறிவதற்காகவும் 1969-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் பிற்பட்டோர் நலக் குழு ஒன்றினை அரசு அமைத்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். கல்வி, கிராமக் கடன், விற்பனை, அரசுப் பணிகள், வியாபாரம், வணிகம், தொழில், கூட்டுறவு, வீட்டுவசதி ஆகிய துறைகளில் பின்தங்கிய வகுப்பினருடைய வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக மேற்கொண்டு அரசு எடுக்க வேண்டிய முயற்சிகள் எவை என்பன பற்றிப் பரிந்துரைகள் வழங்குமாறும் அக் குழு கேட்டுக்கொள்ளப்பட்டது. பிற்பட்டோர் நலக் குழு தன்னுடைய அறிக்கையை

1971-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 2-ஆம் நாள் அரசுக்கு அளித்தது. இந்த அறிக்கையை அரசு தீவிரமாக ஆய்வு செய்து வருகிறது. அறிக்கை குறித்து விரைவில் முடிவெடுக்கப்படுமென்ற நம்பிக்கையைத் தெரிவிக்கிறேன்.

விலைவாசி நிலவரம்.

11. உணவு தானிய உற்பத்தி அதிக அளவில் இருந்ததால் உணவைப் பொறுத்த அளவில் பெரும் இடர்பாடுகள் எதுவுமில்லை என்ற போதிலும், கடந்த ஆண்டில் நிலவிய விலைவாசிகள் சற்று கவலையூட்டுவதாக இருந்தன. விலைவாசி நிலைமை உற்பத்தியின் அளவு, இந்திய அரசு கடைப் பிடிக்கும் பொருளாதாரக் கொள்கை, பன்னாட்டு விலைவாசிப் போக்கு இவற்றின் எதிரொலிப்பாக அமை கிறது. இவை எதையும் மாநில அரசு தன்னுடைய எந்த ஒரு நடவடிக்கையின் மூலமாக மட்டும் மாற்றியமைக்க முடியாது. ரிசர்வ் வங்கி போன்ற மத்தியப் பண நிறுவனங்களும், பொருளாதார அமைப்புகளுந்தான் பொருளாதாரக் கொள்கைகளை வரைகின்றன. இக் கொள்கைகள்தாம் விலைகளையும் பாதிக்கின் றன. இவ் வினங்களிலும் இதைப் போன்ற பிற முக்கிய இனங்களிலும் மத்திய அரசிற்கும் மாநில அரசிற்குமிடையே தொடர்ந்து விரிவான ஆலோசனைகள் நடத்தப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட வேண்டுமென்று இந்த அரசு நம்புகிறது. அப்போதுதான் விலைவாசிகளின் உயர்வை ஒருங்கிணைந்த வகையில் கட்டுப் படுத்துவதற்கான முடிவுகள் எடுப்பது சாத்தியமாகும். உதாரணத்திற்காகச் சொல்ல வேண்டுமென்றால், பருத்தி, செயற்கை நூல், எஃகு, மருந்துகள் போன்ற மூலப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கான முடிவுகளை உரிய காலத்தில் எடுத்தால் அது விலை வாசியைக் கட்டுப்படுத்த உதவியாக இருக்கும். இது சம்பந்தமாக முன் கூட்டியே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரி, இந்த அரசு திரும்பத் திரும்ப மத்திய அரசை வலியுறுத்தியிருக்கிறது. இது ஒரு புறம் இருக்க விலையேற்றத்தின் காரணமாக பொதுத் துறை, தனியார் துறை இரண்டிலும் உள்ள தொழிலாளர்கள் தொடர்ந்து ஊதிய உயர்வு கேட்டு வருகிறார்கள். விலைவாசிகள் உயர்வதற்கு ஏற்ப அகவிலைப் படியை அடிக்கடி உயர்த்துவதற்காக, ஒரு புறம் மத்திய அரசும் மற்றொரு புறம் தனியார் துறையும் நடவடிக்கை எடுப்பதால், மாநில அரசும் தன்னுடைய அலுவலர் களுக்கு ஊதிய உயர்வு அளிக்க வேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்படுகிறது. மத்திய அரசு அலுவலர்களும் மாநில அரசு அலுவலர்களும் ஓரே சூழ்நிலையில் பணி யாற்றுபவர்கள்தான். இருந்தாலும் மத்திய அரசு தனது அலுவலர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்க முடிவு செய்யும்போது, அம் முடிவின் விளைவால் மாநில அரசின் கீழ் வேலை செய்யும் அலுவலர்கள் எவ்வாறு பாதிக்கப்படுவார்கள் என்பதைப் பற்றி கவலைப்படுவதில்லை. இது ஒரு வருந்தத்தக்க உண்மை யாகும். மாநில அரசுகளைக் கலந்து கொண்டு விலை—ஊதிய—இலாபம் இம் மூன்றையும் நிர்ணயிப்பதற்கு ஒருங்கிணைந்த ஒரு கொள்கையை உருவாக்க வேண்டுமென்பது எங்களுடைய கருத்து. அத்தகைய ஒரு கொள்கையை உருவாக்கினால் நாட்டின் பொருளாதாரத்திற்கு வலுவூட்டக்கூடிய ஒரு பொது படையான அமைப்பை ஏற்படுத்த முடியும்.

அலுவலர்களின் சம்பள விகிதங்கள்.

12. விலைவாசிகள் நிலவரம், மத்திய அரசின்கீழ் வேலை செய்யும் அலுவலர் கள் உள்ளிட்ட மற்ற அலுவலர்களுக்குக் கிடைக்கும் ஊதியங்கள், இவற்றால்

எழும் சூழ்நிலையை வைத்து இவ்வரசு தன்னுடைய அலுவலர்களின் ஊதிய அமைப்பையும் ஆய்வு செய்து வந்திருக்கிறது.

பததாண்டுக் காலத்திற்கு முன்பாக 1960-ல் முடிவு செய்யப்பட்ட சம்பள
அமைப்பின் அடிப்படையில் அரசு அலுவலர்களுக்குத் தொடர்ந்து சம்பளம
கொடுத்து வருவது நியாயமல்ல என்பதை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது.
எனவே மாநில அரசு அலுவலர்களின் சம்பளம், படிகள் இவற்றை மாற்றி
யமைக்க வேண்டியது இன்றியமையாததென்பதை அவ்வாறு மாற்றி
யமைப்பதால் ஏற்படக்கூடிய அதிகச் செலவையும் மாநில வருவாய்க் கணக்கில்
எழும் பற்றுக்குறையை தீர்மானிக்கும் போது கவனத்தில் எடுத்துக்
கொள்ள வேண்டுமென்றும் நாங்கள் ஐந்தாம் நிதி ஆணைக் குழுவிடம்
முறையிட்டோம். ஆனால், ஐந்தாம் நிதி ஆணைக்குழு உத்தேச சம்பள மாற்றங்
களினால் ஏற்படக்கூடிய விளைவுகளைத் தனது பரிவுரைகளில் சேர்க்காதது வருந்
தத்தக்கதாகும். அண்டை மாநிலங்கள் தங்களுடைய சம்பள விகிதங்களை
மாற்றியமைத்தபோது அதனால் ஏற்பட்ட அதிகச் செலவை நிதி ஆணைக்குழு
அனுமதித்திருக்கும்போது, நம்முடைய கோரிக்கையை மட்டும் குழு மறுத்தி
ருப்பது நியாயமற்றது என்று கூறி இந்திய அரசிடம் இந்த அரசு முறையிட்டி
ருக்கிறது. நமது அலுவலர்களின் ஊதியங்களை உயர்த்தியதன் காரணமாக
ஏற்படும் கூடுதல் செலவை நமக்கு சரிக்கட்டித் தருமாறு இந்திய அரசிடம்
கேட்டதற்கு இதுகாறும் ஆதரவான பதில் கிடைக்கவில்லை என்பதை நான்
வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். நமது அலுவலர்களில் ரூ. 500-க்
கும் குறைவாகச் சம்பளம் வாங்கும் ஒவ்வொருவருக்கும், 1970-71-ஆம் ஆண்டுக்
குரிய வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 10 சிறப்பு ஈட்டுப்படி ஒன்றினை மாநில
அரசு அளித்ததை இம் மன்றத்தினர் அறிவர். இதனை அடுத்து, இரண்டாவது
சம்பள ஆணைக்குழுவும் தனது அறிக்கையை அளித்துள்ளது. சம்பள ஆணைக்
குழு அறிவித்த பரிந்துரைகள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டதோடு அரசு
வேறு சில சலுகைகளையும் வழங்கியுள்ளது. இந்தப் பரிவுரைகளைச் செயல்படுத்
துவதற்கு ஆகும் செலவு ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய ரூ. 22 கோடி யாகு
மென்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் ஏறத்தாழ 6 லட்சம் அலுவலர்கள்
பயனடைவார்கள். தனக்கிருக்கும் இக்கட்டான நிதி நிலைமையில் அரசு வழங்
கியுள்ள இச் சலுகைகள் அதன் தாராள மனப்பான்மைக்கு ஓர் எடுத்துக்காட்
டாகும் என்பதை இம் மன்றம் ஒப்புக்கொள்ளும். ஆனால், முறையான ஊதியம்
அளிக்குமாறு அலுவலர்கள் கேட்டுக்கொண்டதில் ஓரளவு நியாயம் இருக்கிறது
என்பதை உணர்ந்துதான் அரசு இந்த முடிவுக்கு வந்தது. இப்பரிவுரைகளில்
சில முரண்பாடுகள் இருக்கின்றன என்பதை அரசு அறியும். அரசு, தன் அலுவ
லர்களுடைய, குறிப்பாக குறைந்த சம்பளம் பெறும் அலுவலர்களுடைய
தேவைகளைப் பரிவுடன் கவனிக்கும். எனவே, பரிவுரைகளில் இருக்கக்கூடிய
எல்லா முரண்பாடுகளையும் சம்பள ஆணைக் குழுவின் முன்னாள் செல்லாள
ராகவும் உறுப்பினருமாகப் பணியாற்றியவருடைய தலைமையில் நிதித் துறை
யில் அமைக்கப்பட்டிருக்கும் தனிப்பிரிவு கவனமாக ஆய்வுசெய்து அதற்கான
ஆணைகள் விரைவில் பிறப்பிக்கும் என்று எல்லா அலுவலர்களுக்கும் உறுதி
கூற விரும்புகிறேன்.

திர்வாகச் சீர்திருத்தம்.

13. செம்மையான ஒரு நிருவாக அமைப்பில், அலுவலர்களுக்குப் போதிய அளவில் சம்பளங்கள் வழங்கப்படுவதோடு, அலுவலர்களுக்கு ஆகும் செலவுகளும், பிற நிருவாகச் செலவுகளும் நியாயமான வரம்புகளுக்குள் வரையறுக்கப்பட வேண்டும் என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. இப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமென்றால் நிருவாகத் தரம் உயர வேண்டும் என்பதையும் அரசு உணர்கிறது. எனவே, தற்போதைய அலுவலக நடைமுறைகளையும் நிருவாகப் பழக்கங்களையும், குறைந்த செலவில் விரைந்து செயலாற்றும் வகையில் முற்றிலும் மாற்றியமைக்கும் கருத்துடன் நிருவாக முறையை நுணுக்கமாக ஆய்வு செய்யும் பணியில் அரசு ஈடுபட்டு வருகிறது. நிருவாக அமைப்பைப் புதிய முறையில் மாற்றியமைக்க வேண்டும் என்பது தொடர்ந்து மேற்கொள்ளப்படவேண்டிய ஒரு பணியாகும்.

காவல் துறை அமைப்பை எவ்வாறு புதிய முறையில் மாற்றியமைக்கலாம் என்பதைப் பரிசீலனை செய்துபார்த்த காவல் துறை ஆணைக்குழு அண்மையில் தன்னுடைய அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறது. இந்த ஆணைக்குழு அறிவித்த பரிந்துரைகள் அரசின் சீரிய ஆய்வில் உள்ளன. அவை சம்பந்தமான ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப்படும்.

அலுவலக நடைமுறைகளைச் செப்பம் செய்து சீரமைக்கவும், வேலைச் சுமைகளை ஆய்வு செய்யவும் புதிய நிருவாக முறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் செலவினத்தைக் கட்டுப்படுத்தவும், மாநில அரசில் நிருவாக அமைப்பு முறைகள் குழு (Ougenisation and methods call) ஒன்று செயலாற்றி வருகிறது. போக்குவரத்துத் துறையிலும் அரசு கண்காணிப்பி லுள்ள மற்ற நிறுவனங்களிலும் சரக்குப் பட்டியல்கள் பற்றிய ஆராய்ச்சிகள் (Inventory Studies) நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளன. மாநிலத்தில் உள்ள கருவூலங்களில் நிலவிவரும் நடைமுறைகளைக் குறித்து நிருவாக அறிவுரையாளர்கள் ஆய்வுசெய்து, இவை மக்களுக்குச் சிறப்பான முறையில் பணியாற்றும் வகையில் மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை வழங்கியுள்ளனர். இனி வரும் ஆண்டுகளில் இவ்வகை நிருவாகச் சீர்திருத்தங்களை மேலும் முனைப்பாகப் பின்பற்ற வேண்டுமென்பது அரசின் விருப்பமாகும். இதனைக் கருத்தில் கொண்டு, மாநில நிருவாகச் சீர்திருத்த ஆணைக் குழு (State Administrative Reforms Commission) ஒன்றினை நிறுவ அரசு முடிவு செய்துள்ளது. அக் குழு மாநில நிருவாகக் கட்டமைப்பு எவ்வாறு இருக்கிறது என்பதை ஆராய்ந்து, மக்களுடைய தேவைகளை விரைவில் தீர்த்து வைப்பதற்காக அந்த அமைப்பைப் புதுப்பிப்பதற்கான வழித் துறைகளை அறிவிக்கும்.

திட்டம்.

14. நமது மாநில நடப்புத் திட்டம் செயல்பட்டு வருகிறது. திட்ட ஆணைக் குழுவுக்கும், மாநில அரசுக்கும் இடையே எழுந்துள்ள கருத்து வேறுபாடு காரணமாக, மாநில நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தின் அளவை இறுதியாக நிர்ணயிக்க முடியாமல் இருக்கிறோம். இத் திட்டம் குறைந்தது ரூ. 575 கோடி அளவிலாவது இருக்க வேண்டுமென்று நாம் வற்புறுத்தி வந்திருக்கிறோம். நிதி பற்றிய சிக்கல்தான் இப்போதுள்ள இடையூறுக்குக் காரணமாகும்.

இதுபற்றி மத்திய அரசுடன் இந்த அரசு தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது. இவ்வு பெருமளவிலான கருத்து வேறுபாடுகள் அனைத்தும் விரைவில் தீர்க்கப்படுமென்றும், 575 கோடி ரூபாய் அளவிலான திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு இயலும் வகையில் இம் மாநிலத்திற்குரிய மொத்த நிதி வாயில்கள் உயர்த்தப்படும் என்றும் எதிர்பார்க்கிறோம். ஆண்டுத் திட்டத்தை எடுத்துக்கொண்டால், 1970-71-ஆம் ஆண்டுக்கு குறைந்த அளவு ரூ. 90 கோடி திட்டத்தையும், 1971-72-ஆம் ஆண்டுக்கு குறைந்தது ரூ. 100 கோடித் திட்டத்தையும் ஏற்கவேண்டுமென்று மத்திய அரசிடம் மாநில அரசு வற்புறுத்தி வந்துள்ளது. இவற்றைத் திட்ட ஆணைக்குழுவும் இந்திய அரசும் விரைவில் முடிவு செய்யும் என்று நான் நம்புகிறேன்.

மாநில திட்டக்குழு அமைத்தல்.

15. மாநிலப் பொருளாதார வளர்ச்சி பற்றியப் பிரச்சினைகளை குறுகிய கால திட்டங்களின் அடிப்படையில் தீர்க்க முடியாதென்பது அரசின் கருத்தாகும். திட்டம் திறம்படச் செயல்படுத்தப்பட வேண்டுமென்றால், அது நீண்டகாலத் திட்டமாக இருத்தல் வேண்டும். நவீன பொருளாதார முன்னேற்றம் பெரும்பாலும், உரத் தொழிற்சாலைகள், உருக்காலைகள், கனரக யந்திரத் தொழிற்சாலைகள், போன்ற ஏழு எட்டு ஆண்டுகளில் உற்பத்தியைத் தொடங்கும், நீண்ட காலத் திட்டங்களைப் பொறுத்துத்தான் இருக்கிறது. மக்கள் தொகைப் பெருக்கம், நிதி வசதிக் குறைவு, அச்சுறுத்தும் வேலையில்லாப் பிரச்சினை இவை அனைத்தும் ஒன்றாகச் சேர்ந்து நிற்கும் நிலை நமது மாநிலத்தில் கிடைக்கக் கூடிய ஆள்பலம், இயற்கைச் சாதனங்கள் ஆகியவற்றை முழு அளவுக்கும் பயன் படுத்திக் கொள்ளக்கூடிய நிலையான குறிக்கோளுடைய ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டிய கட்டப்பாட்டை ஏற்படுத்துகிறது. இதனைக் கருத்தில் கொண்டு 1971-81 வரையிலான பத்தாண்டுக் காலத்திற்கு இம் மாநிலத்திற்கென நீண்டகாலத் திட்டம் ஒன்றைத் தயாரிக்கும் பணியை ஏற்க அரசு முடிவு செய்துள்ளது. வல்லுநர்களை அழைத்து இத்தகைய ஆய்வை மேற்கொள்ள அரசு முன்வந்துள்ளது. இப் பிரச்சினைகளைக் குறித்து விரிவான ஆய்வு நடத்துவதற்காக பொருளாதார அறிஞர்கள், நிர்வாக அலுவலர்கள், தொழில் நுட்ப வல்லுநர்கள் ஆகியோர் அடங்கிய மாநிலத் திட்டக்குழு ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. திட்டத்தைச் செயல்படுத்துவதில் எழும் அன்றாடச் சிக்கல்களில் இக் திட்டக்குழு ஈடுபடாது. நீண்டகால நோக்கில் திட்டம் ஒன்றைத் தீட்டுவதற்கான தொழில் வாய்ப்புகளையும், வேளாண்மை வாய்ப்புகளையும், நமது நிதி வாயில்களையும் ஆராயும் பொறுப்பே இக் குழு மேற்கொள்ளும்.

16. 1971-72-ஆம் ஆண்டுக்குரிய இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தை ஆய்வு செய்து, அடுத்து வரும் நிதி ஆண்டில் முதல் நான்கு திங்கள்களுக்கு எதிர்பார்க்கப்படும் செலவினங்கள் அடங்குகிற முன் மானியக் கோரிக்கையை நிறைவேற்றுவது இக் கூட்டத்தொடரில் சட்ட மன்றத்தின் முக்கிய அலுவலாக இருக்கும். 1971 ஜூன் திங்களில் இப்பேரவையின் முன்பு வைக்கப்பட இருக்கும் திருத்த வரவு-செலவுத் திட்டம் மாநில அரசின் ஆண்டுத் திட்டத்தை முழுமையாக எடுத்துக் காட்டுவதாக அமையும்.

17. குறுகிய இக் கூட்டத் தொடரில், சட்டமியற்றும் பணி பெருமளவில் இல்லை. 1971-ஆம் ஆண்டு தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக அவசரச் சட்டத்திற்கு மாற்றாக ஒரு மசோதாவும், 1971-ஆம் ஆண்டு தமிழ் நாடு

குடிசைப் பகுதிகள் (மேம்பாடு, மாற்றம்) குறித்த அவசரச் சட்டத்திற்குப் பதிலாக ஒரு மசோதாவும் இப் பேரவையின் ஆய்விற்கு வரும். இவை தவிர, இம் மாநிலத்தில் நகர்ப்புற, நாட்டுப்புறத் திட்ட அமைப்புப் பணிகள் அனைத்திற்கு முரிய அடங்கல் சட்டம் ஒன்றிற்கு வழிகோலும் வகையில், 1920-ஆம் ஆண்டு தமிழ் நாடு நகரமைப்புச் சட்டத்திற்கு மாற்றீடாகப் புதிய நகர்ப்புற, நாட்டுப்புற அமைப்பு மசோதா ஒன்றும் முகவுரைக்கப்படும்.

18. சட்ட மன்றத்தின் உயர்ந்த ஜனநாயக மரபுகளைத் தொடர்ந்து கடைப்பிடித்து, தமிழ்நாட்டினுடைய நலனைப் பெருக்குவதில் இச் சட்ட மன்றம் ஒரு பயனுள்ள கருவியாக அமைவதற்கு நீங்கள் உதவியாக இருப்பீர்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.

தமிழ் நாடு சட்டப் பேரவை.

புதன்கிழமை, 1971 மார்ச் 31.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. **மதியழகன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. அறிவிப்புகள்.

வினா—விடை நேரம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றும் வினா—விடை நேரம் இல்லை.

The Hon. Member, Thiru K. T. K. Thangamani has written me a letter requesting that steps may be taken to have the 'Question Hour' from 1st April 1971. I may inform the House that so far, 6 short Notice Question and 78 Starred Questions have already been admitted and communicated to the concerned departments and answers are awaited. The Question section is in daily contact with the departments to obtain answers as early as possible. At this end all steps are being taken to obtain answers as expeditiously as possible.

குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் பரிசீலிக்கப்படவில்லை என்பதைக் குறிக்கும்.

2. கவன ஈர்ப்பு.

பாலப்பநாயக்கன்பட்டியில் திராவிட முன்னேற்றக் கட்சியைச் சார்ந்த சிலர் தாக்கப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, சட்டப் பேரவை விதிகளின் 41-ஆவது விதியின்கீழ் அவசர பொது முக்கியமான காரியமொன்றை திரு. பெ. மலைச்சாமி அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், நத்தம் துணை வட்டம் பாலப்பநாயக்கன்பட்டியில் 17-3-1971-ம் நாள் காலையில் நிஜலிங்கப்பா தலைமை காங்கிரஸ்காரர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த ஏழு பேரை பயங்கரமான ஆயுதங்களைக் கொண்டு படுகாயப்படுத்தி, உயிருக்கு ஊறு விளையும் நிலைமை உருவாகியுள்ளதால் அந்த கிராமத்துக்குப் பாதுகாப்பு செய்து தர வேண்டிய அவசியம் பற்றிய அவசர பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 17—3—1971 அன்று, மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பாலப்பநாயக்கன்பட்டி என்ற கிராமத்தில் 46 காங்கிரஸ்காரர்கள் என்று சொல்லப்படுவோர் கூட்டமாக வந்து, கத்தி, தடி, மற்றும் கற்களால் தாக்கியதில் ஏழு திராவிட முன்னேற்றக் கழக

பாலப்பநாயக்கன்பட்டியில் திராவிட முன்னேற்றக் கட்சியைச் சேர்ந்த சிலர் தாக்கப்பட்டது குறித்து

ஆதரவாளர்கள் காயம் அடைந்தார்கள். இது குறித்து நத்தம் காவல் நிலைய குற்ற எண் 30/71-ல் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு இ.பி.கோ. 147-இ, 148, 323, 324, 336, மற்றும் 337 பிரிவுகளின்கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இது குறித்து 18—3—1971 அன்று முப்பது நபர்களும், 19—3—1971 அன்று 15 பேர்களும் கைது செய்யப்பட்டு, 19—3—1971 அன்று மாலையிலேயே கோர்ட்டாரால் ஜாமீனில் விடப்பட்டுள்ளனர்.

உயர்தர காவல்துறை அதிகாரிகளும், விசேஷ காவல் படையினரும் பாலப்பநாயக்கன்பட்டியில் முகாம் செய்துள்ளனர். அவர்களின் நேரடிப் பார்வையில் நிலைமை கட்டுக்கடங்கி இருக்கிறது. தற்போது அந்தக் கிராமத்தில் அமைதி நிலவுகிறது.

திரு. பெ. மலைச்சாமி: தலைவர் அவர்களே, தாக்குதலை நடத்தியவர்கள் அண்ணன் தம்பிகள், உறவினர்கள். அதைவிடப் பரிதாபகரமான நிகழ்ச்சி நேற்று நடந்திருப்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நேற்று மாலை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் கண்டுள்ள பொருள்குறித்து ஏதாவது விவரம் வேண்டுமானால் அதைக் கேள்வி நேரத்தில் கேளுங்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்பொழுது அளிக்கப்பட்ட அறிக்கையிலிருந்து இந்தச் சம்பவம் குறித்து ஏதாவது கேள்வி இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கலாம்.

திரு. பெ. மலைச்சாமி: அதுபோன்ற நிகழ்ச்சிகள் நேற்றுகூட என்னுடைய தொகுதியில் நடந்திருக்கின்றன. தயவு செய்து முதலமைச்சர் அவர்கள் இத்தகைய கொடுமையான நிகழ்ச்சிகளுக்கு முடிவு கட்டுவதற்காகத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படி நிகழ்ச்சி நடந்திருந்தால், விதி 41-இன் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானமாக வரக் கூடியதாக இருந்தால், அதை மாண்புமிகு உறுப்பினர் சபைக்குத் தரலாம்.

3. அரசினர் மசோதா

தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இம் மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இம் மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

4. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—(தொடர்ச்சி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமன் அவர்கள் நேற்று பேச்சை முடிக்கவில்லை. அவர்கள் இப்பொழுது இடத்தில் இல்லாததால் அவர்கள் பேச்சை முடித்ததாகக் கருதிக்கொண்டு, மதுரைத் தொகுதி உறுப்பினர் திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

***திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க சந்தர்ப்பம் அளித்த தங்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத் தலைமையில் இருப்பவர்களுக்கும், குறிப்பாக மதுரை மாவட்டச் செயலாளர் திரு. முத்து, M. L. C. அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சைத் துவக்குகிறேன்.

கவர்னர் உரையில், "வரலாற்றுப் புகழ் வாய்ந்த தேர்தல்கள்" என்ற வார்த்தைகளை அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். உண்மையிலேயே இந்த வார்த்தைகள் நம்முடைய சிந்தனையில் பல எண்ணங்களைக் கொண்டு வருகின்றன. இந்த வார்த்தைகள் மிகவும் பொருள்பொதிந்தவைகளாக அமைந்திருக்கின்றன. 1967 தேர்தலுக்குப்பிறகு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை ஏற்படுத்தும்போது, அறிஞர் இராஜாஜி அவர்களுடைய கூட்டினால் அதிக ஸ்தானங்களைப் பெற்றார்கள் என்ற வதந்தி இருந்தது. பல மக்களுடைய கருத்தும் அதுவாக இருந்தது. இப்பொழுது அவர் கூட்டு சேராத சமயத்தில், 1967 தேர்தலைக் காட்டிலும் இப்போது அதிக எண்ணிக்கை ஸ்தானங்களைப் பெற்று வெற்றி பெற்று வந்திருப்பதால் அந்த வாதம் அடிபடுகிறது என்ற உண்மையான கருத்து இப்பொழுது நிலவுகிறது. அது மாத்திரமல்லாமல், மிகவும் முற்போக்குக் கருத்து கொண்டது இடது சாரிக் கம்யூனிஸ்டுக் கட்சி என்று அவர்கள் தங்களைச் சொல்லிக்கொண்டு வந்திருந்தாலும், தமிழ்நாடு அவர்களை ஏன் ஆதரிக்கவில்லை என்பதற்கு இந்தத் தேர்தல் நன்றாக, தெளிவாகச் சொல்கிறது. அவர்களுடைய முற்போக்குக் கருத்து பலாத்காரத்தை அடிப்படையாகக்கொண்டு அமைந்துள்ளதால் இந்த மாநில மக்கள் அதை விரும்பவில்லை, அதற்கும் ஆதரவு தரவில்லை என்று ஏற்படுகிறது. ஆக, "வரலாற்றுப்புகழ் வாய்ந்த" என்னும் வார்த்தைகள் சிறியனவாக இருந்தாலும் பரந்து விரிந்த ஆலமரத்தினுடைய சிறு விதையின் தன்மையைப் போன்று அமைந்திருக்கின்றன.

இந்தத் தேர்தலின் வெற்றிவாய்ப்புக்குக் காரணம் என்ன என்பதையும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். "அண்மையில் நடைபெற்ற தேர்தல்கள் ஆளுங் கட்சிக்குச் சாதகமாக தெளிவான, திட்டவட்டமான முறையில் தீர்ப்பளித்துள்ளன. சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கும் பெருவாரியான மக்கள், தங்களுடைய இடைவிடாத துயரங்களுக்கு விடிவு காண்பதற்கும், வறுமை, இன்னல் இவற்றிலிருந்து மீண்டு கரையேறுவதற்கும் இவ்வரசை ஆவலோடு எதிர்நோக்கி நிற்கின்றனர் என்று இந்த அரசு நம்புகிறது." என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். உண்மையிலேயே, தேர்தலின்போது வாக்காளர் பெருமக்களைச் சந்திக்கும்போது, எல்லா ஏழை மக்களுடைய ஆதரவும்

[திரு. குப்பல் கெ. எஸ். இராமகிருஷ்ணன்] [1971 மார்ச் 31

நம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருப்பதென்பது நன்றாகத் தெரிந்தது. ஏனென்றால், ஏழை மக்கள் உண்மையிலேயே இந்த ஆட்சியால் நன்மை அடைந்தது என்னவென்றால், சேரியையும், கண்பார்வையும் நீக்கியதுதான். சேரியையும் கண்பார்வையும் நீக்குகின்றதால் மட்டும் அவர்களை முன்னேற்றிவிட முடியாது. அதற்கான வேலைவாய்ப்பைப் பெருக்கிக்கொள்ள வேண்டும். வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் திட்டங்களைப் பெருக்கிக்கொள்ளவேண்டும். அந்தக் காரியத்தைச் செய்வதற்கு நம் அரசு பிரசாரப் பணியில் ஈடுபட்டிருக்கிறது. நல்ல பொருள்கள் விலைகள் கொடுத்தும், அதிக நெல் விளைச்சல் கொடுக்கக்கூடிய பூமி. க. கழகம் பட்டா போன்ற மக்களை விவசாயிகளாக்குவதற்கு ஏற்படுத்தியும், விவசாயத்திற்கு வேண்டிய வசதிகளை வழங்கியும் கொடுத்தது. அதிக விளைச்சல் ஏற்பட பாடுபட்டிருக்கிறது, பசிப்பிணி போக்க மக்கள் பாசனம் உள்ள இடத்தில், 30 லட்சம் ஏக்கர் நிலங்களை அதிக நெல் விளைச்சல் ஏற்படுவதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஏழை மக்கள் எங்களை பெருவாரியாக ஆதரித்தார்கள்.

அவர்கள் ஆதரவு கொடுப்பதற்குக் காரணம் நன்றாக உணர்ந்தார்கள். சென்ற இருபது காலத்தில் தங்களுடைய குழந்தைகளுக்கு பாலகாலத்தில் பால் கூட கொடுக்க முடியாமல் குழந்தைகள் அழுது வயிறு ஒட்டிப்போன குடும்பங்கள் இருக்கின்றன. அந்தக் கஷ்டங்களையெல்லாம் நேரில் தாய்மார்கள் உணர்ந்திருக்கிறார்கள். சென்ற காலத்தில் பட்டதை நீக்கியதால் கழகத்தை அவர்களெல்லாம் ஆதரிக்க முன்வந்தார்கள். குழந்தைகளை காலகாலத்தில் பள்ளிக்கு அனுப்ப முடியாமல் கஷ்டப்பட்டது அவர்களுக்குத் தெரியும். சென்ற காலத்திலும் கூட அவர்களுக்குப் பள்ளி இல்லை. சென்ற காங்கிரஸ் முறை இருந்தபொழுது இன்னமும் கஷ்டத்தை உணர்ந்த மக்களுக்கு, சென்ற காங்கிரஸ் நீக்கியது முக்கியமாக நாயக்கர்களுக்குப் பெரிய ஆதரவாக இருந்ததால், கழகத்தினுடைய ஆட்சிக்கு வோட் போட வேண்டுமென்று அவர்களெல்லாம் முடிவாக இருந்து, கழகத்திற்கு அதிகப்படியான வாக்குகளை அளித்து, பெருவாரியான மெஜாரிட்டியில் கழக உறுப்பினர்கள் இங்கே வந்திருக்கிறார்கள்.

அதேபோலத்தான் மத்தியதர வகுப்பினரும் சென்ற காலத்தில் பட்ட கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. பெரிய வங்கிகளுக்கு அவர்கள் அதிகாரிகளை அணுகி பட்ட கஷ்டங்களையெல்லாம் அவர்கள் உணர்ந்திருந்த காரணத்தினால், அதிகமான பேர்கள் இந்தத் தேர்தலில் கழக ஆட்சிக்கு ஆதரவு கொடுத்திருக்கிறார்கள்.

இதைத் தவிர, இந்தத் தேர்தல் எந்த நிலையில் வந்திருக்கிறது என்பதை மக்கள் நன்றாக சிந்தித்துப் பார்த்திருக்கிறார்கள். இன்னும் 1¼ ஆண்டிற்குப் பிற்பாடுதான் தேர்தல் நடத்தவேண்டியிருந்தாலும், இந்திரா காந்தி அம்மையாரும், இந்த மாநில முதல் அமைச்சர் அவர்களும் முன்வந்து பதவி காலம் இருக்கும்பொழுதே, மறுதேர்தலை நடத்துவதற்கு ஏற்பாடு செய்தார்கள். அவர்கள் மக்கள் மீது வைத்திருந்த நம்பிக்கைதான் அதற்குக் காரணம். தாங்கள் செய்த காரியங்களில் மக்களுக்கு திருப்தி உண்டு, அவர்களுடைய ஆதரவு நிச்சயம் தங்களுக்குக் கிடைக்கும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருந்தது. அதே சமயத்தில் மக்களும் அரசு தங்களுக்காக பல நல்ல காரியங்களைச்

1971 மார்ச் 31] [திரு. குப்பல் கெ. எஸ். இராமகிருஷ்ணன்]

செய்திருக்கிறது என்று உணர்வு பெற்றிருந்தார்கள். அந்த நிலையில்தான் தேர்தல் நடந்தது. அந்த நிலையில் இந்திரா காங்கிரஸ் தலைவர்கள் தேர்தலுக்கு முன்பு தங்களுடைய திட்டத்தை மக்கள் முன் வைத்தார்கள்.

“முதலாளித்துவத்தையும் மதவாதத்தையும் தீயில் இட்டு சாம்பல் ஆக்கி வெற்றி மகுடத்தைக் கண்டிட

புதுமைக்கு வாழ்வை நிலைபெறச் செய்வோம்”

6505

என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைப் போல் இறந்த மனிதர்களை நாம் பார்க்கவேண்டும் என்பதை எல்லோரும் உணர்ந்தார்கள். மக்கள் தங்களுடைய குறைகளைத் தங்கள் ஆட்சியிடம் சொல்வதற்கு இல்லாமல் பொறுமையாகக் காத்திருந்தார்கள். அந்த நிலையில் மன்னர்கள் ஒரு நாய்க்குக் கல்யாணம் செய்வதற்கு லட்சம் செலவு செய்கிறார்கள். இந்தக் கஷ்டமான நிலைமை நீங்கவேண்டும். மன்னர்களுக்கும், ஏழைக்கும் உள்ள வித்தியாசம் மாறவேண்டும். difference between man and man என்பதைப் போல சோஷலிசத்தை அமுல் செய்வதற்கு தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டும். இனிமேல் காலம் கடத்தக்கூடாது, ஆகவே மறுபடி தேர்தல் நடத்தவேண்டும் என்று நினைத்தார்கள். ஏழை மக்கள் கஷ்டப்படுகிறார்கள். இனி காலம் கடத்தக்கூடாது. மறுபடி தேர்தல் நடத்தவேண்டும், மக்களுடைய வேண்டுகோள் படி சோஷலிச பாதையில் சேவை செய்து கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையில் கொள்கை விளக்கம் செய்தார்கள்.

அந்தக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு, அதே ரீதியில் திராவிட முன்னேற்றக் கழகமும் தேர்தல் நடத்த முன்வந்தது. எப்பொழுதும் எங்களை ஆதரித்து வந்த, எங்கள் கொள்கைகளை ஆதரித்து வந்த மக்கள் இந்தத் தேர்தலிலும் எங்களை பெருவாரியாக ஆதரித்தார்கள். எங்களுடைய கொள்கைகளுக்கு ஆதரவு கொடுத்து ஏராளமான மக்கள் தங்கள் வாக்குகளை எங்களுக்கு அளித்து, அதிகமான எண்ணிக்கையில் எங்கள் கழக உறுப்பினர்கள் இங்கே வந்திருக்கிறார்கள். ஆகவே, இன்றைய நிலையில் மக்கள் எங்கள் மேல் முழு நம்பிக்கையை வைத்திருக்கிறார்கள். ஏழை எளிய மக்கள், நல்ல பல திட்டங்களைக் கழக அரசுதான் செய்ய முடியும் என்ற நம்பிக்கையில் இங்கே எங்களை அனுப்பியிருக்கிறார்கள். அதைத் தடை செய்வதற்கான சக்தி இனி எதுவுமில்லை. ஆகவே நாம் செய்யவேண்டிய நல்ல காரியங்களை உடனடியாகத் தீவிரமாகச் செய்யவேண்டும்.

இந்த நிலையில் நாம் முக்கியமாகச் செய்யவேண்டிய காரியம் உணவு விஷயம். உணவு விஷயத்தில் சென்ற கஷ்டகாலத்தை நாம் நீக்கிவிட்டாலும், அரிசி விலை சற்றுக் குறையவேண்டும் என்று ஏழைகள் நினைக்கிறார்கள். பாக்கி 30 லட்சம் ஏக்கரா நிலங்களில் அதிக விளைச்சல் ஏற்படுத்துவதற்கு தீவிரமான நடவடிக்கை எடுக்கவேண்டும். அரிசி விலை சற்று குறைவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவுக்கு அடுத்தபடியாக உடை. உடையைப் பற்றி பிரச்னை கிடையாது. எல்லா வகைகளிலும் உடைகள் ஏராளமாக கிடைக்கின்றன.

உடைக்குப் பிற்பாடு வசிப்பதற்கு வீடு முக்கியம். ஒரு நண்பர் சொன்னார். நண்டுக்கும் வீடு இருக்கிறது, பாம்புக்கும் வீடு இருக்கிறது. மனித சமுதாயம் வீடு இல்லாமல் நாட்டில் இருக்கலாமா என்று கேட்டார். நாட்டில் எல்லோருக்குமே வீடு வசதி செய்து கொடுக்கவேண்டியது நம்முடைய கடமை.

திருமதி அனந்தநாயகி அவர்கள் சொன்னார்கள், வீட்டு வசதி வாரியம் பணக்காரர்களுக்கும், சில நடுத்தர வர்க்கத்தினருக்கும் மட்டும் தான் வீட்டு வசதி செய்து கொடுத்திருக்கிறது. அதை ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். அண்ணா அவர்கள் சொல்லியது போல், மாற்றான் தோட்டத்தில் மலரும் மல்லிகைக்கும் மணம் உண்டு. அந்த அடிப்படையில் பார்த்தால் அவர்கள் சொல்லியதில் ஓரளவு உண்மை உண்டு. ஆனால், நந்தனத்தில் டவர் பிளாக் கட்டடங்கள் கட்டியது காங்கிரஸ் மெஜாரிடியாக இருந்து ஆட்சி செய்த காலத்தில் தான் என்பதை மாத்திரம் சொல்லிக் கொள்கிறேன்.

இந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு, ஏழைகளுக்கு பணி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் தான் கழக ஆட்சியில் குடிசை மாற்று வாரியம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆரம்பத்தில் அது சென்னை நகருக்கு மாத்திரம் என்ற நிலைமை இருந்தது. சென்னைக்கு மாத்திரம் அப்படி ஒரு வாரியம் ஏற்படுத்துவது சரியல்ல என்று கருதி, பின்னால் மாநிலத்திலுள்ள எல்லா நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் பொதுவாக அது செயல்பட வேண்டும் என்ற எண்ணத்தில் மாநிலத்திற்கே ஒரு வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது. அது மிகவும் வரவேற்கக்கூடியது, பாராட்டக்கூடியது. அதற்காக பட்ஜெட்டில் ரூ. 3 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். குடிசைவாழ் மக்களை தாங்கள் அணுகி வாக்குகள் கேட்கும் பொழுதும் சரி, மற்ற சமயங்களில் அவர்களை அணுகும் பொழுதும் சரி, அவர்களுடைய நிலைமையைப் பார்த்தால் பரிதாபகரமாக இருக்கும். அவர்களுக்கு சாக்கடை வசதி கிடையாது, காற்று வசதி கிடையாது. இதுமாதிரி சுகாதாரமற்ற நிலையில் அவர்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். குடிசைவாழ் ஏழை மக்களுக்கு இறங்குவது, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இறங்குவது மிகவும் பெருமைப்படக் கூடிய காரியம். திரு. ராஜாஜி அவர்கள் நம்மாழ்வார் பாசுரம் குறித்து இவ்விதம் கூறியிருக்கிறார்கள்.

"ஈசன் வானவருக்கு என்றால் அது தேசமோ திருவேங்கடத்தானுக்கு நீசனேன் நிறைவு ஒன்றும் பெற்றிலேன் என்கண் பாசம் வைத்த பரஞ்சுடர் ஜோதிக்கே"

அதாவது, 'தேவலோகத்தில் வசிக்கும் வானவர்களுக்கெல்லாம் தலைவர் என்பதில் ஈசனுக்குப் பெருமை கிடையாது. நீசனை, பொருளாதாரத்திலோ, கல்வியிலோ, ஜாதியிலோ, எதிலும் நிறைவு பெறாதவர்களுக்கு நிறைவு பெறாத அடியார்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏழைகளுக்கு ஈசன், கடவுள் இறங்குகிறார், ஆட்கொள்கிறார் என்பதில் தான் அவருடைய பெருமை அடங்கி யிருக்கிறது' எனப்பொருள். ஆகவே, ஏழைகளுக்கு, தாழ்த்தப்பட்ட ஜனங்களுக்கு நாம் இறங்கி, அவர்களுக்கு அனுகூலமாக பல திட்டங்களை செயல் படுத்துவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. குடிசை சீரமைப்புத் திட்டம் அம்மாதிரி வகையில் ஒரு நல்ல திட்டம். அம்மாதிரி நல்ல காரியங்களைச் செய்வதால் அரசுக்குப் பெருமை வரப்போகிறது. இப்படி

பல நல்ல காரியங்களை நாம் செய்வோம் என்ற நம்பிக்கையில் தான் அவர்கள் நம்மை இங்கே பெருவாரியான எண்ணிக்கையில் அனுப்பியிருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றும் கவர்னர் அவர்கள் உரையில் மின்சார விஷயத்தைப்பற்றி சொல்லியிருக்கிறார்கள். இந்தியாவில் நம் நாட்டில் அதிக அளவுக்கு மின்சார இணைப்பு கொடுத்திருக்கிறோம், வீட்டிற்காகவும், பாசனத்திற்காகவும் கொடுத்திருக்கிறோம். இந்தியா முழுவதிலும் உள்ள வேளாண்மை விசையேற்றங்களில் 33 சதவிகிதம் என்பது மிகவும் பெருமைப்படத்தக்க விஷயமாக இருக்கிறது.

தொழில் பிரச்னையை எடுத்துக்கொண்டால், சிறு தொழில் அபிவிருத்தி கார்ப்பரேஷன் அமைந்திருப்பது உண்மையிலேயே பாராட்டத்தக்கது. தொழில் விஷயமாகச் சொல்லும்பொழுது, கோவை, திருச்சி போன்ற நகரங்கள் சமீப காலத்தில் அதிக முன்னேற்றம் அடைந்திருக்கின்றன. ஆனால், மதுரை மாத்திரம் கொஞ்சம் பின் தங்கியிருக்கிறது என்பது எல்லோரும் உணரக்கூடிய ஒரு விஷயம்.

நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் மதுரையில் அதிக அக்கறை செலுத்தி, அதை கார்ப்பரேஷன் ஆக்கியதற்கு நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறேன். 20 ஆண்டு காலமாக மதுரையை கார்ப்பரேஷனாக மாற்ற வேண்டும் என்று நகரசபை தீர்மானம் போட்டிருந்தும், அது இதுவரையிலும் நிறைவேற்றப்படவில்லை. இப்பொழுது இந்த ஆட்சியில் மதுரையை கார்ப்பரேஷனாக மாற்ற முன்வந்துள்ளதை நான் பாராட்டுகிறேன். அதன் தொடர்ச்சியாக பல நடவடிக்கைகள் எடுக்கவேண்டியிருக்கும். அதைக் கார்ப்பரேஷனாகச் செய்தால், சுற்றுப்புறத்திலுள்ள இடங்களையும் அதில் சேர்க்கவேண்டும். தண்ணீர் வசதி, சாக்கடை வசதி, மின் வசதி போன்ற வசதிகளையெல்லாம் எல்லாப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கவேண்டிய நிலைமை ஏற்படும். அவைகளுக் கெல்லாம் முன் கூட்டியே வேண்டிய நடவடிக்கைகள் எடுத்து, சீக்கிரம் எல்லா பகுதிகளையும் நல்ல விதமாக அமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் விஷயமாகச் சொல்லும்பொழுது, கப்பலூரில் 310 ஏக்கரா நிலம் பல ஆண்டுகளாக சர்க்கார் வசம் இருந்தும் எந்த விதமான பெரிய தொழிலும் இதுவரையில் அங்கே ஏற்படுத்தப்படவில்லை. திருச்சியில் பாய்லர் பிளாண்டு, திருவெறும்பூரில் பெரிய தொழிற்சாலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அங்கெல்லாம் ஏராளமான தொழில்கள் பெருகிவந்திருக்கிற நிலைமையில், மதுரை மட்டும் சமீபகாலம் வரையில் புறக்கணிக்கப்பட்டிருக்கிற நிலைமையை மாற்றி, அங்கே தொழில்கள் அபிவிருத்தி அடையச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மதுரையில் கைத்தறித் தொழிலாளர்கள் நிறைய இருக்கிறார்கள். இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு நூல்விலை மிகவும் அதிகரித்துவிட்டதால் அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் விஷயமாய் சர்க்கார் என்ன கொள்கை அனுஷ்டிக்கப்போகிறது என்றே தெரியாமல் இருக்கிறார்கள். நாம் கைத்தறியை ஆதரித்துவந்தால், அவர்களுக்கு ஏதாவது ஒரு விதத்தில் பாதுகாப்பு அளிக்கவேண்டும். ஒரு நெசவாளி ரூ. 100, 200 மாதத்திற்கு வருமானம் பெற வேண்டுமென்றால், அவன் குடும்பத்திலுள்ள மனைவி, பிள்ளைகள் எல்லோரும் நூல் சுற்றினால்தான் அந்த

வருமானம் பெற முடியும். கைத்தறி நெசவாளர் தங்களுடைய தொழிலை நீடித்து செய்ய வேண்டுமென்றால், அவர்களுக்கு ஊக்கமளித்து, தக்க பாதுகாப்பு அளித்து நியாயமான வருமானம் வரும்படி செய்யும்படியான நிலைமையை ஏற்படுத்தித் தரவேண்டும். இல்லை, அந்தத் தொழிலை கைவிடு என்று சொல்வதனால் வேறு தொழில் வைக்க வேண்டும். நெசவாளர்களை கூடியவரையில் சர்க்கார் பணியில் அமர்த்துவதில் முதல் இடம் கொடுக்க வேண்டும். ஆகவே அவர்களுடைய நிலைமைகளை உணர்ந்து செயல்பட வேண்டும் என்கிற அவசியத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த கவர்னர் பெருமானுடைய உரையானது நல்ல முறையில் அமைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைய விவாதத்தில் இருபதுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்துகொண்டு பேசுவதற்கு முன்வந்திருக்கிறார்கள். ஒவ்வொருவரும் பத்து நிமிஷ அளவில் பேசி முடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படியானால்தான், ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் விவாதத்தை முடிக்கமுடியும். ஆகவே, ஒவ்வொரு உறுப்பினரும் பேசுவதற்கு எட்டு முதல் பத்து நிமிஷங்களுக்கு மேல் எடுத்துக் கொள்ளாமல் தங்கள் உரையை முடித்துக் கொள்ள முயலவேண்டும்.

அடுத்து, இள்ளியூர் தொகுதி உறுப்பினர், திரு. டென்னிஸ் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

*** திரு. என். டென்னிஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய உரை மீது என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்று நினைக்கிறேன்.

எனக்கு முன் பேசிய நண்பர்கள் தேர்தலின் வெற்றி, தோல்வி பற்றி மிகைப்படுத்திக் கூறினார்கள். ஜனநாயக நாட்டில், ஆளுங்கட்சி எதிர்க் கட்சியாக மாறுவதும், எதிர்க் கட்சி ஆளுங்கட்சியாக மாறுவதும் சகஜமான விஷயங்கள். ஆளுங்கட்சியே என்றென்றைக்கும் ஆளுங்கட்சியாகவே இருக்கும் என்றோ, எதிர்க் கட்சி எப்பொழுதும் எதிர்க் கட்சியாகவே இருக்கும் என்றோ நினைப்பது சரியாகாது, அப்படி அரசியல் சரித்திரம் கூறவில்லை. நாம் எல்லோரும் இப்பொழுது சட்டமன்ற அங்கத்தினர்கள், உறுப்பினர்கள். உறுப்பினர்கள் யாவரும் ஒன்று சேர்ந்தால்தான் முழுமை பெறமுடியும். எதிர்க்கட்சி எதிர்ப்பதற்காக இல்லை. ஆளுங்கட்சியின் நிர்வாகத்தை சீராக, செம்மையாக, நேர்மையாக, திறமையாக நடத்துவதற்கு, எதிர்க் கட்சிகளின் சேவையும் மிக மிக அவசியமானது என்பதைக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில், இந்த சபையில் ஒரு பொறுப்புள்ள கட்சியாகச் செயல்படும், "constructive critism" கொடுக்கக் கூடிய கட்சியாகச் செயல்படும் என்பதைக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

கவர்னர் உரையில் புரட்சிகரமான திட்டங்களையும் கொள்கைகளையும், புது அம்சங்களையும் எதிர்பார்த்திருந்தேன். ஆனால், எவ்விதமான புரட்சிகரமான திட்டங்களோ, கொள்கைகளோ அல்லது புது அம்சங்களோ

உரையில் சொல்லப் படவில்லை. சில பிரச்சினைகள் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. பிரச்சினைகள் எடுத்துக் கூறப் பட்டிருக்கின்றனவே ஒழிய, அவற்றிற்குப் பரிகாரம் காணக்கூடிய திட்டங்கள் கவர்னர் உரையில் காணப் படவில்லை. அதற்கு மாறாக, மத்திய சர்க்காரின் மேல் பழியைப் போட்டு இந்த சர்க்கார் தன் கடமையிலிருந்து தப்பித்துக் கொள்வதாகத்தான் தோன்றுகிறது.

கவர்னர் உரையில் விலைவாசி உயர்வைப் பற்றியும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றியும் கூறப்பட்டிருக்கின்றன. ஆனால் அவற்றைத் தீர்க்கத் தக்க திட்டங்கள், வழிவகைகள் குறிப்பிடப்படவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க் கட்சியாக இருந்தபோது, தாங்கள் ஆளுங்கட்சியாக வந்தால் விலைவாசி உயர்வைக் குறைப்போம் என்று கூறினார்கள். அதற்கென போராட்டமும் நடத்தினார்கள். இன்றைக்கு கவர்னர் உரையில் விலைவாசி உயர்வைக் குறைக்க உருப்படியாக, ஆக்கமான திட்டங்கள் எடுத்துக் கூறப்படவில்லை. விலைவாசி உயர்வதற்கும், அவற்றைத் தடுத்து நிறுத்தத்தக்க அளவில் திட்டங்கள் கவர்னர் உரையில் எடுத்துக் கூறப்படவில்லை. விலைவாசி உயர்வைத் தடுக்க வேண்டுமானால், உற்பத்தி பெருகவேண்டும். தேவைக்கேற்ற வகையில் உற்பத்தி பெருகியாகவேண்டும். ஜனப் பெருக்கத்திற்குத் தக்க வகையில், வாங்கும் சக்திக்குத் தக்க வகையில் பெருக்கம் இருக்கவேண்டும். அவ்விதமாக இருந்தால்தான், விலைவாசிகளின் உயர்வை தடுத்து நிறுத்த முடியும்.

அவ்வகையான உற்பத்திப் பெருக்கத்திற்கு, திட்டங்களை இந்த அரசு வகுத்திருப்பதாகக் காணவில்லை. பெரிய அளவில் உற்பத்தி பெருக, இந்த அரசு அணைகளைக் கட்டியதாகவோ, அதற்கான திட்டங்களைத் தீட்டியதாகவோ கண்டு கொள்ள முடியவில்லை. அவ்விதமாக பெரிய அளவில் தொழிற்சாலைகளை ஏற்படுத்தியதாகவும் காணமுடியவில்லை. அவ்விதமாக விலைவாசி உயர்வைக் குறைக்க, அரசு பொதுமக்களிடமிருந்து கடன்கள் பெறுவதன் மூலமும், சரியான விநியோக முறையின் மூலமும், பதுக்கல் முறைகளை தடுப்பதன் மூலமும்தான் விலைவாசி உயர்வைத் தடுக்க முடியும்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பார்த்தால், அதைப் போக்க உருப்படியான வழிவகைகளை கவர்னர் உரையில் காணமுடியவில்லை. கவர்னர் உரையில் கம்மிடையே உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றி இந்த அரசு கவலையுற்றிருக்கிறது என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆனால் அதைப் போக்குவதற்கான வழிவகைகளை எடுத்துக் கூறவில்லை.

6,500 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கும் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. நம் மாநிலத்தில் ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் வேலையில்லாமல் திண்டாடும்போது, மேற்கூறிய வேலையளிக்கும் திட்டம் மாத்திரம் திருப்தி அளிப்பதாக இருக்காது. அதுவும் நேரிடையாக ஆசிரியர்களாக நியமித்தால் அது மிகவும் நலமாக இருக்கும். ஒரே ஆசிரியர் படிப்பு யோக்கியதை உள்ளவர்களை, ஒரே எக்ஸ்பீரியன்ஸ் உள்ளவர்களைத் திரும்பவும் ஆசிரியர்களாகப் பயிற்சித் திட்டத்தின் மூலம் மறுபடியும் சந்தர்ப்பம் கொடுப்பது என்பது சரியாக இருக்காது. நேரிடையாக அவர்களை ஆசிரியர்களாக எடுப்பது நல்லது. இல்லாவிடில், இது குழப்பத்தை உண்டுபண்ணும். ஆசிரியர்கள் யாவரையும் நேரிடையாக நியமித்துவிடுவது நன்மை பயப்பதாக இருக்கும்.

ஆசிரியர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் போக, ஆசிரியர்-மாணவர் விகிதத்தை நிர்ணயிக்க வேண்டும். ஆசிரியர்-மாணவ விகிதத்தை எவ்வளவு இருக்கவேண்டும் என்று நிர்ணயித்து, அதன் மூலம் ஆசிரியர்களை நியமித்தால், வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒருவாறு போக்கமுடியும், இப்பொழுது நாம் பார்க்கும்போது, ஆசிரிய-மாணவ விகிதம் சரிப்படுத்தப் படவில்லை. எத்தனையோ பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் யாதக்கணக்காக நியமிக்கப் படாமல் இருக் கிறது. காலி இடங்கள் நிரப்பப் படுவதில்லை. நூற்றுக்கணக்கான மாணவர் கள் இருக்கும் இடத்தில் ஒரு சில ஆசிரியர்களே இருக்கிறார்கள். ஆகவே, ஆசிரிய-மாணவ விகிதத்தை சீராகச் செய்து, தவறாமல் ஆசிரியர்களையும் உடனுக்குடன் நியமித்தால் அவர்களிடையே உள்ள வேலையில்லாத் திண்டாட் டத்தைப் போக்குவதற்கு வழி வகுத்ததாக இருக்கும் என்பதைக் கூற விரும்பு கிறேன்.

எஞ்சினியர்களுடைய நிலைமையும் அப்படியேதான். இன்னும் சேலம் உருக்காலை பிரதமரால் தொடங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டிருப்பதைப் பாராட்டுகிறேன். வரவேற்கத்தக்கது. ஆனால் உருக்காலையின் செயலாற்றல் மிகவும் மந்தகரமாக இருக்கிறதென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உருக்காலையின் வேலை வேகமாகச் செயல்படுவதற்கு ஆவன செய்ய வேண்டு மென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கன்னியாகுமரி மாவட்டமானது தொழிற்சாலைகளே இல்லாத ஒரு மாவட்டமாக இருந்துகொண்டிருக்கிறது. அந்த மாவட்டத்தில் ரப்பர் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கான மிகவும் வசதியான அளவில் மூலப்பொருள்கள் எல்லாம் கிடைக்கின்றன. அந்த மாவட்டம் ரப்பர் பயிர் செய்யும் மாவட்டமாக இருக்கிறது. பைபர் இண்டஸ்ட்ரீஸ், Match இண்டஸ்ட்ரீஸ் அமைப்பதற்கும் வழி வகுக்கலாம். அரசு இதைக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாய அபிவிருத்தியை எடுத்துக்கொண்டு பார்த்தால், விவசாயத்தில் சிறிய விவசாயிகள், ஏழை விவசாயிகள் இவர்கள் எல்லாம் கடன்பெறுவதற்கு இப்போது கஷ்டம் ஏற்படுகிறது, உரம் பெறுவதற்கும் மிகுந்த கஷ்டம் ஏற்படு கிறது. ஆகவே, அம்மாதிரியான குறைகளைப் போக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் பட்டினங்கால் திட்டம் நிறை வேற்றப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தில் பல இடங்களில் கிளைக் கால்வாய் கள் அமைக்கப்படாமல் இருக்கின்றன. அதேமாதிரி ஸ்லூய்ஸ் அமைக்கப்படா மல் இருக்கின்றன. கிளைக்காவாய்களையும் ஸ்லூய்ஸ்களையும் அமைக்க சர்க்கார் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதுதான் அதற்குரிய காலம் என்பதையும் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

அடுத்து, மின்சாரத்தை எடுத்துக்கொண்டால், இந்த மாநிலத்தில் எல்லா ஊர்களுக்கும் எப்போது மின்சாரம் கொடுக்கப்படும் என்பது குறிக்கப்பட வில்லை. மின்சாரத் திட்டத்தில் தெரு விளக்குகள் அமைப்பதற்கு அதிக கால தாமதம் ஏற்படுகிறது. இந்த மாநிலத்தில் எங்கு பார்த்தாலும் ப்யூஸ் ஆன பல்புகள் காணப்படுகின்றன. அந்த பல்புகள் எல்லாம் மாற்றப்படவே இல்லை. அவைகளையெல்லாம் மாற்றுவதற்கு அரசு ஆவன செய்யவேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டமானது ரயில் தொடர்பே இல்லாத மாவட்டமாக இருந்து வருகிறது. கன்னியாகுமரி மிகவும் முக்கியமான இடமாக அமைந் திருக்கிறது. இந்தியாவில் சரித்திரப் புகழ்பெற்ற இடம். இந்த இடத்திற்கு இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் ஆயிரக்கணக் கான மக்கள் தினந்தோறும் வந்துகொண்டிருக்கிறார்கள். அவ்வளவு முக்கிய மான இடத்திற்கு ரயில் பாதை அமைப்பது மிகவும் முக்கியமான காரியம் என்பதை இப்போது இந்தச் சபையின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குளச்சல் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும். இது ஒரு பழைய துறைமுகம். அடுத்து, தேங்காய்பட்டினத்தைத் துறைமுக மாக அமைக்கலாம்.

இறுதியாக, கன்னியாகுமரி மாவட்டம் மெடிகல் காலேஜ், அகரிகல்ச்சரல் காலேஜ் இல்லாத மாவட்டமாக இருக்கிறது. இந்தக் குறைபாடுகளையெல்லாம் தீர்க்க அரசு வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சபையில் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த பேரவைத் தலைவருக்கு என்னுடைய நன்றியைக் கூறிக்கொண்டு, உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. பி. பொன். சொக்கலிங்கம் :** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் கனம் ஆளுநர் அவர்கள் ஆற்றிய பேருரையின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்து, எங்களையெல்லாம் உருவாக்கி, இந்த மாமன்றத்திற்கு வருகின்ற வகையில் ஆளாக்கிய மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்கள் புகழ் ஓங்குக என்று கூறி, என்னுடைய உரையை இங்கே துவக்கு கிறேன். அத்துடன் நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், அவரைச் சார்ந்துள்ள அமைச்சர்களுக்கும் என்னுடைய தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் இந்த மாமன்றத்தின் மூலமாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கனம் ஆளுநர் அவர்கள் உரையின்மீதும், தமிழக முதல்வர் அவர்களுடைய உரையின்மீதும் இங்கே நான்கைந்து நாட்களாக காங்கிரஸ் உறுப்பினர்கள் பங்கு கொண்ட விவாதத்தைக் கேட்டீர்கள். நானும் அதிலே பங்குகொண்டு, ஆளுநர் அவர்களுடைய உரையை—வரவுசெலவுத் திட்டத்தை—முழு மனதோடு வரவேற்பதுடன், இங்கே என்னுடைய கருத்துக்களையும் கூற விரும்புகிறேன்.

சிதம்பரம் தொகுதியில் இருபது ஆண்டுக் காலமாக காங்கிரஸ் கட்சி உறுப் பினர்கள் இருந்த இடம் என்பதை முதலில் தெளிவாகச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். அந்தத் தொகுதியில் இருபது ஆண்டுக்கால சரித்திரத்தில், இந்த மன்றத்தில் வீற்றிருந்த அந்தத் தொகுதி உறுப்பினர்கள் அப்பகுதி மக்க ளுடைய குறைபாடுகளைக் களைந்தார்களா என்று பார்த்தால் ஒன்றும் செய்ய வில்லையென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழகத்தை இருபதாண்டுக் காலமாக ஆண்டிருந்த காங்கிரஸ் ஆட்சியில் அந்தப் பகுதி மக்களின் குறைகள் நிவர்த்திக்கப்படவில்லையென்பதை நான் எடுத்துக் கூற விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள்தான் தொடர்ந்து 1952-லிருந்து இருந்து வந்திருக்கிறார்கள். அப்படி இருந்தும், அந்தப் பகுதிகளுக்கு எந்தவித சௌகரியத்தையும் ஏற்படுத்தவில்லை. அந்தத் தொகுதியிலுள்ள மக்கள் குறை பாடுகளைச் சொல்லவேண்டுமானால், அடுக்கடுக்காகச் சொல்ல முடியும்.

[திரு. பி. பொன் சொக்கலிங்கம்] [1971 மார்ச் 31

தஞ்சை மாவட்டத்தின் அருகாமையில் இருக்கிற சிதம்பரம் தொகுதியில் உள்ள மக்கள் விவசாயத்தில் அதிக அக்கறை கொண்டவர்களாக இருக்கிறார்கள். வீராணம் ஏரி அங்கேதான் இருக்கிறது. அந்த வீராணம் ஏரியிலிருந்து இன்றைக்குச் சென்னைக்குக் குடிதண்ணீர் கொண்டுவர திட்டம் வகுத்து வேலைகள் நடைபெற்றுவருகின்றன. வீராணம் ஏரியிலிருந்து தண்ணீரை சென்னைக்குக் கொண்டுவந்துவிட்டால், அந்தப் பகுதியிலுள்ள மக்கள், விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்றெல்லாம் தேர்தல் காலத்திலே காங்கிரஸ் கட்சியினர் பறை சாற்றினார்கள். வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குக் குடிதண்ணீர் கொண்டு போவதால், அந்தப் பகுதி மக்கள் பாதிக்கப்படமாட்டார்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் நாங்கள் எல்லாம் தெளிவான முறையில் எடுத்துக் கூறியிருக்கிறோம். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், காங்கிரஸ் கட்சிதான் இந்த நாட்டிலே ஏழை, எளிய மக்களுக்காக பாடுபட்டுக் கொண்டு இருக்கிறது என்பதாக இரண்டு மூன்று தினங்களாக இங்கே காங்கிரஸ் உறுப்பினர்கள் பேசிக்கொண்டு வருகிறார்கள், அவர்களுடைய கூற்று தவறு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

காங்கிரஸ்காரர்களுக்கு முன்பாக, நூறு வருஷங்களுக்கு முன்பாக இராமலிங்க அடிகள், "உண்ணவோ உணவில்லை, உடுக்கவோ உடையில்லை; படுக்கவோ பழம்பாய்க்கும் கதியில்லை" என்பதாக இந்த நாட்டு மக்களின் நிலைமையைப் பற்றிப் பாடியிருக்கிறார்கள். அந்தப் பெரியார்களின் கனவுகளையெல்லாம் நனவாக்கும் வகையில்தான் நமது மாமேதை அறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய வழியில் கலைஞர் அவர்கள் இந்த அரசுப் பொறுப்பை ஏற்று பாடுபட்டு வருகிறார்கள். தமிழக மக்களுக்கு உணவுப் பஞ்சம் ஒருகாலத்தில் கேள்விக் குறியாக இருந்தது. இன்றையதினம் அந்த நிலையை பசுமைப் புரட்சி மூலமாக இந்த அரசு போக்கியிருக்கிறது. இவற்றையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால், நம்முடைய சுதந்திராக்கட்சி உறுப்பினர்கள், உணவுப் பற்றாக்குறை, உணவுப் பற்றாக்குறை என்று பேசினார்கள்.

கடந்த இருபதாண்டுகாலத்தை எடுத்துக்கொண்டால், சிதம்பரம் வட்டத்தில் உற்பத்தியாகும் நெல் அளவு இன்றையதினம் முற்போக்கான நிலையில் இருக்கிறது என்பதைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். உற்பத்தியான நெல் விலைபோகாத அளவிற்கு ஏராளமாக முடங்கிக் கிடக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இந்த மன்றத்தின் மூலமாக எடுத்துச் சொல்கிறேன். காங்கிரஸ் கட்சியினர் தேர்தல் காலங்களில் ஒரு கயிற்றிலே பாவையைக் கட்டி, பக்கத்திலே ஒரு படியைக் கட்டி, ஒரு ரூபாயையும் கட்டி பக்கத்திலே ஒரு சாட்டையையும் கட்டி வைத்துத்தான் வாக்காளர்களைச் சந்தித்தார்கள். அவர்கள் கோஷம் எல்லாம் பலிக்கவில்லை. அரிசி ஏராளமாக கிடைக்கிறது என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். அரிசிப் பற்றாக்குறையைப் போக்கிய தமிழக அரசைப் பார்த்து, அரிசிப் பற்றாக்குறையைப் போக்க பல இடங்களில் நல்ல முயற்சிகளை எடுத்து வெற்றி கண்ட தமிழக அரசைப் பார்த்து, காங்கிரஸ்காரர்கள் வீதியோரங்களிலும், பாதையோரங்களிலும்தான் மிகக் கேவலமாக பழித்துப் பேசினார்கள். இந்த மன்றத்திலேகூட அவர்கள் தங்களுடைய கருத்துக்களை தெளிவாக எடுத்துச்சொல்லாமல் இப்படிப்

1971 மார்ச் 31] [திரு. பி. பொன் சொக்கலிங்கம்]

பட்ட குறைபாடுகளைத்தான் மீண்டும் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு இந்த மன்றத்தின் தலைவர் மூலமாக பெருமையோடு, மிகவும் ஆத்திரத்தோடு நானும் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

1949-ம் ஆண்டில் எங்களைப்போன்ற இளைஞர்கள் எல்லாம் காங்கிரஸ் கட்சியிலிருந்து பணியாற்றினோம். 1949-க்குப் பின்னால் உத்தமர் காந்தியடிகளை நாதுராம் கோட்ஸே என்ற வெறியன் சுட்டுக் கொன்ற நேரத்தில் வெளியேறினோம் என்பதை இன்றைய காங்கிரஸ்காரர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நாங்கள் காங்கிரஸ் கட்சியில் இருந்த காலத்தில் காலையில் எழுந்ததும் தால் நாற்றுவிட்டுத்தான் பின்னர் எங்களுடைய சொந்த வேலைகளைக் கவனிப் போம். ஆனால் இன்றையதினம் இருக்கிற காமராஜ் காங்கிரஸ்காரர்கள் என்ன செய்கிறார்கள்? இந்த நாட்டிலே சோஷலிச சமதர்மத்தைக் காணப் பாடு பட்டுக் கொண்டிருக்கிற இந்த அரசையும், சோஷலிசத்தில் நம்பிக்கை கொண் டுள்ள தானைத் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களால் அமைக்கப்பட்டு இன்றையதினம் முதல்வர் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் நமது கலைஞர் அவர்களையும் தேர்தல் காலத்திலே என்னென்ன செய்தார்கள் தெரியுமா? நமது கலைஞர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு தேர்தல் பிரச்சாரத்திற்காக வந்த நேரத்தில் காங்கிரஸ் கட்சியினர் பின்னஞ்சிறிய கற்களை குவித்து வைத்துக் கொண்டு எங்களுடைய தலைவர்கள்மீது வாரி இறைத்தார்கள். நாங்கள் அவற்றையெல்லாம் பொறுத்துக் கொண்டிருந்ததற்குக் காரணம், பேரறிஞர் அண்ணா அவர்கள் எங்களுடைய காதிலே தந்துவிட்டுப்போன கடமை, கண்ணியம், கட்டுப்பாடுதான். அதன் காரணமாக அவர்கள் செய்த கொடுமை களையெல்லாம் ஏற்று பொறுத்துக்கொண்டிருந்தோம். காங்கிரஸ்காரர்களுக்கு இருக்கக்கூடிய எண்ணமெல்லாம் எப்படியாவது திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒழித்துக் கட்ட வேண்டுமென்பதுதான். அதற்காகத்தான் அவர்கள் ஒரு கூட்டணியை வைத்துக்கொண்டு, பல இடங்களிலும் தாறு மாறாகப் பேசினார்கள், மிகவும் கேவலமாகப் பேசினார்கள், எழுதியும் வந்தார்கள்.

எனவே மன்றத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட ஒரு அராஜகத் தன்மை மீண்டும் இந்த நாட்டில் தலை தூக்குவதற்கு இடம் அளிக்காத வகையில் நீங்கள் ஒரு ஏற்பாட்டைச் செய்து தரவேண்டும் என்பதாக மிக்க பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக சிதம்பரம் தொகுதியில் வீராணம் ஏரிக்கு மேற்கே திருமுட்டம் பகுதியிலுள்ள கிராமங்கள் நீர்ப்பாசன வசதியில்லாமல் இருக்கிறது. அங்கே குழாய்க் கிணறுகள் அமைத்துக்கொடுத்தால் அந்தப் பகுதி விவசாயிகளுக்கு மிகவும் சௌகரியமாகவும், உற்சாகமாகவும் இருக்கும். நல்லமுறையில் அங்கே விவசாயம் செய்வதற்கு வழியேற்படும்.

அடுத்து, அந்தப் பகுதியில் சாலைவசதிகள் சிறப்பாக இல்லை. பல ஆண்டுக் காலமாக காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களே சட்டமன்ற உறுப்பினராக இருந்து வந்த காரணத்தினால் அந்தத் தொகுதி மக்களுடைய குறைபாடுகள் பல களையப்படவில்லை. கடந்த நான்காண்டுக் காலமாகத்தான் தமிழக அரசு என் போன்ற தொண்டர்களின் வேண்டுகோளுக்கிணங்க சிலபல வசதிகளைச்

செய்து தந்திருக்கின்றது. இன்னும் ஏராளமான வேலைகள் செய்யப்பட வேண்டியதாக இருக்கிறது. நெடுஞ்சாலைத் துறையை எடுத்துக்கொண்டால் சீரப்பாளையம் முதல் ஓரத்தூர் வரையில் உள்ள தென்கரை முழுவதும் மிகவும் பாழ்பட்ட நிலையில் இருக்கின்றன. ஓரிரு மாதங்களுக்கு அந்தக் குறை களையப்படவில்லை என்றால், வெள்ளம் ஏற்பட்டால் சிதம்பரமும் அதைச் சுற்றியுள்ள நூறு கிராமங்களுக்குமேல் பாழாகக் கூடியநிலைமை இருக்கிறது. அதை உடனடியாகச் செப்பனிட்டுத்தரவேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலமாக அரசுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்குள்ள அத்தனை பேர்களுக்கும் சிதம்பரம் தொகுதியைப்பற்றி நன்றாகத் தெரியும். தஞ்சாவூர் மாவட்டத்திற்குக் கொடுக்கிற சலுகைகளை தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த இந்தச் சிதம்பரம் வட்டத்திற்கும் கொடுத்தால் ஏராளமான அளவுக்கு உணவு உற்பத்தியை அந்த வட்டம் பெருக்கிக் கொடுக்கும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து அந்தப் பகுதியில் முடிகண்டநல்லூரிலிருந்து கூடலையாற்றூர், ஆனந்தகுடி வழியாக விருத்தாசலத்திற்கு சுமார் 18 மைல் நீள சாலை இருக்கிறது. அதைச் சிறப்பாக செப்பனிட்டுக் கொடுக்கவேண்டும் என்று கூறி எனக்கு இந்த அளவு பேச அனுமதி தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* THIRUMATHI ALDA M. FOWLER : Mr. Speaker Sir, I thank you for giving me this opportunity to record my thanks to His Excellency the Governor for the honour he has done me in nominating me to the seat for the Anglo-Indian Community. I also want to thank the Hon. Chief Minister and his Cabinet for approving the nomination. I consider it a great privilege and honour to be here to represent my community. I should also like to add my thanks to the various Members of this House who have extended to me such warmth, friendship and goodwill. For all this I am most grateful. I would like to make a few observations on two subjects which are dear to my heart.

I speak for the handicapped people of this State. I am afraid I do not know the number in Tamil Nadu because I have tried to find out and have not yet arrived at the figure. But I do know that out of 6-¼ million handicapped persons of our vast country, Tamil Nadu must have its full and fair share. The Government of Tamil Nadu has been following grass-root policies. They are not afraid to take brave and bold steps. But I am not aware if the same plan is being applied to the vast number of our disabled people. We have our lepers our blind, our deaf and mute our orthopaedically handicapped, paraplegics, amputees and all the various stages of persons suffering from various disabilities.

Sir, if we are to continue the same slow programme of attending to the needs of these people and (they are our people) it may take about 100 years or so, in order to give them some hope for the future. Some people have found that the disabled person when trained is able quite efficiently to carry out certain

skills and institutions are by no means poorer for having trained and used these disabled persons. We have only to visit these institutions to find it out.

May I suggest that while we tackle programmes like slum clearance which is a very wonderful thing, some such alternative programme should be applied for our disabled people. More than that we should go into the cause of certain disabilities. Poliomytis need not be there if our children are immunised. If we should have compulsory imminisation in this State, then Tamil Nadu will be the first in this whole country to achieve a great thing. There is no such thing as compulsory immunisation in the whole of our country and yet other countries have stopped this scourge which paralysed so many little children. Tamil Nadu has many 'first' to its credit. By having compulsory immunisation, it would add to its many "firsts" and add one more achievement to its credit.

Next I would like to talk about my own community. They are not politically minded. That is not our genius. For some reason or other we do not lend our efforts to politics. But we hope to serve in whatever capacity lies at hand. Then, Sir, I feel that you have in us a devoted and hard-working people. I feel that better understanding should be brought about. I feel that they are as much yours in care as the other communities of this proud State. I feel that attention should be given to the needs of this community.

I feel that it is not physical all eviation that is so important though it is important. If you do not hear of complaints it does not mean that they are not there. It means that those people who do suffer injustice or who are overlooked in various ways prefer to suffer in silence and that of course we do not want. So I would suggest most respectfully that we create for them a climate of goodwill and an atmosphere of security so that they may be happy to live here and to work to the best of their ability and to contribute to the good and prosperity of this State of Tamil Nadu.

* திரு. எஸ். வடிவேல்: மாண்புமிகு மன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 24—3—1971-ந் தேதியன்று இரு சபைகள் சேர்ந்த அவையில் ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்தியதை நன்றியுடன் வரவேற்கிறேன். கவர்னருடைய உரை என்பது சபைக்கு முன்னால் வைத்து மக்களுக்கு அறிவிப்பதாகும். நடந்து முடிந்துள்ள தேர்தல்களில் பல்வேறு சோதனைக் கட்டங்களைத் தாண்டி தர்மம் வென்றிருக்கிறது.

நம் நாட்டின் வரலாறு இதுவரை கண்டிராத ஒரு புதுமை நடந்துள்ளது. இந்தத் தேர்தலில், ஜாதிய அரசியலுக்கு சமாதி கட்டிச் சமதர்மப் பாதைக்கு வழிகாட்டப்பட்டிருக்கிறது. ஏழை எளியவர்கள், பாமர மக்கள், படிக்காதவர்கள், பார்த்தவர்கள், பண்ணையடிமையில் பல ஆண்டுக் காலமாய் கொத்தடிமையாக இருந்த விவசாயத் தொழிலாளர்கள் விவசாயிகள்,

மாணவர்கள், நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்த அனைவரும் சேர்ந்து எண்ணிப் பார்க்காத அளவுக்குத் தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். இந்த மக்களின் தீர்ப்பு எதைக் காட்டுகிறது என்பதை நாம் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கக்கூடிய நிலைமையில் இருக்கிறோம். இளந் தலைமுறையினரான இளைஞர் ஆற்றிய பணியினையும் எதிர்காலத்தில் நவீன சமுதாயத்தை உருவாக்கத் துடித்து நிற்கும் இதயங்களுக்கும் ஏழையின் இதயக் கோவிலாக நம் கலைஞர் இருந்து நமது அரசு நல்ல பல திட்டங்களைக் கொண்டுவருமென்று நம்புகிறேன்.

வேளாண்மைத் துறையில் அரசின் பெரு முயற்சியால் உணவு உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு பெற்றிருக்கிறது என்று கருதப்படுகிறது. இந்த நாடு சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு நிலச்சட்டங்கள் பல்வேறு சட்டங்கள் கொண்டுவரப்பட்டு இருக்கின்றன. அந்தச் சட்டங்களினால் சாதாரண நிலையில் உள்ள பாடுபடக்கூடிய குடியானவர்களுக்குப் பலன் கிடைக்கவில்லை. 1947-ஆம் ஆண்டில் ஜமீன் ஒழிப்புச் சட்டமும், 1948-ஆம் ஆண்டில் ஜமீன் ஒழிப்புச் சட்டமும், 1949-ம் ஆண்டிலே ஜமீன் விவசாயிகள் பாதுகாப்புச் சட்டமும் 1952-ஆம் ஆண்டிலே பண்ணையாள் பாதுகாப்புச் சட்டமும், 1955-ஆம் ஆண்டில் நில வெளியேற்றத்தடைச் சட்டமும, 1956-ஆம் ஆண்டிலே குடியானவர்கள் பாதுகாப்புச் சட்டமும், நியாயவாரச் சட்டமும், இனும் சட்டமும் காங்கிரஸ் ஆண்டிருந்த காலத்திலே 30 ஏக்கர் என்ற உச்ச வரம்புச் சட்டமும், கையேறுவாரம் மாட்டுவாரச் சட்டமும் இன்றைய நமது அரசு நியாயக் கூலிச் சட்டம், 15 ஏக்கர் உச்ச வரம்புச் சட்டம் என்று இத்தனை சட்டங்களும் கொண்டுவரப்பட்டும் பாடுபடுபவனின் வாழ்வில் மாறுதல் இல்லை. இவையெல்லாம் சட்டப் புத்தகத்தை அலங்கரித்தனவே தவிர, சமுதாய வாழ்வை அலங்கரிக்கவில்லை. எம்பெருமான் என்ற வார்த்தையில் எம் என்பதை எடுத்துக்கொண்டால் 'எ' யும் 'ம்' என்றும் இருக்கின்றன. 'எ' என்ற எழுத்துப்பிறகு 'ம' என்று மட்டும் போட்டுவிட்டு புள்ளி வைக்காமல் விட்டுவிட்டால் 'எமபெருமான்' என்று ஆகிவிடும். அதைப்போன்றுதான் எந்த இடத்திலே புள்ளிவைக்கவேண்டுமோ அந்த இடத்திலே வைக்காததால் தான் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன.

பட்டினி கிடக்கும் விவசாயத் தொழிலாளர்களின் கைக்கட்டை முதல்வர் அவர்கள் இந்தச் சமயத்திலே அவிழ்த்துவிட்டு உற்பத்தி பெருக வகைசெய்ய வேண்டும். இன்றைக்கு உள்ள கோயில் நிலங்கள், மடங்கள் நிலங்கள் இவற்றை, உழுகின்றவனுக்கே நிலம் சொந்தம் என்ற முறையிலே அரசாங்கத்தின் நிர்வாகத்திற்குக் கொண்டுவரவேண்டும். கோயில்களை அவர்கள் உள்ளப் பூர்வமாக வணங்கவில்லை. சாதாரண மக்கள், உழுகின்றவர்கள் பாமர மக்கள்தான் உண்மையிலேயே இன்றைக்கு கடவுளை உள்ள பக்தியுடன் வணங்குகிறார்கள். அவர்கள்தான் தனக்குக்கிடைக்கும் கதிரை குஞ்சக் கதிராகக் கட்டி காளியம்மனுக்கும் மாரியம்மனுக்கும் வைத்து வணங்கு கிறார்கள். இரண்டு ஆடு வைத்திருந்தால் அதிலே ஒரு ஆடு சாமிக்கு என்ற முறையிலே வைக்கிறார்கள். இப்படியெல்லாம் சாதாரண மக்கள்தான் விவசாய மக்கள், பாமர மக்கள்தான் தெய்வத்தைப் பலவாறாக வணங்கு கிறார்களே தவிர நிலப்பிரபுக்கள், மடாதிபதிகள் உண்மையிலேயே வணங்கு வதில்லை. எனவே கோயில்களின் பெயரால் மடங்களின் பெயரால் தருமபுர

ஆதீனங்களும் பண்டார சன்னதிகளும் நிலங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவை மாற்றப்படவேண்டுமானால் நம்முடைய அரசு உடனடி கவனம் செலுத்தவேண்டும்.

வேளாண்மைத் துறையில் தன்னிறைவு கண்டிருந்தாலும், உணவு எல்லோருக்கும் கிடைக்கும்படி சரிசெய்யப்படவேண்டும். வறுமையின் கடைக்கோடியில் வாழும் விவசாயத் தொழிலாளர்கள் இன்னும் வயிறார உண்ணவில்லை என்பதை நான் இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். 1952-இல் சட்டமன்றத்தில் நான் இருந்திருக்கிறேன். அன்றைக்கு அமைச்சர்களாக இருந்தவர்களிடம் மக்களைப்பற்றிச் சொன்னால், வறுமையைப் பற்றிச் சொன்னால் மக்களின் நிலைமைப் புரிந்துகொள்ளமுடியாதவர்களாக இருந்தார்கள். இன்றைக்கு ஏழைகளின் இதயத்தை நன்றாகப் புரிந்த கலைஞர் அவர்கள் இருக்கிறார்கள். அவர் பிறந்த சொந்த ஊரான திருக்குவளை கிராமத்தில் எத்தனையோ விவசாயத் தொழிலாளர்கள் குடும்பங்கள் ஒரு வேளை பட்டினி பட்டும், ஒரு வேளை கஞ்சியுடனும் இருக்கிறார்கள். அந்த மாவட்டத்திலேதான் அரிசி மலைபோல் இருக்கிறது. ஆனால் அந்த அரிசி அடுப்புக்கு வருவதற்குத் தடை இருக்கிறது. இதைப்பற்றி ஆழமாகச் சிந்திக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையிலே விவசாயத் தொழிலாளர்களுக்குப் பலன் கிடைக்கின்ற வகையில் குறைந்தபட்சம் மூன்று குழி நிலம் குடியிருக்கிற நிலங்கள் கிடைக்கச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் பல்வேறு நிலச்சட்டங்கள் வந்த போதிலும் பயன் இல்லை. கேரளத்திலே நியாயக் கூலிச் சட்டம் வந்திருக்கிறது. அதைத் தமிழகம் பூராவுக்கும் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். [illegible] கிராமங்களிலே ஒவ்வொரு முறையும் கூலிப் பிரச்சினைகள் எழுகின்றன. போலீஸ்காரர் அவர்கள் தரப்பிலே இருக்கிறார்கள், அதிகாரிகள் அவர்கள் தரப்பிலே இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் தொழிலா ளர்களை மிரட்டுகிறார்கள். இதைத் தவிர சர்க்கார் காரியாலயத்தில் இருக்கிறவர் களும் அவர்களுக்கு வேண்டியவர்களாக இருக்கிறார்கள், மத்திய சர்க்கார் காரியாலயத்திலே இருப்பவர்களும் அவர்களுக்கு வேண்டியவர்களாக இருக்கி றார்கள். எல்லோரும் சேர்ந்து மிரட்டுவதால் அவர்களுக்குச் சரியாக கூலி கிடைக்காத நிலைமை இருக்கிறது. இதையும் அரசாங்கம் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நமது அரசு காலத்திலேயே [illegible] இல்லையென்ற நிலைமையை உண்டாக்க வேண்டும்.

சென்னையைச் சார்ந்துள்ள வேளச்சேரி கிராமத்தில் உள்ள பிளாஸ்டிக் தொழிற்சாலையை [illegible] என்பவர் நடத்துகிறார். அங்கே ஆண்களும் பெண்களுமாக 40 பேர்கள் வேலை செய்கிறார்கள். அந்தச் சங்கச் செயலாளர் [illegible] நான்காம் தேதி சஸ்பெண்ட் செய்து விசாரணை நடத்த வில்லை. அதனால் 26-ஆம் தேதி முதல் அமைதியாக வேலை நிறுத்தம் நடக் கிறது. அங்கே போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் அத்தொழிலாளர்களை மிரட்டுகி றார். அவர்களுக்குத் தினக்கூலி ரூ. 2.50 தான் கிடைக்கிறது. மாதச் சம்பளம் 250 ரூபாய் இருக்கவேண்டுமென்றாலும் அங்கே தினக்கூலி 2½ ரூபாய்தான் கிடைக்கிறது. எனவே கூலியை 2½ ரூபாயி

அங்கேயிருக்கும் விவசாய உற்பத்தி அதிகமாகும். நல்ல லாபத்தோடு பலன் கிட்டினால் விவசாயிகள் ஊக்கத்தோடு பயிர் செய்வார்கள் என்பதை மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

அதைப்போலவே, திண்டுக்கல் வட்டத்திலும், சேலம் வட்டத்திலும் மல்லிகைப்பூ, ரோஜாப்பூ ஆயிரக்கணக்கான ஏக்கர்களிலே பயிரிடப்படுகிறது. அந்த விவசாயிகளுக்கும் நிரந்தரமான மார்க்கெட் இல்லாத காரணத்தினால் அவர்கள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே முன்னிருந்த விவசாய அமைச்சரவர்களுக்கு விளக்கமாகக் கடிதம் எழுதியிருக்கிறேன். எனவே அதைப்பற்றிப் பார்த்து, வாசனை எண்ணெய் இறக்கும் முறையில் செய்தால், பூக்களையெல்லாம் வாசனைத் திரவியமாக்குவதற்குப் பயன்படுத்திக்கொண்டு விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும் என்பதை மிகவும் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்திலே வறட்சி நிலை நீடிக்கிறது. ஏழையானவர்களுக்கு அடிக் கிணறு வெட்டுவதற்கு கடன் கொடுக்காமலும், போதிய அளவு கொடுக்காமலும் அவர்கள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். சேலம் மாவட்டத்தில் சுமார் 150 அடி, 120 அடி, 100 அடி ஆழத்திலிருந்து விவசாயிகள் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் எனவே அங்கே உள்ள விவசாயிகளுக்கு கடனாகவோ மான்யமாகவோ பணம் கொடுத்து உடனடியாக கிணறு வெட்டுவதற்கு விவசாயிகளுக்கு பெருவாரியான அளவில் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு சர்க்காரிலேயிருந்து கொடுத்த கடன்களையும், கோஆப்பரேட்டிவ் சொஸைட்டி மூலம் கொடுத்த கடன்களையும் இன்றைக்கு விவசாயிகளின் பம்பு செட்டுகளைக் எடுத்துக்கொண்டும், அவர்களின் ஆடு மாடுகளைப் பிடித்துக்கொண்டும் கடன்களை வசூலிக்கிறார்கள். வறட்சியின் காரணமாக விவசாயிகள் அந்தக் கடன்களைத் திருப்பிக்கொடுக்க முடியாமல் அவதிப்படுகிறார்கள். எனவே அப்படிப்பட்ட விவசாயிகளிடம் இன்னும் ஒரு ஆண்டு காலத்திற்கு சர்க்கார் கடன்களையும் கூட்டுறவு கடன்களையும் வசூலிப்பதை தள்ளி வைக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, சேலம் மாவட்டத்திலேயும், சேலம் வட்டத்திலேயும் இன்றைக்குக் குடிதண்ணீர் இல்லாமல் மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அடிக்கிணறு வெட்டுவதற்குப் பஞ்சாயத்து யூனியனிடம் பணம் கேட்டால், எங்கள் பஞ்சாயத்து யூனியனில் காளைப்பட்டி என்ற ஒரு ஊரில் கிணறு வெட்ட பணம் கேட்டால் ஒரு கிணற்றுக்கு 500 ரூபாய்தான் தருவோம் என்று சொல்கிறார்கள். எனவே, அப்படிப் பட்ட முறையை நீக்கி, ஊரிலே அடிக்கிணறு வெட்டவும், அப்படி வெட்டுவதற்கான முழு தொகையையும் ஊராட்சி ஒன்றியத்திலேயிருந்து மானியமாகக் கொடுக்கவும் ஊராட்சி அமைச்சரவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து இந்தத் தண்ணீர்ப் பஞ்சத்தைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நமது மாநிலத்திலே ஹரிஜனங்களுக்கு வீட்டு மனையை இலவசமாக வழங்குவதற்கு சில திட்டங்களை அங்கே கொடுக்கிறோம். இதைப்போன்று, ஏழையானவர்களும் பல கிராமங்களிலே சாப்பாட்டிற்கு இல்லாமல், குடியிருக்க வீடு இல்லாமல்

பலர் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஹரிஜனங்களுக்கு இலவசமாக வீட்டு மனை வாங்கித் தருவதைப்போலவே கிராமங்களிலேயுள்ள எல்லாக் குடியானவர்களுக்கும் வீட்டு மனையை இலவசமாக வாங்கித்தரும்படி நான் மிக மிக வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த வெள்ளாளங் கோட்டையில் 6 இலட்சம் ரூபாய் செலவில் அணை கட்டுவதற்கு எஸ்டிமேட் தயார் செய்து அனுப்பி 3 ஆண்டுகள் ஆகின்றன. சுமார் எழேட்டு தடவையாகிலும் அமைச்சரவர்களிடத்திலேயும், மற்ற அதிகாரிகளிடத்திலேயும் நான் சொல்லியிருப்பேன். இருப்பினும் அந்தக் குறைபாடு நீங்கியபாடில்லை. அங்கே பெய்யும் மழையானது வீணாக வெளியாக ஓடி விடுகிறது. ஆகவே இந்த ஆண்டிலேயாவது அந்த அணையைக்கட்டி அமைச்சரவர்கள் எனக்குப் பெருந்தவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதனால் என் தொகுதி மக்கள் நல்ல பலன் அடையச் செய்ய வேண்டுமென்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே, இந்த நல்ல முறையிலே விவசாயிகள் பயனடையவும், விவசாயிகளுக்கு நல்ல முறையிலே கடன் கிடைக்கவும், விவசாயத்திற்கு நல்லமுறையிலே எல்லா வசதிகளையும் செய்வதற்காக நன்றியையும் வணக்கத்தையும் கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. டி. எஸ். ஏ. சிவப்பிரகாசம்: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, சேரன்மாதேவி சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையில் ஆளுநர் அவர்கள் உரை மீது சில வார்த்தைகள் கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதற்கு முன்பாக, தேர்தலுக்குப்பின் என் தொகுதியில் நடந்த வன்முறைச் செயல்கள் பற்றி மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்ததற்காக நன்றி செலுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

கடந்த எழேட்டு ஆண்டுகளாக என் தொகுதியில் பருவ மழை தவறியதன் காரணமாக விவசாயம் பெரும் அளவிற்குப் பாதிக்கப்பட்டு இருக்கிறது. பசுமைப்புரட்சித் திட்டங்களின் கீழ் அங்கே அரசின் செலவில் குறைந்த செலவில் ஆழ்கிணறுகள் தோண்டித்தந்து உதவவேண்டும் என்று அரசினைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும், என் தொகுதிக்குப் பயன் தரத்தக்க வகையில் கடனா நதி, ராம நதி திட்டங்களுக்கு தக்க நிதி ஒதுக்கி அவற்றைச் சீக்கிரமே நிறைவேற்றிக்கொடுக்க வேண்டும் என்றும் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே வீரவநல்லூர்-முக்கூடல் பாலம் அமைத்துக் கொடுத்து மக்களுக்கு போக்குவரத்து வசதி செய்து தர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும் என்தொகுதியில் பின்தங்கிய வகுப்பைச் சார்ந்த பல்லாயிரக்கணக்கானவர் பீடி சுற்றும் தொழிலில் ஈடுபட்டு இருக்கின்றார்கள். 1969-ம் ஆண்டு முதல் இலங்கைக்கு பீடி ஏற்றுமதி நிறுத்தப்பட்டுவிட்டதன் காரணமாக இத்தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டு பல்லாயிரக் கணக்கானவர் வேலையின்றி அவதியுறுகின்றனர். எனவே தமிழக அரசு மத்திய சர்க்கார் மூலமாக அயல்

நாடுகளில் தமிழகத்தில் உற்பத்தியாகும் பீடிக்கு சிறந்த மார்க்கெட்டு ஏற்
படுத்தித் தரவேண்டும். கப்பல் கட்டணம், விளம்பரங்கள் ஆகியவற்றுக்கு
மான்யம் பெற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்
கொள்ளுகிறேன், வணக்கம்.

* **திரு. தொ. ப. சீனிவாசன் :** மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களே,
கவர்னர் பெருமான் இந்த மாமன்றத்தில் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்
கும் வகையில் ஒருசில வார்த்தைகளைப் பேச விழைகிறேன்.

அதற்கு முன்பாக, மிக மிகச்சாதாரண நிலையில் உள்ள என்னை இந்த மா
மன்றத்தில் வந்து உரை நிகழ்த்தக்கூடிய அளவிற்கு ஒரு சூழ்நிலையை நாட்டிலே
உருவாக்கித் தந்த என் இதய தெய்வம் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு என்
நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை துவக்கு
கிறேன்.

அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பணியாற்றிய காலம் தொட்டு இந்த
அரசு நடத்திக்காட்டிய நல்ல பல திட்டங்களை எண்ணிப் பார்த்த சாதாரண
மக்கள், நடந்து முடிந்த தேர்தலில் அவர்களது ஆதரவைப் பெரும் அளவில்
அளித்து இருக்கிறார்கள். நாட்டிலேயே ஒரு பெரும் எழுச்சி சாதாரண
மக்கள் மனத்தில், பாமர மக்கள் மனத்தில் ஏற்பட்டு இருக்கிறது. இந்த
எழுச்சியை யாராலும் தடுத்து நிறுத்திட முடியாது என்று உரையில் குறிப்
பிடப்பட்டு இருக்கிறது. அதற்காக கவர்னர் பெருமான் அவர்களுக்கு இந்த
4½ கோடி தமிழ் மக்களும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டு இருக்கிறோம்.

அண்ணா அவர்களை மனத்தில் இருத்தி, தேர்தல் காலத்தில் எந்த அளவிற்கு
ஜனநாயகப் பண்புகள் காப்பாற்றப்பட வேண்டும் என்று எங்கள் கட்சித்
தலைவர் கலைஞர் அவர்கள் வற்புறுத்தி வந்து இருக்கின்றார்கள் என்பதை
நாங்கள் அடிக்கடி சொல்லி வந்தாலும் கூட, எதிர்க்கட்சியில் உள்ள காங்கிரஸ்
நண்பர்கள் அவற்றை அடியோடு மறந்து, மறுத்து வந்து இருக்கிறார்கள்.
நாங்கள் அறநெறியின்பால் நம்பிக்கை வைத்துத் தேர்தலை நடத்தினோம்
தேர்தல் காலத்தில் எங்கள் கட்சியினருக்கு ஏற்பட்ட பல தொல்லைகளையும்
சங்கடங்களையும் பல உறுப்பினர்கள் இந்த மன்றத்தில் வேதனையோடு குறிப்
பிட்டார்கள். ஆனால் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த எதிர்க்கட்சி நண்பர்கள்,
'நாங்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறோம்' என்று சொல்லுவது வேடிக்கையாகவே
இருக்கிறது. 'எங்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும்' என்று அவர்கள்
கோருவது வியப்பினை அளிக்கிறது. தேர்தல் காலத்தில் காங்கிரஸ் நண்பர்கள்
எங்களை வெறித்தனமாகத் தாக்கியும், ஜனநாயக முறைகளுக்கு முற்றிலும்
புறம்பான முறையில் எங்களைச் சாடியும் வந்து இருக்கின்றார்கள்.

பெரும் காங்கிரஸ் தலைவர்கள், சிண்டிகேட் நண்பர்கள், மேடையில் பேசும்
போதெல்லாம், நிச்சயம் அவர்கள் அமைச்சர்களாக வந்துவிடுவதுபோலவும்
யார் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற முறையில் பேசினார்கள். அவற்
றிலிருந்து குறிப்பறிந்து, காங்கிரஸ் தொண்டர்கள், மிகவும் மூர்க்கத்தனமாக
தேர்தலை நடத்தினார்கள். தேர்தலுக்கு முன் தினம், 3-ம் தேதியன்று எனக்கு
ஏஜெண்டுகளாகப் பணியாற்றும் நண்பர்களுக்கு அதற்கான பாரங்களைக்
கொடுக்கச் சென்றேன். என்னுடன் துணையாக திருவண்ணாமலையைச் சார்ந்த

கோபால் அவர்கள் வந்து இருந்தார்கள். இப்படி ஒரு கிராமத்திற்குச் சென்று
திரும்பும்போது நாங்கள் திரும்பக்கூடாத வகையில் காங்கிரஸ்காரர்கள் குண்டர்
களை வைத்து எங்கள் காரைத் தாக்கி அவற்றின் கண்ணாடிகளையெல்லாம்
நொறுக்கினார்கள். பிறகு காவல் துறையினருடைய துணையோடு வெளியே
வந்தேன். இப்படிப்பட்ட வன்முறைகளுக்குப்பின் நான் போளூரில் குடி
யிருக்க முடியாத காரணத்தினால் திருவண்ணாமலையில் மதிப்பிற்குரிய நமது
அமைச்சர் அவர்களுடைய வீட்டிலேயே தங்கியிருந்தேன். இப்படிப்பட்ட நிலை
யிருக்கும்போது, 'பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள்தான், எங்களுக்குப் பாது
காப்பு அளியுங்கள்' என்று காங்கிரஸ் நண்பர்கள் கேட்பது விந்தையாக இருக்
கிறது.

இது மட்டும் இல்லை. என் தொகுதியில் உள்ள மடவிளாகம் கிராமத்தில்
உள்ளவர்களுக்கான 'பூத்' கூடலூர் கிராமத்தில் இருக்கிறது. மடவிளாகம்
கிராமத்தில் உள்ள மக்கள் அனைவரும் உதயசூரியனுக்கே வாக்களிக்க வேண்டும்.
என்று உறுதியாக இருக்கிறார்கள். அது அவர்களுடைய உரிமை. ஆனால்
கூடலூரில் உள்ளவர்கள் காங்கிரஸ் சார்பு கொண்டவர்கள். எனவே அவர்கள்
இங்கு வரக்கூடாது என்று அடித்து மிரட்ட முயற்சித்து இருக்கிறார்கள்.
அப்படியெல்லாம் இருந்தும்கூட அவர்கள் தைரியமாக வாக்களித்தார்கள்.
முன்னேற்றக்கழகம் வெற்றிபெற்றது. இந்த இரண்டு ஊரும் அடுத்து உள்ள
கிராமங்கள். இவற்றுக்கான குடிநீர் குளம் கூடலூரில் இருக்கிறது. இந்தக்
குளத்தில் மடவிளாகம் மக்கள் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு
ஆதரவாக இருந்தார்கள் என்ற காரணத்தினால் அவர்கள் தண்ணீர் எடுக்கக்
கூடாது என்று கட்டுப்பாடு போட்டு இருக்கிறார்கள். எவ்வளவு கொடுமை
பாருங்கள்'. ஒரு தாய், 96 வயது ஆனவர், அவர் என்னிடம் முறையிட்டார்,
'ஐயா, பல ஆண்டு காலமாக நான் இந்த கூடலூர் குளத்தில் தண்ணீர்
எடுத்து வருகிறேன், இப்போது எடுக்கக்கூடாது என்கிறார்கள். என்றால் வேறு
இடம் சென்று தண்ணீர் கொண்டுவர முடியவில்லை, வயதாகிவிட்ட காரணத்
தினால்'. என்று சொல்லி அழுதார்கள்.

இது மட்டும் இல்லை, இந்த கூடலூரில் ஒரு ஏரியிருக்கிறது. இந்த ஏரியி
லுள்ள வண்டலை வாரி நிலத்தில் போட்டால் சிறந்த உரமாகிறது. இதை
யார் வேண்டுமானாலும் வந்து வாரிச்செல்லுவார்கள் அந்தப் பக்கத்தில். ஆனால்
அந்த பஞ்சாயத்து மன்றத் தலைவர், சிண்டிகேட் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்,
அவர் "எங்களைத் தவிர யாரும் இந்த ஏரியிலிருந்து வண்டல் வாரக்கூடாது"
என்று தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள்.

அதுமட்டும் இல்லாமல், அந்த ஊர்மக்கள் சிலர் உதயசூரியன் சின்னத்தில்
முத்திரையிட்டார்கள் என்ற காரணத்தினால் அந்தப் பகுதியிலுள்ள விளக்கு
களை நிறுத்திவிட்டதோடு, விளக்குக் கம்பங்களையும் தோண்டி எடுத்திருக்
கிறார்கள்.

இப்படிப்பட்ட அராஜகங்கள் நடைபெறுகின்றன. இது மட்டும் இன்றி
இன்று வரையில் வெற்றிபெற்றவர்கள் மகிழ்ச்சியை அனுபவிக்க வேண்டிய
வர்கள், ஒரு மாலையைக்கூட மக்களிடமிருந்து பெறக்கூடாத நிலைதான் இருந்து
வருகிறது. அடக்க உணர்ச்சியுடன் இவற்றையெல்லாம் பொறுத்துக்கொண்டு
இருக்கிறோம்.

[திரு. தொ. ப. சீனிவாசன்] [1971 மார்ச் 31

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர் என்னுடன் போட்டியிட்ட காங்கிரஸ் நண்பரை நான் முதலில் சந்தித்து அவருக்கே முதலில் மாலையை அணிவித்து என் மரியாதையைத் தெரிவித்துக் கொண்டேன். முதலில் அண்ணா அவர்களுக்கும் அடுத்து என்னுடன் போட்டியிட்ட காங்கிரஸ் நண்பருக்கே முதலில் மாலை அணிவித்தேன். அவருடன் முக்கிய தெருக்களின் வழியாக இரண்டுபேரும் சேர்ந்து மக்களைச் சந்தித்துப் பேசினோம். அதனால்தான் அங்கே ஒரு அமைதியான சூழ்நிலை ஏற்பட்டது. நாங்கள் அமைதியை விரும்புகின்றோம், ஆர்ப்பாட்டங்களை நாங்கள் விரும்பவில்லை. எனவேதான் எங்களுக்குப் பெரும்பான்மை கிடைத்ததே தவிர வேறு என்ன காரணம் இருக்க முடியும்? எங்கள் அண்ணா அவர்கள் தினையை விதைத்தார்கள் நாங்கள் தினையை அறுத்தோம். ஆனால் வினையை விதைத்தவர்கள் வினையை அறுப்பதைப் பார்த்தோம். அந்த அளவிற்கு அங்கு அராஜகம் நடந்துகொண்டிருக்கிறது.

அடுத்தபடியாக, என் போளூர் தொகுதியைப் பொறுத்தவரையில் நமக்கு சுயராஜ்யம் கிடைத்து தேர்தல்கள் தொடங்கியவுடனே, 1952-ம் ஆண்டு முதல் திராவிட முன்னேற்றக் கழகம் யாருக்கு ஆதரவு கொடுத்ததோ அவர்கள் தான் வெற்றி பெற்றார்கள். 1952-ல் மாணிக்கவேலர் அவர்களுக்கு வாக்களித்து அவர்கள் வெற்றி பெறச் செய்தோம். அவர்கள் வெற்றி பெற்று இங்கு அமைச்சராகவும் இருந்தார்கள். அப்படி தொடர்ந்து எங்கள் ஆதரவாளர்கள் வெற்றி பெறத் தக்க வகையில் வாக்களித்ததன் காரணமாக பதினைந்து ஆண்டுகள் காங்கிரஸ்காரர்கள் ஆண்டு கொண்டிருந்த காரணத்தினால் என் தொகுதிக்கு எந்தவிதமான முன்னேற்றமும் செய்யக் கூடாது என்று அவர்கள் கொடுமை இழைத்துக் கொண்டு வந்தார்கள். என்ன கொடுமைகள் செய்தாலும் நாங்கள் ஒரே குறிக்கோளோடு உதயசூரியனுக்குத்தான் முத்திரை அளித்து வந்திருக்கிறோம். 1952-ல், 57-ல், 62-ல், 67-ல், 71-ல் இன்று வரை நாங்கள் ஒரே நிலையில் தான் இருந்து வருகிறோம். ஆனால் ஒரு முன்னேற்றமும் ஏற்படவில்லை. இப்போதுதான் நாங்கள் ஆளும் கட்சியாகப் பொறுப்பேற்றிருக்கிறோம். எங்களுக்கு பல குறைபாடுகள் இருக்கின்றன. ஆகவே அந்தத் தொகுதி மக்கள் ஓரளவிற்காவது திருப்தி அடையத்தக்க வகையில் ஓரளவிற்காவது அங்கு முன்னேற்றம் செய்து கொடுக்கவேண்டுமென்று அரசை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதி முழுக்க, முழுக்க விவசாயிகள் வாழும் தொகுதியாகும். என் தொகுதியில் வேறு எந்தவிதமான தொழிற்சாலையும் இல்லை. விவசாயிகளைக் கொண்ட எங்கள் பகுதியில் ஒரு சர்க்கரை ஆலையை அமைக்கவேண்டுமென்று நாங்கள் ஆரம்ப காலம் முதற்கொண்டு கேட்டு வருகிறோம். ஆகவே அங்கு தனியார் துறையிலோ அல்லது அரசாங்கத் துறையிலோ ஒரு சர்க்கரை ஆலை அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு அங்குள்ள விவசாய மக்களும், சட்டமன்ற உறுப்பினரான நானும் எல்லாவித ஒத்துழைப்பையும் அளிப்போம் என்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போளூரில் ஒரு பெரிய ஏரி இருக்கிறது. அது ஏறத்தாழ 1,107 ஏக்கரா பரப்புள்ள ஏரியாகும். அதன் கீழ் உள்ள நிலங்களை நம்பித் தான் அங்குள்ள மக்கள் வாழவேண்டிய நிலையிலிருக்கிறது. அதைத் தவிர வேறு கதி இல்லை. அங்கு வாய்க்கால் ஒன்றிருக்கிறது. அதற்கு செய்யாற்றில்

1971 மார்ச் 31]

இருந்துதான் தண்ணீர் வரவேண்டும். பொதுவாக, வானமாரி தண்ணீர் செய்யாற்றில் வந்து தங்கள் நிரம்பி அல்லது விவசாயிகள் மணலைக் கூட்டி வைத்துக் கட்டி தண்ணீரைக் கொண்டு வந்தால்தான் தண்ணீர் வருமே தவிர இல்லை என்றால் அங்குள்ள ஏரிகளுக்கும் தண்ணீர் வருவதில்லை. ஆகவே, தண்ணீர் வசதியாக நிரந்தரமாக ஒரு அணை கட்டி தண்ணீர் கொண்டு வருவதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என் தொகுதியில் குன்றாது மலை இருக்கிறது. அங்கு பல அதிசயப் பொருள்கள் கிடைக்கின்றன. அங்கு கந்தகம் கிடைக்கிறதா என்பது பற்றி பதினைந்து ஆண்டுகளாக ஆராய்ச்சி நடத்தப்பட்டு வந்தது. 1958-ல இந்த மன்றத்தில் தொழில் அமைச்சராக இருந்த திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் இதுபற்றிய ஆராய்ச்சி முடிவுபெறவில்லை என்று குறிப்பிட்டார்கள். இப்போது அதுபற்றிய ஆராய்ச்சி முடிவடைந்து அங்கு சிறந்த கந்தகம் கிடைக்க வழி இருப்பதாக செய்தி கிடைத்திருக்கிறது. ஆகவே அதைக் கொண்டு அங்கு ஒரு பெரிய தொழிற்சாலை அமைத்துத் தரவேண்டுமென்று அரசினைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக அங்கு ஒரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி இருக்கிறது, அந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளி அங்கு பத்தாண்டு காலமாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இதுவரையில் அதற்காக வாடகையாக ரூ. 80,000-க்கு மேல் கொடுத்திருக்கிறார்கள். அங்கு அப்பள்ளிக்கு நிரந்தரமாக ஒரு கட்டடம் வேண்டும் என்ற முறையில் ஊராட்சி மன்றம் தங்களிடமாக 11 ஏக்கர் நிலத்தைக் கொடுத்திருக்கிறது. அதன் மதிப்பு சுமார் 1½ லட்சம் ரூபாய். ஆகவே அதில் ஒரு பெரிய கட்டடம் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்காகக் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுவும் முடியவில்லை என்றால் அங்கு ஒரு பங்களா இருக்கிறது, பதினைந்து ஏக்கர் நிலமும் இருக்கிறது, அதில் இந்தப் பயிற்சிப் பள்ளியை வைப்பதற்கு முன் வந்தால் இந்த வாடகை கொடுப்பது மிச்சமாகும்.

அடுத்தபடியாக, களம்பூர் என்ற ஊரில் தண்ணீர் பஞ்சம் மிகவும் அதிகமாக இருக்கிறது. அங்கு தண்ணீருக்காக செய்யாறு வழங்கியது எல்லோருக்கும் தெரியும், தமிழ்நாடே அறியும். அங்குள்ள தண்ணீர் பஞ்சத்தைப் போக்கும் விதத்தில் ஒரு சிறந்த குடிநீர் திட்டத்தை அமைத்துக்கொடுக்க வேண்டுமென்று அரசினை நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

உணவு உற்பத்தி பெருகவில்லை என்று எதிர்க் கட்சியினர் சொன்னார்கள். எங்கள் பகுதி வறண்டு கிடந்தது. அங்கு ஏரிகள் தூர்ந்து கிடந்தன. துயர் துடைப்பு நிதியாகக் கிடைத்த தொகையிலிருந்து கலைஞர் அவர்கள் எங்கள் பகுதியிலும் ஏரிகளைத் தூர்வாருவதிலும், கால்வாய்களை வெட்டுவதிலும் பெரு முயற்சி எடுத்துக் கொண்டதன் காரணமாக அங்கு பெருமழை பெய்தவுடன் ஏரி, கால்வாய்கள் எல்லாம் நிரம்பி—உணவுத் துறை அமைச்சர் அவர்களின் முயற்சியாலும், முதல் அமைச்சர் அவர்களின் முயற்சியாலும் அங்கு பணம் கடனைக் கொடுக்கப்பட்டு—உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு முழுக்க (மனமுவந்து) என்று கூறி ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

5. நடை முறைக் கேள்வி.

சட்டப் பேரவை காங்கிரஸ் கட்சியின் பெயர் குறித்து

திரு. நா. வீராசாமி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த மன்றத்தில் உட்கார்ந்திருக்கக்கூடிய காங்கிரஸ்காரர்கள் சிலர் 'சின்டிகேட் காங்கிரஸ்' என்றும், சிலர் 'நிஜலிங்கப்பா காங்கிரஸ்' என்றும், சிலர் 'காங்கிரஸ்' என்றெல்லாம் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதன் பெயரை அறிவிப்பதாக நீங்கள் இரண்டு தினங்களுக்கு முன்பு சொன்னீர்கள். காங்கிரஸ்காரர்கள் பெயரைச் சொல்லவில்லையா? என்ன காங்கிரஸ் என்று அழைப்பது என்பதைத் தயவு செய்து சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுவரையில் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் தெரிவிக்கவில்லை. அவர்களுக்கு இல்லாத அளவிற்கு அக்கறை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எப்படி வந்தது என்று எனக்குப் புரியவில்லை.

திரு. துரை முருகன் : சட்டமன்றக் காங்கிரஸ் என்று வைத்துக் கொள்ளலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தன்னிலை விளக்கம். ஆனால் இந்தப் பெயர் நடப்பதற்கு எந்தவிதமான தங்குதடையும் இருக்காது என்று நான் கருதுகிறேன். எங்களை எள்ளி நகையாடும் முறையில் சின்டிகேட் காங்கிரஸ் என்று அவர்கள் எத்தனை தடவை வேண்டுமானாலும் சொல்லட்டும். ஆனால் இந்த மாதிரியான கூற்றுகள் இந்த சட்டசபையின் நடவடிக்கைகளுக்கு உகந்ததல்ல என்றுமட்டும் நான் கூற விரும்புகிறேன். முன்பே நான் கூறினேன், நிஜலிங்கப்பா தலைமையில் இருக்கின்ற காங்கிரஸ் என்று அழைத்தால் பொருத்தமாக இருக்கும் என்று. அதை அரசாங்கமும் ஒப்புக்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறியிருக்கிறேன். ஆகவே மறுமுறையும் அதைப்பற்றிக் கிளப்புவது சரியல்ல என்றுமட்டும்தான் நான் கூற முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எள்ளி நகையாடும் முறையில் சொல்வதாகச் சொன்னார்கள். அது அவ்வளவு சரியானதல்ல. அப்படி இந்த மன்றமும், சபைத் தலைவரும் கருதமாட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், "என்ன பெயர்?" என்றுதான் கேட்டார்கள். அதற்குக் காரணம், அன்றையதினம் "நிஜலிங்கப்பா காங்கிரஸ்" என்று எடுத்துக் கொள்ளலாமா?" என்று கேட்டபோது, "நிஜலிங்கப்பா காங்கிரஸ்" என்று சொல்லுங்கள், பிறகு நான் இறுதியாகச் சொல்கிறேன்" என்று தாங்கள் கூறியதால்தான் அந்தக் கேள்வியே எழுந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகுந்த கண்ணியத்தோடும், மிகுந்த கௌரவத்தோடும்தான், "எந்தப் பெயரில் அழைப்பது?" என்று கேட்டார்களே தவிர, எள்ளி நகையாடியதாகக் கருதத் தேவையில்லை. இப்போது அவர்கள் சொன்னது போல் இதையே இறுதியாகக்கொண்டு, வெவ்வேறு பெயரில் அழைக்காமல், 'நிஜலிங்கப்பா காங்கிரஸ்' என்ற பெயரில் அழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நிஜலிங்கப்பா தலைமையில் இயங்குகிற வரையில்தான் அப்படிக் கொள்ளமுடியும், வேறு ஒருவர் தலைமையில் இயங்கத் துவங்கினால் வேறு பெயர்தான் வைக்கவேண்டியிருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது நிஜலிங்கப்பா காங்கிரஸ் என்பது தான் 'நிஜம்'. எதிர்காலத்தைப்பற்றி பின்னர் பார்த்துக்கொள்ளலாம்.

திரு. செ. கந்தப்பன் : 'சின்டிகேட்' என்ற சொல் கண்ணியமான பதம் தான் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பெயர் வைத்துக்கொள்வது என்பது திரு. கந்தப்பன் அவர்கள் விருப்பத்தைப் பொறுத்ததல்ல. அவர்கள் கட்சிக்குப் பெயர் வைப்பது என்பது அவர்கள் விருப்பத்தைப் பொறுத்தது. ஊரார் பிள்ளைக்கு நீங்கள் பெயர் வைக்கமுடியாது. உங்கள் பிள்ளைக்கு வேண்டுமானால் நீங்கள் பெயர் வைத்துக்கொள்ளலாமே தவிர, அவரவர்கள் பெயர் வைப்பது அவரவர்கள் விருப்பத்தைப் பொறுத்தது. அவர்களுக்குத்தான் அதன் அருமை தெரியும்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கட்சிக்கு, அவர்கள் கோஷ்டிக்கு, என்ன பெயர் வைப்பது என்பது சர்ச்சையாகி இருக்கிறது. நண்பர் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் பேசுகிறபோது சின்டிகேட், சின்டிகேட், சின்டிகேட் என்று அழுத்தந்திருத்தமாகப் பேசினார்கள். அப்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு எந்தவித வருத்தமும் இல்லை. நன்றாக கேட்டுக்கொண்டுதான் இருந்தார்கள். ஆளும்கட்சி சார்பாக 'சின்டிகேட்' என்று சொன்னால் அவர்கள் வருத்தப்படுவார்கள். அப்படியானால், அவர்களது கட்சியைச் சேர்ந்த திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் சொன்னதுமட்டும் அல்லது அவர்களைப் போன்று மற்றவர்கள் சொன்னதுமட்டும் அது நல்ல பெயர் என்பதுதான் அவர்களுடைய முடிவா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய மன்றத்தைப் பொறுத்தவரையில், திரு. பொன்னப்ப நாடார் அவர்கள்தான் அந்தக் கட்சிக்கு அதிகாரப் பூர்வமாக இருப்பவர்கள். இனிமேல் இந்தக் குழப்பத்தை, சிரமத்தை அவர்களுக்குக் கொடுக்காமல், நம்மைப் பொறுத்தவரையில், 'நிஜலிங்கப்பா தலைமையில் இருக்கும் காங்கிரஸ்' என்றே அழைக்கலாம்.

திரு. துரை முருகன் : திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் 'சின்டிகேட் காங்கிரஸ்' என்று சொன்னதை வாபஸ் வாங்குவாரா?

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : நாங்கள் நாமினேஷன் தாக்கல் செய்த போது நிஜலிங்கப்பா தலைமைக் காங்கிரஸ் என்றுதான் செய்தோம். ஆகவே, மறுபடியும் கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பெயரையே உபயோகப்படுத்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரொம்ப முக்கியமான செய்தி சொல்கிறார்கள். இவ்வளவு சிக்கல் வந்ததற்குக் காரணமே, நீங்கள் 'நிஜலிங்கப்பா தலைமைக் காங்கிரஸ்' என்று சொல்லி இங்கே வந்து இருக்கும்போது, மொத்தமாக, வெளியே இருப்பவர்களையும் சேர்த்து, காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்று எழுதிக் கொடுத்ததால்தான். இப்போது குழப்பம் தீர்ந்து விட்டது. இனி 'சின்டிகேட் காங்கிரஸ்' என்றோ, 'ஆர்கனைசேஷன் காங்கிரஸ்' என்றோ அழைக்காமல், நம் மன்றத்தைப் பொறுத்தவரையில், 'நிஜலிங்கப்பா தலைமைக் காங்கிரஸ்' என்றே அழைக்கலாம்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் உள்ள காங்கிரஸ் கட்சிக்கு, 'பொன்னப்ப நாடார் தலைமைக் காங்கிரஸ்' என்று அழைக்கலாமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியும் அழைக்கலாம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அதைப்பற்றி முடிவு செய்யும் உரிமை இல்லை. அது அவர்களாக முடிவு செய்யவேண்டிய காரியம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: வேறு காங்கிரஸ் அங்கத்தினர்கள் இல்லாத போது எதற்காக அடுத்த கட்சிக்கு என்ன பெயர் சொல்வது என்று கேட்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: 50 பேராக இருந்தபோதுகூட வேறு காங்கிரஸ் இல்லாமல் இருந்தது. அப்புறம் வேறு காங்கிரஸ் வந்தது, இன்னும் யார் வருவார்களோ, போகப்போகத் தெரியும்.

4. ஆளுநர் பேருரைக்கு நன்றிகூறும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி.

* THIRU K. M. SUBRAMANIAM: Hon. Speaker, Sir, I thank you at the outset for having given me an opportunity to speak on the Governor's Address and associate myself with the sentiments expressed by previous speakers, particularly with the Member Thiru Vezhavendan, who had moved the motion of thanks to the Governor for his address. In that address it was stated that there was fair and very peaceful election. But unfortunately I find everyone who spoke on the floor of the House, almost everyone has denied that it was neither fair nor peaceful and that there was lot of trouble, whether the trouble started from Congress or other party. So far as I am concerned I thought the trouble was only in my constituency and not in other constituencies. My experience was that soda bottles and glasses were thrown at my house and on my car. I kept quiet because these were abnormal times and during that time we have to tolerate certain abnormalities.

But what happened in my constituency, Mr. Speaker, is the issue of a pamphlet supposed to have been signed by me and printed at my press. I denied it immediately and I sent telegrams to the Commissioner of Police, to the Inspector-General of Police and Election Commissioner. The pamphlet is a most damaging one which no decent man will ever publish in political. But unfortunately up to now I do not know what action had been taken. I take this opportunity to once again that repeat it is the duty of Government to see that such illegal pamphlets are not published and when it is brought to the notice of the officers concerned, strict action should be taken as otherwise it would influence the election in one way or other.

Coming to the other point, Mr. Latheef has said communal passions were roused and caste passions were roused during elections but the voters were very good. They were not led by either of these things. I can certify to that because in my constituency my caste is only 15 to 20 per cent. I got elected because

communalism or casteism did not play any part in the present election. It was more on economic issue, and service to the people that played the part. So I thank the hon. Member for having brought it to the notice of the public because in the year 1971 communalism cannot play any part, casteism cannot play any part and feudalism cannot play any part. The voters have proved it. These things cannot play any part.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: [illegible] பர்சனல் எக்ஸ்பீரியன்ஸ், [illegible] வெற்றி பெறவில்லை என்று தான் [illegible] தொகுதியைப்பற்றி சொன்னதை கனம் உறுப்பினர் [illegible] குறிப்பிட்டார்கள், என் பெயர் அப்துல் ஜப்பார். [illegible] பிரசாரத்தால் நான் வெற்றி பெற்று இருக்கிறேன். [illegible] தொகுதியில் எனக்குக் கிடைத்த ஓட்டுகளில் [illegible] அதிகமாக [illegible] சாதியைச் சேர்ந்த [illegible] தொகுதி [illegible] மிகக் கணிசமாக, அதிகமாக, ஓட்டுக் கிடைத்து இருக்கிறது. இந்த வகுப்புவாதப் பிரசாரத்திற்கு இன்னும் வெற்றி கிடைத்துக்கொண்டு இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: I was very happy that such a thing did not happen in my constituency.

Coming to the other points, I am happy that we have now got a handful of uncalled for advisers to advise on how to run our party. I bow to them. Most of the speakers referred to it and said that the term 'Nijalingappa Congress' should be used. I bow my head to whatever good views are offered. Whatever bad advices are tendered we will reject and you know we will not care for them. I am very happy that the Ruling Party is very keen on advising the opposition, the minority party how to take action and how to improve ourselves. That is a very good sign.

I now turn my attention to the various amendments given to the motion of thanks to the Governor. I thought we would have a socialistic budget; but unfortunately because the Central Government which depends upon the States to execute various schemes like urban property ceiling, States are not allowing them to enforce the same; we do not have it here. It is said that this is a socialistic Government but then having brought forward ceiling on landed property, vir., 15 acres. I thought they would have brought the ceiling on urban property also. That has been accepted in principle by all the progressive parties including the so-called progressive front sitting here. It is one of the socialistic principles . . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நகர்ப்புறச் சொத்துக்களுக்கு உச்சவரம்பு வேண்டுமென்கிற அந்தச் சமதர்மக் கொள்கையை மாண்புமிகு உறுப்பினர் தேர்தல் காலத்தில் பிரசாரத்திற்கு பயன்படுத்தியதுண்டா என்று அறிய விரும்புகிறேன்.

Thiru K. M. SUBRAMANIAM : So far as I am concerned I go by my party and not by personality. I bow by the party's decision. I am definite in my statement. I am an editor of a paper whether it is popular or not. I need not shout from house-tops with regard to what exactly is the 10 point programme of our party. Unless the party changes it, it is the manifesto of our party. It is the ten point programme. Some hon. Member was kind enough to point out that there was only one point programme. That one point programme was only to see that the ten point programme is executed.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 10 அம்சத் திட்டத்தில் ஒன்றுதானே ராஜமான்ய ஒழிப்பு? அதைப்பற்றி பாராளுமன்றத்தில் மசோதா வந்த நேரத்தில், அதை உங்களுடைய கட்சி ஆதரிக்காத காரணம் என்ன?

Thiru K. M. SUBRAMANIAM : I am very happy that this question has been put. Because of these interruptions I am not able to proceed with my speech. So I should be given extension of time. The Chief Minister has put a specific question, to me. It is all right.

Mr. SPEAKER : You have not answered the specific question put by Hon. Chief Minister. You have to answer him.

Thiru K. M. SUBRAMANIAM : I am happy the Hon. Chief Minister wanted a clarification. The Congress, I mean the Nijalingappa Congress (I get confused because the Hon. Mr. Adityan confused me so much, I got confused), did not vote at that time because there was no mention, specific mention of the compensation to be paid to the various Maharajas.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படியானால் தங்களுடைய கட்சியின் சார்பில் பாராளுமன்றத்தில் காம்பன்சேஷனைப்பற்றி ஒரு திருத்தம் கொடுத்து இருக்கலாமே, அந்தத் திருத்தத்தின்மீது ஓட்டெடுப்பு வேண்டுமென்று வற்புறுத்தியிருந்தால், அந்தத் திருத்தத்தின்மீது தி.மு.க. பாராளுமன்றக் கட்சி உறுப்பினர்களும்கூட வாக்களித்து இருப்பார்களே, அதை ஏன் செய்யவில்லை?

Thiru K. M. SUBRAMANIAM : Mr. Speaker Sir, unfortunately I am not a Member of Parliament. I know there are two methods of doing things. One of them is to move amendments; but the other day the hon. Member, Thiru Swamidhass had not been permitted even to move his cut motions here. The organisational wing of the Congress Party has definitely told us that we stand even to-day by the Ten-Point Programme which includes the abolition of privy purses. If it is left to myself—I am only a small link in the vast organisation—I would even say that compensation may not be necessary and that is my individual opinion. I can straigh away tell the revered Chief Minister that if I were a Member of Parliament I would have definitely moved an amendment. Unfortunately I was not there. But I still hold

on to the fact that my Party stands for the abolition of privy purses. What is the use of paying huge compensation and abolishing privy purses . . .

Mr. SPEAKER : The hon. Member has taken a deviation route.

Thiru K. M. SUBRAMANIAM : I deviated because I was forced to do so. . .

Mr. SPEAKER : I am only assisting you to come to the point.

Thiru K. M. SUBRAMANIAM : Next I come to my cut motions. . .

Thiru A. PARANIHAMAN : Sir, on a point of order. The hon. Member, Thiru K. M Subramaniam, had at the outset pointed out that he meant what he had stated. But when his Party has not supported hte policy regarding the abolition of privy purses, how is it that he as a Member of Parliament can do it?

Mr. SPEAKER : It is not a point of order.

Thiru K. M. SUBRAMANIAM : It is not a point of order at all according to me.

Sir, there is no mention in the Governor's Address about the ceiling on urban property in Tamil Nadu.

Now I come to the second part of the cut mot.on and invite the attention of the Hon. Minister for Education to that particular respect. During the 23 or 24 years of freedom we have neglected our children in this country. If only we had looked after these children and given proper attention and provided facilities like proper food and environment, they would be prepared to man the administration and the Government. Now at least after the lovers of poor people have come to this House in large numbers and assumed power, I hope they would bestow proper attention on them. My only request through you, Mr. Speaker, is that there should be a vitaminised food factory which should manufacture all the vitaminised food for the slum children because more than 95 per cent of the children rae suffering from under-nourishment.

Then I come to the third part of my cut motion. Sir, my friends who come from outside the Madras City think that it is the most beautifully lit City. But when they go beyond Mount Road and Poonamallee Road and come to my constituency—I would invite them to come there—they will find that there are streets without lights and there are slums without lights. There are cut-out lights only in main streets but there are hundreds of streets without any light and even if there are lights, 50 per cent of them do not burn. Apart from the lights, there is blocking of

drainage. Almost every day I received 10 to 15 complaints from my division about the blocking of drainage. This is a ething which the Corporation cannot undertake because of the huge cost involved and the drainage system was intended for 6 lakhs of people. But that drainage system could not meet the requirements of the present-day population of 22 lakhs. So, I request the Government to look into this aspect of the matter. I hope afer the implementation of the Veeranam Scheme, water-supply conditions will improve. Unless and until the State Government or the Central Government come to the rescue of the Corporation with the substantial amount of Rs. 10 crores, amenities in the City cannot be improved. Our revenue is about a crore of rupees or Rs. 90 lakhs a month and our expenditure is about Rs. 75 lakhs a month and the expenditure mainly related to maintenance work, salaries and wages. How can we provide amenities to the people and clear off the debts which are gradually increasing.

Then, I come to the joint enterprise, price factor and unemployment problem. Many previous speakers have referred to them and I do not want to refer to them further.

But with regard to the price factor I want to speak. When the Centre has increased the price of steel did this Government protest against it ? When the price of Vanaspati was increased, did this Government protest? The increase in the price of vanaspati has been responsible for the increase in the price of vegetable oils, cocoanut oil, etc. When the prices of soap were increased, did this Government protest ? I request the Hon. Chief Minister to reply to these points. Also at the time of the Kerala elections, when the rubber prices were increased did this Government protest? We have a tyre factory in Ambattur . . .

MR. SPEAKER : The hon. Member has got only a minute.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I belong to a minority party. I will refer only to points and I am not wasting time.

Then, so far as big industries are concerned I am very happy that the Government of India had cleared the Rs. 65-crore Scheme relating to the Tuticorin Fertilizer Factory on 28th March 1971. This will be the biggest fertilizer factory in the East. It is going to produce various items which are very essential for the manufacture of resins and other subsidiary small-scale industries I hope and trust that this Government will see that sufficient facilities are given to this Corporation which is going to start this factory to make the bye-products available to hundreds of cottage industries.

One more point, Sir It is very curious to note that this scheme is going to be a joint enterprise. I think this is a socialistic Government Day before yesterday I read in the papers that this

Government is going to encourage private enterprise. What is this private enterprise in these days ? One can start a private industry with Rs. 5 lakhs. He collects Rs. 20 lakhs as subscribed capital. He goes to L.I.C. for a loan of Rs. 10 crores and Industrial Development Corporation for another Rs. 5 crore loan and some other public sector organisation for another loan. Is this private enterprise? Large part is public money. I have got no time to explain in detail. What is this joint enterprise, Sir ? It has failed in many countries except in Yugoslavia and Japan, where conditions are different. Joint enterprise means you have two or three government people in the Board. But the private people are so powerful and they control the Government people. I request this Government, which is claiming itself as nationalistic and socialistic and which is for scientific socialism to realise this point and start in the right way. Let them proceed in the right way and let us have a good Government. Thank you.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கனம் அங்கத்தினர் பேசியதிலிருந்து திரு. பொன்னப்ப நாடார் காங்கிரஸ் கட்சி தனியார் துறைக்கு ஊக்கம் அளிக்கக்கூடாது என்று சொல்கிறதா? இதுதொழில் வளர்ச்சிக்குத் தனியார் துறை வேண்டாம் என்று சொல்லுகிறதா? கனம் அங்கத்தினர் சொன்னது அந்தக் கட்சியின் கொள்கையா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, I was speaking on behalf of big industries. I never spoke slightingly about small-scale industries. I spoke about large-scale industry. I want all cottage industries and all medium industries be run by private enterprise but well regulated. and well controlled by Government.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பேசியது பத்திரிகையில் வந்தது என்றீர்கள். அது தொழில் வாரியத்தில் பேசப்பட்ட பேச்சு. அதை அங்கத்தினர் தவறாகப் படித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். பெரிய தொழில் என்றாலும் தனியார் துறைக்கு ஊக்கம் அளிக்கக் கூடாது என்பது அவர்களுடைய காங்கிரஸ் கட்சியின் கொள்கையா? அதைத் தெளிவாகச் சொல்லி விட்டால், அவர்களுக்கும் நல்லது. டாக்டர் ஹாண்டே அவர்களுக்கும் பயன்படும். எங்களுடைய கட்சியின் கொள்கையைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். தனியார் துறையும் இருக்கிறது. பொதுத் துறையும் இருக்கிறது. இந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தபிறகு, தனியார் துறையில் இருக்கும் ஊக்கத்தையும் பயன்படுத்தி, அரசுத் துறையும் சேர்ந்து, கூட்டுத் தொழில் ஆரம்பிக்க வேண்டும் என்கிற புது முயற்சியை எடுத்திருக்கிறோம். அது தவறு என்று சொல்லுகிறீர்களா?

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள், எங்கள் கட்சியின் சார்பாகக் கொள்கை விளக்கத்தை, என்ன கொள்கை இருக்கிறது என்பதைத் தெளிவாக்கவேண்டும் என்கிறார்கள். தனியார் துறை வேண்டுமா, அல்லது பொதுத் துறை வேண்டுமா என்கிற கொள்கையெல்லாம் எங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியிருக்கிறோம். அதற்கு விபரீத

பானது எதுவும் இல்லை இப்போது. எந்தப் பத்திரிகையில் வந்த செய்தியை ஆதாரமாக வைத்துக்கொண்டு கருத்துக்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. சங்கங்களை யார் யாரோ சேர்ந்த அங்கத்தினர் தவறான கருத்தைத் தெரிவிக்க வில்லை. தூத்துக்குடியில் ஆயிரக்கணக்கில் ஏழைத் தொழிலாளி, அந்த "லாக்அவுட்" பற்றிக் கருத்துக் கூறினார்கள். பொதுவான கொள்கை விளக்கம் எதுவும் தரவில்லை என்பதையும் கூற விரும்புகிறேன். தனியார் துறையும், பொதுத் துறையும் சேர்ந்து அமைக்கப்பட்டது. லாபகரமான தொழில்களைத் தனியார் துறைக்கு விட்டு, நஷ்டமான தொழில்களையெல்லாம் பொதுத் துறைக்கு விடுவது பொருத்தமல்ல என்ற கருத்து நிலவிக்கொண்டு இருக்கிறது என்பதையும் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, தூத்துக்குடி உறுப்பினர், திரு. இரா. இராமலிங்கம் அவர்கள் பேசுவார்கள்.

***திரு. இரா. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆளுநர் உரையில் தேர்தலைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தத் தேர்தலிலே வாக்களித்த மக்கள், ஒரு நல்ல சமுதாயத்தை மலரச் செய்ய வேண்டும் என்பதிலே நினைவை வைத்துக்கொண்டு, தங்களுடைய வாக்குகள் மூலம் அதைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள் என்பதை அறிகிறோம். இந்தத் தேர்தலின்போது ஒரு மாபெரும் உணர்ச்சி, கொந்தளிப்பு இருந்ததை யாரும் மறுக்கமுடியாது. இதற்கு முன்னால் இல்லாத அளவில் இப்போது இந்தத் தேர்தலிலே, அரசியல் கட்சிகள் தங்களுடைய கொள்கைகளைப் பரப்புவதற்குப் பாடுபட்டார்கள் என்பதையும் நாம் மறுத்துவிட முடியாது. குறிப்பாக, சில பகுதிகளில் சாதி வெறியைத் தூண்டி விடவேண்டும் என்ற அளவில் பிரசாரங்கள் நடந்தன என்பதும் நமக்கெல்லாம் தெரியும்.

தூத்துக்குடியைப் பொறுத்தவரையில், தூத்துக்குடியைப்பற்றிப் பத்திரிகைகளில் படித்தோம். அங்கு நடந்த செய்திகள் அனைத்தையும் பார்த்தோம். ஒன்று தூத்துக்குடியில் ஒரு கொலையாக இருக்கலாம். அல்லது மற்றொன்று தூத்துக்குடியில் துறைமுகத்தைப்பற்றிய செய்தியாக இருக்கலாம். தேர்தல் நேரத்திலும் அந்த நிலை இருந்தது. அதையும் யாரும் மறுக்கமுடியாது. என்னை எதிர்த்துப் போட்டியிட்டது திருநெல்வேலிக்காரர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவர். ஒரு பெண். ஒரு பெண் தேர்தலில் நின்றதால், அமைதியான முறையில் தேர்தல் இருக்கும் என்று நினைத்தேன். இந்தத் தேர்தலில் பலாத்காரம் இருக்காது என்றும் நான் எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் என்னுடைய நினைவெல்லாம் அந்த வழியில் செல்லாத வகையில், தேர்தல் நேரத்தில், தேர்தலுக்கு ஒரு நாளுக்கு முன்னால், அருமை நண்பர் திரு. பட்டு நாடார் தேர்தல் களத்தில் கொலையுண்டார் என்பது எல்லோருக்கும் தெரியும். அவ்வளவு பலாத்காரமான நிலை தேர்தல் நேரத்தில் அமைந்தாலும், தேர்தலுக்கு முன்னும் பின்னும் அந்த நிலைகள் இருக்கவேண்டுமா என்பதைப்

பற்றி எல்லோரும் யோசிக்க வேண்டும். இந்த நிலையை நீடிக்க விடக்கூடாது. நெல்லையைப் பொறுத்தவரையில் சாதி வெறியை முறியடித்து விட்டோம் என்றே சொல்லவேண்டும். அப்படி ஏதாவது இருந்தால், அது கன்னியா குமரிக்குச் சென்றுவிட்டிருக்கலாம். நெல்லையில் இல்லை. தூத்துக்குடி வாக்காளர்கள் பயமுறுத்தப்பட்டார்கள். இன்றும் என்போன்றவர்களும் பாதுகாப்பில்லாமல் செல்ல முடியாத அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன.

ஆளுநர் அவர்கள் வேளாண்மைத் துறையைப்பற்றித் தன்னுடைய உரையில் கூறியிருக்கிறார்கள். இந்த நாட்டில் வேளாண்மைத் துறை நல்ல முறையில் முன்னேறியிருக்கிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது. உணவு உற்பத்தி இன்றைக்கு 67 லட்சம் டன்னாக உயர்ந்திருப்பது நல்ல விளைச்சலைக் காட்டுகிறது. ரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், கடன் வசதிகள், பொறுக்கு விதைகள் இவையெல்லாம் ஏழை விவசாயிகளுக்கு நேரிடையாக, சுலபமாகக் கிடைக்கும் முறையைக் கடந்த மூன்று ஆண்டுக்காலத்தில் இந்த நாட்டில் இந்த அரசு உண்டாக்கியதன் விளைவாக, இந்த நாட்டில் உணவு உற்பத்தி சிறந்திருக்கிறது. இதை யாரும் மறுக்கமுடியாது. ரசாயன உரங்கள் பெறவேண்டுமென்றால், ஒரு காலத்தில் இந்த நாட்டில் மனுச்செய்து விட்டு, கிடைக்காமலே காத்திருக்கும்போதே பயிர்கள் விளைந்துவிடும். அப்படிக் கஷ்டப்பட்ட விவசாயிகளுக்கு அன்றைக்கு ரசாயன உரங்கள் உபயோகப் படுத்த முடியாத நிலை இருந்தது. ரசாயன உரங்கள் கள்ளச் சந்தையில் இருந்த காலமும் உண்டு. கடன் விண்ணப்பம் போட்டால் காலமெல்லாம் கடன் வாங்குவதற்கு அலைந்துதிரிந்த நிலையை அந்த அரசுக் காலத்தில் பார்த்தோம். ஆனால் கடந்த 3, 4 ஆண்டுகளாக இந்த நிலைமையை மாற்றியிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு எவ்வளவு விரைவாகக் கடனை வழங்க முடியுமோ, எவ்வளவு விரைவாக உரத்தை வழங்க முடியுமோ அவ்வளவு விரைவாக வழங்கும் நிலைமை இன்றைக்கு உருவாக்கப்பட்டு இருக்கிறது. இதன் காரணமாக விவசாயிகள் குறைகள் களையப்பட்டு, விவசாயத்தில் முன்னேற்றம் கண்டிருக்கிறோம். இன்றையதினம் விவசாயிகளுக்குக் குறுகிய காலக் கடன் 55 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது; நீண்ட காலக் கடன் 19 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. இந்த உயர்வெல்லாம் சாதாரணக் குடியானவர்களுக்கு நல்ல முறையில் பயன்படுகிறது. அதன் காரணமாக உற்பத்தி அதிகமாகிறது.'

இரண்டாவது உலக மகாயுத்தத்திற்கு முன்னால் தூத்துக்குடி துறைமுகத்திற்குச் சென்று பார்த்தால் பர்மாவிலிருந்து நெல்லும் அரிசியும் கப்பல் கப்பலாக வருவதைப் பார்க்கலாம். தூத்துக்குடித் துறைமுகத்தில் நெல்லும் அரிசியும் சிந்திக் கிடக்கும். அப்படிச் சிந்திய நெல்மணிகளையும் அரிசியையும் பொறுக்குவதற்காகப் புறாக் கூட்டங்கள் படையெடுக்கும் ஒருபக்கத்தில். பிறிதொரு பக்கத்தில் தாய்மார்கள் போட்டிபோட்டுக்கொண்டு அந்த வேலையைச் செய்வார்கள். அந்த அளவிற்குச் செழிப்பான நிலைமை அந்தத் துறைமுகத்திலே இருந்தது. இன்றைக்கு நாம் உணவுத்துறையிலே ஆக்கியிருக்கும் பணியைப் பார்த்தால் அடுத்த ஆண்டில் தூத்துக்குடித் துறைமுகம் செயல்பட ஆரம்பித்தால், இந்த நாட்டிலேயிருந்து தமிழ் நாட்டிலேயிருந்து நெல்லை ஏற்றுமதி செய்யும் அளவிற்கு நாம் வளம் அடைந்திருக்கிறோம். இதற்காக

இந்த அரசை எவ்வளவு பாராட்டினாலும் அது மிகையாகாது. நாம் கடந்த மூன்று நான்கு ஆண்டுகளில் திட்டங்களைப் பயன்படுத்தி நல்ல வெற்றியைப் பெற்றிருக்கிறோம்.

இப்போது நமக்குப் பற்றாக்குறையாக இருப்பது பருப்பு வகைகள்தாம். பருப்பு வகைகளை நாம் வடக்கு மாநிலங்களிலிருந்து இறக்குமதிசெய்து கொண்டு இருக்கிறோம். அவற்றில் தன்னிறைவு பெற இன்றைக்கு நாம் பல திட்டங்களை வைத்துக்கொண்டிருக்கிறோம். அந்தத் திட்டமும் செயல்பட ஆரம்பித்துவிட்டால் பருப்புவகைகள் பற்றாக்குறையும் அடியோடு நீங்கிவிடும்.

நாம் பருத்தி பயிரிடுவதை நல்ல முறையில் அதிகமாகச் செய்ய வேண்டும். 2.6 லட்சம் ஏக்கரில் பருத்தி பயிரிட ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இம்மாதிரியான நல்ல திட்டங்கள் எல்லாம் விவசாயத் துறையில் முன்னேறியிருக்கின்றன. அறுவடை ஆராய்ச்சியின் பலனைக் கொண்டு அனுபவத்தைக் கொண்டு விவசாயத் துறையில் புதிய முறைகளைக் கொண்டு நாட்டிலே ஒரு விவசாயப் புரட்சியைக் கூட ஏற்படுத்தியிருக்கிறார்கள். விவசாயப் பெருமக்கள் அதிக முனைப்புடன் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். உற்பத்தியை மிகவும் பெருக்கியிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக மின்சார வசதியைப் பற்றி, இந்த நாட்டிலே மின்வசதித் திட்டத்தைப் பெருக்குவதிலே அதிக அக்கறையைச் செலுத்தி வருகிறது. கிராமப் பகுதிகளிலும், நகரங்களிலும் கிட்டத்தட்ட 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களில் மின்வசதி கிடைத்திருக்கிறது. வேளாண்மைத் துறையில் ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்ட விசைப்பம்புகளுக்கு மின் இணைப்புக் கொடுத்திருக்கிறார்கள். இந்தியா முழுவதையும் எடுத்துக்கொண்டால், தமிழ்நாட்டிலே தான் மின்சாரத் திட்டம் நல்ல முறையில் அதிக அளவில் இருப்பது, பாராட்டக்கூடிய அளவில் வேலை செய்து வருகிறது. 1972-க்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கும் நிலையில் இருக்கிறோம் என்பதைப் பெருமையுடன் சொல்லிக்கொள்கிறேன். இந்த நேரத்தில் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். நான் சார்ந்திருக்கிற தூத்துக்குடித் தொகுதியிலே பல கிராமங்கள் இருக்கின்றன. பெரும்பாலான தொகுதியில் நாலைந்து கிராமங்களுக்கு மின் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து, நாலைந்து கிராமங்களுக்கு அந்த மின்வசதி கொடுக்கப்படாமல் இருக்கிறது. அப்படி மின்வசதி கொடுக்கப்படாத கிராமங்கள் எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் கிராமங்களாகத்தான் இருக்கின்றன. ஆகவே, தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் கிராமங்களில் முதலில் குடிதண்ணீர்த் திட்டத்தையும், மின்வசதித் திட்டத்தையும் ஏற்படுத்திக் கொடுத்த பின்னர், மற்றப் பகுதிகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று ஆணைகளைப் பிறப்பிக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். மின்சாரத் துறையில் நாம் முன்னேறியிருக்கிறோம் என்பதைப் பெருமையுடன் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, நாம் நிலச் சீர்திருத்தத்தை ஏற்படுத்த இருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. நிலமற்ற விவசாயிகளுக்கு நிலச் சீர்திருத்தச் சட்டத்தினால் அதிகமாக இருக்கிற

நிலத்தைப் பகிர்ந்தளிக்க வேண்டும். மேலும் காட்டு இலாகாவுக்குச் சொந்தமான சில இடங்கள் விளைச்சலுக்குத் தகுந்த இடங்களாக இருக்கின்றன. அதையும் நிலமற்ற விவசாயிகளுக்குக் கொடுத்து உற்பத்தியைப் பெருக்க வேண்டும். மேலும், விளைச்சலுக்குத் தகுதியான மலைப்பகுதிகள் ஆயிரக் கணக்கில் இருக்கின்றன. அதையும் அரசு எடுத்து விவசாயம் செய்வதற்கு, நிலமற்றவர்களுக்கு அளித்தால் இப்போதைய நிலைமையைவிட நெல் மட்டுமல்ல, மற்ற உணவுத் தானியங்களையும் இன்னும் அதிகமாக விளைவிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தொழில் வளர்ச்சியிலே தமிழகம் நல்ல நிலைமையில் இருக்கிறது. இந்த நாடு விவசாயத்தை நம்பியிருந்தாலும், இந்த நாட்டிலேயுள்ள 80 சதவீத மக்கள் விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டிருந்தாலும், நாம் விவசாயத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறோமோ அந்த அளவுக்குத் தொழிலுக்கும் முக்கியத்துவம் கொடுத்து வருகிறோம்.

வளர்ச்சி அடைந்துள்ள நாடுகள் எல்லாம் தொழில்களை அபிவிருத்தி செய்துகொண்டிருக்கிறார்கள். தூத்துக்குடித் துறைமுகத் திட்டம் அமலுக்கு வர இருக்கிறது. அடுத்த ஆண்டுக்குள் அநேகமாக வேலை முடிந்துவிடும் என்று கருதுகிறேன். தூத்துக்குடித் துறைமுகம் சிறப்பான ஒரு துறைமுகமாக இருக்க வேண்டுமென்றால், சேதுசமுத்திரத் திட்டத்தையும் உடனடியாக அமல்நடத்தினால்தான் தூத்துக்குடித் துறைமுகம் எல்லாவற்றிலும் சிறப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சூயஸ் கால்வாய் அடைக்கப்பட்டதும், கப்பல்கள் எல்லாம் ஆப்பிரிக்காவைச் சுற்றிக்கொண்டு, கொழும்புக்கு வந்து, அங்கே வேண்டிய தண்ணீரையும், உணவையும் எடுத்துக்கொண்டு, இலங்கையைச் சுற்றிக்கொண்டு கிழக்கு நாடுகளுக்குச் செல்கின்றன. சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்பட்டு, தூத்துக்குடியில் அந்தக் கப்பல்கள் தங்குவதற்கு வசதிகளைச் செய்து கொடுத்தால், தூத்துக்குடி வழியாகக் கப்பல்கள் சென்னைக்கும், கல்கத்தாவுக்கும் செல்வதற்கு வசதி ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதன்காரணமாக தூத்துக்குடித் துறைமுகம் அபிவிருத்தியடையும். இந்த மாநிலமும் முன்னேற்றமடையும். சேதுசமுத்திரத் திட்டத்தை மத்திய அரசு எடுத்துச் செய்வதற்கு வழிவகை காணவேண்டும். நமது கடலோரத்தில் 25 மைலுக்குள் ஒரு அயல்நாடு இருக்கிறது. கடலோரப் பாதுகாப்புக்காவும் சேதுசமுத்திரத் திட்டத்தை மத்திய அரசு எடுத்துக் கொள்ள வேண்டும்.

தூத்துக்குடியில் ஒரு உரத் தொழிற்சாலை ஏற்பட இருக்கிறது. அதற்கு மூலப்பொருள்கள் நாப்தா என்று முடிவு செய்திருக்கிறார்கள். அது கிடைக்க தூத்துக்குடியில் ஒரு எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையை ஏற்படுத்தினால் நலமாக இருக்கும். அரசு இவைகளையெல்லாம் ஏற்படுத்தித் தர வேண்டும். உப்பை மூலப் பொருளாகக்கொண்ட இரசாயனத் தொழில்கள் என்னென்ன இருக்கின்றனவோ அத்தனையையும் செய்யலாம். ஏனெனில் தூத்துக்குடியில் உப்பு ஏராளமான அளவில் கிடைக்கிறது. மழைக் காலத்தில் உப்பு உற்பத்தி செய்பவர்களுக்கு மூட்டை ஒன்றுக்கு 2 ரூபாய் கிடைக்கிறது. வெயிற் காலத்தில் மூட்டை ஒன்றுக்கு 60 பைசாதான் கிடைக்கிறது. உப்பை மூலப்பொருளாகக் கொண்ட பொட்டாசியம் சோளேட் என்ற உரத்தைத்

தூத்துக்குடியில் தயார் செய்கிறார்கள். இதைத் தயார் செய்யும் தொழிற்சாலை ஒன்று தனியார் துறையில் இருக்கிறது. அதில் நாள் ஒன்றுக்கு 7 முதல் 10 டன் வரை தயார் செய்கிறார்கள். இத்தகைய தொழிற்சாலைகளை அரசுச் சார்பிலும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*** திரு. எம். சுரேந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டு முழுவதும் அரசாங்கம் செய்கிற காரியங்களை முறைப்படுத்தி அதன் வழிமுறைகளை சுருக்கமாக எடுத்துக் கூறுவது ஆளுநர் அவர்களின் அறிக்கை என்று அழைக்கப்படுகிறது. அந்தக் கருத்தை ஆதாரமாகக்கொண்டு இந்தச் சபைமுன் வைத்திருக்கிற ஆளுநர் உரையை நான் பார்க்கிறேன்.

ஆரம்பத்திலேயே நாட்டில் நடந்து முடிந்த தேர்தலைப்பற்றி அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நடந்து முடிந்த தேர்தல் வாக்காளர்களின் அறிவு வளர்ந்து இருப்பதை நன்கு வெளிப்படுத்திக் காட்டியிருக்கின்றது என்பதை நான் முதலிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை என்ற அடிப்படையிலே நடந்து முடிந்திருக்கிற எல்லாத் தேர்தலையும் விட இந்தத் தேர்தல் ஜனநாயகப் பண்புகள் வேரூன்றி வளர்ந்து வருவதை எடுத்துக்காட்டுகிற முறையில் அமைந்திருக்கிறது. அதோடு இந்தத் தேசத்திலே இனி சோஷலிசத்தை மறுத்துச் சொல்வதற்கு முடியாது என்ற நிலைமையை அமைத்துக் கொடுத்திருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் தேர்தலிலே நமக்கு எதிராக இருந்தவர்கள் ஜனநாயகத்தைப் பாதுகாப்போம் என்ற பெயரால் எப்படி ஒன்று சேர்ந்து நம்மை எதிர்த்தார்கள் என்பதை நாம் அறிவோம். ஜனநாயகத்தைப் பாதுகாக்கின்ற பணியை வாக்காளர்கள் சரியாகச் செய்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எழுப்பிய ஜனநாயகத்தைப் பாதுகாப்போம் என்ற கோஷம் உண்மையானதுதானா? அதன் மீது அவர்கள் பற்றுக்கொண்டவர்களாக இருந்தார்களா? ஜனநாயகம் சரியான முறையில் செயல்படுவதை அவர்கள் விரும்பினார்களா என்பதை எல்லாம் தேர்தல் முடிந்தபிறகு நன்குபுரிந்துகொள்ள முடிகிறது. வாக்காளர்களின் அறிவுமட்டும் வளரவில்லை. அவர்கள் கண்களில் ஒளி வளர்ந்து இருக்கிறது. ஜனநாயக முறையில் எந்த எந்த சக்திகள் எப்படி எப்படிச் செயல்படுகின்றன என்பதை அறிந்து ஜனநாயக விரோத சக்திகளை முறியடித்து ஜனநாயகத்தைக் காக்கின்ற பணியைச் சரியாகச் செய்திருக்கிறார்கள். ஜனநாயகத்தைக் காப்போம் என்றவர்கள் ஜனநாயகம் வேரூன்றி வளருவதைக் கண்டு மகிழ்ச்சியடையவில்லை. அவர்கள் சோர்ந்து துவள்கின்ற நிலையில் தங்கள் வருங்காலம் என்ன ஆகுமோ என்ற எண்ணத்தில் கவலைப்படுகின்றார்கள். ஜனநாயக மறைவில் சமுதாய சுரண்டல்காரர்கள்—சாதி சமயவாதிகள்தான் செயல்பட்டார்கள் என்பதை இன்றையதினம் ஸிண்டிகேட்காரர்கள் சுதந்திராக்கட்சியினரையும், சுதந்திராக்கட்சியினர் ஸிண்டிகேட்காரர்களையும், ஜனசங்கத்தவர்கள் இருவரையும் குற்றம் சாட்டிக்கொள்வதில் இருந்து தெரிகிறது. இவர்கள் எல்லாம் ஜனநாயகத்தின் மறைவில் ஒன்றுசேர்ந்து தங்களைப் பலப்படுத்தி சோஷலிச முற்போக்கு அணியை முறியடித்துவிடலாம் என்று கற்பனை செய்து கொண்டிருந்தார்கள். அந்தக்

கற்பனையை மக்கள் தகர்த்தெறிந்துவிட்டார்கள். இன்றையதினம் முற்போக்கு முன்னணி வெற்றி பெற்றிருக்கிறது. அதிகாரத்தை எடுத்துக் கொள்வதற்கும் வழங்குவதற்கும் தகுதிவாய்ந்த வாக்காளர்களை எஜமானர் களாகக் கருதி அருங்காலப் பணியாக நாம் எதை செய்ய வேண்டுமென்று அவர்கள் கட்டளையிட்டிருக்கிறார்களோ அந்தக் கட்டளையை நிறைவேற்ற முன்வரவேண்டும்.

அன்னிய ஆதிக்கம் நம் நாட்டில் இருந்தபொழுது ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணியாகக் காங்கிரஸ் செயல்பட்டு அதை முறியடித்தது. அதை முறியடித்தபின் ஆதிக்க அமைப்பாக காங்கிரஸ் மாறிவிட்ட காரணத்தால், அதை எதிர்ப்பதற்கு ஆதிக்க எதிர்ப்பு முன்னணி ஒன்று தோன்றவேண்டிய அவசிய மேற்பட்டது. இந்த அவசியத்தை 1967-ல் உணர்ந்து, ஆதிக்க எதிர்ப்பு முன்னணியைத் தோற்றுவித்து, தேர்தலில் போட்டியிட்டு, காங்கிரஸின் ஆதிக்கத்தை முறியடித்தோம். ஆதிக்கத்தை முறியடித்தபின்பு புதிய சமுதாயத்தை உண்டாக்குவதற்கான அணியை உருவாக்க வேண்டும். அதனால் ஜனநாயக சோஷலிசத்தில் நம்பிக்கையுள்ளவர்களைமட்டும் ஒன்றுதிரட்டி முற்போக்கு முன்னணி என்ற பெயரால் சோஷலிச அணியை உருவாக்கி, நடந்துமுடிந்த தேர்தலில் பிற்போக்கணியைப் படுதோல்வியடையச் செய்துவிட்டோம். இந்த நிலையில் ஏழை எளிய, கல்வியறிவில்லாத வாக்காளர்களை மதித்து மரியாதையுடன் நடத்துகின்ற அரசாங்க சிப்பந்திகளும் அதிகாரிகளும் நமக்குத் தேவைப்படுகின்றனர். ஏழை எளிய மக்கள் தாங்கள் அன்பாக மரியாதையுடன் நடத்தப்படுவதை உணர்கிறபோதுதான் நம்முடைய சமுதாய மாற்றத்துக்கான நோக்கம் நிறைவேற வழி பிறக்கும். அது வெற்றிகாணத் தொடங்கியிருக்கிறது என்பதைக் கூற விரும்புகிறேன். ஆக, அரசாங்க சிப்பந்திகளும், அதிகாரிகளும் அடிப்படை உணர்ச்சியில் மாற்றம் பெற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். நான் சென்ற ஆண்டே இதுபற்றிக் கூறினேன். நம்முடைய நிர்வாக இயந்திரம் பழைய கால இயந்திரமாக இருக்கிறது. அதைச் சீர்திருத்தியாக வேண்டும் என்பதாக ஆளுநர் அவர்கள் தம் உரையிலே நிர்வாகச் சீர்திருத்தக் கமிஷன் ஒன்றை அமைத்து எப்படி எப்படி மாற்றி, புதுப்பிக்கப் பட வேண்டும் என்பது ஆலோசிக்கப்படும் என்று கூறியிருப்பதை நான் வரவேற்கிறேன். ஒரு சந்தர்ப்பத்தில் இந்த மன்றத்தில் ரெவின்யூ போர்டை எடுத்துவிடுவதாகச் சொல்லப்பட்டது. அதுபற்றியும் இந்த நிர்வாகச் சீர்திருத்தக் கமிஷன் ஆலோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்ல. நம்முடைய அரசாங்கக் கணக்குகள் கீழ்மட்டத்தில் இருக்கிற கிராம அதிகாரிகளிடமிருந்து தொடங்குகிறது. கீழ்மட்டத்தில் கணக்குகள் சரியாக வைக்கப்படுவதில்லை—மிகப் பழமையான முறைகளையே இன்னமும் கையாண்டு கொண்டிருக்கிறார்கள். அதை மாற்றியமைப்பது பற்றியும் யோசனை செய்யப்படவேண்டும்.

சாதாரண, ஏழை எளியவர்களுடைய எண்ணங்கள்—தேவைகள்—[illegible] உடனுக்குடன் அறியப்பட்டு நாம் செய்கின்ற அளவில் நிர்வாக அமைப்பை மாற்றியமைத்தாக வேண்டும்.

மேலும், ஜனநாயக சோஷலிசக் கொள்கை வேரூன்றி, தழைத்து நிற்க ஜனநாயக சோஷலிசக் கொள்கையில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவர்களாக

அதிகாரிகள் இருக்கிறார்களா, இல்லாவிட்டால் அவர்கள் இதில் [illegible] வர்களாக இருப்பதற்கு என்ன செய்யவேண்டும் என்பதையும் இந்த மன்றம் சிந்திக்கவேண்டும் என்றும் கோருகிறேன்.

ஆளுநர் அவர்களது உரையில் [illegible] அமைப்பது பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. அமைக்கப்படுகிற [illegible] அவ்வளவும் இதுவரை பணத்தையே மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டு வந்திருக் கிறது. பணத்தை மையமாகக்கொண்டு அமைக்கப்படுகிற [illegible] களிலுல் வேலையில்லாத் [illegible] கொண்டே இருக்கிறது. ஆகவே மாநில அளவில் ஏற்படுத்தப்படுகிற [illegible] களிலுள் மனித பணத்தை மையமாகக்கொண்ட [illegible] களில் [illegible] அதிகச் சக்தியை [illegible] பயன்படுத்திக்கொள்கிற [illegible] களில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்று [illegible] பெருந் தொழிற்சாலைகளிலுல் [illegible] பிரச்சினை தீர்ந்துவிடுமென்ற பிரமை கொள்வதில் பொருள் இல்லை. காரணம், இயந்திர விஞ்ஞானம் வளர்ந்திருக்கும் நிலையில் பெரும் தொழில்களில் அதிகத் தொழி லாளர்களை ஈடுபடுத்த முடியாது. மனித சக்தி [illegible] பயன்படுத்தப்பட வேண்டுமென்றால் சில தொழில்கள் [illegible] வேண்டும். பரம்பரை [illegible] கைத்தறி நெசவுத் தொழிலை [illegible] பரம்பரை பரம்பரையாகக் கைத்தொழில் [illegible] களாக் கான குடும்பங்கள் இன்னமும் இருக்கின்றன. அந்தத் தொழில் நிரந்தரமாக [illegible] வருமானம் [illegible] பெறுவதற்கும், அதன்மேலில் அவர்களுக்கு [illegible] இருக்கும் தங்கள் தங்கள் குடும்பத்தை [illegible] [illegible] மாற்றங்கள் செய்யப்பட [illegible] வேண்டும். இதுபற்றியும் [illegible] கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்து, [illegible] [illegible] வரியம் ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறோம். ஆனால் [illegible] அதிக அளவில் பணம் செலுத்தும்படியான நிலைமையை ஏற்படுத்திவிட்டது. [illegible] காரணமாக [illegible] அணையில் இருந்து [illegible] எடுக்கப்படுகிறது. அதை எடுத்துக்கொள் வதற்கு இதுவரை கொடுத்து வந்த கட்டணம் [illegible] [illegible] ரூபாய் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] கட்டணத்தை [illegible] [illegible] முடிய வில்லை. ஒரு ரூபாய் 25 பைசாவாக இருந்த கட்டணத்தை 3 ரூபாயாகவும், ஒரு ரூபாய் 50 பைசாவாக இருந்த கட்டணத்தை 6 ரூபாயாகவும் [illegible] யிருக்கிறார்கள். 17 பைசாவாக இருந்ததை 50 பைசாவாக [illegible] 8 அணை [illegible] [illegible] பட்சம் 5 ரூபாய் கட்ட வேண்டுமென்ற முறையில் கட்டணங்களை நிர்ணயித்திருக் கிறார்கள். அங்கு இருக்கிறவர்கள் எல்லாம் சேர்ந்து 26 [illegible] [illegible] செய்து இதுபற்றி [illegible] [illegible] பார்த்திருக்கிறார்கள். நாளைக் [illegible] கொடுத்து அமைச்சர் அவர்களிடத்திலே இதுபற்றிக் [illegible] கொடுக்க வேண்டிய இருக்கிறேன் [illegible] [illegible] இல்லாமல் [illegible] வேண்டிய

[illegible] [illegible] நிலைமையிலே நிலைமை இருக்க வேண்டும். இன்றைய [illegible] அதிகமாகக் இல்லையாகக் கிடைக்கக்கூடிய நிலைமை இல்லாவிட்டாலும் [illegible] கட்டணம் இல்லாமல் கிடைக்கக்கூடிய நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வைத்திய வசதி. வைத்திய வசதி எல்லாக் கிராமங்களுக் கும் ஏற்பட்டுவிடவில்லை. வைத்திய வசதிகள் ஒவ்வொரு நாளும் அதிகமான தேவைகளை உண்டாக்கிக் கொண்டிருக்கின்ற நிலைமையைப் பார்க்கிறோம். நோய் நொடிகளை மாந்திரிகர்கள் பாடப்போட்டு போக்குகின்ற காலம் மலையேறிப்போய்விட்டது. ஊசிபோட்டுத்தான் நோய்நொடிகளைப் போக்க முடியும் என்ற நம்பிக்கை மக்களிடம் நிலைத்துவிட்டது. எனவே இந்த நிலைமைக்கேற்ற வைத்தியசாலைகள், மருத்துவமனைகள் ஒழுங்காக இருக்க வேண்டும். நான் சில நாட்களுக்கு முன்னால் பெட்டீர் மருத்துவமனையைப் போய்ப் பார்த்தேன். பெட்டீர் மருத்துவமனையிலே படுக்கையில்லை, விரிப்புகள் இல்லை, தலையணைகள் இல்லை. அவர்களிடம் ஏன் என்று கேட்டால் எவ்வளவு தான் கேட்டாலும் கிடைக்காமல் இருக்கிறது என்று சொல்கிறார்கள். நாங்கள் என்ன செய்யமுடியும் என்று அங்கே பொறுப்பில் உள்ளவர்கள் கூறுகிறார்கள். படுக்கைகள் இருந்து நோயாளிகள் போர்த்திக் கொள்வதற்கு, தலைக்கு வைத்துக்கொள்வதற்கு வசதிகள் இல்லாமல் இருக்கிறது என்றால் நாம் இதைப் பற்றிக் கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். மருத்துவமனை என்றால் அதற்குத் தேவையான எல்லா அம்சங்களும் இருக்கவேண்டுமென்ற நிலைமையை ஏற்படுத்தவேண்டும்.

அடுத்து பாதைகள்வசதி. பாதை வசதிகள் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக இல்லை. ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு மாதிரியாக இருக்கிறது. ஒரு கிராமத்தினை எடுத்துக்கொண்டால் பாதைகள் ஏராளமாக இருக்கின்றன. என்னுடைய தொகுதியிலே ஒரு பாதைகள் இல்லாத ஊர்களும் இருக்கின்றன. அந்த ஊருக்குப் மலை இருக்கிறது. அந்த மலைமீது ஒரு கிராமம் இருக்கிறது. அங்கே பஞ்சாயத்தாகக்கூட இருக்கிறது. அதன் பெயர் பாலமலை என்பது. அது ஒரு பஞ்சாயத்தாகக்கூட இருக்கிறது. அங்கே நான் சென்று அதற்கான தேவைகளையெல்லாம் அறிந்து விபரங்களை எழுதி அரசாங்கத்திற்கு அனுப்பினேன். அரசாங்கம் ஒவ்வொரு இலாகாவிற்கும் அதை அனுப்பி [illegible] [illegible] எடுப்பதாகக் கலெக்டர் அவர்கள் கூறியிருக்கி றார்கள். ஆனால் இன்னும் பாதை போடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படாமல் இருக்கின்றன. இந்த நாகரிகமான நிலையிலே பாதைகள் கூட இல்லாமல் இருக்கின்ற உண்மையை நாம் மறந்துவிடக் கூடாது. பாதைகள் அதிகமாக இருக்கின்ற கிராமங்களும், பாதைகள் குறைவாக இருக்கின்ற கிராமங்களும் இருக்கின்றன . . . .

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிராமங்களுக்குப் பாதை போடுவதைப்பற்றிச் சொல்லும்பொழுது அரசாங்கத் தினுடைய குறையாக அதை எடுத்துச்சொல்லி விரிவாக அதைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இவையெல்லாம் அங்கங்கே உள்ள ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள் தீர்மானித்துச் செய்ய வேண்டியவை யல்லவா? அரசாங்கம் அதை நிறைவேற்றவில்லை என்று எப்படிச் சொல் கிறார்கள் என்பதை விளக்கவேண்டும்.

[1971 மார்ச் 31

திரு. எம். சுரேந்திரன்: மாண்புமிகு அமைச்சர் [illegible] அவர்கள் கூறிய கருத்துக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லாவிதமான வசதிகளும், குடிநீர், மருத்துவ வசதி, பாதை வசதி [illegible] ஏற்பாடுகள் செய்து வந்திருக்கிறார்கள் என்பது [illegible] அரசாங்கத்தைச் சாரும். ஆனால் இவையெல்லாம் [illegible]—அது மட்டுமல்ல—அதிலே பாதை வசதிகள் [illegible] பஞ்சாயத்தால் செய்வதுமாது, பல [illegible] தோழர்கள் [illegible] செய்யவேண்டும். எனவே பஞ்சாயத்தோ, பஞ்சாயத்து யூனியனோ [illegible] என்பதைத்தான் கூறிக்கொண்டிருந்தேன்.

மின்சார வசதிகள், பாதை வசதிகள், மருத்துவ வசதிகள் போன்றவை ஒரு இடத்திலே ஏராளமாக இருக்கின்றன. ஒரு இடத்திலே இல்லாமலும் இருந்து கொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் கணக்கிலெடுத்துக்கொண்டு முறையாக எல்லா இடங்களுக்கும் [illegible] ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்றுதான் கூறினேன். இவையெல்லாம் ஆராய்ந்து வருங் காலத்தில் [illegible] இருக்கிறது.

நான் [illegible] என்று [illegible]. [illegible] அமைய வேண்டுமென்று சொன்னால் [illegible] திட்டங்களை நாம் செய்யவேண்டும். [illegible] எப்படி வைத்துக் கொள்ளலாம் என்பது. [illegible] கட்டுப்படுத்திவிடுவது, வருமானத்தைக் கட்டுப்படுத்துவது, குடும்பத்தில் [illegible] கட்டுப்படுத் துவது. நாம் [illegible] கொண்டுவந்து [illegible] 15 ஏக்கர் என்று சட்டத்தைத் திருத்தியிருக்கிறோம். ஆனால் [illegible] வருகின்ற மிச்ச நிலத்தை எடுத்து நிலமில்லாதவர்களுக்குக் கொடுக்கின்ற காரியம் இன்னும் நடைபெறவில்லை. [illegible] கோயில்கள் நிலங்களுக்கு [illegible] இன்றைய நாம் இன்னும் [illegible] இருக்கிறது. அவற்றையும் நாம் செய்யவேண்டும்.

இதைத்தவிர நான் [illegible] வேண்டுமென்று எண்ணிக்கொண்டு இருந்தாலும் [illegible] காரியங்களைச் செய்ய வில்லை.

குடும்பக் கட்டுப்பாடு நடந்து கொண்டிருக்கிறது. [illegible] கொண்டிருந் தாலும் இன்னும் [illegible] நடைபெறவில்லை. [illegible] நடந்து கொண்டிருக்கிறது [illegible]. இன்னும் [illegible] அதை நடத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. [illegible] செல்கின்ற நாம் [illegible] காரியங்களைச் செய்தால்தான் [illegible] போகின்ற [illegible].

அது மட்டுமல்ல, விலைவாசியைப் பற்றிச் சொன்னார்கள். [illegible] கட்டுப்பாடு போதாது. விநியோகமும் [illegible] இருக்கவேண்டும். [illegible] பொருட்களும் விநியோகமும் கட்டுப்படுத்தப்பட்டு [illegible] விலை வாசி குறைவதற்கு வழியேற்படும். இதற்கும் நாம் [illegible] நினைவுறுத்துக்

1971 மார்ச் 31]

கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் ஒரு இடத்திலே கட்டுப்பாடு செய்து இன்னொரு இடத்திலே கட்டுப்பாடு செய்யாவிட்டால் நாம் எதிர்பார்க்கின்ற பலன் கிடைக்காமல் போய்விடும்.

பிரச்சினைகளை வருங்காலத்தில் தீர்ப்பதற்கான உணர்வுகள் ஆளுநர் உரையில் தென்படுகிறது. அப்படித் தென்படுகின்ற காரணத்தினாலே நான் அதை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஆ. பரந்தாமன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற வகையிலே எனக்குப் பேசச் சந்தர்ப்பம் அளித்தமைக்காக என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக அரசு வரலாற்றிலே புதுமையிக்க ஏட்டினை உருவாக்க எங்களுடைய இதயத்திலே குடிகொண்டிருக்கின்ற மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து என்னுடைய கன்னிப் பேச்சைத் துவக்குகிறேன். எனக்கு முன்னாலே பேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் எல்லோரும் ஆளுநர் அவர்களு டைய உரைக்கும், மாண்புமிகு கலைஞர் அவர்கள் இந்த மன்றத்திலே சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கைக்கும் நல்லபல ஆலோசனைகளைத் தெரிவிப்பார்கள் என்று எண்ணிக்கொண்டிருந்தேன். ஆனால் தேர்தல் முடிந்ததற்குப் பிறகு அந்தத் தேர்தலிலே அவர்கள் அடைந்த தோல்வியை மறைக்கவில்லை, மறுக்கவில்லை என்றவகையிலேதான் அவர்களுடைய பேச்சுக்கள் அமைந்திருக்கின்றனவே தவிர, திட்டங்களுக்குத் தேவையான ஆலோசனைகளைச் சொல்லவில்லை. மாண்புமிகு அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே முதல் நாளென்று குறிப்பிட்டார்கள், மயிலாப்பூரிலே குடுமியை வெட்டுகின்ற முயற்சி யிலே தோழர்கள் ஈடுபடுவதாகச் சொன்னார்கள். . .

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: அம்மையார் அவர்கள் தோழர்கள் குடுமிகளை வெட்டுவதாகச் சொல்லவில்லை. அம்மையார் அவர்கள் பேசும் பொழுது திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் யாருடைய குடுமியையும் வெட்டுவதாகச் சொல்லவில்லை. குடுமிகளை வெட்டி அலங்கோலப்படுத்தினார்கள் என்று சொன்னார்கள். அதைச் செய்திருப்பது, குண்டர்கள்தான் செய்தி ருக்க முடியும். அவர்கள் எவரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்பதைக் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. ஆ. பரந்தாமன்: மீண்டும் மறுநாள் பேசும்பொழுது அதையே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அம்மையார் அவர்கள், குடுமி வைத்திருப் பவர்கள் ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சார்ந்தவர்கள் என்ற நோக்கத்தோடு, அந்த இனம் நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தது என்று அந்த நோக்கத்தோடுதான் சொல்கிறார்கள் என்று நினைக்கும்பொழுது உண்மையி லேயே வேதனைப்படுகிறேன். குடுமி வைத்திருப்பவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திலேயும் இருக்கிறார்கள் என்று நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். ஆகவே, முன்னேற்றக் கழகத்திலே இருக்கும் குடுமி வைத்திருப் பவர்களை அங்கேயிருக்கின்ற காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் தாக்கி யிருப்பதாகவே நான் நினைக்கிறேன்.

[திரு. ஆ. பாந்தாமன்] [1971 மார்ச் 31

திருமதி த. ந. அனந்தநாயகி: பாயிண்ட் ஆப் பர்சனல் எக்ஸ்பிளனேஷன் சார். நான் எந்தக் கட்சியைப்பற்றியும் குறைகூறவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் குடி வைத்திருந்தாலும் இன்றைக்கு ஆபத்து இருக்கிறது. குடி வைத்திருப்பவர்களைக் கண்டாலே விரட்டுவது வழக்கமாகி விட்டது என்ற கருத்தில் சொன்னேனே தவிர குறிப்பிட்ட கட்சி என்று குறிப்பிட்டு நோக்கத்தோடு சொல்லவில்லை என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்களுக்கு விளக்கிச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

திரு. ஆ. பாந்தாமன்: அம்மையார் அவர்கள் அந்த இடத்தின்மீது வைத்திருக்கும் பற்றை நான் மதித்தாலும், சாதி மத சமுதாயத்தைப்பற்றிப் பேசும் நாம் இத்தகைய உணர்ச்சியிலே இந்த மன்றத்தை ஆளாக்குவது முறை தானா என்பதை எண்ணிப்பார்க்கிறேன்.

அடுத்தபடியாக மற்றொரு மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற பேசுகின்ற நேரத்திலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அமைக்கப்பட்ட நிலவள வங்கிகளில் காங்கிரஸ்காரர்கள் அந்தந்த இடத்தைப்பெறவில்லை என்று சுட்டிக் காட்டினார். அந்த நண்பருக்கு நான் மிகப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன், திருத்தணி வட்டத்தைச் சேர்ந்தவரையில், பள்ளிப்பட்டு என்ற ஊரில் நிலவள வங்கியின் இயக்குநராக தமிழக அரசால் நியமிக்கப் பட்ட சுப்பைய செட்டியார் இன்றைக்கு காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் என்பதையும், தமிழகக் கழக வேட்பாளர் திரு. சிவகாமராஜன் அவர்களை இந்தத் தேர்தலிலே எதிர்த்தவர்கள் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடம்பத்தூர் நிலவள வங்கிக்கு திரு. சுப்பராய முதலியார் என்பவர் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். அவரும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் என்பதையும் அந்த நண்பருக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இதையெல்லாம் பார்க்கும்போது திராவிட முன்னேற்றக் கழக அரசு காங்கிரஸ் கட்சியை மதித்து நடந்து கொண்டிருக்கிறது என்பதை அந்த நண்பர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே எனக்கு முன் பேசிய நண்பர்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் வேலைவாய்ப்பு மிகப் பெருகியதாக இல்லை என்று சுட்டிக் காட்டினார்கள். 6,500 ஆசிரியர்களுக்கும், 2,400 பொறியாளர்களுக்கும் இந்த அரசு வேலைவாய்ப்பு தந்திருக்கிறது என்றால் இந்த அரசு நியாயமாக வேலை வாய்ப்பை உருவாக்கித் தருகின்ற அரசாக அமைந்திருக்கிறது என்பதை அந்தத் தோழர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றிப் பேசுகின்ற நாம் இதற்கான காரண காரியங்களை ஆராய வேண்டிய கட்டத்திலே நிற்கிறோம். எந்தத்திசையிலும் மக்கள் தொகை எந்த அளவிற்கு வளர்ந்துகொண்டே போய்க்கொண்டிருக்கிறது, எந்த அளவிற்குக் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் அமைந்துள்ளது என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் அவசியத்தை முன்னேற்றக் கழக அரசு வலியுறுத்தி பேசுகின்ற இந்த நேரத்திலே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் குடும்பக் கட்டுப்பாடு இந்த நாட்டிற்கு உகந்தது அல்ல என்று சொல் பேசுவதையும் நாம் மனத்திலே கொள்ள வேண்டும்.

1971 மார்ச் 31]

திருமதி த. ந. அனந்தநாயகி: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். காங்கிரஸ் கட்சி குடும்பக்கட்டுப்பாடு உகந்தது அல்ல என்ற தவறான கருத்தைச் சொன்னதாகச் சொல்கிறார்கள். ஆனால், அதே சமயத்திலே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைச்சருடைய பத்திரிக்கைகளிலே அதிகமான குழந்தைகள் இருந்தால் பரிசு கொடுத்துக்கொண்டிருந்தார்கள். அது சரியா இது சரியா என்பதை விளக்க வேண்டும்.

திரு. ஆ. பாந்தாமன்: காங்கிரஸ் கட்சி ஆட்சி நடத்திய நேரத்திலேகூட சில காங்கிரஸ்காரர்கள் அத்தகைய கொள்கைக்கு மாறுபட்டவர்களாகத் திகழ்ந்தார்கள் என்பதை அம்மையார் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய அரசு இந்த ஆண்டில் 62.6 இலட்சம் டன் என்ற அளவிற்கு உணவு உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறது என்பதைப் பார்க்கும் பொழுது இத்தகைய வார்த்தைகளை மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையிலே கண்டபொழுது மிக்க மகிழ்ச்சியடைகிறோம். இந்த நாடு தன்னிறைவு பெற்றுவிட்டது, மாண்புமிகு கலைஞர் அவர்களின் ஆட்சியில் தமிழக மக்கள் நல்வாழ்வு அடைகிறார்கள் என்பதை எடுத்துக்காட்டுகிறது என்பதைப் பார்க்கும்பொழுது தமிழக மக்கள் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகிறார்கள்.

அடுத்தபடியாக, குறுகிய காலக் கடன் வசதி அண்மையிலே 31.41 கோடி ரூபாயாக இருந்ததை, இன்றையதினம் 55 கோடியாகப் பார்க்கிறோம் என்றால் தமிழக அரசு குறுகிய காலக் கடன் வசதிகளை சிறு விவசாயிகளுக்கு ஏற்படுத் தித் தருவதிலே நாட்டம் உள்ள அரசாகத் திகழ்கிறது என்று மக்களெல்லாம் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல 1966-67-இல் நீண்ட காலக் கடன் வசதியாக 3 கோடி ரூபாய் செலவிட்டார்கள் என்றால் 1970-71-இல் அது 19 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதைப்பார்க்கும்பொழுது பசுமைப் புரட்சி நல்முறையிலே தமிழகத்தில் செயல்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் மக்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இன்றையதினம் 117 பிரதம நிலவள வங்கிகளைத் தமிழகத்தில் உருவாக்கி பசுமைப்புரட்சி வெற்றி கரமாகச் செயல்படுவதற்கு இந்த அரசை என்றென்றும் மக்கள் மதிக்கத் தயாராக இருக்கிறார்கள். பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை யும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1966-67-இல் 25,000 கிராமங்கள் மின்சார வசதி பெற்றிருக்கிறது என்றால் 1970-ஆம் ஆண்டு 40,560 கிராமங்கள் அத்தகைய வசதிகளைப் பெறுகிறது என்று பார்க்கும்பொழுது இந்த அரசு மின்சாரத் துறையிலே எந்த அளவிற்கு வெற்றி நடைபோட்டுக்கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் பார்க்கிறோம். 1966-67-இல் 2.57 லட்சம் விசையேற்றங்களுக்கு மின்சார இணைப்பு தந்திருக் கிறார்கள் என்று சொன்னால், 1970-இல் 5.09 லட்சம் விசையேற்றங்களுக்கு மின்சார இணைப்பு தரப்போகிறார்கள் என்பதைப் பார்க்கும்பொழுது உண்மை யாகவே நல்லதொரு முன்னேற்றத்தைத் தமிழகத்தில் பார்த்துக்கொண்டிருக் கொண்டிருக்கிறோம்.

ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகம் இந்த நான்காண்டுக் காலத்திலே நல்ல பல திட்டங்களைத் தீட்டி மக்களின் நல்வாழ்விற்காக உழைக்கும்

ஆசாகத் திகழ்கிறது என்பதைப் பார்க்கும்பொழுது இந்த வட்டாரத்து மக்கள், தமிழகத்திலேயுள்ள பிற்போக்கான மக்கள் நன்றி உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் எல்லாக் குறைகளையும் இந்த அரசு நிச்சயமாகப் போக்கும் என்பதிலே ஆழ்ந்த நம்பிக்கையுடையவன் என்றாலுங்கூட நான் பேசுகின்ற நேரத்தில் என்னுடைய தொகுதி மக்களின் ஒரு சில குறைகளைப்பற்றிச் சொல்லாவிட்டால் நான் பேசுகின்றபொழுது அவர்களைப் பற்றி நினைக்கவில்லை என்று அவர்கள் தவறாக நினைக்கக்கூடும் என்ற அந்த எண்ணத்தோடு ஒன்றிரண்டு மட்டும் சொல்ல விரும்புகிறேன் என்று கருதுகிறேன்.

மணலூர் கல்லணைத் திட்டத்தைப்பற்றி, பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தவர்கள், முன்னொன்றிலேயே அங்கு வந்தபொழுது அதை நிச்சயமாகப் பரிசீலிக்கலாம் என்றெல்லாம் உறுதியளித்திருக்கிறார்கள். அந்த வட்டாரத்து மக்கள் அதை இந்த அரசு நிறைவேற்றும் என்ற நம்பிக்கையோடு, இந்த அரசாங்கம் அதை நிறைவேற்றும் என்ற நம்பிக்கையோடுதான் அவர்கள் அங்கேயிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்கள் அந்தக் கல்லணைத் திட்டம் நல்லமுறையில் வெற்றிபெற ஆவனவற்றைச் செய்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

ஆகவே, இப்பொழுது நான் இந்த பேரவை ஆளுநர் அவர்களின் உரையிலே பார்க்கும்பொழுது தமிழகத்திற்கான திட்டம், மக்களுக்கான திட்டம் இடம் பெற்றிருக்கிறது என்பதைப் பார்த்து மகிழ்ச்சியோடு தமிழக மக்கள் என்றென்றும் அரசுக்கு ஆதரவாக இருப்பார்கள் என்று எடுத்துச்சொல்லி அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன்

*THIRU K. S. KOTHANDARAMIAH : Hon. Deputy Speaker, Sir, I wish to thank you for giving me an opportunity to say a few words on the motion of thanks to the address given by His Excellency the Governor to the joint session of the Legislature. At the outset I wish to thank the Hon. Chief Minister for, while constituting his new Cabinet he has kept in mind the name of Dharmapuri and he has given representation to that district by including Mr. Rajaram as a Minister and given him a new portfolio.

Following the precedence established by previous hon'ble Members who have spoken, I wish to say a few words about elections and what took place in my constituency. During the last four years I had the privilege and honour of being a Member of this Assembly belonging to the Swatantra party; but on account of faulty and undemocratic considerations, I was forced to contest now as an independent candidate and I can say that the electorate of my place were kind in supporting me and I have been able to come back to this Assembly and I thank the electorate for their kindness and affection shown to me.

With regard to the work of this Government during the last four years I wish to state that the Ministry has done several good things for the improvement of people. The measures they have taken to are increase in food production, supply of fertilisers, loans to farmers, energisation of pumpsets in rural areas, rural water-supply schemes, compensatory allowance to employees and lastly increase in emoluments to employees, free education upto PUC—road developments, minor irrigation works and lastly the Salem Steel Plant—all these go to the credit of this Government. They are their noble achievements.

In addition to all these, they have now introduced dry farming in Koilpatti taluk. This is a centrally sponsored scheme. In this connection I wish to say that I brought to the notice of the Hon. Minister for Irrigation some time back about this scheme and requested him that this dry farming scheme should be brought to Dharmapuri district and tried in Denkanikota and in Hosur taluk because of their dry nature. I am glad the spirit of what I had said had been taken note of and it has now been introduced in Koilpatti. That is also a backward taluk and when in the next time it is extended to other areas I hope the Hon. Minister incharge will remember what I had said and introduce it in Dharmapuri district, i.e., in Hosur and Denkanikota taluks for which excellent facilities are available there.

Secondly, there is the rural development scheme. Four crores of rupees have been sanctioned to this scheme and two districts of Ramanathapuram and Dharmapuri have been taken. I request the Hon. Chief Minister and concerned other Ministers to implement the schemes in Dharmapuri district quickly and properly.

I now come to the matter of constitution of Backward Classes Commission. It came into being in the month of November last and when it came to Krishnagiri I gave evidence before it and offered suggestions, viz., the number of backward communities to be included in backward class list and the scheduled castes to be included. I had a long discussion with its Chairman and he felt glad and thanked me also. I learn that the Commission has submitted its report and in this connection I request the Hon. Chief Minister to place the copies of the report on the table of the House and provide an opportunity for us to discuss the same in the Assembly and offer our suggestions.

Th eGovernment have stated that they are going to set up a State Planning Commission consisting of economic experts and others. But I find M.L.As., have been omitted. Their Co-operation is essential for the success of any scheme. I hope that the Commission will have M.L.As., also.

Recently Government of India have sponsored a rural unemployment scheme. It is to be implemented in each district. In each district 1,000 persons will be given employment at the

rate of 100 for each block in a district. But the details are not clear whether M.L.As., were will b etaken into consideration. I find that the District Collectors have been asked to send proposals in that regard. It is better if the views of M.L.As., and the view of Panchayat Union Commissioners also are sought so that we can have a different scheme and workable schemes.

I am glad that Madurai Municipality is going to be made into a Corporation. It is an ancient and sacred and immortal city and it has withstood many vicissitudes and vandalism to time and it has kept its noble tradition well. In his address the Hon. Chief Minister has mentioned the names of persons who praised Madurai in the past. He has omitted to mention the names of some great men. In this connection I wish to point out the great services rendered by Viswanath Naik and Thirumalai Naick or Telugu Nayakas and how the temple was rebuilt by them. Their names ought to have found a place along with others. If their names had been mentioned, it would have satisfied the Telugu speaking population also in addition.

I now say about houses for Harijans. Last year the Hon. Chief Minister mentioned that Government are thinking of a schmee to provide houses for these people. Harijans are living in thatched houses. Those houses get burnt. If a house is burnt Government give Rs. 80 for building a hut, etc. Is it possible to do so with that sum? Is it possible to get clothing, etc. I request the Hon. Minister to think about this and provide them with at least Rs. 200 to 250. There are lakhs and of Harijans living in thatched houses, let us provide them with tiled roofs at least. I offered this suggestion in the DDC of Dharmapuri and the Collector has recommended it to Government. Let Government provide Harijans with tiled roofs at least.

We can grant Rs. 400 or 500 to replace the thatched roofs by tiled roofs.

Secondly, with regard to rural indebtedness, nothings is said in the Governor's Address. If we examine the condition of the rural poverty and rural indebtedness and the rural people who are having two or three acres, you will find that they have large loans they are not able to repay them back but the officers are so strict that they force them to pay back the loans which they are not in a position to pay. Therefore, we must consider how we can help these poor people having two or three acres and reduce the burden of their loans so that they can be better off. I request the Government to prepare a proper scheme for that purpose.

Again, nothing is said in the Governor's Address about the problem of linguistic minorities. In this State about 1/5th of the population come under the linguistic minorities and the Telugu speaking people from 75 per cent of the linguistic minorities. There are 40 to 50 lakhs of Telugu-speaking people. They have rich culture, language and tradition. No doubt the Government have provided certain facilities but those facilities are inadequate to protect them. The Government have appointed a Special Officer to go into the question of the official language. Similarly, I feel that in order to protect the linguistic minorities, the Government should also appoint a Special Officer to go into their problem. Of course the Central Government has appointed a Linguistic Minority Commissioner but that Commissioner has not been given powers to enforce his recommendations. Consequently, the State Governments also do not attach importacce to them. So also the Zonal Council was appointed to go into the question but unfortunately that Committee does not meet frequently and at proper times with the result that that Committee has not been useful to the linguistic minorities. So, I request the Hon. Chief Minister to take keen interest in the matter as he is taking in the development of the chief and official language that is, Tamil and kindly see that prompt steps are taken to protect and develop the languages of the linguistic minorities. With these words, I conclude my speech.

திரு. செ. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஏழை எளிய மக்களிடம், பாட்டாளி மக்களிடம், குடிசைவாழ் மக்களிடம், ஆதி திராவிட பெருங்குடி மக்களிடம், அரசு ஊழியர்களிடம் மிகுந்த அக்கறை கொண்டு அவர்களின்பால் அரசு அக்கறை காட்டுகிற முறையில் ஆளுநர் அவர்களின் உரை அமைந்திருக்கிறது. ஆகவே அதை ஆதரித்து நான் பெரும் மகிழ்ச்சியை அடைகிறேன். அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, நம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தந்திருக்கிற நிதிநிலை அறிக்கையில் பிற்பட்ட மக்கள், ஆதி திராவிடர், பின்தங்கிய வகுப்பினருக்கான நல்வாழ்வு திட்டங்கள், ஆதி திராவிட மக்களுக்கான நல்வாழ்வு திட்டங்கள், சென்னை மாநகருக்கு நல்வாழ்வு திட்டங்கள் ஆகிய பல்வேறு திட்டங்கள் காணப்படுகின்றன. அரசு ஊழியர்களுக்கு அதிகமான ஊதிய உயர்வு அளித்திருப்பதன் காரணமாகத் தவிர்க்க முடியாத செலவு ஏற்பட்டிருப்பதில் மத்திய அரசு உதவியை அளிக்கவேண்டும் என்றும், விலைவாசிகள் உயர்வின் காரணமாக மத்திய அரசு நம் அரசுக்கு மானியம் அளிக்கவேண்டும் என்றும், மாநில அரசுக்குக் கடன் சுமை ஏற்படும்போது மத்திய அரசு மாநில அரசுக்கு உதவியாக இருக்கவேண்டும் என்றும், அந்த நிதியை மத்திய அரசு மாநில அரசுக்கு நன்கொடையாகப் பகிர்ந்தளிக்கவேண்டும் என்றும், மாநில அரசின் கடன் சுமையை மத்திய அரசு பகிர்ந்துகொள்ளவேண்டும் என்றும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறியுள்ள அறைகூவலைத் தொடர்ந்து இந்தச் சட்டமன்றத்தின் உறுப்பினன் என்ற முறையில் நானும் அவ்வேண்டுகோளை மத்திய அரசுக்கு விடுக்கிறேன்.

[திரு. செ. பெருமாள்] [1971 மார்ச் 31

அடுத்தபடியாக, என் தொகுதியில் நடந்த சில சம்பவங்களைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். நான் என் தொகுதியில் வேட்பாளராக நின்றபோது நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சில நிலச்சுவான்தார்களும், சில பெரும் பணக்காரர்களும் சேர்ந்து எனக்குப் பல தொல்லைகளை அளித்திருக்கிறார்கள். என் தொகுதியில் நாட்டார்மங்கலம் மேல்கிராமத்தில் தேர்தல் சமயத்தில் என்னை நோக்கிக் கற்களை வீசியடித்தார்கள். அப்போது நாங்கள் போலீஸில் தெரிவித்து சர்க்கிள் இன்ஸ்பெக்டர் வந்து அங்கு அமைதியை நிலைநாட்டினார்கள்.

அங்கு மாபெரும் தலைவர் என்று சொல்கிற ஒரு அரிஜனத் தலைவர் இளைய பெருமாள் அவர்கள் தொகுதியில் நான் வேட்பாளராக இருப்பதா என்று கோபம் கொண்டு சில நிலச்சுவான்தார்களையும், சில பணக்காரர்களையும் சேர்த்துக்கொண்டு அரிஜனங்களையும் கையைப் பிடித்துக்கொண்டு எனக்குப் பல தொல்லைகளைக் கொடுத்திருக்கிறார்கள். இத்தொகுதியிலிருந்து எப்படியும் பெருமாள் வரக்கூடாது என்று சொல்லி, எப்படியாவது என்னை ஒழித்துக் கட்டி மறுதேர்தல் நடத்துவது என்று சொல்லி, பல பக்கங்களிலும் அடியாட்களை வைத்து எனக்குத் தொல்லைகள் கொடுத்து வந்தார்கள். அவர்கள் மேடைகளில் பிரசாரம் செய்யும்போது இந்தத் தேர்தல் முடியட்டும், 11-ம் தேதி இந்தத் தொகுதியில் ஒரு பரபரப்பை உண்டுபண்ணுகிறேன் என்று அடிக்கடி கூறி வந்தார்கள். நான் இதை ஏன் சொல்கிறேன் என்றால், அப்படி ஒரு பரபரப்பை 1967-ல் என் தொகுதியில் ஏற்படுத்தியிருக்கிறார்கள் அவர்கள். காட்டுமன்னார்கோவிலில் தேர்தல் 1967-ல் முடிந்தவுடன் ஒரு புரட்சியை ஏற்படுத்தி அரிஜனங்கள், மற்ற ஜாதிக்காரர்கள் இடையில் ஒரு பரபரப்பை ஏற்படுத்தி மூவர் இறந்திருக்கிறார். சில பேர்களின் மீது வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள். இதுபோன்ற சம்பவங்களை அவர்கள் அடிக்கடி ஏற்படுத்துவதுண்டு. இப்போதும் என் தொகுதியில் போலீஸார், சர்க்கிள் இன்ஸ்பெக்டர் முன் நின்று பாதுகாப்பு கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் அமைச்சர்களின் முன்னிலையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என் தொகுதி பின்தங்கிய தொகுதி என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். என் தொகுதியில் நடுத்திட்டு என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அதன் ஒரு பகுதியில் கொள்ளிடம் செல்கிறது. தண்ணீர் வரும் போது விசைப்படகு வசதி செய்து கொடுக்கவேண்டும். என் தொகுதியில் மருத்துவமனை இல்லாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே என் தொகுதியில் ஒரு மருத்துவமனை அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில், மேற்புறம் ஜெயங்கொண்டம் தொகுதியில், நீர்ப் பாசனத்திற்காக பெருக்குப் புறமாக ஒரு ஏரி இருக்கிறது. பொறவாங்குடி ஏரி என்று பெயர். அந்த ஏரி போதாக இருப்பதால் மழைக் காலங்களில் அதிலிருந்து தண்ணீர் வழிந்து எனது தொகுதியைச் சார்ந்த 20, 25 கிராமங்களை நாசமாக்கி இருக்கிறது. இது ஒவ்வொரு வருஷமும் ஏற்படுகிறது. மழைக் காலத்தில் பயிர்கள் மிகவும் நாசமாகின்றன. இதனால் பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே பக்கத்திலே ஒரு செங்கால் ஓடை என்று ஒரு ஓடை வீராணம் ஏரிக்குச் செல்கிறது. ஆகவே, அப்படி அந்த ஏரியிலிருந்து வெளியே

1971 மார்ச் 31]

செல்லும் தண்ணீரை வீராணம் ஏரிக்குச் செலுத்தினால் மிகவும் வசதியாக இருக்கும். விவசாயத்திற்கு நல்ல பாசன வசதி கிடைக்கும். எல்லா ஏழை எளிய மக்களும் மிகவும் பயனடைவார்கள். அதோடு மட்டுமல்ல, அந்த செங்கால் ஓடையில் தூர் எடுக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

லால்பேட்டை, வெள்ளியங்கால் என்ற பகுதியில் ஒரு பிரிட்ஜ்-ஸ்லோப் கட்டி விட்டு இருக்கிறார்கள். கிழக்கே இருக்கும் பகுதியில் இதனால் 50 கிராமங்கள் நாசமாகின்றன, மழைக் காலத்தில், அதோடு மழை பெய்தால் தண்ணீர் 10 நாட்களுக்கு வடியாமல் இருக்கிறது. ஆகவே, அந்த வெள்ளியங்கால் பகுதியில் ஒரு பிரிட்ஜ் கட்டி சரியானபடி தண்ணீர் போகும்படி செய்யவேண்டுமென்று கேட்டு, எனக்கு இந்த மாமன்றத்திலே பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

திரு. எஸ். அழகுத் தேவர்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த ஆளுநர் உரையில் எல்லா அம்சமும் நன்கு அமைந்து ஏழைப் பெருங்குடி மக்களுக்கும், தொழிலாளர்களுக்கும் வசதி செய்து தரும் வகையில் இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். இங்கு சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டமும் நல்லமுறையில் அமைந்து இருக்கிறது.

என்னுடைய தொகுதி சாத்தூர் தொகுதி. அது 3 யூனியன்களை கொண்ட தொகுதி. இந்தத் தொகுதியில் இதற்கு முன்னாலே தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர்கள் எல்லாம் பெரிய மனிதர்கள். வசதி படைத்தவர்கள் இருந்து வந்த தொகுதி. நான் இந்தத் தேர்தலில் கிராமப்பகுதிகளைச் சுற்றிப் பார்க்கச் சென்றபோது, அங்கே உள்ள கிராம மக்கள், 5 வருஷத்திற்கு ஒரு முறைதான் இங்கே வருகிறீர்கள். எங்கள் ஓட்டுகளைப் பெற்று வெற்றி பெற்ற பிறகு இங்கே வருவதில்லை என்று குறைபட்டுக் கொண்டார்கள். அந்த ஊரிலே இருக்கிற மக்கள் பல குறைகளை எங்களிடத்தில் எடுத்துச் சொன்னார்கள். நீங்கள் அப்படி இருக்கக்கூடாது என்று சொல்லி, எனக்கு வாக்களித்துள்ளார்கள்.

அந்தப் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி, அரிஜன மக்கள் அதிகமாக வாழும் பகுதி. அதிகமாக கிராமங்கள் கொண்ட பகுதி. பல கிராமங்களில் தண்ணீர் வசதி இல்லை. நம்முடைய தமிழக சர்க்கார் நல்லவிதத்தில் குடி தண்ணீர் இந்த கிராமங்களுக்கு கிடைக்க வழி வகை செய்யும் என்ற நம்பிக்கையில் எனக்கு அந்தக் கிராம மக்கள் ஓட்டளித்து இருக்கிறார்கள். ஆகவே சர்க்கார் இது விஷயத்தில் சீக்கிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாத்தூர் பகுதியில் தீப்பெட்டி செய்யும் தொழிற்சாலைகள் நிறைய இருக்கின்றன. இந்த தீக்குச்சிக்குத் தேவையான மெழுகு போன்ற பொருள்கள் கிடைக்காததால் ரொம்பக் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அதையும் அரசு கவனித்து, அந்த மெழுகு கிடைக்க வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், அந்தத்
பகுதிகளுக்கு ஒன்றும்
இருக்கிறார்கள். துணை

[திரு. என். அழகு தேவர்] [1971 மார்ச் 31

நன்றாக அறிந்தவர்கள். அங்கேயும் குறைகள் இருந்துகொண்டு இருக்கின்றன. அந்தக் குறைகள் எல்லாம் நான் இங்கே எடுத்துச் சொன்னால் நேரம் மிகுதியாக இருக்கும்.

மேலும், அது ஒரு மலைப் பிரதேசம் ... அந்த இராமநாதபுரம் மாவட்டத்திலே போதுமான மழை பெய்யவில்லை. அதனால் விவசாயம் செய்ய முடியாமல் இருக்கிறது. விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ... விவசாயக் கடன் அந்தப் பகுதிக்கு வசூலிக்கக்கூடாது. ஆகவே விவசாயக் கடனை அந்த ஜில்லாவுக்குத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரையிலிருந்து போடிக்கு ... ஒரு ... செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதிக்கு ஒரு ... வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ... இந்த ஊருக்கு இல்லை. அதைக் கொண்டுவர இராமநாதபுரத்திற்கும் விஸ்தரிப்பு செய்தால் நல்லது. இந்தத் திட்டத்தை ... அருப்புக் கோட்டை ஆகிய தாலுகாக்களுக்கும் செய்தால் மிகவும் நல்லதாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் ஜில்லாவைப் பொறுத்தவரையில் விவசாயம் பெருங்குடி மக்கள் விவசாயம் செய்வதற்கு ... விவசாயம் செய்ய முடியவில்லை. ... கொடுக்கப் ... வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் ... விலை ... இல்லை. ... போட்டு விளைச்சல் செய்து இருக்கிறார்கள் ... இல்லை. ஆகவே, இந்தக் ... கொடுக்கப்பட வேண்டும் ... என்பதை கொண்டு நான் ... வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் தொகுதியில் அதிக கண்மாய்கள் ... மேடு தட்டிப்போய் இருக்கின்றன. இரண்டு கண்மாய்கள் ... அருகே, மேடு விழுந்து இருக்கின்றன ... வேண்டுமென்று கேட்டு, இவ்வளவு நேரம் எனக்குப் பேச வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன், வணக்கம்.

*திரு. எம். தேவராசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பேரறிஞர் அண்ணாவின் ஆட்சியில் ... அண்ணா அவர்களுக்கு அஞ்சலி செலுத்தி ... என்னுடைய கன்னிப் பேச்சை ஆரம்பிக்கிறேன்.

நடந்து முடிந்த தேர்தலைப்பற்றி, தேர்தலிலே நடந்த அக்கிரமங்களைப் பற்றி, வன்முறைகளைப் பற்றி இங்கே மாண்புமிகு அங்கத்தினர்களெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். என்னுடைய தொகுதி அதற்கு விதிவிலக்கு அல்ல என்பதைக் குறிக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே தேர்தல் நடந்த நாளிலே, உதகைத் தொகுதியில் தேர்தல் நடந்த நாளில் சில இடங்களில் எனக்கு எஜண்ட் வைக்க முடியாத நிலைமை ஏற்பட்டது. குறிப்பாக பேரூரில் சுதந்திராக்

1971 மார்ச் 31] [திரு. எம். தேவராசன்]

கட்சி வேட்பாளரின் சொந்த ஊரில், அந்த சாவடிகளில் என்னுடைய ஏஜெண்டுகளை இருக்கவிடாமல் விரட்டியடித்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, எனக்காக தேர்தல் பணி செய்ய இடக்காடு என்ற கிராமத்திலிருந்து தலைக்கட்டு ஆசாமிகள் சென்றபொழுது, வேலைத் தடுத்தி, வேனை நிறுத்தி கல்லால் அடித்து பிரிவினை ... பெரிய ... தாக்கியிருக்கிறார்கள். ... அவர்களை ... தொல்லைகள் தந்திருக்கிறார்கள். இவ்வளவு தொல்லைகளையெல்லாம் பொறுத்துக்கொண்டு மக்கள் ... இருந்தார்கள். இவ்வளவையெல்லாம் பொறுத்துக்கொண்டு மக்கள் நாங்கள் இருந்த காரணத்தினால் நான் மகத்தான வெற்றி கண்டேன். அதற்காக அன்றி தெரிவித்தபொழுது என்னுடைய தொகுதியைப் பற்றி சில வார்த்தைகள் கூற முற்படுகிறேன்.

என்னுடைய ... ஊரில் ... கழகம் ... அவர்கள் சொன்னதை ... நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

இந்த ... தொகுதியில் ... அதை ஒட்டிய ... குன்னூர் ... அதைப்பற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன். உதகை போன்ற ... சிறந்த நகரம். அங்கே என்ன குறை என்னவென்றால், எல்லாம் ... தான். உதகைக்கு ... சர்க்கார் ... நல்ல திட்டம் ... அமைச்சராக இருக்கிற மாண்புமிகு ... அவர்களும், இன்றைய பேரவைத் தலைவராக ... அமைச்சராக இருந்தபொழுது அவர்களும் இந்தத் திட்டத்தைப் பற்றி ... பேசியிருக்கிறார்கள். ... நாடுகளில் இருப்பதுபோன்று அங்கே ... உள்ள ... அமைந்து, அங்கே வரும் ... வெளிநாட்டு ... பயணிகளைக் கவர வேண்டும் என்ற திட்டத்தைப்பற்றி பேசியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, அங்கே என்ன இன்னொரு குறை என்னவென்றால், சிறந்த ஹோட்டல் கிடையாது. ... ஹோட்டல் என்று சொல்லக்கூடிய அளவிலே வெளிநாட்டுப் பிரயாணிகளை ... வகையில் ஹோட்டல் கிடையாது. சர்க்கார் ... ஹோம் என்று இருக்கிறது. அது ... போதவில்லை ... திரும்பி ... இருக்கிறது. இன்னும் ... அங்கே இடமே கிடையாது. இந்த நிலையில் தமிழக சர்க்கார் மேலும் அங்கே 2, 3 பயணிகள் விடுதிகளை அமைத்துத் தந்தால் மிகவும் நல்ல நிலையிலே வெளிநாட்டுப் பிரயாணிகளைக் கவர முடியும்.

குறிப்பாக, நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். நாம் எதிர்க்கட்சியில் இருந்த காலத்திலே கோவை ... பொதுக் கூட்டம் ... நடந்தது என்பதை எல்லோரும் அறிவோம். அன்று நாம் சொன்னோம். "குப்பி எரியுது, ... கருகுது, கோவை ... ஊட்டி

திரு. டி. கணபதி : [illegible] அவர்களை. மேதகு ஆளுநர் அவர்கள் [illegible] நிலைமைக்கும், கழக ஆட்சியின் [illegible] பொறுப்பன்மை யான இடங்கள் [illegible] தெளிவாக [illegible]. அவ்வளவு [illegible] வேண்டும். [illegible] இருக்கிறார்கள், [illegible] என்பதை [illegible] கேட் [illegible] கூறினார்கள். [illegible] இருக்கிற . . .

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : [illegible] அவர்கள் [illegible] வேண்டும் என்று [illegible] என்று சொல் [illegible] ஆசைப்படுகிறேன். காங் [illegible] நக்குப் [illegible]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : [illegible] நல்லதல்ல.

திரு. டி. கணபதி : [illegible] அங்களை [illegible] காங்கிரஸ்காரர்கள் [illegible] இல்லை.

[illegible] தாண்டி [illegible] அவர்களின் [illegible] ஒற்றுமை" என்ற பத்திரிகையிலிருந்து [illegible] விரும்புகிறேன் . . .

THIRU R. PONNAPPA NADAR : Has he got the permission of the Hon. Speaker to refer to this? He must have brought it to the notice of the Hon. Speaker and obtained his permission beforehand.

திரு. டி. கணபதி : [illegible] படிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பத்திரிகையைப் [illegible] லேயே பத்திரிகையில் [illegible].

திரு. டி. கணபதி : 'தேர்தலில் [illegible] போட்டு, [illegible] சாதாபுரம், தொகுதிகளிலெல்லாம், [illegible] அவர்களுக்குப் [illegible] ஒற்றுமை' என்ற இதழில் [illegible]. இதே [illegible] சக்தி', 'நாத்திகம்' என்ற பத்திரிகைகளிலும் வந்திருக்கின்றன. [illegible] நாங்கு னேரியைச் சேர்ந்த [illegible] என்ற இடத்தில் 100 [illegible] ஓட்டுப் போட

இருந்தார்கள். ஆனால் அவர்களை நான் அணுக முடியாத வகையில், கழகத் தோழர்கள் அணுக முடியாத வகையில் தடுத்து வந்தார்கள். அதையும் மீறி நான், நமக்கு பழைய தொடர்பு இருக்கிறது என்கிற காரணத்தால் அங்கே சென்றபோது, மண்ணைவாரிப் போட்டு, கல்லை எறிந்து, தாக்கி, என் முழங் காலில் காயம் ஏற்பட்டது.

இரண்டாவதாக, இளையநாயனூர்குளம் என்ற இடத்தில் எனக்கு ஓட்டு போட வந்த ஒருவர் குதிகாலில் வெட்டப்பட்டு, ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டார். ஒருவர் காலை ஒடித்தார்கள். கலந்தபளை என்ற இடத்தில் எதிர்ப்பைச் சமாளித்து ஓட்டர்களை திரட்டி வந்த அரிஜன் ஒருவர் புஜத்தைத் திருப்பி வைத்துவிட்டார்கள். சாதாபுரம் தொகுதியில், கழகத்தின் ஜீப்பை தாக்கி, ட்ரைவரை அடித்து, மண்டையைப் பிளந்து, அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். மாண்புமிகு சிவசாமி, பாராளுமன்ற உறுப்பினர் அவர் களுடைய ஏஜெண்ட் ஜேம்ஸ் என்பவரை மாரியோடு சித்திரவதை செய்து, அவரிடம் இருந்த பணத்தையும் எடுத்துக் கொண்டார்கள். செட்டிகுளம் என்ற ஊரில், இன்னும் சௌந்தரபாண்டியன் ஊரில் பலவிதமான அட்டூழி யங்கள் நடக்கின்றன. சாதி வெறியைத் தூண்டிவிட்டார்கள். இதற்கெல்லாம் அகில இந்திய பிரதிநிதியாகிய காமராஜ் அவர்கள்தான் பொறுப்பு. வேறொரு வரும் இல்லை. எதிர்க் கட்சித் தலைவராக இருக்கும் பொன்னப்ப நாடார் அவர் கள்தான் பொறுப்பு.

திரு. ஏ. சுவாமிதாஸ் : 'சாதி வெறியைத் தூண்டிவிட்டார்கள்' என்கிறார் களே . . .

திரு. நா. வீராசாமி : சார், பாயின்ட் ஆப் ஆர்டர் . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இரண்டு பேர்களும் உட்காருங்கள். உறுப்பினர், என்ன என்று சொல்லிவிட்டு எழுந்திருங்கள்

You must say whether you are standing on a point of order of point of clarification.

திரு. ஏ. சுவாமிதாஸ் : கிளாரிபிகேஷன், சார். அதே இனத்தைச் சேர்ந் தவர் சாதி வெறியைத் தூண்டிவிட்டார்கள் என்கிறார்களே . . .

MR. DEPUTY SPEAKER : It is not proper to discuss about communal feelings here.

(உறுப்பினர்கள் சிலர் எழுந்து நின்றனர்)

திரு. டி. கணபதி : 'நாட் யீல்டிங், சார்'. ஆகவே, வன்முறை எப்பக்கம் நடந்தாலும் பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேண்டியது காமராஜ் அவர்களும், எதிர்க் கட்சித் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்களும் தான். தமிழ் நாட்டிலே அராஜகத்தை ஏற்படுத்த வேண்டும் என்று ஆச்சாரியாரோடு சேர்ந்து செய்தவைகளுக்கெல்லாம் தக்க முறையில் பரிகாரம் தேட, இவர்களே ஸ்டேட் மெண்ட் கொடுத்து, சமூகத்தில் ஒற்றுமையை வளர்க்க அவர்களே முன்வந்து வழிகாட்டவேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. துரைமுருகன் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் என காமராஜரை வருணித்தார்கள். அவர் நாகர்கோவில் பாராளு மன்றத் தொகுதிக்கு மட்டும் தலைவரானார், முழு மாவட்டத்துக்கு அல்ல.

அங்கே குறிப்பாகச் சொல்வது பழக்கம், நாகர்கோவில் 'நாடார் மன்றம்' என்று. அந்த முறையில் அவர்கள் எல்லோரும் ஒற்றுமையாக ஏதோ மாயா ஜாலம் எல்லாம் செய்திருக்கிறார்கள்.

ஒரு ரகசியத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஓட்டுப்போட்டு பத்து நாட்கள் கழித்துத்தான் எண்ண ஆரம்பித்தார்கள். இதற்கிடையில் என்னென்ன மாயாஜாலம் செய்து ஓட்டுப்பெட்டியில் சதி செய்தார்களோ? ஓட்டுப் பெட்டியில் என்ன மாயம் செய்தார்களோ, தேர்தல் மாயாஜால வித்தையில் தேர்ந்தவர்கள் அவர்கள். எப்படி அவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். நான் உங்களுக்கு ஒரு ரகசியத்தைச் சொல்ல விரும்புகிறேன். எதிர்க் கட்சித் தலைவராக இருக்கும் திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்களுக்கு அமைச்சரவையிலே ஒரு மந்திரி பதவி . . .

DR. H. V. HANDE : Sir, on a point of order. I would request the Hon. Deputy Speaker to let us know whether it is in order to speak about leaders who are not in this House. If I remember aright, some years ago when I was a Member of the Legislative Council, some Members there raised the name of Thiru Kamaraj. Then Thiru Venkataraman got up and stated that it would hurt the feelings of some Members if the names of such persons who were not in the House were brought into the discussion. At that time I rose immediately and stated that the names of Anna and Rajaji who were not there to defend were also brought into the discussion. Now the hon. Member has referred to 'Acharya' and so I request the Chair to give some guide-lines to Members so that they may refrain from referring to such leaders who are not in the House in a disparaging or contemptuous manner . . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்தத் தலைவர்களைப்பற்றி அதாவது தனிப்பட்ட விஷயங்களைப்பற்றிப் பேசினால், அது இந்த மன்றத்தில் தவறாகப் பேசியதாகும். உறுப்பினர்கள் ஒரு கொள்கை ரீதியில், ஒரு கட்சி ரீதியில் பேசும்போது அவர்கள் கட்சித் தலைவராக இருப்பதால் அவர்களுடைய பெயரை உபயோகித்துப் பேசுவது தவறு அல்ல. நாம் காங்கிரஸ் கட்சியை 'நிஜலிங்கப்பா காங்கிரஸ்' என்று சொல்லிப் பேசுகிறோம் என்றால், அவர்—நிஜலிங்கப்பா—இந்த மன்றத்தில் உறுப்பினர் அல்ல. அவருடைய கொள்கையைப்பற்றிப் பேசுகிறோம். ராஜாஜி அவர்கள் கூறிய பல்வேறு வாசகங்களை மாண்புமிகு அவைத்தலைவர் இந்த மன்றத்தில் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். கொள்கை ரீதியில் பேசலாம். அவர்கள் இந்த மன்றத்தில் உறுப்பினராக இல்லாவிட்டாலும் பெரும் தலைவராக, கட்சியின் தலைவராக இருக்கிறார்கள். எனவே அவர்களுடைய கொள்கைகளைப்பற்றிப் பேசும்போது அவர்களுடைய பெயரை உபயோகப்படுத்தலாம். அவர்களைப்பற்றி தனிப்பட்ட முறையில் எதாவது சொல்வதாக இருந்தால் அப்படிப்பட்ட விஷயங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் தவிர்த்துக்கொள்ளலாம் என்று கூறிக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, my request is, let us not talk about them in a disparaging manner.

மனதைப் புண்படுத்தக்கூடிய அளவில் பேசாமல் இருந்தால் நல்லது.

Why should we hurt the feelings of others? We can definitely speak about policies and not about persons who are not in the House.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய காமராஜர் அவர்கள் நாகர்கோயில் தொகுதியில் வெற்றி பெற்றதைப்பற்றி உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் நேரத்தில் 'அது ஒரு வகுப்பினரின் வெற்றி' என்று குறிப்பிட்டார். உறுப்பினர் அவர்கள் ஒன்றும் புதிதாகச் சொல்லி விடவில்லை. முன்பு நடந்த இடைத்தேர்தல் நேரத்தில் ராஜாஜி அவர்கள் என்ன சொன்னாரோ அதைத்தான் இப்போது திரு. கணபதி அவர்கள் சொன்னார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதி பின்பேரில் ஒரு தன்னிலை விளக்கம் அளிக்க விரும்புகிறேன். எனது முன்னாள் நண்பர், இப்போது சட்டமன்ற உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் என்னைப் பற்றி ஒன்றைக் குறிப்பிட்டார்கள். நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றால் மந்திரிசபையில் நான் இடம் பெற்று விடுவேன் என்று கூறினார்கள். நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். அந்தக் கட்சியில், அதாவது எங்களுடைய கட்சியில் நடந்த நிகழ்ச்சிகள்பற்றி கனம் அங்கத்தினர் நேரிடையான எந்தத் தகவலும் அறிந்திருக்க முடியாது என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். தனிப்பட்ட முறையில் யாரையும் தாக்க வேண்டாம் என்று அங்கத்தினருக்குச் சொல்லிக்கொள்கிறேன். இன உணர்ச்சியைத் தூண்டிவிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். திரு. கணபதியைப் போன்று இருக்கிறவர்கள் மூட சொர்க்கத்திலே வாழ்கிறார்கள் என்று மட்டும் சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, சொர்க்கத்திலே புத்தி சாலிகள் சொர்க்கம், மூட சொர்க்கம் என்று இருப்பதாகத் தெரியவில்லை. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் விளக்கம் தெரிவிக்க வேண்டும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அதை ஆங்கிலத்திலே "folls paradise" என்று சொல்வார்கள்.

திரு. டி. கணபதி : தலைவர் அவர்களே, எனக்கு நேரடியாக நிஜலிங்கப்பா காங்கிரஸ் தலைவரோ, உறுப்பினரோ சொல்லவில்லை. எனது ஊருக்கும் கன்னியாகுமரியிலிருந்து நாகர்கோயிலுக்கும் தினந்தோறும் பஸ்ஸில் வந்து கொண்டிருக்கிற மக்கள் சொல்கிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டால் தெரியும். மக்களுடன் தொடர்பு இல்லாத இவர்களுக்கு எங்கே தெரியப் போகிறது? எனக்கு நேரிடையாக மக்களுடன் தொடர்பு இருப்பதால் இந்த மன்றத்தில் நினைவுப்படுத்துகிறேன். மதிப்பிற்குரிய திரு. மகாதேவன் பிள்ளை அவர்களுக்கு ஒரு அமைச்சர் பதவி . . .

THIRU J. JAMES : Sir, on a point of order. Rule 66 of the Assembly Rules says—

'Every speech must be strictly relevant to the matter before the Assembly.'

We are discussing the Governor's Address to the House. I would like to know under what rule my hon. Friend is talking about the proposed Ministry-making which was contemplated by some

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் விளக்கம் கூறினார்கள். மதிப்பிற்குரிய காமராஜர் அவர்களுடன் திரு. கணபதி இருந்தபோது அவர்கள் கூறினதாக இந்தச் சந்தர்ப்பத்தில் கூறினார்கள். அவர் வாய்மொழியாகக் கூறினாரா, பட்டனில் கூறியிருக்கிறாரா என்பதையும் எடுத்துக் கூறுவது பொருத்தமாக இருக்கும்.

அந்தப் பகுதி தாயகத்தோடு சேரவேண்டும் என்பதற்காகப் போராடிய போராட்டங்களிலே கலந்துகொண்டவர்களில் நானும் ஒருவன். சிறைச் சாலைக்கும் சென்றிருக்கிறேன். திரு. நேசமணி அவர்கள் தலைமையில் அந்தப் போராட்டத்தில் நான் ஈடுபட்டிருந்தபோது அவர்கள் என்ன முறையில் நடந்துகொண்டார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இறந்துபோன அந்தப் பெரியவரின் பொருக்கு களங்கம் கற்பிக்க வேண்டாம். மாசு கற்பிக்க வேண்டாம். திரு. கணபதி அவர்கள் தன்னுடைய சொந்தப் பேச்சில் ஏதோ நடந்ததாக கற்பனைக் கதையைவிடாமல் ஒழுங்காகக் கூறுவது—தன் மனச் சாட்சிப்படி கூறுவதுதான் பொருத்தமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: திரு. நேசமணி அவர்களுடைய தலைமையின் கீழ், அந்தப் பகுதி தாயகத்தோடு சேரவேண்டும் என்பதற்காகப் போராட்டம் நடத்தியபோது, திரு காமராஜர் அவர்கள் இங்கே முதல் அமைச்சராக இருந்தார்களே, அப்போது அவர்கள் அந்த இயக்கத்திற்கு ஆதரவு அளித்தார்களா? எதிர்த்தார்களா?

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: முழுமையான ஆதரவு அளித்தார்கள். நாங்கள் எல்லாம் திருநெல்வேலியில் அண்டர்கிரவுண்டாக இருந்தபோது தமிழ்நாடு அரசாங்கம் போதிய ஆதரவு அளித்தது. எங்களது தனிப்பெரும் தலைவர் திரு. காமராஜர் அவர்கள் பேராதரவு அளித்தார்கள் என்பதை அதிகாரபூர்வமாகத் தெரிவித்துக்கொள்ள முடியும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அந்தப் பகுதி தாயகத்தோடு சேர வேண்டும் என்கிற இயக்கத்திற்கு ஆதரவாக இந்தச் சட்ட மன்றத்தில் தீர்மானம் ஏதாவது போட்டார்களா? வேறு எந்த வகையில் ஆதரவு அளித்தார்கள்?

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தமிழ்நாடு சட்டசபையில் அன்றைக்கு என்ன தீர்மானம் போட்டார்கள் என்பது என்னுடைய கையில் விவரம் இல்லை. ஆனால் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. ஆர். வெங்கட்ராமன் பாராளுமன்றத்தில் பலமுறை எங்களுக்காகப் பரிந்து பேசியிருக்கிறார்கள். கன்னியாகுமரி ஜில்லா தனி ஜில்லாவாக இருக்கவேண்டுமென்ற முறையில் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் பாராளுமன்றத்தில் வேண்டிய காரியங்களைச் செய்து தந்தார்கள். அந்தப் பழைய சரித்திரத்தை—வரலாற்றை கவர்னர் பெருமான் உரை விவாதத்தின்போது கூறுவது பொருத்தமாக இருக்காது. மறைந்த தலைவர் நேசமணியைப் பற்றி திரு. கணபதி அவர்கள் இந்த மன்றத்தில் கற்பனைக் கதைகளைச் சொல்லாமல் இருப்பது நல்லது. அவர்கள் உயிரோடு இருந்தபோது யார் யார் என்ன என்ன காரியங்களை நடத்தினார்கள், * * என்பது எங்களுக்குத் தெரியும்.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் நான் எதிர் பார்த்ததற்கு மாறாக இந்த மன்றத்தின் மரபுக்கு ஒவ்வாத வார்த்தையைப் பயன்படுத்தியிருப்பது நல்லது அல்ல. இங்கு நான் கேட்ட கேள்வி தமிழ்நாடு சட்டமன்றத்தில் தமிழ்நாடு முதல் அமைச்சராக காமராஜ் இருந்தபோது என்ன தீர்மானம் போட்டார்கள் என்பதுதான்.

கன்னியாகுமரி மாவட்டம் தாயகத்துடன் சேரவேண்டும் என்பதற்காக எழுச்சியுற்றுப் போராட்டம் நடத்திய காலத்தில்—திரு. பொன்னப்ப நாடார் உட்பட அனைவரும் இந்தப் போராட்டம் நடத்திய காலத்தில்—தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் கட்சிகளும் அதற்கு வெளிப்படையாகத் தங்கள் ஆதரவை திரு. நேசமணி அவர்களுக்குத் தெரிவித்திருக்கின்றன. அப்போது பெரறிஞர் அண்ணா அவர்கள் கூட செங்கோட்டை வரை சென்று தம்முடைய தோழர்களுக்கு எல்லாம் ஆக்கப்பூர்வமான பல உதவிகளை அப்போது செய்து தந்தார்கள். அப்படித் தமிழ்நாட்டில் உள்ள எல்லாக் கட்சிகளும் வெளிப் படையாக ஆதரிக்க முன்வந்த நேரத்தில் திரு. காமராஜர் எப்படி நடந்து கொண்டார் என்பதை திரு. நேசமணி அவர்கள் மனம்புழுங்கிய உள்ளத்தோடு, தமிழ்நாட்டிலுள்ள காங்கிரஸ் கட்சி நல்ல ஆதரவைத் தரவில்லை என்று தெரிவித்திருக்கிறார். எப்படி இந்தச் சட்டமன்றத்தில் நடந்ததுபற்றிய விவரம் இருக்கிறதா என்று கேட்டபோது திரு. பொன்னப்ப நாடார் அந்த விவரம் இல்லை என்றாரே அதுபோல அந்த வாசகங்கள் பற்றிய விவரம் இப்போது என்னிடம் இல்லை. காலம் பொறுத்துக் கிடைக்கும். அவற்றை நான் இந்த அவையில் அளிக்கத் தயாராய் இருக்கிறேன். திரு. நேசமணி அவர்களுடைய கூற்றில் இருந்தே திரு. காமராஜர் அவர்கள் போதுமான ஆதரவை அளிக்கவில்லை என்பது தெரியும். ஆயினும் இந்த நேரத்தில் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் இதுபற்றிய விவாதத்தில் இந்த மன்றத்தில் கூறிய மரபுக்கு ஒவ்வாத சொல்லை அவரே திரும்பப்பெற்றுக்கொள்வது நல்லது என்று நான் கருதுகிறேன். அந்தச் சொல்லைக் கூடத் திரும்பச் சொல்ல என் நா கூசுகிறது. அப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லக் கூடாது என்று வேண்டிக்கொள்கிறேன். அதை திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் திரும்பப் பெற்றுக் கொள்வது இந்த அவையின் மரபுக்கு உகந்ததாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, அந்த * * என்ற வார்த்தையை நான் திரும்பப்பெற்றுக்கொள்கிறேன்.

இந்த மன்றத்தில் மிகவும் கண்ணியமாகப் பேசவேண்டிய திரு. கணபதி புதியதாக வெற்றிபெற்று வந்திருக்கிறார்கள். இருமுறை காங்கிரஸ் கட்சியில் நின்று வெற்றிபெற்று பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருந்திருக்கிறார்கள். இன்றையதினம் ஆளும் கட்சி உறுப்பினராக நின்று வெற்றிபெற்று வந்திருக்கிற நேரத்தில்—காங்கிரஸ் கட்சியின் பெயராலும் மன்ற உறுப்பினராக இருந்திருக்கிற அவர்—கட்சித் தலைவர்களைப் பற்றி கண்ணியமற்ற முறையில் பேசுவது நல்ல அரசியல் பண்பாட்டுக்கே உகந்தது அல்ல என்று மறுமுறையும் கூறிக்கொள்கிறேன். தமிழ்நாட்டோடு அந்தப் பகுதி சேரவேண்டுமென்ற போராட்டத்தில் இவர்கள் என்ன என்ன செய்தார்கள் என்பது எங்கள் போன்றவர்களுக்கு

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

நன்றாகத் தெரியும். ஆதலால் அதைப்பற்றி சர்ச்சை செய்ய வேண்டியதில்லை. அன்றைக்கு 1948-இல் அந்தப் பகுதி தாயகத்தோடு சேரவேண்டும் என்பதற்காக இயக்கம் உருவானபோது கருங்கலிலே திரு. காமராஜர் அவர்கள் இதை ஆதரித்து ஒரு மாபெரும் பொதுக்கூட்டத்தில் பேசியிருக்கிறார்கள். 1954-லிலும் அந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட எங்களுக்கு எல்லாம் போராதரவு காட்டி வந்திருக்கிறார்கள். அரசாங்கத்தின் முதல் அமைச்சராக இருந்தபோது சட்ட சபையில் என்ன தீர்மானம் போட்டார்கள் என்பது எனக்குத் தெரியாது. நாட்டில் நடந்த நிகழ்ச்சிகளை எல்லாம்பற்றி அறிந்தும் தவறாகக் கற்பனையாகக் கூறாமல் இருப்பது சாலச் சிறந்தது என்று மறுமுறையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. பொன்னப்ப நாடார் பேசும்போது அவர்களெல்லாம் அண்டர்கிரவுண்டில் இருந்தபோது தமிழ்நாடு அரசாங்கம் போதுமான ஆதரவு அளித்தது என்றார்கள். திரு. காமராஜர் போதுமான ஆதரவு அளித்தார் என்று சொல்வது பொருத்தமாக இருக்கலாம். அரசாங்கம் அண்டர்கிரவுண்டில் இருப்பவர்களுக்கு ஆதரவு அளித்தது என்று சொல்வது சரியல்ல. அதையும் மன்றக் குறிப்பேட்டில் இருந்து நீக்கிவிடுவது நல்லது. அதை எதிர்க்கட்சித் தலைவரும் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. டி. கணபதி: தலைவர் அவர்களே, நான் பேசுகிறபோது பொறுப்புணர்ச்சியுடன்தான் ஒவ்வொரு வார்த்தையையும் சொல்கிறேன் என்பதை எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரியவர் காமராஜருடன் தேர்தல் சமயத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பல இடங்களுக்கு நானும் சென்றிருக்கிறேன். எங்களை அடித்துத் துரத்தி, கல்லாலும் மண்ணாலும் அடித்ததை அறிந்தவர்கள் இப்போதும் கூட இருக்கிறார்கள். நடந்தது நடந்துவிட்டது ஐயய்யோ நாம் பெரிய தவறு செய்து விட்டோமே—சாதி வெறியால் ஏமாந்தோம், ஏமாற்றப்பட்டு விட்டோம் என்பதை உணர்ந்து மக்கள் மனம் மாறிவருகிறார்கள். அவர் கட்சி மாறியதைப்பற்றிச் சொன்னார்கள். எப்பொழுது மாறவேண்டுமோ அப்போது மாறத்தான் வேண்டியிருக்கிறது. இன்றைக்குச் சொல்கிறேன். மாறிவிட்டார்களே, மாறிவிட்டார்களே என்கிறார்களே—சென்னையில் தேர்தல் நடந்த பொழுது அங்கு உங்கள் கட்சி ஒன்றுகூட வெல்லவில்லை . . .

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தங்களுடைய கட்சியாகிய திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு—நீங்களும் வேட்பாளர்களை நிறுத்தியிருந்தீர்களே—எத்தனை சீட்டுகள் வந்தன என்று அறிவிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இல்லாததைப் பெறுவதற்கும் இருப்பதை இழப்பதற்கும் நிரம்ப வித்தியாசம் இருக்கிறது.

திரு. டி. கணபதி: கன்னியாகுமரிக்கு ரயில் பாதை கேட்கிறார்கள். அப்படிப் போராட்டத்தால் தமிழ்நாடு முழுவதும் அடிக்கடி போய்ப் பழகக்கூடிய சந்தர்ப்பம் அவருக்கு இல்லாத நிலைமையிலே நாகர்கோவில் மட்டும்தான் தமிழகம் என நினைக்கிறார்கள். தவறு நடந்தது. அதற்காகவாவது ரயில் பாதை போடவேண்டும். கன்னியாகுமரி பாராளுமன்றத் தொகுதியைக் கழகம் கைப்பற்றியது.

அது மட்டுமல்ல. நெல்லை மாவட்டம் முழுவதும் ஏழை எளிய மக்கள், பனை ஏறும் தொழிலாளர்கள், எதிர்கோஷ்டி பொன்னப்ப நாடார் வகுப்பார் எல்லாம் கழகத்திற்கு வோட்டளித்தார்கள். எல்லோரும்—கழகத்தில் போட்டியிட்டோர்—வெற்றிபெற்றோம். நாகர்கோவில் தொகுதியில் உள்ள மக்கள் இப்பொழுது சிந்திக்கத் தொடங்கியிருக்கிறார்கள். சீக்கிரமாக மனம் மாறிவருகிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் சாதனைகள், கழகக் கொள்கைகளைப் பார்த்து, ஏழை எளியவர்களுக்குத் தொண்டு செய்வதைப் பார்த்து —உங்கள் கட்சி சாதி வெறியில் போய்க்கொண்டிருக்கிறது.

காமராஜ் வயதான காலத்தில் பலகீன மடைந்துவிட்டார். சேவை செய்ய முடியாது, அவர் ஜாதிக்குள் அடைக்கலம் புகுந்துவிட்டார், தேர்தலுக்காக, என்று தெரிந்துதான் நான் மனம் மாறினேன். அந்த மாற்றம் நிஜலிங்கப்பா கட்சிக்காரர்களுக்கும் வரும். கன்னியாகுமரி மக்களுக்கும் வந்திருக்கிறது. இனிமேலும் மாயாஜால முறையை வைத்து மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அடுத்தபடியாக என்னுடைய தொகுதியைப்பற்றி, வறட்சியைப்பற்றி சொல்ல விரும்புகிறேன் . . . .

(மணியடிக்கப்பட்டது)

திரு. ஜே. ஜேம்ஸ்: பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் சார், மாண்புமிகு உறுப்பினர் கணபதி பேசும்பொழுது நாகர்கோவில் மக்கள் மனம் மாறிவிட்டார்கள் என்று சொன்னார்கள் . . . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் என்பது—நான் சொல்வது இதற்கு மாத்திரம் அல்ல, பொதுவாக இப்படியே ஒவ்வொருவரும் எழுப்புவார்களானால் இந்தச் சபையை நடத்த முடியாத நிலைமை ஏற்படும்—பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் என்பது பேசுகின்ற உறுப்பினர் தனிப்பட்ட ஒருவரைப்பற்றிச் சொல்லியிருந்தால், அந்தக் குறிப்பிட்ட உறுப்பினர்தான் தரலாம். பொதுவான கருத்துக்களைச் சொல்வதைப் பற்றியெல்லாம் விளக்கம் கூறுவதற்கு பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் என்று எழுவது நல்லதல்ல. நாளைக்கு நிறைய நேரம் கிடைக்கும். அப்பொழுது பேசிக்கொள்ளலாம்.

* **திரு. என். மருதாசலம்:** தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூறவிரும்புகிறேன். குடிசைத் தொழில்களை அபிவிருத்தி செய்யவேண்டும். வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவேண்டும் என்ற திட்டத்தை வைத்திருப்பது நல்லது. நகரப்புறங்களிலே மில்களிலே வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துக்கொண்டு வருகிறது. வேலையில்லாத் திண்டாட்டத்தால் அவதிப்படுகின்ற தொழிலாளர்கள் முற்போக்குக் கூட்டணியை வெற்றிபெறச் செய்தால் வேலையில்லாத் திண்டாட்டம் குறையும் என்று நினைத்துத்தான் அதனை வெற்றிபெறச் செய்தார்கள். இந்த விவரத்தை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவேண்டுமானால் நாட்டுப்புறங்களில் வேலையில்லாத் திண்டாட்டத்தை உண்டாக்குகின்ற முதலாளிகளை நம்பாமல் கார்ப்பரேஷன் அமைத்து அதன்மூலம் மில்களை ஓடச்செய்யவேண்டும். பல

[திரு. என். மருதாசலம்] [1971 மார்ச் 31

மில்கள் சாத்தப்பட்டுக் கிடக்கின்றன. ஸ்டானிஸ் மில்லில் மூன்று மில்கள், ஏ மில், பி மில், சி மில் என்று இருக்கின்ற மில்கள் மூடப்பட்டு அதனால் இரண்டாயிரம் தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். பங்கஜம் மில்லிலேயும் வேலை நடக்காமல் 5 வருஷமாக மூடப்பட்டிருக்கிறது. ஒரு ஆயிரத்திற்கும் மேற்பட்டத் தொழிலாளர்கள் அவதிப்படுகிறார்கள். காளீஸ்வரா மில், சோமசுந்தரம் மில்கள் மூடப்பட்டிருக்கின்றன. ஓடிக்கொண்டிருக்கின்ற விஜயலஷ்மி மில்லிலும் 100 பேர்கள், 200 பேர்கள் என்று ரிட்ரென்ச்மெண்ட் பண்ணுகிறார்கள். முதலாளிகள் தொழிலாளிகள்மீது கெட்ட நோக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் மேல் துர்நோக்கமும் கெட்ட எண்ணமும் ஏற்படுவதற்கான சந்தர்ப்பமும் சூழ்நிலையும் இதனால் ஏற்படுகிறது. அரசாங்கம் மில்களை உடனடியாக ஏற்று நடத்தி தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும். மத்திய அரசாங்கத்திலிருந்து பணம் வரவேண்டும். மாநில அரசாங்கமும் பணம் தரவேண்டும். இரண்டு அரசாங்கமும் சேர்ந்து மில்லை எடுத்து நடத்தி தொழிலாளர்களுக்கு வாழ்க்கை கொடுக்கவேண்டும்.

ஆளுநர் உரையில் வேலைப் பளு அதிகரித்து வருவதாகவும் அதனால் கவலைப்படுவதாகவும் என்று கூறியிருக்கிறார்கள். அதே சமயத்திலே அது ஒரு தேசியப் பிரச்னை என்றும் சொல்லியிருக்கிறார்கள். மத்திய சர்க்காரிடம் நம்முடைய மாநில சர்க்கார் வற்புறுத்தி மில்களை ஓட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுத்தால் தொழிலாளிகள் அதற்காக முன்நிற்கத் தயாராக இருக்கிறார்கள். மத்திய சர்க்கார் மில்களை நடத்துவதற்குச் சட்டத்தை திருத்த வேண்டும். நம்முடைய மாநில சர்க்கார் இந்த விஷயத்தில் உடனடியாக முயற்சிசெய்ய வேண்டும். தொழிலாளர்கள் வாழ்க்கை உயரவும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும் நல்ல முறையிலே இந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால் இந்திய கம்யூனிஸ்டு கட்சி அதற்கு உறுதுணையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொழிலாளர்களுக்கும் உறுதுணையாக இருக்கும்.

சாதாரணமாக ஓடக்கூடிய மில்களிலே வேலையிலிருந்து டிஸ்மிஸ் செய்துவிட்டால் அவர்கள் தொழில் கோர்ட்கள் மூலமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்று இருக்கிறது. தொழில் கோர்ட்டிலே விசாரணை நடந்தால் அதற்காக 3 வருஷங்கள் 4 வருஷங்கள் என்று ஆகிறது. தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் இப்படி கேஸ் நடந்தால் அவர்களுடைய கதி என்ன ஆகும்? தொழிலாளர்கள் கேஸ் நடத்தமுடியுமா? ஆகவே அப்படிப்பட்ட கேஸ்களை மூன்று மாதங்களுக்குள் நடத்திமுடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். வருஷக்கணக்கிலே கேஸ்கள் நடத்தினால் மில் முதலாளிகள் தொழிலாளர்களுக்கு அரைச் சம்பளம் கொடுக்கும்படி சட்டத்தைத் திருத்த வேண்டும். அப்படிச் செய்தால்தான் உடனடியாக முதலாளிகள் கேஸ்களை முடிப்பார்கள்.

கோவையிலே நாங்கோ ரப்பர் பேக்டரியில் 150 பேர்கள் வேலைசெய்கிறார்கள். அவர்களுக்குச் சம்பளம் 60 ரூபாய்தான். அதிகப்படியான சம்பளம் 160 ரூபாய்தான். இந்தக் காலத்திலே விலைவாசி உயர்ந்த காலத்திலே அவர்களுக்குள்ள சம்பளம் இதுதான். அதிகப்படியாக சம்பளம் கேட்டால் பேக்டரியைச் சாத்தும்படியான நிலைமை இருக்கிறது. எனவே, இந்த

1971 மார்ச் 31] [திரு. என். மருதாசலம்]

முதலாளிகளிடம் அரசாங்கம் தலையிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய ஏரியாவானது வெள்ளலூரிலிருந்து கேரளா எல்லை வரை இருக்கிறது. கேரள எல்லையோரத்திலிருக்கும் ஒவ்வொரு கிராமங்களுக்கும் சென்று பார்த்தால் அங்குள்ள மக்களுக்கு முக்கிய பிரச்னையான தண்ணீர் கிடையாது. அதனால் மக்கள் மிகுந்த கஷ்டப்படுகிறார்கள். இதை அவர்கள் பிரதானமான பிரச்னையாகக் கூறுகிறார்கள். எனவே அந்தக் குடிதண்ணீர் வசதியைச் செய்து கொடுக்க பொதுவான திட்டத்தை வகுக்க வேண்டும். அந்தத் திட்டத்திலே இன்றையதினம் தண்ணீர் இல்லாத பிரதேசங்களில் குழாய்கிணறுகள் இறக்கியும், மேல்நிலைத் தொட்டியைக் கட்டியும் அந்தப் பகுதி மக்களுக்குத் தண்ணீர் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி நடவடிக்கை எடுத்தால் தண்ணீர் பற்றாக்குறையை நீக்க முடியும்.

ஹரிஜனங்கள் பல நாட்களாக, இரண்டு மூன்று வருஷங்களாக சாலைகளில் குடியிருந்து வருகிறார்கள். அவர்களுக்குப் பட்டா கொடுக்கப் படவில்லை, விவசாயிகள் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர்களில் விவசாயம் செய்து வருகிறார்கள். அவர்களுக்கும் பட்டா கொடுக்கப்படவில்லை. இன்றைக்கு அரிஜனங்கள் யார் யார் சர்க்கார் புறம்போக்குகளில் வீடுகள் கட்டிக் குடியேறியிருக்கிறார்களோ சர்க்கார் புறம்போக்கு நிலங்களில் யார்யார் உழுது பயிர் செய்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் உடனடியாக பட்டா கொடுத்து சொந்தமாக்குவதற்கு உதவி செய்ய வேண்டும்.

அதேபோன்று ஹரிஜனங்களுக்கு ஸ்காலர்ஷிப் பணம் அளிக்கப்படுகிறது. ஹரிஜனங்களுக்கு மூன்றாவது வகுப்பிலிருந்து ஸ்காலர்ஷிப் பணம் கொடுக்கப் படுகிறது என்றால் இப்பொழுது கடைசிப் பரீட்சை வரை போகிறது. அதிலும் கோவையிலே பல பள்ளிக்கூடங்களுக்குக் கொடுக்கவில்லை. ஸ்காலர்ஷிப் பணத்தை 6 மாதங்கள், 3 மாதங்களுக்குள்ளாக கொடுக்கவேண்டும். ஸ்காலர்ஷிப் எதற்காகத் தருகிறோம்? புத்தகம் வாங்குவதற்காகக் கொடுக்கிறோம். அவர்கள் புத்தகம் வாங்கி, அதுவும் கிழிந்து, அடுத்தபடியாக வருஷக் கடைசியிலே ஸ்காலர்ஷிப் பணத்தைக் கொடுப்பதால் அவர்களுக்கு எந்த விதமான உதவியும் செய்ததாக பிரயோஜனப்படாது. உடனடியாக அரசு அந்த வேலையைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மறுபடியும் இந்தத் தொழில் தகராறுச் சட்டத்தைத் திருத்த அரசு நடவடிக்கை எடுத்தாக வேண்டும். ஏனென்றால் தொழில் தகராறுச் சட்டத்திலே முதலாளிகளுக்கு இடமிருக்கிறது, அவர்கள் புகுந்து கொள்கிறார்கள். தொழிலாளர்கள் ஒருவகையிலே பின் தள்ளப்படுகிறார்கள். ஆகவே, தொழிலாளர்களுக்குச் சாதகமான சட்டங்களை உருவாக்குவது இன்றுள்ள நிலைமைக்குச் சரியாக இருக்கும். அந்த முறையிலே இன்றைக்கிருக்கும் அரசாங்கம் தொழிலாளர் அரசாங்கம். ஆகவே, தொழிலாளர்களுக்கு வேலை தேடிக் கொடுப்பதிலே, தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதிலே இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து, அந்த முறையிலே செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடிக்கிறேன், வணக்கம்.

[1971 மார்ச் 31

திரு. வி. கே. இராஜாப் பிள்ளை: மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, என்னை இந்தச் சட்டப்பேரவைக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பிய கன்னியாகுமரி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் அதைப் போலவே, தமிழக அரியணையிலே திராவிட முன்னேற்றக்கழகத்தை அமரச்செய்ய உறுதுணை புரிந்த தமிழ்ப்பெருங்குடி மக்களுக்கும் என் நன்றியையும், வணக்கத்தையும் உங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்வதோடு, நம்மையெல்லாம் மீளாத்துயரத்தில் ஆழ்த்திவிட்டு மறைந்துவிட்ட மாமேதை அறிஞர் அண்ணா அவர்களுக்கு என்னுடைய அஞ்சலியைச் செலுத்திக்கொள்கிறேன்.

தலைவரவர்களே, என்னைப்பொறுத்தவரையிலே உங்களிடம் பணிவான ஒரு வேண்டுகோளை விடுக்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையிலும் இங்குள்ள 6 உறுப்பினர்கள் எதிர்க்கட்சியை அல்லது வேறு கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். நான் ஒருவனே ஆளுங்கட்சியில் இருக்கிறேன். ஆகையால் காலவரையறையைச் சிறிது தளர்த்தி எனக்குச் சற்றுக் கூடுதலாகப் பேசுவதற்கு அவகாசம் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடுகூட, சற்று முன்பு இங்கு ஒரு சர்ச்சை நிகழ்ந்தது. அதைப் பற்றி நான் ஒருசில விஷயங்களைக் கூற இருக்கிறேன். ஏனென்றால் திருவிதாங்கூர்-தமிழ்நாடு காங்கிரஸ் ஸ்தாபனத்தின் மூலம், 1954-இல், தாய்த் தமிழகத்தோடு அங்குள்ள தமிழ்ப்பகுதிகள் சேர வேண்டுமென்று போராடியவன். போராட்ட கால பொருளாளராகவும், பிறகும் பொருளாளராகவும் இருந்திருக்கிறேன் என்ற நிலையிலே நான் விளக்கம் தர விரும்புகிறேன்.

அதற்குமுன்பாக என்னுடைய தொகுதியிலே தேர்தல் சமயத்திலே என்ன நடந்தது என்பதைப்பற்றி ஒருசில வார்த்தைகளால் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே ஆரல்வாய்மொழி என்ற இடத்திலே தேர்தல் சமயத்தில் மதிப்பிற்குரிய திரு. காமராஜர் வந்து தேர்தல் பிரச்சாரம் செய்துவிட்டுப்போன இரண்டு மூன்று நாட்களுக்கெல்லாம் ஆறு திராவிட முன்னேற்றக்கழகத் தொண்டர்கள் வெட்டப்பட்டு படுகாயமுற்று, அவர்களை சிகிச்சைக்காக மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டிருந்தது. அங்கிருக்கிற மருத்துவ உயர் அதிகாரி, என்னை எதிர்த்த திரு. மகாதேவன் பிள்ளை அவர்களுக்கு உறவினர் என்ற முறையிலே, இரண்டு உயிர்கள் ஊசலாடிக் கொண்டிருந்தாலும், அவர்களைச் சரிவர கவனிக்காமல், அதோடு தகுந்த சிகிச்சை அளிக்காமல் கூடிய விரைவிலே வெளியே அனுப்பினார்கள். அதற்குப் பிறகு நாங்கள் அவர்களை தனியார் மருத்துவமனையிலே சேர்த்து சிகிச்சை அளித்தோம்.

அதுமட்டுமல்ல, கன்னியாகுமரி ஊரிலே இரண்டு திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் அங்கிருக்கும் ஆர். எஸ். எஸ். படையினால் தாக்கப்பட்டு அவர்களுக்கும் நாங்கள் அரசாங்க மருத்துவமனையில் சிகிச்சை அளித்தோம். மருங்கூர் என்ற இடத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தருமரத்தினம் என்பவர் குத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால் அரசாங்க மருத்துவமனையில் நிறைவிக்கப்பட்ட காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் யாராவது சிகிச்சை பெற்றிருக்கிறார்களா என்பது தெரியவில்லை. ஏன் இதைக் கூறுகிறேன் என்றால் இந்த அவையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச்

சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் கூறியதைப்போல், என்னுடைய தொகுதியிலேயும் நடந்திருப்பதைப் பார்க்கும்போது, இது திட்டமிட்ட செயலாகத் தமிழகத்தில் நடந்திருக்கிறது என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது.

அதோடு இதை முடித்துவிட்டு, இங்கே நடந்த சர்ச்சைகளில் சம்பந்தப்பட்ட சம்பவத்தைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். திருவிதாங்கூரிலுள்ள தமிழ்ப்பகுதிகள் தாய்த் தமிழகத்தோடு சேர வேண்டும் என்பதற்காக அங்கு திருவிதாங்கூர்-தமிழ்நாடு காங்கிரஸ் ஸ்தாபனத்தை ஏற்படுத்தி, அதன்மூலம் நாங்கள் செயல்பட்டு வந்தோம். அப்பொழுது, அங்கு இன்றைக்கிருக்கும் கன்னியாகுமரி மாவட்டம் அல்ல, எல்லையாக இருக்கின்ற களியக்காவிளை வரையில், நெய்யாற்றங்கரை வரையில், செங்கோட்டை வரையில், இன்றைக்கிருக்கும் செங்கோட்டை அல்ல, மலைவளமும், நீர்வளமும் நிறைந்த செங்கோட்டை வரையில், தேவிகுளம்-பீர்மேட்டையும் சேர்த்து தாய்த் தமிழகத்தோடு சேர வேண்டுமென்று போராட்டம் நடந்தது. அன்றையதினம் மதிப்பிற்குரிய காமராஜர் அவர்கள் அந்தப் பகுதிகள் சேர வேண்டுமென்பதற்காக எந்தவிதமான உதவியையும் அளிக்கவில்லை சுண்டு விரலைக்கூட அசைக்கவில்லை என்பதை உறுதியாகக் கூற முடியும். உதாரணத்திற்குக் கூற வேண்டுமென்றால், 1954-லே நடந்த போராட்டத்திலே, திருவிதாங்கூர்-தமிழ்நாடு காங்கிரஸ் ஸ்தாபனம் அதற்காகப் போராட்டம் நடத்திய காலத்திலே, தமிழுக்காகவும், தமிழ் மண்ணுக்காகவும் தன்னை அர்ப்பணித்துக்கொண்டிருக்கும் மதிப்பிற்குரிய திரு. ம. பொ. சி. அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. ஜீவானந்தம் அவர்களும் அதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தார்கள். அதுமட்டுமல்ல, நம்மையெல்லாம் விட்டு மறைந்துவிட்ட மாமேதை அறிஞர் அண்ணா அவர்கள் நாகர்கோவில் நகரத்திற்கு வந்து, லட்சோபலட்சம் மக்களைக் கூட்டி, அந்தக் கூட்டத்திலே, உங்கள் பக்கம் நாங்கள் இருக்கிறோம், உங்கள் போராட்டத்திலே பங்கு கொள்கிறோம், உங்களுக்கு எந்தவிதத்திலே உதவிகள் செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்கிறோம் என்று கூறினார்கள். நூற்றுக்கணக்கான தி.மு.க. தொண்டர்களை அந்தப் போராட்டத்திலே பங்கு கொள்ளச் செய்தார்கள். அந்தப் பேரறிஞருக்கு அன்று உபய மாலையிட்டு திருவிதாங்கூர்-தமிழ்நாடு காங்கிரஸ் ஸ்தாபனத்தின்மூலம் வரவேற்கும் பாக்கியமும் எனக்குக் கிடைத்தது. அன்று முதல் அண்ணாவின்பால் நான் ஈர்க்கப்பட்டு திராவிட முன்னேற்றக் கழகத்திலே நான் சேரும் ஒரு நிலை ஏற்பட்டது. அதேசமயத்தில் இங்கே முதலமைச்சராகயிருந்த திரு. காமராஜர் அவர்கள் எந்த விதமான உதவியும் செய்யவில்லை என்பதை இங்குள்ள எதிர்க்கட்சி நண்பர்களும் மறுக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

அதற்குப்பிறகு அந்தப்போராட்டம் அமைந்தபின்பாக, ராஜ்ய புனரமைப்பு கமிஷன் ஏற்படுத்தி திருவிதாங்கூரிலுள்ள தமிழ்ப்பகுதிகளைத் தாய்த் தமிழகத்தோடு சேர்க்க வேண்டுமென்று கொடுத்து, திருவிதாங்கூர்-தமிழ்நாடு காங்கிரஸ் ஸ்தாபனம் நான் முன் சொன்ன பகுதியான நெய்யாற்றங்கரை வரையிலும், அன்றுள்ள செங்கோட்டை தாலுகா முழுவதையும் தேவிகுளம் பீர்மேட்டையும் சேர்க்க வேண்டுமென்று மகஜர் சமர்ப்பித்தோம்.

அதாவது தொழிற்சங்கங்களை [illegible] செங்கோட்டை. நாட்டின் முழுமையும் தேசியக் கொடி [illegible] செங்கொடி [illegible] என்று மக்களை பார்த்தார்கள். ஆனால் [illegible] தொழிற்சங்கங்களின் [illegible] செங்கோட்டை தாலுகாவில் [illegible] விட்டு விட்டு இன்னொரு செங்கோட்டை பகுதியையும் [illegible] மிக்க தேசியக் [illegible] பகுதிகளை கேரளத்திற்குக் கொடுத்தார்கள். இது பற்றி திரு. காமராஜர் [illegible] தேசியக் [illegible] நாட்டுக் [illegible] என்று [illegible] என்று சொல்லி விட்டார்கள்.

அது மட்டும் இல்லை. இராஜாஜி அவர்கள் [illegible] தந்த போது, அங்கே என்ன [illegible] செங்கோட்டை தாலுகாவில் நல்ல பகுதிகளை கேரளத்திற்கு அவர்கள் தந்து விட்டு இன்னொரு செங்கோட்டை பகுதியை மட்டும் நமக்குத் தந்து இருக்கின்றார்கள். இதிலிருந்தே மதிப்பிற்குரிய திரு. காமராஜர் அவர்கள் இந்தப் பகுதிகளுக்கு எந்த அளவிற்கு [illegible] செய்து இருக்கிறார்கள் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

அது மட்டும் இல்லை, நாங்கள் போராட்டத்திலே, திரு. காமராஜர் அவர்கள் அங்கே வருகை தந்தார். "காமராஜரே, திரும்பிப்போ, தமிழ்த் துரோகியே, திரும்பிப்போ" என்ற வாசகங்கள் எழுதப்பட்ட விளம்பரத் தட்டிகள் அங்கே காட்சியளித்தன. [illegible] அவர்கள் அங்கே வந்த போது, "[illegible]" என்று இதே [illegible] அவர்களுக்கு [illegible] வைத்தார்கள்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.]

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, on a point of order. To call a Leader 'Tamil Throhi' on the floor of the House, does not speak of good taste on the part of the hon. Member. So I request the Chair to expunge those words from the official proceedings.

THIRU S. KANDAPPAN : Sir, the hon. Member is only referring to what was written . . . .

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் நடக்காத காரியங்களைப் பற்றியெல்லாம் எடுத்து சொல்லிக்கொண்டே போகிறார். அந்தக் காலத்திலே அவர்கள் உறுப்பினராக இருந்தார்கள். நானும் அந்தக் காலத்தில் உறுப்பினராக இருந்தேன். [illegible] இருந்தேன். அதுபற்றியெல்லாம் இப்போது கூறுவது பொருத்தமாக இராது. விவாதத்திற்குரிய பேருரை [illegible] அவர்கள் உரையின் மீது கருத்துக்களைக் கூறுவதுதான் இப்போது பொருத்தமாக இருக்கும். [illegible] பற்றி [illegible] வேண்டியதோ நிலைமை ஏற்பட்டுவிடும். எனவே அதுபற்றியெல்லாம் இங்கே [illegible] நல்ல முறையில் விவாதத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். மதிப்பிற்குரிய திரு.

காமராஜர் அவர்களைப் பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் இங்கே பல குற்றச்சாட்டுகளைச் சொல்லியிருக்கிறார்கள். [illegible] 'தமிழ் துரோகியே, வெளியே போ' என்ற [illegible] அவர்கள் கூறியிருக்கிறார்கள். அது முற்றிலும் தவறானது. [illegible] நிகழ்ச்சியாக ஏதாவது எங்கையாவது நடந்து இருக்கலாம். [illegible] என்று போற்றப்படும் [illegible] இருந்தார்கள். அப்போது அங்கே என்ன நடந்தது என்பது எங்களுக்குத் தெரியும். மறந்து விடவில்லை. ஆனால் [illegible] அப்போது, அவரை அவமதிக்கும் [illegible] வகையிலே அங்கு ஒன்றும் நடக்கவில்லை. [illegible] எங்களை எதிர்த்துப் போட்டியிட்ட [illegible] இருக்கும் படி மக்கள் அன்றைய தினம் எங்கள் கட்சிக்குப் பின்னால் இருந்தார்கள். இதையெல்லாம் மறந்து விட்டு, இப்போது திரு. [illegible] அவர்கள் ஏதோ கதையெல்லாம் சொல்லுகிறார். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள், "தமிழ் துரோகியே, திரும்பிப்போ" என்று எழுதப்பட்டு இருந்ததைத்தான் குறிப்பிட்டார்கள். 'துரோகி' என்ற வார்த்தைக்கு [illegible] 'பார்லிமெண்டரி' வார்த்தைதான். [illegible] அது ஒன்றும் மிகப் பயங்கரமான வார்த்தை இல்லை. [illegible] அப்படிப்பட்ட வார்த்தைகளைச் [illegible] இருந்தன என்றுதான். [illegible] பொறுப்பு நிறைந்தவர். [illegible] சொல்லுகிறார் என்று சபையின் கண்ணியத்தைப் பாதிக்கக்கூடிய [illegible] இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் [illegible] உரிமை உண்டு. 'கதை சொல்லுகிறார்' என்று சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, on a point of order. Will the Chair give some protection to the persons who are not in this House. For instance, the hon. Member had stated that somebody else spoke in that way.

'தமிழ் துரோகியே, வெளியே போ' என்று போடப்பட்டு இருந்தது என்று சொல்லுவதன் வாயிலாக இப்படிப்பட்ட வார்த்தைகள் பத்திரிகைகளிலும் வருவதற்கான வாய்ப்பை [illegible] உறுப்பினர் அவர்கள் முயற்சி செய்கிறார்கள் என்றுதான் சொல்லலாம். எனவே நான் மதிப்பிற்குரிய தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன், இந்த மன்றத்தில் இல்லாத பல பெருந்தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பெயருக்குக் களங்கம் கற்பிக்காத வகையில் பேசப்பட வேண்டும் என்பதற்கு [illegible] என்று தான் கேட்டுக்கொள்ளுகிறேன். மதிப்பிற்குரிய காமராஜர் அவர்கள் இருக்கிறார்கள். மதிப்பிற்குரிய அண்ணா அவர்கள் இருந்தார்கள். இராஜாஜி அவர்கள் இருக்கிறார்கள். இவர்களுடைய பெயர்களைக் குறிப்பிட்டு இப்படியெல்லாம் சொன்னார்கள் என்றால் மறைமுகமாக அவர்கள் பெயருக்குக் களங்கம் கற்பிப்பதற்கான முயற்சி ஆகிவிடுமோ என்றுதான் பயப்படுகிறேன். எனவே இப்படிப் பெயர் குறிப்பிட்டு பேசுவது தடுக்கப்பட்டால், மன்றத்தின் மரபைக் காப்பாற்றுவதற்கு ஏதுவாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

[1971 மார்ச் 31

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்கள் நீண்டநாள உறுப்பினர். [illegible] உறுப்பினராக இருந்திருக்கிறார். அவர் [illegible] இந்த மன்றத்திற்கு [illegible] பாது காப்பு [illegible] அவர்களைப் பற்றியும் [illegible] பேசாம லேயே [illegible] இராது. யாராவது [illegible] ஏதாவது [illegible] கவனிக்க [illegible] வெளியே [illegible] கருத்துக் [illegible] அபாண்ட மாகச் [illegible] இந்த மன்றத்தின் கண்ணியத்திற்கு [illegible].

DR. H. V. HANDE: Sir, I am not talking about policies. Supposing I say a particular word which is unparliamentary and the Chair may expunge it. In order to avoid it I might say that somebody else had stated such and such a thing about such and such a person. In that way I may be avoiding the opinion of mine but indirectly referring to such a person in a disparaging manner. So, I request the Chair to give guidelines so that Hon. Members could be prevented from using the words through the mouth of somebody else. [illegible] தாக்குறைவாகப் [illegible] என்று நான் சொல்லவில்லை. இப்படி [illegible] முறையில் அந்த வார்த்தைகளை உபயோகித்தால் [illegible] தவிர்க்கப்பட [illegible] என்றுதான் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாக்குறைவாக எதையும் சொல்லவில்லை. தாக்குறைவாகக் குறிப்பிடப்பட்டு இருந்ததைப் பற்றித்தான் குறிப்பிட்டார்கள். இந்த அவையின் கண்ணியம் எப்போதும் காப்பாற்றப்படும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: அப்படியென்றால் மாண்புமிகு அமைச்சர் ஒருவர் பற்றி அங்கே அவரால் அப்படி எழுதப்பட்டு இருந்தது என்று சொல்ல ஆரம்பித்தால் ஏற்றுக்கொள்வீர்களா ஏற்றுக்கொள்ள மாட்டீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் திரும்பத் திரும்ப ஒன்றைத்தான் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆனால் டாக்டர் ஹாண்டே அவர்கள் மீண்டும் மீண்டும் அதையே வற்புறுத்திச் சொல்லுகிறார்கள். நான் என்னுடைய தீர்ப்பைச் சொல்லிவிட்டேன். இப்படிப்பட்ட விஷயம் அந்தந்த நிலைமையில் அந்தந்த உறுப்பினர் சொல்லுவதைப் பொறுத்ததே தவிர இது இப்படித்தான் இருக்க வேண்டும் என்று இல்லை. துரோகம் என்ற வார்த்தை இதே மன்றத்தில் பலமுறை இதற்கு முன்பு பயன்படுத்தப்பட்டு இருக்கிறது. இப்படிப்பட்ட வார்த்தைகள் பார்ப்பதற்கும் கேட்பதற்கும் கடுமையாக இருந்தாலும் புறம் பானது, விரோதமானது என்று கருதத் தேவையில்லை. திரு. காமராஜர் அவர்களைத் தமிழ் துரோகி என்று அவர் குறிப்பிடவில்லை. இப்படி எழுதப்பட்டு இருந்தது என்றுதான் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். டாக்டர் ஹாண்டே

அவர்களுடைய உணர்ச்சிகளை முழு அளவில் உணருகிறேன். மன்றத்தின் உரிமைகளும் கண்ணியமும் எப்போதும் பாதுகாக்கப்படும் என்று அவர்களுக்கு உறுதியாகச் சொல்லிக்கொள்ளுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டது 'அன்பார்லிமெண்டரி' என்று சொல்லவில்லை. இருந் தாலும் கூட இந்தச் சபையில் [illegible] பாதுகாப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்றுதான் [illegible] தலைவர்களைப் பற்றிக் குறிப்பிடும் போது, 'துரோகி' என்ற வார்த்தையை உபயோகிப்பதைத் தவிர்த்து இருக்க லாம் என்று குறிப்பிட்டேன். இப்படிப்பட்ட வார்த்தைகள் உபயோகிக்கப் பட்டால் அவை இந்த சபையின் பெருமையைப் பிரதிபலிப்பதாக இராது என்றுதான் குறிப்பிட விரும்புகிறேன். சாதாரணமானவர்களைப் பற்றிப்பேசும் போது பரவாயில்லை. பெரும் தலைவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'பேட் டேஸ்ட்' கலைமற்ற வார்த்தைகள் தவிர்க்கப்பட வேண்டும் என்று தான் சபா நாயகரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்பினேன். இப்படிப்பட்ட வார்த்தைகள் 'பார்லிமெண்டரியா' 'அன்பார்லிமெண்டரியா' என்று பாரா மல் சபையின் 'குட் டேஸ்டை'க் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்தான் பெரும் தலைவர் [illegible] அதிகமாகப் பார்க்கிறார்கள். மாண்பு மிகு உறுப்பினர் [illegible] இல்லை. [illegible] என்பதில் பல [illegible]. இந்தமாதிரியான [illegible] அப்படியா என்ற [illegible] இந்த அளவில் இதை [illegible] பேசலாம் என்று கூறி இதை இந்த அளவில் முடித்துக்கொள்கிறேன்.

திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை: அன்றிருந்த தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியும், அதன் தலைவரும் அந்தப் போராட்டத்தில் எங்களுக்கு எந்தவிதமான உதவி [illegible] பார்த் [illegible] நமக்கு தானே தெரியும். அன்றிருந்த செங்கோட்டை [illegible] அன்றிருந்த [illegible] அத்தோடு அரசு [illegible] விசேஷ [illegible] 1956 முதல் 1967 வரையில் எங்கள் மாவட்டத்தில் [illegible] முன்னேற்றமும் ஏற்பட வில்லை. [illegible] அன்றிருந்த அரசாங்கத்தில் [illegible] முன்னேற்றம் [illegible] ஆட்சி [illegible] 1967-க்குப் பிறகு [illegible] அங்குள்ள நிஜலிங்கப்பா காங்கிரஸ் [illegible] பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. [illegible]—எங்கள் மாவட்டத் [illegible] தேசிய காங்கிரஸ் [illegible] முன்னேற்றத் [illegible] இல்லை என்று சொன்னபோது கூட [illegible] 27 லட்சம் ரூபாய் [illegible] அரசு [illegible] இருக்கிறது என்று சொல்லி [illegible] செய்திருக்கிறது. அதோடு கோதை [illegible] முன்னேற்றங்களைச் செய்திருக்கிறது. இன்னும் [illegible] திட்டத்தையும் நல்லமுறையில் செயல்படுத்தி இருக்கிறது. [illegible] செயல்படுத்தி பல பல நல்லதிட்டங்களை இந்த அரசு எங்கள் மாவட்டத்தில் [illegible] அதிக நேரம் இல்லாததால் சீக்கிரத்தில் சுருக்கமாக முடித்துக் கொள்கிறேன். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சில நல்ல

[திரு. பி. கே. இராஜாராம்பிள்ளை] [1971 மார்ச் 31

[illegible] கேட்டுக்கொள்கிறேன். [illegible] பகுதி [illegible] [illegible] பற்றி [illegible]

[illegible] பல திசை [illegible]

[illegible] கேட்டுக்கொண்டு என் [illegible]

* திரு. நா. வெ. குருசாமி: [illegible] அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: [illegible] இருக்கிறது. [illegible] தொடங்கிக் கொள்ளலாம்

திரு. நா. வெ. குருசாமி: கவர்னர் உரை மீது நடைபெறும் விவாதத்தில் கலந்து கொண்டு [illegible] கருத்துக்களைக் கூறலாம் என எண்ணுகிறேன்

கவர்னர் அவர்களது உரையில் தேர்தல் நடைபெறும்போது ஜாதி சமய வேறுபாடுகள் இல்லாமல் தக்க முறையில் நடந்து கொண்டார்கள் என பாராட்டிப் பேசியுள்ளார்கள். ஆனால் ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலர் பேசும்போது அராஜகங்கள் நடந்ததாகவும், அதுவும் நிஜலிங்கப்பா காங்கிரஸ்காரர்கள் மட்டும்தான் செய்தார்கள் என்றும் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் ஒருவரும் ஒன்றும் செய்யாததைப் போல் பேசினார்கள். நானும் தேர்தலில் நடந்ததைப்பற்றி சில விஷயங்களைச் சொல்வது நல்லது என எண்ணுகிறேன். என் தொகுதியில் எனக்காக தேர்தல் பிரசாரத்திற்குப் போன என் கார் கண்ணாடி நொறுக்கப்பட்டது. எனக்காக தேர்தல் பிரசாரத்திற்குச் சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. [illegible] அவர்களை கற்களாலும் [illegible] வீசினார்கள். தேனியில் பல காங்கிரஸ்காரர்கள் அடித்து துன்புறுத்தப்பட்டார்கள். கம்பத்திலும் கூடலூரிலும் பயங்கரமான அராஜகங்கள் நடைபெற்றன. பல வீடுகளும் பல ஆயிரக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள வைக்கோல் போர்கள் எல்லாம் தீயிட்டு கொளுத்தி அராஜகம் நடைபெற்றது. மதுரையில் தேர்தலில் தோல்வியுற்றபின் நன்றி செலுத்துவதற்காக வீதி வீதியாகச் சென்று கொண்டிருந்த நெடுமாறன் அவர்களை ஆரந்த பகுதியிலே [illegible] சொருகி மாடி மீது இருந்து எறிந்து இருக்கிறார்கள். இவையெல்லாம் பார்க்கும்போது அராஜகங்களாக இல்லையா என்று கேட்கிறேன். இனிமேலாவது இம்மாதிரி சம்பவங்கள் நடைபெறாமல் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கனம் முதல் அமைச்சர் அவர்களை இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நான் தேர்ந்தெடுத்து வந்திருக்கும் தொகுதி ஆண்டிப்பட்டி தொகுதியாகும். ஆண்டிப்பட்டி தொகுதி என்றாலே ஆண்டவனால் கைவிடப்பட்ட தொகுதி என்பார்கள். காரணம் அவ்விடம் மழைகள் சரிவரக் கிடையாது. நீர்ப்பாசன வசதி கிடையாது. ஆகவே விவசாயமே சரிவர செய்யமுடியாமல் மக்கள் வெளி மாவட்டங்களுக்குச் சென்றுதான் ஜீவிக்க முடிகிறது. எங்கள் தொகுதியில் உள்ள வைகை அணையால் எங்களுக்கு எந்தவிதமான நீர்ப்பாய்ச்சலும் இல்லை. நாங்கள் சனியும், ஞாயிறும் வைகையில் போடும் மின்சார லைட்டுகளைத்தான் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியுள்ளது. ஆகையால் வைகை அணையில் இருந்து எங்கள் ஆண்டிப்பட்டி தொகுதி முழுவதற்கும் நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக வருஷநாட்டுப் பகுதியில் ரோடு வசதியே கிடையாது. கடமலைக்குண்டில் இருந்து 10 மைல்வரை ஜீப்தான் போகமுடியும். மற்றக் கிராமங்களுக்கு கால்நடையாகத்தான் போக வேண்டும். கார்களும் பஸ்களும் போகாது. அவ்வளவு மோசமான விதத்தில் ரோடு வசதிகள் இருக்கின்றன.

திரு. நா. வீராசாமி: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சட்டமன்றத்தில் எந்த உறுப்பினராக இருந்தாலும், விவரங்களை வைத்துக் கொண்டு பேசலாமே தவிர, படிக்கக் கூடாதென்று இதற்கு முன்னாலே சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு படித்துக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுதான் நம் சட்டமன்றத்தின் விதிமுறை. இருந்தாலும் உறுப்பினர் அவர்களின் கன்னிப் பேச்சில், முதல் பேச்சில், இன்று படிக்கலாம். அடுத்த தடவை முதற்கொண்டு முழுவதும் படிக்காமல் விஷயங்களைப் பார்த்துப் பேசுவதுபோல முயலவேண்டும்.

பி. ப. 1-31

திரு. நா. வெ. குருசாமி : ஆகவே மகேசப்பெருமக்கள், ஏழை மக்கள் வாழும் பகுதியான வடுகபட்டிப் பகுதியில் ரோடு வசதி நல்ல முறையில் செய்துகொடுக்கும்படியும் பல ஆண்டுகளாக கஷ்டப்பட்டு மக்களை நிலமாக்கிப் பிழைக்கும் ஏழை மக்களுக்கு பட்டாக்கள் இல்லாமல் இருக்கிறது. அவர்களுக்கு உடனடியாக பட்டாக்கள் வழங்கும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கண்மாய்கள் நீர் இல்லாமல் மக்கள் பயிர் கருகிப் போய்விடும் பரிதாபமாக இருக்கிறது. ஒரு வாய் சோற்றுக்குத்தான் குடி தண்ணீர் எடுக்கவேண்டியுள்ளது. அவர்களுக்கு உடனடியாக குடிநீர் கிடைக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கண்டமனூர் பக்கம் உள்ள ஆத்தங்கரைப்பட்டி அணை கட்டப்போவதாக அறிந்தேன். அந்த அணை கட்டி அந்த அணைக்கு கீழே உள்ள முல்லையாறு கண்மாய்களுக்கும் நீர்பாய்ச்சக் கூடிய வசதியை ஆண்டிப்பட்டி தொகுதியில் பாதி இடங்களுக்கு விவசாயத்திற்கு மிகவும் வசதியாக இருக்கும். அப்படிச் செய்தால் ஆண்டிப்பட்டி தொகுதி வளமாக இருக்கும் என நம்புகிறேன். ஆத்தங்கரைப்பட்டி அணையை உடனடியாக கட்டி முல்லையாறு கண்மாய்களுக்கும் நீர்பாசனம் செய்துகொடுக்குமாறு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மற்றும் என் தொகுதியில் நெசவாளத் தொழிலாளர்கள் அதிகம் இருக்கிறார்கள். தற்பொழுது விசைத்தறிகளும் வந்துவிட்டபடியால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுடைய குறைகளை நீக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் தொகுதியைப் பொறுத்தவரையில் குக்கிராமங்களுக்கு பஸ் வசதி இல்லை. இந்த நிலையை மாற்றி போக்குவரத்துக்கு ஏற்ற முறையில் பஸ் வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் தொகுதியில் வைகை அணைப் பக்கம் வேலை இல்லாமல் ரொம்ப பேர் கஷ்டப்படுகிறார்கள். ஒரு மில் பாக்டரி ஆரம்பித்தால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இத்துடன் இன்றைய அலுவல்கள் முடிவுபெறுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. குருசாமி [illegible] அவர்கள் நாளை தொடர்ந்து பேசுவார். பேரவை நாளை 9 மணிக்கு மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.

6. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

31. Notification issued with G.O. Ms. No. 1691, Rural Development and Local Administration, dated the 3rd September 1970, in regard to certain amendments relating to officers appointed to exercise the powers and duties of Inspector under the Tamil Nadu Panchayats Act, 1958. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 198 (Tamil Nadu Act XXXV of 1958)].

B. Reports Notifications, and other Papers.

28. Erratum issued to Rural Development and Local Administration Department Notification 11-2 of 1960, published at pages 19-20 of Part—Section 2 of the Tamil Nadu Government Gazette Extraordinary, dated the 2nd October 1960. பி. ப. 1-30

@ 29. The Tamil Nadu Town and Country Planning Bill, 1971 (L.A. Bill No. 1 of 1971).

@ 30. Salient feautures of the Tamil Nadu Town and Country Planning Bill, 1971.

@ Despatched to Members on 29th March 1971.

தமிழ் நாடு சட்டப் பேரவை

வியாழக்கிழமை 1971, ஏப்ரல் 1.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் **மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நடைமுறைக் கேள்வி.

விரைவாக வினாக்களுக்கு விடைகள் அளிக்கவேண்டியதன் அவசியம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைய முதல் அலுவல் வினாக்கள்-விடைகள்.

DR. H. V. HANDE : I rise on a point of Order under Rule 83 (4). Will it not be possible for the Hon. Speaker to see that those questions, for which answers have already been received, questions which we have put in the last Assembly and answers thereon which would have been there (we have renewed those questions and there is only the process of Ministers giving answers–many Ministers have not changed and the same Ministry is continuing) are answered in the House? What is the difficulty in giving answers on the floor of the House? Even with regard to short notice questions, only short notice question 5 is coming now. Four short notice questions are pending and answers have not come. Answers could be collected expeditiously. I have myself given two short notice questions and about 200 starred questions. We have only two more days. Afterwards the House is going to adjourn. Will the Hon. Speaker see to it that in these two days some questions including short notice questions are positively answered?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் இது பாயிண்ட் ஆப் ஆர்டரின் கீழ் வராது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கேள்வியில் இருக்கிற சிரத்தையைக் காட்டுவதற்கு இதை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்தியிருக்கிறார் என்றுதான் சொல்லவேண்டும். நான் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் எழுதியிருந்த ஒரு கடிதத்திற்கு இங்கே விளக்கமாகப் பதில் அளித்திருக்கிறேன். எத்தனை கேள்விகள் வந்திருக்கின்றன என்பதைப்பற்றியும், அவைகள் இலாக்காக்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன, அவைகளுக்கு விரைவாகப் பதில் அனுப்புவதற்கான ஆணையை அமைச்சர்கள் பிறப்பிக்கவேண்டும் என்றெல்லாம் கூறினேன். கேள்விகள் வந்தால் அவை விரைவாக இலாக்காக்களுக்கு அனுப்பப்பட்டு, பதில் வந்தவுடன் இந்த மன்றத்தின் முன்னால் வைக்கப்படும். ஆனால், அதிலே சில சங்கடங்கள் இருக்கின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் உணர வேண்டும்.

[பேரவைத் தலைவர்] [1971 ஏப்ரல் 1

முன்னால் கேட்கப்பட்ட கேள்விகள் என்றாலும், முன்னாலிருந்த சட்ட மன்றத்திற்கும், இந்தச் சட்ட மன்றத்திற்கும் கொஞ்சம்கூட சம்பந்தம் இல்லை. அதே உறுப்பினர்கள் மீண்டும் வந்திருக்கலாம். அதே அமைச்சர்கள் மீண்டும் வந்திருக்கலாமேதவிர, சட்டமன்ற நடவடிக்கைகள், கேள்விகள் ஆகியவைகளெல்லாம் முற்றிலும் புதியவை. இது முற்றிலும் புதிய ஐந்தாவது சட்ட மன்றம்; புதிய மந்திரி சபை, அதே கேள்விகளை மாண்புமிகு உறுப்பினர்கள் புதியதாகக் கேட்டிருக்கலாம். கேள்விகளைப் புதுப்பிப்பது என்பதெல்லாம் இப்பொழுது எழவில்லை. ஆனால், அங்கத்தினர் அவர்கள் சொல்லுவதுபோல, பதில்கள் சரியாகத் தயாராகிவிட்டால், விரைவாக அனுப்புவார்கள், விரைவாக அனுப்பவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நிலைமையில்தான் இங்கே இன்று ஒரு குறுகிய காலக் கேள்வி வந்திருக்கிறது. இன்றைக்கு வினாக்கள்-விடைகள் நேரத்தில் ஒரு குறுகிய காலக் கேள்விக்கு விடை அளிக்கப்படும். வினாவைக் கேட்டிருப்பவர் திருப்பூர் தொகுதி உறுப்பினர். அதுமாதிரி விடைகள் இந்த இரண்டு நாட்களுக்குள் வந்தால், இங்கே பதில் அளிக்கப்படும். இதிலே தாமதமோ அல்லது துரிதப்படுத்தாத தன்மை எதுவுமோ இல்லை என்று கூறி, முதல் அலுவலாக 'வினாக்கள்-விடைகள்' இருப்பதால், திருப்பூர் தொகுதி உறுப்பினர் திரு. சு. துரைசாமி அவர்களை அவருடைய குறுகிய கால வினாவைக் கேட்கும்படி அழைக்கிறேன்.

2. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

வெள்ளக்கோவில் தொகுதியில் தேர்தல் தகராறுகள்

*** குறுகிய கால வினா—எண் 1 திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதியில் சமீபத்தில் நடந்த பொதுத் தேர்தல் தகராறு காரணமாக திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் துப்பாக்கியால் சுடப்பட்டனரா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) 6--3--1971 அன்று பெருந்துறை காவல் துறை இன்ஸ்பெக்டர் தாசநாயக்கன்பட்டி கிராமத்திற்குச் சென்று தேர்தல் சம்பந்தமாகக் கொடுக்கப்பட்ட புகார் ஒன்றை, விசாரணை செய்துகொண்டிருந்த சமயம் வெள்ளக்கோவில் பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர் திரு. டி. ராமசாமி தன் நண்பர்கள் இருவர்களுடன் அவ்விடம் வந்து சேர்ந்தார். அதே சமயத்தில் வெள்ளக்கோவில் சட்ட மன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் திரு. அப்பன் என்கிற பழனிசாமி மற்றும் சிலருடன் கூட வந்தார். இரு தரப்பாருக்குமிடையே சிறிய கலவரம் மூண்டது. திரு. டி. ராமசாமி தன்னுடைய கைத்துப்பாக்கியை எடுத்துச் சுட்டார். கூடியிருந்தோர் திரு. ராமசாமியைத் தாக்கலானார்கள். மீண்டும் அதே துப்பாக்கியை எடுத்து, கூட்டத்தினரை நோக்கி இரண்டு முறை சுட்டார். கூட்டத்திலிருந்த ஒருவர் கழுத்தில் குண்டு பாய்ந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். திரு. டி. ராமசாமியும் அவரது

1971 ஏப்ரல் 1]

நண்பர் இருவரும் கூட்டத்தினர் தாக்கியதால் காயமடைந்தார்கள். இது குறித்து வழக்கு குற்ற எண். 119/71 ஆக பதிவு செய்யப்பட்டு புலனாய்வுத் துறை குற்றப் பிரிவினரால் விசாரணை செய்யப்பட்டு வருகிறது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தகராறு நடந்த இடத்தில் போலீஸ் அதிகாரிகள் இருந்திருக்கிறார்கள். முன் ஜாக்கிரதையாக நடவடிக்கை எடுக்க அந்த அதிகாரிகள் தவறிவிட்டார்கள். அப்படிப்பட்ட அதிகாரிகள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இது சம்பந்தமாக 7 புகார்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவேதான் இதைப்பற்றி சி.ஐ.டி. இலாகாவைக் கொண்டே தகுந்த புலனாய்வு செய்வதற்காக இப்பொழுது உத்தரவிடப்பட்டிருக்கிறது. அவர்கள் அந்த விசாரணைப் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள்.

DR. H. V. HANDE: Mr. Speaker, Sir, will the Hon. Minister be pleased to state the steps taken by the Government to see that such incidents, to whichever party the concerned persons belong, are put a stop at least hereafter? May I know what are the steps taken by the Government to see that such incidents—even in Perambur a gentleman by name Thiru Guruviah belonging to the Nijalingappa Congress expired due to some unfortunate incident—do not recur in future? Will it not be possible for Government to see that such incidents are prevented? Even small pinpricks like victimisation of individuals who had worked for some political parties should be prevented. Will the Hon. Minister consider the desirability of appointing an officer of the rank of a D.I.G. to tackle these things immediately? Will the Hon. Minister see to it that an officer of that calibre is appointed?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இது ஒரு காங்கிரஸ்காரர் ஒரு தி.மு.க. கூட்டத்தினரை நோக்கித் துப்பாக்கியால் சுட்ட பிரச்னையைப்பற்றிய கேள்வியாகும். இதில் நம்முடைய நண்பர் திரு. ஹாண்டே அவர்கள் குருவய்யா விஷயத்தைக் கொண்டுவந்து சேர்த்து, அதற்கு விளம்பரம்தேட முனைவது நல்லதல்ல. பொதுவாக நாட்டில் நடைபெறுகின்ற எந்த வன்முறை விஷயத்திலும், அதிலே எந்தக் கட்சியினர் சம்பந்தப்பட்டிருந்தாலும், அரசு மிகுந்த கடுமையான நடவடிக்கையை மேற்கொள்ளும் என்ற உறுதியை நான் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலிலிருந்து, துப்பாக்கியால் ஒரு நபர் சுட்டார் என்று தெரிகிறது. அவருக்கு லைசென்ஸ் இருக்கிறதா? அப்படி லைசென்ஸ் இருக்குமானால், அம்மாதிரி உபயோகப்படுத்தியிருக்கக்கூடிய அவருடைய லைசென்ஸ் ரத்து செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவர்களுக்குத் துப்பாக்கி லைசென்ஸ் இருக்கிறது. அதிலே ஸி.ஐ.டி. விசாரணையெல்லாம் முடிவுற்ற பிறகுதான் லைசென்ஸ் ரத்து செய்வதுபற்றியெல்லாம் காவல் துறையினர் முடிவை மேற்கொள்வார்கள்.

திரு. என். கணபதி : இந்த சம்பவம் சம்பந்தமாக எத்தனை பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்? மேற்கொண்டு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தச் சம்பவம்பற்றி திரு. டி. ராமசாமி, அவர்களோடு இருந்த உத்தமபாளையம் பழனிசாமி, வெங்கடராமசாமி ஆகிய மூவரும் 7—3—1971 காலையில் கைது செய்யப்பட்டு, பிறகு கோர்ட்டாரால் நிபந்தனை ஜாமீனில் விடப்பட்டுள்ளார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இம்மாதிரியான வன்முறைச் சம்பவங்கள் பல இடங்களில் நடைபெறுகின்ற காரணத்தினால், மாவட்ட அளவிலே கலெக்டர் தலைமையிலே சமாதானக் குழு ஏற்படுத்தி, எல்லா அரசியல் கட்சியினர்களையும் அழைத்து அரசாங்கம் தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தேர்தலில் வாக்குகள் அளிக்கும் நேரத்திற்கு முன்பாகவே அரசாங்கத்திலிருந்து அப்படி ஒரு அறிவிப்புக் கொடுக்கப்பட்டிருந்தது; அதன்மேல் எல்லா மாவட்டத் தலைவர்களும், அந்த அந்த மாவட்ட அளவில் கட்சித் தலைவர்களை அழைத்து, ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்குவதற்காகக் கூட்டங்கள் நடத்தியிருக்கிறார்கள். அதையும் மீறிச் சில சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. அதன்மேலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, துப்பாக்கியால் சுட்ட திரு. ராமசாமி அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகக்காரரைக் குறி பார்த்துச் சுட்டாரா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதெல்லாம் வழக்கு மன்றத்திலே வர வேண்டிய விஷயங்கள்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இந்த ராமசாமி என்பவர் துப்பாக்கி வைத்துக்கொண்டு, தேர்தலுக்கு முன்னாலேயே வாக்காளர்களைப் பயமுறுத்தினார் என்று புகார்கள் கொடுத்தும், அப்பொழுதே விசாரணை நடத்தாததால்தான் இப்படி ஏற்பட்டது என்று கூறப்படுவது உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பரவலாக வருகின்ற இப்படிப்பட்ட விவரங்களை விசாரிக்கத்தான், அதற்கென்றே சி.ஐ.டி. இலாகாவினரே விசாரிக்க வேண்டும் என்று பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

*[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]*

3. அவையுரிமைப் பிரச்சனை.

உண்மைக்குப் புறம்பான, தவறான தகவலை பேரவைக்கு அளித்ததாக திரு. பொன்னப்ப நாடார் அவர்கள்மீது எழுப்பப்பட்டுள்ள பிரச்சனை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, பேரவை விதிகளின் 184-வது விதியின்கீழ் தூத்துக்குடி உறுப்பினர், திரு. ஆர். இராமலிங்கம் ஓர் அவை உரிமைப் பிரச்சினையை, (Privilege Matter) எழுப்ப அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அதன் விவரம் :

To The Honourable Speaker,
Tamil Nadu Legislative Assembly,
Madras-9.

Sir,

I propose to raise a matter of privilege against hon. Member Thiru Ponnappa Nadar for making an untrue and misleading statement to the House on 29th March 1971 as follows :—

"ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் ஒரு கிராமமே சுட்டுச் சாம்பலாக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பலரும் குறிப்பிட்டிருக்கிறார்கள்; அந்த நிகழ்ச்சியைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்."

In '*Navasakti*'', dated 30th March 1971, the Hon. Member is reported to have stated—

"ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் ஒரு கிராமமே பொசுக்கப்பட்டது"

'A copy of the newspaper is enclosed'.

என்று ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இதன்மீது திரு. பொன்னப்ப நாடார் அவர்களுடைய கருத்தை அறிய விரும்புகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : வன்முறைச் சம்பவங்கள் நடந்ததைப் பற்றி, கிராமம் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது பற்றி முழு விவரங்கள் என்னுடைய சொற்பொழிவைப் பார்த்துத்தான், அதன் பிற்பாடுதான், என்னுடைய சமாதானத்தைச் சொல்ல முடியும். முழு விவரங்கள், என்ன பேசியிருக்கிறேன், என்ன பத்திரிகையில் வந்திருக்கிறது என்பதெல்லாம் எனக்கு இப்பொழுது நினைவு இல்லாததால், நான் எதையும் கூறுவதற்கில்லை என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர், அவையில் உண்மைக்குப் புறம்பாக ஒன்றைப் பேசியிருக்கிறார்களா என்பதுதான் கேள்வி. இந்தக் கருத்தை நீங்கள் பேசியிருக்கிறீர்கள். இது அவையின் உரிமையைப் பற்றிய பிரச்சினை. உண்மையிலேயே உரிமை மீறப்பட்டிருக்கிறதா என்று, "ப்ரைமா ஃபாஸி கேஸ்" இருக்கிறதா என்பதைத் தீர்மானிக்கத் தங்களுடைய கருத்தைக் கேட்கிறேன். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசியிருப்பது, அவையினுடைய பதிவேட்டிலும் 'அதே மாதிரி ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் ஒரு கிராமமே சுட்டுச் சாம்பலாக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பலரும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த நிகழ்ச்சியையும் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்' என்று தான் இருக்கிறது. ஆனால் இந்தப் பத்திரிகையில் (நவசக்தி), "ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் ஒரு கிராமமே பொசுக்கப்பட்டது" என்று வந்திருக்கிறது. பேசியது தவறு, சரியா என்பதல்ல இப்பொழுது இருக்கும் பிரச்சினை. அந்த விவரம் உண்மையாக இல்லாமலிருந்து, சபையின் கவனத்திற்குக் கொண்டுவருவதன்மூலம், சபையை 'மிஸ்லீட்' பண்ணும் வகையில் இருக்கிறதா என்பதுதான் நாம் கவனிக்க வேண்டியது. அதைப் பேசலாமா பேசவேண்டாமா என்பதல்ல பிரச்னை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : என்ன பேசியிருக்கிறேன் என்பதைப் பார்க்காமல் என் கருத்துக்களைக் கூறுவதற்கில்லை. வேண்டுமானால், என்மீது நடவடிக்கை எடுப்பதில் எனக்கு ஆட்சேபணையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நடவடிக்கை எடுப்பதைப்பற்றி இல்லை, பிரச்சினை. அவையின் உரிமைபற்றியது பிரச்சினை. 'ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் ஒரு கிராமமே சுட்டு சாம்பலாக்கப்பட்டிருக்கிறது என்று பலரும் குறிப்பிட்டிருக்கிறார்கள்' என்று கூறப்பட்டிருக்கிறது. அந்த நிகழ்ச்சியைப்பற்றி திரு. பொன்னப்ப நாடார் பேசியது தவறு, சரியா என்பதல்ல இப்பொழுதுள்ள பிரச்சினை. தவறான ஒரு விஷயத்தை அவையின்முன் வைத்து, உறுப்பினர்களுடைய உரிமையைப் பாதிக்கும் வகையில் தவறான செய்தியை, அவைக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்பது உறுப்பினருடைய வாதம். அந்த அளவில் அவர்கள் பேசியது அமைகிறதா, அடிப்படையில் பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்ப வேண்டிய நிலை இருக்கிறதா என்று ஆராயும் கட்டத்தில் பேசுகிறோம். அவையின் பதிவேடுகளில், பேசிய விபரம் இருக்கிறது. தாங்கள் நாளைக்கு வைத்துக் கொள்ளலாம் என்றாலும் எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், என்ன நடவடிக்கை வேண்டுமானாலும் எடுக்கலாம் என்று சொல்வது, மாண்புமிகு உறுப்பினர், அதுவும் கட்சித் தலைவராக இருக்கும் தங்களுக்கு சரியல்ல. உரிமை மீறி, 'கன்டெம்ப்ட்' வந்திருக்கிறதா, 'கன்டெம்ப்ட்' செய்திருக்கிறீர்களா என்று ஆராய வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : என்னுடைய கருத்து, என்னுடைய அறிவுக்கு, ப்ரைமா பாஸியாக, அவையின் உரிமையை மீறியதாகப் புலப்படவில்லை. ஆனால் இந்த மாதிரி விஷயங்களில் 'ப்ரைமா பாஸி' கேஸ் இருக்கிறதா இல்லையா என்பதுபற்றி ஆராய்ந்து, அதற்கு என்று ஒரு முடிவு எடுப்பதும் பொருத்தமாக இருக்கும். ஆனால், திடீரென்று இதைக் கொண்டு வந்து, இதற்குத் தங்கள் கருத்து என்ன என்பதுபற்றிக் கேட்டால், உடனடியாகச் சொல்ல முடியாது என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(குரல்கள் : 'டோரோ')

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி, நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம். இருந்தாலும், 'நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்' என்று சொல்வதைத் தவிர்த்து இருக்கலாம்.

(4) ஆளுநர் பேருரைக்கு நன்றிகூறும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு போவைத் தலைவர் : அடுத்து, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஒட்டி விவாதம் தொடரும். நேற்று நடுவில் நிறுத்திய மாண்புமிகு உறுப்பினர் திரு. குருசாமி தொடர்ந்து பேசுவார்கள்.

* **திரு. என். வி. குருசாமி :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நான் பேசியபோது, எனது தொகுதிக்கு வசதியாக வைகை அணையில் ஒரு மின் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தேன். அப்படி ஆரம்பித்தால், அந்தத் தொகுதியில் வேலை

யில்லாமல் அவதியுறும் ஏழைகளுக்கு மிகவும் வரப்பிரசாதமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆண்டிபட்டியில், இதுவரையில் அரசாங்க மருத்துவமனையே கிடையாது. யூனியன் மருத்துவ மனைதான் இருக்கிறது. உடனடியாக அங்கே அரசாங்க மருத்துவ மனை ஒன்று தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, மைலாடும்பாறை மலைப்பகுதியில், மேலப்புரம் வரையில் 12 மைல் இருக்கிறது. மலையில் ரோடு வசதிகள் கிடையாது. அப்படி வசதி செய்து கொடுத்தால், நலமாக இருக்கும் என்று கேட்டுக்கொண்டு உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. மா. வெ. கரிவேங்கடம் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தையொட்டி ஒருசில கருத்துக்களை எடுத்துச் சொல்ல வாய்ப்பளித்தமைக்காக எனது உளங்கனிந்த நன்றியை முதற்கண் கூறிக் கொள்கிறேன்.

1962--67-லே எதிர்க்கட்சியாக இருந்த எங்கள் கட்சியை 1967-லே ஆளும் கட்சியாக ஆக்கி, அரும்பெரும் பாடுபட்டு நல்ல கொள்கைகளையும் திட்டங்களையும் வகுத்துத் தந்த பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும், அவர் வழியிலே நின்று அயராது பாடுபடுகின்ற தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், அவரது அமைச்சரவைக்கும், பெருவாரியான முறையிலே வாக்குகள் அளித்து, அரும்பெரும் வெற்றிகளைத் தமிழகத்திலே தேடித்தந்த வாக்காளப் பெருங்குடி மக்களுக்கும் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக் கொள்வது சாலச் சிறந்ததாக இருக்குமென்று கூறி, அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கவர்னர் அவர்களுடைய உரையிலும், முதல்வர் அவர்கள் அளித்த இடைக் கால நிதிநிலை அறிக்கை உரையிலும் நமது மாநிலம் எந்த அளவிற்கு வஞ்சிக்கப் பட்டிருக்கிறது என்பதற்குரிய சான்றுகள் ஏராளமாகக் கொடுக்கப்பட்டிருக் கின்றன. ஐந்தாவது நிதி ஆணைக் குழு அளித்திருக்கும் அறிக்கையின்படி அகில இந்திய ரீதியில் ஆள் ஒன்றுக்கு 98.5 ரூபாய் என்ற விகிதத்திலே இருந்தாலும், தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஆள் ஒன்றுக்கு 87.5 ரூபாய் என்ற அளவிலேதான் கிடைத்திருக்கிறது. ஆக, அகில இந்திய ரீதியில் தலை ஒன்றுக்குக் கிடைக்கும் தொகையைவிட, தமிழகத்தில் தலை ஒன்றுக்கு 11 ரூபாய் குறைவாகக் கிடைத்திருக்கிறது. இதன் காரணமாக நமது அரசுக்கு ஏறக்குறைய 44 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட அநீதியை, ஓரவஞ்சனையை மாற்றுந்தாய் மனப்போக்கை ஐந்தாவது நிதி ஆணைக்குழு நமக்கு இழைத்திருக்கிறது.

இந்திய அரசியல் சட்டத்தின்படி, 'சட்டத்தின்முன் அனைவரும் சமம்' (Equal protection of law) ஐந்தாவது நிதி ஆணைக் குழுவின் செய்கை, சட்டத்தின் பாதுகாப்பு அனைவருக்கும் சமமாகக் கிடைக்க வேண்டுமென்று சொல்கின்ற தத்துவத்திற்கு முற்றிலும் முரண்பாடுடையதாக இருக்கிற தென்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். சாதாரண பிரஜை களுக்குச் சட்ட சமத்துவப் பாதுகாப்பு இருக்கிறதென்று அரசியல்

சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கின்றபோது, மாநிலத்திற்கு மாநிலம் இப்படிப் பாகுபாடு காட்டுவது சட்ட சமத்துவத்திற்கு முரண்பட்ட, மாறுபட்ட செயலாகும். சட்டத்தின்முன் மாநிலங்கள் அனைத்தும் சமம் என்கிற தத்துவத்திற்கு இந்தச் செய்கை ஒவ்வாதது, மாறுபட்டது, முரண்பட்டது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டுகிறேன். ஐந்தாவது நிதி ஆணைக்குழு அதனுடைய முடிவுகளை மாற்ற இயலாது என்று சொல்வது பொருந்தாத வாதம், நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ள முடியாத வாதம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், மத்திய அரசு 'தனது நிதி வசதித் திட்டத்தின்' பிரகாரம் (Special accommodation scheme) இருக்கின்ற திட்டத்திலே தமிழகத்திற்கு வேண்டிய நிதி வசதிகளைச் செய்யவில்லை. அந்தத் திட்டத்திலே நாம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறோம். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் மொத்த திட்டத் தொகையில் 10.8 சதவீதம் தமிழகத்திற்குக் கிடைத்திருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 5.7 சதவீதம்தான் தமிழகத்திற்குக் கிடைத்திருக்கிறது. மத்திய அரசு மாநிலங்களுக்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக ஒதுக்கிய தொகை 3,500 கோடி ரூபாய். அதிலே மக்கள் தொகை அடிப்படையில் பார்த்தாலும் தமிழகத்திலே இருக்கின்ற நாம் பத்திலே ஒருவராக இருக்கும் நிலையில், 350 கோடி ரூபாயாவது நமக்குக் கிடைத்திருக்க வேண்டும். தமிழக முதல்வர் 575 கோடி ரூபாய்க்குக் குறையாத திட்டம் தமிழகத்திற்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டு, மத்திய அரசு திட்டக்குழு 250 கோடி ரூபாய்க்கு ஒத்துக்கொண்டு, அது தற்போது 202 கோடி ரூபாய் என்ற அளவில் குறைந்திருக்கிறது. மத்திய அரசு நமது மாநிலத்திற்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கியிருக்கும் தொகை மிகவும் பெரிய அநீதியாகும். இந்த அநீதியைப் போக்குகின்ற வகையில், நீக்குகின்ற வகையில், 575 கோடி ரூபாயை மத்திய அரசிடமிருந்து நமது மாநிலத்திற்குப் பெறுகின்ற வகையில் நமது நடவடிக்கைகள் இருக்க வேண்டும். அதற்காக இந்த மாமன்றத்திலே நல்லதொரு தீர்மானத்தை கட்சி சார்பில்லாமல், ஒருமனதாக நிறைவேற்றி, மத்திய அரசுடன் எதிர்த்துப் போராடி அந்தத் தொகையைப் பெற வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல, 3,500 கோடி ரூபாய் நீங்கலாக, ஒருசில மாநிலங்கள் விடப்பட்டிருந்தால் அவற்றிற்கும், குறிப்பாக ஒருசில மாநிலங்களுக்கு உதவுவதற்கும் 800 கோடி ரூபாயை நிதிக் குழு ஒதுக்கியிருக்கிறது. அந்த 800 கோடி ரூபாயிலேகூட தமிழகத்திற்கு ஒரு பைசாவும் ஒதுக்கப்படவில்லை. ஆகவே, நிச்சயமாக மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையில் நடக்கிறது என்பதை அறிந்துகொள்ளலாம். மத்திய ஆட்சியின் பொறுப்பு ஒரு அம்மையாரிடத்தில் இருந்தாலும்கூட, அவர்கள் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்து வருவது கண்டிக்கத்தக்கது. ஆகவே, நமது மாநில அரசு கட்சி சார்பின்றி, நமது மாநிலத்தின் நன்மைக்காக நமது போர்க் கொடியை உயர்த்தி, இந்த நிதிகளைப் பெற்று, நல்ல முறையிலே தமிழகத்திற்குப் பணி புரிய வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல, திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்த நிலவரத்திலே 1957-62-லும், 1962-67-லும் ஒரு மாநில அளவிலே ஒரு திட்டக் குழு அமைய வேண்டும் என்கிற கருத்தைச் சொல்லிக்கொண்டு வந்தது. அந்தக் கருத்தின் அடிப்படையில்தான் 1971-81 என்ற அளவில் ஒரு நீண்ட காலத் திட்டம் ஒன்றைத் தீட்ட வேண்டும். நமது மாநிலத்தில் இருக்கும் நீர்வளங்கள் தொழில் வளங்கள் இவற்றையெல்லாம் ஆராய்ந்து ஒரு நல்ல திட்டத்தை தயாரிக்க வேண்டும். தொழில் நுட்ப வல்லுநர்கள், நிர்வாகத் திறமையுள்ளவர்கள், பொருளாதார நிபுணர்கள் எல்லாம் திட்டக் குழுவிலே இருந்து நமது மாநிலத்தில் இருக்கும் வளங்களையெல்லாம் ஆராய்ந்து திட்டத்தைத் தயாரிக்கின்ற அளவிலே ஒரு திட்டக் குழு அமையும் என்று ஆளுநர் அவர்களுடைய உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மத்தியிலே கூட்டாட்சி, மாநிலத்திலே சுயாட்சி என்று சொல்கின்ற நிலவரத்தில் திட்டக் குழுக்கள் எல்லாம் மாநில அளவிலே அமைக்கப்பட்டு, மாநிலங்களின் வளத்தின் அடிப்படையிலே திட்டம் தயாரிக்கப்பட்டு நிறைவேற்ற வேண்டும். அதற்கு வேண்டிய பொருளாதார நிதி உதவிகளையெல்லாம் செய்துதர வேண்டும். மாநிலத்திற்குப் பரவலாக அதிகாரங்கள் கொடுக்கப்பட்டு, சுயாட்சி ஏற்பட்டால், மத்தியிலே ஒரு திட்டக் குழு இருக்க வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விடும். அந்தந்த மாநிலத்திலே திட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டு, சுயாட்சி வழங்கப்பட்டு, தொழில் வாய்ப்புக்கள், நீர்நிலை வாய்ப்புக்கள் எல்லாம் கருத்தில்கொண்டு திட்டத்தைத் தயாரித்தால் மாநிலத்தின் உண்மை நிலைகள் தெரிந்து, அதற்கேற்பத் திட்டங்கள் அமைய வேண்டிய வழிவகைகளை உருவாக்க முடியும். கட்சி வித்தியாசம் இல்லாமல் அனைவரும் முனைந்து செயல்பட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

நமது இடைக்கால நிதிநிலை அறிக்கையிலே நமக்கு 35 கோடி ரூபாய் பற்றாக்குறை, அதாவது துண்டு விழுகிறது. இந்தத் தொகை பெரிய தொகையாக இருந்தாலும், நமது அரசு செயல்படுவதிலே, மக்களுக்கு நல்ல பல காரியங்களைச் செய்வதிலே, மக்கள் நலம் பேணுவதிலே பின்னணியில் இருக்கிறதா என்றால், இல்லையென்றே அனைவரும் ஒப்புக்கொள்ள வேண்டும். பிற்பட்டோர் நலனுக்காக ஏற்கெனவே ஒரு துறை கல்வி சம்பந்தமாகவும் அரசு அலுவலகங்களிலே உத்தியோக விஷயம் சம்பந்தமாகவும் இருந்து வந்திருக்கிறது. ஆனால் இன்றைய அரசு பிற்பட்ட மக்கள் வாணிகம், வியாபாரம், தொழில் போன்ற துறைகளிலே ஈடுபட்டு முன்னேறுவதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்து கொடுத்து வருகிறது. பிற்பட்ட மக்களையெல்லாம் எந்தெந்த வகையிலே முன்னேற்றலாம் என்பதற்கான திட்டங்களை வகுத்துச் செயல்படுத்திக் கொண்டு வருகிறது. அதற்காக 3 கோடியே 2 லட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறது. அத்துடன் தாழ்த்தப்பட்ட ஹரிஜனங்களின் முன்னேற்றத்திற்காக 6.7 கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது, பாராட்டத்தக்கது. இந்த அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் எல்லாம் இந்த நாட்டு மக்களால் பாராட்டத்தக்கவை, புகழத்தக்கவை என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தாற்போல தர்மபுரி, இராமநாதபுரம் மாவட்டங்கள் வறட்சியானவை. புஞ்சைப் பயிர்கள் விளைகிற மாவட்டங்கள் பெரிய நீர்நிலைகள், ஆறுகள் இல்லாத மாவட்டங்கள். அந்த மாவட்டங்களின் வறட்சியை

போக்கி முன்னேற்றம் அடையச் செய்வதற்காக மாவட்டம் ஒன்றுக்கு 2 கோடி ரூபாய் என்ற அளவில் பணம் ஒதுக்கப்பட்டு முன்னேற்ற வேலைகள் எல்லாம் அந்த மாவட்டங்களில் நடைபெற்று வருகின்றன. அத்தகைய அக்கறையைக் காட்டி வருகிற, கலைஞர் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசுக்கு நான் தர்மபுரி மாவட்ட மக்களின் சார்பாக நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மு.ப. 9-30 அடுத்தாற்போல தர்மபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களுக்குக் கிராமப் பணித் திட்டம் ஒன்றை எடுத்து நிறைவேற்றவேண்டுமென்று மத்திய அரசுக்கு நம் அரசு பொர்சு செய்திருந்ததாகவும், அதற்கு அவர்கள் இசைவு தந்துள்ள காரணத்தினால் 4 கோடி ரூபாய் அளவில் அந்தத் திட்டம் அந்த மாவட்டத்திலே செயல்படுத்தப்படும் என்றும் காணப்படுகிறது. அதற்காகவும் மீண்டும் மாவட்ட மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல குறிப்பாக சிறப்பாக மத்திய அரசின் கவனத்திற்கு இந்த அரசு ஒரு விஷயத்தைக் கொண்டுவந்தாகவேண்டும். ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் (W.H.O.) உலக சுகாதார அமைப்பு மத்திய அரசினுடைய வேண்டுகோளுக்கிணங்க தர்மபுரி மாவட்டத்தைச் சுற்றிப்பார்த்து சுகாதாரப் பணியில் அந்த மாவட்டத்திற்குத் தேவையான காரியங்கள் என்ன என்பதை ஆராய்ந்து ஒரு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. அந்த மாவட்டத்திற்கு உலக சுகாதார அமைப்பு எந்த எந்த முறையிலே உதவலாம் என்கிற புள்ளிவிவரங்களையும் அறிக்கையின் வாயிலாகச் சமர்ப்பித்திருக்கிறார்கள். நமது மாநில அரசு அதிக நாட்டம்கொண்டு உலக சுகாதார அமைப்பின் வாயிலாக தர்மபுரி மாவட்டத்திற்கு என்ன என்ன உதவிகளை எல்லாம் பெற்றுத் தரமுடியுமோ அவற்றைப் பெற்றுத் தரும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன். அதிலே நாட்டமும், அக்கறையும் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல எனது தொகுதி சின்னாறு நீர்த்தேக்க திட்டம்பற்றி எதிர்க் கட்சியில் இருந்தபோதே நான் சொல்லி வந்திருக்கிறேன். ஆட்சிப் பொறுப்பில் இருந்த காங்கிரஸ்காரர்கள் அதை நிறைவேற்றவில்லை. நமது ஆட்சி அமைந்த பிறகு அந்தத் திட்டத்திற்கு அனுமதி தந்து 30 லட்சம் ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த மார்ச்சுக்குள் அதைப் பயன்படுத்த முடியாது. அந்த நீர்த்தேக்கத் திட்டத் துவக்க விழாவுக்கு நமது முதல் அமைச்சர் அவர்களும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் வந்திருந்து அதை நிறைவேற்றிக் கொடுத்து தர்மபுரி, ஓசூர் வட்டத்தில் இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களுடைய நெடுநாள் குறையை நீக்கித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல, சேலம் இரும்பாலைத் திட்டம் வருமா வருமா என்று ஏங்கிக் கொண்டிருந்த நிலையை மாற்றி, 100 கோடி ரூபாய் அளவில் அந்தத் திட்டத்தை நமது கலைஞர் ஆட்சியில் துவக்கியிருப்பதற்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். சேலம் இரும்பாலைத் திட்டம் செயல்படுகிற நேரத்தில் ஒன்றைக் கவனிக்க வேண்டும். திருச்சி பாய்லர் தொழிற்சாலை ஏற்பட்ட நேரத்தில் வட நாட்டில் இருந்து என்ஜினியர்களை எல்லாம் கொண்டுவந்து போட்டதுபோல அல்லாமல்,

நம்முடைய மாநிலப் பொறியியல் வல்லுநர்களைக்கொண்டே அதை நடத்துவதற்குத் தக்க நடவடிக்கையில் இந்த அரசு ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

***திரு. ஓ. என். சுந்தரம்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மேன்மை தங்கிய ஆளுநர் அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்காக இந்த மன்றத்திற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் 10 நிமிடத்திற்கு மேல் எடுத்துக் கொள்ளக்கூடாது.

திரு. ஓ. என். சுந்தரம்: ஓ எஸ். இந்த மன்றத்திலே முதல் பிரவேசமாக முதல் தேதி என்னுடைய பேச்சைத் துவங்குகிறேன். மதுரை மாவட்டம் திண்டுக்கல் தொகுதியில் இருந்து, எதிர்க்கட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கும் ஒரு பொறுப்புள்ள உறுப்பினன் என்ற முறையில் நமது அரசின் ஆக்கப்பணிகளுக்கு எங்கள் ஆதரவைத் தெரிவித்தும், ஆங்காங்கே தவறிவிடக்கூடிய குறைகளை எடுத்துச் சொல்லியும் செயல்படுவேன் என்பதை நான் இந்தச் சபையின் வாயிலாக உறுதி கூறுகிறேன்.

மேன்மை தங்கிய ஆளுநர் உரையிலே, தேர்தல் அமைதியாக நடந்தது என்று குறிப்பிட்டுள்ளார்கள். தேர்தலிலே நமது மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதுபோல ஆங்காங்கு வன்முறைச் சம்பவங்கள் நடந்திருக்கின்றன. வாக்காளர் பட்டியல் சரியான முறையில் தயாரிக்கப்படவில்லை என்பதாக மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். வாக்காளர் பட்டியலில், குறிப்பாக சேர்த்தல், நீக்கல் சரியான முறையில் செய்யப்படவில்லை என்பதை நானும் இந்தச் சபையின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அப்படிப்பட்ட நிலைமையில் இந்தத் தேர்தல் சுதந்திரமாக, பாரபட்சமின்றி நடந்ததாக முழுக்கச் சொல்ல முடியாது. குறிப்பாக என் தொகுதியைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால் தேர்தல் தினத்தன்று பாரதிபுரம் வாக்குச் சாவடியில் என்னுடைய காரைக் கல்லால் எறிந்து தாக்கிவிட்டார்கள். என்னுடைய கட்சித் தொண்டர்களும், நாங்களும் மிகவும் பொறுமையாக, அமைதியாக நடந்துகொண்டு ஓரளவு தேர்தலை முடித்துவிட்டோம்.

முஸ்லிம் லீக் மெம்பர் ஒருவர் இன்றையச் செய்தித் தாளில் அந்தத் தொகுதியில் அவர்களுடைய கட்சி வெற்றி பெறுததற்குக் காரணம், வாக்காளர் பட்டியலில் உள்ள குறைபாடு என்று சுட்டிக்காட்டியிருக்கிறார். சேர்த்தல், நீக்கல் சரியான முறையில் அமையவில்லை என்பதை ஓரளவு நானும் ஒத்துக் கொள்கிறேன். வாக்காளர் பட்டியலில் 3 ஆயிரம் பேர் நீக்கப்பட்டார்கள். 8 ஆயிரம் பேர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்றாலும் அந்த 8 ஆயிரம் பேர்களும் பெரும்பாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வாக்காளர்களாகத்தான் இருந்தார்கள் என்பதை வோட்டு சேகரிக்கப்போனபோது அறிந்தேன். ஆக, இந்தத் தேர்தலில் அவர்கள் இந்த ஒரு காரணத்தினால் மட்டும் தோல்வி அடையவில்லை. சாதியை வைத்து வோட்டுக் கேட்டார்கள். முஸ்லிம் வாக்காளர்கள் தங்களுக்கு வோட்டுப் போடவில்லை என்றாலும்,

காங்கிரசுக்கு வாக்களித்தார்கள் என்றாலும், தங்கள் இனத்தவருக்கு வோட்டுப் போடவில்லை என்றால் ஆண்டவன் அவர்களை மன்னிக்க மாட்டான் என்பதாகக் கூட பல நிர்ப்பந்தங்களைக் கொண்டுவந்தார்கள்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : திண்டுக்கல் தொகுதி உறுப்பினர் அவர்கள் அந்தத் தொகுதியில் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள் அங்கே வகுப்பு வாதத்தைக் கிளப்பினார்கள் என்று பேசுகிறார்கள். சிறுபான்மை வகுப்பு வகுப்புவாதத்தைக் கிளப்பி லாபம் அடைவதைவிட பெரும்பான்மையானவர் வகுப்பு வாதத்தைக் கிளப்பி லாபம் அடைவதுதான் முடியும். அவர் கூறுவது உண்மைக்குப் புறம்பானது என்று சொல்ல விரும்புகிறேன்.

திரு. ஓ. என். சுந்தரம் : மாண்புமிகு உறுப்பினர் சொல்வதை நான் ஒத்துக் கொள்வதற்கில்லை. அந்தத் தொகுதியில் முஸ்லிம்கள் பெரும்பான்மையோராக உள்ளார்கள். முஸ்லிம்கள் 25 ஆயிரம் பேர்கள், 30 ஆயிரம் பேர்கள் உள்ள தொகுதியிலே நான் போட்டியிட்டேன். அவர்கள் அங்கே அந்த முறையிலேதான் பலமான பிரச்சாரம் செய்தார்கள். ஆனால் அந்தத் தொகுதியிலே உள்ள மக்களும் தேசியப் பற்றுள்ள முஸ்லிம்களும் என்னைத் தேர்ந்தெடுத்தார்கள். அதற்காக நான் அந்தத் தொகுதி வாக்காளப் பெரு மக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இந்தச் சந்தர்ப்பத்திலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU M. A. LATHEEF : He is making such wide allegations against one community. It is not supported or substantiated by evidence. In my constituency I would respectfully submit to my learned friend. . .

THIRU R. PONNAPPA NADAR : That is not an issue.

(Thiru M. A. Latheef rose).

MR. SPEAKER : When the Chair is on its legs the hon. Member should not stand.

(Thiru M. A. Latheef resumed his seat).

MR. SPEAKER : These are not wide allegations. These are matters of opinion. You express one opinion and another hon. Member expresses another opinion. Whether the information is correct or incorrect is another different question. These are expressions, matters of opinion. To some it is mild and to some it is wild. It is all according to their interpretation. There is no point of order. I may also point out that the hon. Member need not interrupt other hon. Members when they are speaking. He has ample opportunities to say what he has to say when his turn for speaking comes. It is not necessary to establish anything by interruption. When it is not interrupted, it does not mean that we hold that view or subscribe to that view. There should be a real point of order for any interruption. The Hon. Chief Minister has said yesterday that there need not be interruption while Members are speaking.

THIRU V. M. ABDUL JAFFAR : But the hon. Member is giving false information

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருக்கும் வாய்ப்புகள் இருக்கின்றன. பல்வேறு சந்தர்ப்பங்கள் பேசுவதற்கு இருக்கின்றன. ஒரு கருத்தை ஒருவர் சொல்கிறார் என்பதாலேயே அந்தக் கருத்தே எல்லோருக்கும் சம்மதமானது, உலகத்திற்கே முடிவானது என்று கொள்ளமுடியாது. அவரவர்களுக்கு அவரவர்களுடைய அபிப்பிராயங்கள் இருக்கலாம். அவரவர்களுடைய அபிப்பிராயங்களைச் சொல்வதற்கும், அவற்றைப்பற்றி விவாதிப்பதற்கும் தவறைத் திருத்திக் கொள்வதற்கும், மேலானவற்றை எடுத்துக் கொள்வதற்கும்தான் நாம் கருத்துக்களைத் தெரிவிக்கிறோம். அவர்கள் 'சிறுபான்மையோரால்' என்றார்கள், இவர்கள் 'பெரும்பான்மையோரால்' என்றார்கள். இரண்டுவிதமான கருத்துக்கள் இருக்கின்றன. ஒழுங்குப் பிரச்னைகள் வருகின்றபோதுதான் குறுக்கிடலாமே தவிர, ஒவ்வொரு விஷயத்திலும் குறுக்கிடுவது என்பது இந்த மன்றத்தினுடைய மரபு அல்ல. அதை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்தில்கொண்டு பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஓ. என். சுந்தரம்: அடுத்து, மேன்மை தங்கிய ஆளுநர் அவர்களின் உரையின்மீது ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பொறுத்தவரையில் இந்த அரசு சீரிய முறையிலே முயற்சிகள் எடுத்துக்கொண்டு இருப்பதை நான் பாராட்டத் தவறவில்லை. வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காக உபாத்தியார்களுக்கும், பொறியாளர்களுக்கும் செய்கின்ற உதவியைப்போல் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு வேலையில்லாமல் இருப்பவர்களுக்கும், கல்லூரியிலே படித்துப் பட்டம் பெற்றுவிட்டு வேலைவாய்ப்பில்லாமல் இருக்கின்றவர்களுக்கும் ஒரு திட்டத்தை அரசு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த மன்றத்தின் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன். எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சிலே வேலைக்கு மனுப்போட்டு ஒரு ஆண்டுவரை வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கின்றவர்களுக்கு சர்க்கார் நிவாரணமாக ஒரு தொகையை வழங்கவேண்டும். அப்படிக் கொடுக்க, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிதிநிலைமை சரியில்லை என்று சொல்வார்களானாலும்கூட அவர்களுக்கு என்று ஒரு நிதி ஏற்படுத்தி ஒரு ஆண்டு வரையில் வேலையில்லாமல் இருக்கின்றவர்களுக்கு அதற்குமேல் கடனாகவாவது ஒரு தொகையைக் கொடுக்க வேண்டும். அந்தத் தொகையை அவர்கள் வேலைக்குச் சேர்ந்தவுடன் தவணை முறைகள் மூலம் திரும்பப் பெற்றுக் கொள்ளவேண்டும். இந்த மாதிரியான சில கருத்துக்களை நான் வைக்கிறேன் என்று சொன்னால் . . (மணியடிக்கப்பட்டது) அதிகமாக அவர்கள் குறுக்கிட்டு நேரத்தை எடுத்துக்கொண்டார்கள். என்னுடைய தொகுதியைப்பற்றிப் பேசவேண்டியிருக்கிறது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லா உறுப்பினர்களும் அவரவர்களுடைய தொகுதிகளைப்பற்றிப் பேசவேண்டும். இன்றைக்கு இங்கே இருபத்தைந்து உறுப்பினர்கள் பேசுவதற்குப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். நேற்றே நம்முடைய மன்றத்து நிகழ்ச்சிகளிலே வினா-விடை இல்லாது இருந்தும், 20 பேர்கள்தான் விவாதத்திலே கலந்துகொள்ள முடிந்தது. இன்றைக்கு 25 பேர்கள் பெயர் கொடுத்திருக்கின்றனர். நாளைக்குத்தான் இந்த

விவாதம் கடைசி நாள். கட்சித் தலைவர்களும் பேசவேண்டும். முதலமைச்சர் பதிலுரையும் இருக்கிறது. இந்த மன்றமும் இரண்டு மாதங்களுக்குப் பின்புதான் கூடப்போகிறது. எனவே, பெரும்பாலான உறுப்பினர்கள், தங்கள் தொகுதிகளின் சார்பாகத் தாங்களும் கலந்து கொண்டோம் என்ற மனத் திருப்திக்காவது பேசவேண்டுமென்று சொல்கிறார்கள். உங்களுக்குப் பத்து நிமிடங்கள். இன்னும் போகப் போக நேரம் குறையும். இப்பொழுது 10 நிமிடங்கள் ஒரு உறுப்பினருக்கு என்று வைத்து இருக்கிறோம். இந்த நேரமே கூட இன்னும் போகப் போகக் குறைய இருக்கிறது. அதையெல்லாம் கவனத்தில் கொண்டு பேச வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஓ. என். சுந்தரம்: அந்தத் திட்டம்பற்றி ஒரு 'நான் அம்பிரியல் பில்'லாக நானும் மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னப்ப அவர்களும் கொடுத்து இருக்கிறோம். அதைப்பற்றி ஆவன செய்யவேண்டும்.

அடுத்து, என்னுடைய தொகுதியிலே குடிநீர்ப் பிரச்னை வேதனை தருவதாக இருக்கிறது, மக்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. அதைத் தீர்ப்பதற்கு ஆவன செய்யவேண்டும்.

என்னுடைய நகராட்சியிலே ஜனத் தொகைப் பெருகியிருக்கிறது. அதை ஒரு ஸ்பெஷல் கிரேட் முனிசிபாலிடியாக ஆக்கவேண்டுமென்றும், அந்த நகரம் ஒரு சரித்திரப் பிரசித்திபெற்ற நகரம், வியாபார கேந்திர ஸ்தலமாக இருக்கிறது. அங்கே ஒரு பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப் பகுதிகளில் உள்ள ரோடுகளைச் சீர்திருத்த மான்யங்களைப் பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. கு. திருப்பதி:** மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையிலே மேதகு ஆளுநர் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிப்பதற்கு முன்னால் இந்த அவையிலே நன்றி தெரிவிப்பதற்குக் காரணமாக இருந்தவர்களுக்கு முதலிலே நன்றி தெரிவித்துக் கொள்ள அனுமதி வேண்டுகிறேன். எங்களையெல்லாம் ஆளாக்கிய எங்களது பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டாவதாக, இந்த நாட்டில் இரண்டாவது பேரறிஞரும், இலக்கியச் செல்வமும், எங்களுக்கெல்லாம் இருக்கிற ஒரே ஒரு தலைசிறந்த வழிகாட்டியுமான தமிழகத்தின் முதல்வர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய வாழ்நாள் நன்றிக்கடனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிப்பதற்கு முன்னால் மற்றொன்றுக்காகவும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். மதுரையிலிருந்து நான் இங்கே வரும்பொழுது நகராட்சி உறுப்பினர் என்ற முறையிலே வந்து, இப்பொழுது திரும்பிச் செல்லும்பொழுது மதுரை மாநகராட்சி என்ற மகிழ்ச்சியான செய்தியைக் கொண்டு செல்லுகின்ற அளவுக்கு ஒரு நல்ல அறிவிப்பைத் தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்

களுக்கு மதுரை முனிசிபல் கவுன்சிலர் என்ற முறையில் அந்த நகராட்சியின் சார்பாகவும், மதுரை மத்திய தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையில் மதுரை பெருமக்களின் சார்பாகவும், மதுரை நகர திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலாளர் என்ற முறையில் நகர் திராவிட முன்னேற்றக் கழகக் கிளையின் சார்பாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரையிலே ஏழை எளியவர்கள் எப்படியெல்லாம் வாழ வேண்டுமென்பதைச் சுட்டிக்காட்டி, அந்த மக்கள் மீது நல்ல அன்பு வைத்திருக்கிறார்கள் என்பதற்குப் பல திட்டங்களையெல்லாம் நமக்கு அவர்களின் உரையின் மூலமாகத் தந்ததற்கு அவர்களுடைய உரை சிறந்த உரை, வரவேற்கத்தக்க உரை என்று சொல்லி, அந்த உரைக்காக மேதகு ஆளுநர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆளுநர் அவர்களின் உரையில் பல நல்ல அம்சங்கள் இருக்கின்றன.

உதாரணமாக, பருப்பு வகை உற்பத்தியைப் பெருக்கும் திட்டம், சிறு தொழில் வளர்ச்சிக் கழகம், கூட்டுறவுத்துறையில் பல தொழிற்சாலைகள், நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக நிறைவேறும் சட்டங்கள் முறையாகச் செயல் படுத்தப்படுகின்றனவா என்பதனைக் கண்காணிக்க மாநில அளவில் முதலமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு குழு, புன்செய்ப் பண்ணைத் திட்டங்கள், சிறு உழவர்கள் மேம்பாட்டு நிறுவனங்கள், நில-நீர் வள இயக்குநர் அலுவலகம், நிலவள வங்கிகள், அதிக விளைச்சல் தரும் நெல் விதை வகைகளைப் பரவலாக்கும் திட்டம், நெட்டிழைப் பருத்தி, விவசாயிகளுக்கான குறுகிய காலக் கடன், நீண்ட காலக்கடன், சேலம் உருக்காலை, தூத்துக்குடி உரத் தொழிற்சாலை, குடிசைப் பகுதி மாற்று வாரியம், மத்திய அரசு ஊழியர்களுக்கும் மாநில அரசு ஊழியர்களுக்கும் வித்தியாசமில்லாத சம்பளம், மாநிலத் திட்டக்குழு போன்ற பல நல்ல அம்சங்கள் எல்லாம் மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் இருப்பதால், அந்த உரை இந்த நாட்டு மக்களுக்கு நல்ல முறையில் பயன்படக்கூடிய உரை என்று சொல்லி, அதற்கு என்னுடைய நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் உரையில் இரண்டாவது பக்கத்திலே உள்ள ஒரு பாராவை வாசிப்பதற்கு என்னை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். "அண்மையில் நடைபெற்ற தேர்தல்கள் ஆளும் கட்சிக்குச் சாதகமாக தெளிவான, திட்டவட்டமான முறையில் தீர்ப்பளித் துள்ளன. சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கும் பெருவாரியான மக்கள், தங்களுடைய இடைவிடாத் துயரங்களுக்கு விடிவு காண்பதற்கும், வறுமை, இன்னல் இவற்றிலிருந்து மீண்டு கரையேறுவதற்கும் இவ்வரசை ஆவலோடு எதிர் நோக்கி நிற்கின்றனர் என்று இந்த அரசு நம்புகிறது" என்று ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த வாசகம் நூற்றுக்கு நூறு உண்மை என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஏனென்றால், நடைபெற்ற தேர்தலின்போது இந்த நாடு மிகத் தெளிவாகத் தெரிந்திருக்கிறது.

[திரு. கு. திருப்பதி] [1971 ஏப்ரல் 1

இந்த நாட்டிலேயுள்ள ஒருசில கட்சிகள் இரண்டு அணிகளாகச் சேர்ந்திருந்தன. ஒன்று, முற்போக்குக் கூட்டணி, மற்றொன்று ஜனநாயகக் கூட்டணி என்று இரண்டு அணிகளாக நின்றன. முற்போக்குக் கூட்டணியைச் சேர்ந்த நாங்களெல்லாம் தேர்தலில் வாக்குக் கேட்கும்பொழுது, இந்த நாடு நல்ல முறையிலே இருக்க வேண்டுமென்றால், ஏழை எளியவர்கள் வாழ வேண்டுமென்றால், கலைஞர் அவர்களின் கரத்தை வலுப்படுத்த வேண்டுமென்று நினைத்தால் முற்போக்குக் கூட்டணியினருக்கு வாக்களியுங்கள் என்று கேட்டோம். அதைப்போலவே, ஜனநாயகக் கூட்டணியிலே இருந்தவர்கள் எங்கள் அரும் பெரும் தலைவர் காமராஜர் அவர்கள் கரத்தை வலுப்படுத்த வேண்டுமென்று கேட்டார்கள். ஆனால் இந்த நாட்டு மக்கள் இன்றைக்கு இருக்கும் சூழ்நிலையில் கலைஞர் அவர்களின் கரத்தைத்தான் வலுப்படுத்தவேண்டும். அதுதான் சரியானது என்று கலைஞரின் கரத்தை வலுவுள்ளதாக்கியிருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் காமராஜரின் கரத்தை வலுவில்லாததாக ஆக்கியிருக்கிறார்கள், ரொம்பவும் வலுவில்லாத ஒரு கரமாக்கி விட்டார்கள் என்பதற்காக உண்மையிலேயே என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நான் சொல்லுவதற்குக் காரணம், நம்முடைய ஆளுநர் அவர்களின் உரையில், மக்கள் அளித்துள்ள தீர்ப்பை எல்லாப் பிரிவினரும் ஏற்றுக்கொள்ளவும் வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு தேர்தலின்போது அங்கே நடைபெற்ற முடிவுகளைப் பொறுத்து எந்தக் கட்சியாக இருந்தாலும் நல்ல மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான் இயற்கை. ஆனால் இங்கேயிருக்கும் காங்கிரஸ் நண்பர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், நடைபெற்ற தேர்தலின்போது அராஜகம் விளைந்துவிட்டது, வன்முறைகள் பெருகிவிட்டன என்றெல்லாம் அவர்கள் சொல்கிறார்கள். அந்தக் காங்கிரஸ் நண்பர்களை வேண்டிக்கொள்வதெல்லாம், தேர்தலிலே யாராவது வெற்றிபெறுவதும் ஒருவர் தோற்பதும் இயற்கை. ஆனால் அதற்காக இல்லாததைச் சொல்லக்கூடாது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏனென்றால் தேர்தல் முடிந்த பிறகு, ஒரு ஜனநாயகத்தில் தோல்வியைத் தழுவிக்கொள்வதென்றால் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் அதற்குள்ளாக சில காங்கிரஸ் நண்பர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், தேர்தலில் தோற்றுப்போனவர்கள் எதையாவது காரணம் சொல்ல வேண்டும் என்பதற்காக, முன்பு 1952 தேர்தலின்பொழுதெல்லாம், தேர்தலில் தோற்றுப் போன கட்சியைச் சேர்ந்தவர்களில் படிக்காதவர்கள், விவரம் தெரியாதவர்கள், பாமர மக்கள் என்ன சொல்வார்கள் என்றால், பெட்டியை மாற்றி விட்டார்கள் என்று சொல்வார்கள். அந்த நேரத்திலே மஞ்சள் பெட்டி, வெள்ளைப் பெட்டி என்ற முறையில் ஒவ்வொரு அபேட்சகருக்கும் ஒரு பெட்டி இருக்கும். விவரம் தெரியாதவர்கள், மாற்ற முடியாது என்பதைத் தெரியாத காரணத்தால், பெட்டியை மாற்றிவிட்டார்கள் என்று சொல்வார்கள். ஆனால் 71-இல், நல்ல அரசியல் ஞானம் உள்ள சில கட்சியைச் சார்ந்தவர்கள்கூட, பெட்டியை மாற்றி விட்டார்கள் என்று அந்தப் பாமர மக்கள் 52-இல் சொன்னதைப்போல் 71-லேயும், இன்னும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நினைக்கும் பொழுது உண்மையிலேயே வருத்தமாக இருக்கிறது. அப்படிச் சொல்லும் முறையை மாற்றி நல்லதொரு உண்மையை இந்த நாட்டுக்குச் சொல்ல வேண்டும், அது அவர்களது கட்சி கணிசமான இடத்தைப் பெறுவதற்கு உதவிகரமாக இருக்கும் என்பதை மட்டும் சொல்லிக்கொள்கிறேன்.

1971 ஏப்ரல் 1] [திரு. கு. திருப்பதி]

வன்முறையைப் பற்றி அவர்கள் சொன்னார்கள். ஏதோ ஒரு கட்சியில் தோற்றுவிட்டோம் என்பதற்காக வன்முறை காரணமாகத் தோற்றுவிட்டோம் என்று சொல்கிறார்கள். அவர்கள் சொல்கிறார்கள் என்பதற்காக நான் சொல்லவில்லை. ஆனால் நடந்த சம்பவங்களில் ஒன்றிரண்டையாவது சொல்வது நியாயம் என்பதற்காகச் சொல்கிறேன்.

மதுரையில், தேர்தல் காலத்தில், மேல மாசி வீதியிலே கழகக் கொடியை வெட்டி விட்டார்கள். தேர்தலுக்கு ஒரு வாரத்திற்கு முன்பு, சில கழகத் தோழர்கள் என்னிடத்தில் சொன்னார்கள். நான்கூட அங்கிருந்த போலீஸ் அதிகாரியைக் கேட்டேன், எங்கள் கழகக் கொடியை வெட்டியிருக்கிறார்கள், ஏன் வெட்டினார்கள் என்று கேட்டதற்கு அவர் சொன்னார், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒரு நடிகரைக் குத்திவிட்டார்கள் என்று எண்ணி கழகக் கொடியை வெட்டியிருக்கிறார்கள் என்றார். அப்படியென்றால் தாங்களாகவே அவர்களுடைய நடிகரைக் குத்திவிட்டார்கள் என்று கற்பனையாக எடுத்துக் கொண்டு, அதற்காகக் கழகக் கொடியை வெட்டி இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, இந்த மாமன்றத்தின் உறுப்பினர் திரு. எம்.ஜி.ஆர்., அவர்கள் மதுரைக்கு வந்தபொழுது கடந்த நான்காம் தேதி அவர்கள் வடக்கு மாசி வீதியில் வரவிருக்கின்ற கொஞ்ச நேரத்திற்கு முன்பு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் பானை கட்டி வைத்திருக்கிறார்கள். ஊர்வலம் வருவதற்குக் கொஞ்ச நேரம் முன்புதான் பார்த்தோம். அந்தச் சட்டியிலே சாணியைக் கரைத்து வைத்திருந்தார்கள். அதுமட்டுமல்ல, திராவகம் போன்று இருந்தது என்றும் சொல்கிறார்கள். அது ஒருவேளை அக்கினித் திராவகமாக இருந்தாலும் இருக்கும் என்று சந்தேகப்படுகிறார்கள். இந்த அளவிற்கு காங்கிரஸ் நண்பர்கள் செய்துவிட்டு, இங்கே வந்து அம்மாதிரியானவற்றையெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் செய்தார்கள் என்பது போல் பேசுகிறார்கள் என்றால் இந்த மாமன்றத்தின் உரிமையை அவர்கள் பயன்படுத்திக் கொள்ள நினைக்கிறார்கள் என்பதை மட்டும் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை ஒன்று கேட்டுக்கொள்கிறேன். மதுரை நகராட்சியை நீங்கள் மாநகராட்சியாக ஆக்கியிருக்கிறீர்கள். நீங்கள் மதுரைக்கு வரும்பொழுது எங்கள் மதுரை மக்கள் உங்களை உற்சாகத்துடன் வரவேற்பார்கள், உங்கள் வருகையை எப்போதும் எதிர்பார்த்துக் கொண்டேயிருப்பார்கள். நீங்கள் மதுரைக்கு வரும்பொழுதெல்லாம் எங்களுக்கு ஒவ்வொரு தடவையும் ஒரு பரிசைத் தந்திருக்கிறீர்கள்.

இந்தத் தடவை மதுரைக்கு வரும்பொழுது மதுரைக்கு ஒரு ரேடியோ நிலையத்தைத் தருவீர்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, ஒரு கன ரக இயந்திரத் தொழிற்சாலை கேட்க வேண்டும் என்று மதுரை மக்கள் என்னிடம் சொல்லி அனுப்பியிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் நிறைவேற்றித் தரவேண்டும் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதுவொன்றும் சிரமமாக இருக்காது என்று கருதுகிறேன். ஏனென்றால் மேதகு ஆளுநர் அவர்களின் உரையில், சோடியம் ஹைடிரோ சல்பைட் தயாரிப்பதற்கு ரூ. 1.5 கோடி செலவிலும், டயர்கள் தயாரிப்பதற்கு ரூ. 5.5 கோடி செலவிலும், உவர்க்காரம்

[திரு. கு. திருப்பதி] [1971 ஏப்ரல் 1

தயாரிப்பதற்கு ரூ. 6 கோடி செலவிலும் தொழிற்சாலைகள் நிறுவுதற்கு தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் அனுமதி பெற்றுள்ளது என்று இருக்கிறது. ஆகவே, இவற்றில் ஏதாவது ஒன்றையாவது அங்கு ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேலையில்லாத் திண்டாட்டம் மதுரையில் அதிகமாக இருக்கிறது. அதைப் போக்குவதற்காக நீங்கள் தயவு செய்து இவற்றிலே ஒரு தொழிற்சாலையை அங்கு அமைக்கலாம். இது இல்லாவிட்டால் புதிதாக ஒரு பெரிய தொழிற்சாலையை நீங்கள் மதுரைக்கு ஏற்படுத்தித்தர வேண்டுமென்று முதல்வர் அவர்களை மிகப்பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் சேலம் உருக்காலையைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. உண்மையிலேயே, வேலையில்லாத் திண்டாட்டம் பெருமளவில் இருக்கும் இந்தத் தமிழகத்தில் சேலம் உருக்காலை வருவது உண்மையிலேயே வரவேற்கத் தக்கதாகும்.

அதுமட்டுமல்ல, கூட்டுத் துறையின் அடிப்படையில் தூத்துக்குடியில் அமைக்கப்படவிருக்கும் ரூ. 60 கோடி மதிப்புள்ள உரத்தொழிற்சாலையை நிறுவ இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது என்று மேதகு ஆளுநர் அவர்களின் உரையிலே இருக்கிறது. இந்த நேரத்தில் ஒன்றை மட்டும் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நம்முடைய நிஜலிங்கப்பா தலைமையில் உள்ள காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் மதிப்பிற்குரிய திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசும்பொழுது இந்தத் தமிழகத்திலே வடக்கு வளர்கிறது, தெற்கு தேய்கிறது என்று ரொம்பவும் வருத்தப் பட்டார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு தூத்துக்குடியிலே 60 கோடி ரூபாய் செலவில் உரத் தொழிற்சாலை அமைவது அவர்களது தாபத்தைத் தணிப்பதாக இருக்கும் என்று கருதுகிறேன். இந்தத் திராவிட முன்னேற்றக் கழக அரசில் வடக்கு வாழவும் இல்லை, தெற்கு தேயவும் இல்லை, எல்லாப் பகுதிகளும் சரிசமமாகத் தான் கவனிக்கப்படுகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களுக்குப் பயன்படும் வகையில் தமிழ்நாடு அரசுத் தொழில் மேம்பாட்டுக் கழகம் திறுவப்பட்டிருக்கிறது. எனவே வடக்கு வாழவில்லை, தெற்கு தேயவில்லை, ஒரேசீராகத்தான் இருக்கிறது.

வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குகின்ற முறையில், மாநிலத் திட்டக் குழு அமைக்கவிருப்பதால் இந்த உரை அருமையான உரை, மிக நல்ல உரை, தேர்த்தியான உரை என்று தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. சோ. அழகர்சாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
மு ப. 1-00 மேன்மைதங்கிய ஆளுநர் அவர்களின் உரைமீது சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன்.

அண்மையில் நடந்த வரலாற்றுப் புகழ் வாய்ந்த தேர்தலைப் பற்றிப் பல உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தார்கள். இந்தத் தேர்தல் சாதாரண, பாடுபடக்கூடிய ஏழை எளிய மக்கள், உழைக்கக்கூடிய மக்கள் என்ற நிலையிலே உள்ளவர்கள், ஆதிக்கம் செலுத்தக்கூடிய, சுரண்டக் கூடிய ஆதிக்கக்காரர்கள் என்று உள்ளவர்கள், இவர்கள் இரண்டு பக்கங்களில் நின்று, சமாதான பூர்வமாக நடத்திய வர்க்கப் போராட்டமாக இந்தத் தேர்தல்

1971 ஏப்ரல் 1] [திரு. சோ. அழகர்சாமி]

அமைந்தது. நாட்டிலே உழைக்கக்கூடிய, பாடுபடக்கூடிய மக்கள் அளித்த தீர்ப்பினால் அவர்களின் பிரதிநிதிகள் மிகப் பெரும்பான்மையான வெற்றி பெற்றிருக்கிறார்கள். அவர்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. கஷ்டம் நீங்கி நல்ல வழி பிறக்கும் என்று மக்கள் நம்புகிறார்கள்.

நான் வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஆளுநர் உரைமீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கோவில்பட்டி தாலுகாவைப் போன்று, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் சில பகுதிகள், சங்கரன்கோவில் தாலுகா ஆகியவைகள் வறட்சியான நிலையில் இருந்து வருகின்றன. இதைப் பற்றி ஆளுநர் அவருடைய உரையிலே கூறியிருக்கிறார்கள். திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை மாவட்டங்கள் போன்ற சில இடங்களில் வறட்சி நிலைமை நீடித்துக் கொண்டு வருகிறது. என்னுடைய பகுதியில் விவசாயிகள் படக்கூடிய கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல.

குறிப்பாக விவசாயிகள் வேலை இல்லாமல் அங்கிருந்து 20, 30 மைல் உள்ள தூத்துக்குடி போன்ற இடத்திற்குச் சென்று அங்கும் வேலை கிடைக்காமல் திரும்பவும் கோவில்பட்டித் தாலுகாவிற்கே வந்து கஷ்டமான நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவித வேலையும் இல்லாத நிலையிலே இருந்து கொண்டு இருக்கிறார்கள். பல கிராமங்களில் இப்படிப்பட்ட நிலையிலே இருந்து வருகிறார்கள். இப்படிப்பட்ட நேரத்திலே அவர்கள் விவசாயத்திற்காகவும், வேறு காரியங்களுக்காகவும் வாங்கிய கடன்களை, அவர்கள் வருமானம் இல்லாமல் கஷ்டமான நிலையில் இருக்கும்போது, அரசாங்க அதிகாரிகள் கடுமையான முறையிலே அவர்கள் வாங்கிய கடன்களை நிர்ப்பந்தமாக வசூல் செய்கிற நிலைமை இருந்து வருகிறது. பல தடவை அதிகாரிகளிடம் எடுத்துச் சொல்லப்பட்டது. விவசாயத்திற்காகவும், வேறு பல காரியங்களுக்காகவும் அவர்கள் வாங்கிய கடன்களை விவசாயத்திற்காகச் செலவு செய்தும் எந்தவித வருமானமும் இல்லாத பஞ்ச நிலைமையில் அவர்களிடமிருந்து திருப்பி வசூல் செய்வதிலே அதிகாரிகள் ஈடுபட்டிருக்கிறார்கள். உணவுப் பஞ்சத்தைப் போக்குவதற்கும், விவசாயத்தைத் தீவிரப்படுத்தி உற்பத்தியைப் பெருக்குவதற்கும் அவர்கள் வாங்கிய கடனைச் சரியாகத் திரும்பச் செலுத்த முடியவில்லை. இந்தக் கஷ்டமான நிலைமையிலே அவர்கள் வாங்கிய கடனைத் திருப்பித்தர வேண்டும் என்று நிர்ப்பந்தமாக வசூல் செய்யப்படுகிறது.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில் கோவில்பட்டி தாலுகாவில் சென்ற நான்கு ஆண்டுக்காலமாக மழையே இல்லாமல் எந்தவிதமான வேலையும் விவசாயத் தொழிலாளர்களுக்கு இல்லாத நிலைமை இருந்து வருகிறது. வறட்சி நிலை இருந்து வருகிறது. பல இடங்களில் தீவிரமாக வறட்சி இருந்து வருகிறது. எந்தவிதமான காரியமும் அந்த வட்டாரத்தில் செய்ய முடியவில்லை. வேளாண்மை மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. விவசாயத் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான வேலை வாய்ப்பும் இல்லை.

அந்த வட்டாரத்தில் உள்ள மக்களுக்குக் குடிக்கக் கூடத் தண்ணீர் இல்லாமல் மிகவும் கஷ்டப்படக்கூடிய நிலை இருந்து வருகிறது. அவர்கள் வாங்கிய விவசாயக் கடன், கூட்டுறவுக் கடன், அரசாங்கக் கடன், மற்றும் தனிப்பட்ட லேவாதேவிக்காரர்களிடம் வாங்கிய கடன் இவைகளைத்

திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் கஷ்டமான பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நேரத்திலே அவர்கள் வாங்கிய கடன்களை எல்லாம் திரும்பச் செலுத்த வேண்டுமென்று அரசாங்கம் கட்டாயப்படுத்துகிறது என்பதை முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தனிப்பட்ட லேவாதேவிக்காரர்கள் ஒன்றுக்கு நான்கு மடங்காக எழுதி வாங்கிக்கொண்டு கடன் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் கோர்ட் ஜப்தி மூலம் இந்த விவசாயிகளுக்குத் தொந்தரவு கொடுத்து வருகிறார்கள். விவசாயிகள் இந்தக் கடன் தொல்லையால் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய முறையில் விரிவான ஒரு கடன் நிவாரணச் சட்டத்தை, இந்த வறிய எளிய விவசாயப் பெருங்குடி மக்களின் துன்பத்தைத் துடைப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வருவார் என்று நான் நம்புகிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் பல கிராமங்களில் குடி தண்ணீர்கூடக் கிடைப்பதில்லை. நான்கைந்து மைல் தொலைவு சென்றுதான் குடிதண்ணீர் கொண்டு வர வேண்டியிருக்கிறது. என்னுடைய தொகுதியில் கோவில்பட்டி பெரிய நகரம். இங்கு குடிதண்ணீர்த் திட்டத்திற்காக அரசாங்கம் முயற்சி எடுத்து எல்.ஐ.சியிடமிருந்து ஒரு கோடியே எட்டு லட்சம் ரூபாய் கடனாகப் பெற்று, அது நிறைவேற இருக்கிறது. இந்தத் திட்டத்தை அரசாங்கம் சாங்ஷன் செய்திருக்கிறது. இந்த வேலை துரிதமாக நிறைவேற்றப்பட்டால்தான் அங்குள்ள மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினை தீரும். இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற அரசாங்கம் முயற்சி செய்ய வேண்டும். கிராமப்புற குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு துயர் துடைப்பு நிதியிலிருந்து நிதி ஒதுக்கி, குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று முதலமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

துயர் துடைப்புப் பணிக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை மிகக் குறைவு. 1970-71-ம் ஆண்டிற்கு இந்தப் பணிக்கு 183 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் 1971-72-ம் ஆண்டிற்கு 66½ லட்ச ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் இந்த 4 மாத காலத்திற்கு 5 லட்ச ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது மிக மிகக் குறைவு. நம்முடைய மாநிலத்தில் இந்த மாதிரி நேரத்தில் கொஞ்சம் வேலை துவக்கப்பட்டிருக்கிறது. ஆங்காங்குள்ள கண்மாய்கள், குளங்கள் சரி செய்யப்பட்டு விவசாயத்திற்கு வருகின்றன. ஆனால் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை மிக மிகக் குறைவு, இந்தப் பகுதியில் ஏற்பட்டுள்ள பஞ்சத்தைப் போக்கவும், அங்குள்ள விவசாயிகள் சரியான முறையிலே விவசாயம் செய்வதற்கு வேண்டிய முறையிலும் இந்த நிவாரண வேலைகளைத் தீவிரமாக நடைமுறைப் படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயம் சம்பந்தப்பட்டமட்டில் கூட்டுறவுக் கடன் அதிகமாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. விவசாய குறுகிய காலக் கடன் 31 கோடியிலிருந்து 55 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. மத்திய காலக் கடன் மூன்று கோடியிலிருந்து கூட்டுறவு அமைச்சரின் பெருமுயற்சியினால் 19 கோடியாக உயர்ந்திருக்கிறது. இந்த விவசாயக் கடன்கள், விவசாயிகள் முன்னால் வாங்கிய கடன்களைத் திரும்ப அடைக்கவும், முன்பு வாங்கிய கடன்களுக்கு வட்டி செலுத்தவும், அதுவும் இல்லாமல், தனிப்பட்டவர்

களிடம் அதிக வட்டிக்கு வாங்கிய கடன்களைத் தீர்ப்பதற்கும்தான் அதிகமாகப் பயன்படுகிறது. இந்த நிலைமைதான் இருந்து வருகிறது. 100க்கு 25, 30 சதவிகிதம் வட்டிக்கு தஸ்தாவேஜி எழுதிக் கொடுக்கிறார்கள். இந்தக் கடன்களை பாங்கிகளே தீர்த்துவிட்டு, விவசாயிகளைக் கடன் தொல்லையிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கான முயற்சிகளை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். திட்டங்களை, திருத்தங்களை முதலமைச்சர் செய்வார் என்று நம்புகிறேன்.

அதேமாதிரியாகக் குழாய்க் கிணறுகள். கிணறுகளை தோண்டுவதற்காக 72 கோடி ரூபாய்க்குப் பெரிய திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரை கடனாக விவசாயிகளுக்குக் கொடுப்பதைவிட அரசாங்கமே குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுக்க வேண்டியது அவசியம் என்று சொல்லிக் கொள்கிறேன். அரசாங்கமே சிறு சிறு ஏரிகளை அமைத்துக் கொடுத்து, அந்தப் பாசனத்தின் மூலம் பலன் பெறக்கூடிய விவசாயிகளிடமிருந்து தண்ணீர்த் தீர்வையாக ஒரு தொகையை வசூல் செய்து கொள்ளலாம். குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுத்து, கடனாகக் கொடுத்து வசூல் செய்து கொள்வதற்குப் பதில், பயன் பெறுபவர்களிடமிருந்து ஆண்டு ஒன்றுக்கு இவ்வளவு தொகை தீர்வை என்று வசூல் செய்து கொள்ளலாம். அரசாங்கத்திலிருந்து கடனாக விவசாயிகள் பெற்றால் அதைப் பின்னால் திரும்பக் கட்டமுடியாமல் அவர்கள் தொல்லைப் படுகிறார்கள். குழாய்க் கிணறுகள் அமைத்தாலும் சரியான முறையிலே தண்ணீர் வசதி கிடைக்காவிட்டால் அரசாங்கத்தின் கடனைத் திரும்பக் கட்டுவதற்கு வருமானம் போதாமல், எந்தப் பலனும் கிடைக்காமல் கஷ்டப் படுகிறார்கள். எனவே, அரசாங்கமே சமுதாயக் கிணறுகள் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக மின் வசதி. விசை ஏற்றத்திற்காக 2½ லட்சம் விசை ஏற்றங்களுக்கு 1970-71-லே மின் இணைப்பு இருந்தது. இந்த ஆண்டு 5 லட்சமாக உயர்ந்திருக்கிறது. இது பாராட்டக் கூடியது. கிராமங்களுக்கு மின் வசதி கொடுப்பதிலே மின் ஏற்றத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். மின் விளக்குகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. கிராமப்புறங்களுக்கு லைட் கொடுப்பதில் நாம் அவசரம் காட்டுகிறோம். அதற்குப் பதிலாக கிராமங்களில் மின் ஏற்றங்களுக்கு இணைப்புக் கொடுப்பதிலே முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். வருடக் கணக்காக மின் இணைப்புக்காக விவசாயிகள் காத்துக்கொண்டு இருக்கும் நிலை இருந்து வருகிறது. பம்பு செட்டுகளை அமைத்துவிட்டு வருடக் கணக்காக இணைப்பு கிடைக்காமல் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். எனவே அரசாங்கம் உடனடியாக விவசாயிகளுக்கு பம்பு செட்டுகளுக்கு இணைப்புக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதே நேரத்தில் விவசாயிகளுக்கு அடுத்தபடியாக உள்ள கைத்தறித் தொழிலாளர் பிரச்சனை பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ் நாட்டில் 30 லட்சம் கைத்தறித் தொழிலாளர்கள், நெசவாளர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்காக அரசாங்கம் சில நடவடிக்கைகளை எடுத்து வந்திருக்கின்றது. இருந்தாலும்கூட, இவைகள் போதுமானதாக இல்லை. சமீபத்திய நூல் விலை ஏற்றத்தினால், அவர்கள் நெய்த துணிகள் விற்காத நிலையில், கைத்தறி

நெசவாளர்கள் மிகவும் தொல்லைக்கு உள்ளாகி இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கிடைக்காமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ளவேண்டும். உற்பத்தி செய்த துணிகள் விற்காமல் தேங்கி உள்ளன. அதே நேரத்தில் நூல் விலை ஏறிக் கொண்டே உள்ளது. அதனால் அவர்கள் தொடர்ந்து தொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டு கஷ்டப்படுகிறார்கள். இந்த நெசவாளர்கள் வேறு தொழில் தேடிக் கொள்ளும் வரையில் அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கக்கூடிய முறையில் அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, இன்று கோவில்பட்டி குடிநீர்த் திட்டத்திற்காக ஒரு கோடி ரூபாய் சாங்க்ஷனாகி இருக்கிறது. பக்கத்திலுள்ள பல கிராமப் பஞ்சாயத்துக்கள் நகரப் பஞ்சாயத்துக்களுக்கெல்லாம் இத்திட்டத்திலிருந்து குடி நீர் வழங்க ஏற்பாடெல்லாம் இருக்கிறது. அதற்கு இன்று அரசாங்கத்திலிருந்து கடனைத்தான் வழங்கப்படும் என்ற நிலை இருப்பதால், அதைத் திருப்பிச் செலுத்தக்கூடிய சக்தி சிறிய பஞ்சாயத்துக்களுக்கும், நகரப் பஞ்சாயத்துக்களுக்கும் இல்லை. கோவில்பட்டி போன்ற அதிக வருமானம் வரக்கூடிய நகரங்களினால்தான் அத்தொகையை நாற்பதாண்டுக் காலத்தில் திருப்பிச் செலுத்த சக்தியிருக்கிறது. ஆனால், அத்தகைய திருப்பிச் செலுத்தக்கூடிய சக்தி சிறு சிறு பஞ்சாயத்துக்களுக்கும், நகரப் பஞ்சாயத்துக்களுக்கும் இல்லை. ஆனால், குடிநீர்க் கஷ்டத்தினால் பெண்கள் படும் தொல்லை, கஷ்டங்கள் சொல்லிமுடியாது. ஆகவே, சிறு சிறு பஞ்சாயத்துக்களுக்கும், நகரப் பஞ்சாயத்துக்களுக்கும் குடி தண்ணீர் வசதிக்காகக் கொடுக்கப்படுகிற பணத்தை ஓரளவிற்குக் கடனாகவும் பெருமளவிற்கு மானியமாகவும் கொடுக்கக் கூடிய முறையில் ஒரு திட்டத்தை வகுத்து, அங்குள்ள மக்களுக்குக் குடி நீர் வசதி செய்து கொடுக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்று பல கிராமப் பஞ்சாயத்துக்களும், நகரப் பஞ்சாயத்துக்களும் கடனைத்திருப்பிச் செலுத்தக்கூடிய சக்தி இல்லை என்ற காரணத்தினால் அவர்களால் அத்திட்டத்தில் சேர முடியவில்லை. ஆகவே, இதைக் கவனித்து அவர்களுக்கும் குடிநீர் வசதி செய்துகொடுக்கத்தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். கோவில்பட்டி நகருக்காகத் தீட்டப்பட்டிருக்கிற இந்தத் திட்டத்தைச் சீக்கிரமாகத் துவக்கி அங்குள்ள மக்களுக்கு சீக்கிரத்தில் குடி நீர் வசதி செய்துகொடுக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். அதோடு கோவில்பட்டி, சங்கரன்கோயில், விளாத்திகுளம் போன்ற இடங்களுக்குக் கடன் ஒத்திவைப்பு, நிவாரண வேலைகள் செய்வது போன்றவற்றில் கவனம் செலுத்தி சீக்கிரம் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. சி. வி. எம். அண்ணாமலை:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக ஆளுநர் அவர்களின் பேருரைக்கு நன்றி தெரிவிக்கிற ஒரு வாய்ப்பினை எனக்கு அளித்தமைக்கு முதலில் தங்களுக்கு எனது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் முறை ஒரு பாரம்பரியம் உடையதென்றாலும், திசை இழந்தவர்களுக்குத் திசை காட்டி ஒளி இழந்தவர்களுக்கு ஒளி காட்டி, சமுதாயத்திலுள்ள அடித்தளத்தில் இருக்கும் மக்களின் துயரைத் துடைக்கும் வகையில், கட்சிக்கு அப்பாற்பட்ட நிலையில், நமது மேதகு ஆளுநர் அவர்கள் சிறப்பாக உரை ஆற்றி, நமது செயல்திறன் மிக்க முதல்வர் கலைஞர் அவர்களின் ஆளுகைக்கு சிறந்ததொரு வித்திடக் கூடிய அளவில் அரியதொரு பேருரையை இன்றையதினம் நிகழ்த்தியிருக்கிறார்கள். கட்சிக் கறை நீங்கிய வகையில் இந்தப் பேருரையைப் பார்க்கும் எந்த அனைத்துக் கட்சித் தலைவர்களும், அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் ஆளுநர் அவர்களின் உரையைப் போற்றிப் புகழக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லாமல் இருக்கமுடியாது.

எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிற எனது அன்புக்கும் பெருமைக்கும் உரிய காங்கிரஸ் கட்சி நண்பர்கள், சென்ற காலங்களில், அவர்கள் ஆண்டு வந்த காலங்களில், நாட்டு மக்களுக்குத் தேவையான காரியங்களை, அவர்கள் காலத்தில் இருந்த ஆளுநர்களுக்குத் தெரிவிக்காத காரணத்தினால், எதிர்க்கட்சியில் இருந்த எங்கள் பெருமை மிக்க தலைவர்கள் ஆளுநர் உரை மீது பேசுகிற நேரத்தில், சிறு சிறு குற்றங்களை எடுத்துக்கூற வேண்டியதொரு நிலையை இந்த மன்றம் பெற்றிருந்தது. ஆகவே, அதையே ஒரு பழக்கமாகக் கொண்டு, எதிர்கட்சியில் இருப்பவர்கள் என்றால், ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையை எதிர்த்தாகவேண்டும் என்ற நினைப்பில் அத்தகையதொரு மரபினைக் கையாண்டு வருவதை சென்ற இரு தினங்களாகக் கண்டு வருகிறேன்.

நடந்து முடிந்த தேர்தலில் நமது தமிழக அரசு நிலைமையை எவ்வாறு நல்லமுறையில் சமாளித்தது என்பதை ஆளுநர் அவர்கள் தமது உரையில் அதுபற்றிய நல்லதொரு வடிவத்தைக் காட்டி எடுத்துரைத்திருக்கிறார்கள். எதிர்காலத்தில் இந்தத் தமிழ்நாட்டின் நாலரைக் கோடி மக்களின் நல்வாழ்விற்காக நமது தமிழக அரசு ஆக்கபூர்வமான திட்டங்களை எந்தெந்த வகையில் சமாளித்திருக்கிறது, என்னென்ன வகையில் மேலும் சமாளிக்க இருக்கிறது என்பதை ஆளுநர் அவர்கள் தமது உரையில் கோடிட்டுக் காட்டியிருப்பதற்காக அவர்களுக்குத் தமிழர்கள் கடப்பாடு உடையவர்களாக இருக்கிறோம் என்பதை நான் மீண்டும் நினைவுபடுத்திக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சி வரிசையில் உள்ள அன்பர்கள் சிலபல குற்றச்சாட்டுகளையெல்லாம் சொன்னார்கள். தேர்தல் காலத்தில் ஏதோ அநீதிகள் நடந்துவிட்டதுபோல் சொன்னார்கள். மதிப்பிற்குரிய எதிர்க்கட்சி நண்பர்கள்மீதும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மீதும் தனிப்பட்டமுறையில் பொது வாழ்வில் எங்களுக்கு நல்ல மதிப்பு உண்டு. உங்களை எதிர்க்கட்சித் தலைவராகப் பெறுகிற வாய்ப்பு போய் விட்டதே என்று எண்ணுகிறவர்களில் நானும் ஒருவன்.

இந்த தேர்தல் பற்றி நானும் ஒரு சில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன். முன்பு எங்கள் மதிப்புமிக்கத் தலைவர்கள் தேர்தல் காலங்களில் பட்ட துன்பங்கள் இவ்வளவு அவ்வளவு அல்ல. அக்காலத்தில் அதிகாரத்தை வைத்துக்கொண்டு நாங்கள் வெற்றி பெற முடியாமல் செய்வதைப் பற்றி விரிவாகச் சொல்வதற்குப் பேரவைத் தலைவர் அவர்கள் நேரம் கொடுப்பார்களா என்று கேட்டுச் சொன்னால் அதைப்பற்றி இன்று பூராவும் என்னால்

சொல்லிக்கொண்டு [illegible] செய்திருக்கிறார்கள், [illegible] அவர்கள் செய்த [illegible] தாமுடையும். [illegible] வெற்றி பெற்று [illegible] காஞ்சிபுரத்தில் [illegible] பற்றிச்சொல்லாம் [illegible] அனுமிக் [illegible] பெரும் [illegible] காண்டு, அரசுகைகளை [illegible] தினம் என்ன [illegible] [illegible] விதத்தில் தாமுடை [illegible]

[illegible] பகுதி பற்றியும், [illegible] நான் இன்று எடுத்துக் கூற [illegible] கிறேன். செங்கற்பட்டு [illegible] தரும். ஒருகாலத்தில் [illegible] மன்று சொந்திருந்தது. [illegible] பழி வேடிகளைப் பார்த்தால் [illegible] என்று [illegible] தொழிற் கூடங்கள் எல்லாம் [illegible] அதன் காரணமாக [illegible] பகுதி, செங்கற்பட்டு [illegible] நிலையில் இருக்கின்றன. அதன் [illegible] வருவாய்க்குரிய [illegible] வகையில் தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. [illegible] வளர்ச்சி சிறப்புமிக்க [illegible] முன்பு இருந்த காஞ்சிபுரத்தைப் [illegible], அதன் வரலாற்றினைப் படித்தவர்கள் [illegible] பார்த்தால் அன்றிருந்ததுபோலவே [illegible] நிலையில் இருக்கிறது. அந்த [illegible] அன்று இருந்தது போல், [illegible] அதன் வளர்ச்சி [illegible] நான் சொல்லிக்கொள்கிறேன். [illegible] மக்கள் கைத்தறி நெசவாளர்கள், [illegible] மக்கள். அந்த நகரத்தில் [illegible] இன்றைய நிலையில் [illegible] வேலை பற்றுத்தின் காரணமாக வேலை [illegible] மன்றத் தலைவர்களை, [illegible] ஆணை பெற்று நிறுவப்படும் தொழில் நிறுவனங்கள், [illegible] வேலையில்லா நெருக்

[illegible] காஞ்சிபுரத்தில் துவக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதனைத்தான் [illegible] இருக்கும் வேலை [illegible]

[illegible] மருத்துவ நிலையங்கள் இருக்கின்றன. [illegible] அனைத்து மருந்து [illegible] நல்ல வகையில் [illegible] செங்கல்பட்டு மாவட்ட [illegible] எப்படி இருக்கிறது [illegible] கூறுகிறேன். அது [illegible] அங்கே இருக்கும் [illegible] 100 நோயாளிக் [illegible] 2,000-3,000 என்று நோயாளிகள் [illegible] வருகிறது. அதை மாற்றி [illegible] கேட்டுக்கொள்ள [illegible] 'தனி அறை' (ஸ்பெஷல் வார்டு) [illegible] விசேஷமாக மருத்துவ [illegible] சென்னைக்குத்தான் வரவேண்டும். இதனால் [illegible] ஆகவே, நல்ல [illegible] அரசைக் [illegible]

[illegible] ஆளுநர் [illegible] எவ்வளவு [illegible] இந்த அரசு [illegible] 23 ஆண்டுகள் இந்தத் [illegible] அவர்களை நொந்த வாழ்க்கை [illegible] உள்ளபடியே [illegible] அதுவும் எங்கள் [illegible] பெறுவதில் [illegible] தாராளம் [illegible] அந்த அளவுக்குத் [illegible] மக்களுக்குக் [illegible] மாவைாரி மேய்க்கால் புறம் [illegible] காடு [illegible] தந்து [illegible] வாங்கியது [illegible] இருக்கிறது என்று [illegible] விரும்புகிறேன்.

[illegible] விரும்புகிறேன். இந்த [illegible] கொண்டு இருக்கிறது. [illegible] உள்ளத்தில் இருக்கும் கருத்தை, [illegible] முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கூற விரும்புகிறேன். பொதுவாக செங்கற்பட்டு

மாவட்டத்தில் மட்டுமல்லாமல், தமிழகத்தில் வீடு இல்லாத, குடி மனை இல்லாத, குடி இருக்க இடமில்லாத—தாழ்த்தப்பட்ட மக்களைக் கணக்கெடுத்து—அரிஜன மக்களுக்கு, ஹரிஜன மக்களை ஒத்த, பொருளாதாரத்தில் மிகவும் பிற்பட்ட மக்களுக்கு, மக்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று கணக்கை எடுத்து, குடி மனை வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்களுடைய கலைஞர் அவர்கள், முதலமைச்சர் அவர்கள் இதைக் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்ற காரணத் தினாலே, இப்படிப்பட்ட ஒரு கணக்கை எடுத்து, இந்தக் குடி மனை வழங்கும் திட்டத்தைத் தீட்டி விரைவில் செயல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

ஒரே ஒரு வேண்டுகோளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். காஞ்சிபுரத்தில் தரமான பட்டு நெசவுத் தொழில் பல்லாண்டு காலமாக நடந்து வருகிறது. இங்கே நேர்த்தியான பட்டுச் சேலைகள் தயாரிக்கப்பட்டு, அமெரிக்கா போன்ற வெளிநாடுகளுக்குப் பெருத்த அளவில் அனுப்பப் படுகின்றன. திறமைபெற்ற பல தொழிலாளர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான சரிகை போன்ற மூலப் பொருள்கள் இங்கே கிடைப்பது இல்லை. வெளியிலிருந்து வரவழைக்க வேண்டிய நிலை இருக்கிறது. அவர்கள் விலையை உயர்த்திக் கொடுத்தும் தரமற்ற சரிகையைத் தான் விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. அதனால் அவர்கள் தரமுள்ள சரிகையைப் பெற முடியவில்லை. ஆகவே, பட்டு நெசவுத் தொழில் சிறப்புற இங்கே அமைகின்ற வகையில், ஒரு சரிகைத் தொழிற்சாலையை நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் திட்டம் கழக அரசின் கவனத்தில் இருக்கிறது [illegible] ஒரு திட்டம் என்றாலும், உடனடியாக, அந்த சரிகைத் தொழிற்சாலையை இங்கே நிறுவுதல் வேண்டுமென்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில் பட்டு நெசவுத் தொழில் அபிவிருத்தி அடைய உறுதுணையாக இருக்கும் என்று கூறிக்கொண்டு, ஆளுநர் அவர்கள் நிகழ்த்திய சிறப்பான, செம்மைமிக்க பேருரையை வழங்கியதற்காக நன்றி, நன்றி என்று கூறி என் வார்த்தையை முடிக்கிறேன், வணக்கம்.

* திரு. எ. சுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் உரையைப் பற்றிப் பேசும்போது, அந்த உரையில் இருக்கின்ற ஒரு வாசகத்தை இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன். "சமுதாயத்தின் அடித் தளத்தில் இருக்கும் பெரும்பாலான மக்கள், தங்களுடைய இடைவிடாத துயரங்களுக்கு விடிவு காண்பதற்கும், வறுமை, இன்னல் இவற்றிலிருந்து மீண்டு கரையேறுவதற்கும் இவ்வரசின் ஆதரவை எதிர்நோக்கி நிற்கின்றனர் என்று இந்த அரசு நம்புகிறது. அவர்களுடைய கண்களிலே இன்று நம்பிக்கை ஒளி வீசுகிறது. பாமர மக்களின் எண்ண வேட்கைகளை நிறை வேற்றி வைப்பதற்காக அரசு தீவிர முயற்சியை மேற்கொள்ளும்" என்று கூறிய இந்த வார்த்தைகளுக்கு ஆளுநர் அவர்களுக்கும், இந்த அரசுக்கும் நான் மெத்தக் கடமைப்பட்டவன் ஆவேன். 1971-ல் ஆண்டிலே நடைபெற்ற தேர்தல் முடிவுகளை சரியாக மதிப்பிட்டு, அந்த முடிவுகளின் மூலம் தமிழக மக்கள் என்ன ஆணை பிறப்பித்து இருக்கிறார்கள். இந்த ஆணை வந்திடக்கூடாது —தமிழக மக்கள் ராஜாக்களையும், முதலாளிகளையும், பெரும் பண்ணைக்காரர்

களையும் நிலப்பிரபுக்களையும் ஆதரித்து நிற்கிறார்கள், அவர்களுக்கு அரசு ஆணை தரவேண்டுமென்று விரும்புகிறார்கள் என்ற பிரசாரத்திற்கு முடிவு கட்டி, இன்றைய தமிழகத்து மக்கள் விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், ஏழை எளியவர்களுக்கும் வாழ்வளிக்கவேண்டும், சமதர்ம சமுதாயத்தை அமைத்திட வேண்டுமென்று உங்களைப் பெருத்த ஆதரவின் மூலம் இங்கே அனுப்பி வைத்து இருக்கிறார்கள். இந்தத் தேர்தல் முடிவின் மூலம் அந்த உரைதான், அந்த வார்த்தைகள்தான் இங்கே சொல்லப்பட்டு இருக்கின்றன என்று எடுத்துக்கொண்டு, அதை நான் மிகவும் வரவேற்கிறேன். அப்படிப் பட்ட காரியங்களை நிறைவேற்றுகிற வகையில் இந்த அரசு அமைந்து இருக்கிறது என்று சொல்லி, இந்த உரையில் என்னுடைய சில கருத்துக்களை இங்கே சொல்ல விழைகிறேன்.

ஏழை எளிய மக்களை கைதூக்கி விடுவதற்குப் பல காரியங்களைச் செய்ய வேண்டும். அவற்றையெல்லாம் சொல்வதற்கு இங்கே நேரம் இல்லை. இருந்தபோதிலும், இரண்டைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒன்று, விவசாயத் துறையைப் பொறுத்தவரையில் இந்த அரசு, ஏற்கனவே இருந்த அரசு 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் உச்சவரம்பு நிர்ணயித்து இருந்ததை, 15 ஸ்டாண்டர்டு ஏக்கராகக் குறைத்து இருக்கிறது. அதைத் தமிழக மக்கள் எல்லோரும் வரவேற்கிறார்கள். ஆனால் அதிலே சில குறைகள் உள்ளன. அந்தச் சட்டத்தில் பல விதிவிலக்குகள் அளிக்கப்பட்டுள்ளன. அந்த விதி விலக்குகளை எல்லாம் அந்தச் சட்டத்திலிருந்து எடுத்துவிடவேண்டுமென்று இந்த மன்றத்தின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, சொத்துக்கள் நகரங்களில் குவிந்து கிடக்கின்றன. நகர்ப்புறத்து சொத்துக்குமட்டும் வரம்பு கட்டுவது போதாது. பெரும் பகுதி சொத்துக்கள் [illegible] ஆகவே, நகர்ப்புற சொத்துக்களுக்கும் வரம்பு கட்டுவதால்தான் சமதர்ம சமுதா யத்தை அமைக்க முடியும் என்பதை நான் சொல்லத் தேவையில்லை. அதற் குரிய அதிகாரம் மாநில அரசுக்கு இருக்கிறது. நகர்ப்புற சொத்துக்கு உச்ச வரம்பு கட்டுவதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டு, அதற்கான சட்டங்களை யும் விரைவிலே இயற்றவேண்டும் என்று நான் தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொழிலாளர்களைப்பற்றி சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். தொழிலாளர்கள் மத்தியிலே தொழிற் சங்கங்கள் பல்கிப் பெருகியிருக்கிற காரணத்தினால், தொழிலாளர்கள் மிகவும் வலு குறைந்து போ யிருக்கிறார்கள். தொழிலில் அமைதி குலைகிறது. ஆகவே, ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் வேண்டும் என்ற கருத்தினை இன்று அல்ல, நேற்று அல்ல, முன்னாலே இருந்த ஆட்சியாளரும் சொல்லிவந்திருக்கிறார்கள்; நம்முடைய அரசும் அதில் நம்பிக்கை கொண்டு இருக்கிறது. நான் பணிவோடு சொல்லிக்கொள்வேன்— வெறும் நம்பிக்கை மட்டும் பயன் தராது. வார்த்தைகள் மட்டும் பயன் தராது, செயலும் தொடரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தேசியத் தொழிலாளர் கமிஷன் அதற்கான பரிந்துரையைத் தந்திருக் கிறது. அந்தப் பரிந்துரையின்படி பெருவாரியான தொழிலாளர்கள் எந்தச் சங்கத்தை விரும்புகிறார்களோ அந்தச் சங்கத்திற்கு அங்கீகாரம் தருகின்ற

[illegible]

[illegible]

[illegible]

இன்றைக்கு [illegible] மருந்துகள் [illegible] போகின்றன. [illegible] கிடைக்கும் போ [illegible] மருந்துகள் [illegible] இருக்கின்றன. [illegible] தொழிலாளர்கள் [illegible] ஆகவே, தொழிலாளர்கள் [illegible] தனியாக [illegible] வேண்டும். அதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று [illegible] கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு [illegible] இன்றியமையாதது. வீட்டு [illegible] சொல்லியிருக்கிறார்கள். முதலாளிகள் [illegible] தொழிலாளர்களுக்கும் வீட்டு [illegible] ஆசையை அவர்கள் [illegible] [illegible] ஆசை [illegible] பல [illegible] முதலாளியும் தொழிற்சாலையைக் கட்டுவதோடு தவிர, தொழிலாளர்களுக்கும் வீடுகளைக் கட்டுவது [illegible] ஆகவே [illegible] இல்லை. வீடுகள் கட்டுவதற்கு வழிவகைகள் செய்யவேண்டும். தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து வீடுகள் கட்டிக்கொள்கிறார்கள். ஆனால் அதற்கு ஏற்கனவே கொடுத்துவந்த மானியம் (சப்ஸிடி) 1962-ம் ஆண்டு சீனப் படையெடுப்புக்குப் பிறகு நிறுத்தப்பட்டுவிட்டது. இந்த மானியத்தை மீண்டும் தரவேண்டும் என்று மத்திய அரசாங்கத்திடம் இந்த அரசு வற்புறுத்தி, அதனைப் பெற்றுத் தரவேண்டும். அப்படிச் செய்தால் பல இடங்களில் தொழிலாளர்கள் வீடுகள் கட்டிக்கொள்ளலாம். அதோடு கூட, [illegible] கொடுக்கிற அதிகாரம் மத்திய

[திரு. வ. சுப்பிரமணியம்] [1971 ஏப்ரல் 1

அரசாங்கத்திடம் இருந்தாலும், ஒரு குறிப்பிட்ட [illegible] தனியார் [illegible] முதலாளிகளுக்கு விடுகின்ற கட்டாயத்தினால் லைசென்ஸ் தாராளம் என்ற முறையைப் போட வேண்டும் என்று மத்திய அரசை தமிழ்நாடு மாநில அரசு வற்புறுத்த வேண்டும். சில ஆண்டுகளுக்கு முன்னால் கூட எனக்கு நினைவு இருக்கிறது— ஜவஹர்லால் நேரு அவர்கள் பிரதமராக இருந்தபோது பல முறை சொல்லியிருக்கிறார்கள். தொழில் அதிபர்களுக்கு லைசென்ஸ் வழங்கும்போது, தொழிலாளர்களுக்கு பங்குகள் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையின்பேரில்தான் அவர்களுக்கு லைசென்ஸ் வழங்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். சொன்ன சொல் செயலுக்கு வரவில்லை. ஆகவே, தமிழ்நாடு அரசு உடனே மத்திய அரசை நினைவுபடுத்தி இதைப் பற்றி வற்புறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, இந்த மாநிலத்திற்கு தனியாகத் திட்டக் குழு ஒன்று அமைக்க இருப்பதாக கவர்னர் அவர்களுடைய உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. அதை நான் மிகவும் வரவேற்கிறேன். அந்தத் திட்டக் குழுவில் நிர்வாக வல்லுநர்கள், பொருளாதார வல்லுநர்கள் மட்டும் இருப்பார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் நல்லது, வல்லுநர்கள் இருக்க வேண்டியதுதான். ஆனால் நாட்டைப் பொறுத்த வரை பல திட்டங்கள் இருக்கின்றன, அவற்றை எப்படி எப்படிப் பயன்படுத்தலாம் என்று சொல்லோடு நின்றுவிட முடியாது. அதனை செயலாக்குவதற்கு பல முறைகள் இருக்கின்றன. செயலாற்றுவதற்கு என்று சமுதாயத்தில் எந்தப் பிரிவினர்களுக்கு என்ன பங்கு இருக்கிறது என்பதும் முக்கியம். திட்டம் தோல்வியுறுவதற்குப் பிரதான காரணம், பங்கு பெறக்கூடியவர்களுக்கு கொடுக்கப்படாத பங்கை அளிப்பதிலும், கொடுக்கப்பட வேண்டியவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய பங்கைக் கொடுக்காததிலும், மிகச் சிறந்த திட்டங்களாக இருந்தபோதிலும் தோல்வியுறுகின்றன என்பதை நான் மட்டும் சொல்லவில்லை, மற்றவர்களும் சொல்கிறார்கள். திட்டக் குழுவில் தொழிலாளர்களுக்கு இத்தகைய பங்கு இருக்கவேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல நாடுகளில் இத்தகைய பங்கைத் தொழிலாளர்களுக்கு அளித்திருக்கிறார்கள். மத்திய அரசு இதைச் செய்யத் தவறிவிட்டாலும், மாநில அரசு முன்மாதிரியாக நின்று இதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு நல்லதையும் அரசு செய்திருக்கிறது. நிர்வாகச் சீர்திருத்தக் குழு (அட்மினிஸ்ட்ரேடிவ் ரிஃபார்ம்ஸ் கமிஷன்) ஒன்றை அமைக்கப்போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அரசாங்க ஊழியர்களுக்கு ஏறத்தாழ 22 கோடி ரூபாய் ஊதிய உயர்வு கொடுத்திருக்கிறோம். அதை நான் மிகவும் பாராட்டி வரவேற்கிறேன். காரணம், நாம் போடுகின்ற திட்டங்களையெல்லாம் நிறைவேற்றவேண்டியவர்கள் அரசாங்க ஊழியர்கள். அவர்கள் மன நிறைவோடு இருந்தால்தான், திட்டங்கள் செவ்வையாக நிறைவேறும் என்பதில் சந்தேகம் இல்லை. அந்த வகையில் ஊதிய உயர்வு அவர்களுக்கு அளித்திருப்பதை வரவேற்கிறேன்.

ஆனால், நான் இங்கே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கவர்னர் அவர்களின் உரையில் ப்ரொடக்டிவிட்டி பற்றிக் கூறியிருக்கிறார்கள். உற்பத்தித் திறனைப்பற்றி சொல்லியிருக்கிறார்கள். தொழில் துறையில் உற்பத்தித் திறன்

1971 ஏப்ரல் 1] [திரு. வ. சுப்பிரமணியம்]

பெருகவேண்டும், வேளாண்மைத் துறையில் உற்பத்தித்திறன் பெருகவேண்டும். அதேபோன்று அரசு நிர்வாகத் துறையிலும் உற்பத்தித் திறன் பெருகவேண்டும் என்பதை நான் இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இந்த நிர்வாக சீர்திருத்தக் குழு நிர்வாகத்தை நவீனப்படுத்துவது பற்றி மட்டுமின்றி, உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவது பற்றியும், சிக்கனம் ஏற்படுத்துவது பற்றியும் கூட வழிவகைகளைக் கூறவேண்டும். இந்த நிர்வாக சீர்திருத்தக் குழுவில், சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டும். வெறும் அதிகாரிகளும், மற்றவர்களும் மட்டும் இல்லாமல், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கும், அதோடுகூட, அரசாங்க ஊழியர்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவேண்டும் என்கிற என்னுடைய பணிவான கருத்தினைத் தெரிவித்துக்கொள்ளுவேன்.

இன்றொன்று, என்னுடைய மாவட்டத்தைப் பற்றி சிலவற்றை, முக்கியமானவற்றைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய மாவட்டம் பஞ்சாலைத் தொழில் நிறைந்த மாவட்டம். அது என்னுடைய மாவட்டத்திற்கு மட்டுமல்ல, இந்த மாநிலத்திற்கே முக்கியமானதாக இருக்கிறது. அந்தப் பஞ்சாலைத் தொழிலில் இன்றையதினம் பல ஆலைகள் மூடப்பட்டுக் கிடக்கின்றன. அவைகள் மூடப்பட்டிருப்பதற்குக் காரணம் யார் என்று எல்லோருக்கும் தெரியும். மூடிய ஆலைகளில் சிலவற்றைத் திறந்திருக்கிறார்கள். சிலவற்றைத் திறக்கவில்லை. அவற்றையும் திறக்க வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்வேன்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இந்தப் பஞ்சாலைத் தொழிலுக்கு பருத்தி பற்றாக்குறை ஒரு முக்கியமான இடையூறாக இருக்கிறது. பருத்திப் பற்றாக்குறை நம் நாட்டில் இருக்க வேண்டிய அவசியமில்லை. விடுதலை கிடைத்து 24 ஆண்டுகளுக்குப் பிறகும், பருத்திப் பற்றாக்குறை 15, 20 சதவிகிதம் என்று அரசாங்கப் புள்ளிவிவரம் சொல்லுகிறது. அந்தப் பற்றாக்குறை தீராமல் இருக்கிறது. இதனால் தமிழகமே அதிகம் பாதிக்கப்பட்டிருக்கிறது. காரணம், பருத்தியாகவே குஜராத்திலிருந்து, மகாராஷ்ட்ராவிலிருந்து வாங்கி நாம் நூலாக நூற்று அந்த நூலை வடக்கேயே விற்கின்ற நிலையில் இருப்பதால் பஞ்சாலைத் தொழில் வடக்கே இருப்பதைவிடப் பலகீனமாக இருக்கும் நிலையில் இருக்கிறது. ஆகவே, இந்த நிலையைத் தவிர்க்க, பருத்தி உற்பத்தியை அதிகப்படுத்துவதைத்தவிர வேறு மார்க்கமே இல்லை. 'பர் ஏக்கர் யீல்ட்' இந்த உலகத்திலேயே நம் நாட்டில்தான் மிகக் குறைவாக இருக்கிறது. ஏக்கருக்கு 4000 ராத்தல் எல்லாம் வேறு நாடுகளில் உற்பத்தியாகும்போது, கேவலம் 300 ராத்தல்தான் நம் நாட்டில் விளைகிறது. இந்தப் பருத்தி வேளாண்மைக்கு நிலப்பரப்பைக் கூட்டுவது என்பது கடினமானது. ஆகவே, அதற்குப்பதிலாக, பருத்தி விளைச்சலை அதிகப்படுத்துவதன் மூலம் நிலைமையைச் சமாளிக்க வேண்டும்.

இந்தியன் காட்டன் மில்ஸ் ஃபெடரேஷன்—பஞ்சாலை சம்மேளனம்—கோவை மாவட்டத்தில் ஒரு திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. அங்கே நல்ல விதைகளையும், மருந்துகளையும், மற்ற வசதிகளையும் கொடுத்து, விளைச்சலை அதிகப்படுத்த உதவிசெய்கிறார்கள். இன்னும் சிறப்பான வகையில் சீர்திருந்துவதற்கு, தேவையானால் அண்டை மாநிலங்களாகிய மைசூர்,

ஆந்திரம்—அந்த மாநிலங்களிலும் பருத்தி உற்பத்தி இருக்கிறது—ஆகிய இரண்டு மாநிலங்களோடு சேர்ந்து, மூன்று மாநிலங்களும் கூட்டாக ஒரு ஏற்பாட்டைச் செய்ய முடியும்.

என்னுடைய பகுதியாகிய சிங்கநல்லூர் நகரசபையில் வீட்டுவசதிப் பிரச்சினையைப் பற்றி ஒரு வார்த்தை. அந்தப் பிரச்னை நீண்ட காலமாக இருக்கிறது. அந்த நகரசபையானது 14 ஏக்கர் நிலத்தில் வீட்டு வசதித் திட்டங்களை என்று தீர்மானம் போட்டு, அரசுக்கு அனுப்பியிருக்கிறது. அதை அரசு ஏற்றுக் கொண்டு நகரத்தின் அபிவிருத்தித் திட்டங்களை விரைவில் நிறைவேற வழி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடிக்கிறேன், வணக்கம்.

* திரு. ஏ. ஆர். சுப்பையா : தலைவர் அவர்களே, கவர்னர் உரையின் மீது நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

தேர்தலைப்பற்றி என்னுடைய அனுபவத்தைச் சொல்ல விரும்புகிறேன். 1957, 1962, 1967, 1971, ஆக நான்கு தேர்தல்களில் ஜனநாயகக் கட்சியில் ஈடுபட்டவன் நான். இன்றைக்கு மக்கள் விழிப்புணர்ச்சியோடு இருக்கிறார்கள். 1967-ல், 1971-ல் அது நன்றாகத் தெரிந்தது. 1971-ல், ஒரு பக்கம் ஆளுங் கட்சிகளும், ஒரு பக்கம் ஜனநாயகக் கூட்டணியும், ஆக இரு அணிகளாகச் செயல் பட்டார்கள். 1971-க்கும், 1967-க்கும் வித்தியாசம் என்னவென்றால், 1967-ல் கூட்டணியின் சார்பாக நின்ற தலைவர்கள் 'எங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுங்கள், 20 ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் மக்களுக்கு நன்மை ஏற்படவில்லை, எங்களுக்குச் சந்தர்ப்பம் கொடுத்தால் மக்களின் நன்மைக்கு வேலை செய்வோம்' என்றார்கள். மக்களும் விருப்பத்தோடு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தது. மக்கள் தங்கள் முடிவைக் காட்டினார்கள். 1971-ல் ஜனநாயகக் கூட்டணி என்று சொல்லக் கூடிய அணியில், ஜனநாயகக் கட்சி என்று சொல்லக்கூடிய பெருந்தலைவர் ஒரு வகுப்பு, ராஜாஜி ஒரு வகுப்பு, ஜனசங்கம் ஒரு வகுப்பு. ஆக மூன்றும் சேர்ந்து ஜனநாயகக் கூட்டணி என்ற பெயரில் வந்தார்கள். ஆனால், மக்கள் உறுதியான மனப்பான்மையோடு, சாதி வெறி, வகுப்பு வெறி இவைகளையெல்லாம் புறக்கணித்து நாட்டிற்கு நன்மை செய்த கட்சிக்கு 1971-ல் பேராதரவு கொடுத்திருப்பதைக் காண்கிறோம். இந்த சமயத்தில் முஸ்லீம் அன்பர்களைப் பற்றிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய பகுதியில், பெருந்தலைவர் காமராஜ் கட்சியைச் சேர்ந்தவர்கள் 20,000 பேர்கள் இருக்கிறார்கள். நான் அவர்களிடம் ஓட்டுக் கேட்கும் நிலையில் இல்லை. என்னுடைய மனம் இடந்தரவில்லை. அந்த இடத்தில் போய் ஓட்டுக் கேட்டால் திரும்பி வருவேனா என்கிற பயம் மனதில் இருந்தது. ஆகவே, அந்தப் பகுதி மக்கள் மத்தியில் நான் போகவேயில்லை. சாதி வெறியைத் தூண்டக் கூடிய நிலையில் அந்தப் பகுதி மக்கள் இருந்தார்கள். முஸ்லீம் நண்பர்கள் அவர்களுடைய தலைவருடைய கட்டளைக்கு இணங்க, ஆளுங்கட்சி செய்திருந்த நன்மைகளை மனத்தில் வைத்து, ஆதரவு தந்தார்கள். அவர்களுக்கு ஆளுங்கட்சி நன்மைகள் செய்திருக்கிறது என்கிற எண்ணம் ஏற்பட்டிருப்பது தான் காரணம். அங்கே உள்ள மக்கள் நெசவுத் தொழிலாளர்கள். அவர்கள் முஸ்லீம் அன்பர்கள். அவர்களுடைய அன்றாடத் தேவைக்கும் வாழ்க்கைக்கும் நன்மை

பயக்கும் முறையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் செயல்பட்டிருக்கிறது. ஆதலால் அவர்களுக்கு நிம்மதியான வாழ்க்கை ஏற்பட்டிருந்தது. ஆகவே அவர்கள் நன்றியோடும் ஒற்றுமையோடும் ஆதரவு தந்ததால் நான் வெற்றி பெற்றேன்.

ஆகையால் நான் கேட்டுக்கொள்வது, அவர்களிடம் கேட்டுக் கொள்வது, தேர்தல் முடிவுகளைப் பார்த்து, வகுப்பு வெறியைத் தவிர்ப்பதற்கு ஒரு திட்டம் தீட்ட வேண்டும். அப்பொழுதுதான் நாடு முன்னேற முடியும். வகுப்பு வெறியர்களை முறியடிக்க வேண்டிய நிலையில், அவர்கள் தம்முடைய ஆதரவையும், ஆற்றலையும் காட்டவேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்வேன்.

வேளாண்மை சம்பந்தப்பட்ட வரையில், முன்னேற்றம் அடைந்திருக்கிறோம். ஆனாலும், வறட்சிப் பகுதிகளுக்கு ஒரு திட்டம் தேவை. மத்திய சர்க்கார் கடந்த ஆகஸ்ட் மாதம் 10-ம் தேதி, 1970-ல்

"Sub-Soil Water Resources Study.

To assess ground water resources on a long-term basis the country has been divided into 19 district units including Madras.

The Madras Office, to be opened by the end of the month, will have six officers, four surveyors and other staff."

என்று சொல்லியிருப்பது அமலானதாகத் தெரியவில்லை. அதை அமல் படுத்தினால், வறட்சி நீங்கி 'ஸப்-ஸாயில் வாட்டர் ரிஸோர்ஸை' எடுக்க வழி ஏற்படும். ஆனால் நம்முடைய அரசு,

A comprehensive survey and investigation of groundwater resources in the State, not covered by the area under the United Nations Development Programme Groundwater Project, had been approved by Government.

என்று நமது அரசு சென்ற டிஸம்பரில் சொல்லியிருக்கும். இன்று வரைக்கும் அமல் நடத்தப்படாமல் இருப்பதாகத் தெரிகிறது. இவற்றை அமல்படுத்தினால் வறட்சிப் பகுதிக்கு நன்மை ஏற்படும். அத்துடன் வறட்சிப் பகுதிகளுக்கு பிரயோஜனப்படக் கூடிய (New early maturing strain) நெல் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிகிறது. அதாவது

An early maturing rice variety which can come up well even in dry regions and does not need transplanting has been developed at the Central Rice Research Institute, Cuttack.

என்று செப்டம்பர் 24-லே ஒரு அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதையும் நாம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். வறட்சிப் பகுதிகளுக்கு அரசு ஒரு புதுத் திட்டத்தை வகுக்க வேண்டும். அதை இப்பொழுது செய்ய ஏற்பாடில்லாவிட்டாலும், ஜூன் மாதம் வருகிற பட்ஜெட்டிலாவது அதைச் சேர்க்க வேண்டும்.

1972-க்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து கொடுக்கப் பட வேண்டுமென்ற ஒரு திட்டத்தை வகுத்திருக்கிறோம். அதுபோல வேளாண்மை விசைப்பம்புகளுக்கு மின்விசை (சர்வீஸ் கனெக்ஷன்) இணைப்பு கொடுப்பதற்கும் ஒரு திட்டத்தை வகுத்துக்கொள்ள வேண்டும்.

வேளாண்மைக்கு விசை இணைப்பு கொடுப்பதற்கு முதல் இடம் கொடுக்க வேண்டும். (Uneconomic scheme) களுக்கு செலவில் ஒரு பகுதியை பார்ட்டியிடம் பெற்று, பாக்கியை மானியத் தொகையாக அரசு கொடுக்க வேண்டும். இப்படிச் செய்தால் உற்பத்தி பெருகும், பம்ப்செட் பயன்பாடுகளின் விலைவாசியும் குறையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சிறு உழவர்களுக்கு 'மேம்பாட்டு நிறுவன அமைப்பு' நிறுவ இருப்பதைக் கண்டு பாராட்டுகிறேன். அதை நான் வரவேற்கிறேன்.

அடுத்தபடியாக தொழில் சம்பந்தப்பட்டவரை, நெசவுத் தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கஷ்டத்தைப் போக்குவதற்கு என்ன செய்யலாம் என்பது குறித்து ஆராய ஒரு குழுவை அமைத்து, அவர்களுக்கு என்ன என்ன வழிகளில் உதவலாம், மாற்றுத் திட்டங்களை எப்படித் தயார் செய்யலாம் என்பது குறித்துப் பரிசீலனை செய்ய வேண்டும். இப்போது விசைத்தறித் தொழிலும் வேறு இருக்கிறது. நெசவுத் தொழிலாளர்களுக்கு தகுந்த கூலி கிடைக்காத நிலைமை இருக்கிறது. ஆகவே, இவற்றையெல்லாம் நாம் ஆராய்ந்து பரிசீலிக்க வேண்டும்.

அடுத்து, தனியார் முயற்சிகளுக்கு ஊக்கம் அளிப்பது வரவேற்கக் கூடிய விஷயம். அதை நான் வரவேற்கிறேன். இன்றைக்கு "இண்டஸ்ட்ரீஸ் டெவலப்மெண்ட் அண்ட் ரெகுலேஷன் ஆக்ட், 1957" என்ற சட்டம் இருக்கிறது. இந்த அதிகாரம் மத்திய அரசிடம்தான் இருக்கிறது. மத்திய சர்க்காரை அணுகித்தான் நாம் குறைகளைச் சொல்ல வேண்டியிருக்கிறது. ஒரு தொழில் ஸ்தாபனம் நிறுத்தப்பட்டுவிட்டால் மாநில அரசு ஒன்றும் செய்வதற்கில்லை. மத்திய அரசை அணுகித்தான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, மத்திய அரசை இது சம்பந்தமாக அணுகி மாநில அரசுக்கு அதிகாரம் தேவை என்பதை வலியுறுத்தி அச்சட்டத்தைத் திருத்த வேண்டும்.

அடுத்தபடியாக, வேலைவாய்ப்பு சம்பந்தப்பட்ட விஷயம். 55 வயதுக்குமேல் வேலை நீடிப்பு கொடுப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும். எந்த இடத்தில் பார்த்தாலும் இப்போது ஒரு வருஷம், ஆறு மாதம் என்று எக்ஸ்டென்ஷன் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஏராளமான இளைஞர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இன்னொரு பக்கத்தில் ஒரு வருஷம், இரண்டு வருஷம் என்று வேலை நீடிப்பு செய்துகொண்டே போவதை அது நல்லது அல்ல என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். கொள்கையிலே நீங்கள் உறுதியாக இருங்கள். ஆற்றல் படைத்த வாலிபர்கள் இருக்கிறார்கள். 55 வயது ஆனவுடனே ஓய்வு பெற வேண்டும் என்பதை உறுதிப்படுத்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சிக்கனம் சம்பந்தப்பட்டது. 1971-72-ம் ஆண்டின் இறுதியில் 35 கோடி ரூபாய் தாண்டி விழும் என்று எதிர்பார்க்கிறோம். நாம் முதலில் சிக்கனத்தை கைக்கொள்ள வேண்டும். முதன்முதலில் ஜீப் வாங்கிக் கொடுப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும். ஜீப் கார்கள் எதற்காக வாங்கப்படுகின்றன? கரடுமுரடான பாதைகளில் செல்வதற்காகத்தான் அது வாங்கப்படுகிறது. ஆனால் இன்றைக்கு சென்னை நகரத்தில் நூற்றுக்கணக்கான ஜீப்கள் இருந்துகொண்டிருக்கின்றன. எனக்குத் தெரிந்த வரையில் ஒரு யோசனை கூறுகிறேன். அதிகாரிகளுக்கெல்லாம் வட்டியில்லாமல் கடன் கொடுத்து,

அவர்கள் இஷ்டப்படி அம்பாசிடர் காரோ, அல்லது வேறு காரோ வாங்கிக் கொள்ளட்டும். மெயின்டனன்ஸ் அவர்கள் செய்துகொள்ள வேண்டியது. அதிகாரிகள் வேண்டுமானால் சுற்றுப்பயணம் செய்யும்போது மைலேஜ் கணக்கிட்டு வாங்கிக்கொள்ளலாம். மோட்டார் வெகிகிள்ஸ் மெயின்டனன்ஸ் ஆர்கனைசேஷன் (M.V.M.O.)கிளைகள் இன்றைக்கு மதுரையில், தஞ்சையில், கோயம்புத்தூரில் இருக்கின்றன. அந்த இடங்களை ஒரு அதிகாரி அல்லது ஒரு அமைச்சர் போய்ப் பார்த்தால் வருந்தக்கூடிய நிலைமை இருக்கிறது. ஒவ்வொரு இடத்திலும் 50, 100 என்று ஜீப்புகள் ரிப்பேருக்கு இருந்து கொண்டிருக்கின்றன. சர்க்காரே அதிகாரிகளுக்குக் கார் வாங்கிக்கொடுத்து, மைலேஜ் கொடுப்பதன் மூலமாக சிக்கனத்தைக் கைக்கொள்ளலாம்.

அடுத்தபடியாக டீச்சர்ஸ் டிரெயினிங் கோர்ஸ் பற்றியதாகும். இது இப்பொழுது அவசியமா என்பதைப் பார்க்க வேண்டும். இப்பொழுது இருக்கும் ஆசிரியர்களுக்கே வேலையில்லாமல் இருக்கும் நிலையில், இந்தக் கோர்ஸை சில காலத்திற்கு நிறுத்திவைக்கலாம்.

இன்றைக்குப் பல சீர்திருத்தங்களின் மூலமாக பண விரயத்தைக் குறைக்கலாம். டிரான்ஸ்போர்ட் லாபகரமாக நடத்தப்பட வேண்டும். பப்ளிக் செக்டார்ஸ் லாபகரமாக நடத்தப்பட வேண்டும். போர்ட் இலாகாவில் ஏற்படும் நஷ்டத்தைக் குறைக்க வேண்டும். ப்ரொவின்ஷியல் டிரான்ஸ்போர்ட்டை லாபகரமாக நடத்த வேண்டும். போட்டியாளர்கள் யாருமே இல்லாமல் இருக்கும் டிரான்ஸ்போர்ட் இலாகா பெரும்பாலான நஷ்டத்தில் இருந்து வருகிறது. அடுத்து, வேஸ்டேஜ் இன் கோ-ஆபரேடிவ் செக்டார்ஸ். கடன் வசூலைத் துரிதப்படுத்த வேண்டும். ப்ராஜெக்ட் வேலைகளைக் குறித்த காலத்தில் முடித்தால் அதிகாரிகளுக்கு ஊக்கம் அளிப்பதன் மூலம்—இன்சென்டிவ்—அதாவது இன்க்ரிமெண்ட் கொடுக்கலாம், அதன்மூலம் வேஸ்டேஜைக் குறைக்கலாம்.

அடுத்தபடியாக மாநில அளவில் செலவைக் குறைக்க வழிவகைகளை ஆராய ஒரு தனிக் கமிஷனை நியமிக்க வேண்டும். இப்போது செலவு அளவுக்கு மிஞ்சிப் போகிறது. நம்முடைய செலவு அதிகமாக இருந்துகொண்டிருக்கிறது. கமிஷனில் அங்கம் வகிக்க வேண்டியது அதிகாரிகளாய் இருந்தாலும், அத்துடன் நல்ல நிலைமையில் நடந்துகொண்டிருக்கும் தொழில் நிறுவனங்களில் அனுபவம் உள்ள அதிகாரிகளையும் அங்கம் வகிக்கும்படிச் செய்து அவர்களுடைய யோசனைகளையும் கேட்க வேண்டும். நம்முடைய அதிகாரிகள் சிக்கனத்திற்கே வழி தெரியாதவர்கள். ஆகவே, தனிப்பட்ட கம்பெனியில் உள்ள அனுபவமுள்ள அதிகாரிகளையும் கமிஷனில் சேர்க்கவேண்டும்.

அடுத்து, மாநில நிர்வாகச் சீர்திருத்த ஆணைக்குழு வெளியிட்டுள்ள 'அட்மினிஸ்ட்ரேட்டர்' களின் யோசனையைக் கேட்க வேண்டும். இறுதியாக மாநிலத் திட்டக் குழுவையும் வரவேற்று, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. மா. வே. நாராயணசாமி: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாமன்றத்தில் மேதகு ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் இந்த நேரத்தில் ஏழை எளிய பாட்டாளி மக்களின் நல்வாழ்விற்காக உழைத்து வருகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கண்டவரும், எங்களை

[திரு. ப. வே. நாராயணசாமி] [1971 ஏப்ரல் 1

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

1971 ஏப்ரல் 1] [திரு. ப. வே. நாராயணசாமி]

கழகத் தோழர்கள் கருத்தகண்ணன், இராமசாமி, கணேசன் என்ற மூன்று பேர்கள் விடியற்காலையில் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். 1967-ம் ஆண்டு தேர்தலில் அந்தப் பகுதியில் அராஜகம் தலைவிரித்தாடியது. நான் எதிர்க் கட்சியில் இருந்த நேரத்தில் எங்களது கழகத் தோழர்கள் தாழங்குப்பம் பகுதியில் போய் வாக்காளர்களைச் சந்திக்கக்கூட முடியாத நிலை இருந்தது. அந்த நேரத்தில் கூட அரசியல் படுகொலை நடைபெறவில்லை. ஆனால் மக்களது [illegible] பொதுமக்களைப்பெற்ற திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் ஆட்சிப் பொறுப்புக்கு வந்து அமைச்சரவையை ஏற்படுத்தியிருக்கும் இந்த நேரத்தில் 3 கழகத் தோழர்கள் அரசியல் படுகொலைக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்றால் இதை யாரும் மறுக்க முடியாது. அதன் காரணமாக அங்கே ஒரு கொந்தளிப்பான நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. எப்படியோ யாராக இருந்தாலும் இத்தகைய ஒரு அரசியல் படுகொலை நாட்டில் நடக்கலாமா?

இன்றையதினம் மூன்றுபேர் பலியாக்கப்பட்டிருக்கிறார்கள். வேறு எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி—நமது கழகத் தோழர்கள் அரசியல் நாகரிகத்தை வளர்க்கவேண்டுமென்று சொல்லி, நமது அறிஞர் அண்ணா அவர்கள் அந்த அரசியல் நாகரிகத்தைக் காக்க அரும்பாடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அப்படிப்பட்ட அரசியல் நாகரிகப் பண்பாட்டுக்கு மாற்றுக் கட்சியினர் செய்துள்ள இந்தக் கோரக்கொலை ஒவ்வுமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இத்தகைய அரசியல் படுகொலைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாகவேண்டும். அங்குள்ளவர்கள் அந்த 3 தோழர்களின் சவ அடக்கம் நடைபெற்றபோது நான் "போலீசார் தன் வேலையைச் செய்யும், கொலை செய்தவர்கள் தப்ப முடியாது. ஆனால் நாம் இப்போது அமைதியாக இருக்க வேண்டும்" என்று சொன்னேன். அவர்களும் சமாதானம் அடைந்து இருக்கிறார்கள்.

தமிழகத்தின் முதல்வர் கலைஞர் அவர்கள் இரண்டு நாளைக்கு முன்பாக இந்த அவையிலேயே ஒரு அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். யாராக இருந்தாலும் கொலை செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும், போலீசார் தீவிரமாக இதில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று சொன்னார். அதைக்கேட்டு என் தொகுதி மக்கள் தாழங்குப்பம், கச்சிப்பட்டுப் பகுதி மக்கள் நீதி கிடைக்கும் என்று அமைதியாக காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்றுவரை எனக்குக் கிடைத்துள்ள தகவல்களின்படி இந்த அநாகரிக—அரசியல் படுகொலைக்கு முக்கியஸ்தர்களாக—பின்னணியில் ஆக—தலைமையாளர்களாக இருந்தவர்கள் யாரும் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதாகும். ஆகவே இதுபற்றி தீவிர கவனம் செலுத்தி நியாயம் கிடைக்க வழி செய்வதோடு கூட—இனி நாட்டில் இது போன்ற அரசியல் படுகொலைகள் நடைபெறாதிருக்க விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏழை பாட்டாளி—தொழிலாளி மக்களால் பெருவாரியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டு ஆட்சிக்கு வந்திருக்கிற நம்முடைய கழக அரசு தொழிலாளர்களுடைய நல்வாழ்வுக்காக—பின்தங்கிய மக்களுடைய நல்வாழ்வுக்காக விரிவான பல திட்டங்களை மேற்கொண்டு வருகிறது என்றாலும், மேலும் அவற்றை விரிவு படுத்தவேண்டும். நம்முடைய சமுதாய அமைப்பிலேயே அடிப்படையான முக்கிய மாற்றத்தை—ஏற்றத் தாழ்வற்ற சமுதாய அமைப்பிற்கு அடிகோல வழிவகைகளைக் கண்டாகவேண்டும். முதலாளி சமுதாய அமைப்பை மாற்றி—

[திரு. மா. வே. நாராயணசாமி] [1971 ஏப்ரல் 1

எல்லோருக்கும் சமவாழ்வு—எல்லோருக்கும் சமவாய்ப்பு என்ற அடிப்படையில் நம் அரசு செயல்படவேண்டும். ஏழை எளிய பாட்டாளி மக்கள் இந்த அரசுக்குப் பேராதரவு அளித்திருக்கிறார்கள். அவர்களுடைய விருப்பங்கள் நிறைவேற்றப்படவேண்டும்.

அடுத்து, கவர்னர் அவர்கள் தம் உரையில் மிகத் தெளிவாக, குடிசை மாற்று வாரியத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். வாழ்வதற்குக் குடிசைகூட அற்ற நம்முடைய ஏழை மக்களுக்கு நல்ல வசதிமிக்க வீடுகள் கட்டித்தரப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிக் கவர்னர் பொது தொழிலாளர்களுக்கான குடியிருப்புப் பகுதிகளை முதலாளிகள் சரிவர இந்த நாட்டில் செய்யவில்லை என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்கள். முதலாளிகள் தொழிலாளர்களுக்காக குடியிருப்புக் காலனிகளை நாட்டில் உருவாக்கவேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு சொல்லியிருக்கிறார்கள். நான் தொழிற்சங்க ஊழியன் என்ற முறையிலே நன்றாக அறிவேன். இந்த நாட்டில் உள்ள முதலாளிகள் தங்களுடைய தொழிலாளர்களுக்கு குடியிருப்பதற்கான வீடுகளைக் கட்டித்தர வேண்டுமென்ற கடமை உணர்ச்சியை உணர்ந்து இருப்பதாகத் தெரியவில்லை. முன்னேற்றம் அடைந்துள்ள முதலாளிகளின் மனநிலை எப்படியென்றால்— தொழிலாளர்களைப் பார்த்து நீங்கள் கூட்டுறவு சொஸைட்டியை ஏற்படுத்திக் கொண்டு வீடுகள் கட்டிக்கொள்ள முயற்சி எடுங்கள், நாங்களும் எங்களாலான உதவிகளைச் செய்கிறோம் என்று சொல்கிறார்களே தவிர அதைக் கட்டிக் கொடுப்பது தங்கள் கடமை என்பதாக உணரக் காணோம்.

ஆகவே, நம்முடைய அரசு, ஒரு முதலாளி தொழிற்சாலைக்காக 10 எக்கர் நிலம் வாங்குகிறார் என்றால், அதோடு தொழிலாளர் குடியிருப்பைக் கட்டிக் கொடுப்பதற்காகவும் மற்றுமொரு பத்து ஏக்கர் வாங்கவேண்டும் என்பதை வலியுறுத்தவேண்டும். சட்டபூர்வமாக அதை உருவாக்க முடியுமா என்று சிந்திக்க வேண்டும்.

ஏற்கனவே கூட, காங்கிரஸ் ஆட்சி இருந்த நேரத்தில், முன்னாள் தொழில் அமைச்சராக இருந்த திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தொழிலாளர்களுக்கு முதலாளிகள் வீடுகள் கட்டித்தரவேண்டும் என்பதாகப் பலப்பல அறிக்கைகளை வெளியிட்டார்கள். அதற்கு சப்ஸிடித்தான் லோன்கூட வழங்கப்படும் என்று சொல்லிவந்தார்கள். ஆனால் நடைபெற்றது என்ன? தொழிலாளர் குடியிருப்புக் காலனிகள் நாம் எதிர்பார்த்த அளவு நாட்டில் வரவில்லை. எதற்காகச் சொல்கிறேன்?

பெரிய தொழிற்சாலையாக அமைந்து அங்குள்ள தொழிலாளர்கள் மாதம் ரூ. 200, ரூ. 300 என்று சம்பளம் வாங்குகிறார்கள். பிராவிடெண்ட் பண்டு இருக்கிறது. கிராஜுவிடி இருக்கிறது. அவர்கள் தொழிற் சங்கம் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படி தொழிற்சங்க ஸ்தாபன அமைப்பு ரீதியில் செயல்பட்டு வருகிற தொழிலாளர்களுக்கே இன்னமும் குடியிருப்புக் காலனிகள் அமைத்துக்கொடுக்கப்படவில்லை என்றால் ஸ்தாபன அமைப்பு ரீதியில் வராத பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய தொழிலாள மக்களுடைய நிலை எப்படி இருக்கும்?

1971 ஏப்ரல் 1] [திரு. மா. வே. நாராயணசாமி]

இன்னும் சொல்லப்போனால் சுதந்திரம் அடைந்து இந்த இருபத்திமூன்று ஆண்டுக்காலத்திலே ஏற்கனவே இருந்த காங்கிரஸ்காரர்கள் தெளிவான திட்டங்களைப் போட்டிருந்தால் இன்றைக்கு ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு, இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தரப்பட்டிருக்கும். அதற்கான முயற்சிகள் அவர்களால் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதைத்தான் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களும் அதற்குப் பிறகு பேசிய திருமதி அனந்தநாயகி அவர்களும் சொன்னார்கள், காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் நாங்கள் எவ்வளவோ செய்தோம் என்று சொன்னார்கள். நான் சொல்கிறேன், தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித்தரப்பட வேண்டுமென்று சொன்ன நேரத்திலே தொழிலாளர்கள் பாக்கெட்டிலிருந்து எந்தப் பணத்தையும் போடவேண்டியதில்லை, 10 சதவிகிதம் பிராவிடண்ட் பண்டிலிருந்து தந்தால் போதுமானது, இண்டஸ்ட்ரியல் சப்ஸிடைஸ்டு ஹவுஸிங் ஸ்கீம் என்ற முறையில் மீதி 90 சதவீதம் பணத்திலே 65 சதவீதம் கடனாகவும் 25 சதவீதம் மானியமாகவும் தரப்படும் என்று சொன்னார்கள். இதை நம்பி பல இடங்களிலே தொழில் சங்கங்கள் முன்வந்து கூட்டுறவு சொஸைடிகள் துவக்கினார்கள். ஆனால் நடைமுறையிலே பார்த்தால் தேசிய நெருக்கடி என்ற நிலையைக் காட்டி மானியத்தைத் தரவில்லை. லோ இன்கம் குரூப் திட்டத்தின் அடிப்படையிலே கடன் வழங்குகிறோம் என்று சொல்லி காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே 4,900 ரூபாய் அதாவது 5,000 ரூபாய்தான் கடனாகத் தந்தார்கள். ஆனால் வீட்டின் மதிப்பு 10,000 ஆக இருக்கும். அந்தத் தொழிலாளர் ஒரு ஆயிரம் ரூபாய் பிராவிடண்ட் பண்டிலிருந்து தந்து விட்டு பற்றாக்குறைக்காக முதலாளிகளை எதிர்பார்த்து இருப்பதும், அவர்கள் இல்லையென்பதுமான நிலைமைகள்தான் இருந்தன. அப்படிப்பட்ட சங்கடங்களால்தான் தொழிலாளர் குடியிருப்புகள் வளரவில்லை. அவர்கள் காலத்தில் 4,900 ரூபாய்தான் கடனாகத் தந்தார்கள். ஆனால் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு தொழிலாளர்கள் வீடு கட்டுவதற்கு 5,600 ரூபாய் தரக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. (மணியடிக்கப்பட்டது.) அடுத்தபடியாக என்னுடைய தொகுதியைப்பற்றி ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

DR. H. V. HANDE: Honourable Speaker, Sir, in support of the amendments moved by me on behalf of the Swatantra Party, I wish to offer a few remarks on the Governor's address. Sir, we have finished the elections and willy nilly the D.M.K. and its allies have won the elections with a large majority, practically ten times the strength of the Opposition. In view of the fact that there is a clear-cut mandate given to the ruling party, I feel that it is better that certain norms are evolved and followed by both sides of the House. I am not going to repeat how and why we lost the elections and this conduct a *Post mortem* examination. Now I would straightaway get down to brasstacks.

Sir, it is up to the ruling party to say that the Governor's address contains all the things required by most of the people, and it is up to us to refute that the Governor's address does not contain

several other things which ought to be there. So it would be better to enter into this sort of discussion and highlight those points instead of bringing in personalities and talking about them in derogatory terms which would certainly hurt the feelings of others. So I would request the Chair to protect us as we are in a minority. It is perfectly all right if certain policies or ideals are attacked but leaders of other parties should not be attacked by saying that some other person had spoken about them in a disparaging manner. Where is the proof in support of that statement? So, once again I beseech you with all the persuasiveness at my command to put an end to the use of derogatory terms and adjectives.

Now, the people have given a clear mandate to the Hon. Chief Minister and keys have been handed over to him. Hereafter there is no point in saying that they would have done better but for so and so. Clear mandate has been given not only to the State Government but also to the Central Government and Mrs. Indira Gandhi. In the five years they should show better administration and better implementation of their policies. It is up to us to say that they have not done it and that they have committed lapses. It is their business to refute our argument and say that defects have been rectified and there is proper administration.

Sir, so far as the law and order situation is concerned, I must say that still it leaves very much to be desired. In several parts of the city, certain things are going on. We are in an unhappy position. Sir, we want justice and fairplay. Now in several constituencies *postmortem* has been done and questions are asked why in a particular locality votes had not been cast for a particular candidate and this sort of *postmortem* is not necessary. After all, we are only 21 Members and the ruling party members should not grudge about it and conduct a *postmortem* examination why a particular street had not voted for the candidate of the Ruling Party.

Now a lot of witch-hunting is going on in my constituency. In G 1. police station area a lot of things have happened. In this connection I wish point out that even when I was a Member of the Legislative Council I had many occasions to pinpoint the mistakes committed by the then Government. Even yesterday and this morning I have received reports that persons who have worked for me have been taken to the police station. Also last evening a group of people from Perambur came and told me that a person was beaten and sent to the hospital. A Councillor there told me that he had submitted the list of names of persons who were alleged to have beaten taken him but still no action has been taken.

The same thing is true of myself also. After my speech is over I will pass on the letter to the Hon. Chief Minister for necessary action. I do not want to create any scene now. I want to impress on the Government that there is a great deal of trouble. The Sub-Inspector does not know what has happened, when we telephone

the Sub-Inspector, eventhough he is inside the station, nowadays it is said he is out of station. That is the position to day. Where is this going to lead to?

Persons who had worked for us, their names are taken and their job opportunities are spoiled. Most of them are poor people. They find out where they are employed and anonymous petitions go to those places that such and such men are indulging in political activities such sort of thing is being done. In my own constituency, in G. V. Koil street I have a very good friend. He owned a saloon there. Fortunately or unfortunately I had addressed Barbers' Association meetings there. I am very closely associated with that community. They also liked me and this friend produced a pamphlet asking Members of his community to vote for Dr. Hande because Dr. Hande had done so many things for them. Whether I have done something to them or not is not the question. He expressed that sentiment and produced the pamphlet asking people to vote for me. The trouble started afterwards. What is the result? He had to close down his job, people used to come and say ' you are the man who produced that pamphlet. Let us see how you continue here '. These pinpricks are there. The result was he had to close the shop. That is how people who had voted for us lose their jobs. Sometimes I feel why I had contested the elections and why I won. I request the Hon. Chief Minister to intervene and see to it that such things are put an end to. I have been receiving complaints. In division No. 31 one Dr. Balakrishnan, a candidate against the united Congress, who is in the Congress (Sanjivayya), was beaten, on the day of election, viz., 1-3-1971. Complaints were registered and until we do not know what action had been taken on the complaint and who had been arrested. No one had been arrested, I think, so far.

So far as I am concerned I move very well with the Ministers and members here. When I look at the Hon. Chief Minister because of our association here in Legislature for so many years we have developed comradeship with one another, so also with other members I have developed comradeship. I might disagree, with them and I have been disagreeing. But they appreciate my stand and respect my disagreement. We move freely with one another. But at the level of constituency this comradeship had not been pursued. I request all Members to unite together and see that something is done about it. If the present thing goes on unchecked even democracy can be destroyed. That is the danger, which I foresee, to the very root of democracy.

My information is certain persons went to a theatre and cut off the screen and a particular show could not be shown. They created trouble, in other theatres saying that if such and such a film is shown, there will be trouble. I do not bother which is that film. I don't see films and I have no time for it. The Hon. Chief Minister has said that the theatre owners might have changed the picture because of poor collection. I have pointed out what had

happened. Why should it be done? Why should not the film be allowed to have its regular run? If it is not popular, it will be automatically not shown after sometime and nobody would bother. Without doing that, why should this trouble be started? That is why I say ' let us put a stop to this '. Let the Chief Minister listen and take action on what we, in the Opposition say. After all, the strength of the Opposition here is not even 1/10th of the strength of the ruling party. Let me once again appeal to the Hon. Chief Minister to do something about these things. If necessary let us invite leaders of parties and do something.

We had given another amendment on employment problem. Mention has been made about employment problem, in the Governor's speech. Let me read the extract.

We have been concerned with increasing unemployment in the State. It must be recognised that unemployment is a national problem and can be solved only by co-operative efforts of the Centre and the State and the State by itself cannot be expected to solve the problem, etc."

It is said that 6,500 teachers had been given jobs and that apprentice engineers numbering 2,100 had also been taken into service. My information is otherwise. Even today I had received number of letters. It is said 6,500 teachers had been employed. Actually it is only under-employment. I have explained in my amendment. According to my information about 2,500 or 3,000 tutors are actually on the roads today on 1-4-1971 most of them are temporary and in each college about 25 such tutors and lecturers had been thrown out. My calculation is that about 2,500 to 3,000 such boys are on the roads today. They are young men of 25 or 26.

This problem had been brought to the notice of the Education Minister by me even last year when I moved my cut motion to Demand—Education, I pleaded that these persons should not be thrown out during vacation but that they should be given increment. These poor lecturers or tutors thought that Government, would act upon what I had said and thinking that all would be well since I had spoken, many of them got married also. I do not know what will happen to their families now. They are on the roads now. Let us do something for them. There is no use of mentioning it here and doing nothing about it later. If you ask any MLA what is the problem which is confronting him today, he will say it is unemployment. How serious it is, we all know. 30 or 40 persons come to us on an average, asking for this attestation or that certificate. All this is for getting some job.

About an year ago, the Electricity Board advertised for about 1000 jobs. Till today nothing is known about the number employed. Each one had to spend Rs. 5 for fee and Rs. 2 for typing application, getting attestation by going to MLA's house in cycle, paying hire charges for cycle, etc. During those times, on an average

6 to 7 people used to come to me daily for attestation. What happened? Why did we give false hopes to these people? Till today my information is not even 1/100 of the 1,000 posts advertised had been filled. I asked a number of persons who had applied and they said ' we had not received orders ' Why should Government give them false hopes? This is a very serious charge which I am levelling against the Government. They ought to have filled up all the posts, if they meant it seriously. Let the Hon. Minister look into this problem and see that something is done about it.

Now I come to apprentice engineers. It is said 2100 engineers had been taken. I asked a number of engineers. They had not received orders of appointment. Let me know how many actually had been given jobs. The present unemployment among engineers is alarming. But nothing has been mentioned about it in the budget by Government.

I now come to the third amendment of mine about price level. On page 9 of his Address, the Governor had made certain points. Let me read : " During the year gone by, the overall price situation caused us some anxiety, etc.". This is height of euphemism. It is an under statement. It is an anachronism. It has been going on higher and higher. I have drawn the attention of the previous Hon. Minister for Labour, Mr. Vezhavendan about the non-publication of the cost of living index and brought it to the notice of the House. Since it was not published for three months, the workers could not have the benefit of the higher D.A. due to rise in price. The cost of living was going on increasing and I had brought it to the notice of Government time and again.

So I have raised it thrice and some explanation was given that the cost of living index was prepared on the basis of the index prepared in Simla where there is a separate organisation for that purpose. It was stated that the whole cost of living index would be reorientated and therefore there was delay in the placing of the cost of the living index before the public. A number of trade unions including INTUC objected to that. According to that index workers would be losing a large amount of money. I have been stressing time and again that the cost of living has been increasing but nothing has been mentioned about it in the Governor's address. Therefore, I have mentioned about the price factor in my amendment.

With regard to pensioners, I had already referred to them in my speech on the Interim Budget and I leave it at that.

Then with regard to education, I have already given notice of a short notice question if I remember aright. I am glad that the report of Dr. Lakshmanaswami Mudaliar has been accepted and it is going to be implemented in the month of June. The month of June is a head-ache for all parents and they are dreading it as they have to get admission for their sons and daughters.

Fortunately we are now in the month of April and now it is the proper time to relieve the anxiety of the parents and do something to remove their efars about admissions to educational institutions.

Finally I come to a very important matter and I request the Hon. Chief Minister to devote his full attention to it. It relates to the devolution of funds between the Centre and the States. My submission is that a clear-cut policy has to be evolved. The Constitution provides that for capital expenditure, the Centre and the States should borrow from the public but almost the entire capital expenditure for the plans has been met by loans from the Centre to the States. At the end of 1950-51, the loan advanced to State Governments stood at the nominal figure of Rs. 195.58 crores and at the end of the financial year 1970-71, it is expected to reach Rs. 6,125.08 crores—it is a fantastic figure. From about Rs. 200 it has increased to about Rs. 6,000 crores. The payment by States towards the debt for 1969-70 amounted to Rs. 640 crores and interest payments to Rs. 261 crores. Now we are asking for re-sheduling of the re-payment of our debts. Against this collection of Rs. 901 crores from the States, an amount of Rs. 1,032 crores was advanced as loans for the same year. Thus, the net receipts for the States were only Rs. 128 crores. The Centre give a large amount of money and at the same time take back a large amount of money towards debts. I request the Chief Minister to look into this aspect of the matter and see that something is done to remedy the situation.

Now I will explain my point with reference to statistics. Out of the total revenue expenditure of the States for 1969-70, 37.3 per cent was derived from the Centre and out of the Capital expenditure 92.4 per cent. Thus the States have to depend on the Centre for financial assistance. In this connection, I wish to point out that according to article 269, certain taxes have been collected by the Centre and given to the States. This amount has to be increased and we should not depend upon the discretionary grant. Now we are in the grip of the discretionary grant. This sort of thing should go.

Coming to interest charges, on page 6 of the Budget speech, the Hon. Chief Minister has stated—

'If we take into account the payment of interest also, the total debt service payment to Government of India during 1971-72 is in fact Rs. 16 crores more than the loans we are to receive from them.'

MR. SPEAKER: The hon. Member has already taken 25 minutes.

DR. H. V. HANDE: I will require another five minutes.

My point is when all other States are getting additional resources to the tune of about Rs. 800 crores, we are going to get minus Rs. 16 crores. We have to repay our debt of Rs. 16 crores to the

Government of India. This aspect of the matter has been referred to by the Chief Minister also in his Budget speech. He has stated—

'. . . taking all schemes of transfer of central resources together the five-year transfer to Tamil Nadu is Rs. 142.5 per capita as against a national average of Rs. 185.5 per capita. .'

What does it point out? It points out very clearly that while all other States are getting additional resources from the Centre, our State has been completely neglected. We are not getting our due share which we ought to get statutorily. I ask a pertinent question. Why we are not getting out money? I am making a very serious charge against this Government in regard to this matter. There is some mistake somewhere. Our case has not been properly presented to the Centre. It is the business of the State Government to see that we are not cheated by the Central Government. I charge the Ministry with gross inefficiency and mismanagement at the National Development Council meetings. What was the Chief Minister or his emissaries doing at those meetings? Had they given any dissenting note in any of the meetings? What exactly transpired at those meetings? As the financial security of our State is at stake will the Hon. Chief Minister tell us in his reply what exactly had happened at the meetings of the National Development Council and the Planning Commission?

'Report from Tamil Nadu is awaited'. That is what is said. We have not even discussed with the Planning Commission. When such is the case, we have accused the Planning Commission.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள், "எத்தனை கூட்டங்களில் கலந்து கொண்டீர்கள்? எத்தனை கூட்டங்களில் இவற்றை விவாதித்தீர்கள்? வற்புறுத்திக் கேட்டீர்கள்? ப்ளானிங் கமிஷன் மீட்டிங்கில் எவ்வளவு தடவை கலந்து கொண்டீர்கள்?" என்றெல்லாம் கேட்டார்கள். இந்த அரசு இதில் எல்லாம் அக்கறை இல்லாமல் இருந்தது போல மாலைப் பத்திரிகைகளில் செய்திகள் வரும். இதற்கு விளக்கமான பதிலை நாளையதினம் என் உரையில் நிச்சயமாக அளிப்பேன். இந்த மன்றத்தில் ஏற்கெனவே இன்றைய பேரவைத் தலைவராக இருக்கும் அன்றைய நிதி அமைச்சர் அவர்கள் அந்த அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறார்கள். அதையெல்லாம் எதிர்க்கட்சித்தலைவர் டாக்டர் ஹாண்டே அவர்கள் மறந்திருக்கக்கூடும். இருந்தாலும் மறுபடியும் அதை ஞாபகப்படுத்தி, நாளையதினம் அவற்றைப் பற்றியெல்லாம் விளக்கமாகச் சொல்ல இருக்கிறேன். இந்த அரசு இதில் அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை என்ற தவறான தகவல் இன்று மாலைப் பத்திரிகைகளில் வந்து அதைப்பார்க்கிற மக்கள் நாளைக் காலை வரையில் அப்படிப்பட்ட சந்தேகத்தில் இருந்து விடக்கூடாது என்பதற்காக, தற்காப்பிற்காக இந்தப் பதிலைச் சொல்லி வைக்கிறேன்.

[1971 ஏப்ரல் 1

டாக்டர் எச். வி. ஹாண்டே: நல்ல கருத்துக்களோடு, நல்ல புள்ளிவிவரங்களோடு போராட வேண்டுமென்று சொன்னேனே தவிர, நீங்கள் நல்ல புள்ளி விவரங்களோடு ஆதாரங்களோடு போராடவில்லை என்பதுதான் என் குற்றச்சாட்டு.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: புள்ளிவிவரங்கள் என்று சொன்னால் எது அவசியம், எந்தப் புள்ளிவிவரங்கள் வேண்டும் என்பதெல்லாம் எங்களுக்குத் தெரியும். எந்த வகையில் போராட வேண்டுமோ அந்த வகையில் நாங்கள் போராடியிருக்கிறோம். புள்ளிவிவரங்கள் இல்லாமல் போராடுகிறோம் என்று குற்றஞ்சாட்டுவது முறையாகாது, ஒரு பொறுப்புள்ள உறுப்பினர் அப்படிப் பேசுவது முறையல்ல.

டாக்டர் எச். வி. ஹாண்டே: போராட்டத்தில் வெற்றிபெறவில்லை என்று நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். உங்கள் போராட்டம் சரியாக இல்லை என்பதுதான் என் கருத்து.

* **திரு. த. சோனையா:** சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் பேசுகிற ஒரு சந்தர்ப்பத்தை தாங்கள் வழங்கியிருப்பதற்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சர்வசாதாரணமான, சாமான்யமான எங்களைப் போன்றவர்களை அவையில் உருவாக்கிய, நாங்கள் வழிபடும் தெய்வமாகிய அறிஞர் பேரறிஞர் அறிவின் சிகரமாக விளங்கிய பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு எனது முதல் பேச்சைக் காணிக்கையாக்கி இருப்பது ஆண்டவனாக நினைவுகூரும் நேரத்திலும், கழகத்திற்கும் நம்பு நம்பிக்கையிருக்க எங்களைப் போன்ற சாமான்ய மக்களுக்கு விடுதலை கிடைக்கும், என் போன்ற சாதாரணமானவனை இங்கு அனுப்பிய என் தொகுதிப் பெருமக்களுக்குத் தங்கள் மூலம் என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மன்றத்தில் எங்களுக்குத் தேவையான காரியங்களைச் சொல்வதற்காகத்தான் இங்கு வந்திருக்கிறோம். அப்படி வந்திருப்பவர்கள், தங்களது தொகுதிக்கு என்னென்ன தேவையென்று எதை வேண்டுமானாலும் சுதந்திரமாகச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. ஆனால், இந்த மன்றத்தில் ஒரு உறுப்பினர் மற்றொரு உறுப்பினரின் தொகுதியைச் சுட்டிக்காட்டி, அந்தப் பகுதியில் அப்படிச் செய்திருக்கிறார்கள், இந்தப் பகுதியில் இப்படிச் செய்திருக்கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அதுவும் ஒரே மாவட்டத்தைச் சேர்ந்தவர். குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்தவர், கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர், மதிப்பிற்குரிய உறுப்பினர் என்று கருதுகிறேன். அவர் கிழக்கு இராமநாதபுரத்தில் இப்படியெல்லாம் செய்திருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைச் சுமத்தினார்கள். எல்லாப்பகுதிகளிலும் உழைப்பவர்கள் எல்லாம் ஒன்றாக இருக்கவேண்டுமென்ற கருத்தைக் கொண்ட கட்சியைச் சார்ந்தவர், அதிலும் இந்தியாவின் ஒருமைப்பாட்டை வலியுறுத்திப் பேசுகிற கட்சியைச் சார்ந்தவர் அப்படிச் சொல்லியிருக்கிறார்.

கிழக்கு இராமநாதபுரம் ஒரு பின்தங்கிய பகுதியாகும். கிராமப்புறங்களில் ஆடுகள் வளர்ப்பவர்களுக்கு நன்கு தெரியும். தொத்தக்குட்டி என்று சொல்வார்கள். அதற்கு விசேஷ சலுகை தரவேண்டுமென்று சொல்லிக்கொள்ள

விரும்புகிறேன். தொத்தக் குட்டியையும் மற்ற குட்டிகளோடு பால் பருக விட்டு விடுவார்கள். அதுவும் பாலைப் பருகிப் பெருத்துவிடும். இதைப்போலவே மற்ற மாவட்டங்களோடு இணைப்பாக இருந்து உரிமை பெறுவதற்கு வாய்ப் பளிக்கவேண்டுமென்றுதான், பின்தங்கிய மாவட்டத்திலிருந்து வந்து இருக்கும் நான் அதைப்பற்றிப் பேசுகிறேன். கிழக்கு இராமநாதபுரம் மாவட்டம் பின் தங்கிய மாவட்டம். மேற்கு இராமநாதபுரத்திலிருந்து வந்த உறுப்பினர் பேசியபோது, கொஞ்சம் நினைத்துப் பார்த்திருப்பாரேயானால், கிழக்கு இராம நாதபுரம் எந்த அளவுக்குப் பின்தங்கிய மாவட்டம் என்பதை உணர்ந்திருப் பார். கிழக்கு இராமநாதபுரத்தில் என்ன தொழில் பெருகி இருக்கிறது? மேற்கு இராமநாதபுரத்தைச் சார்ந்த இராஜபாளையத்திற்கு அருகேதான், நம்முடைய அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட ஆலங்குளம் சிமெண்ட் பாக்டரி இருக்கிறது. ஸ்ரீவில்லிபுத்தூரில் நிறைய நூற்பு ஆலைகள் இருக்கின்றன. ஸ்ரீவில்லிபுத் தூருக்கு அருகே 78 லட்சம் ரூபாய் அளவில் ஒரு அணை கட்டுவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. புதுப்புது கண்மாய்கள் வெட்டப்பட்டு இருக்கின்றன. இவ்வளவு தொழிற்சாலைகளைக் கொண்டிருக்கும் போது, கிழக்கு இராமநாதபுரத்தில் உண்டா என்று கேட்க ஆசைப்படுகிறேன். ஒரு அரசாங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நூற்பு ஆலை உண்டா? ஒரு மாவட்டத்தைச் சார்ந்தவர், ஏன் அந்த அளவுக்கு குறைப்பட்டுக் கொண்டார் என்று எனக்குப் புரியவில்லை. கிழக்கு இராமநாதபுரம் மாவட்டம் தொடர்ந்து வறட்சி நிலையில் இருக்கிறது. பஞ்சத்திற்கு நாங்கள் சொந்தக்காரர்கள். பட்டினி, பசி இருந்து பழக்கப்பட்டவர்கள். குறிப்பாக, தேர்தல் நேரத்தில் என்னுடைய தொகுதிக்கு அப்பாற்பட்ட சில கிராமங்களுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. காரணம், என்னுடைய தொகுதியைச் சேர்ந்த பல வேட்பாளர்கள் பக்கத்து ஊர்களுக்குச் சென்று கதிர் அறுவடைக்குக் கலந்து கொண்டிருக்கச் சென்று, வாக்காளர் சென்ற இடங்களுக்கெல்லாம் சென்று, "வாக்காளப் பெருமக்களே, நடைபெற இருக்கிற தேர்தலில் என்னைத் தேர்ந் தெடுப்பதற்காக தொகுதிக்கு வந்து ஓட்டளிக்க வாருங்கள்", என்று சொன்னேன். இப்படி என்னுடைய தொகுதி வாக்காளர்கள் அடுத்த ஊர்களுக்குச் சென்று சம்பாதிப்பதற்குக் காரணம், அங்கே தொழில்கள் ஒன்றும் இல்லை என்ற காரணத்தால் என்பதை வலியுறுத்திக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தமிழக அரசு இராமநாதபுரம் மாவட்டத்தில் பஞ்ச நிவாரண வேலையை துவக்கிய காரணத்தால் பல லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைத்தது. இருப்பினும், அங்கே இருந்த நிலையில் ஒன்றும் மாற்றம் இல்லை. ஆகவே, தமிழக அரசு மீண்டும் தொடர்ந்து 10 ஆண்டுக் காலத்திற்கு அந்த பஞ்ச நிவாரண வேலைகளை, ஆண்டு ஒன்றுக்கு 2 கோடி என்ற வகையில், செய்ய வேண்டுமென்று மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். பஞ்ச நிவாரண வேலைகளில் குறிப்பானதும், சிறப்பானதும் சமுதாயக் கேணிகள் வெட்டப் பட்டது தான். அந்த சமுதாயக் கேணிகள் வெட்டப்பட்ட காரணத்தால் ஓரளவு விளைச்சல் ஏற்பட்டு இருக்கிறது. சமுதாயக் கேணியால் பல நன்மை, பல பலன் இருக்கிறது. ஆகவே தொடர்ந்து சமுதாயக் கேணிகளை வெட்டித் தரவேண்டுமென்று இந்த அரசைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. த. சோனையா] [1971 ஏப்ரல் 1

சிறு விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் ஏழை விவசாயிகளுக்கு நிலச் சீர்திருத்தக் கடன்கள் தரவேண்டும். பாங்குகள் கடன் தரவேண்டும். அப்படிக் கடன் தருகிற நேரத்தில், பண்ணையாளர் வைத்திருப்பவர்களுக்கு ஆர். சி. புக் தரப்படுவது போல், அதை வைத்து அவர்கள் கடன் வாங்க வசதி இருப்பது போல், விவசாயிகளுக்கும் பாஸ் புக் போன்ற ஒரு புத்தக முறையை ஏற்படுத்தி, அவர்கள் வைத்திருக்கும் நிலத்தின் பேரில் எவ்வளவு கொடுக்கலாம் என்பதையும் எழுதிக் கொடுத்தால், அவர்கள் அதை வைத்து லேண்ட் மார்ட்கேஜ் பாங்கிலோ அல்லது வேறு இடங்களிலோ கடன் வாங்க வசதியாக இருக்கும். ஏழை விவசாயிகள் ஆதாரங்கள் காட்டுவதற்காக பல இடங்களில் வரை அலைந்து கொண்டிருக்க முடியவில்லை. ஆகவே, இந்த பாஸ் புக் முறையை உடனடியாக அமுல் நடத்த பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இராமநாதபுரத்திலுள்ள மக்கள், [illegible] விளைச்சல் இல்லாத காரணத்தால் அரசுக்கு வரி கட்ட முடியாமல், அரசு வாங்கிய கடனைத் திருப்பிக் கட்ட முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு வரி வஜாவும், லோன் வஜாவும் செய்து தர வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வைகை பெரியாறு திட்டத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். தம்முடைய ஆட்சிக் காலத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் விருதுநகரில் ஒரு அணை கட்டுவதற்காக அடிக்கல் நாட்டி வைப்பதற்காக வருவதாக இருந்தது. அந்த நேரத்தில் அவர் உடல்நலம் சரி இல்லாத காரணத்தால் அமெரிக்காவுக்குச் சென்று விட்டதால் அந்த வைகை பெரியாறுத் திட்டம் தொடங்கப்படாமல் நின்று விட்டது. ஆகவே, அதைத் தொடர்ந்து நிறைவேற்றித் தரவேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். மதுரை மாவட்டத்தில் ஒரு அணை இருக்கிறது. அதிலிருந்து இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ஒரு அணையும் கிடையாது. மதுரை மாவட்டத்தில் அணை கட்டப்பட்டு விட்டதால், எங்களுக்கு பகுதிக்கு வந்து கொண்டிருந்த தண்ணீர் தடைப்பட்டு விட்டது. எங்கள் ஊரில் சொல்வார்கள், வடநாட்டு மலையில் மழை பெய்தது என்று சொன்னால், மதுரை வைகையில் வைகை ஆற்றில் தண்ணீர் வந்து விடும் என்று. இந்த அணை கட்டப்பட்டதால் அது தடுத்து நிறுத்தப்பட்டு விட்டது. ஆகவே, இந்த வைகை பெரியாறுத் திட்டத்தின் மூலமாக எங்கள் பகுதிக்குத் தண்ணீர் கிடைக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெரியாற்றுத் தேக்கத்திலிருந்து, முல்லையாற்றில் பாசனத்துக்கு வந்து மதுரைக்கு நீர்ப்பாசனம் தருவது போல், இந்த வைகை அணைத் திட்டத்தால் பாதிக்கப்பட்ட இராமநாதபுரம் மாவட்டப் பகுதிகளுக்கும் தண்ணீர் தருவதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நான் குறிப்பிட விரும்புவது இராமநாதபுரம் மாவட்டம் பிற்படுத்தப்பட்ட மாவட்டம். இங்கே பிற்படுத்தப்பட்ட மக்கள் தாழ்த்தப்பட்ட மக்கள், ஏராளமாக வாழ்கிறார்கள். ஆகவே, இங்கே இருக்கும் மக்களுக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்கப்படுவது போல் விசேஷ சலுகைகள் அதாவது தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நாட்டிலே [illegible] பாடுபட்டு 24 மணி நேரமும் உழைக்கும் உழைப்பாளர் பக்கம், கை வண்டித் தொழிலாளர்களுக்கும், ரிக்ஷா தொழிலாளர்களுக்கும் கை வண்டிகளையும்,

1971 ஏப்ரல் 1] [திரு. த. சோனையா]

ரிக்ஷா வண்டிகளையும் வாங்குவதற்கு அரசு கடன் தரவேண்டுமென்றும், இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்தத் தொழிலாளர்களுக்கு விசேஷ சலுகைகள் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அதே போல், இந்த சலவைத் தொழிலாளர்களுக்கும், மருத்துவத் தொழில் செய்பவர்களுக்கும், ஹரிஜனங்களுக்கு அளிக்கப்படுவது போல், எல்லாச் சலுகைகளையும் தரவேண்டுமென்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தலில் நடந்த பல சம்பவங்களைப்பற்றிச் சுட்டிக் காட்டினார்கள். குறிப்பாக, இராமநாதபுரம் மாவட்டத்தில், எங்களுடைய திறமைமிக்க, அருமை மிக்க தொழில் அமைச்சர் அவர்களுடைய தொகுதியில் நடந்த கலவரங்களை நாம் பார்த்தால், அங்கே பெரும் புயல் வீசியது போல் இருந்தது. பெரும் புயல் என்றால் ஒரு இடத்தில் அல்ல, இரண்டு இடத்தில் அல்ல, அந்தத் தொகுதி பூராவிலும் ஒரு வெறியை, மதவெறியைத் தூண்டி விட்டார்கள். பல பேருக்கு அடி. பல பேருக்கு தடி அடி. பல பேருக்கு ரத்தக் காயம். பலர் பல கஷ்ட நஷ்டங்களை அனுபவித்தார்கள். பிறகு, தமிழ் நாட்டிலேயே அதிகமான வாக்குகளைப் பெற்று இப்போது நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் இங்கே வந்திருக்கிறார்கள் என்பது அத்தனை பேருக்கும் நன்றாகத் தெரியும். தேர்தல் முடிவுகள் வெளி வருவதற்கு முன்பே, அவசரப்பட்டு, பெருந்தலைவர் அவர்கள், "என்னை கோட்டையில் வந்து சந்தியுங்கள்" என்று சொன்னார்கள். அவர் எப்போதுமே சந்திக்கச் சொல்வது என்பது சர்வசாதாரணமாகி விட்டது. சென்ற 1967 தேர்தலில், ஊர்வலத்தில் சென்றவர்கள் "சந்திப்போம்", சந்திப்போம்" என்று கோஷம் போட்டுக்கொண்டு போனார்கள். அந்த ஊர்வலத்தில் இரு பாலர்களும் சென்றார்கள். முன்னாலே சென்ற ஒரு பாலர் "சந்திப்போம்", "சந்திப்போம்" என்று சொல்ல, பின்னாலே சென்றவர்கள், "சந்திப்போம்", "சந்திப்போம்", "சாயங்காலமே சந்திப்போம்" என்று சொல்லி, அன்று இரவே சந்திக்கச் சென்றுவிட்டார்கள். பெருந் தலைவர் எல்லாம் தெரிந்தவரைப் போல் பேசிவிட்டார். எங்கள் ஊரில் ஒரு கதை சொல்வார்கள். ஒருவர், 'எல்லாம் தெரிந்தவன்', 'எல்லாம் தெரிந்தவன்' என்று சொல்லிக் கொண்டார். அதைப் பார்த்த 4 பேர்கள், ஒன்றாகச் சேர்ந்து அந்த எல்லாம் தெரிந்தவரிடம் சென்று, ஒரு காயைக் கொண்டுபோய்க் கொடுத்து, "எல்லாம் தெரிந்தவரே, இது என்ன காய் என்று சொல்லும்" என்று கேட்டதற்கு, அவர் அதைத் தொட்டுப் பார்த்து விட்டு, "காடி முட்டை" என்று சொன்னார். அவர், 'காடி முட்டை' என்று சொன்னவுடனே அவர்கள், "இது காடி முட்டை இல்லை, பனங்காய்" என்று அந்த மூட்டையை அவிழ்த்துக் காட்டினார்களாம். அந்த மாதிரி, நம்முடைய பெருந் தலைவர், 'சந்திப்போம்', 'சந்திப்போம்' என்றால், அவர் காடி முட்டைக் கதை விட்டுக்கொண்டு இருக்கிறார் என்றுதான் அர்த்தம். ஒரு காலத்தில் அவர் சொன்னதெல்லாம் நிறைவேறிக்கொண்டு இருந்தது. இங்கே இவரை நிறுத்தலாம், இங்கே இவரைப் போடலாம் என்று சொன்னதெல்லாம் நடந்தது. ஆனால் அந்தக் காலம் மலையேறிவிட்டது. இனிமேல் அவர் சொல்வது, செல்லாது, நடக்காது என்று சொல்லிக்கொள்கிறேன்.

இந்த மாமன்றத்தின் மூலம் நான் சொன்னவற்றையெல்லாம் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஆளுநர் அவர்கள் உரையில் மிகச் சிறப்பான வார்த்தைகளையும், சாராம்சம் பொருந்திய கருத்துக்களையும் உபயோகித்து

இருக்கிறார்கள் என்பதையும் கூறி, ஆளுநர் அவர்கள் உரையை ஆதரித்து, அவருக்கு நன்றி தெரிவித்து, இந்த அவையிலே என்னுடைய கன்னிப் பேச்சை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, with the permission of the Chair I would like to move the following amendment standing in my name :—

" Add at the end, the following :—

' but regret to note that there is no mention in the address about

(i) the most unsatisfactory way of conducting the mid-term poll recently;

(ii) the deteriorating law and order situation in the City of Madras after the mid-term poll;

(iii) failure of the Government to arrest the rise in the price of all essential articles; and

(iv) problem of unemployment in our State and on the other hand holding the Government of India responsible for it. "

THIRU R. PONNAPPA NADAR : Sir, I second it.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது ஒருசில வார்த்தைகளை என்னுடைய திருத்தத்தை ஒட்டி பேசுவதற்கு முன்பு பொதுவாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஆளுநர் உரைக்கு இன்றைக்கு நன்றி தெரிவிக்கும்படியான அவையிலே ஆளுகின்ற கட்சி அமர்ந்திருக்கின்றதைப் பார்க்கும்பொழுது எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு கவர்னர் பதவி அவசியமில்லை, கவர்னர் [illegible] இருந்து வரவேண்டாம் என்று கேட்ட கட்சியினர் இன்றைக்கு கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கக்கூடிய நிலைமை மாறிவிட்டது. அன்றைக்கு அவர்கள் ' [illegible] ' என்று [illegible] எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. நிலைமை எவ்வளவு வேகத்தில் மாறிவிட்டது என்பதை சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. அப்படி ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு நாங்கள் திருத்தம் கொடுக்க வேண்டிய அளவுக்கு நிலைமை மாறிவிட்டது என்பதையும் நான் மறக்கவில்லை. இந்த நிலையில் கவர்னர் அவர்களுடைய உரையைப் படித்துப் பார்த்தால், ஆளும் கட்சியினர் [illegible] என்று சொல்லிக் கொள்கிறார்கள். [illegible] கவர்னர் உரையிலே எடுத்துக் காட்டியிருப்பார்கள் என்று ஆவலோடு எதிர்பார்த்தோம். ஆனால் ஏமாந்து போய்விட்டோம். [illegible] அமைச்சரவையினர் திரு. [illegible] அவர்கள் [illegible] முதல் அமைச்சர் அவர்கள் [illegible] ' நீங்கள் [illegible] ' என்று கேட்டார். அவர்கள் அதற்கு விடைதர வேண்டியிருக்கும். நான் முதல் அமைச்சர் அவர்களை ஒன்று கேட்க ஆசைப்படுகிறேன் * *

* * மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

கவர்னர் உரையிலே இன்னும் தீவிரமாக உள்ள சமதர்மத் திட்டங்களை புகுத்துவார்கள் என்று எதிர்பார்த்தோம். அம் மாதிரி எதிர்பார்த்து மனச் சோர்வு அடைந்தோம். நகர்புறச் சொத்துக்களுக்கு சீக்கிரம் எல்லையை நிர்ணயிக்க வேண்டும் என்ற பொறுப்பு மாநிலங்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பதை மத்திய அரசிலே பிரதமர் அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள், என்ன சட்டங்களைக் கொண்டுவர இருக்கிறார்கள் என்பதைக் கூட கவர்னர் அவர்களின் உரையில் குறிப்பிட்டுக் காட்டவில்லை. அதைப்போல நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டியிருக்கிறோம். ஆனால் நாட்டில் இருக்கிற பஸ் ஆபரேட்டர்களுக்கு உச்ச வரம்பு கட்ட வேண்டாமா? அதைப்பற்றி ஒன்றுமே கூறப்படவில்லை.

ஒரு தனி நபர் 100, 150 பஸ்கள் ஓட்டுகிறார்கள். அவர்களை விட்டுவிட்டு, ஒரு பஸ், இரண்டு பஸ் வைத்திருப்பவர்களைப் பிடித்து தேசியமாக்குகிறோம் என்கிறார்கள். தனி நபர் ஒருவருக்கு 15 பஸ்களுக்கு மேல் இருக்கக் கூடாது என்று (ceiling on possession of buses) கொண்டு வருவார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால், அதுபற்றிக் கவர்னர் உரையில் எதையும் பார்க்கவில்லை. கடைசியில், மத்திய சர்க்கார் ஒத்துழைக்கவில்லை, ஒத்துழைக்கவில்லை, மத்திய சர்க்கார் விலைகளைக் குறைக்கவில்லை, குறைக்கவில்லை, மத்திய சர்க்கார் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்கவில்லை என்றே மத்திய சர்க்காரிடமே குற்றம் கூறுவதையே வழக்கமாக வைத்துக் கொண்டு, இப்பொழுது மத்திய சர்க்கார் மீதே குற்றத்தைத் தூக்கிப் போடுவதில் இருக்கிறார்கள். நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதுதான் கேள்வி. இப்படிப் பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட்டு, வாய்ப்பு வரும்போதெல்லாம் எதையாவது சொல்லிவிடுவது. இரண்டு நாட்களுக்கு முன்பாகக்கூட, முதல் அமைச்சரவர்கள், ' சுயாட்சி கிடைக்காமல் போனால், சுதுமான்களாக மாறுவோம் ' என்று குறிப்பிட்டதைக் கேட்டு உங்களோடு சேர்ந்திருக்கிற திருவாளர் பக்தவத்சலம் அவர்களே பயந்து போய் இவர்கள் என்ன பிரிவினை கேட்கிறார்களோ (குறுக்கீடு) என்று அவசரம் அவசரமாக ஒரு தீர்மானத்தை செங்கல்பட்டு மாவட்ட காங்கிரஸ் கூட்டத்தில், தம்முடைய தலைமையில் போட்டிருக்கிறார்கள். நான் விரும்புவது முதலமைச்சரிடமிருந்து . . . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாநில சுயாட்சி கிடைக்கவில்லையானால், நாங்களும் சுதுமான்களாக மாறிவிடுவோம் என்று சொன்னதாக அம்மையார் வெளியிலே திரித்துக் கூறுவது போலவே, இப்பொழுது உள்ளேயும் திரித்துக் கூறுவது நல்லதல்ல என்பதை மட்டும் கூற விரும்புகிறேன். சுதுமான்களாக மாற வேண்டும் என்று நான் சொல்லவில்லை; அந்த அந்த உரிமைகளைத் தராமல், மாநிலங்களில் சுதுமான்களை உருவாக்க யாரும் முன்வரக் கூடாது என்று சொன்னேனேயல்லாது, சுதுமான்களாக மாறவேண்டும் என்று சொல்லவில்லை. அம்மையார் திருத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்வேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நான் திருத்திக் கொள்கிறேன். ஆனால் உங்கள் பக்தவத்சலம் குழப்பத்தில் இருப்பதை யார் திருத்துவார்கள்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: உங்களோடு இருந்த பழக்கம், எங்களோடு வந்த பிறகும் திருந்த முடியவில்லை (சிரிப்பு).

[திருமதி க. த. அனந்தநாயகி] [1971 ஏப்ரல் 1

[illegible] அங்கே [illegible]

[illegible] அப்படிப் [illegible] இன்றைய [illegible] வேலை [illegible] ஆதாரத்தைக் [illegible] இல்லையா? [illegible] என்பது [illegible]

[illegible] தொழிலாளர்களுக்கு [illegible] தொழி[illegible] அவர்கள் [illegible] என்ன [illegible] இந்த அரசாங்கத்திலிருந்து [illegible] இருந்தால் [illegible] என்ன [illegible] தொழிலாளர்களுக்கு [illegible] அரசாங்கம் [illegible] தெரியவில்லை.

[illegible] அளிக்கப் [illegible] மின் [illegible] எப்படிக் [illegible] அவர்களை [illegible] செய்து [illegible] அரசாங்கம் [illegible] கிராமங் [illegible] அவர்கள் [illegible] எல்லாம் [illegible] வேண்டும்.

1971 ஏப்ரல் 1] [திருமதி க. த. அனந்தநாயகி]

அந்த ஸ்தாபனங்களை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும். அல்லது இந்த தேதிக்குள் எடுத்துக் கொள்வோம் என்று குறுகியகால அவகாசத்திற்குள் அறிவித்துவிட வேண்டும். உண்மையிலேயே மின்சார விஸ்தரிப்பு செய்ய வேண்டுமென்று நினைத்தால் அந்த ஸ்தாபனங்களை யெல்லாம் தேசியமயமாக்க வேண்டும். இதுவே நீங்கள் காட்டக்கூடிய விறுவிறுப்பாகும்.

பல தாலுக்காக்களிலே, பல கிராமங்களிலே பம்பு செட்டுக்கு மின் இணைப்புக் கிடைக்கவில்லை. அரசாங்கமும் நடவடிக்கை எடுக்கவில்லை. தனி நபர் வைத்திருந்தால் இந்த அரசாங்கம் துணை செய்கிறதா? சமதர்ம பாணியில் செல்கிறவர்கள் இப்படி நடக்கலாமா, இது சரியா என்பதை அறிய விரும்புகிறேன்.

கடைசியாக 'பே ஸ்கேலை'ப்பற்றி ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். பி.ஏ., பி.டி.க்கு 275 ரூபாய் சம்பளம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. போஸ்ட் கிராஜுவேட்டுக்கு 225 ரூபாய்; காலேஜில் டியூட்டராக இருப்பவருக்கு 375 ரூபாய் என்ற அளவில் பல குறைகள் இருக்கின்றன. தமிழாசிரியர்களை பொறுத்த வரையில் முதல் நிலை, இரண்டாம் நிலை என்று பிரித்து வைத்திருக்கிறார்கள். தமிழ்ப் பணியிலே ஈடுபட்டிருக்கும் தமிழாசிரியர்கள் ஒரேவிதப் பணியைத்தான் செய்து வருகிறார்கள். அவர்களுக்குள் பாகுபாடுகளைப் புகுத்தி அவர்களைப் பிரிக்க வேண்டாமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். தமிழுக்கு ஆக்கம் தரும் அரசு என்று சொல்லிக்கொள்ளும் இந்த அரசு காலத்திலே தமிழாசிரியர்களின் குறைகளைப் போக்க வேண்டும். அதேபோல இரண்டாவது சம்பளக் குழுவின் சிபாரிசுகளை சற்று ஆற அமர பரிசீலனை செய்து குறைகளைப் போக்க முன்வர வேண்டும். இந்த கவர்னர் உரையிலே, எந்தவித முறையிலே சமதர்ம சமுதாயத்தைக் காண வழி இருக்கிறது என்பது குறித்து காட்டப்படவில்லை. கவர்னர் உரையானது, இங்கே இருக்கின்ற குறைகளை யெல்லாம் மத்திய அரசாங்கத்தின் தலையிலே போட்டு, மாநில அரசாங்கத்தைப் பாதுகாக்கத் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கூறி என்னுடைய கருத்தை வலியுறுத்தி, உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, உறுப்பினர் பேசும் போது, இந்த மன்றத்தில் பெண்களுக்கு [illegible] வேண்டுமென்ற கருத்தினை மிகவும் வலியுறுத்திப் பேசியதற்கு நன்றி. அதை அரசு கட்டாயம் பரிசீலிக்கும் என்பதை திருமதி அனந்தநாயகி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. வி. ஆலடி அருணா: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் ஆற்றியிருக்கின்ற உரையின் மீது என்னுடைய கருத்துக்களை இப்போது இந்த அவையில் வைக்க முன்வருகின்றேன்.

ஆளுநர் அவர்களின் உரையில், பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசு விவசாயத்தின் முன்னேற்றத்திற்காக, தொழில் முன்னேற்றத்திற்காக, கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களுடைய வாழ்க்கையில் திருப்தியை உண்டாக்குவதற்காக என்னென்ன திட்டங்களை கடந்த காலத்தில் நிறைவேற்றியிருக்கின்றது, இனி எதிர்காலத்தில்

திருமதி த. ந. அனந்தநாயகி: உங்களோடு சேர்ந்தும் இருக்க முடியவில்லை என்றால், உங்களுடைய திறமையைப்பற்றி நான் என்ன சொல்ல? (சிரிப்பு)

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எங்கள் திறமைக் குறைவு இல்லை; உங்களோடு இருந்த தோஷக் குறைவு (சிரிப்பு).

திருமதி த. ந. அனந்தநாயகி: தோஷத்திற்குப் பரிகாரம் தேடும் சக்தி முதல் அமைச்சருக்கு உண்டு என்ற நம்பிக்கை இருக்கிறது (பலத்த சிரிப்பு).

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: என்னுடைய சக்தியைப் பாராட்டியதற்கு நன்றி (சிரிப்பு).

திருமதி த. ந. அனந்தநாயகி: பதில் அளிக்கும்போதாவது அதற்குப் பரிகாரத்தைச் சொல்லுங்கள் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அந்த நிலையில், கவர்னர் உரைமீது பேசும்போது, இந்த வாதங்களை, எண்ணங்களைப் பார்க்கும்போது, குற்றங்குறைகளை மத்திய சர்க்கார் மீது போட்டுவிட்டு நின்றால் பார்த்துக் கொள்ளலாம் என்று இருக்கத்தான் தெரிகிறது.

முக்கியமான பிரச்சினைகள் தேர்தல்பற்றியவை. குற்றங்களை இந்த அரசாங்கம் களைவதற்குத் தேர்தல் கமிஷனுக்கு யோசனைகளைக் கொடுக்க வேண்டும். முதல் யோசனையாக, ஓட்டர் போட்டோக்கள் கொடுப்பது, திருட்டு ஓட்டுப் போடுவதை, இம்பர்சனேஷன் செய்வதை, ஆள்மாராட்டம் செய்வதைத் தடுக்க வழி செய்யுமா என்று பார்க்க வேண்டும். மற்றொன்று, வெளி நாடுகளிலிருந்து எத்தனையோ நாம் அறிந்து கொள்கிறோம். தேர்தலுக்கு இயந்திரங்களை வாங்குவது, அமெரிக்கா போன்று, படிப்படியாக மெஷின்களை வாங்குவது, தேர்தல் நடத்துவதில் நல்ல ஒரு சூழ்நிலை ஏற்பட்டு, இப்போது உள்ள பல சிக்கல்களுக்கும் இடமில்லாமல் போகுமா என்பதைப் பார்க்க வேண்டும் என்றும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

விலைகளைக் கட்டுப்படுத்தி, விலை உயர்வைத் தடுக்க வேண்டும் என்று எத்தனையோ பட்ஜெட் அங்கத்தினர்கள் யோசனைகள் சொன்னார்கள். ஆனாலும், இந்த கவர்னர் உரையில் எந்த முயற்சியையும் அதைப் பற்றிச் சுட்டிக்காட்டப்படவில்லை. மத்திய சர்க்காருடைய கொள்கை காரணமாக விலை ஏறுகிறது என்கிறார்கள். அத்தியாவசியப் பொருள்களின் விலை நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு, விஷம் போல் ஏறுகிறது. விறகு ஒரு டன் 5, 6 ரூபாய், தேங்காய் 85 காசு முதல் 90 காசு. இப்படி இருந்தால் ஏழை மக்கள், நடுத்தர மக்கள் எப்படி வாழ முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதைத் தடுக்கும் வழிவகைகளைச் சொல்லாமல் (மாண்புமிகு திரு. ம. பொ. சண்முகம் தன் இருக்கையிலிருந்து எழுந்தார்) இருக்கட்டும், சொன்னது தானே இப்படி அப்படி விலைக்கும் (குறுக்கீடு) எந்த ஸ்டேஜில் என்று சொல்லுகிறேன். எதனால் என்ன? அப்படிப்பட்ட நிலையில், விலைவாசிகளைக் குறைப்பதற்கு வழி சொல்லாமல், மத்திய சர்க்கார் மீது பழியைப் போடுவது சரியாகாது.

மாதம் 500 ரூபாய் வாங்கும் ஒரு நடுத்தரக் குடும்பத்தை எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு 'பாமிலி கார்ட்' கொடுத்து விடுங்கள். ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்பது கூட இரண்டு வாரமாகக் கொடுக்கப் படவில்லை. ஏழை மக்கள் போனால், ரேஷன் கடைகளில் 'இல்லை, இல்லை' என்று சொல்லித் திருப்பி அனுப்பிவிடுகிறார்கள். விலைவாசி ஏற்றத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்கவில்லை. நடுத்தர மக்கள் படாத பாடு படுகிறார்கள். இந்த நிலையில் ஏழை மக்களின் நிலை என்ன என்பதைச் சொல்லாமலே புரிந்து கொள்ள முடியும். ஆகவே, ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு பாமிலி கார்டு கொடுத்து விடுங்கள். அத்தியாவசியப் பொருள்கள், அரிசியைப் போலவே, சர்க்கரை கொடுத்தோம் அது போலவே, துவரம்பருப்பு, மற்ற பொருள்களைக் கொடுக்க அரசாங்கம் முன்வந்தால், ஏழை மக்களும், நடுத்தர மக்களும் நன்மையடைவார்கள். அவர்களுக்கு இது உதவியாக இருக்கும். இன்றைக்கு ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி கூட ஆபத்தில் இருக்கிறது. அதைத் தீர்க்க முன்வர வேண்டும்.

அடுத்தபடியாக, வேலையில்லாத் திண்டாட்டம் சொல்ல முடியாத அளவில் இருக்கும்போது, இந்த அறிக்கையில் 6,500 ஆசிரியர்களுக்கும், 1,000 பொறியியல் படித்தவர்களுக்கும் வேலை கொடுக்கப் போகிறோம் என்பது, கடப்பாறையை விழுங்கிவிட்டு, சுக்குக் கஷாயம் குடித்தாலும், அது போலத்தான் இருக்கிறது. பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. மாணவர்கள் படித்துவிட்டு, வேலையில்லாமல் பல்லாயிரக்கணக்கானவர்கள் இருக்கும் நேரத்தில், அங்கே ஒன்று இங்கே ஒன்று என்று செய்துவிட்டு நாங்களும் பிரச்சினையைச் சமாளித்துக் கொண்டிருக்கிறோம் என்றால், சமுதாயம் ஒத்துக் கொள்ளுமா? காரணம் என்ன? தொழில் வளர்ச்சி இல்லை; தொழில் வளர்ச்சியில் அக்கறையில்லை, இருக்கின்ற தொழில்களில் ஏற்படும் சிக்கல்களைச் சீக்கிரமாகத் தீர்க்க அக்கறையில்லை, முடிவு என்ன? வாய்ப்புக்கள் இல்லை. 'சதர்ன் ஸ்டீல் ப்ளாண்ட்' ஸ்தாபனத்திற்கு வழி செய்தோம் என்கிறார்கள். எத்தனை மாதங்களுக்குப் பிறகு உதவி செய்தார்கள்? வேலை நிறுத்தம் இப்பொழுது எத்தனை நிறுவனங்களில் இருக்கிறது? வேலை நிறுத்தங்களைச் சீக்கிரம் தீர்க்காமல் இருப்பதும் காரணம். கோவையில் மூடப்பட்ட மில்கள் திறப்பதில், 2, 4 என்று மெள்ள மெள்ளத் திறந்து கொண்டிருக்கிறார்கள். வேலை வாய்ப்புப் பிரச்சினையில், திறக்க வேண்டியவற்றைத் திறந்து திறமையாகச் சமாளிக்க வேண்டும் என்று கேள்வியை எழுப்ப எதிர்க்கட்சியிலிருக்கும் எங்களுக்கும் உரிமை உண்டு. அந்த நிலையில், வேலை வாய்ப்புக்கள் வெகுவாகக் குறைந்து, புதிய வாய்ப்புகளும் இல்லாமல் இருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வழி வகை காணாமல், மத்திய சர்க்காரைப் பார்க்கிறோம் என்கிற சூழ்நிலை இருந்தால், அது வரவேற்கத் தக்கதல்ல, மக்களுக்கு ஏமாற்றத்தையே கொடுக்கும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, சேலம் ப்ளாண்ட். ஆராய்ந்து, ஆராய்ந்து, பல அறிக்கைகளுக்குப் பிறகு, சேலம் இரும்பு உருக்காலைக்கு, நாங்கள் ஆட்சியில் இருந்தபோதே திரு. வெங்கட்ராமன் அவர்கள் அயல் நாட்டு நிபுணர்கள், உள்நாட்டு நிபுணர்கள் எல்லோரும் அறிக்கைகள் தயார் செய்தார்கள். அப்படிச் செய்ததன் பேரில் தான், சேலம் ப்ளாண்ட் ஆரம்பிக்கப் பட்டது. மீண்டும் நாங்கள் இன்றைய நிலைக்கேற்ப அறிக்கை தயார் செய்யப் போகிறோம் என்று மத்திய சர்க்கார் சொல்லிக் கொண்டு இருக்கிறது என்றால், அதையும்கூட கவர்னர் உரையில் கொடுத்திருக்கிறது. டாக்டர் ஒராண்டே அவர்கள் குறிப்பிட்டது போல்,

[திரு. வி. ஆலடி அருணா] [1971 ஏப்ரல் 1

என்னென்ன திட்டங்களை நிறைவேற்ற முனைந்திருக்கிறது, என்னென்ன நெறி முறைகளைக் கடைப்பிடிக்க இருக்கிறது என்பதையெல்லாம் விரிவாக விளக்கிக் காட்டி இருக்கிறார்கள்.

இந்த உரையிலே பெரிய நிஜலிங்கப்பா காங்கிரஸைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர், "இந்த உரை ஏமாற்றத்தை அளிப்பதாக இருக்கிறது, நாங்கள் எதிர்பார்த்தது எதுவும் இல்லாமல் இருக்கிறது" என்று விமர்சித்தார்கள். [illegible] தேர்தலில் பெரிய ஏமாற்றமடைந்த [illegible] நிலையில் உட்கார்ந்திருக்கும் அவர்களுக்கு, ஆளுநர் உரை ஏமாற்றம் அளித்தது என்றால் அதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. "[illegible] கண்டதெல்லாம் [illegible] போல்" என்பார்கள். அதுபோல ஏமாற்றமடைந்த நிலையில் இருப்பவர்கள் எதைப்பார்த்தாலும் ஏமாற்றமாகவே இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆனந்தநாயகி ஆளுநர் உரையின் மீது [illegible] கருத்துக்களைத் தெரிவிக்கும்போது, "இந்த அரசாங்கம் [illegible] கொடுக்கவில்லை, [illegible] கொடுக்கவில்லை" என்று சொல்வார்களோ என்று எதிர்பார்த்தேன். ஆனால் அதற்கு மாறாக, [illegible] விலை ஏறுகிறது, [illegible] விலை [illegible], பருப்பு விலை ஏறுகிறது என்று சமையலறையைப் பற்றியே [illegible]. அம்மையார் சமையல் அறையைப் பற்றிப் [illegible] ஆச்சரியம் [illegible]. அவர்கள் ஆட்சி செய்த காலத்தில் [illegible] ஒரு கிலோ 5 ரூபாயாக ஆகி, 12 ரூபாய் வரைக்கும் விற்றது [illegible]. இன்றைக்கும் ஒரு கிலோ 5 ரூபாய் என்ற [illegible] விவசாயிகள் [illegible]. அம்மையார் [illegible] கருத்தை இந்த மன்றத்திலே [illegible].

நடந்த பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வரலாற்று சிறப்புமிக்க வெற்றி கிடைத்திருக்கிறது. 1957-ல் 15 பேரோடு திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இந்த மன்றத்திலே நுழைந்தார்கள். இன்றைய தினம் நிஜலிங்கப்பா காங்கிரஸ் அந்த எண்ணிக்கையில் இருக்கிறது. அதே எண்ணிக்கையில்தான் 1957-ல் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் வந்தார்கள்.

இந்த மன்றத்தில் பல நல்ல கருத்துக்களை அவர்கள் சொன்னால் நன்றாக இருக்கும். நாங்கள் [illegible] என்று சொன்னதற்கு, அப்போது ஆளும் பொறுப்பிலே இருந்தவர்கள் [illegible] சொன்னார்கள் என்று [illegible]. அதற்குப்போட்டி சொன்னார்கள். "அந்தந்த மீசை முளைத்த பிள்ளைகள் [illegible] பார்க்கலாம்" என்று சொன்னார்கள். அப்போது அண்ணா அவர்கள் "அந்தந்த மீசை முளைத்த பிள்ளைகள் ஆளவும் ஆகலாம்" என்றார்கள். இப்போது [illegible] என்பதைப் பார்க்கலாம். "அந்தந்த மீசை முளைத்த" பிள்ளைகள் [illegible]. ஆனால் [illegible] வந்து இருந்த மீசையும் போய், [illegible] அந்த அத்தையும்

1971 ஏப்ரல் 1] [திரு. வி. ஆலடி அருணா

இங்கே வந்திருக்கிறார்கள். இப்படி வரலாறு ஒரு பெரிய திருப்பத்தை உருவாக்கியிருக்கிறது. இந்த அரசின்மீது தமிழ் சமுதாயத்திற்கு எவ்வளவு நம்பிக்கை இருக்கிறது என்பதை நல்லவர்கள் உணர்ந்து கொள்ளலாம்.

1957-லிருந்து நடந்த ஒவ்வொரு தேர்தலின் முடிவுகளைப் பார்த்தாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின்மேல் மக்களுக்கு எவ்வளவு நம்பிக்கை இருந்தது என்பது நன்கு தெரியவரும். 1957-லே 15 பேராக இருந்த நாங்கள் 50 பேராக வளர்ந்தோம். பின்னர் 50 பேராக இருந்த நாங்கள் 138 பேராக வளர்ந்து, நடந்த தேர்தலில் 138 பேராக இருந்த நாங்கள் 184 பேர் என்று சொல்லக்கூடிய அளவிற்கு உயர்ந்திருக்கிறோம். தமிழ் சமுதாயத்தில் இருக்கிற அத்தனை பேரும் திராவிட முன்னேற்றக் கழகத்தைத்தான் விரும்புகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் அமைப்பு காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர்களே இந்த நாட்டு மக்கள் ஏற்கத் தயாராக இல்லை என்பதை மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லிவிட்டிருக்கிறார்கள். நடந்த தேர்தலின் முடிவுகளை நேர்மையாக ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக, தாங்கள் பெற்றுள்ள தோல்விகளை மறைப்பதற்காக, நிஜலிங்கப்பா காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், "தேர்தலில் அப்படி நடந்து விட்டது. இப்படி நடந்து விட்டது, ரஷ்யாவிலிருந்து மை வந்தது" என்றெல்லாம் தேவையில்லாத காரணங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக நம்பிக்கை ஏதேதோ குற்றம் சாட்டுகிறார்கள். அரசாங்க நிர்வாகத்தைக் களங்கப் படுத்துகிறார்கள் என்பதற்காக வருந்த வில்லை. ஆனால் தமிழ்நாட்டு மக்களின் தீர்ப்பை அவர்கள் அவமதிக்கிறார்கள், மக்களுடைய தீர்ப்பை அவர்கள் துச்சமாக மதிக்கிறார்கள். இந்த நாட்டு மக்களுடைய உணர்ச்சியை அவர்கள் கேவலப்படுத்துகிறார்கள் என்று நான் கருதுகிறேன். இவ்வளவு பயங்கரமான தோல்விக்குப் பிறகும் மக்களது உணர்ச்சிகளை, மக்களது எண்ணங்களை அவர்கள் அலட்சியம் செய்ய முற்படுவார்களானால் எதிர்காலத்தில் அவர்களது நிலைமை என்ன ஆகும் என்பதை நான் விளக்கத் தேவையில்லை.

நீங்கள் நல்லது எது செய்தாலும் அதைப் பாராட்டத் தயாராய் இருக்கிறோம் என்று நிஜலிங்கப்பா இயக்கத்தினர் சொல்கிறார்களே, இந்த அரசாங்கம் எத்தனை நல்லவற்றைச் செய்திருக்கிறார்கள்! நிஜலிங்கப்பா இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் யாராவது நாலு வார்த்தைகள் சொன்னார்களா என்பதாக, தலைவர் அவர்களே, உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சமுதாய முறையில் பெரிய மாற்றத்தை உருவாக்கிக் காட்டியிருக்கிறோம். நாட்டு முன்னேற்றம் துரிதமாக ஏற்பட்டு பசி நீங்கியிருக்கிறது. இதை யாரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். உணவுப் பசி தீர்ந்தது என்று ஏழை பாட்டாளி மகன் சிரிக்கிறானே அந்தச் சிரிப்பை திராவிட முன்னேற்றக் கழக அரசு உருவாக்கி இருக்கிறது. இதை இந்த மாமன்றத்திலுள்ள நிஜலிங்கப்பா இயக்கத்தினர் பாராட்டினார்களா? இல்லை.

அவர்கள் காலத்தில் நீண்டகாலக் கடன் தொகை 3 கோடி ரூபாய்தான் கொடுத்தார்கள். இந்த ஆட்சி மலர்ந்த பிறகு ஏறக்குறைய 10 கோடி ரூபாயை நீண்டகாலக் கடனாகக் கொடுத்திருக்கிறார்களே, இதை யாராவது பாராட்டினார்களா? இல்லை.

அவர்கள் காலத்தில் குறுகிய காலக் கடனாக 31 கோடி ரூபாய் கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்த ஆட்சியில் 55 கோடி ரூபாய் வரை விவசாயிகளுக்குக் குறைந்த காலக் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை யாராவது பாராட்டுகிறார்களா, இல்லை.

நிஜலிங்கப்பா கோஷ்டியைச் சேர்ந்த அங்கத்தினர் பேசும்போது சொன்னார்கள், [illegible] இருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் தெரிவிக்க வேண்டும்.

[illegible] ஆட்சி காலத்தில் இருந்த காங்கிரஸ்காரர்கள் ஆண்டு 20 ஆண்டில் [illegible] 1967 வரை [illegible] 21½ லட்சம் [illegible] கொடுக்கப்பட்டது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி [illegible] நான்கு ஆண்டு காலத்திலேயே [illegible] 21½ லட்சம் [illegible] கொடுக்கப் பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது [illegible] எந்த அளவு [illegible] 20 ஆண்டு காலத்தில்— [illegible] இந்த அரசுக்கு நன்றி செலுத்த வேண்டியது [illegible] கொள்கிறேன்.

இப்போது இந்த அரசாங்கம் [illegible] முற்போக்கான, முன்னேற்றமான பல புரட்சிகரமான காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அவற்றில் ஒன்றைக் கூட அவர்கள் பாராட்டவில்லை. [illegible] முதல் அமைச்சர் அவர்கள் [illegible] நிஜலிங்கப்பா கோஷ்டியினர் [illegible] கொண்டிருக்கிறார்கள்.

தேர்தலின் முடிவை நேர்மையான முறையில் அவர்கள் பார்க்கவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாபெரும் வெற்றி [illegible] 1971-ஆம் ஆண்டில் [illegible] 1971-ல் [illegible] இல்லை [illegible] ஆட்பாக்கிகளைப் பயன்

படுத்தினார்கள். பட்டுக்கோட்டையில் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர் கன்னையன் என்பவரைக் கொன்றார்கள். வெள்ளக்கோயிலில் பழனிசாமி என்கிற வேட்பாளரையே துப்பாக்கியினால் சுடுவதற்கு முற்பட்டார்கள். முடக்குறிச்சி தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர் ஒருவரது மண்டையை உடைத்திருக்கிறார்கள். அவர்கள் இன்னமும் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகப் பொருளாளர்—புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களுடைய பரங்கிமலைத் தொகுதியில் அடையாள சீட்டுக் கொடுத்துக் கொண்டிருந்த திராவிட முன்னேற்றக் கழகத் தோழரைக் கொன்றிருக்கிறார்கள். மேலப்பாளையம் அரசு குளத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டரைக் கொன்றிருக் கிறார்கள். சாத்தான்குடியில் திராவிட முன்னேற்றக் கழகத் தோழன்—கட்டில் கட்டிக்கொண்டிருந்தவன்—முழுமூச்சாக கழகத்திற்கு வேலை செய்கிறார் என்ற காரணத்தில்—பாட்டு நாடார் என்பவரை அங்கே கொன்றிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் மாபெரும் வெற்றி பெற்றது என்றால்—பல தியாகங்களைப் புரிந்த பிறகே, பல கழகத் தொண்டர்களுடைய இரத்தம் சிந்திய பிறகே இந்த வெற்றி கிடைத்திருக்கிறது. இந்த வெற்றிக்கும் இன்றைக்கு நிஜலிங்கப்பா காங்கிரஸ்காரர்கள் உள்நோக்கம் கற்பிக்கிறார்கள். நாட்டு மக்களுடைய உணர்ச்சியை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள், என்பதில் இருந்தே அவர்கள் எந்தத் திசையை நோக்கிச் செல்கிறார்கள் என்பதை நம்மால் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

இங்கே பேசிய நிஜலிங்கப்பா காங்கிரஸ்காரர்கள் கூறிய குற்றச்சாட்டுகள் ஆதாரம் அற்றவை—நியாயமற்றவை. ஏற்றுக்கொள்ள இயலாதவை என்பதை வலியுறுத்திக் கூற வேண்டியதில்லை.

இராஜ மானிய மசோதாவின் வோட்டளிப்பின்போது நோயின் காரணமாக வருத்தமுற்ற நிலையில் இருந்தபோதும் எங்கள் கழக உறுப்பினர் ஒருவர் பேரவைக்குச் சென்றிருக்கிறார். குறித்த நேரத்தில் செல்ல முடியவில்லை. இதை ஒரு பெரிய குற்றமாகச் சொல்கிறவர்கள் என்ன செய்தார்கள்? உள்ளே உட்கார்ந்து ராஜமானிய ஒழிப்புக் கூடாது என்று வோட்டளித்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு மத்திய அரசாங்கம் ஒரு உத்தரவு போட்டது. ஒரு சொத்து உரிமை என்ற அடிப்படையில் அந்த அரசாங்க உத்தரவு செல்லுபடியாகாது என்று சுப்ரீம்கோர்ட் தீர்ப்பு வழங்கியது. அந்த மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேறியிருந்தாலும் கூட சுப்ரீம்கோர்ட் அதை ரத்து செய்திருக்கக்கூடும். இதை உணராமல் உள்ளே இருந்து வோட்டுப் போட்டவர்கள்—எங்கள் கட்சி உறுப்பினர் சென்றும் சாதகமாக வோட்டளிக்க முடியாது போனதைப்பற்றி பெரிதாகப் பேசுவது—தாங்கள் செய்த தவறை மறைப்பதற்கு இப்படி வெளியில் குற்றம் சாட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர முடியும்.

ஏதோ தாங்கள்தான் புரட்சிகரமான சீர்திருத்தக் கொள்கைகளை உடைய வர்கள் போல நகர சொத்துக்கு உச்சவரம்பு கொண்டுவந்தீர்களா, விரிவான நிலச்சீர்திருத்தம் கொண்டுவந்தீர்களா, என்றெல்லாம் சொன்னார்கள். இது வரை குஜராத்தில் இருந்த அவர்களது ஆட்சி கூட நேற்றோடு முடிந்துவிட்டது. அது வருந்தவேண்டிய பிரச்சினையா, இல்லையா என்பது வேறு விஷயம். அவர்கள் சொல்கிறார்களே, புரட்சிகரமான சீர்திருத்தம், முற்போக்கான சோஷலிசம், அவை எல்லாம் தேர்தல் முடிந்த பிறகுதானே தோன்றியிருக்கிறது? இல்லை

யென்றால் இதுவரை அவர்கள் அரசாண்ட [illegible] காலத்தில் அவற்றைக் கொண்டு வந்தார்களா? [illegible] அவர்கள் [illegible] வந்தார்களா! இதுவரை [illegible] நடத்தியிருக்கிறார்கள். பிற்போக்குக் கொள்கையின் [illegible] இருந்தார்கள்? இன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருப்பவர்கள் [illegible] இல்லாமல் வந்திருக்கிறார்கள் [illegible] இந்தக் கருத்துக்களைச் சொல்லுகிறார்களா? ஆகவே தயவு செய்து சொல்லிக்கொள்கிறேன். [illegible] காக்குப் போட்டுக்கொள்ளாதீர்கள். [illegible] கண்டு கொண்டுவிட்டார்கள். நீங்கள் [illegible] இருக்கிறீர்கள், [illegible] அவர்கள் தெளிவாகத் தெரிந்துகொண்டுவிட்டார்கள். [illegible] இயக்கத்தினர் சொல்லிப் [illegible] அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(பேரவைத் தலைவர் [illegible])

பொதுவாக இந்த [illegible] முன்னேற்றம் [illegible] சோஷலிசத் திட்டங்களை [illegible] துறையிலும் முயன்று இருக்கிறது. எதிர்காலத்திலும் முயலும்.

ஆளுநர் அவர்களுடைய உரையில் [illegible] திட்டங்கள் [illegible] இல்லையே என்று சொன்னார்கள். ஆளுநர் உரை [illegible] யான உரையா? அடுத்த ஆண்டு இறுதியில் [illegible] திட்டங்கள் [illegible] யான [illegible] திட்டங்கள் [illegible] இதுவே ஐந்தாண்டுத் திட்ட [illegible] கொண்டு போவது பாக்கியில்லை. ஆளுநர் அவர்கள் இந்த [illegible] முன்னோக்குத் திட்டங்களை எல்லாம் [illegible] சொல்லியிருக்கிறார்கள். அதற்குத் தமிழ் [illegible] நன்றி [illegible] என்று கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. வி. தவமணித் தேவர்: பேரவைத் [illegible] துணைத் தலைவர் அவர்களே, இன்று ஆளுநர் உரையின் மீது எனக்குப் பேச வாய்ப்பு அளித்ததற்காக தங்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக எல்லா அங்கத்தினர்களும் தேர்தல் சமயத்தில் அங்கங்கே நடந்த வன்முறைச் செயல்களைப் பற்றிச் சொன்னார்கள். குறிப்பாக என்னுடைய தொகுதியில் எதுவும் நடக்கவில்லை என்றாலும் அடித்தாற்போல நடந்த சம்பவத்தைச் சொல்லித்தான் ஆகவேண்டும்.

காங்கிரஸ்காரர்களுடைய [illegible] உணர்ச்சிகளின் விளைவாக ஏற்பட்ட அராஜகச் செயல்களில் அது ஒன்று. அதிலும் நம்முடைய முதல்வர் தேர்தல் பிரசாரத்தின் முடிவு நிலைக்கு மதுரைக்கு வந்து விடுதியில் தங்கினார்கள். எங்களது தலைவர் திரு. மூக்கையா தேவர் அவர்களும் மற்ற அங்கத்தினர்களும் சென்று அவரை வரவேற்று தேர்தல் பிரசாரத்திற்காக அவர்கள் தொகுதிவாரியாக வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அவர் அப்படிச் சென்ற நேரத்தில்—அவருடைய விடுதியில்

இருந்து மதுரைக்கு அடித்தாற்போல் இருக்கும் தமுக்கம் மைதானத்து [illegible] தமுக்கம் மைதானத்தில் [illegible] வீட்டிலிருந்து ஒரு [illegible] பாதி அதிகமாகக் கொண்ட [illegible] இன்றைக்கு [illegible] ஆகிவிட்டார், அவருடைய பேச்சைக் கேட்டுவிட்டு அவர்கள் [illegible]—எங்களுடைய தலைவர் திரு. மூக்கையா தேவர் அவர் [illegible] சென்று விட்டார்கள்—நாங்கள் இரண்டு நிமிடம் [illegible] ஒரு காரிலே வந்து கொண்டிருந்தோம். [illegible] அவர் பேச்சைக் கேட்டுக் [illegible] இடையிலே [illegible] செய்து—அவர்கள் [illegible] பிரசாரத்திலே [illegible]—ஆனால் [illegible] பேச்சைக் [illegible] உணர்ச்சியைத் [illegible] [illegible] காட்டு [illegible] அளவுக்கு [illegible] போன்ற அளவுக்கு—நான் இந்த [illegible] அப்படிப்பட்ட வார்த்தைகளைக் கேட்டதே இல்லை, தேர்தல் நேரமாக இல்லாமல் இருந்தால் அவர்களுக்கு என்ன கிடைக்கும் என்பது அவர்களுக்கே தெரியும்—வாயிலே வராத அளவுக்கு [illegible] வார்த்தைகளை எல்லாம் சொல்லி வைத்தார்கள். [illegible] பிடித்து எறிந்தார்கள்.

[illegible] காலத்தில் எங்கள் [illegible] அபிமானி, [illegible] எதிர்த்தார்கள். தேச [illegible] அறிந்து [illegible] என்று தேவர் அவர் [illegible] அந்த எண்ணங்கள் இப்பொழுது ஈடேறி [illegible] திராவிட [illegible] நல்ல காரியங்கள் நடந்து வருகின்றன. முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் [illegible] கிடைக்கின்ற அளவுக்கும் [illegible] மேலும் மேலும் உயர்த்தி [illegible] இருக்கிறது. [illegible] நம்பிக்கையை [illegible] கொள்ள வேண்டும்.

ஆளுநர் அவர்களுடைய உரையிலே சொல்லியிருக்கிறார்கள். "உண்மையில் நடைபெற்ற தேர்தல்கள் [illegible] தெளிவான திட்டவட்டமான முறையில் தீர்ப்பளித்துள்ளன. சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கும் பெருவாரியான மக்கள், தங்களுடைய இடைவிடாத துயரங்களுக்கு விடிவு காண்பதற்கும், வறுமை, இன்னல் இவற்றிலிருந்து மீண்டும் கரைசேருவதற்கும் இவ்வரசை ஆவலோடு எதிர்நோக்கி நிற்கின்றனர் என்று இந்த அரசு நம்புகிறது. [illegible] தங்களிலே இன்று நம்பிக்கை [illegible]. பாமர மக்களின் எண்ண வேட்கைகளை நிறைவேற்றி வைப்பதற்காக அரசு தீவிர முயற்சியை மேற்கொள்ளும்" என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு மக்கள் நம்மை அதிகமாக நம்பி திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் உங்களோடு தோழமையாக இருக்க எங்களைப் போன்ற கட்சிகளுக்கும் தெளிவாக ஓட்டு அளித்த மக்களுக்கு மிக நல்லபடியாக நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வி. தவமணித் தேவர்] [1971 ஏப்ரல் 1

குறிப்பாக, தன்னொரு தொகுதிக்காக எடுத்துக் கொண்டு முக்கியமான பிரச்சினையாக அங்கே அங்கே இருப்பதை எடுத்துக்கொண்டு அணைக்கட்டுகள், ரோடுகள், கண்மாய்கள், புதிதாக ரோடு, பாலம் அமைப்பது—தெளிவாக இவற்றையெல்லாம் தெரிந்துகொண்டு அதற்காக ஒரு குழு அமைக்கலாம், அப்படி அமைக்கப்பட்ட குழுக்கள் மூலமாக அவைகளெல்லாம் அறிந்துகொண்டு அந்த அந்த பிரச்சினைகளை முக்கியமாகக் கருதி தொகுதிவாரியாக அவைகளைத் தொகுத்து எடுத்துக்கொண்டு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் அந்த மக்களுக்கு நாம் நன்றியுடையவர்களாக ஆவோம்.

அடுத்து, குறுகிய காலக் கடன், நீண்ட காலக் கடன் கொடுக்கிறார்கள். குறுகிய காலக் கடன் 40 கோடியிலிருந்து 55 கோடியாக உயர்ந்திருக்கிறது. நீண்ட காலக் கடன் கொடுப்பது சுமார் 3 கோடி அளவுக்கு இருந்ததை இன்றைக்கு 19 கோடியாக உயர்த்தி இருப்பதற்காக நான் அரசாங்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் தொகுதியிலே கூட்டுறவு பாங்கியைக் கிராமங்களுக்கு இணைத்து இருக்கிறார்கள். அதனைத் தனியாகப் பிரித்து ஒரு பாங்க் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

வறட்சிப் பகுதிகளில் மேற்கொள்ள வேண்டிய பணிகளை இந்த அரசு நன்கு உணர்ந்திருக்கிறது. தனித்தன்மை வாய்ந்த முதலமைச்சர் அண்ணைத் திட்டங்களை கொடுத்து, நெடுமையாக அந்த பகுதிகளில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். வறட்சிப் பகுதியாக இருக்கிற பேராவூர்த் தொகுதிக்கும் அப்படிப்பட்ட தனித்தன்மை வாய்ந்த முதலமைச்சர் பண்ணைத் திட்டம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய தொகுதி பேராவூர் பகுதியாக இருக்கிற காரணத்தினால் அங்கேயுள்ள தண்ணீர் கண்மாய் கொண்டு அன்றி வசதி இல்லாததாகவே தனிக் கண்மாய் என்று சொல்லப்படும் அளவுக்கு அந்த இடத்திலே அந்த ஏரிகள் தேங்கிக் கிடக்கிறது. அதை நிரந்தரமாக மாற்றி மக்களுக்கு உதவி செய்ய வேண்டும். காரணம், அந்தப் பகுதி மக்கள் பகுதி. ஆகவே அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேவகோட்டை கண்மாய் போன்ற கண்மாய்கள் பல நீர்வளம் இல்லாமல் கிடப்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். வருடா வருடம் வறண்டுவிடுகிறது. அதையும் அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பரமக்குடி, முதுகுளத்தூர், மண்டபம் என்ற பகுதிகள் ஆண்டுபட்டியையும் சோழபுரத்தையும் இணைக்கக்கூடியவை. 1955-56-லே பஞ்சநிவாரண வேலையின் அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்பட்டு, அதற்காக இரண்டு லட்சம் ரூபாய் செலவழித்து கண்மாயை ஏற்படுத்த மலையை வெட்டி எடுத்திருக்கிறார்கள். அங்கே போடப்பட்ட ரோடுகளில் மழை பெய்ததனால் அடித்துச் செல்லப்பட்டு ரோடுகளே இல்லாத நிலைமை இருக்கிறது. இதை அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டு உடனடியாக சீர்செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1971 ஏப்ரல் 1] [திரு. வி. தவமணித் தேவர்]

எங்கள் பகுதியை வறட்சிப் பகுதியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் பகுதி இராமநாதபுரம் ஜில்லாவிலே தென் பகுதியைச் சேர்ந்ததாக ராஜபாளையத்தை ஒட்டி இருக்கிறது. எனவே அதை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டும். மதுரை ஜில்லா வருவாய் உள்ள ஜில்லா என்பதால் அந்த ஜில்லாவிலே எங்கள் பகுதி சேர்ந்திருப்பதால் வறட்சி பகுதியாக அறிவிக்கவில்லை. எனவே அந்தப் பகுதியை இராமநாதபுரம் ஜில்லாவிலே சேர்த்துவிட்டால்கூட நல்லதாக இருக்கும் என்று கருதுகிறேன். சேடப்பட்டியில் ஏறக்குறைய ஆயிரம் ஏக்கர்களுக்கு மேல் சுண்ணாம்புக்கல் பிரதேசமாக இருக்கிறது. அதை அதிகாரிகள் மூலம் பார்வையிட்டு, அது சிமெண்ட் தொழிற்சாலை ஏற்படுத்த ஏதுவாகயிருக்கிறது, விவசாயத்திற்குப் பண்படாத சவர் நிலமாக இருப்பதால் அங்கு சுண்ணாம்புக்கல் எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். அதை சிமெண்ட் தொழிற்சாலையாக ஆக்குவதற்கு ஏதுவாக இருப்பதால் அங்கு சிமெண்ட் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறி விடை பெறுகிறேன், வணக்கம்.

* **திரு. கே. ரங்கநாதன்:** மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவித்து நான் பேசுவதற்கு முன்னால் எங்களுடைய இதய தெய்வம் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு என்னுடைய அஞ்சலியைத் தெரிவித்துவிட்டு, இந்த மாமன்றத்திற்குள்ளே நுழைவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தந்த என்னுடைய தொகுதி மக்களுக்கும், முன்னேற்றக் கழகத் தலைவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, ஒருசில கருத்துக்களை இந்த மாமன்றத்திலே எடுத்துச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் 7 பஞ்சாலைகள் இருக்கின்றன. அந்த 7 பஞ்சாலைகளில் 3 பஞ்சாலைகள் இன்றைய தினம் நல்லமுறையிலே ஓடிக் கொண்டிருக்கின்றன. மீதமுள்ள 4 பஞ்சாலைகளை இன்றையதினம் நிரந்தரமாக மூடியிருக்கிறார்கள். இந்த 4 பஞ்சாலைகளிலே ஒரு பஞ்சாலையை நம்முடைய டெக்ஸ்டைல் கார்ப்பொரேஷன் எடுக்கும் தறுவாயில் இருப்பதற்கு என்னுடைய நன்றியையும், பாராட்டுதலையும் நம்முடைய தமிழக அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் மீதமுள்ள 3 பஞ்சாலைகளையும் திறப்பதற்கு வழிவகைகளை வகுத்துத் தர வேண்டுமென்று இந்த அரசை நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியிலேயும், பக்கத்திலேயிருக்கும் எங்கள் கோவை மாவட்டத்திலேயும் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட இன்ஜினியரிங் தொழிற்சாலைகளும், மற்ற தொழிற்சாலைகளும் இருக்கின்றன. இந்த இரண்டாயிரம் தொழிற்சாலைகளிலே, என்னுடைய தொகுதியிலே சுமார் ஆயிரம் சிறு தொழிற்சாலைகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இந்த ஆயிரம் தொழிற்சாலைகளுக்கும் தேவையான மூலப்பொருட்கள் இப்பொழுது சரிவரக் கிடைக்காமல் தொழிற்சாலை நடத்த சிரமத்திலே இருக்கிறார்கள். அந்த மூலப்பொருட்களான போல்ட், நட் போன்றவைகள் வடக்கேயிருந்து பெரும்பாலும் வரவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறது. அவைகளைச் சற்றுத் தாமதித்து அனுப்புகிறார்கள். அப்படி அனுப்புவதனால் தேவையான சமயத்தில் கிடைப்பதில்லை. எனவே, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

[illegible]

என்னுடைய தொகுதியிலே குடிசைகள் அதிகமாக இருக்கிறது. குடிசைகள் ஒழிப்புத் திட்டத்தில் என்னுடைய தொகுதியையும் சேர்த்துக்கொண்டு, என் தொகுதியிலுள்ள குடிசைகளை ஒழிக்கும் திட்டத்தை வகுக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கோவை மாநகரத்திலே பல்கலைக்கழகம் நிறுவ வேண்டுமென்று மிகப் பணிவன்புடன் தெரிவித்துக்கொண்டு, எனக்கு இந்த வாய்ப்பை அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன், வணக்கம்.

*** திரு. என். கணபதி:** மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 2, 3 நாட்களாக மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி அறிவிக்கும் தீர்மானத்தில் நடைபெறும் இந்த விவாதத்தில் நானும் கலந்துகொண்டு அதை ஆதரித்துப் பேசுகின்ற முறையில் என்னுடைய கருத்துக்களை இந்த அவையின் முன் வைக்கின்றேன்.

இப்பொழுது நடந்து முடிந்த தேர்தல் மகத்தானதொரு தேர்தல் என்பதை மேதகு ஆளுநர் அவர்கள் தங்கள் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். நாட்டில் நிலவி வந்த பல சூழ்நிலைகளையும், அங்கு நடந்த பிரச்சாரங்களைப் பார்க்கும் நேரத்தில், பத்திரிகைகளில் எழுதி வந்த செய்திகளைப் பார்த்த நேரத்தில் ஏதோ நாட்டிலே ஒரு பொய்யான, கற்பனையான தமிழ்நாட்டை இங்கே உருவாக்கி விட்டிருந்தார்கள். [illegible] சேர்ந்து, புதியதாகத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகளைச் சேர்த்திருக்கிறோம், நாங்கள் [illegible] நன்கு புரிந்துகொண்டு இருக்கிறோம், புதியதாகக் குடித் [illegible] என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அப்படிப் [illegible] நடத்துகிறோம் என்று சொன்னவர்களே, நீங்கள் வீட்டிலே புதிதாகக் குடித்தனம் நடத்துங்கள், நாட்டிற்குத் தேவையில்லை என்று [illegible] குடித்தனம் நடத்துங்கள் [illegible] தள்ளிவிட்டார்கள். தமிழக அதிகாரிகளை மீட்டும் [illegible] இன்னும் பத்தே நாட்கள்தான் திராவிட முன்னேற்றக் [illegible] பேசினார்கள், [illegible] தவறு செய்கின்ற அதிகாரிகள் நிர்வாகத் [illegible] ஆட்சி, நாங்கள் வந்ததுடன் [illegible] தண்டிக்கப்படப் போகிறார்கள் என்று வாய்வீசம் பேசினார்கள். அப்படிப் பேசிய [illegible] எழுத்துக்களிலே விளம்பரப்படுத்திக் கொண் டார்கள். அப்படிப்பட்ட விளம்பரங்களில் [illegible] அதிகாரிகள் [illegible] ஆட்சி [illegible] இல்லாததை [illegible] அதிகாரிகள் தேர்தல் முடிந்த [illegible] உயர்வை எதிர்பார்த்துக்கொண் [illegible] இங்கே தமிழக அரசின் [illegible] கொள்கைகளைச் [illegible] அதிகாரிகளின் [illegible] மரியாதையையும் தெரிவித்துக் [illegible] தங்கள் வாழ்த்துக்களையும் [illegible] அந்தக் [illegible] [illegible] இருக்கிறார்கள். [illegible] திட்டமான [illegible] இருந்தார்கள்.

பி.ப. 1–00

இங்கே நடந்ததெல்லாம் தமிழகத்திற்குப் புதிய முதலமைச்சர் யார் என்பதை தீர்மானிக்கும் தொண்டர்கள். அவருக்கும் தெரியப்படுத்தி [illegible] போட்டு [illegible] நான் [illegible] அவரும் சென்னையில் வந்து தங்கி அறிந்த முதலமைச்சர் என்று தெரிவித்தார்

தலைநகரிலே நிலைமைகளைப் பார்த்துக் கொண்டிருந்த நேரத்திலே ஒரு அதிகாரி, [illegible] உள்ள ஒரு அதிகாரி அமைந்த [illegible] தம்முடைய கட்சிக்கு 125 இடங்கள் கிடைக்க இருக்கின்றன, நீங்கள் தான் முதலமைச்சர் என்று தன்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார். ஒரு நடிகர் சுற்றுப்பயணம் செய்கின்ற நேரத்திலே அவருக்குப் பிரமாதமான போலீஸ் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டது. [illegible] இருவரும் மற்றும் சிலரும் அவருக்குப் பலமான பாதுகாப்புக் கொடுத்துக் கொண்டிருந்த நேரத்திலே இப்படிச் செய்கிறீர்களே என்று கேட்டவர்களுக்குச் சொன்ன பதில், அந்த உயர்தர போலீஸ் அதிகாரி தாங்கள் சொன்ன பதிலெல்லாம், இன்னும் பத்து நாட்களுக்குப் பிறகு செய்யப் போகின்றதை இப்போதே செய்கின்றோம் இதிலே என்ன தவறு என்பது தான். உயர்தர போலீஸ் அதிகாரி இப்படிக் கூறியிருக்கிறார்கள். இப்படி ஒரு நிலைமையை நாட்டு மக்களிடையே உருவாக்கி விட்டார்கள். [illegible] ஒரு தமிழ்நாட்டை உருவாக்கி அதிலே தங்களுக்குப் பொருத்தமான பதவிகளை எடுத்துக் கொண்டு, தங்களை அவைகளுக்கு நியமித்துக் கொண்டார்கள். தமிழகத்தை ஆளுகின்ற கனவைக் கண்டு கொண்டு வந்தார்கள். [illegible] என்று அவர்களுக்குத் தகுதியாக [illegible] உணர்ச்சியை உருவாக்கி விட்டார்கள். இருந்தாலும் தமிழகத்து மக்கள் இவர்களையெல்லாம் நம்பி, இவர்கள் சொன்னதையெல்லாம் நம்பி, இவர்கள் அளித்த வாக்குறுதிகளை நம்பி [illegible] முன்னேற்றக் கழகத்தின் [illegible] ஆட்சியில். போற்றிடும் அண்ணா அவர்கள் அமைத்த இந்த ஆட்சியின் நன்மைகளை மனதிலே வைத்து [illegible] நம்பிக்கை குறையாமல் [illegible] முறையிலே அரசாங்கப் பொறுப்பை [illegible] கொடுத்து யாரும் அசைக்க முடியாத அளவிற்கு கழக அரசை உருவாக்கியிருக்கிறார்கள். இந்த அரசை உருவாக்கியிருக்கிற மக்கள், இந்த ஆட்சியிலே நம்பிக்கை வைத்து இன்னும் அதிகமான நன்மையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. [illegible] அவர்கள் மின்சார விநியோகத்திலே ஒரு தனியார் [illegible] கம்பெனிகளிடத்திலே நிர்வாகம் இருப்பதாகவும் அந்தக் கம்பெனிகளை அரசு தேசிய உடைமையாக்காமல், அரசு உடைமையாக்காமல் ஏதோ தாமதித்துக் கொண்டிருப்பது போல ஒரு கருத்தை வெளியிட்டார்கள். நான் போட்டியிட்டது தஞ்சை மாவட்டத்திலே உள்ள பாபநாசம் தொகுதி. இந்தத் தொகுதியில் பாபநாசத்திலிருந்து போட்டியிட்டவர் நிஜலிங்கப்பா காங்கிரசைச் சேர்ந்த சி. ஆர். ராமசாமி என்பவர் [illegible] உறுப்பினராவார். இந்த சி. ஆர். ராமசாமி அவர்கள் [illegible] எலெக்ட்ரிசிடி கார்ப்பொரேஷனின் நிர்வாகத்தை [illegible] வைத்திருக்கிறார். [illegible] பாபநாசம் தொகுதியில் [illegible] இந்த எலெக்ட்ரிசிடி கார்ப்பொரேஷனின் [illegible] இருக்கிறது. அந்த எலெக்ட்ரிசிடி கார்ப்பொரேஷனின் நிர்வாகத்தை இவர் தான் நடத்திக் கொண்டு வருகிறார். தமிழக அரசு புதிய பொறுப்பை ஏற்றவுடன் [illegible] என்ன பொறுப்பை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முயற்சி எடுத்துக்கொண்ட போது ரிட் நீதிமன்றத்திற்கு இந்த சி. ஆர். ராமசாமி அவர்கள் சென்று தடை உத்திரவு வேண்டுமென்று கேட்டார்.

அங்கு தோல்வி ஏற்பட்டதும் உயர் நீதி மன்றத்திற்குச் சென்று தடை உத்திரவு பெற்றார். அந்த வழக்கும் இன்றைக்குத் தோற்று விட்டது. ரிட் அப்பில் மூலம் தடை வாங்கினார். அந்த ரிட் அப்பில் தோற்று விட்டது. இப்போது உச்ச கட்ட நீதி மன்றத்திற்குச் சென்று வழக்காடுவதற்கு முயற்சி செய்கிறார். உச்ச கட்ட நீதி மன்றத்திலே வழக்காடுவதற்கு ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். இங்கே நம்முடைய கழக அரசு தேச உடைமையாக்கும், அரசு உடைமையாக்கும் பணியை சரிவரச் செய்யவில்லை என்று நிஜலிங்கப்பா காங்கிரசு நண்பர்கள் குறை சொல்லுகிறார்கள். அவர்கள் தங்களுடைய நண்பர்களுக்குச் சொல்லி அரசு உடைமையாக்கும் இந்த முயற்சிக்குத் தடைபோடக்கூடாது என்று செய்யவேண்டும். நீங்கள் ஒத்துழைத்தால் தமிழகத்தில் இருக்கிற எல்லா மின்சார கம்பெனிகளையும் வெகு சீக்கிரத்தில் தேச உடைமையாக்க முடியும். மேலும் மேலும் மக்களுக்கு நன்மை கிடைக்கும் விதத்தில் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி கும்பகோணம் எலெக்டிரிசிடி கார்ப்பொரேஷனை அரசு உடைமையாக்கினால், பாபநாசம் மக்கள் நன்றிக் கடன்பட்டவர்களாக இருப்பவர்கள். மின்சாரமே காணாத, மின்சார விளக்குகளையே காணாத பாபநாசம் வட்டார மக்கள் பலர் இருக்கிறார்கள். 20 ஆண்டு காலமாக சர்வாதிகார கட்சிக்கு சிறப்பான ஆதரவைக் கொடுத்து வந்த அந்தத் தொகுதி மக்கள் இன்றைக்குத் தான் தங்களுடைய அடிமைத் தளையை அறுத்துக் கொண்டு விடுதலை பெற்று முன்னேற்றக் கழகத்தின் பக்கம் வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட பாபநாசம் தொகுதி மக்கள் என்றென்றைக்கும் நன்றிக் கடன்பட்டவர்களாக இருப்பார்கள். எனவே அருள் கூர்ந்து இந்த முயற்சியிலே நிஜலிங்கப்பா காங்கிரஸ் நண்பர்கள் ஈடுபட வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து ஆளுநர் உரையிலே நிர்வாக சீர்திருத்த ஆணைக்குழு என்பதைப் பற்றி மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தக் குழு அமைக்கப்பட்டிருப்பது பற்றி அறிய நான் மிக மகிழ்ச்சி அடைகிறேன். இந்தக் குழு அமைக்கப்பட்டிருப்பதை வரவேற்கிறேன். தமிழகத்தில் இருக்கிற பொது மக்கள் அனைவரும் தங்களுடைய காரியத்திற்காக அரசாங்க நிர்வாகத்திற்கு என்ன செலவானாலும் பரவாயில்லை தங்களுக்கு காரியம் நடந்தால் போதும் என்ற எண்ணத்திலே இருக்கிறார்கள். இதற்காக ஏற்படும் நிர்வாகச் செலவைப் பற்றி அவர்களுக்குக் கவலை கிடையாது. கலெக்டர் அலுவலகமானாலும், தாசில்தார் அலுவலகமானாலும், எந்த அலுவலகமானாலும் தாங்கள் மனு அனுப்பினால் அதற்கு ஒரு மாத காலத்திற்குள் பதில் கிடைத்தால் அவர்கள் நிம்மதி அடைகிறார்கள். இதை விட்டு விட்டு காலம் கடந்து எந்த உத்திரவு கிடைத்தாலும் அவர்கள் விரும்புவதில்லை. தங்கள் காரியங்கள் உடனுக்குடன் கவனிக்கப்பட வேண்டும். தங்கள் மனுக்கள் உடனடியாக பரிசிலனை செய்யப்பட்டு முடிவுகள் தெரிய வேண்டும் என்று கருதுகிறார்கள். இந்த நிர்வாக சீர்திருத்த ஆணைக்குழு (அட்மினிஸ்டிரேடிவ் ரிபார்மஸ் கமிஷன்) இவைகளைப் பற்றி கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மேதகு ஆளுநர் உரையிலே அப்பிரெண்டிஸ் மச்சர்ஸ் ஸ்கீமைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நாட்டிலே உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை தேர்தல் அறிக்கையிலே சொல்லி, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இன்னின்ன செய்வோம் என்று திராவிட முன்னேற்றக் கழகம் கூறியதை நீங்கள்

[illegible]

அடுத்து, இந்த உரையிலே தேர்தலைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிற காரணத்தினால் ஒரே ஒரு விஷயத்தைப் பற்றி மட்டும் சொல்ல விரும்புகிறேன். மறக்க முடியாத சம்பவம் ஒன்றைச் சொல்லி, தமிழகப் பொது மக்கள் எவ்வளவு பொறுப்புணர்ச்சியுடன் இந்தத் தேர்தலிலே கலந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லி நான் முடித்துக் கொள்ள விரும்புகிறேன். நான் போட்டியிட்ட பாபநாசம் தொகுதியில் எலுமிச்சங்காய்பாளையம் என்ற ஊரில், கட்டிய கணவன் தேர்தல் நாள் அன்று இறந்து விட்டான். இறந்து விட்ட கட்டிய கணவனை பிரிந்து விட்ட அந்தப் பெண், அந்தப் பொன் உடலை இடுகாட்டிற்கு இறுதிச் சடங்கிற்கு அனுப்பிவிட்டு, அந்த ஊர்வலத்தைத் துவக்கி விட்டு வேறு வழியில் வாக்குச் சாவடிக்கு வந்து வாக்குப் போட்டிருக்கிறார்கள். இப்படிப் பட்ட பொறுப்புள்ள தாய்மார்கள் வாக்களித்த காரணத்தினால்தான் இந்தத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் நல்ல ஒரு உறுதியான ஆட்சி அமைக்கக்கூடிய நல்ல சூழ்நிலை உருவாகியது.

அப்படி பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொண்ட அந்தத் தாய்மார்களைப் போன்ற வாக்காளப் பெருமக்களுக்கு பொதுவாழ்வில் இருக்கிற நாம் அத்தனைபேர்களும் கடமைப்பட்டிருக்கிறோம் என்று கூறி என் வார்த்தைகளை இத்துடன் முடித்துக் கொள்கிறேன். எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் சரியாக வாதாடவில்லை, திறமையில்லை என்று சொன்னார்கள். வாதாடவேண்டிய இடத்தில் திறமையாக வாதாடி பெறவேண்டிய சலுகைகளைப் பெறவில்லை என்று, இப்போது கனம் உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை நான் அரசாங்கத்தின்மீது சுமத்தியிருக்கிறேன். என்னென்ன முறையில் வாதாடியிருக்கிறார்கள் என்ற விளக்கத்தை கேட்ட போது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் நாளையதினம் அதற்கான விளக்கத்தைத் தருகிறேன் என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே இதை அத்தோடு விட்டுவிடலாம் என்று கருதுகிறேன்.

திரு. என். கணபதி: தமிழில் அச்சிடப்பட்டுள்ள உரையில் 14-வது பாராவில் மிகத் தெளிவாக மேதகு ஆளுநர் அவர்கள் தமிழக அரசின் கொள்கைபற்றியும் அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கிற நிதிபற்றிய போராட்டங்களையும் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள் என்று தெளிவாக குறிப்பிட விரும்புகிறேன்.

* **திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையில் நடந்து கொண்டிருக்கிற மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது உரையாற்றுகிற சந்தர்ப்பத்தில் நம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து நீங்காத் துயிலில் வங்கக் கடலில் தூங்கிக் கொண்டிருக்கும் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும், விடுதலை இயக்கத்தில் பெரியதொரு போராட்டத்தை நடத்தி என்னையெல்லாம் அரசியலில் அறிமுகப்படுத்தி நம்மைவிட்டுப் பிரிந்துவிட்ட தென் பாண்டிய மண்டலத்தின் தனிப் பெரும் தலைவர் பெருமதிப்பிற்குரிய முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கும் என் அஞ்சலியைச் செலுத்தி மாண்புமிகு முதல்

அமைச்சர் அவர்களுக்கும் என் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும்— எனக்கு வாக்களித்து ஆதரவு கொடுத்து இந்தப் பேரவையில் பொறுப் பேற்றிருக்கக்கூடியதொரு வாய்ப்பை அளித்ததற்கு —இந்த அவையின் மூலம் முதற்கண் என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு என் உரையைத் துவங்க இருக்கிறேன்.

இன்று நடக்கிற ஆளுநர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் தேர்தல் சம்பந்தமாக பல விளக்கங்களை பற்றி இங்கு பேசிய நேரத்தில் பல மாண்புமிகு உறுப்பினர்கள் ஏதோ முற்போக்கு கூட்டணியைச் சார்ந்தவர்கள் ஆங்காங்கு பல வன்முறைகளில் ஈடுபட்டு குறிப் பாக நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த வேட்பாளர்களையும், அவர் களைச் சார்ந்த ஊழியர்களையும் பல தொந்தரவுக்குள்ளாக்கி, அவர்களுக்கு பல தொந்தரவுகள் கொடுத்துக் கொண்டு வருவதாக இங்கு உரை நிகழ்த்தினார்கள். நடந்து முடிந்த தேர்தலில் முற்போக்குக் கூட்டணியைச் சார்ந்த வேட்பாளர் களும், அவர்களைச் சார்ந்த ஊழியர்களும் எந்த அளவிற்கு பொறுமையைக் கடைப்பிடித்தார்கள் என்பதை மனசாட்சி உள்ள யாரும் மறுக்கமுடியாது, மறைக்கவும் முடியாது. நடந்து முடிந்த தேர்தலில் நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த தலைவர்களும், வேட்பாளர்களும் மேடைகளிலும், துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களைப் போன்ற பெரியவர்களையும், எங்கள் மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களையும் எவ்வளவுக்கெவ்வளவு தரக்குறைவாக, கீழ்த்தரமாக, மிக மிக வேதனைப்படக்கூடிய அளவில், பொது மக்கள் உணர்ச்சிவசப்படக்கூடிய அளவில், துண்டுப் பிரசுரங்களையும், நோட்டீஸ்களையும் அச்சிட்டு வெளியிட்டார் கள் என்பதை எல்லோரும் அறிந்திருப்பார்கள் என நினைக்கிறேன். நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த தலைவர்கள் வன்முறையைத் தூண்டிவிடக்கூடிய அளவிற்கு துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டும் கூட மதிப் பிற்குரிய முதல்வர் அவர்களின் அன்புக் கட்டளைகளையும், மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களின் அறிக்கைகளின்படியும் நாங்கள் மிக அமைதியாக நடந்து கொண்டோம்.

நான் முதுகுளத்தூர் பகுதியில் நடந்த ஒன்றை மட்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். 1952 முதல் 1967 வரையில் நான்கு பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. அப்போது காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தது. அப்போது எங்கள் பகுதியில் தேர்தல் காலங்களில் நடைபெற்ற வெறியாட்டங்கள், அராஜகச் செயல்கள், அநாகரிகமும் சேர்ந்து செய்யப்பட்ட செயல்கள் இவைகள் எல்லாம் யாரும் அறிந்திருக்க முடியாதவையல்ல, அவைபற்றி நாடும் அறியும், நாட்டிலுள்ள எல்லோரும் அறிவர். அந்த அளவிற்கு அவர்கள் வன்முறையைத் தூண்டிவிட்டார்கள். அப்போது காங்கிரஸ் கட்சிக்கு எதிராக நிற்கக்கூடிய வேட்பாளர்களின் ஏஜெண்டுகள் தேர்தல் சாவடிகளில் ஏஜெண்டுகளாக இருக்கமுடியாது. இரவோடு இரவாக அவர்களை கைது செய்து விடுவார்கள். 1962-ல் நடைபெற்ற தேர்தலில் பெருமதிப்பிற்குரிய காமராஜ் அவர்கள் முதல் மந்திரியாக இருந்த போது நடைபெற்ற தேர்தலில் நான் எதிர்க்கட்சி வேட்பாளரின் ஏஜெண்டாக இருந்தபோது என்னைப் பிடித்து சிறையில் வைத்தார்கள். இதைச் சொல்வதற்குக் காரணம், இப்போது இந்த அளவிற்கு ஜனநாயகம் பற்றி பேசுகிறவர்கள் எந்த அளவிற்கு அப்போது ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டிருந்தார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்குத்தான்.

அவர்கள் நடத்திய செயலைப்போல் யாரும் இப்போது நடத்துவதில்லை. இப்போது எங்கு பார்த்தாலும் பாதிக்கப்பட்டவர்கள் முற்போக்கு கூட்டணியைச் சார்ந்தவர்கள்தான். நாம் இன்று அதிகளவு எண்ணிக்கையைப் பெற்றுவிட்டதன் காரணமாக நாம் இப்படிக் கூறுவதால் அவர்களைக் கேலி செய்வதாகக் கருதுகிறார்கள். நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் ஆங்காங்கே அராஜகத்தைத் தூண்டி வருவது யாரும் அறிந்து கொள்ள முடியாததல்ல.

அடுத்து, கவர்னர் உரைக்கு வரும்போது, அதிலிருந்து நாம் தெளிவாகக் காண்கிறோம். இருபது ஆண்டுகளில் காணமுடியாத காட்சிகளை, காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் காணாத முன்னேற்றங்களை நாம் இப்போது காண்கிறோம். தேர்தல் விக்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைகள்படி, சமுதாயத்தில் அடித்தளத்தில் இருக்கும் மக்கள், தொழிலாளர் வர்க்கத்தைச் சார்ந்தவர்கள், குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்கள் இவர்கள் எல்லோரும் போற்றிப் புகழத்தக்க அளவிற்கு நல்லபல திட்டங்களை நாம் இந்த உரையில் பார்க் கிறோம். பாராட்டப்படத்தக்க பல அம்சங்கள் ஆளுநர் அவர்களது உரையில் இருந்தபோதிலும் அதைப் பாராட்ட மறுக்கிறார்கள் நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களும், சுதந்திராக் கட்சியைச் சார்ந்தவர்களும். அவர் கள் குறை கூறக் காரணம், ஆளுநர் அவர்கள் தமது உரையில் 1966-67-ல் இருந் துள்ள திட்டங்களைக் குறிப்பிட்டு காட்டுகிற காரணத்தினால்தான் என்று நினைக்கிறேன்.

உணவு தானிய உற்பத்தியை எடுத்துக்கொண்டால், 1966-67-ல் 54.58 லட்சம் டன்கள் என்றிருந்தது, இப்போது 67 லட்சம் டன் என்றளவிற்கு உயர்ந்திருக் கிறது என்று கூறியிருக்கிறார்கள். இதைக் கண்டு பொறுமைப்பட்டு அதை ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள். மனசாட்சி உள்ளவர்கள் யாரும் இந்த வளர்ச்சியைக் கண்டு பாராட்டாமல் இருக்கமுடியாது. குறுகிய கால கடன் வசதியும் ரூ. 31.41 கோடியிலிருந்து ரூ. 50 கோடி என்ற அளவிற்கு உயர்த் திருக்கிறது. இதையும் பாராட்டாமல் இருக்கமுடியாது.

இந்த அவையிலே பேசிய நிஜலிங்கப்பா தலைமைக் காங்கிரஸ் உறுப்பினர்கள் மின்சாரத் துறையிலே பல கிணறுகளுக்கு பம்பு செட்களுக்கு மின் விசை இடைப்பதில்லை என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். என்னுடைய அனுப வத்தைப் பொறுத்தவரையில் வெள்ளைக்காரர்களை எதிர்த்துப் போராடினோம் என்று கூறும் காங்கிரஸ்காரர்கள், அவர்கள் ஆண்ட 20 வருஷ ஆட்சியில் இப்படிப்பட்ட முன்னேற்றம் மின்விசை இணைப்பில் கொடுக்கப்படவில்லை என்பதை அறுதியிட்டுக்கூறுவேன். எங்கள் பகுதியில் முன்பெல்லாம் மின் சாரமே கிடையாது. நாங்கள் மின்சார விளக்குகளைக் காணவேண்டுமென்று சொன்னால், பெரிய நகருக்குச் சென்றுதான் பார்க்கவேண்டும். ஆனால், இந்த குறைந்த 4 ஆண்டு ஆட்சியில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எங்கள் பகுதியில் பல மின்சார பம்பு செட்டுகளுக்கு மின்விசை இணைப்பைக் கொடுத்து இருக்கிறார்கள். 1966-67-ல் 25,000 பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு காங்கிரஸ் ஆட்சி காலத்தில் தந்திருக்கிறார்கள். ஆனால், இந்தக் குறுகிய நான்காண்டு கால ஆட்சியில் கிட்டத்தட்ட 40,500 மின் இணைப்புகளை வழங்கி இருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கான கிராமங்களுக்கு இப்போது மின்

[திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி] [1971 ஏப்ரல் 1

இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு மின்சாரத் துறையில் நல்ல வளர்ச்சி, முன்னேற்றம் ஏற்பட்டு இருக்கிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஆரூநர் அவர்கள் உரையிலே, சிறு விவசாயிகள் மேம்பாட்டுக் கழகம் மூன்று ஆரம்பிக்க இருப்பதாக குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அந்தச் சிறு விவசாயிகள் மேம்பாட்டுக் கழகம் பல நல்ல வித முன்னேற்றத்தைச் [illegible] விவசாய அபிவிருத்திக்கும் உறுதுணையாக இருக்கும் என்று ஆரூநர் உரையில் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். அந்தத் திட்டம் நல்ல முறையில் அமுல்படுத்து வதற்கு ஒரு திருத்தத்தைக் கூற ஆசைப்படுகிறேன். [illegible], திருநெல்வேலி, தென் ஆற்காடு போன்ற மாவட்டங்களில்தான் ஏற்படுத்தப் போவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். [illegible] இராமநாதபுரம் மாவட்டம், மிகவும் பின் தங்கிய மாவட்டம். அதுவும் எங்கள் [illegible] முதுகுளத்தூர் தொகுதி மிக, மிகப் பின் தங்கிய தொகுதி [illegible] வில்லை. இதை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் ஒப்புக்கொள்வார்கள் என்று [illegible]. [illegible] கூடக் கிடையாது. [illegible] யில் பாதையாவது வரும் என்று எதிர்பார்த்தோம். [illegible] வழியாக எடுத்துச் சென்று விட்டார்கள். இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் [illegible] வேறு ஊருக்குச் சென்றுதான் பார்க்க வேண்டும், எங்கள் தொகுதியில் ஒரு கோடியில் ஒரு ரயில் பாதையாவது [illegible], அந்தத் [illegible]. ஆகவே, இந்த [illegible] இராமநாதபுரம் மாவட்டத்தில் பல தொழிற்சாலைகள் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் [illegible] சொன்னார்கள். முன்னாலே பெரிய அம்மையார் அவர்கள் சேலம் இரும்பாலைத் திட்டம், முன்னாலே இருந்த தொழில் அமைச்சர் திரு. [illegible] அவர்களால் ஆராய்ச்சி செய்யப்பட்டு திட்டம் போட்ட திட்டம், நீங்கள் [illegible] போராடிப் பெற்றதில்லை என்று சொன்னார்கள். சேலம் இரும்பாலைத் திட்டம் 100 ஆண்டு களுக்கு முன்னாலே கூட ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கலாம், திட்டமும் திட்டப் பட்டு இருக்கலாம். ஆனால் அந்த திட்டத்திற்கான அனுமதி இப்பொழுது தான் வந்தது. அந்த திட்டம் வந்ததற்காக முக்கியமாக திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் பாராட்டப்பட வேண்டும். ஏனென்றால், ஆட்சிப்பொறுப்பேற்ற உடனே, முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடனே, மறைந்த மாமேதை அறிஞர் அண்ணா அவர்கள், சேலம் இரும்பாலை திட்டத்திற்கும், தூத்துக்குடி துறைமுகத் திட்டத்திற்கும், மத்திய அரசு அனுமதி கொடுக்காவிட்டால், அதற் காக பதவி பெரிதென்று பார்க்காமல், போராட்டத்தில் குதிக்க நான் தயார் என்று சொன்னார்கள். அதோடு மட்டுமல்ல, மாநில அளவிலே எழுச்சி நாளையும் கொண்டாடினார்கள். அந்த அளவுக்கு போராட்டங்கள் நடத்திய பிறகுதான் இந்த அனுமதி கிடைத்து இருக்கிறதே தவிர இதற்கு முன்னாலே இருந்தவர்கள் திட்டம்போட்டார்கள் நீங்கள் போராட்டம் நடத்தத் தவறி விட்டீர்கள் என்று சொல்வது தவறு. மாண்புமிகு முன்னாள் அமைச்சர் வெங்கடராமன் அவர்கள் இரும்பாலைக்காக மிகவும் பாடுபட்டு இருக்கிறார்கள் என்று சொன்னவர்கள், ஏன் [illegible] ஆண்டு கால ஆட்சியில் தமிழ் நாடு என்ற பெயர் மாற்றத்தைச் செய்ய

1971 ஏப்ரல் 1] [திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி]

முடியவில்லை என்பதைக் கேட்க ஆசைப்படுகிறேன். கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த குடி தமிழ் குடி என்று சொல்வார் கள், அதற்குப் பொருத்தமாக இந்த நாடு 'தமிழ் நாடு' என்று பெயர்மாற்றம் செய்யப் பட்டிருக்கிறது. ஆகவே அந்த உயர்வின் காரணமாக, பாரம்பர்யத்தின் காரணமாக, கழக அரசு எத்தகைய முயற்சிகளை எடுத்து இந்தப் பெயர் மாற்றம் செய்திருக்கிறது என்பதற்கு இந்தநேரத்தில் நான் நன்றி சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு ஆரூநர் அவர்களுடைய உரையில் வேலையில்லாத் திண்டாட் டத்தை [illegible]ளிப்பதற்காக, சில பகுதிகளில் ஏற்பட்ட நீடித்த வறட்சி நிலை காரணமாக ஏற்பட்ட வேலையின்மையை போக்குவதற்காக, குறிப்பாக இராம நாதபுரம், தர்மபுரி மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் வகையில் ரூ. 2 கோடி செலவில் இரண்டு சிறப்புத் திட்டங்களை அரசு தொடங்கும், அதன் காரணமாக அங்கே வேலையில்லாத்திண்டாட்டம் கொஞ்சம் குறையும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அந்தத் திட்டத்தை உடனடியாக செயல் படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரத்தில் பல ஏரிகளில், ஓடைகளில் தண்ணீர் வருவதே இல்லை. அங்கே நீர்ப்பாசனத்திற்கான ஒரு அணை கூட கிடையாது. வெளிமாவட்டங் களுக்குச் செல்லுகிற நேரத்தில் தான் எங்களுடைய மாவட்ட மக்கள் அணையைப் பார்க்கிறார்கள். உணவு உற்பத்திக்கு மிகத் தேவையானது நீர்ப் பாசனம் தான். தமிழ்நாட்டில் இப்போது நல்ல உணவு உற்பத்தி ஏற்பட்டு இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டப் பகுதியில் நல்ல பல நீர்த்தேக்கங் களைக் கட்டி, அதனுடைய வளர்ச்சிக்கு ஊக்கம் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மதுரை மாவட்டத்தில், அப்பர் பெரியார் என்ற அணைக்கட்டு பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இருக்கிறது. அந்த அப்பர் பெரியார் அணைக் கட்டு இந்த இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும், ஆகவே, அதை பரிசீலித்து, இராமநாதபுரம் மாவட்டத்திற்கு கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிர்வாகச் சீர்திருத்தக் குழு அமைந்திருப்பதை வரவேற்கிறேன். மாநில திட்டக்குழு அமைந்திருப்பதையும் வரவேற்கிறேன். மாநிலத் திட்டக்குழு இராமநாதபுரம் மாவட்டத்திற்கு முதல் நிலை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முதுகுளத்தூர் வரலாற்றைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருக்கும் தெரியும். ஜனநாயகம் பேசுகிற நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் எந்த முறையில் நடந்து கொண்டார்கள் என்பதை நினைவுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன். காங்கிரஸ் ஆட்சி காலத்தில் இந்த முதுகுளத்தூரில் ஏற்பட்ட சம்பவத்திற்காக கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி போன்றவர்கள் ஒரு சமாதானக் குழுவில் வந்தபோது, எந்த முறையில் அந்த தூதுக்குழுவை நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் நடத்தினார்கள், எந்த அளவுக்கு வெறுப்பு உணர்ச்சி காட்டினார்கள் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். அந்த அளவுக்கு அடக்கு [illegible] எவிவிட்டார்கள் இப்போது நடந்த கலவரங்களைப்பற்றி பேசுகிறார்

கள். அங்கே இருக்கும் மக்கள் பலவிதமான துன்பத்திற்குள்ளானார்கள். சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தலைவர் திரு. முத்துராமலிங்க தேவருக்குப் பல வித இன்னல்களை விளைவித்தார்கள். மனச்சாட்சி இருப்பவர்கள் அதை உணர்வார்கள். இப்போதுதான் அங்கே இருக்கும் மக்கள், 4 ஆண்டுகளாக மன அமைதியோடு, இது நம்முடைய அரசு மக்கள் அரசு என்ற வகையில் நினைக்கிறார்கள். இப்போது இருக்கும் அரசு அவர்களுடைய அரசாகக் கருதுகிறார்கள். மாண்புமிகு கலைஞர் அவர்களை தேவர் அவர்களின் வாரிசாகக் கருதுகிறார்கள். இந்த ஆட்சியில் தங்களுக்குப் பல மாற்றங்கள் ஏற்படும் என்று நம்புகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்னும் 2 நிமிடங்கள் பேச வேண்டும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இவரே பேசி முடித்து விடட்டும். போகட்டும்.

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி : இந்த முதுகுளத்தூர் பகுதியைப் பொறுத்தவரையில் நான் ஒன்றிரண்டைச் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன். வைகை அணையிலிருந்து இருபதாம் நதி வழியாக நல்ல முறையில் திட்டமிட்டு முதுகுளத்தூர் பகுதிக்குத் தண்ணீர் வசதியை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்கள் பகுதியில் மலட்டாறு என்று ஒரு ஆறு ஓடுகிறது. மலடி என்று சொன்னால் குழந்தை இல்லாதவர்கள் என்று சொல்வார்கள். அது போல், இந்த மலட்டாறு எந்த விதமான பிரயோசனமும் இல்லாமல் ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த மலட்டாற்றில் ஒரு சிறிய நீர்வாய் போடுவதற்கு 3-4 வருடத்திற்கு முன்பே, காங்கிரஸ் ஆட்சியிலிருந்தே, பரிசீலனை நடந்து வருகிறது.

பி.ப. 1-30

ஆகவே மாண்புமிகு தமிழக அரசு அதுபற்றி விரைவில் நடவடிக்கை எடுத்து, அந்தத் திட்டத்தை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்றும் நாராயணக்காவேரி அணைத்திட்டம், பரளையாறு திட்டம், கஞ்சம்பட்டி கால் திட்டம் போன்ற திட்டங்களையும் செயல்படுத்தி, இந்தப் பொது மக்களுக்கு உதவி அளிக்குமாறு இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஏழை எளிய மக்கள் வாழக்கூடிய இந்த பகுதி மிகவும் பின் தங்கிய பகுதி. இந்த பின் தங்கிய பகுதியிலுள்ள பின்தங்கிய மக்களுக்கு கல்விச் சலுகைகளையும், ஏனைய சலுகைகளையும் அளிக்குமாறு கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுறுகின்றன. பேரவை நாளைக் காலை 9 மணிக்கு மீண்டும் கூடும்.

பி.ப. 1-31

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

5. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and orders.*

82. Notification issued with G.O. Ms. No. 508, Co-operation, dated the 26th November 1970 in regard to certain amendments to the Tamil Nadu Co-operative Society Rules, 1963, published at pages 1 to 50 of the Supplement to Part V of the *Tamil Nadu Government Gazette*, dated the 4th September 1963, as subsequently amended. [Laid on the Table of the House under section 119 (4)of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961).]

83. Notification issued with G.O. Ms. No. 562, Co-operation, dated the 29th December 1970 in regard to certain amendments to the Tamil Nadu Co-operative Societies Rules, 1963 relating to state Co-operative Bank and Central Co-operative Banks, published at pages 1 to 50 of the Supplement to Part V of the *Tamil Nadu Government Gazette*, dated the 4th September 1963 as subsequently amended. [Laid on the Table of the House under section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961).]

84. Notification issued with G.O. Ms. No. 549, Co-operation, dated the 19th December 1970 in regard to certain amendments to the Tamil Nadu Co-operative Societies Rules, 1963 relating to state Co-operative Bank and Central Co-operative Banks, published at pages 1, to 50 of the Supplement to Part V of the *Tamil Nadu Government Gazette*, dated the 4th September 1963 as subsequently amended. [Laid on the Table of the House under section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961).]

85. Notification issued with G.O. Ms. No. 899, Public (Services-A), dated the 20th April 1970, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission regulations, 1954 for inclusion within the Commission's purview the post of Teacher, Health Education Bureau, office of the Director of Health Services and Family Planning, Madras. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India).]

86. Notification issued with G.O.Ms. No. 2347 public (Services-A), dated the 15th October 1970, in regard to an amendment to the Tamil Nadu public service Commission Regulations, 1954 relating to exclusion of the post of clerk in the Tamil Nadu House, New Delhi under the Tamil Nadu Ministerial Service from the Commission's purview [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India).]

87. Notification issued with G.O. Ms. No. 3157, Home, dated the 17th November 1970, in regard to an amendment to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940, published at pages 1 to 40 of the *Tamil Nadu Government Gazette*, Extraordinary, dated the 30th March 1940 as subsequently amended. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

88. Notification issued with G.O. Ms. No. 1820, Home, dated the 27th July 1970 in regard to certain amendments to the Tamil Nadu Rectified Spirit Rules 1959, published at pages 169 to 187 of the rules Supplement to Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 25th March 1959, as subsequently amended. [Laid on the Table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

89. Notification issued with G.O. Ms. No. 1972, Rural Development and Local Administration, dated the 13th October 1970, in regard to an amendment to the rules under the Tamil Nadu District Municipalities Act, 1920 relating to the invitation and disposal of tender relating to supplies of materials, goods, etc., to Municipal Councils. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

B. Reports, Notifications and other papers.

31. Notification issued with G.O. Ms. No. 2368, Revenue, dated the 25th July 1970, making the Madras City Tenants Protection Rules, 1970.

@ 32. The Tamil Nadu Agricultural University Bill, 1971 (L.A. Bill 2 of 1971).

@ 33. The Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Bill, 1971.

@ Despatched to Members on 30th March 1971.

தமிழ் நாடு சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1971, ஏப்ரல் 2.

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

Syllabi for schools and colleges

* 2 *S.N.Q.*—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Revenue be pleased to state—

(*a*) whether this Government has any proposal to revise the syllabus in the educational system in schools and colleges;

(*b*) if so, the details thereof; and

(*c*) the date from which the Government proposes to implement the revised syllabus ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) முதல் (உ) வரை: பள்ளிகளைப் பொறுத்த வரையில் அவற்றிற்கான புதிய பாடத்திட்டங்களை வகுக்க, நிபுணர் குழுக்களை அரசு அமைத்துள்ளது. இவை, வகுக்கப்பட்ட பின் கல்வி வல்லுநர்கள், ஆசிரியர்கள் முதலியோர் கருத்துரைகளைப் பெறுவதற்காக வெளியிடப்பெறும். அவ்வாறு பெற்ற கருத்துரைகளுக்கேற்ப விரைவில் ஏதாவது மாற்றங்கள் செய்ய வேண்டியிருப்பின் செய்யப்பெறும். அதன்பின் புதிய பாடத்திட்டங்களுக்கு முதலில் பள்ளிக் கல்வி ஆயமும் பின் அரசும் ஏற்பு அளிக்க வேண்டும். அதன்பின்னரே பள்ளிகளில் புதிய பாடத்திட்டங்கள் செயல்படுத்தப்பெறும்.

கல்லூரிகளைப் பொறுத்தவரைப் பாடத்திட்டங்களில் மாறுதல்கள் செய்யும் பொறுப்பு பல்கலைக் கழகங்களையே சார்ந்ததாகும்.

DR. H. V. HANDE: Sir, what was the reason that actually prompted this Government to appoint such a Committee ? There must have been some valid reason on the part of the Government to have appointed this Committee. May I know from the Hon. Minister the basis on which they have appointed this Committee ? Also, is it not a fact that sometime ago when the Hon. Minister addressed the Tamil Nadu Youth Organisation, he has expressed the view that the present syllabi are out-dated and they are all based on 1930 syllabi? As the present-day syllabi are not profession-oriented and are old, will the Government take steps to see that they are profession-oriented so that the pupils can get some job or attend to some profession ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பாடத்திட்டங்களுடைய அமைப்பு முறைகள், மற்றவைகள், காலத்திற்கு ஏற்ற வகையில், நாட்டின் தேவைக்கு ஏற்ற வகையில் புதிதாக அமைக்கப்பட்

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, பாடத் திட்டங்களை நம்முடைய மெட்ராஸ் யுனிவர்சிடி வகுத்தாலும், பொதுவாக இந்தியாவிலேயே பழைமையானதாக இருக்கும் நம் யுனிவர்சிடி பழைய முறையிலேயே இருக்கிறது. டெல்லி யுனிவர்சிடி போன்ற வட மாநிலங்களில் உள்ள யுனிவர்சிடிகள் புதிய முறைகளில் மாணவர்கள் சீக்கிரத்தில் புரிந்து கொள்ளக் கூடிய நிலையில் விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் புதுப்புது பாடத் திட்டங்களை வகுப்பதில் முன்னேறி இருப்பது நம்முடைய அரசாங்கத்திற்குத் தெரியுமா? அவற்றை ஒப்பிட்டு நம் யுனிவர்சிடிக்கு அறிவுரைகளைத் தந்து பாடத் திட்டங்களில் மாற்றம் உண்டாக்க வழி செய்வார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் முதலிலே சொன்னதைப் போல், பல்கலைக்கழகங்கள் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றன. டெல்லி முதலிய பல்கலைக்கழகங்களின் தரம் எப்படி இருக்கிறது என்பதை இங்கே நாம் ஆராய்ந்து கருத்து வழங்கும் தன்மையில் இல்லை. அந்தத் துறையில் இருப்பவர்கள் பாடத்திட்டங்களை ஆராய்ந்து வல்லுநர்கள் இருக்கும் சிண்டிகேட், செனட் போன்ற அமைப்புகள் என்னென்ன மாற்றங்கள் செய்யவேண்டும் என்று விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அதன் மீது என்ன நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்கள். அண்மையில்கூட மொழிக்காக ஒதுக்கப்பட்ட நேரத்தின் அளவைக் குறைத்து அந்த அந்தப் பாடங்களுக்கு அதிகப்படுத்தித் தரவேண்டும் என்ற அளவில் முயற்சியை பல்கலைக்கழகம் மேற்கொண்டிருக்கிறது. பல்வேறு பல்கலைக் கழகங்களும் ஆராய்ந்து மாற்றங்கள் செய்ய வேண்டும். சிறந்ததாக நம் பாடத்திட்டங்கள் அமைய வேண்டும் என்ற அளவில் வல்லுநர்கள் நல்ல பாடத் திட்டங்களை அமைக்க முன்வருவார். அப்படிப்பட்ட திட்டங்களை நாம் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

Dr. H. V. HANDE: Sir, is the Hon. Minister aware of the fact that there is a serious handicap that the students of Tamil Nadu are suffering, namely, those students who have finished 11 years of secondary course after passing the S.S.L.C. examination have to undergo first the P.U.C. and then the degree course, whereas in other States and in the Central School the students after finishing a 11-year secondary course and obtaining a higher secondary certificate can directly undergo the degree course without the P.U.C. Has this point been brought to the attention of the Hon. Minister and if so, what steps the Government have taken to see that our students do not suffer from that handicap just because we are following a different system?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்தக் கருத்து பற்றி இரண்டு மூன்று நாட்களுக்கு முன் சிண்டிகேட் அவையிலும் விவாதிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்ட நிலைகளில் இருக்கின்றன. நாம் பல்வேறு மாநிலங்களின் நிலைகளையும் கருத்தில்கொண்டு, எந்தெந்த வகையில், ஒரு நல்லவகையில் இதைச் செய்யலாம் என்று இருக்கிறோம். நாம் இப்போது பள்ளிப் படிப்புக்கு 11 ஆண்டுகள் என்றும், புகுமுக வகுப்புக்கு ஒரு ஆண்டு என்றும், பட்டப் படிப்புக்கு மூன்று ஆண்டுகள் என்றும், அதன்பின்னர் பட்ட மேற்படிப்புக்கு இரண்டு ஆண்டுகள் என்றும் கால அளவை வைத்திருக்கிறோம். சில மாநிலங்களில்

வேண்டும் என்று, 1965-66-ல் [illegible] செய்யப்பட்டன. [illegible] பயிற்சிப்புத் [illegible] சொல்லி [illegible] வேண்டும் [illegible] புத்தகங் [illegible] கொள்ள [illegible] தேவைக்கேற்ப [illegible] அதையும் [illegible] செய்ய [illegible] கல்வித் [illegible] போட்டு, [illegible] 10, 12 [illegible] அவர்கள் [illegible] அறிக்கை [illegible] காக்கும் [illegible] கங்கள் [illegible] போட்டால் [illegible] இதெல்லாம் [illegible] 1972-73-ல் தான் [illegible] ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கின்றன.

திரு. என். கே. பழனிசாமி: தலைவர் [illegible] அவர்களே, பி.ஏ. [illegible] அளவுக்கு [illegible] பி.ஏ. [illegible] பெருந்தாரம் [illegible] கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: [illegible] கல்லூரிப் [illegible] வேண்டும். [illegible] என்கிற [illegible] களில் [illegible] முறையில் [illegible] அமைக்க [illegible] கல்வித் [illegible] பல்கலைக்கழகந்தான் செய்ய வேண்டும்.

திரு. சௌந்தர் என். சுந்தரபாரதி: [illegible] இந்தக் [illegible] அறிவாரா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இப்போது தமிழ் [illegible] அமைக்கப் [illegible] வந்து [illegible] வைக்கப் படும்.

பள்ளிப் படிப்புக்கு 10 ஆண்டுகள் என்றும் 'அப்பர் செகண்டரிக்கு' இரண்டு ஆண்டுகள் என்றும், அதன்பின்னர் பட்டப் படிப்புக்கு மூன்று ஆண்டுகள் என்றும், பட்ட மேற்படிப்புக்கு இரண்டு ஆண்டுகள் என்றும் வைத்திருக்கிறார்கள்.

நாம் 11 ஆண்டுகள் பள்ளிப்படிப்பு என்று வைத்து புகுமுகப் படிப்புக்கு ஒரு ஆண்டு என்று வைத்திருக்கிறோம். பல மாநிலங்களில் 10 ஆண்டுகள் பள்ளிப் படிப்புக்கு என்று வைத்து, பின்னர் பழைய இன்டர்மீடியட் மாதிரி இரண்டு ஆண்டுகள் என்று வைத்திருக்கிறார்கள். பள்ளிப்படிப்புக்குப் பின்னர் இரண்டு ஆண்டுகளை [illegible] சேர்ப்பதா, அல்லது அப்பர் செகண்டரியில் சேர்ப்பதா என்பதில்தான் கருத்து வேறுபாடு இருக்கிறது. பல்கலைக் கழகத்தினரும் இந்த கல்வியாளர்களும் நல்ல முறையில் ஆராய்ந்து தக்க முடிவுகளை எடுத்துச் சொன்னால் அதை அரசாங்கம் பரிசீலித்து ஆவன செய்யும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக இருந்த டாக்டர் லட்சுமணசாமி முதலியார் அவர்கள் பள்ளிப்படிப்பு 11 ஆண்டுகள் இருக்க வேண்டும் என்றும், புகுமுக வகுப்பு ஒரு ஆண்டு இருக்க வேண்டும் என்றும் தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். ஆனால் நேற்றையதினம் சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் அவர்கள் பள்ளிப் படிப்புக்கு 10 ஆண்டுகள், பின்னர் இரண்டு ஆண்டுகள், பட்டப் படிப்புக்கு மூன்று ஆண்டுகள், பட்ட மேற்படிப்புக்கு 2 ஆண்டுகள் என்பன போன்ற கருத்துக்கள் வந்தால், விவாதித்து முடிவு காணலாம் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இது குறித்து சென்னைப் பல்கலைக் கழகம் முடிவெடுத்தால், அந்த யோசனையின் மீது ஆராய்ந்து தக்க முடிவுகளை மேற்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, பாட திட்டங்களைப் பார்க்கும் போது, அவை காலத்திற்கு [illegible] எதிர்கால நிலைமைகளை [illegible] அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். [illegible] கொண்டு, [illegible] பொருளாதாரத்தைப் புரிந்துகொள்ளக்கூடிய வகையில், [illegible] பாடத் திட்டங்கள் அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தப் பாட திட்டக் குழுவிலே [illegible] அவர்களும் இந்த நாட்டைச் சேர்ந்தவர்களாக இருக்கின்ற காரணத்தால் அவர்கள் பல்வேறு கருத்துக்களை, [illegible] பாடத் திட்டங்கள் அமைக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றி நன்றாக முடிவு காண்பார்கள். [illegible] அரசியல் கட்சிகளோ பாடத் திட்டங்கள் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று அவர் களுக்குக் கருத்துக்களை வற்புறுத்துவது பொருத்தமாக இருக்காது. நாட்டின் நலன், எதிர்கால நிலைமை இவைகளை அறிந்தவர்களாக இருக்கிறார்கள். நாம் நம்முடைய ஆலோசனைகளைக் [illegible] இப்போது இருக்கின்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அமைத்திருக்கிறோம். [illegible] நல்லதொரு சமுதாயம் அமைய, எதிர்கால சூழ்நிலைகளை அனுசரித்து நல்ல வகையில்

நல்ல முடிவெடுத்து எதிர்காலத்தைச் செம்மையாக்குவார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான் இந்த வல்லுநர்கள் வழிவகை செய்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, பல்கலைக் கழகத் துணைவேந்தர் இப்போதிருக்கிற புகுமுக வகுப்பை எடுத்துவிட்டு, மீண்டும் இன்டர்மீடியட் கோர்ஸை வைக்க வேண்டுமென்று ஆலோசனை கூறியிருக்கிறார்களா ? இப்போ இருக்கின்ற புகுமுக வகுப்பிலும், இன்டர்மீடியட் கோர்ஸிலும் பொதுக் கல்வியைத் தான் சொல்லிக்கொடுக்கிறார்கள். பொதுக்கல்வியை பள்ளி இறுதி யோடு சேர்த்து ஸ்பெஷலைஸ்டு கோர்ஸ் என்ற முறையில் வைத்து, டிகிரி கோர்ஸ் வைத்துக்கொள்ளக்கூடிய முறையில் பாட திட்டத்தை மாற்றியமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இவைகளை மாற்றியமைக்கின்ற உரிமை அரசுக்கு இல்லை. பல்கலைக் கழகம்தான் முடிவெடுத்து மாற்றியமைக்க வேண்டும். நாம் வேண்டுமானால் பல்கலைக் கழகத் திற்கு இது குறித்து யோசனைகளைச் சொல்லலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்த நிபுணர் குழு வுக்கு 'டேர்ம்ஸ் ஆஃப் ரெஃபரன்ஸ்' அரசாங்கத்திலிருந்து கொடுக்கப்பட்டிருக் கிறதா ? அப்படியானால், அந்த விவரங்களை இந்தப் பேரவைக்கு அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, டேர்ம்ஸ் ஆஃப் ரெஃபரன்ஸ என்ற முறையில் எதுவும் அளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வில்லை. ஆனால், இருக்கிற பாடத் திட்டங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டு மென்ற முறையிலே இந்தக் குழுவிலே வல்லுநர்களை போட்டிருக்கிறோம். தமிழ், ஆங்கிலம், கணக்கு, பொது அறிவியல், வரலாறு, புவியியல் ஆகிய பாடங்களுக்கு தனித்தனி குழு அமைக்கப்பட்டிருக்கிறது. தமிழுக்கு டாக்டர் எம். சுந்தரம் அவர்கள் தலைவராகப் போடப்பட்டிருக்கிறார். அவரின்கீழ் 10 உறுப்பினர்கள் இருப்பார்கள். ஆங்கிலத்திற்கு ஃபாதர் செக்யூரா என்பவர் தலைவராக இருப்பார். கணக்குக்கு டாக்டர் சூரியபிரகாஷ், எம்.ஐ.டி. அவர்கள் தலைவராக இருப்பார். பொது அறிவியல் பாடத்திற்கு பொதுக் குழுவின் தலைவர் திரு. ஆர். சண்முகம், எம்.டி. டெக்ஸ் புக் சொசைடி, அவர்கள் தலைவராக இருப்பார். இதில் மூன்று உட்குழுக்கள் உள்ளன. இதில் பௌதிகத்திற்கு திரு. திருஞான சம்பந்தம், (மாநிலக் கல்லூரி) அவர்களும், கெமிஸ்ட்ரிக்கு திரு. சண்முக நாதன், (பச்சையப்பன் கல்லூரி முதல்வர்) அவர்களும், பைலாஜிக்கு பி. ஜே. சஞ்சீவ ராஜ் அவர்களும் (கிறித்தவக் கல்லூரி), வரலாறு பாடத்திற்கு புரபசர் சி. கே. நிர்மல், (கிறித்தவக் கல்லூரி) அவர்களும், பூகோளத்திற்கு டாக்டர் ஐராவதி அவர்களும் இருப்பார்கள். அவர்கள் எல்லாம் தகுந்த ஆலோசனை களைச் சொல்வார்கள். அவர்களுடைய ஆலோசனைகள் பலருடைய கவனத் திற்குக் கொண்டுவரப்படும். அதன்பிறகு வாரியத்தின்மூலம் அங்கீகரிக்கப் பட்டு அரசாங்கம் 1972-73-லே நடைமுறைப்படுத்த இயலுமா என்று பார்க்கும். இல்லாவிட்டால் 1973-74-ல் அமல்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் —ப்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தெரிவிக்கின்றபோது கல்லூரிகளைப்பற்றிய விவரங்கள் [illegible] முடியாத அளவிற்கு இருக்கிறதென்று சொன்னார்கள். நான் அறிய விரும்புவது, இன்றைக்கு சென்னைப் பல்கலைக் கழகத்தின்கீழ் இருக்கிற கல்லூரிகளில் பாட திட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டிருப்பது உண்மையா? அதுபோல மதுரைப் பல்கலைக் கழகத்தின் கீழுள்ள கல்லூரிகளிலும் மாற்றப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பல்கலைக் கழகத்தில் அகடமிக் கவுன்சில் என்ற அமைப்பு தனியாக இயங்குகிறது. அதில் கல்லூரிகள் எல்லாம் [illegible]. பாடத் திட்டங்களை வகுப்பதற்கு அகடமிக் கவுன்சிலில் [illegible] இருக்கின்றன. [illegible] அதில் கல்வியாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் [illegible] மாற்றங்களைச் செய்திருக்கிறார்கள். என்ன என்ன மாற்றங்கள் என்று [illegible] தெரியாது ஆனால், தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் தெரிவிக்கத் தயாராகயிருக்கிறேன்.

THIRU B. VENKATASAMI : May I know the major changes recommended by the Committee ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்போது தான் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. அவர்கள் பிறகு சமர்ப்பிப்பார்கள்.

திரு. ரு. காமாட்சி: தலைவர் அவர்களே, மாணவர்கள் அனைவரும் ஒரு தொழிலைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில் தொழில் கல்வி, பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் விரிவுபடுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தொழில் கல்வி பெறுவதற்கான வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. எட்டாவது வகுப்பு முடித்தவர் [illegible] அளிக்கப்பட்டு [illegible] பெறுகிறவர்கள் தொழில் நிலையங்களில் பணியாற்ற வகை செய்யப்பட்டிருக்கிறது. பாலி டெக்னிக்குகள் பிரிவு வைக்கப்பட்டிருக்கின்றன. அதில் இரண்டு படித்து பின்னர் [illegible] எஞ்ஜினியரிங் கோர்ஸ் [illegible]. பாலிடெக்னிக்கில் படிப்பவர்கள் மீண்டும் எஞ்ஜினியரிங் படிப்புக்கு வரலாம் என்று அண்மையில் சென்னைப் பல்கலைக் கழகம் முடிவு எடுத்திருக்கிறது. பள்ளிகளிலும் தொழில் கல்வி கற்க எங்கெங்கு வசதிகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் ஏற்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்கலைக் கழகத்தைப்பற்றிச் சொன்னதை நான் மறுக்கவில்லை. இருந்தபோதிலும் வருங்காலத் தலைமுறையைச் சேர்ந்தவர்களுக்கு நல்ல வாழ்க்கைக்கு வழிவகைகளைச் செய்ய வேண்டிய பொறுப்பில் இருப்பவர்கள் என்ற முறையில், புதிய காலத்திற்கேற்ற கொள்கைகளை எல்லாம் போட்டு, பாட திட்டங்களைத் திருத்த வேண்டுமென்று தனியாக ஒரு குழுவை நியமித்து ஆலோசனைகளைப் பெற்று அவற்றைப் பல்கலைக் கழகத்திற்கு அளிக்க வழிவகை செய்வார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பல்கலைக் கழகத்தில் அக்கடமிக் கவுன்சில், சிண்டிகேட் பிரதிநிதிகளும், வல்லுநர்களும் இருக்கிறார்கள். உறுப்பினர் கூறியதுபோன்று அவர்களுக்கு நம்முடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்காகத்தான் இந்த மன்றத்திலிருந்து 6 உறுப்பினர்கள் சிண்டிகேட்டுக்கு அனுப்பிவைக்கிறோம். மற்றவர்களுடைய கருத்துக்களை வழங்கி அதன் அடிப்படையிலேயும் முடிவு எடுக்கப்படும். ஏதாவது திருத்தங்கள் வேண்டுமானால் நாம் பரிந்துரை செய்ய உரிமை இருக்கிறது. ஆனால் முடிவு எடுக்கும் உரிமை பல்கலைக் கழகத்திற்குத்தான் இருக்கிறது.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, கல்லூரி மாணவர்களுக்குக்கான பாடத் திட்டங்களை மாற்றி அமைப்பதற்காக குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பள்ளி மாணவர்களுடைய பாடத் திட்டங்களையும், பாலிடெக்னிக் மாணவர்களுடைய பாடத் திட்டங்களையும்கூட மாற்றி அமைப்பதற்கு இதுபோன்ற குழுக்கள் அமைக்கப்படுமா? பாலி டெக்னிக்கில் இன்றையதினம் எல்.எம்.இ. எல்.சி.இ. போன்ற பாடங்களை எல்லாம் படிப்பதற்கு அதிக ஆர்வம் இல்லாததைப் பார்க்கிறோம். ஆகவே, அந்தப் பாடத் திட்டங்களையும் கவர்ச்சிகரமாக இருக்கக்கூடிய, பயனளிக்கக் கூடிய வகையில் மாற்றி அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: கல்லூரி பாடதிட்டங்களைப் பற்றித்தான் கேள்வி. அதை மாற்றி அமைக்க குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். பாலிடெக்னிக்கைப் பொறுத்தவரையிலும் பாட திட்டங்கள் மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்து சொல்லப்படவில்லை. அதன் அவசியத்தை யாரும் எடுத்துரைக்கவில்லை. அவ்வப்போது டெக்னிகல்போர்டு அவசியமான மாற்றங்களைச் செய்துகொண்டுதான் வருகிறார்கள். நவீன, தேவையான பாடமுறைகள் அமைக்கப்படுகின்றன. வளர்ந்து வருகிற பல்வேறு தொழிற்சாலைகளுக்கேற்ற தொழிலாளர்களை உருவாக்குகின்ற நிலையில் தான் செயல்பட்டு வருகின்றன. அவசியம் ஏற்படுகிற காலத்திலும் அந்தத் துறையினரும் அதுபற்றிய காரியங்களை மேற்கொள்வார்கள்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, is the Hon. Minister for Education aware of the fact that there is a considerable fall in the number of passes in the All India competitive examinations as far as Tamil Nadu is concerned and there is also a considerable fall in the numbers of admissions to the All India Technical institutions, and if so, has any attempt been made to find out the reasons for this and also refer it to a Committee or the University so that we can know why there is a deterioration in our standard of education as compared to other States ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்கள், தொழில் துறை, தொழில் நுட்பத்துறையைப் பொறுத்தவரையில் நமது மாநிலம் பின் தங்கிய நிலையில் இருப்பதாகச் சொல்வதற்கில்லை. காரணம் இத்துறையில் கடந்த 3 ஆண்டுகளாக நம்முடைய மாநிலம் அகில இந்திய கேடயத்தைப் பெற்று வருகிறது. மூன்று நான்கு பரிசுகளைப் பெற்றே வருகிறார்கள்.

பொறியியல் துறையைப் பொறுத்தும் நம்முடைய மாநிலத்தவர்கள் பல்வேறு இடங்களில் திறமையாகப் பணியாற்றிக் கொண்டுதான் வருகிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல ஐ.ஏ.எஸ். துறை பற்றித்தான் சில கருத்துக்கள் கூறப்பட்டு வருகின்றன. திறமைமட்டுமே அதில் கவனிக்கப்படாமல் வேறுபல விஷயங்களும் கவனிக்கப்படுவதன் காரணமாக— மாநில மனப்பான்மை எல்லாம் இருப்பதன் காரணமாக போதுமானவர்கள் தேர்ந்தெடுக்கப்படாமல் இருக்கலாம். ஒரு காலத்தில் டெல்லி செக்ரடேரியட்டில் 20, 30 ஐ.சி.எஸ். இருந்தார்கள் என்றால் அதில் 16 செக்ரடரிகள் தமிழகத்தை, சென்னையைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். இப்போது வேறு பல பிரச்னைகள்—மாநிலத்திற்கு இன்னமாதிரி இருப்பது ஆகியவை எல்லாம் வருகிறபோது—நம்முடைய மாணவர்கள் திறமைக்குறைவானவர்கள் என்று தேர்ந்தெடுக்கப்படாததைக் கொண்டு சொல்ல முடியாது. பல்கலைக் கழகத்திலேயோ இதுபற்றி கேள்வி கேட்கப்பட்டு பல புள்ளிவிவரங்களைத் தந்தார்கள். அப்படிப்பட்ட நிலைமை தவிர்க்கப்பட வேண்டும். அகில இந்திய அடிப்படையில் நியமனம் கிடைக்க வேண்டும். திறமைக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும் என்பதனை வற்புறுத்துவதற்கு நாம் முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, frequent changes in syllabuses are neither desirable nor useful as it leads to confusion. Text-books on the basis of the syllabuses have to be written and then teachers have to understand them and this needs a lot of time. Once syllabuses are introduced they should be continued for a good number of years. If the Hon. Minister or the University feels that there is a necessity for a change in syllabus, they should take steps to see that proper members are appointed to prepare a good syllabus.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஆகையால் தான் இந்தக் குழுவில் வல்லுநர்களை இருக்கிறார்கள். காலம் செல்லச் செல்ல மாற்றம் தேவை என்பதும் நாமறிவு உண்மையாக இருப்பதால் இந்த வல்லுநர்கள் காலத்திற்கு ஏற்ற அடிப்படை மாற்றங்களைச் செய்வார்கள் என்று நம்புகிறோம். மேல்நாடுகளில் பார்த்தால் ஆண்டுக்கு ஆண்டு இந்த மாற்றங்களை எடுத்துச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். ரஷ்யாவின் பல்கலைக் கழகத்திற்கு நான் சென்றிருந்தேன். அங்கே போர்டிலே, விஞ்ஞானிகளின் பெயர்கள் முன்னால் போடப்பட்டிருந்தது. அதில் 17 பேர்கள் நோபல் பரிசு பெற்றவர்கள். ஆனால் அந்த போர்டிலேயே "Do not follow these fellows: They are behind five years" என்பதாக அவர்கள் ஐந்தாண்டு பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். ஆகவே அவர்களைப் பின்பற்ற வேண்டாம் என்று மாணவர்கள் எழுதியிருந்ததைப் பார்த்தேன். மாற்றமே கூடாது, இருப்பது அப்படியே இருக்கட்டும் என்பது சரியல்ல. காலத்திற்கு ஏற்ற பாடத்திட்டங்கள் பாட முறைகள் வகுக்கப்பட வேண்டும். அதற்காகவே வல்லுநர் குழுவை அமைத்திருக்கிறோம். இவர்கள் கருத்தை அறிந்த பிறகு மற்றவர்கள் கருத்தையும் அறிந்து மாற்றங்கள் செய்யலாம். ஆண்டுக்கு ஆண்டு மாற்றம் செய்து குழப்பங்களை உண்டாக்கக்கூடாது என்பதையும் நான் உணர்கிறேன். அதற்காகத்தான் இந்த வல்லுநர் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. எம். இராஜா : பாட திட்டங்களை மாற்றி அமைக்க குழு அமைக்கப் பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி மாற்றி அமைக்கிறபோது மூட நம்பிக்கையை வளர்க்கின்ற பாடங்கள் இல்லாமல் இருக்க வேண்டுமென்று அரசு ஆலோசனை கூறியிருக்கிறதா? மனித முயற்சிக்கு அதில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்பது வற்புறுத்தப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நாம் அப்படிப்பட்ட ஆலோசனை கூறவில்லை. அந்தக் குழுவில் உள்ள வல்லுநர்கள் காலத்திற்கேற்ப இவற்றை எல்லாம் கூர்ந்து கவனித்து எத்தகைய மாற்றங்கள் தேவையோ அதை வகுத்துக் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

திரு. க. சுப்பு : விஞ்ஞான சோஷலிச அரசுக் கொள்கைக்கேற்ப கல்கத்தா பல்கலைக் கழகத்தில் மார்க்சிய விஞ்ஞான கருத்துக்கள் பாட திட்டத்தில் சேர்க்கப்பட்டிருப்பதுபோல இங்கேயும் சேர்ப்பதற்கு வழி வகுத்திருக்கிறார்களா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. இரா நெடுஞ்செழியன் : கல்கத்தா பல்கலைக் கழகத்தைப் பற்றி எனக்குத் தெரியாது. கனம் உறுப்பினர் கருத்து முழுவதும் சரிதானா என்பதும் ஆராயப்பட வேண்டிய ஒன்று. அதற்காகத்தான் இதுபற்றிய முடிவையே வல்லுநர் குழுவினிடத்தில் விடப்பட்டிருக்கிறது.

திரு. என். கே. பழனிச்சாமி : கனம் சபாநாயகர் அவர்களே, ஐரோப்பாவில் 18-ஆம் நூற்றாண்டில் தொழிற்புரட்சி நடந்தது, 19-ஆம் நூற்றாண்டில் மின் புரட்சி ஏற்பட்டது. நாம் அப்போது அடிமை நாடாக இருந்ததனால் பாதிக்கப்படவில்லை. இப்போது மேலைநாடுகளில் அணுப்புரட்சி நடந்து கொண்டிருக்கிறது. அந்த இயக்கத்திற்கு ஏற்றவகையில் அணுவின் இயக்கத்தை அனுசரித்து நம்முடைய பாட திட்டங்களை மாற்றி அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்படிப்பட்ட காலத்திற்கேற்ற பாட திட்டங்கள் மாற்றி அமைக்கப்பட இந்த குழுவினர் ஆலோசனை செய்வார்கள். உலகத்தில் ஏற்படுகிற மாற்றங்களுக்கேற்ப—நம் நாட்டில் ஏற்பட வேண்டிய மாற்றங்களை வகுத்துத் தருவார்கள். மாணவன் என்ன படிக்கிறான் என்பதைவிட படித்த படிப்பு அவனுக்கு எவ்வாறு பயன்படுகிறது, அவன் குடும்பத்திற்கு எவ்வாறு பயன்படுகிறது, நாட்டிற்கு எவ்வாறு பயன்படுகிறது என்ற அடிப்படையில் தான் இந்த மாற்றங்கள் ஏற்படவேண்டுமென்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வல்லுநர் குழுவின் அறிக்கை வந்த பிறகு இந்தக் கருத்துக்களை ஆலோசிக்கலாம்.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, சில தனியார் பள்ளிகளில் மத சம்பந்தமான சின்னங்களும், கடவுள் உருவங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. அவை இளம் உள்ளங்களில் ஒரு வேற்றுமை உணர்ச்சியை ஏற்படுத்துமே, இதைத் தடுக்க அரசு ஏதாவது நடவடிக்கைகள் எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பல்வேறு மதங்கள், பல்வேறு நிலைமைகள், பல்வேறு உணர்வுகள் இருக்கின்ற வரையில் அத்தகையமான எந்த

முடிவும் எடுப்பதற்கில்லை. அப்படிப்பட்டதொரு உணர்வு பாதிக்கப்படுகிற அளவில் இருந்தால் அதைத் தடுத்து நிறுத்த முயலலாம். ஆனால் கேடு பயக்காத நிலையில் அவர்கள் நம்பிக்கைக்கு முழு உரிமையும் தரப்படுகிறது என்ற அடிப்படையில் அரசியல் சட்டம் வகுக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் அப்படிப்பட்ட எண்ணங்களை நாம் தடுப்பதற்கில்லை. ஆனால் பாதகம் ஏற்படுமானால் பாதகத்தைச் சுட்டிக்காட்டி தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகளை எடுக்கலாம். அப்படி பாதகமான நிலை இருந்து சுட்டிக்காட்டப்பட்டால் அதற்கான நடவடிக்கைகள் எடுக்க அரசு முயலலாம்.

திரு. எம். சுரேந்திரன் : நிபுணர்களின் கருத்துக்கள் ஒழுங்குபடுத்தப்பட்டு அது முடிவாவதற்கு முன்னால் இந்தச் சட்டசபையில் வைத்து சபையின் கருத்தையும் அறிந்து கொண்டு பின்னால் முடிவு செய்யும்படியான ஒரு ஏற்பாட்டினை அமைச்சர் அவர்கள் செய்வார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்த அறிக்கையை வைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் ஏற்படுமா ஏற்படாதா என்பது குறித்து சட்டத்தைப் பார்க்க வேண்டும். ஆனால் ஆட்சேபணை கருத்துக்கள் வழங்க சட்டமன்றத்தில் உள்ளவர்களுக்கு உரிமை இருக்கிறது. அந்த அறிக்கை வெளிவந்ததற்குப் பிறகு மாற்றங்கள், திருத்தங்கள், அல்லது மற்றவைகளை எடுத்துச் சொல்ல எல்லோருக்கும் உரிமை இருப்பதுபோல் இந்த அவை உறுப்பினர்களுக்கும் உரிமை இருக்கிறது.

திரு. சௌரி எஸ். சுந்தரபாரதி : ஐயா, நான் கேட்ட கேள்வி, ஏற்கனவே இங்கு அமைக்கப்பட்ட, பாடமொழி சம்பந்தமாக அமைக்கப்பட்ட குழு இருக்கிறதே அது தன் அறிக்கையைக் கொடுத்து விட்டதா? அந்தக் குழு பாடதிட்டங்கள் சம்பந்தமாக ஏதாவது கருத்து தெரிவித்திருக்கிறதா? அப்படியானால் அந்தக் கருத்துக்கள் என்ன? அதை இந்த அவை முன்னால் வைக்க முடியுமா என்றுதான் கேட்டேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்தக் குழுவிற்குக் கொடுத்திருக்கிற 'டேர்ம்ஸ் ஆஃப் ரெஃபரன்ஸ்' ஒரு குறிப்பிட்ட அளவுதான். கல்லூரிகளில் பயிற்றுமொழி பற்றி ஏற்பட்ட சிக்கல்களைப் பற்றி, இதை எப்படித் தீர்த்து வைப்பது என்பதைப் பற்றி மட்டும்தான் அவர்களிடம் கேட்கப்பட்டிருக்கிறது. பாடதிட்டங்கள், மற்றவைகளைப் பற்றி அல்ல. இப்போதுள்ள பிரச்சினை பள்ளிக்கூடங்களில் இருக்கிற பாட முறைகளைப் பற்றி. அதற்கான குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதற்கான விடை அளித்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்படவில்லை என்பதைக் குறிக்கும்.]

(2) அவையுரிமைக் கேள்வி.

உண்மைக்குப் புறம்பான, தவறான தகவலை பேரவைக்கு அளித்ததாக திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்கள் மீது எழுப்பப்பட்டுள்ள பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, அவை உரிமைப் பிரச்சினை. மாண்புமிகு திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் விளக்கம் அளிப்பார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, நான் பேசியதாகக் கொடுத்திருக்கிற ஏட்டுக்குறிப்பில் "அதேமாதிரி ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் ஒரு கிராமமே சுட்டு சாம்பலாக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பலரும் குறிப் பிட்டிருக்கிறார்கள் . . . ." என்றிருக்கிறது. நான் எனது நோட்டை எல்லாம் பார்த்தபோது, ஸ்ரீவைகுண்டம் தொகுதி அல்ல, மேலப்பாளையம் தொகுதியில் உள்ள அரசகுளம் கிராமம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டு மல்லாமல் வேண்டுமென்றே ஏதோ பழியைப் போடுவதற்கு எந்தவிதமான 'மாலஃபைடி இன்டென்ஷனும்' கிடையாது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, சென்ற பொதுத் தேர்தலில் ஒன்பது அமைச்சர்களையும் தோற்கடிக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு நிஜலிங்கப்பா காங்கிரஸ் செய்த முயற்சியில், இந்த அமைச்சர்கள் தொகுதிகளில் செய்த பொய்ப் பிரசாரங்கள் ஏராளம், ஏராளம். அவைகளில் ஒன்று இந்த அமைச்சர்கள் நின்ற தொகுதிகளில் அராஜகம் தாண்டவமாடு கிறது என்பது ஒன்று. அதைப் பல முறை சொல்லி, மேற்கு வங்காளத்தைப் பார்க்க வேண்டாம், ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் போய்ப் பாருங்கள், திருப் பத்தூர் தொகுதிக்குச் சென்று பாருங்கள், கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர் களின் தொகுதிக்குச் சென்று பாருங்கள், சட்டத்துறை அமைச்சர் அவர்களின் தொகுதிக்குச் சென்று பாருங்கள், என்றெல்லாம் பிரசாரம் செய்து வந்தார்கள். அந்தப் பிரசாரத்தின் தொடர்பாகவே இது சொல்லப்பட்டது. அப்படிப்பட்ட பிரசாரம் இதுவரை நடந்தது போதும். சட்டசபையிலும் வந்து, ஸ்ரீவை குண்டம் தொகுதியில் இப்படி நடந்தது, அப்படி நடந்தது என்று சொல்லும் போது, அந்தப் பிரசாரம் தொடர்ந்து நடைபெறுகிறது என்றுதான் ஆகும். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் உள்ளபடியே நல்லெண்ணத்தோடு அப்படி இல்லை என்று சொல்லிவிட்டால் போதும். அதைவிட்டு விட்டு இன்னொரு தொகுதியில் வேறு ஏதோ நடந்தது என்று சொல்லும்போது அது தவறான தாகும். என் தொகுதியைப் பொறுத்தவரையில் ஏதோ ஒரு கிராமமே சுட்டு சாம்பலாக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னதை திருத்திக் கொண்டார்கள். எனக்கு அது போதும். அதற்கு வருத்தம் தெரிவிக்கவேண்டுமென்று கூட நான் சொல்லவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : மேலப்பாளையம் தொகுதி அரசகுளம் கிராமம் என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பொன்னப்ப நாடார் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த உரிமைப் பிரச்சினை பற்றி இந்த மன்றத்தில் நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். " . . . . ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் ஒரு கிராமமே சுட்டு சாம்பலாக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பலரும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த நிகழ்ச்சியையும் தங்கள் கவனத் திற்குக் கொண்டுவருகிறேன்". என்ற திரு. பொன்னப்ப நாடார் அவர்களின் உரையின் அடிப்படையில்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமலிங்கம் அவர் கள் இந்த உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த உரிமைப் பிரச்சினை எப்போது சாதாரணமாக எழுகிறது என்றால் மாண்புமிகு உறுப்பினர் கள் உண்மையல்லாத ஒன்றை—'அன்ட்ரூ'—உண்மையல்லாத கூற்று என்பது 'மிஸ்லீடிங்'— ... தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்துகின்ற வகையில்

என்பது மட்டுமல்லாமல், வேண்டுமென்றே வெளிப்படையாக, சொல்லும் போது தான் இந்த அவையின் உரிமை பாதிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்ற வார்த்தைகள், சொல்கிற சொற்கள் மிகப் பொறுப்பு வாய்ந்த சொற்களாகும். அவர்கள் உண்மையை, ஆதாரத்தை வைத்துக் கொண்டுதான் பேசுகிறார்கள் என்பதுதான் பொருள். அந்த வகையில் உண்மையாக இல்லாமல், ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் நடந்தது என்று சொல்வது உண்மையாக இல்லாமலிருந்தால் அது உண்மையில் இந்த சபையை அவமதிப்பதாகும், அதாவது 'கன்டெம்ப்ட்' என்பதன் அடிப்படையில் வரும். அதிலும் அந்தத் தொகுதியின் மாண்புமிகு உறுப்பினர் இங்கு ஒரு அமைச்சராக இருக்கிறார்கள். அப்படிச் சொல்லியிருந்தால் ஒரு தப்பபிப்பிராயம் ஏற்பட்டிருக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கும். அப்படிப்பட்ட தொகுதியில் இல்லாமல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் ஒரு கிராமமே சுட்டு சாம்பலாக்கப்பட்டிருக்கிறது என்பது சரியாகப் பார்த்துச் சொல்லப்படவில்லை என்ற அளவில் சொல்லியிருக்கிறார்கள். உறுப்பினர்கள் அழுத்தமாக விவாதிக்க வேண்டியதுதான். ஆனால் ஆதாரங்களோடு விவாதிக்க வேண்டும். வேறு தொகுதி சமயத்தில் அவை இருக்க வேண்டும். ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் ஒரு கிராமமே சுட்டு சாம்பலாக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருத்திக்கொண்டிருக்கிறார்கள். அப்படி திருத்திக் கொள்ளாதிருந்தால் ஒரு தப்பபிப்பிராயம் ஏற்பட்டிருக்கக்கூடும். மிகவும் தவறாகப் போயிருக்கும். அப்படி அவர்கள் சொன்னதைத் திருத்திக்கொள்ளாதிருந்தால் அது இந்த அவையின் நிலையை அவமதிப்பதாக இருந்திருக்கும். ஆனால் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் ஒரு திருத்தம் கொடுத்து விட்டார்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் ஸ்ரீவைகுண்டம் தொகுதி என்று கூறவில்லை என்றும் அவர்கள் எழுதி வைத்திருக்கும் நோட்டில் மேலப்பாளையம் என்று எழுதி வைத்திருப்பதாகவும் ஆகவே மேலப்பாளையம் தொகுதி என்றுதான் குறிப்பிட்டேன் என்றும் ஸ்ரீவைகுண்டம் தொகுதி என்று குறிப்பிடவில்லை என்றும் கூறினார்கள். இங்கே அரசின் சார்பில் குறிப்பு எடுக்கிற சுருக்கெழுத்தாளர்கள் ஏதோ தவறாக எடுத்துவிட்டார்கள் என்று . . . (திரு. ஆர். பொன்னப்ப நாடார்: அப்படி நான் சொல்லவில்லை.) அவர் தவறாகச் சொல்லிவிட்டதாகச் சொல்கிறாரா அல்லது அவர் மேலப்பாளையம் தொகுதி என்றுதான் சொன்னார், அதை குறிப்பு எடுத்தவர்கள் சரியாக எடுக்கவில்லை என்று சொல்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: மேலப்பாளையம் என்பதுதான் என் நோட்டில் இருக்கிறது. பதிவேட்டில் பதிவாகியிருப்பது ஸ்ரீவைகுண்டம் தொகுதி என்று பதிவாகியிருக்கிறது. ஸ்ரீவைகுண்டம் தொகுதி என்று சொல்லியிருக்க மாட்டேன் என்றுதான் கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஸ்ரீவைகுண்டம் தொகுதி என்று சொல்லியிருக்கமாட்டேன் என்று மறுபடியும் அழுத்தந்திருத்தமாகச் சொல்கிறார்கள். இங்குள்ளவர்கள்தான் தவறு செய்தார்கள்; ஆனால் அவர்களின் நவசக்தி பத்திரிகையில், 30—3—71-ம் தேதி இதழில் ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் ஒரு கிராமமே பொசுக்கப்பட்டது என்று அவர்கள் பேசியதாகத்தான் செய்தி

வந்திருக்கிறது. இங்கிருக்கிற அரசு சுருக்கெழுத்தாளர்கள்தான் தவறு செய்தார்கள் என்றால் நவசக்தி பத்திரிகையாளரும் எப்படித் தவறு செய்தார்கள் என்று தெரியவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த உரை எனக்கு திருத்திக் கொடுப்பதற்காக 30-ம் தேதி அன்றுதான் கிடைத்தது. நான் அதை இன்று திருத்துவதற்கு முன்பாக இந்த உரிமைப் பிரச்சினை வந்திருக்கிறது. இது என் கைக்கு வந்தபோது நான் தகவல்களை எல்லாம் புரட்டிப்பார்த்தபோது இங்கே மேலப்பாளையத்தில் உள்ள அரசகுளம் கிராமம் என்றுதான் எழுதி வைத்திருக்கிறேன். அதற்கு மாறாக இங்கு ஸ்ரீவைகுண்டம் என்று இருக்கிறது என்றுதான் நான் கூறினேன். ஸ்ரீவைகுண்டம் என்பதற்குப் பதிலாக மேலப்பாளையத்திலுள்ள அரசகுளம் என்று வாசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படி வாசிக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள். ஆனால் தாங்கள் மறுபடியும், குறிப்பிலே அப்படி எழுதி வைத்திருக்கிறேன். ஆனால் அரசு எழுத்தாளர்கள் இப்படி எழுதியிருக்கிறார்கள் என்று சொல்கிறீர்கள். ஸ்ரீவைகுண்டம் என்று சொன்னீர்களா, அல்லது மேலப்பாளையம் என்று சொன்னீர்களா? அப்படியானால் மறுநாள் ஸ்ரீவைகுண்டத்தில் என்று நவசக்தி பத்திரிகையில் வந்திருக்கிறதே.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: நவசக்தியை, இந்த உரிமைப் பிரச்சினை பற்றி வந்ததற்குப் பிறகுதான் நான் பார்த்தேன். அதைப் பார்ப்பதற்குப் போதிய அவகாசம் இல்லை. ஆதலால்தான் நேற்று என்னைக் கேட்டதற்குப் பிறகு என்ன பேசியிருக்கிறேன் என்று பார்த்துத்தான் சமாதானம் கூற முடியும் என்று கூறினேன். ஆகவே, இதிலே எந்தவிதமான தப்பித்துக் கொள்ளுகின்ற முறையிலேயும் நான் ஒன்றும் சொல்லவில்லை. அந்தக் கிராமத்தினுடைய பெயர் அரசகுளம், ஸ்ரீவைகுண்டம் அல்ல.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படியானால் அரசாங்க நிருபரும், நவசக்தி நிருபரும் சேர்ந்து தவறு செய்துவிட்டார்கள் என்பது தங்கள் வாதமா?

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: யாரும் தவறு செய்ததாக நான் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் விளக்கத்திற்குப் பிறகு, "ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் ஒரு கிராமமே சுட்டு சாம்பலாக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பலரும் குறிப்பிட்டிருக்கிறார்கள், அந்த நிகழ்ச்சியையும் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்" என்பதைத் திருத்திக் கொண்டிருக்கிறார்கள். அதைத் திருத்திக் கொண்டதன் அடிப்படையிலே இதோடு இந்த உரிமைப் பிரச்சினையை விட்டுவிடலாம் என்று கூறி, இதை இதோடு முடித்துக்கொள்கிறேன்.

(3) ஒற்றிவைப்புத் தீர்மானம்.

பாண்டியாறு-புன்னம்புழா நீரை கோவை மாவட்ட பாசனத்திற்கு திருப்பிவிடுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அடுத்த நிகழ்ச்சி. தமிழ் நாடு சட்டப் பேரவை விதி 42-ன் கீழ் கீழ்க்கண்ட அவசரபொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விஷயத்தைப்பற்றி விவாதிக்க சபையை ஒத்திவைக்கக் கோரு

கிறேன் என்று திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், அதேபோன்ற காரியத்திற்காக திரு. எ. சுப்பிரமணியம் அவர்களும் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். "பாண்டியாறு-புன்னம்புழா நீரை கோவை ஜில்லா பாசனத்துக்காக திருப்பி விடும் விஷயம் பற்றி" என்று திரு. பொன்னப்ப நாடார் அவர்களும்

'I do hereby give notice that I wish to move today for adjournment of the business of the Assembly for the purpose of discussing a definite matter of urgent public importance, viz., the warning, as reported in the Press, and given by the Chief Minister of Kerala in the Legislative Assembly of that State, to the effect that Kerala Government would be forced to take "other steps" if the Tamil Nadu Government proceeded with the construction of a dam in the Chaliyar basin to divert the waters of the Pandiyar and Punnampuzha Rivers to the Moyar basin for irrigational purposes.'

என்று திரு. சுப்பிரமணியம் அவர்களும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இரண்டும் ஏறக்குறைய ஒரே அம்சத்தைப் பற்றிய தீர்மானமாக இருப்பதால் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சுருக்கமாக இது எப்படி ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான விதிகளின் கீழ்வரும் என்பதைப்பற்றிக் கூற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, 12-ஆம் விதியின் கீழ் அவசர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சினையை இந்த அவையின் நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று அனுமதி கோரி இந்த தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களை ஒன்று கேட்டுக் கொள்கிறேன். இது இரண்டு மாநிலங்களுக்கும் உள்ள உறவுகளைப் பற்றிய ஒரு விவகாரம். அதுவும் மிகுந்த நல்ல உறவு. பத்து, பதினைந்து வருஷங்களாக முடிவடைந்த தண்ணீர்ப் பிரச்சினை, பரம்பிக்குளம்-ஆழியாறு பிரச்சினைபற்றி இந்த மன்றங்களிலே நாம் பேசும்பொழுது நல்ல உறவு இருந்தும் அரசாங்கங்களின் நல்லுறவுகளைப் பாதிக்காத நிலைமைகளிலேயும் நம்முடைய உரிமைகளைப் பாதுகாக்கின்ற வகையிலேயும் இந்த விவாதங்கள் அமைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்த இரண்டு அரசாங்கங்களுக்கும் இருக்கின்ற நல்லுறவுகளைப் பாதிக்கும் அளவில் நான் இந்த அவையிலே எந்த விஷயத்தையும் கூறிப்பிட விரும்பவில்லை. இது இரண்டு மாநிலங்களிடையேயும் இருக்கும் ஒரு சிக்கலான பிரச்சினை. அதுவும் குறிப்பாகத் தமிழகத்திலேயிருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களின் பிரச்சினையாக அதை நான் கருதுவதால் அவர்கள் பெயரால், இந்த முக்கியமான விஷயத்தைப் பற்றி அரசாங்கம் என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்பதற்கு, இந்த இரண்டு மாநிலங்களிடையேயிருக்கின்ற உறவு முறைக்குப் பாதகம் இல்லாதமுறையிலே, நம்முடைய உரிமைகளுக்கு எந்தவிதமான குந்தகமும் ஏற்படாத வகையிலே இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைப்பது சிறப்பாக இருக்கும் என்று சொல்லுகிறேன். மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து

[illegible] பல ஆறுகள் [illegible] இருக்கும். [illegible] இப்பொழுது [illegible] நமது [illegible] ஆக்க [illegible] மேற் [illegible] முக்கியமான [illegible] தெளிவுபடுத்த வேண்டும் [illegible] கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எ. சுப்பிரமணியம் : அவைத் தலைவர் அவர்களே, இந்த பாண்டியாறு—புன்னம்புழா [illegible] கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பாண்டியாறு—புன்னம் [illegible] விவசாயத் [illegible] உண்மை. [illegible]

[illegible] 19-ஆம் தேதியில் [illegible] ஏற்படும் [illegible] திருப்பிவிட வகையில் பாண்டியாறு—புன்னம்புழாவிலிருந்து தண்ணீர் [illegible] காரணத் [illegible] கொண்டு [illegible] சொல்லவில்லை என்று அறிகிறேன். நேற்று, அவர் கேரள சட்டமன்றத்தில்

வெளியிட்ட கருத்தினை அறிந்ததும், உடனடியாக நான், அவருக்கு ஒரு கடிதம் எழுதியதோடு அதில் பிப்ரவரி 19-ல் தமிழக அரசு எழுதியுள்ள கடிதத்தையும் இணைத்து அனுப்பியிருக்கிறேன்.

இது சம்பந்தமாக முதலில் இரு மாநில அதிகாரிகளும் சந்தித்துப் பேசி, பிறகு அமைச்சர்கள் மட்டத்தில் பேச்சு நடத்தி பரஸ்பர ஒரு உடன்பாட்டுக்கு வரலாம் என்றும் அந்தக் கடிதத்தில் எழுதியிருக்கிறேன்.

மின்சார உற்பத்திக்குப் பதிலாக பாசனத்துக்கு முன்னுரிமை தந்து தண்ணீரை நாம் கோருவதாகக் குற்றம் சாட்டுவதாக கேரள முதல்வர் கூறுவது சரியானதல்ல.

மின்சார உற்பத்திக்குத் தேவையானது போக விவசாயத்திற்குத் தண்ணீர் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதுதான் தமிழக அரசின் எண்ணமாகும். அதனை ஒருதலைப்பட்சமாக நிறைவேற்றும் முயற்சி எதுவும் தமிழக அரசுக்குக் கிடையாது. கேரள அரசுக்கும், தமக்கும் சுமுகமான உறவே இருந்து வருகிறது. அந்த உறவின் அடிப்படையில் இரண்டு அரசுகளும் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதில் எந்தவிதமான சங்கடமும் இருக்காது என்று நான் நம்புகிறேன். பத்திரிகைகளிலே கேரள முதலமைச்சர் அவர்கள் கேரள சட்டமன்றத்தில் பேசியிருப்பதாக வந்திருக்கிறது. அந்தச் செய்தியின் அடிப்படையில்தான் இன்றைய தினம் அவர் பேசியதாகச் செய்தி வெளிவந்திருக்கிறது. அந்த அடிப்படையில்தான் மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்களும், மாண்புமிகு கருப்பையா அவர்களும் இங்கே ஒத்திவைப்புத் தீர்மானத்தை அளித்திருக்கிறார்கள். நானும் அந்த அடிப்படையில் இங்கே என் பதிலைத் தந்திருக்கிறேன். அவர் என்ன சொன்னார் என்பது அதிகாரபூர்வமாக நமக்குக் கிடைக்கிற நேரத்தில் அதைப்பற்றி முடிவாக நிர்ணயிக்க வேண்டும். என்ன இருந்தாலும் மாநில அரசுகளுக்கு இடையே சுமுகமான நிலையிலே இதைப் போன்ற விஷயங்களை பேசித் தீர்த்துக் கொள்ளவேண்டியிருக்கிறது. இப்படிப் பேசித் தீர்க்க வேண்டியதிலே நாம் ஆழ்ந்த அக்கறை உள்ளவர்கள் என்பதை இந்த மன்றத்திலே உள்ள அனைவரும் நன்கு அறிவார்கள்.

நமது மாநில உரிமைகளை விட்டுக் கொடுக்காமல், மற்ற மாநிலங்களோடு பிரச்னைகளைப் பேசித் தீர்ப்பதிலே எந்த விதமான தயக்கமும் இல்லை என்பதை நான் பொன்னப்ப நாடார் அவர்களுக்கு இந்த மன்றத்திலே மீண்டும் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஏதோ நம்முடைய அரசு கழக அரசு என்ற காரணத்திற்காக மற்ற மாநில அமைச்சர்கள் நம்மைப் பற்றிச் சொல்லும் செய்திகளையெல்லாம் தலைப்புக் கொடுத்து வெளியிடுகிற நோக்கிலே தாங்கள் நாட்டிலே திறமைக் குறைவாக நடந்து கொள்வதாகச் செய்திகளை வெளியிடுகின்றனர். அதிலும் குறிப்பாக பொன்னப்ப நாடார் அவர்கள் சார்ந்து இருக்கிற கட்சிப் பத்திரிகை ஏதோ தலைப்புக் கொடுத்து நம்முடைய மாநிலத்தைப் பற்றிக் குறைவாக மதிப்பிட வேண்டுமென்று போட்டுக் கொள்கிறது. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நவசக்திப் பத்திரிகையில் கருணாநிதிக்கு கேரள முதலமைச்சர் எச்சரிக்கை என்று வருகிறது. இப்படிக் கேரள மாநிலத்தில் உள்ள அவர்கள் பத்திரிகைகளில் கூட எச்சரிக்கை விடுவதாக, அந்த மாநிலத்தில் அவர்களுக்கு எதிரான பத்திரிகைகளில்கூட இப்படிச் செய்திகளை வெளியிடமாட்டார்கள். ஆனால் நம்முடைய நாட்டில் தாங்கள் தமிழக அரசில் இருந்தும் ஒரே ஒரு பாவத்தால் எந்த மாநிலத்தில் எந்த அமைச்சர் எந்தச் செய்தியைச்

சொன்னாலும் அது எங்களுக்காக விடப்படுகிற எச்சரிக்கையாக்கப்படுகிறது. இன்னும் சொல்லப் போனால் இங்கே உள்ள இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்தான் அங்கே முதலமைச்சராக இருக்கிறார்கள். இங்கே உள்ள கம்யூனிஸ்ட் பத்திரிகைகளிலே இதைப் போன்ற செய்திகள் வருமா என்றால் வராது. அவர்கள் இந்த மாநிலத்தின் உரிமைகள் என்று வரும்போது இந்த மாநிலத்தின் உரிமைகளுக்காக நிற்பார்கள். அந்த அந்த மாநிலத்தின் உரிமைகளுக்காக ஆங்காங்கு இருக்கிற கம்யூனிஸ்ட் கட்சி வாதாடும். அதே போல் தான் நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் இது ஏதோ கழக அரசிற்கு வருகிற ஆபத்து, அதற்கு மாத்திரம் தருகிற பதில் என்று எண்ணாமல் தமிழ்நாட்டு மக்களின் உரிமை பாதிக்கப்படுகிற நேரத்திலே நாம் அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டுமென்ற அந்த எண்ணத்தின் அடிப்படையில் இயங்க வேண்டுமென்று இதனை எடுத்துக் கூற கடமைப்பட்டு இருக்கிறேன். கேரள அரசுக்கும், நமக்கும் இருக்கிற சுமுகமான சூழ்நிலையை கேரள முதலமைச்சரோடு பேசித் தீர்த்துக் கொள்ள நாம் தயாராக இருக்கிறோம் என்பதை எடுத்து விளக்க இந்த ஒற்றிவைப்புத் தீர்மானம் பயன்பட்டது என்ற அளவிலே இதை விவாதிக்கத் தேவையில்லை, விட்டு விடலாம் என்று தங்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு எந்த விவாதமும் இதன் மீது தேவையில்லை என்ற வகையிலே இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

(4) அறிவிப்புகள்.

(அ) சட்டமன்ற மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்கு (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதாவும், (சட்டப்பேரவை மசோதா எண் 4/1971) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதாவும் (சட்டப்பேரவை மசோதா எண் 5/1971), சட்ட மன்ற மேலவையில் 1971-ம் ஆண்டு மார்ச் திங்கள் 30-ம் நாளன்று ஆய்வுக்கு எடுக்கப்பட்டு பரிந்துரை எதும் செய்யப்படவில்லை என்று சட்ட மன்ற மேலவைத் தலைவரிடமிருந்து தகவல் வந்திருக்கிறது.

5. அரசினர் மசோதா.

1971-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, அலுவல் அரசினர் மசோதா, 1971-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1971-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) மசோதாவைப் பேரவைக்கு அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பேரவைக்கு அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இம் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

6. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்தது ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீதான விவாதம். இந்த விவாதத்தில் இன்று கடைசி நாளாக இருக்கிறது. ஒரு நாளைக்கு 20-க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் பங்கு எடுத்துக் கொண்டார்கள். இந்த மன்றத்திலே இருக்கும் காலம் ரொம்பக் குறுகிய காலம். எல்லா உறுப்பினர்களும் விவாதத்தில் பங்கு கொள்ள முடியாத நிலைமை இருக்கிறது. இந்த நிலைமை எனக்கும் உங்களுக்கும் நன்றாகத் தெரியும். இன்றைக்கு 1½ மணி அளவில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்த விவாதத்திற்கு அவையில் பதிலளிப்பார்கள். கட்சித் தலைவர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும். இப்படிப்பட்ட நிலைமையில் [illegible] இருக்கிற குறுகிய காலத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த விவாதத்தில் பங்கு கொள்ளாமல் இருந்தாலும், தலைவர்கள் அந்தக் கருத்துக்களைத் தெரிவிப்பார்கள் என்ற எண்ணத்தில் [illegible] மாதத்தில், ஜூலை மாதத்தில் நடைபெற இருக்கின்ற விவாதங்களில் மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் கலந்து கொள்ள வாய்ப்பு இருக்கும் என்ற வகையிலும், இந்தப் பொதுத் தேர்தலில் இன்றைக்குப் புதியதான உறுப்பினர்கள் பங்கு கொள்ள முடியாத நிலைமை இருக்கிறது. நேற்றையத் தொடர்ச்சியாக 2, 3 உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் இவர்கள் மட்டும் இன்று பங்கு கொள்வார்கள் என்று கூறி திரு. எ. கே. சுப்பையா அவர்கள் இன்று விவாதத்தைத் தொடங்கி வைப்பார் என்று கூறி, பொதுவாக உறுப்பினர்கள் 10 நிமிடங்களுக்குள் முடித்துக் கொள்ள வேண்டும், எழு, பத்து நிமிடங்களில் முடித்துக் கொள்வார்களானால் அவர்களின் செயல் இந்த மன்றத்திலே நல்ல ஒத்துழைப்பாக அமையும் என்று பாராட்டப்படுவார்கள் என்று நான் கூறிக் கொள்கிறேன்.

* **திரு. ஆ. கு. சுப்பையா:** பெருமதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, கவர்னர் பெருமான் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன் வருகிறேன்.

கவர்னர் பெருமான் அவர்கள் மிகுதியிலே நடந்து முடிந்த தேர்தலைப்பற்றிக் குறிப்பிடுகின்றபோது வரலாற்றுப் புகழ் வாய்ந்த ஒரு தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழகத்தில் மட்டும் அல்லாமல் இந்தியாவிலும் ஒரு வரலாற்றுப் புகழ் வாய்ந்த ஒரு தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. நாட்டிலே உள்ள மக்கள் இத்தகைய ஒரு தேர்தலை நடத்தி முடித்திருக்கிறார்கள். இந்தத் தேர்தல் இதுவரை இல்லாத அளவிற்கு இரண்டு பக்கங்கள் [illegible] போட்டி. இந்தத் தேர்தலிலே மாபெரும் வெற்றியைப் பெற்று இருக்கிறது. பிற்போக்குச் சக்திகள், மன்னர்களுக்காகவும், நிலப்பிரபுக்களுக்காகவும், ஏகபோக முதலாளிகளுக்காகவும், ஒரே அணியாகச் சேர்ந்து கொண்டு முற்போக்குச் சக்திகளை எதிர்த்தார்கள். முற்போக்குச் சக்திகள் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு இந்த

தேர்தலிலே மக்களிடத்திலே வாக்குக் கேட்டார்கள். நம்முடைய நாட்டில் 20 வருஷங்களாக சாதாரண மக்களுக்குச் செய்ய முடியாத சில தடைகளாக இருக்கிற அரசியல் சாசனத்தைத் திருத்த வேண்டும் என்றும், தாழ்ந்த நிலையில் இருக்கிற மக்களின் வாழ்க்கையை வளம்படுத்த பல நல்ல காரியங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்றும், ஏகபோக முதலாளிகளுடைய கொள்ளை லாபத்திற்கு வரம்பு கட்ட வேண்டுமென்றும், இம்மாதிரியான கொள்கைகளைச் சொல்லித்தான் இந்த நாட்டிலே இருக்கிற மக்களிடம் முற்போக்குச் சக்திகள் கூட்டணியாகச் சேர்ந்து ஓட்டுக் கேட்டார்கள். இந்தக் கொள்கைகளைப் பூரணமாக ஏற்றுக் கொண்ட மக்கள் பெரும்பான்மையாக இந்தச் சபைக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட இந்தச் சபையில் திராவிட முன்னேற்றக் கழகம் அரசுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

அவ்வாறு ஏற்று இருக்கிற இந்தச் சந்தர்ப்பத்திலே, கவர்னர் பெருமான் அவர்கள் சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கிற ஏழை எளியவர்கள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளிகள், பாடுபடுகிற உழைக்கும் மக்களுடைய வாழ்வில் வளம் காண்பதற்கு, அவர்களுடைய துன்ப துயரங்களுக்கு விடிவு காணுகின்ற ஒரு நிலையை இந்த அரசு ஏற்கின்றது என்ற உறுதியைக் கூறி இருக்கிறார்கள். உண்மையிலேயே நம்முடைய நாட்டில் இருக்கிற எண்ணற்ற ஏழை எளிய மக்கள், இந்தத் திராவிட முன்னேற்றக் கழக அரசை எதிர் பார்ப்பது இயல்புதான். இதுவரையிலே தங்களுடைய வாழ்வில் விடிவு காணாமல் இருக்கிற நிலைமையில் ஒரு நல்ல விடிவு காலம் ஏற்படும் என்று, இந்த அரசை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

மகத்தான முன்னேற்றங்களைக் காண்பதற்கு இந்த அரசு வேகமாகப் பல்வேறு காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. அதற்குத் தடையாக இருக்கிற சட்டங்களைத் திருத்தம் செய்து, நல்ல சட்டங்களை உருவாக்க துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட காலகட்டத்தில் இந்த அரசு பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கிறது. இந்த முயற்சியின் தொடர்பாக இப்போது நம்முடைய நாட்டில் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கப்பட்டு வருகிறது. கூட்டுறவு நாணயச் சங்கங்கள் மூலம் கடன் கொடுக்கப்படுகிறது. தங்க லேவா தேவிக்காரர்களிடமிருந்தும் அவர்கள் கடன் வாங்குகிறார்கள். அவர்களுடைய சொத்து சுகங்களை அடகு வைத்து கடன் வாங்குகிறார்கள். அவர்களுக்கு இந்த நாட்டில் வாங்கப்பட்ட கடன்கள் 200 கோடிக்கு மேல் இருக்கும். இப்படிக் கடன் வாங்கித் தான் அவர்கள் தங்களுடைய குடும்ப வாழ்வை நடத்த வேண்டியிருக்கிறது. இவ்வாறு தாழ்ந்த நிலையில் உள்ள விவசாய மக்களுக்கு நாம் சிறப்பாக வசதிகளைச் செய்ய வேண்டியிருக்கிறது.

ஆகவே, விவசாயிகளை கடனிலிருந்து மீட்க வேண்டுமென்று சொன்னால், விவசாயிகளுக்குப் போதுமான வருவாய் கிடைக்கக்கூடிய அளவுக்கு, அவர்களுடைய வருவாய் பெருகக் கூடிய அளவுக்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டிய ஒரு நிலைமை இருந்து கொண்டு இருக்கிறது. 1967-ம் ஆண்டு 31 கோடி ரூபாய் கடன் பெற்ற விவசாயிகள், 1970-ம் ஆண்டில் 55 கோடி கடன் பெறக்கூடிய அளவுக்கு, கூட்டுறவு நாணயச் சங்கத்தின் மூலமாகவும், மற்றவற்றின் மூலமாகவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இப்படி அவர்கள் வாங்கிய கடனைத் திருப்பித்தர முடியாமல் இருக்கிறார்கள். இதற்குக் காரணம் வருவாய்

போதவில்லை. விவசாயத்தில் நல்ல விளைச்சல் இருந்தபோதிலும், விவசாயக் குத்தகைக்காரர்களுக்கு வருவாய் அதிகம் வருவதில்லை. அப்படிப் போதுமான வருவாய் இல்லாத காரணத்தால் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை.

இயற்கை வேறு அவர்களுக்குப் பாதகமாக இருக்கிறது. மழை சரிவர பெய்வதில்லை. சில இடங்களில் மழை அதிகமாக பெய்வதால் பயிர்கள் சேதமடைகின்றன. சில இடங்களில் மழை பெய்யாத காரணத்தால் பயிர் செய்ய முடியவில்லை. ஆகவே, விவசாயிகள் தற்போது பெற்று இருக்கும் கடனைப் பரிசீலித்து, கடன் நிவாரணச் சட்டம் கொண்டுவர வேண்டுமென்று கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன். இந்த ஆண்டுகூட விவசாயிகள் வாங்கிய கடனைத் திருப்பித்தர முடியாமல் இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து கடன் வசூலை ஒத்தி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் இருக்கும் விவசாயக் குத்தகைக்காரர்களும் வாங்கிய கடனைத் திருப்பித்தர முடியாமல் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப் பட்ட கடனை தவணை முறையில் திருப்பிப் பெற்றுக் கொள்ளவேண்டும் அல்லது ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்தை அபிவிருத்தி செய்ய தமிழக அரசு பெருமுயற்சி எடுத்து வருகிறது என்று கவர்னர் உரையில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். கோயம் புத்தூர் மாவட்டத்தில் விவசாயப் பல்கலைக் கழகம் ஆரம்பித்து இருப்பதை வரவேற்கிறேன். அதேபோல் இன்றையதினம் தஞ்சை மாவட்டத்தில், 14 லட்சம் ஏக்கரில் விவசாயம் விளையக்கூடிய அந்த மாதிரியான மாவட்டத்தில், ஒரு விவசாயக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டியது மிக மிக அவசியமாக இருக் கிறது. ஆகவே, தமிழக அரசு தஞ்சை மாவட்டத்தில் ஒரு விவசாயக் கல்லூரியை ஆரம்பிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். மன்னார்குடியில் கலைக் கல்லூரி ஆரம்பிக்க ஏற்பாடு செய்து கொண்டு வருகிறோம். அரசாங்கத்தின் அனுமதியை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறோம். அந்தக் கல்லூரி ஆரம்பிக்க அரசு அனுமதி வழங்க வேண்டு மென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கவர்னர் பெருமான் அவர்கள் உரையில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆசிரி யர்களுக்கும், பொறியாளர்களுக்கும் வேலைப் பயிற்சி திட்டத்தை அரசாங்கம் மேற்கொண்டு இருப்பதாகக் கூறுகிறார்கள். முன்னாலேயே பயிற்சி பெற்றவர் களுக்கு, வேலைப் பயிற்சித் திட்டம் என்பது தேவைதானா. அவர்கள் எல்லாம் முழுநேர வேலைசெய்வதற்குப் பயிற்சி பெற்றவர்கள்தான். ஆகவே, அவர் களுக்கு முழு ஊதியம் கிடைக்கும் வகையில் நல்லதொரு வேலைத் திட்டத்தை, நிரந்தர வேலைத் திட்டத்தை உருவாக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்கிறேன்.

விவசாய நிலச் சீர்திருத்தச் சட்டங்களை திருத்தியாக வேண்டும். இன்றைக்கு பல சட்டங்கள் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால் விவசாயிகளுக்கு அதனால் அதிக பலன் இல்லை. 60—40 சட்டம், கூலி உயர்வுச் சட்டங்கள் என்று பல சட்டங்கள் விவசாயிகளை ஏமாற்றுவதற்காகத்தான் அந்தச் சட்டங்கள் இருக்கின்றன. அன்றையதினம் காங்கிரஸ் ஆட்சி இருந்த நேரத்தில் கொண்டு வரப்பட்ட சட்டங்களில் பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன, அதனால் விவசா

யிகள் பெரிய அளவுக்கு பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இந்தச் சிக்கல்களை ஆராய்ந்து பார்ப்பதற்காக அரசாங்கம், நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) சட்ட திருத்தக் கமிட்டி என்ற ஒன்றை நியமனம் செய்தார்கள். அந்தக் கமிட்டி இப்போது கலைக்கப்பட்டு இருக்கிறது. மீண்டும் அந்தக் கமிட்டியை புதுப்பித்து எல்லாச் சட்டங்களையும் திருத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும்.

இப்போது இருக்கும் சட்டங்களில் விதிவிலக்குகள் ஏராளமாக அளிக்கப் பட்டு இருக்கின்றன. அந்த விதிவிலக்கின் காரணமாகத்தான் விவசாயிகளைப் பாதிக்கும்படியான நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொள்கிறார்கள். ஆகவே, அந்த விதிவிலக்குகளை ரத்து செய்தாக வேண்டும். வாரம் 60—40 என்பது மிகவும் குறைவானது. குத்தகைக்காரர்கள் அதிகச் செலவு செய்து விவசாயம் செய்ய வேண்டியிருக்கிறது. விவசாயத்திற்குத் தேவையான மூலப்பொருள்கள் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டி இருப்பதால் அதிக நஷ்டத்தை அடை கிறார்கள். ஆகவே, வாரத்தை உயர்த்தி 75 சதவீதம் குத்தகைக்காரர் களுக்கும் 25 சதவீதம் நிலச் சொந்தக்காரர்களுக்கும் என்று வார நிர்ணயச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பதினைந்து ஏக்கர் நில உச்சவரம்பு என்ற கொள்கையை நமது இந்தியப் பேரரசின் ஜனாதிபதி கூட அவர்களுடைய பிரசங்கத்தில் சொல்லி இருக்கிறார்கள். ஒரு குடும்பத்திற்கு 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று நில உச்ச வரம்புச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்ற யோசனையை எல்லா மாநில அரசாங் கங்களுக்கும் சிபார்சு செய்து இருப்பதாக ஜனாதிபதி அவர்கள் கூறியிருக்கி றார்கள். அந்த முறையில் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு அந்த 15 ஏக்கர் என்று குறிப்பிட்டு இருப்பது மாத்திரம் போதாது, அது ஒரு குடும்பத் திற்கு 15 ஏக்கர் என்று சொல்லி, மீதமுள்ள நிலத்தை அரசாங்கம் கைப்பற்றி நிலம் இல்லாத விவசாயத் தொழிலாளர்களுக்கு வினியோகிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது கிராம மக்களுக்கு ஒரு நன்மையைச் செய்தது போல் இருக்கும். அந்த முறையில் அந்தச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசாங்கம் மின் இணைப்புத் தருவதில் அதிக வேகம் காட்டியிருக்கிறது என்பது உண்மைதான். அரசாங்கம் கொடுத்த கணக்கு ஒரு ரெவின்யூ கிராமத் திற்கு மின் இணைப்புக் கொடுத்து விட்டால் அந்த கிராமம் பூராவும் மின் இணைப்பு கொடுத்து விட்டதாகச் சொல்கிறார்கள். ஒரு ரெவின்யூ கிராமத்திற்கு பத்து குக்கிராமங்கள் இருக்கிறது. அந்த மாதிரி 10 குக்கிராமங்களுக்கும் மின் இணைப்புக் கொடுத்த பிறகு தான், அந்த கிராமத்திற்கு கொடுத்ததாகக் கணக் கெடுத்துக்கொள்ள வேண்டும். நான்கு ஆண்டுகளுக்குள் 15,000 கிராமங்களுக்கு மின் இணைப்பு கொடுத்து இருக்கிறோம் என்று சொல்லும் புள்ளி விவரங்களைச் சரி பார்த்து, சிறிய குக்கிராமங்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். இந்த மின் இணைப்பு விஸ்தரிப்பு சேரிகளுக்கு, பின் தங்கிய பகுதிகளுக்குக் கொடுக்கப்படவில்லை என்று பெரிய குறையாகச் சொல்கிறார்கள். மின் விஸ்தரிப்புக்குப் போதுமான மூலப்பொருள் கள் கிடைப்பதில்லை என்ற புகார் இருக்கிறது. ஒரு கிராமத்தில் கம்பம் நட்டால், இன்னொரு கிராமத்தில் கம்பி இழுக்கிறார்கள். கம்பி இழுத்து முடிந்த உடனே டிரான்ஸ்பார்மர் இல்லை என்று சொல்கிறார்கள். மூலப்பொருள்கள் தேவையான அளவுக்கு நம்முடைய தமிழகத்தில் செய்வதற்கோ அல்லது

அவற்றை உடனே பெறுவதற்காகவோ நடவடிக்கை துரிதமாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேண்டிய முயற்சியை அரசாங்கம் எடுத்து மின் விசை தருவதை இன்னும் துரிதமாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவைகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதில் காலதாமதம் ஆகிறது. இல்லாத நிபந்தனைகளை எல்லாம் போடுகிறார்கள். பழைய விதி முறையை மாற்றி புதிய முறையில் மின் இணைப்பு கொடுப்பதற்கு உரிய விதிமுறைகளை வகுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஹரிஜன முன்னேற்றத்திற்கு 6 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. முந்தைய அரசாங்கத்தைக் காட்டிலும் அதிகமான தொகை ஒதுக்கியிருந்த போதிலும் போதுமானதாக இல்லை. கடலில் கரைத்த பெருங்காயம் மாதிரி, 6 கோடி ரூபாய் போதாது. பத்து கோடி ரூபாயாவது ஹரிஜன முன்னேற்றத் திற்குக் கொடுக்கவேண்டும். ஹரிஜனங்கள் முன்னேறி விட்டார்கள் என்ற எண்ணம் பரவலாக இருக்கிறது. உண்மையிலேயே இந்தத் திட்டத்தின் மூலம் அவர்கள் முன்னேறியிருக்கிறார்களா, பயனடைந்து இருக்கிறார்களா என்று பார்க்கும்போது, அதை நாம் பரிசீலனை செய்ய வேண்டிய காலகட்டத்தில் இருக்கிறோம் என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதற்காக ஒரு தனி கமிஷன் அமைத்து, ஹரிஜனங்கள் பொருளாதாரத்தில் மேம்பட்டு இருக்கிறார்களா, வாழ்க்கையில் உயர்வுபெற்று இருக்கிறார்களா, உத்யோகத்தில் போதுமான இடம் பெற்று இருக்கிறார்களா, எந்த அளவுக்கு முன்னேறி இருக்கிறார்கள் என்பதை ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஹரிஜனங்களுக்குக் குடி இருப்பு மனைகள் என்று சொல்கிறபோது குடும்பம் ஒன்றுக்கு 5 சென்ட் நிலம் கொடுப்பதற்கு 12 கோடி ரூபாயை அரசாங்கத் திலிருந்து செலவு செய்ய வேண்டிய தேவையில்லை. நிலச் சட்டங்கள், மற்றச் சட்டங்களில் சொல்லப்பட்டு இருப்பது போல், காம்பன்சேஷன் கொடுத்து, ஹரிஜனங்கள் இருக்கும் இடத்தை எடுத்துக் கொள்ளலாம். அந்த வகையில் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இனும் ஒழிப்புச் சட்டம் (ஆக்ட் 23/1963) இன்றையதினம் அமலில் இருக்கும் படியான பகுதிகளில் பார்த்தால் அதிகாரிகள் பாரபட்சமாக நடந்து கொண்டு வருகிறார்கள். பன்னெடுங்காலமாக சாகுபடி செய்யக்கூடிய விவசாயிகளுக்குத் தான் பட்டா செய்து கொடுக்க வேண்டும். அவர்கள் கொடுத்த மனுக்களை யெல்லாம் கட்டித் தூக்கி வைத்துவிடுகிறார்கள். மதுரை ஜில்லாவில் நிலத் திட்ட வரி அதிகாரி அலுவலகத்தில் அம்மாதிரி மனுக்களை மூட்டை கட்டி ஒரு மூலையில் போட்டு வைத்திருக்கிறார்கள். விவசாயிகள் அதனால் தாங்கள் பெறக் கூடிய சாதகத்தைக் கூட பெற முடியாத அளவுக்கு நிலத் திட்ட வரி அதிகாரிகள் நடந்து கொள்கிறார்கள். அதனை விசாரணை செய்து ஆவன செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது) எனக்குப் பேசு வதற்கு சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, முடிக்கிறேன். வணக்கம்.

* **திருமதி ஏ. கோ. பத்மாவதி:** பெருமதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, உங்களுக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நடந்து முடிந்த

தேர்தலில் பெருவாரியான வாக்காளர்கள் எனக்கு வாக்களித்து என்னைத் தேர்ந்தெடுத்தமைக்கு முகையூர் தொகுதி மக்களுக்கும், எனது வெற்றிக்காக உழைத்த அமைச்சர் பெருமக்களுக்கும், கழகத் தோழர்களுக்கும், மற்றும் மாணவ நண்பர்களுக்கும், ஏனையோர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலைஞர் அவர்கள் ஆட்சி காலத்தில் மக்களுக்கு எந்த விதங்களில் சலுகைகள் அளிக்கப்பட்டன, சாதனைகள் ஏற்பட்டன என்பதை எண்ணித்தான் மக்கள் எங்களுக்குப் பெருவாரியாக வாக்களித்திருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதைப் பார்த்து மக்கள் வாக்கு அளிக்கவில்லை. காங்கிரஸ்காரர்கள் காங்கிரஸ் என்ற பெயரால் வோட்டு கேட்டால் வோட்டு கிடைக்காது என்று அரங்கநாத கவுண்டர் என்ற பெயரை வைத்து வால் போஸ் டர்கள் அடித்துக் கொண்டு எனது தொகுதியிலே வோட்டு கேட்டார்கள். கவுண்டர் பெயரால் வோட்டு கேட்டால் அங்குள்ள கவுண்டர் மக்கள் கண்ணை மூடிக்கொண்டு வோட்டு போட்டு விடுவார்கள் என்ற எண்ணத்தில் அவர்கள் இருந்தாலும், மக்கள் ஜாதியின் பெயரால் ஏமாறுவதாக இல்லை. என்ன செய்தீர்கள், செய்த சாதனையைச் சொல்லுங்கள், என்ன செய்யப் போகிறீர்கள் என்பது தான் முகையூர் தொகுதி மக்கள் கேட்ட கேள்வி.

கடந்த ஆண்டு சட்ட மன்றத்தில் காங்கிரஸ் உறுப்பினர் திரு. மார்டின் அவர்கள் ஒரு முறை இந்த அரசு வன்னியர்களுக்காக கண்ணை மூடிக்கொண்டு அதிகமான சலுகைகளை வாரி வாரி வழங்குகிறது என்று சபையில் கூறினர். ஆனால், என்னுடைய தொகுதியில் என்ன பிரசாரம் செய்தார்கள் என்றால், கழக அரசு வன்னியர்களுக்கு ஏதும் செய்யவில்லை. வன்னிய மக்களைப் பாருங்கள், அடித்து ஒதுக்கிவிட்டார்கள் என்று வன்னிய மக்களிடையே தவறான பிரசா ரத்தைச் செய்து வந்தார்கள். இப்படி ஜாதியின் பெயரால் மக்களை ஏமாற்றி விடலாம் என்று தவறான பிரசாரத்தைச் செய்து என்னை எதிர்த்து வந்தார்கள். ஒரு குடும்பத்திலிருந்து வந்திருக்கிறார்கள், ஆகவே நிச்சயம் நாம் எதிர்த்து விடலாம் என்று, என்னை எதிர்த்து எதிர்க்கட்சியில்கூட அம்மையார் பிரசாரம் செய்தார்கள். எப்படியும் என்னைச் சுலபமாக தோல்வி அடையச் செய்துவிட லாம் என்று பல சதித் திட்டங்களைத் தீட்டிக்கொண்டு என்னுடைய தொகுதியில் வந்து பிரசாரம் செய்தார்கள்.

கழகம் ஆற்றியிருக்கிற பணியை குறிப்பாக தாய்மார்கள் அறிவார்கள். அவர்கள் எல்லோரும் ஏகோபித்து காங்கிரஸ்காரர்கள் வண்டி கூட கிராமத்துப் பக்கம் வராமல் துரத்தி அடித்த பெருமை என்னுடைய தொகுதித் தாய்மார் களைச் சேர்ந்தது. எனது தொகுதியில் ஒரு கிராமத்தில் ஒரு சகோதரி தனது கணவர் எதிர்க் கட்சிக்கு வேலை செய்கிறார் என்று அறிந்தபோது, கணவரிடம் போய், 'அந்த அம்மையார் தோற்றால் நீங்கள் கட்டிய என் தாலியை அறுத்து எறிவேன்' என்று சூளுரைத்து கணவரைத் திருத்தி அழைத்து வந்து எனக்காக, கழகத்தின் வெற்றிக்காக பாடுபடும்படி செய்தார்கள். அப்படிப்பட்ட நிலையில் அங்கே தாய்மார்களின் எழுச்சி இருந்தது. கடந்த காலத்தில் அவர்கள் பட்ட துன்பங்கள், அடுப்பங்கரையில் அவர்கள் வடித்த கண்ணீர்கள், விலைவாசி ஏற்றத்தினால் அவர்கள் வயிறு எரிந்த விதிகள் இவைகளெல்லாம் ஒன்று சேர்ந்து தான் கழகத்தைச் சேர்ந்த பெருவாரியான உறுப்பினர்களை சட்ட மன்றத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறது. தொட்டிலை ஆட்டிய கை இன்று அரசுக் கட்டிலை ஆட்டுகிறது. ஆகவே, கழகம் இனி குன்றாது, குறையாது. அள்ள, அள்ளக் குறையா அக்ஷய பாத்திரம் போல, கழக அரசு மேலும் மேலும்

வளர்ந்து வருகிறது. ஏழை எளிய மக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க உத்திரவாதத்தை ஏற்று, அவர்களுக்கு செய்யும் பணியே தங்களுடைய பணியாக ஏற்று, கழக அரசு முரசு கொட்டிக் கொண்டு வரும் என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கல்விக்காக ரூ. 48 கோடி ஒதுக்கப்பட்டு இருந்தது. ஆனால் கழக ஆட்சி சுமார் 60 கோடி கல்விக்காக ஒதுக்கியுள்ளது. அத்துடன், 50 மார்க்கு எடுத்த மாணவர்களுக்குத் தான் உபகாரச் சம்பளம் கொடுத்து வந்தார்கள். ஆனால் இப்பொழுது கழக அரசு பொறுப்பேற்ற பிறகு 40 மார்க்கு வாங்கினால் போதும் என்று பரவலாக எல்லா மாணவர்களுக்கும் சலுகை பெறும்படிச் செய்தது.

கலைஞர் அரசு மனு நீதித் திட்டம் என்ற ஒரு திட்டத்தை ஏற்படுத்தி, அதன் மூலம் கிராமங்கள் தோறும் அதிகாரிகள் சென்று மக்களுடைய குறைகளை, மனுக்கள் மூலம் பெற்று ஒரு வாரத்தில் மக்களுக்கு வேண்டியவைகளைச் செய்து வருகிறார்கள்.

கழக அரசு பொறுப்பேற்ற பிறகு தான் விவசாயிகளுக்கு, கிணறு வெட்டுவதற்கு, மாடு வாங்குவதற்கு, நிலத்தை சீர்திருத்துவதற்கு, இப்படி பல துறைகளில் விவசாயிகளுக்கு சலுகைகள் கொடுத்து, கடன் வசதி செய்து கொடுத்தது. அரிசிக் கட்டுப்பாட்டை எடுக்கும் அளவுக்கு விவசாய உற்பத்தியைப் பெருகச் செய்திருக்கிறது. அரிசிக் கட்டுப்பாட்டை எடுத்த நிலை தான் தாய்மார்களின் எழுச்சிக்குக் காரணம் என்று நான் கூறிக்கொள்வேன். மேலும், விலைவாசி ஏறுமல், விலைவாசி ஒரு நயா பைசா கூட ஏறுமல் மிக கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டியது நம்முடைய கடமை. நம்மை ஆதரித்த தாய்மார்களுக்கு நன்றி காட்டும் வகையிலே நாம் அதைச் செய்ய வேண்டும்.

மேலும், மின்சாரத் துறையில் என்னுடைய தொகுதியில் ஒரு கிராமத்தில கூட விளக்கு ஏற்றுத இடமே இல்லை. முன்பு 7, 8 கிராமங்களில் விளக்கு ஏற்றுத நிலை இருந்தது. தேர்தலுக்கு முன்பு சீப் என்ஜினியரிடம் சொல்லி மனுக் கொடுத்து, இப்பொழுது விளக்கு ஏற்றுத ஒரு இடம் கூட இல்லை. மேலும் டிரான்ஸ்பார்மரை வைத்து அங்கே பல பம்பு செட்டுகளை அமைத்துக் கொடுப்போமானால், விவசாய உற்பத்தி பெருக வசதியாக இருக்கும். விவசாயப் பெருங்குடி மக்கள் கொண்ட தொகுதி என்னுடைய முகையூர் தொகுதி. ஆகவே தான் அங்கே விவசாயிகளுக்கு வேண்டிய சலுகைகளை மிகவும் அவசியமாகவும், அவசரமாகவும் செய்துகொடுக்க வேண்டும் என்று நான் கழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன். பாடசாலைகளுக்குக் கூட தங்களுடைய பிள்ளைகளை அனுப்ப முடியாத ஏழ்மையான நிலைமையில் சில கிராமத்து மக்கள் இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் வாழும் பிள்ளைகளுக்கு தொழில் கல்வி போன்ற ஆதாரக் கல்வித் திட்டத்தைக் கொண்டுவரவேண்டும் என்று அரசினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் நல்ல தீவிரமான முறையில் நடைபெற வேண்டுமானால், வெற்றிபெற வேண்டுமானால், ஏழை மக்கள் அதற்கு முன்வந்து, அவர்களாக அதை ஏற்றுக்கொண்டு, செயல்முறையில் அதைக் கடைப்பிடித்தால் தான் வெற்றி பெற முடியும். அவர்களுக்கென்று எதிர் காலத் திட்டங்கள் பலவற்றை நாம் தீட்டியாக வேண்டும். ஏழைத் தாய்மார்களை அணுகி குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று கூறும்பொழுது, 'பணக்

காரர்களிடம் பணம் இருக்கிறது, மற்ற வசதிகள் இருக்கின்றன, பிள்ளைகள் இல்லாவிட்டாலும் பிற்காலத்தில் அவர்கள் வாழ்வதற்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொள்ள முடியும், அவர்களுக்கு அதற்கு வேண்டிய செல்வம் இருக்கிறது. ஆனால் ஏழைகளாகிய எங்களுக்கு மக்கள் செல்வம் தானே இருக்கிற செல்வம் எல்லாம். நாங்கள் 6 பெற்றால் இரண்டுதான் தேறுகிறது, அந்த இரண்டும் இல்லாவிட்டால் நாங்கள் என்ன செய்ய முடியும் பிற்காலத்தில்? எங்களை யார் காப்பாற்றுவார்கள்? என்று கேட்கிறார்கள். அதுவும் பெற்ற பிள்ளைகள், பெண்கள் தவிர யார் காப்பாற்றுவார்கள்? முதிய காலத்தில்—வயது காலத்தில்—சக்தியற்று இருக்கும்பொழுது, தங்களைக் காப்பாற்ற ஒன்றிரண்டு பிள்ளைகள் இருந்தால் தானே தாங்கள் வாழ்க்கை நடத்த முடியும் என்று அவர்கள் கேட்கிறார்கள். குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை ஏற்றுக்கொண்டால் பிள்ளையே இல்லாத அவல நிலை ஏற்பட்டுவிடுமே என்று ஏழை எளிய மக்கள் எண்ணுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு ஊக்கம் அளிப்பதற்கு, மாவட்டம் தோறும் முதியோர்களைக் காப்பாற்றுவதற்கு ஒரு ஆசிரமத்தை அமைத்துத் தரவேண்டும் என்று அரசினைக் கேட்டுக்கொள்கிறேன். அப்படி ஒரு திட்டமிட்டால், ஏழை மக்கள் எல்லோரும் நல்ல முறையில் அதை ஏற்றுக் கொண்டு நல்ல முறையில் வெற்றி பெறச் செய்வார்கள் என்று மன்றத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயத்திற்கு தண்ணீர் வசதி செய்து கொடுத்திருந்தாலும், அது போதுமானதாக இல்லை. விவசாயத்தைச் செழிப்பாகச் செய்ய முடியவில்லை. விவசாயம் செழிக்கும் முறையில் நல்ல முறையில் செய்ய வேண்டிய அளவில் தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏழை மாணவர்களுக்கு, போதுமான அளவில் கழக அரசு நன்மைகளைச் செய்திருக்கிறது. ஆனாலும் மிக மிக ஏழ்மையில் இருக்கும் என்னுடைய தொகுதியில், வருவாயோடு அவர்கள் படிக்க வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தென்னார்காடு மாவட்டத்தில் விழுப்புரத்தில் இருக்கும் கல்லூரியில் பட்டப் படிப்புக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் ஓடைகள் நிறைய இருக்கின்றன. ஆதலால், மழைக்காலங்களில் பிள்ளைகள் ஸ்கூல்களுக்குப் போக முடியாத நிலையில் இருப்பதால், எஸ்.எஸ்.எல்.ஸி. படிக்கும் மாணவர்கள் பரிட்சை எழுதமுடியாத நிலை ஏற்படுகிறது. ஆகவே, ஓடைகளுக்கு பாலங்கள் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த வாய்ப்புக் கொடுத்த தலைவருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. எம். ஏ. அபுசாலி: மரியாதைக்குரிய சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு கவர்னர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் முறையில் இந்த விவாதத்தில் பேச வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அவையில் என்னை ஒரு உறுப்பினராக ஆக்கிய எனது தொகுதி மக்களுக்கு நன்றி உரித்தாக்கிக் கொண்டு என் பேச்சைத் தொடங்குகிறேன்.

அவையில் பேசிய மாண்புமிகு அங்கத்தினர்களில் பலர் அந்த அந்த தொகுதியில் ஏற்பட்ட அராஜகத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அவ்வாறான சம்பவங்கள் நிகழக்கூடாது என்பதுதான் என்னுடைய விருப்பம். அதே போலத் தான் இந்த அவையும் விரும்பும் என்று கருதுகிறேன். மக்களின் பொறுப்பேற்று வந்திருக்கும் நாம் அராஜகத்தை ஒழிக்க வேண்டும் என்பதில் நம்பிக்கை

கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்று கூறிக் கொள்கிறேன். குறிப்பாக என் தொகுதியில் வெள்ளாற்றில் வெள்ளம் வரும்போது, சரியான வடிகால் இல்லாததால், பிராஞூர் பகுதியில் உடைப்பு எடுத்து, 40, 50 கிராமங்கள் வரையில் பாழாகின்றன. அந்தக் கரையைப் பலப்படுத்த வகை செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். வயக்கால் ஓரமுள்ள ரோடுகள் பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்டிலும், பஞ்சாயத்து யூனியனிலும் இருக்கின்றன. அவை நல்ல முறையில் கவனிக்கப்படவில்லை. குறிப்பாக, புவனகிரிப் பகுதியில், நத்தம்மேடு, குமுடிமலை, கொடிபள்ளம், கிழமணக்குடி போன்ற இடங்களிலும், இன்னும் கடல் ஓரம் உள்ள மீனவர்கள் வசிக்கும் பகுதிகளிலும் ரோடு வசதிகள் கிடையாது. அவற்றைச் செய்து கொடுக்க வேண்டியது அவசியம் என்று சொல்லிக் கொள்கிறேன். விவசாயத் துறையில் குடிசை வாழ் மக்களுடைய, நிலமில்லாதவர்களுடைய, நிலையை சீர் செய்ய வேண்டும் என்பதில், கவர்னர் உரை பாராட்டத்தக்கதாக இருக்கிறது. மக்களுக்கு இருக்கும் நம்பிக்கை பாதிக்காத வகையில் இதெல்லாம் அமைந்திருக்கிறது. அதற்காகப் பாராட்டு தலையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்குப் பேச வாய்ப் பளித்த தலைவருக்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

*** திரு. எ. க. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி கூறும் வகையிலும், நான் பேசுவதற்கு முன்னால், நான் அரசியலில் ஈடுபடுவதற்கு காரணமாக இருந்த, திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிபெற்று ஆட்சி நடத்த காரணமாக இருந் தவரும், எங்கள் ஒப்பற்றத் தலைவருமான பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு என் இதயம் கனிந்த நன்றியையும் போற்றுதலையும் தெரிவித்துக் கொண்டு, இன்றைய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், தமிழகத்தின் ஒப்பற்ற முதலமைச் சருமான கலைஞர் அவர்களுக்கும், மற்றும் அமைச்சரவையில் இருக்கும் அமைச்சர் பெருமக்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என் பேச்சைத் தொடங்குகிறேன்.

ஆளுநர் உரையில் குறிப்பாக சமுதாயத்தின் அடித்தளத்தில் இருப்பவர் களுடைய வறுமையையும், இன்னல்களையும் களைந்தெறிய கழக அரசு செயல் படும் என்று குறிப்பிட்டிருப்பது பாராட்டத்தக்கது. எனக்கு முன்னால் பேசிய பல உறுப்பினர்களும் குறிப்பிட்டார்கள், தங்கள் தங்கள் தொகுதி நிலைகளைப் பற்றி. நான் பெருமையோடு, பூரிப்போடு தெரிவித்துக் கொள்வேன், என்னுடைய தொகுதியில் தேர்தல் சமயத்தில், மக்கள் நல்ல அரசியல் விழிப்புணர்ச்சி யோடும், சிறந்த பண்பாடோடும், எந்தக் குறைகளும் இல்லாத வகையிலும் நடந்து கொண்டார்கள். நல்ல ஆரோக்கியமான ஜனநாயகத்திற்கு ஏற்புடைய மக்களாக நடந்து கொண்டார்கள் என் தொகுதி மக்கள் என்பதைப் பெருமை யோடும், பூரிப்போடும் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்வேன். என்னுடைய தொகுதி மக்கள் அந்த வகையில் வாக்களித்தது மட்டுமல்லாமல், முற்போக்குக் கூட்டணிக்கும், முக்கியமாக திராவிட முன்னேற்றக் கழகத் திற்கும் மகத்தான வெற்றியைக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக அந்த மக்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன்.

நம் நாட்டில் விவசாயத்திற்கு அடுத்து மிகப் பெரிய தொழிலாக இருப்பதும், தமிழக மக்கள் தொகையில் பத்தில் ஒரு பங்கு மக்கள் ஈடுபட்டிருப்பது மானதும் நெசவுத் தொழில் ஆகும். அதே போல பெரிய அளவில் பீடித்

தொழிலாளர்களும், தீப்பெட்டித் தொழிலாளர்களும் இருக்கிறார்கள். அப்படிப் பட்ட ஏழை மக்கள் நிரம்பியது என்னுடைய தொகுதி. நீண்ட நெடுங்கால மாக வடாற்காடு மாவட்டத்தில் பின்தங்கிய பகுதியாக இருப்பது குடியாத்தம். எதிர் காலத்திலாவது அரசினர் சிறந்த முறையில் செயல்பட்டு, அங்கே ஒரு தொழில் பேட்டையை அமைக்க வேண்டும். அது அரசாங்கத்தின் சார்பிலோ, அல்லது, கூட்டுத் துறையிலோ அமைத்து, நெசவாளர்களுக்கும், இன்னும் பீடித் தொழில், தீப்பெட்டித் தொழில் போன்றவற்றில் ஈடுபட்டுத் தவிக்கும் ஏழை மக்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அவர்களுடைய வாழ்க்கைக்கு வழி செய்ய வேண்டும், அவர்கள் முன்னேற வழி காணவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நீண்டகாலமாக என்னுடைய குடியாத்தம் தொகுதியில், மக்களால் கோரப் பட்டு வந்திருக்கும் அணைக்கட்டுத் திட்டங்களான மோர்தனா அணைக்கட்டும், பத்ரபள்ளி அணைக்கட்டுமாகும். அவற்றைச் செய்து கொடுத்தாலொழிய அந்தப் பகுதி விவசாய மக்களுக்கு நலன் ஏற்படாது. ஆகவே, அந்தப் பகுதி மக்களுக்கு ஏற்றத்தை உண்டுபண்ணும் வகையில் இவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 1970-ன் இறுதியில் பொதுப்பணித்துறை அமைச்சரும், மாவட்ட துணை ஆட்சித் தலைவரும் அந்த இரண்டு இடங்களையும் பார்வையிட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தத் திட்டங்களை விரைவில் நிறைவேற்றிக் கொடுக்க தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு முன்னால் திட்டமிடப்பட்டு முப்பது லட்சம் ரூபாயில் குடியாத்தம் நகராட்சி நிறைவேற்றிய குடிநீர்த் திட்டம் இன்றைக்கு பம்பிங் ஸ்டேஷன் அமைக்க முடியாமல், நிலச் சொந்தக்காரர்கள் நிலத்தைத் தராமல் நீதிமன்றத்திற்குச் சென்றிருப்பதால், குடிநீர் வசதி செய்து கொடுக்க முடியாத நிலையில் பசுமாத்தூர், வேப்பூர் ரெயில்வே ஸ்டேஷன், அம்மணாங் குப்பம், செதுக்கரை போன்ற கிராமங்கள் இருக்கின்றன. அந்த வழக்கு நீதிமன்றத்தில் பல ஆண்டுகளாகவே 'கிடப்பில்' இருந்து வருகிறது. அதனை உடனடியாக விரைவுபடுத்தி நல்ல தீர்வு காண அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். பீடித் தொழிலாளர் நலனைப் பாதுகாக்க பல சட்டங்கள் இருந்தாலும் பீடி அதிபர்கள் கோர்ட்டுகளுக்குச் செல்லும் நிலைமையில் பல்லாயிரக்கணக்கான பீடித் தொழிலாளர்கள் நன்மை பெற முடியாமல் இருக்கிறார்கள். நாட்டு நலன் கருதியும், வாழ்க்கையின் அடித் தளத்தில் உள்ள ஏழை எளிய தொழிலாளர்களின் நலன் கருதியும் நீதிமன்றத்தில் இந்த வழக்குகள் நெடுங்காலம் கடத்தப்படாமல் இருக்க அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

என்னுடைய தொகுதி தமிழகத்தின் வட எல்லையின் கடைசியில் ஆந்திர மாநில எல்லையைத் தொட்டுக் கொண்டிருக்கிறது. தமிழக அரசு அந்தப் பகுதி ஆந்திராவைச் சேர்ந்து விடுமோ என்றும், ஆந்திர அரசு அது தமிழகத்தைச் சேர்ந்து விடுமோ என்றும் எண்ணிக் கொண்டிருக்கின்ற நிலையில் நெடுங்கால மாக அந்தப் பகுதி புறக்கணிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் சிவூர், தட்டப்பாறை, இராம அணை, கிருஷ்ணாபுரம், பசுமாத்தூர், பூசாரிவலசை, தட்சிணபாத பாளையம், கொத்தூர் போன்ற பகுதிகளில் இன்றைக்கும் பஸ் வசதி இல்லாமல் மக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்கள், குறிப்பாக தாய்மார்கள் ஆஸ்பத்திரிக்குச் செல்ல வேண்டுமென்றால் 15 மைல்

கடந்து செல்ல வேண்டும். அதற்கு பஸ் வசதி இல்லை. நம்முடைய அரசு ஏராளமான பஸ் வைத்திருப்பவர்களுக்கு அனுமதி தாராமல் கூட்டுறவு முறையிலோ அல்லது வேறு வகையிலோ அந்தப் பகுதியில் பஸ் விடுவதற்கு அனுமதி தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கிருந்து கல்லூரிக்கும், பாலிடெக்னிக்குக்கும், நூல் ஆலைகளுக்கும் செல்வதற்குக் கூட பஸ் வசதி இல்லாமல் இருக்கிறது. உடன் பஸ் வசதி செய்து தர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்த மன்றத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம், நன்றி.

* **திரு. கே. பி. கோபால் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரையின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். நடந்து முடிந்த தேர்தலின்போது நிலவிய பகைமையை மறந்து அமைதி காக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்றும், சட்டம் அமைதியைக் காக்க உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் கூறிய முதல்வர் அவர்களுக்கு நன்றி.

தலைவர் அவர்களே, முதலில் என்னுடைய தொகுதியில் தேர்தலின் போது நடைபெற்ற ஒருசில சம்பவங்களைப் பற்றிக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதன் நோக்கம் தேர்தல் எப்படி நடைபெற்றது என்பதை எடுத்துக் கூறுவதற்காக அல்ல; இனிமேலாவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதியில் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்பதற்காகத்தான். நான் வேட்பு மனு தாக்கல் செய்து தேர்தல் பணியைத் தொடங்கி பணியாற்றி விட்டு கூடலூர் கிராமத்திலிருந்து இரவு பத்து மணிக்குத் திரும்பும்போது கிராம எல்லையில் பயங்கர ஆயுதங்களுடன் என்னைத் தாக்கத் திட்டமிட்டார்கள். அங்கு எனக்காகப் பணியாற்றிய நண்பர்களின் வைக்கோல் போருக்குத் தீ வைத்தார்கள். ராயப்பன்பட்டிக்குத் தேர்தல் பிரசாரத்திற்காகச் சென்றவர்களை அடித்து நொறுக்கினார்கள். காமயகவுண்டன்பட்டிக்கு தேர்தல் பிரசாரம் செய்யப் போனவர்களைக் காயப்படுத்தினார்கள். தேர்தல் தினத்தன்று பலவித வதந்திகளைப் பரப்பி ஒருவித பதட்ட நிலையை ஏற்படுத்தினார்கள். என்னுடைய ஏஜெண்டுகளை அடித்து வெளியேற்றியிருக்கிறார்கள். ஒருசில வாக்குச்சாவடிகளில் காவல் துறையினரின் உதவி கொண்டு ஏஜெண்டுகள் வீட்டுக்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள். இதிலே எல்லாம் சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் விருப்பு, வெறுப்பு இன்றி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். என்னுடைய தொகுதியிலுள்ளவர்களுடைய உடைமைக்கும், உரிமைக்கும் பாதுகாப்பு இல்லாத நிலைமை இருந்து வருகிறது என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

ராயப்பன்பட்டி கிராமத்திலும், காமயகவுண்டன்பட்டி கிராமத்திலும் காவல் துறை நிலையத்தை அமைக்க வேண்டும். ராயப்பன்பட்டி கிராமத்தில் 600 வாழை மரங்களைக் குலையுடன் வெட்டி வீழ்த்தினார்கள். அறுபதுக்கு மேற்பட்ட தென்னை மரங்களைச் சேதப்படுத்தினார்கள்.

கம்பத்தில் தீயணைக்கும் நிலையம் ஒன்றை அமைக்க வேண்டும். விவசாயிகள் எந்த நஷ்டத்தை வேண்டுமானாலும் தாங்கிக் கொள்ளுவார்கள், வைக்கோற் போருக்கு ஏற்படும் நஷ்டத்தை அவர்களால் தாங்க முடியாது.

காஞ்சிமடத்தில் ஒரு பாலமும், கூடலூரில் ஒரு பாலமும் அமைக்க அரசாங்கம் யோசித்து வருவதாகத் தெரிகிறது. அதனை நிறைவேற்ற ஆவன செய்யவேண்டும்.

தேவிகுளம், பீர்மேடு பகுதியில் இருக்கும் தமிழ் மாணவர்களுக்கு ஒரு மாணவர் விடுதி அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

* **திரு. கோவை செழியன் :** மாண்புமிகு மன்றத் தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்கள் உரையில் துவக்கத்திலேயே நடந்து முடிந்த தேர்தலைப் பற்றிய கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள், அதிலே, தேர்தல் அமைதியான முறையில் நடைபெற்றிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். என்றாலும், இந்த மன்றத்தில் பேசிய பல எதிர்க்கட்சி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கட்சித் தோழர்கள் தாக்கப்பட்டதாக ஒருமுகமாகச் சொன்னார்கள். கடந்த தேர்தலின்போது தமிழ்நாடு முழுவதும் முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்தவர்களை அடிப்பது மூலந்தான் தாங்கள் வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கையில் வேலை செய்தார்கள். என்னுடைய தொகுதியில் நான் காரில் சென்று கொண்டிருக்கும்போது என்னுடைய காரின்மீது இன்னொரு காரை மோதி துப்பாக்கியை வைத்து மிரட்டினார்கள். இத்தகைய நிகழ்ச்சிகளை எல்லாம் நடத்திவிட்டு இங்கே வந்து தாங்கள்தான் தாக்கப்பட்டதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் விருப்பு வெறுப்பற்ற முறையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றி ஆராய்ந்து, கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

விவசாயத்தைப் பொறுத்தவரை இந்த ஆண்டு உற்பத்தி பெருகியிருக்கிறது என்று ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1966-67-ம் ஆண்டு 54.58 லட்சம் டன்னாக இருந்தது இந்த ஆண்டு 67 லட்சம் டன்னாக உயர்ந்திருக்கிறது என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இதற்குக் காரணம் நம்முடைய அரசாங்கத்தின் தீவிர முயற்சியும், இரசாயன உரங்கள், பெஸ்டிசைட்ஸ் போன்ற நவீன மருந்துகள், இயந்திர சாதனங்களைக் கொண்டு விவசாயம் செய்த முறை ஆகியவைத்தான்.

இந்த நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய கூட்டுறவு அமைச்சர் மாண்புமிகு ஆதித்தனார் அவர்கள் அடிக்கடி குறிப்பிடுவார்கள். 'க்ரீன் ரெவல்யூஷன்'—பசுமைப் புரட்சியைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருப்பார்கள். அந்தத் திட்டத்தைப் பற்றி அமெரிக்காவிலிருந்து வந்தவர்கள்—கோவை விவசாயக் கல்லூரியின் சார்பில் அளித்த நிபுணர்கள் அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். தஞ்சை மாவட்டத்தில் மட்டும் நிலத்திற்கு அடியில் இன்றைக்குப் பாய்கிற தண்ணீரில் மூன்றில் ஒரு பங்கு தண்ணீர் இருக்கிறது; அதை விவசாயத்திற்குப் பயன்படுத்தும் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அதே போன்று மற்ற மாவட்டங்களிலும் நிலத்திற்கு அடியில் இருக்கும் தண்ணீரை வெளியே கொண்டுவர முயற்சிக்க வேண்டும். கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரை அந்த முயற்சி கொஞ்சம் கஷ்டமாக இருக்கும். தஞ்சையில் நிலத்திற்கு அடியில் சமீபத்தில் தண்ணீர் இருக்கிறது. கோவை மாவட்டத்தில் ஆழமாகச் சென்றால் தான் தண்ணீரைப் பெற முடியும். காங்கேயம் பகுதியில் ஆடுமாடுகளுக்குக் கூடத் தண்ணீர் இல்லாத நிலைமை இருக்கிறது. அங்கெல்லாம் உடனடியாக

வாய்க்கால்களை வெட்ட முடியாது என்றாலும் கேரள அரசோடு ஒப்பந்தம் நிறைவேறும் வரையில் சிறு 'பாண்ட் ஸ்கிம்' போட்டும் கிணறுகளை வெட்டியும் தண்ணீர் வரும் வகையில் திட்டங்களைத் தீட்ட வேண்டும்.

அதுமட்டுமல்ல, இன்னொரு முக்கியமான கருத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். லோயர் பவானி வாய்க்கால். திட்டத்தின்கீழ் தண்ணீர் வந்தாலும், 24 மாதங்களிலே மூன்று மாதம்தான் சில பகுதிகளுக்குத் தண்ணீர் விடுகிறார்கள். தண்ணீர் சில வாய்க்கால்களில் ஆறு மாதத்திற்கு மேல் சென்றாலும், குறிப்பிட்ட பகுதிகளில் மூன்று மாதத்திற்கு மேல் தண்ணீர் வருவதேயில்லை. என்றாலும், அந்தப் பகுதிகளில் தண்டத் தீர்வை கட்ட வேண்டியிருக்கிறது. அந்தப் பகுதிகளில் குறைந்தது 7½ ரூபாயிலிருந்து 10 ரூபாய்வரைக்கும் வாட்டர் டாக்ஸ் வசூல் செய்து விடுகிறார்கள். நிலச்சீர் திருத்தத்தின் அடிப்படையில், இரண்டு வருஷத்திற்கு மூன்று மாதம் தண்ணீர் பாய்ந்த இந்த பூமியை நஞ்சை நிலம் என்று, ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சேர்த்துவிடுகிறார்கள். இதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆளுநர் அவர்கள் தம்முடைய உரையில், கோவையில் விவசாயப் பல்கலைக் கழகம் ஒன்று ஆரம்பிப்பது பற்றிச் சொன்னார்கள். இந்த கல்லூரிக்கு சென்னைப் பல்கலைக் கழகத்திலிருந்து பணம் கிடைத்தாலும், அல்லது யூனிவர்சிடி கிராண்ட் கமிஷன் நிதியிலிருந்து பணம் கிடைத்தாலும், ஒரு முக்கியமான எச்சரிக்கையை அரசாங்கத்தில் இருப்பவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இன்றைய விவசாயக் கல்லூரி அரசாங்கத்தின் நேரடி அதிகாரத்தின் கீழே இருப்பதால், அரசாங்கம் ஓரளவுக்கு தன்னுடைய திட்டங்களை நிறைவேற்க முடிந்து மக்களுக்கு நன்மை செய்ய முடிகிறது. இதைப் பல்கலைக் கழகமாக ஆக்கும்போது இது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள், அரசாங்கத்தின் சம்பந்தம் இல்லாமல் போய்விடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். old bandicoots ஏனென்றால், பழைய பெருச்சாளிகள் அங்கே இருந்துகொண்டு, அரசாங்கத்தின் முடிவுகளை நிறைவேற்ற முடியாமல் செய்து விடுவார்கள். ஆகவே, சட்டத்தைத் தளர்த்தியாவது, அந்தப் பல்கலைக் கழகத்தை அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அங்கிருக்கும் நபர்களின் மாற்றல்கள், ப்ரமோஷன் ஆகியவற்றையெல்லாம் அரசாங்கமே செய்ய வேண்டும். அந்தப் பல்கலைக் கழகம் சென்னைப் பல்கலைக் கழகத்தின் கீழே இருக்கக்கூடாது. சட்டத்தை மாற்றியாவது இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப்பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதி மக்களுக்கு ஒரு பெரிய பிரச்சினை. இனும் பிரச்சினையைப்பற்றி ஓர் உறுப்பினர் குறிப்பிட்டிருக்கிறார். கோயம்புத்தூர் மாவட்டம் தாராபுரம் போன்ற தாலுக்காக்களில் ஏறத்தாழ கால்வாசி இனும் பூமியை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது பிரம்மதாயம், தர்மதாயம், தேவதாயம் என்று பிரிக்கப் பட்டிருக்கிறது. பிரம்மதாயம், தர்மதாயம் இனும் நிலங்களைப் பட்டாக்கள் செய்யலாம். 1963-ல் கொண்டு வந்த இனும் ஒழிப்புச் சட்டத்தின் அடிப்படையில் விவசாயிகளுக்கு இந்த இனும் நிலங்கள் பட்டாக்கள் செய்து கொடுக்கப்பட்டன. 1—4—1900 முன்னர் ரிஜிஸ்டர் செய்து கொண்டதற்கு மட்டும்தான் பட்டாக்கள் செய்து கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்

பட்டது. சில இடங்களில் பணம் பெற்றுக்கொண்டு பட்டா செய்கின்ற நிலைமை இருக்கிறது. அங்கே இருக்கிற கிராம அதிகாரிகள் முன்சீப், கணக்கப்பிள்ளை போன்றவர்களுடைய தொந்தரவுகள் அதிகமாக இருக்கின்றன. அவர்கள் ஏழை விவசாயிகளிடத்திலிருந்து பணம் பறித்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் நிலமில்லாதவர்களுக்கு நிலம் தருகிறோம். ஏழை விவசாயிகளுக்கு நிலம் தருகிறோம். நாற்பது, ஐம்பது ஆண்டுகளாக அந்த விவசாயிகள் அனுபவித்துக் கொண்டிருக்கிற நிலங்களையெல்லாம் எடுத்துக் கொள்வது தர்மமாகாது, நீதியும் ஆகாது. ஏழை மக்களுக்கு ஏற்ற வகையில் சட்டத்தின் விதிகளை மாற்ற வேண்டும். சட்ட அமைச்சர் அவர்கள் இதை அனுதாபத்தோடு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு அங்குல நிலத்தைக்கூட விவசாயிகளிடமிருந்து பறிக்கக்கூடாது. நிலச்சீர்திருத்தம் வந்த நேரத்தில் பெரிய மிராசுதார்கள் தங்களிடமுள்ள இனும் நிலங்களை ஏழை விவசாயிகளுக்குத் தந்துவிட்டார்கள். பெரிய மிராசுதார்கள் தப்பிவிட்டார்கள், ஆனால், ஏழை விவசாயிகள் அகப்பட்டுக் கொண்டு விட்டார்கள்.

கடைசியாக ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசாங்கம் சம்பள ஆணைக் குழுவின் ஆணைப்படி 22 கோடி ரூபாயை அதிகமாக இந்த ஆண்டு பட்ஜெட்டிலே சேர்த்திருக்கிறார்கள். ஆனால் ஐந்தாம் நிதி ஆணைக்குழு அதிகப்படியான தொகையைத் தருவதற்கு மறுத்திருக்கிறது. அதே நேரத்தில் மற்ற மாநிலங்களுக்கு அந்த நிதியை தந்திருக்கிறது. இப்படி பற்றாக்குறை வருகின்ற நேரத்தில் மத்திய அரசாங்கத்தோடு நாம் மோதவேண்டிய நிலை இருக்கிறது. 800 கோடி ரூபாயை 'தனி நிதி'யாக இந்திய அரசாங்கம் ஒதுக்கி வைத்திருக்கிறது. அந்தத் தனி நிதியிலேயிருந்து 22 கோடி ரூபாய் தருவதோடு, துண்டுவிழுகின்ற 35 கோடி ரூபாயும் நமக்குத் தரவேண்டும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

அதேநேரத்தில் நம்முடைய மாநில அரசாங்கத்தின் நிர்வாக நடைமுறையை மாற்றி, ஒரு நல்ல முறையை அனுசரிக்க வேண்டும். இரண்டாவது உலக யுத்தம் நடைபெற்ற நேரத்தில் பிரிட்டிஷ் பார்லிமெண்டரி செலக்ட் கமிட்டி தோற்றுவித்த Organisation and Methods (O & M) முறைதான் இப்போ

முறைதான் இப்போது அமலில்

அமலில் இருந்து வருகிறது. 1966- Administrative Reforms Commissons முடிவுப்படி லோக் பால், லோக் அயுக்த என்று சொல்லக்கூடிய அமைப்புகளைப் பரிசீலித்து நம்முடைய அரசாங்கம் அமல் நடத்த முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள், மாநிலங்களின் உரிமைகளைப் பறித்து, மாநிலத் திட்டங்களுக்கு தேவையான நிதி வசதிகளைத் தராவிடில் மாநிலங்களிலே முஜிபுர் ரகுமான்கள் தோன்றுவார்கள் என்று சொன்னார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இந்த நாட்டை நடத்திச் செல்லும் முதலமைச்சர் மட்டுமல்ல, இந்த நாட்டை நடத்திச் செல்கின்ற தானைத் தலைவராகவும் இருக்கிறார் என்று நினைக்க மகிழ்ச்சியாக இருக்கின்றது.

ஒரு புறத்தில் இந்தி திணிக்கப்படும் நிலை, இன்னொரு புறத்தில் நியாயமான கோரிக்கைகளை உதாசீனம் செய்யும் நிலைமை மத்திய அரசில் ஏற்பட்டால், இந்த நாட்டில் இருக்கிற ஒவ்வொருவரும் முஜிபுர் ரகுமான்களாக மாற வேண்டிய நிலைமை ஏற்படும் என்பதை இந்த மாமன்றத்தின் வாயிலாகச் சொல்லிக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. சி. பாண்டுரங்கன் :** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரையின்மீது நன்றி தெரிவித்து ஒருசில கருத்துக்களை மட்டும் குறிப்பாகக் கூற விரும்புகிறேன்.

நான் வட ஆர்க்காடு மாவட்டம், செங்கம் தனித் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியின் சார்பாக முன்பு இருந்தவர்கள் எல்லாம் வெளியூர்களிலிருந்து வந்து போட்டியிட்டு வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள். ஆனால் இந்தத் தடவை அந்தத் தொகுதியைச் சேர்ந்த என்னை தேர்தலில் வேட்பாளராக நிறுத்தி வைத்து, இப்போது நான் வெற்றி பெற்று வந்திருக்கிறேன். தொகுதியைச் சேர்ந்தவராக இருந்தால் தான் தொகுதியிலுள்ள மக்களுக்கும், தொகுதிகளில் முன்னேற்றத்திற்கும் பாடுபட முடியும் என்ற ஒரே எண்ணத்தில்தான் நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன்.

நமது கலைஞர் அவர்கள் அடித்தளத்தில் இருந்து வருகிற மக்களின் குரலுக்கு மதிப்பு கொடுத்து எனக்கு வாய்ப்பு கொடுத்து வெற்றி பெறச் செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தில் மட்டும்தான் அடித்தளத்தில் இருக்கும் மக்களின் குரலுக்கு மதிப்புக் கொடுக்கிறார்கள். அடித்தளத்தில் இருக்கின்ற மக்களின் உணர்ச்சிகளைப் புரிந்துகொண்டு செயல்படுகிறார்கள். அடித்தளத்தில் இருக்கின்ற மக்கள்தான் உணர்ச்சியோடு, உண்மையோடு பாடுபடக்கூடியவர்கள் என்பதைத் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். என்னுடைய தேர்விலிருந்தே இது நன்கு புலனாகிறது. நான் வெற்றி பெற்ற பிறகுதான் கலைஞர் அவர்கள் என்னைப் பார்த்தார்கள். அவருக்கே அடித்தளத்து மக்களின் உணர்ச்சிகள் நன்கு தெரியும். திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றில்தான் அடித்தளத்தில் இருக்கக் கூடிய மக்களுக்கு மதிப்புத் தரும் நிலைமை இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

என்னை எதிர்த்துப் போட்டியிட்டவர் திரு. ஆறுமுகத்தை நிறுத்தினார்கள். அவருக்கு தனிப்பட்ட சலுகை வைத்து அவரை நிற்கும்படிச் செய்தார்கள். எங்கள் கழகத்தில் எப்போதுமே அடித்தளத்தில் இருக்கிற மக்களின் குரலுக்கு மதிப்பு கொடுத்து, அந்த மக்களின் நன்மைக்காகப் பாடுபட்டு வருகிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள்கூட தலைவராக இருந்தபோது, தன்னுடன் கூடவே தம்பிமார்களை வளர்த்தார்கள். அப்படிச் செய்ததால்தான் அண்ணா அவர்கள் இல்லாத குறையை, அவரால் உருவாக்கப்பட்டவர்களால் நிரப்ப முடிந்தது. அண்ணா அவர்கள் கூறியதை அவர்களால் உருவாக்கப்பட்டவர்கள் நிறைவேற்றி வருகிறார்கள். இதை இனிமேலாவது எதிர்க் கட்சிக்காரர்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஏனென்றால் தேர்தலில் தோற்றதற்குப் பல காரணங்களைக் கூறுகிறவர்கள் இப்படிப்பட்ட காரணங்களையும் நன்றாகப் புரிந்துகொண்டால் வெற்றியைக் காண நல்ல சாதனமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

முன்பே குறிப்பிட்டதுபோல எங்கள் தொகுதியில் பல வன்முறைகள் நடந்திருக்கின்றன. அவைகளை எல்லாம் நான் பெரிதுபடுத்த விரும்பவில்லை. மேலும் கழகத்திற்கு ஆதரவு கொடுத்த முஸ்லிம் லீக் தோழர்களது—பழனியூர் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்களது வீடுகளைச் சூறையாடியிருக்கிறார்கள். பெண்களை அவமரியாதையாக நடத்தினார்கள். நான்கு பேர்களைக் காயப்படுத்தினார்கள். இதை மறக்க முடியாது.

தேர்தல் சமயத்தில் சென்னை நகரில் காங்கிரஸ்காரர்கள் ஊர்வலமாகச் சென்ற போது அண்ணா சமாதியை உடைப்போம், சிலையை உடைப்போம் என்றெல்லாம் கோஷமிட்டுச் சென்றார்கள். அது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. அண்ணா சமாதியை உடைப்பது என்றால்—அண்ணா சிலையை உடைப்பது என்றால் கழகத்திற்கு வாக்களித்த அத்தனை பேர்களின்—ஏன் உங்கள் கட்சியைச் சேர்ந்த 75 சதவிகித மக்களின் . . . .

திருமதி டி. என். அனந்தநாயகி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். அண்ணா சமாதியைப் பெயர்க்கிறோம், சிலையை உடைக்கிறோம் என்று காங்கிரஸ்காரர்கள் சொல்லாததைச் சொன்னதாகச் சொல்லிக்கொண்டுபோவது சரிதானா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஊர்வலத்தில் சொல்லிக் கொண்டு போனார்கள் என்பதாக ஆதாரம் இருப்பதனால்தான் பேசுகிறார்கள் என்று கருதுகிறேன். இதில் ஒன்றும் ஒழுங்குப் பிரச்சினை எழவில்லை. அப்படி வெளியில் இருப்பவர்கள் சொன்னார்கள் என்கிறார்.

மாண்புமிகு உறுப்பினர் 2 நிமிடத்தில் முடித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சி. பாண்டுரங்கன் : நான் கற்பனையாகவோ, கதையாகவோ சொல்லவில்லை. காங்கிரஸ்காரர் ஊர்வலத்தில் கோஷமிட்டுச் சென்றார்கள் என்றுதான் சொன்னேன். அத்தகைய நிலை ஏற்படுவது என்றால் கழகத்திற்கு வாக்களித்த அத்தனை பேர்களுடைய பிணங்களின் மீதும் அடியெடுத்து வைத்துக் கொண்டு சென்றுதான் செய்ய வேண்டியிருக்கும் என்பதாக இந்த நேரத்தில் சூளுரைத்துக் கொள்கிறேன். இனிமேலும் அப்படிப்பட்ட வார்த்தைகளை உங்கள் கட்சியில் இருப்பவர்கள் பேசாமல் இருப்பதற்கு வகை செய்ய வேண்டும் என்று கூறுகிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் தொகுதியைப்பற்றி—நான் வெற்றி வாகை சூடி வருவதற்கு உறுதுணையாக இருந்த கலைஞர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். செங்கம் தொகுதியில் பெரும்பாலான மக்கள் விவசாயிகள். விவசாய காலம் இல்லாதபோது அவர்கள் பெரிதும் வேதனைப்படுகிறார்கள். குறிப்பாக செங்கம் பகுதி வறட்சியான பகுதி. செங்கத்தில் ஒரு காகித ஆலையை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக குப்பநத்தம் அருகில் ஒரு நீர்த்தேக்கம் கட்டப்பட இருக்கிறது. முன்பே அதற்கு ஏற்பாடாகிவிட்டது. அதை விரைவுபடுத்திக் கட்டிக் கொடுத்தால் செங்கம் பகுதி பூராவும் விவசாய வளர்ச்சிக்கு சாதகமாக இருக்கும்.

அடுத்து, நீப்பத்துறை, அம்மாப்பேட்டை இரண்டுக்கும் நடுவில் வெண்ணையாறு ஓடுகிறது. நீப்பத்துறை வடாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தது. அம்மாப்பேட்டை சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தது. நீப்பத்துறையில் ஆண்டு தோறும் உற்சவம் நடக்கிறது. ஆயிரக்கணக்கான மக்கள் வருகிறார்கள். நீப்பத்துறைக்கும், அம்மாப்பேட்டைக்கும் இடையில் பாலத்தைக் கட்டிக் கொடுத்தால் அம்மாப்பேட்டை வழியாகச் செல்ல மிக வசதியாக இருக்கும். அதையும் கட்டித்தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, செங்கத்தில் இருந்து 21 மைலில் திருவண்ணாமலை இருக்கிறது. 21 மைலில் திருப்பத்தூர் இருக்கிறது. திருவண்ணாமலை, திருப்பத்தூர் ஆகிய இடங்களில்தான் ஃபையர் ஸ்டேஷன் இருக்கிறது. செங்கத்தில் தீ விபத்து என்றால் திருப்பத்தூருக்கோ, திருவண்ணாமலைக்கோ டெலிபோன் செய்து ஃபையர் என்ஜின் வருவதற்குள் சேதாரம் அதிகமாகிவிடுகிறது. ஆகவே செங்கத்திலேயே ஒரு ஃபையர் ஸ்டேஷன் ஏற்படுத்திக் கொடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன். பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி இதோடு முடித்துக் கொள்கிறேன்.

திரு. இ. எஸ். தியாகராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

புயலுக்குப் பின் அமைதி என்பது போல பெரும் தேர்தலுக்குப் பிறகு இன்று அமைதியான சூழ்நிலையில் இருக்கிறோம். இந்தச் சூழ்நிலை மட்டுமல்ல, மதிப்பிற்குரிய கலைஞர் அவர்களுடைய தலைமையின் கீழ் அமைதியான ஸ்திரமான சர்க்கார் அமைவதற்கு பேராதரவு அளித்துள்ள வாக்காளர் பெருமக்களுக்கு நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய அரசு வேளாண்மைத் துறைக்கு அதிகமான பணத்தை ஒதுக்கி செயல்பட மாமேதை அறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய வழியில் நின்று பசுமைப் புரட்சிக்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருவதற்கு நான் நன்றி செலுத்திக் கொள்கிறேன்.

அடுத்ததாக, வேளாண்மைக்கு அடுத்தபடியாக இருக்கும் தொழிலாகிய கைத்தறி நெசவுத் தொழிலுக்கு எந்த வகையில் அரசு உதவப்போகிறது என்ற விவரம் தெரிவிக்கப்படவில்லை. என்றாலும் கூட நம் கழக அரசை நம்பித்தான் நெசவாளர் பெருமக்கள் பெரிதும் இருக்கிறார்கள். நெசவாளர் குடும்பத்தில் பிறந்தவன் நான் என்பதனால் சில விவரங்களைத் தரவிரும்புகிறேன். குறிப்பாக சொல்லப்போனால் நூல் விலை அளவு இல்லாமல் உயர்ந்துவிட்டது. குறைந்தபட்ச கூலிகூடக் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. அந்த நெசவாளர் பெருமக்களுக்குத் தேவையான வசதிகளை நம்முடைய அரசு செய்து தர வேண்டுமென்று உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க அரசு பல நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. படித்து வேலை கிடைக்காத ஆசிரியர்கள் 6,500 பேர்களுக்கு வேலை கிடைக்க வழி செய்திருக்கிறது. இன்னும் பல ஆசிரியர்கள் வேலையில்லாமல் தவிக்கிறார்கள். படித்தவர்கள் மத்தியில் மட்டும் வேலையில்லாத் திண்டாட்டம் என்பதில்லை. கிராமங்களில் வாழ்கிற மக்களும் பெரிதும் வேலையில்லாமல் தவிக்கிறார்கள். நாட்டு மக்களுடைய வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க பல தொழிற்சாலைகளை உண்டாக்கி, அங்கங்கே வேலை வாய்ப்புகள் அதிகரிக்க வழிசெய்ய வேண்டும்.

வளர்ச்சி பெறாத பகுதிகள் வளர்ச்சியுற வேண்டும் என்பதற்காக ஒரு திட்டத்தைத் தீட்டி பல கோடிக்கணக்கான பணத்தை இந்த அரசு ஒதுக்கியிருப்பதை நான் பாராட்டுகிறேன். எனது தொகுதியாகிய திருத்தணி பல்லாண்டுகள் ஆந்திர மாநிலத்தில் கேட்பாரற்றுக் கிடந்து 1960-இல் சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சி. அவர்களுடைய போராட்டம் காரணமாக அந்தப்

பகுதி தமிழகத்தோடு சேர்ந்தது என்பது உலகறிந்த உண்மை. அந்தப் பகுதி மிகவும் பிற்பட்ட நிலையில்தான் இருக்கிறது. ஆகவே இந்தத் திருத்தணிப் பகுதியையும் அந்தத் திட்டத்தின் கீழ் சேர்த்து அது முன்னேற்றம் அடைவதற்கு உதவவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நகர்ப்புறங்களில் உள்ள குடிசைப்பகுதிகளை முன்னேற்றுவதற்கு ஒரு தனித் திட்டமிட்டிருக்கிறது அரசு. அதற்காகப் பணமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று கிராமப்புறங்களில் இருக்கிற குடிசைப் பகுதி வளர்ச்சியுற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதையும் மறந்துவிடக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தவிரவும் கிராமப்புறங்களில் கிளை நூலகங்கள் திறக்கப்படுவது நிறுத்தப்பட்டிருக்கிறது. கடந்த 3 ஐந்தாண்டுத் திட்டங்களில் மானியம் வழங்கப்பட்ட காரணத்தினால் கிராமப்புறங்களில் நூலகங்கள் திறக்க வசதியாக இருந்தது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அது நிறுத்தப்பட்டிருக்கிறது. மீண்டும் அந்த மானியங்களைத் தொடர்ந்து அளித்து கிராமப்புறங்களிலும் கிளை நூலகங்கள் திறக்க வசதி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து திருத்தணி கலைக் கல்லூரியில் பி.ஏ. வகுப்புத் துவங்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவரவர்களே, நடந்து முடிந்த தேர்தலிலே மக்கள் ஒருமுகமான முடிவிற்கு வந்திருக்கிறார்கள். நாட்டிலே ஒரு பெரும் வளர்ச்சியும், மாற்றமும் வரவேண்டுமென்ற கருத்தை வாக்காளப் பெருமக்கள் நமக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த உத்தரவை நிறைவேற்ற இந்தச் சபையிலேயிருக்கும் நாமெல்லாம் பணி 11
புரியக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்தத் தேர்தலில் இருக்கும் ஒரு உண்மையை நாம் மறந்துவிட முடியாது. நாட்டிலே மிகத் தீவிரமான மிதவாதமும், மிகத் தீவிரமான முற்போக்கு வாதமும் தேவையில்லை என்று மக்கள் தீர்ப்பளித்திருக்கிறார்கள்.

ஆகையால் மிகத் தீவிரமான மிதவாதப் போக்குடையவர்கள் இந்த நாட்டிலே தங்களை வளர்த்துக் கொள்ள முயற்சி எடுத்துக்கொள்ளும் முறையிலே இந்த விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம்பற்றி அதிகமாகப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். இந்தச் சபையிலேயும் பேசப்பட்டது, வெளியிலேயும் பத்திரிகைகளிலேயும் பேசப்பட்டது. என்னுடைய கருத்து, இன்றிருக்கின்ற நிலைமையிலே விகிதாச்சாரப் பிரதிநிதித்துவத்தைப்பற்றிப் பேசுவது தவறு, அதைப்பற்றிப் பேச வேண்டியதில்லை, அந்த முறை நம்நாட்டிற்கு இப்பொழுது தேவையில்லை என்று நான் கருதுகிறேன். ஏனென்றால் இந்த நாட்டிலே அதிகப்படியான அரசியல் கட்சிகள் தோன்றியிருக்கின்றன, தோன்றிக் கொண்டு இருக்கின்றன. இம்மாதிரி அதிகப்படியான அரசியல் கட்சிகள் இருப்பது நாட்டினுடைய ஜனநாயக மரபுக்கு நல்லதாக இருக்காது. ஆகையால், கட்சிகள் எல்லாம் குறைய வேண்டும். ஆகவே, இப்பொழுதிருக்கும் முறையின்படி வைத்தால் மக்களே எந்தெந்தக் கட்சிகள் மக்களுக்குத் தேவையில்லை என்று கருதுகிறார்களோ அவைகளை ஒதுக்கிவிடவும், எந்தக் கட்சியை மக்கள் தேவையென்று கருதுகிறார்களோ அந்தக் கட்சிகளை ஆதரிக்கவும்

இப்படியாக இரண்டு மூன்று கட்சிகளை ஏற்படுத்திக் கொள்ள வாய்ப்புகள் இப்பொழுதிருக்கும் தேர்தல் முறையில் இருக்கிறது. ஆனால் இப்பொழுது இருப்பதை மாற்றி விகிதாச்சார அடிப்படை என்று வைத்தால், நானே ஒரு கட்சியை ஏற்படுத்தி, தலைவர் என்று வைத்துக் கொண்டு 10,000 அல்லது 15,000 ஓட்டுகளைப் பெற்றுக்கொண்டு நானும் மெம்பராக வந்துவிடலாம். எனவே, இப்படி சிறுசிறு கட்சிகள் தோன்றிவிடுவதற்கு வாய்ப்புகள் ஏற்பட்டு விடும். ஆகையால் முதலமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், விகிதாச்சாரப் பேச்சைப்பற்றி மறந்துவிடுங்கள் பத்து வருஷங்களுக்குக் கட்சிகளெல்லாம் குறைந்து ஓரிரு கட்சிகள்தான் என்ற நிலை வந்தால் இப்பொழுது இருக்கும் முறையை மாற்றி விகிதாச்சார அடிப்படைப்பற்றிப் பேசிக் கொள்ளலாம். ஆகவே, அந்த முறையில் பேச வேண்டாமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நிதி நிலை அறிக்கையிலே 35 கோடி ரூபாய்க்கு துண்டு விழுகிறது. மொட்டுமொத்தமாக 35 கோடி ரூபாய் துண்டு விழுகிறது. இதற்கான வழிவகைகளைச் செய்தாக வேண்டும். என்னைப் பொறுத்தவரையில், என்னுடைய கணக்குப்படி இந்தப் பற்றுக்குறையானது அடுத்த ஜூன் மாதத்திலே 35 கோடி ரூபாய் என்பது 60 கோடி பற்றுக்குறை என்று இருக்க வேண்டும். அந்த 60 கோடி ரூபாயை ஈடு செய்ய என்ன செய்ய வேண்டுமென்ற சிந்தனையை அமைச்சரவை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். 35 கோடிக்கு மேல் 25 கோடி நான் அதிகமாகக் கூறுவது, தாழ்ந்த நிலையிலே இருக்கும் விவசாயக் குடிமக்களுக்குப் பல சமூகப் பாதுகாப்புகள் அளிக்க வேண்டும், வெகுநீண்ட காலமாகப் பாதுகாப்பற்ற முறையிலேயிருக்கும், சொத்துக்கள் அற்ற விவசாயக் குடிமக்களுக்கு, சொத்துக்களற்ற தொழிலாளர்களாகயிருந்தாலும் சரி, அவர்கள் எந்தவிதமான பாதுகாப்புமற்ற நிலையிலே திரிந்து கொண்டிருப்பவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தாகவேண்டியது இந்த அரசாங்கத்தினுடைய கடமை, ஏழை எளிய மக்களின் வாக்குகளைப்பெற்ற நம்முடைய கடமை, அந்தக் கடமையை நிறைவேற்ற 25 கோடி ரூபாயைத் தனியாக வரக்கூடிய பட்ஜெட்டிலே ஒதுக்கித்தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த 25 கோடி ரூபாயை என்ன செய்வது, எப்படிப் பிரிப்பது என்று கேட்கலாம். என்னுடைய கருத்து, இந்த நாட்டிலே உழைக்கின்ற ஒரு விவசாயக் கூலி, சொத்தில்லாதவன், தான் உழைத்து உழைத்துத் தனக்குக் கிடைத்த கூலியைக் கொண்டு தன் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறான். அப்படி உழைக்கக்கூடியவன் 60, 65 ஆண்டுகள் கழித்து வேலை செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டால் அவன் நாட்டிலே பிச்சையெடுத்துச் சாப்பிடக் கூடிய நிலையில் இருக்கிறான். முதுகெலும்பாக இருந்து, தொழிலை வளர்த்து, பொருளாதாரம் வளர, மேலேயிருப்பவர்களுக்கு உணவு அளித்து பெரும் பணியாற்றிக் கொண்டிருந்தவன் 65 ஆண்டுகளுக்குப் பிறகு உழைக்க முடியவில்லை என்ற நிலையில், பிச்சையெடுக்கும் நிலையில் அவனை இந்த நாட்டிலே வைக்கக் கூடாது. நாம் முதியோர் பென்ஷன் கொடுக்கிறோம், அனாதைகளாகயிருப்பவர்களுக்குக் கொடுக்கிறோம் என்று சொல்லி எந்தவிதமான உறவினர்களும் இல்லாதவர்களுக்குத்தான் கொடுக்கிறோம் என்று கொடுக்கிறோம். அதை மாற்றி சொத்தில்லாதவர்கள் யாராகயிருந்தாலும் 65 வயதிற்கு மேல் ஆகி விட்டால் அவன் அனாதைதான். ஏன் அப்படிச் சொல்கிறேன் என்றால், அவனுடைய மகன், பிள்ளைகள் இருந்தால் அவர்கள் சம்பாதிக்கக்கூடியது அவனவன் மனைவி மக்களைக் காப்பாற்றுவதற்குத்தான் போதுமே தவிர, தாய் தகப்பனைக் காப்பாற்ற விவசாயக் கூலியாக இருப்பவனால் முடியாது. ஆகவே, அவன் பிச்சையெடுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. சொத்து இல்லாதவன், இந்த நாட்டிலே உழைப்பவன், 65 வயது ஆகியபிறகு உழைக்க முடியாது என்ற நிலையில் சர்க்கார் அவர்களுக்கு முதியோர் பென்ஷன் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுப்பதை எடுத்துக் கொண்டு பார்த்தால் சுமார் 15 கோடி, 18 கோடி ரூபாய் ஆகும் என்று தெரிகிறது. நான் கணக்குப் போட்டுப் பார்த்ததிலே 2 சதவிகிதம் இருக்கிறார்கள்.

ஒருவன் தொழிலாளியாக இருக்கிறான், தொழிற்சாலையிலே வேலை செய்பவனுக்குப் பாதுகாப்பு இருக்கிறது. ஆனால் விவசாயி இன்றைக்கு ஒருவரிடம் வேலை செய்கிறான், நாளைக்கு ஒருவரிடம் வேலை செய்கிறான், மறுநாள் வேறொருவரிடம் வேலை செய்கிறான். அப்படி வேலை செய்பவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். அதற்காக 6 கோடி ரூபாய் வருஷத்திற்குச் செலவாகும் என்று கருதுகிறேன். ஆகவே, 25 கோடி ரூபாய், இம்மாதிரி சொத்து இல்லாமல் தனியாக வேலை செய்து எந்தவிதமான பதுகாப்பும் இல்லாமல் இருப்பவர்களுக்கு ஒதுக்கித்தர வேண்டிய அளவிற்கு அடுத்த பட்ஜெட் 60 கோடி ரூபாய் துண்டு விழக்கூடிய பட்ஜெட்டாக இருக்கும் என்று எண்ணுகிறேன். இதற்கான வழிவகைகளைக் காண அரசாங்கம் முயற்சிக்க வேண்டும், அமைச்சரவை முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்தக் கிராமப்புறத்திலே இருப்பவர்களுக்கு, விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அதிகப்படியான வசதிகள் செய்துதர வேண்டுமென்று சொல்லும்பொழுது நாட்டிலே பலவிதமான தொழில் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும் என்று இந்தச் சபை ஒத்துக் கொள்ளும் என்று கருதுகிறேன்.

அதுமட்டுமல்ல, தொழிற்சாலைகளில் அதிகமாக உற்பத்தியைப் பெருக்கும் நேரத்தில் அந்தத் தொழிற்சாலையில் உற்பத்தியான பொருள்களை 70 சதவிகிதம், 73 சதவிகிதமாக இருக்கும் கிராமப்புறத்திலேயிருப்பவர்கள்தான் வாங்க வேண்டும். அவர்கள் வாங்கக்கூடிய அளவிற்கு அவர்களுக்குப் பொருளாதார வசதி அதிகரித்தாலொழிய நாட்டிலே தொழில் வளர்ச்சி அதிகம் ஏற்படாது. தொழில் வளர்ந்தாலும், தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் சாமான்களை வாங்கிப்பயன்படுத்தக்கூடிய வகையிலே சாதாரண மக்களெல்லாம் வசதிபடைத்தவர்களாக இருக்க வேண்டும். அதற்கான அடிப்படையிலே திட்டம் தீட்டியாக வேண்டும். விவசாயிகளுக்குப் பரவலாகக் கிடைக்கும் முறையில் நாம் காரியங்களைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்ய அரசாங்கம் முன்வரும்பொழுது பல அடிப்படையான காரியங்களை அரசாங்கம் செய்ய வேண்டியிருக்கிறது. அந்தக் காரியங்களைச் செய்ய இப்பொழுதிருந்தே முன்னின்று வேகமாக முயற்சியெடுத்தால்தான் குறைந்தபட்சம் இதற்கு 10 ஆண்டுகளாகும். ஆகவே, இப்பொழுதே காலம் தாழ்த்தாமல் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது நிலச்சீர்திருத்தம் கொண்டு வருகிறோம். உயர்ந்தபட்சம் 15 ஏக்கரா என்று இருக்கிறது. அதில் பல லூப் ஹோல்ஸ் இருக்கின்றன.

அதைத் தவிர்க்க வேண்டும். நிலச்சீர்திருத்தத்திலே விலக்குகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அந்த விலக்குகளைத் தவிர்த்து சட்டத்திற்கு உட்படுத்த வேண்டும்.

அடுத்தபடியாக, உழுபவனுக்கும், அரசாங்கத்திற்கும் இடையிலே யாரும் இருக்கக்கூடாது. உழுபவனுக்கும், அரசாங்கத்திற்கும் நேரடியாகத் தொடர்பு இருக்கவேண்டும். நிலச்சீர்திருத்தத்தை அமுலாக்க வேண்டியிருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது, குத்தகைக்காரர் இனம் என்றில்லாமல் குத்தகையை யார் செய்கிறார்களோ அவர்களே உரிமையாளர்களாக ஆகும் நிலையைப் பரிசீலிக்க வேண்டும். உரிமை ஒருவருக்கு இருந்து, குத்தகை ஒருவர் பேரருக்கு இருந்தால் அந்த நிலத்தில் அதிகக் கவனம் செலுத்த முடியாமல், உற்பத்தியை இரட்டிப்பாக்கும் சக்தி அந்த விவசாயிக்கு இல்லாமல் போகிறது. ஆகவே, அவர்களை உடைமையாளர்களாக ஆக்க வேண்டியது தலையாய கடமையாகும். அது இந்த நிலச்சீர்திருத்த முன்னேற்றத்திற்கு ஒரு முன்னோடிக் கொள்கையாக இருக்கும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நிலமற்ற அனைவருக்கும் மனைப்பட்டாக்கள் வழங்க வேண்டும். நிலமற்றிருப்பவர்கள், எந்தவிதமான சுதந்திரமும் அற்றநிலையில் பிறருடைய தயவிலே வாழவேண்டிய துர்ப்பாக்கியமான நிலைமை இருக்கிறது. சுதந்திரமாக வாழக்கூடிய நிலைமை மாறி, ஒரே ஒருவனுக்குக் கட்டுப்பட்டு வாழும் நிலை எந்தக் குடிமகனுக்கும் இருக்கக்கூடாது. ஆகவே, அதற்கேற்ற வகையிலே, நிலமில்லாதவர்களுக்குக் குறைந்தபட்சம் மனைப்பட்டாக்களாவது வழங்க வேண்டும். அதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இது பெரிய சிரமமாக இருக்கும் என்று நான் கருதவில்லை. அதற்கு ஓரளவு தொகை கொடுக்க வேண்டியிருக்கும். உரிமையாளர்களுக்குக் காம்பன்சேஷன் கொடுக்க வேண்டியிருக்கும். எப்படியும் நிலமில்லாதவர்களுக்கு உடனடியாக பத்து செண்ட் நிலமாவது கொடுத்தால்தான், ஏதாவது சிறிய குடிசை போட்டுக்கொண்டு, ஏதோ ஒரு காய்கறி, ஒரு தென்னை மரம், மாமரம் என்று வைத்துக்கொண்டு மாதம் 10, 15 ரூபாய் சிரமமில்லாமல் கிடைக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தால்தான் சாதாரண மக்களின் வாழ்க்கையை உயர்த்த நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டதாக இருக்கும்.

ஆகவே, இதிலே அரசாங்கம் மிகத் தீவிரமாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு பக்கத்திலே விவசாயத்தின் வளர்ச்சிக்குத் தீவிரமாக முயற்சி எடுக்கிறபோது நாட்டிலே உழுகின்றவர்களுக்கு வேலை இல்லை என்று எண்ணுகின்ற நிலைமை இருந்து கொண்டு இருக்கிறது. பாடுபடுகின்றவர்களுக்கு நிலம் இல்லை. இருக்கின்ற நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன. அது என்ன காரணம், ஏன் தரிசாகக் கிடக்கிறது என்றால் அது எனக்குப் பட்டா நிலம். அதை நானதைச் சாகுபடி செய்தாலும் செய்வேன், சாகுபடி செய்யாமல் போட்டு வைத்தாலும் போட்டு வைப்பேன், தரிசாகப் போட்டு வைக்கிற உரிமை எனக்கு உண்டு என்று பலர் இருக்கிறார்கள். இதை நாம் அனுமதிக்கிற வரையில் இந்த நிலைமை மாறாது. இதை இனியும் அனுமதிக்கக் கூடாது. நாட்டின் வளர்ச்சிக்கு, விவசாய வளர்ச்சிக்கு இது மிகவும் பாதகமானதாகும். சொத்து உரிமை என்ற தத்துவத்தை வைத்துக் கொண்டு நிலம் யாருக்கும் பயன்படாமல் இருக்கிற கொடுமையை இனியும் அனுமதிக்க முடியாது. நிலம் யாருக்கும் பயன்படாமல் ஒரு பக்கத்திலே தரிசாகக் கிடக்கிறது. அந்த நிலம் யாருக்குச் சொந்தமாக இருந்தாலும் இதை இனியும் தரிசாகப் போட்டு வைக்காமல் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படிப்பட்ட நிலங்களைக் கட்டாயமாகச் சாகுபடிக்குக் கொண்டு வர ஒரு சட்டம் இருக்கிறது என்று கூறுகிறேன். இதுவரையிலே அந்தச் சட்டம் அமுலாகாமல் இருந்தால் அதை அமுலாக்க அரசாங்கம் முயற்சிக்க வேண்டும்.

இம்மாதிரி ஏற்பாடு பண்ணுவது தமிழகத்தைப் பொறுத்தவரையில் பயன் உள்ளதாக இருக்கும் என்று எண்ணுகிறேன். ஒரு பக்கத்திலே வளமான பகுதியில் இருப்பவர்கள் நன்றாக இருக்கிறார்கள். வருமானம் அதிகமாக வருவதனாலே சௌக்கியமாக இருக்கலாம். ஆனால் கூலி வேலை செய்கிறவர்களுக்குப் பாதகம் ஏற்படுகிறது. என்ன காரணம் என்றால் வறட்சி மிகுந்த பகுதியில் இருந்து பெரும்பாலான மக்கள் வளமான பகுதிக்கு வருகிறபோது இங்குள்ள கூலி ஆட்களுக்கு வருவாய் குறைகிறது என்ற நிலைமை ஏற்படுகிறது. எனவே வறட்சியான பகுதிகளுக்கு ஒரு திட்டத்தைப் போட்டு வேகமாக முயற்சி எடுத்து அமுல் செய்ய வேண்டும். அந்தத் திட்டத்தைச் சரியான முறையிலே நடத்துவதற்கு ஒரு போர்டைத் தனியாகப் போட வேண்டும். நீர் போர்டு, குடிசை மாற்றியமைப்பு போர்டு என்று போர்டுகள் இருப்பது போல இதற்கும் ஒரு போர்டு அமைத்துச் செயல்படுத்த வேண்டும். வறட்சி மிகுந்த பகுதியில் வளம் செய்வதற்கு, அங்கே உற்பத்தியைப் பெருக்குவதற்கு, வேலை வாய்ப்பைப் பெருக்குவதற்கு, இப்படிப்பட்டக் காரியங்களைச் செய்வதற்கு முன் முயற்சி எடுப்பதற்கு தனியாக ஒரு போர்டு நியமிக்க வேண்டும். இதற்கான கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரையிலே செயற்கை உரங்களை அதிகமாகப் போட்டு விவசாயம் பண்ண வேண்டும் என்று கூறி இருக்கிறார்கள். இரசாயன உரங்களைப் போட்டு உற்பத்தியை அபிவிருத்தி செய்ய முடியும். ஆனால் அதற்காக இயற்கை உரங்களை உபயோகப்படுத்துவதைப் பிரசாரம் செய்யாமல் குறைத்து விடக் கூடாது. இப்போது இந்தப் பிரசாரம் குறைந்து இருக்கிறது. அரசாங்கத் தரப்பில் இருந்து இந்தப் பிரசாரத்தை வலிவாகச் செய்ய வேண்டும். வெறும் இரசாயன உரத்தை மட்டும் போட்டு சாகுபடி செய்வோமானால் வளம் குறைந்து விவசாய உற்பத்தி குறைந்து போனால் நாம் ஆச்சரியப்படக் கூடாது. இயற்கை உரங்களைச் சேர்த்தாற்போல உபயோகப்படுத்த, திட்டமிட்ட முறையிலே அரசாங்கம் பிரசாரம் செய்ய முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் இன்றைக்கு நமக்கு மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது. நிறைய உணவு உற்பத்தியாகிறது. 10 லட்சம் டன் அதிகமாக உணவு உற்பத்தியாகிறது. நாம் இலக்கை எட்டிப் பிடித்து விட்டோம். இருந்தாலும் இயற்கை உரத்தைப் பயன்படுத்தாமல் விட்டு விடுவோமானால் இந்த உற்பத்தி பாதிக்கப்படும். இது என்னுடைய அனுபவம். இரசாயன உரத்தைப் பயன்படுத்துவதனால் நிலத்திற்கு வளம் அதிகரிக்கிறது என்கிறார்கள், அப்படியில்லை. இயற்கை உரத்தைப் பயன்படுத்தாமல் செயற்கை உரத்தை மட்டும் பயன்படுத்தி வந்தால், பூமி இழக்கும் உரச்சத்தை ஈடு செய்யாமல் போனால் உற்பத்தி குறைந்து போகும். நாம் திட்டமிடுவது நிறைவேறாமல் போய்விடும். இரசாயன உரத்தைவிட இன்னும் அதிகமாக இயற்கை உரத்தைப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அரசு இதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமப் புறங்களில் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம்தான் பயன் அடைய முடியும். கூட்டுறவுச் சங்கங்களின் மூலம்தான் பல காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. நம்முடைய தமிழ்நாட்டை எடுத்துக் கொண்டால் விவசாயம் கூட்டுறவு முறையில் இன்னும் சரியான வளர்ச்சி அடையவில்லை. பஞ்சாப் மாநிலத்தோடு ஒப்பிடும்போது நம்முடைய வளர்ச்சி மிகக் குறைவு. 40 லட்சம் சாகுபடி செய்யப்படுகிற பஞ்சாப் மாநிலத்தில் 60 கோடி கூட்டுறவுத் துறை மூலம் கடன் கொடுக்கப்படுகிறது. 60 லட்சம் சாகுபடி செய்யப்படுகிற நம்முடைய மாநிலத்தில் 50 கோடி செலவு செய்யப்படுகிறது. இன்னும் தீவிரமாக இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படவில்லை. தமிழகத்திற்குத் தேவையான அளவிற்குக் கடன் கிடைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யும் என்று நம்புகிறேன். கிராமப்புறங்களில் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் இருந்தாலும் விவசாயத்திற்கு மட்டும்தான் இன்றைக்குக் கடன் உதவி கொடுக்கப்படுகிறது. சிறுசிறு தொழில்களுக்கு அதிகமாகக் கிடைப்பதில்லை. அவர்களுக்கும் கடன் கிடைக்க வழி செய்ய வேண்டும். அப்படிக் கிடைப்பதற்கு 'பை லா'-வைத் தகுந்த முறையில் மாற்ற வேண்டும்.

அடுத்து, நிலவரியை ரத்து செய்து இருக்கிறோம். நிலம் வைத்து இருப்பவர்களிடமிருந்து இனிமேல் பஞ்சாயத்துகளே ஏதாவது ஒரு வரி போன்ற தொகையை வசூல் செய்து கொள்ள வழி செய்ய வேண்டும். ஏனென்றால் இன்றைக்குப் பஞ்சாயத்துக்கள் தங்களுடைய வருவாயில் இருந்து எல்லாக் காரியங்களையும் செய்ய முடியவில்லை. பஞ்சாயத்துக்களுக்கு அதிக வருமானம் வருமானால் அவைகளின் சிரமம் குறையும். பஞ்சாயத்துக்களுக்கு வருமானம் குறைவாக இருக்கிற காரணத்தினால் மக்களுக்கு எந்தவிதமான நன்மையான காரியமும் செய்ய முடியவில்லை. எனவே, அரசாங்கம் அவற்றிற்கு அதிகப் படியான வருமானம் வருவதற்கு வழி செய்ய வேண்டும்.

கிராமப்புறங்களில் பஞ்சாயத்துக்கள் மண்வேலைகளைத் தவிர வேறு வேலைகளைச் செய்ய முடியவில்லை. கிராமப்புறங்களில் இன்றைக்கு வேலை செய்கிறவர்கள் நோய்நொடி வந்து 10 நாட்கள் படுத்து விட்டால் அவர்களின் குடும்பத்திற்கு எந்தவிதமான பாதுகாப்பும் கிடையாது. அந்தக் குடும்பங்கள் நிர்க்கதியாக விடப்படுகின்றன. அவர்களுக்குச் சமூகப் பாதுகாப்புக் கிடையாது. அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தால் நலமாக இருக்கும். அப்படி நோய்வாய்ப்பட்டவர்களுக்கும், அவர்களின் குடும்பத்திற்கும் பஞ்சாயத்தில் இருந்து உதவி செய்கிற சூழ்நிலைமைகள் ஏற்படும். இதைச் செய்யவில்லை என்றால் அவர்களுக்குப் பாதுகாப்புக் கிடையாது. உழைக்கின்றவனை இனி மேலும் இப்படி வாழ்வதற்கு வழி இல்லாத நிலையில் வைத்துக் கொண்டு இருக்க முடியாது. அதற்கு ஏதாவது வழிவகை செய்தாக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாய மறு நிதிக் கார்ப்பொரேஷன் 22 கோடி ரூபாயை பம்பு செட், டியூப் வெல் ஆழ் கிணறு ஆகியவைகளுக்காகச் செலவு செய்ய முயற்சி செய்யப் படுவதாக இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதை வரவேற்கிறேன். கடன் கொடுப்பது கூட்டுறவுச் சங்கம், லேண்ட் மார்ட்கேஜ் பாங்கி, கிணறு வெட்டுவதைப் பார்ப்பது இன்ஜினியர். மின்வசதி கொடுப்பது எலெக்டிரிசிடி போர்டு. இப்படி மூன்று பேரிடத்திலே அதிகாரம் இருப்பதனால் கோ ஆர்டினேஷன் கிடையாது. 10 ஆயிரம் கடன் வாங்கி டியூப் வெல் வெட்டுகிறேன். இந்தத் தொகையை 20 ஆண்டுக் காலத்தில் திருப்பிக் கொடுக்க வேண்டும். இந்தக் கிணறுகள் 20 ஆண்டுகள்தான் தண்ணீரைக் கொடுக்கும்

என்று கியாரண்டி சொல்கிறார்கள். இப்படி 20 ஆண்டுகளில் திருப்பிக் கொடுப்பது என்றால் வருடத்திற்கு 500 ரூபாய் ஆகிறது. இப்படி டியூப் வெல் வெட்டி இரண்டு ஆண்டுகள் கழித்து மின் இணைப்புக் கொடுப்பதால் 1,000 ரூபாய் நஷ்டம் ஆகிறது. ஆகவே விவசாயத்திற்குப் பயன்படாத நிலைமை இருக்கிறது. வருமானம் இல்லாமல் இரண்டு ஆண்டுகள் இருக்க வேண்டியிருக்கிறது. எனவே இந்த மூன்று டிபார்ட்மெண்ட்டுகளையும் இணைத்து கிணறு வெட்டினவுடன் மின்சாரம் கிடைக்க ஏற்பாடு செய்தோமானால் எந்த விதமான சிரமமும் இருக்காது. எனவே, இதில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறு தொழில்களைப் பற்றி அதிகமாகப் பேசப்படுகிறது. சிறு தொழில்கள் ஆரம்பிக்கப்பட வேண்டியது மிக மிக அவசியம். சிறு தொழில்களை ஆரம்பிக்கிறார்கள். ஆனால் அதற்கு வேண்டிய வசதி காலாகாலத்தில் கிடைக்காத காரணத்தினால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். லைசென்சு வாங்குவதற்கு ஹெல்த் கமிட்டியின் அனுமதி வேண்டியிருக்கிறது. இந்த அதிகாரம் முனிசிபாலிடியிடம் இருக்கிறது. அதை வாங்குவதற்குள் போதும் போதும் என்று ஆகிவிடுகிறது. ஏன்டா இந்தத் தொழிலைச் செய்ய வந்தோம் என்று எண்ணுகிற நிலைமை ஏற்பட்டு விடுகிறது. இந்த புரோசீஜரை மாற்றி அமைக்க வேண்டும். தொழில் செய்ய விரும்புகிறவர்கள் தொல்லைகளுக்கு ஆளாகாத முறையில் வழிவகை செய்தாக வேண்டும். உற்பத்தித் திறன் குழு என்று ஒன்றை ஏற்படுத்தி, இந்தக் குழு தொழில் ஆரம்பிக்கிறவர்களுக்கு உதவி செய்வதற்கு வழி செய்ய வேண்டும். அரசாங்கம் இந்தக் குழுவிற்கு நல்ல உதவி கொடுக்க வேண்டும். இப்படி இல்லாத காரணத்தினால் ஏதோ தொழில் செய்வோம் என்று ஆரம்பித்து 10 ஆயிரம், 15 ஆயிரம் என்று போட்டு ஒரு தொழிலைச் செய்கிறேன் என்று ஆரம்பித்து தங்கள் சக்திக்கு மீறிச் செய்ய ஆரம்பித்து முறிந்து விடுவார்கள். தங்களுடைய பணத்தையும், நேரத்தையும் வீணாக்கி கொள்வார்கள்.

"உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்."

என்று வள்ளுவர் பெருந்தகை கூறியிருக்கிறார்கள். தன் சக்தி என்ன, என்ன தொழிலை ஆரம்பிக்கலாம், எந்த இடத்தில் ஆரம்பிக்கலாம், என்னென்ன மூலப் பொருள்கள் கிடைக்கும், விற்பனை வசதி எப்படியிருக்கிறது என்பதுபற்றியெல்லாம் அறிவுரை வழங்க உற்பத்தித் திறன் குழுக்களை ஒவ்வொரு தாலுகா மட்டத்திலும் ஏற்படுத்தவேண்டும். இப்போது தொழில் துறை இருக்கிறது. ஒருவர் புதிதாக ஒரு தொழில் ஆரம்பிக்கிறேன் என்றால் அவர்கள் சொல்வதைக் கேட்டு ஆரம்பித்தால் வந்தது வினை. காரணம், அவர்களுக்கு அதில் அனுபவம் இல்லை. எது எதையோ கடிதாசியில் எழுதி வைத்துக் கொண்டு சொல்கிறார்கள். நான் இதில் அடிபட்டவன், ஆகவேதான் சொல்கிறேன். அவர்கள் சொல்வதற்கும் யதார்த்த நிலைக்கும் பொருத்தமே இல்லை. அவர்கள் சொல்லி நான் ஆரம்பித்தேன், லாஸதான் ஏற்பட்டது.

தொழில் துறையில் ஒரு லிஸ்ட் வைத்திருக்கிறார்கள். அதன்படி ஆரம்பித்தால்தான் கடன் கொடுப்போம் என்று சொல்கிறார்கள். அப்படி இருக்கக் கூடாது. சிறிய வியாபாரம் செய்கிறவர்களுக்கும் வசதி செய்து கொடுக்க வேண்டும். இந்த லிஸ்டில் உள்ளபடி தொழில் செய்கிறவர்களுக்குத்தான் உதவி கொடுப்போம் என்ற நிலை இருக்கக் கூடாது. எந்தத் தொழில் ஆரம்

பித்தாலும் ரூ. 4,000, 5,000 என்று கடன் உதவி அளிக்கவேண்டும். எந்தத் துறையில் முயற்சி எடுக்கிறார்களோ அந்தத் துறையில் அவர்களுக்கு எல்லா உதவிகளும் அளிக்கப்படுதல் வேண்டும்.

அடுத்தபடியாக, சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் ஆரம்பிக்க இருப்பதை வரவேற்கிறேன். அந்தக் கழகமும் இப்படி ஒரு லிஸ்டைப் போட்டு இந்தத் தொழில்களை ஆரம்பித்தால்தான் உதவி கொடுப்போம் என்று சொல்லாமல் எந்தத் தொழிலை ஆரம்பிக்க முன்வருகிறார்களோ அதை ஆராய்ந்து அவர்களுக்கு உதவி செய்யவேண்டும். 'டென் இயர் ப்ரோக்ராம்' என்று போடப்பட்டிருக்கிறது. 'ஃபைவ் இயர் ப்ரோக்ராமை' ஆல் இந்தியா லெவலில் செய்தார்கள். அப்படியில்லாமல் கீழ் மட்டத்திலிருந்து திட்டத்தைப் போட வேண்டும். மேல் மட்டத்திலிருந்து போட்டு கீழே சுமத்தக்கூடாது. கிராம லெவலில் ஒரு திட்டம், ப்ளாக் லெவலில் ஒரு திட்டம், மாவட்ட லெவலில் ஒரு திட்டம், ஸ்டேட் லெவலில் ஒரு திட்டம் என்று செய்யவேண்டும். இவ்வளவு ரூபாய்க்கு உட்பட்டதைக் கிராம லெவலில் செய்யவேண்டும், இவ்வளவு ரூபாய்க்கு உட்பட்டதை ப்ளாக் லெவலில் செய்யவேண்டும், இவ்வளவு ரூபாய்க்கு உட்பட்டதை மாவட்ட லெவலில் செய்யவேண்டும், இவ்வளவு ரூபாய்க்கு மேல் ஸ்டேட் லெவலில் செய்யவேண்டும் என்று இருக்கவேண்டும். அந்த முறையில் இந்த 'டென் இயர் ப்ரோக்ராம்' தயாரிக்கப்பட வேண்டும்.

அடுத்தபடியாக நிர்வாகச் சீர்திருத்தம் என்று இருக்கவே கூடாது, 'ரிஃபார்ம்ஸ்' என்றிருக்கக்கூடாது. நிர்வாகத்தை 'ரீ கன்ஸ்ட்ரக்ட்' செய்ய வேண்டும், அதாவது புனரமைப்புச் செய்யவேண்டும். 'ரிஃபார்ம்ஸ்' என்பதினால் ஒன்றும் செய்துவிட முடியாது. காரணம், இன்றுள்ள நிர்வாக இயந்திர அமைப்பு அப்படி இருக்கிறது. அதை அப்படியே வைத்துக் கொண்டு பெரிய வளர்ச்சியை நாம் செய்துவிட முடியாது. ஆகவே 'ரிஃபார்ம்ஸ்' என்பதை விட்டுவிட்டு 'ரீ கன்ஸ்ட்ரக்ஷன்' செய்ய வேண்டும். ஒரு புதிய அமைப்பை உருவாக்க வேண்டும்.

என் வீட்டு வயலுக்குத் தண்ணீர் பாயவில்லை என்பதற்காக நான் சென்னை வரை வந்து குறையைப் போக்கிக் கொள்ள வேண்டுமென்ற நிலை இருக்கக் கூடாது. ஆகவே கீழ் மட்டத்திலேயே அதிகப்படியான அதிகாரங்களைக் கொடுக்க வேண்டும்.

இன்று எந்த ஒரு அதிகாரியும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளத் தயாராயில்லை. இந்த அதிகாரியிடம் சென்றால் அந்த அதிகாரியிடம் போ என்கிறார், அவரிடம் போனால் இன்னொரிடம் போ என்று சொல்கிறார், இப்படி கவர்ன்மெண்ட்வரை தள்ளிவிடுகிறார்கள். ஆக, ரெஸ்பான்ஸிபிலிட்டியை ஃபிக்ஸ் செய்யமுடியாத ஒரு நிலை இருக்கிறது. ஆகவே தாலுகா லெவலில், ப்ளாக் லெவலில் இன்னின்ன காரியங்களுக்கு இன்னின்ன அதிகாரிதான் பொறுப்பு என்றளவில் அதிகாரங்கள் வரையறை செய்யப்பட வேண்டும். எல்லாக் காரியங்களுக்கும் மேல் மட்டம் வரை வரவேண்டும் என்ற நிலையை வைத்துக் கொள்ளக் கூடாது. ஆகவே நிர்வாகப் புனரமைப்பு செய்யப்படவேண்டும். (மணியடிக்கப்பட்டது)

எஜுகேஷனல் ரிஃபார்ம்ஸ் பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. கல்வி முறை அடியோடு மாற்றியமைக்கப்பட வேண்டும். இன்று காலையில் கேள்வி நேரத்தின்போது இதுபற்றிப் பல கேள்விகள் கேட்கப்பட்டன. இன்று பெரிய

கல்வி நிபுணர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களுக்கு நான் மரியாதை செலுத்துகிறேன். இந்த நாட்டிலுள்ள பல கல்வி நிபுணர்கள் எல்லாம் கூடித்தான் இந்தக் கல்வி முறையை வகுத்தார்கள். கல்விச் சாலையிலிருந்து வெளியே வருகிறவன் தனக்குத்தானே வேலை தேடிக் கொள்ளும் அளவிற்குத் தகுதி உடையவனாக இருக்கிறானா என்றால் இல்லை. ஆகவே, கல்விமுறையில பெரியதொரு மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. கல்லூரியிலிருந்து வெளியே வருகிறவன் வெளியே வந்தவுடன் தனக்குத்தானே ஒரு வேலையைத் தேடிக் கொள்ளும் அளவிற்குச் சக்தியுடையவனாக ஆகும் கல்விமுறைதான் நமக்குத் தேவை. எல்லோரும் உழைக்கக்கூடிய மனமுள்ளவர்களாகச் செய்யும்படியான கல்விச் சாலைகளாக இன்றைய கல்விச் சாலைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

காந்தியடிகள் சொன்னார்கள், நாட்டிலுள்ள எல்லாக் கல்விச் சாலைகளையும் ஒரு வருடம் மூடிவிட்டு புதிய ஒரு அமைப்பை ஏற்படுத்தி அடுத்த ஆண்டிலிருந்து தொடங்குங்கள், இப்போதுள்ள கல்வி முறை தேவையில்லை என்று கூறினார்கள். அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் இருந்து விட்டார்கள் 23 ஆண்டுகளாக. இன்றைய அரசாவது இன்றைய கல்விமுறையை அடியோடு மாற்றியமைப்பதற்கு முயற்சி செய்யவேண்டும்.

11 ஆண்டுகள் செகன்டரி கல்வியை முடித்துவிட்டு வந்து வேலையில்லாமல் எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சில் பதிவு செய்து கொண்டு, எம்.எல்.ஏ. க்களைப் பார்ப்பது, அதிகாரிகளைப் பார்ப்பது என்ற துர்ப்பாக்கியகரமான நிலை இருக்கிறது. (மணியடிக்கப்பட்டது)

சட்டசபை உறுப்பினர்களின் ஊதியத்தைச் சிறிது அதிகப்படுத்த வேண்டும். இப்போது இருப்பது போதவில்லை. எவ்வளவோ வேலைகள் செய்ய வேண்டியிருக்கிறது. எம்.எல்.ஏ., க்களின் வேலைகள் அதிகமாகியுள்ளன. மக்களுக்காகப் பலவகைகளில் உழைக்க வேண்டியிருக்கிறது. இது எல்லோருக்கும் தெரியும். பல காரியங்கள் செய்தாக வேண்டியிருக்கிறது. செய்துதான் ஆகவேண்டும். ஆகவே இதுகுறித்துப் பரிசீலனை செய்து ஊதியத்தை உயர்த்த வேண்டும். ஸாலரி என்பதை அலவன்ஸ் என்று செய்து உயர்த்திக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு பார்வேர்ட் ப்ளாக் சார்பாக நன்றி செலுத்திக் கொண்டு என் கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

முதலாவதாக, காங்கிரஸ் ஆட்சிக்கும் நம்முடைய நான்காண்டு ஆட்சிக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய நான்காண்டு ஆட்சியில் சாதித்த முக்கியமான பிரச்னை, ஏழை எளிய மக்களுக்கும், நம்முடைய நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கும் இப்போது உணவு தானியங்கள் தேவையான அளவிற்கு எளிதாகக் கிடைக்கிறது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில், இருபதாண்டுக் காலத்தில் மக்களுக்கு வேண்டிய அத்தியாவசிய உணவுப் பண்டங்கள் கிடைக்காமல் இருந்தது. ஆனால் நம்முடைய ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகு மக்களுக்கு வேண்டிய எல்லா அத்தியாவசியப் பண்டங்களும் கிடைக்கின்றன. அதற்காக நான் நம் கழக அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இருபதாண்டுகளுக்குப் பிறகு மக்கள் ஒன்றைச் சாதித்திருக்கிறார்கள். அதற்காக மக்களுக்கும் என் பாராட்டுதல்களைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். முந்திய இருபதாண்டுகளில் அந்த ஆட்சிக் காலத்தில் ஜாதிவெறிக்கும மற்றும் பல்வேறு விரும்பத்தகாத உணர்ச்சிகளுக்கும் இடம் கொடுத்துக் கொண்டிருந்த மக்கள் இந்த நான்காண்டுக் காலத்தில் அவற்றிற்கு இடம் கொடுக்காமல், அந்த உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்காமல், மக்களுக்கு வேண்டியதை யாரால் நிறைவேற்றிக் கொடுக்க முடியும் என்பதைப் புரிந்து கொண்டு அவர்களுக்கு வோட்டளிப்பதற்கு முன்வந்திருக்கிறார்கள், முனைந்திருக்கிறார்கள் என்பதும் ஒரு விஷயமாகும். அதற்காக மக்களுக்கு இந்தச் சபை மூலம் என் கட்சியின் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக விவசாயிகள், கைத்தறியாளர்கள், தொழிலாளர்கள், முதலாளிகள், ஆசிரியர்கள், சர்க்கார் ஊழியர்கள், பட்டதாரிகள் இவர்களது நிலையைக் குறிப்பிட விரும்புகிறேன். அரசு ஊழியர்கள், முதலாளிகள், ஆசிரியர்கள் இவர்களுடைய நிலை இந்த நான்காண்டில் சற்று உயர்ந்திருக்கிறது. ஆனால் விவசாயிகள், கைத்தறியாளர்கள், வேலையில்லாத பட்டதாரிகள், தொழிலாளர்கள் இவர்களின் நிலையில் கணிசமான மாறுதல் எதுவும் ஏற்படவில்லை. அதற்காக அரசு எதையும் செய்யவில்லை என்று சொல்லிவிடக்கூடாது. விவசாய மக்களுக்கு நம் அரசு ஏராளமான வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறது. நம் அரசு விவசாயிகளுக்கு எவ்வளவோ கடன் உதவிகள் எல்லாம் அளித்து விவசாயிகளுக்குள்ள எவ்வளவோ சிரமங்களையெல்லாம் போக்கியிருக்கிறது என்பது முக்கியமாகத் தெரிந்துகொள்ள வேண்டிய ஒரு விஷயமாகும்.

விவசாயிகளுக்கு என்னென்ன விதத்தில் நடவடிக்கைகள் எடுத்து அவர்கள் கஷ்டமில்லாமல் கடன் பெறுவதற்கான வசதிகளை எல்லாம் தயாரித்து, அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய கடனை மிக எளிதில் கிடைக்க இந்த 4 ஆண்டுக் காலத்தில் இந்த அரசு செய்திருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். விவசாயத்திலும் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தி இருப்பதற்காக என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகள் இதற்கு முன்பு பழைய முறையிலேயே விவசாயம் செய்து வந்தார்கள். இப்போது புதிய விஞ்ஞான முறையில் விவசாயத்தைச் செய்வதில் ஆவல் காட்டுகிறார்கள் என்பது நாம் கவனிக்க வேண்டிய விஷயமாகும். அதற்காக விவசாயிகளுக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய புதிய விதைகளை, அதிகமாக விளைச்சல் தரும் விதைகளைக் கண்டுபிடித்து இருக்கிறார்கள். அதற்காக விவசாயத் துறைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். புதிய விதைகளைக் கண்டு பிடிப்பதில் நல்ல பங்கை, சிலாக்கியமான பங்கைச் செய்து இருக்கிறார்கள். ஐ.ஆர். 8, பத்மா, கருணை போன்ற புதிய நெல் ரகத்தால் அதிக விளைச்சல் கண்டு இருக்கிறோம். ஒரு ஆராய்ச்சி செய்து புதிய நெல் கண்டு பிடிக்கக்கூடியவர்களுக்கு ஊக்கம் அளிக்கிற வகையில், யார் அந்த நெல்லைக் கண்டுபிடித்தார்களோ அவர்கள் பெயரையே அந்த நெல்லுக்கு வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாம் விவசாயிகளுக்குப் பல வசதிகள் குறுகிய காலக் கடன்கள், நீண்ட காலக் கடன்கள், பம்பு செட் கடன்கள் என்று செய்து கொடுத்து இருக்கிறோம். அதோடு, இன்னொன்றை

செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சமுதாயக் கிணறுகள், ஆழக் கிணறுகள் தோண்டிக் கொடுக்கவேண்டும். அரசே அந்தச் செலவையும் மேற்கொள்ள வேண்டும். ஏனென்றால், விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து, அவர்கள் கிணறு தோண்டும் இடத்தில் தண்ணீர் வராவிட்டால், அவர்கள் நஷ்டம் அடைகிறார்கள். இப்படிப் பல இடங்களில் கிணறு தோண்டி தண்ணீர் இல்லாமல் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். இப்படி சமுதாயக் கிணறுகள் தோண்டி அதற்காக வரி போட்டு மக்களிடத்திலிருந்து வசூலித்துக் கொள்ளலாம். இது விவசாயிகளுக்குப் பொதுவாக பயன்படக்கூடிய வகையில் இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : சட்ட மன்ற பார்வையாளர் காலரியில் இருப்பவர்கள், சட்ட மன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறாக இருக்கக்கூடாது.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : அடுத்தபடியாக, கைத்தறியாளர்களுடைய நிலையைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். கைத்தறியாளர்களுடைய நிலையில் எந்தவிதமான மாற்றமும் இந்த ஆண்டு இல்லை. அவர்களுக்கு ரிபேட் கொடுப்பதன் மூலம் இப்போது உதவி செய்து வருகிறோம். அப்படி ரிபேட் கொடுக்கும் கைத்தறிப் பொருள்களைத் தயாரிப்பவர்களுக்கு மட்டும்தான் இந்த ரிபேட் பயன் படுகிறது. மற்றவர்களுக்குப் பயன்படவில்லை. கைத்தறி நெசவாளர்களுக்கு விசைத் தறி கொடுக்க வேண்டுமென்று இந்த அரசு முடிவு எடுத்து இருக்கிறது. ஆனால் நம்முடைய கைத்தறி நெசவாளர்கள் இந்த விசைத்தறியை வாங்குவதற்குப் பணம் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். இந்த விசைத் தறி 4,000–5,000 என்று இருக்கிறது. ஆகவே, விவசாயிகளுக்கு நில வள வங்கி, மற்ற வங்கிகளின் மூலம் கடன் வழங்குவது போல், நெசவாளர்களுக்கும் விசைத் தறி வாங்குவதற்காக, புதிய வங்கி ஒன்றை ஏற்படுத்த வேண்டும். அது நெசவாளர்களுக்கு மிகவும் பயன்படும்.

நெசவாளர்களுடைய நிலையைத் தெரிந்து கொள்வதற்காக ஒரு கமிஷன் நியமிக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன். கமிஷன் நியமிப்பதன் மூலம் 5 ஆண்டு 10 ஆண்டுக் காலத்திற்குள் அவர்கள் வேறு தொழில் ஆரம்பிப்பதற்கான முறையில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு மட்டுமல்ல, இப்போது இருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தடைப்பதற்கும் என்ன முறை கையாள வேண்டுமென்பதை ஆராய வேண்டுமென்பதை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். வரக்கூடிய பட்ஜெட்டில் இதற்கெல்லாம் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, இராமநாதபுரம் மாவட்டத்தைப் பற்றி ஓரிரண்டு வார்த்தைகள் சொல்லிக் கொள்கிறேன். இந்த மாவட்டம் கடுமையான வறட்சி, பஞ்சம் நிறைந்த பகுதி. குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாத நிலை இருக்கிறது. ஆடு மாடுகளுக்கும் தண்ணீர் இல்லை. அங்கே இருக்கும் மக்களுக்கும் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாத நிலை இருக்கிறது. சென்னையில் தண்ணீர் சப்ளை இல்லை என்ற உடனே ஏராளமான போரிங் போட்டு தண்ணீர் சப்ளை செய்தார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் பல இடங்களில் குடிநீர் இல்லை என்பதைப் பல பேர் குறிப்பிட்டார்கள். நாம் உடுக்க உடை வேண்டும், உண்ண உணவு வேண்டும், இருக்க இடம் வேண்டுமென்று சொல்கிறோம்.

அதேபோல், இந்த மாவட்டத்தின் அடிப்படைத் தேவை குடிக்கக் குடிநீர் வேண்டுமென்பதுதான். இந்த வாசகத்தையும் அதோடு சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 1972-ம் ஆண்டுக்குள் எல்லாக் கிராமங்களுக்கும் எப்படி மின் இணைப்பு தந்துவிடுவோம் என்று வாக்குறுதி அளித்திருக்கிறோமோ, அந்த மாதிரி 1972-73-க்குள் இந்த இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டுமல்ல, மற்றவிடங்களிலுள்ள எல்லா கிராமங்களுக்கும் நிச்சயமாகத் தண்ணீர் கொடுப்போம் என்ற வகையில் ஒரு திட்டத்தை நிர்ணயித்துக் கொண்டு அதன் வாயிலாக அதைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பளித்ததற்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்: மரியாதைக்குரிய உபசபாநாயகர் அவர்களே, கவர்னருடைய உரையின்மீது என்னுடைய பேச்சைத் தொடங்குகிறேன். கவர்னருடைய உரையை எந்தவித திருத்தமும், விளக்கமும் இல்லாமல் எனது கட்சியின் சார்பில் நான் முழு மனதோடு அங்கீகரிக்கிறேன்.

இவ்வாறு நான் கூறுவது அந்த அறிக்கையில் கண்டுள்ள உண்மையை நான் நம்புவதாலே. எந்தத் திட்டத்திற்கு, எந்த உறுதியோடு மக்களிடம் வாக்கு கேட்கப்பட்டதோ அந்த உறுதி நிறைவேற்றப்படும் என்ற தெளிவு மாண்புமிகு கவர்னர் உரையில் இருக்கக் கண்டு நான் அதை எந்தத் திருத்தமும் விளக்கமும் இல்லாமல் ஒப்புக் கொள்கிறேன் என்று கூறினேன். மக்களுடைய நம்பிக்கையைப் பெற்று இருக்கும் சர்க்கார், மக்களுடைய நம்பிக்கைக்குக் காரணமாக அமைந்துள்ள சர்க்கார் நிச்சயமாக அந்த வழியில் நிற்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருப்பதாலே நான் அதை ஒப்புக் கொள்கிறேன் என்று இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கே பேசப்பட்ட பெரும்பான்மையான மாண்புமிகு அங்கத்தினர்கள் ஆங்காங்கே நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஒவ்வொருவர் பேசும்போதும் போருக்குத் தீ வைத்தார்கள், குடிசைக்குத் தீ வைத்தார்கள், வீட்டுக்குத் தீ வைத்தார்கள், அங்கே வெட்டப்பட்டது, இங்கே வெட்டப்பட்டது என்று சொன்னார்கள். தெளிவு செய்து ஒருவரும் அந்தக் குற்றத்தை யாரும் ஒப்புக் கொள்ளவில்லை. எல்லோருமே இப்படி நடந்தது என்று சொல்கிறார்கள். எதிர்க்கட்சியில் இருப்பவர்கள்கூட இப்படி நடந்தது என்று சொல்கிறார்கள். ஆளும் கட்சியில் இருப்பவர்களும் சொல்கிறார்கள். யாரும் செய்யாமல் மாணவர்களா வந்து இப்படியெல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள்? எப்படி இது நடக்கிறது? இந்த அராஜகம் தடுத்து நிறுத்தப்படவேண்டும். எப்படி வைக்கோல்போர் எரிந்ததோ, அதுபோல் வெறி உணர்ச்சியும் எரிந்து போக வேண்டும். உண்மைக்கு மாறான நிலைகள் இதோடு மண்ணோடு மண்ணாகப் போய்விட வேண்டும். இப்பொழுது தேர்தல் நடந்ததற்குப் பிறகு, மக்களுடைய தீர்ப்பு வந்ததற்குப் பிறகு, எப்போதுமே பலர் குறுகுறுப்பான உணர்ச்சியோடு இருப்பது பண்பாடு இல்லை என்று கருதுகிறேன். சில தவறுகள் நடந்திருக்கலாம். நடந்த விஷயத்தை மீண்டும் துருவிக்கொண்டே இருக்கக் கூடாது. தேர்தல் சமயத்தில் சில வன்முறை நிகழ்ச்சிகள், அசாதாரணமான நிகழ்ச்சிகள் நடந்திருக்கலாம். ஆனால் இனிமேல் அப்படி நடக்காமல் பாதுகாத்துக் கொள்வதுதான் நம்முடைய பண்பாடும் கடமையும் ஆகும்.

நான் இன்னொன்று கூற விரும்புகிறேன். நேற்று மாலையில் சகோதரி திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் என்னைச் சந்தித்தபோது 'என்னுடைய பேச்சில் அடிக்கடி அமைச்சர்கள் குறுக்கிடுகிறார்கள். தயவு செய்து நீங்கள் இதில் எங்களோடு பங்கு கொள்ளவேண்டும்' என்று அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் அதே நேரத்தில் மாற்றுக் கட்சிக்குச் சில வரம்புகள், சில எல்லைகள் உண்டு. எதிர்க்கட்சி என்று சொன்னால், எதையும் எதிர்ப்பது என்பது பொருள் அல்ல. எது எதிர்க்கக்கூடியது, எதை எதிர்க்கலாம் என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். சர்க்கார் ஆதரவு கட்சியாக இருக்கிற நாங்களும்கூட, சில பல கொள்கைகளில் சர்க்காரோடு மாறுபடும்பொழுது நாங்கள் அதை எதிர்த்துச் சொல்வது என்பது கடமையாகும். ஆனால், அவசியம் இல்லாமல், எதிர்க்க வேண்டும் என்ற உணர்ச்சியோடு பேசுவது மட்டுமல்ல, இடையிலே குத்துவது, வயிற்றிலே குத்துவது, ஓரத்திலே குத்துவது என்பது கூடாது. தான் ஒரு நிகழ்ச்சியை செய்தால் பதிலுக்கு அம்மாதிரி நிகழுமே என்ற எண்ணம் இல்லாமல் பேசக் கூடாது. தயவு செய்து அம்மாதிரிப் போக்கை மாற்றிக் கொண்டால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாற்றுக் கட்சிகளுக்குச் சில இலக்கணங்கள் உண்டு. அதைப்பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். எதிர்த்தரப்பில் உள்ளவர்கள் இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் பெரும் பகுதி எதிர்க் கட்சியிலேயே வாழ்ந்தவன். ஒரு ஆளும் கட்சியிலிருந்து 'நான் இப்படிச் செய்கிறேன்' என்று சொல்லும் வாய்ப்பு பெறாத துர்ப்பாக்கியமான சமுதாயத்தின் பிரதிநிதி. எதிர்க்கட்சி என்றால் என்ன என்பதை என்னைவிட அதிகம் புரிந்துகொண்டவர்கள் இருக்க முடியாது. ஆகையால்தான் நான் சொல்கிறேன். எதிர்க்கட்சிக்குச் சில இலக்கணங்கள் உண்டு. எந்தச் சமயத்தில் அது எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதற்குப் பல முறை உண்டு. காங்கிரஸிலிருந்து நான் விலகிவந்த காலத்திலே இருந்து எதிர்த்து வந்திருக்கிறேன். அதனுடைய கொள்கையின் அடித்தளத்தை தகர்த்தெறிய வேண்டும் என்பதற்காக எனது ஆயுளில் பெரும் பகுதியை நான் செலவு பண்ணியிருக்கிறேன்.

இருந்தாலும், ஒரு சமுதாயத்தில் இந்தச் சர்க்காரை, மாகாண சர்க்காரை நிர்வகித்து வந்த எனது மரியாதைக்குரிய முதல் மந்திரியும், எனது நண்பரும், இங்குள்ள இன்றைய எதிர்க்கட்சியின் அன்றைய தலைவருமான திரு. காமராஜ நாடார் அவர்கள் முதல் மந்திரியாக இருந்த காலத்தில் ஒரு சம்பவம் இங்கே நடந்தது. அவர்கள் தேர்தலுக்கு நின்று, இடது சாரியைத் தோற்கடிப்பதற்கு அவர்களை எதிர்த்தார்கள். அப்பொழுது என்னைக் கேட்டார்கள். 'தயவு செய்து இந்தச் சமயத்தில் எங்களுக்கு ஆதரவு கொடுக்கவேண்டும்' என்று சொன்னபொழுது எதிர்ப்பை மறந்து, சர்க்காருடைய அமைதியை நிலைநாட்டுவதற்காக, அவர்களுக்குக் குடியாத்தம் தொகுதியிலே நாங்கள் ஆதரவு கொடுத்து 23,000 வாக்காளர் பெருமக்களுடைய வாக்குகளை அவர்களுக்குப் போடும்படிச் செய்து, அவர்களுக்கு வெற்றி பெற்றுக் கொடுத்த ஒரு பண்பாடு மிக்க பாரம்பரியத்தைச் சேர்ந்தவன் நான் என்பதை இங்கே நினைவு கூற விரும்புகிறேன்.

எனது மதிப்பிற்குரிய சகாவும், இந்த மன்றத்தின் மாபெரும் கலைஞரும், எனது நெஞ்சை உருக்குகின்ற நீண்டகால அரசியல் உறவு கொண்ட அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு அழகான மொழியைக் குறிப்பிட்டு வைத்திருந்தார். அன்புத் தம்பிமார்களுக்கு அவர் ஒரு சில வார்த்தையால் மாத்திரம் ஆட்சிக் கட்சியினுடைய இலக்கணத்திற்கு ஒரு வரம்பு வைத்துச் சென்றார்கள். அவர்கள் சொன்னார்கள், 'என்னுடைய அன்புத் தம்பிகளா, மாற்றான் தோட்டத்து மலரும் மணக்கும்' என்று சொன்னார். அந்தப் பண்பு தி.மு.க.வுக்கும் மட்டும் இருப்பதாக அவர்கள் அச்சாரம் கொடுக்கவில்லை. எல்லோருக்கும் அது பொருந்தும் என்பதை தயவு செய்து எனக்குப் பின்னால் வீற்றிருப்பவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இம்மாதிரி மனோபாவத்தோடு நடந்து கொண்டால் நடக்கும் தப்பு நிகழ்ச்சிகள் நடக்காது, நிகழாது.

நான் இங்கே மூன்று படங்களைக் காணும்பொழுது, மூன்று வகையிலே சிந்திக்கிறேன்.

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்று கூறிய வள்ளுவரை இங்கே காண்கிறேன். அரசியலுக்கு இலக்கணத்தை வகுத்துக் காட்டிய எனது அருமை நண்பரும், இந்த நாட்டினுடைய அன்பு அண்ணனும் ஆகிய அறிஞர் அண்ணா அவர்களைக் காண்கிறேன். இந்தப் பகுதியிலே மதிப்பிற்குரிய திரு. ராஜகோபாலாச்சாரியாரைக் காண்கிறேன். ராஜகோபாலாச்சாரியார் அவர்களை எனக்கு நீண்ட காலமாகத் தெரியும். இங்கே எனது அருமை சகோதரர் டாக்டர் ஹாண்டே அவர்கள் பள்ளிக்கூடத்தில், பட்டப் படிப்பு அல்ல, ஹைஸ்கூலில் படித்துக் கொண்டிருக்கக்கூடிய காலத்தில் அவரோடு ஆலம் ... அவர் நடத்திய சிராளா சத்தியாகிரஹப் போராட்டத்தில் நான் பங்கு பெற்று சிறை சென்றேன். அவரோடு அந்தக் காலத்திலிருந்து எனக்கு உறவு இருக்கிறது. என்னை சிறைக்கு அனுப்பியது அவர். 'போய் சிறைவாசத்தை அனுபவி' என்று அவரே என்னை அனுப்பி வைத்தார்.

எனது அன்பு மகன் இந்தி எதிர்ப்பு போராட்டத்தின் பெயரால் 7½ ஆண்டு கடும் சிறை தண்டனை அடைந்தான். நான் சிறைச் சாலைக்கு உள்ளே சென்று 'அன்பு மகனே, உனக்கு ஏதாவது இதில் சம்பந்தம் இருக்கிறதா?' என்று கேட்டபொழுது, என்னை அவன் கண்ணீர் ஒழுகப் பார்த்துச் சொன்னான். 'உங்கள் மகனாகப் பிறந்ததற்காக இந்த தண்டனையே தவிர இதில் எனக்கு ஒன்றும் சம்பந்தம் இல்லை'. அன்பு மகன் 7½ ஆண்டு தண்டிக்கப்பட்டபொழுது, பேரறிஞர் அண்ணா அவர்கள் பண்புடன் அவனை விடுதலை செய்தார். எதைச் செய்தார்களோ அதை ஏற்றுக்கொள்வது, எதைச் சொல்கிறார்களோ அதில் உண்மையை ஒப்புக் கொள்வது தான் முறை. ஆளுகிறவர்கள் நிரந்தரமல்ல. என்னை மன்னிக்கவேண்டும். அவர்களுடைய ஆட்சி கலையாமல் காப்பாற்றிக் கொள்வது அவர்களுடைய பொறுப்பு. எதை எதிர்க்க வேண்டுமோ அதை எதிர்த்துச் சொல்லவேண்டியது எதிர்க்கட்சியின் பொறுப்பு. இருசாரார்களுக்கும் இலக்கணம் இருக்கிறது என்பதை நான் நினைவு கூறுகிறேன். நியாயமாக வாதம் செய்யவேண்டிய நேரத்தில் வாதிட வேண்டியதுதான், ஒப்புக் கொள்கிறேன். அதே நேரத்தில், பத்திரிகை

இருக்கிறது, உறுப்பினர் இப்படிச் சொன்னார், அமைச்சர் அதற்குப் பதில் சொன்னார் என்று பத்திரிகையிலே வருமே என்பதற்காக மாத்திரம் பேசுவது நல்லது அல்ல. எதை ஏற்றுக்கொள்வது, எவ்வாறு ஏற்றுக்கொள்வது என்று சிந்திக்க வேண்டும். குறை சொன்னால், மனப்பூர்வமாக அம்மாதிரியான குறை இருந்தால் அதை ஏற்றுக்கொள்ளவேண்டும், அதைப் பற்றி சிந்திக்கவேண்டும் என்பது அமைச்சர் அவையை சார்ந்திருக்கும் கடமை.

நான் இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். எனது சக நண்பர் ஒருவர் நான் பேசுவதற்கு எழுந்து நிற்பதற்கு முன்பு என்னிடம் பேசினார்கள். 'பாராளுமன்றத்தில் உறுப்பினர்களுக்கு இந்தியா முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்ய பாஸ் தரப்படுகிறது, இங்கே எங்களுக்கு ஒரு டவுன் பஸ்ஸில் ஏறுவதற்குக்கூட பாஸ் இருக்கவில்லை, தயவு செய்து உங்கள் பேச்சில் இதைப்பற்றி குறிப்பிடுங்கள்' என்று சொன்னார். ஒரு குறிப்பிட்ட அளவுக்காவது, தமிழ் நாட்டு அளவிலாவது, உறுப்பினர்கள் சுற்றுப்பிரயாணம் செய்யக்கூடிய ஒரு சூழ்நிலையை சர்க்கார் உண்டாக்கித் தரவேண்டும் என்று அவர்கள் கேட்டார்கள். நான் அதைப்பற்றி ஆழ்ந்து சிந்திக்கவில்லை. அதை அமைச்சர்களாகிய நீங்கள் ஆழ்ந்து சிந்தித்து, தீர்ப்பு வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொருவர் பேசும்பொழுது சொன்னார். நாங்கள் ஏழைகள் என்று சொன்னார். வாஸ்தவம் தான். இப்பொழுது பணக்காரர்களுக்கு இங்கே என்ன வேலை? பணக்காரர்கள் வந்த காலம் ஒன்று இருந்தது உங்களில் பலருக்குத் தெரியாது. பொப்பிலி, பனகல், தியாகராய செட்டி, கே. வி. ரெட்டி, என். ஆர். ஸ்வாமியப்பா, சௌந்தரபாண்டியன், கன்னீர் செல்வம் போன்ற பெரிய அரசியல் நோக்கம் உடையவர்கள் காலத்தில், அவர்களைச் சுற்றியிருந்தவர்கள் பணக்காரர்களாகவும், சந்தர்ப்பவாதிகளாகவும் இருந்தது உண்டு. அவர்கள் அத்தகைய நேரத்தில் அமைத்த அரசு தான், உண்டாக்கிய உணர்ச்சிதான். அவர்கள் ஏற்படுத்திய பண்பாடு தான், தமிழ் உணர்ச்சி தான் இப்பொழுது நம்முடைய கலைஞர் ஆட்சியிலே பிரதிபலிக்கிறது என்று பெருமைப்படுகிறேன். இன்று இருப்பது போல் தமிழர் என்று சொல்லப்பட முடியாத காலத்தில், தமிழன் நெறி பேசப்பட முடியாத காலத்தில், தமிழன் மரியாதை இழந்து இருந்த காலத்தில், தமிழனுடைய நலனுக்காக சர்க்கார் வராத காலத்தில், சர்க்கார் நடத்தி, தமிழன் மானம், தமிழன் ஒழுக்கம், மரியாதை நெஞ்சில் ஏறியிருக்கிறது. தமிழன் நெஞ்சில் உண்டாகிய அப்படிப்பட்ட நிலைமை இங்கே மாண்புமிகு கலைஞர் அவர்களிடத்திலே இருக்கிறது. ஆகவே அந்த வழியில் அரசை நடத்திச் செல்லுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பண்பை காப்பாற்றிச் செல்லுங்கள், பண்பு வழியில் இருந்து மக்களுடைய எண்ணத்தை, அவர்களுடைய உணர்ச்சிகளை, அவர்கள் கொண்டிருக்கிற ஆசையை, பாசத்தை நிறைவேற்றுவோம் என்று மிக அன்போடு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். நாம் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள். நாம் தேர்ந்தெடுக்கப்பட்ட எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள். உண்மை எதுவோ அதன் பக்கம் இருப்போம். எவரோ என்றைக்கோ எழுதிவைத்துப் போயிருக்கிறார்:

காட்டிலும், மேட்டிலும் துணிவு
நாட்டிலும், பள்ளத்திலும் துணிவு
அலைமோதி நதியிலும் துணிவு
ஆழ்கடல் நடுவிலும் துணிவு
துணிவார்க்கு வாரியிலும் முழங்காலே
துணிபவரை எதிர்ப்பவர் வீழ்வார்
துணிந்த நெஞ்சுக்கு உண்டோ இருளு
துணிவு, துணிவு, என்றும் துணிவே

அதுபோல் பொது நியதியை நாம் பின்பற்றி அந்த வழியில் நாம் செல்வோம். அமைதியான முறையில் பேசவேண்டும். அப்பொழுது அமைதியான பதில் கிடைக்கும். முழு மனதோடு நான் கவர்னர் பேருரையை வரவேற்கிறேன் என்று கூறி, உங்களிடம் விடைபெறுகிறேன்.

* திரு. கே. டி. கே. தங்கமணி: உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் உரையின் பேரிலும், நன்றித் தீர்மானத்தின் பேரிலும், இதற்காகக் கொடுத்திருக்கக் கூடிய திருத்தங்கள் பேரிலும், எங்கள் கட்சியின் கருத்துக்களை சபையின் முன்னால் வைக்கலாம் என்று நினைக்கிறேன்.

எங்கள் கட்சியின் கருத்துக்களை, திருத்த ரூபமாகக் கொடுத்திருப்பதை பின்னால் விளக்கிச் சொல்லுகிறேன். அதற்கிடையில், இங்கே நடந்த விவாதத்தில் எழுப்பப்பட்ட இரண்டு மூன்று விஷயங்களைப் பற்றி முதலிலே சொல்ல வேண்டியது அவசியம். முதன் முதலிலே, சில அருமைத் தலைவர்களைப் பற்றி பல நண்பர்கள் குறிப்பிட்டார்கள். எங்களைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் வேறு கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், குறிப்பிட்டிருக்கிற தலைவர்களைப் பற்றி, அவர்களைப் பற்றிக் கொஞ்சம் தரக் குறைவாகப் பேசக்கூடிய முறை இருக்கக் கூடாது என்பது எங்கள் கருத்து. உதாரணமாக, ம.பொ.சி. அவர்கள், பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள், இந்த மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த பக்தவத்சலம் அவர்கள், காமராஜ் அவர்கள், ராஜகோபாலாச்சாரி அவர்கள் போன்ற தலைவர்கள் தமிழகத்தில், பல ஆண்டு காலம், தாங்கள் நடத்திய இயக்கத்தின் காரணமாக, தங்கள் தியாகத்தின் காரணமாக செல்வாக்குப் பெற்றிருக்கிறவர்கள். அப்பேர்ப்பட்ட தலைவர்களுடைய கொள்கைகளைப் பற்றி விமரிசிக்கலாம், ஆனால் அவர்களை தனிப்பட்ட முறையில், குந்தகம் விளைவிக்கும் அளவில் இங்கே பேசப்படுவது, நம் சபையின் கவுரவத்திற்குக் குறைவானது என்பதைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இரண்டாவதாக, விவாதத்தில் மானாமதுரைத் தொகுதியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒரு சர்வதேசக் கட்சி, அது கிழக்கு இராமநாதபுரத்தை மறந்துவிட்டது என்று குறிப்பிட்டார்கள். அவர் அவ்வாறு குறிப்பிட்டது, எங்கள் கட்சியைச் சார்ந்த, கட்சியின் சார்பில் பேசிய திரு. சுப்பு அவர்கள் மேற்கு இராமநாதபுரத்தில் சில காரியங்கள் செய்யப் படவில்லை, கிழக்கு இராமநாதபுரத்தில் இரண்டொரு காரியங்கள் நடந்திருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள் என்பதால், அதை வைத்துக் கொண்டு இந்த உறுப்பினர் குறிப்பிடுவது பொருத்தமில்லை என்பதைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். கடந்த பத்தாண்டுக் காலமாக நான் சார்ந்திருக்கும் கட்சியைச் சேர்ந்தவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தை பின்தங்கிய பகுதியாக மாற்றவேண்டும் என்று, ஒரு முறையல்ல பல முறைகள் நடவடிக்கை எடுத்து, போராட்டம் நடத்தி, சிறை சென்றிருக்கிறார்கள்;

கோஷாப் பெண்களும் சிறை சென்றிருக்கிறார்கள். அம்மாதிரியான இயக்கத்தை, அப்பகுதியை பின்தங்கிய பகுதியாகக்கருத வேண்டும் என்று, எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் போராட்டம் நடத்தியது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும்.

அது மட்டுமல்ல, இந்தத் தேர்தலில், எப்படி பின்தங்கிய பகுதியாகிய இராமநாதபுரம் மாவட்டத்தை முன்னேறச் செய்வது என்பதிலேயே கருத்தாக கூட்டணிக் கட்சிகள் உழைத்தார்கள் என்பதும் தெரியும். அவர்களுடைய தொகுதியில், சமீபத்தில் அவர்களே, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஊழியர்களின் சிறப்பான பணி இல்லாமல் போனால் வெற்றி வாய்ப்பு ஏற்பட்டிருக்காது என்று பேசியிருக்கிறார்கள் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

மூன்றாவதாக, காலையில் நடந்த பிரச்சினைக்குப் போக விரும்பவில்லை— இந்திய அரசியல் சட்டத்திலேயே ஒரு பிரிவு இருக்கிறது. 263-வது பிரிவு. அந்த 263-வது பிரிவின் படி, பிரசிடெண்ட் அவர்கள் ஒரு 'இன்டர்-ஸ்டேட்' கவுன்சில் ஒன்றை அமைக்கலாம் என்றிருக்கிறது. ஒரு மாநிலத்திற்கும் இன்னொரு மாநிலத்திற்கும் இடையே உள்ள விவகாரங்கள் பற்றியும், மாநிலங்களுக்கும், மத்திய சர்க்காருக்கும் இடையே தகராறுகள் ஏற்பட்டாலும், அவற்றைத் தீர்த்துவைக்க ஒரு நிரந்தர கவுன்சில் அமைக்கலாம் என்று அரசியல் சட்டத்திலேயே இருக்கிறது. அந்த மாதிரி இதுவரையிலும் அமைக்கப் படாதது வருந்தத் தக்கது. அந்த முறையில் அமைக்க வேண்டும் என்று எங்கள் தேர்தல் அறிக்கையில் தெளிவாகச் சொல்லியபடி, அம்மாதிரி அமைப்பு இருந்தால், ஒரு மாநிலத்திற்கும் இன்னொரு மாநிலத்திற்கும் இடையே உள்ள சர்ச்சைகளைத் தீர்க்க, பொதுப் பத்திரிகைகளில் வந்து, இரு மாநிலங்களிடையே மனக்கசப்பு உண்டாகாமல், இருவரும் என்ன நிலையை எடுத்திருக்கிறார்கள் என்று மக்களுக்குத் தெரிய வாய்ப்பாக இருக்கும். இந்த விஷயங்களைச் சொல்லிவிட்டு, நம்முடைய கவர்னர் அவர்களின் உரைக்கு வருகிறேன்.

கவர்னர் அவர்கள் சொல்லும்போது, மூடிக்கிடந்த சில ஆலைகள் திறக்கப் படுவதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். லதர்ன் ஸட்ரக்சுரல்ஸ் பற்றி, அதில் 1,600 தொழிலாளிகள் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள், அரசு உதவி கொடுத்து திறக்கப் பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். உண்மைதான். ஆனால், இப்பொழுது அதைப் பார்த்தால், 1,600 பேர் வேலை செய்து கொண்டிருக்கிறார்களா? 1,600 பேர்கள் வேலை செய்யக் கூடிய ஏற்பாடுகள் நடந்திருக்கின்றனவா? இதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன். அதிலே இன்றைக்கும் கூட நிர்வாகத்தில் இருப்பவர்கள் பற்றிச் சிந்திப்பது அவசியம் என்று நினைக்கிறேன். அதே மாதிரி டெக்ஸ்டைல்ஸ் திறக்கப் பட்டிருப்பதைப் பற்றிச் சொன்னார்கள். நல்ல முறையில் நடக்கிறது என்பதை ஏற்றுக் கொள்கிறேன். கோவை மாவட்டத்தில் உள்ள கம்போடியா, ரங்கவிலாஸ் போன்ற நான்கு ஆலைகள் திறக்கப் பட்டு, அந்த மில்களில் எம்மாதிரி முறையில் நடந்தது என்பதைப் பற்றி வரவுசெலவு கணக்குகள் சமர்ப்பிக்கப் பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு இறுதியில் லாபம் எவ்வளவு என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். லாபம் கிடைத்தும் ரங்கவிலாஸ், கம்போடியா மில்கள் மூடப்பட்டதற்குக் காரணம் என்ன? முதலாளிகள் நிர்வாகத்திறன் குறைவா? பணத்தை ஒதுக்கிய வகையில் தான் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். அந்த டைரக்டர் போர்டு ரிபோர்ட்டில் அரசாங்கத்திற்குப்

பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், அம்மாதிரி லாபம் கிடைக்கும் அளவில் நிர்வாகத்தை நடத்திச் செல்ல வழிவகை செய்த தொழிலாளர்களைப் பற்றி ஒரு வார்த்தை காணோம். இனி டைரக்டர்கள் ரிப்போர்ட்டில், இனி மேலாவது வரக்கூடிய காலத்தில், அதிகமாகப் பங்கு கொள்ளும் தொழிலாளர்கள் பற்றி சில வார்த்தைகள் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில், தமிழ்நாடு ரிலீப் அண்டர்டேக்கிங்ஸ் ஆக்ட், 1969 சட்டம் இன்றைக்கு அமுலில் இருக்கிறது. அந்தச் சட்டம் அமுலில் இருப்பதை யாருமே விரும்பவில்லை. பல மாநிலங்களில் அந்தச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று முயற்சிகள் செய்தார்கள். மக்கள் எதிர்த்தார்கள். ஆனால் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். அதன் காரணமாக பலவிதமான ஒப்பந்தங்கள் அமுல்படுத்தப் பட்டுவருகின்றன.

I submit that, that legislation must be removed from the statute book.

அப்படியிருந்தால் தமிழக அரசுக்கும் கவுரவம் ஏற்படும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த இடத்தில் இன்னொன்றும் சொல்ல வேண்டும். இம்மாதிரி ஏற்கனவே சில மில்கள் திறக்கப் பட்டிருந்தாலும், கோவை மாவட்டத்தில் பல மில்கள் திறக்கப்படாமல் இருக்கின்றன. கோயம்புத்தூர் ஸ்பின்னிங் அண்ட் வீவிங் மில். இது ஏற்கனவே திறக்கப்பட்டது 9—12—1970-ல், இன்றைக்கு 4—1—1971 முதல் பரிபூரணமாக மூடப் பட்டிருக்கிறது. ஆதலால், 2,700 பேர்கள் வேலை இழந்திருக்கிறார்கள். அதே மாதிரிதான், முருகன் மில்ஸ். 1—6—1968-ல் மூடப்பட்டது. 1,500 பேர்கள் வேலை செய்கிறார்கள். மத்திய சர்க்கார் ஐ.டி.ஆர். சட்டத்தின் படி எடுக்க வேண்டும் என்று முடிவு செய்து விட்டார்கள். தமிழக அரசு சீக்கிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே மாதிரி, பங்கஜா மில், ராதிகா மில், காளீச்வரா மில், சோமசுந்தரம் மில், ராஜா மில், தெற்கே இருக்கும் பலராம வர்மா மில், இன்னும் மூடப்பட்டு இருக்கின்றன. அந்தத் தொழிலாளிகள் வேலையின்றி கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இன்னொன்று, மெட்ராஸ் ஷீட் க்ளாஸ் ஒர்க்ஸ் மூடப்பட்டு, அதற்குப் பின்னால், திறக்கப்பட்டது. திறந்தபோது, அரசு உதவி செய்திருக்கிறார்கள். அதிலே 600 தொழிலாளிகள் வேலை செய்கிறார்கள். அங்கு நிலைமை மோசமாகத்தான் இருக்கிறது.

இன்னொன்று, அரசின் பெருமுயற்சியால் ஸ்டாண்டர்டு மோட்டார் திறக்கப்பட்டு இருக்கிறது. கடந்த பிப்ரவரி மாதம் 22-ம் தேதி என்று நினைக்கிறேன். திறந்த பிறகு 2,600 தொழிலாளர்களில் எத்தனை பேரை வேலைக்கு எடுத்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். குறை சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. இந்தியாவில் இருக்கக்கூடிய மூன்று மோட்டார் தொழிற்சாலைகளில் ஒன்று தமிழகத்தில் இருப்பது. அந்தத் தொழிற்சாலை சிறிய கார்களை உற்பத்தி செய்து கொண்டிருக்கிறது. அங்கிருக்கக் கூடிய நிர்வாகி, முதலாளி ஒரு இடைஞ்சலாக இருந்து கொண்டிருக்கிறார் என்ற அளவுக்குச் சொல்ல விரும்புகிறேன். அதிலே மத்திய அரசும், மாநில அரசும் இன்னும் தீவிரமாக முயற்சி செய்து அந்தத் தொழில் ஒழுங்காக நடக்க வழி செய்ய வேண்டும்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தங்கமணி அவர்கள் ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனி பற்றிக் குறிப்பிட்டார்கள். நேற்று முன்தினம் கூட நிர்வாகத்தினரை அழைத்து,

'அக்ரிமென்ட்' படி நடக்க வேண்டுமென்று சொன்னதில், ஏறத்தாழ 250 பேர்களை வேலைக்கு வைத்திருக்கிறார்களென்றும், இன்னும் ஒரு வாரத்தில் தொடர்ந்து மற்றவர்களையும் வேலையில் வைக்க இருக்கிறார்களென்றும் கூறினார்கள். மொத்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கை—நிரந்தரமானவர்கள் 1,200; தற்காலிகமானவர்கள் 500; ஆக மொத்தம் 1,700 பேர்.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஒரு வருஷ காலமாக வேலை இல்லாதிருந்த அந்தத் தொழிலாளர்கள் சீக்கிரமாக வேலைக்குப் போக வேண்டுமென்பதுதான் என்னுடைய விருப்பம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்ததற்காக நன்றியுடையவனாக இருக்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏதவாது ஒரு தொழிற்சாலையை மூடுவார்களானால் அதைத் திறக்கும்போது வேறு ஒரு பெயரில் திறக்கும் நிலைமை இருக்கிறது. இதைத் தடுக்கும் அளவுக்கு சட்டத்தை மாற்ற முடியும். 'சவுத் இந்தியா ஆட்டோமோபைல் கார்ப்பரேஷன்' மூடியதை, 'பெட்ரோ காரேஜ் ஒர்க்ஸ்' என்று திறந்திருக்கிறார்கள். சவுத் ஈஸ்டர்ன் மோட்டார் என்று இருந்ததை ஹைவேஸ் ட்ரக் சர்வீஸ் என்று திறந்திருக்கிறார்கள். ரங்க விலாஸ் மூடியதை நியோ ரங்க விலாஸ் என்று திறந்திருக்கிறார்கள். எம்.பி.டி. மூடியதை இப்போது சிறு காரவல் கூட்ஸ் சர்வீஸ் என்று திறந்திருக்கிறார்கள். இந்த மாதிரி முதலாளிகளும், பிரமுகர்களும் கையாளும் இந்த முறையைத் தடுக்க சட்டத்தில் சரியான திருத்தங்களைச் செய்ய அரசு முன்வர வேண்டும். (குறைக்கேடு) இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் டெல்லியில் இருக்கிறது என்றாலும் இங்கேயும் திருத்த அதிகாரம் இருக்கிறது.

We have to get concurrence from the centre.

நம்முடைய தமிழக அரசும் தொழிலாளர்கள் சம்பந்தமான சட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள்.

சம்பளக் கமிஷன் சம்பந்தமாக ஒருவார்த்தை. அதுபற்றிய என்னுடைய திருத்தத்தில் 'நீட் பேஸ்டு மினிமம் வேஜ்' என்று குறிப்பிட்டிருக்கிறேன். தேவையை அடிப்படையாகக் கொண்ட குறைந்தபட்ச சம்பளம்—நமக்குத் தேவை எவ்வளவோ அதிகமாக இருக்கலாம். குறைந்தபட்ச தேவையை வைத்துக் கொண்டு எவ்வளவு சம்பளம் கொடுக்க வேண்டுமென்று நிச்சயிக்கும் போது முதலாளிகள் சார்பிலும், தொழிலாளர்கள் சார்பிலும், மத்திய அரசு, மாநில அரசு சார்பிலும் ஏற்றுக் கொண்ட 'நார்ம்ஸ்' இருக்கிறது. அந்தக் கணக்குப்படி இன்றைக்கு 250 ரூபாயாவது குறைந்தபட்ச சம்பளம் கொடுக்க வேண்டும். இன்றைக்கு 250 ரூபாய் சம்பளம் பல தொழில்களில் கிடைக்கிறது. உருக்குத் தொழிலிலே கிடைக்கிறது. எஞ்சினியரிங் பஞ்சாலைத் தொழில்களிலே ஓரளவு கிடைக்கிறது. எல்.ஐ.சி.-ல் கிடைக்கிறது. மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு சில பகுதிகளில் கிடைத்துக் கொண்டிருக்கிறது. பாங்குகளில் பணியாற்றுபவர்களுக்கு இதற்கு டபிள் ஆகக் கிடைக்கிறது. இந்த அளவு குறைந்த பட்ச சம்பளத்தை எல்லோருக்கும் கொடுக்க வேண்டும். அதற்காக ஒரு கமிட்டி போட்டு முடிவெடுத்தாலும் சரி.

இன்றைக்கு மற்றொரு வேடிக்கையான நிலை தமிழ் நாட்டிலே இருக்கிறது. தொழிலாளிக்கு சம்பளம் 40 ரூபாயாக இருக்கும். சாதாரணமாக பேசிக் ஏர்னிங் அதிகமாக இருக்க வேண்டும், சப்ளிமெண்டரி ஏர்னிங்

கொஞ்சமாக இருக்க வேண்டுமென்பதுதான் முறை. தற்போது பஞ்சப்படி கொடுப்பதற்கு 1960-ம் ஆண்டை அடிப்படை வருஷமாகக் கொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அப்படிப் பார்க்கும்போது பஞ்சாலைத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை 1936-ஐ அடிப்படையாகக் கொண்டு புள்ளிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. 1963-64-ம் புள்ளிகளில் மோசடி ஏற்பட்டிருக்கின்றன என்று சகல மத்திய தொழிற்சங்கங்களும் தெரிவித்தன. கோடிக்கணக்கான ரூபாயை பஞ்சாலை முதலாளிகள் மகாராஷ்டிராவில் கொடுத்திருக்கிறார்கள், குஜராத்தில் கொடுத்திருக்கிறார்கள். அதே மாதிரி தமிழகத்திலும் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை வந்து கொண்டிருக்கிறது. முதல்வர் அவர்களே கூட, ஓரளவு நமது தொழிலாளர்களுக்கும் கிடைக்கும் என்று சொன்னதாக ஞாபகம். அந்த முறையில் பாக்கி இருக்கிறது. வருஷத்திற்கு 50 ரூபாய் என்று வைத்துக் கொண்டாலும் பத்து வருஷத்திற்கு 500 ரூபாய் கிடைக்கும் எதிர்பாராத நிலையில் அந்தத் தொகையைத் தொழிலாளர்களுக்குக் கொடுத்தால் பேருதவியாக இருக்கும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் இடையே தகராறு ஏற்பட்டால் அந்த நேரத்தில் போலீசார் தலையிடக்கூடாது என்பது எங்களுடைய நீண்ட நாள் கோரிக்கை. இன்றைக்கும் பார்க்கிறோம், தகராறுகள் ஏற்படும்போது போலீசார் தலையிடும் நிலை இருக்கிறது. போலீசார் தலையிடலாம் என்று சொல்லி தமிழகத்தில் தீர்ப்பே வந்த துர்பாக்கியமான நிலை இருக்கிறது. செல்பார்க் கேசில் தொழிலாளர்கள் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தபோது அவர்களை உடனடியாக வெளியேற்றலாம் என்று தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். வெளியில் வேலை நிறுத்தம் செய்தாலும் சரி, உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தாலும் சரி, போலீசாரை அனுப்பாமல் தடை போடுவதற்கு அரசாங்கத்திற்கே அதிகாரம் உண்டு. இரண்டு தினம் உள்ளிருப்பு வேலைநிறுத்தம் மூன்றாவது தினம் பேச்சுவார்த்தை நடந்து பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளலாம் என்ற நிலை ஏற்படுமானால் காரியங்களை நல்ல முறையில் செய்யமுடியும். போலீசார் தலையீடு இருக்கக்கூடாது என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தகராறுகள் ஏற்பட்டு பிறகு ஏதாவது ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டால் அந்த ஒப்பந்தத்தின் கடைசி ஷரத்தாக ஒன்றைச் சேர்த்து விடுவது உண்டு.

'No action of any sort would be taken against any worker for taking part in the strike in any form.'

அதாவது போராட்டத்தில் தலையிட்ட தொழிலாளர்கள் எந்த முறையில் தலையிட்டிருந்தாலும் அவர்கள் மேல் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது என்று சேர்ப்பது உண்டு. போராட்டம் நடந்து முடிந்து பிறகு இன்னார் முதலாளியை ஏசினார் அல்லது காரை மறித்தார் என்று கேஸ் போடுகிறார்கள். அந்த மாதிரி கேஸ்கள் ஆடமாடிக்காக வாபஸ் வாங்கப்பட வேண்டும். ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் தொழிற்சாலையைப் பொறுத்தவரை இன்றைக்கும் 42 தொழிலாளர்கள் மேல் கேஸ் நடக்கிறது. அந்தத் தொழிலாளர்களுக்கு வேலையும் இல்லாத நிலையில் வழக்கு வாபஸ் வாங்கப்படாமல் நடந்து கொண்டிருக்கிறது. அந்த வழக்குகளை வாபஸ் வாங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனித் தொழிலாளர்கள் மீது போடப்பட்ட வழக்குகளை வாபஸ் பெற முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி, நேற்றைய முன்தினம் போலீஸ் அதிகாரிக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: இன்னொன்று மே தின விடுமுறையைப் பற்றியது. சட்ட விஷயத்தை அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. நம்முடைய அரசு மே தினத்தை விடுமுறையாக ஆக்கினார்கள். நேஷனல் பெஸ்டிவல் ஹாலிடேஸ் அமெண்ட்மெண்ட் ஆக்ட் கொண்டு வந்து ஏற்கனவே 3 தினங்கள் ஸ்டாச்சுடரி ஹாலிடேஸ் ஆக இருந்தது, 5 தினங்கள் பெஸ்டிவல் ஹாலிடேஸ் ஆக இருந்தது. அந்த மூன்று தினங்களை ஏற்கனவே நான்காக ஆக்கிவிட்டார்கள். இ.ஐ.டி. பாரி, ராணிப்பேட்டையில் ஏற்கனவே 9 நாட்கள் அனுபவித்து வந்தார்கள். மே தினம் அல்லாது 9 தினங்கள் விடுமுறை கொடுக்க வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. அங்கே, சட்டம் வந்த பிறகும் அந்த ஒன்பதுக்குள்ளேயே மே தினத்தையும் வைத்தார்கள். அது பெரிய பிரச்சினையாக தொழில் கோர்ட்டுக்குப் போய்வரும் நிலை இருக்கிறது. நம்முடைய தமிழ்நாடு அரசு 'இண்டஸ்ட்ரியல் எஸ்டாப்ளிஷ்மெண்ட் ... ... நேஷனல் பெஸ்டிவல் ஹாலிடேஸ் அமெண்ட்மெண்ட் ஆக்டிலே மூன்றாவது ஷரத்தையும், 11வது ஷரத்தையும் திருத்தி விட்டபோதும். ஏற்கனவே அனுபவித்து வந்த விடுமுறை நாட்களுக்குள்ளேயே மே தின விடுமுறை நாளையும் சில முதலாளிகள் சேர்த்து விடுகிறார்கள் என்பதற்குத்தான் இந்த உதாரணத்தைச் சொன்னேன்.

அடுத்தபடியாக ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பற்றி அதிகமாகச் சொன்னார்கள். பொதுவாக பொதுத் துறையைப் பொறுத்தவரை ... பல ... ஸ்தாபனத்தைச் ... அரங்குகள் நடந்தன. அங்கெல்லாம் எங்களுடைய ... பொதுத் துறை இந்த நாட்டிலே சேர்ந்தவர்கள் பங்கேற்றுக்கொண்டார்கள். பொதுத் துறை இந்த நாட்டிலே கட்டுப்பாடாக வளர வேண்டுமென்று சொல்கிறோம். ஆனால் சில கட்சிகள் பொதுத் துறையைப் பொதுத் துறை கூடாது என்று பேசி வருகின்றன. பொதுத் துறையைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தொழிலாளிகளைச் சேர்ந்தது. தொழிலாளர்கள்தான் ஸ்தாபகர்களாக இருக்க வேண்டும். ஆனால் சென்னை நகரத்தில், 'It needs very much to be desired' அது போதுமான அளவுக்கு ஒத்துழைப்பு இல்லாமல் இருக்கிறது.

அடுத்து, நிர்வாகத்தைப்பற்றி நல்ல முறையில் நடக்க ஆலோசனைக் கமிஷன் ஒன்றை அமைச்சர் அவர்கள் போட வேண்டும். இப்போது அமைச்சராக வந்திருக்கிறவர் தொழிற்சங்கத்தில் அதிக பரிச்சியம் உடையவராக இருக்கிறார். ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட் திறம்பட நடக்கிறது, நன்றாக நடக்கிறது. மக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் நல்ல உறவு இருக்கிறது. லாபகரமாக நடக்கிறது. லாபகரமாக நடந்தாலும், அப்படி இல்லை என்று சொல்கிறார்கள். எங்கள் தலைவர் ஒருவர் சொன்னார். public sector is better than a superior private sector பிரைவேட் செக்டர், பப்ளிக் செக்டார் இவற்றிற்கிடையில் போட்டி மனப்பான்மை ஏற்படும் என்று சொல்லப்படுகிறது. பொதுத்துறை பூர்ணமாக இருந்தாலும் தொழிலாளர்களுடைய ஒத்துழைப்பு அவசியம். அமைச்சர் அவாகள தக்க நடவடிக்கை எடுக்கும்போது நாங்கள் எல்லாம் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவர்னர்பெருமான் உரைக்கு நன்றிகூற முன்மொழியப் பட்ட தீர்மானத்திற்கு எங்கள் கட்சியின் சார்பில் கொடுத்திருக்கிற திருத்தத் தீர்மானத்தை நான் ஆதரித்து அதற்கான கருத்துக்களை இங்கே சொல்வதற்கு முற்படுகிறேன்.

அதற்கு முன்பாக ஒரு சந்தேகம் இங்கே கிளப்பப்பட்டதற்கு விளக்கம் அளிப்பது என் கடமை என்று கருதுகிறேன். எதிர்க்கட்சியில் இயங்குகின்றவர்கள் என்ன முறையில் செயலாற்ற வேண்டுமென்று முஸ்லிம் லீக் கட்சியின் தலைவர் ஒரு இலக்கணத்தை வகுத்தார்கள். இந்த இலக்கணம் மேல்நாட்டில் எந்த முறையில் இருந்து கொண்டிருக்கிறது என்பதை இங்கே கூறுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். மேல் பார்லிமெண்டரி ப்ராக்டிஸில் His Majesty's opposition என்பதாக மேல்நாட்டில் இருப்பதாகவும் இந்தச் சொற்றொடரை 'John Hobhouse' என்பவர் கண்டுபிடித்ததாகவும் அதில் நான் பார்த்தேன். அதுமட்டுமல்ல. எதிர்க்கட்சியில் இயங்குகின்றவர்கள் பொறுப்போடும், கடமையுணர்ச்சியோடும் செயலாற்றுவதற்குக் கடமைப் பட்டவர்கள். குறிப்பாக ஆளும் கட்சியில் இருக்கிறவர்களுடைய நிர்வாகத் தைப்பற்றியும் இருக்கக் கூடிய குறைபாடுகளைச் சுட்டி நிர்வாகம் நல்ல முறையில் செயல்பட உபயோகமான முறையில் இந்த மன்றத்தில் கூறி நல்லாட்சியை ஏற்படுத்துவதில் முனைந்திருக்கவேண்டுமென்பது என் கருத்து.

இந்த நேரத்திலே பெரிய மேதையாக இருந்த வின்சென்ட் சர்ச்சில் எதிர்க்கட்சியைப் பற்றி கூறின கூற்றை இந்த மன்றத்தில் தங்கள் அனுமதியின் பேரில் எடுத்துவைக்க விரும்புகிறேன்.

'The role of the opposition is to oppose and not to support. When called upon to support Government, support with a kick but never with a caress'. என்பதாக அந்தப் பேரறிஞர் வின்சென்ட் சர்ச்சில் கூறியிருக்கிறார். அப்படி எங்கள் கட்சி இயங்குவதற்கு வலிவு இருக்கிறதா, ஆற்றல் இருக்கிறதால், திறமை இருக்கிறதா என்பது தமிழகமும், இந்த மன்றமும் முடிவு செய்யவேண்டிய விஷயம்.

நாங்கள் எல்லாம் செல்வச் சீமான்கள் அல்ல. ஆளும் கட்சியில் இருக்கிறவர்கள் எல்லாம் எங்களை ஆலை அரசர்கள் என்றோ, பணக்காரர் களுக்குக் கூட்டாக இருக்கிறவர்கள் என்றோ சித்தரிப்பது எங்களைப்பற்றி பிற்போக்குக் கட்சியினர் என்று கூறுவது—இதற்கெல்லாம் நாங்கள் இப்போது இந்த மன்றத்தில் பதில்-கூறத் தேவையில்லை என்று கூறிவிடுகிறேன்.

அடுத்து, நான் என் கடமைக்குச் செல்கிறேன். நாட்டில் நடந்த தேர்தலைப்பற்றி பலவிதமான கருத்துக்கள் எடுத்துவைக்கப்பட்டன. அதுவும் குறிப்பாக நாகர்கோயில் பாராளுமன்றத் தேர்தலைப்பற்றி எங்கள் போன்றவர்கள் மனது புண்பட ஒரு சமூகத்தையே வேதனைப்படுத்தும் முறையில் சில கூற்றுகள் சொன்னார்கள். அதைக்கண்டு நாங்கள் வருந்துகிறோம். நாகர்கோயில் பாராளுமன்றத் தேர்தலில் எங்கள் உயர் தலைவர் திரு. காமராஜ் போட்டியிட்டு வென்றார். 'இது நாடாளு மன்றத் தேர்தல் இல்லை—"நாட்டார் தேர்தல்" என்று கோடிட்டுக் காட்டினார்கள். கடந்த தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளராக பாராளுமன்றத் தேர்தலுக்குப் போட்டி

யிட்டவர் திரு. எம். வி. பாலன் அவர்கள். அவர் அந்த நாடார் வகுப்பைச் சேர்ந்தவர்தான். தீவிர கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பாக தேர்தலுக்கு சேர்ந்தவர்தான். எந்த அரசியல் கட்சியும் வேறு எந்த ஒரு வகுப் நிறுத்தப்பட்டிருந்த வேட்பாளர் திரு. சாமுவேல் அந்த நாடார் வகுப்பைச் சேர்ந்தவர் தான். எந்த அரசியல் கட்சியும் வேறு எந்த ஒரு வகுப் பாராளுமன்ற இடைத்தேர்தலுக்கு சுதந்திராக்கட்சியின் சார்பில் நிறுத்தப் பட்ட திரு. மத்யாஸ் அவர்களும் இந்த நாடார் வகுப்பைச் சேர்ந்தவர்தான் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். அப்படி இருக்க ஒரு சமுதாயத்தைக் குறைத்துப்பேசுவது ஒருவேளை ஒருசிலருக்கு லாபமாக இருக்கலாம். அரசியல் லாபத்திற்காக இப்படி எந்த ஒரு சமுதாயத்தையும் தாக்கிப்பேசுவது நியாயம் அல்ல, தர்மம் அல்ல, அறம் அல்ல.

ஒரு சாரார் இப்படி ஒருசில சமுதாயத்தை ஏளனமாகப் பேசவேண்டும் என்பதிலேயே முனைந்திருக்கிறார்கள். எந்த எந்த சமுதாயத்தைப்பற்றி என்று நான் வார்த்தைகளாலே இந்த மன்றத்தில் சித்தரிப்பது நியாயம் அல்ல. 1951-இல் இருந்து நாகர்கோயில் பாராளுமன்றத் தொகுதி காங்கிரஸ் கட்சியினிடத்திலேயேதான் இருந்து வருகிறது. 1957 வரை திரு. நேசமணி அவர்கள் உறுப்பினராக இருந்தார்கள். 1957-இல் இருந்து 1962 வரை திரு. தாணுலிங்க நாடார் இருந்தார். அதற்கு அப்பார்பட்டு திரு. நேசமணி அவர்களே மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர் மறைந்த பிறகு 69 இடைத் தேர்தலில் எங்கள் உயர் தலைவர் திரு. காமராஜ் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். நான் எதற்காகக் கூறுகிறேன் என்றால் அவையின் காலத்தை வீணடிப்பதற்கல்ல. இந்த மாதிரியான நிலையில் எந்த ஒரு சமுதாயமும் புண்படக்கூடிய வகையில் ஆளும் கட்சியினர் சொல்வது அதிகமான பலனைத் தராது என்று சொல்வதற்காக மட்டும்தான்.

நமது கம்யூனிஸ்டுக் கட்சியின் அரும்பெரும் தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் நல்லதொரு கருத்தைச் சொன்னார்கள். இந்தியா முழுமையிலும் பெரும் பெருமையும், புகழும் பெற்ற பல தலைவர்கள் இருக்கிறார்கள். திரு. காமராஜ், திரு. இராஜாஜி, திரு. ஆச்சாரியார் கிருபாளானி போன்ற தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பற்றி எல்லாம் ஏளனமாகப் பேசுவது ஏதோ சொல்வார்களே—அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிப்பது போல என்பதாக—அதுபோன்றதுதான் என்று கூறிவிடுகிறேன்.

அடுத்ததாக, என்னுடைய கடமையைச் சொல்ல விரும்புகிறேன். கவர்னர் பெருமான் ஆற்றிய உரையில் பல அம்சங்கள் விடப்பட்டிருக்கின்றன. கவர்னர் பெருமான் உரையை—அரசாங்கத்தின் பாலிஸி ஸ்டேட்மெண்டு என்று சொல்லுவார்கள். மேல்நாட்டில்—அதுவும் இங்கிலாந்தில் அதை கிங்ஸ் ஸ்பீச்—க்வீன்ஸ் ஸ்பீச் என்று சொல்லி வருகின்ற நிதி ஆண்டில் என்ன என்ன காரியங்களைச் செய்யப் போகிறார்கள் என்பதைக் கோடிட்டுக்காட்டும் உரையாகக் கொள்வார்கள். அந்த மரபை ஒட்டி இந்த மன்றத்திலே கவர்னர்பெருமான் ஆற்றிய உரையைப் 'பார்க்கிறபோது பல காரியங்களைச் சொல்லாது விட்டிருக்கிறார்கள் என்பதை மட்டும் கூற விரும்புகிறேன்.

குறிப்பாக நான் ஒன்று கூற விரும்புகிறேன். நம் நாட்டில் உள்ள கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்சினையைப்பற்றி கவர்னர்பெருமான் உரையில் ஒன்றும் காணாதது கண்டு நாங்கள் எல்லாம் வருந்துகிறோம். இன்று

நாட்டில் இருக்கும் நெசவாளர்கள் படுகிற துன்பங்கள், துயரங்கள் எடுத்துச்சொல்லொணாதவை. இன்று நூல் விலை அதிகமாக உயர்ந்துவிட்டது. அதற்குக் காரணம் மத்திய அரசாங்கத்தின் கொள்கை—அதோடு மாநில அரசாங்கத்திற்கும் அதில் ஒரு பங்கு இருக்கிறது என்கிற குற்றச்சாட்டைச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

முன்பெல்லாம் நெசவாளர்களுக்கு ஊக்கம் அளிக்க ரிபேட் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். மேலும் பல சலுகைகளை அளித்து வந்தார்கள். பெருமதிப்பிற்குரிய திரு. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் நிரந்தரமாக அவர்களுடைய பிரச்சினையைத் தீர்க்க என்ன என்ன வழிகளை மேற்கொள்ளவேண்டும் என்பதாக பல திட்டங்களை வெளியிலும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்த அரசாங்கம் நெசவாளர்களுடைய பிரச்சினையை—ஒரு சமுதாயப் பிரச்சினை என்ற முறையில் அணுகி அவர்களுக்கு இருக்கிற கஷ்டங்களை எல்லாம் தீர்க்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று நமது நூற்பாலைகளை எடுத்துக்கொண்டாலும் பலவிதமான பிரச்சினைகள் இருக்கின்றன. மற்ற மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களைப் பார்த்தால் இங்கே காம்போசிட் மில்களே இல்லை. நெசவு மில்லும், நூற்பு மில்லும் இணைந்து காணப்படவில்லை. இந்தமாதிரியான அமைப்பை நம் தமிழகத்தில் ஏற்படுத்துவதற்கு அரசு முனைந்து என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை நாங்கள் அறிய முடியவில்லை. பல நூற்பாலைகள் மூடிக்கிடக்கின்றன. அவற்றைத் திறக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். பொதுவாக இந்தத் தொழிலுக்கு அதிக ஊக்கம் அளிக்கிற முறையில்—அவர்களுக்கு அதிகச் சலுகை அளிக்க அரசு முன்வர வேண்டும்.

அடுத்தபடியாக, நமது தொழில்துறையில் பலவிதமான முன்னேற்றம் கண்டிருப்பதாக கவர்னர் அவர்களது உரையில் கோடிட்டுக்காட்டப்பட்டிருக்கிறது. ஆனால், பொதுவாக நான் முன்பே கூறினதுமாதிரி புதிதாகத் துவங்கப்படுகிற ஆலைகள் எல்லாம் கிராமப் பகுதிகளுக்குச் செல்லாமல் பட்டிணத்தை நோக்கியே சென்று கொண்டிருக்கின்றன என்பதை உணரவேண்டும். இந்தமாதிரி புதிதாக துவங்கப் படுகிற ஆலைகள் பட்டிணத்தை நோக்கி வராமல் மற்றப் பகுதிகளில் ஏற்படச் செய்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

நம்முடைய தொழில் துறையில்—இன்றைக்கு மகாராஷ்டிரா, குஜராத், வங்காளம் போன்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிறபோது---இங்கே தொழில் அதிகமாக அமைவதற்கு ஏற்ற climate, சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டும்.

கவர்னர் பெருமான் உரையில் கூறியிருக்கிறார்கள். நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். விலைவாசி ஏறிக் கொண்டேபோகிற தன்மையைப் பார்க்கின்றோம். விலைவாசி உயர்ந்து கொண்டேபோகிற காரணத்தினால் கூலி உயர்வு கொடுத்தாக வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆதலால், தொழிலில் முதல் முடக்கம் செய்வதற்கு பல கஷ்டங்கள்---சங்கடங்கள் ஏற்படுகின்றன. இவைகைப்பற்றி நமது அரசு

சிந்தித்து மத்திய அரசிடம் வற்புறுத்தி விலைவாசிகளைக் கட்டுப்படுத்த என்ன என்ன அம்சங்களில் நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

எனவே, கன்ஸ்யூமர் குட்ஸ்களைப் பொறுத்தவரையிலும் கூட்டுறவு மூலம் விநியோகம் செய்வது பொருத்தமாக இருக்கும் என்ற என்னுடைய யோசனையை நான் முதலமைச்சர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். எப்படி உணவுப் பண்டங்களுக்கு விலை குறைந்து இருக்கிறதோ அதுபோன்று கன்ஸ்யூமர் குட்ஸ்க்கும் விலையைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். வாழ்க்கைப் புள்ளிகளைப் பார்த்தால்—லிவ்விங் இண்டக்ஸ்—உயர்ந்துகொண்டேதான் போகிறது. எல்லாப் பண்டங்களுக்கும் விலை உயர்ந்து கொண்டேதான் போகிறது, ஒரு வேளை உணவுப் பண்டங்கள் நீங்கலாக. எனவே அப்படிப்பட்ட பண்டங்களின் விலைகளையும் கட்டுப்படுத்துவதற்கு அவர்கள் ஒரு திட்டத்தை உருவாக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றி கவர்னர் உரையிலே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இன்றைக்கு நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம் தாண்டவமாடிக்கொண்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சுகளில், வேலை தேடித்தரும் ஸ்தாபனங்களில் எத்தனை பேர்கள் லைவ் ரிஜிஸ்டரிலே இருக்கிறார்கள் என்பதை முதலமைச்சர் அவர்கள் கூறி, என்ன என்ன பரிகாரங்கள் அதற்குக் காணப்போகிறார்கள் என்பதை அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பொதுவாக கற்றறிந்தவர்களிடையே, அதேமாதிரி டெக்னிக்கல், என்று சொல்லக்கூடியவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் வளர்ந்துகொண்டே இருக்கிறது. அதைப் போக்குவதற்கு மாநில மட்டத்திலாவது துரித நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். வேலை தேடித் தரும் ஸ்தாபனங்களின்மூலம் மக்களுக்கு அதிகமான வேலைவாய்ப்புக்கள் இல்லாத நிலை இருந்துகொண்டிருக்கிறது. புதிய தொழில் நிறுவனங்கள் ஏற்பட்டால் எல்லோரையுமே வேலையில் அமர்த்த வேலை தேடித் தரும் ஸ்தாபனங்கள்மூலம்தான் எடுக்கவேண்டுமென்று உத்திரவிடவேண்டும். அப்படியானால்தான் வேலையில்லாத் திண்டாட்டம் என்ற பிரச்னைக்குப் பரிகாரம் காணமுடியும்.

ஆசிரியர்களையும் எஞ்சினியர்களையும் அப்ரன்டிஸ் முறையிலே புகுத்துகின்ற முறையிலே திட்டங்கள்பற்றி கவர்னர் உறையிலே திட்டங்கள் கூறியிருக்கிறார்கள். வேலையிலே இருக்கின்றவர்களுக்கும் பல கஷ்டங்களும், துன்பங்களும் இருக்கின்றன. அவற்றையும் போக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும்.

ரூரல் அன்எம்ப்ளாய்மெண்ட்பற்றி, கிராமாந்திரங்களிலே வேலையில்லாத் திண்டாட்டம் பற்றி இந்த அரசாங்கத்திற்கு என்ன திட்டம் இருக்கிறது என்பதைத் தெளிவாக்கினார்களானால் பொருத்தமாக இருக்கும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசாங்கம் அதற்காக ஒரு கிராஷ் ப்ரோக்ராம், சிறப்புத் திட்டம் உருவாக்கியிருக்கிறார்கள். சாலையமைப்பு போன்றவைகளை மாவட்ட அளவிலே செய்வதற்குத் திட்டம் இருப்பதாகப் பத்திரிகையின் வாயிலாக நான் அறிந்தேன். எனவே அப்படிப்பட்ட முறையிலே ரூரல் அன்-எம்ப்ளாய்மெண்டைப் போக்குவதற்கு என்ன என்ன முறைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன என்பதைக் கூறவேண்டும்.

உணவு அதிகமாகத்தான் உற்பத்தியாகிக்கொண்டிருக்கிறது. பசுமைப் புரட்சியின் காரணமாக 67 லட்சம் டன் இலக்குக்கு ஆளாகிவிட்டோம். ஆதலால் எந்தவிதமான கட்டுப்பாடும் தேவையில்லை என்ற கருத்து பொதுமக்களிடையே நிலவுகிறது. பிற மாநிலங்களில் ஒட்டியிருக்கின்ற டிஸ்ட்ரிக்ட்களிலே பெல்ட் ஏரியாக்கள் என்ற தனித் தன்மையை நீக்க வேண்டும். அப்படியானுல்தான் அந்தப் பகுதியிலுள்ள மக்களும் முழுமையான பலனை அடைவார்கள் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கவர்னர் உரையிலே பலவிதமான நல்ல காரியங்களை எடுத்துக் கூறியிருக்கிருர்கள். பொதுவாக ஒன்றிரண்டு விஷயங்களை இங்கு கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். நிலச் சீர்திருத்தத்தைப் பற்றி ஒரு கமிட்டி நியமனம் செய்யப்பட்டிருப்பதாகவும் அது சட்டத்திலே என்ன என்ன திருத்தங்கள் கொண்டுவரவேண்டுமென்பதைப்பற்றி ஆராய்ந்துகொண்டிருப்பதாகவும் அறிக்கையிலே காணப்படுகிறது. அர்பன் லாண்ட் சீலிங் பொறுத்தவரையில் அரசாங்கம் என்ன கொள்கையைக் கொண்டிருக்கிறது என்பதைப்பற்றிய அறிவிப்பை கவர்னர் உரையிலே நாங்கள் எல்லாம் எதிர்பார்த்தோம். ஏனென்ருல் தேர்தல் நடக்கின்ற நேரத்திலே முற்போக்குச் சட்டங்கள் அமுலாக்கப்படும் என்று கூறிக்கொண்டிருந்தார்கள். குறிப்பாக சமதர்மத்திலே அதிக நம்பிக்கை வைத்திருக்கின்ற அவர்கள் தங்களுடைய கட்சி அதிலே தங்களுடைய நிலைமையை விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மன்றத்திலே வேறு கருத்தையும் எடுத்துக் கூற விரும்புகிறேன். விசைத் தறிகளைப் புகுத்துவதில் இந்த அரசாங்கத்திற்கு என்ன கொள்கை இருக்கிறது என்பதை அவர்கள் விளக்கவேண்டும். விசைத்தறியைப் புகுத்துகின்ற காரணத்தினுல் பல பிரச்னைகள் எழுந்துகொண்டே இருக்கின்றன.

இந்த மன்றத்திலே முன்பு போர்ட் ஆப் ரெவின்யூ நீக்கம் செய்யப்படப்போவதாக எடுத்துக் கூறியிருக்கிருர்கள். அபாலிஷன் ஆப் போர்ட் ஆப் ரெவின்யூ என்ன ஆயிற்று என்பதைப்பற்றிக் கேட்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இன்னும் பல காரியங்களை அவர்கள் செய்கின்ற நேரத்திலே ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் . . . .

மாண்புமிகு திரு. செ. மாதவன் : காங்கிரஸ தலைவர் திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்கள் இந்த மன்றத்திலேயே விசைத் தறியை ஆதரித்துப் பேசியிருக்கிருர்கள், அது எனக்கு இன்றைக்கும் நினைவில் இருக்கிறது. பேச்சுத் துக்கத்திலே இந்த நாட்டிலே நூற்பாலைகளிலே இருக்கின்ற பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டுமென்ருல் காம்போஸிட் மில்ஸ் வேண்டுமென்று அவர்களே சொன்னுர்கள். காம்போஸிட் மில்ஸ் என்ருலே ஆட்டோமெடிக்காக அதிலே பவர்லூம்ஸ் வந்துவிடுகிறது. காம்போஸிட் மில்ஸ் வேண்டுமென்று சொல்கிற அவர்களே இப்பொழுது விசைத் தறி வேண்டாமென்று சொல்கிருர்கள். வெளியே மற்றவர்கள் அவர்கள் கருத்தைப் புரிந்துகொள்ள முடியாத நிலைமை ஏற்படலாம். அரசியல் கட்சிப் பிரச்னையாகக் கருதாமல் பொருளாதார நோக்கத்தோடு விசைத்தறி இந்த நாட்டிற்குத் தேவை என்று சொல்கிருர்களா? அவர்களுடைய நிலைமை என்ன என்பதை விளக்கவேண்டும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : விசைத் தறி வேண்டாமென்று நான் சொல்லவில்லை. விசைத்தறியைப் புகுத்துவதுபற்றி இந்த அரசாங்கத்தின் கொள்கை என்ன என்று கேட்டேன். காம்போஸிட் மில்ஸ் வேண்டுமென்று பல முறைகள் நான் இந்த மன்றத்திலே பேசியிருக்கிறேன். இன்னும் அந்தக் கருத்தைத்தான் கொண்டிருக்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் போர்டு ஆப் ரெவின்யூ அபாலிஷன் பற்றிச் சொல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அதிலே அரசாங்கத்தினுடைய திட்டவட்டமான கொள்கை என்ன என்பதை விளக்குவார்கள் என்று நம்புகிறேன்.

ஸ்டேட் பிளானிங் கமிஷன் ஒன்று நிறுவுவதற்குத் திட்டம் திட்டியிருக்கிருர்கள். என்ன என்ன காரியங்களை, என்ன வழிமுறைகளைப் பின்பற்றப் போகிருர்கள் என்பதையெல்லாம் இதிலே கூறியிருக்கிருர்கள். இந்தமாதிரி ஸ்டேட் பிளானிங் கமிஷன் ஏற்படுத்தி—ரீஜினல் இம்பாலன்ஸ் ஏற்படுமென்று சொல்வார்கள். அப்படி ஏற்படாமல் பிற்பட்ட பகுதிகள் எவை என்று பார்த்து அந்தப் பகுதிகளுக்கு நன்மைகள் செய்யக்கூடிய அளவிலே புதியதாகத் துவங்கக்கூடிய தொழில் நிறுவனங்களை அங்கே நிறுவக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்பதை ஆராய்ந்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக எங்களுடைய ஜில்லா விவசாய ஜில்லாவாக இருக்கிறது. அங்கே தொழில்கள் இல்லாமல் இருக்கிறது. அந்த ஜில்லாவுக்கு ஏதாவது செய்யமுடியுமா என்பதைப் பார்க்கவேண்டும். அந்த ஜில்லாவிலே பெரும்பான்மையானவர்கள் எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் என்று நினைக்காமல் எங்களுடைய நியாயமான கோரிக்கையைப் புறக்கணிக்காமல் நியாயமாக இருக்கிறது என்று அரசாங்கத்திற்குப் பட்டால் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேற்குகடலோர சாலை அமைக்கவேண்டுமென்று மத்திய அரசாங்கம் திட்டம் திட்டியிருக்கிருர்கள். பம்பாயிலிருந்து கன்னியாகுமரி வரையில் ரோடு அமைக்கவேண்டுமென்ற திட்டத்தில் கேரளா போன்ற அரசாங்கங்கள் முனைந்து இருக்கிருர்கள். கன்னியாகுமரி ஜில்லா கேரளப் பகுதியை ஒட்டியதாக இருக்கிறது. அப்படித் தொட்டு இருக்கின்ற காரணத்தினுல் மேற்குத் தொடர்ச்சி சாலையை உருவாக்குவதிலே நம்முடைய அரசாங்கமும் முனைந்து பணியாற்ற வேண்டும். பல பாலங்கள் இடையிலே கட்டவேண்டிய நிலைமை ஏற்படும். பல ஆண்டுகாலமாக கடலோர மக்கள் இப்படிப்பட்ட சாலையில்லாததால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிருர்கள். அவதிப்பட்டுக் கொண்டிருக்கிருர்கள். அவர்களுடைய போக்குவரத்திற்காக இது இன்றியமையாததாக இருக்கிறது. அது மட்டுமல்ல, இந்தியாவின் பாதுகாப்பிலும் இது முக்கியமான அம்சம் என்ற முறையிலே அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

ஐந்தாவது பைனன்ஸ் கமிஷன் அநீதி வழங்கிவிட்டது என்று முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலும் கவர்னர் தம்முடைய உரையிலும் கூறியிருக்கிருர்கள். பொதுவாக சம்பளக் குழு நியமனம் செய்தது சற்றுக் காலந்தாழ்த்தி நடத்தி விட்டோமோ என்று ஐயப்படக்கூடிய நிலைமை

இருக்கிறது. அதிலே கணிசமான பங்கினை மத்திய அரசாங்கம் தருவதற்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள். சாதாரணமாக மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கத்திற்கும் என்ன முறையிலே உறவுகள் இருக்கவேண்டு மென்பதுபற்றி ஆராய்வதற்காக ஒரு கமிட்டியாவது நிறுவப்பட்டு இருக்கிறது.

சட்டத்தை எப்படித் திருத்த வேண்டுமென்பதைப்பற்றியெல்லாம் இன்று கூறக் கூடிய சந்தர்ப்பம் நமக்கு இல்லை. அதிகப்படியான நிதி உதவியும் மாகாணங்களுக்கு எந்தத் திட்ட வேலைகளையோ அல்லது அதிகாரிகளுக்கு அதிக சம்பளம் கொடுக்கவோ புதிய நிதி வாயில்களை சுட்டித்தர மத்திய சர்க்கார் தடையாக இருக்கக்கூடாது. இம்மாதிரி காரியங்களிலே நாட மிகவும் அக்கறையுடையவர்களாகவும், கண்ணுங்கருத்துமுடையவர்களா கவும் இருக்க வேண்டும். இந்த அரசியலமைப்பின்படி ஏதோ அவர்கள் விசாரணை நடத்தி, வருவாய் இனங்களைப் பகிர்ந்து கொடுக்கும் தன்மையிலே திருப்பிக் கொடுத்தாலும் இதிலேயுள்ள கஷ்டங்களை மறுபடியும் ஆராய்ந்த மத்திய சர்க்காரிடமிருந்து, ஒதுக்கியிருக்கும் சிறப்பு நிதியாக 800 கோ ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள், அதிலிருந்து அதிக பங்கு பெற வேண்டி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தி சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குடிசைப்பகுதிகளை ஒழிப்பதற்கு தனி வாரியம் போட்டிருக்கிறது. அதற் சட்டமும் வரப்போகிறது. அதைப்பற்றி அதிகமான கருத்துக்க இந்தச் சந்தர்ப்பத்திலே கூறாமல் அந்தச் சட்டம் விவாதத்திற்கு வரும்பொழுத கூற வேண்டுமென்று கருதுகிறேன். இந்தப் பட்டணத்திலேயிருக்கு குடிசைகளை மட்டும் நினைத்துக்கொள்ளாமல், கிராமங்களிலே வீடில்லாம தவிக்கும் ஏழை எளிய மக்களுக்கு எப்படியாவது 5 சென்ட் நிலமாவத கொடுக்க ஆக்கப்பூர்வமான யோசனையை அல்லது உத்தரவைப் பிறப்பிக் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது பொருளாதார அடிப்படையி இருக்க வேண்டும். குறிப்பிட்ட சமுதாயங்களுக்கு என்று இல்லாம பொருளாதார அடிப்படையில் வீடில்லாதவர்களுக்குக் கொடுக்க வேண்டு சென்சஸ் கணக்கெடுத்து, என்னென்ன வழிவகைகளைச் செய்ய முடியுமே அதைச் செய்ய அரசாங்கம் முற்பட வேண்டுமென்றும் இந்தச் சந்தர்ப்பத்தி நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பாக்வேர்டு கிளாஸஸைப்பற்றி கவர்னர் அவர்க உரையிலே பத்தாவது பாராவிலே கூறியிருக்கிறது. பாக்வேர்டு கிளாஸ கமிஷனுடைய அறிக்கையானது அரசாங்கத்தின் ஆய்விலே இருக்கிறத மத்திய சர்க்காரிலிருந்து பேக்வேர்ட் கமிஷன் ஒன்றை நிறுவி 1955-ஆ ஆண்டிலே அவர்கள் ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். நான் அதி யிருக்கும் ஒன்றிரண்டு காரியங்களை, பரிந்துரைகளை இந்த அரசாங்க பரிசீலனை செய்யும்பொழுது மனத்திலே வைத்துக்கொள்ள வேண்டுமெ பதற்காகச் சுட்டிக்காட்ட ஓரிரு காரியங்களை எடுத்துக்கூறலாம் என் கருதுகிறேன். உத்தியோக நியமனத்தில் கிளாஸ் 1, கிளாஸ் 2 சர்வீசஸ்களி பிற்பட்டவர்களுக்கு, கல்வி யோக்கியதாம்சம், மற்ற அம்சங்களெல்லா இருந்தாலும் அவர்களுக்கு, , they should be given decided preference என்று இந்த அறிக்கையிலே, பாராளுமன்றத்தால் நிறுவப்பட்ட பாக்வேர் கிளாஸஸ் கமிஷனின் பரிந்துரையிலே இருக்கிறது. அம்மாதிரி பிரச்னைக யெல்லாம் நல்லமுறையிலே ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்

இன்னொரு விஷயம் கூறவேண்டுமென்று விரும்புகிறேன். பொருளாதாரத் துறையிலே பிற்பட்டவர்களாகவும் இருப்பதால் பின்தங்கிய நிலைமை ஏற்பட்டுக்கொண்டு இருக்கிறது. இவர்களை கல்வித்துறையிலே ஊக்குவிக்க, என்னென்ன வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று அதிகமாகப் பணம் செலவு செய்திருக்கிறது. அதற்கு தனி இலாக்கா நிறுவியிருக்கிறது. அதற்கு என்ன செய்ய வேண்டுமென்பதற்கு ஒரு யோசனை சொல்ல வேண்டும் என்று நினைக்கிறேன். கல்லூரிகள், பள்ளிக்கூடங்கள் ஏனைய ஸ்தாபனங்கள் போன்றவைகளில் பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களின் மனுக்கள் வந்தால் அவைகளை அனுதாபத்தோடு பரிசீலனை செய்து அவர்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன்.

பொதுவாக இன்னும் பே கமிஷனிலே ஏற்பட்ட ஒன்றிரண்டு கஷ்டங்களைச் சுட்டிக்காட்டி என்னுடைய உரையைச் சுருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். இந்த பே கமிஷன் ஏற்படுத்தியதன் காரணமாக பல அனமலீஸ் ஏற்பட்டிருக் கின்றன என்று இந்த அறிக்கையிலே கூறியிருக்கிறது. அதையெல்லாம் பார்ப்பதற்கு ஒரு காரியதரிசி அவர்களை வைத்திருக்கிறது என்று நான் அறிகிறேன். குறிப்பாக பொறியியல் கல்லூரிகளிலே பணியாற்றுபவர்களுக்கு இந்த பே கமிஷன் ரிப்போர்ட்டிலே கூறக்கூடிய அந்த ஸ்கேல்ஸ் கொடுக்கவில்லை என்று மதுரை தியாகராஜா என்ஜினியரிங் காலேஜில் இருப்பவர்களெல்லாம் ஒரு கடிதம் தந்திருக்கிறார்கள். அதையெல்லாம் நியாயமான முறையிலே செய்ய வேண்டுமென்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். செக்ரட்டேரியட்டில் இருக்கும் ஸ்டாஃப்க்கு, அசிஸ்டெண்ட் களுக்கெல்லாம் நியாயம் வழங்கப்படவில்லை என்று பரவலாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, செக்ரட்டேரியட் ஸ்டாஃப்க்கு அதிக ஊக்கம் அளிக்கும் வகையிலே பே கமிஷனிலே 'Overlapping scales' எல்லாம் கொடுத்தும் அவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். அதிகமாகப் பாதிக்கப்பட்டிருப்பது செக்ரட்டேரியட் ஸ்டாஃப் என்று சொன்னால், இந்த பே கமிஷன் பரிந்துரையில் அப்படியிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. எனவே, இம்மாதிரியான காரியங்களை நல்ல முறையில் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக அட்மினிஸ்ட்ரேட்டிவ் ரிஃபார்ம்ஸ் கமிஷனைப்பற்றி ஓரிரு வார்த்தைகள் கூறலாம் என்று நினைக்கிறேன். மத்திய சர்க்காரிலே ஹனுமந்தையா தலைமையிலே அட்மினிஸ்ட்ரேட்டிவ் ரிஃபார்ம்ஸ் கமிஷன் உருவாக்கி பல பரிந்துரைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அதேபோல், இன்றிருக்கும் முறையிலே நம் அரசாங்கத்தின் நிர்வாகத்தை எப்படி மாற்றி அமைப்பது என்று பார்க்க வேண்டும். அதாவது அரசாங்க அலுவலகங்களிலே நாம் மனுச்செய்தால் குறிப்பிட்ட தினங்களுக்குள் பைசல் செய்ய வேண்டுமென்று நிர்ப்பந்தத்தை உருவாக்க வேண்டும். காலாகாலங் களிலே இம்மாதிரி செய்யாமலிருந்தால் பல கஷ்டங்கள் ஏற்பட்டுவிடும். அதேபோல், உயர்நீதிமன்றங்களிலே பல அரசாங்க ஊழியர்களின் உத்தியோக விஷயமாக அவர்கள் பல தடவைகள் ரிட் மனுக்கள் கொடுத்து அவர்கள் காரியங்களுக்குப் பரிகாரம் தேட வேண்டிய நிலைமை இருக்கிறது. ரிட் மனுக்கள் கொடுத்து அவர்களுக்கு அனுகூலமான தீர்ப்பு வந்ததற்குப் பிறகு அதை அமல் செய்ய அரசாங்கம் தயக்கம் காட்டக்கூடாது. ஏனென்றால் பல பிரச்னைகள் எங்கள் பகுதியிலே இருக்கின்றன. குறிப்பாக, கல்வி இலாக்காவில் இருக்கும் ஆசிரியர்கள், குறிப்பாக திருவிதாங்கூர்-கொச்சியிலிருந்து மாற்றப்

பட்ட ஆசிரியர்களுக்கு இம்மாதிரி மனத்தாங்கல் இருக்கிறது. இதைப்பற்றி அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

புதிதாக வரிகள் ஒன்றும் வராது என்று எதிர்பார்க்கிறேன். ஒருவேளை ஜூன் மாதத்திலே முதலமைச்சரவர்கள் புதிய வரிகளைக் கொண்டு வருகிறார்களா அல்லது மதுவிலக்கை எடுத்துவிடுவார்களோ என்று பொதுவாக நாங்கள் அஞ்சுகிறோம். மதுவிலக்கை எடுக்கக்கூடாது என்று எங்கள் கட்சியின் சார்பாக நான் குறிப்பிடுவதற்குக் கடமைப்பட்டுள்ளவனாக இருக்கிறேன். எங்கள் தாய்க்குலத்தின் பெயரால், இம்மாதிரிச் சட்டத்தை எடுப்பது பெரும் ஆபத்தாக இருக்கும், இன்றுள்ள சமுதாயத்தின் அடித்தளத்தில் இருப்பவர்களின் நல்வாழ்வைக் குலைக்காமலிருக்க மது அரக்கன் தமிழகத்திற்கு வரக்கூடாது என்று கூறுகிறேன். ஒருவேளை அண்டை மாநிலங்களிலுள்ள காங்கிரஸ்காரர்கள் ஆளும் மாநிலங்களில் எடுக்கப்பட்டிருக்கிறது என்றாலும் கூட தமிழகத்திலே, குறிப்பாக வள்ளுவரைப் பின்பற்றும், வள்ளுவர் கூறுகின்றவற்றைக் கடைப்பிடிப்பவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், அந்த மதுவை மறுமுறையும் வரவழைக்கக்கூடாது, வரவழைக்கக்கூடாது என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: வள்ளுவர், புலால் உண்ணக் கூடாது என்று சொல்கிறார்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த மதுவிலக்கை இன்னும் அதிகமாகத் தீவிரப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக இந்த மதுக் கஷாயத்தை கள்ளத்தனமாகத் தயாரிப்பதைப்பற்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அரிஷ்டம், ஆசவம் போன்ற மதுக் கஷாயங்களை பல பகுதிகளில் வைத்தியர்கள் என்று சொல்லிக்கொண்டு விற்பனை செய்கிறார்கள். இதைத் தடுக்க போதிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இம்மாதிரி காரியங்களிலே பொதுவாக நமது தமிழக அரசாங்கம் முனைந்திருக்க வேண்டும். அப்படியிருந்தால்தான் நல்லமுறையில் அமைய முடியும்.

நிலவரி ரத்து செய்திருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அதுபற்றி நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். எங்கள் பகுதிகளிலே நிலவரியை இன்னும் வசூல் செய்துகொண்டிருக்கிறார்கள். எந்தச் சந்தர்ப்பத்தில் இத்தகைய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை முதலமைச்சரவர்கள் ஆராய்ந்து அதைத் தீர்க்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றும் கூற விரும்புகிறேன். ரூரல் கிரடிட்டைப் பற்றிச் சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். கூட்டுறவு நிலவள வங்கிகளில் பல காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். குறிப்பாக என்னுடைய தொகுதியில் புதிதாக நிலவள வங்கி ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. முஞ்சிறை பஞ்சாயத்து ஒன்றியத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. புரமோட்டர்களை நியமனம் செய்து, டைரக்டர்களை நாமினேட் செய்திருக்கிறார்கள்.

பணம் வசூல் செய்திருக்கிறார்கள். அதற்கு ஒழுங்காகக் கணக்கில்லை என்று பல ஆட்சேபணைகள் சொல்லப்படுகின்றன. டைரக்டர்கள் சரியான கணக்கு வைக்கவில்லை.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மாண்புமிகு எதிர்க் கோஷ்டித் தலைவர் முன்னால் ஒரு முறை சொல்லியபோதே சொன்னேன், அந்த பிளாக்கில் எந்தவிதமான டைரக்டர்களையும் அரசு நியமிக்கவில்லை என்று. ஒரு தடவை சொன்னால் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். திரும்பவும் சொல்கிறேன் டைரக்டர் யாரையும் நாங்கள் நியமிக்கவில்லை. நான் நியமிக்கவில்லை என்று சொல்லும்போது திரும்பத் திரும்ப அரசாங்கம் டைரக்டர்களை நியமித்தது என்று சொன்னால், நான் சொல்வதிலே நம்பிக்கையில்லை என்று ஆகிறது. அது மாதிரி நியமித்து இருந்தால், ஏதாவது தஸ்தாவேஜியைக் காண்பிக்க முடியுமா? ஒரு தடவைக்குப் பல தடவை சொல்கிறேன், நான் சொல்வதை நம்புங்கள். தவறாகச் சொல்லி நான் ஏதோ நன்மை அடைய வேண்டிய அவசியம் இல்லை. எந்த டைரக்டரும் நியமிக்கப்படவில்லை. அரசினரால் நியமிக்கப்படவில்லை என்று திரும்பத் திரும்பச் சொல்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி உடையவனாக இருக்கிறேன். நிலவள வங்கி ஆரம்பித்தபோது கிரஸ்டபர், இன்னொருவர் ஜாய் செல்வராஜ் என்பவர் இரண்டு பேரும் ரசீது புஸ்தகம் அச்சடித்து அந்தக் கூட்டுறவு இலாகா இதையெல்லாம் கண்காணிக்கும்போதே அவர்கள் பணம் வசூல் செய்து இருக்கிறார்கள். பொது மக்களிடம் இருந்து பணம் வசூல் செய்திருக்கிறார்கள். அதிலே ஒருவர் பிரெசிடெண்ட் என்று சொல்கிறார்கள். அரசாங்கம் நியமிக்காவிட்டாலும் இலாகா நியமனம் பெற்று இருக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். அவர்கள் சொல்லியதற்குப் பிறகும் அவருக்குக் கிடைத்த தகவல்களை மட்டும் வைத்துக் கொண்டு அமைச்சர் சொல்வது சரியில்லை என்று சொல்வது பொருத்தம் இல்லை. அமைச்சர் அவர்கள் பொறுப்போடு சொல்கிறார், பொறுப்பை ஏற்றுக் கொண்டு டைரக்டர்கள் யாரும் நியமிக்கப்படவில்லை என்று சொன்னதற்குப் பிறகும் இந்தப் பிரச்னையைத் திரும்பத் திரும்பச் சொல்வது சரி இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: அமைச்சர் அவர்கள் கூறியதை ஏற்றுக் கொண்டு, அந்த அமைப்பு கூட்டுறவுத் துறையால் ஆரம்பிக்கப்பட்டது; அங்கே இருக்கிற டைரக்டர்களை அரசாங்கம் நியமித்ததா என்று அறிய இந்தக் குற்றச்சாட்டைச் சொல்கிறேன். நிலவள வங்கி குழித்துறையில் போர்டு போடப்பட்டு இயங்கிக் கொண்டு இருக்கிறது. என்னுடைய தேர்தலைப் பற்றி பின்னாலே சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மாண்புமிகு எதிர்க் கோஷ்டித் தலைவர் மீண்டும், மீண்டும் குற்றச்சாட்டைச் சொல்கிறார். அரசாங்கமோ, டிபார்ட்மெண்டோ, ரிஜிஸ்ட்ராரோ அவர்களை நியமிக்கவில்லை. அப்படி நியமிக்கிறபோது, இரண்டு வேட்பாளர்களில் யாரைப் போடுவது என்று வரும்போது, கவனிக்கலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தாங்கள் கொடுத்த விளக்கத்தை ஏற்றுக் கொள்கிறேன். இந்தமாதிரியான காரியங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறவர்களைப் பற்றி ஒழுங்கான விசாரணை செய்யப்பட வேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஒழுங்காக விசாரணை செய்யப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: பொது மக்களிடமிருந்து கடன் கிடைக்க வேண்டுமென்று கோரிக்கை வரும்போது அவர்களுக்கு கடன் கிடைக்க வேண்டுமென்பதற்காகத்தான் மத்திய அரசாங்கம் ரூரல் கிரடிட் சொசைட்டிகளை ஆரம்பிக்க பணம் அதிகமாகக் கொடுக்கிறது. இந்தக் காரணத்தினால் அந்த ஜில்லாவில் உள்ள மக்களுக்கு நல்லபடியாகப் பணம் கிடைக்க வேண்டுமென்று இதைக் குறிப்பிடுகிறேன். தென்னை மரம், பனை மரம், மற்றும் பண்ணைகள் அமைக்க, இதுமாதிரியான காரியங்களுக்குக் கூட்டுறவுத் துறையில் இருந்து அதிகமாகப் பணம் கிடைக்க வசதி செய்ய வேண்டும். காலாகாலத்தில் இந்தப் பணம் கிடைக்க வகை செய்ய வேண்டும். அதற்கான காரியங்களை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எதிர்க்கட்சிக்காரர்கள் மீது எந்தவிதமான மாசும் கூற வேண்டுமென்று சொல்லவில்லை. அவர்கள் மீது குற்றங்களைச் சொல்வதற்கு இப்போது என்னிடம் எந்தவிதமான ஆதாரமும் இல்லை. இது எனக்கே பரிபூர்ணமாகத் தெரியும். இந்தமாதிரியான காரியங்களில் சிறப்பாகவும், குறிப்பாகவும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் ஜில்லாவிற்கு அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கவர்னர் அவர்கள் உரையில் கூறிய நல்ல கருத்துக்களை ஏற்றுக் கொண்டு, இன்றைக்கு எந்தெந்த முறையிலே நடத்த முடியும் என்பதையெல்லாம் அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டு அதற்கு ஏற்றாற்போல தேர்தலில் நடந்த காழ்ப்பு உணர்ச்சிகளை மறந்து நல்ல ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்குவதற்கு இந்த மன்றத்திலே நாங்கள் எண்ணிக்கையிலே குறைவாக இருக்கிற காரணத்தினால் எங்கள் மனதைப் புண்படுத்தாமல் நல்ல முறையிலே நடத்துவார் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து நான் முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கவர்னர் பெருமானுடைய உரையின் மீது இந்த மாமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. வேழவேந்தன் கொண்டுவந்த நன்றி அறிவிப்புத் தீர்மானத்தையொட்டி எல்லாக் கட்சிகளினுடைய தலைவர்களும், கட்சி உறுப்பினர்களும் கலந்துகொண்டு தங்களுடைய நல்ல கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

இறுதியாகப் பேசிய நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. பொன்னப்ப நாடார் உள்பட மொத்தம் 67 பேர் இந்த விவாதத்திலே கலந்துகொண்டு உரை நிகழ்த்தியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 183 பேர் இங்கே இருந்தாலும்,- கழகத்தின் சார்பிலே உரையாற்றியவர்கள் 33 பேர். எதிர்க் கட்சியிலே மொத்தம் 52 பேர் இருந்தாலும் 34 பேர் உரையாற்றுவதற்கான வாய்ப்பினை இங்கே பெற்றிருக்கிறார்கள். இது ஒன்றே ஆளுங்கட்சி எதிர் தரப்பிலே உள்ளவர்களை நல்ல வகையிலே மதிக்கிறது என்பதற்குச் சரியான சான்றாகும் என்று நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

தேர்தலைப்பற்றி
கவர்னர் அவர்களுடைய உரையில் குறிப்பிட்ட
விவாதிக்கையில் உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்றும்போது
காரசாரமாக விவாதம் நடைபெற்றதை இந்த மாமன்றத்திலே உள்ள
அனைவரும் நன்றாக அறிவோம். ஆனால் ஒவ்வொருவரும் தங்களுடைய
தொகுதியில் நடைபெற்ற அசம்பாவிதங்களை எடுத்துச் சொல்லிவிட்டு,
இனிமேல் இதுபோன்ற அசம்பாவிதங்கள் நடக்காமல் பார்த்துக் கொள்ள
வேண்டுமென்று கூறியதில் இருந்தே, யாரும் இந்த வன்முறை வெறியாட்டங்களை
நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் விரும்பவில்லை என்பது வெகு
தெளிவாகத் தெரிகிறது.

முஸ்லீம் லீக் கட்சித் தலைவர் திருப்பூர் மொய்தின் அவர்கள் பேசும்போது
அழகாகக் குறிப்பிட்டார்கள், "நடந்தவைகளை மறந்துவிட்டு, ஜனநாயகத்
தீர்ப்பை ஏற்றுக் கொண்டு, நாட்டின் எதிர்காலத்தை ஒளிமயமாக்குவதற்கு
நாம் அனைவரும் சேர்ந்து நின்று பாடுபடுவோம்" என்று. அப்படிப் பாடுபட
வேண்டும் என்று எண்ணுகிற நேரத்தில், நடந்து முடிந்த தேர்தல் ஏதோ
ஒரு மோசடியானது, தவறாக நடந்து விட்டது என்ற பிரசாரம் இங்கே
அவையிலே செய்யப்பட்டாலும் சரி, அல்லது வெளியிலே செய்வதாக
இருந்தாலும் சரி, அது நல்லதல்ல, பொருத்தமுடையதும் அல்ல. தேர்தல்
முடிவு வெளியானதும் சுதந்திராக் கட்சியின் ஒரு பெருந்தலைவரான திரு.
மசானி அவர்கள் தெரிவித்த கருத்து 12—3—1971 தினமணி பத்திரிகையில்
வெளியாகி இருந்தது. வாக்காளர்கள் திட்டவட்டமாக பாராளுமன்றத்
திற்கும், அவரது கட்சிக்கும் நம்பிக்கையோடு அளித்த வாக்குகளை, ஜனநாயக
வாதி என்ற ரீதியில், தீர்ப்பினை தாங்கள் ஏற்றுக் கொள்வதாக சுதந்திரக்
கட்சித் தலைவர் மசானி இன்று பத்திரிக்கையில் கூறிய கருத்துக்கள் என்று
செய்தி வெளியாகி இருந்தது. அதுதான் ஜனநாயகத்திலே போற்றிப்
பாராட்ட வேண்டிய நல்ல மரபாகும்.

அடுத்தபடியாக, மையிலே ஏதோ இரசாயனக் கலவை, ஏதோ மாயங்கள்
நடந்தன என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னப்ப நாடார், வரவு
செலவுத் திட்டத்தின் மீது பேசும்போது, இந்திர ஜாலங்கள் நடந்துவிட்டன
என்று சொன்னார்கள். இந்திர ஜாலங்கள் என்று அவர் குறிப்பிடுவதை
நான் புரிந்து கொள்கிறேன். இந்திர ஜாலங்கள் நடந்து விட்டன என்று
குறைப்பட்டார்கள். மையிலே தவறு இருக்கிறது, அதை வைத்தால்
உடனே காய்ந்து விடுகிறது, வேறு மாதிரி மாறி விடுகிறது என்றெல்லாம்
இன்றைக்கும் பேசப்படுகிறது, எழுதப்படுகிறது.

வாக்குச் சீட்டில் மோசடி நடந்ததா என்று ஒரு கேள்வி எழுப்பப்பட்ட
நேரத்தில், ஜனநாயகக் கூட்டணியில் உள்ள சில கட்சிகளின் ஆதரவோடு
சுயேச்சையாகப் போட்டியிட்ட டாட்டா அவர்கள் அந்தப் புகாரை மறுத்து
ஒரு அறிக்கை வெளியிட்டார்கள். அது 19-3-1971-ம் தேதிய இந்தியன்
எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் வெளியாகி இருக்கிறது. தனது தோல்வியை
எதிர்த்து தான் வழக்குத் தொடரப் போவதாக வந்துள்ள செய்தியை மறுத்து,
நாவல் டாட்டா அவர்கள் அறிக்கை ஒன்று விட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ள கருத்துக்களாவன:—

அந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ள கருத்துக்களாவன:— தாக்கல் செய்ய
"நான் தேர்தல் முடிவை எதிர்த்து மனு எதையும் தாக்கல் செய்ய
விரும்பவில்லை. அவ்வாறு ஒருபோதும் யோசித்ததுமில்லை. நான் வழக்காடப்
போவதாக வந்துள்ள செய்தி குறும்புத்தனமானது. வாக்குச் சீட்டுகளில்

ரசாயன மை பயன்படுத்தப்பட்டது என்னும் புகார்கள் நெருங்கி தொடர்பில்லாதது. கற்பனையானது. மர்ம ரசாயன மை பயனபடுத்தப்பட்ட விசேஷ வாக்குச் சீட்டுகளிருந்தன என்ற புகார்களெல்லாம் உண்மையா யிருக்கும் பட்சத்தில் நான் சுமார் 20,000 வாக்குகளைத்தான் பெற்றிருப்பேன். நீரிலிருந்து வெளியே தூக்கிப் போட்ட மீன் போலாகிவிட்டேன். மீண்டும் தண்ணீருக்கே போகவிரும்புகிறேன்."

நான் இவைகளையெல்லாம் எடுத்துச் சொல்வதற்குக் காரணம், மக்களின் தீர்ப்பை எவ்வளவு மிகுந்த பெருந்தன்மையோடு அவர்கள் ஒத்துக் கொண் டிருக்கிறார்கள் என்பதற்காகத்தான் நான் இவைகளை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

அதேபோல் நேற்றையதினம் மாநிலங்களவை உறுப்பினர் திரு. ஆர். டி. பார்த்தசாரதி அவர்கள், "சமீபத்தில் நடந்து முடிந்த தேர்தலில் இந்திரா காங்கிரசுக்கு மக்கள் பெருவாரியான ஆதரவு தந்ததால் அதன் முற்போக்குக் கொள்கையில் மக்கள் தங்கள் நம்பிக்கையைத் தெரிவித்தனர் என்பது நிரூபணமாகிவிட்டது. இந்திரா காந்தியின் தலைமைக்கு மக்கள் பெருவாரியான ஆதரவு அளித்தனர். ஜனநாயக வாதி என்ற முறையில் மக்கள் தீர்ப்பை நான் ஏற்கிறேன்" என்று கூறி, அந்த (நிஜலிங்கப்பா) காங்கிரஸையே கூட அவர் விட்டிருக்கிறார். அவரோடு வேறு சிலரும் சென்றிருக்கிறார்கள். இப்படி தேர்தல் முடிவை அவர்கள் மிகுந்த பெருந்தன்மையோடு ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், தமிழ்நாட்டில் ஏதோ மோசடி நடந்து விட்டது, மோசடி நடந்துவிட்டது என்று இன்றைக்கும் பேசப்படுகிறது. 1967-ல் திராவிட முன்னேற்றக் கழகம் ஏதோ ஒரு விபத்தின் காரணமாக திடீரென்று வெற்றி பெற்று புதிய ஆளும் கட்சியாக வந்து அமர்ந்து விட்டது, ஆகவே இந்தத் தடவை அவர்கள் மீண்டும் வருவது என்பது நம்பமுடியாத ஒன்று, என்று அவர்கள் நம்பிக் கொண்டிருந்தார்கள். கோட்டையிலே யார் யார் வந்தெந்த இடத்தில் வந்து அமர்வது என்று மந்திரிகள் பட்டியலைக்கூட அவர்களாகவே தயாரித்துக்கொண்டு, மந்திரியாக நியமிக்கப்பட வாக்குறுதி அளிக்கப்பட்ட ஒருவர் கூட தன் கண் பார்வையில் சற்று கோளாறு இருக்கிறது என்ற காரணத்திற்காக தமக்குத் தெரிந்த டாக்டர் ஒருவரை நாடிச் சென்று பதவிப் பிரமாணம் படிப்பதற்காகத் தனக்குக் கண்ணாடி மாற்றப்படவேண்டும் என்று கேட்கிற அளவிற்கு அவர்கள் நம்பிக்கொண்டிருந்தார்கள். பெரும் தலைவர்கள் எல்லாம், நிருபர்கள் அவர்களைச் சந்திக்கப் போனபோது "பத்தாம் தேதிக்குப் பிறகு கோட்டையில் வந்து சந்தியுங்கள்" என்று சொல்கிற அளவிற்கு நம்பிக்கை கொண்டிருந்தார்கள். அவர்கள் இப்படி நம்பிக்கை தெரிவித்து அறிக்கை வெளியிட்டார்கள். நாட்டில் பலரும் அப்படி என்ன ஒரு மாறுதல் திடீரென்று நிகழப் போகிறது என்று எதிர்பார்த்தார்கள். அளிக்கப் பட்ட வாக்குச் சீட்டுகள் பெட்டியில் இருக்கிற நேரத்தில் யார் யாருக்கு எந்தெந்த இடம், யார் யாருக்கு என்னென்ன இலாகாக்கள் என்றெல்லாம் அவர்கள் பேசிப் பிரித்துக்கொண்டிருந்த நேரத்தில், "என்னைப் பிடித்து சிறையில் வைப்பார்களாம், வைத்தால் என்ன, நாங்கள் ஏழு நாட்களுக்குப் பிறகு விடுதலையாகி விடுவோம்" என்றும் ஆட்சிக்கு வந்துவிடுவோம் என்றும் மிகுந்த தைரியத்தோடும், துணிவோடும், நம்பிக்கையோடும் எண்ணிக்கொண் டிருந்தார்கள், பத்தாம் தேதி அன்று வாக்குகள் எண்ணப்பட்டு முற்றிலும்

மாறான முடிவுகள் வந்ததும் இந்த முடிவிற்குப் பிறகு, மக்கள் அளித்த தீர்ப்பிற்குப் பிறகு, தங்களுடைய கூற்றை அப்படியே மாற்றிக்கொண்டு தேர்தலே மோசடியானது, தேர்தலே நம்பிக்கையற்றது, இந்தத் தேர்தலே தவறானது என்று தேர்தல் அடிப்படையையே தகர்க்கத் தூண்டி விட்டார்கள்.

நேற்றயதினம் பலர் இங்கு பேசியிருக்கிறார்கள். தேர்தலில் இன்னும் நவீனமான முறைகள் எல்லாம் பயன்படுத்தப்படவேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். அதில் எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. மேலும் நவீனமான முறைகள் தேவைதான். ஆனால் தேர்தலில் அங்கொன்றும் இங்கொன்றும் என்று சில குறைகள் இருக்கலாமே தவிர, குற்றங்கள் இருப்பதாக நாம் கூறுவது நல்லதல்ல. குறைகளுக்கும் குற்றங்களுக்கும் உள்ள பொருளை நாம் ஆழ்ந்து கவனிக்கவேண்டும். குறைகள் என்றால் ஆங்காங்கே சென்று உடனடியாகக் களையப்பட வேண்டியது. தெரிந்து மீறிச் செய்யப்படுகிற காரியங்கள் குற்றங்களாகும். அப்படி எந்தக் குற்றமும் இந்தத் தேர்தலில் நடைபெறவில்லை.

முன்பெல்லாம் சொல்வார்கள், மாண்புமிகு உறுப்பினர், மதுரை உறுப்பினர் திரு. திருப்பதி அவர்கள் குறிப்பிட்டதுபோல், "பெட்டியை மாற்றி விட்டார் கள்", "பெட்டியை உடைத்துவிட்டார்கள்" என்றெல்லாம் சொல்வார்கள். எனக்கு நன்கு நினைவில் இருக்கிறது. 1957-ம் ஆண்டு என் நண்பர் ஒருவர் தேர்தலில் நின்றார். நின்ற அவர், ஒரு கூட்டத்தில் வந்து பேசும்போது அன்றுதான் அவருடைய பெட்டி உடைக்கப்பட்டு ஓட்டுகள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவர் மேடையில் பேசும்போது முதல் தேதி முதல் எம். எல்.ஏ. பேசுகிறேன் என்று அவர் உறுதியாகச் சொன்னார். அவர் பேசிவிட்டு இறங்கியதும், அவர் தோற்றுவிட்டார் என்ற செய்தி வந்தது. அதிலும் மூன்றாவது இடத்தில் வாக்குகள் வாங்கினார் என்ற செய்தி வந்தது. "நீங்கள் அப்படிப் பேசினீர்களே, தோற்றுவிட்டீர்களே இப்போது", என்று கேட்ட போது அவர், "பெட்டியை உடைத்து விட்டார்கள்" என்று கோபத்தோடு சொன்னார். நான் கொஞ்சம் அமைதியோடு, "பெட்டியை உடைக்காமல் எப்படி எண்ண முடியும்? பெட்டியை உடைத்துத்தானே வாக்குச்சீட்டுகளை எண்ணிப் பார்க்கவேண்டும்?" என்று சொன்னேன். ஆக, தோற்றுப்போ கிறபோது இம்மாதிரி எதையும் சொல்லத் தோன்றும். ஆனால் அதுதான் உண்மை என்று நம்பிக் கொண்டிருக்கக்கூடாது. நடந்தது என்ன என்பதை நாடு நன்கு அறியும்.

நம்முடைய பெருமதிப்பிற்குரிய உறுப்பினர் மணலி கந்தசாமி அவர்கள் பேசும்போது, இந்தத் தேர்தலில் ஜாதி உணர்வுகள் தலைகாட்டின, கடவுள்கள் இழுக்கப்பட்டார்கள், ஆஸ்திக நாஸ்திக வாதங்கள் தேவையில்லாமல் தேர்தலில் பயன்படுத்தப்பட்டன என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஆமாம். இந்தத் தேர்தலில், என்றைக்கும் இல்லாத அளவிற்கு வகுப்புணர்ச் சிகள் தூண்டப்பட்ட காட்சியை நாம் பார்த்தோம். ஆனால், அந்த வகுப்புவாத சக்திகள் பெரும்பான்மையான அளவில் வெற்றியைப் பெறவில்லை என்பதையும் நாம் கண்டோம்.

எங்கேயோ நடைபெற்ற, சேலம் நகரில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை திராவிட முன்னேற்றக் கழகத்தோடு இணைத்து, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியோடு இணைத்து, ஆகவே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு

வாக்களிக்கக் கூடாது என்றெல்லாம் சேலம் நிகழ்ச்சியோடு தேர்தலுக்கு முடி போட்டார்கள். சேலம் நிகழ்ச்சியை, இன்றும் சொல்கிறேன், யாரும் ஒத்துக் கொள்ளவில்லை. சேலத்தில் நடைபெற்ற சம்பவங்களை யாரும் ஏற்றுக்கொள்ள இயலாது. நான், சேலம் சம்பவம் நடைபெற்ற இரண்டு மூன்று நாட்களுக் கெல்லாம் மதுரை சென்றிருந்தபோது நிருபர்கள் என்னைச் சந்தித்துக் கேட்ட நேரத்தில், "சேலம் நிகழ்ச்சிகளை நான் ஏற்றுக்கொள்ளவில்லை, காவல்துறையினர் அதைப்பற்றி நடவடிக்கைகள் எடுப்பார்கள்" என்றுதான் கூறினேனே அல்லாமல், "அவர்களிடம் விளக்கங்கள் கேட்கப்பட்டிருக் கின்றன" என்று கூறினேனே தவிர, "சேலம் நிகழ்ச்சியில் என்ன தவறு?" என்று நான் கேட்கவில்லை.

ஆனால், சேலம் நிகழ்ச்சி நடந்து முடிந்து விட்டது. அதற்குப் பிறகும் சேலம் நிகழ்ச்சியில் என்னென்ன நடந்ததோ அவற்றையெல்லாம் பெரிய பெரிய சுவரொட்டிகள் போட்டு ஊரெல்லாம் ஓட்டவேண்டியது அவசியந்தானா? எண்ணிப் பார்க்க வேண்டும். உள்ளபடியே கடவுள்மீது நம்பிக்கையுள்ளவர் கள் என்றால் அப்படிச் செய்வார்களா?

என்ன போட்டிருந்தார்கள் சுவரொட்டிகளில்? ராமன் படத்தையும், முருகன் படத்தையும் போட்டு, பெரியார் அதை செருப்பால் தாக்குவது போலவும்போட்டு, அதை நான் பார்த்துக்கொண்டு சிரித்துக் கொண்டிருப் பதைப் போலவும் போட்டு, ஊரெல்லாம் சுவரொட்டிகள் ஓட்டினார்கள். உள்ள படியே, கடவுளே அதை அனுமதிக்கக்கூடிய காரியமா என்று எண்ணிப் பார்க்கவேண்டும். சேலம் நிகழ்ச்சி தவறு என்றால், ஊரெல்லாம் அந்தத் தவறு இப்படித்தான் நடந்தது என்று சொல்லவேண்டுமா? சிந்தித்துப் பார்க்க நமக்கெல்லாம் உரிமை உண்டு.

ஒருவரின் தகப்பனாரை ஒருவன் சண்டையில் அடித்துவிடுகிறான். அப்படி அடிக்கப்பட்ட நேரத்தில் அதை புகைப்படமும் எடுத்துவிடுகிறான் ஒருவன். அடித்தவன் மீது அடிபட்டவனின் அன்பு மகன், ஒன்று வழக்கு மன்றத்திற்குச் செல்வான். இல்லை, வழக்குமன்றத்திற்குச் சென்று விவகாரத்தை அவ்வளவு பெரிதாக்காமல் சும்மா இருந்து விடுவான். இந்த இரண்டையும் விட்டுவிட்டு, அடித்தவன் நீயவன் என்பதை உலகத்திற்குச் சொல்ல வேண்டும் என்பதற்காக எடுக்கப்பட்ட அந்த புகைப்படத்தைப் பெரிதாக்கி, அதை ப்ளாக் செய்து, அழகான வண்ணத்தில் சுவரொட்டிகள் அடித்து, அதை ஊரெல்லாம் ஒட்டினால், அந்தத் தந்தை மகனைக் கூப்பிட்டு, "அட பாவி, அவன் ஒரு இடத்தில்தான் என்னை அடித்தான், நீ ஊரெல்லாம் என்னை அடிக்கச் செய்திருக்கிறாரே" என்று கூறி அவர் வருத்தப்பட மாட்டாரா?

அதேபோல் கடவுள், அவர்களாவது ஒரு இடத்தில்' செய்தார்கள், நீங்கள் ஊர் எல்லாம் செய்திருக்கிறீர்களே, பார், பார், உங்களுக்கு 14 இடங்களுக்கு மேல், 6 இடங்களுக்கு மேல் ஒரு இடத்தில் கூட வெற்றி அளிக்கப் போவதில்லை என்று, இது மக்கள் அளித்த தீர்ப்பு என்பது மட்டு மல்ல, மகேசனும் தீர்ப்பளித்திருக்கிறார். எங்கள் பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்வதுண்டு, மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்று. மகே சனும் சேர்ந்து அளித்த தீர்ப்புதான் இந்தத் தீர்ப்பு என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

மாண்புமிகு திரு. பொன்னப்ப நாடார் அவர்கள், இந்த ஆட்சியிலே பத்திரிகை சுதந்திரம் எல்லாம் பறிக்கப்பட்டு விட்டது என்று குறிப் பிட்டார்கள். ஒரு பத்திரிகையிலே சில வெறுக்கத்தக்க, வேண்டத்தகாத படங்கள், வெளிவரத்தகாத படங்கள், வெளியிடப்பட்டன என்ற காரணத் தால் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அந்த நடவடிக்கைகளின் உள் பொருளுக்கு நான் செல்ல விரும்பவில்லை.

இந்த ஆட்சி நான்காண்டு காலத்தில் எத்தனை பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுத்தது? எத்தனை பத்திரிகைகளிடமிருந்து ஜாமீன் தொகை கேட்டது? எத்தனை பத்திரிகைகள் மீது தடை விதித்தது? எத்தனை நாடகங்களுக்கு தடை போட்டது? எத்தனை நூலுக்கு தடை போட்டது? 20 ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் எத்தனை பத்திரிகைகள் மீது நட வடிக்கை எடுக்கப்பட்டது தெரியுமா? 1965-ம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்ட காலத்தில் மித்திரன் பத்திரிகை மீது நடவடிக்கை எடுக்கப் படவில்லையா? தினத்தந்தி பத்திரிகை மீது நடவடிக்கை எடுக்கப்பட வில்லையா? அதனுடைய உரிமையாளர் கைது செய்யப்படவில்லையா? முரசொலி பத்திரிகை மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லையா? அதனுடைய ஆசிரியர் கைது செய்யப்படவில்லையா? 'மாலைமணி' பத்திரிகை மீது நட வடிக்கை எடுக்கப்படவில்லையா? அதனுடைய அலுவலகத்தில் புகுந்து ஆசிரியர் கைது செய்யப்படவில்லையா? விடுதலை, திராவிடநாடு போன்ற பத்திரிகைகளிடத்தில் ஜாமீன் தொகை கேட்கப்படவில்லையா? 'இரணியன்' நாடகம் தடை செய்யப்படவில்லையா? 'தூக்குமேடை' நாடகம் தடை செய்யப்படவில்லையா? 'உதயசூரியன்' நாடகம் தடை செய்யப்பட வில்லையா? 'போர்வாள்' நாடகம் தடை செய்யப்படவில்லையா? நூல்களைப் பொறுத்தவரையில், பெரியார் பொன்மொழி, இலட்சிய வரலாறு, ராவணக் காவியம் போன்ற பல நூல்கள் தடுக்கப்படவில்லையா? அரசாங்கச் சார்பில் தடை உத்தரவுகள் போடப்பட்டிருக்கின்றன, பத்திரிகை சுதந்திரம் பறி போயிற்று என்று எப்படிச் சொல்கிறார்கள் என்றால், எங்கள் அமைச்சரவையில் இருக்கும் யாரைப் பற்றியாவது, ஆளும் கட்சியில் இருக்கும் எவரைப் பற்றியாவது, தனிப்பட்ட முறையில், மக்கள் தவறாகப் புரிந்துகொள்ளவேண்டு மென்ற கெட்ட நோக்கத்தோடு எழுதப்படுகிற விஷயங்களை நாங்கள் நீதி மன்றத்திற்கு எடுத்துச்செல்லாமல் வேறு எங்கே செல்வது? கருணாநிதி தன்னுடைய கட்சிப்பணத்தை, தேர்தல் நிதியை எடுத்து, சினிமா படம் எடுத்துவிட்டான் என்று பத்திரிகையில் செய்தி போட்டார்கள். நானும் ஒவ்வொரு கூட்டத்திலும், இல்லை, இல்லை, என்று சொன்னேன். அவர்கள், ஆமாம், ஆமாம், என்று சொல்லிக்கொண்டே இருந்தார்கள். நீதிமன்றத்திற்குச் சென்றால்தான், அதற்குச் சரியான வழிகாணமுடியும் என்று நீதிமன்றத்திற்கு சென்றோம். நீதிமன்றத்திற்குச் செல்கிறவர்கள் நீதிமன்றம் தரும் தீர்ப்பை ஏற்கத் தயார் என்று செல்லும் நேரத்தில் எழுதியவர்களும் அந்தத் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளத் தயாராகத்தான் இருக்க வேண்டும். சில பத்திரிகைகளால் எங்கள் மீது சுமத்தப்பட்ட அபாண்டங்களை நிரூபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதே தவிர, எந்தப் பத்திரிகையும் தடைசெய்யப் படவில்லை. எந்த நாடகமும் தடை செய்யப்படவில்லை. ஒரு நாடகத்தைத் தடை செய்யவேண்டுமென்று, காங்கிரஸ் ஒன்றாக இருந்த காலத்தில், காங்கிரஸ் உறுப்பினர்கள் பேசிய நேரத்தில் கூட நான் எழுந்து, "எழுத்து உரிமையைப் பறிப்பது நல்லதல்ல. எங்களைப் பொறுத்தவரையில் மக்கள்

ஆதரித்தால் ஆதரிக்கட்டும், இல்லாவிட்டால் மூட்டை கட்டிக்கொண்டு செல்லட்டும்" என்று சொன்னேனே தவிர, ஆமாம், நாடகம் தடைசெய்யப்படவேண்டுமென்று சொல்லவில்லை, இதை நாடு நன்றாக அறியும். அது பத்திரிகையிலும் வந்து இருக்கிறது.

தேர்தல் நேரத்தில் நடந்துவிட்ட கொலைகள் 17 என்று அன்றையதினம் மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் பேசும்போது சொன்னேன் அதற்கெல்லாம் ஆளுநர் உரைக்குப் பதிலளிக்கும் நேரத்தில் குறிப்பிடுகிறேன் என்று. 17 கொலைகள் நடந்து இருக்கின்றன என்று சொன்னால், அவை தேர்தல் காலத்திற்கு முன்னும் பின்னும் நடைபெற்று இருக்கின்றன. நடைபெற்ற கொலைகள் தேர்தலுக்குத் தொடர்புடைய கொலைகள் என்று சொல்ல முடியாது. அப்படிச் சொல்வது தவறாகும். 17 கொலைகளில் ஒன்பது பத்து கொலைகள் அரசியல் தொடர்புடையனவாக உள்ளன, மற்றபடி தனிப்பட்ட தகராறுகள் அவர்களுக்குள்ளே இருந்ததால் ஏற்பட்டன என்றுதான் நமக்குச் செய்திகள் கூறுகின்றன. அந்த வழக்குகள் அனைத்தும் நீதிமன்றத்தில் இருக்கிற காரணத்தால், நான் அதன் மீது அதிகம் ஆராயப் புகவில்லை என்றாலும், நாம் இந்த மன்றத்தில், ஒவ்வொரு நாளும், 'கொலைகள் விழக்கூடாது, வன்முறைச் சம்பவங்கள் ஏற்படக் கூடாது' என்று பேசிக்கொண்டே இருக்கிற காலத்தில்தான், நேற்று இரவு கூட, பறங்கிமலைத் தொகுதியில், எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் வெற்றி பெற்று வந்த தொகுதியில், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த முருகேசன் குத்திக் கொலை செய்யப்பட்டு இருக்கிறார். ஆகவே, கொலைகள் எந்த அரசியல் காரணத்திற்காக நடைபெற்றாலும், எந்த அரசியல் கட்சிக்காரர்களால் நடத்தப்பட்டாலும், அவைகள் தடுத்து நிறுத்தப்படவேண்டும். எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் இதைச் செய்தாலும் மிகவும் கண்டிக்கத் தக்கதுதான் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளப் பெரிதும் விரும்புகிறேன். பலரும் இங்கே அபிப்பிராயம் தெரிவித்தார்கள். சர்வ கட்சித் தலைவர்களும் சேர்ந்து அறிக்கை விடவேண்டுமென்று சொன்னார்கள். நான் அதற்கு மறுப்புக் கூறவில்லை. நாம் அறிக்கை விடுகின்ற அதே நேரத்தில், நமக்கு அடுத்து இருக்கிற ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள தலைவர்களும் அந்த முறையைக் கடைப்பிடித்தாக வேண்டும். தமிழ்நாட்டில் இது வரை கடைப்பிடிக்கப்பட்டு வரும் பண்பாடும், நாகரீகமும் காப்பாற்றப் படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கவர்னர் உரையில் எந்தத் திட்டங்களும் இல்லை, எந்தக் கொள்கையும் இல்லை என்று குறை சொல்லப்பட்டது. ஆனால், இந்த கவர்னர் உரையின் மீது நடைபெற்ற விவாதத்திலும், இடைக்கால நிதி-நிலை அறிக்கை மீதான விவாதம் நடைபெற்ற நேரத்திலும், ஆளும் கட்சியின் சார்பில் நாம் பல்வேறு வகையான முற்போக்குக் கொள்கைகளை எல்லாம் நிறைவேற்றக் காத்து இருக்கிறோம் என்பதை மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறோம். நாம் எந்த முற்போக்குத் திட்டங்களையெல்லாம், அதுவும் குறிப்பாக நிஜலிங்கப்பா காங்கிரஸ் மூலமாக, பல முற்போக்குத் திட்டங்களையெல்லாம் இந்த அரசு நிறைவேற்றித் தரவேண்டும் என்று கோரிக்கை விடுகிற நேரத்தில், நாம் மெத்த மகிழ்ச்சியோடு அதனை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். அதே நேரத்தில், ஓரக் கண்ணால் டாக்டர் ஹாண்டே அவர்களைப் பார்த்து, இது எல்லாம் உங்கள் கட்சிக்கு, ஜனநாயகக்

கூட்டணிக்கு உடன்பாடுதானா? என்று பார்ப்பேனே தவிர, அதை நிறைவேற்றக் கூடாது என்ற எண்ணம் கிஞ்சிற்றும் இல்லை. முற்போக்குத் திட்டம் யார் சொன்னாலும் அதை நிறைவேற்றித் தர நாங்கள் தயாராக இருக்கிறோம். அவற்றின் மூலம் எங்களுக்கு நன்மையே தவிர தீமை ஒன்றும் இல்லை.

கைத்தறி நெசவாளர்களைப்பற்றிச் சொல்லவில்லை, சேதுசமுத்திரம் திட்டத்தைப் பற்றிச் சொல்லவில்லை, அதைச் சொல்லவில்லை, இதைச் சொல்லவில்லை என்ற காரணத்தினாலே, அவற்றில் இந்த அரசுக்கு அக்கறை இல்லை என்று எண்ணிவிடக்கூடாது. மிகவும், குறிப்பாகவும் சிறப்பாகவும் மாநிலத் திட்டக் குழு அமைப்பது ஆளுநர் அவர்கள் உரையில் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. இந்தத் திட்டக் குழு திட்டங்களைத் தீட்டி, மத்தியில் இருக்கும் திட்டக் குழு போல் செயல்படுமா என்றால், இல்லை, ஒரு ஆய்வுரை கூறும் குழுவாக அமையும்.

பத்து ஆண்டு காலத்திற்குப் பிறகு நம்முடைய தமிழ்நாட்டின் நிலை எப்படி இருக்கும், மக்கள் பெருக்கம் எவ்வாறு இருக்கும், வேலை—வாய்ப்பு வசதிகள் எப்படி இருக்கும், கல்வி முன்னேற்றம் எப்படி இருக்கும், போக்குவரத்து வசதிகள் எப்படி இருக்கும், விவசாய வளர்ச்சி எவ்வாறு இருக்கும் என்பதை ஆராய்ந்து, நமது மாநிலத் திட்டக் குழு, அதனுடைய வரைவினை அவ்வப்போது அரசிடம் தரும். அந்த வரைவினைத் தர இருக்கிற அந்தத் திட்டக் குழுவை வெகு விரைவில் நாம் நியமிக்க இருக்கிறோம். அந்தக் குழுவின் ஆய்வை 1972-73 வரவு-செலவுத் திட்டத்தை இந்த மாமன்றத்திலே நாம் விவாதிக்கிற நேரத்தில், அதற்காக சில நாட்களை ஒதுக்கி இந்த மன்றம் விவாதித்து ஏற்ற முடிவை அளிக்கும். நாம் 10 ஆண்டுகளுக்குப் பிறகு பார்க்கிற நம் மாநிலம் எவ்வாறு இருக்கும், என்னென்ன தேவைகளை நாம் ஆராய வேண்டும், என்னென்ன வசதிகளைப் பெருக்கவேண்டும் என்பதற்காகத்தான், முயற்சிப்பதற்காகத்தான் அந்தத் திட்டக் குழுவை அமைக்கிறோம். இந்தத் திட்டங்கள் எல்லாம் மத்திய அரசு அளவில் நிறைவேற்றுகிற திட்டங்களாக, மாநில அரசு அளவிலே நிறைவேற்றுகிற திட்டங்களாக, அல்லது தனியார் துறையில் நிறைவேற்றும் திட்டங்களாக என்னென்ன திட்டங்கள் அமையக்கூடும் என்பதை இந்த மாநிலத் திட்டக் குழு ஆராயும். ஆராய்ந்து நிறைவேற்றப்படவேண்டிய திட்டங்கள் ஒழுங்காகவும், செம்மையாகவும், விரைவாகவும், விறுவிறுப்பாகவும் நடைபெறவேண்டுமானால், நிர்வாக இயந்திரம் ஒழுங்காக இருக்க வேண்டும். நிர்வாக இயந்திரம் ஒழுங்காக இருந்திடவும், மேலும் நல்ல முறையில் முடுக்கி விடப்படவேண்டுமென்பதற்காகவும், அதிகாரிகளின் கடமையை நல்ல வகையில் பயன்படுத்துவதற்காகத்தான் நிர்வாகச் சீர்திருத்த ஆணைக் குழுவை ஆளுநர் அவர்களுடைய உரையில் இந்த அரசாங்கத்தின் சார்பில் அறிவித்து இருக்கிறார்கள்.

நிர்வாகத்தில் இருக்கும் தாமதங்கள் தவிர்க்கப்படவேண்டும் என்பது பற்றி இந்த மாமன்றத்தில் இருக்கும் உறுப்பினர்கள் கோடிட்டுக் காட்டிய எண்ணங்களை நான் வரவேற்கிறேன். அதற்குக் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்தத் தாமதங்கள் தவிர்க்கப்பட்டால்தான் அரசாங்கம் நிறைவேற்ற இருக்கும் திட்டங்கள், அந்தத் திட்டங்களுக்காக அரசு அள்ளி இறைக்கும் பணம் ஆகியவை எல்லாம் ஏழை எளிய மக்களின் படிக்கட்டுகளில் சென்று அமைதியான வாழ்வு வாழ வகை செய்ய முடியும்.

நமது அதிகாரிகள் கடமை உணர்ந்தவர்கள். கடமை உணர்ந்த அதிகாரிகள் பல பேர் இருக்கிறார்கள். அதே நேரத்தில் சில அதிகாரிகள் வேறு மாதிரி எண்ணம் கொண்டிருக்கிறார்கள். அந்த அதிகாரிகள் திருந்திக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிகாரிகள் திருந்திக் கொண்டால் மட்டும் போதாது, திருந்திக்கொண்ட அதிகாரிகளை இணைத்து, நிர்வாக இயந்திரம் மிக வேகமாகச் சென்றிடவும் ஆக்கப்பூர்வமாக கருத்துக்களை எடுத்துக் கூறவும் இந்த நிர்வாகச் சீர்திருத்தக் குழுவை அமைத்திருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் நிர்வாக சீர்திருத்தக் குழு அமைத்தது சரிதான், அதிகாரிகளுக்கு பதவி நீடிப்பு விஷயத்தில் யாருக்கும் சலுகை காட்டக் கூடாது என்று சொன்னார்கள். அமைச்சரவை கூட அப்படிப்பட்ட ஒரு முடிவை எடுத்திருக்கிறது. பதவி நீடிப்பு கூடாது, அந்தப் பதவிக்கு வரக் காத்துக் கொண்டு இருக்கிற எண்ணற்ற இளம் சமுதாயத்தினருக்கு வேலை வாய்ப்பு வழிகளையும் நாம் உருவாக்கித் தரவேண்டுமென்ற அடிப்படையில்தான் அமைச்சரவை கூட்டத்திலேயே இந்த முடிவை மேற்கொண்டு இருக்கிறோம்.

பதவி நீடிப்பைப் பொறுத்தவரையில் சில நிபுணர்கள், இவர்களை விட்டால் அந்த இடங்களுக்கு வேறு தகுதியான ஆட்கள் கிடையாது, அவ்வாறு நிபுணத்துவம் உள்ளவர்கள் இப்பொழுது அவர்களைவிட முடியாது என்ற நிலையில் மருத்துவத் துறை போன்ற சில அத்தியாவசிய துறைகளைத்தவிர மற்ற துறைகளில் பதவி நீடிப்பு கிடையாது என்ற அமைச்சரவையின் முடிவு சில இடங்களில் இப்பொழுது சரியான முறையில் நிறைவேறாமல் இருக்கலாம். அதிலே சில சங்கடங்கள் ஏற்பட்டிருந்தன. முக்கியமாக திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுடைய உரையின் அடிப்படையில் மீண்டும் வலியுறுத்திச் சொல்கிறேன். நிச்சயம் மிகவும் தவிர்க்க முடியாத காரணங்கள் அல்லாமல், பதவி நீடிப்பை இந்த அரசாங்கம் இனி ஏற்றுக்கொள்ளாது, நிச்சயம் தராது என்பதையும் நான் இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (ஆரவாரம்).

நம்முடைய நாட்டிலே தொழில் வளம் எவ்வாறு இருக்கிறது என்பது பலராலே போற்றப்பட்டது, பாராட்டப்பட்டது. சில உறுப்பினர்களால், நல்ல வகையிலே தொழில் வளம் இல்லை என்று எடுத்துச் சொல்லப்பட்டது.

கவர்னர் உரையிலே, தூத்துக்குடி உரத் தொழிற்சாலையைப்பற்றி குறிப்பிட்டார்கள். அதற்கான அனுமதி விரைவிலே கிடைக்கும் என்று குறிப்பிட்டார்கள். அதே நேரத்தில் கவர்னர் உரையின்மீது விவாதம் நடத்திக் கொண்டிருக்கிற இப்பொழுது இந்த உரத் தொழிற்சாலைக்கு நாப்தா மூலப் பொருளாக நமக்கு அனுமதி கிடைத்திருக்கிறது. ரூ. 65 கோடி திட்டம் அந்தத் திட்டம். ஆசியாவிலேயே மிகப்பெரிய திட்டம் இந்த நம்முடைய தூத்துக்குடி உரத் தொழிற்சாலைத் திட்டம். இதற்கு மாநில அரசு ரூ. 3 கோடி, தனியார் பிரதிநிதிகள் ரூ. 3 கோடி, தனியார் பிரதிநிதிகளின் முயற்சியினால் அரசு சார்புள்ளதும், அரசு சார்பற்றதுமான நிறுவனங்களின் வாயிலாக மீதமுள்ள தொகை திரட்டப்பட்டு இந்த உரத் தொழிற்சாலை அமைகிறது. நாம் இதை ஜாயிண்டு செக்டாரில் அமைத்திருக்கிறோம். ஜாயிண்டு செக்டாரில் அமைத்திருக்கிற நேரத்தில், அரசாங்கத்தினுடைய

கண்காணிப்பு இந்தத் தொழிற்சாலையிலே இருக்க வேண்டும் என்பதற்கு அடையாளமாக, அரசாங்கத்தின் சார்பிலே நான்கு டைரக்டர்கள் இதிலே இருக்கிறார்கள்.

அதைப்போலவே ஹெவி வாட்டர் உற்பத்தித் திட்டம் ரூ. 20 கோடி அளவில் விரைவிலே வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கான தொடக்கப் பேச்சுவார்த்தைகளெல்லாம் முடிவுற்றிருக்கிறது. அது சம்பந்தமாக அணு சக்தி ஆணைக் குழுவுடன் நம்முடைய அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள். இந்த ஹெவி வாட்டர் உற்பத்தித் திட்டம் வந்துவிடுமேயானால், நம்முடைய கல்பாக்கம் அணுமின் நிலையத்திற்கு ஹெவி வாட்டர் பயன்படக்கூடிய அளவுக்கு ரூ. 20 கோடியில் ஒரு பெரிய திட்டமாக தமிழகத்திற்கு வர இருக்கிறது.

சேலம் உருக்காலைத் திட்டத்தைப்பற்றி இங்கே பலரும் பேசினார்கள். ரூ. 110 கோடியில் இந்தத் திட்டம் நமக்குக் கிடைத்தது. இந்தத் திட்டம் கிடைத்ததைப்பற்றிப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள்—எதிர்த்தரப்பில் உள்ளவர்கள்—குறிப்பாக நிஜலிங்கப்பா காங்கிரஸில் உள்ளவர்களெல்லாம் 'இது எங்களுடைய காலத்தில் சொல்லப்பட்டதுதான், எங்களுடைய காலத்தில் கேட்கப்பட்டதுதான்' என்றெல்லாம் சொன்னார்கள். நானும் அதை மறுக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால், சேலம் உருக்காலைத் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்ற நேரத்தில் "நான் இந்தத் திட்டத்திற்காக ஆரம்ப காலத்தில் பாடுபட்ட காமராஜ் அவர்களுக்கும், வெங்கட்டராமன் அவர்களுக்கும், சுப்பிரமணியம் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்" என்று குறிப்பிடிருக்கிறேன். நாங்கள் யாரும் நன்றி மறந்துவிடுபவர்கள் அல்லர். அரசியல் பண்பாட்டை இழந்துவிடுபவர்கள் அல்லர். ஆனாலும், இந்தத் திட்டம் இடைக்காலத்தில் கிடப்பிலே போடப்பட்டது, இது வராது என்கின்ற அளவுக்கு முடிவு செய்யப்பட்டுவிட்டது என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது. இதற்காக நாம் பெரிய போராட்டம் ஒன்றை நடத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டது. தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் கட்சியினரும் இணைந்து எழுச்சிநாளைக் கொண்டாடி, அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களும் நாடெங்கிலும் பல்வேறு பகுதிகளில் பேசி, தீர்மானங்களெல்லாம் நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதற்குப் பிறகு நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுவில், முதல் அமைச்சர் கலந்துகொண்ட மகாநாட்டில் நான் "சேலம் உருக்காலைத் திட்டத்தை எங்களுக்கு அளிக்காவிட்டால், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதை நிறுவாவிட்டால், நான்கு கோடி தமிழ் மக்களுடைய சார்பாகச் சொல்கிறேன், இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு என்னுடைய சம்மதத்தைத் தரமுடியாது" என்று திட்டவட்டமாகச் சொன்னேன்.

'நீங்கள் எதிர்த்துப் பேசுவதில்லை. அங்கு போனதும் வளைந்து விடுகிறீர்கள், இங்கேதான் வீரமாகப் பேசுகிறீர்கள், அங்கு சென்று துணிச்சலாகக் கேட்டதில்லை' என்று டாக்டர் ஹாண்டே அவர்களும், திருமதி அனந்தநாயகி அவர்களும் பேசும்பொழுது குறிப்பிட்டார்கள். இதே வார்த்தைகளைச் சொன்னேன். வெளியே வந்தபிறகு சில தலைவர்களெல்லாம், டெல்லியில் உள்ள தமிழ்நாட்டுத் தலைவர்களெல்லாம் என்னைச் சந்தித்து 'இப்படி என்.டி.சி. கூட்டத்தில் வேகமாகப் பேசலாமா? [illegible] போட்டுப்

பேசலாமா? ஒரு வேளை சேலம் உருக்காலை கிடைக்காவிட்டால் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை விட்டுவிடுவதா?' என்று கூடக் கேட்டார்கள். பிறகு 10 நாளைக்குள் சேலம் உருக்காலை கிடைத்து விட்டது என்பதை நாம் மறந்துவிட முடியாது.

'நாங்கள்தான் கேட்டோம், நாங்கள்தான் கேட்டோம், ஆகவே உங்களுக்கு வெற்றி சொந்தம் இல்லை' என்று கூறுகிறார்கள்.

ஒரு வீட்டிலே அழகான பெண் இருக்கிறாள். பல பேர் போய் பெண் கேட்கிறார்கள். பையன் பிடிக்கவில்லை, நல்ல வருமானம் இல்லை, நல்ல அழகு இல்லை என்று சொல்லி தட்டிக்கழித்துவிட்டு, கடைசியில் அந்தப் பெண்ணுக்குத் திருமணம் ஆகி, திருமண ஊர்வலம் வரும்பொழுது, பாதை ஓரத்தில் நின்றுகொண்டு 'நான் கேட்ட பெண்தான் உங்களுக்குக் கிடைத்து விட்டது' என்று சொல்வதா? கட்டினவனுக்குத்தான் பெண்ணே தவிர, கேட்டவனுக்கெல்லாம் அல்ல என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதைப்போலத்தான் தி.மு.க. ஆட்சிக்கு வெற்றி கிடைத்தது. வெற்றியை நாங்கள் கொண்டாடுகிறோம். அனைவரும் சேர்ந்து கொண்டாடுகிறோம். ஆனால், வெற்றி கிடைத்த நேரத்தில், 'நாங்கள்தான் கேட்டோம், நாங்கள்தான் கேட்டோம்' என்று சொல்வதா?

அம்மையார் ஜோதி வெங்கடாசலம் அவர்கள் கூட, 'இவர்கள் விவசாயத்தை அபிவிருத்தி செய்திருக்கிறார்கள், உணவு உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்கள் என்றால், எங்கள் காலத்தில் போட்ட திட்டம்தான்' என்றார்கள். இப்படியே போய்க்கொண்டிருந்தால், எங்கள் காலத்து வயல்கள் என்று கூடச் சொல்லலாம். ஆகவே, சொன்னதை, செய்ததை நாங்கள் கெடுக்காமல், மேலும் அது தொடர்பாக முயற்சியில் ஈடுபட்டு நல்லவைகளை இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிறோமா, இல்லையா? அதை எண்ணிப்பார்க்க வேண்டும். அதைவிட்டு விட்டு 'நாங்கள் செய்தோம், நாங்கள் செய்தோம்' என்று சொன்னால், எப்படி?

அதிக உணவு உற்பத்தி என்றால், மழை பெய்தது, ஆகவேதான் அதிக உணவு உற்பத்தி என்று சொல்லுவது. வாதத்திற்கு எடுத்துக்கொள்வோமானால், நல்லவர்கள் இருக்கிறார்கள், மழை பெய்கிறது என்று அதையும் சொல்லலாம் அல்லவா? நான் சொல்கிறேன், மழை பற்றாக்குறை காலம் உண்டு. கடந்த நான்காண்டு காலத்தில் வறட்சி கூட வந்தது. வறட்சியையும் சமாளித்துத்தான் நாங்கள் உணவு உற்பத்தியைக் கணிசமாகப் பெருக்கியிருக்கிறோம், அதில் வெற்றி பெற்றிருக்கிறோம் என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.

சேலம் தொழிற்சாலையைப் போல அடுத்து பல பெரிய தொழிற்சாலைகள் நம்முடைய நாட்டுக்குக் கிடைத்திருக்கின்றன நம்முடைய மாநிலம் பெற்றிருக்கிறது. அந்த அளவுக்குப் பெரிய தொகை கொண்ட தொழிற்சாலைகள் இல்லையென்றாலும், டயர் தொழிற்சாலை ஒன்று வருகிறது. சோடியம் ஹைட்ரோ சல்பேட் தொழிற்சாலை ஒன்று வருகிறது. சோடா ஆஷ் தொழிற்சாலை, அதுவும் ஜாயிண்டு செக்டாரில் கூட்டுத் துறையிலே உருவாகிறது. நைலான் தொழிற்சாலை விரைவிலே வரும் என்பதற்கான அறிகுறிகள் தோன்றியிருக்கின்றன. பாலிஸ்டர் ஃபைபர் தொழிற்சாலை ஒன்றும் அமைக்கப்பட இருக்கிறது.

மேலும் பல தொழிற்சாலைகள் நமது நாட்டில் எந்த அளவுக்கு வளர்ந்திருக்கின்றன என்பதற்கான விவரங்களைக் காட்டுகிற குறிப்புகளை இங்கே எடுத்துக் கூறுவது பொருத்தமுடையதாக இருக்கும் என்று கருதுகிறேன். தொழில் உற்பத்தி குறிப்பீட்டெண் (இன்டெக்ஸ் ஆஃப் இன்டஸ்ட்ரியல் ப்ரொடக்ஷன் என்ற தலைப்பிலே 1967-ல் 158.5, 1968-ல் 166.3, 1969-ல் 172.8, 1970-ல் 182.3, என்கிற அளவுக்கு ஆகியிருக்கிறது. அதைப்போலவே பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் 1967-ல் 7,065, 1970-ல் 7,922. எதுவும் குறைந்துவிடவில்லை.

பொதுத்துறையிலும், தனியார் துறையிலும் பதிவான நிறுவனங்கள், கம்பெனிகள் 1967-ல் 91, 1969-ல் 116, 1970-ல்—முதல் 6 மாதங்களில் 76 கம்பெனிகள் பதிவாகியிருக்கின்றன.

தொழில் உரிமங்களுக்காக மத்திய அரசுக்கு அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள், 1967-ல் 38. அவற்றிலே 16 விண்ணப்பங்களுக்கு தொழிற்சாலை ஆரம்பிக்க உரிமங்கள் கிடைத்தன. 1968-ல் 51 விண்ணப்பங்கள் அனுப்பினோம். அவற்றிலே 9-க்கு லைசென்ஸ் கிடைத்தது. 1969-ல் 97 அனுப்பினோம், 12-க்கு லைசென்ஸ் கிடைத்தது. 1970-ல் 142 விண்ணப்பங்கள் அனுப்பினோம், அவற்றிலே இதுவரையிலே 36-க்கு லைசென்ஸ் கிடைத்திருக்கிறது. ஆகவே, தொழிற்சாலைகளை ஆரம்பிக்க எந்த முயற்சியும் மேற்கொள்ளாமலே இருந்து விட்டோம் என்று சொல்வதற்கில்லை.

சிறு தொழில் நிறுவனங்களைப் பொறுத்தவரையில் . . .

THIRUMATHI T. N. ANANDANAYAKI : On a point of information, Sir, sorry to interrupt the Hon. Chief Minister. சேலம் உருக்காலை வந்துவிட்டது என்பதை நாங்கள் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்கிறோம். அதிலே எப்பொழுது வேலை தொடங்கப்படும், எதற்காக சுணக்கம் இருக்கிறது என்பதைப்பற்றி முதல் அமைச்சர் அவர்கள் எந்தவிதமான பதிலையும் சொல்லவில்லை. அதைப்பற்றிக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதை முடித்துவிட்டுச் சொல்லுகிறேன். சிறு தொழிலில், தொழில் வர்த்தக இயக்குநரால் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள்:—

1967-ல்—11,929.

1968-ல்—13,571.

1969-ல்—18,063.

1970-ல்—21,857.

ஆக, இந்த அளவிற்குத்தொழில் துறையில் நாம் முன்னேறியிருக்கிறோம் என்றாலும், இது உள்ளபடியே போதுமான முன்னேற்றம் இல்லை. இன்னும் அனுமதிகள் கொடுக்கப்பட வேண்டும். 100 கேட்டால் 30-க்கு அனுமதி கிடைக்கிறது. ஆகவே இதில் குறைபாடு இல்லாமல் இல்லை.

தொடர்ந்து மத்திய சர்க்காரிடம், இன்னும் அதிகமாகத் தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டும் என்கிற கொள்கையின் அடிப்படையில் எடுத்துச் சொல்லி வருகிறோம்.

அதே வகையில் சேலம் உருக்காலை வேலையையும் வெகு விரைவில் எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி எடுத்துச் சொல்லுகிறோம். மேலும் ஒரு அறிக்கை தேவைதானா? ஆராய்ச்சிகள் முடிந்துதானே அறிக்கை கொடுக்கப்பட்டது? மறுபடியும் அறிக்கை எதற்கு என்று குறிப்பிட்டார்கள். ஏன் அறிக்கை தேவை என்றால், அது பெரிய அறிக்கையாக இருக்காது, ஒரு திருத்த அறிக்கையாகவே இருக்கும். அது ஏன் தேவை? இந்த அறிக்கை வெளியாகிப் பல ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்டுவிட்டது. தொழிற்சாலை வராது என்ற நிலையில் அறிக்கையை எடுத்துப் பார்க்காத சூழ்நிலை உருவாகிவிட்டது. உருக்காலை வருகிறதா என்று சந்தேகம் ஏற்பட்டு, காலக் கடத்தல் காரணமாக, தாமதம் காரணமாக, அந்த அறிக்கையில் சில திருத்தங்கள் தேவைப்பட்டன. அப்படிப்பட்ட அறிக்கையையும் ஆறு மாத காலத்தில் கொடுத்து, வேலையைத் தொடங்கிட வேண்டும் என்று வலியுறுத்திக் கூறுகிறோம். நல்ல சூழ்நிலை இருப்பதால், தேர்தலுக்குப் பின்னால் ஆட்சி மாற்றத்தில், அமைச்சரவை மாற்றங்கள் காரணமாக சேலம் உருக்காலை ஏற்படுவதற்கு, சீக்கிரமே செயல்படுவதற்கு ஏற்ற சூழ்நிலை உருவாகியிருப்பதாக அறிகிறேன். இதிலே நாம் அவசரப் படுகிறோம். அதே நேரத்தில், ஆறு மாதங்களில் அறிக்கை வரவேண்டும் என்றும் மத்திய சர்க்காரிடத்தில் வலியுறுத்துகிறோம். அறிக்கை தேவையா, இல்லையா என்பதில்லை வாதம். தேவை என்பதை நாம் அறவே மறுக்கவில்லை. காலதாமதம் ஏற்பட்டதன் காரணமாக, சில திருத்தம் தேவை என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஆறு மாதங்கள்தான். அதற்குள் சமர்ப்பித்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

மேலும் மேலும் தொழிற்சாலைகளை விரைவில் உருவாக்க வேண்டும் என்று மத்திய சர்க்காரை தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டே இருப்போம் என்பதையும் தெரிவிக்கிறேன். தனியார் துறை, பொதுத் துறை, கூட்டுத் துறை இவைகளைப்பற்றிக் குறிப்பிடப்பட்டது. கூட்டுத் துறை என்பது என்ன, கூட்டுத் துறை என்பது அநேகமாக தனியார் துறையாகத்தான் இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சிலரால் கருத்து தெரிவிக்கப்பட்டது. ஜாயிண்ட் ஸெக்டார் என்பதில், தனியாருடைய ஊக்கமும், அரசாங்கக் கண்காணிப்பும் இருக்கும். முன்பெல்லாம், தனியார் துறை என்றால் அரசாங்கக் கண்காணிப்பு கிடையாது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், மெட்ராஸ் அலுமினியம் பாக்டரியில், அதற்கு ஷேர் காபிடல், முதலீடு 3 கோடி ரூபாய். அதிலே, தனியார் 1½ கோடி ரூபாயும், அரசாங்கம் 1½ கோடி ரூபாயும் போட்டு, கண்காணிக்கும் பொறுப்பை அரசாங்கம் வைத்துக் கொள்ளாமல் இருந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் அலுவல்கள் 1½ மணியோடு முடிவடைய வேண்டுமாதலால், மாண்புமிகு முதல் அமைச்சர் உரையை முடிப்பதற்கும் மற்ற அலுவல்கள் முடிவதற்கும் தொடர்ந்து உட்கார அவை அனுமதி அளிக்கிறது என்று கருதுகிறேன்.

(அனுமதி அளிக்கப்பட்டது.)

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மெட்ராஸ் அலுமினியம் பாக்டரியில் மூன்று கோடி ரூபாய் ஷேர் காபிடல் என்றால், அரசு 1½ கோடி ரூபாயும், தனியார் 1½ கோடி ரூபாயும் போட்டார்கள். ஆனால், அரசின்

கண்காணிப்பு இல்லை. அரசின் சார்பில் ஒரே ஒரு டைரக்டர் இருக்கிறார். அரசைக் கலந்துகொண்டு பாக்டரியில் தனியார் தங்கள் காரியங்களைச் செய்வதில்லை.

இப்பொழுது ஏற்பட்டிருக்கிற ஜாயிண்ட் ஸெக்டாரில் நிலைமை முற்றிலும் மாறுபட்டது. தனியாருடைய ஊக்கம் பயன்படுத்தப்படுகிறது. அரசாங்கத்தின் கண்காணிப்பு இருக்கிறது. இரண்டும் இணைந்து கூட்டுத் துறைக் கொள்கை நிறைவேறுகிறது என்ற அளவில், இந்த அரசு புதிய கொள்கையை உருவாக்கியிருக்கிறது.

தமிழ் நாடு தொழில் வளம் பெற வேண்டும் என்கிற எண்ணத்தில், பொதுத் துறைதான் நம் முடிவான லட்சியம். ஆனாலும் அப்படிச் சொல்லிக்கொண்டே இருக்கும் காரணத்தால், தொழில் வளம் அழிந்து, தேய்ந்து விடக் கூடாது என்கிற எண்ணத்தின் அடிப்படையில்தான், இன்றைக்கு இந்தக் கூட்டுத் துறையை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இறுதி லட்சியம் பொதுத் துறை என்பதை இந்த மாமன்றத்திற்கு குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

கவர்னர் உரையில் குறிப்பிட்டபடி, வேலை வாய்ப்புக்கள் பற்றி பெரிதும் உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். வேலை வாய்ப்புக்களை அளிப்பதில், தமிழ்நாடு, மத்திய சர்க்கார் அளவில் பல திட்டங்கள் திட்டப்படவேண்டும் என்றார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் காலதாமதம் ஆனதன் காரணத்தால், திட்டங்கள் இல்லாததால், வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டிருக்கிறது. பட்டதாரிகள், பொறியாளர்கள், இவர்களுக்கெல்லாம் வேலை அளிக்கக்கூடிய திட்டங்கள் இல்லை என்பதால், அதனால் ஏற்பட்டுள்ள விளைவுகள் காரணமாக, வேலைவாய்ப்பு இன்மை நாட்டில் பெருகியதை மறுத்திட இயலாது.

மாநில மட்டத்தில் சில காரியங்களைச் செய்திருந்தாலும், அது பூரண திருப்தி அளிக்கக்கூடியதாக இல்லை; புன்னகை அளிக்கக் கூடியதாக இல்லை. ஆனாலும், 6,500 ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எந்தச் சம்பளமும் பெறாமல், குடும்பத்தை நடத்தமுடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டு இருப்பவர்களுக்கு இந்த ஊதியமாவது கிடைக்க வேண்டும் என்று தொழில்பயில் ஆசிரியர்களுக்கு உதவி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 6,500 ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு, அனைவரும் வேலைக்குச் சேர்ந்துவிட்டனர். அதேபோலத்தான் 2,400 பொறியாளர்களுக்கு உதவியளிக்க முன்வந்ததில், 27—2—1971 அன்றோடு 1,795 பேர்கள் வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அதில் 1,600 பேர்கள் வேலையில் சேர்ந்துவிட்டார்கள். மீதம் உள்ளவர்கள் சில வாரங்களில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

இப்படி 6,500 ஆசிரியர்களுக்கும், 2,400 பொறியாளர்களுக்கும் வேலை வாய்ப்புக் கொடுத்தோம் என்றால், அதன் காரணமாக தமிழ் நாட்டில் வேலையில்லாத்திண்டாட்டம் அறவே ஒழிந்துவிடும் என்ற எண்ணத்தில் செய்யவில்லை. இந்த அரசுக்கு, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க ஆர்வம் இருக்கிறது என்பதைக் காட்டத்தான் இது செய்யப்பட்டது. இந்த ஆர்வம் மேலும் மேலும் பெருகும். மேலும் மேலும் பெருகுகின்ற வகையில்

திட்டங்கள் தீட்டப்படும் என்பதற்கு இது விடிவெள்ளி என்ற அளவில் இந்தக் காரியம் செய்யப்பட்டதேயல்லாமல், இதை வைத்துக்கொண்டு வேலை வாய்ப்பு போதுமா என்று கேட்பது நல்லதல்ல.

மேலும் மேலும் வேலை வாய்ப்புக்கள் பெருகிட மத்திய சர்க்காரும் ஒரு திட்டம் தீட்டியிருக்கிறார்கள். கிராமப்புறங்களில் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு மாவட்டத்திலும், 1,000 பேர்களுக்கு வேலை கொடுப்பது என்று திட்டம். கிராமப்புறத்தை ப்ளாக் ப்ளாக்காக எடுத்துக் கொள்கிறார்கள். ஒவ்வொரு ப்ளாக்கிலும் 1,000 பேர்களுக்கு வேலை கொடுப்பது. ஒரு மாவட்டத்தில் 10 ப்ளாக்குகள் எடுத்து, 1,000 பேர்களுக்கு வேலை கொடுப்பது என்பது மத்திய சர்க்காருடைய திட்டம். அதைப்பற்றி ஆராய, வருகிற 7-ம் தேதி சென்னை மாநகரத்தில் கலெக்டர்கள் மாநாட்டைக் கூட்டியிருக்கிறோம். அப்பொழுது கலந்து பேசி, திட்டம் நிறைவேறுவதற்கு சாத்தியக்கூறுகள் எவையெவை, இருக்கின்ற சிக்கல்கள் என்னென்ன என்பதையெல்லாம் ஆராய்ந்து முடிவுகளெடுக்கப்படும். தலைமைச் செயலாளர்கள் மாநாடு டெல்லியில் நடக்கவிருக்கிற காரணத்தால், அந்த மாநாட்டில், இங்கே எடுக்கப்பட்ட முடிவுகள் நம் தலைமைச் செயலாளர் மூலம் அறிவிக்கப்படவிருக்கிறது. டெல்லி மாநாட்டில் இந்தக் கிராமப்புறத் திட்டம் விவாதிக்கப்படும்.

இந்தக் கிராமப்புற மக்களுக்கு வேலைகள் கொடுப்பது மாத்திரம் மக்களுக்குப் போதுமா? விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் மக்கள் வருஷத்தில் ஆறு மாதம் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு இது வேலை கொடுக்கும். ஆனால், படித்துவிட்டு, வேலையற்றிருக்கும் நம்முடைய வாலிபர்கள். இளைஞர்கள் இவர்களுக்கு வேலைவாய்ப்பு என்ன என்ற கேள்வி போட்டார்கள். இந்தக் கேள்வி எதிர்க்கட்சியில் இருக்கிறவர்களுடைய உள்ளங்களில் மட்டும் இருப்பது என்பதில்லை. ஆளுங்கட்சியிலிருக்கின்ற அத்தனை உறுப்பினர்களுடைய உள்ளங்களிலும் ஊறிக் கொந்தளிக்கும் கேள்வி இது.

கல்லூரிகளில் சலுகைகள் கொடுத்துப் படிக்க வைத்துவிட்டு, புதிய புதிய கல்லூரிகளைத் திறந்து, அவற்றிற்கு அனுப்புகிறோம். மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுப்புகிறோம். பட்டதாரிகளாக ஆகிறார்கள். அப்படிக் கல்லூரிகளிலிருந்து வெளிவந்தவர் அவர்கள் வேலை எங்கே, வேலை எங்கே, என்று கேட்கிறார்கள். நாம் அவர்களுக்குப் பதில் சொல்லியாக வேண்டும். பதில் சொல்லப் போகிறோம்; நல்ல முறையில் பதில் சொல்லப் போகிறோம்.

அதனால்தான் இந்தத் தேர்தலில் முற்போக்குக் கூட்டணி வாக்காளப் பெருமக்களைச் சந்தித்து, ஆதரவு பெற்று, இந்த மாமன்றத்திலும், மத்திய சர்க்காரிலும் அரசுகள் அமைந்திருக்கும் காட்சியைக் காண்கிறோம்.

அளிக்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் திராவிட முன்னேற்றக் கழக அரசு முன் நின்றிருக்கிறது. முன்பு 1967-ம் ஆண்டு திராவிட அளிக்கப்பட்ட வாக்குறுதிகளில் பெரும்பான்மையானவற்றை முன்னேற்றக் கழக அரசு நிறைவேற்றியிருக்கிறது.

இந்தப் புதிய அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு, அண்ணா அவர்களுடைய வழியில் நின்று, தேர்தல் நேரத்தில் எடுத்துச் சொன்ன நாட்டு மக்களுக்குத் தேவையான காரியங்கள் என்ன, எப்படி வேலை வாய்ப்புகள் அளிக்க வேண்டும், எப்படி சுதந்திர நாட்டில் ஏழைக்

சுதந்திரம் வேண்டும், எப்படி பாட்டாளிக்கும், தொழிலாளிக்கும் விடிவு காலம் ஏற்பட வேண்டும், ஏழை வீட்டில் என்றென்றும் நல்ல விளக்கு எரிந்திட வேண்டுமென்பதற்காக என்னென்ன வாக்குறுதிகள் அளித்தோமோ அந்த வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்ற இந்த அரசு கொஞ்சம் கூடத் தயங்காது, தயங்காது என்பதை மிகுந்த திட்டவட்டமாக இந்த மாமன்றத்தில் எடுத்துக் கூறிக்கொள்ளுகிறேன்.

மின்சாரத் துறையில் பல்லாயிரக்கணக்கான மகஜர்களைப் பெற்றீர்களே, ஒருவரைக் கூட வேலைக்குச் சேர்த்துக் கொள்ளவில்லையே என்று பெருமதிப் பிற்குரிய டாக்டர் ஹண்டே அவர்கள் கேட்டார்கள். டாக்டர் ஹண்டே போன்றவர்கள் இப்படித் தகவல் அறியாமல் பேசுகிறார்களே என்பதுதான் என் கவலை. பல்லாயிரக்கணக்கான மனுக்களைப் பெற்றது உண்மை. அந்த மனுக்கள் என்னென்ன வேலைகளுக்காகக் கோரப்பட்டனவோ அந்த வேலைகளுக்கு எல்லாம் ஆட்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவர்கள் சில: கலெக்டர்கள் 360 பேர்; டைப்பிஸ்ட்கள் 100 பேர்; கிளார்க்குகள் 1,500 பேர். இந்த 1,500 பேரில் 400 பேர் இன்னும் வேலையில் சேரவில்லை. 1,100 பேர் வேலையில் சேர்ந்து விட்டார்கள். மீதிப் பேர் இன்னும் ஒரு மாதத்தில் வேலையில் சேர இருக்கிறார்கள். டாக்டர் ஹண்டே அவர்களுக்குத் தரப்பட்ட தகவல்—அவர் சொல்லிய தகவல் என்று சொல்லவில்லை—தவறான தகவல். மின்சார வாரியத்தில் மனுக்களைப் பெற்று யாரையும் வேலையில் சேர்க்கவில்லை என்ற குற்றச்சாட்டு தவறானது என்பதை மாத்திரம் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

விலைவாசி பற்றிப் பேசப்பட்டது. எல்லா வகையிலும் விலைவாசி அறவே குறைந்துவிட்டது என்று யாரும் ஒத்துக்கொள்ளவில்லை. விலைவாசி, உணவு தானியங்களைப் பொறுத்தவரை குறைந்திருக்கிறது. வேறு சில விஷயங்களிலும் குறைந்திருக்கிறது. எல்லாப் பொருள்களின் விலையும் குறைய வேண்டுமென்றால் மத்திய சர்க்கார் ஒத்துழைப்புடன்தான் செய்ய முடியும். இதுதான் கவர்னர் உரையிலும், நிதிநிலை அறிக்கையிலும் சுட்டிக்காட்டப் பட்டிருக்கிறது. இதனை யாரும் மறுத்திட முடியாது.

விலைவாசியைப் பொறுத்தவரை திருச்சி மார்க்கட்டை எடுத்துக் கொண் டால் இரண்டாம் ரக அரிசியின் விலை மார்ச் 70-ல் 100 கிலோ கிராம் கொண்ட மூட்டை ரூ. 100 ஆக இருந்தது மார்ச் 71-ல் ரூ. 86.60 ஆகக் குறைந்திருக்கிறது. சோளம் மார்ச் 70-ல் ரூ. 85.3 ஆக இருந்தது மார்ச் 71-ல் ரூ. 73.35 ஆகக் குறைந்திருக்கிறது. கம்பு 70 ரூபாயாக இருந்தது 52 ரூபாயாக குறைந் திருக்கிறது. ராகி 70 ரூபாயாக இருந்தது 62 ரூபாயாகக் குறைந்திருக்கிறது. கடலை எண்ணெய் 470 ரூபாயாக இருந்தது 445 ரூபாயாகக் குறைந்திருக் கிறது.

பருப்பு வகை, சில எண்ணெய் வகைகளின் விலை சற்று ஏறி இருக்கிறது என்பதை மறுக்கவில்லை. அவற்றின் விலை குறைய உற்பத்தியைப் பெருக் கியாக வேண்டும். அதற்காகத்தான் பருப்பு வகைகளின் உற்பத்தியைப் பெருக்க நாம் தனித் தொகை ஒதுக்கி, ஆறு லட்சம் ஏக்கரில் தமிழ் நாட்டில் பருப்பு வகைகளை விளைவிக்க வேண்டுமென்று திட்டம் தீட்டினோம்.

100 கிலோ கிராம் மிளகாய் 1970-ல் 410 ரூபாயாக இருந்தது 1971-ல் 350 ரூபாயாகக் குறைந்திருக்கிறது. புளி விலை கொஞ்சம் ஏறி இருக்கிறது. அது

180 ரூபாயாக இருந்தது 200 ரூபாயாக ஏறி இருக்கிறது. மஞ்சள்—ஈரோடுதான் மஞ்சளுக்குப் பேர் போனது—ஈரோடு மார்க்கட்படி 380 ரூபாயாக இருந்தது, 180 ரூபாயாகக் குறைந்திருக்கிறது. மஞ்சள் விலை குறைந்ததைப் பெண்கள் அதிகமாக வரவேற்பார்கள் என்று கருதுகிறேன். விறகு விலை 14-ல் இருந்து 18 ஆக ஏறியுள்ளது.

விலைவாசி அறவே குறைந்து விட்டது என்று தாங்கள் கூறவில்லை. விலைவாசி குறைவதற்கு உற்பத்தியைப் பெருக்க வேண்டும். அதற்கான முயற்சிகளில் அரசு ஈடுபட்டிருக்கிறது.

அதே நேரத்தில் மத்திய அரசு விலைவாசிகளை உயர்த்தும்போது நம்மைக் கலந்து கொண்டு செய்தாக வேண்டும். அதைத்தான் மாண்புமிகு திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் 'விலை உயர்வை எதிர்த்தீர்களா?' என்று கேட்டார்கள். எதிர்ப்பதற்கு எங்கள் கையைப் பலப்படுத்துங்கள். எல்லோரும் சேர்ந்து எதிர்ப்போம். எதிர்ப்பதற்கு நாங்கள் அஞ்சுபவர்கள் அல்ல. எந்த முறையிலே எதிர்ப்பது? அந்த எதிர்ப்பைத்தான் கவர்னர் உரையிலும், நிதிநிலை அறிக்கையிலும் இணைத்திருக்கும் வாசகங்கள் தெரிவிக்கின்றன. மத்திய அரசு சம்பள உயர்வு அறிக்கையாக இருந்தாலும், விலைவாசிகளை உயர்த்துவதாக இருந்தாலும் மாநிலங்களைக் கலந்து ஆலோசிக்க வேண்டுமென்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். அது நம்முடைய எதிர்ப்பைக் காட்டுகின்ற உணர்ச்சியின் அடிப்படையில் உள்ள வாசகங்கள்தான்.

திட்டங்களுக்குத் தேவையான நிதியைப் பெறுவதற்கு நீங்கள் அவர்களுடன் வாதித்தீர்களா, என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் நேற்றையதினம் கேட்டார்கள். இன்றைக்கு அதற்குப் பதில் சொல்லுவதாகக் குறிப்பிட்டேன். எத்தனை முறை கடிதம் எழுதினோம்? எத்தனை முறை சந்தித்துப் பேசி இருக்கிறோம்? கடிதங்களின் முழு விவரங்களைக் கொடுக்க முடியாவிட்டாலும் சிலவற்றைக் குறிப்பிடுகிறேன்.

28-8-1969 அன்று இன்று பேரவைத் தலைவராக இருக்கின்ற அன்றைய நிதியமைச்சர் அவர்கள், இந்தச் சட்டமன்றத்தில் அறிக்கை ஒன்றை வைத்தார்கள். அதில் நம்முடைய மாநிலத்திற்குக் கிடைக்க வேண்டிய சதவிகிதம் குறைந்ததைக் குறித்து எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

25-9-69 அன்று இந்தியப் பிரதமருக்கு நான் எழுதிய கடிதத்தில் இந்திய ஆணைக்குழு இழைத்த அநீதி, திட்டக் குழுவின் தகுதி முறைகளினால் நேர்ந்துள்ள நஷ்டம், ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி நியாயம் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டிருக்கிறேன்.

29-11-69 அன்று இந்தியப் பிரதமருக்கு ஒரு கடிதம் எழுதியதோடு இந்தியப் பிரதமரையும் திட்டக் குழுத் துணைத் தலைவர் அவர்களையும் சந்தித்து நீண்ட நேரம் இதைப் பற்றி விவாதித்திருக்கிறேன்.

இதற்குப் பிறகு இரண்டு மூன்று தடவை நிதியமைச்சர் திட்டக் குழுவினரோடு பேசி நமக்கு சாதகமான ஒரு முடிவுக்கு வர முடியாததால் ஐந்தாண்டுத் திட்டத்தின் அளவு நிச்சயிக்கப்படாமல் போய் விட்டது. 6—3—70 அன்று ஊதியக் குழுவின் சிபாரிசுகளால் ஏற்படக் கூடும் பெரும் செலவினை ஈடுகட்ட மத்திய அரசு உதவியளிக்க வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது. 21—3—70

அன்று நடந்த தேசிய அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் 'டிஸ்ஸெண்ட்' எழுதினீர்களா என்று கேட்டார்கள். அந்தக் கூட்டத்திலேதான் நான் மூன்று நிபந்தனைகளைச் சொன்னேன். ஒன்று சேலம் உருக்காலை; இரண்டாவது சிறப்பு நிதியாக ஒதுக்கப்பட்ட 800 கோடி ரூபாயில் நம்முடைய மாநிலத்திற்குப் பங்கு வர வேண்டும் என்பது. மூன்றாவது ஒவ்வொரு மாநிலத்திலும் பின்தங்கிய பகுதிகளுக்காக ஒதுக்கப்பட்ட 100 கோடி ரூபாயில் நம்முடைய மாநிலத்தில் பின்தங்கிய பகுதிகளுக்கும் பணம் ஒதுக்கவேண்டுமென்பது. ஆக, இந்த மூன்று நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டால்தான் திட்டத்திற்கு சம்மதம் தருவோம் என்று சொன்னோம். அதற்குப் பிறகுதான் முதல் தடவையாக 800 கோடி ரூபாயில் 7 கோடி ரூபாய் தந்தார்கள். இந்த ஆண்டு தர மறுக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் பின் தங்கிய பகுதிகளான இராமநாதபுரம் மாவட்டத்திற்கும், தர்மபுரி மாவட்டத்திற்கும் இரண்டு கோடி ரூபாய் அளவிற்கு ஒதுக்கியிருக்கிறார்கள். முதலிலே சொல்லப்பட்ட சேலம் உருக்காலைக்கும் இசைவு தந்தார்கள்.

15-4-70 அன்று நமக்கு சிறப்பு உதவி அளிப்பது அவசியம் என்றும் அதற்காக நம் நிதி வாயில்களைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் நாம் கோரினோம். 25-4-70 அன்று இதே கோரிக்கை மீண்டும் வலியுறுத்தப் பட்டது.

19-8-70 அன்று நம் இக்கட்டான நிதிநிலையை விவரமாக எடுத்துச் சொல்லி யிருக்கிறோம். டாக்டர் காட்கில் அவர்கள் உடல்நிலை சரியாக இல்லாததால் ஒத்திவைக்கப்பட்டிருந்த சந்திப்பு துரிதமாக நடத்தப்பட வேண்டுமென்று வலியுறுத்தினோம். 12-10-70 அன்று நம்முடைய தொழிலமைச்சர், அதிகாரிகள், அனைவரும் சேர்ந்து டாக்டர் காட்கில் அவர்களை சந்தித்துப் பேசினோம். நம் வாதத்தில் நியாயம் இருக்கிறது என்பதை ஓரளவுக்கு ஒப்புக்கொண்ட காட்கில் அவர்கள் அதிகாரிகள் மட்டத்தில் நம் நிதி பற்றிய புள்ளி விவரங்கள் திரும்பப் பரிசீலிக்கப்பட வேண்டுமென்ற அளவோடு பேச்சு வார்த்தை முடிந்தது. 12-10-1970 அன்று நடந்த சந்திப்புக்குப் பிறகு 31-10-70 அன்றும் 1-11-70 அன்றும் அதிகாரிகள் மட்டத்தில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. 31-12-70 அன்று தலைமையமைச்சரிடம் இதே கோரிக்கைகளை மீண்டும் பரிசீலிக்க வேண்டுமென்று கூறியிருக்கிறேன். 19-1-1971 அன்று தலைமை அமைச்சருக்கு மீண்டும் இது குறித்து வற்புறுத்தி கடிதம் எழுதியிருக்கிறேன்.

12-1-71 அன்று திட்டக் குழுச் செயலாளர் நம் வாதங்களுக்கு ஒரு சில மறுப்புகள் தெரிவிக்கும் நீண்ட குறிப்பை அரசுக்கு அனுப்பினார். அதற்கு 3-2-71 அன்று மறுபடியும் பதில் அனுப்பப்பட்டிருக்கிறது. இப்படித் தொடர்ந்து மத்திய அரசோடு போராடிக் கொண்டிருக்கிறோம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: 21-3-1970 அன்று நடந்த என்.டி.சி; மீட்டிங்கில் மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் சில நிபந்தனைகளைக் கூறியதாக முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த மீட்டிங்கில் இதையெல்லாம் செயலில் ஒத்துக்கொள்ளும் வகையில் அதிகார பூர்வமாக தெரிவிக்கும் வகையில் வாய்மொழியாக சொன்னதோடு மட்டுமல்லாமல் 'டிஸ்ஸெண்டிங் எழுதியிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அங்கே நமது பேச்சுக்கள் தான் பதிவு செய்யப்படுகின்றன. அப்படி ரெக்கார்டுகள் எதுவும் பதிவு செய்யவில்லை. 'டிசன்டிங் நோட்ஸ்' எதுவும் எழுதப்படவில்லை, அவ்வளவுதான்.

நாம் எந்தெந்த அளவிற்குப் போராடியிருக்கிறோம், எந்தெந்த அளவிற்குப் போராடி வெற்றி பெற்றிருக்கிறோம், பெற வேண்டிய உரிமைகளை எப்படி எப்படியெல்லாம் வலியுறுத்திப் பெற்றிருக்கிறோம் என்பதற்காகத்தான் இதை யெல்லாம் சுட்டிக்காட்டுகிறேன்.

நாம் மத்திய அரசிடம் கேட்டது 250 கோடி ரூபாய்; ஆனால் மத்திய அரசு நமக்கு 202 கோடி ரூபாய் அளவுக்குக் குறைத்திருக்கிறது. மத்திய அரசின் சார்பிலே அங்கே இருக்கிற திட்டக் குழு மாநிலங்களுக்கு என்று சில தகுதிகளை வரையறுத்தது. அந்த தகுதிகள் என்ன என்ன என்று பார்த்தால் மக்கள் தொகையிலே 60 சதவிகிதம், நபர்வாரி வருமானம் (பெர் கேபிடா இன்கம்) என்பதிலே ஒரு 10 சதவிகிதம், தனிப் பிரச்னைகள் என்பதற்காக ஒரு 10 சத விகிதம், வரி விதிக்க எடுத்த முயற்சிகளுக்காக ஒரு 10 சதவிகிதம்; தொடர்ந்து திட்ட வேலைகள் நடைபெறுகின்றனவா என்ற அடிப்படையில் பத்து சத விகிதம் என்ற அளவில் வரையறுத்து இருக்கிறது. இந்த அளவில்தான் மாநிலத்தின் தகுதிகள் என்று தகுதியை உருவாக்கினார்கள். இந்த அடிப் படையில் தமிழ்நாடு அரசுக்கு கிடைக்கக்கூடியது கிடைக்காமல் போய் இருக்கிறது. ஆகவே இந்தத் தகுதிகளை வரையறுத்த முறைகளை எதிர்க் கிறேன்.

ஆந்திரா 40 கோடி ரூபாய் இழந்து விட்டது. மத்திய பிரதேசம் 20 கோடி ரூபாயை இழந்திருக்கிறது. மைசூர் 40 கோடி ரூபாயை இழந்து விட்டது. மேற்கு வங்காளம் 24 கோடி ரூபாயை இழந்து விட்டது. தமிழ்நாடு 48 கோடி ரூபாயை இழந்து விட்டது.

நபர்வாரி சராசரி வருமானம் என்று இருக்கிறதே ஒரு பத்து சதவிதம், அதை அகில இந்திய கணக்கிலே பார்த்தால் அனைத்திந்திய சராசரி 418 ரூபாய். தமிழ்நாடு 434 ரூபாய். இந்த 418 ரூபாய்க்கு நபர்வாரி வருமானம் இருந்தவர்களுக்கு உதவி மறுக்கப்பட்டது. நமக்கு—தமிழ்நாட்டுக்கு—16 ரூபாய் அதிகமானது என்ற காரணத்தாலே, நமக்கு அந்த பத்து சதவீதம் இல்லையென்று சொல்லிவிட்டார்கள். 418-க்கும் 434-க்கும் அதிக வித்தியாசம் இல்லையென்ற அளவிற்கு அவர்கள் செயல்பட்டிருந்தால் நமக்கு மேலும் 25 அல்லது 30 கோடி ரூபாய் கிடைத்திருக்கும். அதே நேரத்தில் என்ன செய்தார்கள். 9 மாநிலங்களுக்கு 800 கோடி ரூபாய் சிறப்பு நிதியாக தந்தார்கள். தமிழ்நாடு, மைசூர், ஆந்திரா, மேற்கு வங்காளம், மத்திய பிரதேசம் ஆகிய ஐந்து மாநிலங்கள் இழப்புக்களானாலும் நம்மைத் தவிர்த்து மீதி ஐந்து மாநிலங்களுக்கும் ஆக 9 மாநிலங்களுக்கும் சிறப்பு நிதி உதவி தரப்பட்டிருக்கிறது. அந்த நிதியில் நமக்கு பங்கு இல்லை. அதிகமாக சண்டை போட்டு நிபந்தனை போட்டு தேசிய வளர்ச்சிக்குழு (என்.டி.சி.) கூட்டத்தில் கேட்டபோது 7 கோடி ரூபாய் தரப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு தர மறுக்கிறார்கள். அதைத்தான் இந்த நிதிநிலை அறிக்கையில் கோடிட்டு காட்டி யிருக்கிறோம்.

தனிப்பிரச்சினையாகக் கணக்கிட்டு மேற்கு வங்காளத்தின் கல்கத்தா நகரத் திற்கு பணம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் சென்னை மாநிலத்தை தனிப்பிரச் சினையாக கணக்கிட்டு, சென்னை மாநகரத்திற்குத் தனியாகப் பணம் கொடுக்க வில்லை. சென்னை மாநகரில் மவுண்ட் ரோடு மற்ற பல ரோடுகளையும் பார்த்து விட்டு, சென்னைமாநகரம் எல்லாவகையிலும் முன்னேறியிருக்கிறது என்று நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ள நான் விரும்பவில்லை. கடற்கரையோரத்தில் இருக்கிற குப்பங்களில் எவ்வளவோ பேர் நடுத்தெருவில்கூட படுப்பதற்கு பாய் அற்ற நிலையில் இருக்கிறார்கள். குடிசைகள் எல்லாம் இருள் சூழ்ந்திருக்கிறது. சுகாதார வசதி கிடைக்க வழியில்லை. ஆனாலும் நாம் 40 கோடி ரூபாய் அளவிலே குடிசை மாற்று வாரியத்தை அமைத்திருக்கிறோம். இதைத் தனிப்பிரச்சினையாக ஆக்கி மத்திய அரசு கவனித்து அதிலே பத்து சதவீதம் ஒதுக்கியிருந்தால் நமக்கு ஒரு பத்து கோடி ரூபாய் கிடைத் திருக்கும். மாநிலத் தகுதி என்ற அடிப்படையில் செயல்படுகிறவிதம், நமக்கு மறுக்கப்படுகிற விதம் சரியில்லை. ஐந்து மாநிலங்களுக்கு இழப்பு ஏற்பட்டு தமிழ்நாட்டைத் தவிர நான்கு மாநிலங்களுக்கு வேறு ஐந்து மாநிலங்களுடன் சேர்த்து 800 கோடி ரூபாய் சிறப்பு நிதியாக தரப்படுகிறது. அதில் நமக்கு பங்கு இல்லையென்று சொல்வது நியாயம் அல்ல என்பதைத்தான் கவர்னர் அவர்களுடைய உரையிலும் நிதிநிலை அறிக்கையிலும் சுட்டிக்காட்டி யிருக்கிறோம்.

நாம் போராடி எதுவுமே பெறவில்லையா என்று கேட்டால் போராடி பெற் றிருக்கிறோம் என்று சொல்ல விழைகிறேன். கையாலாகாதவர்கள் புள்ளி விவரங்களைக் கேட்டறியாதவர்கள் என்றெல்லாம் டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்லா விட்டாலும், சுற்றிச் சுற்றி அந்த பொருள் தொனிக்கும்படியாகப் பேசினார்கள். சென்ற ஆண்டு மட்டும் வறட்சிப் பணிக்காக 14 கோடி ரூபாய் பெற்றிருக்கிறோம். அடுத்து, ராயலசீமா கடன். ராஜாஜி ஆட்சியில் ரிசர்வ் பாங்கின் ஓவர் டிராப்ட் ஆக 23 கோடி ரூபாய் இருந்தது. அதில் நமக்கு 13 கோடி ரூபாய் பங்கு உண்டு. இப்போது பேரவைத் தலைவராக இருப்பவர் நிதியமைச்சராக இருந்த நேரத்தில் அதைப்பற்றி பேசியிருக் கிறார்கள். அந்தக் கடன் 13 கோடி ரூபாய் போராடியதன் விளைவாக தவணையாக 4 வருடமாக தள்ளிக் கொடுத்து வருகிற சாதகமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்படியாக நாம் சென்ற ஆண்டு 31 கோடி ரூபாயைப் பெற்றிருக்கிறோம். பல்வேறு பணிகளுக்காக நாம் 14 கோடி ரூபாய், பின்னர் 10 கோடி ரூபாய், பின்னர் 7 கோடி ரூபாய் ஆக 800 கோடி ரூபாயிலிருந்து சென்ற ஆண்டு வாதிட்டுக் கேட்கப் பெற்றது 31 கோடி ரூபாய் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல இந்த ஆண்டும் பெற வேண்டுமென்பதற்காகத்தான் சட்டசபையில் இப்படி அறிக்கை வைத் திருக்கிறோமே, பேசுகிறோமே, இவையெல்லாம் எங்களுடைய எதிர்ப்புத்தான். தமிழ்நாட்டு மக்களுடைய சார்பாக மத்திய அரசுக்குக் காட்டும் எதிர்ப்புத் தான் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

மக்களிலே சிலபேர் எங்கே பிரிவினையில் கொண்டு போய்விடுமோ என்று அஞ்சுகிறார்கள். அப்படி அஞ்சத் தேவையில்லை என்று சொல்லிக்கொள் கிறேன்.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும். இந்திய நாட்டு ஒருமைப்பாட்டில் அக்கறை கொண்டிருக்கிறோம், இந்திய நாடு ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்றுதான் ஆசைப்படுகிறோம். இந்தியப் பாராளுமன்றத்திலே ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. கிழக்கு வங்காளப் பிரச்சினையைப் பற்றி அந்தத் தீர்மானம் பரிந்துரைத்திருக்கிறது. ஒரு நாடு பிரிந்துபோகிற போது பாராளுமன்றத்திலே ஆதரவு காட்டப்படுகிறது. அதைப்பற்றிய சர்ச்சையில் நான் இறங்க விரும்பவில்லை. கிழக்கு பாகிஸ்தான் தலைவராக இருக்கிற முஜிபுர் ரஹ்மான் என்ன கோரிக்கைகளை ஆரம்பத்தில் வைத்தார்? சிலோனில் இருந்து வெளிவரும் ஒரு பத்திரிகையில் ரஹ்மானுடைய ஆறு அம்ச திட்டம் இருக்கிறது. இவைகளையெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொண்டு அதை திருப்பித் திருப்பிச் சொல்கிறது என்று யாரும் கருத வேண்டாம். இப்போது சுதந்திர நாடு என்று கேட்கிற ரஹ்மான் முதலில் 6 அம்ச திட்டத்தைத்தான் வைத்தார். முதல் திட்டம் கிழக்குப் பாகிஸ்தான் மேற்கு பாகிஸ்தான் இரண்டு மாநிலங்களில் உண்மையான தன்மையில் கூட்டாட்சியை ஏற்படுத்த வேண்டும்; இது நாம் கேட்கிற சுயாட்சியின் உண்மையான தன்மையில் கூட்டாட்சி ஏற்பட வேண்டும் என தோன்றக் கூடும். இரண்டாவது திட்டம், பாதுகாப்பு, வெளிவிவகாரம் ஆகிய இரண்டு மட்டும் மத்திய அரசின் அதிகார வரம்பில் வர வேண்டும். மீதி அத்தனை அதிகாரங்களும் மாநிலத்திற்கு வரவேண்டும். நான் அப்படிச் சொல்லவில்லை. 'நம்முடைய மாநில சுயாட்சியில்' அப்படிச் சொல்லவில்லை.

மூன்றாவதாக, கரன்சி நோட்டு இரண்டு பகுதிகளுக்கும் தனித்தனியாக இருக்க வேண்டும். அடுத்தது, வரிபோடும் அதிகாரமும், வசூலிக்கும் அதிகாரமும் மாநிலத்திற்கே இருக்க வேண்டும். இந்த வருமானத்திலிருந்து மத்திய அரசின் நிர்வாகத்திற்கு ஒரு பகுதியை செலுத்துவது என்பது. இங்கே தலைகீழாக இருக்கிறது. மத்திய அரசு வசூலித்து ஒரு பகுதியைத் தான் நமக்குக் கொடுத்து வருகிறார்கள். அடுத்து, அந்தந்த மாநில அந்நியச் செலாவணி வருமானம் அந்தந்த மாநில அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டு இருக்கவேண்டும். மத்திய அரசின் செலவுக்குத் தேவையான அந்நியச் செலாவணியை மாநில அரசு பங்காகச் செலுத்த வேண்டும். அடுத்து, வர்த்தகம், தொழில் வளர்ச்சிகளுக்காக வெளிநாடுகளோடு ஒப்பந்தம் செய்துகொள்கிற உரிமைகளை மாநிலத்திற்கே வழங்கவேண்டும். ஆறாவது (ஏ) தனி ராணுவம் இருமாநிலங்களுக்கும் தனித்தனியாக இருக்க வேண்டும். அதிலேயே (பி) வங்க மொழியும் கூட்டாட்சி மொழிகளில் ஒன்றாக வேண்டும்.

இவைகள் எல்லாம் முஜிபுர் ரஹ்மான் தன்னுடைய மாநில சுயாட்சித் திட்டத்திற்காக எடுத்துவைத்த 6 அம்சமாகும். இப்போது அவரது மாநில சுயாட்சித் திட்டம் நாட்டுக்குச் சுதந்திரம் தேடுகிற திட்டமாக, பாகிஸ்தானில் இருந்தே பிரிந்துபோகிற திட்டமாகிவிட்டதைக் காண்கிறோம்.

மேலவையிலே நான் பேசும்போது குறிப்பிட்டேன். மேலவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராஜாராம் நாயுடு அவர்கள் பேசும்போது சொன்னார்கள்—நம்முடைய உரிமைகளுக்காக நாங்கள் எத்தகைய போராட்டம் நடத்தினாலும்—போராட்டம் இல்லை—எத்தகைய நடவடிக்கை எடுத்தாலும் நாங்கள் உதவத் தயார் என்று சொன்னார்கள். நான் பேசும்போது குறிப்பிட்டேன். அவர் கவனம் இல்லாமல் சொல்லவில்லை. நாங்கள் எத்தகைய நடவடிக்கை

எடுத்தாலும் உதவத் தயார் என்று திரு. ராஜாராம் அவர்கள் சொன்னார்கள் என்றால், நாங்கள் எடுக்கிற நடவடிக்கைகள் எல்லாம் அறவழி முறையில் இருக்கும், இந்தியாவைப் பலப்படுத்தி மாநிலங்களும் வளப்படுகிற முறையில் தான் இருக்கும் என்கிற நம்பிக்கையின் காரணமாகத்தான் எத்தகைய நடவடிக்கை எடுத்தாலும் ஒத்துழைக்கத் தயார் என்று சொல்லியிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டேன்.

அதையேதான் நான் இங்கும் சொல்கிறேன். நாம் கோருகிற அதிகாரங்கள் மாநிலத்தை தனியாகப் பிரிப்பதற்கு அல்ல—இந்தியா எப்போதும் ஒன்றாக வலுப்பெற்று இருப்பதற்கு அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்று கோருகிறோம். மாநில அதிகாரங்களில் மத்திய தலையீடு அடிக்கடி இல்லாதபடி மத்தியில் அதிகாரங்கள் மேலும் மேலும் குவித்துக் கொள்வது தவிர்க்கப்பட வேண்டும். மத்திய அரசின் அதிகாரங்களை குறைத்தால் அதுவும் செம்மையாக திறம்பட தன் பணியை ஆற்ற முடியும். மாநிலங்களுக்கு அதிகாரம் பரவலாக்கப்படுவதன் மூலம் மாநிலங்கள் வளமையும் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இவைகள் எல்லாம் எதிரொலிக்கிறது கவர்னரின் உரையிலும், ஏனைய எனது அறிக்கைகளிலும். அதுதான் இந்த மன்றத்தின் ஏகோபித்த வாசகமாக உருக்கொள்ளவேண்டும்.

கவர்னர்பெருமான் உரையில் புரட்சிகரம் இல்லை, சோஷலிசம் இல்லை என்று சொன்னார்கள். விவாதத்திலும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். திரு. மணலி கந்தசாமி அவர்கள், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் நிலச் சீர்திருத்தம் பற்றிச் சொன்னார்கள். பல அன்பர்கள் தகுந்தமாற்றம்—புரட்சிகரமான மாறுதல் உண்டாக்கப்படவேண்டும் என்றார்கள். நிலம் இல்லாதவர்கள் இருக்கக்கூடாது. 50 சென்ட் நிலமாவது எல்லோருக்கும் இருக்கவேண்டும், 15 குழி மனைக்கட்டாவது இருக்கவேண்டுமென்கிற புதிய சூழ்நிலையில் திராவிட முன்னேற்றக் கழக அரசு தக்க ஏற்பாட்டைச் செய்யும் என்பதை தங்கள் மூலமாக எடுத்துக் காட்ட விரும்புகிறேன். என்னுடைய தலைமையில் உருவாகியிருக்கின்ற அந்தக் குழு விரைவில் அந்தப் பணியை ஆராயத் தொடங்கும்.

பஸ் உச்சவரம்பைப்பற்றிக்கூடச் சொன்னார்கள். அந்த அடிப்படைக் கருத்தை இந்தத் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. நேற்று திருமதி அனந்தநாயகி அவர்கள் பேசும்போதுகூட குறுக்கிட்டுச்சொன்னேன். பஸ்ஸுக்கு உச்சவரம்பு விரைவில் வரும். ரெட்ராஸ்பெக்டிவ் எபக்டோடு வரும் என்று இந்த நேரத்திலும் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

பஸ் என்றவுடன் நினைவுக்கு வருகிறது. திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் பஸ்ஸுக்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இலவச பாஸ் அளிக்க வேண்டும் என்பதாகக் குறிப்பிட்டார்கள். அதைக் கொள்கை அளவில் ஒப்புக்கொண்டு எப்படி எப்படிச் செய்யலாம் என்பதை யோசனை செய்து தக்க முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அரசாங்க பஸ்களுக்கு மாத்திரம் சொல்கிறேன். இப்போதே பல தகராறுகள் கண்டக்டர்களுக்கும், மற்றவர்களுக்கும் நடக்கின்றன. எம். எல். ஏ-க்களுக்கு இலவச பாஸ் வழங்கப்படுகிறபோது எம். எல். ஏ.-க்களுக்கும், கண்டக்டர்களுக்கும் தகராறு என்கிற நிலை வராது பாதுகாத்துக்கொள்ள வேண்டிய பெரும்

[திரு. மு. கருணாநிதி] [1971 ஏப்ரல் 2

பொறுப்பையும் நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்கள். ஆகவே அந்த இலவச பஸ் பாஸ்களை வழங்குகின்ற அளவுக்கு இந்த அரசு அந்தத் திட்டங்களை ஆராய்ந்து வகுக்கும் என்று எடுத்துக் கூறுகிறேன்.

சில உறுப்பினர்கள் இப்போது எம். எல். ஏ-க்களுக்கு மாதம் அளிக்கப்படுகிற ரூ. 250-ஐ கொஞ்சம் அதிகமாக்கினால் நல்லது என்று கேட்டார்கள். பணத்தை அதிகமாக்கவேண்டாம், பகிரங்கமாகத் தெரியும் மக்களுக்கு என்பதாக திரு. கே. டி. கே. அவர்கள் சொன்னார்கள். என்றாலும் இறுதியில் அது பற்றி எப்படிச் செய்தாலும் சரி என்று முடிவு செய்கிற பொறுப்பை என்னிடத்தில் விட்டுவிட்டார்கள். நானும் இதுபற்றி எல்லாம் அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் கலந்துபேசி முடிவு எடுக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த விவாதத்தில் கலந்து கொண்ட எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் என்னுடைய அன்பான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிற திருத்தங்களைத் திரும்பப்பெறவேண்டுமென்று பணிவுடன் வேண்டிக்கொண்டு இந்த அளவோடு முடித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, the Hon. Chief Minister has just now read out six demands of Sheikh Mujibar Rehaman. I want to konw whether he has picked out any of the demands. Also, has the reference to these demands got any relevance to the matter under discussion in this House?

அவற்றை இந்த அவையில் குறிப்பிட்ட காரணம் என்ன? அவற்றில் எதை ...தை முதல் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்பது பற்றிய ...க்கங்களை முதல் அமைச்சர் அவர்கள் சொன்னால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நான் பேசியதை முழுவதையும் திரு. ஹாண்டே அவர்கள் கவனிக்கவில்லை என்று தெரிகிறது. இதைப்பற்றி வெளியில் திரு. பக்தவத்சலம் போன்றவர்கள் கூட குழப்பம் அடைந்திருப்பதாகச் சொன்னார்கள். திரு. ரகிமான் அவர்கள் முன்னர் சுயாட்சி கோரவில்லை என்ற கருத்தும் சொல்லப்பட்டது. அவர் முதன்முதலில் மாநில சுயாட்சித் திட்டமாக இந்த ஆறு அம்சங்களை அறிவித்திருக்கிறார்கள் என்பதற்காகச் சொன்னேன். இவற்றில் எதை எதை நாம் ஏற்றுக்கொள்கிறோம் என்பது இப்போது சொல்வதற்கில்லை. ராஜமன்னார் குழுவின் அறிக்கை வந்த பிறகு தெரியும்.

திரு. ஆர். பொன்னப்பநாடார் : திரு. கே. டி. கே. தங்கமணி, டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. எஸ். சுரேந்திரன், திரு. கே. எம். சுப்பிரமணியம் ஆகியோர்களது திருத்தத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Mr. Speaker, Sir, though I am not pressing my amendment, I would like to impress upon the Hon. Chief Minister that he must take quick steps to control the price of essential articles. Since he has not given any concrete solution, I would like him to pay some more attention to the problem.

1971 ஏப்ரல் 2] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

திருமதி டி. என். அனந்தநாயகி அவர்களுடைய திருத்தத் தீர்மானமும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி "ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்கண்ட நன்றியுரை அளிக்கப்பட வேண்டும்:—

1971-ம் ஆண்டு, மார்ச்சு திங்கள் 24-ம் நாளன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்ற கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்குவிடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

(4) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பேரவையின் 6(1)-வது விதிக்கிணங்க, இப்பேரவையின் முதல் கூட்டத் தொடரின் கீழ்க்கண்ட உறுப்பினர்களை மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairman) நான் நியமிக்கின்றேன்.

திரு. மா.வெ. கரிவேங்கடம்,

திருமதி ஜோதி வெங்கடாசலம்,

திரு. நா. வீராசாமி,

திரு. நீ. அன்புச்செழியன்,

திரு. என். கே. பழனிசாமி,

திரு. எம். ஏ. லத்தீப்.

(இ) நூல்நிலையக் குழுவிற்குத் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, அரசினர் நூல் நிலையக் குழு தேர்தலுக்காக திரு. ஏ. ஆர். சுப்பையா அவர்களின் பெயர் நியமனம் செய்யப்பட்டுள்ளது. நிரப்பப்பட வேண்டிய ஒரு வெற்றிடத்திற்கு மேற்படி நியமனம் முறைப்படி செய்யப்பட்டுள்ளதால், திரு. ஏ. ஆர். சுப்பையா அவர்கள் அரசினர் நூல் நிலையக் குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

(ஈ) அவையுரிமைக் குழுவிற்குத் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1971-72-ஆம் ஆண்டுக்கான அவையுரிமைக் குழுவிற்கு தமிழ்நாடு சட்டப்பேரவையின் பதினொன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட பதினொன்று உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

1. திரு. ஆர். பொன்னப்ப நாடார்,

2. திரு. ஜி. ராஜாராம்,

3. திரு. டி. கணபதி,

4. திரு. என். கணபதி,

5. திரு. ஈ. எம். நடராசன்,

6. திரு. க. பழனிவேலன்,

7. திரு. சொ. காவேரிமணியம்,

8. திரு. நா. வீராசாமி,

9. திரு. க. சுப்பு,

10. திரு. என். வி. குருசாமி,

11. திரு. ஏ. சுப்பிரமணியம்,

12. திரு. ஏ. ஆர். பெருமாள்,

13. திரு. வா. மை. அப்துல் ஜப்பார்,

14. திரு. கே. எம். சுப்பிரமணியம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்கள் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால் 1971-72 ஆம் ஆண்டு அவையுரிமைக் குழுவிற்கு இவர்கள் முறைப்படித் தேர்ந்தெடுக்கப் பட்டதாக நான் அறிவிக்கிறேன். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

இப்பேரவையின் 183 (4) விதியின் கீழ் பேரவைத் துணைத் தலைவர் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

(உ) அவையினர் குழுவிற்கு தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1971-72 ஆம் ஆண்டுக்கான அவையினர் குழுவிற்குச் சட்டப் பேரவையின் பதின்மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்பொருட்டு கீழ்க்கண்ட பதின்மூன்று உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டார்கள் :

1. திரு. கு. ஆ. பொம்மன்,

2. திரு. கே. என். குமாரசாமி,

3. திரு. வி. தவமணித் தேவர்,

4. திரு. எஸ். மூமைமது காதர் முகைதீன்,

5. திரு. கி. அன்புச்செழியன்,

6. திரு. மா. வெ. கரிவேங்கடம்,

7. திரு. ந. சோமசுந்தரம்,

8. திரு. அ. சே. குமாரசாமி,

9. திரு. செ. கந்தப்பன்,

10. திரு. க. இராஜாப்பிள்ளை,

11. திரு. பூ. எட்டியப்பன்,

12. திரு. ப. சங்குமுத்து தேவர்,

13. திரு. எஸ். வடிவேல்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப் படவேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1971-72-ம் ஆண்டு அவையினர் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

பேரவையின் 221 (1)—வது விதிக்கிணங்க—

1. திரு. எஸ். ஆறுமுகம்.

2. திரு. க. மு. இராசகோபால்

3. திரு. ஓ. என். சுந்தரம்.

4. திரு. கே. எஸ். கோதண்டராமய்யா.

ஆகியவர்களை இக்குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்.

பேரவையின் துணைத் தலைவர் அவர்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவார்.

மற்ற கமிட்டிகளுக்கான உறுப்பினர்களின் பட்டியல் நாளைக்கு அறிவிக்கப் படும்.

பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவோடு முடிகின்றன. பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணியளவில் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

(7) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

90. Notification issued with G.O. Ms. No. 2804, Public (Services-A), dated the 14th December 1970, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, relating to exclusion of the post of Gazetted Personal Assistant to Chief Secretary to Government from the Commission's purview. (Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India).

91. Notification issued with G.O. Ms. No. 2652, Public (Services-A), dated the 24th November 1970, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 relating to exclusion of the post of Editor "Seerani" in Madras General Service from the Commission's purview. (Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India).

92. Notification issued with G.O. Ms. No. 2750, Public (Services-A), dated the 5th December 1970, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, relating to exclusion of the post of Superintending Engineer (Mechanical) Tamil Nadu State Transport Department from the Commission's purview. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]

93. Notification issued with G.O. Ms. No. 3105, Revenue, dated the 7th October 1970, in regard to an amendment to the Revenue Department Notification III No. 160 of 1970, dated the 14th May 1970, published at page 669 of Part III of the Tamil Nadu Government Gazette, dated the 10th June 1970. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959. (Tamil Nadu Act 1 of 1959).]

94. Notification issued with G.O. Ms. No. 622, Education, dated the 29th April 1968, in regard to approval of the list of all the parks and play-fields and open spaces within the jurisdiction of the Kovilpatti Municipality. [Laid on the Table of the House under section 14 (3) of the Tamil Nadu Parks, play-fields and open spaces Preservation and Regulation) Act, 1959 (Tamil Nadu Act 26 of 1959).]

95. Statement of guarantee given by the Government of Tamil Nadu to the State Housing Board. [Laid on the Table of the House under Section 92 of the Tamil Nadu State Housing Board Act, 1961. (Tamil Nadu Act 17 of 1961.]

B. REPORTS NOTIFICATIONS AND OTHER PAPERS.

@ 34. The Tamil Nadu General Sales Tax (Amendment) Bill, 1971 (L. A. Bill No. 7 of 1971).

@ 35. Annexure to the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1971 (L.A. Bill No. 6 of 1971).

@ Dspatched to Members on 1st April 1971.

தமிழ் நாடு சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1971 ஏப்ரல் 3.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

Medium of instruction in colleges.

* 3 *S.N.Q.*—DR. M. MOSES: } DR. H. V. HANDE: } Will the Hon. the Minister for Education and Revenue be pleased to state—

(*a*) whether a Commission under the Chairmanship of Thiru A. L. Mudaliar was appointed to go into the question of medium of instruction at the collegiate level;

(*b*) if so, the terms of reference given to the Commission;

(*c*) the details of the decision given by the Commission; and

(*d*) whether the Government proposes to implement this in full?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) அரசின் பயிற்று மொழிக் கொள்கையைக் கல்லூரிகளில் எவ்வகைகளில் செயல்படுத்தலாம் என்பது பற்றிய கருத்துக்களைக் கூறவும் பொது மக்கள், மற்றும் மாணவர்கள் ஒரு சாராரிடையே எழுந்துள்ள ஐயப்பாடுகளைப் போக்குவதற்குண்டான நடவடிக்கைகள் எடுப்பது பற்றியும் அந்தக் குழுவின் ஆலோசனைகள் கோரப்பட்டிருக்கிறது.

(உ) & (எ): அக்குழுவின் இறுதி அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. அக்குழுவின் இடைக்காலப் பரிந்துரைகள், வருகிற கல்வி ஆண்டில் நிறைவேற்றப்படும்.

DR. H. V. HANDE: Sir, will the Hon. Minister be able to give us at least a gist of the salient points contained in the Interim Report that they had given? Most of it was published in the newspapers. Let us know exactly where we stand. Also may I know whether it is not a fact that by progressively restricting the number of seats for the English medium especially in Government colleges, those students who wish to take up the English medium are automatically denied seats on the plea that the few available English medium seats have been filled up? Also, will the Hon. Minister be able to tell us whether it would not be a right approach to find out the number of students who apply for the English and the Tamil media and after sorting them out, decide about the number of seats to be allotted for the English and Tamil media,

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தக் குழுவின் அறிக்கை அந்த அளவிற்கு அமைந்திருக்கிறது. அதற்குப் பிறகு இந்தக் குழுவின் முழு அறிக்கையும் வந்ததற்குப் பிறகு அதை ஆராய்ந்ததற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுவதுபோன்ற கருத்துக்கள் ஆராயப் படவேண்டிய ஒன்று. அந்தக் குழுவின் முழு அறிக்கையில் எந்த அளவிற்குச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை எதிர்பார்ப்பதால், இப்பொழுது கொள்கை யளவில் ஏற்றுக்கொள்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம். முழு அறிக்கை வந்த பிறகு என்ன நிலைமைகள் என்பதை நாம் ஆராயலாம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவரவர்களே, அதில் முக்கியமான அம்சங் கள் சொல்லப்பட்டிருக்கின்றன என்று கருதுகிறேன். அரசாங்க கல்லூரி களில் ஆங்கில போதனா மொழி ஏற்படுத்த வேண்டுமென்ற அளவிற்குச் சொல்லியிருப்பதால், ஜூன் மாதத்தில் ஆரம்பிக்கப்படக்கூடிய நிலைமைகள் இருப்பதால், மாணவர்கள் அங்கு போகும் நேரத்தில் அவர்களுக்கு இடம் இல்லை, இங்கே 50 சீட்டுகள்தான் இருக்கின்றன, அவைகள் முடிந்து விட்டன என்று சொல்லி ஏராளமான மாணவர்களுக்கு ஆங்கில போதனா மொழியில் இடமில்லை என்று சொல்லி அனுப்பக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே, இந்த அரசாங்கம் உடனடியாக எத்தனை மாணவர்கள் அதிலே விரும்புகி றார்கள் என்று திட்டமிட்டுச் செயல்பட எதற்காகக் காலதாமதம் ஆகிறது? ஆங்கில போதனாமொழி பயிலக்கூடிய வாய்ப்பையிழந்து, அதனால் வேலைவாய்ப் புகள் பாதிக்கப்படக்கூடிய நிலைமையில், ஒரு மாநிலத்திலே ஒரு மொழி, வேறு ஒரு மாநிலத்திலே ஒரு மொழி, மத்தியிலே ஆங்கிலம் என்று வாய்ப்புகள் இருக்கிறது. ஆகவே, திட்டவட்டமாக இந்த அவை நடக்கும் நேரத்திலேயே, இன்றோ நாளையோ இந்த அவை முடிந்துவிடும். அதற்குப் பிறகு ஜூன் மாதத்திலே பிறகு கூடப்போகிறோம். இது முக்கியமாக இருப்பதால் தெளிவாக, மக்களுக்கு நிம்மதியளிக்கக்கூடிய திட்டவட்டமான கருத்தை கேள்வி நேரத்திலே சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, உலகத்திலே யிருக்கும் எல்லாப் பல்கலைக் கழகங்களிலேயும், எல்லாக் கல்லூரிகளிலேயும் இருக்கும் முறைகளை, நாட்டு மக்களுக்கு, மாணவர்களுக்கு தேவையான பாடத்தைப் புகுத்துவதற்கு என்று எவ்வளவு இடங்கள் என்று இருக்கும். அதற்குத் தகுந்தாற்போன்று விண்ணப்பிக்கும் மாணவர்களில் தேர்ந் தெடுக்கும் மாணவர்கள் எதையெதையெல்லாம் விரும்புகிறார்களோ, அப்படி விரும்புவதையெல்லாம் எடுத்துச் செய்யும்படியான நிலையில் இருக்காது.

உதாரணமாக ஒன்பதாயிரத்து சில்லறை பேர்கள் எம்.பி.பி.எஸ். படிக்க வேண்டுமென்று விருப்பம் தெரிவிக்கிறார்கள் என்றால், எம்.பி.பி.எஸ்-க்கு உள்ள இடம் 1,125 இடங்கள் என்று சொல்லும்பொழுது, அந்த ஒன்பதாயிரத்து சில்லறை பேர்களிலே 1,125 பேர்கள்தான் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். மற்றவர்களுக்கு இடமில்லாத நிலையில் அவரவர்களுக்கு அவரவர்கள் படிப்பின் தகுதிக்கேற்ப வேறு ஒன்றைத் தேடும் நிலை ஏற்படுகின்றது. ஆகவே, அந்த ஒன்பதாயிரத்து சில்லறை பேர்கள் விருப்பத்தையும் நிறைவேற்றி ஏற்படுத்த முடியும் என்று சொல்ல முடியாது.

ஆகவே, பி.ஏ. சைகாலஜி என்றால் 161 கல்லூரிகளில் ஒரேயொரு கல்லூரி யில்தான் அதற்கு இடம் வைத்திருப்பார்கள் என்றால் அந்த அளவிற் குத்தான் நிறைவேற்ற முடியும், சைகாலஜி பி.ஏ.க்கு விண்ணப்பித்த

அவ்வளவு பேர்களின் விருப்பத்தையும் நிறைவேற்றக்கூடிய அளவிற்கு இடங்களை ஏற்படுத்துவது இயலாது. ஃபைன் ஆர்ட்ஸ் பி.ஏ. என்றால் ஒரேயொரு கல்லூரியில்தான் வைத்திருக்கிறோம். அந்தக் கல்லூரியில் வாய்ப்பிருக்கும் அளவிற்கு, இடங்கள் இருக்கும் அளவிற்கு விருப்பம் நிறை வேற்றப்படும். உதாரணமாக எம்.எஸ்.ஸி. பிசிக்ஸ்-க்கு ஒரு கல்லூரியில் 8 அல்லது 10 இடங்களுக்கு மேல் வைக்க முடியாது. அதற்கு விண்ணப்பிப்பவர் களுக்கு அங்குள்ள இடங்களுக்குத் தகுந்தாற்போலதான் கொடுக்க முடியும். இருபது பேர்கள் கெமிஸ்ட்ரி எம்.எஸ்.ஸி, கேட்கிறார்கள் என்றால் இடமிருக்கும் வரைதான் தர முடியும், மற்றவர்களுக்குத் தர முடியாது. ஹிஸ்டரி எம்.ஏ., தமிழ் எம்.ஏ., க்கு உள்ள 10, 15 இடங்கள் என்றால் ஓரிரு மாணவர்களுக்கு மேல் சேருகின்ற நிலை ஏற்படாமல் போகக்கூடும். அதிலேயிருக்கும் இடத்தை வேறு ஒன்றுக்குத் தர முடியாது. இந்த நோக்கம் நிறைவேறு வதற்கு வாய்ப்பு வசதிகள் இல்லை.

ஆகவே, ஒன்றைப்படிக்க வேண்டுமென்று விரும்புகின்றவர்கள் அத்தனை பேருக்கும் அதைப்படிக்க வாய்ப்பு ஏற்படாது. இந்தத் துறைகளில் அனுபவம் பெற்றவர்களைப் போட்டிருக்கின்றோம். இந்த நோக்கத்தை நிறைவேற்ற அவர் கள் எப்படி வகுத்துத் தருகிறார்கள் என்று பார்த்து அந்த அடிப்படையில் நிறைவேற்ற அரசாங்கம் ஆயத்தமாக இருக்கிறது. அவர்கள் சொல்லியிருப்பது தமிழ் மட்டுமே இருக்கும் கல்லூரிகளில் ஆங்கிலம் படிக்க வாய்ப்பு தரப்பட வில்லை, வாய்ப்பு தர வேண்டும். இப்பொழுதிருக்கும் எழுபதாயிரத்துச் சில்லறை இடங்களில் ஐம்பதாயிரத்துச் சில்லறை இடங்களில் ஆங்கிலத்திலே படிக்க வசதி, வாய்ப்புகள் அளிக்கப்பட்டிருக்கிறது. பத்தொன்பதாயிரத்து சில்லறை இடங்களில் தமிழிலே படிக்க வாய்ப்பு இருக்கிறது. சிலபல கல்லூரி களில் அறவே இல்லை என்ற நிலையைப்போக்க இந்தக்குழு நியமிக்கப்பட்டிருக் கிறது. முழு அறிக்கையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். நான் முதலில் சொன்னபடி, இந்தத் திங்களுக்குள் குழுவின் அறிக்கை வரும் என்று எதிர்பார்க்கிறோம். வரும் கல்வியாண்டுக்குள் இப்படிப்பட்ட சங்கடங்களை யெல்லாம் போக்கும்வகையில் என்னென்ன மாற்றங்களைச் செய்யலாம் என்று ஆராய்ந்து நிறைவேற்ற அரசு முன்வரும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : The students of linguistic minorities require English sections in Arts and Science in our Colleges. Last year some students were refused admission in the Teachers' College at Katpadi when they wanted seats in English section. May I know whether this point has been included in the terms of reference given to Dr. A. L. Mudaliar's Commission?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவினிடத்தில் கலைக்கல்லூரிகள் மற்றவைகள் கருத்தும் தரப்பட்டிருக்கின்றன. ஆகவே, சிறுபான்மையினர் வாழும் பகுதிகளில், இப்பொழுதே அரசினர் 5 கல்லூரிகளில் ஆங்கிலத்தையும் தமிழோடு, தமிழ் மட்டுமல்ல, தமிழுடன் வைக்கவேண்டு மென்ற அளவிற்கு, எல்லையோரத்தில் செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பிரச்னையை இந்தக்குழு ஆராயும்படி சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள்

ஆராய்ந்து சிறுபான்மையினருக்கு இந்தப் பிரிவுகளை எந்த அளவுவிற்கு ஏற்படுத்தலாம் என்று சொல்வார்கள். அதன் அடிப்படையில் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும்.

THIRUMATHI JOTHI VENCATACHELLUM: In the absence of the complete report of Dr. A. L. Mudaliar and since the Hon. Minister has said that a few recommendations have already been accepted, may I know what is the difficulty in introducing those recommendations in the coming academic year in all the colleges?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, எந்தக்கொள்கையின் அடிப்படையில் இருக்க வேண்டுமென்பதைத்தான் அவர்கள் இடைக்கால அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். அதை நிறைவேற்றுவது என்பதில் ஏழிலே ஐந்தையா, இரண்டையா, மூன்றையா அல்லது நான்குக்கு நான்கா என்பதையெல்லாம் அவர்கள் ஆராய்ந்து பார்த்து அந்தக்குழு எடுத்துத் தெரிவிக்க வேண்டும். இறுதியான முடிவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். இடைக்கால அறிக்கையில் கூறப்பட்டிருக்கும் அந்தக் கருத்தைக் கொள்கையளவிலே ஏற்றுக்கொள்கிறோம் என்று திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறோம். திட்டவட்டமாக அவர்கள் சொல்வார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

சுமார் 25 ஆண்டுக்காலம் துணைவேந்தராக இருந்தவர்கள், எல்லோராலும் மதிக்கப்படும் டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள் அதிலே இருக்கிறார்கள். இந்தத் துறையிலே கிறித்துவக் கல்லூரியின் முதல்வர் இடம் பெற்றிருக்கிறார்கள், திரு. ஜி. ஆர். தாமோதரன் அவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். மதுரைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தரும், சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரும் இருக்கிறார்கள். ஆகவே, இதிலே இருப்பவர்கள் கல்வி வல்லுநர்கள், நீண்ட காலம் அனுபவம் பெற்றவர்கள், கல்வியின் நிலைமைகள் நல்ல முறையில் அமைய வேண்டுமென்று எண்ணுபவர்கள். இதிலே அரசியல்காரர்கள் யாரும் போடப்படவில்லை. அவர்கள் அறிக்கையில் தெளிவாக எடுத்துச் சொல்லுவார்கள், மாநிலத்தின் நன்மைகளைக் கருதி, எதிர்காலத்தின் நன்மைகளைக் கருதி, சீர் படுத்த, செம்மைப்படுத்த அவர்கள் கருத்து பயன்படும் முறையில் குழுவின் முழு அறிக்கையை எதிர்பார்க்கிறோம். விரைவிலே வந்ததும், அதற்குப்பிறகு அரசாங்கம் ஆராய்ந்து முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, தாய்மொழிப் பயிற்சிதான் இருக்க வேண்டுமென்று அண்ணல் காந்தியடிகள் மட்டும் அல்ல, இன்றிருக்கும் அரசியல் கட்சித் தலைவர்களும்கூட ஒரு கட்டத்திலே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் சில அரசியல்வாதிகள், சில தனிப்பட்ட கல்லூரியினுடைய உரிமையாளர்கள் எல்லாம் சேர்ந்து மாணவர்களைத் தூண்டிவிடும் முறையில் இந்த அரசாங்கத்தின் கொள்கையைத் திசை திருப்பிவிட்டிருக்கிறார்கள். இந்த அரசாங்கம் தெளிவாக தாய்மொழிப் பயிற்சியைப்பற்றியும், அதே நேரத்தில் ஆங்கிலத்திற்கு ஆபத்து இல்லை என்றும் சொல்லியிருக்கிறது. ஆனால் மாணவர்களைத் தூண்டிவிடுவதால் இப்படிப்பட்ட பிரச்னைகள் எழுகின்றன என்பதால் இதையெல்லாம் போக்குவதற்கு எல்லாக் கட்சித் தலைவர்களும் கூடி தெளிவு ஏற்படுத்தி அதற்குப் பிறகு அந்த அறிக்கையை நிபுணர் குழுவிற்கு விட முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் தவறான வழியில் திசை திருப்புகிற நிலையை உண்டாக்குவதாக இருக்குமானால் அது தவறு பயக்கும், கண்டிக்கப்படவேண்டியதாகும்.

பொதுவாக இந்த அரசு தன் கொள்கையை எடுத்துக் சொல்லியிருக்கிறது. இருமொழிக் கொள்கைதான் என்று இந்த அரசு 1968 ஜனவரி 23-ம் தேதி இந்தப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் தெளிவு படுத்தியிருக்கிறோம். ஆங்கிலம் தமிழ் இரண்டுக்கும் வாய்ப்பளிக்கக்கூடிய சூழ்நிலையில்தான் நாம் கொள்கைகளை வகுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், இறுதி முடிவாக 1927-28-ல் இருந்து பல்கலைக் கழகக் குழுக்கள் தொடர்ந்து சொல்லிக்கொண்டு வருவது, எல்லாப் பட்டமளிப்பு விழாக்களிலும் பேசுகிற பேறிஞர்கள் எல்லோரும் சொல்லிக்கொண்டு வருவது தமிழிலேயே எல்லாப் படிப்பும் இருக்கவேண்டும் என்ற கருத்தைச் சொல்லிவருகிறார்கள். ஆனால் எந்த ஆண்டிலிருந்து ஆரம்பிப்பது, எப்படி ஆரம்பிப்பது, எந்த வகையில் ஆரம்பிப்பது என்பதில்தான் பலரும் கருத்து வேறுபாடு கொண்டிருக்கிறார்கள்.

மெல்ல மெல்ல யாருக்கும் சங்கடம் ஏற்படாத வகையில் இரவு நீங்கி பகல் வருவதுபோல் மாற்றங்கள் ஏற்படவேண்டுமென்று மெல்ல, மெல்ல போய்க்கொண்டிருக்கிறது. எடுத்த எடுப்பிலேயே எல்லாப் பாடங்களையும் தமிழில் ஆக்கவேண்டுமென்று கூறவில்லை. வேறு பல மாநிலங்களில் ஆங்கிலத்தை அறவே நீக்கி விட்டு எம்.ஏ., எம்.எஸ்ஸி., வகுப்புகளில்கூட அவர்கள் தாய்மொழியில், இந்தியில் வைக்கக்கூடிய விதத்தில் பல்கலைக்கழகங்கள் அப்படிப்பட்ட நிலையை ஏற்படுத்தியிருக்கின்றன. வேறு பல பல்கலைக்கழகங்களில் பி.எஸ்ஸி., பி.ஏ., போன்றவற்றில் அப்படி தாய்மொழியில் வைக்கும் நிலைமை இருக்கிறது.

மும்மொழித் திட்டத்தை ஏற்றுக்கொண்டு ஒரு மொழித்திட்டம் இருக்கும் மாநிலங்களின் வரலாறுகள் கூட இருக்கின்றன. இம்மாநில அரசு இருமொழிக் கொள்கையைத் திட்டவட்டமாக கடைப்பிடித்திருப்பதால் 1-ம் வகுப்பிலிருந்து தமிழைக் கட்டாயமாக வைக்கவும் 3-ம் வகுப்பிலிருந்து ஆங்கிலத்தை கட்டாயமாக வைக்கக்கூடிய திட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவசரமாக எதையும் எடுக்கிற நிலையில் இல்லை. சில சங்கடங்கள் ஏற்பட்டன சென்ற ஆண்டு, மாணவர்கள், பெற்றோர்கள், மற்றவர்கள் மத்தியில். அந்தச் சங்கடங்களைப் போக்கத்தான் இந்தக் குழு அமைக்கப்பட்டது. அவர்கள் ஆராய்ந்து இடைக்கால கருத்தைத் தந்திருக்கிறார்கள். முழுக் கருத்தும் வந்ததற்குப் பிறகு அந்தச் சங்கடங்கள் நீங்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அரசு முழு அறிக்கையையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. திசை திருப்புகிற தன்மைக்கு காரணத்தினல் தவறான தன்மை, அல்லது இடமில்லை.

DR. H. V. HANDE: Sir, is it fair on the part of the Government to compare the seats allotted for the medical and science courses? The Hon. Minister has referred to psychology and there are two colleges where psychology is taught—S.I.E.T. College and the Presidency College. Is it proper on his part to say that a particular number of seats will be allotted to particular courses?

In view of the fact that in the Interim Report of the Committee freedom of choice is given to the students to choose the medium of instruction, will the Hon. Minister give us some assurance . . .

MR. SPEAKER : The question must be specific, short and brief. The hon. Member is trying to argue his point . . .

DR. H. V. HANDE : I was trying to make a correction in the statement of the Hon. Minister.

MR. SPEAKER : My point is that the question must be specific and definite.

DR. H. V. HANDE : Sir, I will expain my question. I will take your advice and my question will be brief.

MR. SPEAKER : Let the hon. Member put it in the form of a question and he should not discuss it like a debate. The hon. Member is an experienced legislator . . .

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, on a point of order. During Question Hour supplementaries should pertain to the main question and not to the policy of the Government which will be made known later.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு மட்டுமல்ல மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருக்கும் சொல்லிக் கொள்கிறேன், அமைச்சர் பெருமக்களுக்கும் நான் சொல்லிக்கொள்கிறேன். வினாக்கள்-விடைகள் என்பது, வினா நேரம் என்பது, அந்நேரத்தில் விவரங்களைக் கேட்பதற்கும், மேலும் அதைத் தெளிவுபடுத்திக்கொள்வதற்கும், நமக்குத் தெரியாத விவரங்களை அமைச்சர்களிடம் இருந்து பெறுவதற்கும்தான் வினா நேரம் பயன்படுத்தப்படுகிறது. இந்நிலையில் மாண்புமிகு பொதுநலத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் கொள்கைகள் பற்றிய பிரச்னைகளைப் பற்றி கேட்கவே கூடாது. நான் சிலவேளைகளில் சிறிது தாராளமாகவே அனுமதித்து விடுகிறேனே தவிர பாடமொழிக் கொள்கை என்னவென்று கேட்கக் கூடாது. அது நியாயம் அல்ல. ஜூன் மாதத்தில் எப்படி இருக்கும் என்று கேட்கலாமே தவிர எப்படி கொள்கை அமையும் என்று கேட்பது வேறு விவாத நேரத்தில் செய்யவேண்டியதாகும். கேள்வி ரூபத்தில் சுருக்கமாகக் கேட்க வேண்டும். அமைச்சர்களின் பதில்களும், அதற்கு அளவான பதில்களைத்தான் அவர்கள் சொல்வார்கள். கேள்வி நேரத்தை வேறு வகையில் விவாதமான விவாத நேரமாகப் பயன்படுத்தக் கூடாது. கேள்விகள் சுருக்கமாக அமைய வேண்டுமென்று உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்

DR. H. V. HANDE : Sir, is the Hon. Minister aware of the fact that in the Interim Report submitted by Dr. A. L. Mudaliar it has been clearly stated that we have to give freedom of choice in the matter of the medium of instruction. So, will he be able to tell us what exactly are the steps that the Government are going to take in the month of June to see that the Report is implemented in advance?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலேயே சொல்லியிருக்கிறேன். எப்படி அமைய வேண்டும் என்பது கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அந்தக் குழுவின் முழு அறிக்கையும் வந்த பிறகுதான் எப்படி நடைமுறைப்படுத்துவது என்பதற்கு அந்த முழு அறிக்கையையும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அது வந்த பிறகுதான் எப்படி அமையும் என்பதுபற்றி இந்த அரசு முடிவு எடுக்கும். அறிக்கையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்று முன்னாலேயே குறிப்பிட்டிருக்கிறேன்.

திருமதி. டி. என். அனந்தநாயகி : ஆங்கிலப் பயிற்சி மொழியை மாணவர்கள் விரும்பிக் கேட்கிறார்கள் என்ற காரணத்தினால் அவர்களுக்கு தமிழ் மீது பற்று குறைவு என்று கருதவேண்டாம். உலகத்தோடு போட்டி போடுவதற்குத்தான் கேட்கிறார்கள். அதை மனதில் கொண்டு ஆவனவற்றை இந்த அரசு செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, again on a point of order. No suggestion can be mooted out at the time of Question Hour.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : உலகத்தோடு தமிழர்கள் போட்டிபோட வேண்டும் என்பதற்காகத்தான் தமிழும், ஆங்கிலமும் வேண்டுமென்று சொல்கிறோம். இடையில் இந்தியும் தேவை இல்லை என்கிறோம். (ஆரவாரம்.)

திரு. மணலி சி. கந்தசாமி : இப்போது இப்படிப்பட்ட சிபார்சை அமலுக்குக் கொண்டுவருவதன் மூலம் கல்லூரிக்கு கல்லூரி இரு ஜாதி மாணவர்கள் உற்பத்தி செய்யப்பட்டு விடுகிறார்கள். ஆகவே, சில கல்லூரிகள் ஆங்கிலத்திற்கு என்றும் சில கல்லூரிகள் தமிழுக்கு என்றும் ஏன் வகுக்கக் கூடாது என்றுகேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்நிலை இருந்த காரணத்தினால் தான் இவ்வளவு சங்கடங்கள் வருகின்றன. ஆகவேதான் இந்தக் குழுவை அமைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அந்தக் குழு தமிழ் மட்டும் இருக்கிற கல்லூரிகளில் ஆங்கிலத்திற்கு இடங்கள் ஒதுக்கப்பட வேண்டுமென்றும் ஆங்கிலம் மட்டும் இருக்கக்கூடிய கல்லூரிகளில் தமிழ் பயில விரும்புகிறவர்களுக்கு தமிழ் பிரிவுகள் ஏற்படுத்தவேண்டுமென்றும் அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். முழு அறிக்கையும் கிடைத்ததற்குப் பிறகு நாம் நடவடிக்கைகள் எடுக்கவேண்டியவர்களாக இருக்கிறோம்.

திரு. கே. என். குமாரசாமி : கல்வி அறிவு பெறுவதற்கு மாணவர்களுக்கு காலேஜ்களில் இடம் இல்லாத காரணத்தினால் அவர்கள் திறமை பாதிக்கப்படுகிறது. அவர்கள் கல்வி அறிவு பெற முடியாததால் அவர்கள் திறமை பாதிக்கப்படுகிறது. அதனால் நம் சமுதாயத்திற்கு பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது. இதைப்போக்குவதற்கு அரசு என்ன வழிவகைகள் எடுத்துக்கொண்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை என்றாலும் மெல்ல மெல்ல புதுப் புதுக் கல்லூரிகளில் ஏற்படுத்துகிற நிலையை, கல்லூரிகளில் இடங்களை மேலும் மேலும் விரிவுபடுத்துகிற நிலையை வளர்த்துக் கொண்டுவருகிறோம்.

அது தவிர படித்துவிட்டு ஓரளவு முடியாமல் மேலும் தங்கள் படிப்பை வளர்த்துக்கொள்ள விரும்புகிறவர்களுக்கு மாலை நேரக் கல்லூரிகள் வைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அப்படி பல இடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. சென்னை பல்கலைக்கழக துணை வேந்தர் அவர்கள் மேலும் பல கல்லூரிகளில் அதை விரிவுபடுத்துகிற முயற்சியினை மேற்கொண்டிருக்கிறார்கள். இளநிலை, முதுநிலை வகுப்புகளைக் கொண்ட மாலை நேரக் கல்லூரிகளைத் திறப்பதற்காக சென்னை பல்கலைக்கழகம் முயற்சி எடுத்திருக்கிறது.

இது தவிர மதுரை பல்கலைக்கழகத்தில்கூட 'கரஸ்பாண்டன்ஸ் கோர்ஸ்', கடிதப் போக்குவரத்து மூலம் கல்வி பயில்விக்கிற முயற்சியை அடுத்த ஆண்டிலிருந்து துவங்க அப்பல்லைக்கழகம் முயன்றிருக்கிறது. டெல்லி பல்கலைக் கழகம் போன்ற வேறு பல்கலைக்கழகங்கள் கடிதப் போக்குவரத்து மூலம் கல்வி கற்றுக்கொடுக்கிற முறையை மேற்கொண்டிருக்கின்றன. நம் மாநிலத்தில் உள்ள பல்கலைக்கழகங்களில் அப்படிப்பட்டதொரு முறை இல்லாதிருக்கிறது. இப்போது மதுரை பல்கலைக்கழகத்தில் அதற்கான திட்டத்தை தீட்டியிருக்கிறார்கள். வரும் கல்வி ஆண்டிலிருந்து அதற்கான முயற்சிகளை செய்வதாக அப்பல்கலைக்கழகத்தினர் கூறியிருக்கிறார்கள். இந்த முயற்சியை மேலும் மேலும் வளர்க்கவேண்டியவர்களாக இருக்கிறோம்.

வேறு பல இடங்களில், நெருக்கடி இருக்கிற இடங்களில் ஷிப்ட் சிஸ்டம் முறைப்படி இருக்கிற இடவசதி, கட்டட வசதி, இருக்கிற மேஜை நாற்காலிகளைக்கொண்டு, அங்குள்ளதைப் பயன்படுத்திக்கொண்டு தேவைப்படுகிற ஒரு ஆசிரியர்களை மட்டும் நியமித்துக்கொண்டு ஷிப்ட் முறை வைத்து ணவர்களின் எண்ணிக்கையை அதிகமாக்குகிற வகையில், படிக்கிறவர்ளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையில் அத்தகைய முயற்சியை டுக்கலாம் என்பதை அரசு அவ்வப்போது கருத்தளவில் எடுத்துத் தெரிவித்திருக்கிறது. அதற்கான முயற்சிகளைச் செய்ய முன்வருகிற கல்லூரிகளுக்கு அதற்கான வசதிகளைச் செய்ய அரசு ஆயுத்தமாக இருக்கிறது. இந்த வகையில் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு பல முயற்சிகளில் அரசு ஈடுபட்டு வருகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, பயிற்சி மொழிக் குழுவின் பரிந்துரைகளை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டு இருக்கிறது என்ற சூழ்நிலையில், முதலமைச்சர் அவர்கள் சட்ட மன்றத்தில் அன்று கூறினார்களே ஒரு கருத்து, அதாவது தமிழ் படிக்காதவர்கள் தண்டிக்கப் படுவார்கள் என்ற கருத்து, அது கைவிடப்பட்டு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, தமிழ் படிக்காதவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று அவர்கள் சொல்லவில்லை. ஒரு 10-15 ஆண்டுகளுக்குப் பிறகு அப்படிப்பட்ட நிலை வரலாம் என்று சொன்னார்கள் இப்படிப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் அந்த மாதிரி நிலை வராமல் போகலாம். வரவேண்டிய அவசியம் ஏற்பட்டால் வந்தாலும் வரலாம். 10-15 ஆண்டுகளுக்குப் பிறகு மக்களுடைய மொழி உணர்ச்சியின் அடிப்படையில் அது வரும். தமிழ் படிக்காதவர்கள் தண்டிக்கப் படுவார்கள் என்று அவர்கள் சொல்லவில்லை. இதைப் பல தடவை இந்த மன்றத்திலும் அறிக்கையின் மூலமும் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. நா. வீராசாமி: பாயிண்ட் ஆப் ஆர்டர், தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்தப் பேரவையில் சொல்லாத ஒரு வார்த்தையைச் சொல்லியதாகக் கூறி கேள்வி கேட்கவேண்டியது அவசியம்தானா, சொல்லாத ஒன்றிற்கு நோக்கம் கற்பிப்பது முறைதானா என்று அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லாததைச் சொல்லியதாகக் கூறக் கூடாது. அதைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே அது இரண்டுமே முடிந்து விட்டது.

திரு. இரா. மாணிக்கவாசகம்: பேரவைத் தலைவரவர்களே, இந்த எதிர்க் கட்சிக் காங்கிரஸ்காரர்கள் மொழிக் கொள்கை; தாய் மொழியைப் பாட மொழியாக்க வேண்டுமென்று விரும்புகிறார்களா அல்லது இல்லையா என்று இந்த அவைக்குத் தெரிவித்து இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER: I am not alowing that question.

திரு. ஏ. எம். இராஜா: தலைவரவர்களே, இன்று பல்கலைக்கழகத்தில் தமிழைப் பாடமொழியாகக் கொண்டு படித்த மாணவர்களுக்கு வேலை கிடைக்காமலும், மத்திய சர்வீஸ் கமிஷனிலே அவர்கள் ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ்., போன்ற தேர்வுகள் எழுதுவதற்கும் சங்கடங்கள் இருக்கின்றன, அந்தச் சங்கடத்தைப் போக்குகிற வகையில், யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷனிலும் நடத்தப்படுகிற தேர்வுகள் தமிழில் நடத்துவதற்கு மத்திய அரசை வற்புறுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இந்திய அரசாங்கத்தின் பப்ளிக் சர்வீஸ் கமிஷனிலும் மாநில வட்டார மொழிகளில் தேர்வுகள் நடத்தித் தரவேண்டுமென்பதைக் கொள்கை அளவில் ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள், என்றாலும் பொதுவாக அதை நடைமுறைக்குக் கொண்டுவரத் திட்டங்கள் இன்னும் தீட்டப்படவில்லை. தமிழ் பாடமொழியாக எடுத்துக் கொண்டு படித்தவர்களுக்கு ஆங்கில அறிவே இல்லை என்று அர்த்தமல்ல. தமிழ் படித்தவர்களும் ஆங்கிலத்தில் அறிவு பெற்றுத்தான் ஆகவேண்டும். ஆகவே, தமிழில் படித்தவர்களும் ஆங்கிலத்தில் தேர்வு எழுத முடியும். யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வுகளை எல்லா மாநில மொழிகளிலும் நடத்துவதற்குக் கொள்கை அளவில் ஒப்புக்கொண்டிருக்கிறது, விரைவில் நடைமுறைக்குக் கொண்டு வரும் என்பதைத்தான் அவ்வப்போது அவர்கள் வினாக்களுக்கு விடை அளிக்கும்போது சொல்கிறார்கள்.

திரு. செ. கந்தப்பன்: பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தில் தமிழை நிர்வாக மொழியாக எல்லாத் துறைகளிலும் நடத்தவேண்டுமென்ற கொள்கை எல்லாத் தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டு இருக்கிறது. எதிர் காலத்தில் தமிழைப் பயிற்சி மொழியாகப் பயில்வது தவிர்க்கமுடியாதது என்பதை தெளிவுபடுத்த முடியுமா? தமிழ் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு இருக்கிறது என்பது மாணவர்களுக்குத் தெளிவு படுத்தப்படுமா? மேலும், ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாகக் கொள்ளாத சோவியத் ரஷ்ய விஞ்ஞானிகள், ஜெர்மன் நாட்டு விஞ்ஞானிகள் நல்ல விதத்தில் இந்த நாட்டில் வேலையில் இருக்கிறார்கள். அதனுடைய மர்மம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தமிழைப் பாட மொழியாகச் செம்மைப்படுத்துவதற்கு அரசு எல்லா வகையிலும் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது. யாரும் ஆங்கிலம் எடுத்துப்படித்தால்தான் வேலை, தமிழ் படித்தால் வேலையில்லை என்று பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. அத்தனை பேருக்கும் வேலை கொடுக்கிற அளவுக்கு, அத்தனை பேருக்கும் வாய்ப்பு தருவதற்கு, அத்தனை பேரையும் வாழ வைப்பதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கிறது. மற்ற நாடுகளின் நிலை பற்றி இங்கே விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை.

திரு. முனு. ஆதி: தலைவரவர்களே, டாக்டர் லட்சுமணசாமி முதலியார் அவர்களுடைய அறிக்கையை இந்த மன்றத்தில் வைத்து, அதை நாங்கள் அறிய வாய்ப்புக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: முழு அறிக்கையும் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டு இருக்கிறது. நான் சொல்ன 3 கருத்துக்கள்தான் அந்த அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அது ஏற்கெனவே வைக்கப்பட்டு இருக்கிறது.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, தமிழ் பயின்ற மாணவர்களுக்கு வேலை கிடைக்காது என்ற தவறான பிரசாரம் எதிர்க்கட்சிக்காரர்களால் செய்யப்படுகிறது என்பது இந்த அரசுக்குத் தெரியுமா? அப்படியானால் அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறபோதே தவறான கருத்து பரப்பப்படுகிறது என்று சொன்னார்கள். அவருடைய கேள்வியிலேயே பதில் இருக்கிறது. தவறான முறையில்தான் அந்தக் கருத்து பரப்பப்பட்டு வருகிறது.

திரு. எஸ். ஆறுமுகம்: தலைவரவர்களே, பயிற்சி மொழி குறித்துப் பரிசிலனை செய்த, லட்மணசுவாமி முதலியார் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. பயிற்சி மொழியாகத் தமிழ் வேண்டும் என்று அரசு முடிவு செய்ததற்குச் சில மேட்டுக் குடியினரும், சிண்டிகேட் கட்சித் தலைவர்களும் (குறுக்கீடு) தேர்தலுக்கு முன்பு தமிழ் பயிற்சி மொழியாவதை எதிர்த்தார்களே, இந்தத் தேர்தலுக்குப் பின்னாலே தமிழ் பயிற்சி மொழி கூடாது என்று நாங்கள் எதிர்த்தது தமிழ்த் துரோகம் என்று உணர்ந்து இருப்பதாகத் தகவல் அரசுக்குத் தெரியுமா?

திருமதி டி. என். அனந்தநாயகி: சார். தமிழ் பயிற்சி மொழியாகக் கூடாது என்றோ, தமிழுக்குத் துரோகம் என்றோ நாங்கள் சொல்லவில்லை. ஆனால் இரண்டு பயிற்சி மொழியும் தேவை என்று சொன்னோம்.

MR. SPFAKER: Is the hon. Member putting a question or replying?

THIRU S. KANDAPPAN: The hon. Lady Member can reply f she became a Minister.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெளவிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 41 (3)ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத்தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 244-வது விதியின் கீழ் 41-வது விதி பிரிவு (3)-ன்படி ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்வரக் கூடாது என்ற விதியைத் தளர்த்த வேண்டுமென்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒரு மனதாக நிறைவேற்றப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் ஆர். பொன்னப்பநாடார், சுவாமிதாஸ், கே. டி. கே. தங்கமணி ஆகியோர் ஒரு அவசரப்போது முக்கியத்துவம் வாய்ந்த காரியத்தை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறார்கள். முதலாவதாக திரு. ஆர் பொன்னப்ப நாடார்.

(3) கவன ஈர்ப்பு

(அ) திருவாங்கூர்—கொச்சியிலிருந்து மாற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் நடத்த இருக்கும் உண்ணா விரதம் குறித்து.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I call the attention of the Hon. Minister for Education and Revenue to a matter of urgent pubic importance, namely, the proposed agitation of hunger-strike to be commenced on 1st April 1971 before the Kanyakumari Collectorate by the Travancore–Cochin transferred graduate teachers for their legitimate demands which they have been pressing for their redressal consequent on the decision of the Honourable High Court of Judicature, Madras.

திரு. எ. சுவாமிதாஸ்: சென்னை உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்பைத் தொடர்ந்து, தங்களது சட்டபூர்வமான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென, திருவாங்கூர்-கொச்சியிலிருந்து மாற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களால் 1—4—1971 அன்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திற்கு முன்பாகத் தொடங்கப்படவிருக்கின்ற உண்ணாவிரதப் போராட்டம் பற்றிய அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த காரியத்தை மாண்புமிகு கல்வி வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THIRU K. T. K. THANGAMANI: Sir, I wish to call the attention of the Hon. Minister to a matter of urgent public inportance, namely, the proposed agitation of hunger-strike to be commenced on 1st April 1971 before the Kanyakumari Collectorate by the Travancore–Cochin transferred teachers for their legitimate demands which they have been pressing for their redressal consequent on the decision of the Honourable High Court of Judicature, Madras.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, முன்னால் திருவாங்கூர்-கொச்சி மாநிலத்திலிருந்து நம் மாநிலத்திற்கு வந்துள்ள இரண்டாம் நிலை பட்டதாரி ஆசிரியர்கள் முதல் நிலைக்குப் பதவி உயர்வு பெறுவதற்கு முன்பு தமிழ்நாடு கல்வித் துறையின் விதிகளுக்கிணங்க துணை ஆய்வாளர் தேர்வு, கணக்குத் தேர்வு போன்ற துறைத் தேர்வுகளில் தேற வேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பித்திருந்தது. இந்த உத்தரவை எதிர்த்து ஆசிரியர்கள் சிலர் உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்த 'ரிட்' மனுவின் பேரில், இந்த உத்தரவு செல்லாது என்று உயர்நீதி மன்றம் ஆணையிட்டுள்ளது.

இத்தீர்ப்பை நிறைவேற்றுவதில் சில சிக்கல்கள் எழுந்துள்ளதன் காரணமாக இந்த 'ரிட்' மனுவின் தீர்ப்பின் பேரில் மறு ஆய்வு மனு ஒன்றை அரசு உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. இது உயர் நீதி மன்றத்தின் விசாரணையில் உள்ளது.

இதற்கிடையில் உயர் நீதி மன்றம் அளித்த தீர்ப்பை உடனடியாகச் செயல்படுத்த அரசு பள்ளிக் கல்வி இயக்குநருக்கு ஆணையிட்டுள்ளது. திருவாங்கூர்-கொச்சி மாநிலத்திலிருந்து வந்த ஆசிரியர்கள் நம் மாநில விதி முறைகளின் கீழ் விதிக்கப்பட்டுள்ள தேர்வுகளை எழுதவேண்டாமென்ற அடிப்படையில் உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பைச் செயல்படுத்தி அவர்கள் பதவிக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு, பணி முது நிலையை(Seniority) நிர்ணயிக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அந்த உத்தரவிற்கிணங்க பள்ளிக் கல்வி இயக்குநர் ஒவ்வொருவருடைய பணி முது நிலையை நிர்ணயித்து, ஆசிரியர்களுக்குத் தனித்தனியாக அறிவித்துள்ளார். ஆகவே, ஆசிரியர்களின் கோரிக்கையில் ஒன்று ஏற்கெனவே ஏற்றுக்கொள்ளப் பட்டுவிட்டது.

இந்தத் திருத்தப்பட்ட பணி முது நிலையின் அடிப்படையிலே அவர்களுக்கு உயர் பதவியும், சம்பளமும் அளிப்பதில் சில நிர்வாகச் சிக்கல்கள் எழுந்துள்ளன. அவர்களை உயர் பதவிக்கு உயர்த்துவதால், ஏற்கனவே முன்பிருந்த முறைப்படி உயர் பதவியில் அமர்த்தப்பட்ட ஆசிரியர்கள் பாதிக்கப்படலாம். அவ்வாறு அவர்களுக்கும் பாதகம் இல்லாத வகையில், புதிதாகப் பதவி அளிக்கப்படவேண்டிய ஆசிரியர்களுக்கும், பதவியை அளிப்பதற்கான செயல் குறிப்பு ஒன்று அரசின் தீவிரக் கவனத்திலுள்ளது. இது குறித்து வெகு விரைவில் அரசின் உத்தரவு வெளியாகும்.

புதிய ஊதிய ஆணைக் குழு பரிந்துரை செய்துள்ள புதிய சம்பள விகிதங்களை ஏற்றுக்கொள்வதைக் குறித்து, ஆசிரியர்கள் உடனடியாகத் தங்களுடைய விருப்பத்தைத் தெரிவிக்கவேண்டியிருந்தது. பணி முது நிலை தெளிவாக இல்லாத காரணத்தினால் இவ்வாறு தங்கள் விருப்பத்தை முடிவு செய்யும் நிலையில் தாங்கள் இல்லை என்று ஆசிரியர்கள் கருதிய காரணத்தால். முடிவு செய்வதற்கு அவர்களுக்கு மேலும் கால அவகாசம் தரவும் அரசு உத்தரவிடக் கருதியுள்ளது.

முன்னால் திருவாங்கூர்-கொச்சி மாநிலத்திலிருந்து நம் மாநிலத்திற்கு வந்துள்ள ஆசிரியர்களின் நல உரிமைகளுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாத வண்ணம் இப்பிரச்னைக்கு அரசு தீர்வு காணும் என்று நான் உறுதி

கூற விரும்புகிறேன். ஆகவே, ஆசிரியர்கள் இது குறித்து எவ்வித சஞ்சலமோ, அச்சமோ கொள்ளத் தேவையில்லை. அவர்கள் கோரிக்கைகளை அரசு அனுதா பத்துடன் கவனிக்கும் என்பதால் அவர்கள் கிளர்ச்சியில் ஈடுபடுவது அவசியம் இல்லை என்பதுடன் நியாயமாகாதென்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசு ஏற்கெனவே அளித்துள்ள வாக்குறுதிகளை ஏற்று ஏப்ரல் முதல் தேதி யிலிருந்து அவர்கள் மேற்கொள்ளவிருந்த கிளர்ச்சியை நிறுத்திவிட்டதாக, ஆசிரியர்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவித்துள்ளனர் என்று எனக்குத் தகவல் கிடைத்துள்ளது. ஆசிரியர்களின் பொறுப்புணர்வை நான் பாராட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கத்திற்கு மட்டும் ஒரு கேள்வி கேட்கலாம். விவாதத்தை எழுப்பக்கூடாது. அது தான் விதிமுறை.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த உத்தரவின் காரணமாகப் பாதிக்கப் பட்டவர்கள் 80 ஆசிரியர்கள். அவர்களில் 40 பேர்களுக்கு ஹைகோர்ட் 1968-ம் வருஷத்தில் ஆதரவாக முடிவு கொடுத்திருக்கிறார்கள். இன்று அர சாங்கத்தினுடைய உத்தரவு அவர்கள் சீனியர்களாக வருவார்கள் என்று சொல்வதோடு மாத்திரம் அல்லாமல், எந்தத் தேதி முதற்கொண்டு வருவார் கள் என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றி என்னிடம் குறிப்பு இல்லை. அந்தப் பிரச்னைகளையெல்லாம் இப்பொழுது தீவிரமாக ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாத வகையிலே இந்தப் பிரச்னைக்கு தீர்வு காணவேண்டும் என்று பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொண்டிருக்கிறார். விரைவிலே உத்தரவு வெளியிடப்படும். விரைவிலே ஆராயப்படவேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

(ஆ) இராஜபாளையம் சண்முகர் ஆலை மூடப்பட்டதும், தொழிலாளர் அவதியும், ஆலையைத் திறப்பதன் அவசியமும் குறித்து.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, சட்டப்பேரவையின் விதிகளின் 41-வது விதியின் கீழ்

"இராஜபாளையம் சண்முகர் மில்ஸ் 18—7—1970 முதல் மூடப்பட்டு அங்கு வேலை செய்த தொழிலாளர்கள் வேலையிழந்து, அவர்கள் குடும்பங்கள் அவதிக் குள்ளாவதால் மேற்படி மில்லைத் திறக்க வேண்டியது பற்றிய" அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. THIRU S. MADHAVAN: Sir, Sree Shanmugar Mills, Rajapalayam is under closure with effect from 18th July 1970. Financial difficulties and labour troubles are stated to be the reasons for the closure. Even though the licensed capacity of the Mills is 13,200 spindles, the installed capacity is 10,156 spindles only.

The concerned officers discussed the case with the management and tried to persuade the management to revive the mill. But the management is not prepared to reopen the Mills on the ground that the loss sustained during the last 6 years since the

time they took the Mills on lease in 1964, is as high as Rs. 15 lakhs, and that they are not in a position to pay even their Employees' State Insurance/Employees' Provident Fund contributions and electricity consumption charges. As there was no prospect of the Mills being reopened by the present management and as the workmen numbering nearly 400 have been thrown out of employment, this Government requested the Government of India to investigate into the affairs of the mill under the Industries (Development and Regulations) Act. The Government of India have constituted a committee under the Industries (Development and Regulations) Act in January 1971 and the report of the Committee is awaited.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, இறுதியான முடிவு வரும் வரை வேலை இழந்த தொழிலாளர்களுக்கு பிராவிடன்டு பண்டு நிதியிலிருந்து ரூ. 500 ஏற்கனவே முதல் தவணையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது தவணையாகத் தொகை கொடுப்பதற்கு அவர்களுடைய பண்டில் நிதி இல்லாத காரணத்தால் எம்ப்ளாயர்ஸ் பண்டிலிருந்து ரூ. 500 போட்டுக் கொடுக்க வேண்டும் என்று ஏற்கனவே சொல்லி அரசுக்கு விண்ணப்பம் அனுப்பியிருக்கிறார்கள். அந்த விண்ணப்பத்தின் பேரில் துரிதமான நடவடிக்கையை அரசு மேற்கொண்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது மத்திய அரசாங்கத்தினுடைய அதுவலில் வருகிறது. இதுபற்றி ஈ.பி.எஃப்., கமிஷனரைக் கேட்க வேண்டியது. இந்த அரசுக்கு அதுபற்றித் தெரிவிக்கப்பட்டால், நாம் அதுபற்றிக் கேட்கலாம்.

(இ) கோவை முருகன் ஆலை மூடப்பட்டதும், தொழிலாளர் துயர நிலையும் குறித்து.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, சட்டப்பேரவை விதிகளின் 41-வது விதியின் கீழ்—

"கோவை முருகன் மில் நீண்ட காலமாக மூடிக்கிடந்து, திறந்து சில நாட்கள் ஓடிய பின்னுல் மீண்டும் மூடப்பட்டு விட்டபடியால் அதில் பணியாற்றுகின்ற பல்லாயிரக்கணக்கான தொழிலாளர் குடும்பங்கள் தாங்கமுடியாத துயர நிலையில் உள்ளனர்" என்ற அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. இரா. மாணிக்கவாசகம் : தலைவர் அவர்களே, சட்டப்பேரவை விதிகளின் 41-வது விதியின் கீழ்—

"கோவை முருகன் மில் நீண்ட காலமாக மூடிக்கிடந்து, திறந்து சில நாட்கள் ஓடிய பின்னுல் மீண்டும் மூடப்பட்டுவிட்டபடியால் அதில் பணியாற்றுகின்ற பல்லாயிரக்கணக்கான தொழிலாளர் குடும்பங்கள் தாங்கமுடியாத துயர நிலையில் உள்ளனர்" என்ற அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I place the following statement :—

The Coimbatore Murugan Mills Limited, Coimbatore which availed itself of a loan of Rs. 9.40 lakhs from Tanjore Permanent Bank on Government guarantee, after working for a short period remained closed from 1st May 1968 to 30th October 1970. The mills resumed work on 1st November 1970 but again remains closed with effect from February 10th.

At the instance of this Government the Government of India which investigated into the affairs of this mill, under the Industries (Development and Regulation) Act, recommended the taking over of this mill and this Government accepted the recommendation of the Committee and requested the Government of India to issue orders appointing the Tamil Nadu Textile Corporation Limited as Authorised Controller in respect of this mill.

The Government of India issued orders in December 1970 regarding the take over of this mill and appointed the Tamilnadu Textile Corporation as its Authorised Controller for a period of five years. The question of taking over of this mill in pursuance of the notification of the Government of India was held up as the management had reported that they themselves are now running the mills. Since the mill remain closed now this Government has decided to take over the management of the mill without any delay.

(ஈ) மண்டபத்திலுள்ள மீன் வள ஆராய்ச்சி நிலையத் தலைமை அலுவலகம் வேறு மாநிலத்திற்கு மாற்றப்படுவது குறித்து.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, ' சட்டப்பேரவையின் விதிகளின் 41-வது விதியின் கீழ்—

"இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்திலுள்ள மீன் வள ஆராய்ச்சி நிலையத் தலைமை அலுவலகம் வேறு மாநிலத்திற்கு மாற்றப்படுவதால் மிகவும் பின்தங்கிய மாவட்டமான இப்பகுதியின் வளர்ச்சிக்கு ஊறு விளையும் நிலையில் அரசு மேற்கொள்ளவேண்டிய உடனடி நடவடிக்கை பற்றிய" அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, "இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்திலுள்ள மீன் வள ஆராய்ச்சி நிலையத் தலைமை அலுவலகம் வேறு மாநிலத்துக்கு மாற்றப்படுவதால் மிகவும் பின்தங்கிய மாவட்டமான இப்பகுதியின் வளர்ச்சிக்கு ஊறு விளையும் நிலையில் அரசு மேற்கொள்ள வேண்டிய உடனடி நடவடிக்கை பற்றிய" அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மத்திய கடல் மீனள ஆராய்ச்சி நிலையத்தின் தலைமையிடத்தை மண்டபத்திலிருந்து கொச்சிக்கு மாற்ற இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் செய்த முடிவை, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது நாட்ட ஈர்ப்பு அறிவிப்புகளில் குறிப்பிட்டுள்ளனர்.

மண்டபத்திலுள்ள மீன்வள ஆராய்ச்சி நிலையத் தலைமை அலுவலகம் வேறு மாநிலத்திற்கு மாற்றப்படுவது குறித்து

[டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து] [1971 ஏப்ரல்

எந்தச் சூழ்நிலைகளில் மண்டபத்திலுள்ள கடல் மீனள ஆராய்ச் நிலையத்தைக் கொச்சிக்கு மாற்றக் கருதப்பட்டது, அச்செயற் குறிப்பு தொட கத்தில் எவ்வாறு உருவாக்கப்பட்டது, அதன் பிறநிலைகள் யாவை என்பதுபற்றி நான் கூற விழைகிறேன்.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள மத்தியக் கடல் மீனள ஆராய்ச்சி நிலையத்தின் தலைமையிடம் மண்டபம், சென்னை, தூத்துக்குடி, எர்ணாகுளம், கோழிக்கோடு, பம்பாய், கார்வார், மங்களூர், விழிஞ்ஞம், வேராவல், காக்கிநாடா, பிளயர் துறைமுகம் ஆகிய இடங்களில் அதன் துணை நிலையப் பிரிவுகள் உள்ளன. இந்த ஆராய்ச்சி நிலையத்தின் தலைமையிடம் 1949-ல் மண்டபத்தில் நிறுவப்பட்டது. இந்த நிலையத்தின் தலைமையிடமாகயிருந்த மண்டபம் தகுதி வாய்ந்த இடமல்ல என்று இந்த நிலைய இயக்குநர் 1965-ல் முறையீடு செய்ததாகத் தெரிகிறது. 1967-68-ல் மக்கள் சபையின் மதிப்பீட்டுக் குழுவினர் மண்டபத்துக்கு வருகை தந்தபோது அவர்களிடம் நிலைய அதிகாரிகள் சில முறையீடுகளைச் செய்த தாகத் தெரிகிறது. இந்த நிலையத்தின் தலைமையிடமாயிருக்க மண்டபம் தகுதி வாய்ந்த இடமல்ல என்று அவர்கள் முறையிட்டிருந்தனர். அதற்கிணங்க மதிப்பீட்டுக் குழு, தனது 36-வது அறிக்கையில் இந்த நிலையத்தின் தலைமை யிடம் கொச்சி, சென்னை அல்லது தூத்துக்குடி போன்ற மேலும் தகுதிவாய்ந்த ஓர் இடத்திற்கு மாற்றப்பட வேண்டுமென்று பரிவுரை செய்தது.

அதன் மேல், இது குறித்து ஆய்வு நடத்த இந்திய அரசு குழு ஒன்றை அமைத்தது. தமிழ்நாடு மீனளத்துறை இயக்குநரும் மேற்படி குழு உறுப் பினர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டார். குழு நான்கு முறை கூட்டம் நடத்தியது. மேலும் சென்னைக்கும், கொச்சிக்கும் சென்று பார்வையிட்டது. புதுடில்லியில் 5—11—1969-ல் நடந்த இறுதிக் கூட்டத்தில், மத்தியக் கடல் மீனள ஆராய்ச்சி நிலையத்தின் தலைமையிடம் மண்டபத்திலிருந்து கொச்சிக்கு மாற்றப்படவேண்டுமென்று பெரும்பான்மையாகக் குழு பரிந்துரைத்தது. தமிழ்நாடு மீனளத்துறை இயக்குநர் மட்டும் கருத்து வேறுபாடு தெரிவித்தார். குழு கீழ்க்கண்டவைகளையொட்டிப் பல்வேறு இடங்களின் தகுதிகளையும் தகவின்மைகளையும் நுண்ணிய முறையில் மதிப்பீடு செய்தது: (1) கட்டடங் களைக் கட்டுவதற்கான அவசரத் தேவை (2) தகுந்த நிலம் கிடைப்பது (3) மீனள ஆதாரங்கள் மற்றும் மீன்பிடிக்கும் தொழில் நிலை (4) துணை நிலையங் களின் வேலையை மேற்பார்வையிடுவதற்கான வசதிகள் (5) துறைமுக வசதிகள் (6) மீனள ஆராய்ச்சி—மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபட்டுள்ள பிற நிறுவனங் களுடன் இணைந்து செயல்படுதல்—ஆழ்கடல் மீன்பிடி நிலையம், கடல் அமைப் பியல் குறித்த தேசிய நிறுவனம், இந்திய-நார்வே திட்டம், ஐ.என்.பி., மீனளப் பணிகள் நிலையம் போன்ற நிறுவனங்களுடன் அவ்வாறு இணைந்து செயல் படுதல் (7) நிதி வாயில்களைப் பேரளவு பயன்பெறுவதற்குப் பயன்படுத்தல் (8) கால அளவுத் தொடர்பான கூறுகள். இவ்வாறு நுணுக்கமாகப் பரிசீலனை செய்ததன் விளைவாகக் கீழ்க்கண்ட காரணங்களை முன்னிட்டு இந்த ஆராய்ச்சி நிலையத்தின் தலைமையிடத்தை நிறுவ கொச்சி ஐயத்திற்கிடமின்றி சாலச் சிறந்த இடமாகும் என்று குழு முடிவு செய்தது.

கொச்சியில் போதிய நிலம் ஏற்கெனவே கிடைக்கிறது. அப்பகுதி மீனளச் செல்வம் நிறைந்ததாகவும் உள்ளது. அங்கு நல்ல துறைமுக வசதிகள் உள்ளன. மத்திய மீனளத் தொழில் நுட்பநிலையம் மத்திய மீனளப் ப

1971 ஏப்ரல் 3] [டாக்டர் (திருமதி) சத்தியவாணி முத்து]

நிறுவனம் தேசியக் கடல் அமைப்பியல் நிறுவனத்தைச் சேர்ந்த கடல் உயிரியல் பிரிவு, இந்திய-நார்வே திட்டம், ஆழ்கடல் மீன்பிடி நிலையம் கேரளப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கடல் அமைப்பியல் ஆய்வுக் கூடம் ஆகியவையும் அங்கே உள்ளன. உறுதியான நிலையில் அமைந்ததும் வளர்ச்சி அடைந்து வருவது மான மீன் ஏற்றுமதித் தொழில் அங்கு நடந்து வருகிறது. மத்தியக் கடல் மீனள ஆராய்ச்சி நிலையத்தின் மிக முக்கியத் துணை நிலையம் ஏற்கெனவே கொச்சியில் அமைந்துள்ளது. இக்காரணங்களால், இந்த நிலையத்தின் தலைமையிடத்தை அமைக்கக் கொச்சி மிகவும் தகுந்த இடமாகும் என்று குழு கருதியது.

தமிழ்நாடு மீனளத் துறை இயக்குநர், தனது கருத்து வேறுபாட்டுக் குறிப்பில் இந்தக் கருத்துக்களைப் பற்றிக் குறிப்பிட்டு, அத்தகைய வசதிகள் எவ்வாறு மண்டபத்திலுள்ள தற்போதைய ஆராய்ச்சி நிலையத்திலேயே கிடைக் கின்றன என்பதைச் சுட்டிக் காட்டினார். மண்டபத்தில் இடவசதி, மற்றும் பணியாளர்கள் போன்ற நவீன வசதிகள் மிகக் குறைவாக உள்ளதே, ஆராய்ச்சி நிலையத்தின் தலைமையிடத்தை மாற்ற கருத்துத் தெரிவிப்பதற்கு முக்கியக் காரணமாகுமென்று தெரிய வந்தது. எனவே, தமிழ்நாடு அரசின் பிரதிநிதியாகிய மாநில மீனளத்துறை இயக்குநர் இந்த நிலையத்தை தலைமை யிடம் அவசியமானால் சென்னைக்கு மாற்றப்படலாமென்றும் அங்கே எல்லா வசதிகளும் கிடைக்கின்றனவென்றும் கருத்துத் தெரிவித்தார். மேலும், சென்னையில் தேவையான நிலங்களைத் தமிழ்நாடு அரசு இலவசமாக வழங்கு மென்றும் அவர் உறுதி கூறினார்.

குழுவின் பரிவுரைக்கு எதிராகத் தமிழ்நாடு அரசு இந்திய அரசுக்கு உறுதி யான எதிர்ப்பைத் தெரிவித்தது. முன்னாள் உணவு-வேளாண்மை மத்திய அமைச்சராயிருந்த திரு. ஜெகஜீவன்ராம் அவர்களுக்கும், உணவு-வேளாண்மை இராசாங்க அமைச்சராய் இருந்த திரு. அண்ணா சாகிப் பி. ஷிண்டே அவர் களுக்கும் நேர்முகக் கடிதங்கள் எழுதப்பட்டன. நானும் மின்சாரத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் அவர்களும், திரு. ஷிண்டே அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினோம். மத்திய இராசாங்க அமைச்சர் கீழ்க்கண்டவாறு உறுதியளித்தார் :

மண்டபம் ஆராய்ச்சி நிலையத்தின் வேலையோ அல்லது முக்கியத்துவமோ குறைந்து விடாது. எந்தத் தளவாடங்களும் மண்டபத்திலிருந்து கொச்சிக்கு மாற்றப்படமாட்டாது. பணியாளர்கள் எவரும் குறைக்கப் படமாட்டார்கள். நிலைய இயக்குநரும் சுமார் 4 எழுத்தர்கள் (உதவியாளர்கள்) மட்டுமே மாற்றப்படுவார்கள். மண்டபத்திலுள்ள தற்போதைய ஆராய்ச்சி நிலையம் துணை இயக்குநர் ஒருவரின் பொறுப்பில் செயல்படும். மண்டபத்தில் ஆராய்ச்சிப் பணி தீவிரமாக்கப்படும். மத்திய கடல் மீனள ஆராய்ச்சி நிலையத்தின் தலைமையிடத்தை மண்டபத்திலிருந்து கொச்சிக்கு மாற்றுவதற் கான முடிவை நிறுத்தி வைக்க வேண்டுமென்று நமது முதல் அமைச்சரும், இந்திய பிரதமருக்கு எழுதியுள்ளார்கள். பிரதமரின் பதில் எதிர்பார்க்கப்படு கிறது.

இதற்கிடையில் செய்தித் தாள்களில் கீழ்க்கண்டவாறு வெளியிடப்பட் டுள்ளது. இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் ஆட்சிக்குழு, 22—3—1971 அன்று நடந்த தனது கூட்டத்தில் (மத்திய உணவு-வேளாண்மை

அமைச்சர் திரு. பக்ருதீன் அலி அகமது அவர்கள் அதற்குத் தலைமை வகித்தார்). மத்திய கடல் மீனள ஆராய்ச்சி நிலையத்தின் தலைமையிடத்தை மண்டபத்திலிருந்து கொச்சிக்கு மாற்றுவதென முடிவு செய்தது. மண்டபம் முகாமில் உள்ள நிலையம் மத்திய நிலையத்தின் வட்டார அலுவலகமாகப் பெயரிடப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு செய்தி வெளியாகியது.

இந்த ஆராய்ச்சி நிலையத்தின் தலைமையிடத்தைத் தமிழ்நாட்டிற்கு வெளியேயுள்ள ஓர் இடத்திற்கு மாற்றுவது எவ்வளவு நியாயமற்றது என்பதைத் தமிழ்நாடு அரசு முழுவதும் உணர்ந்துள்ளது. இந்தப் பிரச்சினை ஒரு புதிய நிலையத்தை நிறுவுவதற்கான இடத்தைத் தெரிந்தெடுப்பதைக் குறித்ததல்ல. இந்த நிலையம் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகிறது. அவ்வாறிருக்க, அதன் தலைமையிடத்தை அண்டை மாநிலமாகிய கேரளத்திற்கு மாற்றுவது நியாயந்தானா என்பதுதான் பிரச்சினை. மீன்பிடித் தொழில் மேற்குக் கடற்கரையில், அதிலும் சிறப்பாகக் கேரளத்தில் மிகுந்த அளவிற்கு வளர்ச்சியடைந்துள்ளது என்பது உண்மை. ஆயினும், இதே வாதத்தைக் கொண்டு மீன்பிடித் தொழிலில் ஓரளவே வளர்ச்சியடைந்துள்ள கிழக்குக் கடற்கரையில் அத்தொழில் சிறப்புற வளர்ச்சியடைய ஆவன செய்யப்படவேண்டும் என்று நான் கூறுவேன். ஏற்கெனவேயுள்ள சிறிய அளவு வசதியையும் எடுத்து விடுவது நியாயமல்ல. கோளத்தில் (6 நிலையங்கள்), மேற்குக் கடற்கரையிலும், மத்திய மீனள ஆராய்ச்சி நிலையங்கள் ஏற்கனவே பல உள்ளன. இவற்றில் ஒன்றையும் மேற்குக் கடற்கரையிலிருந்து நமது மாநிலத்திற்கு மாற்றவேண்டுமென்று நாம் கேட்கவில்லை.

மத்தியக் கடல் மீனள ஆராய்ச்சி நிலையத்தின் தலைமையிடத்தைத் தமிழ்நாட்டிலேயே செயல்படுவதற்கு இயன்ற எல்லா நடவடிக்கைகளையும் தமிழ்நாடு எடுத்துள்ளது என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்ற உறுப்பினர்கள் பேசுவதற்கில்லை. திரு. ஜேம்ஸ் அவர்கள் மட்டும் விளக்கம் கோரலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, தேவையான எல்லா நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதற்காகப் பாராட்டுகிறேன். இருந்தாலும்கூட இந்த மீனள ஆராய்ச்சி நிலையத்தைக்கோள மாநிலத்திற்கு மாற்றுவதனால்—நமது மாநிலத்தில் உள்ள பல இளைஞர்கள் இந்த மண்டபத்தில் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்—பல இளைஞர்கள் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களும், வருங்கால சந்ததியினரும் வேலை வாய்ப்பு இல்லாமல் பாதிக்கப்படுவார்கள். எனவே, கடந்த 20 ஆண்டுக் காலமாக அங்கே செயல்பட்டுக் கொண்டு இருந்த இந்த மீனள ஆராய்ச்சி நிலையத்தை மாற்றக்கூடாது என்று இந்த மாமன்றத்திலே அரசு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசாங்கத்திற்கு அனுப்புமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, நான் கூறிய அந்த விளக்க உரையிலேயே எந்தக் காரணத்தைக் கொண்டும் அங்கு இருப்பவர்களின் வேலை வாய்ப்புக் குறைந்து விடாது என்பதை நன்கு அறியலாம். அங்கே தற்போது இருக்கிற இயக்குநரும், நான்கு எழுத்தர்களும் மட்டும் மாற்றப்படுவார்கள். தலைமையிலே மாற்றமே தவிர பணிக்கு

எந்தவிதமான குந்தகமும் ஏற்படாது என்று விவரமாகக் கூறினேன். அவர்கள் இந்த அலுவலகத்தை மாற்றுவதற்குச் சொல்கிற காரணம் பொருந்தாக் காரணம். அப்படியே மாற்றுவதற்குச் சரியான காரணம், அவசியம் ஏற்பட்டாலும் சென்னைக்கு மாற்றிக் கொள்ளலாம் என்று அரசு வலியுறுத்திக் கூறி வந்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பிரதம மந்திரியவர்களுக்கு இந்த அடிப்படையிலே எழுதியுள்ளார்கள். எனவே மாண்புமிகு உறுப்பினர் எண்ணிக் கொண்டு இருப்பதுபோல இதற்கு என்று தனியாக ஒரு தீர்மானம் தேவையில்லை என்று நான் கூறுகிறேன்.

(2) இன்றியமையாப் பண்டங்களின் விலை உயர்வைத் தடுக்க நடவடிக்கை எடுப்பது குறித்து.

DR. H. V. HANDE : Sir, I wish to call the attention of the Hon. Minister for Food and Local Administration to a matter of urgent public importance, namely, the disappointment and dissatisfaction among the public due to spiralling prices of essential commodities and the need to take necessary, immediate steps to check the spiralling prices. 10-00 மு.ப.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : முக்கியமாக உள்நாட்டு உற்பத்தி மூலம் ஈடுசெய்யப்படுகிற உணவு தானியங்கள் மற்றும் ஏனைய இன்றியமையாப் பண்டங்களின் உற்பத்தியை அதிகரித்ததற்கென இவ்வரசு மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக விலைகள் இறங்கியுள்ளன. அரிசி, மற்றும் மட்டரக தானியங்கள், மிளகாய், மஞ்சள் ஆகியவற்றின் உச்ச விலைகள் 1969-ஆம் ஆண்டில் நிலவிய உச்ச விலைகளுடன் ஒப்பிட்டால் அவை 1970-ல் மிகவும் குறைவாக இருந்தன. தற்போதைய விலை அளவுகள்கூட 1970 மார்ச்சில் நிலவிய விலை அளவுகளை விடக் குறைவாகவேயுள்ளன. இருந்தபோதிலும் ஏனைய மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படும் இனங்களான நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், பருப்புகள் போன்றவற்றின் விலைகள் அதிகரித்துள்ளன. இந்த விலையுயர்வு மாநிதத்திற்குள் உற்பத்தி செய்யப்படும் பண்டங்களின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவாக வாழ்க்கைச் செலவுக் குறியீட்டு எண்ணில் ஏற்பட்ட குறைவை நிரப்பியுள்ளது. இதன் விளைவாக உணவுத் தொகுதிக்குரிய மொத்தக் குறியீட்டு எண்ணில் 168..6 புள்ளிகளிலிருந்து 169.7 புள்ளிகளாக உயர்ந்ததில் 1.1 புள்ளி அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறது. மொத்த வாழ்கைச் செலவு குறியீட்டு எண்ணில் 0.66 புள்ளி அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

ஏனைய மாநிலங்களிலிருந்து முக்கிய விளை பொருள்கள் பெறவேண்டியுள்ளதன் விளைவால் குறியீட்டு எண்ணில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு 3.4 புள்ளிகளாகும். இந்த அதிகரிப்பு முக்கியமாக மாநிலத்திற்குள் உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களின் விலை இறக்கத்தால் ஈடுசெய்யப்பட்டுள்ளது. (மாநிலத்திற்குள் உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களின் விலைகள் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டு எண்ணில் ஏறத்தாழ 35 சதவீதமாகும்). இந்த விலை இறக்கம் மொத்த வாழ்க்கைச் செலவுக் குறியீட்டு எண்ணில் 3.2 புள்ளிகளாகும். 1971 பிப்ரவரியில் மொத்த வாழ்க்கைச் செலவுக் குறியீட்டு எண் 172.1; 1970 பிப்ரவரியில் 166 ஆகும். இந்த இனங்கள் தொடர்பாக வாழ்க்கைச் செலவுக்குறியீட்டு எண்ணில் ஏறத்தாழ 5 சதவீதம் குறைவு ஏற்பட்டுள்ளது.

[திரு. ப. உ. சண்முகம்] [1971 ஏப்ரல் 3

இவ்வரசு பருப்பு வகைகள் உற்பத்தியை அதிகரிப்பதற்காக 5.35 லட்சம் ஏக்கரில் ரூ. 24 லட்சம் செலவில் ஒரு திட்டத்திற்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. தென்னை வளர்ப்பு திட்டத்தின் கீழ் பரப்பளவை அதிகரிப்பதற்கும் அவற்றின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கும் உரிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

காப்பிக்கொட்டையின் விலை 1970-ம் ஆண்டில் பெருமளவிற்கு உயர்ந்தது. உற்பத்தி குறைந்த போதிலும் ஏற்றுமதி அளவை காப்பி வாரியம் ஒரே நிலையில் நீடித்து வந்ததுதான் இதற்குக் காரணம். காப்பி வாரியம் அதன் 'டிப்போக்கள்' மூலம் காப்பிக் கொட்டை விற்பனை செய்யப்படுவதையும் சிறிதுகாலம் நிறுத்தி வைத்தது. இது குறித்து உடனடியாக இவ்வரசு இந்திய அரசுக்கு எழுதியது அதன் பேரில் காப்பி வாரியம் 1—1—1971 முதல் 'டிப்போ' விற்பனையை மீண்டும் தொடங்கியது. விலை கணிசமான அளவுக்குக்குறைந்தது. தற்போது காப்பிக் கொட்டையின் விலை 1970 மார்ச்சில் நிலவிய விலையின் அளவிலேயே உள்ளது.

விறகு விலை உயர்ந்துள்ளது. இதனால் வாழ்க்கைக் குறியீட்டு எண்ணில் 2 புள்ளி அதிகரித்துள்ளது. இதற்கு முக்கியக் காரணம் நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் வழங்கும் "லீக்கோ" கரி வழங்கல் நிலை குறைந்து விட்டது. ஆந்திரப் பிரதேசத்திலிருந்து இறக்குமதியாகும் நிலக்கரியும் விறகும் போக்கு வரத்து நெரிசல் காரணமாகப் போதுமானதாக இல்லை என்பதும் ஒரு காரணமாகும்.

தயாரிக்கப்படும் பொருள்களின் விலையும் அதிகரித்து வந்துள்ளது. இதனால் 1970 பிப்ரவரியிலிருந்து 1971 பிப்ரவரி வரையில் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்ணில் 2.48 புள்ளிகள் அதிகரிக்க இடமேற்றபட்டது. ஆக, 1970 பிப்ரவரிக்கும் 1971 பிப்ரவரிக்குமிடையில் ஏற்பட்ட மொத்த அதிகரிப்பாகிய 6.1 புள்ளிகளில், எரிபொருள், உற்பத்திப் பொருள்கள் ஆகியவற்றின் விலையேற்றத்தினால் 4.48 புள்ளிகள் அதிகரிக்க இடமேற்பட்டது. குறிப்பாக, உற்பத்திப் பொருள்களின் விலை அதிகரிப்புக்குப் பல காரணங்களைச் சொல்லலாம். இவற்றுள் முக்கியமாக உற்பத்தி அளவுகளையும், இந்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகளையும், அனைத்து நாட்டு விலைவாசி அமைப்பையும் விலை அதிகரிப்பையும் காரணமாகச் சொல்லலாம். மத்திய நாணய-பொருளாதார நிறுவனங்கள் இத்தகைய கொள்கைகளை உருவாக்குகின்றன. அவற்றையொட்டியே விலைவாசியும் அமைகிறது. விலை உயர்வைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்படும் வகையில், இத்தகைய நேர்வுகளில் மத்திய மாநில அரசுகளுக்கிடையே தொடர்ச்சியாக விரிவான ஆலோசனை நடத்த வேண்டியதன் அவசியம் ஆளுநர் இம்மன்றத்தின் முன் ஆற்றிய பேருரையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

DR. H. V. HANDE: Will the Hon. Minister for Food take steps to see that proper negotiation is conducted with the Neyveli Lignite Corporation and immediate steps are taken to get more LECO at a lesser rate? May I know whether steps had been taken and if so, what are the details?

1971 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் அவர்களிடம் விசாரித்ததில், உற்பத்தியாகும் நிலக்கரி குறைந்திருப்பதன் காரணமாக இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்றும், வேறு காரணம் இல்லை என்றும் தெரிவிக்கிறேன்.

(4) அறிவிப்புக்கள்.

(அ) நடைமுறை விதிக் குழுவிற்கு நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு சில அறிவிப்புகள். தமிழ்நாடு சட்டப் பேரவையின் 229 (1)-வது விதியின்கீழ் 1971-72-ம் ஆண்டுக்குப் பின் வரும் உறுப்பினர்களை நடைமுறை விதிக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்:—

1. மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (முதலமைச்சர்)
2. மாண்புமிகு திரு. இரா நெடுச்செழியன் (பேரவை முன்னவர்)
3. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழிலமைச்சர்)
4. திரு. பெ. சீனிவாசன் (பேரவைத் துணைத் தலைவர்)
5. திரு. து. ப. அழகமுத்து
6. திரு. க. உரோ. எட்மண்ட்
7. திரு. எம். தேவராசன்
8. திரு. சொ. காவேரிமணியம்
9. திரு. பழனிவேல் ராஜன்
10. திரு. என். டென்னீஸ்
11. திரு. மு. சத்தியமூர்த்தி
12. திரு. கே. டி. கே. தங்கமணி
13. திரு. ஏ. ஆர். மாரிமுத்து
14. திரு. எம். ஏ. அபுசாலி
15. டாக்டர் எச். வி. ஹாண்டே
16. திரு. ஏ. ஆர் பெருமாள்

பேரவைத் தலைவர், அலுவல் காரணமாக இக் குழுவின் தலைவர் ஆவர்.

(ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழுவிற்கு நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டப் பேரவையின் 201 (1)-வது விதியின்கீழ் 1971-72-ம் ஆண்டுக்கு பின்வரும் சட்டப் பேரவை உறுப்பினர்களை சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கிறேன் :—

1. பேரவைத் துணைத் தலைவர்
2. திரு. எஸ். கணேசன்
3. திரு. எம். கந்தசாமி
4. திரு. அ. இராசமாணிக்கம்
5. திரு. மா. சுப்பிரமணியன்

[பேரவைத் தலைவர்] [1971 ஏப்ரல் 3

6. திரு. கு. திருப்பதி
7. திரு. ஆலடி அருணா
8. திரு. ஜே. ஜேம்ஸ்
9. திரு. ஆ. கு. சுப்பையா
10. டாக்டர் ம. மோஸஸ்
11. திரு. ஏ. ஆர். மாரிமுத்து
12. திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி

சட்டப் பேரவையின் 202-வது விதியின்கீழ், பேரவைத் துணைத் தலைவர் அவர்களை இக் குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

(இ) அரசினர் உறுதிமொழிக் குழுவிற்கு நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டப் பேரவையின் 214 (1)-வது விதியின்கீழ் 1971-72-ம் ஆண்டுக்கு பின்வரும் சட்டப் பேரவை உறுப்பினர்களை அரசினர் உறுதிமொழிக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கிறேன் :—

1. திரு. மணலி சி. கந்தசாமி
2. திரு. எஸ். முருகையன்
3. திரு. கே. ஜெயராமன்
4. திருமதி ஏ. கோ. பத்மாவதி
5. திரு. ப. முத்துசாமி
6. திரு. அ. தேவேந்திரன்
7. திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்
8. திரு. என். பழனிசாமி
9. திரு. கு. ஆ. பொம்மன்
10. திரு. ஏ. எம். மொய்தீன்
11. திரு. கே. பி. கோபால்
12. திரு. வி. தவமணித் தேவர்

சட்டப் பேரவையின் 215 (1)-வது விதியின்கீழ் திரு. மணலி சி. கந்தசாமி அவர்களை இக் குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

(ஈ) மதிப்பீட்டுக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1971-72-ம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு தமிழ்நாடு சட்டப் பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன் :—

1. திரு. சோ. அழகர்சாமி
2. திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி
3. திரு. எம். ஏ. லத்தீப்

1971 ஏப்ரல் 3] [பேரவைத் தலைவர்]

4. திரு. எம். சுரேந்திரன்
5. திரு. பி. வெங்கடசாமி
6. திருமதி ஜோதி வெங்கடாசலம்
7. திரு. எ. சுவாமிதாஸ்
8. திரு. கா. வேழவேந்தன்
9. திரு. து. ப. அழகமுத்து
10. திரு. வி. கே. ராமராசன்
11. திரு. எஸ். கே. வடிவேலு
12. திரு. கே. ஆண்டி என்கிற குருசாமி
13. திரு. என். ராஜாங்கம்
14. திரு. ஏ. சி. நரசிம்மன்
15. திரு. எம். இரத்தின சபாபதி
16. திரு. எஸ். கணேசன்

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்கு சமமாக இருப்பதால், 1971-72-வது ஆண்டு மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் (முதலமைச்சர்) அவர்களும், பொதுக் கணக்காய்வுக் குழுவின் தலைவர் அவர்களும் அலுவல் காரணமாக இக் குழுவின் உறுப்பினர்களாவர்.

இப்பேரவையின் 165-வது விதியின்கீழ் திரு. கா. வேழவேந்தன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

(உ) பொதுக் கணக்காய்வுக் குழுவிற்குத் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1971-72-ம் ஆண்டுக்கான பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு தமிழ்நாடு சட்டப் பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன் :—

1. திரு. கே. டி. கே. தங்கமணி
2. திரு. எம். முத்தையா
3. திரு. எல். காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி
4. திரு. கே. ஏ. வகாப்
5. டாக்டர் எச். வி. ஹாண்டே
6. திரு. ஆர். பொன்னப்ப நாடார்
7. திருமதி டி. என். அனந்தநாயகி
8. திரு. மா. வெ. கரிவேங்கடம்
9. திரு. துரை முருகன்

10. திரு. கோவை செழியன்
11. திரு. பு. செ. முத்துச்செல்வன்
12. திரு. சி. வே. வேலப்பன்
13. திரு. கா. காளிமுத்து
14. திரு. எம். செல்வராஜ்
15. திரு. ஆ. கருப்பையா
16. திரு. து. ப. அழகமுத்து

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1971-72-ம் ஆண்டு பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் (முதலமைச்சர்) அவர்களும், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்களும் தங்கள் அலுவல் காரணமாக இக் குழுவின் உறுப்பினர்களாவர்.

இப்பேரவையின் 174-வது விதியின் கீழ் திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்களை இக் குழுவின் இந்த ஆண்டுத் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

(5) அரசினர் தனித் தீர்மானங்கள்.

(அ) கிழக்கு பாகிஸ்தான் (வங்க தேஷ்) உரிமை முழக்கம் வெற்றிபெற நல்லெண்ணம் தெரிவிக்கும் தீர்மானம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வங்க நாட்டு மக்களைப் பற்றிய தீர்மானத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசினர் தனித் தீர்மானமாகக் கொண்டுவர இருக்கிறார்கள். இப்படிப்பட்ட தீர்மானம் பாராளுமன்றத்தில் மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட மரபையொட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீர்மானத்தை முன்னுரைத்து இந்த மன்றம் வழிமொழிய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முதலமைச்சர் அவர்களை அழைக்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தைத் தாங்கள் அனுமதித்ததோடு ஒரு சிறு இணைப்பைச் சேர்த்து தீர்மானத்தைப் படிக்கிறேன் :

"கிழக்கு பாகிஸ்தான் மக்களின் உரிமைக் குரலும் பொதுத் தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பும் அலட்சியப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அந்தப் பகுதி மக்கள் செய்துள்ள சுதந்திரப் பிரகடனத்தை எதிர்த்து நசுக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட ராணுவ நடவடிக்கையின் காரணமாக லட்சக் கணக்கான உயிர்கள் பலியிடப்பட்டது கண்டு இந்த மன்றம் தனது ஆழ்ந்த வேதனையைத் தெரிவிப்பதோடு, வங்க தேஷ் மக்களின் உரிமை முழக்கம் வெற்றிபெற தமிழ்ப் பெருங்குடி மக்களின் நல்லெண்ணத்தையும் தெரிவித்துக் கொள்கிறது" என்ற தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

இதிலே இணைத்திருப்பது "கிழக்கு பாகிஸ்தான் மக்களின் உரிமைக் குரலும், பொதுத் தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பும் அலட்சியப்படுத்தப் பட்டதைத் தொடர்ந்து" என்பதாகும்.

தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானம் எவ்வளவு முக்கியமானது என்பதை நாம் அனைவரும் நன்றாக அறிவோம். கிழக்குப் பாகிஸ்தானத்தில் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ரத்த வெறியும் அதன் காரணமாக விழுகின்ற பிணங்களும், இந்தியாவில் மாத்திரமல்ல, அனைத்துலகத்தில் இருக்கின்ற எல்லா நாட்டு மக்களும் கண்ணீர் வடிக்கத்தக்க சம்பவமாகும். இந்தச் சம்பவம் எவ்வாறு எழுந்தது என்பதை எண்ணினால், நடந்து முடிந்த பாகிஸ்தான் பொதுத் தேர்தலில், நீண்ட நெடுங்காலமாக கிழக்குப் பாகிஸ்தானத்தில் அரசியல் துறையிலும், சமுதாயத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும், மொழித் துறையிலும் உரிமைகள் முடக்கப்பட்டு, உரிமைகள் தடைப்படுத்தப்பட்டு அங்கலாய்த்துக் நொண்டிருந்த மக்களின் பிரதிநிதியாக அவாமி லீக் கட்சி தேர்தலில் ஈடுபட்டு அந்த அடிப்படையில் தங்களுடைய எண்ணங்களை மக்களின் முன் வைத்து வாக்குகளைக் கேட்டது. அவாமி லீக் கட்சியின் கொள்கைக்கேற்பப் பொதுத் தேர்தலில் அந்தக் கட்சிக்குப் பெரும்பான்மையான இடங்கள் கிடைத்தன.

ஆனால் பொதுத் தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்புக்குப் பிறகு அந்தத் தீர்ப்பை லட்சியம் செய்யாமல் பாகிஸ்தான் நடந்து கொண்ட காரணத்தால் கிழக்குப் பாகிஸ்தானத்தில் கிளர்ச்சி ஏற்பட்டது. அந்தக் கிளர்ச்சியைப் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்க்கலாம் என்று பாகிஸ்தானத்தினுடைய ஜனாதிபதி யாகியாகான் அவர்கள் கிழக்குப் பாகிஸ்தான் டாக்கா நகரத்திற்கு வந்து பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டார். அந்தப் பேச்சு வார்த்தை நடைபெற்ற போது ஏடுகளில் வந்த செய்தி மேற்கு-கிழக்குப் பாகிஸ்தானுக்குப் பொதுவான கூட்டாட்சியை நிறுவ யாகியாகான் சம்மதித்து விட்டார் என்றும் தேர்தலில் அவாமி லீக் கட்சி பெரும்பான்மை இடம் பெற்றிருப்பதால் அந்தக் கூட்டாட்சிக்கு முஜ்பீர் ரஹ்மான் அவர்கள் பிரதமராக இருக்க யாகியாகான் சம்மதித்து விட்டார் என்றும், அவாமி லீக் கட்சியைச் சேர்ந்தவர் கிழக்குப் பாகிஸ்தானத்தில் முதலமைச்சர் பொறுப்பை ஏற்பார் என்பதற்கு சம்மதித்து விட்டார் என்றும் செய்திகள் வந்தன. இந்தப் பேச்சு வார்த்தைகள் முடிந்த அதே நேரத்தில் மத்தியக் கூட்டாட்சிக்குப் பிரதமராக ரஹ்மான் வரப் போகிறார், மாநிலத்திற்கு அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டுமென்ற வேண்டுகோள் அலட்சியப்படுத்தப்படாமல் நிறைவேற்றப்பட இருக்கிறது என்ற இந்தச் செய்திகள் வந்து கொண்டிருந்த நேரத்தில் யாகியாகான் கராச்சிக்குப் புறப்பட்டுச் சென்றார். கராச்சியிலிருந்து போர்ப் பிரகடனம் செய்தார். கிழக்குப் பாகிஸ்தான்மீது படைகள் ஏவி விடப்பட்டன. அந்த நேரத்தில் ரஹ்மான் பாகிஸ்தானத்தின் விரோதி என்றும், தேசத் துரோகி என்றும் பாகிஸ்தானத்தைத் துண்டு போடப் புறப்பட்டவர் என்றும் குற்றம் சாட்டப்பட்டு யுத்தப் பிரகடனம் செய்யப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் கிழக்குப் பாகிஸ்தான் மக்கள், ரஹ்மான் அவர்கள் பிரகடனம் செய்திருப்பது போல் வங்கதேச மக்கள் லட்சக் கணக்கில் உயிர் விட்டிருக்கிறார்கள். ஏழு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இதுவரை

பலியிடப்பட்டிருக்கிறார்கள். இயற்கையின் கொடுமையான, ஆவேசமான தாக்குதலின் காரணமாகப் பல லட்சக் கணக்கான மக்களை இழந்த கிழக்குப் பாகிஸ்தான், போரின் விளைவாக இலட்சக் கணக்கானவர்களை இழந்து கொண்டிருக்கிறது. ரஹ்மான் குடும்பம் தவித்துக் கொண்டிருக்கும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இப்படித் தங்களுடைய உரிமைகளுக்காக பொது மக்கள் அளித்த தீர்ப்பை அங்கீகரிக்க வேண்டுமென்று எழுப்பிய கோஷத்திற்காக அந்த நாட்டு மக்கள், அந்த நாட்டு மக்களை வழி நடத்திச் செல்லும் தலைவர்கள் பழி வாங்கப்படும் பரிதாபகரமான காட்சி அகில உலகத்தையும் திடுக்கிட வைத்திருக்கிறது. அந்த அடிப்படையில் ஒரு தீர்மானத்தை பாராளுமன்றத்தில் இந்தியாவின் தலைமையமைச்சர் கொண்டு வந்து ஒருமனதாக நிறைவேற்றியிருக்கிறார்கள். கேரள சட்டமன்றத்திலும், அஸ்ஸாம் போன்ற வேறு பல சட்டமன்றங்களிலும் இரங்கலைத் தெரிவிக்கும் வகையிலும், கிழக்குப் பாகிஸ்தான் மக்களுக்குத் தங்களுடைய ஆதரவு இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டும் வகையிலும் கருத்தை அறிவித்திருக்கிறார்கள். அந்த வகையில் நம்முடைய தமிழ்நாடு சட்ட மன்றத்தில் இந்தத் தீர்மானத்தை நான் முன் வைத்திருக்கிறேன். தாங்கள் குறிப்பிட்டது போல் அனைத்துக் கட்சித் தலைவர்களிடத்திலும் பேசியதற்கிணங்க எல்லாக் கட்சியினரும் ஒரு சேர இந்தத் தீர்மானத்தை ஆதரித்து வங்க தேசத்தில், கிழக்குப் பாகிஸ்தானத்தில் அல்லலுறும் மக்களுக்கும், உயிரை விட்டுக் கொண்டிருக்கும் லட்சோப லட்சம் மக்கள் குடும்பத்திற்கும் மற்றும் அனைவருக்கும் நான்கு கோடி தமிழ் மக்கள் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு நம்முடைய நல்லெண்ணம் அவர்கள்பால் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ளும் வகையில் இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்னுரைத்த இந்தத் தீர்மானத்தோடு பேரவைத் தலைவர் என்ற முறையில் என்னுடைய உணர்வுகளையும் நான் இணைக்கிறேன். இந்தத் தீர்மானத்தை அவை ஒருமனதாக ஏற்றுக் கொள்ளுவதாகக் கருதுகிறேன்.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

(2) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) மதிப்பீட்டுக் குழுவில் சட்ட மேலவை உறுப்பினர்களைச் சேர்த்தல்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, "1971-72-ம் ஆண்டுக்கான சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் சேர்த்துக் கொள்வதற்கென ஐந்து உறுப்பினர்களை நியமனம் செய்து அவ்வாறு நியமனம் செய்த உறுப்பினர்களின் பெயர்களை, பேரவைக்கு அறிவிக்குமாறு இப்பேரவை சட்ட மேலவைக்குப் பரிந்துரை செய்கிறது" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

(இ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவை விதிகள் 21 (3) விதியின்கீழ் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ளதற்கு மாறாக கீழ்க் கண்டபடி எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று முன்மொழிகிறேன் :—

1. அரசினர் தனித் தீர்மானங்கள்
2. 1971-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 8/1971)
3. தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 7/1971)
4. தமிழ்நாடு 1971-ம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 6/1971)
5. தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 1/1971)
6. தமிழ்நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மை பல்கலைக் கழக மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 2/1971)
7. தமிழ்நாடு 1971-ம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு-மாற்று) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 3/1971)

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(5) அரசினர் தனித் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ் நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியினர் வெளியிடும் கடன் ஈட்டுப் பத்திரங்கள் குறித்த மாநில அரசு உத்தரவாதம் அளிக்கும் பேரளவுத் தொகையின் மொத்த மதிப்பை உயர்த்துவது குறித்து.

■ **மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** பேரவைத் தலைவர் அவர்களே, என் பெயரால் உள்ள கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி அவ்வப்போது திரும்பப் பெற்றுக்கொள்ளும் கடன் ஈட்டுப் பத்திரங்கள் நீங்கலாக மேற்படி வங்கியினர் வெளியிடும் கடன் ஈட்டுப் பத்திரங்களைப் பொறுத்தவரையில் மாநில அரசு உத்தரவாதம் அளிக்கும் பேரளவுத் தொகையை தமிழ்நாடு 1934-ம் ஆண்டு கூட்டுறவு நிலவள வங்கிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1934) 6-வது பிரிவின் (2) உட்பிரிவின்கீழ் ரூ. 125 கோடி (ரூபாய் நூற்றுஇருபத்தி ஐந்து கோடி மட்டும்) மொத்த மதிப்புக்கு உயர்த்தலாம் என்றும், அத்தகைய கடன் ஈட்டுப் பத்திரங்கள் எந்த ஒரு நேர்விலும் ஒவ்வொரு வரிசைக்கும் இந்திய ரிசர்வ் வங்கி ஏற்பளித்துள்ள வட்டி வீதத்திற்கு மேற்படாத வட்டி வீதத்திலும், வெளியிடப்படுகிற நாளிலிருந்து 25 ஆண்டுகளுக்கு மேற்படாத கால அளவுக்கு வெளியிடப்படலாமென்றும், இந்தச் சட்டப் பேரவை மாநில அரசுக்குப் பரிந்துரைக்கிறது."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

[1971 ஏப்ரல்

(இ) தமிழ்நாடு 1931-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் சில அட்டவணைகளைத் திருத்தும் வரைவு விதி குறித்து.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, என் பெயரால் உள்ள கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1931-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1931) II வது, III -வது விவர அட்டவணைகளைத் திருத்தி மேற்படி சட்டத்தின் 17-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்கீழ் மாநில அரசினால் பிறப்பிக்கப்படவிருக்கிற கீழ்க்காணும் வரைவு விதி அச் சட்டத்தின் (3) உட்பிரிவில் சொல்லியுள்ளவாறு ஏற்பளிக்கப்படுவதாக.

வரைவு விதி

தமிழ்நாடு 1931-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் 17-வது பிரிவின் (1) உட்பிரிவில் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்படி சட்டத்தின் II -வது III -வது விவர அட்டவணைகளில் கீழ்க்காணும் திருத்தத்தை இதனால் செய்கிறார்.

திருத்தங்கள்

மேற்சொன்ன விவர அட்டவணைகளில், 'ந.பை.' என்ற எழுத்துக்கள் வரும் இடங்களில் எல்லாம் 'காசு' என்ற சொல் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(6) அரசினர் மசோதாக்கள்

(அ) 1971-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 8/1971)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, "1971-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) மசோதா* (சட்டப் பேரவை மசோதா எண் 8/1971) என்ற மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்," என்று முன்மொழிகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவானது 1971-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) சட்டம் ஆளுநர் அவர்கள் பிறப்பித்ததை யொட்டி, இப்பொழுது இந்த மசோதாவை நான் இங்கு கொண்வருகிறேன். மோட்டார் வண்டிகள் திருத்த சட்டத்தில் 44-வது பிரிவில் 1939-ம் ஆண்டு சட்டத்தின்படி சில ஆர்.டி.ஏ., எஸ்.டி.ஏ. அவர்களை நியமிக் கின்ற வகையில் வழிவகைகள் ஏற்கெனவே செய்யப்பட்டிருக்கிறது. 1957-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) சட்டத்தின்மூலம் ஆர்.டி.ஏ. ங்கிள் ஆபீசர் என்றும், எஸ்.டி.ஏ. ஒரு சிங்கிள் ஆபீசர் என்றும் வழிமுறைகள் ற்கெனவே செய்யப்பட்டிருக்கின்றன. 1969-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் ருத்தச் சட்டம் மத்திய அரசால் கொண்டு வரப்பட்டு, அது 1970-ம் ஆண்டு ர்ச் மாதம் 2-ம் தேதியிலிருந்து அமலுக்கு வந்திருக்கிறது. இந்தச்

* 1971 ஏப்ரல் 2-ம் தேதிய சிறப்பு அரசிதழ் வெளியிடப்பட்டுள்ளது.

1971 ஏப்ரல் 3] [திரு. ச. இராமச்சந்திரன்]

சட்டத்தின் இப்போதுள்ள செக்ஷன் 44 (2) பிரிவுக்குப் பொருந்த நிபந்தனைகள் ஏற்படுத்த இப்போது கொண்டுவரப்படுகிறது. ஆர்.டி.ஏ. நியமிக்கப்படுகிறபோது, "officer with Judicial experience" என்று இருக்கிறது. எஸ்.டி.ஏ. நியமிக்கப்படுகிறபொழுது, "Chairman with Judicial experience and two officials or non-officials" என்று இருக்கிறது. இது ஏற்கெனவே நம்மிடத்திலே நடைமுறையில் உள்ள முறைகளுக்கு மாறாக இருப்பதால் இந்தத் திருத்தச் சட்டம் இப்போது தேவைப் படுகிறது. தற்போது நடைமுறையில் உள்ள நிர்வாக அமைப்புகள் ஆர்.டி.ஏ., எஸ்.டி.ஏ., ஆகிய இரண்டும் தனி அதிகாரிகளைக் கொண்டு நடத்தி வருகிற முறை. இது நல்ல முறையிலே நடைபெறுகிற காரணத்தால் அந்த வழிவகைகள் மூலம் வகை செய்வதற்காக இந்தச் சட்டத்தில் 44-வது பிரிவில் 2-ஏ பிரிவைச் சேர்த்து, ஏற்கெனவே நடைமுறையில் உள்ளதைக் கொண்டுவர வழி வகை செய்யப்பட்டிருக்கிறது.

இப்போதுள்ள நிலைமையில் இந்திய சர்க்காரால் கொண்டுவரப் பெற்ற 1969-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் திருத்தச் சட்டம் 64 (2) பிரிவில் மாநிலப் போக்குவரத்து மேல் முறையீடு மன்றம் என்ற முறையில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் கூடுதல் நடுவர் மன்றம் வைத்திருப்பதால், மாநிலப் போக்குவரத்து நடுவர் மன்றத் தோடு, கூடுதல் மாநிலப் போக்குவரத்து நடுவர் மன்றமும் இதில் இருப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இரண்டாவது திருத்தம் 64 (2) பிரிவில் கொண்டுவரப்படுகிறது.

1969-ம் ஆண்டு இந்திய அரசாங்கம் கொண்டுவந்த மோட்டார் வண்டிகள் திருத்தச் சட்டத்தில் 6-வது அட்டவணையில் இப்போது மோட்டார் பதிவு எம்.டி., எம்.எஸ்., என்று இருப்பதற்குப் பதிலாக டி.என்., டி.எம்., என்ற முறையிலே இருக்க வேண்டுமென மாற்றியமைக்க வழிவகை செய்யப்பட்டிருக் கிறது. ஏற்கெனவே எம்.டி., எம்.எஸ்., என்று இருப்பவைகளை டி.என்., டி.எம்., என்று மாற்றுவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. இப்போது கொண்டுவரப்படும் திருத்தம், ஏற்கெனவே எம்.டி., எம்.எஸ்., என்று பதிவு செய்யப்பட்டுள்ள வண்டிகள் அப்படியே தொடர்ந்து இருக்கவும், இனி மேல் அரசாங்கம் எந்தத் தேதியிலிருந்து இந்தத் திருத்தச் சட்டத்தை அமலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று விரும்புகிறதோ அந்தத் தேதி யிலிருந்து டி.என்., டி.எம். என்று எழுதச் செய்யலாம் என்றும் வகை செய் கிறது. ஏற்கனவே எம்.டி., எம்.எஸ். என்று பதிவு செய்யப்பட்ட வண்டிகள் மாற்றுவது தேவையில்லை யென்று இந்தத் திருத்தம் கூறுகிறது. டி.என்., டி.எம். என்று எழுதும் ஏற்பாட்டை இந்த ஆண்டு தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று, அந்த நாளிலிருந்து கொண்டுவருவதற்கான எல்லா முயற்சிகளையும் இந்த அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித் துக்கொள்கிறேன்.

மசோதாவின் 6-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிற 1969-ம் ஆண்டு இந்திய அரசியல் சட்டம், 1970-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2-ம் தேதியிலிருந்து அமலுக்கு வருவது. இன்றைக்கு நிறைவேறுகிற சட்டம் இன்றைய தேதி யிலிருந்து அமல் செய்கின்ற பிரிவை வழிவகை செய்கிறது. ஆகவே, இந்தத்

திருத்தத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே நடைமுறையில் இருந்து வருவதை மறுபடியும் நிலைநிறுத்துவதற்காகவும் மத்திய அரசுக்கும் மாநில அரசின் சில பிரிவுகளுக்குமுள்ள முரண்பாடுகளைப் போக்குகின்ற முறையில் இருப்பதால் இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி டி. என். அனந்தநாயகி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மோட்டார் வெகிகிள்ஸ் சட்டத் திருத்தத்தைப்பற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்தத் திருத்தம் முதலிலே அவசர சட்டமாக மாற்ற வேண்டுமென்ற எண்ணத்திலே கொண்டுவரப் பட்டிருக்கிறது. முதலாவதாக, ஆர்.டி.ஏ., எஸ்.டி.ஏ. போன்றவற்றிற்கு ஒரு அங்கத்தினர் இருந்து
10-30 பி.ப. நடத்துவதன் மூலமாக நன்றாக நடத்த முடியும் என்ற நல்லெண்ணத்தை வரவேற்கிறேன்.

இரண்டாவது ஸ்டேட் ட்ரிப்யூனல் அதாரிடியில் இரண்டு நீதிபதிகள் இருந்து அப்பீல்களைக் கவனித்துக் கொண்டு, இரண்டு பேர் சம்பளம் வாங்குவது நல்லதல்ல. ஒரு ட்ரிப்யூனல் இருந்தால் போதும் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, 47 (1), 47 (3) பிரிவுகளிலே ரோடுகளின் முன்னேற்றத்திற்காக 4 கோடி ரூபாய் வசதிகள் செய்யப்படும் என்பது போன்ற இரண்டு முக்கியமான ஷரத்துக்களை இங்கே காணோம். அதை வேண்டாமென்று விட்டு விட்டார்களோ, என்னவோ தெரியவில்லை.

சில மாறுதல்களைச் செய்வதற்கும் இந்தச் சட்டத்திலே இடம் இருப்பதால் வரவேற்கத்தக்கதாக இருக்கும் என்று சொல்லி முடிக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: பேரவைத் தலைவர் அவர்களே, அவசரச் சட்டம் சட்டமாக்கப்படுவது வரவேற்கத்தக்கதுதான். ஆனால் ஒரு விஷயத்தை நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசு இம்மாதிரியான அத்தாரிடி அமைக்கிற காலத்தில் ஜுடிஷியல் நாலட்ஜ் உள்ள ஒருவரோடு வேறு இருவரையும் அவருக்கு உதவியாகப் போடுவது என்கிற வழக்கம் இருக்கிறது. அதன் நோக்கமே சட்டம் தெரிந்த ஒருவர்—உதவி செய்வதற்கு 2 பேர் என்ற முறையில் அமைக்கிற காலத்தில் தமிழகத்தில் மட்டும் அத்தாரிடி என்பவரை ஒருவராகவே போடுவதற்குக் காரணம் என்ன? இது நல்லமுறையில் செயல் படுகிறது என்று சொன்னார்கள். இன்று நாம் அதை ஒத்துக் கொண்டாலும் கூட இனிமேலாவது வேறு முறையில் இதைத் திருத்துவதற்கு முயற்சி எடுத்துக்கொள்வார்களா? அத்தாரிடி ஒருவராக இருப்பது எபிஷியன்ஸியை அளிக்கும் என்றாலும் இன்னொரு பக்கத்தில் வேறுசில குறைபாடுகளும் ஏற்பட இடமேற்பட்டுவிடக் கூடும். இதையும் அரசு கவனிக்க வேண்டும்.

அடுத்து, ரிஜிஸ்ட்ரேஷன் ப்ளேட்டில் எம்.டி. எம்எஸ். என்று இதுவரை போட்டு வந்ததை டி.என்., டி.எம். என்பதாகப் போடுவது பற்றிச் சொன்னார்கள். இது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். தமிழ்நாடு என்று நம்முடைய மாநிலத்திற்கு பெயர் வைக்கப்பட்டதற்குப் பிறகு பழைய பெயரையே—எம்.டி., எம்.எஸ். என்பதாக வண்டிகளுக்குக் கொடுப்பது சரியல்ல. பிற

மாநிலங்களுக்கும் நம் பஸ்கள் போகின்றன. பழைய பெயரையே வைத்துக் கொண்டிருப்பதாக நினைக்க இடமிருக்கக்கூடாது. தமிழ்நாடு என்று பெயர் வைக்கப்பட்ட உடனேயே நாங்கள் பிராபிடென்ட் நிதியைப்பொறுத்தவரை—மத்திய அரசாங்கத் தொழிலகங்களில் எல்லாம் இந்தப் பெயரை அதற்கு மாற்றிக்கொண்டோம். காலம் கழித்தாவது இது இந்தத்துறைக்கு வருகிறது என்றாலும் இதை ஆதரிக்கிறேன். ஆயினும் எத்தனை காலம் இதுவரை எம்.டி., எம்.எஸ். என்று ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கும் வண்டிகளின் நம்பர் நீடிக்கும் என்பதையும் சொன்னால் உதவிகரமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நீதி மன்றம் அமைத்திருப்பதே வழக்குகளைக் குறித்த காலத்தில், மிகச் சுறுக்காக விசாரித்து தீர்வு செய்வதற்காகத்தான். ஒரே ஒரு நீதிமன்றம் என்று வைப்பது உடனடியாக நீதி கிடைப்பது காலம் தாழ்ந்துவிடக் கூடாது. "ஜஸ்டிஸ் டிலேய்ட் இஸ் ஜஸ்டிஸ் டினைய்ட்" என்று சொல்வார்கள். ஆக, தாமதம் தவிர்க்கப்பட வேண்டும் என்ற முறையில்தான் அரசு இத்தகைய முடிவு செய்திருக்கிறது. வழக்கறிஞர்களும் இதை ஏற்றுக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். திருமதி அனந்தநாயகி அவர்கள் இந்தக் கருத்தில் பார்க்காது சிக்கனம் என்ற முறையில் இது எதற்கு என்றார்கள். அதைத்தவிர வேறு ஒன்றும் இல்லை.

அடுத்து, அவசரச் சட்டத்தில் இருந்த 47-வது பிரிவு ஏன் இதில் காணப் படவில்லை என்றார்கள். முகம்மது இப்ராகிம் வெர்ஸஸ் மாநில போக்குவரத்து மன்றத்திற்கு நடந்த வழக்கு ஒன்றில் தலைமை நீதிமன்றம் அந்த செக்ஷனையே எடுத்துவிட்டார்கள். அதனால்தான் லிமிடெட் ப்ரொவிஷன் என்பது இப்போது இல்லை. எத்தனை பேர் ரூட் கேட்டாலும் தருவது என்ற நிலை இருக்கிறது. இதைப்பற்றி பரிசீலித்து நல்லமுறையில் எப்படி அமைக்கலாம் என்பதை அரசு ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது. தலைமை நீதிமன்றத்தின் தீர்ப்புக் கிணங்கத்தான் ப்ரொவிஷன் 47 இந்த மசோதாவில் இடம் பெறவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர் பேசும்போது அத்தாரிடி ஏன் ஒருவராக இருக்க வேண்டும், அதனால் திறமை இருக்கிறது என்றாலும் வேறுசில தவறுகளும் ஏற்பட இடமேற்படக் கூடுமே என்றார்கள். அவரே திறமை இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறார். அரசும் இப்போதுள்ள முறையில் எவ்வித குறைபாடும் சங்கடமும் இல்லை என்கிற காரணத்தினால்தான் அதை மாற்ற வேண்டும் என்று யோசிக்காது அப்படியே வைத்திருக்கிறது. தேவையில்லாததை மாற்றுவது சரியல்ல என்பது அரசாங்கத்தின் கருத்து.

ஆகவே, இந்த மசோதாவைப் பொறுத்தவரை எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் இதை ஏகமனதாக நிறைவேற்றித் தரும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி "1971-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 8/1971) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவே
மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பிரிவு 3, பிரிவு 4, பிரிவு 5, பிரிவு 6 ஆகியவை பே
முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின்
விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர்
" 1971-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) மசோ
டப் பேரவை மசோதா எண் 8/1971) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, மசோதா சட்
வேற்றப்பட்டது.

(ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி திருத்த) ம
(சட்டப்பேரவை மசோதா எண் 7/1971)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத்
அவர்களே,

"தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) ம
(சட்டப் பேரவை மசோதா எண் 7/1971)" ஆய்வுக்கு எடுத்துக் கொள்
வேண்டும்" என்பதாக முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின்
(நிலக்கீல்), கந்தகம் ஆகியவை பல்முனைவரி விதிக்கப்படுவதற்கு உட்
யாயிருந்தன. பெட்ரோல், டீசல் எண்ணெய், விமான எண்ணெய்,
எண்ணெய், உராய்வு எண்ணெய் முதலியன போன்ற ஏனைய பெட்
உற்பத்திப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகையில் கந்தகமும், நிலக்
உற்பத்தி செய்யப்படுகின்றன. கந்தகம், நிலக்கீல் தவிர ஏனைய பெட்
உற்பத்திப் பொருள்கள் தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை
சட்டத்தின் கீழும், தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு மோட்டார் எண்ணெ
விதிப்புச் சட்டத்தின் கீழும் ஒருமுனை வரி விதிக்கப்படுவதற்கு உட்
யாகும். உற்பத்தி வாயிலிலேயே வரி வசூல் செய்யப்படுவது இயலும்
பெட்ரோலிய உற்பத்திப் பொருள்கள் அனைத்தும் ஒரு சீரான வரிவி
பாட்டின்கீழ் வரும் வகையில் அரசு தார் (நிலக்கீல்), கந்தகம் இவ
ஒருமுனை வரிவிதிப்பு முறையின்கீழ்க் கொண்டுவர முடிவு செய்துள்ள

மேற்சொன்ன முடிவு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்
பிரிவு (1) உட்பிரிவின் கீழ் 1971 மார்ச் 10-ஆம் நாளன்று பிறப்பிக்
அறிவிப்பு ஒன்றால் செயலுக்குக் கொண்டு வரப்பட்டது.

பேரவை இம் மசோதாவை ஏற்கும்படி வேண்டுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவே
மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

* 1971 மார்ச் 31-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு பொதுவிற்பனை வரி (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 7/1971)" நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(4) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஊ) தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) திருத்த மசோதா

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) திருத்த மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(6) அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப் பாடு திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 6/1971).

* **மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1971-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப் பாடு) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 6/1971).

ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என நான் முன் மொழிகிறேன்.

1971 மார்ச் 19-ம் நாளன்று ஆளுநர் அவர்களால் சாற்றப்பட்ட தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) திருத்த அவசரச் சட்டதிற்கு (தமிழ்நாடு அவசரச் சட்டம் 3/1971) மாற்றாக இம் மசோதாவைக் கொண்டு வந்துள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது தமிழ்நாடு 1960-ஆம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) சட்டத்தின் (தமிழ்நாடு 1960-ஆம் ஆண்டு 18-வது சட்டம்) செல்திறனை 1—4—1971 முதல் 30—9—1971 வரை ஆறு திங்களுக்கு நீட்டிக்க வகை செய்யும் எளிய சட்டமாகும்.

குடியிருப்புக் கட்டடங்கள், குடியிருப்பிற்கொவ்வாத பிற கட்டடங்களின் வாடகைகளைக் கட்டுப்படுத்துதல், அத்தகைய கட்டிடங்களிலிருந்து குடித்தனக்காரர்கள் நியாயமின்றி வெளியேற்றப்படுவதைத் தடுத்தல் ஆகியவை தமிழ்நாடு 1960-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) சட்டத்தின் முக்கிய நோக்கங்கள் என்பதை உறுப்பினர்கள் அறிவர். இத்தகைய நோக்கங்களுக்காக இம் மாநிலத்தில் கடந்த முப்பதாண்டுக் காலமாகவே சட்டம் ஒன்று தொடர்ந்து செயலில் இருந்து வருகிறது. இதற்கு முன்பு செயல்பட்டு வந்த சட்டம் 1960-ஆம் ஆண்டுச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டுத் தொகுக்கப்பட்டது.

* 1971 மார்ச் 30-ம் தேதிய சிறப்புஅரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. க. இராசாராம்] [1971 ஏப்ரல் 3

1960-ஆம் ஆண்டுச் சட்டத்தின் பல்வேறு விதித்துறைகளை ஆய்வு செய்யவும், அச் சட்டம் தொடர்ந்து செயலிலிருக்க வேண்டிய அவசியம் பற்றி ஆய்வு செய்யவும் அரசு உள்துறைச் செயலாளர் தலைமையில் அதிகாரிகள் குழு ஒன்றை 1969 நவம்பரில் அமைத்தது.

இக் குழு தனது அறிக்கையை 1971 ஜனவரித் திங்களில் அரசுக்குப் பணிந் தனுப்பியது. அடங்கல் வகையிலான முக்கிய சில கருத்துரைகளை இக் குழு அளித்துள்ளது. இக் கருத்துக்களை அரசு மிக்க நாட்டமுடன் பரிசீலித்து வருகிறது. இக் குழுவின் கருத்துரைகள் மீது இறுதி முடிவுகள் எடுக்க அரசுக்குச் சிறிது காலம் ஆகும். அரசு அவற்றின் மீது முடிவுகள் எடுத்ததும், 1960-ஆம் ஆண்டு சட்டத்தைத் திருத்தும் அடங்கல் மசோதா ஒன்று இம் மன்றப் பேரவையில் முகவுரைக்கப்படும்.

ஆயினும், இச் சட்டத்தின் செல்திறன் 1971 மார்ச் 31-ம் நாளன்று முடிவடைய இருந்தது. முந்திய சட்டமன்றப் பேரவை 1971 ஜனவரி 5-ம் நாளன்று கலைக்கப்பட்டது. எனவே, இச் சட்டத்தின் செல்திறன் கால அளவை ஒரு அவசரச் சட்டத்தின் வாயிலாக 1971 மார்ச் 31-ம் நாளுக்குப் பின்னரும் நீட்டிப்பது அவசியமெனக் கருதப்பட்டது. இதற்கிணங்க, தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு 3-வது அவசரச் சட்டம் 1971 மார்ச் 19-ம் நாளன்று சாற்றப் பட்டது. இப்போது இம் மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள மசோதா இந்த அவசரச் சட்டத்திற்கு மாற்றாகக் கொண்டு வரப்படுகிறது. இதுவும் ஒரு இடைக்கால ஏற்பாடுதான்.

இம் மசோதாவை இப்பேரவை ஏற்குமென நம்புகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பில்லின் காலவரையறையை நீடிக்கவேண்டுமென்று கவர்னர் அவர்கள் ஒரு ஆர்டினன்ஸ் பாஸ் செய்தார்கள். அதைக் சட்டமாக்கவேண்டுமென்று இந்தத் திருத்தத்தைக் கொண்டுவந்து இருக்கிறார்கள்.

இந்தச் சட்டத்திலே பல கோளாறுகள் இருக்கின்றனவென்று ஏற்கனவே உயர்நீதிமன்றத்திலே பல தீர்ப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கொடுக்கப் பட்டிருக்கின்ற ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீஸன்ஸ் ஸ்டேட்மெண்டிலே ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தக் குகுழுவின் அறிக்கை அரசுக்குக் காலம் தாழ்த்திக் கிடைத்ததால் அதனுடைய அம்சங்களையெல்லாம் பார்த்து அதனுடைய பரிந்துரைகளையெல்லாம் பைசல் செய்வதற்கு அவகாசம் கிடைக்கவில்லையென்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். உயர்நீதி மன்றத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்ற தீர்ப்புகளை மனதில் வைத்துச் சட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டுமென்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். சிவில் புரஸீசர் கோட் முழுமையாகப் பயனுகாத தன்மையிலே இந்தச் சட்டம் அமைந்திருக்கிறது. வழக்கு மன்றத்திலே டிஸ்டிரிக்ட் முன்சிப் பெற்றிருக்கின்ற அதிகாரம் அடிஷனல் முன்சிப்புக்கு வழங்கப்படவில்லை என்றெல்லாம் தீர்ப்புகள் வந்திருக்கின்றன.

குறிப்பாக இந்தச் சட்டத்திலே கொஞ்சம் விரிவாகவும் தெளிவாகவும் சிவில் புரஸீசர் கோட்-ஐ அமல் படுத்துவதற்கு வழிசெய்யவேண்டுமென்று என்னுடைய ஆலோசனையைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

1971 ஏப்ரல் 3] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

இந்தச் சட்டத் திருத்தம் அமலாக்கக்கூடிய வகையிலே நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கவேண்டும். வருகிற ஜூன் மாதத்திலே சட்டக் கூட்டத் தொடரிலேயே இந்த பில் வருகின்ற நிலைமை ஏற்படும் என்று எதிர்பார்க் கிறேன். சட்டம் வந்து 6 வாரத்திற்குள் சட்டமாகவேண்டும். இல்லாவிட்டால் லீஸ் ஆகிவிடும் என்று கருதுகிறேன். எனவே துரிதமாக இந்தச் சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

திருமதி டி. என். அனந்தநாயகி: இந்த லீஸ் அன்ட் ரென்ட் கன்ட்ரோல் ஆக்டினுடைய ஆயுளை அதிகப்படுத்தவேண்டுமென்ற முறையிலேதான் இந்தச் சட்டம் வந்திருக்கிறது.

1971 செப்டம்பர் 30-ம் தேதி வரை நீட்டிக்கவேண்டுமென்ற நல்லெண்ணத் திலே கொண்டுவரப்பட்டிருப்பதால் நான் இதை வரவேற்கிறேன். நகரத்திலே வாழ்கின்ற மக்களுக்கு இது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது மிக நன்றாகத் தெரிகிறது. அதே சமயத்திலே இதை ஒரு காம்ப்ரிஹென்ஸிவ் ஆக்ட்டாக எல்லா நீதிபதிகளின் தீர்ப்புகளையும் முடிவுகளையும் எடுத்துக்கொள்கின்ற வகையிலே அந்தத் தீர்ப்புக்களையும் மனதில்கொண்டு புதிய சட்டத்தைக் கொண்டு வா வேண்டும். ஏற்கனவே இதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தக் குழு அறிக்கை தயாரித்திருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அந்த அறிக்கையை மக்கள் கருத்தை அறிகின்ற முறையிலேயும் சட்ட மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர் களைக் கொண்ட ஒரு பொறுக்குக் குழுவினைப் போட்டு முடிவுகள் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுமானால் இந்த ஆறு மாத ஆயுள் நீடிப்புப் போதாமல் இன்னும் அதை அதிகமாக நீட்டிக்காமல் இருப்பார்கள் என்று கூறமுடியாது. ஏனென்றால் ஆற அமர யோசித்து செய்வதற்கு அப்பொழுதுதான் வழி பிறக்கும். அவசர அவசரமாக, வருகின்ற செப்டம்பருக்குள் கொண்டுவர வேண்டுமென்று ஈடுபட்டால் திறமையாகச் சட்டத்தைக் கொண்டுவரமுடியாத நிலைமை ஏற்பட்டு இடுக்கண்கள் ஏற்படக்கூடிய நிலைமையும் ஏற்படும் என்ற காரணத்தினாலே பொறுக்குக் குழுவுக்கு அல்லது பப்ளிக் ஒபினியனுக்கு அதாவது மக்களுடைய எண்ணத்தைத் திரட்டுவதற்கு நாம் தயாராக இருக்க வேண்டும். அப்படிச் செய்து ஆறு மாதத்திற்குள் கொண்டுவந்தால் நான் அதை வரவேற்கிறேன். பல காரியங்கள் அதனாலே கொண்டுவரப்படும் என்ப தால் அது அவசியமாகக் கொண்டுவரப்படவேண்டும். அமைச்சர் அவர்கள் பொறுக்குக் குழுவிற்கு விடமுடியாது காலதாமதம் ஆகும் என்று சொல்வார் களானால் நீங்கள் 184 பேர்கள் இருக்கிறீர்கள், நாங்கள் 15 பேர்கள் என்ன செய்யமுடியும்? எனவே அந்த முறையிலே அவசரமாகக் கொண்டுவந்து திணிக்கக்கூடாது. ஆறு மாதத்திற்கு ஆயுளை நீட்டித்து நல்ல முறையிலே அந்தச் சட்டத்தைக் கொண்டுவரவேண்டும், இருக்கக் கூடிய குறைகளை நீக்கு வதற்குத் தயாராக இருக்கவேண்டும். அந்த நல்லெண்ணத்திலே இந்தச் சட்டம் கொண்டுவரப்படும் என்ற நம்பிக்கையிலே இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்களும் திருமதி அனந்த நாயகி அவர்களும் சில கருத்துக்களை இந்தச் சட்டத்திற்கு ஆதரவாக தெரிவித் திருக்கிறார்கள், அதற்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்டத் திருத்தத்தைப் பொறுத்தவரையில் காலத்தை நீட்டித்துக்

கேட்பதற்காகக் கொண்டுவரப் பட்டதே தவிர, வேறு அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருக்கின்ற குறைபாடுகளைப்பற்றி உயர்நீதி மன்றத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள், அந்தக் கருத்துக்களைப்பற்றியெல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

உள்துறைச் செயலாளருடைய தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு அது இவையெல்லாவற்றையும் பரிசீலித்து இருக்கிறது. நகரத்திலே உள்ள நிலைமைகளையும் விட்டு வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தின் நிலைமைகளையும் பரிசீலித்துப் பார்த்து அந்தக் குழு எண்ணங்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். அவையெல்லாம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்ற காரணத்தினாலே இந்த ஆறு மாதத்திற்குக் காலக் கெடு கோரப்பட்டு இருக்கிறது. குற்றங்குறைகளை நீக்கி, நல்ல மசோதா ஒன்று இந்த மன்றத்திலே வரவிருக்கிறது. அந்த நிலையிலே குற்றங்குறைகள் இருக்குமானால் அப்பொழுது உறுப்பினர்கள் தங்களுடைய நல்ல எண்ணங்களைச் சொல்லலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக மேலும் ஒரு பொறுக்குக் குழு போட்டு இதை மீண்டும் ஒரு ஆண்டுக் காலம் இரண்டாண்டுக் காலம் பரிசீலிப்பதற்கு எடுத்துக் கொண்டு அது தன்னுடைய ஆலோசனைகளைச் சொல்லிக்கொண்டே போவது என்றால் இந்தச் சட்டத்தை அமலாக்குவதிலே பல சங்கடங்கள் ஏற்படக் கூடும். மேலும் அடிக்கடி சட்ட நீட்டிப்பை அவசரச் சட்டத்தின்மூலமாகக் கொண்டுவருவது நல்லதல்ல. ஆறு மாத காலத்திற்குள்ளாக ஆலோசித்து அடுத்த சட்ட மன்றக் கூட்டத் தொடரில் இந்த மசோதாவைக் கொண்டுவருகிறோம் என்பதையும் அந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய நல்ல கருத்துக்களை வழங்குவதற்கு வாய்ப்பிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொண்டு இந்தத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்தக் குழுவிலே யார் யார் எல்லாம் அங்கம் வகிக்கிறார்கள்? அவர்கள் எல்லாம் ஏகமனதாகக் கருத்துத் தெரிவித்திருந்தார்களா? அல்லது வேறுபட்ட கருத்துக்கள் தெரிவித்திருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அந்த அறிக்கையை இந்த மன்றத்தின் முன் வைக்க இருக்கிறோம். அதற்குப் பிறகு உறுப்பினர்கள் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, இந்த மசோதாவை ஏகமனதாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1971-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 6/1971) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே,

"தமிழ்நாடு 1971-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 6/1971) நிறைவேற்றப்படவேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, ஏற்கனவே முதல் இரண்டு சிட்டிங்கிலே இந்த மசோதா நிறைவேற்றப்பட்டாலும் கூட, காம்ப்ரஹென்சிவ் லெஜிஸ்லேஷன் கொண்டுவர வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டு, அமைச்சரவர்கள் அடுத்த சட்டமன்றக் கூட்டத்திலே கொண்டுவருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அம்மாதிரி வரும்போது அந்த மசோதாவை இங்கே நிறைவேற்றி விடலாம். இருந்தாலும் அதையொட்டி என்னென்ன சம்பவங்கள் ஏற்பட்டன, என்னென்ன முடிவுகள் வந்திருக்கின்றன என்பதையெல்லாம்பற்றி ஒரு ஒயிட் பேப்பர் வைத்தால் உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, இந்தச் சட்டம் தமிழ்நாட்டிற்குப் புதிது அல்ல. கிட்டத்தட்ட இருபதாண்டுகளுக்கு மேல் இந்தச் சட்டம் தொடர்ந்து இருந்து வருகிறது. கடைசியாக இருக்கும் இந்தச் சட்டம் 1960-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டம். இது நிறைவேற்றப் பட்ட பிறகு உயர்நீதி மன்றத்திலே, பல நீதி மன்றங்களிலே சட்டத்திலே இருக்கும் நிர்வாகக் குறைபாடுகள், சில சிக்கல்கள் பற்றிக் கூறியிருக்கிறார்கள். இதைத் தவிர்ப்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு அதன் அறிக்கை வந்ததற்குப் பிறகு அதற்கேற்ற திருத்தத்தைக் கொண்டு வரலாம். முழுச் சட்டத்தையும் மாற்றப்போகிறோம் என்ற ஒரு கருத்து வெளியே பரவக்கூடாது என்பதால்தான் குறுக்கிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்தச் சட்டத்தினுடைய தன்மையில், தாத்பரியத்தில் எந்தவிதமான மாறுதலும் இருக்காது. அப்படிப்பட்ட எந்த நோக்கமும் கிடையாது.

குத்தகைதாரர்கள், வாடகைக்கு இருப்பவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்திலேதான் இந்தச் சட்டம் நாட்டிலே கொண்டுவரப்பட்டு அமல் நடத்தப்படுகிறது. ஆனால் அதிலுள்ள நிர்வாகச் சிக்கல்கள், உயர்நீதிமன்றங்கள் சுட்டிக்காட்டிய சில தவறுகள் இவைகளைத் திருத்திக் கொள்ளவேண்டுமென்ற நல்ல எண்ணத்தில், இந்தச் சட்டத்தை நல்லமுறையில் அமல்படுத்த சில திருத்தங்கள் பரிசீலிக்கப்படுகின்றன. அந்தத் திருத்தங்களை மீண்டும் பொறுக்குக் கமிட்டிக்கு விடுவதா, அல்லது நாமே விவாதித்து நிறைவேற்றுவதா என்பதைபற்றியெல்லாம் அப்பொழுது முடிவு செய்து கொள்ளலாம்.

நான் இதைச் சொல்வதற்குக் காரணம். மாண்புமிகு திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள்கூட இதே சட்டத்தை இதே மன்றத்திலே அம்மையார் கொண்டுவந்தபொழுது என்னென்ன திருத்தங்கள் வேண்டும், 500 ரூபாயாக இருக்கலாமா, 250 ரூபாயாக இருக்கலாமா என்று பேசிய காட்சிகளெல்லாம் என்னுடைய நினைவிற்கு வருகின்றன. கருத்து வேறுபாடு இருக்கலாம், அந்தக் கருத்து வேறுபாடுகளை மசோதா கொண்டுவரும்பொழுது பேசிக்கொள்ளலாம்.

[திரு. செ. மாதவன்] [1971 ஏப்ரல் 3]

இப்பொழுது குறைந்த காலத்திற்குள்ளே இதை நிறைவேற்ற முயற்சிக்கிறோம் என்று, இப்படிப்பட்ட நல்லெண்ணம் காண்பிப்பதை தவறுபோல காண்பிப்பது நல்லது அல்ல என்பதை அவர்கள் உணர்வார்கள் என்று நம்புகிறேன்.

எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்துக்களைப்பற்றி பேசிக் கொள்ளலாம் என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் புனராலோசனை என்று, காம்ப்ரஹென்சிவ் லெஜிஸ்லேஷன் என்று சொன்னதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. இந்தச் சட்டத்திலே மாறுதல் ஏற்படவேண்டுமென்ற எண்ணத்தைக் கூறுவதே தவிர, காம்ப்ரஹென்சிவ் லெஜிஸ்லேஷன் என்றவுடன் சட்டத்தையே மாற்றப்போகிறோம் என்ற கருத்தை எடுத்துக்கொள்ளக்கூடாது. சட்டத்தின் தன்மையிலே எந்தவிதமான மாற்றமும் கிடையாது. இதிலேயுள்ள மாறுதல்களைத்தான் கூறுகிறோமே தவிர, காம்ப்ரஹென்சிவ் லெஜிஸ்லேஷன் என்பது இந்த மன்றத்திலே பேசப்படும் ஒரு வார்த்தை. எல்லாமே மாற்றப்போகிறோம் என்ற எண்ணத்திற்கு ஒரு தெளிவு ஏற்படுத்த வேண்டுமென்ற முறையிலே கூறுகிறேன், தன்மையிலே எந்தவிதமான மாற்றமும் கிடையாது, ஆங்காங்குள்ள சிக்கல்களை நீக்குவதற்கான மாற்றம் என்பதை வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"தமிழ்நாடு 1971-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 6/1971) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, மசோதா, சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(4) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(எ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

(6) அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 1/1971)

* **மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, "தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு மசோதாவை* (சட்டப் பேரவை மசோதா எண் 1/1971) ஆய்வு செய்வதற்காக முப்பது உறுப்பினர்கள் அடங்கிய (20 சட்டப் பேரவை உறுப்பினர்களும், 10 சட்ட மேலவை உறுப்பினர்களும்) கூட்டு ஆய்வுக் குழு ஒன்றை அமைக்க சட்ட மேலவையின் இசைவைப் பெறுவதுடன், இக் கூட்டு ஆய்வுக் குழுவில் கீழ்க்கண்ட பேரவை உறுப்பினர்கள் (உறுப்பினர் பட்டியல் பின்னர் வழங்கப்படும்) பணியாற்ற தெரிந்தெடுக்கப்படுகிறார்கள்" என்று முன்மொழிகிறேன்.

* 1971 மார்ச் 26-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

1971 ஏப்ரல் 3] [திரு. க. அன்பழகன்]

இந்தச் சட்டம் கூட்டு குழுவிற்கு வருவதற்கான காரணத்தையும், மற்றவைகளையும் விளக்கிக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தச் சட்டம் கடந்த ஆண்டு, 1970-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் இந்த சட்டசபையின் முன் விவாதிக்கப்பட்டு, இந்த மசோதா இந்த அவையில் எடுத்துக்கொள்ளப்பட்டு, கூட்டு ஆய்வுக்குழு அந்த நோக்கிலே அமைக்கப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, விரைவிலே நிறைவேற்றப்படவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பேரவை கலைக்கப்பட்டதன் விளைவாக கூட்டு ஆய்வுக்குழு தொடர்ந்து இருந்து பரிசீலனை செய்யக்கூடிய நிலைமை இல்லை. எனவே தான் மறுபடியும் இதே அவையில் இந்தச் சட்டம் கூட்டு ஆய்வுக்குழுவின் பரிசீலனைக்கு அனுப்பவேண்டுமென்ற வேண்டுகோளோடு இன்று இந்த மசோதா மறுபடியும் கொண்டு வரப்படுகிறது.

இந்த மசோதா சட்டசபையின் முன் விவாதத்திற்கு வரவேண்டியதன் அவசியத்தை இதற்குமுன் இந்த அவை ஓரளவிற்கு அறிந்திருக்கின்றது என்று நான் உணர்கிறேன். இந்தச் சட்டம் ஏறத்தாழ 1920-ம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. நகரப்பகுதிகள், டவுன் பிளானிங் இவற்றைப் பற்றி விளக்கம் அளிக்கப்பட்டு, பல ஆண்டு காலமாக செயல்பட்டு, எத்தனையோ குறைகள் இடைக்காலத்திலே கண்டுபிடிக்கப்பட்டு, அவற்றை நிவர்த்திக்க, அவற்றை மாற்ற பலமுறை ஆலோசிக்கப்பட்டு, இவையெல்லாம் அவ்வப்பொழுது நிறைவேற்றப்பட முடியாமல் போனதாலும், அதேபோல் நகரங்களின் சீரமைப்பிற்கான இந்த அடிப்படையிலே இந்தச் சட்டம் இயங்குவது போதாது, நகரப்பகுதிகள் மட்டுமல்ல, கிராமப்பகுதிகள் உள்ளடங்கிய நாட்டுப்புறங்களையும் சேர்த்து ஒரு விரிவான அமைப்பை ஏற்படுத்துவதற்கு ஓர் சட்டமும் உருவாக்கவேண்டுமென்ற கருத்துக்கள் இடைக்காலத்திலே தோன்றி வளர்ந்திருக்கின்றன.

எனவே, இன்றைக்கு இங்கே வரும் மசோதா தமிழ்நாடு முழுவதிலுமுள்ள எல்லாப் பகுதிகளையும் உள்ளடக்க வாய்ப்புள்ளதாக, ஆங்காங்கேயுள்ள சிற்றூர்களையும், பேரூர்களையும், பெரு நகரங்களையும் அவைகளை ஒட்டிய பகுதிகளையும் பல்வேறு தனித்தனி அமைப்புகள் மூலமாக செம்மைப்படுத்த, சீராக்க, வளர்ச்சியடைய இவைகளையெல்லாம் கருத்திலே கொண்டு இந்த மசோதா உருவாக்கப்பட்டிருக்கிறது. இதனுடைய குறிப்பான விளக்கங்களை நான் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

1920-ம் ஆண்டு முதற்கொண்டு இம்மாநிலத்தில் நகரமைப்பு (Town Planning) ஒரு திட்டமிட்ட அலுவலாக மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. நகரமைப்புத் திட்டங்களைத் திட்டமிடுவதற்கும் செயற்படுத்துவதற்குமான சட்ட அதிகாரங்கள், 1920-ம் ஆண்டு தமிழ்நாடு நகரமைப்புச் சட்டத்தினாலும் அதன்கீழ்ச் செய்யப்பட்ட விதிகளினாலும் உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதன் கோட்பாடும் பயன்படும் தன்மையும் நகரப் பகுதிகளுக்கு மட்டுமே நீடிக்கப்பட்டுள்ளது. கீழ்க்காணும் வகையில், தற்போதுள்ள சட்டத்தில் ஏனைய சில இடர்பாடுகளும் குறைகளும் உள்ளன.

வட்டாரத் திட்டம் தயாரிக்கப்படுவதற்கு உள்ளாட்சி மன்றங்களில் சேர்ந்து கூட்டு நகரமைப்புக் குழுவினை அமைப்பதற்கு விதித்துறை யிருப்பினும் பெருந்திட்டத்தைத் (Master Plan) தயாரிப்பதற்கும் அதை நிறைவேற்றுவதற்கும் வட்டாரத் திட்டங்களைத் தயாரிப்பதற்கும் கட்டாயமான விதித்துறைகள் இல்லை.

(viii) திட்டம் தயாரிக்கப்படும் அறிவிப்புத் தேதியிலிருந்து 3 ஆ களுக்குள் நிலங்கள் கையகப்படுத்தப்படவில்லையென்றால் அந்த இயல்பாகவே விடுவிக்கப் படுவதற்கு வகை செய்தல்.

(ix) நிலம் அல்லது கட்டிடங்கள் அமைத்தல் அல்லது பயன்படுத் அல்லது பயன்படுத்துவதை மாற்றுதல் மீது, அமைப்புத் திட்ட அதி மன்றங்கள், திட்டப் பரப்பின் பல்வேறு பகுதிகளுக்கும் பல்வேறு பயனு பல்வேறு வீதங்களில் மேம்பாட்டுக் கட்டணங்கள் விதிக்கப்பட வேண் மேம்பாட்டுக் கட்டணத்தில் உயர் அளவு வீதத்திற்கும் உட்பட்டு, ம அரசின் முன் அனுமதியுடன் இந்த வீதங்கள் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

(x) மாநில நகர, கிராம அமைப்புத் திட்ட, மேம்பாட்டு நிதி ஒ அமைக்கப்பட்டு இந்த நிதியிலிருந்து எந்தக் காரணங்களுக்காகத் தொ கொடுக்கப்பட வேண்டுமென்பதையும் குறிப்பிட வேண்டும்.

(xi) அமைப்புத் திட்ட அதிகார மன்றம் பெற்றுக் கொள்ளும் எல்லா மேம்பாட்டுக் கட்டணங்களும் தொகைகளும், "அமைப்புத் திட்ட, மேம்பாட் நிதிக் கணக்கு" என்ற தனிக் கணக்கின் பெயரில் பற்று எழுதப்பட வேண்டும்; இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட காரியங்களுக்காக இந்த நிதி பய படுத்தப்பட வேண்டும்.

(xii) இழப்பீடு அளித்தல், மேம்பாட்டுக் கட்டணங்களை விதித்த மதிப்பிடுதல் சம்பந்தப்பட்ட தகராறுகளை முடிவு செய்ய நடுவர் மன்றம் அமைத்தல்.

(xiii) தமிழ்நாடு அரசு வீட்டு வசதி வாரியம் மேற்கொண்ட எந்த ஒரு வீட்டு வசதித் திட்டத்திற்கு அல்லது பணிக்கு, இச்சட்டத்தின் விதி துறைகள் பொருந்தாவென்று வகை செய்தல்.

(xiv) மத்திய, மாநில அரசு அதிகார மன்றங்கள் அனுமதி பெறுத னின்று விலக்களிக்கப்பட்டிருப்பினும் அவைகள் அவற்றின் கட்டிடப் பணிகள் குறித்து அறிவிப்புக் கொடுக்க வேண்டுமென்று வகை செய்தல்;

உறுதியும், வலிவும் பொருந்திய சட்ட பூர்வமான அடித்தளத்தை அமைப்பதற்கு இந்த மசோதா வகை செய்கிறது; இந்த அடிப்படையில் எல்லா நிலைகளிலும் நகர, கிராம அமைப்புத் திட்டம் விரைந்து மேற்கொள்ளப் படவும் தற்போதுள்ள சட்டத்தில் காணும் திருத்தங்களும் குறைகளும் நீக்கப்படவும் இந்த மசோதா வகை செய்கிறது. இம்மசோதா, மேற்சொன்ன நோக்கங்களை எய்தக் கோருகிறது.

இதே மசோதா 1970, ஆகஸ்டு திங்கள் நடைபெற்ற கூட்டத்தொடரிலும் முகவு எடுத்துரைக்கப்பட்டது என்பதை நான் இத்தருணத்தில் மதிப்பிற்குரிய உறுப்பினர்களின் நாட்டத்திற்குக் கொண்டு வர விழைகிறேன். அதன் பின்னர் இம் மசோதா கூட்டு ஆய்வுக் குழு ஒன்றின் பரிசிலனைக்காக அனுப்பப்பட்ட ஆனால் சட்டப் பேரவை கலைக்கப்பட்டதன் காரணமாக இந்த மசோதாவைப்

பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ள இயலவில்லை. இம் மசோதா காலங் கடந்து விட்டது. தற்போது ஆலோசனையில் உள்ள மசோதாவும், காலங்கடந்து விட்ட மசோதாவும் ஒன்று தான்.

இவை கூறி இம்மசோதா கூட்டு ஆய்வுக் குழுவின் பரிசிலனைக்கு அனுப்பப் பட வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மசோதாவைப் பற்றி நான் இன்னும் ஒன்றிரண்டு சொல்ல விரும்பு கிறேன்.

இது நீண்ட காலமாக சட்ட மன்றத்தில் உள்ள பலராலும், நிர்வாகத்தில் உள்ளவர்களாலும் இப்படி ஒரு மசோதா நிறைவேற்றப்படவேண்டுமென்ற கருத்து இருந்து வருகிறது. இந்த மசோதா இதற்கு முன் இந்தப் பேரவையில் கொண்டு வரப்பட்டு அது கலைக்கப்பட்ட பின்னர் அந்தக் குறிக்கோள் தடைப் பட்டது. இப்படிப்பட்ட மசோதா சட்டமாக்கப்படாவிட்டால் நம்முடைய குறிக்கோளில் வெற்றி காண முடியாது.

நகர்புறங்களுக்கு மட்டும் பயன்படுத்தப்படும் ஒரு சட்டத்தைக் கொண்டு நகர்ப்புறங்களும், நாட்டுப்புறங்களும், எல்லாப் பகுதிகளும் பயன் பெறு வதற்கு ஏற்ற முறையில் செயல் படுத்த முடியாது. கிராமப்புறங்கள் வளர்ச்சி யடைவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டியிருக் கிறது. எனவே, நாட்டின் மொத்த நன்மைக்கும் கிராம, நகரப் பகுதிகள் அனைத்துக்கும் ஏற்ற முறையில், இவை ஏற்ற வளர்ச்சி பெறத் தக்க வகையில் ஒரு சட்டம் தேவைப்படுகிறது. இவ்விரண்டு பகுதிகளும் நல்ல வளர்ச்சி பெற்று, சீரான வளர்ச்சி பெற்றால் தான் நாட்டிலே மாற்றம் ஏற்பட முடியும். இதற்காக அதிகாரத்தின் மூலம் வரையறுத்து அப்படிப்பட்ட வளர்ச்சிக்கு, நாட்டு மக்களின் ஓரளவு திட்டமிட்ட வளர்ச்சி பெறுவதற்கு ஏற்ற அடிப்படை யில் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. எனவே இந்த மசோ தாவை பொறுக்குக் குழுவிற்கு கூட்டுப் பொறுக்குக் குழுவிற்கு, ஆய்வுக் குழுவிற்கு கொண்டு செல்வதற்கு, ஆய்வுக் குழுவின் ஆலோசனைக்கு விடுவதற்கு அனுமதி கேட்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

THIRU N. K. PALANISAMI : Sir, I move the following amendment :

"That the Tamil Nadu Town and Country Planning Bill, 1971 (L.A. Bill No. 1 of 1971) be circulated for the purpose of eliciting public opinion thereon."

The amendment was duly seconded.

MR. SPEAKER : The motion and the amendment are before the House for discussion.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையின் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் இந்தக் கூட்டுப் பொறுக்குக் குழுவின் உறுப்பினர்களாக தெரிந்தெடுக்கப்படவேண்டும்" என கோருகிறேன்.

(1) திரு. து. ப. அழகமுத்து.
(2) திரு. எஸ். ஆறுமுகம்.
(3) திரு. வி. கே. ராஜா பிள்ளை.
(4) திரு. எஸ். கணேசன்.

(5) திரு. ஜே. ஜேம்ஸ்.

(6) டாக்டர் எச். வி. ஹாண்டே.

(7) திரு. சு. துரைசாமி.

(8) திரு. பழனிவேல் ராஜன்.

(9) திரு. எஸ். சகாதேவன்.

(10) திரு. சௌடி. எஸ். சுந்தர பாரதி.

(11) திரு. இராம. அரங்கண்ணல்.

(12) திரு. எம். ஏ. லத்தீப்.

(13) திரு. மா. பா. சாரதி.

(14) திரு. எம். ஆர். கண்ணன்.

(15) திரு. ஆர். இராமலிங்கம்.

(16) திரு. கே. எஸ். கோதண்டராமையா.

(17) திரு. ஆ. கு. சுப்பையா.

(18) திரு. எம். சுரேந்திரன்.

(19) திரு. கே. எம். சுப்பிரமணியம்.

(20) திருமதி டி. என். அனந்தநாயகி.

திரு. என். கே. பழனிசாமி: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா குறித்து நான் ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

பொதுவாக, ரோடுகளைச் சரியாக இணைப்பது, ஜலதாரை வசதி செய்து கொடுப்பது, மின்வசதி செய்து கொடுப்பது, இன்னும் குடிசைகளை அப்புறப் படுத்தி வேறு இடங்களில் அவர்கள் வசிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பது போன்றவைகளைப் பற்றி இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. இருந்த போதிலும் இந்த மசோதாவில் உள்ள ஒரு பெரிய குறைபாடு என்னவென்றால் சென்னை நகருக்கு ஒரு மாஸ்டர் ப்ளான் இல்லை. பல ஆண்டுகளாக மக்களால் விரும்பப்பட்டு வருகிற 'கிரேட்டர் மெட்ரூஸ்' அவசியம் இதில் புகுத்தப்பட் டிருக்கவேண்டும். செக்ஷன் 14ல் மாஸ்டர் ப்ளான் போடுவதற்கான திட்டம் இருக்கிறது. ஏற்கெனவே இந்தச் சட்டசபையில் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் இருந்தபோது அந்த மாதிரி ஒரு திட்டம் கொண்டு வரப்போவதாகச் சொன்னார்கள். அதன்மூலம் அமைந்தகரையிலிருந்து அசோக் நகர் வரை ஒரு ரோடு போட்டு ஆஸ்பத்திரி எல்லாம் கட்டினார்கள். இன்று கூட திருவொற்றியூர், ஆவடி, சைதாப்பேட்டை போன்ற இடங்களில் தண்ணீர் வசதி, ரோடு வசதி போன்றவை பற்றாக்குறையாக இருந்து வருகின்றன.

அதுமட்டுமல்ல. கல்கத்தா போன்ற நகரங்களுக்கு மாஸ்டர் ப்ளான் இருக்கின்றது. சென்னை நகரம் ஒரு பெரிய நகரமாக இருப்பதால் எல்லாக் காரியங்களையும் இணைத்துக்கொண்டு போகக் கூடிய முறையில் ஒரு மாஸ்டர் ப்ளான் அவசியம் வேண்டும். அதை இதில் 'ஸ்பெஸிபிக்கா'க் குறிப்பிட்டிருக்க வேண்டும். தண்ணீரை அசுத்தம் செய்வது தடைப்படுத்தப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் 'பொல்யூஷன்' இருக்கிறது. பல தொழிற்சாலைகளிலிருந்து வரும் கரும் புகையினால் மக்களின் சுகாதாரவசதி பாதிக்கப்பட்டிருக்கும் நிலை இருக்கிறது. ஆகவே, 'ஏர் பொல்யூஷனையும்' இந்த மசோதாவில் சேர்ந்திருக்க வேண்டும். பின்னர், 'ரெஸிடன்ஷியல் ஏரியா', நான்-

ரெஸிடென்ஷியல் ஏரியா' என்றிருக்கிறது. ரெ டன்ஷியல் ஏரியாவில் எந்த விதமான தொழிற்சாலையையும் ஏற்படுத்த அனுமதிப்பதில்லை என்பது பெயரளவில்தான் இருக்கிறதே தவிர நடைமுறையில் பல இடங்களில், ரெஸிடன்ஷியல் ஏரியாக்களில் பல தொழிற்சாலைகளுக்கு லைசென்ஸ் வழங்கப் பட்டிருக்கின்றன. பிரின்டிங் ப்ரெஸ் இருக்கிறது. உதாரணமாக ஆயிரம் விளக்குத் தொகுதியில் இருக்கிறது. நார்த் மெட்ரூஸில் இருக்கிறது. மக்கள் வசிக்கக்கூடிய இக்கட்டான இடங்களில் தொழிற்சாலைகள் துவங்க அனுமதி வழங்கப்படுவதால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, எக்காரணத்தைக் கொண்டும் ரெஸிடன்ஷியல் ஏரியாக்களில் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு லைசென்ஸ் வழங்கக் கூடாது.

பின்னர், அபிவிருத்தி வரி என்று வாங்குகிறார்கள். அபிவிருத்தி செய்வதற்கு முன்கூட்டியே இந்த வரி வாங்கப்படுகிறது. அபிவிருத்தியான பிறகுதான் இந்த அபிவிருத்தி வரி வாங்கப்படவேண்டுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருத்தமும், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானமும் அவைமுன் இருக்கின்றன. உறுப்பினர்கள் பொதுவாகக் கருத்துக்களைச் சொன்னதற்குப் பிறகு அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்கள். பொதுவாக பொறுக்குக் குழுவில் இடம் பெற்றிருப்பவர்கள் சாதாரணமாக இந்த விவாதத்தில் கலந்து கொள்வதில்லை. அமைச்சர் அவர்களும் பொதுவாகப் பேசுவார்கள். அதிக நேர விவாதம் கூடாது என்றுதான் பொறுக்குக் குழுவிற்கு அனுப்பப்படுகிறது. ஆகவே, பொறுக்குக் குழு உறுப்பினர்கள் இந்த விவாதத்தில் கலந்து கொள்வதைத் தவிர்த்துக் கொள்வது நல்லது. ஏனெனில் அவர்களுக்குப் பொறுக்குக் குழுவில் இதுபற்றி விவாதிக்க வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, மற்ற உறுப்பினர்கள் பொதுப்படையான அம்சங்களைச் சொல்லுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சபாநாயகர் அவர்களே, இப்போது இந்தச் சட்டமன்றத்திலே இந்த மசோதா கொண்டுவரப்பட்டு மீண்டும் ஒரு முறை இங்கு வருவதால் ஓரளவிற்கு நன்மை பயக்கும் என்றுதான் நினைக்கிறேன். எந்த அளவிற்கு மக்கள் இந்த மசோதா பற்றித் தெரிய வேண்டுமென்று விரும்புகிறார்களோ அந்த அளவிற்குத் தெரிவதற்கு இதனால் ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது. இது பொறுக்குக் குழுவிற்குப் போவதால் அங்கு பல விஷயங்களைப் பற்றியெல்லாம் அலசி ஆராய்ந்து உறுப்பினர்கள் நல்ல முறையில் புது அமைப்பாக இந்த மசோதாவைக் கொண்டு வருவார்கள் என்று நான் நம்புகிறேன். அதே நேரத்தில் அவர்களுக்குச் சில ஆலோசனைகளைச் சொல்ல முடியும் என்ற முறையில்தான் நான் இரண்டு மூன்று கருத்துக்களை இங்கு வைக்கலாம் என்று நினைக்கிறேன்.

சாதாரணமாக, டவுன் ப்ளானிங் என்ற கருத்து நீண்ட காலமாகவே நம் நாட்டில் இருந்து வருகிறது. தமிழ் நாடு பூராவிற்கும் ஒரு மாஸ்டர் ப்ளான் வேண்டுமென்ற கருத்தில்தான், நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் திட்டவட்ட மான முறையில் ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடுதான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. அப்படிக் கொண்டு வருகிறபோது ஏற்கனவே பல ஆலோசனைகள் கொடுக்கப்பட்டிருக் கின்றன.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1971 ஏப்ரல்

ஒரு பத்தாண்டுகளுக்கு முன்பாகவே மதுரை நகரத்தைச் சுற்றி ஒரு 'ரிங் ரோட்' போடவேண்டுமென்று சொல்லப்பட்டது. அப்படிப்பட்ட 'ரிங் ரோட்' அமைப்பு மிக வசதியாக இருக்கும் என்பதை இன்று பல பெரிய நகரங்களைச் சுற்றிப் பார்த்தால் தெரியும். ஆகவே, அப்படி ரிங் ரோட்கள் அமைக்கப்பட வேண்டுமென்ற என் ஆலோசனையைச் சொல்லிக் கொள்கிறேன். அம்மாதிரி யான ஆலோசனைகளை செலக்ட் கமிட்டி உறுப்பினர்கள் எடுத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

அதே நேரத்தில் ஸ்லம் க்ளியரன்ஸ் சம்பந்தமாக, ஸ்லம் ஏரியாக்களைப் பற்றி இந்த மசோதாவில் பல இடங்களில் வருவதைக் காண்கிறேன். ஸ்லம் க்ளியரன்ஸ் சம்பந்தமாக ஒரு வாரியமே அதற்காக அமைத்து செயல்பட இருக்கிறோம். ஆகவே, அதிலுள்ள விஷயங்கள் எந்த அளவிற்கு இதில் இடம் பெற முடியுமோ அந்த அளவிற்கு இடம் பெறக் கூடிய முறையில் பார்த்துக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம், இம்மாதிரி ப்ளானிங் என்று வரும்போது ரிஜிட்டாக விதிகள் போட்டுவிட்டால் விதிகள் மட்டும்தான் இருக்குமே தவிர நன்மைகள் ஏற்படாத நிலை வந்து விடுகிறது. ஆகவே பெரிய நகரங்களைப் பொறுத்தவரையில் நான் சில ஆலோசனைகளைக் கூறலாம் என்று நினைக்கிறேன்.

சாதாரணமாக பெரிய நகரங்களிலே 'ஃபைவ் ஃபுட் பாத்' உண்டு. சென்னை நகரில் அதைப் பார்க்க முடியவில்லை. சாதாரணமாக வெயில் அடித்தாலும் சரி அல்லது மழை பெய்தாலும் சரி அந்த நேரங்களில் அந்த 'பாத்', மேலே ஷெல்டரும் இருந்தால் அது நடைபாதைக்காரர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும். சிங்கப்பூர் நகரத்தை நாம் போய்ப் பார்த்தால் அந்த 'பாத்'-ஐக் காணலாம், அதுவும் 'ஷேட்' ஓடு இருக்க வேண்டும் என்று வைத்திருக்கி றார்கள், நகரை அழகு படுத்தவேண்டுமென்ற காரணத்திற்காக.

'கண்ட்ரி ப்ளானிங்' என்று வரும்போது எந்த மட்டத்தில் வருகிறது என்று தெரியவில்லை. கிராமங்களைத்தான் அதிகமாகக் கவனிக்கவேண்டும். இன்று மேநாடுகளுக்குச் சென்று பார்த்தால் அழகாக இருப்பது கிராமங்கள் தான். ஆனால் இங்கு நம் நாட்டில் கிராமங்கள் பொருளாதாரத் துறையில் ரொம்பவும் மோசமாக இருப்பதன் காரணமாக சரியான வீட்டுவசதி இல்லா திருப்பதால் அவை மோசமான நிலையில் இருக்கின்றன. ஆகவே கிராமங்களைப் பற்றியும், கிராமத்தில் எந்த எல்லை என்பதுபற்றிக்கூட நிர்ணயப்படுத்த சில அதிகாரங்களைக் கூட எடுத்துக் கொள்வது உதவிகரமாக இருக்கும்.

செலக்ட் கமிட்டிக்கு முன்னால் உறுப்பினர்கள் பல ஆலோசனைகளைக் கொடுப்பார்கள். அவற்றை மட்டுமின்றி எங்கள் ஆலோசனைகளையும் செலக்ட் கமிட்டி உறுப்பினர்கள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த மசோதாவி லுள்ள சிறப்பான அம்சங்களை மாண்புமிகு அமைச்சரவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதே நேரத்தில் இந்த மசோதாவானது பொறுக்குக் குழு விற்கு அனுப்பப்படுகிறது என்ற காரணத்தால், அந்த பொறுக்குக் குழுவிற்குச் சில ஆலோசனைகளை சொல்லக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

1971 ஏப்ரல் 3] [திரு. ஏ. சி. நரசிம்மன்]

இந்த மசோதாவிலே தமிழ்நாடு டவுன் அண்டு கண்ட்ரி பிளானிங் போர்டு என்று இருக்கிறது. அதிலே 25 அங்கத்தினர்கள் இடம் பெறுகிறார்கள். அதில் இவ்வளவு பேர் இருக்கவேண்டுமா என்று எண்ணிப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலும் குறிப்பாக 9 செயலாளர்கள், அரசாங்கச் செயலாளர்கள் இடம் பெறுகிறார்கள். 2 செயலாளர்கள் இருக்கலாம் என்று கருதுகிறேன். டவுன் அண்டு கன்ட்ரி பிளானிங் செக்ரடரி, லோகல் அட்மினிஸ் டிரேஷன் செக்ரடரி இருந்தால் போதாதா? மற்றவர்களிடமிருந்து ஆலோசனைகளை அவ்வப்போது பெற்றுக்கொள்ளலாமே, அவர்களும் இடம் பெறவேண்டுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ரீஜினல் பிளானிங் அதாரிடி என்று அமைக்கிறோம். ரீஜனல் பிளானிங் அதாரிடி, அடுத்து லோக்கல் பிளானிங் அதாரிடி அமைக் கிறோம். ரீஜினல் பிளானிங் அதாரிடி, லோகல் பிளானிங் அதாரிடியைக் கண்ட்ரோல் செய்யும் அதிகாரம் உண்டா? இல்லையா? ரீஜினல் பிளானிங் அதாரிடிக்கு என்னென்ன அதிகாரங்கள்? அவர்கள் திட்டங்கள் தயாரிக்கலாமா? ரீஜினல் பிளானிங் அதாரிடி, லோகல் பிளானிங் அதாரிடி தனித்து இயங்குமா என்று திட்டவட்டமாகக் கூறவில்லை. 4-5 உறுப்பினர்கள் ரீஜினல் பிளானிங்கிலிருந்து லோகல் பிளானிங் அதாரிடிக்கு வருவார்கள் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அப்படியானால் லோகல் பிளானிங் அதாரிடி, ரீஜனல் பிளானிங் அதாரிடி அவர்களுடைய கண்ட்ரோலில் இருக்குமா என்பது சரியாக இதிலே தெரியவில்லை. அதே நேரத்தில், டவுன் பிளானிங் அதாரிடியை ஏற்கனவே டவுன் பிளானிங் இருக்கக்கூடிய இடத்தில் லோகல் பிளானிங் அதாரிடி இருக்குமா? அதே இடத்திலே லோகல் பிளானிங் அதாரிடியாக அவர்களே நியமித்துக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. பொதுவாக அமைக்கப்படும் அதாரிடிகளுக்கு அரசாங்கத்தின் சார்பில் ஒரு சேர்மனையும், மற்றும் அந்தக் குழுவில் இருப்பவர்களை நியமனம் செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டு இருக்கிறது. ஆனால் ஏற்கனவே நகர மன்றத்தில் இருக்கும் டவுன் பிளானிங் அதாரிடி இருக்கிற காரணத்தால் தனிப் பட்ட ஜுரிஸ்டிக்ஷன் ஆகி விடுகிறது. புதிய லோகல் அதாரிடியின் கீழ் வருகிற ஏற்கனவே நகரமன்றத்தில் இருப்பவர்கள் தனி லோகல் பிளானிங் அதாரிடியாகி விடுகிறார்கள். புதிதாக அமைக்கும் நகர மன்றங்களுக்கு புதிய லோகல்பிளானிங் அதாரிடி என்ற பெயரில் அமைக்கப்படுகிறது.

நகர மன்றத்தில் இருக்கும் குழு கூட 1 ஆண்டு காலத்திற்குத்தான் உண்டு. ஒரு ஆண்டு காலத்திற்குப் பிறகு புதிய குழுவை அமைக்க வழி இல்லாமல் அரசாங்கத்திலிருந்து நியமனம் வரவேண்டுமா என்று தெளிவாக இல்லை. ஆனால் லோகல் பிளானிங் அதாரிடியைப் பொறுத்தவரையில் நகரமன்றமே அமைத்துக் கொள்ள வழி வகை செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். நகர மன்றத்திற்கு இருக்கும் அதிகாரங்களைப் பெற்றுக்கொள்வது அவ்வளவு சரியாக இருக்காது. எனவே லோகல் அதாரிடியைப் பொறுத்தவரையில் ஒரு தனிப்பட்ட அதாரிடியாக இருந்தால் நல்லது. அதைத் தெளிவு படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டிடெயில்ட் டெவலப்மெண்ட் பிளானிங் என்று ஒரு திட்டத்தை வரையறுத்து இருக்கிறது. இந்தத் திட்டத்திலே ஒரு குறிப்பிட்ட இடத்தைக் குறிப்பிட்டு மார்க்கெட் கட்டவேண்டுமென்று . சொல்வார்கள், அது

தனிப்பட்டவர்களுக்கு இருக்கும் நிலமாக இருக்கலாம். அந்த இடத்தில் வீடு கட்ட வேண்டுமென்று சொல்லி இருப்பார். அந்த டிடெயில்ட் டெவலப்மெண்ட் பிளானிங்படி கடைகள், மார்க்கெட்டுகள் கட்டவேண்டுமென்று இருந்தால், அதைக் கட்டவேண்டுமே தவிர, வீடுகளைக் கட்ட முடியாது. ஆனால், திட்டங்களைப் போடுகிற நேரத்தில் மார்க்கெட் கட்டுவதற்கு போட்டு இருந்தாலும் 2-3 ஆண்டுகளுக்குப் பிறகு அங்கே மார்க்கெட் கட்டுவதற்கு கடைகள் கட்டுவதற்கு தேவை இல்லாமல் இருக்கலாம் அல்லது வீடுகள் கட்ட வேண்டிய அவசியம் இருக்கலாம். இந்த மசோதாவில் என்ன சொல்லி இருக்கிறார்கள் என்றால் 5 ஆண்டுகளுக்குப் பிறகு அரசாங்கம் உத்தரவிட்ட பிறகு தான் மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று இருக்கிறது. நகராட்சி வாழ்வு காலம் 3 ஆண்டு காலம் தான். எனவே, 3 ஆண்டுகளுக்குப் பிறகு மறு பரிசீலனை செய்வதற்கும் இந்த மசோதாவிலே இடம் பெற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இவற்றை எல்லாம் பொறுக்குக் குழுவின் ஆலோசனைக்கு அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி டி. என். அனந்தநாயகி : சபாநாயகர் அவர்களே, பொறுக்குக் குழுவில் எனக்கு அங்கம் வகிக்க வாய்ப்புக்கொடுத்து இருக்கிறீர்கள், அதற்கு என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொறுக்குக் குழுவில் யோசனைகளைச் சொல்ல எனக்கு வாய்ப்பு இருந்தபோதிலும், அவற்றைத் தீவிரமாக யோசிப்பதற்கு வழி வகை இட்ட வேண்டுமென்ற காரணத்தால் இந்த நேரத்தை பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்டம் மிக மிக வரவேற்கத்தக்கது. 1920-லிருந்த சட்டத்தை வைத்துக் கொண்டு இவ்வளவு நாளாக, கிட்டத்தட்ட 50 ஆண்டுகள், ½ நூற்றாண்டுகள் கடந்த பிறகு இப்படிப்பட்ட நல்லதொரு திட்டத்தைக் கொண்டு வந்தது. . .

திரு. இராம. அரங்கண்ணல் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். சாதாரணமாக நம்முடைய சட்டப்பேரவையின் மரபு யார் பொறுக்குக் குழுவில் அங்கம் வகிக்கிறார்களோ, அவர்கள் இங்கே கருத்து தெரிவிக்கக்கூடாது, பெயர் படிப்பதற்கு முன்னாலே வேண்டுமானால் கருத்தைக் கூறலாம். பெயர்களைச் சட்ட மன்றத்தில் அறிவித்த பிறகு கருத்துக்களைச் சொல்வதற்கு அவர்களுக்கு பொறுக்கு குழு இருக்கிற காரணத்தால், மரபு அப்படி இருக்கிற காரணத்தால், அம்மையார் அவர்கள் அந்த மரபை மீறிப் பேசுவது சரிதானா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அம்மையார் மரபை மீறியது அல்ல. அது ஒரு மரபு; சபாநாயகர் அவர்கள் அனுமதி அளித்த பிறகு தான் அம்மையார் பேசினார்கள். சுருக்கமாகப் பேச வேண்டும். இது நம்முடைய மரபு தான். விதிமுறை அல்ல. சுருக்கமாகப் பேசி முடித்து விடுவார்கள் என்று கருதுகிறேன்.

திருமதி டி. என். அனந்தநாயகி : ஒன்று உங்களுக்குச் சொல்ல ஆசைப் படுகிறேன். ஜாயிண்ட் செலக்ட் கமிட்டியில் இருப்பவர்கள் அமெண்ட்மெண்ட் கொடுக்கக்கூடாது என்று இருக்கிறது. புதிய மரபு சொல்கிறார்கள். 50 ஆண்டுகாலத்திற்குப் பிறகு இப்படி ஒரு நல்ல திட்டம் கொண்டு வருகிறார்கள்

இப்படிக் கொண்டு வருவதற்குப் பல சங்கடங்கள் இருக்கும். அவசரப்படாமல் பார்த்துச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த டவுன் அண்டு கன்ட்ரி பிளானிங் ஆக்டைப் பார்க்கிறபோது லோகல் அதாரிடியில் மோதல் வருமா என்று யோசிக்க வேண்டும். டிஸ்போசல் ஆப் டெவலப்ட் பிளாட் என்ற ஒரு கிளாசைப் பார்க்கிற போது ஹௌசிங் போர்டோடு மோதல் வருமா என்று பார்க்கவேண்டும். ஒரு இலாகாவின் வேலையை மற்றொரு இலாகா பார்ப்பது போன்ற ஓவர் லாப்பிங் வருமா என்று பார்க்க வேண்டும். இது தவிர்க்கப்படுவதற்கு தீவிரமாக ஆலோசனை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையைப் பொறுத்தவரையில் ஒரு மாஸ்டர் பிளான் தயாரிக்கப்பட்டு அது கிடப்பில் இருப்பதாகத் தெரிகிறது. அதைப்பற்றி இந்தச் சட்டத்தில் எதுவும் குறிப்பிடவில்லை. அதற்கும் நாம் தயாராக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நேற்று கனம் முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்னபோது தண்ணீர் பிரச்னையிலே கல்கத்தா போன்ற நகரங்களுக்கு மத்திய அரசு பணம் கொடுத்தது சென்னைக்கு இல்லை என்று சொன்னார்கள். மத்திய அரசாங்கத்திடமிருந்து இந்த மாஸ்டர் பிளானுக்குப் பணம் வாங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சென்னை நகரத்தில் சாக்கடை, விளக்கு வசதி இல்லை. குறிப்பாக, எனது தொகுதியைப் பொறுத்தவரையில் தாமோதரபுரம், எக்ஸ்டெண்டட் ஏரியாவில் இந்த வசதிகள் இல்லை. கார்ப்பரேஷனில் இது வரையில் இந்த வசதி சென்னை நகரத்திலே பல இடங்களுக்குச் செய்து தரவில்லை. சுவேஜ் தண்ணீ போவதற்காக ஆங்காங்கு பம்பிங் ஸ்டேஷன் போட்டு வருகிறோம். அது கூட சென்னை நகரத்தில் முழுமையாக அமைக்கப் படவில்லை. இப்படிப்பட்ட கஷ்டங்கள் சென்னை நகரத்தில் அதிகமாக இருக்கும் போது, துரிதமாக இந்த சுவேஜ் ஸ்கீமை டவுன் பிளானிங்கில் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கார்ப்பரேஷன் கையில் பணத்தைக் கொடுத்து விட்டு, செய்வார்கள், செய்வார்கள் என்று எதிர் பார்த்துக் கொண்டு இருக்கவேண்டியதில்லை. அதை அரசாங்கமே வைத்துக் கொள்ளவேண்டும்.

அதேமாதிரி நகரத்திற்கு மாத்திரமல்ல, நாட்டுப்புறத்திற்கும் மேம்பாடு செய்யக்கூடிய ஒரு நல்ல திட்டம் இது. நாட்டுப்புறத்தில் பல ஊர்களில், முனிசிபாலிடிகளில் ரோடுகள் சரியாக இருக்காது, ஒருவர் போய் வெளியே வருவதற்குக் கூட இயலாமல் அகலமாக இருக்காது, மிகவும் குறுகிய ரோடுகளைக் கொண்ட பல இடங்களை நகரங்களில் பார்க்கிறோம். இதையெல்லாம் பரிசீலனை செய்து மக்களுக்குத் தொல்லை தராத அளவுக்கு விரிவான அடிப்படையில் வசதிகளைச் செய்து தரவேண்டும். அதேபோன்று பில்க்ரிம் சென்டர்ஸ், சுற்றுப்பிரயாணிகள் வரக்கூடிய க்ஷேத்திரங்களுக்கு அதிக முக்கியத்துவம் தரவேண்டும். இதையெல்லாம் யோசனை செய்து பார்க்க வேண்டும் . . .

MR. SPEAKER : The hon. Member has got ample opportunity to discuss the provisions of the Bill in the Joint Select Committee.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Yes, I have got ample opportunities there but if I can put all the ideas here, they can

work them out and it would be easy for the Joint Select Committee to arrive at the right conclusions. If the Hon. Minister wants to cut short the discussion, I will resume my seat.

MR. SPEAKER: It is not the Hon. Minister who wants to cut short the discussion.

Now the hon. Member, Thiru Ponnappa Nadar will speak.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: அவைத் தலைவர் அவர்களே, பொறுக்குக் கமிட்டிக்கு விடுகின்ற இந்த மசோதாவின் மீது ஒன்றிரண்டு கருத்துக்களைக் கூறுவது எனது கடமை என்று கருதுகிறேன்.

உதாரணமாக, இந்த வாரியம், போர்டானது எந்த முறையில் அமைக்கப் படவேண்டும் என்று ஐந்தாவது பிரிவிலே கூறப்பட்டிருக்கிறது. அதிலே ஐந்தாவது பிரிவிலே ஒரு ப்ரொவிஸோ இருக்கிறது.

'Provided that in making such nomination, preference may be given to the Chairman of the Local authorities'.

(f) the 'President of the Chamber of Municipal Chairman.'

என்றெல்லாம் இருக்கிறது. என்னுடைய ஆலோசனை என்னவென்றால், மிக முக்கியத்துவம் வாய்ந்திருக்கிற நமது சென்னை மாநகரத்திற்கு ஒரு இடம் அவசியம் நிறைவாக வேண்டும். ஏனென்றால், இந்தப் பிரிவின்படி இந்த போர்டில் அதிகாரிகள் அதிகமாக இருக்கிறார்கள். உதாரணமாக

(i) Town and Country Planning.
(ii) Local Administration.
(iii) Health.
(iv) Industries.
(v) Housing.
(vi) Revenue.
(vii) Agriculture.
(viii) Finance and
(ix) Education.

என்றெல்லாம் இந்த இலாக்காக்களின் பொறுப்பிலே இருக்கிற காரியதரிசிகளெல்லாம் இதில் அங்கம் வகிக்கிறார்கள் என்று இருக்கிறது. இந்த அளவுக்கு அதிக அதிகாரிகள் வேண்டுமா என்பதைப் பொறுக்குக் கமிட்டியும், அமைச்சர் அவர்களும் பரிசீலனை செய்ய வேண்டும். அதற்கு மாறாக சென்னை மேயர் அவர்களையும், வருகின்ற மதுரை மாநகரசபையின் மேயர் அவர்களையும் இதில் அங்கத்தினர்களாகப் போடுவது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். வளருகின்ற மாநகரங்களில் இருக்கிற பிரச்னைகளைப்பற்றி எல்லாம் அவர்கள் விரிவாகவும் தெளிவாகவும் கருத்து தெரிந்துகொள்வதற்கு இது வாய்ப்பாக இருக்கும் என்ற காரணத்தினால் இந்த ஆலோசனையை இந்த மன்றத்தில் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். கொஞ்சம் ஆற அமர ஆலோசித்து, இந்த ஆக்கபூர்வமான யோசனையையும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டு, அமர்கிறேன்.

*** மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டு ஆய்வுக் குழுவுக்கு இந்தச் சட்ட முன்வடிவை அனுப்புவது குறித்து, அதை வரவேற்கின்ற வகையிலும், அதே நேரத்தில் ஆய்வுக் குழுவ

இங்கே எழுப்பப்பட்ட கருத்துக்களையெல்லாம் ஆலோசிக்கவேண்டும் என்ப
தைப்பற்றியும் மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் பலரும் எடுத்துச் சொன
ார்கள்.

நண்பர் திரு. பழனிசாமி அவர்கள் இந்தச் சட்ட முன்வடிவாக இருக்கிற
இந்த மசோதாவைப் பொது மக்களுடைய கருத்து அறிவதற்கு சுற்றுலா
அனுப்ப வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார். இந்த மசோதா சுற்றுலா
போய் வருவது என்று சொன்னால், மறுபடியும் காலதாமதம் ஆவது இன்னும்
தவிர்க்க முடியாததாகி, இந்த மசோதாவை நிறைவேற்றுவதில் ஏற்கனவே
ஏற்பட்ட தயக்கம் மேலும் அதிகமாகும். இந்த மசோதா பொதுமக்களுடைய
கருத்துக்கு வைக்கப்படுமானால், பொது மக்கள் இதை வரவேற்பார்களே தவிர,
இந்த மசோதாவினுடைய கருத்துக்களிலே மாறுபாடு கொள்வதற்குப் பொது
மக்களுக்கு அவசியம் இல்லை என்பதை நான் இங்கு நினைவு கூற விரும்பு
கிறேன். பொது மக்களுக்கு நன்மை செய்வதற்காக, பொது மக்களுடைய
நல்வாழ்வுக்காக, பொது மக்களுடைய வாழ்க்கை இடமாக இருக்கிற கிராமங்
கள், நகரங்கள் இவை எதுவாக இருந்தாலும், அதை ஒட்டிய நாட்டுப்புற பகுதி
யாக இருந்தாலும், அவைகளையெல்லாம் சீராக மேம்பாடு அடையச் செய்ய
வேண்டும் என்ற அடிப்படையில், அதற்கான வழிவகை செய்கின்ற ஒரு மசோ
தாவை, இந்த மசோதா அளவிலே பொது மக்கள் வேண்டாம் என்று எண்ணு
வதற்கோ அல்லது இதிலுள்ள விதிமுறைகள் தங்களை பாதிக்கும் என்று
எண்ணுவதற்கோ இடமில்லை.

இவைகளுக்கெல்லாம் காரணமாக இருக்கின்ற இந்த அடிப்படையில் இந்த
மசோதாவை நிறைவேற்றியதற்குப் பின்னால் இதைச் செயல்படுத்துகின்ற
முறையில், செயல்படுத்துவதற்காக அமைகிற பல்வேறு விதமான அமைப்புகள்,
அவை இயங்குகின்ற முறைகள் ஆகியவைகளில் பொது மக்கள் நேரடியாகத்
தொடர்பு கொண்டு பல்வேறு கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டிய அவசியம்
ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய உறுப்பினர் பழனிசாமி அவர்கள் இங்கே எடுத்துச் சொல்
கிறபொழுது இப்பொழுது நடைபெறுகிற பல்வேறு விதமான நகராட்சிமன்றப்
பணிகள், மாநகராட்சி மன்றப் பணிகள், நகரப் பிரிவுத் திட்டப் பணிகள்,
இவைகளில் உள்ள குறைகளை எடுத்துச் சொன்னார்கள். இது அவைகளெல்
லாம் நீக்கப்படுவதற்கு வழி செய்கின்ற ஒரு மசோதாவே தவிர, நேரடியாக
இந்தக் காரியங்களில் ஈடுபடுகிற ஒரு வழியைச் செய்து தருகிற ஒரு மசோதா
இது அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுகாதார நல்வாழ்வுக்கு, அதற்கான வசதி செய்வதற்கு ஒரு மசோதா
வருமானால், அதில் கொசு இந்தக் குட்டையிலே இருக்கிறது, அதைப் போக்கு
வதற்கு நடவடிக்கை இல்லை, எனவே இந்த மசோதாவிலே அதை உள்ளடக்கிச்
செய்யவேண்டும் என்ற கருத்துத் தெரிவிக்க முடியாது. எனவே இந்த மசோ
தாவைப் பற்றி நண்பர் பழனிசாமி அவர்கள் சொன்ன கருத்து இதோடு
தொடர்புடையது அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இது
மக்களுடைய மன்றத்திற்கு அனுப்பவேண்டிய நிலையிலே இல்லை என்பதையும்
நான் தெரிவித்துக்கொண்டு, இந்தத் திருத்தம் தேவையில்லை என்பதையும் நான்
அவர்களுக்குக் கூறிக் கொள்கிறேன்.

இங்கே பேசிய மற்ருெரு அங்கத்தினர் திரு. நரசிம்மன் அவர்கள் இந்த மசோதாவின் மூலம் புதியதாக டவுன் பிளானிங் என்ற அடிப்படையில், நகர வளர்ச்சித் திட்ட அடிப்படையில் செய்யப்படுகின்ற காரியங்களில் நகரசபையின் உரிமைகள் பாதிக்கப்படுமே என்ற கருத்துக்களை எடுத்துச்சொல்லி கேட்டார்கள். இப்பொழுது இருக்கிற ஆலோசனைகளின் அடிப்படையில் இது சட்டமாகிவிட்டால், நகரசபையில் நகர வளர்ச்சிப் பணிக்கு முக்கியத்துவமான இடம் உண்டு என்ற கருத்து இடம் பெறுகிறது. இருக்கிற மாநகராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள், ஊராட்சி மன்றங்கள் இவைகளெல்லாம் கூட மொத்த திட்டத்தில் தங்களுடைய பங்கையும் கடமையையும் செலுத்துவதற்கான நிலைமை இருக்கிற காரணத்தினுல், யாரும் எந்த அமைப்பும் புறக்கணிக்கப்பட மாட்டாது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல சென்னை மாநகராட்சியைப் பற்றி இங்கே நம்முடைய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னுர்கள். சென்னை மாநகர விரிவுத் திட்டம் (மெட்ரூஸ் மெட்ராபொலிடன் ஏரியா) என்ற அளவிலே, சென்னை நகரமும், அதன் சுற்றுப்புற பகுதியையும் சேர்த்து, ஒரு தனித் திட்டத்திற்கான வரைவுத் திட்டம் இப்பொழுது அரசாங்கத்தினுடைய பல்வேறு துறைகளின் ஆலோசனையில் இருந்துகொண்டிருக்கிறது. அதற்கான ஒரு மசோதாவும் மிக விரைவாக வர இருக்கிறது. இந்த மசோதாவை நிறைவேற்றியதற்குப் பின்னுல், அந்த மசோதாவில் அந்தத் திட்டத்திற்கான கருத்துக்களை நிறைவேற்றுவதற்கு வழிவகை செய்யப்படும். சென்னை நகர சுற்றுப்புற விரிவுத் திட்டம் (மெட்ராபாலிடன் ஏரியா) முழுவதையும் சேர்த்து, ஏறத்தாழ 450 சதுரமைல் உள்ள பரப்பை அடக்கக்கூடிய திட்டம் ஒன்று இருக்கிறது. இந்த மசோதா சட்டமானதற்குப் பின்னுல், இதன் அடிப்படையில் அதற்கான வழிவகைகள் செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னென்றையும் குறிப்பிட விரும்புகிறேன். இது ஒரு கூட்டுப் பொறுக்கு ஆய்வுக்குழுவுக்கு செல்கிற காரணத்தினுல், நம்முடைய மதிப்பிற்குரிய சட்டப் பேரவை உறுப்பினர்கள் தாங்கள் தெரிவிக்கவேண்டிய, விரும்புகின்ற பல்வேறு ஆலோசனைகளையும் அவ்வப்பொழுது தெரிவித்தாலும் கூட, நிச்சயம் அவைகளெல்லாம் பரிசீலிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் தெரிவித்த ஆலோசனையையும் மறுபடியும் பரிசீலனைக்குரியதாக நான் ஏற்றுக்கொள்கிறேன். அவைகளெல்லாம் பரிசீலிக்கப்பட்டு, உரிய முறையில், தகுந்த வகையில் இடம் பெறச் செய்யப்படும் என்று தெரிவித்துக்கொண்டு, இந்த மசோதா கூட்டு ஆய்வுக் குழுவுக்குச் செல்வதை இந்த அவை, மன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிச்சாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி:
"தமிழ் நாடு 1971-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு மசோதாவை (சட்டப் பேரவை மசோதா எண் 1/1971) ஆய்வு செய்வதற்காக முப்பது (20 சட்டப் பேரவை உறுப்பினர்களும், 10 சட்ட மேலவை உறுப்பினர்களும்) உறுப்பினர்கள் அடங்கிய கூட்டு ஆய்வுக் குழு ஒன்றை அமைக்க சட்ட மேலவையின் இசைவைப் பெறுவதுடன், இக் கூட்டு ஆய்வுக் குழுவில் கீழ்க் கண்ட பேரவை உறுப்பினர்கள் பணியாற்றத் தெரிந்தெடுக்கப்படுகிருர்கள்."

1. திரு. து. ப. அழகமுத்து
2. திரு. எஸ். ஆறுமுகம்
3. திரு. வி. கே. ராஜா பிள்ளை
4. திரு. எஸ். கணேசன்
5. திரு. ஜே. ஜேம்ஸ்
6. டாக்டர் எச். வி. ஹாண்டே
7. திரு. சு. துரைசாமி
8. திரு. பழனிவேல் ராஜன்
9. திரு. எஸ். சகாதேவன்
10. திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி
11. திரு. இராம அரங்கண்ணல்
12. திரு. எம். ஏ. லத்தீப்
13. திரு. மா. பா. சாரதி
14. திரு. எம். ஆர். கண்ணன்
15. திரு. ஆர். இராமலிங்கம்
16. திரு. கே. எஸ். கோதண்டராமையா
17. திரு. ஆ. கு. சுப்பையா
18. திரு. எம். சுரேந்திரன்
19. திரு. கே. எம். சுப்பிரமணியம்
20. திருமதி டி. என். அனந்தநாயகி

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டப்பேரவை விதிகள் 139(1)-வது விதியின் கீழ் நான் மக்கள் பொதுநலத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. க. அன்பழகன் அவர்களை இந்தக் கூட்டு ஆய்வுக் குழுவின் உறுப்பினராக நியமித்துள்ளேன்.

(4) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஏ) தமிழ் நாடு 1971-ம் உண்டு வேளாண்மை பல்கலைக் கழக மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ் நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மை பல்கலைக் கழக மசோதாவை (சட்டப் பேரவை மசோதா எண் 2/1971) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தம்முடைய இசைவைத் தெரிவித்துள்ளார்.

(6) அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(உ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மை பல்கலைக் கழக மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 2/1971).

மாண்புமிகு திரு. அ. பெ. தருமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மை பல்கலைக் கழக மசோதா* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

நமது மாநிலத்தில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஒன்றை ஏற்படுத்துவது குறித்து, மூன்றாவது திட்டக் காலத்திலிருந்தே அரசின் நாட்டத்தில் இருந்து வந்துள்ளது. விரிவாக ஆய்வு செய்தபின் வேளாண்மை பல்கலைக் கழகம் ஒன்று அடுத்த கல்வி ஆண்டு முதல் செயலாற்றத் தொடங்க வேண்டுமென்று 1971, ஜூலைத் திங்களில் அரசு முடிவு செய்தது.

தொடக்கத்தில், கோவை, மதுரை மாவட்டங்களில் உள்ள ஆராய்ச்சி நிலையங்களும், வேளாண்மைக் கல்லூரிகளும் மட்டுமே புதிய வேளாண்மைப் பல்கலைக் கழகத்தினால் எடுத்துக் கொள்ளப்படவேண்டுமென்றும், எஞ்சிய ஆராய்ச்சி நிலையங்கள் அரசின் வேளாண்மைத் துறையின் கீழ் தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

இந்தியாவில் உள்ள பெரும்பாலான மாநிலங்களில் வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் உள்ளன என்பதையும், இத்துறையில் நமது மாநிலம் மட்டுமே பின் தங்கியுள்ளது, என்பதையும் நான் இச்சந்தர்ப்பத்தில் பேரவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த வேளாண்மைப் பல்கலைக் கழகம், அடுத்த கல்வி ஆண்டாகிய 1971-72 முதல் செயல்படத் தொடங்க வேண்டுமென அரசு கருதியதால், இது குறித்து ஆளுநர் அவர்களால் அவசரச் சட்டம் ஒன்று 1971-ம் ஆண்டு பிப்ரவரி 17-ம் நாள் அன்று சாற்றப்பட்டது. அந்த அவசரச் சட்டத்திற்கு மாற்றாகவே இம் மசோதா கொண்டுவரப்படுகிறது.

இம்மசோதாவின் முக்கியக் கூறுகள் பின்வருமாறு :—

1. கோயம்புத்தூரிலும், மதுரையிலும் உள்ள வேளாண்மைக் கல்லூரிகளும், அம்மாவட்டங்களில் உள்ள ஆராய்ச்சி நிலையங்களும் உத்தேச வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் அங்கமாக அமையும்.

2. இப்பல்கலைக் கழகத்தில் ஆட்சி வரம்பைப் பொறுத்தவரையில் பிற கல்லூரிகளைச் சேர்த்துக் கொள்வதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே உள்ள தனியார் கல்லூரிகளையும் இனிமேல் நிறுவப்பட இருக்கும் தனியார் கல்லூரிகளையும் இப்பல்கலைக் கழகத்தின் கீழ்ச் சேர்த்துக் கொள்ள வாய்ப்பு உள்ளது என்பது இதன் கருத்தாகும். ஒரு தனியார் கல்லூரியின் தகுதியைப் பற்றி ஆய்வு செய்த பின் பிந்திய ஒரு தேதியில் அதனை இப்பல்கலைக் கழகத்தின் ஆட்சி வரம்பிற்குள் சேர்த்துக் கொள்வதற்காகவே இத்தகைய இணைப்பு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

* 1971 மார்ச் 29-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

3. பிந்திய ஒரு தேதியில் அரசுக் கல்லூரிகள் ஒன்றில் மேற்பார்வையை யும் நிர்வாகத்தையும் தகுந்ததெனக் கருதும் வரையறைகளுக்கும் நிபந்தனை களுக்கும் உட்பட்டு பல்கலைக் கழகத்திற்கு மாற்றுவதற்கும் வகை செய்யப் பட்டுள்ளது.

4. இப்பல்கலைக் கழகத்தின் தலைமையிடம் கோயம்புத்தூர் நகரிலிருந்து 25 கிலோ மீட்டர் தொலைவிற்குள் அமைந்திருக்கும்.

5. இப்பல்கலைக் கழகம் கல்லூரிகளில் உள்ள இடங்களில் மொத்த எண்ணிக்கையில் 41 சதவிகிதத்திற்கு மேற்படாத இடங்களை பழங்குடி மக்கள் ஹரிஜனங்கள், பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஒதுக் குவது பற்றிய விதித் துறை மற்றொரு முக்கியமான விதித் துறையாகும்.

6. பல்கலைக் கழகத்தையும், அதன் கணக்குகளையும், பார்வையிடும் உரிமைகளை அரசு தன்னிடமே வைத்துக் கொண்டுள்ளது.

7. துணைவேந்தர் நியமனத்தைப் பொறுத்தவரையில் முதல் நியமனம் பல்கலைக் கழக வேந்தரால் செய்யப்படும். அடுத்து வரும் நியமனங்கள் மூன்று பேர் அடங்கிய ஒரு குழு பரிவுரை செய்யும். மூன்று பேர்கள் கொண்ட பெயர்ப் பட்டியலிலிருந்து பல்கலைக் கழக வேந்தரால் செய்யப்படும். மூன்று பேரடங்கிய குழுவில் ஒருவர் இப்பல்கலைக் கழகத்தின் நிர்வாக வாரியத்தாலும், மற்றொருவர் அதன் கல்விக்குழுவாலும், மூன்றாமவர் பல்கலைக் கழக வேந்த ராலும் நியமிக்கப்படுவர்.

8. தற்போதுள்ள அரசுப் பணியாளர்களை அவர்களின் விருப்பத்திற் கேற்ப பல்கலைக் கழகப் பணியில் எடுத்துக் கொள்ளவும் வகை செய்யப்பட் டுள்ளது.

9. சென்னை அல்லது மதுரைப் பல்கலைக் கழகத்தின்கீழ் தற்போது பயின்றுவரும் மாணவர்களின் நலனைப் பாதுகாக்கவும், இதேபோன்று விதித் துறை ஒன்று செய்யப்பட்டுள்ளது.

10. இப்புதிய வேளாண்மைப் பல்கலைக் கழகம், அடுத்த கல்வி ஆண்டா கிய 1971-72 முதல் செயல்படத் தொடங்க வேண்டுமென்று அரசு மிகுந்த ஆர்வ மாயுள்ளது. இப்பல்கலைக் கழகம் நிறுவப்படுமானால் வேளாண்மை உற்பத் தித்திட்டங்கள் மேலும் விரைவு படுத்தப்படும். நான் ஏற்கெனவே கூறியபடி, அவசரச் சட்டத்திற்கு மாறாக சட்ட மன்றச் சட்டம் ஒன்று இயற்றப்பட இம்மசோதா விழைகிறது. இவை கூறி, இம்மசோதாவை இம்மன்றம் ஏற்கு மாறு வேண்டுகிறேன்.

Dr. H. V. HANDE : Sir, I move the following amendment :—

"That the Tamil Nadu Agricultural University Bill, 1971 (L.A. Bill No. 2 of 1971) be referred to a Joint Select Committee comprising of........(names of Members to be given later)".

The amendment was duly seconded.

DR. H. V. HANDE : While moving the amendment I want to stress the fact that this Bill has been on the anvil for the past one decade. Even when the Hon. Minister Mrs. Satyavanimuthu was in charge of agriculture there was the feeling last year that a Bill to set up an Agricultural University in the State would be brought in and we hoped that the University would be started early. We have been pressing for this for the past six or seven years. Some how or other it did not fructify. They could have brought this Bill last year itself and we could have discussed it at length.

What is happening now? We are faced with this Bill all of a sudden and we are asked to pass this Bill in haste. My submission is, let us not bring a Bill in this hasty manner. There are a number of clauses in this Bill dealing with a large number of students, number of administrators, etc. In view of all this, I would request the Hon. Minister to give proper consideration to what I say and see to it that this Bill is not passed hastily. Let us not pass this hasty leislation as it would then be a constant source of irritation not only to the officers but students and lecturers of the University and even to the Vice-Chancellor. In addition to this, it would be very wise act if we were given an opportunity to properly understand the import of this Bill.

There are a number of implications. A number of things had to be discussed with the Central Government. The question of financial assistance is there. We have to discuss with the Centre. In fact, if I remember right, it was in the year 1960 that an Agricultural University was started in Uttar Pradesh. It was a model University. It had a lot of funds from the Centre and practically the whole amount was financed from the Centre. That was the situation then. Afterwards I think 11 or 12 Agricultural Universities have sprung up. An Agricultural University, if it were to function properly should cover a large number of fields of related sciences. There has to be integration of the research work with teaching, so that the results of research are effectively utilised in training programme and in the extension services. Otherwise it will not be possible to co-ordinate all activities. As Mr. K. T. K. Thangamani had suggested if there had been a White Paper on this, many of the difficulties from which Members suffer now, would have been solved. We would have been properly briefed and the discussion on the Bill would have been more useful.

I also want to point out that there must be adequate emphasis on agriculture, so that the graduates and post-graduates are fully qualified to become research workers, teachers, extension specialists or to take up farming; it is also felt that the agricultural universities need to develop broad-based programmes of instruction enabling them to turn out good citizens. Ideally therefore, an Agricultural University should be based on a single campus and possess a good library, efficient administrative offices and services, hostels for students and number of well-staffed specialised colleges.

In addition, a good well-managed farm, large enough for instructional needs and to provide for a balanced programme of research, is an absolute necessity. But what I find here is that the Veterinary College in my constituency and the Agricultural College in Annamalai has been omitted. They have not been mentioned. I hope the Hon. Minister will say something on this.

The other day I had been to Christian College Tambaram and I found that there is a good farm attached to it. It is essential that there should be a well-managed farm attached to an Agricultural University. That will be useful not only for instruction to students but also to provide a balanced programme of research. I am told that the Agricultural University at Uttar Pradesh has a farm extending to 16,000 acres and nearly half the amount required for running the university is met from the product of the farm In fact it is more than 50 per cent. I am glad that Coimbatore Agricultural College has a farm of 600 acres. But we must have a bigger area. Then only the establishment of a University would be useful.

I now come to financial assistance. An Agricultural University to develop to its full stature in a reasonable time should have sufficient financial assistance. According to Thiru P. P. I. Vaidyanathan's report, at least Rs. 2 crores are needed for this University. How are we going to get this from Centre? That is the point. I hope the Hon. Minister will remember this and give his reply while replying to the discussion. Let us be careful at the appropriate time. I had told previously how we should knock at the centre in right time and how we miss many a bus because of our failure to present our case at the right time. The Hon. Chief Minister of course touched that point in his reply.

I again reiterate that we should impress on the Centre on the need to give sufficient financial assistance. This we should do at the correct time. This should be coming during the Fourth Plan period. The Central assistance, at present, is available according to the U.G.C. pattern of financial assistance. This pattern does not fully meet the needs of Agricultural Universities which are in developmental stages. We should see that necessary funds for bringing this agricultural university into a stable footing are got from the Centre, by revising the present pattern and developing an appropriate pattern of assistance suited to the development of Agricultural Universities during the Fourth Plan period.

So a proper assessment of the grants that we might get from the University Grants Commission has to be made and properly discussed.

Then, for the establishment and development of the Universities, the Centre gives block grants in a lump-sum. How far we can utilise that block grant? This aspect of the matter also must be considered. Funds have to be specifically provided for the

development of a State-wide research organisation under the agricultural universities because without research no useful work could be done. An Agricultural University must have a number of research net works in different parts of the State like Thanjavur and Madurai. The research organisation is necessary for the operation of extension education programme, for the mobility of scientists and for similar other activities connected with the University programmes.

Then we should ensure that the functions of the Department of Agriculture do not overlap. For instance, there is the Agricultural University and there is also the Department of Agriculture. We have the Secretary of the Agriculture Department as also the Vice-Chancellor of the Agricultural University. It so happens that the Vice-Chancellor of the Agricultural University is a little scared of the Secretary of the Agriculture Department and for everything he would have to look to the Secretary for guidance and instruction and in such a state of affairs, the Secretary would have control over the University. I want a categorical assurance from the Hon. Minister that he would see to it that they both function independently. They can complement each others work but they should not duplicate each other's work, and that is an important point. In this connection, I wish to stress that the Vice-Chancellor should be given full freedom and I would like the Hon, Minister to ensure that the Government do not interfere in the affairs of the University. Even this morning in reply to a question, the Hon. Minister for Education has stated that they must get the recommendations of the University regarding number of seats in college. My point is that it must be an autonomous body.

Then I come to the Uttar Pradesh Agricultural University which was established in 1960. This University received massive assistance from the Centre. It is the only university of its kind whch was started with completely new constituent colleges. Here we are already having colleges and buildings. But there new colleges and new buildings were created. So they got massive assistance from the Centre. We must try to find out the type of assistance they received from the Centre. This university is located on the 16,000 acres-farm. The profits from this large farm contribute a substantial sum for the University's operating budget. So my point is that we should also get proportionate assistance from the Centre. There a College of Home Science was also started and a College of Education is to follow later.

Then I come to another point. What is needed is, not creating each and every new facility but to transfer all the already existing facilities under the complete responsibility of a single agency. It is very easy to start a University but we should require money to administer it. In this connection, I wish to point out that there is a body called the Indian Council of Agricultural Research.

We can get lot of money from them and the proposed University can get financial assistance for research work from that body. The other universities have sought assistance from this Council. I think statutorily also we can get assistance for the new University and we are entitled to it. I think there is a proviso in the Articles of the Council on those lines. I request the Hon. Minister to examine that aspect of the matter also.

Then I come to the next point. What is an ideal University? A full-fledged Agricultural University should have the following Constituent colleges:—

1. College of Agriculture.
2. College of Veterinary Science.
3. College of Agricultural Engineering.
4. College of Basic Science and Humanities.
5. College of Home Science.
6. College of Forestry.

Then a College of Engineering is also very important. It may look odd, how the College of Engineering is connected with the Agricultural University. We are in the days of tractors and we want to use them. Some persons have even asked for a Tractor Repair Shop at Madurai and so tractors are absolutely necessary. Thus tractor and agriculture are inter-connected and therefore the Engineering College is important. Now College of Engineering, i.e., the Government College of Technology is situated in close proximity to the Agricultural College, Coimbatore. The possibility of transferring this College to the proposed Agricultural University may have to be explored. When this is done, a Department of Agricultural Engineering will have to be established at this College. There are also Tractor Workshops and repairs shops for drilling and well-digging equipments at the Agricultural College.

Then a Forest Rangers' College run by the Government of India is located very close to the campus of the Agricultural College. We can have contact with the Government of India and take it over and bring it under the control of the Agricultural University. A College of Forestry can be located at this Forest Rangers' College after negotiating its transfer to the proposed University with the Government of India. As far as the Indian Forest Officers are concerned, they are given training in Dehra Dun and we can bring in experts from there.

Then I come again to the financial assistance that we can get from the Indian Council of Agricultural Research. The Council finances a number of Research schemes and a few of the educational schemes that are being run in Tamil Nadu. The assistance of the Council on such schemes normally is 50 per cent from the partly-financed schemes and 100 per cent (entire recurring and non-recurring expenditure) on the centrally sponosored and the co-ordinated

[Dr. H. V. Hande]

schemes. So, I would request the Hon. Minister to pay attention to this aspect of the matter and see that we get assistance from them also.

பி.ப. 12-00 By establishing the proposed Agricultural University, the Indian Council of Agricultural Research's assistance will be forthcoming for the following items which are normally not extended by I.C.A.R. in the present set up:

(*a*) capital cost including campus planning, site development college building, farm development livestock farm, held laboratory, glass house, pot house and hostel amenities;

(*b*) increased assistance for developing library facilities equipments, workshop and medical facilities;

(*c*) increased assistance entirely or partly for developing students and staff hostels and quarters.

(*d*) improvement of pay scales.

(*e*) additional academic staff; and

(*f*) training of teaching and research staff abroad. For all these items we are entitled to get financial assistance from Indian Council of Agricultural Research.

The pattern of assistance on matching grant basis by the I.C.A.R. normally ranges from 50 to 75 per cent. On individual items, it will be decided suitably. Based on the pattern of assistance for the major items to be incurred in the proposed agricultural university set up, on an average financial assistance of not less than 50 per cent is likely to be forthcoming from the I.C.A.R. subject to the maximum ceiling fixed by I.C.A.R. taking all these aspects into consideration at least Rs. 2 crores may be forthcoming from I.C.A.R. for the fourth plan period. We should see, that we get from them this amount positively.

Now I come to the other thing. We must see that students are given voice. The setting up of a Director of Student Affairs is a necessity. This Director should not act of his own accord, but in consultation with representatives of students and teachers.

I should also like to point out that the salary of the Librarian should be the same as that of an Associate Professor.

Till now I have confined myself to the general observations regarding this Bill. I now want to say something about the clauses, since I would not be butting in at the time of clause-by clause consideration.

Regarding Clause 2, 'constituent college' is defined as follows:—

" 'Constituent college' means the Agricultural College, and Research Institute, Coimbatore and Agricultural College, Madurai and includes such other college as may be decla the Board from time to time."

[Dr. H. V. Hande]

Nothing is said about the Agricultural College, Annamalai, and the Veterinary College in my own constituency. I hope the Hon. Minister will consider what exactly should be done about these colleges. Let him do the needful.

Regarding Clause 7, it is said that Government shall have the right to cause an inspection to be made by such person or persons as they may direct. It will then be a governmental wing. Even when the Madurai University Bill came up in the other House some years before, I put up a fight against too much Government control over the University. Mr. Anbazhagan who was in Opposition in the Council joined with me in the Council. Let us not have too much Government control. We must give sufficient autonomy to the University. I request Government to do something in this matter to respect the autonomy of the University.

Regarding Clause 13, it is said that the Registrar shall be appointed by the Vice-Chancellor. He comes under the Vice-Chancellor. It is not necessary. He officiates for Vice-Chancellor at times, taking charge from him. I hope the Hon. Minister for Industries will do something in this matter.

மாண்புமிகு திரு. அ. பெ. தருமலிங்கம்: தலைவர் அவர்களே, கிளாஸ்-பை-கிளாஸ் ஆக வரும்போது அதை எடுத்துக் கொள்ளலாம்.

Dr. H. V. HANDE: With these words, (I do not want to go further into the clauses sinc there are a plethora of things to be carefully gone into), I once again reiterate that the Bill may be referred to a Select Committee. We could have an emergency meeting of the Members of the Committee and after meeting for two or three days, we could thus have a thorough discussion. The issues could be discussed threadbare and within a week we could finalise the Bill. That is why I say let it be referred to a Select Committee. But the Government wants to present the 'fait accompli' before us. They issue the Ordinance and come forward with this Bill and want us to pass this hasty legislation. I do not know why they want to rush this through. They could have brought forward a model Bill last March itself. We have been waiting for this since seven or eight years. But nothing was done all along. Now hastily we are asked to pass this legislation. As I said before it should not become a source of irritation. That is why I say let it be referred to a Select Committee, so that we could properly re-shape it.

* திரு. இராம. அரங்கண்ணல்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் பெருமை மிகுந்த இந்த வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஏற்படுவதற்காக மசோதாவைக் கொண்டுவருகின்ற வாய்ப்பு, இந்த பொறுப்பை ஏற்றிருக்கிற வேளாண்மைத் துறை அமைச்சருக்கு முதல் வாய்ப்பாகக் கிடைத்திருப்பது பெருமைக்குரிய காரியமாக இருக்கிறது.

[திரு. இராம. அரங்கண்ணல்] [1971 எப்ரல்

கிட்டத்தட்ட இருபதாண்டுக் காலமாக தமிழ் நாட்டில் வேளாண்மையை
வளர்ப்பதற்காக ஒரு பல்கலைக் கழகம் வேண்டுமென்ற கோரிக்கை இருந்தும்,
அந்தக் கோரிக்கையை திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்திலே நிறை
வேற்றுவதற்கான வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்திருப்பது உண்மையிலேயே
பெருமைக்குரியதாகும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், இந்திய துணைக்
கண்டத்தில் விவசாயத் துறையில் நாம் எந்த அளவிற்கு முன்னேற்றத்தைப்
பெற்றிருக்கிறோம் என்பது உலக வல்லுநர்களே பாராட்டக்கூடிய அளவில்
அமைந்திருக்கிறது. மேலும், வேளாண்மையைப் பெருக்க வேண்டும், அதிக
மான உற்பத்தியைப் பெருக்க வேண்டும், விவசாயத் துறையிலே விஞ்ஞான
உண்மைகளையெல்லாம் புகுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் பல பணிகளைச்
செய்து வருகிறோம். பட்டம் பெற்றவர்கள், படித்தவர்கள், விவசாயத்தின்
பக்கமே போகாதவர்கள், மாலைநேரத்தில் சாய்வுநாற்காலியில் உட்கார்ந்து
கொண்டு வாதம் செய்பவர்கள் இவர்கள் எல்லாம் இதைப்பற்றிச் சிந்திக்காத
நிலையில், பட்டப் படிப்பில் காட்டும் விஞ்ஞானத்தை, விவசாயத்திலும் காட்டி,
விவசாயத்தை முன்னேற்ற வேண்டுமென்ற நிலையில், கிராமங்களிலே இருக்கிற
சாதாரண விவசாய மக்கள், விவசாயத்தையே நம்பி வாழ்கின்ற விவசாய ஏழை
எளிய மக்கள் அனைவரும் விஞ்ஞானத்தின் பலனைப் பெற வேண்டும், அவர்
களுடைய குழந்தைகளும் பல்கலைக் கழகத்திற்குச் சென்று படித்து, விஞ்ஞான
உண்மைகளைக் கண்டறிந்து வேளாண்மைத் துறையிலே புகுத்தி, தமிழ்நாட்டு
வேளாண்மைத் துறை நவீன விஞ்ஞான வசதிகளைப் பெற்ற ஒரு துறையாக
சிறந்து விளங்க வேண்டுமென்ற பெரியதொரு நோக்கத்தைத்தான் இந்த
மசோதா கொண்டிருக்கிறது.

இந்த மசோதாவைப் பொறுக்குக் கமிட்டிக்கு விட வேண்டுமென்று
சுதந்திரா கட்சித் தலைவர் டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசினார்கள். டாக்டர்
ஹாண்டே அவர்களின் வாயிலிருந்து, 'இந்த அரசாங்கத்தைப் பாராட்டு
கிறேன்' என்ற ஒரு சொல்லாவது வருமா என்று பார்த்தேன். ஆனால், அவர்
தமது வழக்கமான ஆலோசனைகளையும், புத்திமதிகளையும்தான் சொன்னார். ஒரு
நல்ல காரியம் நடைபெறும்போது, 'இது நல்ல காரியம்' என்று ஒரு வார்த்தை
யாவது பாராட்டக் கூடாதா? அந்தப் பெரிய மனது வரமாட்டேன் என்
கிறது.

இந்த மசோதாவின் நோக்கங்கள் என்ன என்பதைப் பார்க்க வேண்டும்.
முதலாவது விதியில் சொல்லப்படுகின்ற விஷயம், வேளாண்மைத் துறையில்
இருக்கிற அத்தனை துறைகளுக்கும், அந்தந்த துறைகளுக்கேற்ற வகையில்
விஞ்ஞானக் கல்வியை போதிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

இரண்டாவதாக வேளாண்மைத் துறையில் புதிய புதிய ஆராய்ச்சிகள்
புதிய புதிய கண்டுபிடிப்புகள் போன்றவற்றையெல்லாம் புகுத்துவதற்கான
நோக்கங்களையெல்லாம் இந்தப் பல்கலைக் கழகம் கருத்திற்கொண்டு செயல்படும்
என்று சொல்லப்பட்டிருக்கிறது. புதிய கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சிகள்
எல்லாம் கிராமப் பகுதிகளுக்கு, விவசாயத்தை நம்பி வாழ்கின்ற மக்களுக்கு
கொண்டு செல்லப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

வேளாண்மை பல்கலைக் கழகம் தமிழ்நாட்டிலே ஏற்படப் போகிறது
இதற்குப் பணம் எங்கேயிருந்து வரப்போகிறது என்று பணத்தின்மீதே கு
வைத்திருக்கும் சுதந்திரா கட்சியினர் கேட்கின்றனர். மத்திய சர்க்கார்

1971 எப்ரல் 3] [திரு. இராம. அரங்கண்ணல்]

இருந்து 1 கோடி ரூபாய் வரத்தான் போகிறது. நம்முடைய மாநிலமும்
அதைப் பெற்றுத் தரத்தான் போகிறது. நான் முதலிலேயே வேளாண்மைத்
துறை அமைச்சருக்கு இந்த மசோதாவைக் கொண்டுவருவதற்கு வாய்ப்புக்
கிடைத்தது பெருமைப்படத்தக்கது என்று சொன்னேன். திராவிட
முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்த வரையில், இந்த மசோதா முதல்
மசோதாவாக வந்து, சட்டமாக ஆக்கப்படுவதாக இருப்பது, திராவிட முன்
னேற்றக் கழகம் வேளாண்மைக்கு எந்த அளவிற்கு முக்கியத்துவம் காட்டு
கிறது என்பதைத் தெரிவிக்கிறது. இந்த அருமையான மசோதாவை திராவிட
முன்னேற்றக் கழக அரசு கொண்டுவந்திருப்பதன் மூலம் தமிழக மக்களுடைய
நீண்ட நெடுநாளைய கோரிக்கை நிறைவேறுகிறது என்கிற மகிழ்ச்சியில் இந்த
மசோதாவை மனப்பூர்வமாக வரவேற்று, இதை உடனடியாகக் கொண்டுவர
வேண்டும், ஜூன் மாதத்திலிருந்து நமது விவசாயப் பல்கலைக் கழகம் செயல்
பட வேண்டுமென்று வலியுறுத்தி என் உரையை முடித்துக்
கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: உதவி சபாநாயகர் அவர்களே, இந்த
மசோதாவைக் கொண்டுவந்திருப்பது வரவேற்கத்தக்கது என்று நான் முதன்
முதலில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தமிழகத்திலே இது மிக
தாமதமாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.
1960-ஆம் வருஷத்தில் இருந்து பல மாநிலங்களில் விவசாயப் பல்கலைக்கழகம்
ஏற்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. அம்மாதிரி நம் மாநிலத்திலும் கொண்டுவர
வேண்டும் என்பதற்காக நமது தமிழகத்தில் இருக்கக்கூடிய அரசும் முன்பு
ஒரு நிபுணர் குழுவை அமைத்தார்கள். அந்த நிபுணர் குழுவின் சிபாரிசுகள்
இந்த மசோதாவில் இடம் பெற்றிருந்தால் நான் எதுவும் எழுந்து பேசியிருக்க
மாட்டேன். ஆனால் அந்தச் சிபாரிசுகள் இந்த மசோதாவில் இடம் பெறாதது
வருந்தத்தக்கது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நிபுணர் குழுவில்
சொல்லியிருந்த முக்கியமான சிபாரிசுகளைக் கூடப் புறக்கணித்திருக்கிறார்கள்.
அவற்றைத்தான் திருத்தம் என்ற முறையில் கொடுத்திருக்கிறேன்.

ஒரு விவசாயப் பல்கலைக் கழகம் ஏற்படுகிறது என்றால் அதனுடன் எந்த
எந்த கல்லூரிகள் இணைந்திருக்கவேண்டும் என்பதைப்பற்றி மதிப்பிற்குரிய
திரு. ஹாண்டே அவர்கள் உங்களுக்கு எடுத்துச் சொன்னார்கள். ஆங்கிலத்தில்
சொல்லவேண்டுமென்று சொன்னால்,
College of Agriculture, College of Veterinary Science, College of
Agricultural Engineering, College of Basic Science and Huma-
nities, College of Home Science and College of Home Forestry.
இந்த ஆறுவிதமான கல்லூரிகளும் இந்தப்
பல்கலைக்கழகத்தோடு இணைப்புற்றிருப்பது அவசியமாகும். அப்படி இடம்
பெறுகிற காலத்தில் நிபுணர் குழு மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது.
சென்னை நகரத்தில் அமைந்திருக்கும் வெடர்னரி காலேஜ் அந்தப் பல்கலைக்
கழகத்துடன் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்பதாகச் சொல்லியிருக்
கிறார்கள். என்ன காரணம் அதைச் சேர்க்காததற்கு என்று தெரியவில்லை.
அரசுக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய இந்த வெட்டர்னரி கல்லூரி என்
சேர்க்கப்படவில்லை என்பது தெரியவில்லை.

உத்திரப்பிரதேசம் அல்ல தமிழகம். அவர்கள் இடத்தைக் கண்டுபிடித்து
கல்லூரிகள் அமைப்பதற்காக கோடிக்கணக்கான ரூபாய்களை மத்திய அரசிடம்
இருந்து பெற்றுத்தான் பல்கலைக்கழகத்தை அமைக்க முடிந்தது. ஆனால்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1971 ஏப்ரல் 3

அதிருஷ்டவசமாக தமிழகத்தில் அப்படி இல்லை. கோவை நமக்குச் செய்திருக்கும்படியான நன்மைகள் எவ்வளவோ இருக்கின்றன. ஒரு சிறு அனுபவத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

1957-58-ஆம் வருஷம் நமக்கும் சீனுவுக்கும் விவகாரம் இல்லாத காலம்—அப்போது சீனுவுக்குச் சென்றிருந்தேன். காண்டான் பக்கத்தில் இருக்கக் கூடிய ஒரு விவசாயப் பண்ணைக்குச் சென்றிருந்தேன். கரும்பு உற்பத்தி சம்பந்தமாக சிறு ஆராய்ச்சி நடந்து கொண்டிருந்தது. அங்கே அலங்காரமாக வைக்கப்பட்டிருந்த படம் கனம் வெங்கட்டராமனுடைய படம். அந்த வெங்கட்டராமன் யார் என்று அந்தப் பண்ணையில் விசாரித்தேன். கரும்பு ஆராய்ச்சியில் அவர் செய்திருக்கும்படியான அற்புத சாதனைகளை அவர்கள் சொன்னார்கள். அந்தப் பெரியவர் இப்போது இல்லை—நான் இங்கே திரும்பி வந்தவுடன் அவரிடமே—உங்கள் படத்தைச் சீனவில் பார்த்தேன் என்று சொன்னேன். உலகம் பூராவும் கரும்பு ஆராய்ச்சியில் அற்புதமான சாதனையை ஏற்படுத்தியிருக்கிற திரு. வெங்கட்டராமனைப் புகழ்கிறது என்றால், அந்த வெங்கட்டராமனையே உண்டாக்கியது கோவைக் கல்லூரி. கோவையில் பல ஆராய்ச்சி நிலையங்கள் இருக்கின்றன. நீண்ட பட்டியலையே கொடுக்க முடியும். இந்த விவசாயப் பல்கலைக் கழகத்தை—கோவையில் வாய்ப்பும், வசதியும் நிறைய இருக்கிற காரணத்தினால்—அங்கே அமைக்க எடுக்கப்பட்ட முடிவு மிகச் சரியான ஏற்பாடாகும்.

அடுத்து மதுரையில் இப்போது விவசாயக் கல்லூரி அமைந்து ஓரளவு விவசாய ஆராய்ச்சி நடக்கிறது. அதை அரசாங்கம் இத்துடன் இணைத்திருக்கிறது. சென்னையில் இருக்கக்கூடிய வெட்டர்னரி காலேஜ் என்ன பாவம் செய்தது என்றுதான் புரியவில்லை.

விவசாயப் பல்கலைக்கழகத்தில் அக்ரிகல்சர் சம்பந்தமானதுதான் இருக்கும், மற்றவைகள் இருக்காது என்று சொல்லிவிட்டும். நாம் விரும்பக்கூடிய பல்கலைக் கழகத்தில் எல்லா அம்சங்களும் இருக்க வேண்டுமென்று விரும்புகிறோம். அப்படி விரும்பக்கூடிய நேரத்தில் சென்னை நகரில் இருக்கும் வெட்டர்னரி காலேஜ் சேர்க்கப்படாதது சரியல்ல என்பது ஒரு விஷயம்.

அடுத்து, அந்த நிபுணர் குழுவில் பல டைரெக்டர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதில் ஒன்று மாணவர்கள் சம்பந்தமாக மாணவர்களுடைய பிரச்சினைகளை கவனிப்பதற்கு மாணவர்கள் டைரெக்டர் ஒருவர் இருக்க வேண்டும் என்பது. பல அதிகாரிகளையே கொண்டிருந்த நமது நிபுணர் குழு சொல்லியிருக்கக்கூடிய இந்தச் சிபாரிசு ஏன் இடம்பெறவில்லை? இது இடம் பெறவேண்டாமா? இது இடம்பெற வேண்டும் என்பதற்காக இதையே திருத்தமாக நான் கொடுத்திருக்கிறேன்.

இதற்கு அடுத்தாற்போல இப்போது சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிற கல்லூரிகளைத் தவிர மேலும் பல கல்லூரிகளைச் சேர்த்துக் கொள்வோம் என்பதாகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சேர்த்துக்கொள்ளக் கூடிய காலத்தில் அவிநாசிலிங்கம்—எஜுகேஷனல் டிரஸ்ட் ஹோம் சையன்ஸ் கல்லூரியையும் சேர்த்துக்கொள்ள முயற்சி செய்யலாம். அதற்காக பேச்சு வார்த்தைகளைத் தொடங்கலாம். இன்னும் கோவையில் மத்திய அரசு நடத்துகின்ற பாரஸ்டு ரேஞ்சர்ஸ் கல்லூரியையும் சேர்த்துக் கொள்ள ஏற்பாடு செய்யலாம்.

1971 ஏப்ரல் 3] [திரு. கே. டி. கே. தங்கமணி]

பொதுவாக, இப்படி நாம் சொல்கிறபோது பக்கத்து மாநிலங்களில் இது போல புதிதாக அமைந்திருக்கிற விவசாயப் பல்கலைக்கழகம் எவ்வாறு அமைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் கவனித்தால் அங்கெல்லாம் வெட்டர்னரி கல்லூரிகளும் அத்துடன் இணைக்கப்பட்டே இருக்கின்றன என்பதைத் தெரிந்துகொள்ளலாம். அதற்குச் சில உதாரணங்கள் காட்டலாம் என்று நினைக்கிறேன்.

நமது பக்கத்தில் இருக்கக்கூடிய ஆந்திரப் பிரதேசத்தில் ஹைதராபாத்தில் விவசாயப் பல்கலைக் கழகம் ஏற்படுத்தப்பட்டது. அதில் இன்றைக்கு 2,326 மாணவர்களும், ஆராய்ச்சி செய்கிறவர்கள் 140 பேர்களும் இருக்கிறார்கள். அவர்கள் இந்தப் பல்கலைக் கழகத்தை அமைக்கிறபோதே அக்ரிகல்சரல் காலேஜ் மட்டும் இல்லாமல் 2 வெட்டர்னரி காலேஜ்களையும் அத்துடன் இணைத்திருக்கிறார்கள். இந்தப் பல்கலைக்கழகம் 1965-இல் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தியாவில் கிட்டத்தட்ட பார்த்தால் 10, 11 விவசாயப் பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. உத்திரப்பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருக்கிற விவசாயப் பல்கலைக் கழகமாகட்டும், இராஜஸ்தான் மாநிலத்தில் அமைக்கப்பட்டிருக்கிற விவசாயப் பல்கலைக் கழகமாகட்டும், புவனேஸ்வரில் அமைக்கப்பட்டிருக்கும் ஒரிசா மாநில விவசாயப் பல்கலைக் கழகமாகட்டும், ஹைதராபாத்தில் அமைக்கப்பட்டிருக்கிற ஆந்திர மாநில விவசாயப் பல்கலைக் கழகமாகட்டும், அல்லது பெங்களூரில் அமைக்கப்பட்டிருக்கிற மைசூர் மாநிலப் பல்கலைக் கழகமாகட்டும், ஜபல்பூரில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற பல்கலைக் கழகமாகட்டும்—எல்லாவற்றிலும் வெட்டர்னரி கல்லூரிகள் இணைக்கப்பட்டே இருக்கின்றன. எல்லாவற்றிலும் அனிமல் அஸ்பெண்டரி முக்கியமான அம்சமாக அமைந்திருக்கிறது. தமிழகத்தில் அமைய இருக்கிற விவசாயப் பல்கலைக் கழகத்திலும் வெட்டர்னரி கல்லூரி கண்டிப்பாகச் சேர்க்கப்பட வேண்டும். இப்போது இது செலக்ட் கமிட்டிக்கோ, பொதுக்குழுக் கமிட்டிக்கோ போகாத முறையில் இங்கே நிறைவேற இருக்கிற காரணத்தினால் அரசு தரப்பிலிருந்தாவது சிலபல திருத்தங்கள் செய்யப்பட்டாக வேண்டும்.

அடுத்து, வந்திருக்கக் கூடிய விஷயம் இங்கு ஒரு செனட் என்றோ சிண்டிகேட் என்றோ இல்லை. பெயர் பெரிதல்ல. அக்கடமிக் கவுன்சில் என்று அமைத்திருக்கிறார்கள். இந்தக் கவுன்சில் உறுப்பினர்கள் எல்லோரும் அப்பாயின்டென்ட்—நாமினேடெட் என்றே இருக்கிறது. எலெக்டெட் பீப்பிள் இல்லை. இம்மாதிரி அமைப்பு ஏற்படுகிற காலத்தில் குறுகிய அளவிலாவது தேர்தல் முறையில் வருகிறவர்களுக்கும் இடம் இருப்பது நன்றாக இருக்கும். இதே சட்டமன்றத்தில் வேளாண்மைத் துறையில் பணியாற்றுகிறவர்கள் இருக்கிறார்கள். இதே சட்டமன்றத்தில் பட்டம் பெற்றவர்கள் இருக்கிறார்கள். அனுபவம் உள்ளவர்கள் இருக்கிறார்கள். அப்பேர்ப்பட்டவர்களையும் இதில் கொண்டுபோய்ச் சேர்க்கலாம். கட்சிவாரியாகச் சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. அ.பெ. தர்மலிங்கம்: இது சம்பந்தமாக பின்னாலே விளக்கமாகக் கருத்துக்கள் தெரிவிக்கலாம். ஏனென்றால் அரசுச் சார்பிலேயே ஒரு திருத்தம் கொண்டுவரப் போகிறோம், எனவே அதைப்பற்றி அப்பொழுது பேசலாம்.

[1971 ஏப்ரல் 3

திரு. கே. டி. கே. தங்கமணி : நன்றி. நிபுணர் குழு தெளிவாக ஒரு விஷயத்தைச் சொல்லியிருக்கிறார்கள். பின்னாலே ஏதோ ஒரு காரணத்தினாலே ஊதியங்களைக் குறைத்து விடுவார்கள் என்று பயந்து நிர்வாகத்தில் உள்ளவர் களுக்குச் சரியான ஊதியங்கள் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக் கிறார்கள். அதையும் கவனிக்க வேண்டும்.

புதிய பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்படுகின்ற நேரத்திலே தமிழகத்திலே பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. அந்தப் பல்கலைக் கழக உறுப்பினர்கள் பொறுப்பாளர்களுக்கு எக்ஸ்-அபிஷியோ என்ற முறையிலே இங்கே இடம் இருக்க வேண்டும். அப்படி இதிலே இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் அப்படிப்பட்ட யோசனையை ஸ்டடி டீம் கொடுத்திருப்பதாக எனக்கு ஞாபகம். வேறு விஷயங்களை நான் வற்புறுத்தவில்லையென்றாலும் சிறப்பாக நிபுணர் குழுவானது சிபாரிசுகளைச் செய்திருக்கிறது. அந்தக் குழு 1969-லே அமைக்கப்பட்டது. டாக்டர் ராமச்சந்திரன் தலைமையிலே அமைக்கப்பட்ட அந்தக் குழு நமக்கெல்லாம் பெருமை ஏற்படத்தக்க அளவிலே வேலைசெய்திருக் கிறது.

ஒரு மாடல் பில் மத்திய சர்க்காரிலே கொடுத்திருக்கிறார்கள். அந்த மாடல் பில்லிலே கொடுத்திருக்கக்கூடிய ஒன்றிரண்டு விஷயங்களைக்கூட இது ஒதுக்கி யிருக்கிறது. ராமச்சந்திரன் கொடுத்திருக்கக்கூடிய சிபாரிசுகளை இலேசாகப் புறக்கணித்து விடக்கூடாது. அந்த சிபாரிசுகளையெல்லாம் நான் கையில் வைத்திருக்கிறேன். அவற்றையெல்லாம் சொல்லி இந்த அவையின் நேரத்தை நான் வீணாக்க விரும்பவில்லை. உங்கள் மூலமாக நான் அமைச்சருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நாம் ஒரு குழுவை அருமையான முறையிலே அமைத்து இருக்கிறோம். அந்தக் குழு சிபாரிசுகளைச் செய்திருக்கிறார்கள். அதற்குக் கொடுக்கவேண்டிய மரியாதையும் மதிப்பையும் கொடுக்க வேண்டும். அதிலிருந்து டீவியேட் பண்ணுவதற்கு முயற்சிக்கக்கூடாது.

It is not proper to deviate from this report என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். காரணம் அது நிபுணர் குழு, அதற்குக் கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு வேறு விஷயங்களை கிளாஸ்-பை-கிளாஸ் கன்ஸிடரேஷனில் தெரிவித்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி : சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1971-ம்ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழக மசோதாவின் மீது எனது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆட்சி வந்ததற்குப் பின்னால் இப்படியொரு மசோதா வருவது தமிழ்நாட்டிற்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும். இந்த மசோதா வருகிறது என்று சொல்கிற நேரத்திலே நம்முடைய மாநிலத் திலே பல்கலைக் கழகம் துவக்கப்படுகிற நேரத்திலே மதுரையிலே, கோவையிலே இருக்கின்ற அந்தக் கல்லூரிகள் அதிலே இணைக்கப்படும் என்று சொன்னார்கள் அமைச்சர் அவர்கள். மேலும் அந்தப் பல்கலைக் கழகம் நல்ல முறையிலே செயலாற்ற வேண்டுமானால் ஒவ்வொரு மாவட்டந்தோறும் ஒரு விவசாயக் கல்லூரியாவது, நிச்சயமாக, கொஞ்ச நாட்களுக்குள் தொடங்கப்பட வேண்டும்.

[திரு. நா. வீராசாமி]

1971 ஏப்ரல் 3]

பொதுவாக, விவசாயம் என்று சொன்னாலே நம்முடைய ஞாபகத்திற்கு அரிசிதான் வருகிறது. ஐ.ஆர். 8, ஏடிடி. 27, கோ. 29, கருணா, பத்மா போன்ற புதுமையான தானியங்களிலே கவனம் செலுத்துகின்ற நேரத்திலே மற்ற தானியவகைகளிலேயும் இந்த விவசாயப் பல்கலைக் கழகம் ஆராய்ச்சி செய்வதில் கவனம் செலுத்தும் என்று நம்புகிறேன். நவ தானியங்களிலும் பழ வகைகள், காய்கறிகள் இவைகளிலெல்லாம் ஆராய்ச்சி நடத்தி இவற்றிலே உற்பத்தி அதிகமாகச் செய்வதற்கு இந்த தானியங்களும் நல்ல முறையிலே வளர்வதற்குமான முயற்சிகளிலே இந்தப் பல்கலைக் கழகம் ஈடுபடும் என்று நம்புகிறேன்.

கல்லூரிகளிலே பயிற்றுவிக்கின்ற நேரத்திலே படிக்கின்ற மாணவர்களுக்குப் பொதுவாக வேலை வேண்டுமென்ற முறையிலே வேலை தேடிக் கொள்வதற்கு மட்டுமல்லாமல் உண்மையிலேயே அந்த தொழிலிலேயே ஈடுபடக்கூடியவர்களை உருவாக்குவதில் நாட்டம் செலுத்த வேண்டும். அது மட்டுமல்ல, மழையில்லாத இடங்களிலே என்ன என்ன பயிர்வகைகள் பயிர்செய்வது, மழை குறைவாக இருக்கிற இடங்களில் என்ன என்ன, பயிர்செய்வது என்ற ஆராய்ச்சிகளை யெல்லாம் செய்ய வேண்டும்.

வேளாண்மைப் பல்கலைக் கழகம் என்று சொல்கிற நேரத்திலே அதோடு அக்ரிகல்சுரல் எஞ்சினியரிங் டிகிரி கோர்ஸ்பற்றி இதிலே குறிப்பிடாமல் இருக் கிறார்கள். அதுதான் இன்றியமையாதது, நாம் விவசாயத்திலே மட்டும் கவனம் செலுத்திப் பயனில்லை. விஞ்ஞானம் வளர்கிறது, புதிய கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன என்று சொல்கிற நேரத்திலே விவசாயப் பொறி யாளர்கள் மிக முக்கியமானவர்கள்.

இதிலே ஒரு வேடிக்கை. விவசாயத்தைப்பற்றிய பல்கலைக் கழகத்தில் அக்ரி கல்சுரல் எஞ்சினியரிங் கோர்ஸ் இல்லாமல் இருக்க முடியாது. இங்கே எடுத்துக் கொண்டால் எல்.எம்.இ. படித்தவர்கள்தான் இருக்கிறார்கள், பட்டம் பெற்ற வர்கள் இல்லை. தமிழ்நாட்டிலே அதிலே பட்டம் பெற்றவர்கள் யாராவது இருக்கிறார்களா என்றால் ஒருவர்கூடக் கிடையாது. விவசாயத் துறையிலே ஒரு பல்கலைக் கழகம் வரப்போகிறது என்று நாமெல்லாம் பெருமைப்படுகின்ற நேரத்திலே அது முழு வடிவம் பெறவேண்டுமென்றால் விவசாயத்திலே மட்டும் கவனம் செலுத்தாது இதிலேயும் நாட்டம் செலுத்த வேண்டும்.

நான் கேள்விப்படுகிறேன், மத்திய அரசுதான் இந்த அக்ரிகல்சுரல் எஞ்சினியரிங் கோர்ஸ் ஆரம்பிக்க அனுமதி தரவில்லை என்று கேள்விப்படு கிறேன். நான் அச்சப்படுவதெல்லாம் பொதுவாக அவர்கள் வடக்கே உள்ள மாநிலங்களிலே எல்லாம் வேளாண்மைப் பல்கலைக் கழகங்களிலே அந்த கோர்ஸை வைத்திருக்கிறார்கள். ஆனால் தென்மாநிலங்களிலே அந்தப் பிரிவுகள் இல்லை.

பஞ்சாபை எடுத்துக்கொண்டால் 100 மாணவர்கள் அக்ரிகல்சுரல் எஞ்சி னியரிங் படித்துக்கொண்டிருக்கிறார்கள். உத்திரப்பிரதேசத்திலே 100 மாணவர்கள் அக்ரிகல்சுரல் எஞ்சினியரிங் படித்துக் கொண்டிருக்கிறார்கள். ராஜஸ்தானிலே கராக்பூரிலே 25 மாணவர்கள், ஒரிஸ்ஸாவிலே 40 மாணவர்கள், மகாராஷ்டிரத்திலே 50 பேர்கள், மத்தியப் பிரதேசத்திலே 40 பேர்கள், 20 பேர்கள் படித்துக்கொண்டிருக்கிறார்கள்.

நிதிகள் பற்றி விடப்பட்டிருக்கிறது. அதையும் தேர்ந்தெடுக்க கண்டிப்பாக இடம் இருக்கவேண்டுமென்று கோரி, முடிக்கிறேன்.

* திரு. ஏ. சுப்பிரமணியம்: மதிப்பிற்குரிய துணைத்தலைவரவர்களே, என்னுடைய திருத்தத்தைப் பற்றி பேசுகின்ற அதேநேரத்திலே ஒருசில கருத்துக்களைக் கூறவிரும்புகிறேன்.

கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் இந்தப் பல்கலைக் கழகம் வெகுகாலத்திற்குப் பின்னர் இப்பொழுது அமைக்கப்பட்டிருப்பது குறித்து மெத்த மகிழ்ச்சியோடு நான் வரவேற்கிறேன். ஆனால் இந்தப் பல்கலைக் கழகத்திலே இரண்டு கல்லூரிகள் மட்டுமே இப்பொழுது சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்த மசோதாவிலே இருக்கும் டெஃபனிஷனைப் பார்க்கும்பொழுது இன்னும் பல கல்லூரிகள் சேர்க்கப்பட்டிருக்கவேண்டும். வெட்டர்னரி கல்லூரி சேர்க்கப்பட வேண்டும். ஃபாரஸ்ட் கல்லூரி என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் கல்லூரி கோவையிலே இருக்கிறது. அது மத்திய சர்க்காரின் நிர்வாகத்தில் இருந்தாலும் அதை மாநில அரசின்கீழ் கொண்டுவர முயற்சி செய்து அதையும் சேர்த்தால் இந்த டெஃபனிஷன் பொருத்தமாக இருக்கும். இதேபோன்று ஹோம் சயன்ஸ் என்று சொல்கிறார்கள், ஹோம் சயன்ஸ் கல்லூரி தனியாரிடத்திலேயிருந்தாலும்கூட இதுபோன்று வேறு இடத்திலேயும் கல்லூரி வகுப்புகள் இருப்பதாக நான் அறிகிறேன். அவைகளையெல்லாம் சேர்க்காது இரண்டே இரண்டு கல்லூரிகளை மட்டும் சேர்த்து இத்தனை காலத்திற்குப் பிறகு இந்தப் பல்கலைக்கழகம் துவக்கப்பட்டபோதிலும் இரண்டு கல்லூரிகளை மட்டும் சேர்த்து ஏன் துவக்கப்பட்டது என்று எனக்குப் புரியவில்லை.

இன்னொன்றும் கூற விரும்புகிறேன். நேற்று ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும் பொழுது மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் சொன்னார்கள், பல்கலைக்கழகத்தினுடைய ஆட்டானமியில், சுயாட்சியில், தலையிடுவதற்கில்லை என்று சொன்னார்கள். இதிலே பார்க்கும்பொழுது அந்த சுயாட்சி எங்கே இருக்கிறது என்று புரியவில்லை. இந்த மசோதாவைப் பார்க்கும்பொழுது போர்ட் ஆஃப் மேனேஜ்மெண்டில், நிர்வாகக் குழுவில் பெரும்பாலானவர்கள் அதிகாரிகளாகத்தான் இருக்கிறார்கள். சென்னைப் பல்கலைக்கழகத்தில் சிண்டிகேட், செனட் என்று இருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட செனட் இருக்கிறது, சிண்டிகேட்டும் இருக்கிறது. சிண்டிகேட்டில் மூன்று பேர்களைத் தவிர மற்றவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு நிர்வாகத்தில் அதிகாரம் இருக்கிறது, கண்காணிக்கும் பொறுப்பு, கொள்கைகளை வகுக்கும் பொறுப்பு செனட்டிற்கு இருக்கிறது. ஆனால் இதிலே நிர்வாகப் பொறுப்பு முழுவதும் கொள்கை வகுப்பது உள்பட போர்ட் ஆஃப் மேனேஜ்மெண்டினிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆறு அதிகாரிகள் இருக்கிறார்கள், தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் யாரும் கிடையாது. தனியாரிலிருந்து வைஸ் சான்சலர் நியமிக்கும் அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது சரியல்ல என்று கருதுகிறேன். சிண்டிகேட்டும், செனட்டும் அங்கே ஏற்படுத்தியாக வேண்டும். அதுதான் ஆட்டானமியாக இருக்கும்.

மாணவர்களுக்கு பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்திலே பங்கு இருக்க வேண்டுமென்ற கொள்கை ஃப்ரான்சிலே கோரப்பட்டு, பெரும் மாணவர் கிளர்ச்சிக்குப் பிறகு அது ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இங்கேயும் . ஆய்வுக்குழுக்கள்

அத்தகைய பரிந்துரைகளைச் சொல்லியிருப்பதாக அறிகிறேன். ஆனால், இந்த மசோதாவிலே அதற்கு எதுவுமே இல்லாமலிருக்கிறது. ஆகவே, பல்கலைக் கழக நிர்வாகத்தில் மாணவர்கள் பிரதிநிதிகளுக்கும் இடம் தரும்படி இதைத் திருத்தியாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, என்னுடைய திருத்தத்தைப் பொறுத்தவரையில் காலேஜ் டீன் இருக்கிறார்களே, அந்த டீன், அக்ரிகல்சுரல் சயன்சிலே, போஸ்ட் கிராஜுவேட் டிக்ரி பெற்றவர்களாக இருக்க வேண்டும். இப்பொழுது மெடிக்கல் காலேஜ் இருக்கிறது. வெட்டர்னரி காலேஜ் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: பொதுவாகப் பேசலாம்.

திருமதி டி. என். அனந்தநாயகி: மாண்புமிகு துணைச்சபாநாயகர் அவர்களே, இந்தப் பல்கலைக் கழகத்தை நிறுவும் மசோதாவை மிக மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

சிறு வருத்தம் இதைக் கோவையிலே ஆரம்பிக்கிறார்களே என்று. முதலமைச்சர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர். வேளாண்மைத் துறை அமைச்சர் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர். இந்த இரண்டு மாவட்டங்கள் தான் வண்டல்மண் நிறைந்த மாவட்டங்கள். அங்கே ஆரம்பித்தால் சிறந்த பலன் கிடைக்கும். தண்ணீர் பஞ்சமான கோவை மாவட்டத்திலே போய் ஆரம்பிக்கிறீர்களே என்ற சிறு வருத்தம். இப்படி ஆரம்பிக்கிறீர்களே என்று கேட்டால் ஓரளவிற்கு கட்டடங்கள் இருக்கின்றன என்று சொல்லலாம். ஆனால் இப்படிப்பட்ட கட்டடங்களை ஐ.வி.ஆர். உதவியுடன் கட்டலாம். திருச்சி மாவட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்திலே இந்தப் பல்கலைக் கழகத்தைக் கோவைக்கு 25 கிலோ மீட்டர் தூரத்திலே ஆரம்பிப்பதை விட, திருச்சியிலோ அல்லது தஞ்சை மாவட்டத்திலோ ஆரம்பிப்பீர்களானால் நல்ல பலன் கிடைக்கும். இல்லையென்றால் பட்சிகள் விதைகளைத் தூக்கிக்கொண்டு போய் விடும்.

அடுத்தபடியாக இந்தச் சட்டத்திலே "இன்ஸ்பெக்ஷன் பை எனிபடி", யாராவது ஒருவர், அரசாங்கம் நியமிக்கும் நபர், அந்தப் பல்கலைக் கழகத்தின் நடைமுறை எப்படி இருக்கிறது என்று பார்க்கலாம் என்று இருக்கிறது. நான் திருத்தம் கொடுக்காத காரணத்தினால் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இதைப் போன்று "எனிபடி" என்று போட்டால் கட்சியைச் சேர்ந்தவர்களையும் கொண்டு வருவதற்கு வழி இருக்கும் என்று அச்சப்படுகிறேன். அதனால் யார் என்பதைத் திட்ட வட்டமாக அரசாங்கம் அறிவித்து விட வேண்டும். "எனிபடி." என்று போட்டால் ஆள்வது நல்ல அரசாங்கமாக இருந்தால் நல்ல நிபுணராகப் போடப்படலாம் அல்லது கட்சிப் பற்றுக் கொண்ட யாரையாவது அனுப்பி வைக்கலாம். அதனுடைய முக்கியத்துவம் போய் விடும். இவர்கள் என்கொயரி நடத்த ஆரம்பித்தால் அது நடைமுறையைக் கெடுத்து விடும் என்ற பயம் ஏற்படுகிறது. அதே போன்று வைஸ்சான்ஸலர் மூன்றில் இரண்டு பங்கு பேர் சொல்வதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று இருக்கிறது. மெம்பர்களிலே மூன்றில் இரண்டு பங்கு இருக்க வேண்டும், அதோடு கூடியுள்ள மெம்பர்களில் மூன்றில் இரண்டு பங்கு வேண்டும், என்று ஏற்றுக் கொள்வதிலே தவறு இருக்க முடியாது. இதையும் அரசாங்கம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

இந்தப் பல்கலைக் கழகத்தின்கீழே வேளாண்மைக் கல்லூரிகள் என்று இருக்கிறது. இவற்றோடு ஹோம் சயன்ஸ் கல்லூரியையும் சேர்க்க வேண்டும். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் இதை மக்கள் மத்தியில் பிரபலப்படுத்த "எஜுகேஷன் எக்ஸ்டென்ஷன் சென்டர்களை" நடத்த வேண்டுமென்று இந்தச் சட்டத்திலே சொல்லியிருக்கிறார்கள். இந்த மசோதாவிலே "கிளாஸ் 27-ல்" இதைச் சொல்லி இருக்கிறது. ஹோம் சயன்ஸ் கல்லூரியையும் சேர்க்க வேண்டும். எந்தப் பொருள்களை எப்படிச் சேர்த்தால் சுவையாக இருக்கும் என்பதை ஹோம் சயன்ஸ் கிராஜுவேட்ஸ் நன்கு அறிவார்கள். அத்தகைய அளவிலே அவர்கள் ஆராய்ச்சி நடத்தி மக்களுக்கு அதைப் பயன்படுத்த வேண்டுமென்ற எண்ணமிருக்குமானால் இந்த எக்ஸ்டென்ஷன் புரோகிராமிலே ஹோம் சயன்ஸ் கிராஜுவேட்ஸ்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதை நான் ஒரு பெண்மணி என்ற சார்பில் குறிப்பிடுகிறேன்.

அடுத்து, இந்தப் பல்கலைக் கழகம் இன்ஜினியரிங் துறையையும் கவனிக்க வேண்டும். இன்றைக்கு டிராக்டர்கள் ரிப்பேராகி விட்டால் ரிப்பேர் செய்வதற்கு ஆள் இருப்பதில்லை. இன்றைக்கு விவசாயத்திற்கு டிராக்டர்கள் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் டிராக்டர்கள் ரிப்பேராகி விட்டால் அவற்றை பழுது பார்ப்பதற்கு ஆட்கள் இல்லை. கிராமப்புறங்களிலே பம்பு செட் ரிப்பேரானால் கூட பழுது பார்ப்பதற்கு ஆட்கள் கிடைப்பதில்லை. இரண்டு மாதங்களாகின்றன ஆட்கள் கிடைப்பதற்கு. எனவே, இப்படி டிராக்டர்களைப் பழுது பார்ப்பதற்கு வேளாண்மைத் துறையில் ஒரு "விங்" ஏற்படுத்துவது அவசியமாகும்.

அடுத்து, கிளாஸ 18-ல் "ஒன் கிராப் பார்மர்" என்று போடப்பட்டிருக்கிறது. அது இரண்டு விதங்களிலே கொள்ளப்படும். "ஒன் கிராப் பார்மர்" என்றால் ஒரு விவசாயி என்றும், அல்லது "ஒன் கிராப் பார்மர்" ஒரு போகம் பயிர் செய்பவர் என்று இரண்டு விதமாக "டபிள் மீனிங்" இருக்கிறது. இதை மாற்றி "a farmer who is producing crops" என்று திருத்தத்தை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கிளாஸ் 18-லே இன்ன அதிகாரி என்று "டெசிக்னேட்" போட வேண்டும்.

இந்தச் சட்டத்தை இப்படி ஒரு அவசரச் சட்டமாகக் கொண்டு வராமல், அவசரச் சட்டம் கொண்டு வந்து ஆறு வாரங்களில் அதைச் சட்டமாக ஆக்க வேண்டுமென்று அல்லாமல் சாதாரணமாகக் கொண்டு வந்தால் பாராட்டுக்குரியதாக இருக்கும். இதை நன்கு அரசு ஆராய்ந்து, இனிமேலாவது இந்த அரசு அவசரச் சட்டங்களுக்குப் போகாமல் ஒழுங்கான சட்டங்களாகக் கொண்டு வர முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: அவைத் தலைவரவர்களே, இந்த வேளாண்மைப் பல்கலைக் கழக மசோதாவை அவசர, அவசரமாகத் தயாரித்திருக்கிறார்கள். "ஆர்டினன்ஸ்" மூலம் இதைப் பிரகடனப்படுத்தி, இதைச் சட்டமாக்க வேண்டும் என்று இந்த மசோதாவை அறிமுகம் செய்து, இப்போது வந்திருக்கிறது.

வேளாண்மைப் பல்கலைக் கழகம் வரவேண்டுமென்பதை நாங்கள் மனப்பூர்வமாக ஆதரிக்கிறோம். இதிலே இருக்கிற சிலவற்றைப் பற்றி எங்கள் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இங்கு பல அங்கத்

தினர்கள் தங்களுடைய கருத்துக்களையெல்லாம் இந்த மன்றத்திலே தெரிவித்திருக்கிறார்கள். "அடானமஸ் யுனிவர்சிடி"யாக இருக்க வேண்டும். ஆனால் அடானமி இல்லை. இந்த அரசாங்கம் இலாகா அதிகாரிகளைக் கொண்டு நிர்வாகம் செய்வது போல இருக்கிறது. வேளாண்மைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து இருப்பதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆனால் இந்தியாவிலே ஏனைய மாநிலங்களிலே பல பல்கலைக் கழகங்கள் உருவாகி இருக்கின்றன. அப்படிப்பட்ட பல்கலைக் கழகங்கள் இந்தியா முழுவதிலும் இருக்கின்றன. அதிலும் குறிப்பாக மகாராஷ்டிர மாநிலத்தில் இரண்டு பல்கலைக் கழகங்கள் நிறுவி இருக்கிறார்கள். அதேமாதிரி எல்லா ராஜ்யங்களிலும் இப்படிப்பட்ட பல்கலைக் கழகம் நிறுவப்பட்டிருக்கிறது. ஆனால் நமது மாநிலத்தில் இப்படி ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவுவதில் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்றெல்லாம் இங்கு கருத்துத் தெரிவித்தார்கள்.

இங்கே மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. இராம. அரங்கண்ணல் ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். 1960-ல் அரசாங்கம் இதைப்பற்றி ஆராய்ச்சி செய்ய உயர்தர அதிகாரி பி.பி.ஐ. வைத்தியநாதன், ஐ.சி.எஸ். அவர்களைக் கொண்டு ஒரு கமிட்டி நிறுவி இருந்தது. இதைப் பற்றி ஆராய்ந்தது. அந்தக் கமிட்டி ஒரு அறிக்கையைக் கொடுத்தது. அந்தக் கமிட்டியின் அறிக்கையிலே 203 லட்ச ரூபாய் "நான் ரெகரிங் எக்ஸ்பெண்டிசர், ரெகரிங் எக்ஸ்பெண்டிசர் 20 லட்சம்" ஆகும் என்று தெரிவித்தார்கள். இதை எப்படி ஏற்றுக் கொள்வது என்பதை எல்லாம் அரசாங்கம் ஆலோசனை செய்தது. கடைசியாக 64-லே என்று நினைக்கிறேன். நான்காவது பிளான் பீரியடிலே தள்ளப்பட வேண்டுமென்று சொன்னார்கள். 1964-க்கு பிறகு மறு முறை பரிசீலிக்கப்பட்டு 27—9—1967-லே இது 5-வது பிளானுக்கு "டெபர்" செய்யப்பட்டிருக்கிறது என்று ஒரு உத்திரவை பிறப்பித்து இருக்கிறது. அதற்குப் பிறகு 1968-லே ஒரு "ஸ்டடி டீம்" உருவாக்கப் பெற்றது. அந்த "ஸ்டடி டீம்"ன் ரிபோர்டின் அடிப்படையில் இப்போது வேலை செய்து இதைக் கொண்டு வந்து இருக்கிறார்கள். பொதுவாக டிராக்டர் ரிப்பேர் போன்ற இதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்றெல்லாம் கூறப்பட்டிருக்கிறது.

வெடரினரி சயன்ஸ்க்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டுமென்று நான் நினைக்கிறேன். அதே மாதிரி பாரஸ்டரியும் சேர்க்கப்பட வேண்டும். மத்திய அரசாங்கத்தின் நிர்வாகத்தில் ஒரு பாரஸ்ட் கல்லூரி கோயம்புத்தூரில் இருக்கிறது. டேராடூனில் ஒன்று இருக்கிறது. இவை மத்திய அரசாங்கத்தின் கண்காணிப்பில் இருந்து வருகின்றன. நமது மாநிலத்தில் பெருமளவிற்கு வளம் பெற்ற நிலங்கள் காடுகள் பல இருக்கின்றன. நீலகிரி, கோயம்புத்தூர், கன்னியாகுமரி மாவட்டங்களில் பல பகுதிகளில் செழிப்பான காடுகள் இருக்கின்றன. பாரஸ்டரிக் கல்லூரி நிறுவுவதற்கு வேண்டிய வசதிகள் உள்ளதால் அரசாங்கம் உடனடியாக பல பாரஸ்டரிக் கல்லூரிகளை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

பொதுவாக வெளிநாட்டு நிறுவனங்களிலிருந்து நமக்குப் பணம் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. இவற்றைக் கொண்டு பல பல்கலைக் கழகங்களை அமைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதை ஆராய வேண்டும். அப்படி ஆராய்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இப்பொழுது பல மாநிலங்களிலே பல மாணவர்கள் அக்ரிகல்சுரல் எஞ்சினியரிங் படிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினாலே மத்திய அரசாங்கம் அங்கே படித்துப் பட்டம் பெற்றவர்களை தென் மாநிலங்களுக்கு அனுப்பி வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தர முயற்சிக்கிறார்களா என்பதோ தெரியவில்லை. அந்த நிலையை தென் மாநிலங்களுக்கு அளிக்காமல் அதனால்தான் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்தினிடத்திலே கேட்டு இந்தப் பல்கலைக் கழகத்திலே அக்ரிகல்சுரல் எஞ்சினியரிங் கோர்ஸ் டிகிரி கோர்ஸ் ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் இந்தப் பல்கலைக் கழகம் முழு வடிவம் பெற்றதாக அமையும்.

அது மட்டுமல்ல அக்ரிகல்சுரல் யுனிவர்சிடி என்று சொல்கிற நேரத்திலே கோயம்புத்தூர் ரூரல் கல்லூரி, வெட்டனரி காலேஜ், ஹோம் சயின்ஸ் அக்ரிகல்சுரல் எஞ்சினியரிங் டிகிரி கோர்ஸ் இவை அத்தனையும் உள்ளடக்கியதாக இயங்க வேண்டும். அக்ரிகல்சுரல் எஞ்சினியரிங் கோர்சைப் பொறுத்த வரையில் நான் இப்படி வலியுறுத்திச் சொல்வதற்குக் காரணம் வேளாண்மைத் துறையில் நாம் வெற்றி காணவேண்டுமானால்—அமெரிக்காவிலே உள்ள ஓகியோவிலே மழை சராசரி 11 அங்குலம்தான். அந்த 11 அங்குல மழையைப் பயன்படுத்தி அவர்கள் எங்கும் பூராவுக்கும் பருத்தி விளைவிக்கும் பெருமையைப் பெற்றிருக்கிறார்கள்—அந்த முறையிலே நம்முடைய தமிழகத்திலே கிடைக்கின்ற தண்ணீரை எப்படிச் சிக்கனமாகப் பயன் படுத்துவது, எப்படி உற்பத்தியைப் பெருக்குவது என்பதிலே அதிகம் கவனம் செலுத்த, வேளாண்மைத் துறையிலே வெற்றியடைய முடியும். நம்முடைய மாநிலத்திலே அந்த கோர்ஸை வைத்தால் இங்கே நாம் மழையில்லை என்று சொன்னாலும் கூட 35 அங்குல மழை பெய்கிறது, எனவே அதை எப்படிப் பயன்படுத்திக் கொள்வது, எப்படி உற்பத்தியைப் பெருக்குவது என்பதையெல்லாம் ஆராய்வதற்கு உதவியாக இருக்கும், அதைப் பயில்கின்றவர்கள் இதிலே மிக மிக இன்றியமையாதவர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயப் பல்கலைக் கழகம் துவக்குகிறோம் என்று பெருமைப்படுகிற அதே நேரத்திலே இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டு நிறைவேற்றுவதற்கும் முயற்சிகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது கருத்துக்களை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

1-30 THIRU K. SUPPU : Sir, I propose to move the following amendment :—

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: அமெண்ட்மெண்டை மூவ் பண்ணாமல் பேசுங்கள்.

திரு. க. சுப்பு: துணைத் தலைவரவர்களே, நான் கொடுத்திருக்கும் இந்தத் திருத்தத்தில் உள்ளதைப்பற்றி ஏற்கனவே என்னுடைய கட்சித் தலைவர் தோழர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டார்கள். இதிலே யுனிவர்சிட்டி போர்டுகளிலே நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் என்று இருக்கிறதே தவிர தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று இல்லை. ஆகவே, இதிலே தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்கு அதிகப் பிரதிநிதித்துவம் கொடுக்கின்ற முறைகளில் இருக்க வேண்டும். மற்றக் கல்லூரிகள், பல்கலைக் கழகங்களைப் போன்றில்லாமல் வேளாண்மையில் ஈடுபட்டிருக்கும் முறையில் அமைய

வேண்டுமென்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த முறையில் பிரதிபலிக்கக்கூடிய அமைப்பு இதில் இல்லை. காரணம் என்னவென்றால், வேளாண்மைக் கல்லூரி ஆரம்பிப்பதற்குக் காரணமே, குழுக்களும், யுனிவர்சிட்டி கமிஷனும், அமெரிக்க முறைகளைப் பின்பற்றி, அங்கேயிருக்கும் முறைகளை அமுல்படுத்த இந்தக்குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய சிபாரிசின் அடிப்படையிலே இந்தியாவிலே மாநிலங்களில் அமைக்கப்பட வேண்டுமென்ற முறையிலே அமைக்கப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்களின் அதிக ஒத்துழைப்பைக் கோரும் முறையில் எதுவும் இதில் இல்லை. பிற்பட்ட வகுப்பினருக்கு, மலைஜாதி வகுப்பினருக்கு 41 சதவிகிதம் ஒதுக்கியிருக்கிறார்கள். அதேபோல் விவசாயத்திலே ஈடுபாடு உடையவர்களைச் சேர்க்கின்ற முறையிலே. இந்த வேளாண்மைக் கல்லூரியில் சேர்க்கப்படும் மாணவர்கள் விவசாயக் குடும்பத்திலேயிருந்து வருபவர்களாகயிருந்தால் நல்லதாக அமையும். விவசாயக் கல்லூரிகளிலே மாணவர்களைச் சேர்க்கும்பொழுது எத்தனை மதிப்பெண்கள் பெற்றிருக்கிறார்கள் என்ற அடிப்படையிலே சேர்க்கக்கூடாது. கிராமப்புறங்களிலிருப்பவர்கள் அதிக மதிப்பெண்கள் பெறுகின்ற வாய்ப்பு கிடையாது. அதிக மதிப்பெண்கள் பெறக்கூடிய நிலையில் பாடப்புத்தகங்களின் கருத்தைச் சொல்வதற்கு வாய்ப்பு இல்லாததால் அவர்கள் குறைந்த மதிப்பெண்கள் பெற்றிருக்கலாம். ஆனாலும்கூட நடைமுறைப் பயிற்சியில், வேளாண்மையில் ஈடுபாடு இயல்பாகவே அமைந்து, அனுபவமிருக்கும். அதனால் வேளாண்மை கல்லூரியில் மாணவர்களைச் சேர்க்கும்பொழுது மதிப்பெண்கள் அடிப்படையில் சேர்த்தால் அவர்களுக்கு வாய்ப்பில்லாமல் போகிறது. அவர்களுக்கு அதிக வாய்ப்பளிக்கின்ற முறையிலே, வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலே மாணவர்களைச் சேர்க்கும்பொழுது, வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்ட குடும்பத்திலுள்ள மாணவர்களுக்கு அதிக வாய்ப்பு இருந்தால் நல்லதாயிருக்கும். அந்த முறையில் இதைத் திருத்த வேண்டும்.

அடுத்தபடியாக, இந்தப் பல்கலைக்கழகத்திலே மாணவர்களுக்கு எந்தவிதமான பிரதிநிதித்துவம் இல்லை. அதனால் எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் மாணவர்கள் கிளர்ச்சி அதிகமாக இருக்கிறது. பொறுப்புணர்ச்சி குறைந்திருக்கிறது என்று சொல்லப்படுகிறது. நிர்வாகத்திலே மாணவர்களின் பங்கு என்ன? வளர்ந்துவரும் முற்போக்கு நிலையில், மாணவர்களுக்கு அதிகப் பங்கு இல்லாவிட்டால் பொறுப்பு எப்படி ஏற்படும் என்று பார்க்கவேண்டும்.

அண்டையில் உள்ள கேரள பல்கலைக்கழகத்தில் செனட் சபையில் மூன்று மாணவர்களைச் சேர்க்க வேண்டுமென்று முற்பட்டு நடவடிக்கை எடுத்திருக்கிறது, நியமித்திருக்கிறது. நம்முடைய அரசும் அந்த முறையில் திருத்தம் செய்து மாணவர்களுக்கு அதிகாரபூர்வமான பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்ற முறையிலே சொல்லி திருத்தம் கொடுத்திருக்கிறேன்.

ஒன்றை மாத்திரம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். வேளாண்மையில் ஈடுபாடு உடையவர்களுக்கு இந்தப் பல்கலைக் கழகத்தில் இடம் அதிகமாகக் கொடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக, மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இந்த போர்டிலே இடம் பெறவேண்டும். அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பிரதி

"ராக் பெல்லர், போர்ட் பௌண்டேஷன்" போன்ற நிறுவனங்கள், "ஐ.வி.ஆர்." நிறுவனம் ஆகியவையிலிருந்து நிதி உதவி பெற்று பல்கலைக் கழகங்களை அமைக்க முன் வரவேண்டும். தமிழகத்திற்கு வேண்டிய ஆக்கமும், ஊக்கமும் கிடைக்க வேண்டிய பொறுப்பு இருக்கிறது. இந்தக் கருத்தைத் தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

இது சம்பந்தமாக மத்திய சர்க்காரில் இருந்து இதைப் பற்றியெல்லாம் பல ஸ்டடீ டீம் ஏற்படுத்தி வேண்டியவைகளைச் செய்ய வேண்டுமென்று இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவர்களை இதற்கு வற்புறுத்த வேண்டும். "இண்டோ-அமெரிக்கன் ஜாயிண்ட்" ஸ்கீமின் அடிப்படையில், டாக்டர் லார்ட் கிங், ராக்பெல்லர் பவுண்டேஷன் ஆகியவைகளின் உதவியுடன் பல்கலைக் கழகங்களை நிறுவலாம் என்ற கருத்துக்கள் பாராளுமன்றத்திலே தெரிவிக்கப்பட்டு இருக்கின்றன. அந்தக் கருத்துக்களின் அடிப்படையில் பல மாநிலங்களில் பல பல்கலைக் கழகங்களைத் தோற்றுவித்து இருக்கிறார்கள். இந்தப் பல்கலைக் கழகங்களிலே "கிராஜுவேட்ஸ், போஸ்ட்-கிராஜுவேட்ஸ், நான்-கிராஜுவேட்ஸ்" ஆகியவர்களுக்குப் போதிய பயிற்சி அளிக்கக் கூடிய எல்லா அம்சங்களும் இருக்க வேண்டும். அதே மாதிரி ஆராய்ச்சிக்கு முதன்மையான இடம் கொடுக்க வேண்டும். எப்படி வெங்கட்ராமனைப் பற்றி ஹாங்காங்கிலே பெரிதாக மதிக்கிறார்களோ, அதே மாதிரி ஆராய்ச்சிக்கு இந்தப் பல்கலைக் கழகங்களில் முதல் இடம் கொடுத்தால் பொருத்தமாக இருக்கும், சிறப்பாக இருக்கும். அதிலும் குறிப்பாக வேளாண்மைப் பகுதியில் இருக்கிற மாவட்டங்களில் கல்லூரிகள் திறப்பதற்கு அரசாங்கம் வழி வகை செய்ய வேண்டும். ஏறத்தாழ இதற்கு என்று அரசாங்கத்தில் இருந்து தனியாகப் பணம், அதிகமாகச் செலவழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிற சூழ்நிலை ஏற்பட்டாலும், இது சமுதாயம் செழிப்படைவதற்கு ஒரு முக்கியமானதும், அவசரமானதும் ஆன பிரச்னையாக இருப்பதால், இதற்கு வேண்டிய எல்லாக் காரியங்களையும் செய்ய வேண்டும்.

இன்னொரு விஷயத்தையும் நான் கூறவேண்டுமென்று நினைக்கிறேன். கன்னியாகுமரி ஜில்லாவில் ஒரு "ஃப்ரூட் ஃபார்ம்" இருக்கிறது. இதையும் இந்த பில்லில் உட்படுத்தவேண்டும். ஒருவேளை, இது ஒரு "ஃப்ரூட் ஃபார்ம்" ஆகத்தான் இருக்கிறது, அங்கே ஆராய்ச்சி செய்வதில்லை என்று காரணம் காட்டி ஆட்சேபனை இருந்தால் அதையும் பரிசீலனை செய்து அந்தமாதிரி மாவட்டத்தில் நல்லமாதிரி செயல்படுகிற அந்த ஸ்தாபனங்களையும் இதில் உட்படுத்த முடியுமா என்பதை அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக இங்கு கூறியதுமாதிரி இந்த பில்லில் செனட் நிறுவுவதற்கும், சின்டிகேட் ஏற்படுத்துவதற்கும் வேண்டிய வழிவகைகள் செய்வது பொருத்தமாக இருக்கும் என்ற ஆலோசனையை நானும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். யு.பி. என்று நான் நினைக்கிறேன், அங்கு அந்தப் பல்கலைக் கழகத்திற்கு 16,000 ஏக்கர் நிலம் இருக்கிறது என்று நான் ஒரு பத்திரிகையில் பார்த்தேன். இதுமாதிரி நல்ல பல்கலைக் கழகத்தை நிறுவுவதற்கு நாம் அதிகமான நிலத்தை இப்போதே ஆர்ஜிதம் செய்வதற்கு தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டால்தான் பின்னால் சங்கடங்கள், கஷ்டங்கள் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக எங்கள் மாவட்டத்தில் ஒரு விவசாயக் கல்லூரியும், ஒரு ஃபாரஸ்ட்ரி கல்லூரியும் நிறுவுவதற்கு அரசு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். அது ஒரு நல்ல வாய்ப்புள்ள பகுதியாக இருப்பதால்—அங்கு ரப்பர் விளைகின்றது. அங்கு அடர்த்தியான காடுகள் இருக்கின்றன. எப்போதும் தண்ணீர் வசதி உள்ளது—இவைகளை அங்கு அமைத்துத் தருவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்வது பொருத்தமாக இருக்கும் என்று கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்தில் கலந்து கொண்டு நல்ல பல அறிவுரைகளை இங்கு அளித்த மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேர்களுக்கும் முதலில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் அளித்த நல்ல யோசனைகளை எல்லாம் தமிழக அரசு ஏற்று நல்ல முடிவுகளைச் செய்து விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நல்ல பயனை அளிக்கத்தக்க வகையில் நிச்சயமாக பணியாற்ற முடியும் என்ற நம்பிக்கையை நான் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விவாதத்தில் கலந்து கொண்ட மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் இதை ஒரு பொறுக்குக் குழுவிற்கு அனுப்பவேண்டும் என்பதற்கான காரண காரியங்களை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் இதைப் பொறுக்குக் குழுவிற்கு விடவேண்டும் என்று சொன்னதற்கான காரணங்களோடு கூட சில திருத்தங்களையும் இங்கு எடுத்துச் சொன்னார்கள். அவர்கள், மத்திய அரசோடு இந்த அரசு வாதாடி, முடியாவிட்டால் போராடிக் கூட, விவசாயிகளுக்கு பல நன்மைகளைச் செய்வதற்கான பண உதவியைப் பெறவேண்டும் என்று வலியுறுத்தினார்கள். அவர்கள் அந்தளவிற்கு எங்களுக்கு உறுதுணையாக இருப்பதற்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படிப்பட்ட விவசாயப் பல்கலைக் கழகம் ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று ஏற்கெனவே முடிவு செய்து அந்த முடிவின்படி தமிழகத்தின் மேதகு ஆளுநர் அவர்கள் அதற்காக ஒரு அவசரச் சட்டத்தை இயற்றினார்கள். அந்த அவசரச் சட்டத்திற்குப் பிறகு மாற்றுச் சட்டமாக இந்த மசோதா இந்த அவை முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது. ஆளுநர் அவர்கள் இந்தப் பல்கலைக் கழகம் எவ்வளவு அவசிய அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை கருதித்தான் இந்த அவசரச் சட்டத்தைப் பிறப்பித்திருக்கிறார்கள்.

நமது மாண்புமிகு உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அவர்கள் சொன்னது போல் இது அவசரமாகச் செய்யப்பட்ட சட்டமல்ல. ஆர அமற மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டதுபோல் ஒரு நிபுணர் குழு அமைத்து அந்தக் குழுவின் பரிந்துரையின்பேரில் இங்கு அதைச் செயல்படுத்துவதற்காக, மேற்கொள்ளப்பட, கவர்னர் அவர்கள் அதற்கு அங்கீகாரம் அளித்து அவசரச் சட்டத்தைப் பிறப்பித்திருக்கிறார்கள். அதிலும் ஒருசில ஏன் சேர்க்கப்படவில்லை என்பதைக் கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் இங்கு குறிப்பிட்டார்கள். அவைகளை எல்லாம் புறக்கணித்து விட்டது இந்த அரசு என்று நிச்சயமாகக் கருதக் கூடாது. கொள்வனவற்றைக் கொண்டிருக்கிறோம், இனியும் எவை எவைகளை எல்லாம் கொள்ளலாம் என்பதுபற்றி தீர யோசித்து, ஆலோசித்து முடிவு

In another amendment I have suggested representation from Assembly and from Council. Since Government are bringing an amendment in that respect, I am not moving that amendment.

இந்த அமெண்ட்மெண்ட் மூவ் செய்வதன் நோக்கம் பொதுவாக வெடினரி காலேஜ் சேர்க்கலாம் என்பது. விவசாயக் கல்லூரிகள் 3 இருக்கும்போது, இந்த வெடினரி காலேஜையும் சேர்த்துக் கொண்டால் சிரமங்கள் குறையும். அதற்காகத்தான் இந்தத் திருத்தம் கொடுத்துள்ளேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்போது நடைபெறுகிற கோவை வேளாண்மைக் கல்லூரியிலே இதை சேர்த்துக்கொள்ளமுடியாது. இது மருத்துவப் பிரிவு, இது கால்நடைப்பிரிவோடு இணைக்கப்பட்டு இருக்கிறது. இந்த அரசு தற்போதுள்ள நிதி நிலை, நிர்வாக சௌகரியங்களைப் பார்த்து இந்த நிலை எடுத்து இருக்கிறதே தவிர, மேலும் இதை விரிவுபடுத்த, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி போன்றவற்றை மீண்டும் பரிசீலித்து எடுத்துக் கொள்ளலாம் என்று கூறி இந்தப் மசோதாவை நிறைவேற்றித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களின் திருத்தம் பேரவையின் அனுமதியோடு திரும்பப்பெறப்பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 3 முதல் 6 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு-7

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி பிரிவு-7-இம் மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்.

DR. H. V. HANDE: Sir, in clause 7 there is a provision for inspection and enquiry. Sub-clause (1) says—

'The Government shall have the right to cause an inspection to be made by such person or persons as they may direct.

(a) of the University, its buildings, laboratories, libraries, museums, workshops and equipments;

(b) of any institution, college or hostel maintained by the University.

(c) of the teaching and other work conducted by the University or under its auspices; or

(d) of the conduct of any examination held by the University.'

Again sub-clause (2) says—

'The Government shall also have the right to cause an enquiry to be made by such person or persons as they may direct in respect of any matter connected with the administration or finance of the University.'

Similarly in sub-clauses (3) to (7) we find such a provision. Let us know whether the provisions of this kind will not affect the very fundamental freedom of the University and also its autonomy. I want to know whether the Hon. Minister has got any programme to see that the autonomy of the University is not affected. As it is, I am afraid that this clause is a very dangerous clause and that is why I wanted to discuss this clause.

மாண்புமிகு திரு. சே. மாதவன்: தலைவரவர்களே, இந்த மசோதாவின் 7-வது பிரிவிலே பல்கலைக்கழகத்திலே சில நிலைமைகளை ஆராய்வதற்கு அரசாங்கம் அதிகாரம் எடுத்து இருக்கிறது. என்னென்ன நிலைமைகளுக்கு அந்த அதிகாரம் வேண்டுமென்பதை இந்த பிரிவிலே விளக்கப்பட்டு இருக்கிறது. இதனாலே பல்கலைக்கழகத்தின் சுதந்திரம் பறிபோகும் நிலையிலே ஒரு அரசாங்கம் நடந்து கொள்ளாது. பல்கலைக் கழகம் ஒழுங்காக நடக்கத்தான் இப்படிப்பட்ட அதிகாரங்கள் அரசுக்குத் தேவைப்படுகிறது. அந்தப் பிரிவை பயன்படுத்துகிற நேரத்தில் மாண்புமிகு அங்கத்தினர் கூறிய கருத்தை இந்த அரசாங்கம் முக்கியமாக எடுத்துக் கொள்ளும். இப்படி நியமிக்கும்போது யாரையாவது நியமித்து விடக்கூடாது என்ற அச்சத்தை வெளியிட்டார்கள். அதை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு நிச்சயம் அந்த அச்சம் தேவை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அதிகாரத்தை பயன்படுத்தும்போது அதிலே இருக்கின்றவர்களுக்கு யார் யார் எந்தெந்தக் கருத்தை செலுத்த முடியுமோ அந்த அளவுக்கு ஆற்றல் படைத்தவர்களைத்தான் அதிலே போடவேண்டுமென்ற அடிப்படையில் முடிவு எடுக்கப்படும். அந்த அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதற்கு அரசாங்கம் ஒரு வாய்ப்பைத் தராது, ஆகவே அந்த அச்சத்தை தவிர்த்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நிச்சயம் இந்தப் பிரிவு அச்சங்கத்திற்குத் தேவைதான்.

பிரிவு 7 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 8 முதல் 14 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"பிரிவு 15 மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்படவேண்டும்".

THIRU A. SUBRAMANIAM: Sir, I move the following amendment:—

'In sub-clause (1) of clause 15, after the words "Each College shall have a Dean who shall be", insert the words "the holder of a Post-Graduate degree in Agricultural Science and".'

The amendment was duly seconded.

திரு. ஏ. சுப்பிரமணியம்: துணைத் தலைவரவர்களே, இது ஒரு புரோஃபஷனல் யூனிவர்சிடி அக்ரிகல்சுரல் யூனிவர்சிடி. ஏற்கனவே, மருத்துவக் கல்லூரி, கால்நடை கல்லூரி, இவற்றில் எல்லாம் அந்தந்தத் துறையில் பட்டம் பெற்றவர்கள், சிறப்புப்பட்டம் பெற்றவர்கள்தான் டீனாக நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். அதேபோன்று இந்த வேளாண்மைக் கல்லூரியிலும் விஞ்ஞான பட்டம் பெற்ற

வர்கள் டீனாக இருந்தால் சரியாக இருக்கும் என்ற காரணத்தால் நான் இந்தத் திருதத் தீர்மானத்தை முன் மொழிகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்வார்கள் என் றுநம்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தினுடைய நல்ல நோக்கத்தை அரசாங்கம் வரவேற்கிறது. டீன் போடும்பொழுது நிச்சயம் திறமையுள்ளவரைத்தான் போடவேண்டும் என்ற கருத்தை எப்பொழுதுமே எந்த அரசும் ஏற்றுக்கொள்ளும் என்பதை மாண்புமிகு அங்கத்தினர் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். இதிலேயே என்ன டிகிரி என்று போட்டு விடுவோமேயானால், இதைவிட வேறு யாராவது திறமையானவர்கள் நமக்குக் கிடைத்தால் அவர்களைப் போட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும். டிகிரி ஒன்றாக இருக்கலாம். அனுபவத்தில் வேறு வேறு மாதிரியாக இருக்கலாம். ஆகவே, இந்தத் திருத்தத்தின் நல்ல நோக்கத்தை மட்டும் ஏற்றுக்கொண்டு, இதுபோன்று டீன் போடும்பொழுது, யார் ஆற்றல் படைத்தவராக நமக்குக் கிடைக்கிறாரோ, நம்முடைய தமிழ் நாட்டில் கிடைக்கிறாரோ அவரைப் போடுவதற்கு அரசாங்கம் நிச்சயம் ஏற்பாடு செய்யும் என்ற உறுதியை மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தர ஆசைப்படுகிறேன். என்ன குவாலிபிகேஷன் என்று இதிலே போடுவது அவ்வளவு பொருத்தமாக இருக்காது என்பதை மட்டும் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

திரு. சுப்பிரமணியம் அவர்களின் திருத்தம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 15 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 16, 17 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 18.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :—

" பிரிவு 18 இம் மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்படவேண்டும்."

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 18-வது பிரிவிலே இதை அதனுடைய இணைப்பாக சேர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

In Clause 18—

(*a*) in sub-clause (2), under the heading ' Class II—Other Members '', add the following item as item (h) :—

" (*h*) One member elected by the mebers of the Legislative Assembly of the State of Tamil Nadu from among themselves; and one member elected by the members of the Legislative Council of that State from among themselves;

Provided that no member so elected shall be disqualified for being a member of the Legislative Assembly or of the Legislative Council.''

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்தக் கிளாஸுக்கு நான் இரண்டு திருத் தங்கள் ஏற்கனவே கொடுத்திருக்கிறேன். என்னுடைய திருத்தத்தின் நோக் கத்தை அதிகாரபூர்வமான திருத்தத்தில் ஏற்றுக்கொண்டு இருப்பதினால்

I am not pressing my amendment, No. 3. But yet there is another amendment which I will formally move :—

In sub-clause (2) of Clause 18 under the heading ' Class I—Ex-officio after item (*h*) aded the following as item (*i*) and(*j*).

" (*i*) Director of Student Affairs.

(*j*) One representative each of the University of Madras, Madurai and Annamalainagar '.

This is all mentioned in the model Bill of the Government of India. That is why I have brought this amendment for a Director of Student Affairs. He must be one of the directors.

The amendment was duly seconded.

DR. H. V. HANDE : I wish to offer a few remarks with regard to that amendment.

MR. DEPUTY SPEAKER : There is another amendment by the hon. Member Thiru Suppu. Let him move it.

திரு. க. சுப்பு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்கு இந்த யுனிவர்சிடி நிர்வாகத்தில் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்பதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளுகிறார்களா? கொள்கை அளவிலாவது அவர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுப்பதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் திருத் தத்தை முதலில் மூவ் செய்யவேண்டும்.

THIRU K. SUPPU : Sir, I move the following amendment :—

(i) In sub-clause (2) of Clause 18 under the heading ' Class II—Other Members ' delete items (*b*) to (*f*) and substitute the following :—

(*b*) One elected representative of crop farmers.

(*c*) One elected representative of live stock farmers.

(*d*) One elected representative of agro industries.

(*e*) One elected representative of woman social workers.

(*f*) One educationist nominated by the Chancellor from a panel of three approved by the Assembly; and

(*ii*) In sub-clause (2) under the heading " Class II—Other Members '' add the following as item (*h*) :—

" (*h*) Four elected representatives of the students of various faculties. "

[Thiru K. Suppu]

I would like to know from the Hon. Minister whether he accepts the principle that students should have voice in the administration of the University and that they should have proper representation.

The amendment was duly seconded.

DR. H. V. HANDE: In Clause 18 we speak of the Board of Management. Out of the 15 members, 6 are Government servants. Six are nominated by Chancellor. There is one representative of the Indian Council of Agricultural Research. When such is the composition, how can we expect them to take an independent attitude? Except the one representing the Indian Council of Agricultural Research, 14 out of the 15, are directly or indirectly appointed by Government. It virtually amounts to executive control by Government.

Besides, the following require clarification by Government:—

(b) one *crop farmer* nominated by the Chancellor.

(c) one *livestock farmer* nominated by the Chancellor.

(d) one representative of *agro-industries* nominated by the Chancellor and

(e) One *woman social worker* nominated by Chancellor. We do not know who is one crop farmer, who is livestock farmer, who could represent agro-industries and who is 'woman social worker'. These should be clearly specified. They require explanation. Unless they are made clear, it will lead to lot of confusion.

I now come to representation of teachers. There is no possibility of senior teachers being represented. In fact I had a discussion with many senior people. I wanted to talk on that, during the general discussion. But the Hon. Minister wanted me to talk during clause-by-clause. I hope the Hon. Minister will make provision for the same while the rules are being formulated;

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, let us be clear about the words used. It should convey the proper meaning. What does the term 'one crop farmer' mean? It may give rise to two meanings, Let it be made clear.

With regard to the amendment given by the hon. Member Thiru Suppu he wants' one *elected* representative of crop farmers'. How can it be done? It is impossible. It will become an Assembly election. Even in the amendment given by the Hon. Minister, he wants one to be elected by Assembly and one elected by Council to be members in the Board. I think 'election' is not necessary. Mere nomination is enough. The amendment given notice of by the Hon. Minister may be modified accordingly by another amendment.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அம்மையார் அவர்கள் ஒன் கிராப் பார்மர் பற்றி ஏற்கனவே சொன்னார்கள். அவர்கள் தஞ்சை மாவட்டம், திருச்சி மாவட்டத்

திற்காக வாதாடியதை நமது அமைச்சர் அவர்கள் கூறுவதற்கு மறந்துவிட்டார்கள். அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் நிச்சயம் ஒன் கிராப் பார்மர்ஸ் பற்றி மிகவும் அருமையாக அறிந்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். ஏதாவது சிக்கல் வந்துவிடுமோ என்று கவலைப்பட்டுக் கொண்டார்கள். எந்த விதமான சிக்கலும் வராமல் விதிகளைப் பிறப்பிக்கும்பொழுது விளக்கம் கொடுத்துவிட்டால், அவர்கள் நினைக்கக்கூடிய குழப்பம் ஏற்படாத சூழ்நிலையை உருவாக்கிவிடலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் இவர்களெல்லாம் யார் யார் எப்படி எப்படி தேர்ந்தெடுக்கப்படப்போகிறார்கள் என்பதை, அவர்களுடைய குவாலிபிகேஷன், தகுதி என்ன என்பதைபற்றியெல்லாம் இதிலே போடவேண்டும் என்று சொன்னார்கள். அதைக் கூட விதிகளில் போடுவதுஎன்பது தான் முறையாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். விதிகளில் போட்டுவிடலாம் என்று அவர்களுக்குக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இதிலே அகெடமிக் குவாலிபிகேஷன் உள்ளவர்களுக்கு இடமில்லை என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்காக அகெடமிக் கவுன்சில் தனியாக இருக்கிறது. இந்த மசோதாவில் 22-வது பிரிவை பார்த்திருப்பார்கள் என்று கருதுகிறேன். போர்டு ஆஃப் மானேஜ்மெண்டில் அது தேவையில்லை என்று அரசாங்கம் கருதுகிறது. பல யுனிவர்சிடி சட்டங்களைப் பின்பற்றித் தான் இந்தப் பிரிவுகள் போடப்பட்டிருக்கின்றன. அகெடமிக் கவுன்சிலில் Heads of Department, three persons having special knowledge or partical experience in different aspects of agriculture. இவர்களெல்லாம் வரும்பொழுது, நாம் யாரைப் போடுவது என்று முடிவு செய்துகொள்ளலாம் என்று கருதுகிறேன். போர்டு ஆஃப் மானேஜ் மெண்டில் டீச்சர்களுக்கு இடம் கொடுக்கவேண்டும் என்று தேவையில்லை. போர்ட் ஆஃப் மானேஜ்மெண்டு பற்றிய பிரிவில் one educationist nominated by the Chancellor என்று போட்டிருக்கிறோம். ஆகவே இந்தத் துறையிலே பயிற்சி பெற்றவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

கனம் அங்கத்தினர் சுப்பு அவர்களின் திருத்தத்திற்கு, அம்மையார் அவர்களே அழகாகப் பதில் சொல்லிவிட்டார்கள் என்று நினைக்கிறேன். மாணவர்கள் பல்கலைக் கழக மானேஜ்மெண்ட் போர்டில் இடம் பெறுவதா இல்லையா என்பது கொள்கைப் பிரச்சினை. மற்ற பல்கலைக்கழகங்கள் பொறுத்த வரையில் அப்படியொரு முடிவு எடுக்காத நிலையில், இந்தப் பல்கலைக் கழகத்தில் மட்டும் முடிவு எடுப்பது சரியாக இருக்காது. அதனால் மாணவர்களுடைய கருத்துக்கள் புறக்கணிக்கப்படும் என்பது பொருள் அல்ல. துணைவேந்தர், கல்வித் துறையில் பயிற்சி பெற்றவர்கள் மற்றவர்கள் எல்லோரும் மாணவர்களுடைய கருத்துக்களை ஏற்று செயல்பட வாய்ப்பு இருக்கும் என்று கருதுகிறேன். தேர்தல் வேண்டும் என்று சொன்னதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். நம்முடைய சட்ட மன்றத்தைப் பொறுத்தவரையில், மற்ற பல்கலைக் கழகச் சட்டங்களில் எப்படிப் போடப்பட்டிருக்கிறதோ, அப்படியே தான் இதிலேயும் பின்பற்றியிருக்கிறோம்.

அரசாங்கத்திற்கு முழு அதிகாரமும் கொடுக்கப்படவேண்டும் என்றார்கள். அந்தக் கருத்து எதிர்க் கட்சியிலிருந்து வருவது பாராட்டத்தக்கது, வரவேற்கத்தக்கது. ஆனாலும், ஆளுங் கட்சியிலுள்ளவர்கள் ஜனநாயக மரபைப் பின்பற்ற வேண்டும் என்ற எண்ணத்தில், ஏகோபித்து திருத்தம் கொண்டு வரப்பட்டது. நம்முடைய கே. டி. கே. அவர்களின் திருத்தத்தின் அடிப்படையில், அது முழுமையாக அமையவேண்டும் என்று அதை ஏற்றுக்கொண்டு, திருத்தம் கொண்டு வந்திருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இது சிறு பல்கலைக்கழகமாக இருப்பதால், கிட்டத்தட்ட 15 பேர்கள் தான் இருக்கிறார்கள் இந்த போர்ட் ஆப் மானேஜ்மெண்டில். அந்தக் காரணத்தாலே, மிகுந்த விரிவு படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்று இந்த அளவில் இருந்தால் போதும் என்று அரசாங்கம் கருதுகிறது. ஆகவே, இந்தப் பிரிவை, அரசாங்கத் திருத்தத்தோடு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. க. சுப்பு: மாண்புமிகு அமைச்சரவர்கள் மாணவர்களுக்குப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்பதைப் பற்றிச் சொன்னார்கள். கேரளப் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் பிரதிநிதி செனட்டில் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் சட்டங்களில் அதைப் பற்றிப் பரிசீலிக்காமல், இதற்கு மட்டும் ஒரு முடிவு எடுப்பது சரியல்ல என்றுதான் சொன்னேன். ரஷ்ய நாட்டில், கேரள நாட்டில் என்ன இருக்கிறது என்பதை நான் ஆராயவில்லை.

திரு. க. சுப்பு: அமைச்சரவர்கள் கொள்கையளவில் அதை ஏற்றுக் கொள்கிறார்களா என்பதைஅறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினருக்குத்தான் மாணவர்களைப் பற்றி கவலை இருப்பது போலவும், அரசாங்கத்திற்கு மாணவர்கள் பற்றி கவலை இல்லாதது போலவும் கற்பனை செய்து கொண்டு பேசுவது சரியாகாது. மாணவர்களுக்கு நாங்கள் நிரம்ப மதிப்பு வைத்திருக்கிறோம். நல்ல யோசனைகளை ஏற்றுக் கொள்வோம். தேர்ந்தெடுக்கப்பட்டு மாணவர்கள் அங்கம் வகிக்க வேண்டும் என்ற அடிப்படையில் செய்தால், தேர்தல்கள் எப்படியிருக்கும், பல்கலைக் கழகத்திலும், கல்லூரிகளிலும் எப்படிப் பட்ட சிக்கல்கள் தோன்றக்கூடும் என்பதையெல்லாம் ஆராயவேண்டும். தமிழ் நாட்டில் வேறு பல்கலைக் கழகங்கள் பற்றி அப்படிப்பட்ட முடிவை எடுக்கின்ற நேரத்தில், இதற்கும் அது பொருத்தமாக இருக்கிறதா என்பதை யோசிக்கலாம். விவசாயப் பல்கலைக் கழகத்தில் மட்டும் தேவை என்னும்போது, மற்ற பல்கலைக் கழகங்களுக்கும் தேவை என்ற கிளர்ச்சியில் மாணவர்களின் நேரம் செலவாகும். அவர்களுடைய நல்ல ஆற்றலையும், தருகின்ற நல்ல கருத்துக்களையும் யாரும் குறைத்து மதிப்பிடவில்லை. இதிலே இடம் பெறுகிறவர்களும் மாணவர்களாக இருந்தவர்கள் தான் (சிரிப்பு) என்பதை உறுப்பினர் உணர வேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களின் திருத்தங்கள் **பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன.**

திரு. க. சுப்பு அவர்களின் திருத்தம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைமுன் உள்ள கேள்வி :—

'In clause 18—

(*a*) in sub-clause (2), under the heading "Class II—Other Members", add the following item as item (h) :—

"(*h*) One member elected by the members of the Legislative Assembly of the State of Tamil Nadu from among themselves; and one member elected by the members of the Legislative Council of that State from among themselves :

Provided that no member so elected shall be disqualified for being a member of the Legislative Assembly or of the Legislative Council".'

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 18, திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 19, 20, 21 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 22

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின்முன் உள்ள கேள்வி :—

"பிரிவு 22 இம் மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்படவேண்டும்."

THIRU K. T. K. THANGAMANI : Sir, I move the following amendment :—

'In sub-clause (1) of clause 22, add the following as sub-clause (j) :—

"(*j*) Four Members of Legislature, three from Tamil Nadu Legislative Assembly and one from the Tamil Nadu Legislative Council".'

இப்பொழுது இருப்பதில், அகடமிக் கவுன்சிலில் உறுப்பினர்கள் சம்பந்தமாக அரசாங்கத்தின் திருத்தம் இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திருத்தம் முறையாக வழிமொழியப்பட்டது.

மாண்புமிகு திரு. அ. பெ. தருமலிங்கம்: இப்பொழுது மசோதாவில் பிரிவு 22, உட்பிரிவு (1)-ல் விவசாயத்தில் முதிர்ந்த அனுபவம் பெற்றவர்களுக்கு இடம் இருப்பதால், சட்டமன்ற மேலவை உறுப்பினர் இடம் பெறத் தேவையில்லை என்பதைக் கூறுகிறேன்.

THIRU K. SUPPU : Sir, I move the following amendment :—

'In sub-clause (1) of clause 22, add the following as item (j) :—

"(j) Four elected representatives of the students of various faculties ".'

The amendment was duly seconded.

திரு. தங்கமணி அவர்களின் திருத்தமும், திரு. சுப்புவின் திருத்தமும் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன.

பிரிவு 22 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 23 முதல் 44 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன் உள்ள கேள்வி :

"பிரிவு 45 இம் மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".

THIRU K. T. K. THANGAMANI : Sir, I move the following amendment :—

'In clause 45, in line 10, for the words " five years " substitute the words " three years ". '

The amendment was duly seconded.

மாண்புமிகு திரு. அ. பெ. தருமலிங்கம் : இந்த மசோதாவிலேயே ஐந்தாண்டுகளுக்கு மேற்படாமல் என்று இருப்பதால், அது குறைவாகவும் இரண்டு ஆண்டு, மூன்று ஆண்டு என்று, சான்ஸலர் விரும்பினால் குறைத்துக் கொள்ளலாம். ஆகவே, அதற்குத் திருத்தம் தேவையில்லை என்று தெரிவிக்கிறேன்.

திருத்தம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 45 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 46 முதல் 55 வரை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

அட்டவணை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"அட்டவணை இம் மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

THIRU K. T. K. THANGAMANI : For Clause 2 I have already moved an amendment formally for record purposes to show that I have moved. I did not press it. The amendment to the Schedule is similar to that, inclusion of 'Veterinary College, Vepery, Madras'. I move that amendment :—

In the Schedule, add the following as item 11 :—

(ii) Vaterinary College, Vepery, Madras. "

The amendment was duly seconded.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஏற்கனவே குறிப்பிட்டபடி புதிதாக வர இருக்கும் கல்லூரிகள் என்னவென்று குறிப்பிட வேண்டும். வெடினரி காலேஜையும் சேர்க்க வேண்டும். Of Course I am not pressing it.

திரு. தங்கமணி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

அட்டவணை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. அ. பெ. தருமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மை பல்கலைக் கழக மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 2/1971), திருத்தப்பட்டபடி நிறைவேற்றப்பட வேண்டும்".

திரு. கே. டி. கே. தங்கமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை வரவேற்று ஏற்கனவே கருத்துக்களைச் சொல்லியிருக்கிறேன். பல்கலைக் கழகமாக இருக்கும் காரணத்தால் உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமென்ற முறையில் எந்த விதமான தடங்கலும் இல்லாமல் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதுதான் நோக்கம். இரண்டு கல்லூரிகளுக்கு மேலும் உயர்த்தலாம் என்ற வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். வெகு சீக்கிரத்தில் வெடரினரி காலேஜும் சேர்க்கப்படும் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மை பல்கலைக் கழக மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 2/1971), திருத்தப்பட்டபடி, நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, மசோதா, திருத்தப்பட்டபடி, சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் மாலை 4 மணிக்கு பேரவை கூடும்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

(இடைவேளைக்குப் பின்னர் மாலை 4 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது).

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஐ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு-மாற்று) மசோதா

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1971-ம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு-மாற்று) மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

6. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(ஊ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு-மாற்று) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 3/1971).

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1971-ம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு-மாற்று) மசோதா* (சட்டப் பேரவை மசோதா எண் 3/1971) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, இம் மாநிலத்தில் சில பகுதிகளில் குடிசைப் பகுதிகள் அதிகரித்துள்ளதாலும் இக் குடிசைப் பகுதிகள் பொதுநலன், சுகாதாரத்துக்கு ஊறு விளைவிக்கக்கூடுமாதலாலும், அரசு, அடுத்த சில ஆண்டுகளில் குடிசைப் பகுதிகளை மாற்ற படிப்படியான திட்டம் ஒன்றை மேற்கொள்வதென்று 1970 செப்டம்பர் திங்களில் முடிவு செய்தது. குடிசைப் பகுதிகளைத் திறம்பட மாற்றவும், குடிசைப் பகுதிகளின் வளர்ச்சியைத் தடுக்கவும், தனிப்பட்ட சட்டம் ஒன்று இயற்றப்பட வேண்டுமென அரசு கருதியது. அவ்வண்ணமே தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (சீரமைப்பு-மாற்று) அவசரச் சட்டம் சாற்றப்பட்டது. இந்த அவசரச் சட்டத்தை சாற்றுகையில், 1956-ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (சீரமைப்பு-மாற்று) சட்டத்தின் விதித் துறைகள் கருத்தில் கொள்ளப்பட்டன. குடிசைப் பகுதி மாற்றுப் பணியில் விரைவாகத் திட்டங்கள் வகுக்கவும் அவற்றை ஆய்வு செய்யவும், அவற்றைச் செயல்படுத்தவும் வாரியம் ஒன்றை அமைப்பது உகந்ததாக இருக்குமென்று கருதப்பட்டதால், சட்டப்படி அமைக்கப்பட்ட வாரியத்தின் நிலையிலுள்ள குடிசைப்பகுதி மாற்று வாரியம் ஒன்றை அமைக்க அவசரச் சட்டத்தில் வகை செய்யப்பட்டது. இந்த அவசரச் சட்டத்திற்குப் பதிலாகச் சட்டம் ஒன்றை இயற்ற இம் மசோதா கொண்டு வரப்படுகிறது.

குடிசைப் பகுதி மாற்றுப் பணிக்குத் தேவைப்படும் நிலங்களைக் கையடைசெய்யவும், மசோதாவின் 17-வது பகுதியில் குறிப்பிட்டுள்ள அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளன்று அந்த நிலங்களுக்குள்ள சந்தை மதிப்பீட்டின் அடிப்படையில் இழப்பீடு வழங்கவும் தற்போதைய மசோதாவில் வகை செய்யப்பட்டுள்ளது.

பேரவைத் தலைவர் அவர்களே, இம் மசோதாவை ஏற்குமாறு நான் இம் மன்றத்தை வேண்டுகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை வரவேற்று ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த மசோதா இப்போது முதன்முதலாக வந்திருக்கிறது. நீண்டகாலமாக, இப்பேர்ப்பட்ட ஒரு மசோதா வரவேண்டுமென்று பல்வேறு இடங்களிலேயுள்ள அனைவரும், இந்த மன்றத்தில் இருக்கக்கூடிய அனைத்துக் கட்சி உறுப்பினர்களும், அனைத்துக் கட்சிகளும் வற்புறுத்திக்கொண்டு வந்தார்கள்.

* 1971 மார்ச் 29-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

நான் மேலவையில் இருந்தபோதும், திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் அமைச்சராக இருந்த நேரத்தில் இதுபற்றி பலதடவை எடுத்துச் சொன்னேன். அப்போது அமைச்சர் அவர்கள், 'நம் ஒரு பகுதியில் இருக்கிற குடிசைப் பகுதிகளை மாற்றியமைக்க ஒரு திட்டம் வகுத்து, திட்டத்தை உடனே செயல்பட ஆரம்பித்து நிறைவேற்றிய பிறகு, அந்த இடத்திலுள்ள மக்கள் வேறு இடங்களுக்குச் சென்று, புதிய குடிசைப் பகுதிகளை உண்டாக்கிக் கொண்டு வருகிறார்கள். இதனால் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன'. என்று சொல்லி வந்தார்கள்.

குடிசைப் பகுதிகளை மேம்படுத்த வேண்டுமென்று நிபுணர்கள் எல்லாம் ஆராய்ச்சி நடத்தி, அதன்பிறகு இப்போது திட்டவட்டமாக ஒரு மசோதா வாக உருவாகி வந்திருக்கிறது. இந்தத் திட்டத்தை கட்சி சார்பில்லாத முறையில் அனைவரும் வரவேற்கக்கூடிய விஷயமாக இருக்கிறது என்பதை வலியுறுத்துகிறேன். இப்போது கொண்டுவந்திருக்கும் மசோதாவை அனைவரும் பாராட்டுகிறோம். இந்த ஒரு விஷயத்திலாவது கட்சிக் கண்ணோட்டத்தைப் பார்க்காமல் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டுவரும்போது, அதில் கட்சிக் கண்ணோட்டம் இருக்கக்கூடாது என்பதை வலியுறுத்துகிறேன். இதை எல்லாக் கட்சியினரும் வரவேற்றுப் பாராட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதே மன்றத்தில் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஒரு துணை மானியக் கோரிக்கையின்மீது பேசும்போது, 'எல்லா விஷயங்களையும் ஒதுக்கி வைத்துவிட்டு, குடிசை மேம்பாட்டிற்காக என்ன என்ன செய்ய வேண்டும்' என்பது பற்றிய பல யோசனைகளையும் கூறினேன். அந்த நேரத்திலே, "இதை கட்சிக் கண்ணோட்டமாக நடத்தி வருகிறார்கள் என்று எதிர்க்கட்சி சார்பில் சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது" என்று குறிப்பிட்டும் சொன்னேன். என்னுடைய அருமை நண்பர் திரு. அரங்கண்ணல் அவர்கள்கூட, "உங்களிடமிருந்து ஒரு பாராட்டாவது வரும் என்று எதிர்பார்த்தேன்" என்று சொன்னார்கள். அப்போது அப்படிச் சொல்ல முடியாத நிலைமை எனக்கு ஏற்பட்டது. குடிசை மாற்று வாரியம் அமைக்கப்பட்ட நேரத்தில், அந்த வாரியத்தில் எல்லாக் கட்சி உறுப்பினர்களும் பங்குகொண்டால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்தோம். எல்லாக் கட்சியினரும் பங்கு கொண்டால் அது சிறப்பாகவே இருக்கும். இதை ஆங்கிலத்தில் Justice must not only be done but it must appear that justce has been done. என்று சொல்வார்கள். அது நியாயமாக, நேர்மையாக இருக்கும். செயல்படும் என்ற நம்பிக்கையிருந்தாலும் அப்பேர்ப்பட்ட போர்டுக்கு ஒரு கட்சிதான் இருக்க வேண்டுமா? எல்லாக் கட்சியினரும் இருந்தால் நல்லது என்பதையே குறிப்பிடுகிறேன்.

அதுமட்டுமல்ல, இப்போது ஏராளமான அளவில் ரோடரி கிளப், ஜூனியர் சேம்பர், லயன்ஸ் கிளப் போன்ற அமைப்புக்கள் இருக்கின்றன. அவற்றின் மூலமாக தேவையான பணவசதி பெறக்கூடிய நிலைமை இருக்கிறது. எல்லா உறுப்பினர்களும் இதிலே பங்கெடுத்துக் கொண்டு, குடிசைப் பிரச்சினையைத் தீர்க்க முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். இதைப்பற்றி இந்த மன்றத்திலே வாதிடுவது மட்டுமின்றி, வெளியிலேயும் வாதிட்டு, இதை நல்ல முறையில்

தீர்க்கவும், நல்லமுறையில் நன்மை செய்யக்கூடிய முறையில் செயல்பட எல்லோரும் தாராளமாக உதவிசெய்ய வேண்டுமென்று வலியுறுத்திச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இந்த வாரியத்தில் மாற்றுக் கட்சி உறுப்பினர்களையும் சேர்த்துக்கொண்டு செயல்படலாம் என்ற எண்ணத்தை அரசாங்கத்தின் முடிவுக்கே விட்டுவிடுகிறேன்.

அடுத்தபடியாக, சாதாரணமாக ஒரு நிலைமை இருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு மேயர் வந்த நேரத்தில் ஒரு பிரச்சினை கிளப்பப்பட்டது. நெடுஞ்சாலை ஓரமாக இருக்கக் கூடிய குடிசைகளை அப்புறப்படுத்த வேண்டும். பார்ப்பதற்கு நல்ல காட்சியாக இல்லை, என்று கூறினார்கள். முதன்முதலாக இந்த மசோதாவில் போட்டிருக்கக்கூடிய வரியானது, The number of slums in the City of Madras and in certain other areas in the State of Tamil Nadu are recently on the increase and these slums are likely to become a source of danger to public health and sanitation of the said areas என்பதாகப் போட்டிருக்கிறது. சென்னை நகரைப் பார்ப்பவர்களுக்கு இது நல்ல காட்சியாக இல்லையென்று தெரிவித்தார்கள். தற்போது குடிசை பிரச்சினையைத் தீர்க்க முதன்முதலாக போடக்கூடிய வாரியமாக இது இருக்கிறது. சென்னைநகரில் இப்படி குடிசைகள் இருப்பதால், காட்சிக்கு நன்றாக இல்லை, இதனால் சுகாதாரம் பாதிக்கப்படுகிறது; இதனால் மற்றவர்கள் எல்லாம் பாதிக்கப்படுகிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள்.

நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். அந்தக் குடிசைகளால் மற்றவர்களுடைய சுகாதாரம் பாதிக்கப்படுகிறது என்றால், அந்தக் குடிசைகளிலேயே தங்கி, இருந்து, வாழ்ந்து வரக்கூடிய மக்களின் சுகாதாரக் கேடுகளைப்பற்றி நாம் சிறிதாவது எண்ணிப் பார்த்தோமா? சுகாதாரக் கேடுகளினால் பலவித நோய்கள் ஏற்படும் என்று சொல்லப்படுகின்ற நேரத்தில் அந்தக் குடிசையில் நோய்வாய்ப்பட்டிருக்கும் நோயாளியைப்பற்றி நினைத்தோமா? ஒரு தாய் ஆசிரியரிடம் சென்று, என் பையனுக்குப் பக்கத்தில் இருக்கிற பையனை அடிக்கிறபோது என்னுடைய பையனுக்கு அதிர்ச்சியாக இருக்கும், அது எனக்குக் கவலையாக இருக்கும் என்று சொன்னாளாம். அந்தத் தாய் தன்னுடைய மகனுக்கு ஏற்படுகிற அதிர்ச்சியைப்பற்றித்தான் கவலைப்படுகிறாளேயன்றி, அடிபடுகின்ற மாணவனுக்கு ஏற்படும் வலியைப்பற்றி கவலைப்படவில்லை. அதேபோலத்தான், மோட்டாரில் போகிறவர்களுக்கு, பஸ்ஸில் போகிறவர்களுக்கு இந்தக் குடிசைகளின் தோற்றம் ஒரு பயங்கரமான காட்சியாக இருக்கிறது. அங்கே இருக்கக் கூடிய லட்சக்கணக்கான குடிசைவாழ் மக்களின் ஆரோக்கியத்திற்கே ஒரு பயங்கரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்வதுதான் சரியானது.

இரண்டாண்டுகளுக்கு முன்பு கார்ப்பரேஷனில் ஒரு தீர்மானம் போட்டார்கள். மாநகராட்சியில் அங்கங்கே நடைபாதைகளில் காணப்படுகிற குடிசைகள் வெளியிடங்களில் இருந்து வருகிறவர்கள் கண்ணில்படுகிறபோது மிகவும் பயங்கரமாக இருக்கிறது, அந்தக் காட்சியை உடனே மாற்றி அமைக்க வேண்டும் என்று சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில் வெளியில் இருந்து வருகிறவர்களுக்கோ, காரில் போகிறவர்களுக்கோ காட்சி எப்படி இருக்கிறது என்பது முக்கியம் அல்ல. அப்படிப்பட்ட காட்சி இருக்கிறது என்றால் அது மிகவும் துர்ப்பாக்கியமான நிலைமை. அவர்களை அந்த அந்த

இடங்களில் இருந்து வெளியேற்றுவது என்றால், வெளியேற்றுவதற்கு முன்பாக மாற்று இடத்தைக் கொடுத்துவிட்டு வெளியேற்றுகிற முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

இதுபற்றி என்னிடத்தில் பல கடிதங்கள் வந்திருக்கின்றன. அண்மையில் கூட குடிசை மாற்று வாரியத்தில் இருந்து வந்ததாக ஒரு கடிதத்தை ஒரு குடிசை வாசி கொண்டு வந்து கொடுத்தார். அதில் "நீர் சில மாதங்களாக அத்துமீறி இந்த இடத்தில் வந்து குடிசை போட்டிருக்கிறீர், அது அப்புறப் படுத்தப்படும்" என்று இருந்தது. அப்புறப்படுத்தக்கூடாது என்று நான் சொல்லவில்லை. அப்புறப்படுத்துவதற்கு முன்பாக மாற்று ஏற்பாடுகளைச் செய்து கொடுத்து அப்புறப்படுத்தும் நடவடிக்கை எடுத்துக் கொள்வதுதான் சிறந்ததாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில் மற்றொரு விஷயத்தையும் வலியுறுத்திச் சொல்வது நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன். எத்தனையோ வசதியுள்ளவர்கள் இருக்கிறார்கள். வாழ்க்கையில் மிக அதிகமான வசதிகளைப் பெற்றிருக்கிறவர்களும் ஒரு பக்கம் இருக்கலாம். மற்றொரு பக்கம் சிறிது கூட வசதியில்லாத நிலையில் மக்கள் இருப்பதைப் பார்க்கிறோம். வசதியுள்ளவர்கள் சர்ப்ளஸ் 'மணியை' என்ன செய்வது என்று தெரியாத நிலையில் கூட இருக்கிறார்கள். திருப்பதி உண்டியலில் கொண்டுபோய்ப் போடுகிறவர்களும் இருக்கிறார்கள். இப்போது நாம் ஏற்படுத்தியிருக்கின்ற இந்த போர்டினிடத்தில் கொடுத்தால் ஏழை எளிய மக்களுக்கு எல்லாம் தொண்டு செய்கின்ற தன்மை ஏற்படும். சிறிது சிறிதாகக் கொடுக்கலாம். மணியார்டர் மூலம் கூட அனுப்பலாம். மொத்தமாகத் தர்மம் செய்யலாம். அவ்வப்போது இதுபோன்று வருகிற தர்மங்களையும் ஏற்றுக்கொள்வது சிறந்ததாக இருக்கும். அதற்காக விழாக்கள் வைப்பது—கொடுப்பவர்—வாங்குபவர் பேசுவது—என்கிற விழாக்கள் எல்லாம் கூட அநாவசியம். கட்சிச் சார்பற்ற முறையில் அங்கத்தினர்களைப் போடலாம் என்று சொன்னதே அதற்காகத்தான். எல்லாத் தரப்பில் இருந்தும்—எல்லாக் கட்சியினர்களிடம் இருந்தும்—உதவி பெறத்தக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இது ஒரு சமுதாயப் பிரச்சினை.

முக்கியமான பிரச்சினை இது என்கிறதால் ஒரு சின்ன விஷயம். 1965-ஆம் ஆண்டு வார் பண்டு வசூல் செய்தார்கள். அப்போது நான் அரசியலில் இல்லை என்றாலும்—என்னிடம் அப்போது இருந்த—'வெட்டிங் ரிங்'கை ரிசர்வ் பாங்கில் கொடுத்து அதற்காக ரசீது பெற்றேன். திரு. பக்தவத்சலம் அப்போது முதல் அமைச்சராக இருந்தார்.

I said it should be considered on a war footing. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் அதுபோல இது ஒரு பெரிய பிரச்சினை. எல்லாத் தரப்பினர்களிடம் இருந்தும் உதவி கோரிப் பெற்று இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக்குவதுதான் நம்முடைய முதற்கடமை.

இன்னொரு விஷயத்தையும் சொல்ல விரும்புகிறேன். மேல்மட்டத்தில் இருக்கிறவர்கள் நல்லவர்களாக—செம்மையாகப் பணியாற்றினால் மட்டும் போதாது. கீழ்மட்டத்தில் தவறு ஏற்பட இடம் அளிக்கக் கூடாது. எனக்குக் கூடப் புகார்கள் வருகின்றன. ஒரு குடிசைப் பகுதியை மேம்படுத்துவது என்றால்—முதலில் அங்குள்ளவர்களை போட்டோ எடுத்து பைலில் வைத்துக்கொண்டு ஒரு காப்பி அவர்களிடமும் கொடுக்கிறார்கள். அந்த

இடத்தில் கட்டிடம் கட்டப்பட்டவுடன் போட்டாவைக் கொண்டு வந்து காட்டுகிறவர்களுக்கு அங்கே வசிக்க இடமளிக்கிறார்கள். இதில் கீழ் மட்டத்தில் இருக்கக் கூடியவர்கள் "எனக்கு பத்து ரூபாய் கொடு, 20 ரூபாய் கொடு—உனக்கு போட்டோ காப்பி வாங்கித் தருகிறேன்" என்பதாகத் தவறு நடந்துவிட இடமுண்டு. அப்படிப்பட்ட புகார்—அவதூறு ஏற்பட்டால் உடனடியாகக் கீழ்மட்டத்தில் அதற்குக் காரணமானவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளத் தயங்கக்கூடாது.

அடுத்து, இந்த நேரத்தில் எனது தொகுதியைப்பற்றி ஓரிரு வார்த்தை சொல்வது நியாயமாக இருக்கும் என்று கருதுகிறேன். என்னுடைய தொகுதியில் 3 முக்கியமான குடிசைப் பகுதிகள் இருக்கின்றன. எலிபன்ட் கேட் போலீஸ் ஸ்டேஷன் அருகில் ஐநூறு—அறநூறு குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களுக்கு உடனடியாக மாற்றுத்திட்டத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அந்த இடத்தை எடுத்துக்கொண்டால் பக்கத்தில் ஒரு கால்வாய் ஓடிக்கொண்டிருக்கிறது. அங்கே மேடு செய்து—பைல் செய்து—அஸ்திவாரம் போட்டால் 3 மாடிக் கட்டிடம் கட்ட முடியும். அடுத்த இரண்டாண்டுகளுக்குள்ளாவது அதைச் செய்து தருவது—இந்த ஐந்தாண்டுக்குள் மிக அவசியம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

பக்கத்தில் ஜட்காபுரம் என்பதாக வால்டாக்ஸ் ரோடில் இருக்கிறது. அங்கே 200 குடும்பங்கள் உண்டு. ஒரு குடிசையில் 2 குடும்பங்கள் கூட இருக்கின்றன.

அதற்குப் பக்கத்தில் அன்பழகன் நகர் (ஜோதி நகர்) என்று இருக்கிறது. அந்தக் கட்சிக்காரர்கள் அன்பழகன் நகர் என்கிறார்கள். காங்கிரஸ் கட்சிக்காரர்கள் ஜோதி நகர் என்கிறார்கள். ஜெனரல் ஆஸ்பத்திரிக்குப் பக்கத்தில் அங்கே ஒரு 300 குடும்பங்கள் இருக்கலாம். அதுவும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். அடுத்து மொபசில் பஸ் ஸ்டான்ட்டுக்கு அருகில் சாமபிள்ளைத் தெருவில் 36-வது வட்டத்தில் ஒரு பகுதி இருக்கிறது. உள்ளடங்கிய இடமாக இருக்கிறது. அந்த நிலத்திற்குச் சொந்தக்காரர்கூட அவர்களை வெளியேற்ற கோர்ட் நடவடிக்கை எடுத்துவிட்டார். அப்போதே நான் திரு. இராம. அரங்கண்ணல் அவர்களிடம் சென்று சொன்னேன். அவர்களுடைய பிரச்சினை கவனிக்கப்படும் என்று சொன்னார்கள். அதைக் கவனிக்க வேண்டும். சால்ட் கொட்டகையின் அருகில் 200 குடும்பங்கள் இருக்கின்றன. 600 பேர்கள் இருக்கும். இதுதான் என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட பிரச்சினை. இவற்றில் எல்லாம் உடனடியாகக் கவனம் செலுத்துவார்கள் என்று கருதுகிறேன்.

இப்படி மாற்று ஏற்பாடுகளைச் செய்கிறபோது அங்கெல்லாம் சுகாதார வசதி, வைத்திய வசதியை ஏற்படுத்துவதற்கு ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பெரிய இடமாக 2,000 பேர்களுக்கு மேல் இருக்கும் நிலை கூட ஏற்படலாம். 'வானி'ல் வாரத்திற்கு இரண்டுநாளோ, ஒரு நாளோ அந்த இடத்திலேயே அவர்களுக்கு மருத்துவ வசதி கிடைக்கச் செய்யலாம். இதனால் டாக்டர்களுக்கும்

வேலை கிடைக்கும். ஏழைகளுக்கும் வசதியாக இருக்கும். இண்டியன் மெடிகல் இன்ஸ்டிட்யூட்டில் நான் இருந்தபோது நாங்கள் இப்படி 'வானி'ல் கிராமங்களுக்குப் போவோம். குறிப்பாக ஹரிஜன காலனியில் போய் இறங்குவோம். பக்கத்தில் உள்ளவர்கள் எல்லாம் கூட இங்கே நன்றாக கவனிக்கிறார்கள் என்பதாக இங்கே வருவார்கள். அதனால் நன்மை ஏற்பட்டது. நாள்தோறுமோ—அல்லது வாரத்திற்கு ஒரு முறை—இரண்டு முறையோ மருத்துவர்கள் அங்கேயே போவதற்கு நாம் ஏற்பாடு செய்யலாம். அங்கே இருக்கக்கூடிய சுகாதார வசதிகளைப் பார்த்து—தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டால் நன்றாக இருக்கும். இதற்காக சானிடரி இன்ஸ்பெக்டர்கள்—டாக்டர்கள் ஆகியோர் 'வானி'ல் போக ஏற்பாடு செய்வதும் நல்லது.

மெயின்டெனன்ஸ் மிக மிக அவசியமாகக் கவனிக்கப்பட வேண்டியதாகும். என்னுடைய ஆஸ்பத்திரிக்குப் பக்கத்திலே டி. பி. சத்திரம் இருக்கிறது, அது தற்பொழுது திரு. இராம. அரங்கண்ணல் அவர்களுடைய தொகுதியாகும், அங்கே ஏராளமான இல்லங்கள் இருக்கின்றன. ஆனால் அந்த இடத்திலே பார்த்தால் ஆங்காங்கு உடைந்திருக்கின்றது, லெட்ரின்கள் எல்லாம் மோசமான வகையிலே அடைப்புகள் ஏற்பட்டு கொசுக்கள் உண்டாகக்கூடிய முறையிலே ஏராளமான தொல்லைகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆகவே கட்டினால் மட்டும் போதாது, கட்டுகின்ற நேரத்திலே அதைக் கவனிப்பதற்காக மெயின்டனன்ஸ் ஸ்டாஃப் ஏற்படுத்தவில்லையென்றால் நிலைமை பயங்கரமாகப் போய்விடும். கட்டி முடித்துவிட்டோம் என்ற மகிழ்ச்சி நமக்கு இருந்தாலும் அதைத் தொடர்ந்து பாலோ அப் ஆக்ஷன் இருந்தால் தான் அதனுடைய பலனை மக்கள் அனுபவிக்க முடியும்.

இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். நான் இது வழக்கமாகச் சொல்லக் கூடியதுதான், பாடக்கூடிய பாட்டுதான். இருந்தாலும் சொல்லவேண்டியதைச் சொல்லிதானே ஆகவேண்டும்—மத்திய அரசாங்கம் கல்கத்தாவுக்கும் முக்கியத் துவம் கொடுத்திருக்கிறார்கள், டில்லிக்கும் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார் கள். அதேபோன்று பம்பாய்க்கும் பிரதான ஸ்தானத்தைக் கொடுத்திருக்கிறார் கள். இந்த மூன்று நகரங்களுக்குப் பிறகு நான்காவது ஸ்தானம்தான் சென்னைக்குக் கொடுக்கிறார்கள்.

சென்னையிலே இருக்கக்கூடிய ஒரு புது உணர்ச்சி ஒரு புதுக் கண்ணோட்டத்தின் காரணமாக சென்னையைச் செம்மைப்படுத்தக்கூடிய நிலைமை இருக்கிறது. இங்கே அதற்காக வாரியத்தை ஏற்படுத்தியிருக் கிறார்கள். அதிகாரிகளைப் போட்டு ஆகிவிட்டது. நல்ல திட்டங்களை வகுத்தாகிவிட்டது. அந்த நகரங்களிலே எல்லாம் அவ்வளவு நல்ல முறையிலே இதுபோன்று முயற்சிகள் செய்யப்படவில்லை என்று அதிகாரப் பூர்வமாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. முதல் ஸ்தானம் கல்கத்தாவுக்குக் கொடுக்கட்டும். கொடுத்தாலும்—இப்பொழுது பாகிஸ்தான் ரகளை வேறு ஏற்பட்டு இருக்கிறது, ரெஃப்யூஜிஸ் ப்ராப்ளம் அதிகமாக வரலாம்—டெல்லிக்கும் அப்படி முக்கியத்துவம் கொடுத்தாலும்கூட இங்கே அதிகமாகச் செய்யக்கூடிய பாஸிபிலிட்டி, அதாவது 'பாஸிபிலிட்டி ஆப் டூயிங் சம்திங்' இருக்கிற காரணத்தினாலே குறைந்த பட்ச ஸ்தானமாவது சென்னை நகரத்திற்குக் கொடுக்கவேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையைப்பற்றியே பேசிக்கொண்டிருக்கிறீர்களே என்று கேட்கலாம். திரு. கே. டி. தங்கமணி அவர்கள், சென்னையைப்பற்றியே பேசிக் கொண்டிருக்கிறீர்களே என்று கேட்கலாம். சென்னை மட்டுமல்ல, எல்லாப் பகுதிகளிலும் மதுரை ஆகட்டும், திருச்சி ஆகட்டும், கோவை ஆகட்டும், தமிழ் நாட்டிலே பரவலாக இந்த விஷயத்திலே நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும்.

நான் வழக்கமாகப் பேசிக்கொண்டிருக்கிறேன், இந்த விஷயத்தை. செய்யக்கூடிய நிலைமைக்கும், பேசக்கூடிய நிலைமைக்கும் ஒரு கிரேட் பிரிட்ஜ் அதாவது வித்தியாசம் இருக்கிறது. ஹவுஸிங் போர்டு ஏற்படுத்தக்கூடிய நேரத்திலே ஒன்று சொல்லப்பட்டது. ஆனால் கட்டுகின்ற நேரத்திலே பெரிய பெரிய வீடுகளைக் கட்டினார்கள். பெரிய வீடுகள் கட்டத் தேவையில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. சென்னையிலே அரசாங்கம் கஷ்டப்பட்டு ஆர்ஜிதம் செய்த இடங்களில் எல்லாம் ஹவுஸிங் போர்டு என்ற நிலைமையில் அரசியல் இன்ப்ளுவன்ஸைப் பயன்படுத்தி பல காரியங்களைச் செய்துகொண்டு இருக்கிறார்கள். பணக்காரர்கள் பண வசதியுள்ளவர்கள் கட்டிக்கொள்ளலாம், ஆனால் இப்படிப்பட்ட நிலைமை களிலே அவர்களுக்கு இடம் கொடுக்கக்கூடாது. பணக்காரர்கள் மச்சான், மனைவி பெயரிலே செய்தார்கள். ஜோதியம்மாள் அவர்கள் மந்திரியாக இருந்த நேரத்திலே வலியுறுத்திச் சொல்லி மோதல்கள் எல்லாம் நடைபெறக்கூடிய நிலைமை இருந்தது. ஏ டைப், பி டைப் என்று வைத்திருக்கிறார்கள். 'ஏ' டைப் என்றால் ஆறு கிரவுண்ட்கள். அப்படி அதிகமாக ஆர்ஜிதம் செய்து—அப்பொழுது ஷெனாய் என்பவர் இருந்தார்— வீடுகள் கட்டியிருக்கிறார்கள். அந்த இடத்திலே குடிசை வாரியமாக இருந்தால் இருநூறு முந்நூறு வீடுகள் கட்டியிருக்கலாம். அதேபோன்று அடையாறிலே கஷ்டப்பட்டுக் கட்டினார்கள். அண்ணாநகரிலும் அப்படித் தான் செய்தார்கள். நடந்தது நடக்கட்டும். இனிமேலே அப்படி நடக்காமல் திட்டவட்டமாக இந்த மன்றத்திலே முடிவு எடுக்கவேண்டும். கட்ட வசதியுள்ளவர்கள் எப்படி வேண்டுமானாலும் கட்டிக்கொள்ளட்டும். ஆனால் லோ இன்கம் குரூப்புக்காக என்று சொல்லிவிட்டால் சிறப்பாக ஹவுஸிங் போர்டு, குடிசை வாரியம் மூலமாக நிலம் ஆர்ஜிதம் செய்யப் பட்டால் குடிசைகளில் இருப்பவர்களுக்குத்தான் அங்கே வீடுகள் கட்ட வேண்டுமென்று திட்டவட்டமான முடிவுகள் எடுக்க வேண்டும். இங்கே நான் சொன்ன கருத்துக்களையும் இந்த பில்லிலே புகுத்தினால் நன்றாக இருக்கும். தவறுகள் நடந்தால் சுட்டிக்காட்டுவோம். என்னைப் பொறுத்த வரையில் கன்ஸ்ட்ரக்டிவ் கிரிட்டிஸிஸம் ஆகத்தான் இருக்கும். பாராட்ட வேண்டிய விஷயத்தில் பாராட்டுவேன். பாராட்டிவிட்டால் கழகம் வளர்ந்துவிடுமோ என்று நினைப்பதில்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

இதிலே கட்சிப் பிரச்சினை இருக்கக்கூடாது. கழகப் பிரச்சினை கிடையாது. காங்கிரஸ் பிரச்சினையும் கிடையாது, சுதந்திரா பிரச்சினையும் கிடையாது பொதுமக்களுடைய பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தினாலே இந்த மன்றத்திலே சொல்லக்கூடிய கருத்துக்களை ஸ்போர்டிவ் ஸ்பிரிட்டிலே

எடுத்துக்கொண்டு—வாரியத் தலைவர் அருமை நண்பர் அரங்கண்ணல் அவர்களும் இதிலே நல்ல முறையிலே நடத்திக்கொண்டு வருகிறார்கள்— நீங்கள் செய்யக்கூடிய சாதனைகளிலே மிக முக்கியமான சாதனை இதுவாகத் தான் இருக்கவேண்டும், பாராட்டக்கூடியதாக இருக்கவேண்டும் என்று சொல்லி எனக்குப் பேச வாய்ப்பு அளித்ததற்காக நன்றியைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

• THIRU K. M. SUBRAMANIAM: Mr. Deputy Speaker, Sir.
For the satisfaction of my hon. Friend, Thiru Rama Arauganual. I
congratulate the Government for having brought forward this
Bill during this session and for having passed the Ordinance on the
eve of the elections. Thiru Arangannal had stated in the morning
that the Nijalingappa Congress was always accusing the Ruling
Party and never congratulating it. This is one thing where we
have to appreciate it, whether we want it or not. I do sincerely
appreciate the introduction of this Bill, particularly the intention
of this Bill.

Sir, I had been a Member of the Slum Committee of the Corpo-
ration during 1951–52 and also a member of the City Improvement
Trust which undertook slum improvement for about 6 or 7 years.
Also having been representing certain divisions which are full of
slums, I have studied this problem fairly closely. Sir, our biggest
curse in this State and perhaps in the country is the slum. We
have to build as many as 83 million houses for the houseless or
badly-housed people in this country and out of which two lakhs
of houses or tenements have to be built for the Madras City alone.
There are 9 lakhs of people in the slums in the City, according to
the figures published by the Collector of Madras year before last.
Sir, this problem was the responsibility of the Corporation about
20 years ago. The Corporation floated a loan of Rs. 30 lakhs in
1950–51 (I am speaking subject to correction) for slum improve-
ment but unfortunately they failed. They did not improve huts
but provided a tap here and a light there in the slums and spent
all the money. Then the City Improvement Trust was created
and it was their responsibility to improve the slums. The develop-
ment of slums in South Madras was undertaken by the City
Improvement Trust and in North Madras by the Corporation.
Many things were done by the City Improvement Trust but
gradually the City Improvement Trust became the Housing Board.
Instead of housing the houseless and the slum-dwellers gradually
temptation came to house the lower income group, middle income
group, higher income group and all sorts of other groups. The
most important thing is that the problem of slum-dwellers has been
mostly forgotten. Now I am very happy to say that after several
years, this Government have brought in a legislation.

The Bill is incorrectly drafted though the intention is good. I
have to make it very clear that there is no politics in this. This is
a national problem and whoever solves it, we must appreciate
them. In many parts of the country they have failed but I wish

all success to the D.M.K. Government because among all the progressive measures to be implemented in this country, slum clearance is the most important thing.

The other day some hon. Member was remarking that sufficient attention should be given to industrial housing. To increase industrial production, it is necessary that people working in industries should have proper houses to live in. They should have minimum amenities and should go to work in peace. They should not be expecting quarrels between women and children in the homes when they return from their work. They should not go to the factory without a bath or without going to the latrine. They should have the amenities of bath room and latrine. These things are fundamental if we want to make the industries progress. Unfortunately industrial progress had not made headway in this country. Human beings have to live as human beings. Unfortunately this human problem has not been properly tackled; all these years we had been having a feudalistic form of Government and a feudalistic kind of society. Only after independence, attention had been given to this problem. Government of India had started a Rs. 200 crores revolving fund for improvement of housing for poorer classes. Whether it will go to slum dwellers or poorer classes, I do not know. I am happy that Government had allotted Rs. 200 crores as revolving fund. In Delhi the problem had been tackled on a war footing. During the last two years they had tackled it well and hats off to them. If I am offering some criticism to Government, it is not with the intention of preventing the clearance of slums. I am only voicing forth the difficulties standing against improvement of slums.

There are four classes of slum lands, viz., Government land, Corporation land, temple land and private land. Slums are there in all these lands. But so far as Government land is concerned, the law at present is such that no facility could be rendered by Corporation for slum dwellers; they cannot provide even a pipe in that land. The law has to be rectified. Temple land, we cannot touch. Corporation is trying to do something but has not succeeded. Then, only private land remains. But since if it is improved, the value would increase, we are not attending to improvement of slums in private land. That is why I say we must have a comprehensive law. My friend Mr. Madhavan should not mistake me when I use the term 'comprehensive'. It is not comprehensiveness for any ideology. It is only to cover the special nature of slums.

After going through this Bill, I do not find mention about Corporation land, Government land or temple land. I find mention of about private land only. The Bill provides for acquiring of private lands or asking the owners to build houses according to plan approved by the authority. If that is the case, what is the rent they are going to charge? The rent, that is to be collected is Rs. 3 for every 800 square feet. But there is no mention of this in the Bill. The subsidised rent is collected by Government or

Housing Board. Even though economic rent is Rs. 45 that which is collected by Government is only Rs. 10. What I say is, Government should acquire the property and then re-develop it for the convenience of the people. It should be done by Government only and in this it shoud be done on a no-pprofit no-loss basis. What we want is subsidised rent for developed plot.

I know that Thiru Rama. Arangannal has been going through these slums during the last one month or so. He must have noted one thing. These slum dwellers had been paying to the Housing Board at the rate of Rs. 2 per mensem for the past so many years on a permanent lease-*cum*-sale hire purchase basis. In spite of their paying the entire amount prior to 4 years, the Housing Board has not registered the plots in their names. I am very sorry it has not been done. There is no doubt about it. In all progressive measures of the Board, it is the administration that is the block and they do not see eye to eye with the present condition of society. There are so many anomalies.

The present Housing Board is a citadel of corruption. There are a number of brokers running round the Housing Board. Many things are happening. I can quote an example. I may be asked whether I can prove all these things. In my own place there is a slum called Appavu Nagar.

திரு. இராம. அரங்கண்ணல்: தலைவரவர்களே, நண்பர் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் ஸ்லம் கிளியரன்ஸ் போர்டைப்பற்றிச் சொல்கிறார்களா அல்லது வீட்டு வசதி வாரியத்தைப்பற்றிச் சொல்கிறார்களா?

THIRU K. M. SUBRAMANIAM: I am speaking on the essential need for providing housing for poorer classes, because of the wrong handling by the Housing Board....

MR. DEPUTY SPEAKER: It is too much to say that the Housing Board is an embodiment of corruption.

THIRU K. M. SUBRAMANIAM: I beg to differ. I can read....

MR. DEPUTY SPEAKER: Can you prove it?

THIRU K. M. SUBRAMANIAM: If I am appointed officer to go into corruption charges of the Housing Board, I may be able to do it. . . .

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அன்று 'நான் அங்கே இருந்திருந்தால், நான் நாடாளுமன்றத்திலே இருந்திருந்தால்' என்று பேசினார்கள். இப்பொழுது 'நான் ஆபீசராக அப்பாயின்ட் செய்யப்பட்டால்' என்று சொல்கிறார்கள். அவரை விசாரிக்கச் சொல்லக்கூடிய நிலை, துர்ப்பாக்கியம் இந்த அரசாங்கத்திற்கு இதுவரை ஏற்படவில்லை. அது அவரது வழக்கம், அப்படிப் பேசுகிறார்கள். துணைத்தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னது மாதிரி, வீட்டு வசதி வாரியத்தில் ஊழல் இருக்கிறது என்று குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமென்றால், வீட்டு வசதி வாரியமே ஊழல் என்பதுபோல் சொல்லக்

கூடாது. அப்படிச் சொன்னால் அங்கே நடக்கும் நல்ல காரியங்களை, அங்கே செயல்படும் நல்லவர்களை தூஷிக்கும் அபவாதமான சூழ்நிலை ஏற்படும். ஆகவே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் பொதுவாக வீட்டு வசதி வாரியத்தைப்பற்றி இழிவாகப் பேசுகின்ற நிலையை ஏற்படுத்துவது கூடாது. வீட்டு வசதி வாரியத்தில் தவறு நடந்திருக்கிறது என்றால், ஊழல் நடந்திருக்கிறது என்றால், அதற்கான விவரங்களைத் தந்தால் நிச்சயமாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். அதற்காக அருமையான பணிகளை யாற்றும் நண்பர்கள் அத்தனை பேரையும் ஊழலுக்கே உறைவிடமானவர்கள் என்பது போல் பேசுவது, அதிலும், இருபதாண்டுக்காலம் அதிலேயே பழக்கப் பட்டவர்கள் அப்படிப் பேசுவது அழகு அல்ல.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I stand corrected. I only meant that there is a lot of corruption in that organisation and I leave it at that.

Then I come to Appavoo Nagar. One Thiru Appavoo Mudaliar has been allotted 9 plots.

திரு. இராம அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, அப்பாவு நகரிலே ஒருவருக்கே--அப்பாவு முதலியாருக்கே 9 கிரவுண்ட் பிளாட் அலாட் செய்யப்பட்டதாகச் சொல்கிறார்கள். யாருடைய காலத்தில் எப்படிக் கொடுத்தார்கள் என்பதை, இந்த விஷயத்திலே அக்கறை காட்டுகிற மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. எம். சுப்ரமண்யம் அவர்கள் வீட்டு வசதி வாரியத்தின் தலைவரிடத்திலே இந்தக் குற்றச்சாட்டை எப்போதாவது சொன்னாரா? பரிகாரம் செய்வதற்கு ஏதாவது விவரம் சொன்னால் வசதியாக இருக்கும்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I referred to it because I had recommended the acquisition of this land by the Housing Board during my tenure of office. The idea was to give one plot of half ground or one-third ground to each person and I had written about it to the Chairman of the Housing Board. Somebody gave me a chit containing this information regarding these plots, just as I was preparing to attend this House to-day. Otherwise, I would not have referred to it.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யாரோ ஒருவர் சீட்டுக் கொடுத்ததாக சொன்னார்கள். அதிலே உண்மை இருப்பதாகவும், அந்த உண்மையை விசாரிப்பீர்களா என்றார்கள். தாங்கள் இதைப்பற்றி விசாரிக்க அந்தத் தகவலை எங்களிடத்திலே காட்டத் தயாரா? நாங்கள் விசாரிப்பது இருக்கட்டும், நீங்கள் அதைப் பற்றி விசாரித்தீர்களா? சட்டப்படி. என்ன தவறு நடந்ததாக அதிலே கூறி இருக்கிறார்கள் என்று சொல்வாரா?

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I will pass on the information regarding these plots to the Hon. Minister. Sir, I am not accustomed to speak without sufficient proof. I take full responsibility for the statement I make and it may not be that I will be able to immediately prove it but if I am asked to prove it later, I will do so.

MR. DEPUTY SPEAKER : The hon. Member is thoroughly mistaken. He has stated that the Housing Board has become a 'citadel of corruption' and that is not an ordinary expression.

THIRU K. M. SUBRAMANIAM : I am very sorry about it and I withdraw those words. Still I say that it is very corrupt—I do not mince matters—because there are so many things which are happening there. Whatever I say here I say with due responsibility because I know that this Government will welcome such a criticism and will make a proper study of it. Only with that intention I have stated that.

Coming to the next point, though the intention of the Government is good, the Bill has been unrealistically drafted—I would not say badly drafted–and there is no safety for the slum dweller to-day. Of course no new slum would be created and that has been made very clear in the Bill. But (the first essential thing is that no slum dweller should be evicted from the existing house or huts without providing for alternative accommodation for him.

It must be clearly stated what the Government are going to do with the Corporation lands, the Government lands and the temple lands. Now many temple lands in the Madras City are slums. I have given notice of amendments only with the sole intention that the ultimate authority to own the improved plots or constructed tenements must be either the plot-owner or the slum clearance authority. If the plot is allotted to somebody that person should be given the option to purchase it in instalments so that ultimately he can become the owner of it.

Now according to the provisions of the Bill, landlords are allowed to re-develop the slums and charge certain rents but the highest rent to be charged has not been specified in the Bill. I feel whether a more comprehensive Bill could not be brought forward by the Hon. Minister, providing for road-width, space area, etc. Also, it is not clear whether lands could be let out as plots under a hire purchase scheme, whether the plots can be let out on subsidised rental basis, whether the plots can be sold at subsidised rate and whether they can be resold. All these things could be clarified.

According to the provisions of the Bill, a Slum Clearance Board is envisaged. It should be called the Slum Clearance and Development Authority as it is not confined to clearance work only.

In conclusion, I request the Hon. Minister to consider my amendments given notice of. Also many provisions of the Bill have to be deleted. As the strength of the Opposition is only about 22 we can only suggest amendments but not get them passed. So I request the Government to reconsider the Bill and if it is not possible to do so now, at least during the next session a more comprehensive enactment, could be brought forward to conveniently settle down the slum dwellers.

Thank you, Sir.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல கருத்துக்களைச் சொல்வதை எப்போதும் வரவேற்போம். அவர்கள் தவறாக எங்களைக் கருதிவிடக்கூடாது. தனிப்பட்ட நிலங்கள், கோவிலுக்குச் சொந்தமான நிலங்கள், வேறு நிலங்கள் இவைகளை எடுக்க இந்தச் சட்டத்தில் அதிகாரம் இல்லை என்று அவர்கள் கருதிக்கொண்டு பேசியதாக எனக்குப் புரிந்தது. அப்படி எப்படிச் சொல்கிறார்கள்? எங்கள் எண்ணப்படி இந்தச் சட்டத்தில் போடப்பட்டிருப்பது ஸ்லம் ஏரியா அல்லது ஸ்லம் க்ளியரன்ஸ் ஏரியா. இவற்றை டிக்ளேர் செய்தவுடன் அதை எடுக்க அரசாங்கத்திற்கு அதிகாரம் இருப்பதாகத்தான் கருதுகிறோம். அதற்கு மாறாக எங்கேயாவது இருந்தால் அதைச் சொன்னால் அதைத் திருத்திக் கொள்ள வாய்ப்பாகயிருக்கும்.

THIRU K. M. SUBRAMANIAM : Mr. Deputy Speaker, Sir, I do not know how I have been misunderstood. Perhaps my English might have been bad.

Government have the right of acquisition. The land owner is asked under this Act to demolish the temporary structure with permission of Slum Clearance Authority and redevelop the place with improvements as the Board directs. Till then the slum dwellers. . . .

THE HON. THIRU S. MADHAVAN : That I will answer afterwards. The hon. Member dealt with another aspect, viz., what will happen to temple land and how that could be touched. I am on that point.

THIRU K. M. SUBRAMANIAM : If I am not troubling. . . .

THE HON. THIRU S. MADHAVAN : Let me complete. The hon. Member dealt with two points, why should we give an opportunity to private land owners to develop. That I will answer afterwards. He asked a question 'what will happen to temple lands where there are slums'. I am on that point.

THIRU K. M. SUBRAMANIAM : I am sorry what I mentioned about temple lands has been misunderstood. With the permission of temple trustee or religious institution, it can be done. Government have the power. If I have mentioned wrongly, the Hon. Minister can correct it.

THE HON. THIRU S. MADHAVAN : Dr. Hande also knows English. He has also heard what the hon. Member had said The point is this. We have got power to acquire temple lands. Is that in doubt?

THIRU K. M. SUBRAMANIAM : My doubt is not about temple land but private land. I have discussed with Thiru Rama. Arangaunal about temple lands. The difficulty is. . .

திரு. இராம. அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, இந்தச் சட்டப்படியே எல்லா நிலங்களையும் எடுப்பதற்கு வசதியிருக்கிறது. அது மட்டுமல்ல. திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களிடமும் நான் சொன்னது இந்த

ஸ்லம் போர்ட் ஆரம்பித்தவுடனேயே நகரத்தில் உள்ள கோவில்களுக்குச் சொந்தமான நிலங்கள் எவ்வளவு இருக்கின்றன என்று கேட்டு விசாரித்து, அந்த நிலங்கள் எல்லாம் எப்படி எப்படி இருக்கின்றன என்று சர்வே செய்து எல்லா விவரங்களையும் தயாராக வைத்திருக்கிறோம். அவர்கள் அவ்வளவு கவலைப்பட வேண்டாம். எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM : Nobody should misunderstand that I am saying that temple lands should not be utilised for specific purpose. I want temple lands to be utilised for progressive pudposes; but that should be done without costing the temple financially too much. We have no trouble about it. I do not want unnecessarily to enter into a discussion on this matter.

திரு. இராம. அரங்கண்ணல் : தங்கள் அனுமதியின் பேரில் நான் நண்பர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். கடவுளைக் காப்போம், நடமாடும் கடவுள்களையும் நிச்சயமாகக் காப்பாற்றுவோம்.

திரு. கே. எம். சுப்பிரமணியம்: அது நன்றாகத் தெரிந்த விஷயம்.

திரு. எம். ஆர். கண்ணன்: பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இந்தக் குடிசைகள் சீரமைப்பு வாரிய பில்லை வரவேற்று நான் சில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன்.

நான் சார்ந்துள்ள சென்னை பேஸின் ப்ரிட்ஜ் பகுதி அதிகமான குடிசைகளைக் கொண்டதாகும். அந்தக் குடிசைகள் எல்லாம் அபிவிருத்தி அடையாமல் கேட்பாரற்ற நிலையில் இருக்கின்றன. எனக்கு முன் பேசிய நண்பர் அவர்கள் சொன்னார்கள். குறிப்பாக தமிழக அரசு இன்று குடிசைப் பகுதிகளை யெல்லாம் மாற்றியமைத்து நல்ல முறையில் வீடுகளைக் கட்டித் தர முயற்சி எடுத்திருப்பது பற்றி நமது பெரியார் ராஜகோலாச்சாரியார் அவர்கள் கூட வருத்தப்பட்டார்கள். அவர்களுடைய சுவராஜ்யா இதழில் சில நாட்களுக்கு முன்பு அவர்கள் மிக வருத்தப்பட்டு எழுதியிருந்தார்கள். குடிசைகளை எல்லாம் மாற்றியமைத்து பிரமாதமாக வீடுகள் அமைத்து அந்த மெத்தை வீடுகளில் இங்குள்ள ஏழை மக்கள் எல்லோரையும் குடியமர்த்தப்போவதாகத் தமிழக அரசு அதிகமாகச் சொல்லிக்கொள்கிறது. அப்படி அவர்கள் ஏற்பாடு செய்து குடிசைகளில் இருப்பவர்களை எல்லாம் மெத்தை வீடுகளில் குடியமர்த்தி விட்டால் பிறகு சாதாரணமான வேலைகளுக்கு மலஜமம் எடுக்க, கால்வாய் கழுவ இவற்றிற்கெல்லாம் ஆட்கள் இருக்கமாட்டார்கள், மீண்டும் கிராமங் களிலிருந்து வந்துவிடுவார்கள். ஆகவே இந்த முறை அவ்வளவு சரியல்ல என்ற கருத்துப்பட அவர்கள் சுவராஜ்யா இதழில் எழுதியிருந்தார்கள். அத்தகைய பெரியாரது வழி வந்த நமது டாக்டர் ஹாண்டே அவர்கள் ஸ்லம் ட்வெல்லேர்ஸ் பற்றி நல்ல முறையில் எடுத்துச் சொல்வதைக் கேட்க எனக்குச் சந்தோஷமாக இருக்கிறது. டாக்டர் ஹாண்டே அவர்கள் எப்போதுமே நல்ல காரியங்களுக்காகப் பரிந்து பேசுவார்கள். அதை யாரும் மறுப்பதற்கில்லை. அந்த வகையில் அவருக்கும் அவரது தலைவருக்கும் உள்ள வித்தியாசத்தை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

இந்தக் குடிசைகள் எல்லாம் ஏற்படுவதற்கு முக்கிய காரணம், அதாவது சென்னையில் இந்தக் குடிசைகள் எல்லாம் ஏற்படுவதற்கு முக்கிய காரணம். இங்குள்ள கார்ப்பரேஷன் அதிகாரிகளும், போலீஸ் அதிகாரிகளும் தான்; சர்க்கார் நிலமாக இருந்தாலும் சரி அல்லது கோவில் நிலங்களாக இருந்தாலும் சரி, அல்லது கார்ப்பரேஷன் நிலங்களாக இருந்தாலும் சரி அவை களில் எல்லாம் குடிசைகளை அமைத்துக் கொள்ளும்போது அப்போதிருந்த அதிகாரிகள் நல்லமுறையில் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவில்லை. அப்படி எடுக்காததன் காரணமாக மக்கள் வெளி ஊர்களில் இருந்து வந்து இருக்க நிலம் இல்லாததால் அவ்விடங்களில் குடியேறிவிட்டார்கள். அப்படி குடியேறிய பிறகு அவர்களுக்கு வாக்குரிமை எல்லாம் கொடுக்கப் பட்டிருக்கிறது. அவர்களின் வாக்குகளைப் பெற்றுச் சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் வந்திருக்கிறார்கள்.

சென்னையில் ஏராளமான குடிசைப் பகுதிகள் இருக்கின்றன. என்னையே எடுத்துக் கொண்டால் நான் அதிகப்படி வாக்குகள் பெற்றது குடிசைவாழ் பகுதிகளிலிருந்துதான் என்று சொன்னால், அது தவறாக இருக்க முடியாது. குடிசைவாழ் மக்கள் பெருவாரியாக திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரிக்கிறார்கள் என்ற காரணத்திற்காக இதற்கு முன்பிருந்த காங்கிரஸ் ஆட்சி காலத்தில் எந்தத் தேர்தல் வந்தாலும் சரி அல்லது எந்தப் பெரும் தலைவர்கள் சென்னைக்கு வந்தாலும் சரி உடனே குடிசை வாழ் பகுதிகளில் உள்ள ஏழை மக்களை அரஸ்ட் செய்து பதினைந்து நாட்கள், இருபது நாட்கள் என்று ரிமான்ட் செய்து கொண்டிருந்தார்கள். அண்மையில் நடந்த தேர்தலின் போதுதான் அந்த நிலைமை இல்லையே தவிர திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பெல்லாம் அப்படித்தான் செய்து வந்தார்கள்.

திருமதி டி. என். அனந்தநாயகி: பழைய காங்கிரஸ் அரசாங்கத்தைப் பற்றி ஆதாரம் இல்லாமல் சொல்கிறார்கள். யார் யார் ரௌடி அல்லது கேடி லிஸ்டில் இருந்தார்களோ, அவர்களைத்தான் அப்படிப் பிடித்தார்கள். அப்படியிருக்க குடிசைவாழ் மக்களைப் பிடித்தார்கள் என்று சொல்வது தவறான கருத்தை பிரதிபலிப்பதாகும்.

திரு. எம். ஆர். கண்ணன்: கோர்ட் ரிக்கார்ட்ஸ் இருக்கின்றன. அவை சொல்லும். நான் சொல்வது உண்மையே. ரௌடிகள் கேடிகள் இவர்கள் முக்கியமாக குடிசைகளில்தான் இருப்பார்கள் என்பது இவர்கள்வாதம். பெரும் பெரும் கேடிகள் எல்லாம் மாடி வீடுகளில்தான் இருக்கிறார்கள். அந்தப் பக்கம் கூட திரும்பியது கிடையாது. ஆனால் குடிசைப் பகுதிகளில் உள்ள ஏழை மக்கள்தான் தவறு செய்வார்கள் என்று கருதிக்கொண்டு அவர்களை அரஸ்ட் செய்து வந்தார்கள். அப்படிப்பட்ட அக்கிரமங்கள் நடந்திருக்கின்றன. நான் தவறாகச் சொல்வதாக எண்ண வேண்டாம், போலீஸ் ரிக்கார்ட்ஸ் இருக்கின்றன, கோர்ட் ரிக்ககார்ட்ஸ் இருக்கின்றன, அண்மையில் கூட தேர்தலுக்கு சில தினங்களுக்கு முன்பு இரண்டாயிரம் பேர்களை அரஸ்ட் செய்தார்கள். அதில் 1,900 பேர்கள் திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்தின் அனுதாபிகள் ஆகத்தான் இருப்பார்களே தவிர, அதில் ஒருவர்கூட காங்கிரஸ்காரராகவோ அல்லது காங்கிரஸ் கட்சி அனுதாபியாகவோ இருக்க

மாட்டார்கள். காங்கிரசின் இருபதாண்டு கால ஆட்சியில் பார் பாரை திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் என்று சொல்கிறார்களோ அவர்களையெல்லாம் ரௌடி அல்லது கேடி லிஸ்டில் சேர்த்து தேர்தல் போன்ற காலங்களில் அவர்களை அழைத்துச் சென்று விடுவார்கள். இது பல ஆண்டுக் காலமாக நடந்து வந்துள்ள முறையாகும்.

ஆகவே அவர்களுக்கு எல்லாம் இப்படி நல்ல முறையில் நன்மை செய்வ தற்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு நல்ல முயற்சி எடுத்ததற்கு மிக மிக பாராட்டுகிறோம். ஏனென்றால் பல ஆண்டு காலமாக குடிசைகள் தீயினால் கொளுத்தப்பட்டன. மழையால் அழிக்கப்பட்டன. அந்த நேரத்தில் எல்லாம் அவ்வப்போது 10-15 என்று உதவி கொடுத்து வந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் இதற்கு திட்டவட்டமான முடிவு எடுத்து, அந்த ஏழை மக்கள் குடிசை வாழ் மக்கள் நல்ல முறையில் வாழவேண்டுமென்ற அடிப்படையில் 40 கோடி ரூபாய் அளவில் ஒரு திட்டத்தைத் தீட்டி 7 ஆண்டு காலத்திற்குள் இந்த மக்களுக்கு நல்வாழ்வு தரவேண்டுமென்று பாடுபட்டு வருகிறார்கள். இந்த எண்ணம் 20 ஆண்டுக்காலம் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்டதே கிடையாது. இப்படி குடிசை மாற்று அமைப்பு செய்ய வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு செயல்பட்டிருப்பார்களேயானால் எப்போதோ குடிசைகள் ஒழிக்கப்பட்டு இருக்கும். அவர்களுக்கு அந்த எண்ணம் வரவேயில்லை. அவர்கள் நினைத்ததெல்லாம் ஏழைகள் நமக்கு ஆதரவு இல்லை, நமக்கு ஆதரவு தருபவர்கள் எல்லாம் கோடீஸ்வரர்கள் என்று எண்ணம் கொண்டு, மறைமுக எண்ணம் கொண்டு, செயல்பட்டு வந்தார்கள். ஆனால் மக்களுடைய ஆதரவைப்பெற்ற இந்த அரசு, மக்கள் தான் நாட்டின் முதுகெலும்பு என்று எண்ணி அவர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் இப்படிப்பட்ட ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறார்கள்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, there is no connection between the Bill under discussion and the matter referred to by the hon. Member.

MR. DEPUTY SPEAKER: It is a very difficult question to judge relevancy. Of course, it is a very relevant matter.

திருமதி டி. என் அனந்தநாயகி: துணைச் சபாநாயகர் அவர்களே, இந்தச் சட்டம் குடிசை வாழ் மக்களை மேம்படுத்துவதற்காக கொண்டு வருவதைப் பாராட்டி, இதைத் துரிதமாக நிறைவேற்ற வேண்டுமென்ற ஆசையில் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இத்தகைய நல்ல ஒரு சட்டத்தை ஆற அமர சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கும் போது கொண்டு வந்திருந்தால், அதிலே நல்ல கருத்துக்களைக் கூற முடிந்து இருக்கும். ஆனால், அவசர அவசரமாக, 4 ஆண்டுகாலம் ஆட்சியில் இருந்த பிறகு, சட்டமன்றம் கலைகிற நாளன்று, ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டு 6 வாரத்தில், இதைப் பொதுக் குழுவிற்குக் கூட அனுப்ப முடியாமல், நிறைவேற்ற வேண்டுமென்ற அடிப்படையில் கொண்டு வருகிறார்கள் என்று பார்க்கிற போது எனக்கு சற்று வருத்தமாக இருக்கிறது. காரணம், இது ஒரு சாதாரண பிரச்சினை அல்ல. தேசியப் பிரச்சினை. ஒரு வேளை தேர்தல்

பிரசாரத்திற்கு இது அவசியமாகப் பயன்பட வேண்டுமென்று கொண்டு வந்தார்களோ என்னவோ. அது அவர்களுக்குத்தான் தெரியும், எனக்குத் தெரியாது.

இந்தப் பிரச்சினையை சமாளிப்பதில் 4 பகுதியாகப் பிரிக்கலாம். அதாவது, அரசாங்க நிலங்களில் குடிசை போட்டு இருப்பவர்கள், கார்ப்பரேஷன் நிலங்களில் குடிசை போட்டு இருப்பவர்கள், கோவில் நிலங்களில் குடிசை போட்டு இருப்பவர்கள், தனியார் நிலங்களில் குடிசை போட்டு இருப்பவர்கள், என்று இப்படி 4 வகையாகப் பிரிக்கலாம். இப்படி குடிசைப் பகுதியில் இருப்பவர்களை மேம்படுத்துவதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை முதலில் கார்ப்பரேஷன் நிலங்கள், என்டோமெண்ட் நிலங்கள், அரசாங்க நிலங்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த 3 பகுதிகளில்தான் நாம் துரிதமாக நடவடிக்கை எடுக்க முடியும். 4-வது பகுதியாக இருக்கும் தனியார் நிலங்களில் இருக்கும் குடிசை நிலங்களை ஆர்ஜிதம் செய்ய ஆரம்பிப்பதில் சிக்கல்கள் அதிகமாக இருக்கும். அது தாமதத்தை ஏற்படுத்தும். குடிசை வாரியம் முதன் முதலில் போய் சங்கடத்தில் மாட்டிக் கொள்ளக் கூடாது. சங்கடங்கள் குறைவாக உள்ள இடங்களில் இருக்கும் குடிசைப் பகுதிகளை உடனடியாக, துரிதமாக ஏற்று நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று சென்னை நகரத்தை எடுத்துக்கொண்டால், மிகவும் கஷ்டத்தில் வாழ்பவர்கள் குடிசைவாழ் மக்கள்தான். இப்படி பல பேர் வீடு வாசல் இல்லாமல் இருக்கிறார்கள் என்று சொல்லும்போது, இனிமேல் குடிசைகள் அதிகமாக ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நாம் எப்படி குடிசையில் இருப்பவர்களை நல்ல கட்டிடங்களில் வசிக்கச் செய்ய நடவடிக்கை எடுக்கிறோமோ, அதே நேரத்தில் இனிமேல் காலியாக உள்ள இடங்களில், கார்ப்பரேஷன் நிலம், கவர்ன்மென்ட் நிலம், தனியார் நிலம், எதுவாக இருந்தாலும் அதை அவர்கள் பாதுகாத்துக் கொள்கிற வகையில் ஒரு சட்டம் கொண்டு வந்தால் கூட நல்லது. நாம் ஒரு பக்கத்தில் குடிசைகளை மாற்றிக்கொண்டு இருக்கிறபோது, மற்றொரு பகுதியில் குடிசைகள் வந்து கொண்டு இருந்தால், அது காரியத்தை கெடுத்துவிடும். இது மிகமிக அவசியம். காரணம் வாட்டர் பைப் போகிற இடத்தில் கூட குடிசைப் போட்டு, குடிதண்ணீர் வருவதற்குக் கூட பல சங்கடங்கள் ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் அப்படிப்பட்ட ஒரு சட்டத்தை உடனடியாகக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்தச் சட்டத்தில் பல வகையான ஷரத்துக்களைப் பார்த்தோம். மூன்றாவது ஷரத்திலே 'டிக்ளரேஷன் ஆப் ஸ்லம் ஏரியாஸ்' என்று இருக்கிறது. கிளாஸ் 6, 11-ல் பார்க்கிற போது குடிசைப் பகுதி முன்னேற்றம், ஸ்லம் கிளியரன்ஸ், டெவலப்மெண்ட், என்று இருக்கிறது. அப்படிப் பார்க்கிறபோது யாராவது ஆபீசரோ, போர்டோ, லோகல் அதாரிடியோ ஒரு இடத்தைச் சிபாரிசு செய்தால், அதற்குமேலே அதை ஸ்லம் ஏரியா என்று நோடிபை செய்து அது டெவலப்மென்ட் செய்யப்படும் என்று இருக்கிறது. இது தாமதத்தை ஏற்படுத்தும். ஆகவே, இந்த ஷரத்தை எடுத்து விடுவது நல்லது. கிளாஸ் 6-ல் பார்க்கிறபோது 'அட் ரீசனபில் எக்ஸ்பென்ஸ்' என்று போட்டு இருக்கிறது. நியாயமான

செலவு என்றால் எது நியாயமானது என்று எப்படி நிர்ணயிப்பது? இப்படி பல இடங்களில் வார்த்தைகள் இருக்கின்றன. ஆகவே, 'ரீசனபில் எக்ஸ்பென்ஸ்' என்று சொல்லாமல், எப்போது ஸ்லம் என்று சொல்கிறார்களோ, உடனே அந்த இடத்தை ஆர்ஜிதம் போட்டு, அதற்குத் தகுந்த விலை போட்டுக் கொடுப்பதுதான் நல்லது. இல்லையென்றால், வலது கரத்தால் கொடுப்பதை இடது கரத்தால் எடுப்பது போல் இருக்கும்.

அந்த வீடுகளை நாம் இப்போது கட்டித் தருகிறோம். ஆனால் இதற்கு முன்னாலே இருந்த ஆட்சி கட்டிக்கொடுக்க முடியவில்லை. தாங்கள் இரண்டு அடுக்கு மாடி வீடுகள் கட்டினோம். ஒரு வேளை எனக்கு முன்னாலே பேசிய அங்கத்தினர் அவர்கள் அவற்றைப் பார்க்கவில்லையோ என்று நினைக்கிறேன். அந்த கட்டடத்தில் குடி புகுந்தவர்கள் 800 ரூபாய் 1,000 ரூபாய் வாங்கிக் கொண்டு வசதி படைத்தவர்களுக்கு விற்று விட்டுச் சென்று விடுகிறார்கள். இப்படி வசதி படைத்தவர்களுக்கு விற்று விட்டு இன்னும் காலி இடம் எங்கே இருக்கிறது என்று பார்த்து, அங்கே போய் குடிசை போட்டுக் கொண்டு விடுகிறார்கள். சில பணக்காரர்களும் எங்கே காலி இடம் இருக்கிறது அதை மடக்கிப் போட்டு, அந்த இடத்தில் தொழிலாளர்களுக்குக் குடிசை கட்டிக்கொள்ளச் செய்துவிட்டு, வாடகை வசூலித்துக் கொண்டு இருக்கிறார்கள். இப்படி பல தொழில்கள் நடந்து கொண்டு இருக்கின்றன. இதை குடிசை வாரியம் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி யாராவது அலாட்டி விற்று விட்டுப்போய் இருந்தால், உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். இப்படி நடக்காமல் இருக்க பரிகாரத்தை தேடவேண்டும். அப்படி பரிகாரங்கள் தேடும்போது, நடவடிக்கைகள் எடுக்கும்போது அவசரப்பட்டு எடுத்து விடக் கூடாது. அந்த அாட்டியை அழைத்து ஏன் விற்றுவிட்டுப் போய் விட்டாய் என்று என்கொயர் செய்ய வேண்டும். என்னுடைய பகுதியிலே நடந்து இருக்கிறது. அங்கே ஒரு அலாட்டி இருக்கிறார். அவர் அந்த இடத்திலேயே இருந்தாலும், அவர் அங்கே இல்லை என்று சொல்லி அலாட்மெண்டை கான்சல் செய்யச் சொல்லி இருக்கிறார்கள்.

திரு. இராம. அரங்கண்ணல்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, சகோதரி எந்த இடத்தில், யாருடைய பெயர் என்ன விவரம் என்று சொல்ல வேண்டும். அவர்கள் 4 ஆண்டுகளுக்குப் பிறகு மன்றத்திற்கு வந்து இருக்கிறார்கள். இது சம்பந்தமாக என்னென்ன செய்து இருக்கிறது குடிசை வாரியம் என்று அறிந்திருக்க மாட்டார்கள் என்ற காரணத்தால் அந்தத் தகவலைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி டி. என். அனந்தநாயகி: கட்டாயம் அதுபற்றிய தகவலை அவர்களுக்குக் கொடுக்கத்தான் போகிறேன். என்னுடைய தொகுதி அல்லவா பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆண்டிமான்யத் தோட்டத்தில் ஒருவருக்கு அப்படி அலாட்மெண்டு கான்சல் செய்யப்பட்டிருக்கிறது. விவரத்தோடு உங்களை வந்து பார்த்து பரிகாரம் தேடிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹயர் பர்சேஸ் ஸ்கீம். வீட்டிற்காக அவர்கள் மாதா மாதம் வாடகை கட்டிக்கொண்டிருந்தால் அது அவர்களுக்கு நன்மையாக இருக்காது. வீடு அவர்களுக்கு கடைசியில் சொந்தமாவதற்கு வழிவகைகள் காணவேண்டும். மொத்தமாகப் பணம் கட்டி அவர்கள் சொந்தக்காரர்களாக ஆக முடியாது. அவர்கள் ஏழைகள் மாதம் ரூ. 10 கட்டும்பொழுது,

இத்தனை வருஷங்களுக்கு மேல் கட்டினால், அந்த வீடு அவர்களுக்கு சொந்த மாகிவிடும் என்ற முறையை ஏற்படுத்தவேண்டும். ஆனால், சொந்தமாக்கப் படவேண்டும் என்றால், அதிலும் ஒரு ஆபத்து இருக்கிறது. சொந்தமாக்கப் பட்டு விட்டால், அவர்கள் இஷ்டப்படி விற்றுவிடுவார்கள். இம்மாதிரியெல்லாம் நடக்கிறது ஹரிஜன் வெல்பேர் டிபார்ட்மெண்டில் கட்டப்பட்ட வீடுகள் சம்பந்தமாக.

அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்து, பட்டா செய்து கொடுத்தால், பட்டா செய்து கொடுத்த 10 நாட்களுக்குள் விற்றுவிட்டுப் போய்விடுகிறார்கள். அப்படிச் செய்தால் எங்கிருந்து வசதி இருக்கும். ஆகையினால் அப்படி விற்கும்பொழுது, ஏதாவது தடை விதிக்கவேண்டும். காரணம், நாம் ஒரு வசதியை செய்து கொடுத்துக்கொண்டே வருகிறோம். சொந்த லாபத்திற்காக மீண்டும் விற்று விட்டு, வசதிக்குறைவான இடத்திற்கு மறுபடியும் குடிபுகப் போவது சரியல்ல. அவர்கள் அம்மாதிரி செய்வதைத் தடுக்கவேண்டும். அவர் களுக்கு ஹையர் பாசேஸ் எக்ரிமெண்டின் கீழ் வீட்டு வசதி செய்து தரும் பொழுது, திரும்பவும் அந்த வீட்டை விற்காமல் பாதுகாப்பதற்கு ஏதாவது வழிவகை செய்வது பற்றி யோசிக்கவேண்டும். பரிசீலிக்க வேண்டும். அப்படி யோசிக்கும்பொழுது அவர்களுடைய உரிமையை பாதிக்காத அளவுக்கு ஏதாவது செய்யவேண்டும். இல்லாவிட்டால் கட்டாயம் நீதிமன்றத்திற்குச் செல்வார்கள். 'பண்டமெண்டல் ரைட் டு செல்மை பிராபர்டி' இதை யார் நிறுத்துவது என்று கேட்பார்கள். ஆகவே, இதைப்பற்றி சட்ட இலாக்கா வோடு ஆலோசனை கலந்து, எதைச் செய்ய வேண்டுமோ, அதை ஸ்லம் கிளி யரன்ஸ் போர்டு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, இந்த மசோதாவில் மிக சங்கடமான ஒரு நிலைமை இருக்கிறது. 'பில்டிங் இன் எனி ஏரியா' என்று போட்டிருக்கிறார்கள். ஸ்லம் கிளியரன்ஸ் போர்டு ஏதாவது ஒரு கட்டடம் சரியாக இல்லை, வசதியாக இல்லை என்றால், உடனடியாக இடித்துக் கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 'பில்டிங் இன் எனி ஏரியா' என்றால் இந்த வேலையை நாம் செய்துகொண்டே இருக்கவேண்டியதுதான். அதை மாற்றி 'பில்டிங் இன் எனி ஸ்லம் ஏரியா' என்று இருந்தால் நலமாக இருக்கும். காரணம், ஸ்லம் மேம்பாடு அடையவேண்டும், குடிசைப் பகுதி மேம்பாடு அடைய வேண்டும் என்று நாம் ஆசைப்படுகிறோம். குடிசைப் பகுதியில் இருக்கக்கூடிய ஒரு வீடு தரக்குறைவாகவோ அல்லது நாம் எதிர்ப்பார்க்கக்கூடிய வசதிக் குறைவாகவோ இருக்குமேயானால், அதை இடிப்பதற்கு அதிகாரம் ஏற்றுக்கொள்வதுதான் சாலச் சிறந்ததது ஆகும். இப்படி வசதியில்லாமல், டிலாபிடேடட் கண்டிஷன் என்று சொல்லும் நிலையில் ஒரு வீடு இருக்குமேயானால், நல்ல முறையில் இல்லாத வீடு இருக்குமேயானால் அதை இடிக்கக்கூடிய அதிகாரம் கார்ப்பரேஷனுக்கு இருக்கிறது. அவர்கள் அதைப் பார்த்துக்கொள்வார்கள், அவர்கள் அதை அமுல் நடத்க்கொள் வார்கள். நம்முடைய நோக்கம் குடிசைவாழ் மக்களை மேம்பாடடையச் செய்யவேண்டியது தான். குடிசைப் பகுதியில் வீடுகள் சரியில்லை என்றால் அதை இடிப்பதற்கு உத்தரவு போடவேண்டிய அதிகாரம் இருந்தால் போதும் இல்லாவிட்டால் நம்முடைய வேலை திருப்பப்படும், திசை திருப்பிவிடப்படும் அதற்கெல்லாம் நாம் இடம் கொடுக்காமல், 'எ பில்டிங் இன் ஸ்லம் ஏரியா

என்று திருத்திக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது
சம்பந்தமாக நான் ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். அதையும்
அரசாங்கம் பெரிய மனது வைத்து ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, ரி-டெவலப்மெண்டு, ஸ்லம் பகுதியில் நோடீஸ் கொடுத்து,
ஒரு குறிப்பிட்ட காலத்தைக் கொடுத்து, அந்தத்தனி நபர் அதை டெவலப்
மெண்டு செய்கிறார்களா, இல்லையா என்று பார்த்து, அவர் செய்யவில்லை
என்றால்தான் நாம் போகவேண்டும் என்று போட்டிருப்பது காலதாமதத்திற்கு
இடம் கொடுக்கும். எதுவாக இருந்தாலும் சரி, ஸ்லம் ஏரியா என்றால்,
டெவலப்மெண்டு நோடீஸ், ரி-டெவலப்மெண்டு நோடீஸ் இதெல்லாம் தேவையே
கிடையாது ஸ்லம் ஏரியா என்று டிக்ளேர் செய்து அதற்கு வேண்டிய
ஆர்ஜிதத்தை நீங்கள் செய்வதுதான் நியாயம் அப்படிச் செய்தால்தான் தீவிர
மாக குடிசைப்பகுதி பிரச்னையை தீர்க்க முடியும். ஆகவே, இப்படி ரி-டெவலப்
மெண்டு நோடீஸ் கொடுப்பதற்கு இருக்கக்கூடிய ஷரத்துக்களை எடுத்துவிடுவது
நல்லது. நான் எடுத்துவிட வேண்டும் என்று தீர்மானம் கொடுத்தேன். ஆனால்,
Negative amendments are not permitted என்று சொல்லிவிட்டார்கள்.
ஆனால், my amendment may not be permitted, but the will of
the Legislature can be considered by the Hon. Minister and the
Government and they can implement it.

THIRU N. GANAPATHY: Sir, on a point of information.
There are the principles of natural justice to be taken into conside-
ration. Otherwise, the Courts will strike down the orders of the
Government. So, wil lthe hon. Member clarify the position.

THIUMATHI T. N. ANANDANAYAKI: Sir, I do realise that
the principles of natural justice and equity have to be safeguarded
but at the same time . . .
ரி-டெவலப்மெண்டுக்கு தனி முதலாளிக்கு ஸ்லம் ஏரியாவில் நோடீஸ்
கொடுப்பது நாசுரல் ஜஸ்டிஸ் செய்வதாக இருக்காது. இவ்வளவு நாட்க
ளாக சொந்தக்காரர் கவனிக்காமல் இருந்ததே நாசுரல் ஜஸ்டிஸ் செய்யப்
படவில்லை என்பதுதான் பொருள். இவ்வளவு நாட்களாக கவனிக்காமல்
விட்டு வைத்திருக்கிற தனி முதலாளி இனிமேலா சரிப்படுத்தப்போகிறார்,
இத்தனை வருஷமாக சரிபடுத்தாதவர் இனிமேலா பண்ணப்போகிறார்?

THIRU N. GANAPATHY: Sir, I am very sorry that I have
not made myself clear. According to the principles of natural
justice, any person who is adversely affected by the order of any
authority or Government should be given reasonable opportunity
to explain his position and particularly when it affects his property.
So more care should be taken by the Government in regard to this
matter and it is not right on the part of the hon. Member to say
that rules of natural justice are not affected.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி
அவர்கள் வருத்தப்படவேண்டாம். இரண்டுபேர்களுமே வழக்கறிஞர்கள்,
உயர்நீதி மன்றத்தில் வாதாடுபவர்கள். நாசுரல் ஜஸ்டிஸ் என்று வாதடுகிற

இடத்தில் சோஷல் ஜஸ்டிஸ் பார்க்கவேண்டும் என்று அருமையான கருத்தை அம்மையார் அவர்கள் சொல்கிறபொழுது நாம் வரவேற்கவேண்டாமா? இப்பொழுதாவது அவர்கள் சொல்கிருர்களே, அதற்காகவாது வரவேற்க வேண்டாமா? ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வருத்தப்பட வேண்டாம்.

திருமதி டி. என். அனந்தநாயகி: தனி நபர் உரிமை பாதிக்கப்படுகிறதா என்றெல்லாம் அக்விசிஷன் ப்ரொசீடிங்ஸில் எடுத்துக்கொள்ளலாம். அக்விசீஷன் ப்ரொஸிடிங்ஸில் அப்ஜெக்ஷன் கேட்கிறேம், அப்ஜெக்ஷனுக்கு டைம் கொடுக்கிறேம், அப்ஜெக்ஷன் சொல்லும்பொழுது நியாயமான ஆர்ஜிதமா, சரியான முறையில் நடத்தப்பட்டதா என்றெல்லாம் வாதிடலாம். தனக்கு வாய்ப்பு கொடுக்கவில்லை என்றெல்லாம் சொல்லலாம். அப்பொழுது அதை விசாரித்துத் தீர்த்துக்கொள்ளலாம். அப்படி இல்லாமல் தாமதப் படுத்தக்கூடிய அளவில், நோடீஸ் கொடுத்து எல்லாம் செய்வது என்றுல் ஸ்லம் மேம்பாடு இப்போதைக்கு இல்லை. நாம் இதைத் தவிர்க்கவேண்டும். இதற்கெல்லாம் நோடீஸ் கொடுக்கத் தேவையில்லை. இவற்றை நீக்கிவிட வேண்டும். குடிசை மேம்பாட்டில் இருக்கிற ஆர்வத்தின் காரணமாக சொல்கிறேனே தவிர, குற்றம் காணவேண்டும் என்ற முறையில் சொல்ல வில்லை. ஆகவே, இதற்கு முயற்சி செய்யுங்கள்.

அடுத்தபடியாக, காம்பென்சேஷன் குவெஸ்சின் வரும்பொழுது, அர்பன் லாண்டு டாக்ஸ் சம்பந்தமாக சென்னை நகரத்தை பல சோன்களாக பிரித்து, இந்த சோனிலுள்ள நிலத்திற்கு இவ்வளவு கொடுக்கலாம் என்று நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. அது ஒன்றே போதும். நஷ்ட ஈட்டிற்காக பல ஷரத்துக்களைப் போட்டு டுவெண்டி டைம்ஸ் (குறுக்கீடு) அதெல்லாம் இப்பொழுது இந்த மசோதாவிலே இல்லை என்றுல் நான் வரவேற்கிறேன்.

அடுத்தபடியாக ஒன்றைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தனி நபர் ரி-டெவலப்மெண்டு செய்தால், ரெண்டு 'ஸிக்ஸ் பெர்சண்ட் ஆஃப் தி காஸ்டு ஆஃப் இம்ப்ரூவ்மெண்டு வொர்க்ஸ்' என்று போட்டிருக்கிறது, இதெல்லாம் குடிசைவாழ் மக்களை பாதிக்கும். நாம் கட்டிக் கொடுத்தால், 10 ரூபாய் வாடகையில் வரும், பாக்கி ரூ. 18 சப்ஸிடியில் போய்விடும். தனி நபர் கட்டிக்கொடுத்தால் 6 பெர்சண்ட் அளவுக்கு வாடகை கொடுப்பதற்கான வழிவகை செய்யப்படும். ஆகையால் தனி நபர் சீர்திருத்தம் செய்ய இடம் கொடுக்காமல் அதை அரசாங்கமே செய்துவிட்டால் வாடகைப் பிரச்னை அவ்வளவு கடினமாக இருக்காது. ரூ. 10 என்ற அளவில் குடிசையில் இருப்பவர்கள் கொடுக்கலாம். அதற்கு மேலே போனுல் அவர்கள் கஷ்டப் படுவார்கள்.

இதிலே டெவலப்டு பிளாட்ஸாகக் கொடுப்பது, 3 செண்டு, ரூ. 3 வாடகைக்கு கொடுப்பது, பிறகு அதிலே இஷ்டப்படி வீடு கட்டிக்கொள்ளலாம் என்ற ஒரு முறை இருக்கிறது. அடுக்கு மாளிகை கட்டிக்கொடுக்கக்கூடிய முறை இரண்டாவது முறை. டெவலப்டு பிளாட்ஸ் கொடுக்காமல், எல்லாவற்றையும் வீடுகளாக கட்டிக்கொடுத்தால் நலமாக இருக்கும். காரணம், இருக்கக்கூடிய இடம் குறைவு, வசிப்பவர்கள் அதிகம். 3 செண்டு டெவலப்டு பிளாட்ஸ் கொடுத்தால் 30 குடும்பத்திற்கு இடம் கொடுக்கலாம், மீதி 200 குடும்பங்கள் ஊருக்கு வெளியே 20 [illegible] போகவேண்டியிருக்கும்.

அவர்களுக்கு வேலைவாய்ப்பு இங்கே. அவர்களை ஊருக்குப்போ, அம்பத் தூருக்குப் போ. திருவான்மையூருக்கும் போ என்று சொன்னுல், போய் வரு வதற்குத் தான் நேரம் சரியாக இருக்கும், வேலை செய்ய முடியாது. ஆகவே, இதையெல்லாம் யோசித்து, ஸ்லம் போர்டு முடிந்தவரை அடுக்கு மாளிகை கட்டித் தந்தால் நலமாக இருக்கும். எங்கே வேலை செய்கிருர்களோ, அதற்குப் பக்கத்தில் கட்ட முடியுமா என்று யோசித்து கட்டிக்கொடுப்பது தான் வரவேற்கத்தக்கதாகும்.

இத்தனைக்கும் மேலே, 'மெயிண்டெனன்ஸ் ஈஸ் எ வெரி இம்பார்டண்ட் குவெஸ்சின்'. வீடு கட்டித் தருவது பெரியதல்ல. கட்டிய வீடுகளைப் பார்த்தால் மெயிண்டெனன்ஸ் கிடையாது என்று சொல்லிவிடலாம். உதாரணத்திற்குச் சொல்லப்போனுல் அரிசன் வெல்பேர் டிபார்ட்மெண்டின் மூலம் கட்டப்பட்டிருக்கிற வீடுகளுக்கு யாரும் போய்ப்பார்ப்பதே கிடையாது. மெய்ண்டெனன்ஸே கிடையாது. கதவு உடைந்தாலும், ஜன்னல் உடைந் தாலும், ஃப்ளோர் மோசமாக இருந்தாலும், தண்ணீர் வராமல் இருந்தாலும் சரி, அவர்கள் அதிலேயே இருந்துகொண்டு அவஸ்தைப்படவேண்டியதுதான்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

பிறகு குடிசைக்கும், அதற்கும் என்ன வித்தியாசம். குடிசை மேம்பாடு என்று சொல்லி வீடு கட்டிக்கொடுத்துவிட்டு, மெயிண்டெனன்ஸ் இல்லா விட்டால் குடிசைக்கும், அதற்கும் என்ன வித்தியாசம்? பம்பாயில் பெரிய ப்ளாட் சிஸ்டத்தில் வீடு கட்டி, அதற்கு வேண்டிய கேர் டேக்கர் போட்டு, என்னென்ன முறையில் மெயிண்டெனன்ஸ் பண்ணவேண்டும் என்றெல்லாம் ஏற் பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. சாதாரணமாக ஒரு வீட்டில் நான்கு குடுத்தனம் இருந்தால், முறைவாசல் வைத்துக்கொண்டு, இன்று இவர் வெளியிலே சானம் தெளிக்க வேண்டும், பெருக்கவேண்டும், நாளைக்கு இவர் செய்யவேண்டும் என்று ஏற்பாடு செய்துகொள்வதில்லையா? அதேமாதிரி டெனெமெண்ட்ஸிலும் எப்படி சுத்தமாக வைத்துக் கொள்வது, வீட்டை சுத்த மாக வைத்துக் கொள்வது, வீதியை எப்படி சுத்தமாக வைத்துக் கொள்வது, யார் எதைச் செய்வது என்பதற்கெல்லாம் வசதி செய்து தரவேண்டும்.

மற்றென்று மூன்று அடுக்கு மாளிகை கட்டினுல் மேல்மாடிக்குத் தண்ணீர் வசதி செய்து தரவேண்டும். இரண்டாவது மாடிக்குத் தண்ணீர் வருவதே கஷ்டம், மூன்றுவது மாடிக்குத் தண்ணீர் வரவே வராது. ஆகவே, மூன்று மாடி கட்டாமல் இரண்டு மாடி கட்டவேண்டும். அல்லது மூன்றுவது மாடிக்குத் தண்ணீர் வருவதற்கு வசதி இருக்கவேண்டும். மூன்றுவது மாடிக்குத் தண்ணீர் வரவில்லை என்றுல் ரொம்பவும் அவஸ்தைப்படவேண்டி யிருக்கிறது. ஒரு பக்கெட் தண்ணீக்கு 9 தரம் மூன்று மாடி இறங்கும்படி யாக இருக்கும், ஆகவே, மூன்று அடுக்கு மாடிக்குத் தண்ணீர் சுலபமாக வருவதற்கு, உயர்மட்டத்தில் ஒரு தண்ணீர் தொட்டியாவது கட்டிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல்: கொய்யாத் தோப்பு என்ற இடத்தில் மூன்று அடுக்கு மாடி கட்டியிருக்கிறேம். அங்கே தண்ணீர் மேல்மாடிக்கும் வருகிறது.

திருமதி டி. என். அனந்தநாயகி: அது கார்ப்பொரேஷன் வாடர் ஆக இருக்காது. . .

MR. SPEAKER : You address the Chair, Madam

திரு. இராம. அரங்கண்ணல்: அது கார்ப்பொரேஷன் தண்ணீர் தான் என்பதை, தலைவர் அவர்களே, தங்கள் மூலம் தெரிவிக்கிறேன்

திருமதி டி. என். அனந்தநாயகி: கார்ப்பொரேஷன் தண்ணீரை மேல் தொட்டி கட்டி அனுப்பியிருப்பீர்கள். மூன்றாவது மாடிக்குத் தண்ணீர் வராது என்பதையும் யோசித்துச் செய்ய வேண்டும்.

ஆகவே, இதில் உள்ள குற்றங்குறைகளைத் தீர்க்க முன் வந்தால், சிறப்பாக இருக்கும்.

வீடுகளை எடுப்போம் என்று சொல்லும்போது, ஆல்டர்னேடிவ் அகா மொடேஷன் கொடுக்க வேண்டும். இல்லையென்றால் வெளியேற்றப் பட்ட வர்கள் ப்ளாட்பாரத்தில் தான் இருக்க வேண்டிவரும். No person shallbe evicted without providing alternative accommodationஎங்காவது ஒரு இடத்தில் குடியிருப்புக்கு வசதி கொடுக்கிறோம் என்று வெளியேற்றினால், வேதனைதான் அதிகரிக்கும் என்பதை எடுத்துச் சொல்லி என் பேச்சை முடிக்கிறேன்.

திரு. மணலி சி. கந்தசாமி: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் விவாதத்திற்கு வந்திருக்கும், குடிசைப் பகுதி புனர் நிர்மாணம் பற்றிய மசோதா மிக முக்கியமானது. ஒரு நல்ல ஆரம்பம் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த மசோதாவைப் பற்றி பேசும்போது, மிக எளிதில் செய்யக்கூடிய வேலையில்லை இது என்று கருதுகிறேன். இருக்கும் பிரதானமான பிரச்சினை களில் வீட்டு வசதி செய்து கொடுப்பது நல்ல காரியம். நகர்ப் புறங்களிலும், நாட்டுப் புறங்களிலும் மக்கள் பல ஆண்டுகளாக அவதிப்பட்டிருப்பவர்களுக்கு, ஓரளவுக்கு குடியிருப்புக்கு வசதி செய்து கொடுப்பது ஒரு நல்ல காரியம் என்றே கருதுகிறேன். அந்த அளவில் இந்த மசோதா நல்ல ஆரம்பம். இந்த மசோதா நல்ல முறையில் நிறைவேற்றப்பட்டு, அமுலுக்கு வந்தால், சென்னை நகரில் இருக்கும் பிரச்சினையில் ஓரளவுக்கு வெற்றி பெற்றோம் என்ற நிலை ஏற்படும் என்பது என்னுடைய கருத்து.

எனக்கு முன்பு பேசிய நண்பர்கள், எங்கள் பக்கத்தைச் சேர்ந்தவர்கள், மசோதா கொண்டு வந்த நேரத்தைப் பற்றிச் சொன்னார்கள். தேர்தல் நேரம் பார்த்துக் கொண்டு வந்தார்கள் என்றார்கள். எந்த நேரமாக இருந்தால் என்ன? நாட்டு மக்களுக்கு உண்மையாக நன்மை செய்யக் கூடிய காரியத்தை எப்பொழுது செய்தால் என்ன? எந்த அரசு எந்தக் காலத்தில் கொண்டு வந்தாலும் வரவேற்க வேண்டியதுதான் அரசியல் நாகரிகம். எந்தக் கட்சிக்காரர்கள்தான் தங்கள் கட்சியை வளர்க்க விரும்பவில்லை? அம்மையார் தன் கட்சியை வளர்க்க விரும்பவில்லையா? நான் என்னுடைய கட்சியின் வளர்ச்சியில் அக்கறை காட்டவில்லையா? அதேபோலத்தான் திராவிட முன்னேற்றக் கட்சியும் அவர்களுடைய கட்சியின் வளர்ச்சியில் அக்கறை

காட்டுகிறார்கள். நல்ல காரியத்தைச் செய்தால், அதிலே போய் நாம் லாவணி பாடவேண்டிய அவசியம் இல்லை என்பது என் கருத்து. (குறுக்கீடு) அது இடக்கட்டும்.

இந்த மசோதாவைத் துருவிப் பார்க்கும்போது, இந்த மசோதாவிலே அழுத்தம் ரொம்பவும் கொடுத்திருப்பது, குடிசையை ஒழிப்பது என்பதிலே இருக்கிறது, நிலங்களை ஆர்ஜிதம் செய்வது என்பதில் இருக்கிறது. ஒழிக்கப் பட்ட, நீக்கப்பட்ட குடிசைப் பகுதி மக்கள் குடியிருப்பதற்கு வழி வகை, மாற்று வாய்ப்புக்கள் கொடுப்பதில் அவ்வளவு அழுத்தம் இல்லை என்று கருதுகிறேன். 100 குடிசைகளைக் காலி செய்கிறோம் என்று வைத்துக் கொள்வோம், அவர்கள் எங்கே போவது என்பதற்கான வழி முறைகளைத் தெளிவாகக் குறிப்பிடவில்லை. அந்த பலகீனம்தான் நான் பயப்படும் விஷயம் என்பதைத் தெளிவாகக் கூறவிரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு மூன்று விதமான நிலங்கள் இருக்கின்றன—சர்க்கார் நிலம், தனியாருக்குச் சொந்தமான நிலம், கோவில், மற்றவை களுக்குச் சொந்தமான நிலங்கள். அங்கெல்லாம் குடிசைகள் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். நகரத்திலும், நாட்டுப் புறங்களிலும் அந்த நிலை இருக்கிறது. அந்த நிலங்களை ஆர்ஜிதம் செய்யும்போது, சுறு சுறுப்பாக செயல்பட்டாலொழிய, ஒன்றையும் நல்ல முறையில் செய்ய முடியாமல் போகும். மூன்று வருஷத்தில் போட்ட பணத்தைப் போல் பல மடங்கு எடுக் கலாம் என்கிற நிலை. இது சமுதாயத்தில் நல்ல நில வியாபாரமாக வளர்ந்திருக்கிறது. சென்னை நகர வளர்ச்சிக்குத் தடையாக இருப்பது இந்த நிலைதான். இந்த நிலையைப் போக்க அவசரச் சட்டம் கொண்டு வந்தாவது தடுத்தாக வேண்டும். இங்கே விற்கப்படும் நிலங்களை எந்த அளவிற்குக் கட்டுப்பாடு செய்து, குடிசைகளை அப்புறப்படுத்த வேண்டும் என்பதை ஆலோசிக்க வேண்டும். இன்றைக்கு 100 ரூபாய்க்கு வாங்கிய நிலத்தை, 10,000 ரூபாய்க்கு 10 ஆண்டுகளில் விற்கும் அளவில் அதை ஒரு வியாபாரமாக நடத்துகிறார்கள். தாகர்கள் தோன்றியிருக்கிறார்கள். கம்பெனிகள் தோன்றி, 'அம்பத்தூரில் நிலம் இருக்கிறது, வீட்டுமனைக்கட்டு இருக்கிறது, ரோடு வசதி இருக்கிறது, தண்ணீர் வசதியிருக்கிறது, ஒரு கிரௌண்ட் 2,000 ரூபாய் தான்' என்றெல்லாம் விளம்பரங்கள் போட்டுக் கொண்டே இருக்கிறார்கள். இதை வியாபாரமாக நடத்துவதை அனுமதிக்கக் கூடாது. இது பொது மக்கள் பிரச்சினை. இவையெல்லாம் சர்க்காரிடந்தான் இருக்கவேண்டும். மனைக்கட்டு வியாபாரம் செய்வதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்தத் தேசத்தில், வீட்டுப் பிரச்சினை மிகச் சிக்கலானதாக இருக்கிறது. இன்றைக்குப் பார்த்தால், 30, 40 சதுர அடி இடத்தில், 15 ஜனங்கள் இருப்பதையும், அதே நேரத்தில் 30,000 சதுர அடி இடத்தில் ஒரு தம்பதி, ஆணும் பெண்ணும், குழந்தைகூட இல்லாதவர்கள் வாழும் நிலையில் இந்த நாட்டில் இருக்கிறது. அது மாதிரி இடங்களை என்ன செய்யலாம் என்று பார்க்க வேண்டும். பங்களாக்களைச் சுற்றி எவ்வளவு கிரவுண்டுகள் காலியாகக் கிடக்கின்றன? தோட்டம் இல்லாமலும், வேறு உபயோகம் இல்லாமலும், வெற்று இடமாக, நிலமாகக் கிடக்கிறது. நிச்சயமாக அப்படிப் பட்ட இடங்களை எடுக்க வேண்டும், அங்கே அடுக்கு மாளிகை கட்டி, அமுல் நடத்த சர்க்காருக்கு அதிகாரம் எடுத்துக் கொள்ள வேண்டும், இல்லையென்றால்

இடம் எங்கேயிருக்கிறது? ஒரு மைல் நீளம், ஒரு மைல் அகலம் இருக்கும் பங்களா ஒரு புறம், 100 குடிசைகள் இருக்கும் நிலம் மொத்தம் 20 செண்ட் மற்றொரு பக்கம். இப்படிப்பட்ட அடிப்படைப் பிரச்சினையைத் தீர்க்க அதிகாரம் வேண்டும்.

கோவில் நிலங்கள் இருக்கின்றன. கடவுள் என்ன ஏழைகள் அங்கே வசிக்கக் கூடாது என்று சொல்கிறாரா? எந்தப் புராணத்திலாவது சொல்லி யிருக்கிறதா? கோவில் நிலமோ, மற்ற நிலமோ, சும்மாக்கிடந்தால், ஜனங்கள் உபயோக்கிக்காமல் இருந்தால், அப்படிப்பட்ட நிலங்களை எடுக்க வாரியத்திற்கு அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, பெரிய அளவிற்கு வாரியத்திற்கு அதிகாரங்கள் கொடுக்கப்படுகின்றன. சர்க்காரில் நிர்வகிப்பதில்லை. ஆனால், வாரியத்தில் போடப்படும் 15 அங்கத்தினர்களும், கூடுமானவரையில் பிரதிநிதித்துவம் வாய்ந்தவர்களாக இருந்துவிட்டால், புகார் சொல்ல முடியாத நிலையில் இருக்கும் (குறுக்கீடு) புகார்கள் வராமல் பார்த்துக் கொள்வதுதான் நல்லது. உடனுக்குடன் காரியங்களைச் செய்யக் கூடிய அளவில் இருக்க வேண்டும்.

இந்த நிலங்களில் கார்ப்பொரேஷனுக்குச் சில இடங்களை ஒதுக்க வேண்டும். சென்னை நகரம் என்றால், அங்கே அந்த நிலையும் இருக்க வேண்டும். எதிர்க் கட்சிகளிலும், நியாயமான அளவிற்கு ஆலோசனைகளைக் கூறும், ஆக்க பூர்வமாக செயல்படக்கூடிய, எதிர்க் கட்சிக்காரர்களையும் சேர்த்துக் கொள்வது, வாரியத்தின் வேலையைச் செய்ய நன்மையாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

இதிலே இருக்கக்கூடிய பிரச்சினை, தன் கடமைகளைச் செய்வதில் தவறு செய்தால், காரியங்களுக்குக் குறுக்கே நின்றால், அவர்களுக்குத் தண்டனை விதித்திருப்பது மிகக்கடுமையாக இருக்கிறது, 2,000 ரூபாய் அபராதம், ஆறு மாதக் காவல், 1,000 ரூபாய் அபராதம் என்றெல்லாம் இருப்பது மிகக்கடின மானது. குடிசையை வைத்துக் கொண்டு நம்பிக்கொண்டு இருப்பவனை வெளியே போ என்று சொன்னால் என்ன, சத்தம் போடுவான், குறுக்கே நின்று 5, 10 நிமிஷம் தடங்கல் செய்வான். அதன் பின் அடங்கிவிடுவான். அதற்காக அவனுக்குக் கடும் தண்டனைகளை விதித்தால், சமுதாய நீதிக்கு ஒத்ததல்ல. ஆகவே, அதைக் குறைக்க வேண்டும். எந்த அளவில் குறைக்கலாம் என்று சிந்திக்க வேண்டும்.

அடுத்தபடியாக, ஒரு பெரிய குறையைப் பலரும் சொன்னார்கள், டாக்டர் ஹாண்டே அவர்கள் கூடச் சொன்னார்கள். பெரிய மனிதர்களிடம் சென்று பணம் திரட்ட வேண்டுமென்று சொன்னார்கள். அதை நான் எதிர்க்கிறேன். மத்திய சர்க்கார், மாநில சர்க்கார் மானியம் கொடுக்க வேண்டும். பொது மக்களிடமிருந்து, பெரிய மனிதர்களிடமிருந்து தர்மம் கேட்க வேண்டுமென்ற முறையில் வாரியத்தை அமைத்தால் இந்தக் கடமையைச் சரியாகச் செய்ய முடியாது. மற்ற வசதிகளைச் செய்து கொடுப்பதைவிட வீட்டு வசதியைச் செய்து கொடுப்பது அத்தியாவசியமான ஒன்றாகும். ஒன்பது லட்சம் குடிசை ஏழ்மக்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டத்தில் பொருளாதார அஸ்திவாரம் இல்லாமல் பெரிய பணியைச் செய்துவிட முடியாது. நம்முடைய மாநில சர்க்கார் பெரிய அளவுக்குத் தொகையை ஒதுக்க நடவடிக்கை எடுத்து பொருளாதார அஸ்திவாரத்தில் இயங்கக் கூடிய நிலைமை இருக்க

வேண்டுமென்று மேலெழுந்தவாரியாகச் சொல்லிக் கொள்கிறேன். மதிப்பிற்குரிய நண்பர், நீண்ட நாட்களாகத் தெரிந்த திரு. அரங்கண்ணல் அவர்கள் வாரியத்தின் தலைவராக இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய ஊர்க்காரர், திருத்துறைப் பூண்டியைச் சேர்ந்தவர்.

திரு. மணலி சி. கந்தசாமி: அவர் இந்த வாரியத்தின் தலைவராகச் சிறப்பான முறையில் பணியாற்றி இந்தச் சட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு, சென்னை நகரத்தில் சேரிகளே இல்லாமல் சின்னஞ்சிறு சிங்காரமான வீடுகளை சமுதாயத்தின் கீழ்மட்டத்தில் இருப்பவர்களுக்குக் கட்டிக் கொடுக்கும் வகையில் அவர் காரியத்தைத் திறம்படச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

*** திரு. கு. காமாட்சி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நாட்டில் குடிசைப் பகுதிகளில் சுகாதாரம் அற்ற முறையில் உழலுகின்ற ஏழை எளிய மக்களுடைய நல்வாழ்வுக்காக, குடிசைப் பகுதிகள் சிறப்பதற்கு ஒரு நல்ல திட்டத்தை நமது அரசு இங்கே கொண்டு வந்திருக்கிறது. இந்தத் திட்டம் நாட்டிலே இருக்கும் அத்தனை ஏழைகளாலும் வரவேற்கக்கூடிய ஒரு நல்ல திட்டம். இந்தத் திட்டத்திலே கூறியிருப்பது போல், இரண்டாவது பகுதியில் 15, 20-வது பாராக்களில் குடிசைவாசிகளுக்கு உள்ள குறைபாடுகள் என்னென்ன இருக்கிறது என்று சொல்லியிருப்பது போல், அத்தனை குறைகளும் கொண்டவர்கள் தமிழ்நாட்டின் மற்ற பல நகரங்களிலும் வாழ்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, திருச்சியில் பீடித் தொழிலாளர்கள் மிகவும் மோசமான இடங்களிலே, சுகாதாரம் அற்ற இடங்களிலே வாழ்கிறார்கள் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்ளுவதோடு, அந்தப் பகுதிகளை எல்லாம் குடிசைப் பகுதிகளாக இங்கே அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்பு கிறேன். நகரங்களில் மட்டும் அல்லாமல் கிராமங்களிலும்கூட குடிசைப் பகுதிகள் சுகாதாரம் அற்ற முறையில் நிறைய இருக்கின்றன என்பதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

தனியார் இடங்களிலே குடிசைப் பகுதிகள் நிறைய இருக்கின்றன. அந்தத் தனியாருக்கு அடிமைகளாக அங்கு வசிப்பவர்கள் இன்றைக்கு இருந்து வருகிறார்கள். ஏதாவது அங்கிருப்பவர்கள் தவறு செய்து விட்டால் உடனே இடத்தைக் காலி செய் என்று சொல்லும் அதிகாரத்தொனி அவர்களுடைய உள்ளத்தில் எழும்போது குடிசைப் பகுதியில் வாழ்கிறவர்கள் மிகவும் கஷ்ட மான நிலைமையை அடைகிறார்கள். அந்த மாதிரி இடங்களை எல்லாம் உடனடி யாக அங்கு வசிப்பவர்களுக்கே ஆர்ஜிதம் செய்து தரவேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலேகூட காமராஜ் நகர், நேருஜி நகர் போன்ற பகுதிகள் எல்லாம் இன்றைக்கும் குடிசைப் பகுதிகளாக, சுகாதாரம் அற்ற பகுதிகளாக இருக்கின்றன. இன்றைக்கும் நாங்கள் அந்தப் பகுதியை காமராஜ் நகர், நேருஜி நகர் என்றுதான் அழைக்கிறோம்; கலைஞர் கருணாநிதி நகர், நாவலர் நகர் என்று அழைக்கவில்லை. அந்தப் பெயரை ஏற்படுத்தி யவர்கள், அந்தக் காலத்தில், காமராஜர் அவர்களுடைய காலத்தில் அந்தப்

[திரு. கு. காமாட்சி] [1971 ஏப்ரல் 3

பகுதியில் குடிசை போட்டு, அவர்கள் காலத்தில் நமக்கு நல்வாழ்வு கிடைக்கும் என்ற எண்ணத்தோடு அந்தப் பெயரை இட்டிருக்கிறார்கள். இப்போது காமராஜ் நகருக்கும், நேருஜி நகருக்கும் ஒரு நல்ல காலம் பிறக்கிறது என்பதைப் பார்க்கும்போது உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன்.

அதே போல் இந்தத் திட்டத்தினுடைய அவசரத்தை உணர்ந்து மசோதாவை அவசர அவசரமாகக் கொண்டு வந்திருப்பது வரவேற்கத்தக்க ஒன்று. எதை எதை எப்போது அவசரமாகக் கொண்டு வரவேண்டும், எதை எதை ஆற அமரக் கொண்டு வரவேண்டுமென்பதைத் தமிழக அரசு நல்ல முறையில் உணர்ந்து இருப்பதால், இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதால் இந்த நாட்டில் இருக்கும் ஏழைகளுக்குப் பெரிய உதவியாக இருக்குமென்று நம்புகிறேன்.

குடிசைப் பகுதிகளில் வாழ்கின்றவர்கள் அவ்வளவு பேரும் இன்னும் ஏழைகளாகத்தான் இருக்கிறார்களே தவிர, கூலி வேலை செய்து பிழைக்கின்றவர்களாகத்தான் இருக்கிறார்களே தவிர, வசதியாக இல்லை. மாண்புமிகு உறுப்பினர் சகோதரி அனந்தநாயகி அவர்கள், அவர்களைப் பற்றி ஒரு குற்றச்சாட்டைக் கூறினார்கள். அவர்கள் அடிக்கடி அந்தக் குடிசைகளை விற்றுவிட்டு ஓடிவிடுகிறார்கள் என்று சொன்னார்கள். உண்மையிலேயே, அவர்கள் அப்படி ஓடினால் அது அவர்களுடைய தரித்திரத்தைத்தான் காட்டுகிறதே தவிர, அவர்கள் வேண்டுமென்றே ஓடவில்லை என்று நான் கூற விரும்புகிறேன்.

அவர்கள் பேசுகின்றபோது, ஒருவருக்குப் பட்டா செய்து கொடுத்தால், பத்து நாட்களில் விற்று விட்டு ஓடிவிடுகிறார்கள் என்று சொன்னார்கள். ஒருவருக்கு பட்டா செய்து கொடுத்தால் 12 ஆண்டுகளுக்கு அந்த இடத்தை விற்கக் கூடாது என்று சட்டத்திலே விதி இருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக அவர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்ள ஆசைப்படுகிறேன். அவர்கள் பேசும்போது, 'நான்கு ஆண்டு காலமாக ஆண்டவர்கள்' என்று சொன்னார்கள். நான் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்—நான்கு ஆண்டு காலம் ஆண்டு இந்த நாட்டு ஏழை எளியவர்கள் உள்ளத்தை எல்லாம், குடிசை வாழ்வோர் உள்ளத்தை எல்லாம் புரிந்து, உணர்ந்து எப்படி உணவுப் பஞ்சத்தைப் போக்கினார்களோ, அதே போல் கூடிய விரைவில் இந்த நாட்டிலே இருக்கும் குடிசைப் பகுதிகளை எல்லாம் மேம்பாடு உள்ள பகுதிகளாக ஆக்குகின்ற பெரிய திட்டத்தைக் கொண்டு வந்து இன்றைக்கு 183 பேராக இந்த அவையிலே அமர்ந்து ஆளுகின்றவர்கள் என்பதைத் தங்கள் வாயிலாக அவர்களுக்கு அறிவித்து இந்தக் குடிசை மாற்றுத் திட்டத்தினை என்னுடைய தொகுதியின் சார்பில், ஏழை எளியவர்கள் சார்பில் வரவேற்று முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு இராம. அரங்கண்ணல்:** தலைவர் அவர்களே, ஒரு உன்னதமான பணியினை மேற்கொண்டிருக்கிறேன் என்ற முறையில் கொஞ்சம் அதிகமாகப் பேச வேண்டியிருக்கிறதென்பதை முதலாவதாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிசைவாழ் மக்களுக்கு, சென்னை மாநகரத்தில் வாழ்கின்ற குடிசைவாழ் மக்களுக்கெல்லாம் நல்ல இருப்பிடங்களைக் கட்டிக் கொடுத்து அவர்களையும் மனிதர்களைப் போல வாழ வைக்க வேண்டுமென்ற பெரு நோக்கத்தோடு இந்த மசோதா இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த மசோதா அவசரச் சட்டமாக கவர்னரால் பிறப்பிக்கப்பட்டது. இது தேர்தலையொட்டிப் பிறப்பிக்கப்பட்டது என்றெல்லாம் சகோதரி அனந்தநாயகி அவர்கள் சொன்னார்கள்.

1971 ஏப்ரல் 3] [திரு. இராம. அரங்கண்ணல்]

தேர்தல் வரும் என்று தெரிவதற்கு முன்பே, ஐந்தாறு மாதங்களுக்கு முன்பே, குடிசைவாழ் மக்களுக்கு நல்லது செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு குடிசை மாற்று வாரியம் ஏற்படுத்தப்பட்டதும், அதற்குப் பிறகு அந்த வாரியத்தினுடைய செயல்கள் செம்மையாக நடைபெற வேண்டுமென்ற எண்ணத்தோடு சட்டம் செய்யவேண்டும், சட்டமன்றம் கூடிய பிறகு என்று கருதிக் கொண்டிருந்த நேரத்தில் தேர்தல் வந்துவிட்ட காரணத்தால், குடிசை வாரியம் மேற்கொண்ட அலுவல்கள் தடங்கலின்றி நடைபெற வேண்டுமென்ற நோக்கத்தோடு அவசரச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அதற்குப் பிறகு மன்றம் கூடி இருக்கும் காரணத்தால், இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி அந்த அவசரச் சட்டம், சட்டமாக ஆக்கப்பட வேண்டுமென்ற முறையில் இப்போது மசோதாவாக இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது.

பொதுவாக இந்த மசோதாவை ஆதரித்துப் பேசிய எதிர்க்கட்சி நண்பர்கள், சுதந்திராக் கட்சி நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள், நண்பர் டாக்டர் ஹாண்டே முதலிய எல்லோருமே வரவேற்றுப் பேசியிருப்பது எனக்கு உள்ளபடியே மகிழ்ச்சியை அளிக்கிறது. ஆரம்பகாலத்திலிருந்தே 'இது கட்சிக்கு அப்பாற்பட்ட பிரச்சினை, குடிசைவாழ் மக்களுக்கு நல்ல காரியம் செய்கிற பிரச்சினை, இதிலே எல்லோருடைய ஒத்துழைப்பும் தேவை' என்றுதான் சொல்லிவருகிறோம். 'ஏதாவது பிரச்சினை இருக்குமானால் எல்லாக் கட்சிகளின் தலைவர்களும் தனியாக உட்கார்ந்து பேசி, சிக்கல்களுக்குப் பரிகாரம் காணலாம், சிக்கல்களைப் பெரிதாக்காமல், பொதுமக்களுக்கு நல்லது செய்யவேண்டும்' என்ற கருத்தை அடிக்கடி எடுத்துச் சொல்லி வந்திருக்கிறேன்.

குடிசைவாழ் பிரச்சினையை எடுத்துச் சொல்கிற நேரத்தில், குடிசைவாழ் மக்களுடைய நலனை முன்னிட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நாங்கள் சென்னை மாநகரத்திலே 'குடிசைவாழ் மக்கள் சங்கம்' ஏற்படுத்தி, குடிசைவாழ் மக்களுக்காகப் பாடுபட்டு வருவது பலருக்குத் தெரிந்திருக்கக்கூடும். இந்தக் குடிசை மாற்று வாரியம்' ஏற்படுத்தியதும் என்னைத் தலைவராக இருக்குமாறு என்னைப் பணித்தது—பணித்தது என்று சொல்வதைவிட நானே இந்த வேலை எனக்கு வேண்டுமென்று, நானே முதலமைச்சரிடத்தில் சொல்லி எடுத்துக்கொண்டேன் என்று சொன்னாலும் தவறில்லை என்று இந்த மன்றத்தில் இருக்கிற உறுப்பினர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு

மகாராஷ்டிரத்தில் இந்த வாரியத்தினுடைய தலைவராக இருப்பவருக்கு கிட்டத்தட்ட இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் கிடைக்கிறது. அதேபோல் மற்ற வசதிகள் எல்லாம் இருந்தாலும்கூட, இந்த வசதிகள் எவற்றையும் நான் பெறவில்லை. இதை நான் எடுத்துச் சொல்வதற்குக் காரணம், இந்த வாரியத்திலே பணியாற்றுகிற அதிகாரிகள் உட்பட, இன்ஜினியர்கள் உட்பட எல்லோருமே கருத வேண்டியது என்னவென்றால், 'இந்த வாரியத்திலே நாம் உத்தியோகம் பார்க்கிறோம் என்ற எண்ணம் உண்டாகாமல் சமுதாயத்திற்குச் சேவை செய்கிறோம், சமுதாயத்திற்குத் தொண்டு செய்கிறோம், சமுதாயப் பணி புரிகிறோம், வாழ வழி இருந்தும் வசதி கிடைக்காத நிலையில் சாக்கடை

எல்லா வசதிகளும் தருகிறார்கள். நான் ஒன்றைப் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். இந்த வாரியத்தின் தலைவராக பொறுப்பை ஏற்றுக்கொண்ட நான் எந்தவிதமான ஊதியமும் பெறவில்லை. அதுமட்டுமல்ல, கார்வசதி,

[திரு. இராம. அரங்கண்ணல்] [1971 ஏப்ரல் 3

ஓரங்களிலும், பன்றிகளோடு பன்றிகளாகக் கேடான நிலையில் இருக்கிற சமுதா
யத்திற்கு வாழ்வு கிடைக்கும்படியான நிலையில் நாம் வேலை செய்கிறோம்' என்ற
எண்ணம் உடையவர்களாக இருக்க வேண்டும். இந்த மன்றத்தில் உள்ள
எல்லாக் கட்சி உறுப்பினர்களும் இதற்கு ஆதரவு அளித்துப் பேசினார்கள்
என்பது மட்டுமல்ல, நான் பணியாற்றச் செல்லக்கூடிய நேரத்திலும் சகல கட்சி
யினரும் இந்த வாரியத்தின் வேலைகளுக்கு நல்ல ஒத்துழைப்பைத் தந்து
வருகிறார்கள். அத்தனை பேர்களும் தொடர்ந்து தங்களது ஒத்துழைப்பைத்
தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய நண்பர் டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசுகிற நேரத்தில்,
'இந்தப் பிரச்சினையை, குடிசைவாழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க பலபேர்,
பல கட்சிகள் முயன்றன, ஆனால் எந்தக் கட்சியும் வெற்றிபெறவில்லை. நீங்கள்
இந்தப் பணியை ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள்' என்று கூறினார்கள். இரண்டு
ஆண்டுகளுக்கு முன்பு எங்களையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா
அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், டாக்டர் ஹாண்டே அவர்கள்,
குடிசைச் சீர்திருத்தத்திற்காகத் தனியாக ஒரு போர்டு வேண்டுமென்று
கேட்டார்கள். அதற்கும் முன்னால், ஆறு, ஏழு ஆண்டுகளுக்கு முன்னால்
அமைச்சராக இருந்த திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் வீட்டுவசதி வாரி
யத்தின் அமைச்சராக இருந்த நேரத்தில் நான் ஒரு கட். மோஷன் கொடுத்
திருந்தேன். 'குடிசைவாழ் மக்களுக்கு ஒரு வாரியம்' வேண்டுமென்று அப்
போதே நான் கேட்டிருக்கிறேன்.

நமது நண்பர் கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் பேசிய நேரத்தில், சிட்டி
இம்ப்ரூமெண்ட் டிரஸ்ட் இருந்த நேரத்தில், 'நாங்கள் கூட இந்தப் பிரச்சினையில்
ஆர்வம் காட்டினோம்' என்று கூறினார்கள். ஆனால் என்ன நடைபெற்றிருக்
கிறது? இருபதாண்டுக் காலத்திற்கும் மேலாகக் காங்கிரஸ்காரர்கள் இந்த
நாட்டை ஆண்டார்கள். என்ன முன்னேற்றம் கண்டிருக்கிறோம்! ஓர்
உதாரணம் மட்டும் சொல்ல விரும்புகிறேன். 1959-ம் ஆண்டு சி.ஐ.டி.
ஏற்படுத்தப்பட்டது. 1959-லிருந்து 1967 வரையில், அதாவது கிட்டத்தட்ட
17 ஆண்டுக் காலத்தில் கட்டப்பட்ட குடியிருப்புகள் 4,071 தான். ஆனால்
திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பு ஏற்றபிறகு நான்கு ஆண்டுக்
காலத்திலே ஏழை எளிய குடிசைவாழ் மக்களுக்காக 6,322 குடியிருப்புகளை
அமைத்துக் கொடுத்து இருக்கிறது. அவர்கள் பதினேழு ஆண்டுகளில்
செய்ததைக் காட்டிலும், நாங்கள் நான்கு ஆண்டுகளில் அதிக சாதனை
புரிந்திருக்கிறோம். (குறுக்கீடு) குடிசைவாரியம் ஏற்படுத்தப்பட்ட பிறகு
ஆறு மாத காலத்தில் 11,284 குடியிருப்புகளுக்கான வேலைகள் நடைபெற்றுக்
கொண்டிருக்கின்றன என்பதைப் பெருமையுடன் சொல்லிக்கொள்கிறேன்.

இந்தத் தேர்தல் வராமல் இருந்திருந்தால் இன்னும் இந்தக் குடியிருப்பு
களின் எண்ணிக்கை அதிகமாக ஆகியிருக்கும். நமது மணலி அண்ணா அவர்
கள், செலவழித்த தொகை எவ்வளவு என்று கேட்டார்கள். அந்த விவரத்தை
யும் சொல்லிவிடுகிறேன். 17 ஆண்டுக் காலத்தில் காங்கிரஸ் ஒன்றாக இருந்த
நேரத்தில், காங்கிரஸ் அரசாங்கம் செலவழித்த தொகை 438 லட்சம் ரூபாய்.
ஆனால் இந்த நான்காண்டுக் காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசு
செலவழித்த தொகை 295 லட்சம் ரூபாய். 1967-70 என்ற இந்தக் காலத்தில்
குடிசை மேம்பாட்டு வாரியம் 250 லட்சம் ரூபாய் செலவிட்டிருக்கிறது. இந்த
இரண்டு தொகைகளையும் கூட்டினால் மொத்தம் சுமார் 5 கோடி ரூபாய் ஆகிறது.

1971 ஏப்ரல் 3]

திருமதி டி. என். அனந்தநாயகி: தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப்
ஆர்டர் உறுப்பினர் அவர்கள் பேசும்போது, காங்கிரஸ் அரசாங்கம் குறைவான
பணத்தைச் செலவு செய்து குறைவான வீடுகளையே கட்டினார்கள் என்று
கூறினார்கள். காங்கிரஸ்காரர்கள் இதைவிட உணவு உற்பத்திக்கு அவசியமான
வகையில் அணைகளைக் கட்டினார்கள். வீட்டுவசதியைப் பெருக்குவதில் அக்கறை
செலுத்தவில்லை என்பது சரியாகாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.
கிளாரிபிகேஷன் தான்.

திரு. இராம. அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, பதினேழு ஆண்டுக்
காங்கிரஸ் அரசாங்கம்
காலத்தில் காங்கிரஸ்காரர்கள் என்ன செய்தார்கள்? காங்கிரஸ் அரசாங்கம்
இந்தப் பிரச்சினையைச் சமாளிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டதா? இந்தப்
பிரச்சினையைச் சமாளிக்கவில்லை.

THIRU K. M. SUBRAMANIAM: Was not the City Improve-
ment Trust in existence in 1959 or was the Housing Board there
in 1959? It was the City Improvement Trust that was looking
after the slums. The Housing Board was looking after M.I.G.
and L.I.G. flats. I would like to know whether between 1959 to
1967 the City Improvement Trust or Housing Board was
operating?

திரு. இராம. அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, சி.ஐ.டி. இருக்கிற நேரத்
தில், தென்சென்னையிலே அதற்கு சி.ஐ.டி. செய்வதாகவும் வட சென்னையிலே
கார்ப்பொரேஷன் செய்வதாகவும் இருந்தது.

திரு. கே. எம். சுப்பிரமணியம்: 1959-ல். . .

திரு. இராம. அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, வீட்டுவசதி வாரியம்
ஏற்படுத்தப்பட்ட பின்னர் அந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடிந்ததா? அணை
களைக் கட்டி உற்பத்தியைப் பெருக்கினோம் என்கிறார்கள். ரோடு ஓரங்களில்,
சாலையோரங்களில் எவ்வவளவு பேர் வாழ்கிறார்கள் என்பது தெரியும்.
காங்கிரஸ் அரசாங்கத்திற்குக் குடிசைவாழ் மக்களின் பிரச்சினையைத்தீர்க்க
வேண்டுமென்ற எண்ணம் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் அந்த எண்
ணத்தை எப்படிச் செய்வது, எப்படி அதை நிறைவேற்றுவது என்று தெரிய
வில்லை.

சகோதரி அனந்தநாயகி அவர்கள் குடிசைவாழ் மக்களின் பிரச்சினையைப்
பற்றிச் சொன்னார்கள். குடிசைவாழ் மக்களை வெளியேற்ற என்ன என்ன
நடைபெற்றது என்பது எல்லாம் எனக்கும் தெரியும். இந்த மசோதாவில்,
குடிசைவாழ் மக்களை எந்தத் தனிப்பட்ட நிலச்சொந்தக்காரர்களாக
இருந்தாலும், கார்ப்பொரேஷனாக இருந்தாலும், சர்க்காராக இருந்தாலும்
வெளியேற்ற முடியாது என்ற அம்சம் வந்திருப்பதுதான் எங்களுடைய
லட்சியமாகும்.

பழைய உறுப்பினர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்று
கேட்டார்கள். என்னுடைய தொகுதியில் நாராயணசாமி தோட்டம், ஆண்டி
மானியத் தோட்டம், பல்லக்கு மானியம், கபாலித் தோட்டம், சிலேட்டர்புரம்

முதலிய இடங்களில் நோட்டீஸ் அனுப்பியும், போலீசார் லாரி லாரியாக வந்து அந்த மக்களைக் கிளப்பியபோது, அவர்களுக்காக வாதாடியிருக்கிறேன். அந்த நிலைகள் எல்லாம் இங்கு அமைச்சராக இருந்த ஜோதியம்மையார் அவர்களுக்குத் தெரியும். ஆனல் அவர்கள் இங்கே இல்லை. அப்படி குடிசை வாழ் மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட கஷ்டங்கள் இந்த மசோதாவின் வாயிலாக இனிமேல் ஏற்படாது என்கிற மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த நேரத்தில் இந்த மன்றத்தின் மூலமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னை நகரக் குடிசைவாழ் மக்களும் மகிழ்ச்சி அடைவார்கள் என்று நம்புகிறேன்.

குடிசைவாரிய உறுப்பினர்கள் யார் என்பதாகக் கேட்டார்கள். ஏழு ஆண்டுக் காலத்தில் 40 கோடி ரூபாய் செலவில் சென்னை மாநகராட்சியில் உள்ள குடிசைப்பகுதிகள் நல்லமுறையில் மாற்றி அமைக்கப்படத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்தக் குடிசைவாரியம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய நேரிடைப்பார்வையில் இயங்கிவருகிறது என்பதில் இருந்தே இந்தப் பிரச்சினையில் அவர்கள் கொண்டுள்ள அக்கறையை நன்கு தெரிந்து கொள்ளலாம். குடிசைவாரியத்தில் நம்முடைய தொழில்துறை இலாக்கா செயலாளர், நிதித்துறைச் செயலாளர், ஆர். டி. எல். ஏ. செயலாளர், ரெவின்யூ செயலாளர், கார்ப்பரேஷன் கமிஷ்னர், டிவுன் ப்ளானின் டைரக்டர், ஸ்டேட் ஹவுஸ்ஸிங் போர்டின் தலைவர், நலவழித்துறைச் செயலாளர், சோஷியல் வெல்பேர் இலாக்காவின் செயலாளர் ஆக கிட்டத்தட்ட 9 பேர்கள் அதிகாரப் பூர்வமான உறுப்பினர்களாக இருக்கிறார்கள்.

அடுத்து, அதிகாரச்சார்பற்ற உறுப்பினர்களாக தென்சென்னை பாராளு மன்ற உறுப்பினர் திரு. மாறன், வடசென்னைபாராளுமன்ற உறுப்பினர் திரு. மனோகரன், குடிசை முன்னேற்றப்பணியில் என்னுடன் மிகுந்த அக்கறை கொண்டுள்ள சைதை சம்பந்தம், நடராசன் அவர்கள், கார்ப்பரேஷன் முன்னாள் மேயர் இந்தப் பிரச்சினையில் மிகுந்த அக்கறை காட்டிவந்திருக்கும் திராவிட முன்னேற்றக்கட்சியில் தலைவராக உள்ள திரு. முனுசாமி அவர்கள் இருக்கிறார்கள். (திருமதி டி. என். அனந்தநாயகி எல்லோரும் உங்கள் கட்சிக்காரர்கள்தானே) நான் முதலிலேயே சொன்னேன். கனம் வெங்கட்ராமன் காலத்தில் தலைவர் காமராஜர் அவர்கள் "எங்கள் கட்சிக்காரர்களைத்தான் போடுவோம், என்ன தப்பு" என்று சொன்னார்களே அப்படி நாங்கள் சொல்லவில்லை. எந்தக் கட்சிகாரர்களாக இருந்தாலும் சரி நீங்கள் உங்கள் வீட்டுக்கு வரச்சொன்னாலும் நாங்கள் வரத் தயார், குடிசைவாழ் பகுதிகளின் முன்னேற்றத்திற்கு யார் என்ன நல்ல யோசனைகளைச் சொன்னாலும் நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

நம்முடைய நண்பர் திரு. ஹாண்டே அவர்கள் பேசும்போது சொன்னார்கள். ரோடரி க்ளப், லையன்ஸ் க்ளப் ஆகியவற்றினிடம் இருந்தெல்லாம் உதவி பெற்றுத்தருகிறேன் என்றார்கள். நாங்களும் எல்லோருக்கும் கடிதம் எழுதியிருக்கிறோம். தொழில் அதிபர்களுக்கு எல்லாம் எழுதியிருக்கிறோம். இதுவரை எங்கிருந்தும் பதில் இல்லை. இதுவரை எங்களுக்கு உதவி அளித்து வருவது கிறிஸ்டியன் சோஷல் ஸ்தாபனம் ஒன்றுதான்—கட்டடங்கள் கட்டுவதற்கும்—இன்னும் கக்கூஸ் போன்ற வசதிகள் செய்து தருவதற்கும் உதவி செய்து வருகிறார்கள். தனிப்பட்டவர்கள் எந்தவகையில் உதவி அளித்தாலும் நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறோம் என்பதைத் தங்கள் மூலமாக இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, போட்டோ எடுப்பதுபற்றிச் சொன்னார்கள். அதுபற்றியும் இங்கே விளக்க விரும்புகிறேன். பல இடங்களில் திடீர் திடீர் என்று குடிசைகள் தோன்றுகின்றன என்றும் சொன்னார்கள். இது ஒரு பெரிய பிரச்சினை—குடிசை வாரியத்தின் மூலமாக இப்போது நாங்கள் முதன் முதலாக எடுத்துக்கொண்டிருக்கும் வேலை ப்ளானிங் சர்வேதான்—இதற்காகவே ஒரு செல் செயல்பட்டு வருகிறது.

முன்பு சென்னை மாநகரில் 471 குடிசைவாழ் பகுதிகள் இருப்பதாகவும், 5 லட்சம் மக்கள் வாழ்கிறார்கள் என்றும் சொல்லப்பட்டது. அதற்குப் பிறகு நேரிடையாகப் பலவிடங்களைப்போய்ப் பார்க்கிறபோது 600-க்கும் மேற்பட்ட குடிசைவாழ்பகுதிகள் இருக்கின்றன என்று தெரிகிறது. ஆகவேதான் ப்ளானிங் சர்வே செல்லை ஏற்படுத்தி முதலில் இருக்கக்கூடிய குடிசை வாழ்பகுதிகள்—அங்கு வசிக்கக்கூடியவர்கள் விவரம்—ஆகியவைபற்றி எல்லாம் குறிப்பு எடுக்கிறோம். இந்த வேலை துவங்கி நான்கு மாதமாகியும் இன்னும் வேலை முடியவில்லை. கிட்டத் தட்ட 7 லட்சம் பேர்களுடைய விவரங்களைச் சேகரிக்க வேண்டியிருக்கிறது. இதற்காகவே 10 போட்டோகிராபர்களை வைத்திருக்கிறோம். ஒவ்வொரு பகுதிக்கும்போய் அந்தக் குடிசையில் இருப்பவர்களை போட்டோ எடுத்து—தங்கள் மூலமாக இந்தச் சபைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், இதுபோன்ற பாஸ் புக்கின் ஒரு பக்கத்தில் அந்த போட்டோவை ஒட்டி மறுபக்கத்தில் அவரைப்பற்றிய விவரங்களை எல்லாம் குறித்து இதன் பிரதி அலுவலகத்திலும் ஒன்று வைத்துக்கொண்டு இதை அந்தக் குடிசையில் வாழ்கிறவர்களிடமே கொடுக்கிறோம்.

முன்பெல்லாம் குடிசைப் பகுதிகளில் கட்டடம் கட்டுவது என்றால் பகுதி பகுதியாக அந்த வேலை மேற்கொள்ளப்பட்டது. இப்போதோ ஒரு பகுதியில் ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள் என்றால் அவர்களைத் தற்காலிகமாக கார்ப்பரேஷனுக்குச் சொந்தமாக அருகில் உள்ள இடத்தில் இருக்க வைத்து இந்த இடத்தில் ஆயிரம் பேர்களுக்குமான இருப்பிடத்திற்கு திட்டமிட்டுக் கட்டடம் கட்ட வகை—செய்யப்பட்டிருக்கிறது.

Thiru K. M. SUBRAMANIAM: Sir, may I know the difficulty in giving patta to those lands that have already been allotted and enjoyed by the people? What is the lacuna standing in the way? People are expecting that after the formation of the Slum Board, they would get patta for the land already allotted.

திரு. இராம. அரங்கண்ணல்: அதுபற்றிய விவரங்களை எல்லாம் அலுவலகத்தில் பரிசீலித்து வைத்துக்கொண்டு இது கொடுக்கப்படுகிறது. ஆக அவர்களை அந்த இடத்தில் இருந்து அப்புறப்படுத்துவது என்பது இல்லை. தற்காலிகமாக டெனமென்ட் குடியிருப்புப்பகுதிகளில் இருக்கவும் அனுமதிக்கப்படுகிறார்கள். அந்த இடத்திற்குப் போக வேண்டும், வரவேண்டுமே என்றாலும் கூட முன் போல 10 ரூபாய் வாடகை வாங்குவதாக இல்லை—5 ரூபாய்தான் வாடகை—அந்த ஐந்து ரூபாயையும் அவர்கள் போக்குவரத்திற்காகச் செலவிட்டுக் கொள்ளலாம் என்று செய்திருக்கிறோம்.

வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டவுடன் அந்த இடத்திற்காக வாடகை இவ்வளவு
என்பதையும் அந்தப் பால் புத்தகத்தில் குறித்தே அவர்களிடம் கொடுக்கிறோம்.
மாதாமாதம் இந்த வாரியத்தைச் சேர்ந்தவர் அந்த பில்லைக்கொண்டுவந்து
வாடகை வசூலித்துச் செல்வார்.

வீடுகள் கட்டிக்கொடுத்தாலும் அதைவிற்றுவிட்டுப்போகிறார்கள் என்று
சொன்னார். போனது எல்லாம் முன்பு இருந்தது. அதைத் தவிர்க்கத்தான்
இந்த போட்டோ போன்ற ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன.
இன்றையதினம் பல இடங்களிலும் கக்கன் காலனி, காமராஜ் நகர், அண்ணா
நகர், அன்பழகன் நகர் என்பதாக ஒவ்வொரு ஏரியாவிலும் அரசியல் தலைவர்
களின் பெயரைக்கொண்ட குடிசைப்பகுதிகள் இருக்கின்றன. இந்த இடங்களை
எல்லாம் சீர்திருத்தம் செய்து நல்லமுறையில் குடிசைவாழ் மக்களுடைய
பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்பதை மனதில் கொண்டே அரசு இத்தகைய
பணிகளை மேற்கொண்டிருக்கிறது.

இந்த மசோதாவில் இருக்கக்கூடிய மற்றொரு முக்கியமான அம்சம் இனிப்
புதிதாக யாரும் குடிசைகள் போட முடியாது. முன்பெல்லாம் கார்ப்பரேஷ
னும் புதிதாகக் குடிசைகள் வருவது தவிர்க்க முடியவில்லை. சர்க்காராலும்
தவிர்க்க முடியவில்லை. இதைக் கொஞ்சம் வலியுறுத்திச் சொல்வதற்குக்
காரணம் ஏட்டாளர்கள் மூலம் இந்தச் செய்தி பரவவேண்டும் என்று ஆசைப்
படுகிறேன். இனி புதிதாகக் குடிசைகள் தோன்றுவதை இந்த மசோதாவின்
மூலம் வாரியம் அனுமதிக்காது. அதுதான் இந்த மசோதாவின் முக்கியமான
அம்சம். இனி சென்னை நகரில் புதிதாகக் குடிசைப் பகுதிகள் தோன்ற அனும
திக்காது.

இன்னொரு சந்தேகத்தை எடுத்துச் சொன்னார்கள். தனிப்பட்ட நிலங்களைப்
பற்றிச் சொன்னார்கள். நோட்டீஸ் கொடுப்பது, அதற்குப் பிறகு ரீடெவலப்
மெண்ட் செய்யச் சொல்வதா என்று கேட்டார்கள். இது மிகச் சூசகமாகக்
கவனிக்கப்படும். இது நிர்வாகத்திற்குட்பட்டது. இதிலே பின்னாலே ஒரு
பிரச்சினை வருகிறது, மார்க்கெட் விலையென்ற பிரச்சினை வருகிறது. ஒன்றை
மட்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பகுதிகளை அவர்களே
கட்டிக்கொடுக்க முன்வந்தால், நாம் ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக
இருக்கிறோம். ஆனால் ஏழை எளிய மக்களின் தலையில் சுமத்திப் பிறகு
அவற்றைப் பங்களாக்களாக ஆக்குவதற்கு யாராவது முன்வருவார்கள்
என்றால், அதற்கு நிச்சயமாக இந்த வாரியமும் அனுமதிக்காது, நம்முடைய
அரசாங்கமும் அனுமதிக்காது. இதிலே சிலம்ஸ் கிளியரான்ஸ் அன்ட்
டெவலப்மெண்ட் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இம்ப்ரூவ்மெண்ட்
என்பதற்கும், டெவலப்மெண்ட் என்பதற்கும் இருக்கிற வித்தியாசத்தை அவர்
கள் அறிவார்கள் என்று நம்புகிறேன்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் தொகுதியிலே யானைக் கவுனிக்குப் பின்னாலே
இருக்கிற கல்யாணிபுரத்தைப்பற்றிச் சொன்னார்கள். அங்கே 342 குடியிருப்
புக்கள் கட்டலாமென்றும் அதற்காக 18½ லட்சம் ரூபாயிலே கட்டிக்கொடுக்க
லாம் என்றும் சொல்லப்பட்டு வேலைகள் துவங்கப்பட்டு இருக்கின்றன. அங்கே
பக்கிங்ஹாம் கால்வாய் இருப்பதால் அதற்குப் பக்கத்தில் ஒரு பெரிய பள்ளம்
இருக்கிறது. அந்தப் பள்ளத்தைத் தூர்ப்பதற்கு கார்ப்பரேஷன் முயற்சிக்
கிறது. திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் வாயிலாக நான் கேட்டுக்

கொள்கிறேன், மாநகராட்சி உதவி பரிபூரணமாக இருந்தாலொழிய குடிசை
வாரியத்தின் வேலைகள் சிறப்பாக நடைபெறாது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். அதுவும் பார்ப்போம், இல்லாவிட்டால் நாமே செய்வோம்.

சுகாதார வசதிகள் பற்றியெல்லாம் சொன்னார்கள். ஆங்காங்கு டாக்டர்கள்
போகவேண்டுமென்றெல்லாம் சொன்னார்கள். இரண்டாயிரம் பேர்கள் இருந்
தால் அங்கே ஒரு மருத்துவமனை, மாடுகள் அதிகமாக இருக்கும் இடங்களில்
மாட்டுக் கொட்டகை, கிணறுகள் தோண்டுவது, சிறிய குழந்தைகளுக்கு விளை
யாடுமிடம், கம்யூனிட்டி ஹால் கட்ட வேண்டுமென்ற முறையிலே எஞ்சினியர்
கள் திட்டமிட்டு வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அவசரம்
அவசரமாகச் செய்யக்கூடாது என்று சொன்னார்கள். நிச்சயமாக நான்
அவசரத்திற்கு ஆட்படமாட்டேன். ஒரு வீடு கட்டினால் அது ஆண்டு
ஆண்டுக்கு இருக்கக் கூடிய வீடு, எனவே அவசரம் இருக்காது என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

தீப்பிடிக்காத வீடுகளைப்பற்றிச் சொன்னார்கள். தீப்பிடிக்காத வீடுகளை
பத்துக்கு எட்டு என்ற இடத்திலே கட்டவேண்டிய நிலைமை ஏற்பட்டதால்தான்
அவதிப்பட்டவர்கள். ஒரு வீடு கட்டுவதற்கு கிட்டத்தட்ட ஒரு ஆண்டுக்
காலம் ஆகும். ஒரு மாத காலத்தில் கட்டவேண்டுமென்று சொல்லப்பட்டதால்
தீப்பிடிக்காத வீடுகள் அந்த முறையிலே கட்டப்பட்டன. அதிலும்கூட பேசிக்
அமெனிட்டிஸ் அவர்களுக்கெல்லாம் செய்துகொடுக்கப்பட்டு இருக்
கின்றன.

என்னுடைய பழைய தொகுதியில் உள்ள ஆண்டி மானியம் பற்றிச் சொன்
னார்கள். அங்கேயும் ரோடுகளைப் பழுது பார்ப்பதற்காக 40 ஆயிரம், 50 ஆயிரம்
ரூபாயிலே வேலைகள் செய்யப்பட்டன. அங்கேயும் கக்கூஸ் வசதிகள் மாடிக்கும்
கூட கக்கூஸ் என்ற முறையிலே கீழே ஒரு தளம், மேலே தளம் போட்டு கட்டிக்
கொண்டிருக்கிறோம்.

இண்டஸ்ட்ரியல் ஹவுசிங்பற்றிச் சொன்னார்கள். அது மிக மிக அவசியம்.
காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலேயே தொழிலதிபர்கள் மூலம் அதைச் செய்யத்
தவறிவிட்டார்கள். சென்னையில் உள்ள தொழிலாளர்களுக்கு ஆங்காங்குள்ள
தொழிலதிபர்கள் கட்டிக்கொடுக்கவேண்டுமென்று அப்பொழுதே வலியுறுத்தி
இருப்பார்களானால், சென்னை மாநகரத்தில் இவ்வளவு குடிசைகள் ஏற்படு
வதற்கு வாய்ப்பு இருந்திருக்காது.

இந்தத் திட்டம் சென்னை மாநகரத்திற்குத்தானா? எங்களுக்குக் கிடை
யாதா? மற்ற நகரங்களுக்குக் கிடையாதா? கிராமங்களுக்குக் கிடையாதா?
என பல உறுப்பினர்கள் என்னிடம் கேட்டார்கள். இந்த மசோதாவின் நோக்
கமே எல்லா இடங்களுக்கும் செய்யவேண்டும் என்பதுதான். ரூரல் ஹவுசிங்
ஸ்கீம் இருக்கிறது. பல பஞ்சாயத்து யூனியன்கள் அவற்றைச் செய்கிறார்கள்.
12,500 பஞ்சாயத்துப் போர்டுகள் இருக்கின்றன; 374 பஞ்சாத்து யூனியன்கள்
இருக்கின்றன; இந்த நாட்டிலே இருக்கின்ற குடிசைப் பகுதிகள் மாற்றப்பட்டு
வெளி நாட்டிலே எல்லாம் பார்ப்பதுபோல—ஆளுக்கு ஒரு வீடு என்ற தத்து
வத்தை முன்பு ஒருவர் சொன்னார்—ஆளுக்கு ஒரு வீடு என்ற அந்தத்
தத்துவத்தைச் செயல்படுத்துகிறோம். லீஸ்-கம்-சேல் என்ற திட்டத்திலே 244
பிளாட்கள் இருக்கின்றன. ஓ.டி.பி.எஸ்-இல் 7 ஆயிரம் மனைக்கட்டுகள்
இருக்கின்றன.

திரு. கே. எம். சுப்பிரமணியம் குறிப்பிட்டதுபோல் ஒவ்வொருவருக்கும் பட்டா செய்யவேண்டுமென்றுதான் ஆசைப்படுகிறோம். ஆனால் பட்டா செய்து கொடுப்பது என்பது சாத்தியமல்ல. ஓ. டி. பி. எஸ்.-லும், லீஸ்-கம்-சேல் ஸ்கீமிலும் அந்தப் பிரச்சினைகள் எல்லாம் வருகின்றன. அவையெல்லாம் நம்முடைய ஆழ்ந்த பரிசீலனையில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நல்ல முடிவு ஏற்படும் என்று நம்புகிறேன். அப்பாவு நகரத்தைப் பற்றி. . .

THIRU K. M. SUBRAMANIAM : Sir, on a point of information. Is a copy of the photo given to the slum-dweller or is it only maintained by the Department?

திரு. இராம. அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, அந்த விவரத்தையும் சொல்லிவிடுகிறேன். மூன்று மாதங்களுக்கு முன்பாக ஓ.டி.பி.எஸ். லீஸ்-கம்-சேல் பிளாட்டுகளில் இருப்பவர்களுக்கு ஒரு வேண்டுகோளை நான் அனுப்பினேன். நீங்களாக கூட்டுறவு சொஸைடி மூலமாக கட்டிக்கொள்கிறீர்களா அல்லது நான் கட்டித்தரட்டுமா என்று கேட்டு வேண்டுகோள் அனுப்பினேன். அங்கேயிருந்து எல்லாம் பதில் வந்திருக்கிறது. அவற்றைக் கட்டித் தருவதற்கான திட்டங்களுக்குப் புதுமாதிரியாகச் செய்யவேண்டுமென்று ஆசைப்படுகிறோம். பட்டாக்கள் ஏற்கனவே அரிசன நலத் துறையினாலும் மற்ற வேறு சார்பிலும் கொடுக்கப்பட்டு இருப்பதை நாம் மாற்ற முடியாது. அவற்றிற்கு ஸ்கீம் போட்டு கூட்டுறவு மூலமாக வீடுகள் கட்டுவதற்கு வேலைகள் நடந்து வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று முதலமைச்சர் அவர்களுடைய ஆழ்ந்த பரிசீலனையில் இருக்கிறது. கட்டிக்கொடுக்கப்படுகின்ற வீடுகளில் வாடகைக்குத்தான் இருக்கலாமா, சொந்தமாக இருக்கலாமா ?

திரு. கே. எம். சுப்பிரமணியம், திருமதி அனந்தநாயகி அவர்கள் எல்லாம் சொன்னார்கள். தமிழ்நாட்டிலே இருக்கிற நமக்கெல்லாம் ஆசையிருக்கிறது, அரைப் பவுன் மோதிரமாவது இருக்கவேண்டும், சிறிய வீடாவது இருக்கவேண்டுமென்றெல்லாம் ஆசைப்படுகிறோம். குடிசைகளை மாற்றுகின்ற வேலைக்காக மத்திய அரசாங்கத்திலிருந்து மானியமும் பெறுகிறோம், கடனாகவும் பெறுகிறோம். ஆகவே, அவர்களுடைய உத்தரவுக்குக் கட்டுப்பட்டு சில காரியங்களைச் செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம். 6 ஆயிரம் ரூபாய் செலவு செய்து வீடுகள் கட்டிக்கொடுத்து அவர்களிடமிருந்து வாடகையாக 30 ரூபாய் வசூல் செய்யவேண்டுமென்று இருந்தாலும் உண்மையிலேயே 10 ரூபாய்தான் வசூல் செய்கிறோம். வசூல் கூட சரியாக நடைபெறுவதில்லை. மீதமுள்ள 20 ரூபாயும் ஒவ்வொருவருக்காகவும் அரசாங்கத்தின் கஜானாவிலிருந்து மாதா மாதம் கொடுத்துக் கொண்டேயிருக்கிறார்கள். அந்த நிலைமையிலே 20 ஆயிரம், 30 ஆயிரம் என்று கட்டிக்கொண்டே போனால் ஒவ்வொரு வீட்டிற்கும் 20 ரூபாய் என்ற முறையிலே கொடுக்க முடியாத நிலைமையெல்லாம்கூட வரும். டெனமெண்ட்ஸ் கட்டுகின்றபொழுது வாங்கிக்கொள்வதற்காக விலைக்குக் கேட்டால் கொடுத்து விடலாமா? எல்.ஐ.சி. போன்று மாதத்தவணைபோல் பணத்தை வாங்கிக் கொண்டு கொடுத்துவிடலாமா என்பதையெல்லாம் பரிசீலனையில் இருக்கின்றன.

எல்.ஐ.சி. மூலம் பணக்காரர்கள், வசதியுள்ளவர்கள் கட்டிக்கொள்வதற்கு வசதியிருக்கிறது. 50 ஆயிரத்திற்கு வீடு கட்டிக்கொள்ள வேண்டுமென்றால் 60 ஆயிரம், 70 ஆயிரம் ரூபாய்க்கு பாலிசி எடுத்துக்கொண்டால் அவர்களே 40 ஆயிரம் என்ற அளவுக்கு ரூபாயைக் கொடுத்து உதவி செய்கிறார்கள். வசதி படைத்தவர்களுக்கு, படித்தவர்களுக்கு இப்படிக் காட்டப்படுகின்ற சலுகைகள் குடிசைவாழ் மக்களுக்கும் கிடைக்கவேண்டுமென்று இந்த அரசாங்கம் கருதித்தான் குடிசை வாரியம் அமைத்திருக்கிறது. அந்தக் குடிசை வாரியம் இன்ஷுரன்ஸ் ஏஜண்ட்டாக இருந்து குடிசைகளிலே வாழ்கின்ற மக்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் அளவுக்கு இன்ஷுரன்ஸ் செய்து விட்டால் அவர்கள் பாலிசி கட்டிக்கொண்டு வருகிறார்கள். 15, 20 ஆண்டுகளுக்குள்ளே அவர்களுக்கு வீடுகள் சொந்தமாகிவிடும். அதுவும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அப்பாவு நகரிலே கிரவுண்ட் கொடுத்ததைப்பற்றிச் சொன்னார்கள். அப்பாவு முதலியார் என்று ஒருவர். அந்த அப்பாவு முதலியாருக்குக் கிட்டத்தட்ட 100 கிரவுண்ட் சொந்தமாக இருந்தது. அதை வீட்டுவசதி வாரியத்திற்காக நாம் விலைக்குக் கேட்டோம். அந்த நேரத்தில் 100 கிரவுண்ட் வைத்திருப்பவர்கள், எங்களுக்கு, எங்கள் குழந்தைகளுக்கு 5 கிரவுண்டாவது கொடுக்கக்கூடாதா, 10 கிரவுண்டாவது கொடுக்கக்கூடாதா என்று கேட்பதிலே நியாயமிருக்கிறது. அந்த வகையிலே 5 கிரவுண்டோ, 6 கிரவுண்டோ அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலத்தை வேறு ஏதாவது செய்வார்கள் என்று தெரிந்திருக்கிறது. அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தகவல் தெரிவித்தால், தவறுகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள முடியும். இன்னும் அப்பாவு நகரிலே பல பிரச்சினைகள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் விசாரித்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னார்கள், தண்ணீர் வசதியைப்பற்றிச் சொன்னார்கள். தண்ணீர் வசதி மட்டுமல்ல, முன்பெல்லாம் வாடகை வாங்குவோம், ஆனால் விளக்குகள் எரியாது. விளக்குகள் எரியவும், தண்ணீர் வசதிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கட்டிடங்கள் கட்டுகிறீர்கள், ஆனால் மெயின்டனன்ஸ் செய்வது எப்படி என்று டாக்டர் ஹாண்டே அவர்களும் கேட்டார்கள், மற்றவர்களும் கேட்டார்கள். இரஷ்யாவிலே பல அடுக்கு மாளிகைகள் கட்டப்படுகின்றன. அவைகளைப் பராமரிக்க என்று ஒரு அமைப்பை நிறுவி, அங்கிருப்பவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு ஏற்படுத்தப்பட்டு, அவர்களே திங்கட்கிழமை இவர், செவ்வாய்க்கிழமை இவர் என்று அவர்களே பார்த்துக்கொள்கிறார்கள். அப்படி அவர்களே பார்த்துக் கொள்ளும்படியான சூழ்நிலை நம்முடைய நாட்டிலே வரவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலை வரும் வரையில் 5,000, பத்தாயிரம் போட்டுக்கட்டப்படும் அந்தக் கட்டிடங்களுக்கு கேர்-டேக்கர் என்று போட்டு, அவர்கள் தினசரி அங்கு கவனித்துக்கொண்டிருப்பார்கள். கேர்டேக்கர் மட்டும் அல்ல, சுகாதாரத்தைக் கவனித்துக்கொள்ள, மின்சார வசதி, தண்ணீர் வசதியைப் பார்த்துக்கொள்ள சில ஆட்களை ஆங்காங்கு போட்டுவிடலாம் என்ற திட்டமும் இருக்கிறது.

நமது மரியாதைக்குரிய திரு. மணலி கந்தசாமி அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். எவிக்ட் செய்து விடுகின்றீர்கள் என்று சொன்னார்கள். குடிசை வாசியை அந்த இடத்திலேயிருந்து அப்புறப்படுத்தி விடுகின்றீர்கள்,

[திரு. இராம அரங்கண்ணல்] [1971 ஏப்ரல் 3

அப்படி அப்புறப்படுத்தப்படுபவர்களுக்கு அவர்கள் தங்குவதற்கு இடம் கொடுக்கலாகாதா என்று கேட்டார்கள். அப்புறப்படுத்துவது என்பதல்ல, அவர்களாகவே விரும்பி, அவர்களுக்காக விடு கட்டப் போகிறோம், கட்டிய பிறகு அதில் குடியிருக்கலாம் என்று சொல்லி, தற்காலிகமாக அவர்கள் 6, 7 மாதங்களுக்கு டிரான்சிட் டெனமெண்ட்ஸ்ஸாக வேறு இடத்தில் இருந்து கொண்டு, பெரிய கட்டிடம் கட்டிய பிறகு குடிவைக்கலாம் என்ற அரசின் நல்ல நோக்கமே தவிர, வேறல்ல. ஏழை எளிய மக்கள் வாழ வேண்டுமென்று, அவர்களுக்கு வசதி செய்ய வேண்டுமென்பதற்காக இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறதே தவிர, குடிசைகள் அகற்றக் கொண்டுவரப்படவில்லை.

நான் நீண்ட நேரம் எடுத்துக்கொண்டதாகக் கருதுகிறேன். எனக்குப் பிறகு மாண்புமிகு சட்டத்துறை அமைச்சரவர்கள் பதில் அளிக்க வேண்டியிருக்கிறது. என்னுடைய ஆசையெல்லாம் இந்த மசோதா காம்ப்ரஹென்சிவ் பில்லாக வர வேண்டுமென்று திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள். நான் ஒன்றைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய அரசினர் மிகமிக அழகாக, மிகமிகக் கெட்டிக்காரத்தனமாக, மிக மிக நல்லதொரு மசோதாவை வழங்கியிருக்கிறார்கள் என்று இந்தப் பொறுப்பை ஏற்றிருப்பவன் என்ற முறையிலே நான் பெருமைப்படுகிறேன். இதிலே சில நிர்வாக குறைபாடுகள் வரலாம். அவைகளெல்லாம் எடுத்துக் காட்டப்பட்டால் எல்லா தன்மைகளையும் செய்து விடமுடியும்.

நிலத்தை விலை பேசுவதைப்பற்றி எடுத்துக்கொண்டால், கோயில் நிலம் என்று இருக்கிறது, கார்ப்பொரேஷன் நிலம் என்றிருக்கிறது, சர்க்கார் நிலமிருக்கிறது. அடுத்தபடியாக தனியார் நிலம் வருகிறது. (குறுக்கீடு) வக்ஃப் போர்ட் நிலம் இருக்கிறது என்று சொல்கிறார்கள், இருக்கிறது. இப்படியிருப்பவைகளையெல்லாம் நாம் ஆசையாக, நல்ல வார்த்தைகளால், அன்பாக அணுகுவதால் சில இடங்களைப் பெற்றுவிட முடியும். சிலயிடங்களை அன்பாகப் பேசியும் பெற முடியாமல் போகக்கூடும். அப்படிப் பெற முடியாத இடங்களுக்காகத்தான் இந்தச் சட்டம் இருக்கிறது. இந்தச் சட்டம் இல்லாவிட்டாலும், தனியாகப் பேசக்கூடியவர்கள் சிலர் சொல்கிறார்கள், பத்து கிரவுண்ட் இருக்கிறது, நான் 8 கிரவுண்ட் இனமாகக் கொடுத்துவிடுகிறேன், எனக்கு 2 கிரவுண்ட் கொடுத்துவிடுங்கள் என்று சொல்கிறார்கள். அன்பாகப் பேசி இந்த நிலங்களைப் பெற முடியுமென்ற எண்ணமிருந்தாலும், நிலச் சொந்தக்காரர்களுக்கு நியாயம் வழங்கவேண்டுமென்று, அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்படாத காரணத்தால் இந்த செக்ஷன் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஒருவேளை திருத்தப்பட்ட பிறகு என்னவாகும் என்று பார்த்துக்கொள்ளலாம்.

ஆனால் கோர்ட்டுக்குப்போய் எவ்வளவு காரியங்கள் கெட்டன என்று திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களுக்குத் தெரியும். ஆனால் இந்தச் சட்டத்திற்கு கோர்ட்டில் வாதாட குந்தகமாக இருக்க முடியாது. ஒரு உறுப்பினர் நோட்டீஸ் கொடுப்பார்கள், பதிலை எதிர்பார்த்து அதற்குப் பிறகு கோர்ட்டுக்குப் போகலாம் என்று சொன்னார்கள். நான் நிச்சயமாகச் சொல்கிறேன், குடிசை வாரியம் எந்தக் காரியத்தை எடுத்தாலும், சிக்கனமாக சீக்கிரமாக நடக்கும். குடிசை வாரியத்தின் குறிக்கோளே சிக்கனம், சீக்கிரம் என்பது. சிக்கனம், சீக்கிரம் என்ற வார்த்தைகள் குடிசை வாரியத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே, சீக்கிரம் நடக்கும்.

1971 ஏப்ரல் 3] [திரு. இராம. அரங்கண்ணல்]

இந்த மசோதாவின் உள்ளே புகுந்து எப்படியெப்படியெல்லாம் அமைக்கப்பட்டிருக்கிறது என்று எடுத்துச் சொல்லிக்கொண்டு போவேனேயானால் நேரம் அதிகமாகிவிடும் என்று கருதுகிறேன். இந்த மசோதாவைப் பாராட்டிப் பேசிய நண்பர்களுக்கெல்லாம் என்னுடைய இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாகத் தெரிவித்துக்கொள்கிறேன், இதில் கட்சியைப் பாகுபடுத்தி யாரும் பார்க்க வேண்டாம். என்னோடு பழகிய நண்பர்களுக்குத் தெரியும், பொதுக்காரியங்களைச் செய்ய வேண்டுமென்றால், எங்களையெல்லாம் ஆளாக்கி விட்டுச் சென்ற அண்ணன் அவர்கள் நல்ல காரியங்களைச் செய்வதற்கு வழி காட்டிவிட்டுச் சென்றார்கள். அந்த வழியிலேயிருந்து கொஞ்சம்கூட பிறழ்ந்து செல்லவில்லை. நான் மட்டுமல்ல, இவ்வளவு பெருமிதமான வெற்றியை முன்னேற்றக் கழகம் பெற்ற பிறகும் சபையிலே எந்த அளவிற்கு பொறுப்போடும், கண்ணியத்தோடும் நடந்துவருகிறோம் என்பதைப் பார்த்தால் எல்லோரும் புரிந்துகொள்ள முடியும்.

ஏதாவது பிரச்சினைகள் இருந்தால் பத்திரிகைகளுக்குச் செல்லவேண்டாம். பத்திரிகைக்காரர்களின் ஒத்துழைப்பு இந்தப் பிரச்சினைக்கு அதிகத் தேவை, மிகமிகத் தேவை. அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெரிதும் எதிர் பார்க்கிறேன். ஆனால் லெட்டர்ஸ் டு தி எடிட்டர் என்பதில் எழுதுகிறார்கள். உதாரணமாக, அயோத்தியா குப்பம் அருமையான கடலோரப் பகுதி. அதைச் சீர் செய்ய கிட்டத்தட்ட 68 லட்சம் ரூபாய்க்கு ஸ்கீம் போட்டு செய்து கொண்டிருக்கிறது. அதைக் கட்டும் நேரத்தில் அங்கேயிருக்கும் மீனவர்களை எங்கே கொண்டு போய் அமர்த்துவது? கோட்டூரிலோ, வியாசர்பாடியிலேயோ கொண்டு போய் வைக்க முடியுமா? அதற்காக அவர்களைத் தற்காலிகக் குடியிருப்புகளில் குடியமர்த்த வேண்டிய நிலை ஏற்படுகிறது. போர்டுகூட போடப்பட்டிருக்கிறது. அவர்கள் தற்காலிகக் குடியிருப்பில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். வீடுகள் கட்டி முடிந்த பிறகு அவர்கள் உள்ளே போய்விடுவார்கள். அவர்கள் உள்ளே போன பிறகு இதை அழகான நந்தவனமாக்கும் திட்டத்தையும் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பத்திரிகைகளிலே, இப்படியெல்லாம் இருக்கிறது என்று சொல்கிறார்கள், லெட்டர்ஸ் டு தி எடிட்டர் என்று கடிதம் எழுதுகிறார்கள், அவைகளைப் போடுகிறார்கள். ஏதாவது தவறான பிரச்சினைகள் இருந்தால், எனக்கோ அல்லது மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கோ தெரிவித்து அதிலே பரிகாரம் காணலாம். அதையெல்லாம் பொது மக்கள் மத்தியிலே கொண்டு வைத்துவிட வேண்டாம் என்று பத்திரிகையாளர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இது சமுதாய நீதி கிடைக்கச் செய்யும் பணி. ஏழைகளின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம் என்பது குடிசை வாரியத்தின் குறிக்கோள். சென்னை மாநகரத்திலே சீரழிந்து, மிகக் கேவலமாகக் கஷ்டப்பட்டு, வேதனைப்பட்டுக்கொண்டிருக்கும் குடிசைவாழ் மக்கள் அத்தனை பேருக்கும் நல்ல நியாயம் செய்வது மட்டுமல்ல, சென்னை மாநகரம் மட்டுமல்ல, மற்ற இடங்களும் பெற வேண்டும் என்று, முனிசிபாலிட்டிகளில் உள்ளவர் பெற வேண்டுமென்று, கிராமங்களிலே இருப்பவர்கள் பெற வேண்டுமென்ற எண்ணத்தில், அவர்களுக்கு நல்ல வீடுகள், சுகாதாரமான வீடுகள் எல்லாம் கிடைக்க நாம் எல்லோரும் பாடுபடுவோம் என்று சொல்லிக்கொள்கிறேன். முதல் மசோதாவாக தமிழ்நாடு அரசின், முன்னேற்றக் கழக அரசின், வேளாண்மைத்துறை சம்பந்தமான, உணவுப் பிரச்னை சம்பந்தமான மசோதா.

அடுத்த சட்டம், குடியிருப்பு சம்பந்தமானது. இதிலிருந்தே முன்னேற்றக் கழக அரசு உணவுப் பிரச்னையைத் தீர்ப்பதிலேயும், அடுத்தபடியாக எல்லோருக்கும் வீட்டு வசதிப் பிரச்னையைத் தீர்ப்பதிலேயும் எவ்வளவு அக்கறை காட்டுகிறது என்பதை எல்லோரும் புரிந்துகொள்ள முடியும்.

கல்கத்தா நகரத்திற்கு 8 கோடி ரூபாய் மத்திய அரசு வழங்கியிருக்கிறது. ஆனால் வங்க அரசு இரண்டு கோடி ரூபாய்தான் கொடுத்திருக்கிறது. அதே போல டில்லிக்கும், பம்பாய்க்கும் நான்காவதாகத்தான் நமக்கு, சென்னைக்குக் கொடுத்து இருக்கிறது. குடியரசுத் தலைவரின் உரையில் முதன் முதலாகத் தமிழ் நாட்டில்தான் குடிசை மாற்று வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருந்தார்கள். நிச்சயமாக பிற மாநிலங்களிலே வாழ்கின்ற குடிசை மக்களின் பிரச்னையைத் தீர்க்க இந்திரா காந்தி அவர்களின் அரசு வழி வகை காண்பதற்கு இதுதான் முன்னோடியாக இருந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்த வகையிலே அவர்கள் தீவிரமாக இருப்பதாகத் தெரிகிறது. எப்படி அதிகமான நிதி உதவியை நாம் பெற்று, நாம் உருவாக்கிக்கொண்டுள்ள இந்தத் திட்டங்களை வெற்றிகரமாக முடிப்பது என்பதிலே ஒன்றுபட்டு இருக்க வேண்டும் என்று எல்லோரையும் கேட்டுக்கொள்கிறேன் என்று சொல்லி இந்த மசோதாவினை எந்த அளவிற்கு அன்போடு பாராட்டி வரவேற்கிறீர்களோ, அந்த அளவிற்கு இது கட்டப்படுகிற நேரத்திலே எங்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே இருக்கிற எல்லா உறுப்பினர்களும், வெளியே இருக்கிற கார்ப்பொரேஷன் கௌன்சிலர்களும், பத்திரிகைக்காரர்களும் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிசைவாழ் மக்களைப் பொறுத்தவரையில் முன்பு இருந்த முறைக்கும், நாம் உருவாக்கி இருக்கிற முறைக்கும் பெரும் வேறுபாடு உண்டு. குடிசைவாழ் பகுதிகளுக்குச் சென்று எல்லோரையும் கூட்டிவைத்துக் கொண்டு காங்கிரஸ் கட்சிக்காரர்களானாலும், கழகத்துக்காரர்களானாலும், எந்தக் கட்சிக்காரர்களானாலும் எல்லோரையும் கூட்டி வைத்துக்கொண்டு அவர்களுக்கு எது வேண்டுமென்று கேட்டு, அவர்கள் சொல்கிற கருத்துக்களையும் ஆலோசித்து அதற்குப் பிறகு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

காரியம் ஆற்றுகிற நேரத்திலே எல்லோரும் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டுமென்று இந்த மன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். இத்தகைய புதுமையான மசோதா, என்னுடைய சொந்த முறையிலேயே என்னுடைய ஆசைக் கனவுகள் நிறைவேறுகிறது. அந்தக் கனவை நிறைவேற்றுகிற பெரும் பொறுப்பு வழங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு திரு. ஹாண்டே அவர்கள் அடிக்கடி சொல்வது உண்டு; இந்தப் பிரச்னையில் யார் ஈடுபட்டாலும் நல்ல பெயர் வாங்குவது கிடையாது. பல கஷ்டங்கள்தான் வரும். ஆனால் நல்ல பெயரோ, கெட்ட பெயரோ, குடிசைகள் நிறைந்த நகரம் என்ற பெருமையினைப் பெற்றுள்ள, இந்த நகரத்தை 5 ஆண்டுகளில் முனைந்து நின்று செயல்படுவோம், குடிசைகளை மாற்றி நல்ல வாழும் பகுதிகளாக மாற்றுவோம் என்று கூறி முடிக்கிறேன். வணக்கம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, அரசாங்கம் இந்தக் குடிசை மாற்று வாரியத்தை ஏற்படுத்துவதற்காகக் கொண்டு வந்திருக்கிற இந்த மசோதாவை நான் முழு மனதோடு வரவேற்கிறேன். வெகு நீண்ட காலமாக

கேட்பாரற்று, ஆதரவற்ற நிலையிலே மிருகங்களைப்போல், மிருகங்களை விட
இன்னும் கேவலமான நிலையிலே வாழ்ந்து கொண்டிருந்த மக்களின் நன்மைக்
காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மிருகத்திற்காவது வளர்க்கிறபோது
என்னென்ன வசதி செய்யப்பட வேண்டும் என்று பார்த்துச் செய்வார்கள்.
மாட்டிற்குக் கொட்டில் கட்டுவார்கள். அதிலே பக்குவமாக வைத்து, ஆகாரம்
கொடுத்து வருவார்கள். ஆனால் சமுதாயத்தில் பின் தங்கிய நிலையில் உள்ள
இவர்களுக்கு நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்குத் தங்களுடைய
பெரும் உழைப்பைக் கொடுத்துக் கொண்டிருக்கிற இந்த மக்களுக்கு எந்த
விதமான வசதியும் அற்ற நிலையிலே மிருகங்களைப் போல, மிருகங்களை விடக்
கேவலமான நிலையிலேயே கூட சில சமயங்களில், வாழ்ந்து கொண்டு இருப்
பதைப் பார்க்கிறோம். அவர்களுக்கு ஒரு நல்ல இருப்பிடம் கொடுப்பதற்கு
எடுத்துக் கொண்ட இந்த முயற்சியை மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன்.

ஆனால் இது நகரங்களில் மட்டும் வாழ்கிற மக்களுக்குச் செய்வதோடு நின்று
விடாமல் கிராமப் புறங்களில் இருக்கும் மக்களுக்கும் செய்ய வேண்டுமென்று
இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த மசோதா நிறை
வேற்றப்பட்டவுடன் கிராமப்புறங்களுக்கும் கொண்டு வரப்பட்டு விடுமென்று
நினைத்து விடக் கூடாது. கொஞ்ச காலமாகலாம். காலதாமதமாகலாம்.
நகர்புறங்களில் இருக்கிற மக்கள் மிக மோசமான நிலையில் இருக்கிறார்கள்.
கிராமங்களில் தரிசு நிலமிருக்கலாம். நகர்ப் புறங்களில் அதிகச் சிரமம் அனுப
விக்கிற மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஆரம்ப காலத்திலே அதிகமாகக்
காரியங்கள் செய்தாலும், கிராமப் புறங்களுக்கு இது படிப்படியாகக் குறுகிய
காலத்திலே, 2, 3 ஆண்டுகளிலே துவக்கி, கிராமப்புறங்களுக்கும் விஸ்தரிக்கப்
பட வேண்டும். அங்கு குடிசைகளுக்கு இடமில்லாமல் தவித்துக் கொண்டிருக்
கிற மக்களுக்கும் வாழ்வு அளிக்கின்ற முறையிலே அரசாங்கம் இதில் கவனம்
செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நகரப் புறத்திலே
இப்போது குடிசை மாற்று வாரியத்தின் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள்,
ஒரு டெனமெண்ட்டுக்கு, ஒரு நபருக்கு ஆறாயிரம் ரூபாய் செலவாகும் என்று.
கிராமப்புறங்களில் ஒரு டெனமெண்ட் கட்ட வேண்டுமென்றால், இவ்வளவு
தொகை செலவு செய்ய வேண்டிய அவசியம் இருக்காது. இதற்காக நான் ஒரு
திட்டம் கூட வைத்திருக்கிறேன். குடிசை வாழ் மக்களுக்கு நிலம் சொந்தத்தில்
இருந்தால், அவர்களுக்கு சீக்கிரமாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும்.
நிலமில்லாத இடங்களில் நிலம் ஆர்ஜிதம் செய்து வீடு கட்டிக் கொடுக்கலாம்.
சொந்தத்தில் நிலம் இருக்கிறவர்களுக்கு 1,500 ரூபாய் கொடுத்தால் அவர்களே
சொந்தத்தில் வீடு கட்டிக் கொள்ளும்படி செய்யலாம். மனைக்கட்டு இல்லாதவர்
களுக்கு 150 சதுர அடி விஸ்தீர்ணத்தில் ஒரு மனைக்கட்டு குறைந்த பட்சம்
அளித்தால் போதுமானது என்று நினைக்கிறேன். இம்மாதிரி நடவடிக்கையை
கிராமப்புறங்களில் நாம் எடுத்துக் கொண்டால், நகர்புறத்தில் ஒரு நபருக்கு
எவ்வளவு செலவு செய்கிறோமோ, அதை கிராமப்புறத்தில் நான்கு பேருக்குக்
கொடுக்க முடியும். அந்த முறையிலே கிராமப்புறங்களில் வீடுகளைக் கட்டிக்
கர முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக கீழத் தஞ்சையில் அங்கு வாழக்கூடிய மக்களுக்கு நிலம் இல்லாத
நிலைமை இருந்து வருகிறது. ஹரிஜன மக்கள், கூலி வேலை செய்யக்கூடிய
மக்கள் அவல நிலையில் இருந்து வருகிறார்கள். மோசமான நிலையில் இருந்து
வருகிறார்கள். 5, 10 சதுர அடி நிலம் கூட குடி இருப்பதற்காக இல்லாத

நிலையில் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். வயல் வரப்புகளுக்கு இடையே 5 அடி நிலத்தில் குடிசை போட்டுக் கொண்டு கொசுத் தொல்லைகளுக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். வசதியற்ற நிலையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் குடிசை மாற்று வாரியம் வீடு கட்டிக் கொடுக்கவில்லை. இவர்களுக்கெல்லாம் குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் மனைக்கட்டு வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். அரசாங்கம் முடிந்த அளவிற்கு பல ஆண்டுகளாக ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டு கொடுத்து இருந்தாலும் பல இடங்களிலே மனைக்கட்டு கொடுக்கப்படவில்லை. இந்த வேகத்தில் போனால் அவர்களுக்கெல்லாம் மனைக்கட்டு கொடுப்பதற்கு இன்னும் குறைந்த பட்சம் நூறு ஆண்டுகள் ஆகும்.

ஹரிஜனங்களுக்கு அந்த இலாகா மூலம் கொடுத்து வந்தாலும், ஹரிஜனங்கள் அல்லாத கூலி வேலை செய்து வாழ்கிறவர்களுக்கு மனைக்கட்டு கிடைக்கச் செய்வது மிக முக்கியமாகும். மனைக்கட்டு இல்லாதவர்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் தகுந்த தகுதியான இடங்களை அளிக்க முயற்சிக்க வேண்டும். இது மூன்று, நான்கு ஆண்டுகளில் செய்யப்பட வேண்டும். எல்லோருக்கும் 5 ஆண்டு காலத்தில் வீடு கட்டிக் கொடுப்பது என்பது இயலாத காரியமாகும். அதற்குத் திட்டம் போட்டு, திட்டப்படி காரியமாற்ற வேண்டும். கீழத் தஞ்சையில் மனைக்கட்டு இல்லாதவர்களுக்கு முதலில் மனைக்கட்டு வழங்குவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். ஹரிஜனங்கள் மோசமான நிலையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மனைக்கட்டு கிடைப்பதற்கும், வீடுகள் கட்டிக் கொள்வதற்கும் அத்தியாவசியமான காரியங்களைச் செய்ய வேண்டும். நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு நிச்சயம் மனைக்கட்டு வழங்கித்தீரவேண்டும் என்ற உறுதியை அளித்தார்கள். இதை நாம் பரிசீலனை செய்கிறபோது சுலபமான முறையிலே கொடுத்து விடச் செய்து அவர்களுக்குக் கடன் கொடுத்து அவர்களே வீட்டைக் கட்டிக் கொள்வதற்கு வகை செய்ய வேண்டும். முன்னாலே மத்திய சர்க்காரிடமிருந்து மானியம் வாங்கி ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக் கொள்ளக் கொடுத்து வந்தார்கள். இந்த மூன்று ஆண்டுகளாக அந்த மானியம் வருவதில்லை. அந்த மானியத்தை மத்திய சர்க்காரிடத்திலே பெற்று ஹரிஜனங்களுக்குக் கிடைக்க முயற்சி செய்ய வேண்டும். மத்திய சர்க்காரிடமிருந்து இதற்கு அதிகப்படியான உதவி பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக இந்த மசோதா மிகவும் சிறப்பானது, வரவேற்கத் தக்கது என்ற முறையிலே நான் கூறி என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குடிசைப்பகுதி சீரமைப்பு மாற்று மசோதாவை எல்லாத் தரப்பில் இருந்தும், சிறப்பான முறையிலே ஆதரித்து நல்ல கருத்துக்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்கு எல்லாம் நான் அரசாங்கத்தின் சார்பிலே முதலிலே நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இது ஒரு தேசியப் பிரச்னை என்றும், சமுதாயப் பிரச்னை என்றும், நாட்டில் எல்லா அரசியல் கட்சிகளும், அரசியல் கருத்துக்களுக்கு அப்பாற்பட்டு கவனம் செலுத்த வேண்டிய பிரச்னை என்பதை எல்லாத் தரப்பிலும் இருந்து வலியுறுத்திக் கூறப்பட்டது. பொதுவாக இது ஒரு அருமையான மசோதா,

இப்படிப்பட்ட ஒரு மசோதா அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்டதே என்பதை மகிழ்ச்சியோடு வரவேற்றார்கள். இதைக் கொண்டு வந்த விதத்திலே காலத்தைப் பற்றி சில பேருக்கு சந்தேகம் வந்தது. தேர்தல் காலம் ஆயிற்றே என்றார்கள். காலம் எதுவானாலும் மக்களுக்கு நன்மை செய்வது என்ற எண்ணத்தோடு செய்தால், அதை ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

எல்லா அங்கத்தினர்களும் கூறிய கருத்துக்களை நாம் ஒன்று சேர்த்துப் பார்ப்போமானால், நம் மாநிலத்தில் இவ்வளவு பெரிய பிரச்னையை எப்படித் தீர்க்கப்போகிறோம், அதற்குத் தேவையான பணத்தை எப்படிப் பெறப்போகிறீர்கள் என்ற பிரச்னையில்தான் சுற்றிச்சுற்றி வரவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். டாக்டர் ஹாண்டே அவர்கள் நான் கூறுவதற்காக வருத்தப்பட வேண்டாம், அடிக்கடி கூறுகிறேன் என்று; இருந்தாலும் உங்களுக்காக கூறுகிறேன் என்று நம்மிடத்தில் சொன்னார்கள் மத்திய அரசிடமிருந்து பணம் வாங்கவேண்டுமென்று. மற்ற மாநிலங்களுக்கெல்லாம் திட்டக் குழு பணத்தை ஒதுக்கியிருக்கும்போது நம் மாநகரத்திற்கும் அதைப் பெறவேண்டுமென்று உற்சாகத்தோடு எடுத்துச் சொன்னார்கள். அவர்களிடம் நான் தனியாக விளக்கிச் சொன்னேன். அவர்கள் எதிர்க்கட்சியில் இருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கத்தை கொஞ்சம் தாக்கிப் பேசவேண்டியது அவசியந்தான். அப்படியில்லாவிட்டால் விறுவிறுப்பு இருக்காது, சுறுசுறுப்பு இருக்காது. ஆகவேதான் அப்படிப் பேசுகிறார்களே தவிர, உண்மையில் அவர்கள் அப்படிப் பேசுவதாகத் தெரியவில்லை.

நான் அவர்களிடம் தனியாக விளக்கிச் சொன்னேன். நம் மாநிலத்திற்குத் தேவையான திட்டங்களை நாமே போடுகிறோம். அதற்கு யாருடைய அனுமதியும் தேவையில்லை. அதை நிறைவேற்ற தேவைப்படுகிற பணத்திற்கு மத்திய அரசிடம் செல்கிறோம். அங்குதான் திட்டக்குழு வருகிறது. தேசிய வளர்ச்சி மன்றம் வருகிறது. அவர்கள் சில கருத்துக்களைக் கூறுகிறார்கள். அதற்கு நாங்கள் மறுப்பு கூறுகிறோம். இறுதியில் மத்திய அரசு, பிரதமர் அளவில் முடிவு எடுக்கப்படுகிறது எந்தத் திட்டத்திற்கு எந்த மாநிலத்திற்கு எவ்வளவு எவ்வளவு பணம் என்று. நமது கருத்தை நாம் நம் அரசுச் சார்பில் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். மெட்ரோபாலிட்டன் டெவலப்மெண்ட் என்ற அடிப்படையில் தமிழ்நாட்டுக்கு, சென்னை நகருக்கு ஏராளமான பணம் தரவேண்டுமென்று நாம் வலியுறுத்தி எழுதியிருக்கிறோம். ஆனால் இதுவரையில் அது கிடைக்கவில்லை. அந்த முறையில் நாம் பணத்தைப் பெற்று ஏழை மக்களுக்கு, குடிசைவாழ் மக்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்று டாக்டர் ஹாண்டே அவர்கள் வலியுறுத்திக் கூறியது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. நிச்சயம் இந்த அரசு அதுபோன்ற முயற்சிகளில் ஈடுபடும் என்று உறுதி கூற ஆசைப்படுகிறேன்.

இதுவரையில் செய்த திட்டங்களைப் பற்றியெல்லாம் நம் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம. அரங்கண்ணல் அவர்கள் இப்போது புதிதாக இந்த வாரியத்தின் பொறுப்பேற்றிருக்கிற காரணத்தினால், அதைப்பற்றிய விவரங்களையெல்லாம் மிகுந்த உற்சாகத்தோடு எடுத்துச் சொன்னார்கள். சென்ற இருபதாண்டு காலமாக இதைப்பற்றி ஒன்றும் செய்யாததற்குக் காரணம் அண்ணகள் கட்டிக் கொண்டிருந்தார்கள் என்று சொல்லப்பட்டது. அவர்கள் குற்றச்சாட்டாக சொல்லியிருக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். 1956-ல்

தொடங்கிய முயற்சி குடிசைவாழ் மக்களுக்கு மாவாழ்வு தருவதற்காக 1967 வரையில் எவ்வளவு செலவழிக்கப்பட்டது, எவ்வளவு வீடுகள் கட்டப்பட்டன, என்பதற்கான புள்ளிவிவரங்களைத் தந்தார்கள். சுமார் 458 லட்சம் ரூபாய் செலவில் 4,703 டெனமென்ட்ஸ் கட்டிக் கொடுக்கப்பட்டன. இப்போது இந்த நான்காண்டுக் காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு சுமார் 430 லட்சம் ரூபாய் செலவில் 6,322 டெனமெட்ஸ் கட்டிக் கொடுக்கப்பட்டன என்ற விவரத்தை எடுத்துச் சொன்னார்கள். எந்த அளவிற்கு உற்சாகத்தோடு இந்த அரசு ஏழை மக்களின் பக்கம் செல்கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு என்பதற்காகச் சொன்னேனே தவிர, மற்றவர்களுக்கெல்லாம் அந்த உணர்வு இல்லை என்று ஒரு காலும் கருத மாட்டோம் எனது சுதந்திராக் கட்சி நண்பர் அவர்கள் பேச்சைக் கேட்டதற்குப் பின்னால் யாரும் அப்படிக் கருதுவதற்கு துணிவு வராது என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

உறுப்பினர் அவர்கள் இந்த வீட்டு வாரிய வசதித் திட்டத்தில் எவ்வளவோ திட்டங்கள் இருக்கின்றன, இவற்றில் மற்றவைகளைவிட்டுவிட்டு முதல் இடம் இந்த குடிசை வாழ் மக்களுக்காகக் கொடுக்கவேண்டும் என்ற கருத்தை வற்புறுத்தினார்கள். மற்ற உறுப்பினர்களும் வலியுறுத்தினார்கள். இது பாராட்ட வேண்டிய விஷயமாகும். நடுத்தர மக்களுக்காகப் பல திட்டங்களிருந்தாலும் இவர்களுக்குச் செலவழிக்கப்படுகிற தொகையில் மிகுந்த அளவிற்குக் கொடுக்கவேண்டும் என்ற கருத்தை அவர்கள் சொன்னதை மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். ஆனால் நம் துர்ப்பாக்கியம் திட்டத்திற்கு ஒதுக்கப்படும் பணம் இந்த இந்த திட்டங்களுக்கு என்று ஒதுக்கும்போது ஸ்லம் இம்ப்ரூவ்மென்ட் என்ற பகுதிக்கு ஓரளவிற்கு குறைவாக இருக்கிறது. நாம் நினைத்தளவிற்குப் பெறமுடியவில்லை. நாம் எல்லோரும் இதில் ஆர்வம் காட்டுகிறோம் என்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

இந்த குடிசைவாழ் பகுதிகள் பற்றி பல ஆண்டுகளாக ஆராய்ச்சி நடத்தப்பட்டிருக்கிறது. பல கமிட்டிகள் இதுபற்றி ஆராய்ச்சிகள் நடத்தியிருக்கின்றன. அதுவும் சென்னை நகரத்தைச் சார்ந்த உறுப்பினர்கள்—இதே மன்றத்தில் நான் ஒன்பதாண்டுகளாகக் கேட்டிருக்கிறேன்—மிகுந்த ஆர்வத்தோடு இதுபற்றி பேசியிருக்கிறார்கள். அவர்கள் இப்பிரச்னையை நன்கு உணர்ந்திருக்கிறார்கள். கிட்டத்திட்ட சுமார் 600 குடிசைவாழ் பகுதிகள் சென்னை நகரில் மட்டும் இருக்கின்றன. ஆகவே இதுபற்றி கணக்கு போட்டுப் பார்க்கும்போது, விரைவாக செயல் படவேண்டுமென்று கணக்கு போட்டுப் பார்க்கும்போது, நம்மிடம் உள்ள பணத்தையும் வைத்து கணக்கு போட்டுப் பார்த்தால், எவ்வளவு ஆண்டுகள் ஆகும் என்று எண்ணிப் பார்க்கும்போது கொஞ்சம் அச்சம் ஏற்படத்தான் செய்கிறது. அந்த அளவிற்கு குடிசைவாழ் பகுதிமக்கள் மிகுதியாக நம் நாட்டில், நம் சென்னை நகரில் இருக்கிறார்கள் என்பதை மறந்துவிட முடியாது.

நம் நாட்டுக்கு மட்டுமல்ல இந்தப் பிரச்னை. எவ்வளவோ முன்னேறிய நாடுகளிலும் இதே பிரச்னைகள்இருக்கின்றன. இதைப்பற்றி கேட்கிறோம், ஏராளமான காட்சிப் படங்களிலும் இப்படிப்பட்ட நிலைமைகளைக் காண்கிறோம். டெவலப்ட் கண்ட்ரீஸில் கூட இந்த குடிசைவாழ் பிரச்னை ஒழிக்கப்பட்டுவிட்டதா என்றால், இல்லையென்று தைரியமாகக் கூறலாம். டெவலப்பிங் கண்ட்ரீஸில் இந்தளவிற்கு திட்டங்கள் செயல்படுத்துவது என்பது இல்லை.

அதற்காக வீட்டுவசதி வாரியத்தைப் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம். நானும் இந்தத் துறை அமைச்சராக இருந்திருக்கிறேன். இப்போது முதல் அமைச்சர் அவர்கள் இதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்று இந்தத் துறையை தன்னிடம் வைத்துக் கொருடிருப்பதே இந்த அரசு இப்பிரச்னையில் எவ்வளவு அக்கறை காட்டுகிறது என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டு. அதிலிருந்து புரிந்துகொள்ள முடியும் இந்த அரசு இப்பிரச்னையில் எவ்வளவு அக்கறை காட்டுகிறது என்பதை.

எந்தப் பிரச்னை என்றாலும் தவறுகள் அங்கொன்றும் இங்கொன்றும் இருக்கலாம். ஆனால் வீட்டுவசதி வாரியமே முழுக்க முழுக்க லஞ்சத்தில் ஆழ்ந்துவிட்டது என்று சொன்னால் அங்கு வேலை செய்பவர்களுக்கு கொஞ்சம் உற்சாகம் குன்றலாம். ஒருசில தவறுகள் இருந்தால், அதைக் கண்டிக்கத்தான் வேண்டும். அதை கூறுவதற்குத்தான் எதிர்க்கட்சி என்றிருந்தாலும்—எதிர்க்கட்சி மட்டுமல்ல, ஆளும்கட்சி உறுப்பினர்களும் அத்தவறுகளை எடுத்துக்காட்டலாம்.

நம் தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரியத்தினர் மிகுந்த உற்சாகத்தோடு பாடுபட்டு வருகிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இதற்காக ஒரு மாநாடே மத்திய அமைச்சர் தலைமையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்தபோது தமிழ்நாட்டில் நடத்தப்பட்டது. அப்போது இந்தப் பிரச்னையைக் கிளப்பினார்கள். இதற்குப் பணம் சேகரிக்க போதுமான அதிகாரங்கள் தரவேண்டும் என்று ஒரு கோரிக்கையை வைத்தோம். இரண்டு கோரிக்கைகள் வைக்கப்பட்டன. ஒன்று, வீட்டுவசதி வாரியமே தன்னாட்சி உரிமை பெற்ற வாரியமாக நாங்களே பணம் திரட்ட அனுமதி தரவேண்டும் என்று ஒரு கோரிக்கை வைத்தோம்.

இரண்டாவது கோரிக்கை, வீடுகள் கட்ட பணம் போட முன்வருகிறவர்களுக்கு உங்கள் வருமானவரிச் சட்டத்திலிருந்து வருமான வரியில் விதிவிலக்கு அளிக்க முன்வர வேண்டும் என்று இரண்டு கோரிக்கைகளை மத்திய அரசின் முன் வைத்தோம். ஒன்று உடனடியாக நிறைவேற்றப்பட்டது. முதல் ஆண்டு ஒரு கோடி ரூபாய் தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரியம் மக்களிடமிருந்து திரட்டி மத்திய அரசு, மாநில அரசு கொடுக்கிற பணத்தோடு இணைத்து திட்டங்களை நாம் நிறைவேற்றுகிற ஒரு வாய்ப்பை உருவாக்கினோம். இவ்வளவு அதிகமாகப் பணம் செலவு செய்ததற்கு அது ஒரு காரணம். இரண்டாவது கோரிக்கையை மத்திய அரசு இன்னும் நிறைவேற்றவில்லை. இந்தத் துறையில் மிகுந்த அக்கறையோடு இந்த அரசு செயல்பட்டு வருகிறது. உறுப்பினர்கள் எல்லோரும் இதில் ஆர்வம் காட்டுவது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

இந்தச் சட்டத்தின் அமைப்பைப் பொறுத்தவரையில் இது ஒரு அருமையான சட்டம், வரவேற்கவேண்டிய சட்டம். சட்டத்திலுள்ள வியாக்கியா 'பாட்டங்கள் பொருத்தமான முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. டிராஃப்டிங்கைப் வேர்ட்டட்' என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். டிராஃப்டிங்கில் பற்றிச் சொல்கிற அளவிற்கு அவர்களுக்கு இவ்வளவு அனுபவம் இருப்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இது மத்திய அரசு ஏற்படுத்திய திட்டம். பல மாநிலங்களிலுள்ள சட்டங்களையொட்டி நாங்கள் கொண்டு வந்தாலும். இந்த டிராஃப்டிங்கில் என்ன தவறுகள் காணப்போகிறார்கள் என்று நான் ஆர்வத்தோடு கவனித்துக் கொண்டிருந்தேன். அவர்கள் திருத்தங்களையும் நான் ஆழ்ந்து படித்துப் பார்த்தேன். எத்தவிதமான பெரிய தவறு

களையும் சொன்னதாகத் தெரியவில்லை. அவர்கள் சொன்னது, தனியாருக்குச் சொந்தமான ஒரு குடிசைப் பகுதியை இம்ப்ரூவ் செய்வதற்கு, முன்னேற்ற மடையச் செய்வதற்கு ஒரு வாய்ப்பு கேட்கிறீர்களே, அந்த வாய்ப்பைக் கொடுத்துவிட்டால் அங்கிருப்பவர்கள் கதி என்னவாகும் என்ற பிரச்னையை எழுப்பினார்கள். பல உறுப்பினர்கள் எழுப்பினார்கள். இதையொட்டி முதல் அமைச்சர் அவர்களிடம் நீண்டநேரம் விவாதித்தோம். இந்தச் சட்டத்திலேயே போட்டிருக்கிறோம். அப்படிச் செய்யும்போது அரசு விதிக்கக்கூடிய கட்டுப் பாடுகளுக்கு உட்பட்டுத்தான் அந்த இடங்களைப் பயன்படுத்த முடியும் என்பதை தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். அதிலிருந்து நாம் அதைக் கட்டுப்படுத்த முடியும். அந்த இடத்திலிருந்து விரட்ட வாய்ப்பில்லாமல் செய்து விட முடியும் என்ற கருத்தையும் மசோதாவில் அடக்கியிருக்கிறோம். இருந்தாலும், மாண்புமிகு அங்கத்தினர் சொன்ன கருத்தை நம்முடைய அரசாங்கம் ஆழ்ந்து பரிசீலிக்கும், தேவைப்பட்டால் எந்த விதமான திருத்தத் தையும் நம்முடைய அனுபவத்தை ஒட்டி, கொண்டு வருவதில் எந்த விதமான தயக்கமும் காட்டாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். குடிசை வாழ்மக்களை தனிப்பட்டச் சொந்தக்காரர்கள் விரட்டி விடுவார்கள் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டது. அப்படி நடக்க இந்த அரசாங்கம் பார்த்துக் கொண்டு இருக்காது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் உறுதி கூற ஆசைப்படு படுகிறேன்.

இந்தச் சட்டத்தை ஒன்றாகப் படித்துப் பார்த்தால் முதல் பகுதியாக 'இம்ப்ரூவ்மெண்ட்', இரண்டாவது பகுதியில் 'கிளியரன்ஸ் அன்டு டெவலப் மெண்ட்', மூன்றாவது பகுதியில் 'அக்விசிஷன்' என்று மூன்று பகுதிகளாக பிரித்துப் போட்டு இருக்கிறோம். இந்த மூன்று பகுதிகளையும் இணைத்துப் படித்துப் பார்த்தால், இந்தக் குழப்பம் கொஞ்சம் குறையும் என்று கருதுகிறேன். நானே திருப்பித் திருப்பிப் படித்துப் பார்த்ததற்குப் பின்னாலே, நம்முடைய அரசாங்கம் நிச்சயமாக இதில் கவனம் செலுத்த முடியும் என்ற நம்பிக்கைக்கு வந்தேன். அதுதான் அரசாங்கத்தின் கருத்தும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஏழை மக்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கிறோம். அந்த வசதிகள் நகரத்திலுள்ள மக்களுக்கு மட்டும் தானா, நாட்டுப் புறத்திலுள்ள மக்களுக்கு இல்லையா என்ற கேள்வியை நாட்டுப்புறத்திலிருந்து வந்த பி.எஸ்.பி. கட்சியைச் சார்ந்தவர்கள் எழுப்பினார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில் அப்படிப் பட்ட முயற்சி எடுக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் இந்த மசோதா கொண்டு வரப்பட்டு இருக்கிறது. நகர்ப்புறத்தைப் பற்றி நாம் அதிகமாகப் பேசுகிறோம். நகர் புறத்தைவிட, சின்ன கிராமங்களில் வாழ்கிற மக்கள், நாட்டுப்புறத்தில் உள்ள மக்கள் மோசமாக வாழ்கிறார்கள் என்று நம்மால் உணர முடியும். நம்முடைய அரசாங்கம் தொடர்ந்து பாடுபட்டு, நம்முடைய திட்டத் திலே, மாநில முழுவதும் உள்ள குடிசை வாழ் மக்களுக்கு நல்வாழ்வு வாழ வகை செய்யும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இருக்க இடம் இல்லை என்ற குறை 23 ஆண்டு கால சுதந்திர ஆட்சிக்குப் பின்னாலே ஒரு நாட்டிலே இருக்கலாமா என்ற கேள்வி எழுப்பப்பட்டது. திரு. சுப்பையா அவர்கள் கிழக்குத் தஞ்சையைப் பற்றிச் சொன்னார்கள். இதுபற்றி முதலமைச்சர் அவர்கள் ஆழ்ந்து பரிசிலனை செய்யுங்கள் என்று எங்களை

எல்லாம் கேட்டு இருக்கிறார்கள். இதையெல்லாம் பரிசீலிக்கிறபோது, நமக்குத் தேவை என்ன என்று சிந்திக்கிறபோது, பணம் இல்லாமல் எதுவும் செய்ய முடியாது என்று தயக்கம் ஏற்படுகிறது, அச்சம் ஏற்படுகிறது. இந்த அரசாங் கத்தைப் பொறுத்தவரையில் தயக்கத்தையும், அச்சத்தையும் தவிர்த்து ஏழை களுக்கு வாழ்வளிக்கும் திட்டத்தை இந்த அரசு எடுக்கும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

வீட்டு வசதி வாரியத்திலிருந்து குடிசை வாழ்மக்களுக்கு என்று தனியாக குடிசை மாற்று வாரியம் அமைக்கப்பட்டு, இன்றைக்கு அந்தத் திட்டத்தை விரிவாக்கி செயல் பட முன்வந்து இருக்கிறோம். அதிலே எத்தனை திட்டங் களை, எப்படி திட்டப் போகிறோம் என்று அந்த வாரியத்தின் தலைவர் எடுத்துச் சொன்னார்கள். நாங்கள் இந்தச் சட்டத்தில் சொல்லும்போது, 'நாச்சுரல் ஜஸ்டிஸ்' என்ற முறையில் போட்டு இருக்கிறோம். அதைப்பற்றி மாண்புமிகு வழக்கறிஞர் குறிப்பிட்டார்கள். அப்படிப் போடவில்லையென்றாலும், அவர் களே, கொஞ்ச காலம் கழித்து அப்படிப்பட்ட ஒரு வழக்குக்கு வாதாட வேண்டிய நிலைமை ஏற்படலாம். அதை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். ஆனால் அவர்கள் சொன்ன நல்ல கருத்தை நான் மிக மிக ஆதரிக்கிறேன்.

இந்த நாட்டி ல்இருக்கும் கொள்கையில் மாற்றம் ஏற்பட வேண்டும். இன்று இருக்கும் அரசியல் அமைப்புச் சட்டம் நில ஆர்ஜிதம் செய்வதற்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று சொல்கிறது. அப்படி நஷ்ட ஈடு நிர்ணயிக்கும் போது எவ்வளவு நஷ்ட ஈடு கொடுப்பது என்பதில் குழப்பம் ஏற்படுகிறது. இது சம்பந்தமாக நம்முடைய தலைமை நீதி மன்றம் பல தீர்ப்புகளைக் கொடுத்து இருக்கிறது. நில ஆர்ஜிதத்திற்கு நஷ்ட ஈடு கொடுப்பதை நிர்ணயிப்பதற்கு திட்டவட்டமாக சட்டம் இயற்ற வேண்டுமானால், அரசியல் அமைப்புச் சட்டத் திற்கு திருத்தம் கொண்டு வந்தாக வேண்டும். அரசாங்க வழக்கறிஞர்கள் இவ்வளவு தான் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், தவறு என்று வாதிடு பவர்களும் இருக்கிறார்கள்.

இதுபற்றிய நிலைமையை அண்மையில் நம்முடைய தலைமை நீதி மன்றம் தெளிவுபடுத்திச் சொல்லிவிட்டது. இந்திய அரசும் மாற்றுத் திட்டத்தை கொண்டு வரவேண்டுமென்று பார்க்கிறது. நிலச்சீர்திருத்தம் பற்றி முதலமைச் சர்கள் மாநாட்டில் விவாதிக்கப்பட்டபோது, நானும் அந்த மாநாட்டில் கலந்து கொண்டேன், நம் மாநிலத்தின் சார்பில் இதற்காக ஒரு பரிகாரம் காணவேண்டு மென்று கூறினேன்.

நீதித் துறை இருக்கிற சட்டங்களுக்கு விளக்கம் கொடுக்கிறது. என்றாலும், நாட்டு மக்களுக்கு வழி காட்ட சட்டங்களை மாற்றி அமைத்து நாட்டுக்கு, நீதித் துறை தயங்குகிறது. ஒரு சட்டமன்றம், நாடாளுமன்றம் மக்கள் நலனுக்காக சட்டத்தை இயற்ற வேண்டும். அந்தச் சட்டத்தை இயற்ற அவர்களுக்கு உரிமை வேண்டும். அரசியல் அமைப்புச் சட்டத்திலுள்ள சொத்துரிமைப் பகுதியைத் திருத்துவதற்கு இப்போது நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் இல்லை. அந்த உரிமை பெறுவதன் மூலமாக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். நீதி மன்றம் பெரிதா, நாடாளுமன்றம் பெரிதா என்ற போட்டி மனப்பான்மைக்கு முடிவுகட்டியாக வேண்டுமென்று தமிழ்நாட்டின் சார்பில் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்று பல்வேறு கட்சிக்காரர்கள் கூறி வருகிறார்கள். மாண்புமிகு திருமதி அனந்தநாயகி அதைப்பற்றிச் சொல்லும்போது எனக்கு மகிழ்ச்சி அளித்தது. கணபதி அவர்கள் குறுக்கிட்டினால் எங்கே தடம் மாறிப் போய்விடுவார்களோ என்று நானே குறுக்கிட்டுச் சொன்னேன். டாக்டர் ஹாண்டே அதை எப்படி ரசித்தார்களோ எனக்கு தெரியாது. ஒரு மாதகாலமாக இது பற்றிய பிரசாரம் பத்திரிகையில் பலமாக அடிப்பட்டது. இப்படிப்பட்ட மாற்றத்திற்கு, ஏழைகளுக்கு நல்வாழ்வு அளிக்கும் திட்டத்திற்கு, நஷ்ட ஈடு எவ்வளவு கொடுப்பது என்பதை நிர்ணயிக்கும் உரிமை பெறுவதற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தை திருத்தியாக வேண்டுமென்று நாங்கள் சொன்னபோது, ஓட்டுப் போடாதே, ஓட்டுப் போடாதே, இவன் ஆட்சிக்கு வந்தால் சொத்து பறி போகும், நிலம் பறிபோகும் என்று சொன்ன தலைவர்கள் யார் யார் என்று சொன்னால், கோபித்துக் கொள்வார்கள், சூடு பறந்து விடும் சுவை மாறி விடும், என்பதால் சொல்லவில்லை. ஆனால் இப்படி சொன்னவர்கள் யார் என்ற கதை தமிழ் மக்களுக்குத் தெரியும். தமிழ்நாடு அரசுக்கு அப்படிப்பட்ட திருத்தத்தை வலியுறுத்த வாய்ப்பு ஏற்படுகிறபோது, டாக்டர் ஹாண்டே அவர்களுடைய கட்சியைத் தவிர, மற்ற எல்லாக் கட்சிகளும் ஆதரிக்கும் என்று எண்ணும் போது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. அப்போது டாக்டர் ஹாண்டே அவர்கள் கூட தங்கள் கருத்தை மாற்றிக் கொள்ளலாம். தமிழ்நாடு இந்த விஷயத்தில் முன்னேற்றப் பாதையில் செல்கிறது என்பதை இன்று பொன்னப்ப நாடார் சார்ந்து இருக்கும் காங்கிரஸ் கட்சியும் நிரூபித்து விட்டதாலே எனக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. இது இந்த மசோதா மூலமாக தெளிவு படுத்தப்பட்டிருக்கிறது என்று பூரிப்பு அடைகிறேன்.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் சிக்கல் இருக்கிறது. நீங்கள் வீடுகளைக் கட்டி விடுகிறீர்கள், பழுது பார்ப்பது இல்லை என்று சொன்னார்கள். வாடகைக்கு விட்டு விடுகிறார்கள், யார் குடியிருக்கிறார்கள் என்று ரிகார்டில இருக்கிறதோ அவர்கள் இருப்பது இல்லை. இந்தக் குறைகள் பல்லாண்டுகாலமாக இருந்து வருகிறது. நான் திடீரென்று போய் இம்மாதிரி இடத்தைப் பார்ப்பது உண்டு. விசாரித்தால் நடுத்தர வகுப்பைச் சார்ந்தவராக இருப்பார். ரிகார்டில் வேறு ஒருவருக்கு அந்த இடம் கொடுக்கப்பட்டதாக இருக்கும். இதை மாற்ற மக்களின் பெரும் ஒத்துழைப்பு வேண்டும்.

குடிசை மாற்று வாரியத் தலைவர் ஒரு புதிய முறையை கையாள்வதாக எடுத்துச் சொன்னார்கள். நிச்சயம் அந்த முறை பயனளிக்கும் என்று நம்பிக்கை இருக்கிறது. இது சமுதாயப் பிரச்னை. இது மக்களுடைய வாழ்க்கைப் பிரச்னை. நகரத்தை நோக்கி மாவட்டத்திலிருந்து எண்ணற்ற மக்கள் வேலை தேடி வருகிறார்கள். அதனால் இந்தப் பிரச்னை தொடர்ந்து உருவாகிக் கொண்டே இருக்கிறது. இதற்கு வழி வகை காண தொழில் கொள்கை மாற்றி அமைக்கப்பட வேண்டும். தொழிற்சாலைகள் மாநகரங்களில் ஆரம்பிக்கக் கூடாது. ஆங்காங்கு பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு, பக்கத்திலேயே வீட்டு வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இந்த இரண்டு கொள்கைகளை நிறைவேற்றினால் ஒழிய, இதற்கு பரிகாரம் முழுமையாகக் காண முடியாது என்பதை நாம் எல்லாம் மறந்து விடுகிறோம். இங்கே குடிசைப் பகுதிகளுக்கு சென்று விசாரித்தால், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்தவர்களாக இருப்பார்கள். வேறு பின் தங்கிய மாவட்டத்தைச் சேர்ந்தவர்

களாக இருப்பார்கள். பின் தங்கிய மாவட்டங்களிலிருந்து நிறைய பேர் பிழைப்புக்காக நகரத்திற்கு வருகிறார்கள். அதனால்தான் குடிசைகள் இருக்கின்றன என்பதை மறுக்க முடியாது.

பத்திரிகைகள் சில நேரத்தில் மகிழ்ச்சியோடு படம் போடுகின்றன. ஆர்வத்தோடு படம் போடுகின்றன. வருத்தத்தோடு படம் போடுகின்றார்கள். அரசியல் நோக்கத்தோடு, பத்திரிகை விற்கவேண்டுமென்று, படம் போடுபவர்களும் இருக்கிறார்கள். உண்மை எதுவோ அதை எல்லாம் ஒப்புக் கொள்கிறேன். புதிய தொழிற்சாலைகள் தொடங்குகிறபோது பரவலாக ஒவ்வொரு மாவட்டத்திலும் குறிப்பாக பின்தங்கிய மாவட்டங்களிலும், தொழில்கள் ஆரம்பிக்க வேண்டுமென்று தொழில் கொள்கையில் மாற்றம் செய்து இருக்கிறோம். அந்த தொழில் கொள்கை மாற்றம் பயனளிக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இதிலே கிளியரன்ஸ் என்று போட்டிருக்கிறார்களே, இதை டெவலப்மெண்டு, முன்னேற்றம் என்று மாற்றக்கூடாதா என்று கூட கேட்கப்பட்டது. நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் இதை ஆழ்ந்து பரிசீலித்தார்கள். எங்களுக்குக் கூட மாற்ற வேண்டும் என்ற ஒரு ஆர்வம் இருந்தது. ஸ்லம் டெவலப்மெண்டு என்று சொன்னால், நம்முடைய அங்கத்தினர்கள் சில சமயங்களில் வாதித்து விடுவார்கள். இருக்கிற குடிசைவாழ் பகுதியை நீங்கள் பெருக்கிக் கொண்டு போகிறீர்களா என்று கேட்கலாம். அம்மாதிரி அர்த்தம் தொனித்துவிடுமே என்ற ஒரு அச்சமும் எங்களுக்கு ஏற்பட்டது. ஆகவே தான் இதை பிரெவென்ஷன் அண்டு கிளயரென்ஸ் என்ற முறையில் நாம் கொண்டு வர வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் கொண்டு வந்திருக்கிறோம். இது முதல் தொடக்கம்தான். தொடக்கத்தில் சில தவறுகள் ஏற்படலாம். அவையெல்லாம் திருத்திக்கொண்டு, இந்த மன்றத்தில் அங்கத்தினர்கள் சொன்ன கருத்துக்களை ஏற்று, இந்த வாரியம் சீரிய முறையில் பணியாற்றும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் தொழிற்சாலைச் சொந்தக்காரர்கள் இந்தத் திட்டத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நான் வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். வேறு ஒரு நாள் பேசியபொழுது மாண்புமிகு அங்கத்தினர் திரு. கே. எம். சுப்பிரமணியம் சொன்னதாக நினைவு. இண்டஸ்டிரியல் ஹவுஸிங் ஸ்கீம், தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கிற திட்டம் நல்ல முறையில் நிறைவேற்றப்படவில்லை என்று அவர்கள் சொன்னார்கள். நான் இதைப் பரிசீலிக்க வேண்டும் என்று மகிழ்ச்சியோடு இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன். நமக்கெல்லாம் அந்தக் கருத்து ஏற்பட்டிருப்பதோடுகூட, அவர்கள் சொன்னது எனக்கு மகிழ்ச்சி. இது உண்மைதான். இதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தை, தொழில் அதிபர்கள் 25% கொடுக்கவேண்டும் என்று சொன்னதைக் கூட, இந்த ஒரு சிறு பகுதியைக் கூட கொடுத்து நிறைவேற்றாமல் இருந்தது துர்ப்பாக்கியம். இந்த நிலைமை இருப்பதை நாம் பார்த்தோம்.

நான் இந்தத் துறையை ஏற்றுக்கொண்டபொழுது தொழில் அதிபர்களை அழைத்து, இதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று அவர்களிடம் தெரிவித்தேன். அதனுடைய விளைவாக சிலதொழில் அதிபர்கள் இதைச் செய்ய [illegible], அவர்களுக்குச் செய்ய வேண்டாம் என்று எண்ணம்

இல்லை. அவர்கள் பட்ஜெட்டிலும் கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். நிச்சயம் ஸ்லம் கிளியரன்ஸ் போர்டைப் பயன்படுத்திக்கொண்டு, தொழில் அதிபர்கள் தங்களுடைய தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு உதவ முன்வருவார்கள் என்று நான் நம்புகிறேன். அதற்கான பணியில் அவர்களும் தங்கள் பங்கைச் செலுத்துவார்கள் என்று கருதுகிறேன். அவர்கள் தங்களுடைய பங்கையும், ஒத்துழைப்பையும் இந்தத் திட்டத்திற்குத் தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இதை இந்த நேரத்தில் வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இதற்காகத் தனி வாரியம் அமைக்கப்பட்டிருக்கிற காரணத்தால், ஏராளமான பணத்தை பல்வேறு துறைகளில் பெற்றுக்கொண்டு, நாம் இந்தத் திட்டத்தை அதிக அளவில் நிறைவேற்றுவதற்கு வாய்ப்பு கிடைக்கும். இந்த மசோதா நிறைவேற்றப்பட்டால், நிச்சயம் இந்த வாரியம் செம்மையாக பணி செய்வதன் மூலம் ஏராளமான குடிசைவாழ் மக்கள் நல்ல முன்னேற்றம் பெறுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

பல அங்கத்தினர்களும் ஒன்று சொன்னார்கள். எல்லாக் கட்சியினரும் சொன்னது பற்றி எனக்கு ரொம்ப மகிழ்ச்சி. அந்த எண்ணம் தொடர்ந்து இருக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசையாகும். ஒரு குடிசை வாழ் பகுதி திடீர் என்று ஒரு பெயரில் வரும். அது ஒரு தலைவரின் பெயராக இருக்கும். அதுவும் தேர்தல் காலத்தில் கொஞ்சம் அதிகமாக இருக்கும். இதை எந்தக் கட்சியினரும் மறுத்துவிட முடியாது. யாரும் இல்லை என்று சொல்ல முடியாது. அப்படிப்பட்ட ஒரு துர்ப்பாக்கியம் ஏற்பட்டிருக்கிறது. ஒரு தீய செயல் நடந்தாலும் கூட, அதை அரசியல் கட்சி நலனுக்குப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய ஒரு பாரம்பரியம் தமிழ்நாட்டில், இந்திய நாட்டில் தொடர்ந்து வளர்க்கப்பட்டுவிட்டது. அது தவறு என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எல்லாக் கட்சிகளுக்கும் பொதுவாகத்தான் சொல்கிறேன். புதியதாக குடிசைவாழ் பகுதி சென்னை மாநகரத்தில் ஆகட்டும், மற்ற நகரங்களில் ஆகட்டும், தோன்றாத அளவுக்கு நம்முடைய முயற்சிகள் இருக்கவேண்டும். இதில் கட்சி நோக்கம் கொண்டு இருக்கக்கூடாது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப்பட்ட திட்டங்களை நம்முடைய அரசு துணிவோடு நிறைவேற்றுவதற்கு எல்லா உறுப்பினர்களும் ஒத்துழைக்கவேண்டும். குடிசைமேம்பாடு வாரியம் சரியான முறையில் பணியாற்றுவதற்கு எல்லாக் கட்சியினரும் உறுதுணையாக இருக்க வேண்டும். இதை அரசியல் பிரச்னையாக ஆக்கிவிடாமல் இந்த வாரியம் சரியான முறையில் பணிபுரிவதற்கு எதிர்க் கட்சியினரின் ஒத்துழைப்பும் கிடைக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

ஆகவே எல்லா அங்கத்தினர்களும் இந்த மசோதாவிற்கு ஆதரவு கொடுத்ததற்கு எனது நன்றியைக் கூறிக்கொள்கிறேன். சில கருத்துக்கள், சில சிக்கல்கள் பற்றி கூறப்பட்டன. இந்த நிர்வாகம் இதை அமுல் நடத்தும் பொழுது ஏதாவது சிக்கல் ஏற்பட்டால், அதைத் தவிர்க்க மாற்றம் தேவைப்படும் என்று அரசாங்கம் கருதினால், தயக்கம் காட்டாமல் அந்த மாற்றத்தைக் கொண்டு வருவோம் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன். இந்த மசோதாவை எல்லோரும் ஆதரிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, can I have a clarification? May I know whether any portion of the Revolving Fund of Rs. 200 crores allotted by the Central Government for Housing Schemes, has been given to Tamil Nadu?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வீட்டு வசதி வாரியத்திற்கு பணம் வேண்டும் என்று கேட்ட காலத்தில் அதன் அமைச்சர் திரு. ஷா அவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்திருந்தார்கள். ரிவால்விங் பண்டிலிருந்து நம்முடைய மாநிலத்திற்குப் பணம் ஒதுக்குகிறோம் என்ற உறுதியை அவர்கள் தந்தார்கள். ஸ்லம் கிளியரன்ஸ் பணியை அப்பொழுது வீட்டு வசதி வாரியம் கவனித்துக் கொண்டிருந்தது என்று அப்பொழுது சொல்லிக்கொண்டிருந்த வாதமாகும். இப்பொழுது குடிசைவாழ் பகுதி முன்னேற்றத்திற்கு ரிவால்விங் பண்டு பயன்படும் என்பதையும் நான் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1971-ம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு-மாற்று) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 3/1971) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 2 இம் மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்படவேண்டும்."

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, I move the following amendment:—

'In item (*h*) of clause 2, add the following at the end:—

"and also local bodies, Panchayats, Municipalities, Municipal Corporation Housing Board and Government".

The word 'Owner' is defined in the Act but it is not very clear. In order to make it clear I have moved the amendment.

The amendment was duly seconded.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்பொழுது இருக்கிற விளக்கமே போதும் என்று அரசாங்கம் கருதுகிறது. இதிலே எந்தப் பகுதியையும் கொண்டுவருவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

திருமதி ஆனந்தநாயகி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 3

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 3 இம் மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்படவேண்டும்."

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I move the following amendment :—

(1) 'In sub-clause (1) (b) of clause 3, after the words "in any" and before the words "used or intended to be used", insert the word "slum".'

(2) 'After sub-clause (2), add the following as sub-clause (3) :—

'Immediately after the Act is passed the prescribed authority must notify the existing slum areas".

Sir, my amendment is very simple. It is intended only to prevent the further growth of the slum in the State so that they can at once declare the present slum area and also know where they stand whenever they acquire slums.

The amendment was duly seconded.

திரு. இராம அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, இந்தத் திருத்தம் தேவையில்லை என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால் எத்தனை பகுதிகள் இருக்கின்றன என்று கணக்கு எடுப்பதற்குச் சில காலம் தேவைப்படுகிறது. திடீரென்று எல்லாவற்றையுமே குறிப்பிட்டு ஸ்லம் என்று டெக்லேர் செய்துவிட முடியாது. அதற்கான புள்ளிவிவரங்கள் தயாரித்து, எத்தனை இருக்கின்றன என்று பார்த்துத்தான் செய்யவேண்டியிருக்கிறது. ஆகையினால் இந்தத் திருத்தம் தேவையில்லை என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANADANAYAKI : Sir, my only fear is that when they declare a particular area, they should not be swayed away by likes and dislikes or personal prejudices. If they can assure that it will be done fairly, I will not press my amendment.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சட்டத்தை அமல் நடத்தும் பொழுது விருப்பு வெறுப்புக்கு உட்பட்டு அதை அமல் நடத்தினால், அது செல்லாது என்பது வழக்கறிஞர்களாகிய அவருக்கு ஏற்கனவே தெரியும். அப்படிப்பட்ட விருப்பு வெறுப்பு எண்ணத்தோடு நிச்சயம் இந்தக் குடிசைமேம்பாடு வாரியம் செயல்படாது என்று நம்புகிறேன். ஆகவே, அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய திருத்தத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. கிட்டத்தட்ட 600 குடிசைவாழ் பகுதிகள் இருக்கின்றன. அத்தனையையும் உடனே ஸ்லம் என்று நோடிபை செய்யவேண்டும், உடனே அவைகளை மேம்பாடு செய்ய எடுத்துக்கொள்ளக் கூடிய திட்டம் இருக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற சந்தேகம் எல்லாம், நான் நினைத்தேன். குடிசைவாழ் பகுதி மக்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்று சொல்லிவிட்டு, ஒன்று ஒன்றாக எடுத்துக்கொண்டால், ஏராளமான குடிசைவாழ் பகுதி மக்கள் பயன் அடைய முடியாத முறையில், தனிப்பட்ட நபர்கள் சட்டத்தைப் பயன்படுத்திக்கொண்டு பேசுவதற்கு இடம் ஏற்படும் என்பதுதான். ஆனால் இப்பொழுது அவர்கள் பேசியதிலிருந்து இந்த இடத்தை எடுப்பதா, அந்த இடத்தை எடுப்பதா என்

று நினைக்
சர்ச்சையில் இந்த அரசாங்கம் ஈடுபட்டால் என்ன செய்வது என்று நினைக்கிறார்கள் என்று கருதுகிறேன். அப்படி அவர்கள் நினைத்தால் நான் வருத்தப்படுகிறேன். அம்மாதிரி அவர்கள் எண்ணம் கொள்ளக்கூடாது. ஆனால் அவர்களுடைய முதல் கருத்தை நான் பாராட்டுகிறேன். நிச்சயம் அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்படாத அளவுக்கு, தனிப்பட்ட நபர்கள் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு குடிசைவாழ் பகுதி மக்களை வெளியேற்றிவிடாமல் இருப்பதற்கு இந்த அரசாங்கம் போதிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்று நான் உறுதி கூறுகிறேன்.

THIRUMATHI T. N. ANANTHANAYAKI : Sir, I do not press my amendment after the speech of the Hon. Minister. இரவு 7-00

திருத்தம் பேரவையின், அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 3 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 4 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 5.

MR. SPEAKER : The question is :—

"That Clause 5 do stand part of the Bill".

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I move the following amendment :—

For sub-clause (1) of Clause 5, substitute the following :—

"No person shall erect any building in a slum area except with the previous permission in writing of the prescribed authority"

What is stated now is that the prescribed authority may, by notification direct that no person shall erect any building in a slum area except with the previous permission in writing of the prescribed authority. There is the expression 'may'. I want that we should be clear in our expression and should be more specific. That is why I say that sub-clause (1) may be amended as I have suggested so that it is more specific. I think Government will accept this amendment.

The amendment was duly seconded.

THIRU T. GANAPATHI : This sub-clause (1) of Clause 5 is only an enabling provision giving discretionary power on behalf of the Board to the prescribed authority to take proper action as and when the action becomes necessary. If it is fettered by any mandatory clause, the authority will not be left with discretion as the occasion demands and the object if the Act will be defeated.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்தப் பகுதியிலே Chapter III—Prevention of growth of slums. என்று கருத்துக்கள் போடப்பட்டிருக்கின்றன. கட்டிடம் கட்டுவது பற்றி முன் அனுமதி இருந்தால், குடிசைவாழ் பகுதி சிறந்ததாக அமைய வாய்ப்பு இருக்கும். உறுப்பினர் சொல்வது 'ப்ளாங்கெட் பவர்' கவர்ன்மெண்டுக்குக் கொடுக்கவேண்டுமென்பது.

அப்படிச் சட்டத்திலே போட்டுவிட்டால், சிறந்த முறையில் அமுல் நடத்த வாய்ப்பு இல்லாமல் போய்விடும். போடும் அதிகாரியோ அமைப்போ, அந்தப் பகுதிக்கு அது தேவையா, இல்லையா என்று ஸ்லம்மை மாற்றுவதற்கு முடிவு செய்ய வாய்ப்புக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்காவிட்டால், சட்டமே செல்லாது என்று சொல்லக்கூடிய சூழ்நிலை ஏற்படும். இதிலே குறிப்பிட்டிருக்கிற அதிகாரி, கட்டிடம் கட்டுவதற்கு முன்னால், அனுமதி வழங்க வாய்ப்புகள் கொடுத்து இருக்கிறோம். சிறந்த முறையில் அமுல் நடத்துவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது என்பதை மாண்புமிகு அங்கத்தினருக்கு இந்த சந்தர்ப்பத்தில் சொல்லுகிறேன். ஆகவே, அவர்கள் எண்ணத்தை இந்தச் சட்டம் நிறைவேற்றும் என்பதால், இந்தத் திருத்தத்தையும் வலியுறுத்த மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

THIRUMATHI T. N. ANADANAYAKI : I am not pressing my amendment.

திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 5 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I have given another amendment to sub-clause (4) of Clause 5.

MR. SPEAKER : The hon. Member ought to have moved that amendment also. She has not done so. The House has already passed that Clause.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தப் பிரிவைத் தாங்கள் பேரவையின் முடிவிற்கு விட்டு, நிறைவேற்றப்பட்டதாக அறிவித்து விட்டீர்கள். இனிமேல் திருத்தம் கொண்டு வருவதற்கு முடியாது. அங்கத்தினர் அவர்கள் மறந்ததற்கு நாங்கள் பொறுப்பு ஏற்க முடியாது. ஆனாலும், அவர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். " within one month " என்பதை விதிமுறைகளில் போட்டுவிடலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிரிவு 6.

MR. SPEAKER : The question is—

" Clause 6 do stand part of the Bill ".

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I move the following amendment :—

(1) In sub-clause (1) of Clause 6, the words " that at a reasonable expense " shall be omitted.

(2) In sub-clause (1) in line 22, for the words " serve upon the owner . . . therein" substitute the words "execute the improvements incurring necessary expenses"

(3) Delete the proviso under sub-clause (1)

(4) Delete sub-clauses (2) and (3)

Everything must be done by the Slum Clearance Board for clearance of slums. They should not think of reasonable expense or unreasonable expense. There should not be any second thought

about it. This is an important legislation effected in the interest of society and so I say that the words "that at a reasonable expense" be omitted. I also want the Slum Clearance Board not to waste time, serving notice upon the owner, waiting for his reply, etc. That is why I have moved my amendment. Let the Board execute the improvements incurring necessary expenses. I hope the Government which is anxious to do something for the people, will accept this amendment of mine.

The amendment was duly seconded.

THE HON. THIRU S. MADHAVAN : Mr. Speaker, Sir, I am sorry I am not able to accept the amendment of the hon. Member. I appreciate the intention of the hon. Member in moving the amendment. She wants the Slum Improvement Board to take up the work immediately as soon as we notify a particular area as a slum area. But unfortunately as I pointed out in my speech earlier, we have got about 00 slums. We have to take them one by one. We cannot improve them all within a particular period. That is why we have got a separate chapter under this statute giving an opportunity to the private owner for making improvements and changing the slum areas. I have already promised and I have consulted the Hon. Chief Minister. If this gives an opportunity for private landholders for misusing the power under this Act to evict slum dwellers in any part of the city or this State, I can assure on behalf of Government that Government will take all steps to prevent such eviction, by using this provision. But at the same time we must give an opportunity to the people who can come forward to do something for slum-dwellers.

I can cite one example. There is " pallakkumanyam " in Mylapore. It belongs to one devasthanam. We are not able to acquire that because we have no funds. But under this scheme, the devasthanam can have a scheme and develop the area for the benefit of slum-dwellers who are already living in that area. This opportunity we give to the private owner. If there is anything wrong in application, this Government will not fail to take steps to prevent misuse of powers and eviction of already existing slum-dwellers.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I am still pessimistic about it. I cannot believe that Government have no funds to acquire this " pallakkumanyam ". Anyhow I am not pressing my amendment since I cannot press it.

திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 6 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 7 முதல் 10 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

Clause 11.

MR SPEAKER : The question is—

" That Clause 11 do stand part of the Bill ".

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I move the following amendment—

" *Delete* the proviso under sub-clause (1) of Clause 11 "

But, Sir, in view of what the Hon. Minister had already stated in the case of ownership of slums, I am not pressing my amendment :—

திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 11 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 12 முதல் 15 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

Clause 16.

MR. SPEAKER : The question is—

" That clause 16 do stand part of the Bill ".

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I move the following amendment—

' In clause 16, for the words " the Government may by rules provide for or regulate the transfer ", *substitute* the words " the prescribed authority shall provide for or regulate the transfer ". '

Since this concerns the occupier already in the slum, it should be made obligatory on the part of the authority to give it to the same person who is there before. Why should it go to the Government? I think the Hon. Minister will certainly accept this amendment in the interest of the slum-dwellers.

The amendment was duly seconded.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I am sorry. I am unable to accept the amendment. The hon. Members has got more faith in the prescribed authority in the Government. According to the Legislative procedure, only the Government can have power to make rules under the Act. The Slum Board which is the prescribed authority is there to execute the schemes under this Act but they have to follow the rules framed by the Government under this Act. So, the hon. Member may kindly withdraw his amendment

THIRU K. M. SUBRAMANIAM : I take the lesson and withdraw my amendment.

திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 16 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 17 முதல் 27 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

Clause 28.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I move the following amendment :—

' (i) In sub-clause (1) of clause 28, for the words " the Government may undertake or cause to be undertaken ", *substitute* the words " the Slum Clearance and Development Board shall undertake ".

' (ii) *Delete* sub-clause (2) (i). '

The amendment was duly seconded.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, definitely I have got great faith in the Government. The Government are the parent body. Here again the question is once the land is acquired, it has to be handed over to the Slum Clearance Board for execution of the work. I think I am correct and I hope the Hon. Minister will certainly accept this amendment.

THE HON. THIRU S. MADHAVAN : I am sorry I am not able to accept this amendment. I will explain the position. The Government have got power to acquire the land and hand it over to the Board for the execution of the scheme. That is the only power we take under this Bill. It does not mean that the Government are going to execute the scheme directly. Certainly all the schemes will be executed only by the Slum Clearance Board.

THIRU K. M. SUBRAMANIAM : In view of the assurance given by the Hon. Minister, I do not press my amendment.

திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 28 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

Clause 29.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I do not move my amendment in view of the assurance that no slum-dweller would be evicted without providing alternative accommodation.

பிரிவு 29 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 30 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

Clause 31.

MR. SPEAKER : The question is—

" That clause 31 do stand part of the Bill."

THIRU K. M. SUBRAMANIAM : Sir I move the following amendment :—

' *Add* at the end of sub-clause (1), the following and *delete* other sub-clauses :—

" It shall be obligatory on the part of the prescribed authority to provide accommod ... for him ".

[Thiru K. M. Subramaniam] [1971 ஏப்ரல் 3

This refers to the slum-dweller who is already there and I think this amendment is necessary and it will be accepted.

The amendment was duly seconded.

THE HON. THIRU S. MADHAVAN: I think the hon. Member will withdraw this amendment also. As stated previously, nobody will be evicted without being given alternative accommodation and this category also comes under the relevant provision. This chapter is only for giving protection to tenants and certainly we will see that this is not misused by the landlord to evict his tenant.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, I am not pressing my amendment.

திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 31 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

Clause 32.

MR. SPEAKER: The question is—

"That clause 32 do stand part of the Bill."

THIRU K. M. SUBRAMANIAM: Sir, I move the following amendment:—

'*Add* the following as proviso to sub-clause (1) of Clause 32:—

"Provided that the rent will be so fixed that rent for a developed plot of 800 square feet will not exceed Rs. 3 per month and the buildings constructed for slum-dwellers at Rs. 10 per month and that the lessees will have the option to purchase the developed plots or building at a cost based on this rental value calculated on no profit and no loss basis in instalments of 15 or 20 years".'

The amendment was duly seconded.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, I am sure that a progressive Government like the D.M.K. Government will certainly accept this amendment and see that the buildings or plots allotted to the lessees are given at subsidised rent or they are allowed to purchase it on no profit no loss basis.

THE HON. THIRU S. MADHAVAN: I am glad the hon. Member has got so much faith in the progressive policies of the D.M.K. Government at least after the 1971 elections and I am thankful to him. I will be glad to accept the amendment provided the legal experts approve it. But I do not think that it can be approved by the courts of law because already we have got the Rent Control Act and under that Act we have got power to fix the rent. We have to follow certain principles and unless we follow those principles our legislation will be struck down.

We have got some principles under this Act to follow. The prescribed authority cannot fix any rent for tenements as suggested in the amendment. Therefore I am unable to agree that we

1971 ஏப்ரல் 31 [Thiru S. Madhavan]

can ourselves fix the rent for buildings constructed for slum-dwellers. But so far as tenements built by the Slum Clearance Board are concerned, I hope the Chairman will agree that reasonable rent will be fixed for slum-dwellers. For others, we cannot fix the rent unless we follow the principles enunciated in this clause.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: The Hon. Minister said that there would not be any eviction, of those who happen to be tenants under any owner. But then when the owner puts up improvements, the tenant has to pay six per cent of cost of work of improvement, as rent. The Hon. Minister assured the House that for houses developed or acquired the rent would only be Rs. 10. Suppose the cost of improvement is more and he is asked to pay 6 per cent of the cost of improvement and suppose it comes to more than the capacity of the tenant. How can the poor tenant pay? He has only to go. I hope the Hon. Minister will give an explanation.

THIRU K. M. SUBRAMANIAM: We have been assured that poor people will be allotted developed plots and they will not be exploited. I mean the poor slum-dwellers. Exploitation is of two kinds. If the rent is beyond the means of a slum-dweller he has to clear out. If the appropriate authority develops the plot or constructs the House and if it is going to charge on an economic basis, based on this 6 per cent cost of improvement, the rent will be very high. None of the slum-dwellers will be able to pay the rent. It may turn out an indirect way of assisting the vested interests to clear the slums, construct pucca buildings and rent them out on economic rents. I do not know how the Hon. Minister is going to face that situation. We should be glad to know it from him.

THE HON. THIRU S. MADHAVAN: I never gave an assurance that Slum Clearance Board will only fix Rs. 10 as rent. So far as fixation of rent by private people is concerned, we have no power to fix the rent. We can only enunciate the principles on which rents may be fixed by the prescribed authority. That is what we have been following in many of the statutes. I feel that rent must be low for the poor people, especially for slum-dwellers. But if you go through the principles we have enunciated in this clause, there are various things which the prescribed authority has to take into consideration in fixing the rent. Six per cent of the cost of improvements, is one part. Many other things are there. They have got an opportunity to argue before the authority concerned that the rent must be low. But we cannot fix the rent. It is not fit in the circumstances of a particular case. If it is so, the Court will strike down our legislation.

THIRU K. M. SUBRAMANIAM: Will the Government subsidise the difference between the rent that the slum-dweller has the capacity to pay and the economic rent that will be collected on the basis laid down here, by the landlord? The cost of development may be so high and 6 per cent of cost may work out too much

for the tenant. Thiru Rama Arangannal knows that for houses built already, even though economic rent is Rs. 30 or Rs. 35, we collect rent of Rs. 10 only. Rs. 25 is given as subsidy by Government. If suppose 'pallakkumanyam' is also developed by the owners, and they charge economic rent. What will happen? The law does not provide for any reduction in rent. If economic rent for 'pallakkumanyam' is high and capacity of slum-dweller to pay is low, will the Government bear the difference and treat it as subsidy. The slum-dweller cannot pay more than Rs. 10. Suppose economic rent is Rs. 25 or Rs. 30. Will the Government treat the difference as subsidy. I would like the Government to appreciate. The amendment is given as a sign of co-operation. If it is properly understood, I am sure the Hon. Minister will find out some method by which slum-dwellers will not suffer due to improvement of slums.

MR. SPEAKER: Are you pressing or withdrawing the amendment?

THIRU K. M. SUBRAMANIAM: I cannot press my amendment as you know.

திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது

பிரிவு 32 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 33, 34 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

Clause 35.

MR. SPEAKER: The question is—

"That clause 35 do stand part of the Bill."

THIRU K. SUPPU: Sir, I move the following amendment:—

At the end of sub-clause (2), *add* the following:—

"which shall include 3 members of the Legislative Assembly and one member from the Legislative Council".

The amendment was duly seconded.

திரு. க. சுப்பு: மிகவும் நல்ல நோக்கத்தோடு இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது. பிரெஸ்கிரைப்டு அதாரிடி என்று சொல்லப்படுகிற நேரத்தில் அதிக அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதிகளை தாங்களாகவே எடுத்து விட்டால் நல்லது. நிர்வாக இயந்திரத்தை நம்பி கொண்டுவரப்பட்டிருக்கிறது.

■ ■

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, கமிஷன் போடுவதால் காலதாமதம் ஏற்பட்டாலும், அதிகமான செலவு ஏற்பட்டாலும் கருத்திலே கொள்ளாமல் நிர்வாக இயந்திரம் சிராகச் செல்வதைத் தடுக்கும் எந்தச் செயலும் இதிலே வரக்கூடாது. அப்படிச் செய்தால் குடிசைப் பகுதிகளை விரைவில் எடுத்துவிட முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

• **மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.**

அதிலே சாதாரணமாக ஏழைக் குடிசைவாழ் மக்கள் தங்கள் குறைகளை எடுத்துச் சொல்ல வகையில்லாமல் இருக்கிறது. ஒளி இல்லாத, காற்றோட்டம் இல்லாத குடிசைப் பகுதிகளுக்குச் செல்கிறார்கள் என்றால் அங்கே வசிக்க வேண்டுமென்ற ஆவைசம காரணமாகச் செல்லவில்லை—பொருளாதார நிலையின் காரணமாகத்தான் அங்கே வசிக்கிறார்கள். அப்படி இருக்கிறபோது விளக்கு வசதி, தண்ணீர் வசதி செய்துகொடுத்துவிட்டு அதற்கு சார்ஜ் வசூலித்துக் கொள்ளலாம் என்றால், அவர்கள் எப்படிக் கட்ட முடியும்? அதுவும் என்ன சொல்லியிருக்கிறார்கள்? லாண்டு ரெவின்யூ வசூல் செய்துகொள்வதுபோல வசூல் செய்துகொள்ளலாம் என்கிறார்கள். நிலவரிதான் ஜப்திசெய்தே வசூல் செய்துகொள்ள முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் திருத்தத்தைப்பற்றி மட்டும் பேசவேண்டும். பொதுப்படையாகப் பேசுவதற்கு இது நேரம் இல்லை.

THIRU K. SUPPU: Sir, I am trying to point out the necessity for my amendment.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுப்படையாக பேசுவது முதல் கட்டத்தில் இருக்கலாம். அல்லது மூன்றாவது வாசிப்பின்போது இருக்கலாம். இப்போது நம்முடைய விதிமுறைகளுக்கிணங்க திருத்தம்பற்றி மட்டும் பேச வேண்டும்.

திரு. க. சுப்பு: மன்னர்களுக்கு எப்படி தண்ணீரும், மற்ற வசதிகளும் இலவசமாகக் கொடுக்கிறோமோ, அதுபோல இந்தக் குடிசைவாழ் மக்களை மன்னர்களாகக் கருதி விளக்கு, தண்ணீர் வசதி செய்துகொடுத்தால் அதற்காக சார்ஜ் எதுவும் வசூலிக்கக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அது இல்லாத காரணத்தினால் அதிகாரிகளால் ஏதாவது துன்பம் ஏற்பட்டால் அவர்கள் சென்று முறையிட்டுக் கொள்வதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கே பிரதிநிதியாக இருப்பது அவசியம் என்பதால் நான் என்னுடைய திருத்தத்தை வற்புறுத்துகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கனம் அங்கத்தினர் எதைப்பற்றிப் பேசினார் என்று புரியவில்லை. கடைசியில் கொடுத்திருக்கக்கூடிய திருத்தத்தைப் பார்த்தால் அதில் சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கவேண்டும் என்கிறார் என்பது புரிகிறது. சட்டமன்ற உறுப்பினர் ஒருவரே அந்த மன்றத்தின் தலைவராக இருக்கிறபோது இந்தத் திருத்தத்தை வற்புறுத்தமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

திரு. க. சுப்பு: மாண்புமிகு அமைச்சர் அவர்கள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டப்பேரவை விதிகளின்படி தாங்கள் பேசியபிறகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்ட காரணத்தினால் மீண்டும் நீங்கள் பேச முடியாது. திருத்தத்தை வற்புறுத்துகிறீர்களா அல்லது திரும்பப் பெற்றுக்கொள்கிறீர்களா என்று சொல்லுங்கள்.

திரு. க. சுப்பு: திரும்ப பெற்றுக்கொள்கிறேன்.

பேரவையின் அனுமதியுடன் திருத்தம் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

பிரிவு 35 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 36 முதல் 74 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறை
வேற்றப்பட்டன.

Clause 1.

MR. SPEAKER : The question is—

'That clause 1 do stand part of the Bill'

TIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I move the following amendment—

'In sub-clause (1), for the words "the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971" *substitute* the words "the Tamil Nadu Slum Areas (Clearance and Development) Act, 1971."

The amendment was duly seconded.

TIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, Members on this side of the House have moved about 20 amendments and not even one amendment has been accepted by the Government because they are in an overwhelming majority. At least this one amendment must be accepted. Otherwise, it would not be a proper treatment of the Opposition. So far as this amendment is concerned, it is a very reasonable one.

THIRU N. GANAPATHY : Sir, on a point of clarification. The Hon. Minister has accepted the suggestion of the hon. Member with regard to providing time-limit for the disposal of applications but still. . . . .

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I want the Slum Clearance Board to take up developmental activities. That is the object of my amendment. I hope at least this amendment will be accepted by the Government.

THE HON. THIRU S. MADHAVAN : Sir I have gone through every amendment moved by the hon. Member but I am unable to find any amendment to be acceptable to the Government. The intention of the mover of the amendment is welcomed by the Government. As regards this amendment, the Hon. Member wants the word 'development' to be substituted. We have considered it and we have a fear that that word would be interpreted to mean that we are going to develop the slums and increase the number of slums. That is why we have used the words 'Improvement and Clearance' so that the existing slums will be improved. According to our scheme, all the slums will be cleared once and for all and there will be developed areas in those places. That is our intention and that is why we have provided this title in this Act. So, I think the Hon. Member will not press her amendment.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I am not pressing my amendment as I cannot press it '.

திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 1 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

முகப்புரையும் நெடுந்தலைப்பும் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

'That the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Bill, 1971 (L.A. Bill No. 3 of 1971) be passed.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் கூட்டம் இன்றோடு முடிகிறது. பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்படுகிறது. இரவு 7-38

பின்னர், மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

(7) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்

A. Statutory Rules and Orders.

96. Notification issued with G.O. Ms. No. 342, Labour (Housing), dated the 20th March 1971, in regard to establishment of a board with the name of "Tamil Nadu Slum Clearance Board" to attend to the works of slum clearance in the city of Madras with effect from the 20th March, 1971. [Laid on the Table of the House under section 72 (2) of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Ordinance, 1971. (Tamil Nadu Ordinance 1 of 1971).]

97. Notification issued with G.O. Ms. No. 343, Labour (Housing), dated the 20th March 1971, in regard to coming into force of the provisions of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Ordinance, 1971 in the City of Madras with effect from 20th March, 1971. [Laid on the Table of the House under section 72(2) of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Ordinance, 1971 (Tamil Nadu Ordinance 1 of 1971).]

B. Reports, Notifications and other Papers.

@ 36. The Tamil Nadu Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1971 (L.A. Bill No. 6 of 1971).]

£ 37. The Motor Vehicles (Tamil Nadu Amendment) Bill, 1971 (L.A. Bill No. 8 of 1971) with Annexure.

38. Six returns of Assets as on 31st March 1970 submitted to the House by the Hon. Members of the Legislative Council.

@ Despatched to Members on 31st March 1971.

£ Despatched to Members on 2nd April 1971.

HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the Main Headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject-matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main Heading ' Bill(s) '.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., ' Committee(s) ', ' Council(s) ', ' Corporation(s) ', etc.

Various Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading " Papers Laid on the Table ".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading " Chair ".

A list of abbreviations used in the Index is given below :—

A.M./Ad. Motion	...	Adjournment Motion.
Ann.	...	Announcement.
B.O.H.	...	Business of the House.
C.A.	...	Calling Attention to a Matter of Urgent Public Importance.
C.A.St.	...	Calling Attention Statement.
Consid.	...	Consideration stage of a Bill. This stage includes— (i) Motion to refer to Select/Joint Select Committee. (ii) Amendment to refer to Select/Joint Select Committee.

(iii) Amendment to circulate.

(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.

(v) Amendment to recommit to Select Select/Joint Committee, etc.

Consid. Cl.	...	Consideration of Clauses of a Bill.
D.E.E.	...	Demands for Excess Expenditure.
Dis. S.D. or D.S.D.	...	Discussion for Short Duration on an urgent matter of Administration.
D.S.G.	...	Demands for Supplementary Grants.
G.A.	...	Governor's Address.
G.D.	...	General Discussion.
H.A.H. Dis/H.H.D.	...	Half-hour Discussion.
Int.	...	Introduction stage of a Bill.
L.A.	...	Legislative Assembly.
L.C.	...	Legislative Council.
M.	...	Motion.
P.M.	...	Privilege Motion.
R/Res.	...	Resolution.
St.	...	Statement.

Index to Tamil Nadu Legislative Assembly Debates

FIRST SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

30TH AND 31ST MARCH AND 1ST, 2ND AND 3RD APRIL 1971.

VOLUME II (Nos. 1 to 5).

PAGES.

A

ABUSALI, THIRU M. A.—

Governor's Address (M) 271–272

ADITANAR, THIRU SI. PA.—

Alleged misleading information given by Thiru R. Ponnappa Nadar Privilege Matter) 257

Assembly Congress Party's name (Point of Order) ... 123

Co-operative State Land Development Bank, raising maximum guarantee amount for debentures (R) ... 369

Governor's Address (M) 139, 313

ALAGARSAMI, THIRU S.—

Governor's Address (M) 186–190

ALAGU THEVAR, THIRU S.—

Governor's Address (M) 147–148

ANANDANAYAKI, THIRUMATHI T. N.—

Agricultural University Bill, 1971 ... ... 413–414, 424

Assembly Congress Party's name (Point of Order) ... 124

Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1971 377

PAGES.

A—*cont.*

ANANDANAYAKI, THIRUMATHI, T. N.—*cont.*

Governor's Address (M) 140, 141, 166, 168-A 220–225

Motor Vehicles (Tamil Nadu Amendment) Bill, 1971 372

Slum Areas (Improvement and Clearance) Bill, 1971 ... ... 445–452, 479, 480, 481, 482, 483, 487, 490

Town and Country Planning Bill, 1971 390–392

ANBAZHAGAN, THIRU K.—

Governor's Address (M) 137, 157

Town and Country Planning Bill, 1971 ... ... 380–385, 386, 392 394

ANNAMALAI, THIRU C. V. M.—

Governor's Address (M) 190–194

ARANGANNAL, THIRU RAMA—

Agricultural University Bill, 1971 403–405

Slum Areas (Improvement and Clearance) Bill, 1971 ... ... 440, 443, 447, 457–468, 480

ARUNA, THIRU ALADI V.—

Governor's Address (M) 225–230

B

BALASUNDARAM, THIRU V.—

Governor's Address (M) 37–42

BANGLA DESH—

Freedom movement, expression of goodwill for victory (R) 366–368

PAGES.

B—*cont.*

BOMMAN, THIRU K. H.—

Governor's Address (M) 43–47

BILL(S)—

Agricultural University Bill, 1971—

Message from Governor 395

Consid. ... ...
Consid. Cl. ... ...
Motion to pass ... ...
Passed ... ...
} 396–429

Appropriation Bill, 1971—

Consid ... ...
Consid. Cl. ... ...
Motion to Pass ... ...
Passed ... ...
} 4

Message from Legislative Council agreeing without recommendation 263

Appropriation (Vote on Account) Bill, 1971—

Consid ... ...
Consid. Cl. ... ...
Motion to pass ... ...
Passed ... ...
} 4

Message from Legislative Council agreeing without recommendation 263

Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1971— 375

Message from Governor 3–4

Int. ... ...
Consid. ... ...
Consid. Cl. ... ...
Motion to pass ... ...
Passed ... ...
} 375–380

General Sales Tax (Amendment Bill, 1971)— 98

Int. ... ...
Consid. ... ...
Consid. Cl. ... ...
Motion to pass ... ...
Passed ... ...
} 374–375

B—cont.

BILL(S)—cont.

Motor Vehicles (Tamil Nadu Amendment) Bill, 1971—

Int. 263-264

Consid. ... ...
Consid. Cl. ... ...
Motion to pass ... ...
Passed ... ... } 370-374

Slums Areas (Improvement and Clearance) Bill, 1971—

Message from Governor 429

Consid. ... ...
Consid. Cl. ... ...
Motion to pass ... ...
Passed ... ... } 430-491

Town and Country Planning Bill, 1971—

Message from Governor 380

Consid. 380-395

C

CALLING ATTENTION—

Attack on D.M.K. volunteers, Balappanaickenpatti 97-98

Fisheries (Development) Research Institute.

Mandapam, shifting of Head Office to another State 357-361

Murugan Mills, Coimbatore, closure and consequent hardships to employees 356-357

Spiralling prices of essential commodities, preventive steps 361-363

Sree Shanmugar Mills, Rajapalayam, closure and consequent hardships to employees 355-356

Travancore-Cochin transferred graduate-teacher's hunger-strike 353-355

C—cont.

CHAIR—

ANNOUNCEMENTS—

Question hour 1

RULINGS AND OBSERVATIONS—

Adjournment Motions—

Murder of three D.M.K. volunteers in Thazhankuppam near Madras.—Consent was withheld on the ground that no discussion was called for, after the explanatory statement made by the Chief Minister 3

Reported warning by Kerala Chief Minister about the alleged diversion by Tamil Nadu Government of waters of Pandiyar-Punnampuzha rivers in Moyar basin.—Consent was withheld on the ground that there was no need for a discussion on the subject after the Chief Minister had made an explanatory statement 259-263

Amendments—

All the amendments given notice of to a clause should be moved together before that clause is passed by the House 482

Members should first move their amendments and then speak 423

Motion of Thanks to Governor for his address to the Legislature.—Immediately after a Member of the ruling party moved the Motion of Thanks to the Governor for his address to the Legislature and some Members moved the amendments which they had given notice of, the Chair announced that Members who had given notice of amendments but were not in their seats just then could move them later 6

C—*cont.*

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

Bills—

Reference to Select Committee—Scope of discussion.—At the stage when a Motion to refer a Bill to a Select Committee was under discussion, it was the usual practice for the Members of the Select Committee not to take part in the discussion inasmuch as they would have an opportunity to express their views during deliberations of the Select Committee. Though it was only a convention and not a rule, a Member of the Select Committee might, with the consent of the Chair, make a brief speech 387, 390

Second reading.—During the clause-by-clause consideration, general remarks permissible during the first and third reading stages, should be avoided and discussion should relate only to clauses and amendments to relevant clauses 489

Calling Attention—

A Member may ask a question to seek clarification, but should not raise a discussion on the statement made by a Minister in response to a Call Attention Notice 355

Any clarification after a Minister had made a statement in response to a Call Attention Notice, should be in the form of a question and should relate to the subject-matter contained in the Notice 98

Debate—

Allegations.—Members should not make allegations against the Government without knowing the facts 214

General.—Members should not attribute to a Minister a statement which has not been made by him in the House 351

C—*cont.*

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

Debate—*cont.*

Relevancy.—As reference had been made in the Governor's Address to 'elections' a Member's remarks about elections were in order and could not be deemed as 'irrelevant'. ... 156

Right of second speech.—After the Minister had replied to the discussion on an amendment to a clause, the Member who had given notice of the amendment could not speak a second time and he could only state whether he withdrew his amendment or not. ... 489

Decorum—

It is not proper to discuss in the House about communal feelings 153

Members should address the Chair 452

When the Chair is on its legs, Members should not stand 180

With reference to a point of order about the reference made by a Member about an individual who was not a Member of the House, the Chair observed that while they could take note of serious remarks which cast aspersions on such individual, it might not be possible to shut out all other remarks about leaders outside who after all would not mind being commented upon 168-168A

Expressions used in the House—

Objectionable expressions.—'கதை சொல்கிறார்' (Narrating a story) in the sentence—The Member is narrating some story—Deprecated. 167

'The present Housing Board is a citadel of corruption'—Deprecated and the remark was withdrawn by the Member who used it ... 439,441

Parliamentary expressions.—'தமிழ் துரோகியே' (Tamil Traitor) in the sentence—There were posters with the slogan, 'Tamil Traitor, go back' (தமிழ் துரோகியே திரும்பிப் போ). Held to be parliamentary 167

C—*cont.*

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

Legislature Parties—

Name.—With reference to a point of order raised about the correct name of the Congress Legislature Party, the Chair observed that it was for that party and its leader to christen their party, and others had no right to do it 122–124

Minister's Statement—

When a Minister has refuted the allegations made by a Member, it was not in order for the Member to persist in repeating the same allegation again and again 813

Point of Order—

Whether a particular opinion was wide, wild or mild was a matter of interpretation and no point of order would lie to contradict an opinion expressed by a Member. When a particular opinion was not contradicted then and there it did not mean that others held the same view or subscribed to it. As Members had ample opportunities to express their views they could do it when they got their chance to speak 179–181

Privilege Matter—

Alleged misleading statement by Thiru R. Ponnappa Nadar about arson in Srivaikuntam Constituency.—On 1st April 1971, the Chair informed the House of the receipt of a notice of a privilege matter against Thiru R. Ponnappa Nadar who was alleged to have made a misleading statement in the House which was published in Nava Sakthi, to the effect that in Srivaikuntam Constituency, an entire village had been burnt to ashes.

Thiru R. Ponnappa Nadar stated that he could not say anything before perusing the official text of his speech in the House and added that he did not mind any action being taken against him.

C—*cont.*

CHAIR—*cont*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

Privilege Matter—cont.

The Chair deferred its ruling to the next day and said that the Member could have avoided the latter part of his statement just then ... 173–174

Thiru R. Ponnappa Nadar stated on 2nd April 1971 that in the notes that he had, there was reference only to Arasakulam village in Melappalayam Constituency, and there was no reference to Srivaikuntam Constituency and that he had only mentioned about Melappalayam Constituency.

After hearing the Hon. Minister for Co-operation who was elected from the Srivaikuntam Constituency and the Hon. Chief Minister, the Chair observed that inasmuch as Thiru Ponnappa Nadar had corrected his statement the matter might be dropped 256–259

Questions and Answers—

On 31st March 1971, with reference to a Member's request to have the question-hour the next day, the Chair observed that answers in respect of some of the questions which had been admitted were awaited and that steps had already been taken to obtain answers from the departments as expeditiously as possible ... 97

Delay in inclusion of questions in the Agenda.—

On 1st April 1971 a Member rose on a point of order and stated that inasmuch as the same Ministers continued in office and as they had renewed the questions which had not been answered during the term of the previous Assembly, expeditious steps should be taken to answer as many questions as possible in respect of which answers might have been received.

Holding that it was not a point of order, the Chair observed that he had already informed the House in detail about the steps taken to expedite answers to questions.

PAGES.

C—*cont.*

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

Questions and Answers—cont.

The Chair added that though the same Ministers might have come to office again, the questions and answers thereto had to be considered afresh and so, the question of renewal of old questions of which notices were given during the term of the previous Assembly did not arise 169–170

Supplementary questions—

Argument.—Members should not argue their points, but should only put brief and specific questions 338

Form.—Supplementaries should be in the form of a question and Members should not enter into a debate 348

Policy matters.—Supplementaries should not relate to matters of policy 348

Question Hour.—Should not be utilised for detailed discussion, but should be utilised to elicit certain particulars and further clarifications on them 348

Supplementaries should be specific, definite, short and brief 348

Speeches—

Reading.—While Members should not read their speeches, those who made their maiden speeches might read their speeches but when they spoke next they should try to refrain from reading their entire speech and should simply refer to their notes 168-D

PAGES.

C—*cont.*

CHAIR—*cont*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

Visitors' Gallery—

Visitors in the gallery should not disturb the proceedings of the House 291

COLLEGES—

Medium of instruction 341–352

COMMITTEES—

Assurances, nomination to 364

Estimates, election 364–365

House Committee, Election (Ann.) 338–339

Library Committee, Election (Ann.) 337

Privilege Committee, Election (Ann.) 337–338

Public Accounts, Election 365–366

Rules, nomination 363

Subordinate Legislation, nomination 363–364

D

DENNIS, THIRU N.—

Governor's Address (M) 104–107

DEVARASAN, THIRU M.—

Governor's Address (M) 148–150

DHARMALINGAM, THIRU A. P.—

Agricultural University Bill, 1971 ... ... 396–397, 403, 407, 417–419, 420, 427, 428, 429

DURAI MURUGAN, THIRU—

Assemly Congress Party's name (Point of Order) ... 122,123

DURAISWAMI, THIRU A. K.—

Governor's Address (M) 272–274

DURAISWAMY, THIRU S.—

Election, clash in Vellakoil Constituency 170–172

Murugan Mills, Coimbatore, closure and consequent hardships to employees (C.A.) 356–357

PAGES.

E

EDUCATION—

Syllabus revision 247-256

ELECTION—

Clash in Vellakoil Constituency 170-172

F

FISHERIES—

Development Research Institute, Mandapam, shifting of Head Office to another State 357-361

FOOD—

Spiralling prices of essential commodities, preventive steps (C.A.) 361-363

FOWLER, THIRUMATHI ALDA, M.—

Governor's Address (M) 110-111

G

GANAPATHY, THIRU N.—

Governor's Address (M) 238-239

GANAPATHY, THIRU T.—

Governor's Address (M) 152-154, 155, 160-161

Slum Areas (Improvement and Clearance) Bill, 1971 ... ... — ... 449, 481, 490

GOPAL, THIRU K. P.—

Governor's Address (M) 274-275

GURUSWAMI, THIRU N. V.—

Governor's Address (M) 168-B-168-D, 174-175

PAGES.

H

HANDE, DR. THIRU H. V.—

Agricultural University Bill, 1971 ... ... 397-403, 420-421, 424

Colleges, medium of instruction 341-352

Governor's Address (M) 42,154, 167, 168, 207-216

Questions, speedy disposal of (Point of Order) ... 169

Slum Areas (Improvement and Clearance) Bill, 1971 430-437

Spiralling prices of essential commodities, preventive steps (C.A.) 361-363

Syllabus revision 247-256

J

JAMES, THIRU J.—

Governor's Address (M) 155, 156, 157, 161

JOTHI VENKATACHELLUM, THIRUMATHI—

Governor's Address (M) 55-57

K

KADHER BATCHA *alias* VELLAICHAMY, THIRU—

Governor's Address (M) 239-244

KAMATCHI, THIRU K.—

Governor's Address (M) 66-69

Slum Areas (Improvement and Clearance) Bill, 1971 455-456

KANDASWAMY, THIRU MANALI, C.—

Governor's Address (M) 21-29

Slum Areas (Improvement and Clearance) Bill, 1971 452-455

PAGES.

K—*cont.*

KANNAN, THIRU M. R.—

Slum Areas (Improvement and Clearance) Bill, 1971 443–445

KARIVENGADAM, THIRU M. V.—

Governor's Address (M) 175–179

KARUNANIDHI, THIRU M.—

Alleged misleading information given by Thiru R. Ponnappa Nadar (Privilege Matter) 258–259

Appropriation Bill, 1971 4

Appropriation (Vote on Account) Bill 4

Assembly Congress Party's name (Point of Order) ... 122–123

Attack on D.M.K. volunteers, Balappanaickenpatti (C.A. St.) 97–98

Bangla Desh freedom movement, expression of goodwill for victory (R) 366–368

Governor's Address (M) 29–39, 125, 126 154, 155, 157, 158, 159, 160, 161, 314–316

Murder of D.M.K. volunteers, Thazhankuppam (A.M.) 2–3

Pandiyar and Punnampuzha water to Coimbatore district (A.M.) 261–263

KITTAPPA, THIRU N.—

Governor's Address (M) 17–21

KOHANDARAMIAH, THIRU K. S.—

Governor's Address (M) 142–145

KOVAI CHEZHIAN, THIRU—

Governor's Address (M) 275–277

KUMARASWAMY, THIRU K. N.—

Governor's Address (M) 47–51

PAGES.

L

LATHEEF, THIRU M. A.—

Governor's Address (M) 151

M

MADHAVAN, THIRU S.—

Agricultural University Bill, 1971 ... ... 421–422, 424–426

Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1971 ... ... 3–4, 379–380

Governor's Address (M) 129, 308

Murugan Mills, Coimbatore, closure and consequent hardships to employees (C.A. St.) 356–357

Slum Areas (Improvement and Clearance) Bill, 1971 ... ... 430, 470–473, 479, 480, 481, 482, 483, 484, 485, 486, 487, 489, 490, 491

Sree Shanmugar Mills, Rajapalayam, closure and consequent hardships to employees (C. A. St.) ... 355–356

MALAICHAMY, THIRU P.—

Attack on D.M.K. volunteers, Balappanaickenpatti (C.A.) 97–98

Governor's Address (M) 29–34, 56

MANICKAVACHAGAM, THIRU R.—

Murugan Mills, Coimbatore, closure and consequent hardships to employees (C.A.) 356–357

MARIMUTHU, THIRU, A. R.—

Governor's Address (M) 281–289

Slum Areas (Improvement and Clearance) Bill, 1971 468–470

MARUDACHALAM, THIRU N.—

Governor's Address (M) 161–163

PAGES.

M—cont.

MILL (S)—

- Murugan Mills, Coimbatore, closure and consequent hardships to employees (C.A.) 356–357
- Sree Shanmugar Mills, Rajapalayam, closure and consequent hardships to employees (C.A.) ... 355–356

MOHAMED KOTHER MOHIDEEN, THIRU S.—

- Governor's Address (M) 150–151

MOHIDEEN, THIRU A. M.—

- Governor's Address (M) 292–296

MOTION(S)—

- Adjournment Motions—
  - Murder of D.M.K. volunteers, Thazhankuppam. 1–3
  - Pandiyar and Punnampuzha water to Coimbatore district 259–263
- B.O.H., change in order 369
- Estimates Committee, association of Council Members 368
- Governor's Address, Motion of Thanks 4–75, 99–121, 124–168-D, 174–244, 264–337
- **Suspension of Rule 41 (3)** 353

MOSES, DR. THIRU M.—

- Colleges, medium of instruction 341–352

N

NARASIMHAN, THIRU A. C.—

- Town and Country Planning Bill, 1971 388–390

NARAYANASWAMY, THIRU M. V.—

- Governor's Address (M) 203–207

NEDUNCHEZHIYAN, THIRU V. R.—

- B.O.H., change in order 369
- Estimates Committee, association of Council Members 368
- Suspension of Rule 41 (3) 353
- Travancore-Cochin transferred graduate-teachers' hunger-strike (C.A. St.) 353–355

PAGES.

P.

PADMAVATHI, THIRUMATHI A.G.—

- **Governor's Address (M)** 268–271

PALANISAMI, THIRU N. K.—

- Town and Country Planning Bill, 1971 ... ... 385, 386, 387

PANDURANGAN, THIRU G.—

- Governor's Address (M) 278–280
- **Panel of Chairmen** 387

PAPERS LAID ON THE TABLE—

- Agricultural University Bill, 1971 246
- **Appropriation Bill, 1971** 76
- Appropriation (Vote on Account) Bill, 1971 76
- Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1971 491
- Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1971, Notification 340
- Children Act, 1920, Notification 76
- Co-operative Societies Act, 1961, Notification ... 245
- District Municipalities Act, 1920, Notification ... 246
- Entertainments Tax Act, 1939, Notification ... 76
- Factories (Welfare Officers) Rules, 1953, amendment 76
- General Sales Tax Act, 1959, Notification 340
- General Sales Tax Act, 1959, Notification 76
- General Sales Tax (Amendment) Bill, 1971, Notification 340
- Madras City Tenants Protection Rules, 1970, Notification 246
- Motor Vehicles Act, 1939, Notification 245
- Motor Vehicles (Tamil Nadu Amendment) Bill, 1971 with Annexure 491

PAGES.

P—cont.

PAPERS LAID ON THE TABLE—*cont.*

Panchayats Act, 1958, Notification 168-D

Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959, Notification 340

Prohibition Act, 1937, Notification 216

Public Service Commission Regulations, 1954 Notification 245

Returns of assets of Members of Legislative Council 491

Rural Development and Local Administration department, Notification II-2 (?) of 1960, erratum ... 16-E

Service Commission Regulations, 1954, Notifications 339, 340

Slum Areas (Improvement and Clearance) Bill, 1971 246

Slum Areas (Improvement and Clearance) Ordinance, 1971, Notifications 491

State Housing Board Act, 1961, Notification ... 340

Town and Country Planning Bill, 1971, salient features 168-E

PARANDHAMAN, THIRU A.—

Governor's Address (M) 139-142

PAULIAH, THIRU A.—

Governor's Address (M) 14-17

PERUMAL, THIRU A. R.—

Governor's Address (M) 34-37

PERUMAL, THIRU S.—

Governor's Address (M) 145-147

PONCHOKKALINGAM, THIRU P.—

Governor's Address (M) 107-110

PAGES.

P—cont.

PONNAPPA NADAR, THIRU R.—

Agricultural University Bill, 1971 414-417

Alleged misleading information given by Thiru R. Ponnappa Nadar (Privilege Matter) ... 173-174, 257, 258, 259

Assembly Congress Party's name (Point of Order) 123, 123

Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1971 ... ... 376-377, 378

Governor's Address (M) 5, 39, 129-130, 152, 156, 158, 159-160, 166-167, 165, 304-314

Pandiyar and Punnampuzha water to Coimbatore district (A.M.) 260-261

Town and Country Planning Bill, 1971 392

Travancore-Cochin transferred graduate-teachers' hunger-strike (C.A.) 353-355

PONNUMALAI, THIRU T.—

Governor's Address (M) 115-117

R.

RAJA PILLAI, THIRU K.—

Governor's Address (M) 164-166, 168-A, 168-B

RAJARAM, THIRU K.—

Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1971 ... ... 375-376, 377-378, 379

RAMAKRISHNAN, THIRU KUPPAL K. S.—

Governor's Address (M) 99-104

PAGES.

R.—cont.

RAMACHANDRAN, Thiru S.—

Motor Vehicles (Tamil Nadu Amendment) Bill, 1971 ... ... 370-372, 373, 374

Motor Vehicles (Tamil Nadu Amendment) Bill, 1971 263-264

Motor Vehicles Taxation Act, 1931, amendments to Schedules (R) 370

RAMALINGAM, Thiru R.—

Governor's Address (M) 130-134

RAMAN, Thiru M.—

Governor's Address (M) 75

RANGANATHAN, Thiru K.—

Governor's Address (M) 233-235

RATHINASABAPATHY, Thiru M.—

Governor's Address (M) 72-74

RESOLUTION(S)—

Bangla Desh freedom movement, expression of goodwill for victory 366-368

Co-operative State Land Development Bank, raising maximum guarantee amount for debentures ... 369

Motor Vehicles Tax Act, 1931, amendment to Schedules 370

S

SATHYAVANIMUTHU, Dr. Thirumathi—

Governor's Address (M) 6, 69-71

SATHYAVANIMUTHU, Dr. Thirumathi—

Fisheries Development Research Institute, Mandapam, shifting of Head Office to another State (C.A. St.) 358-361

SHANMUGAM, Thiru P. U.—

General Sales Tax (Amendment) Bill, 1971 ... 98, 374, 375

Spiralling prices of essential commodities, preventive steps (C.A. St.) 361-363

PAGES.

S—cont.

SIVAPRAKASAM, Thiru D. S. A.—

Governor's Address (M) 117-118

SONIAH, Thiru T.—

Governor's Address (M) 216-220

SRINIVASAN, Thiru T. P.—

Governor's Address (M) 118-121

SUBBIAH, Thiru A. K.—

Governor's Address (M) 264-268

SUBBIAH, Thiru A. R.—

Governor's Address (M) 200-203

SUBRAMANIAM, Thiru A.—

Agricultural University Bill, 1971 ... ... 412-413, 421-422

Governor's Address (M) 194-200

Pandiyar and Punnampuzha water to Coimbatore district (A.M.) 261-262

SUBRAMANIAM, Thiru K. M.—

Governor's Address (M) 5-6, 124-125, 126, 127-129

Slum Areas (Improvement and Clearance) Bill, 1971 ... ... 437-443, 459, 461, 464, 479, 484, 485, 486, 487, 488

SUNDARA BHARATHI, Thiru Sowdi.—

Assembly Congress Party's name (Point of Order) ... 124

Governor's Address (M) 289-292

SUNDARAM, Thiru O. N.—

Governor's Address (M) 179-182

SUPPU, Thiru K.—

Agricultural University Bill, 1971 ... ... 410-412, 423-424, 426

PAGES

S—*cont.*

SUPPU, THIRU—*cont.*

Fisheries (Development) Research Institute, Mandapam, shifting of Head Office to another State (C.A.) 357–361

Slum Areas (Improvement and Clearance) Bill, 1971 ... ... 488, 489

Sree Shanmugar Mills, Rajapalayam, closure and consequent hardships to employees (C.A.) ... 355–356

SURENDRAN, THIRU M.—

Governor's Address (M) 6, 134–139

SURULIVEL, THIRU M.—

Governor's Address (M) 57–60

SWAMIDHAS, THIRU A.—

Travancore-Cochin transferred graduate-teachers' hunger-strike (CiA) 353

T.

TEACHERS—

Travancore–Cochin transferred graduate-teachers' hunger-strike (C.A.) 353–355

THANGAMANI, THIRU K. T. K.—

Agricultural University Bill, 1971 ... ... 405–408, 419–420, 423, 426, 427, 428, 429

Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1971 379

Governor's Address (M) 5, 296–303

Motor Vehicles (Tamil Nadu Amendment) Bill, 1971 372–373

Murder of D.M.K. volunteers, Thazhankuppam (A.M.) 1–2

Town and Country Planning Bill, 1971 ... 387–388

PAGES

T—*cont.*

THANGAMANI, THIRU K.T.K.—*cont.*

Trvancore—Cochin atransferred graduate-teachers' hunger-strike (C.A.) ... ... — ... 353–355

THAVAMANI THEVAR, THIRU V.—

Governor's Address (M) 230–233

THIAGARAJAN, THIRU E. S.—

Governor's Address (M) 280–281

THOPPUR THIRUVENGADAM, THIRU—

Governor's Address (M) 51–55

TIRUPATHI, THIRU K.—

Governor's Address (M) 182–186

V.

VADIVEL, THIRU S.—

Governor's Address (M) 111–115

VEERASAMY, THIRU N.—

Assembly Congress Party's name (Point of Order) ... 122

Assembly Congress Party's name, Point of Order ... 122

VEZHAVENDAN, THIRU K.—

Governor's Address (M) 4–5, 6–14

W.

WAHAB, THIRU K. A.—

Governor's Address (M) ... 60–65

31-7-71 2-3-2
61505

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

தவணைத்தாள்.

சே. எண் :

ப. எண் :

வழங்கிய நாள். (1)	திரும்பிய நாள். (2)	வழங்கிய நாள். (1)	திரும்பிய நாள். (2)
22/5			
23/4/97			
~~23-1-98~~			
13·5·98			
27/11/98			
8/2/99			

S.F. 259A-6—1,00,000—30-1-84.